இலங்கை மத்திய வங்கி

நாணயச்சபை
மாண்புமிகு நிதியமைச்சருக்கு ஒப்படைத்த

2022

ஆம் ஆண்டுக்குரிய

ஆண்டறிக்கை

(தொகுதி II)

பிரதியொன்றின் விலை (தொகுதி I இற்கு)

கருமபீட விலை	-	பிரதியொன்று ரூபா. 700
சாதாரண அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல்	-	பிரதியொன்று ரூபா. 1,000
பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல்	-	பிரதியொன்று ரூபா. 1,520

பிரதியொன்றின் விலை (தொகுதி II இற்கு)

கருமபீட விலை	-	பிரதியொன்று ரூபா. 800
சாதாரண அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல்	-	பிரதியொன்று ரூபா. 1,100
பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல்	-	பிரதியொன்று ரூபா. 1,650

பிரதியொன்றின் விலை (இரண்டு தொகுதிகளுக்குமானது)

கருமபீட விலை	-	பிரதியொன்று ரூபா. 1,500
சாதாரண அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல்	-	பிரதியொன்று ரூபா. 1,850

பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல் சேவை கிடைக்ககூடியதாய் இல்லை

வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தல் (மேலேயுள்ள அனைத்திற்கும் பொதுவானது)

வான் வழி (முதல் வகுப்பு)	-	பிரதியொன்று ஐ.அ.டொலர் 40 (பதிவு அஞ்சல்)
வான் வழி (இரண்டாம் வகுப்பு)	-	பிரதியொன்று ஐ.அ.டொலர் 35 (பதிவு அஞ்சல்)
கடல் வழி	-	பிரதியொன்று ஐ.அ.டொலர் 25 (பதிவு அஞ்சல்)

ISBN 978 - 624 - 5917 - 35 - 8

ISSN 1391 - 359X

பிறின்ட்கேயார் யுனிவர்சல் (பிறைவேட்) லிமிட்டட், 77, நுன்கமுகொட வீதி, களணியில் அச்சிடப்பட்டு

இல.30, சனாதிபதி மாவத்தை கொழும்பு 01 இலுள்ள இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டது.

உள்ளடக்கம்

தொகுதி II

பகுதி II	
இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்	1-149
பகுதி III	
ஆண்டுப்பகுதியில் அரசாங்கத்தினாலும் நாணயச்சபையினாலும் இலங்கை மத்திய வங்கி மற்றும் வங்கித்தொழில் நிறுவனங்களின் நடைமுறைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிருவாக வழிமுறைகள்	1-134
பகுதி IV	
2022ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான சட்டவாக்கங்கள்	1-90

பகுதி II

பகுதி II

இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

	பக்கம்
1. கணக்குகளும் நிதியும்	1
2. வங்கி மேற்பார்வை	86
3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம்	89
4. தொடர்பூட்டல்	90
5. நாணயம்	92
6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள்	94
7. பொருளாதார ஆராய்ச்சி	97
8. ஊழியர் சேமலாப நிதியம்	101
9. வசதிகள் முகாமைத்துவம்	103
10. நிதி	104
11. நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள்	106
12. நிதியியல் உளவறிதல் பிரிவு	107
13. வெளிநாட்டுச் செலாவணி	108
14. வெளிநாட்டு பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல்	113
15. மனித வளங்கள்	114
16. தகவல் தொழில்நுட்பம்	119
17. உள்ளகக் கணக்காய்வு	121
18. பன்னாட்டுத் தொழிற்பாடுகள்	122
19. சட்டம் மற்றும் இணங்குவிப்பு	123
20. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு	124
21. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்	127
22. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு	129
23. பொதுப்படுகடன்	130
24. பிரதேச அபிவிருத்தி	132
25. தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல்	137
26. இடர் மேலாண்மை	138
27. செயலகம்	139
28. பாதுகாப்புப் பணிகள்	140
29. அலுவலர் பணிகள் முகாமைத்துவம்	140
30. புள்ளிவிபரவியல்	141
31. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை	144

1. கணக்குகளும் நிதியும்

2022ம் ஆண்டுகாலப்பகுதி மற்றும் நிதியியல் ஆண்டுடன் தொடர்புடைய நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் செயற்பாட்டு அறிக்கை

1. அறிமுகம்

நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழு என்பது நாணயச் சபையினால் நியமிக்கப்பட்ட துணைக் குழுவொன்றாகும். இது நாணயச் சபையினால் அனுமதியளிக்கப்பட்ட நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவினால் ஆளுகை செய்யப்படுகின்றது. ஆகையினால், செயற்பாட்டு அறிக்கையின் உள்ளடக்கமானது இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழு கட்டமைப்பிற்கமைவாகவுள்ளது. நிதியியல் அறிக்கையிடலுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் கருமங்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள், உள்ளகக் கணக்காய்வு, வெளிவாரிக் கணக்காய்வு அத்துடன் நாணயச் சபையினால் குறித்தொதுக்கப்படுகின்ற வேறு ஏதேனும் விடயம் தொடர்பாக நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழு நாணயச் சபைக்கான அதன் பரிந்துரைகளை வழங்குகின்றது.

2. நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் உள்ளமைப்பு

நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவானது நாணயச் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரினால் தலைமை தாங்கப்படுவதுடன் கணக்காய்வு/கணக்கீட்டு இரு வேறு தொழில்சார் நிபுணர்களை கொண்டுள்ளது.

2022ஆம் ஆண்டுகாலப்பகுதியில் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் உள்ளமைப்பு பின்வருமாறு காணப்பட்டது:

i. முனைவர். ராணி ஜயமகா - தலைவி

ii. திருமதி. ஏ. ஐ. மொஹொட்டி - உறுப்பினர்

iii. திரு. ஏ. ஐ பொனான்டோ - உறுப்பினர்

நாணயச் சபைக்கான செயலாளர் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் செயலாளர் ஆவார் என்பதுடன் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவிற்கான உதவிச் செயலாளர் ஆவார். உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவுக்கு செயலக வசதிகளை வழங்குகின்றது. நிதித் திணைக்களத்திற்குப் பொறுப்பான உதவி ஆளுநர், இலங்கை மத்திய வங்கியின் வெளிவாரி கணக்காய்விற்குப் பொறுப்பான தேசிய கணக்காய்வு அலுவலகத்திடமிருந்தான கணக்காய்வுக் கண்காணிப்பாளர், இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளர், இணங்குவித்தல் அலுவலர் மற்றும் முதன்மை இடர்நேர்வு அலுவலர் ஆகியோர் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுக் கூட்டங்களில் அவதானிப்பாளர்களாகச் சமூகமளிக்கின்றனர். கலந்துரையாடல்களுக்கு அவசியப்படுகின்றவாறும் அவசியப்படுகின்ற போதும் இலங்கை மத்திய வங்கியின் திணைக்களத் தலைவர்கள் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் தலைவரினால் அழைக்கப்பட்டு கணக்காய்வு கேள்விகளுக்கு பதிலளிக்கின்றனர். இலங்கை மத்திய வங்கியின் வெளிவாரிக் கணக்காய்வினைக் கொண்டு நடாத்துவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனத்தின் ஈடுபாட்டுப் பங்காளர் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் கலந்துரையாடப்படுகின்ற போது அழைப்பின் பேரில் நாணயச் சகை மதியுரைக் கணக்காய்வு குழு கூட்டங்களிலும் சமூகமளிக்கின்றது.

நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவானது ஆண்டுக்கு குறைந்தது ஆறு (06) தடவைகள் சந்திப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளது. நாணயச் சபை, வெளிவாரி கணக்காய்வாளர்கள்/ முதன்மை கணக்காளர் அல்லது உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் கண்காணிப்பாளர் ஆகியோரின் கோரிக்கையில், குழுக் கூட்டம் தலைவரின் அனுமதியுடன் குழுவின் செயலாளரினால் அழைக்கப்பட வேண்டும். கூட்டமொன்றிற்கான நிறைவெண், தலைவர் உள்ளடங்கலாக இரண்டு (02) ஆகும்.

3. நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவானது 2022இல் பதினைந்து (15) கூட்டங்களையும் 2023 ஆண்டுகாலப்பகுதியில் 2023.01.01 இலிருந்து 2023.03.31 வரையில் நான்கு கூட்டங்களையும் நடாத்தியதுடன் 2022இலும் 2023இலும் குறிப்பிடப்பட்ட கூட்டங்களில் பின்வரும் நடவடிக்கைகளை கொண்டு நடாத்தியது.

3.1 2022 ஆண்டுகாலப்பகுதியில் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவினால் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

3.1.1 நிதி அறிக்கையிடல் மற்றும் வெளிவாரிக் கணக்காய்வு:

மதியுரைக் கணக்காய்வு குழு பின்வருவனவற்றை மீளாய்வு செய்தது.

i. 2021.12.31இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கேபீஎம்ஜி நிறுவனம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால முகாமைத்துக் கடிதம், இறுதி முகாமைத்துவக் கடிதம் மற்றும் அதற்கான முகாமைத்துவப் பதிலிறுத்தல்கள்.

ii. 2021.12.31இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள்.

iii. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (6)ஆம் உறுப்புரையின் நியதிகளில் 2021.12.31இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான நிதியியல் கூற்றுக்கள் மற்றும் முகாமைத்துவப் பதிலிறுப்புக்கள் உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கியின் அலுவல்கள் தொடர்பாக கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.

iv. 2021.12.31இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள்.

v. 2021.12.31இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான ஊழியர் சேமலாப நிதியயத்தின் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

vi. ஐந்து ஓய்வூதிய நிதியங்களின் (ஓய்வூதிய நிதியம், விதவை மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம், புதிய ஓய்வூதிய விதவை மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம், புதிய விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம்) நிதியியல் கூற்றுக்கள்

vii. 2021.12.31இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள்.

viii. 2022ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வுடன் தொடர்புடைய ஈ அன்ட் வை நிறுவனத்தின் கணக்காய்வுத் திட்டம்

3.1.2 உள்ளகக் கட்டுப்பாடுகள்

i. இலங்கை மத்திய வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பாக மீளாய்வு செய்து ஆலோசனை வழங்கியது.

i. நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் பரிந்துரைகள் தொடர்புடைய ஆர்வலர்களின் மூலமான நடைமுறைப்படுத்தல் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தது.

3.1.3 உள்ளகக் கணக்காய்வு

i. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கணக்காய்வு முன்னேற்றத்தை மீளாய்வு செய்தது

ii. செயன்முறை உரிமையாளர்கள் மூலமான கணக்காய்வு பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தல் நிலைமைகளை மீளாய்வு செய்தது.

iii. 2022ஆம் ஆண்டிற்காக வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வுசெய்து மீள்மதிப்பீடு செய்தது.

iv. 2023-2026இற்கான உபாயக் கணக்காய்வு திட்டம் மற்றும் 2023இற்கான வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பனவற்றை பரிந்துரைசெய்தது.

v. 2021ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கை மற்றும் காலாந்திர சுய மதிப்பீடு ஆகியவற்றின் தற்போதைய கணக்காய்வு தொடர்பான அறிக்கைகளை மீளாய்வுசெய்தது

vi. திருத்தம்செய்யப்பட்ட உள்ளகக் கணக்காய்வு பட்டயத்தை பரிந்துரைசெய்தது

vii. பன்னாட்டு நாணய நிதிய பாதுகாப்பு மதிப்பீட்டிற்கான தேவையான தகவலை வழங்குதல்

3.2 2022ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களுடன் தொடர்புடைய 2023ஆண்டுகாலப்பகுதியின் நாணயச் சபை மதியுரை கணக்காய்வு குழுவினால் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்

i. ஈ அன்ட் வை நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 2022.12.31இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான இடைக்கால முகாமைத்துவ கடிதத்தை மீளாய்வுசெய்தது.

ii. 2022.12.31இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களை மீளாய்வுசெய்தது.

iii. 2022.12.31இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களை மீளாய்வு செய்தது.

சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவின் 2022 நிதியாண்டிற்கான செயற்பாட்டு அறிக்கை

1. அறிமுகம்

சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு என்பது நாணய சபையால் நியமிக்கப்பட்ட ஒரு துணைக்குழுவாக இருப்பதோடு, இது நாணயச் சபையிலிருந்து வழங்கப்பட்ட ஒரு முறையான அதிகாரத்தினூடாக, இலங்கை மத்திய வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு மேலாண்மை மற்றும் இணக்கச் செயற்பாடுகளை மேற்பார்வையிடுகிறது. இடர்நேர்வு மேலாண்மை மற்றும் இணக்கத்தன்மைக்கு அர்ப்பணிப்புடன் கவனம் செலுத்துவதை உறுதிப்படுத்துவதுடன், இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு மேலாண்மை மற்றும் இணக்கச் செயற்பாடுகளுக்கான பரந்த மூலோபாயம் மற்றும் கொள்கைகளை அமைப்பதானது சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவின் பொறுப்பாகும்.

2. நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் உள்ளமைப்பு

சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு நாணயச் சபையால் நியமிக்கப்பட்ட உறுப்பினரால் தலைமை தாங்கப்படுவதுடன், மேலும் தொடர்புடைய நிபுணத்துவமுடைய, அவர்களின் நியமனங்களுக்கு முன்னர் குறைந்தது ஒரு ஆண்டாவது நிதிப் பணித் துறையில் ஈடுபடாத, இரண்டு சுயாதீன வெளியக நிபுணர்களைக் கொண்டுள்ளது.

2022ஆம் ஆண்டில் சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு அமைப்பு பின்வருமாறு காணப்பட்டது:

i. திரு. சஞ்சீவ ஜெயவர்தன, ஜனாதிபதியின் ஆலோசகர் - நாணயச் சபையினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் (தலைவர்)

ii. திரு. நயோமால் குணவர்த்தன (சுயாதீன வெளியக உறுப்பினர் - 03 ஆண்டு நியமன காலம் 14.03.2022 இல் முடிவுற்றது)

iii. திரு. ட்ரெவின் ஜயசேகர (சுயாதீன வெளியக உறுப்பினர் 2022.07.23 இல் நியமிக்கப்பட்டார்)

iv. திரு. ஹச் ஏ கருணாரத்னே (சுயாதீன வெளியக உறுப்பினர் 2022.07.23 இல் நியமிக்கப்பட்டார்)

நாணயச் சபையின் செயலாளர் சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவின் செயலாளராக இருப்பதோடு, பணிப்பாளர் - இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் (இலங்கை மத்திய வங்கியின் தலைமை இடர்நேர்வு அதிகாரி) சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவின் உதவிச் செயலாளராகவும் உள்ளார். இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவுக்கு செயலக வசதிகளை வழங்குகிறது. அனைத்து பிரதி ஆளுநர்கள், வணிக தொடர்ச்சி திட்டமிடல் குழுவின் தலைவர், இலங்கை மத்திய வங்கியின் தலைமை இணக்க அலுவலகர் மற்றும் பணிப்பாளர் - இலங்கை மத்திய வங்கியின் உள்ளகக் கணக்காய்வு திணைக்களம் ஆகியோர் சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு கூட்டங்களில் அவதானிப்பாளர்களாக கலந்து கொள்கின்றனர்.

சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு ஒவ்வொரு காலாண்டிலும் ஒரு முறையாவது அல்லது நாணயச் சபையால் பணிக்கப்பட்டவாறு அல்லது தலைவரால் தீர்மானிக்கப்பட்டபடி சந்திக்க வேண்டும். சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவின் கூட்டங்கள் குழுவின் செயலாளரால் கூட்டப்படுகின்றன. ஒரு கூட்டத்திற்கான ஆகக் குறைந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை தலைவர் உட்பட இரண்டு (02) உறுப்பினர்களாகும்.

3. 2022 நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

2022இல் சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவின் 04 கூட்டங்கள் நடைபெற்றதுடன் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

i. திணைக்கள இடர்நேர்வு பதிவேடுகளை மதிப்பாய்வு செய்து, முன்னிலைப்படுத்தப்பட்ட செயற்பாட்டு அபாயங்களைக் குறைப்பதை விரைவுபடுத்துவதற்காக நாணயச் சபைக்கு பரிந்துரைகளை வழங்கியது.

ii. திருத்திய செயற்பாட்டு இடர்நேர்வு வகைப்பிரிப்பை மதிப்பாய்வு செய்ததுடன் அதனை நாணயச் சபையின் அனுமதிக்கு பரிந்துரைத்தது.

ii. திருத்திய இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைக் கூற்றினை மதிப்பாய்வு செய்ததுடன் அதனை நாணயச் சபையின் அனுமதிக்கு பரிந்துரைத்தது.

iv. இலங்கை மத்திய வங்கி நிர்வகிக்கும் நிதிகள் தொடர்பான (பன்னாட்டு இருப்புக்கள்), உள்ளக முதலீட்டு நிதிகள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் இடர்நேர்வு மேலாண்மை மற்றும் இணக்க புதுப்பிப்புக்களை, அத்தகைய நிதிகள் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்குள் நிர்வகிக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக, மதிப்பாய்வு செய்தது.

v. உள்ளக முதலீட்டு நிதிகள் மற்றும் பன்னாட்டு இருப்புக்களுக்கான முதலீட்டு கொள்கை கூற்றுகளுக்கான மேம்படுத்தல்களை மதிப்பாய்வு செய்து நாணயச் சபையின் அனுமதிக்கு பரிந்துரைத்தது.

vi. பன்னாட்டு இருப்புக்கள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் உள்ளக முதலீட்டு நிதிகளுக்கான முன்மொழியப்பட்ட புதிய மூலோபாய சொத்து ஒதுக்கீட்டை மதிப்பாய்வு செய்து நாணயச் சபையின் அனுமதிக்குப் பரிந்துரைத்தது.

vii உள்ளக முதலீட்டு நிதிகள் மற்றும் பன்னாட்டு இருப்புக்களுக்கான முதலீட்டு வழிகாட்டுதல்களுக்கான மேம்படுத்தல்களை மதிப்பாய்வு செய்து நாணயச் சபையின் அனுமதிக்குப் பரிந்துரைத்தது.

இலங்கை மத்திய வங்கி

முகாமைத்துவக் கூற்று

2022 திசெம்பர் 31இல் முடிவடைந்த காலப்பகுதிக்குரியது

இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களுடன் தொடர்பான பொறுப்புடைமையும் நிதிச் செயலாற்றமும்

இலங்கை மத்திய வங்கியானது இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு பொறுப்பான நிறுவனமாக நாணய விதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இச்சட்டத்திற்கிணங்க, வங்கியானது பிரதானமான குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுகின்ற பொறுப்பை ஏற்றுள்ளது.

ஆதலால், மத்திய வங்கி மற்றும் அதன் தொழிற்பாடுகளின் வெற்றிகரத் தன்மைக்கான பொறுப்புடைமையின் அடிப்படையானது அதன் பிரதான குறிக்கோள்களை அடையப் பெறுவதை முன்னிட்டான அதன் கொள்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் நற்பயன் தொடர்பாகவேயன்றி அதன் இலாபகரத்தன்மை தொடர்பில் அத்தியாவசியமானதாயிராது. இக் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள் ஏனைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கியை பிரித்துக் காட்டுகின்ற சிறப்புத் தன்மையைக் கொண்ட அடிப்படைப் பண்புகளாக உள்ளன. இதற்கிணங்க மத்திய வங்கிக்கு வட்டி வீதத்திலும் செலாவணி வீதத்திலும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அதன் நாணயக் கொள்கைச் செயற்பாடுகளினூடாக அதற்கே உரியதான இலாபத்தை உருவாக்கிக் கொள்ளும் சிறப்புமிக்க ஆற்றல் அதற்குள்ள போது, இலாபகரத் தன்மையுடன் தொடர்புடைய அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்படும் பட்சத்தில் அதன் பெறுபேறாக பிரதானமான குறிக்கோள்களை விட்டுக் கொடுத்து இலாபத்தைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டிய நிலை உருவாகும். ஆதலால் தற்காலிகமானதாக அல்லது புலமை வாய்ந்ததாக மட்டும் இருந்தாலன்றி மத்திய வங்கியின் குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுதல் சிறப்புமிக்கதாகவும் தனியே இலாபத்தைப் பெறும் குறிக்கோள்களிலிருந்து விலகியதாக இருத்தலும் அவசியமாகின்றது

இப்பின்னணியில், மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களில் அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள், செலாவணி வீத முகாமைத்துவம், நாணயங்களை வெளியிடல் ஆகியவற்றை அமுலாக்குகின்ற போது உருவாகின்ற இலாபம் மற்றும்/ அல்லது நட்டம் உணர் பெறுமதியில் பதிவு செய்யப்படுவதால், இக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள நிதிச் செயலாற்றுகையானது இச்சூழலமைவிற்கிணங்க வரைவிலக்கணம் அளிக்கப்படுதலும் புரிந்து கொள்ளப்படுதலும் அவசியமாகும்.

வங்கியானது, நாணய விதிச் சட்டத்தின் 42 மற்றும் 43ஆம் பிரிவுகளின் கீழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளிவாரிக் கணக்காய்வுக்கு உள்ளாக்கப்படுகின்றது. இதற்கமைய பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கியொழுகுதலை உறுதி செய்யும் பொருட்டு பன்னாட்டு கணக்காய்வு நியமங்களின் கீழ் கணக்காய்வை மேற்கொள்வதற்கு ஈஅன்ட்வை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சேவையை கணக்காய்வாளர் தலைமை அதிபதி பெற்றுள்ளார். உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நடைமுறை மீளாய்வுகள் ஆகிய இரண்டிலும் மேற்கொள்ளப்படும் இக்கணக்காய்வுகள் நிதி அறிக்கையிடலுடன் தொடர்புடையதாகும்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. பீஏஎன்/ஜீ/சீபிஎஸ்எல்/1/22/1 ඔබේ අංකය உமது இல. Your No.

දිනය திகதி Date 2023 மார்சு 31

கௌரவ நிதி அமைச்சர்

இலங்கை மத்திய வங்கியின் 2022 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

1. நிதியியல் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

இலங்கை மத்திய வங்கியின் ('வங்கி') 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதியியல் நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதியியல் கூற்றுக்களிற்கான குறிப்புக்களின் கணக்காய்வு 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் 13(1) ஆம் பிரிவு மற்றும் நாணய விதிச் சட்டத்தின் (422ஆம் அத்தியாயம்) 42(2)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154(6)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும். இக்கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமொன்று எனக்கு உதவியது.

எனது அபிப்பிராயத்தின்படி வங்கியின் 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதியியல் நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதியியல் செயலாற்றம் மற்றும் காசுப்பாய்ச்சல் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களிற்கு (ப.நி.அ.நி) இணங்க அனைத்துப் பொருண்மையான விடயங்களையும் நியாயமாகப் பிரதிபலிக்கின்றன.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்ஏஎஸ்) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72. பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

1.3 நாணயச் சபையினதும் நிதியியல் கூற்றுக்களின் ஆளுகைக்குப் பொறுப்பான தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதியியல் கூற்றுக்களை ப.நி.அ.நி இற்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நாணயச் சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கடப்பாடுகள் என்பவற்றிற்கு வங்கியின் நாணயச் சபை பொறுப்பாகவுள்ளது.

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கையில், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தொடர்வதற்கான வங்கியின் இயலுமையை மதிப்பிடுதல், பொருத்தமானவிடத்து தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துதல் மற்றும் கணக்கீட்டுக்காகத் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவைப் பயன்படுத்துதல் என்பவற்றுக்கு நாணயச் சபை பொறுப்பாகவுள்ளது.

ஆளுகைக்குப் பொறுப்பானவர்கள் வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாக இருப்பார்கள்.

2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1)ஆம் பிரிவின் பிரகாரம் வங்கி வருடாந்த மற்றும் காலாந்தரமான நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கப்பட வேண்டியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

1.4 நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து ஒட்டுமொத்தமாக நிதியியல் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாகக் காணப்படுகின்ற போதிலும் ஐஎஸ்ஏஎஸ் இற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாகக் கருத்திலெடுக்கப்படும்.

ஐஎஸ்எஸ் இற்கு இணங்க கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வு முழுவதன் போதும் நான் தொழில்சார் நிபுணத்துவ கருதுகோள்களையும் தொழில்சார் நிபுணத்துவ ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதியியல் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான இடர்நேர்வுகளை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்நேர்வுகளை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி

மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வது சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நாணயச் சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கியிடமுள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாகக் காணப்படாதிருக்கையில், நிதியியல் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்குக் காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதியியல் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதியியல் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

ஏனைய விடயங்களிடையே, என்னுடைய கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏதாவது முக்கிய குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வு காண்புகள் தொடர்பாக ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு நான் தெரிவிக்கின்றேன்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன:

2.1.1 கணக்காய்விற்கு அவசிமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கியினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2.1.2 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii)ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv)ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பொருண்மையான பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை:

2.2.1 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வியாபாரச் செயற்பாடுகளிற்கு வெளியே வங்கி செய்துகொண்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் வங்கியின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

2.2.2 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் வங்கி இணங்கியொழுகாதுள்ளமையைக் குறிப்பிடுதல்.

2.2.3 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கி அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கிணங்க செயலாற்றியிருக்காதமையைக் குறிப்பிடுதல்.

2.2.4 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கியின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையைக் குறிப்பிடுதல்.

டபிள்யூ. பி. சி. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

இலங்கை மத்திய வங்கி
நிதியியல் நிலைமைக் கூற்று

2022 திசெம்பர் 31இல் உள்ளவாறானது	குறிப்பு	2022 ரூ.000	2021 ரூ.000
சொத்துக்கள்			
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்			
காசும் காசுக்குச் சமமானவையும்	8	**651,687,864**	512,762,452
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்	9	**10,867,425**	8,818,244
பெறுதி நிதியியல் சாதனங்கள்	10	**401,580**	54,022,836
பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி) தொடர்பான சொத்துக்கள்	11	**281,421,074**	188,045,837
ஏனைய பெறத்தக்கவைகள்	30.3	**37,022,631**	-
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**981,400,574**	763,649,369
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்			
இலங்கை அரச பிணையங்கள்	12	**2,498,995,015**	1,377,820,347
மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	13	**698,069,219**	567,532,312
அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்	14	**235,638,700**	150,128,800
நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட பங்குரிமை முதலீடுகள்	15	**1,817,132**	1,671,218
வங்கிகளுக்கான கடன்கள்	16	**28,257,902**	90,572,746
ஏனைய சொத்துக்கள்	17	**30,182,560**	34,063,770
மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**3,492,960,528**	2,221,789,193
மொத்த நிதியியல் சொத்துக்கள்		**4,474,361,102**	2,985,438,562
வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்			
தங்கம்	18	**10,031,610**	35,151,981
நிதியல்லாச் சொத்துக்கள்			
இருப்புக்கள்	19	**4,788,407**	4,928,533
ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்பணங்கள்		**1,222,568**	961,456
ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்	20	**19,035,278**	19,235,994
அருவச் சொத்துக்கள்	21	**908,137**	561,632
மொத்த நிதியல்லாச் சொத்துக்கள்		**35,986,000**	60,839,596
மொத்தச் சொத்துக்கள்		**4,510,347,102**	3,046,278,158
பொறுப்புக்களும் பங்குரிமை மூலதனமும்			
வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்			
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்	22	**146,408,028**	13,701
பெறுதி நிதியியல் சாதனங்கள்	10	**71,697,994**	1,139,323
ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்	23	**736,258,129**	104,764,616
பன்னாட்டு நாணய நிதியம்	24	**1,127,925,092**	670,065,243
ஏனையவை	25	**594,383,451**	357,295,676
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்		**2,676,672,694**	1,133,278,559
உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்			
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்	26	**323,046,181**	300,704,162
அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்	27	**221,411**	1,392,301
மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் மற்றும் துணைநில் வைப்பு வசதிகள்	28	**330,637,059**	101,062,880
சுற்றோட்டத்திலுள்ள நாணயம்	29	**1,026,567,252**	1,005,099,066
ஏனைய செலுத்தத்தக்கவைகள்	30	**68,320,347**	19,163,882
மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்		**1,748,792,250**	1,427,422,291
மொத்த நிதியியல் பொறுப்புக்கள்		**4,425,464,944**	2,560,700,850
ஏனைய பொறுப்புக்கள்			
பிற்போடப்பட்ட கொடைகள்	31	**1,834**	1,178
ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள்	32	**1,772,429**	17,929,737
நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள்	33	**855,043**	4,027,349
மொத்த ஏனைய பொறுப்புக்கள்		**2,629,306**	21,958,264
மொத்தப் பொறுப்புக்கள்		**4,428,094,250**	2,582,659,114
பங்குரிமை மூலதனம்			
மூலதன நிதியம்		**50,000,000**	50,000,000
ஏனைய ஒதுக்குகள்	34	**(191,184,970)**	315,128,226
பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள்		**223,437,822**	98,490,818
மொத்தப் பங்குரிமை மூலதனம்		**82,252,852**	463,619,044
மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் பங்குரிமை மூலதனம்		**4,510,347,102**	3,046,278,158

14ஆம் பக்கம் தொடக்கம் 85ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.
நாணயச் சபையின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் முதன்மைக் கணக்காளரும் 2023 மார்சு 23ஆம் திகதியில் வெளியிடுவதற்காக இந்நிதியியல் கூற்றுக்களை அங்கீகரித்துள்ளனர்.

முனைவர் பீ நந்தலால் வீரசிங்க - ஆளுநர்

டி.எஸ்.எல் சிறிமான்ன - முதன்மைக் கணக்காளர்

இலங்கை மத்திய வங்கி
வருமானக் கூற்று

2022 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	2022 ரூபா 000	2021 ரூபா 000
தொழிற்பாட்டு வருமானம்			
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்			
வட்டி வருமானம்	36	**1,579,295**	4,379,048
தேறல் செய்யப்படாத விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/(நட்டம்)	37	**(127,286,104)**	41,859,703
தேறல் செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம்/(நட்டம்)		**(9,968,941)**	20,317,794
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்		**(135,675,750)**	66,556,544
வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவினம்			
வட்டிச் செலவினம்	38	**(32,293,277)**	(3,634,528)
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களின் திருப்புதல்/ (கட்டணம்)	39	**(763,218)**	2,282,695
வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவினம்		**(33,056,495)**	(1,351,833)
தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்)		**(610,149,293)**	34,041,805
வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம்		**(778,881,538)**	99,246,516
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான தேறிய வருமானம்			
வட்டி வருமானம்	36	**482,676,527**	68,612,928
தேறல்செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம்/ (நட்டம்)		**(7,866,974)**	(387,202)
வட்டிச் செலவினம்	38	**(37,619,594)**	(8,469,897)
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களின் திருப்புதல்/ (கட்டணம்)	39	**497,432**	(808,696)
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான தேறிய வருமானம்		**437,687,391**	58,947,133
ஏனைய வருமானம்	40	2,454,218	16,280,370
ஏனைய செலவினம்	40.1	**(10,260,110)**	-
மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்		**(349,000,039)**	174,474,019
தொழிற்பாட்டுச் செலவினங்கள்			
ஆளணிச் செலவினங்கள்:	41		
- சம்பளங்களும் கூலிகளும்		**(6,691,770)**	(7,116,223)
- நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவினம்		**(11,550,422)**	(1,717,811)
- தொழிலுக்குப் பின்னரான நன்மை திட்டச் செலவினம்		**(2,091,404)**	(1,891,272)
		(20,333,596)	(10,725,306)
பெறுமானத் தேய்வும் பதிவழிப்பும்		**(737,304)**	(526,675)
இருப்புச் செலவினம் (புதிய நாணயங்களை வெளியிடுவதற்கான செலவினம்)		**(2,339,653)**	(2,780,250)
நிர்வாகம் மற்றும் ஏனைய செலவினங்கள்	42	**(1,910,381)**	(2,279,122)
மொத்தத் தொழிற்பாட்டுச் செலவினங்கள்		**(25,320,934)**	(16,311,353)
வரிக்கு முந்திய இலாபம்/ (நட்டம்)		**(374,320,973)**	158,162,666
வரி	43	-	-
ஆண்டிற்கான இலாபம்/ (நட்டம்)		**(374,320,973)**	158,162,666

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் எண்தொகைகள் கழித்தலைக் குறிக்கும்.

14ஆம் பக்கம் தொடக்கம் 85ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

இலங்கை மத்திய வங்கி
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

2022 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது		2022 ரூபா 000	2021 ரூபா 000
ஆண்டுக்கான இலாபம்		**(374,320,973)**	158,162,666
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்			
இலாபம்/ (நட்டம்) இற்குப் பின்னர் மீள்வகைப்படுத்தப்பட்ட அல்லது மீள்வகைப்படுத்தக்கூடிய விடயங்கள்			
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம்/ (நட்டம்)	34	**(1,189,382)**	(16,108,192)
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான அரச பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம்	34	**11,225,713**	(11,641,542)
		10,036,331	(27,749,734)
இலாபம்/ (நட்டம்) இற்குப் பின்னர் மீள்வகைப்படுத்தப்படாத விடயங்கள்			
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் செலவு	32	**14,163,877**	1,293,721
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை முதலீடுகள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம்	34	**145,915**	55,862
		14,309,792	1,349,583
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/ (செலவினம்)		**24,346,123**	(26,400,151)
மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/ (செலவினம்)		**(349,974,850)**	131,762,515

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்

14ஆம் பக்கம் தொடக்கம் 85ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

இலங்கை மத்திய வங்கி

பங்குரிமை மூலதன மாற்றல் கூற்று

2022 திசெம்பர் 31இல் உள்ளவாறானது

	பங்களிக் கப்பட்ட மூலதனம் ரூபா 000	ஏனைய ஒதுக்கங்கள் ரூபா 000	பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் ரூபா 000	மொத்தம் ரூபா 000
2021 சனவரி 01இல் உள்ளவாறு	50,000,000	282,012,023	15,153,549	347,165,572
ஆண்டிற்கான தேறிய இலாபம்	-	-	158,162,666	158,162,666
அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல்	-	369,008	(369,008)	-
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் செலவு	-	-	1,293,721	1,293,721
தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றல்	-	34,041,805	(34,041,805)	-
இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியங்களுக்கான மாற்றல்	-	-	(291,870)	(291,870)
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்	-	(16,108,192)	-	(16,108,192)
பிடித்துவைத்திருக்கப்பட்ட வருவாய்களிலிருந்து சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கான நிதியங்களின் மாற்றல்	-	23,574,367	(23,574,367)	-
பொது ஒதுக்கத்திற்கான நிதியங்களின் மாற்றல்	-	2,859,208	(2,859,208)	-
2020ஆம் ஆண்டிற்கான இலாப ஒதுக்கு - வெளிநின்ற இலங்கை அரச கடப்பாடுகளை 2020ஆம் ஆண்டிலிருந்து அறவிடுதல்	-	-	(15,016,745)	(15,016,745)
இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான நிதியங்களின் மாற்றல்	-	-	(72)	(72)
தொழிலுக்குப் பின்னரான நன்மைகளின் நிதியிடல் தேவைகளுக்கான ஒதுக்கத்திற்கான மாற்றல்	-	757,613	(757,613)	-
ஏனைய அனைத்தையுமுள்ளடகிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை மூலதன முதலீடுகளின் சந்தை மீள்மதிப்பீடு மீதான இலாபம்	-	55,862	-	55,862
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட அரச பிணையங்களின் சந்தை மதிப்பீடு மீதான இலாபம்	-	(11,641,542)	-	(11,641,542)
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு மீதான இலாபம்	-	(791,926)	791,570	(356)
2021 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை	**50,000,000**	**315,128,226**	**98,490,818**	**463,619,044**
2022 சனவரி 01இல் உள்ளவாறான நிலுவை	50,000,000	315,128,226	98,490,818	463,619,044
ஆண்டிற்கான தேறிய இலாபம்	-	-	(374,320,973)	(374,320,973)
அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல்	-	438,146	(438,146)	-
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் செலவு	-	-	14,163,877	14,163,877
தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றல்	-	(610,149,293)	610,149,293	-
இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியங்களுக்கான மாற்றல்	-	-	(355,494)	(355,494)
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சந்தைப் பெறுமதி நட்டம்	-	(1,189,382)	-	(1,189,382)
பிடித்துவைத்திருக்கப்பட்ட வருவாய்களிலிருந்து சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கான நிதியங்களின் மாற்றல்	-	49,638,590	(49,638,590)	-
பொது ஒதுக்கத்திற்கான நிதியங்களின் மாற்றல்	-	27,526,076	(27,526,076)	-
2020ஆம் ஆண்டிற்கான இலாப ஒதுக்கு - வெளிநின்ற இலங்கை அரச கடப்பாடுகளை 2020ஆம் ஆண்டிலிருந்து அறவிடுதல்	-	15,000,000	(15,000,000)	-
இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான நிதியங்களின் மாற்றல்	-	-	(31,035,788)	(31,035,788)
தொழிலுக்குப் பின்னரான நன்மைகளின் நிதியிடல் தேவைகளுக்கான ஒதுக்கத்திற்கான மாற்றல்	-	-	(60)	(60)
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை மூலதன முதலீடுகளின் சந்தை மீள்மதிப்பீடு மீதான இலாபம்	-	1,051,039	(1,051,039)	-
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட அரச பிணையங்களின் சந்தை மதிப்பீடு மீதான நட்டம்	-	11,225,713	-	11,225,713
விற்பனையிலிருந்து கிடைத்த மீள்மதிப்பீட்டு இலாபம்	-	145,915	-	145,915
2022 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை	**50,000,000**	**(191,184,970)**	**223,437,822**	**82,252,852**

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் எண்தொகைகள் கழித்தலைக் குறிக்கும்.

14ஆம் பக்கம் தொடக்கம் 85ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

இலங்கை மத்திய வங்கி

காசுப்பாய்ச்சல் கூற்று

2022 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	2022 ரூபா 000	2021 ரூபா 000
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்			
பெறுகைகள்:			
பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம்		**1,550,703**	16,510,461
பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை		**3,498,481**	2,433,655
திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும்		**(17,835,915)**	14,468,586
தேறல் செய்யப்பட்ட செலாவணி நட்டம்		**(179,967,468)**	(13,003,097)
பெறப்பட்ட ஏனைய வருமானம்		**8,020,273**	1,572,512
		(184,733,926)	21,982,117
பகிர்ந்தளிப்புக்கள்:			
செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம்		**23,170,613**	5,841,243
செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம்		**40,437,692**	6,571,438
ஊழியர்களுக்கான கொடுப்பனவு		**12,435,846**	8,295,030
வழங்குநர்களுக்கான கொடுப்பனவு		**(31,924,158)**	498,361
		44,119,993	21,206,072
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்	44	**(228,853,919)**	**776,045**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்			
பெறுகைகள்:			
ஏனைய உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு		**(2,431,705)**	(3,542,041)
ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் தொகை அறவீடுகள்		**49,642**	5,534
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான பெறுகைகள்		**(234)**	338,246
மீள்விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)		**229,574,179**	(108,445,017)
		227,191,882	(111,643,278)
பகிர்ந்தளிப்புக்கள்:			
வெளிநாட்டு நாணயப் பிணையங்களிலான தேறிய குறைவு		**31,403,136**	(755,979,008)
ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு/ (குறைவு)		**(42,189,977)**	22,242,111
ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/ (குறைவு)		**(704,622,720)**	218,313,967
ஏனைய உள்நாட்டு வைப்புக்கள் மற்றும் செலுத்தத்தக்கவையிலான அதிகரிப்பு/ (குறைவு)		**(3,660)**	489
ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவுகள், தேறிய கொடைகள்		**3,773**	686,469
அருவச் சொத்துக்களின் கொள்வனவு		**879,377**	72,928
குத்தகை ஆதனங்களின் கொள்வனவு		**-**	9,113
தங்க இருப்புக்களிலான தேறிய குறைவு		**(26,108,952)**	(38,743,707)
ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட (அவற்றிலிருந்து அறவிடப்பட்ட) கடன்களும் முற்பணங்களும்		**(61,796,952)**	(30,118,054)
		(802,435,975)	(583,515,692)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்		**1,029,627,857**	471,872,414
நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்			
பெறுகைகள் :			
சுற்றோட்ட நாணயத்தின் வழங்கல்		**347,595,479**	390,975,631
சுற்றோட்ட நாணயத்தினை எடுப்பனவு செய்தல்		**(326,127,293)**	(220,684,424)
சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல்		**21,468,186**	170,291,207
பகிர்ந்தளிப்புக்கள்:			
அரச கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய வெளியீடு	45	**851,954,489**	1,172,364,801
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு	46	**(22,342,019)**	(171,102,641)
சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல்கள்		**829,612,470**	1,001,262,160
சுற்றோட்ட நாணயத்தின் தேறிய குறைவு		**(808,144,284)**	(830,970,953)
பகிர்ந்தளிப்புக்கள்:			
வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் கொடை/ (மீள்கொடுப்பனவு)		**27,384,295**	(145,925,443)
ஏனைய நிதியங்களுக்கான கொடுப்பனவுகள்		**60**	72
ஓய்வூதிய நிதியத்திற்கான கொடுப்பனவுகள்		**3,363,735**	7,547,179
திரட்டிய நிதியத்திற்கு இலாபங்களை மாற்றல்		**30,000,000**	15,000,000
		60,748,090	(123,378,192)
நிதியிடல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்		**(868,892,374)**	(707,592,761)
காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ (குறைவு)		**(68,118,436)**	(234,944,302)
காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதான செலாவணி வீதத் தாக்கம்		**(3,321,000)**	28,871,146
ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்		**197,504,486**	403,577,642
திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	8	**126,065,050**	197,504,486

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்

14ஆம் பக்கம் தொடக்கம் 85ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

இலங்கை மத்திய வங்கி
நிதிக்கூற்றுக்களின் விளக்கக் குறிப்புகள்

1. அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் நியதிச் சட்டத் தளம்

திருத்தப்பட்டவாறான இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி (வங்கி அல்லது இ.ம.வங்கி) இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமைகள் என்பனவற்றின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு பொறுப்பான அதிகாரசபையாக இருக்கின்றது. இலங்கை மத்திய வங்கியானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்குள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளதோடு இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ளது.

இந்நிதியியல் கூற்றுக்களை வெளியிடுவதற்கு நாணயச் சபையின் சார்பில் ஆளுநராலும் முதன்மைக் கணக்காளராலும் 2023 மார்ச்சு 31ஆம் திகதி அதிகாரமளிக்கப்பட்டது.

1.1 முதன்மை நடவடிக்கைகள்

திருத்தப்பட்டவாறான இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் பின்பற்றப்படுவதற்கு அல்லது மேற்கொள்ளுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கொள்கைகள் அல்லது வழிமுறைகளைத் தீர்மானிப்பதற்குப் புறம்பாக, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இதனிடம் பொதுவாக வங்கியின் முகாமைத்துவம், தொழிற்பாடுகள் மற்றும் நிருவாகம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வங்கியானது இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு முதன்மைப் பொறுப்பாக இருப்பதுடன் அரசாங்கத்தின் இறை முகவராகவும் தொழிற்படுகின்றது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாக பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கின்றன:

- நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்
- நாணயத்தை வெளியிடுதல்
- அலுவலக ரீதியான பன்னாட்டு ஒதுக்குகளை முகாமைப்படுத்தல்
- நிதியியல் முறைமையை மேற்பார்வை செய்தல்
- வங்கிகள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கு உரிமமளித்தல், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்
- தீர்ப்பனவு வசதிகளை வழங்குதல் மற்றும் கொடுப்பனவு முறைமையினை ஒழுங்குமுறைப்படுத்தல்
- பொருளாதாரத் தரவு மற்றும் புள்ளிவிபரங்களைத் தொகுத்தல், பரப்புதல் மற்றும் பகுப்பாய்தல்
- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குதல்.
- அரசாங்கம் மற்றும் அதன் முகவர்களுக்கு வங்கியாளராகச் செயற்படுதல் மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் அரச பிணையங்களுக்காக வர்த்தக வங்கியல்லாத முதனிலை வணிகர்களுக்கு நடைமுறைக் கணக்கு வசதிகளை வழங்குதல்

இலங்கையின் உற்பத்தியாக்க வளங்களின் அபிவிருத்தியை ஊக்குவித்து மேம்படுத்தும் நோக்கில் அதன் பொருளாதார, விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதித்தன்மை குறிக்கோள்களை அடையும் பொருட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வேறுபடுத்தலாம். இந்நடவடிக்கைகளின் பெறுபேறுகள் வருமானக் கூற்றினைப் பொறுத்தவரை தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. நிதியியல் கூற்றுக்களின் சமர்ப்பித்தலின் அடிப்படை

2.1. இணக்கக் கூற்று

2022 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந்நிதியியல் கூற்றுக்கள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கு (ப.நி.அ.நி) இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 அளவீட்டிற்கான அடிப்படை

கீழ்வருவனவற்றிற்குத் தவிர்ந்து, நிதியியல் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- தங்கமானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது.
- பெறுதி நிதியியல் சாதனங்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைத்திருக்கப்பட்ட மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைத்திருக்கப்பட்ட பெறுதியல்லா நிதியியல் சாதனங்கள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டன.
- காணி மற்றும் கட்டிடங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நேரத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் பின்னர் மீள்மதிப்பிட்ட தொகையிலிருந்து ஒன்றுசேர்ந்த தேய்மானம் மற்றும் பெறுமதியிழப்பு நட்டங்களைக் கழித்த தொகையில் அளவிடப்படுகின்றன.
- நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டிற்கான பொறுப்பானது நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியிலிருந்து திட்டச் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதியைக் கழித்த பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

2.3 அறிக்கையிடல் வடிவம்

வங்கியானது நிதியியல் சொத்துக்களையும் நிதியியல் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும் செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி காட்டுகின்றது. நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துக்களும் பொறுப்புக்களும் பரந்தளவில் குறிப்பிட்ட வகைகளின் திரவத்தன்மை ஒழுங்குவரிசையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையிடும் அணுகுமுறையானது குறிப்பு 7இல் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளவாறு, வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

2.4 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

இந்நிதியியல் கூற்றுக்கள் வங்கியின் தொழிற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதியியல் தகவல்கள் கிட்டிய ஆயிரத்திற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன. மீளாய்வுக்குரிய ஆண்டில் வங்கியின் சமர்ப்பித்தல் மற்றும் தொழிற்பாட்டு நாணயத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

2.5 பொருண்மை மற்றும் ஒன்றுசேர்ப்பு

ஒரே மாதிரியான விடயங்களின் ஒவ்வொரு பொருண்மைப் பிரிவும் நிதியியல் கூற்றுக்களில் வேறுவேறாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒரே தன்மையற்ற விடயங்கள் அல்லது தொழிற்பாடுகள், அவை பொருண்மைத்தன்மை அற்றதாக இருந்தாலன்றி வேறு வேறாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2.6 எதிரீடு

வங்கியானது அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கான சட்ட ரீதியான உரிமையைக் கொண்டிருந்து ஒன்றில் தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கோ அல்லது சொத்துக்களை தேறல் செய்து அதேநேரத்தில் பொறுப்புக்களை தீர்ப்பதற்கோ விரும்பும் சந்தர்ப்பங்களில் மட்டும் நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்பட்டு தேறிய பெறுமதி நிதியியல் நிலைமைக் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2.7 ஒப்பீட்டுத் தகவல்

ஒப்பீட்டுத் தகவலானது நடப்பாண்டின் சமர்ப்பிப்புடன் ஒத்திருக்க வேண்டிய அவசியமேற்படும் சந்தர்ப்பங்களில் மீள்வகைப்படுத்தப்பட்டது.

3. மதிப்பீடுகள் மற்றும் திறனாய்வுகளின் பயன்பாடு

வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு முகாமைத்துவத்தின் திறனாய்வு முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் என்பன தேவைப்படுவதுடன் இவை வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளின் மீதும் இணைந்த வெளிப்படுத்துகைகள் அதேபோன்று எதிர்பாராத பொறுப்புக்களின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

இக்கருதுகோள்கள் மற்றும் மதிப்பீடுகளின் நிச்சயமற்ற தன்மையானது எதிர்காலத்தில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதியில் பொருண்மிய சீராக்கத்தினை தேவைப்படுத்தும் தாக்கத்தினை விளைவிக்கக்கூடும்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையான அனுமானங்கள் தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் எதிர்கால நோக்கில் இனங்காணப்படுகின்றன. நிதியியல் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகளில் மிக முக்கியமான விளைவுகளினைக் கொண்ட கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்துவதில் செய்யப்பட்ட திறனாய்வு முடிவுகள் பற்றிய தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

3.1 நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தல் மற்றும் பெறுமதி இழப்பு

சொத்துக்கள் வைத்திருக்கப்படும் வியாபார மாதிரியை மதிப்பிடுகையில் வங்கியானது திறனாய்வுகளை மேற்கொண்டதுடன் நிதியியல் சொத்துக்களின் ஒப்பந்த நியதிகள் வெளிநின்ற முதல் தொகையின் மீதான முதல் மற்றும் வட்டியின் கொடுப்பனவு மட்டுமா என்பதை மதிப்பிட்டது. வங்கியானது மேலும் நிதியியல் சொத்துக்கள் மீதான கொடுகடன் இடர்நேர்வானது அது அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அதிகரித்துள்ளதா என்பதை தீர்மானிப்பதற்காக பிரமாணங்களை உருவாக்குதல், எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களின் அளவீட்டிற்கு முன்னோக்கிய தகவல்களை உள்ளடக்குவதற்கான வழிமுறையை தீர்மானித்தல் மற்றும் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களை அளப்பதற்கான மாதிரிகளின் தெரிவு மற்றும் ஒப்புதலுக்கும் திறனாய்வுகளைப் பயன்படுத்தியது. வங்கியின் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக் கணப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட எறிவுகள் மற்றும் திறனாய்வுகள் தொடர்பில் கொவிட்-19இன் தாக்கம் பற்றி குறிப்பு 3.4இல் விளக்கப்பட்டுள்ளது.

3.2 ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைத் திட்டங்களும்

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் கிரயமானது ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது, கழிவு வீதங்கள், எதிர்கால இழப்பீட்டுக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு, இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புகள் ஆகியவற்றின் கருதுகோள்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. இத்திட்டங்களின் நீண்டகால இயல்பின் காரணமாக மேற்படி மதிப்பீடுகள் கணிசமான அளவு நிச்சமற்ற நிலைமைக்கு உட்படுகின்றன. ஆயுட்கால மதிப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்ட கருதுகோள்கள் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 32இல் தரப்பட்டுள்ளன.

3.3 நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி

நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் சீர்மதிப்புப் பெறுமதிகள் செயற்படும் சந்தைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட முடியாவிடின் அவை கணித ரீதியான மாதிரிகளை உள்ளடக்கும் வேறுபட்ட மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமான இடங்களில் அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆனால் இத்தரவுகள் கிடைக்கத்தக்கதாக இல்லாதவிடத்து, சீர்மதிப்புப் பெறுமதிகளைக் கணிப்பதற்கு திறனாய்வான முடிவு தேவைப்படுகின்றது. திறனாய்வான முடிவு, திரவத்தன்மையைக் கவனத்திலெடுத்தல் மற்றும் நீண்ட கால பெறுதிகளுக்கான தளம்பல்கள் போன்ற மாதிரி உள்ளீடுகளை உள்ளடக்கியிருக்கும். உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தின் மீட்சிக்கு ஆதரவளிப்பதற்காக வழங்கப்பட்ட கடன்களைச் சீர்மதிப்பிடுகையில் எறிவுகள் மற்றும் திறனாய்வுகளின் பயன்பாடு தொடர்பில் கொவிட்-19இன் தாக்கம் பற்றி குறிப்பு 3.4இல் விளக்கப்பட்டுள்ளது.

3.4 கொவிட்-19இன் பொதுவான விளைவுகள்

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கையில் வங்கி கொவிட்-19இன் தாக்கத்தைக் கவனத்திற் கொண்டது. திறனாய்வுகளின் குறிப்பிட்ட விடயங்களில் மாற்றமில்லை என்ற போதிலும் கொவிட்-19இன் தாக்கமானது, முக்கியமாக, வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் நிதியியல் கூற்றுக்களிலுள்ள எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மதிப்பீடு தொடர்பில் மேலதிகமான திறனாய்வுகளையும் மதிப்பீடுகளையும் தோற்றுவித்தது..

கொவிட்-19 நோய்ப்பரவலினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக இலங்கை மத்திய வங்கி பல்வேறுபட்ட நிவாரண மற்றும் கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. இவற்றுள், வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் மீது நிதியியல் தாக்கத்தைக் கொண்டிருந்த மிக முக்கியமான நிவாரண வழிமுறையாகக் காணப்பட்டவை பொருளாதாரத்தின் மீட்சியை ஆதரவளிப்பதற்கு நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களாகும். இதன்படி, 6 மாதங்களிலிருந்து 2 ஆண்டுகள் வரை முதிர்ச்சிக் காலத்துடன் சலுகை வட்டி வீதங்களில் சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளிப்பு வசதிக் கட்டம் I, II, III மற்றும் கட்டுமானத் துறைக்கான திரவத்தன்மை ஆதரவு என்ற பெயர்களில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளூடாக மீள்நிதியிடல் மற்றும் கொடுகடன் திட்டங்களை ஆரம்பித்ததுடன் இவை உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளால் கடன் வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டதாகும். சீர்மதிப்புப் பெறுமதியானது அவதானிக்க முடியாத உள்ளீடுகள் மற்றும் திறனாய்வுகளைப் பயன்படுத்தும் மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி, குறிப்பாக, இம்மதிப்பீட்டு நுட்பங்களும் உள்ளீடுகளும் தொடர்புபட்டவையாகவும் பொருத்தமானதாகவும் இருப்பதை உறுதிசெய்து, தீர்மானிக்கப்பட்டன. இதன்படி, சொல்லப்பட்ட கடன் திட்டங்களின் மீள்கொடுப்பனவு நியதிகள் மற்றும் ஆரம்ப அங்கீகரிப்பு சீர்மதிப்புப் பெறுமதியைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்பட்ட சந்தை வட்டி வீதங்களைத் தீர்மானிக்கும் போது காத்திரமான திறனாய்வுகள் பயன்படுத்தப்பட்டன.

வங்கியின் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக் கணிப்பீட்டிற்கு ஆதாரமாக அமைந்த அடிப்படை கொடுகடன் இழப்பு மாதிரிப் பொறிமுறை மற்றும் ஆராய்ச்சி முறை என்பன முன்னைய காலங்களுடன் தொடர்ந்தும் ஒத்திருந்த போதும், வங்கியானது 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட எதிர்மறை பொருளாதாரச் சூழ்நிலைகள் மற்றும் கொவிட்-19இன் தாக்கத்தைக் கணிப்பீட்டுச் செயன்முறையில் பயன்படுத்தப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மாதிரி உள்ளீடுகள், கருதுகோள்கள் மற்றும் முன்னோக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகள் என்பவற்றினூடாகக் கருத்திலெடுத்தது. மேலும், கொவிட்-19இன் விளைவாக பேரண்டப் பொருளாதாரத் தரவு அசைவுகளின் காரணமாக ஏற்படும் முன்னொருபோதும் நிகழ்ந்திராத புள்ளிவிபர வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்காக எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மாதிரியில் பயன்படுத்தப்பட்ட முன்னோக்கிய பேரண்டப் பொருளாதாரத் தரவுகளில் நியமப்படுத்தலை வங்கி பயன்படுத்தியது.

எனினும், நிதியல்லாச் சொத்துக்களைப் பொறுத்தவரை வங்கியின் மதிப்பீடு என்னவெனில், கொவிட்-19 தொடர்பான நிலைமைகள் கொண்டு செல்லும் பெறுமதியில் எவ்வித தாக்கத்தினையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன் 2022 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்களில் பொருத்தமாக மதிப்பிடப்பட்டுள்ளன.

4. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளிலான மாற்றங்கள்

கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் எதுவும் இல்லையென்பதுடன், பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய நிதியியல் ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

5. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

5.1 வெளிநாட்டு நாணயமாற்று வீதங்கள் மற்றும் நிலுவைகள்

வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள், அவை இடம்பெற்ற நாளில் நிலவிய நாணயமாற்று வீதத்தில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டன. அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் அறிக்கையிடல் திகதியில் நிலவிய நாணயமாற்று வீதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டன. நாணய விடயங்கள் மீதான வெளிநாட்டு நாணயமாற்று வீத இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம்மாற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான இலங்கை ரூபா நாணயமாற்று வீதங்கள் பின்வருமாறு:

நாணயம்	2022 ரூபா	2021 ரூபா
1 அவுஸ்திரேலிய டொலர்	247.0237	145.5851
1 கனேடிய டொலர்	268.4335	158.6150
1 யூரோ	388.3461	227.8832
1 யப்பானிய யென்	2.7703	1.7417
1 சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ)	483.3276	280.9312
1 ஸ்டேர்லிங் பவுண்	437.4023	271.2270
1 ஐக்கிய அமெரிக்க டொலர்	363.1100	200.4338
1 சீன யுவான் (கரைகடந்த)	52.6513	31.5294

வெளிநாட்டு நாணயத்தின் வரலாற்றுக் கிரய அடிப்படையில் அளவிடப்படும் நிதியல்லாத விடயங்கள் கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற திகதியன்று உள்ளவாறான நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி மாற்றப்பட்டுள்ளன.

5.2 சீர்மதிப்புப் பெறுமதி அளவீடு

வங்கி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் வெளிநாட்டுப் பிணையங்கள், பெறுதிகள் போன்ற நிதியியல் சாதனங்களையும் தங்கம் போன்ற நிதியல்லாச் சொத்துக்களையும் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடுகின்றது. பதிவழிப்புச் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி குறிப்பு 50இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சீர்மதிப்புப் பெறுமதி என்பது அளவிடுகின்ற திகதியில் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான ஒழுங்குமுறையான கொடுக்கல்வாங்கல்களின் போது சொத்தொன்றினை விற்பது தொடர்பில் பெறப்பட்ட அல்லது பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கு செலுத்தப்பட்ட விலை எனப் பொருள்படும். சீர்மதிப்புப் பெறுமதி அளவீடானது சொத்துக்களை விற்றல் அல்லது பொறுப்புக்களை மாற்றல் செய்தல் தொடர்பாக பின்வரும் இடமொன்றில் இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்களின் ஊகங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- சொத்து அல்லது பொறுப்பிற்கான முதன்மைச் சந்தை, அல்லது
- முதன்மைச் சந்தை இல்லாத போது சொத்து அல்லது பொறுப்பிற்கு மிக அநுகூலம் நிறைந்த சந்தை

முதன்மை அல்லது மிக அநுகூலம் நிறைந்த சந்தை வங்கியினால் அணுகப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியானது சந்தைப் பங்கேற்பாளர்கள் சொத்து அல்லது பொறுப்பினை விலையிடும் போது தமது சிறந்த பொருளாதார நலனைக் கருத்திற் கொண்டு செயற்படுவர் என்ற கருதுகோளைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது. நிதியல்லாச் சொத்தொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி சொத்தினை மிக உயர்ந்த விதத்திலும் சிறந்த முறையிலும் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தினை மிக உயர்ந்த விதத்திலும் சிறந்த முறையிலும் பயன்படுத்தக்கூடிய இன்னொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு விற்பதன் மூலம் பொருளாதார நன்மைகளை உருவாக்கக்கூடிய சந்தைப் பங்கேற்பாளர்களின் இயலாற்றலைக் கருத்தில் கொண்டு அளவிடப்படுகிறது.

வங்கி சூழ்நிலைக்குப் பொருத்தமானதும் சீர்மதிப்புப் பெறுமதிகளை அளவிடுவதற்குப் போதுமான தரவுகள் கிடைக்கத்தக்கதாகவுள்ளதும் இதற்காகத் தொடர்பான அவதானிக்கத்தக்க உள்ளீடுகளை உச்சப்படுத்துகின்றதும் அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளை மிகக் குறைப்பதுமான மதிப்பீட்டு நுணுக்கங்களை பயன்படுத்துகின்றது.

நிதியியல் கூற்றுக்களில் அளவிடப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதிகளுக்கான அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், பொதுவாக சீர்மதிப்புப் பெறுமதியின் அளவிடலுக்குப் போதுமானதாக விளங்கும் குறைந்த மட்டத்தின் அடிப்படையில், கீழே விபரிக்கப்பட்டவாறு சீர்மதிப்புப் பெறுமதி படிநிலைக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டம் 1 - ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான செயற்படுகின்ற சந்தையில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) சந்தை விலைகள்

மட்டம் 2 - சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதான குறைந்தமட்ட உள்ளீட்டினை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவதானிக்கக் கூடியவற்றிற்கான மதிப்பீட்டு நுட்பங்கள்

மட்டம் 3 - சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதான குறைந்தமட்ட உள்ளீட்டினை அவதானிக்க முடியாதவற்றிற்கான மதிப்பீட்டு நுட்பங்கள்

மீண்டெழும் அடிப்படையில் நிதியியல் கூற்றுக்களில் இனங்காணப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்காக வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் முடிவிலும் படிநிலையிலுள்ள மட்டங்களுக்கிடையில் ஏதேனும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதாவென வகையிடலை மீளமதிப்பிடுவதன் மூலம் (முழுமையான சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்த மட்ட உள்ளீடுகளின் அடிப்படையில்) நிர்ணயிக்கிறது.

5.3 நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புகள்

வங்கியானது, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களையும் அத்துடன் இணைந்த வருமானம் மற்றும் செலவினங்களையும், வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமே சமர்ப்பிக்கின்றது.

வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத் தொழிற்பாட்டிலிருந்தே உருவாகின்றன. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், நாணயங்களின் வெளியீடு மற்றும் வங்கித்தொழில் நடவடிக்கைகள் என்பவற்றுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பிரதிபலிக்கின்றன.

இந்நடவடிக்கைகளைத் தனித்தனியாக அறிக்கையிடுவது வங்கியின் நிதியியல் நிலைமை, நிதியியல் செயலாற்றுகை மற்றும் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை சிறந்த முறையில் முன்வைப்பதாகக் கருதப்படுகின்றது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களின் நடவடிக்கைகளை இணைத்து அறிக்கையிடுதல் நிதியியல் கூற்றுக்களின் தகவல் பெறுமதியை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகின்றது.

5.3.1 அங்கீகரித்தல் மற்றும் ஆரம்ப அளவீடு

அனைத்து நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் முதலில் கிரயத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் இது முதலீட்டுடன் தொடர்புபட்ட கொள்வனவுக் கட்டணங்கள் உள்ளடங்கலாக செலுத்தப்பட்ட விலையின் சீர்மதிப்புப் பெறுமதியாகும். நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் அனைத்து கிரமமான வழி கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் அவற்றிற்குரிய வர்த்தகத் திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. கிரமமான வழி கொள்வனவு அல்லது விற்பனை என்பது பொதுவாக ஒழுங்குமுறைப்படுத்தலினால் அல்லது சந்தையின் மரபினால் உருவாக்கப்பட்ட காலவரம்பிற்குள் சொத்துக்களின் கையளிப்பை தேவைப்படுத்தும் நிதியியல் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனையாகும்.

5.3.2 வகைப்படுத்தல்

நிதியியல் சொத்துக்கள்

ஆரம்ப அங்கீகரிப்பில், வங்கியானது கீழ்வருவனவற்றில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்துகிறது:

- பதிவழிக்கப்பட்ட செலவு
- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி
- இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி

ஒரு நிதியியல் சொத்தானது கீழ்வரும் இரு நிபந்தனைகளையும் பூர்த்திசெய்து இலாபம் மற்றும் நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் குறித்துரைக்கப்படாத போது பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகிறது.

- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களைச் சேகரிப்பதற்காக சொத்துக்களை வைத்திருக்கும் நோக்குடைய வியாபார மாதிரி ஒன்றினுள் சொத்து வைத்திருக்கப்படுதல்; மற்றும்
- நிதியியல் சொத்தின் ஒப்பந்த நியதிகளானவை முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவை மட்டும் உள்ளடக்கிய காசுப்பாய்ச்சலுக்கான குறித்துரைக்கப்பட்ட திகதிகளை வழங்குதல்.

ஒரு நிதியியல் சொத்தானது கீழ்வரும் இரு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் குறித்துரைக்கப்படாத போது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களைச் சேகரித்தல் மற்றும் நிதியியல் சொத்துகளை விற்றல் இரண்டின் மூலமும் குறிக்கோளை அடைந்துகொள்ளும் வியாபார மாதிரி ஒன்றினுள் சொத்து வைத்திருக்கப்படுதல்; மற்றும்
- நிதியியல் சொத்தின் ஒப்பந்த நியதிகளானவை முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவை மட்டும் உள்ளடக்கிய காசுப் பாய்ச்சலுக்கான குறித்துரைக்கப்பட்ட திகதிகளை வழங்குதல்.

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படாத பங்குரிமை முதலீட்டின் ஆரம்ப அங்கீகரிப்பின் போது வங்கியானது சீர்மதிப்புப் பெறுமதியில் அடுத்துவரும் மாற்றங்களை ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் காட்டுவதற்கு மாற்றமுடியாதபடி தெரிவுசெய்யலாம். ஏனைய அனைத்து நிதியியல் சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டு வகைப்படுத்தப்படுகின்றன.

வியாபார மாதிரி மதிப்பீடு

வங்கியானது சொத்தொன்று சொத்துப்பட்டியல் மட்டத்தில் வைத்திருக்கப்படும் வியாபார மாதிரியின் குறிக்கோளின் மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்கின்றது. ஏனெனில் இது வியாபாரம் முகாமை செய்யப்படும் விதம் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல் வழங்கப்படும் விதம் பற்றி சிறப்பாக பிரதிபலிக்கின்றது. கவனத்திலெடுக்கப்படும் தகவலானது பின்வருவனவற்றை உள்ளடக்கி இருப்பதோடு இது இதற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- வியாபார மாதிரியின் செயலாற்றம் மற்றும் அவ்வியாபார மாதிரியில் வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள் எவ்வாறு மதிப்பிடப்பட்டு நிறுவனத்தின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு அறிக்கையிடப்படுகின்றன.
- வியாபார மாதிரியின் (மற்றும் அவ்வியாபார மாதிரியினுள் வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள்) செயலாற்றத்தினைப் பாதிக்கும் இடர்நேர்வுகள் மற்றும், குறிப்பாக இவ்வுடர்நேர்வுகள் முகாமை செய்யப்படும் விதம்.
- முன்னைய காலங்களின் விற்பனையின் தடவைகள், அளவு மற்றும் காலக்கிரமம் அத்தகைய விற்பனைக்கான காரணங்கள் மற்றும் எதிர்கால விற்பனை நடவடிக்கை தொடர்பான அதன் எதிர்பார்ப்புகள். எனினும், விற்பனை நடவடிக்கை தொடர்பான தகவலானது தனியாக கருத்திற்கொள்ளப்படுவதில்லை, மாறாக இது நிதியியல் சொத்துக்களை முகாமை செய்வதற்கான வங்கியின் கூறப்பட்ட குறிக்கோள் எவ்வாறு அடையப்படுகின்றது மற்றும் காசுப்பாய்ச்சல்கள் எவ்வாறு தேறல் செய்யப்படுகின்றன என்பது தொடர்பான ஒட்டுமொத்த மதிப்பீட்டின் ஒரு பகுதியாகும்.

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்டு அல்லது முகாமைப்படுத்தப்பட்டு சீர்மதிப்புப் பெறுமதியில் அவற்றின் செயலாற்றம் மதிப்பிடப்படும் நிதியியல் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுவதற்கான காரணம் அவை ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களை சேகரிப்பதற்காகவோ அல்லது ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களை சேகரிப்பதுடன் நிதியியல் சொத்துக்களை விற்பதற்காகவோ வைத்திருக்கப்படாமையாகும்.

ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்கள் முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவா என்பதை மதிப்பிடுதல்

நிதியியல் சொத்துக்கள் முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவு பரீட்சிப்பை பூர்த்திசெய்வதனை கண்டறிவதற்காக நிதியியல் சொத்துக்களின் ஒப்பந்த ரீதியான நியதிகளை வங்கி மதிப்பிடுகின்றது. இம்மதிப்பீட்டு நோக்கத்திற்காக 'முதல்' என்பது ஆரம்ப அங்கீகரிப்பின் போது நிதியியல் சொத்தின் சீர்மதிப்புப் பெறுமதி எனவும் "வட்டி" என்பது பணத்தின் காலப்பெறுமதி, குறிப்பிட்ட காலப்பகுதியொன்றில் வெளிநின்ற முதல் தொகையுடன் தொடர்புபட்ட கொடுகடன் இடர்நேர்வு மற்றும் ஏனைய அடிப்படை கடன்வழங்கல் இடர்நேர்வுகள் மற்றும் செலவுகள் என்பவற்றுக்கான கைமாறு எனவும் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

ஒரு கடன் வழங்கல் உடன்படிக்கையினுள் காணப்படும் வட்டியினது மிக முக்கியமான கூறாகக் காணப்படுவது பணத்தின் காலப்பெறுமதி மற்றும் கொடுகடன் இடர்நேர்வாகும். முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவின் மதிப்பீட்டினை மேற்கொள்ளுவதற்கு, வங்கியானது மதிப்பாய்வுகளை பிரயோகிப்பதுடன், நிதியியல் சொத்து குறித்துரைக்கப்பட்டிருக்கும் நாணயம் மற்றும் வட்டிவீதம் தீர்மானிக்கப்பட்டிருக்கும் காலப்பகுதி போன்ற தொடர்புடைய காரணிகளைக் கருத்திற்கொள்கின்றது.

மாறாக, அடிப்படையான கடன்வழங்கல் ஒழுங்கிற்கு தொடர்புபடாத ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களின் இடர்நேர்வு அல்லது தளம்பல்களுக்கு குறைந்தபட்ச வெளிப்படுத்துகையை விட அதிகமாக தேவைப்படுத்தும் ஒப்பந்த ரீதியான நியதிகள் வெளிநின்ற தொகை மீதான முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவுகளைக் கொண்ட ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலை தோற்றுவிக்காது. அத்தகைய சந்தர்ப்பங்களில்,

நிதியியல் சொத்தானது இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது.

மீள்வகைப்படுத்தல்

நிதியியல் சொத்துக்களை முகாமைப்படுத்துவதற்காக வங்கி அதன் வியாபார மாதிரியை மாற்றியதற்கு பின்னரான காலப்பகுதி தவிர, நிதியியல் சொத்துக்கள் அவற்றின் ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் மீள்வகைப்படுத்தப்படுவதில்லை.

5.3.3 விலக்குதல்

நிதியியல் சொத்துக்கள்

வங்கியானது நிதியியல் சொத்திலிருந்தான காசுப்பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த ரீதியான உரிமை காலாவதியாகும் போது அல்லது நிதியியல் சொத்தின் உடமையினது குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகள் மாற்றல் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கலில் ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலினை பெறுவதற்கான உரிமையை மாற்றல்செய்யும் போது அல்லது வங்கி உடமையின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளை வைத்திருக்காமல் அல்லது மாற்றல் செய்யாமல் இருப்பதுடன் நிதியியல் சொத்தின் கட்டுப்பாட்டை கொண்டிருக்காத போது நிதியியல் சொத்தொன்றினை அங்கீகரிப்பிலிருந்தும் விலக்குகின்றது.

நிதியியல் சொத்தொன்றின் விலக்கலின்போது சொத்தின் கொண்டு செல்லப்படும் பெறுமதிக்கும் (அல்லது விலக்கப்படும் சொத்தின் பகுதிக்கு ஒதுக்கப்பட்ட கொண்டு செல்லல் பெறுமதிக்கும்) (i) பெறப்பட்ட விலை (பெறப்பட்ட ஏதாவது புதிய சொத்திலிருந்து அனுமானிக்கப்பட்ட ஏதாவது பொறுப்பை கழித்தவை உள்ளடங்கலாக) மற்றும் (ii) ஏனைய அனைத்தையுமுள்ளக்கிய வருமானத்தில் காட்டப்பட்ட ஏதாவது ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது நட்டம் என்பவற்றின் கூட்டுத்தொகைக்கு இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

ஏனைய அனைத்தையுமுள்ளக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட பங்குரிமை முதலீட்டுப் பிணையங்கள் தொடர்பில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒன்றுசேர்ந்த இலாபங்கள் அல்லது நட்டங்கள், அத்தகைய பிணையங்கள் விலக்கப்படும்போது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படமாட்டா. வங்கியினால் உருவாக்கப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட, விலக்கல்களுக்கு தகுதியான மாற்றல் செய்யப்படும் நிதியியல் சொத்தில் இருக்கும் ஏதாவது வட்டியானது தனியான சொத்தொன்றாக அல்லது பொறுப்பொன்றாக காட்டப்படுகின்றது.

வங்கியானது கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதன் மூலம் அதன் நிதியியல் நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட சொத்துக்களை மாற்றல் செய்கின்றது. எனினும், அது ஒன்றில் மாற்றல் செய்யப்படும் சொத்துக்களின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ வைத்துக்கொள்கின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில், மாற்றல் செய்யப்பட்ட சொத்துக்கள் விலக்கப்படுவதில்லை. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கு உதாரணங்களாக பிணையங்களின் கடன்வழங்கல் மற்றும் விற்பனை மற்றும் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களை குறிப்பிடலாம். வங்கியானது நிதியியல் சொத்தொன்றின் உடமையின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளை வைத்திருக்காமலோ அல்லது மாற்றல் செய்யாமலோ இருந்து அச்சொத்தின் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் கொடுக்கல்வாங்கல்களில், மாற்றல் செய்யப்பட்ட சொத்தின் பெறுமதியிலான மாற்றங்களுக்கு அது வெளிப்படுத்தப்படும் அளவினால் தீர்மானிக்கப்பட்டவாறு அதன் தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவிற்கு வங்கி தொடர்ந்து அங்கீகரிக்கும்.

நிதியியல் பொறுப்புக்கள்

நிதியியல் பொறுப்பின் ஒப்பந்த ரீதியான கடப்பாடுகள் இடைநிறுத்தப்படுகையில் அல்லது நிறுத்தப்படுகையில் அல்லது காலாவதியாகையில் வங்கி நிதியியல் பொறுப்பொன்றினை அங்கீகரிப்பில் இருந்தும் விலக்கும்.

5.3.4 நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படாத பின்வரும் நிதியியல் சாதனங்கள் தொடர்பிலான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கான நட்ட படிகளை வங்கி அங்கீகரிக்கின்றது.

- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்
- பதிவழிக்கப்பட்ட செலவிலான நிதியியல் சொத்துக்கள்
- பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் கொடுகடன் உத்தரவாத ஒப்பந்தங்கள்

பங்குரிமை முதலீடுகள் தொடர்பில் பெறுமதியிழப்பு அங்கீகரிக்கப் படுவதில்லை.

வங்கியானது முதலீட்டுத் தரத்திலுள்ள (Baa3/BBB- மற்றும் மேற்பட்ட தரமிடப்பட்டவை) முதலீடுகளுக்காக 12 மாத எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்குச் சமமான தொகையில் நட்டப்படியை அளவிடுகின்றது. ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலும் பதிவழிக்கப்பட்ட செலவிலும் வகைப்படுத்தப்படும் வங்கியின் பெரும்பாலான முதலீடுகள் Baa3/BBB- தரத்திற்கு மேற்பட்டவையாகவே இருக்கின்றன. 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் “கட்டம் 1 நிதியியல் சாதனங்கள்” எனக் குறிப்பிடப்படுகின்றன.

ஆரம்ப அங்கீகரிப்பின் போது முதலீட்டுத் தரத்திற்கு கீழ் இருக்கும் அல்லது Baa3/BBB- இற்கு கீழ் அவற்றின் கொடுகடன் இடர்நேர்வு தேய்வடையும் அல்லது ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் தவணை தவறுதல் நிகழ்தகவு இரட்டிப்பாகிய சாதனங்களுக்கு ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிக்கப்படுகின்றது. ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு அங்கீகரிக்கப்பட்டு கொடுகடன் பெறுமதியிழக்காத நிதியியல் சாதனங்கள் ‘கட்டம் 2 நிதியியல் சாதனங்கள்’ எனக் குறிப்பிடப்படுகின்றன. “கட்டம் 3 நிதியியல் சாதனங்கள்” எனக் குறிப்பிடப்படும் கொடுகடன் பெறுமதியிழந்த நிதியியல் சாதனங்களுக்கும் ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிக்கப்படும்.

எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பின் அளவீடு

எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிப்பீட்டின் பொறிமுறையானது முக்கிய கூறுகளுடன் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

தவணை தவறுதல் நிகழ்தகவு: தவணை தவறுதல் நிகழ்தகவு என்பது தரப்பட்ட காலப்பகுதியொன்றில் தவணை தவறுதல்களின் சாத்தியத்தன்மையின் மதிப்பீடொன்றாகும். வசதியானது முன்னர் விலக்கப்படாமலிருந்து இன்னமும் சொத்துப்பட்டியலில் காணப்படுமாயின், தவணை தவறுதலானது மதிப்பிடப்படும் காலப்பகுதியில் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் மாத்திரம் ஏற்பட முடியும். வங்கியானது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி மற்றும் பதிவழிக்கப்பட்ட செலவிலான அதன் அனைத்து வெளிநாட்டு முதலீடுகளுக்காக புளூம்பேர்க்கிடமிருந்தான வழங்குநர்கள் அல்லது இணைத்தரப்பினரின் குறிப்பிட்ட பங்குரிமை தவணை தவறல் நிகழ்தகவைப் பயன்படுத்துவதுடன், பங்குரிமை தவணை தவறல் நிகழ்தகவு காணப்படாத சந்தர்ப்பத்தில் தரப்பட்ட அறிக்கையிடல் திகதியில் புளூம்பேர்க் பொதுவான தவணை தவறல் நிகழ்தகவிலிருந்து குறிப்பிட்ட வழங்குநர் அல்லது இணைத்தரப்பின் தரமிடலுக்கு பிரியோகிக்கத்தக்க தவணை தவறல் நிகழ்தகவைப் பயன்படுத்துகின்றது.

செலுத்தத் தவறும் போது இடர்நேர்விற்குள்ளாகும் தன்மையின் அளவு: செலுத்தத் தவறும் போது இடர்நேர்விற்குள்ளாகும் தன்மையின் அளவு என்பது ஒப்பந்தத்தின் அல்லது வேறு ஏதாவது ஒன்றின் மூலம் அட்டவணையிடப்பட்டுள்ள முதல் மற்றும் வட்டியின் மீள்கொடுப்பனவு, ஒப்புக்கொண்ட வசதிகள் மீது எதிர்பார்க்கப்படும் குறைப்புக்கள் மற்றும் தவறவிடப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்தான அட்டுறு வட்டி போன்றவை உள்ளடங்கலாக அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்னர் வெளிப்படுத்துகையில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களை கவனத்திற்கொண்டு எதிர்கால தவணை தவறுதல் திகதியில் வெளிப்படுத்துகையின் மதிப்பீடொன்றாகும்.

இழப்பினைத் தருகின்ற தவணை தவறுதல்கள்: இழப்பினைத் தருகின்ற தவணை தவறுதல்கள் என்பது குறிப்பிட்டதொரு நேரத்தில் தவணை தவறுதல் ஒன்று இடம்பெறுவதினால் ஏற்படும் இழப்பின் மதிப்பீடொன்றாகும். இது வரவேண்டிய ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலுக்கும் ஏதாவது பிணையத்திலிருந்து தேறப்படும் தொகையுட்பட கடன்வழங்குநர் பெறுவதற்கு எதிர்பார்க்கும் தொகைக்குமிடையிலான வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். வங்கியானது நிதியியல் சொத்துக்களின் வேறுபட்ட வகைகளுக்கு இழப்பினைத்தருகின்ற தவணைத் தவறல்களைப் பிரயோகிக்கையில் அவற்றின் வங்கிக்கான இடர்நேர்வு வெளிப்படுத்துகையின் அடிப்படையில் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கொள்கையைக் கொண்டிருக்கின்றது.

பொருளியல் காரணி சீராக்கம்: வங்கியானது சுழற்சி முழுவதுக்குமான தவணை தவறுதல் நிகழ்தகவிலிருந்து குறிப்பிட்ட நேரத்திலுள்ள தவணை தவறுதல் நிகழ்வுகளுக்கு மாற்றுவதற்காக பொருளியல் காரணி சீராக்கத்தைப் பயன்படுத்துவதுடன் தவணை தவறுதல் நிகழ்தகவினை சீராக்கும் முக்கிய பொருளியல் காரணியாக வங்கி மொத்த உள்நாட்டு உற்பத்தித் தரவைப் பயன்படுத்துகின்றது.

கொடுகடன் இடர்நேர்விலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பை மதிப்பிடல்

வங்கியானது ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் தவணை தவறுதல் நிகழ்தகவு இரட்டிப்பாகும் போதும் ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் BBB- இற்குக் கீழான ஏதாவது தரமிடலில் கீழ்நோக்கிய திருத்தம் மேற்கொள்ளப்படுகையிலும் நிதியியல் சாதனம் குறிப்பிடத்தக்க அதிகரித்த இடர்நேர்வைக் கொண்டிருப்பதாகக் கருதுகின்றது. இது தவணை தவறுதல் நிகழ்தகவின் இரண்டு மடங்கு அல்லது அதற்கு அதிகமான அதிகரிப்பை தோற்றுவிக்கும் Baa3 இலிருந்து Ba1 இற்கான மிகச் சிறிய கீழ்நோக்கிய தரமிடல் உட்பட, முதலீட்டுத்தரத் தரமிடலிருந்து முதலீட்டுத் தரமல்லாத கீழ்நோக்கிய தரமிடல்களின் அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

கொடுகடன் பெறுமதியிழந்த நிதியியல் சொத்துக்கள்

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் பதிவழிக்கப்பட்ட செலவிலும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலும் கொண்டு செல்லப்படுகின்ற நிதியியல் சொத்துக்கள் மற்றும் கொடுகடன் உத்தரவாதங்கள் கொடுகடன் பெறுமதியிழந்திருக்கின்றனவா ("கட்டம் 3 நிதியியல் சொத்துக்கள்" எனக் குறிப்பிடப்படும்) என்பது தொடர்பில் வங்கி மதிப்பிடும். ஒரு நிதியியல் சொத்தானது, நிதியியல் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களுக்கு தீங்கான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்று அல்லது மேற்பட்ட நிகழ்வுகள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் "கொடுகடன் பெறுமதி இழந்ததாக" கருதப்படும். நிதியியல் சொத்தொன்று கொடுகடன் பெறுமதி இழந்தற்கான சான்றுகள் பின்வரும் அவதானிக்கத்தக்க தரவுகளை உள்ளடக்கும்:

- கடன்பெறுநர் அல்லது வழங்குநரின் குறிப்பிடத்தக்க நிதியியல் இடர்ப்பாடு;
- தவணை தவறல் அல்லது காலந்தவறல் நிகழ்வு போன்ற ஒப்பந்த மீறல்;
- கடன்பெறுநர் வங்குரோத்துக்கு அல்லது ஏனைய நிதியியல் மீள்கட்டமைப்பிற்குள்ளாகப் போகிறார் என சாத்தியமாகத் தெரிதல்.

நிதியியல் நிலைமைக் கூற்றில் எதிர்பார்க்கும் கொடுகடன் இழப்பிற்கான படியை சமர்ப்பித்தல்

எதிர்பார்க்கும் கொடுகடன் இழப்பிற்கான நட்டப்படியானது நிதியியல் நிலைமைக்கூற்றில் பின்வருமாறு காட்டப்படுகின்றது:

- பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படும் நிதியியல் சொத்துக்கள்: சொத்துக்களின் மொத்த கொண்டு செல்லல் பெறுமதியிலிருந்தான குறைப்பொன்றாக;
- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படும் முதலீடுகள்: நிதியியல் நிலைமைக்கூற்றில் நட்டப்படி அங்கீகரிக்கப்படுவதில்லை ஏனெனில் இச்சொத்துக்களில் கொண்டுசெல்லல் பெறுமதி அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியாகும். எனினும், நட்டப்படி வெளிப்படுத்தப்படுவதுடன் இது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது;
- கொடுகடன் உத்தரவாத ஒப்பந்தங்கள்: பொதுவான ஏற்பாடொன்றாக.

பதிவழிப்பு

நிதியியல் சொத்தினை முழுமையாகவோ அல்லது அதன் பகுதியொன்றினையோ அறவிடுவதற்குப் போதுமான எதிர்பார்ப்புக்கள் இல்லாதவிடத்து கடன்கள் மற்றும் படுகடன் பிணையங்கள் பதிவழிக்கப்படுகின்றன (ஒன்றில் பகுதியளவில் அல்லது முழுமையாக). பதிவழித்தலுடன் தொடர்புபட்ட தொகையை மீளச்செலுத்துவதற்கு போதுமான காசுப்பாய்ச்சல்களை உருவாக்கக்கூடிய வருமான மூலங்களையோ அல்லது சொத்துக்களையோ கடன்பெறுநர் கொண்டிருக்கவில்லை என வங்கி தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் இது பொதுவான வழமையாகும். இம்மதிப்பீடானது தனிப்பட்ட சொத்து மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. முன்னர் பதிவழிக்கப்பட்ட தொகைகளின் அறவிடலானது இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக்கூற்றின் 'நிதியியல் சாதனங்கள் மீதான பெறுமதி இழப்பு நட்டம்' இல் உள்ளடக்கப்படுகின்றன.

5.4 இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்

வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படுபவையினுள் வகைப்படுத்தப்பட்டுள்ள நிதியியல் சொத்துக்கள் "இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்" வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆரம்ப அங்கீகரிப்பின் போது தொடர்புடைய கொடுக்கல்வாங்கல் செலவுகள் இலாபம் அல்லது நட்டத்தில் அவை இடம்பெறும் பொழுது அங்கீகரிக்கப்படுகின்றன. பின்னர் மேற்படி பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் பிணையங்களின் பெறுமதியிலான அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ காட்டப்படுகின்ற அதேநேரம் இதன் மூலம் எழும் இலாபங்களும் நட்டங்களும் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

பிணையம் இப்பொழுதும் சொந்தமாக இருக்குமிடத்து இலாபம்/(நட்டமானது) "தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாபமாக/(நட்டமாக)" அறிக்கையிடப்படும். இலாபமோ/ நட்டமோ தேறப்படுமிடத்து (பிணையத்தினை விற்பதன் மூலம்) அது "தேறல் செய்யப்பட்ட மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாபமாக/ (நட்டமாக)" அறிக்கையிடப்படும்.

5.5 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான முதலீடுகள், ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியாக குறித்துரைக்கப்பட்ட பெறுதியல்லா முதலீடுகள் அல்லது நிதியியல் சொத்துக்களின் ஏனைய வகையொன்றாக வகைப்படுத்தப்படாதவையாகும். ஏனைய

அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான முதலீடுகள் பங்குரிமைப் பிணையங்களையும் படுகடன் பிணையங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான வெளிநாட்டு நாணயப் படுகடன் பிணையங்கள் பின்னர் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதியியல் நிலைமைக்கூற்றில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள முதலீடுகளின் பெறுமதியிலான அதிகரிப்பொன்றாக அல்லது குறைவொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றன.

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பங்குரிமை முதலீடுகள் பின்னர் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகளின் கிடைப்பனவின்மை காரணமாக தொடர்பான நிறுவனங்களின் தேறிய சொத்துக்களின் அடிப்படையில் பெறுமதியிடப்படுகின்றன.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயப் படுகடன் பிணையங்கள் மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை முதலீடுகளிலான சந்தைப் பெறுமதி மாற்றங்களிலிருந்து எழுகின்ற இலாபங்களும் நட்டங்களும் நேரடியாக பங்குரிமையில் (ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்) அங்கீகரிக்கப்படுவதுடன் இது முதலீடு விற்கப்படும் வரை, சேகரிக்க அல்லது வேறுவகையில் அகற்றப்படும் வரை அல்லது முதலீடு பெறுமதியிழக்கப்பட்டது என்று தீர்மானிக்கப்படும் வரை நிதியியல் நிலைமைக் கூற்றில் ஏனைய ஒதுக்கங்களின் கீழ் காட்டப்படுவதுடன் முன்னர் கூறப்பட்ட நிகழ்வுகளில் ஒன்று இடம்பெறும் நேரத்தில், அகற்றப்படுகையில் வருமானக்கூற்றுக்கு சுழற்சிப்படுத்தப்படாத பங்குரிமை முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி மாற்றங்களின் விதிவிலக்குடன், முன்னர் பங்குரிமையில் அறிக்கையிடப்பட்ட ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது நட்டம் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது. வட்டி வருமானமானது பயனுறு வட்டி முறைமையைப் பயன்படுத்தி வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

5.6 பதிவழிப்புச் செலவில் வைத்திருக்கப்படும் சாதனங்கள்

ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களைச் சேகரிக்கும் பொருட்டு நிதியியல் சொத்துக்களை வைத்திருக்கும் நோக்குடனான வியாபார மாதிரியினுள் இருப்பதுடன் ஒப்பந்த நியதிகள் முதல் மற்றும் வட்டியை மட்டும் கொண்ட காசுப்பாய்ச்சலை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் பதிவழிப்புச் செலவில் வைத்திருக்கப்படும் சாதனங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. இச்சாதனங்கள் பின்னர் பயனுறு வட்டி முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் அளவிடப்படுகின்றன.

5.7 பெறுதிச் சாதனங்கள்

வங்கி, குறுக்கு நாணய பரஸ்பர பரிமாற்றல், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் போன்ற பெறுதிகளை இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றதேயொழிய ஊக நோக்கங்களுக்காக அல்ல. பெறுதிகள் சீர்மதிப்புப் பெறுமதியில் குறிப்பிடப்படுவதுடன், சீர்மதிப்புப் பெறுமதி நேர்க்கணியமாக இருக்குமிடத்தில் சொத்தாகவும், எதிர்க்கணியமாக இருக்குமிடத்தில் பொறுப்பாகவும் கொண்டு செல்லப்படும். பெறுதிகளின் சீர்மதிப்புப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் "தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாபத்தில்/ (நட்டத்தில்)" உள்ளடக்கப்படுகின்றன.

கொடுக்கல்வாங்கல் விலையானது அதே சாதனத்தின் இன்னொரு அவதானிக்கக்கூடிய நடைமுறைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து அல்லது அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்தான தரவை மட்டும் கொண்டிருக்கும் மாறிகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைகளிலிருந்து வேறுபடுமாயின், வங்கியானது உடனடியாக கொடுக்கல்வாங்கல் விலைக்கும் சந்தைப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாட்டை (1 நாள் வேறுபாடு) "தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/ (நட்டம்)" ஆக அங்கீகரிக்கும். அவதானிக்க முடியாத தரவுகளைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதியானது தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பங்களில், கொடுக்கல்வாங்கல் விலைக்கும் மாதிரிப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு, உள்ளீடுகள் அவதானிக்கக்கூடியதாக மாறும் போது, அல்லது சாதனத்தின் பதிவு நீக்கப்படும் போது மட்டுமே வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

5.8 பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி.) தொடர்புடைய நிலுவைகள்

வங்கியானது இலங்கை அரசின் வைப்பாளர் என்ற அடிப்படையைக் காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையிலேயே ப.நா.நிதியத்துடனான வங்கியின் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் இந்நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன், அனுமதிப் பங்கிற்காக ப.நா. நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகிறது. ப.நா. நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்றுசேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாகக் கணிக்கப்படுகின்றன. பன்னாட்டு நாணய நிதிய அனுமதிப் பங்கு சொத்தும் சிறப்பு எடுப்பனவு உரிமை வைத்திருப்பும் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்படுவதுடன் ஏனைய அனைத்து பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பயனுறு வட்டிவீத முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன. ப.நா. நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு அறிக்கையிடல் திகதியிலுள்ள நாணயமாற்று வீதத்தினைப் பிரயோகித்து பன்னாட்டு நாணய நிதியச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள்மதிப்பீட்டிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்துக் கட்டணங்களும் வட்டியும் வருமானக் கூற்றில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன.

5.9 காசும் காசுக்குச் சமமானவைகளும்

காசும் காசுக்கு சமமானவையும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலுள்ள காசு, குறுங்கால வைப்புகள் மற்றும் சந்தைப் பெறுமதி மாற்றங்களால் குறிப்பிடத்தக்க இடர்நேர்வில்லாததும் மூன்று மாதங்களுக்கு குறைந்த ஆரம்ப முதிர்ச்சியைக் கொண்ட உயர்ந்தளவு திரவத்தன்மையான நிதியியல் சொத்துக்கள் என்பவற்றை உள்ளடக்குவதுடன் இவை குறுங்கால கடப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்காக வங்கியினால் பயன்படுத்தப்படுகின்றன. காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவழிப்புச் செலவில் கொண்டு செல்லப்படுகின்றன.

உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் ஏற்கின்ற போதிலும் இவை காசின் நகர்வுடன் தொடர்புபட்டவையல்ல. இந்நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன், முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நாணயக் கொள்கைப் பொறிமுறையொன்றாக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் கொள்வனவை உள்ளடக்குகின்றன. அத்தகைய கொள்வனவுகள், விற்பனைகள் மற்றும் அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளில் தனியே ஏட்டுப் பதிவுகளாகப்

பிரதிபலிக்கப்படுகின்றன. இவை இந்நிதியியல் கூற்றில் 45 மற்றும் 46ஆம் இலக்கக் குறிப்புகளில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தனி அதிகாரம் கொண்ட சட்டபூர்வமான நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கியானது நாணய விதிச் சட்டத்திற்கிணங்க பொதுமக்களுக்கான நாணயத்தினை வெளியிடுகின்றது. மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனைப் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப்பொன்றாக இருக்கின்ற அதேநேரம் உடமையாளரின் கையிலுள்ள காசாகவும் இருக்கின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அசைவு, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை சமர்ப்பித்தலில் மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்துறை நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் நிதியிடல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி காசு/ கொடுப்பனவுக் கட்டளைகளூடாக நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் என்பன வடிவில், பெறப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குநர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பணம் கொடுபட வேண்டியோருக்கு காசு பகிர்ந்தளிக்கிறது. இது ஒன்றில் சுற்றோட்டத்திலுள்ள நாணயப் பொறுப்புடன் அல்லது வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் வைத்திருக்கப்படும் வைப்புக்களுடன் சேர்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு/ கொடுப்பனவுக் கட்டளைகளின் வெளிப்பாய்ச்சல் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

5.10 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துக்களாகத் தொடர்ந்தும் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப்பொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றது. மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையேயான வேறுபாடும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமிடையேயான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தையும் பிரதிபலிப்பதுடன் இது வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) நிதியியல் நிலைமைக் கூற்றில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டு கொடுக்கல்வாங்கல்களும் அட்டுறு வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி பதிவழிக்கப்பட்ட செலவில் அறிக்கையிடப்படுகின்றன.

5.11 துணைநில் வைப்பு மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதிகள்

2014 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதியானது [முன்னர் துணைநில் மீள்கொள்வனவு வசதி (மீள்கொள்வனவு)] பிணை ஒதுக்கங்கள் இல்லாத "தூய வைப்புக்கள்" ஆக மாற்றப்பட்டன. எனவே, பங்கேற்கின்ற நிறுவனங்கள் அவற்றின் மிகையான நிதியங்களை தூய வைப்புக்களாக துணைநில் வைப்பு வசதி வீதத்தில் துணைநில் வைப்பு வசதியின் நாளாந்த அடிப்படையில் முதலிடுகின்றன.

துணைநில் கடன்வழங்கல் வசதியின் [முன்னர் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு (நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி)] நடைமுறைகள் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை ஒத்ததாகவே காணப்படுகின்றதுடன் இரண்டும் நிதியியல் நிலைமைக்கூற்றில் பதிவழிக்கப்பட்ட செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன.

5.12 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள்

வங்கியானது அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் கீழ் சந்தையிலுள்ள மேலதிகத் திரவத் தன்மையை உள்ளீர்த்துக் கொள்ளும் பொருட்டு காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குகின்றது. வழங்கப்படும் பிணையங்கள் பொறுப்புகளாகப் பதிவு செய்யப்படுகின்றன.

5.13 இலங்கை அரச பிணையங்கள்

இலங்கை அரச பிணையங்கள் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் உள்ளடக்குகின்றன. இலங்கை அரச பிணையங்களிலான முதலீடுகள் நிதியியல் நிலைமை கூற்றில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியில் பதியப்படுகிறது.

5.14 அரசிற்கான தற்காலிக முற்பணங்கள்

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 89இன் கீழ் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவை பின்னர் பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகின்றன.

5.15 ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் பதிவழிக்கப்பட்ட செலவில் அங்கீகரிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றன.

5.16 பிணையங்களின் கடன்பாடுகளும் பிணையங்களின் கடன் வழங்குதலும்

வங்கி அதன் நாணயக் கொள்கை தொழிற்பாடுகளின் கீழ் காலத்திற்குக் காலம் முக்கிய நிறுவன ரீதியான முதலீட்டாளர்களிடமிருந்து அரச பிணையங்களைக் கடன்படுகிறது. இவ்வாறு கடன்பட்ட பிணையங்கள் சந்தையில் காணப்படும் மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்கு மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பிணையங்களின் கடன்பாடுகள் என்பது பிணையங்களைத் திருப்புவது, இணங்கப்பட்ட கட்டணத்தினை செலுத்துவது, வழங்கலின் போது ஏதேனும் தவறு இடம் பெறும் சந்தர்ப்பத்தில் சந்தை வீதங்களில் இழப்பீட்டினைச் செலுத்துவது (வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் முதனிலைச் சந்தை பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட சந்தை வீதங்களின் படி) என்பனவற்றிற்காக வங்கியிடமிருந்து பெறப்படும் நிபந்தனையற்ற பூரணமான உத்தரவாதமெனப்படும்.

குறிப்பிட்ட நேரத்தில் மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாத கடன்பட்ட பிணையங்களினது சந்தைப் பெறுமதி எதிர்பாராத பொறுப்புக்களாக பதிவு செய்யப்படுகின்றன. செலுத்தப்பட்ட தரகு அட்டுறு அடிப்படையில் செலவிடப்படுகின்றது.

கடன் வழங்கும் கொடுக்கல்வாங்கல்களின் கீழ் இணைத்தரப்பினருக்கான பிணையங்களின் மாற்றல், சொத்தாண்மையின் இடர்நேர்வும் வெகுமதியும் மாற்றல் செய்யப்பட்டால் மட்டுமே நிதியியல் நிலைமைக் கூற்றில் பிரதிபலிக்கப்படும்.

5.17 அலுவலர்களுக்கான கடன்கள்

வங்கியின் அலுவலர்கள் சலுகை வட்டி வீதத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். 2008ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட இக்கடன்கள் ப.நி.அ.நி. 9 இன்படி

"கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சலைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதியில்" பெறுமதியிடப்பட்டுள்ளன.

கழிவு வீதம் - நிறையேற்றப்பட்ட சராசரி வைப்பு வீதம் மீதான நீண்ட காலப் பணவீக்க இலக்கிடலை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் வீதத்துடன் வங்கியின் கணக்காய்வுக் குழுவினால் இணங்கப்பட்டவாறு இடர்நேர்வுக் கட்டணத்திற்காக 1 சதவீதத்தைச் சேர்த்த வீதம் கழிவு வீதமாகப் பயன்படுத்தப்படுவதோடு, கடன் காலத்தைப் பொறுத்து இது வேறுபடுகின்றது.

ஆண்டின் இறுதியிலுள்ளவாறான அலுவலர்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதிக்கும் ஆண்டின் ஆரம்பத்திலுள்ளவாறான அலுவலர்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலுள்ள வித்தியாசமானது, சலுகை வீதத்தில் மேற்படி கடன் வழங்கப்படுவதால் வங்கிக்கு ஏற்க நேரிடுகின்ற செலவைப் பதிவதற்காக வருடாந்தம் பதிவழிக்கப்படும் என்பதோடு, சந்தை வீதத்தில் இக்கடன் வழங்கப்பட்டிருப்பின் வங்கியினால் ஈட்ட முடியுமாயிருக்கும் வருமானத்தைப் பதிவு செய்யும் பொருட்டு, அதற்குச் சமமான தொகை ஏனைய வருமானத்தில் பதியப்படும்.

சீர்மதிப்பு பெறுமதியைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் கருதுகோள்கள்

- பணியாளர்களுக்கான கடன்கள் வழங்கப்பட்ட திகதியாக சனவரி 01 ஆம் திகதியைக் கருதுதல்.
- மேற்படி கடன்களில் எவ்விதத் திருத்தமும் அல்லது முன்கூட்டிய தீர்ப்பனவு எதுவும் செய்யப்படவில்லை எனக் கருதுதல்.

5.18 தங்கம்

பன்னாட்டு ஒதுக்கத்தின் உள்ளடக்கத்தினைக் குறித்துரைக்கின்றதான நாணய விதிச் சட்டத்தின் 67(1) ஆம் பிரிவு மேற்படி ஒதுக்கத்தின் ஒரு பகுதியாக இ.ம.வ. தங்கத்தை வைத்திருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67 (2) ஆனது, நாணயச் சபை, குறைந்ததொரு அணு ஒதுக்காவது தங்க வடிவிலோ அல்லது மத்திய வங்கியால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலகுவாக தங்கமாக மாற்றக்கூடிய நாணய வடிவிலோ வைத்திருப்பதனைத் தேவைப்படுத்துகின்றது. மேற்படி தங்கமானது பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக இருப்பதோடு பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின் போது ஒரு வர்த்தகப் பண்டமாகப் பயன்படுத்தப்படாததால் தங்கமானது சீர்மதிப்புப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றுக்கு மாற்றப்படுகின்றன. இலாப ஒதுக்கீடுகளுக்கு முன்னர் தங்கத்திலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபங்கள் தொடர்புபட்ட ஒதுக்குக் கணக்குகளுக்கு மாற்றப்படுகின்றன.

5.19 நாணய இருப்பு

வங்கியின் இருப்புக்களானது, சுற்றோட்டத்திற்கு இன்னும் வழங்கப்படாத புதிய நாணயங்களை உள்ளடக்கியுள்ளது. புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளின் உற்பத்தி மற்றும் வடிவமைப்புடன் தொடர்பான செலவுகள் ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. சுற்றோட்டத்திற்கு வழங்கப்பட்ட புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளிற்கான செலவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதுடன், வழங்கப்படும் வேளையில் வருமானக்கூற்றில் பதியப்படுகின்றது. மெதுவாக அசையும் இருப்புக்களுக்கு படி மேற்கொள்ளப்படுகின்றது.

5.20 ஏனைய இருப்புக்கள்

ஏனைய இருப்புக்கள் கிரயத்தில் அல்லது தேறிய விற்றுப் பெறக்கூடிய பெறுமதி இவற்றில் குறைவான பெறுமதியில் வைத்திருக்கப்படுகின்றது. கிரயமானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

5.21 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

காணி மற்றும் கட்டடம் தவிர்ந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணம், கிரயத்திலிருந்து ஒன்றுசேர்ந்த பெறுமானத் தேய்வு ஏற்பாடு மற்றும் பெறுமதி இழப்பு கழித்த தொகையில் கூறப்பட்டுள்ளது. அங்கீகரிப்பு பிரமாணம் பூர்த்தி செய்யப்படும் பொழுது இந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதிகளை மாற்றீடு செய்யும் போது ஏற்படும் செலவினங்களையும் இந்தக் கிரயம் உள்ளடக்கியிருக்கிறது.

காணி மற்றும் கட்டடங்கள் மீள்மதிப்பிடப்படும் திகதியில் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து பின்னர் ஒன்றுசேர்ந்த பெறுமானத் தேய்வுகளும், பின்னர் ஒன்றுசேர்ந்த பெறுமதி இழப்பு நட்டங்களும் கழித்த தொகையான மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

இறையிலி காணி நீங்கலாக, பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க காலத்தைப் பயன்படுத்தி தேய்மானம் நேர்கோட்டு முறையில் கணிக்கப்பட்டிருக்கிறது.

சொத்தின் வகை	பயனுள்ள ஆயுட்காலம்
இறையிலி காணியிலுள்ள கட்டடங்கள்	50 ஆண்டுகளுக்கு மேல்
குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள்	50 ஆண்டுகள் அல்லது குத்தகைக் காலம் இவற்றில் குறைந்தது
பொறியும் பொறியின் முக்கிய பகுதிகளும்	20 ஆண்டுகள்
தளபாடங்கள் மற்றும் கருவிகள்	10 ஆண்டுகள்
உந்து ஊர்திகள்	5 ஆண்டுகள்
2014 இலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உந்து ஊர்திகள்	10 ஆண்டுகள்
கணனி வன்பொருள்	4 ஆண்டுகள்
ஏனையவை	3 ஆண்டுகள்

நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் எடுத்துச் செல்லும் பெறுமதியானது மீளப்பெற முடியாதென சுட்டிக்காட்டும் பொழுது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் எடுத்துச் செல்லும் பெறுமதிகள் பெறுமதி இழப்புக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன.

வங்கியின் காணி மற்றும் கட்டடம் என்பனவற்றை மீள்மதிப்பிடுவதற்கான கொள்கை யாதெனில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை அல்லது குறிப்பிடத்தக்க பெறுமதிச் சீராக்கம் தேவையென தெரியவரும் பொழுது ஏதேனும் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதாகும். எந்த மீள்மதிப்பிட்டு மிகையும் வருமானக்கூற்றிலே முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியை மறுதலையாக்கும் சந்தர்ப்பம் நீங்கலாக நிதியியல் நிலைமைக் கூற்றின் பங்குரிமையில் உள்ளடக்கப்பட்டுள்ள மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு வரவு வைக்கப்படும். அவ்வாறு மறுதலையாக்கும் சந்தர்ப்பத்தில் அந்த அதிகரிப்பானது வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகிறது. மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறையானது, அப்பற்றாக்குறை அதே சொத்தின் முன்னைய மிகையை நேரடியாக எதிரீடு செய்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கிலுள்ள மதிப்பீட்டு மிகையை நேரடியாக எதிரீடு செய்யும் சந்தர்ப்பங்கள் தவிர்த்து, வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. விற்கப்படுகையில், குறிப்பிட்ட விற்கப்படுகின்ற சொத்தோடு தொடர்புடைய எந்த மீள்மதிப்பீட்டு மிகையும், பிடித்துவைக்கப்படும் வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் விடயமொன்று விற்கப்படுகையில் அல்லது அதன் பாவனை அல்லது விற்பனையின் மூலம் எதிர்கால பொருளாதார நன்மைகளை வழங்காது என எதிர்பார்க்கப்படும் போது அது அங்கீகரிப்பிலிருந்தும் நீக்கப்படுகின்றது. அச்சொத்தின் அங்கீகரிப்பு நீக்கப்படுவதன் மூலம் உருவாகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டம் (தேறிய விற்பனைப் பெறுகைக்கும் சொத்தின் எடுத்துச் செல்லும்

தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்பட்டது) சொத்தின் அங்கீகரிப்பு நீக்கப்பட்ட ஆண்டின் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. பொருத்தமானவிடத்து சொத்தின் எஞ்சிய பெறுமதிகள், பயனுள்ள ஆயுட் காலங்கள் மற்றும் முறைகள் கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

மூலதன நடப்பு வேலைகள் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. இவை கட்டிடங்கள், பாரிய பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் முறைமை அபிவிருத்திகளின் கட்டுமானத்தின் போது நேரடியாக ஏற்படும் மூலதனத்தன்மை கொண்ட செலவுகளாகவும் மூலதனவாக்கத்தை எதிர்நோக்கியிருப்பனவாகவும் காணப்படுகின்றன.

5.22 குத்தகைகள்

ஒப்பந்தமொன்றை ஆரம்பிக்கும் போது வங்கியானது அவ்வொப்பந்தம் குத்தகையா அல்லது அவ்வொப்பந்தம் குத்தகையைக் கொண்டிருக்கின்றதா என்பதை மதிப்பிடுகின்றது. ஒரு ஒப்பந்தமானது, வெகுமதி ஒன்றிற்கு பரிமாற்றாக, குறிப்பிட்ட சொத்தொன்றின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையை குறிப்பிட்ட காலப்பகுதிக்குக் கொண்டிருக்குமாயின், அது குத்தகையாக அல்லது குத்தகையைக் கொண்டிருப்பதாகக் கருதப்படும். ஒரு ஒப்பந்தமானது குறிப்பிட்ட சொத்தொன்றின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றதா என்பதனை மதிப்பிடுவதற்கு, வங்கியானது ப.நி.அ.நி 16இலுள்ள குத்தகையின் வரைவிலக்கணத்தைப் பயன்படுத்துகின்றது.

குத்தகையாளராக வங்கி செயற்படுதல்

வங்கியானது சொத்துப் பாவனை உரிமை மற்றும் குத்தகைப் பொறுப்பினை குத்தகையை ஆரம்பிக்கும் திகதியில் அங்கீகரிக்கிறது. சொத்துப் பாவனை உரிமையானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் இது ஆரம்பத் திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதாவது குத்தகைக் கொடுப்பனவிற்கான குத்தகைப் பொறுப்புச் சீராக்கத்தின் ஆரம்பத் தொகையுடன் ஏற்பட்ட ஏதாவது ஆரம்ப நேரடிச் செலவுகள் மற்றும் அகற்றுவதற்கான செலவின் மதிப்பீட்டைக் கூட்டி காணி அல்லது அலுவலகப் பணிமனைக்கு மேற்கொள்ளப்பட்ட மேம்படுத்தல்களை நீக்கிய தொகையை உள்ளடக்கியிருக்கும்.

சொத்துப் பாவனை உரிமையானது பின்னர், ஆரம்பத் திகதியிலிருந்து குத்தகைக் கால முடிவு வரைக்கும் நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி பெறுமானத்தேய்வு செய்யப்படும். மேலும், சொத்துப் பாவனை உரிமையானது காலக்கிரமத்தில் பெறுமதியிழப்பு நட்டங்களினால், ஏதுமிருப்பின், குறைவதுடன் குத்தகைப் பொறுப்பின் சில மீள்மதிப்பீடுகளுக்காகச் சீராக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் பொறுப்பானது, ஆரம்பத் திகதியில் செலுத்தப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வட்டி வீதத்தினால், அல்லது அந்த வீதம் தீர்மானிக்கப்பட முடியாதவிடத்து, வங்கியின் அதிகரித்துச் செல்லும் கடன்பாட்டு வீதத்தினால் கழிவிட்ட தற்போதைய பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

குத்தகை பொறுப்பின் அளவீட்டில் உள்ளடக்கப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:

- தவிர்க்க முடியாத நிலையான கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக நிலையான கொடுப்பனவுகள்;
- சுட்டெண் ஒன்றில் அல்லது ஒரு வீதத்தில் தங்கியிருக்கும் மாறுபடக்கூடிய குத்தகைக் கொடுப்பனவுகள் ஆரம்பத் திகதியிலுள்ளவாறான சுட்டெண் அல்லது வீதத்தைப் பயன்படுத்தி ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றன;
- எஞ்சியிருக்கும் பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகள்; அத்துடன்
- செயற்படுத்துவதற்கு உறுதியான போதுமான ஆதாரங்களை வங்கி கொண்டிருக்கும் போது கொள்வனவுத் தெரிவின் கீழ் செயற்பாட்டு விலை, நீட்டிப்பதற்குரிய தெரிவை செயற்படுத்துவதற்கு உறுதியான போதுமான ஆதாரங்களை வங்கி கொண்டிருக்கும் போது தெரிவுக்குரிய புதுப்பித்தல் காலப்பகுதியிலான குத்தகைக் கொடுப்பனவுகள் மற்றும் வங்கி உரிய காலத்திற்கு முன்னர் முடிவுறுத்தாதென உறுதியாக நம்புவதற்குரிய போதுமான ஆதாரங்கள் இருந்தாலொழிய, குத்தகையினை உரிய காலத்திற்கு முன்னர் முடிவுறுத்துவதற்கான தண்டப் பணம்

குத்தகைப் பொறுப்பானது பயனுறு வட்டி முறையைப் பயன்படுத்தி பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகின்றது. இது, சுட்டெண் அல்லது வீதத்திலான மாற்றத்தினால் எதிர்காலக் குத்தகைக் கொடுப்பனவுகளில் மாற்றமொன்று ஏற்படுகையில், எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகை தொடர்பில் வங்கியின் மதிப்பீட்டில் மாற்றமொன்று ஏற்படுகையில், வங்கி நீட்டிப்புத் தெரிவைச் செயற்படுத்துவது தொடர்பில், அதன் மதிப்பீட்டை மாற்றுகையில் மற்றும் உரிய காலத்திற்கு முன்னர் முடிவுறுத்துவதற்கான தெரிவிற்கான தண்டப்பணம் தொடர்பிலான வங்கியின் மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படுகையில் அல்லது தவிர்க்க முடியாத நிலையான குத்தகைக் கொடுப்பனவுகள் திருத்தப்படுகையில் மீள அளவிடப்படுகின்றது.

குத்தகைப் பொறுப்பு இம்முறையில் மீளஅளவிடப்படும் போது, இதற்கு ஒத்திசைவான சீராக்கமானது சொத்துப் பாவனை உரிமையின் கொண்டு செல்லும் பெறுமதிக்கு மேற்கொள்ளப்படுகின்றது, அல்லது சொத்துப் பாவனை உரிமை கொண்டு செல்லும் பெறுமதி பூச்சியத்திற்குக் குறைவடைந்திருப்பின் வருமானக் கூற்றில் பதியப்படுகிறது.

வங்கியானது நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துப் பாவனை உரிமையினை "ஆதனம், பொறி மற்றும் உபகரணம்" (குறிப்பு 20) இனுள்ளும் குத்தகைப் பொறுப்புக்களை "நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள்" (குறிப்பு 33) இனுள்ளும் சமர்ப்பிக்கிறது.

5.23 அருவச் சொத்துக்கள்

கணனி வன்பொருள்களில் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளடங்காதுள்ள கணனி மென்பொருட்கள் அருவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டு கிரயத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகரிப்பைத் தொடர்ந்து இவ்வருவச் சொத்துக்கள் கிரயத்திலிருந்து ஒன்றுசேர்ந்த பதிவழிப்பு மற்றும் ஒன்றுசேர்ந்த பெறுமதியிழப்பு கழிக்கப்பட்ட தொகையில் கொண்டு செல்லப்படுகின்றன. கணனி மென்பொருள் சொத்துக்கள் மீதான தொடர்ந்துவரும் செலவுகள், அவை குறித்த சொத்துடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதார நன்மைகளை அதிகரித்தால் மட்டுமே மூலதனமாக்கப்படுகின்றன. ஏனைய அனைத்துச் செலவுகளும் ஏற்படும்போது செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

பதிவழிப்பானது, சொத்து பாவனைக்குரியதாகவுள்ள திகதியிலிருந்து 4 ஆண்டு பயனுள்ள ஆயுட்காலத்திற்கு நேர்கோட்டு முறையில் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுவதுடன் இம்முறையானது சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகளின் எதிர்கால நுகர்வுக் கோலத்தை மிகச் சரியாகப் பிரதிபலிக்கின்றது.

5.24 ஏனைய சொத்துக்கள்

ஏனைய சொத்துக்கள் எதிர்பார்க்கப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகின்றன.

5.25 நிதியியல்லாச் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் வங்கி அதன் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதியிழந்திருக்கலாம் என்பதற்கான அறிகுறிகள் உள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்காக அவற்றின் முன்கொண்டு செல்லும் பெறுமதியை மீளாய்வு செய்கின்றது. அத்தகைய அறிகுறிகள் காணப்படின், சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகையின் மதிப்பீடொன்றை வங்கி மேற்கொள்கின்றது.

பெறுமதியிழப்பு பரீட்சிப்பிற்காக, ஏனைய சொத்துக்களின் காசுப்பாய்ச்சல்களினால் பெருமளவிற்குப் பாதிக்கப்படாத, தொடர்ச்சியான பாவனையின் மூலம் காசுப்பாய்ச்சல்களை உருவாக்கக்கூடிய சொத்துக்களின் மிகச் சிறிய வகைக்குள் சொத்துக்கள் ஒன்று திரட்டப்பட்டன.

ஒரு சொத்தின் "மீளப்பெறக்கூடிய பெறுமதி" என்பது அதன் "பயன்பாட்டிலுள்ள பெறுமதி" மற்றும் அதன் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து விற்பதற்கான செலவைக் கழித்த பெறுமதி என்பவற்றில் கூடிய பெறுமதியாகும். பயன்பாட்டிலுள்ள பெறுமதியானது பணத்தின் காலப்பெறுமதியின் தற்போதைய சந்தை மதிப்பீடு மற்றும் சொத்துக்கு உரித்தான இடர்நேர்வுகளைப் பிரதிபலிக்கும் வரிக்கு முன்னரான கழிவு வீதம் ஒன்றைப் பயன்படுத்தி தற்போதைய பெறுமதிக்கு கழிவிடப்பட்ட மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

ஒரு சொத்தின் கொண்டு செல்லல் பெறுமதி அதன் மீளப்பெறத்தக்க தொகையை விஞ்சும் சந்தர்ப்பத்தில் பெறுமதியிழப்பு நட்டம் அங்கீகரிக்கப்படுகின்றது.

பெறுமதியிழப்பு நட்டமானது, சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதியானது, பெறுமதியிழப்பு நட்டம் அங்கீகரிக்கப்படாத சந்தர்ப்பத்தில், தேய்மானம் அல்லது பெறுமதியிழப்பு நீங்கலாக தீர்மானித்திருக்கக்கூடிய கொண்டு செல்லும் பெறுமதியை விஞ்சாத அளவுக்கு மாத்திரமே மறுதலையாக்கப்படுகின்றது.

5.26 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்ட ரீதியான அல்லது அமைப்பு ரீதியான) கொண்டிருந்து அக்கடப்பாட்டைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவதுடன், இக்கடப்பாட்டுத் தொகையை நம்பத் தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறிய முடியுமாயின் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. ஏற்பாடொன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக அங்கீகரிக்கப்படுகின்றது.

5.27 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்துக்கான பொறுப்பு நிதியியல் நிலைமைக் கூற்றில் முகப்புப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

5.28 நிர்ணயிக்கப்பட்ட நன்மைத்திட்டங்கள்

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களானவை, நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் தவிர்ந்த ஏனைய தொழிலுக்கு பின்னரான நன்மைத் திட்டங்களாகும். ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், விதுரர் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், இளைப்பாற்றுப் பணிக்கொடை மற்றும் வேலைக் காலத்திற்குப் பின்னரான மருத்துவ நலன்கள் போன்ற நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் திட்டங்களை வங்கி தொழிற்படுத்துகின்றது. முதல் மூன்று திட்டங்களையும் பொறுத்தவரையில் வங்கியும் தகுதியுள்ள பயனாளிகளும் தனித்தனியாக நிர்வகிக்கப்படும் நிதியங்களுக்குப் பங்களிப்பினைச் செய்கின்றனர்.

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நன்மைகளின் கிரயமானது எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் ஆயுட்கால மதிப்பீட்டு முறையை உபயோகித்து ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியாகத் தீர்மானிக்கப்படுகின்றது. நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் தொடர்பாக வங்கியின் கடப்பாடு, ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியாக, ஊழியர்கள் அவர்களுடைய தற்போதைய மற்றும் முன்னைய காலங்களில் வழங்கிய பணிகளுக்கு பிரதிபலனாக ஈட்டிய எதிர்கால நன்மைகளை மதிப்பீடு செய்வதன் மூலம் கணிக்கப்படுவதுடன், அந்நன்மை அதன் தற்போதைய மதிப்பினை நிர்ணயம் செய்வதற்காக கழிவீடு செய்யப்படுகின்றது. அங்கீகரிக்கப்படாத ஏதாவது கடந்த காலச் பணி செலவுகள் மற்றும் திட்டச் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதி என்பன கழிக்கப்படும். கழிவீடு செய்யப்படும் வீதமானது, சராசரி மீதமுள்ள பணிக் காலத்திற்கு ஏறத்தாழ முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட அரச பிணையங்களின் மதிப்பீட்டுத் திகதியன்றுள்ள விளைவு வீதமாகும். குறிப்பு 32இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து முதன்மையான ஆயுட்கால மதிப்பீட்டு அநுமானங்களும் வருடாந்தம் திருத்தப்படும்.

5.29 நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்

ஊழியர்கள், ஏற்புடைய நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஊழியர் சேம நிதியப் பங்களிப்புக்களுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேம நிதியத்திற்கு 24 சதவீதத்தினையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் முறையே பங்களிப்புச் செய்கிறது. இவை தனித்தனியாக நிருவகிக்கப்பட்டு வரும் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களாகும்.

நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களின் பங்களிப்பிற்கான கடப்பாடுகள், வருமானக் கூற்றில் அவை ஏற்படும் போது செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

5.30 கொடைகள்

கொடைகள் (பெறப்படும் என்பதற்கும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் அவை இணங்கியொழுகப்படும் என்பதற்குமான உறுதிப்பாடு இருக்குமிடத்து) அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டு, பங்குரிமை மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவின விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும் பொழுது, ஒழுங்குமுறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடுசெய்வதற்குத் தேவையான காலப்பகுதிக்கு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, சீர்மதிப்புப் பெறுமதி பிற்போடப்பட்ட அரச கொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம் வரை, ஏற்புடைய சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்குமுறையான அடிப்படையில் வருமானக்கூற்றுக்கு விடுவிக்கப்படும்.

5.31 எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

எதிர்பாரா பொறுப்புக்களானவை, நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிகழ்காலக் கடப்பாடுகளின் மூலம் மட்டும் உறுதி செய்யப்படுகின்ற சாத்தியமான கடப்பாடுகளாகக் காணப்படுவதுடன், இங்கு எதிர்காலப் பொருளாதார நன்மைகளின் மாற்றல் நிச்சயமற்றதாக அல்லது நம்பத்தகுந்த முறையில் அளவிடமுடியாததாகக் காணப்படுகின்றது. நிதியியல் நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படாத படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் என்பன எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளாக உரிய தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவைப்படுமிடத்து அவ்வாறான தொகைகள் மிகச்சிறந்த மதிப்பீடுகளில் அளவிடப்படுகின்றன.

வருமானக்கூற்று மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

5.32 வருமானங்களும் செலவினங்களும்

வங்கிக்குப் பொருளாதார நன்மைகளைக் கொண்டு வரக்கூடிய சாத்தியம் காணப்பட்டு அவ்வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகவுள்ள போது வருமானமானது அங்கீகரிக்கப்படுகின்றது.

மேற்கொள்ளப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக்கூற்றில் செலவுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. வியாபாரத்தைக் கொண்டு நடத்துவது தொடர்பாகவும் ஆதனம், பொறி, உபகரணங்களை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செலவினங்களும் ஆண்டிற்கான பெறுபேற்றினைக் கணிக்கும் போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும் செலவினத்தையும் அங்கீகரிப்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்களும் நிறைவேற்றப்பட வேண்டும்:

5.32.1 வட்டி வருமானம் மற்றும் செலவினங்கள்

சேகரித்தல் ஐயத்திற்கிடமில்லாதவிடத்து உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் அனைத்து வட்டி உழைக்கும் சாதனங்களுக்கான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. வட்டி வருமானமானது, நிலையான வருமான முதலீடு மற்றும் பிணையங்கள் என்பன மீதான வட்டி வருவாய்களையும் திறைசேரி உண்டியல் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் அட்டுறு கழிவுகள் மற்றும் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும் பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும் வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

5.32.2 பங்குலாபங்கள்

வங்கியின் கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்படும் போது பங்குலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

5.32.3 நானாவித வருமானம் மற்றும் செலவினங்கள்

நானாவித வருமானமும் செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆதனம், பொறி, உபகரணங்களின் விற்பனை மீதான வருமானத் தன்மையான தேறிய இலாபங்களும், நட்டங்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

முக்கிய வருமானத்தை உருவாக்குகின்ற நடவடிக்கைகளுக்கான தற்செயலான நடவடிக்கை மூலம் எழும் இலாபங்களும் நட்டங்களும் மற்றும் பொருண்மைத்தன்மை இல்லாத ஒரேமாதிரியான கொடுக்கல்வாங்கல் தொகுதியிலிருந்து எழும் இலாபங்களும் நட்டங்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றது.

5.32.4 ஆளணிச் செலவுகள்

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. ஆண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்கள் மற்றும் தொடர்பான செலவுகள் என்பன மற்றைய உள்நாட்டு கொடுபடத்தக்கனவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

5.32.5 வருமான வரிச் செலவு

வங்கியின் வருமானமானது, திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 118ஆம் பிரிவு மற்றும் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டத்தின் பிரிவு 9(1) அத்துடன் 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு அரசிறை (திருத்தம்) சட்டத்திற்கமைவாக அதன் பின்னரான திருத்தம் என்பவற்றின் கீழ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்டவாறான 2017ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பொருளாதார பணிக் கட்டணச் சட்டத்தின் நியதிகளில், 2017.04.01 இலிருந்து ஆரம்பித்து இலங்கை மத்திய வங்கி பொருளாதாரப் பணிக் கட்டணத்திற்கு ஏற்புடையதாகும். எனினும், திருத்தப்பட்டவாறான 2018ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொருளாதார பணி கட்டணச் சட்டத்தின்படி, 2018 ஒத்தோபரில் இருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் செலவணி வீதம் மீதான தேறல் செய்யப்படாத இலாபங்களும் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீதான தேறல் செய்யப்படாத சந்தைப் படியான இலாபங்களும் பொருளாதார பணிக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், 2013ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி நிதியியல் பணிகள் வழங்கல்கள் மீதான பெறுமதிசேர் வரியிலிருந்து வங்கி விலக்களிக்கப்பட்டது.

பொருளாதாரப் பணிக் கட்டணம் 2020 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இடைநிறுத்தப்பட்டது.

5.33 அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்

அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் நிகழும் அனைத்து பொருண்மைத் தன்மை வாய்ந்த நிகழ்வுகளும் கருத்தில் எடுக்கப்படுவதுடன், பொருத்தமானவிடத்து நிதியியல் கூற்றுக்களுக்கான தொடர்பான குறிப்புக்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றானது பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 7 - காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்றின் தயாரிப்பில் "நேரடி முறை" யைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு/கொடுப்பனவுக் கட்டளைகளின் வெளிப்பாய்ச்சல் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

6. விடுக்கப்பட்டிருந்தும் அறிக்கையிடும் திகதியில் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாதுள்ள புதிய கணக்கீட்டு நியமத் திருத்தங்கள் மற்றும் விளக்கக் குறிப்புக்கள்

பின்வரும் புதிய கணக்கீட்டு நியமத் திருத்தங்கள் பற்றிய புதிய தொடர்பான விளக்கக் குறிப்புக்கள் 2022 சனவரி 1 இற்குப் பின்னர் ஆரம்பிக்கும் நிதியியல் காலப்பகுதிகளுக்குப் பிரயோகிக்கத்தக்கதாகும் என்பதுடன் முன்னரான பிரயோகம் அனுமதிக்கப்பட்டது. எனினும் வங்கி இந்த நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது திருத்தப்பட்ட நியமங்களை முன்னரே பிரயோகிக்கவில்லை. மேலும், இத்தகைய நியம திருத்தங்களும் பொருள்கோடல்களும் வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் மீது பொருண்மயமான தாக்கமொன்றைக் கொண்டிருக்கும் என்பதை வங்கி எதிர்பார்க்கவில்லை.

6.1 கணக்கீட்டு கொள்கைகளை வெளிப்படுத்துதல் (ப.க.நி 1 மற்றும் ப.நி.அ.நி நடைமுறைக் கூற்று 2 இற்கான திருத்தங்கள்)

ப.க.நி 1 இற்கான முக்கிய திருத்தங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- கம்பனிகளின் குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் தவிர்ந்த அவர்களின் பொருண்மிய கணக்கீட்டுக் கொள்கைளை வெளிப்படுத்துவதற்கு கம்பனிகளைக் கோருதல்;
- பொருண்மியமற்ற கொடுக்கல்வாங்கல்கள், வேறு நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கைகள் தாமாகவே பொருண்மியமற்று காணப்படுகின்றன அத்துடன் அவ்வாறான வெளிப்படுத்தல் அவசியப்பாடாது; அத்துடன்
- பொருண்மியமற்ற கொடுக்கல்வாங்கல்கள், வேறு நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய அனைத்துக் கணக்கீட்டுக் கொள்கைகளும் கம்பனியின் நிதியியல் கூற்றுகளுக்கு தாமாகவே பொருண்மியத்தன்மையைக் கொண்டுள்ளன.

திருத்தங்கள் 2023 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும் ஆனால், முன்னதாக பிரயோகிக்கப்படலாம்.

6.2 கணக்கீட்டு மதிப்பீடுகளின் வரைவிலக்கணம் (ப.க.நி 8 இற்கான திருத்தங்கள்)

திருத்தங்கள் கணக்கீட்டு மதிப்பீடுகளிற்கான புதிய வரைவிலக்கணமொன்றை அறிமுகப்படுத்துகின்றன: அளவீட்டு நிச்சயமற்றத்தன்மைக்கு உட்பட்டு காணப்படுகின்ற நிதியியல்கூற்றுக்களிலுள்ள நாணயத் தொகைகள் இவை என்பதை தெளிவுபடுத்துதல்

கணக்கீட்டு கொள்கையொன்றினால் தீர்மானிக்கப்பட்ட குறிக்கோளை அடைவதற்கு கணக்கீட்டு மதிப்பீடொன்றை வங்கி உருவாக்குகின்றது என குறிப்பிடுவதன் மூலம் கணக்கீட்டு கொள்கைகளிற்கும் கணக்கீட்டு மதிப்பீடுகளிற்குமிடையிலான தொடர்பை திருத்தங்கள் தெளிவுபடுத்துகின்றன.

கணக்கீட்டு மதிப்பீடொன்றை உருவாக்குதல் என்பது பின்வருவனவற்றை இரண்டையும் உள்ளடக்குகின்றது:

- அளவீட்டு நுட்பமொன்றை தெரிவு செய்தல் (மதிப்பிடல் அல்லது பெறுமதியிடல் நுட்பம்) - உ-ம் ப.நி.அ.நி 9: நிதியியல் சாதனங்களை பிரயோகிக்கும் போது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களிற்கான இழப்பு படியொன்றை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் மதிப்பீட்டு நுட்பம்; அத்துடன்
- தெரிவுசெய்யப்பட்ட அளவீட்டு நுட்பத்தை பிரயோகிக்கும் போது பயன்படுத்தப்பட வேண்டிய உள்ளீடுகளைத் தெரிவுசெய்தல் - உ-ம் ப.க.நி 37 ஏற்பாடுகள், எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாரா சொத்துக்கள் என்பனவற்றை பிரயோகிக்கப்படும் போது, உத்தரவாதமளிக்கப்பட்ட கடப்பாடுகளுக்கான ஏற்பாடொன்றை தீர்மானிப்பதற்கான எதிர்பார்க்கப்பட்ட காசு வெளிப்பாய்ச்சல்கள்.

அனுமதிக்கப்பட்ட முன்னைய பிரயோகத்துடன் 2023 சனவரி 01ஆம் திகதியன்று ஆரம்பிக்கின்ற அல்லது அதற்கு பின்னரான காலப்பகுதிகளுக்கு நடைமுறைக்கு வருவதுடன் மேலும் திருத்தங்களை வங்கி பிரயோகிக்கும் முதலாவது வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதியின் ஆரம்பத்தில் அல்லது அதற்கு பின்னர் இடம்பெறுகின்ற கணக்கீட்டு மதிப்பீடுகளிலுள்ள மாற்றங்கள் மற்றும் கணக்கீட்டு கொள்கைகளிலுள்ள மாற்றங்கள் என்பனவற்றிற்கு எதிர்காலத்தில் பிரயோகிக்கப்படும்.

7. நடவடிக்கைகளின் தன்மை மற்றும் அளவு

7.1 வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப்பட்டியலானது வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் ஏனைய வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணயங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், அவுஸ்திரேலிய டொலர், யூரோ, ஸ்டேர்லிங் பவுண், யப்பானிய யென் மற்றும் நியூசிலாந்து டொலர் என்பன காணப்பட்டன. இவ்வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் முக்கியமாக இறைமைப் பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கட்டுக்காப்பு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் பன்னாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

7.2 உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

(i) திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள்: திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித்தொழில் முறைமைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம் அல்லது வங்கித்தொழில் முறைமையிலிருந்து நிதியங்களை மீளப்பெறல் மூலம் அரசுக்கான அல்லது சந்தைக்கான நாளாந்த தேறிய பாய்ச்சல்களையும் அல்லது அரசிடமிருந்து அல்லது சந்தையிடமிருந்து தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்வதுடன் பெருமளவிற்கு தொடர்புடையதாகவுள்ளது. இத்தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்காக இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கியதாக முதலீட்டுப் பட்டியலொன்றை வைத்திருத்தல். வர்த்தக நோக்கத்திற்கன்றி நாணயத் தொழிற்பாடுகளுக்காக இம்முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

7.3 நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

கட்டுக்காப்பு மற்றும் நிர்வாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட தொகை, அவை வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் ஆக்கக் கூறுகளில் ஒரு பகுதியாக அமையாததால் இந்நிதியியல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

8. காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
வங்கியிலுள்ள காசு நிலுவைகள்	**7,626,592**	23,385,534
வங்கிகளுடனான கால வைப்புக்கள்	**-**	49,430,045
ஓரிரவு வைப்புக்கள்	**118,410,171**	124,669,823
காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் மீது பெறவேண்டிய வட்டி	**28,287**	19,084
காசுப்பாய்ச்சல் நோக்கத்திற்கான காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்	**126,065,050**	**197,504,486**
மட்டுப்படுத்தப்பட்ட பாவனைக்காக கிடைப்பனவாகவுள்ள காசு மற்றும் காசுக்கு சமமானவை **(குறிப்பு 8.1)**	**526,467,646**	**315,343,334**
கழிக்குக: காசு மற்றும் காசுக்கு சமமானவை மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புகள் (குறிப்பு 8.2)	**(844,832)**	(85,368)
மொத்தம்	**651,687,864**	**512,762,452**

8.1 குறிப்பு 25.5 இல் விளக்கப்பட்டவாறான இலங்கை மத்திய வங்கிக்கும் சீனா மக்கள் வங்கிக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட இருபுடை நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையின் கீழ் பெறப்பட்ட ரென்மென்பி 10 பில்லியன் தொகையை மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாட்டிற்கு கிடைப்பனவாகவுள்ள காசு மற்றும் காசுக்கிற்குச் சமமானவை பிரதிபலிக்கின்றன. இவ்வுடன்படிக்கையின் கீழ் பெறப்பட்ட தொகையை இரண்டு நாடுகளுக்குமிடையிலான நிதியியல் வியாபாரம் மற்றும் நேரடி முதலீடு என்பவற்றிற்கும் அத்துடன் இரு தரப்பினர்களும் ஒப்புக்கொண்டதற்கமைய வேறு நோக்கங்களுக்கும் பயன்படுத்த முடியும்.

8.2 காசு மற்றும் காசுக்கு சமமானவை மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

	2022			2021		
	கட்டம் 1 ரூ. 000	கட்டம் 2 ரூ. 000	மொத்தம் ரூ. 000	கட்டம் 1 ரூ. 000	கட்டம் 2 ரூ. 000	மொத்தம் ரூ. 000
சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை	52,009	33,359	85,368	90,277	180,061	270,338
ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு/ (மீளளித்தல்)	789,431	(29,967)	759,464	(38,268)	(146,702)	(184,970)
திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை	841,440	3,392	844,832	52,009	33,359	85,368

9. வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள்		
- வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள்	**10,867,425**	8,818,244
வெளிநாட்டுப் பிணையங்களிலான மொத்த முதலீடுகள்	**10,867,425**	8,818,244
ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் (குறிப்பு 9.1)	**4,744**	995

9.1 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

	2022			2021		
	கட்டம் 1 ரூ. 000	கட்டம் 2 ரூ. 000	மொத்தம் ரூ. 000	கட்டம் 1 ரூ. 000	கட்டம் 2 ரூ. 000	மொத்தம் ரூ. 000
சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை	**995**	-	**995**	36,546	2,062,175	2,098,721
ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு/ (மீளளித்தல்)	**3,749**	-	**3,749**	(35,551)	(2,062,175)	(2,097,726)
திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை	**4,744**	-	**4,744**	**995**	-	**995**

10. பெறுதி நிதியியல் சாதனங்கள்

10.1 கீழேயுள்ள அட்டவணை, சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களாக அவற்றின் பெயரளவுத் தொகையுடன் சேர்த்து பதிவு செய்யப்பட்டுள்ள பெறுதி நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதியினைத் தருகின்றது. மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட பெயரளவுத் தொகையானது பெறுதியின் அடிப்படையான சொத்து, குறிப்பீட்டு வீதம் அல்லது சுட்டெண்ணின் தொகையாகும் என்பதுடன் பெறுதிகளின் பெறுமதிகளில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுவதற்கான அடிப்படையாகவும் காணப்பட்டது. பெயரளவுத் தொகை ஆண்டின் இறுதியில் வெளிநின்ற கொடுக்கல்வாங்கல்களின் அளவினை எடுத்துக்காட்டியதுடன் இது சந்தை இடர்நேர்வுகளையோ அல்லது கொடுகடன் இடர்நேர்வுகளையோ எடுத்துக்காட்டவில்லை.

	2022			2021		
	சொத்துக்கள் ரூ. 000	பொறுப்புக்கள் ரூ. 000	கருத்துத் தொகை ரூ. 000	சொத்துக்கள் ரூ. 000	பொறுப்புக்கள் ரூ. 000	கருத்துத் தொகை ரூ. 000
நாணய பரஸ்பர பரிமாற்றல்கள்	**401,580**	**71,669,551**	**208,591,719**	54,022,803	1,130,519	197,002,554
முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி	-	**28,443**	**1,724,773**	33	8,804	229,487
மொத்தம்	**401,580**	**71,697,994**	**210,316,492**	54,022,836	1,139,323	197,232,041

10.2 மேலே குறிப்பிட்ட பெறுதிகளானது வெளிநாட்டு ஒதுக்குகளை பேணும் நியதிச்சட்ட குறிக்கோள்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் வங்கியினால் வைத்திருக்கப்படும் சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகளை முகாமை செய்யும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் நாணய பரஸ்பர பரிமாற்றல்களையும் வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தங்களையும் உள்ளடக்குகின்றன. இலங்கை ரூபாவின் பன்னாட்டு உறுதிப்பாட்டை பேணுவதற்கும், நாட்டின் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதற்கும், பிராந்திய நாடுகளிற்கு மத்தியில் பொருளாதாரத்தையும் நிதியியல் ஒத்துழைப்பையும் மேம்படுத்துவதற்கும் நாட்டிற்குள் வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்களை அதிகரிப்பதற்கும் வங்கியானது உரிமம்பெற்ற வங்கிகள், வெளிநாட்டு மத்திய வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடன் பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்டது.

10.3 பெறுதிகள் என்பது வட்டி வீதங்கள், நிதியியல் சாதனங்களின் விலைகள், பண்ட விலைகள், வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள், கொடுகடன் இடர்நேர்வு மற்றும் சுட்டெண்களில் ஏற்படும் மாற்றங்களுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் அவற்றின் பெறுமதியினைப் பெற்றுக்கொள்ளும் நிதியியல் உடன்படிக்கைகளாகும்.

10.4 வங்கியின் பெறுதிகளினது சொத்துப்பட்டியலின் குறிப்பிடத்தக்க பகுதி செலாவணி வீத இடர்நேர்வு மற்றும் குறுங்கால திரவத்தன்மை தேவைப்பாடுகள் என்பனவற்றை முகாமைப்படுத்துவதற்கானதொரு உபாயமாக மேற்கொள்ளப்பட்ட நாணய பரஸ்பரபரிமாற்றத்தினை உள்ளடக்குகின்றது. நாணய பரஸ்பர பரிமாற்றலில் வங்கியானது இணங்கப்பட்ட வீதங்களில் மற்றொரு நாணயத்தின் பரிவர்த்தனையாக இணங்கப்பட்ட திகதியில் நாணயத்தின் குறிப்பிட்ட தொகையினை செலுத்துகிறது/ பெறுகிறது.

10.5 வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தத்திலிருந்து, வங்கியானது இணங்கப்பட்ட எதிர்காலத் திகதியொன்றில் இணங்கப்பட்ட வீதமொன்றில் வெளிநாட்டு நாணயத்தின் குறிப்பிட்டதொரு தொகையினை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கான கடப்பாடுகளை பெற்றிருக்கிறது.

10.6 பெறுதி உடன்படிக்கைகளுக்கு வங்கியின் வெளிப்படுத்துகைத் தன்மையானது, அத்தகைய பெறுதிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகள் வங்கிக்கு திடமாகக் கிடைக்கும் தன்மை கொண்டவை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாக நெருக்கமாகக் கண்காணிக்கப்படுகிறது.

10.7 நீண்ட கால ஐக்கிய அமெரிக்க டொலர்/ரூபாய் கொள்வனவு-விற்பனை பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்கள்

குறிப்பு 10.1 உள்ளடக்கியுள்ள நீண்டகால (30.06.2023 பின்னரான முதிர்வுகள்) ஐக்கிய அமெரிக்க டொலர்/ரூபாய் கொள்வனவு-விற்பனை பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்களை வங்கியானது வெளிநாட்டு ஒதுக்குகளை அதிகரிக்கும் நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் ஏற்படுத்தியிருந்தது. 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு, வங்கி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் மேற்கொண்ட நீண்ட கால ஐக்கிய அமெரிக்க டொலர்/ரூபாய் கொள்வனவு-விற்பனை பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்களின் நிலுவைகள் வருமாறு:

வங்கி	ஒப்பந்த திகதி	நிலுவைத் தொகை (ஐ.அ.டொ. மில்)	பகுதி வாரியாக இறுதி முதிர்வுத் திகதி	தவணைகள்/ நிபந்தனைகள்	கொடுக்கல் வாங்கல்களின் அபடிப்படை
இலங்கை வங்கி	22.04.2021	45.00	15.12.2027	• பூச்சிய செலவு அடிப்படையில் 6 ஆண்டுகள் • 5 தவணைகளில் மீளச்செலுத்தப் படுவதுடன் ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 10 மில். செலுத்தப்படும்	ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) கொவிட்-19 அவசரநிலை மற்றும் நெருக்கடி நிலைப் பணித் திட்டத்தின் கீழ் கடன் பெறப்பட்டது
இலங்கை வங்கி	29.06.2021	44.78			
மக்கள் வங்கி	23.04.2021	45.00			
மக்கள் வங்கி	30.09.2021	44.78			
டீஎப்சீசீ வங்கி பி.எல்.சி	24.02.2021	125.00	15.05.2028	• பூச்சிய செலவு அடிப்படையில் 7 வருடங்கள் • 20 தவணைகளில் மீளச்செலுத்தப் படுவதுடன் ஒவ்வொரு 3 மாதங்களுக்கும் 6.25 மில். ஐ.அ.டொலர் செலுத்த எதிர்பார்க்கப் படுகின்றது.	ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத் திடமிருந்து கடன் பெறப்பட்டது
கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பி. எல்.சி	17.11.2021	35.00	23.11.2026	• 5 வருடங்களில் முதல் 18 மாதங்கள் பூச்சிய செலவு அடிப்படையிலும் அதனைத் தொடர்ந்து அரை ஆண்டு மிகையாக ஒரு ஐ.அ.டொலருக்கு தலா ஒரு ரூபாயும் • முதிர்வின் போது முழுமையாக மீளச்செலுத்தபடும்	ஐக்கிய இராச்சியத்தின் சீடிசி பி.எல்.சி இடமிருந்து கடன் பெறப்பட்டது
தேசிய அபிவிருத்தி வங்கி பி.எல்.சி	18.03.2021	36.00	19.03.2029	• 7 வருடங்களில் முதல் 18 மாதங்கள் ஆண்டு மிகையாக ஒரு ஐ.அ. டொலருக்கு தலா ஒரு ரூபாயும் அதனைத் தொடர்ந்து அரை ஆண்டு மிகையாக ஒரு ஐ.அ.டொலருக்கு தலா ஒரு ரூபாயும் • 12 தவணைகளில் மீளச்செலுத்தப் படுவதுடன் ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் 3 மில். ஐ.அ.டொலர் செலுத்த எதிர்பார்க்கப் படுகின்றது.	டி.எப்.சி இடமிருந்து கடன் பெறப்பட்டது

11. ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டவை		
ப.நா.நிதிய அனுமதிப் பங்கு (குறிப்பு 11.1)	**279,779,554**	162,603,548
சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடமைகள் (குறிப்பு 11.2)	**626,461**	24,800,563
	280,406,015	187,404,111
பதிவழிக்கப்பட்ட பெறுமதியில் அளவிடப்படவை		
ப.நா.நிதியத்துடனான வைப்புக்கள் (குறிப்பு 11.3)	**377,081**	216,785
முற்செலுத்தப்பட்ட விதிப்புக்கள் - ப.நா.நிதியக் கடன்கள்	**637,986**	424,944
கழிக்குக: ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் (குறிப்பு 11.4)	**(8)**	(3)
	1,015,059	641,726
	281,421,074	188,045,837

11.1 ப.நா. நிதிய அனுமதிப் பங்கு

ப.நா.நிதிய அனுமதிப் பங்கானது (மூலதன சந்தாக்கள்) அதன் அங்கத்துவ நாடுகளிலிருந்து கிடைக்கின்ற ப.நா.நிதிய வளங்களின் முதன்மை மூலமாகும். பரந்தளவில் ஒரு நாட்டின் ஒப்பீட்டளவிலான பொருளாதார நிலைமை கருத்தில் கொள்ளப்பட்டு ஒவ்வொரு நாட்டினதும் அனுமதிப் பங்கு தீர்மானிக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தில் இணைகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு நாடு அதற்குரிய அனுமதிப் பங்குத் தொகையில் நூற்றுக்கு 25 வீதத்தினை பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தின் மூலம் அல்லது சிஎஉ யில் செலுத்துதல் வேண்டுமென்பதோடு, எஞ்சிய 75 வீதத்தினையும் தம் நாட்டுப் பணத்தின் மூலம் செலுத்துதல் வேண்டும். வங்கியொன்றின் ப.நா. நிதியத்துடனான அதன் கொடுக்கல்வாங்கல்கள், ப.நா.நிதியத்தின் உறுப்புரையின்படி, அரசாங்கத்தின் சார்பில் அதன் சொந்தக் கணக்கின் மீது இடம்பெறுவதனால் ப.நா.நிதியத்தின் அனுமதிப் பங்கு வங்கியின் சொத்துக்களைப் பிரதிபலிக்கிறது.

ப.நா. நிதியம், பொது அனுமதிப் பங்கு மீளாய்வு உடன்படிக்கைக்கு அமைவாக, ப.நா. நிதியத்தின் 189 அங்கத்தவர்களினதும் அனுமதிப் பங்கினையும் 2016 சனவரியில் அதிகரிக்க முடிவு செய்தது (தற்பொழுது இதில் 190 ப.நா.நிதிய அங்கத்துவ நாடுகளுள்ளன). இதன் விளைவாக, இலங்கையின் ப.நா. நிதிய அனுமதிப்பங்கு 2016 பெப்புருவரி 17இல் முன்னைய அனுமதிப்பங்கு தொகையான சிஎஉ 413.40 மில்லியனிலிருந்து சிஎஉ 578.80 மில்லியனுக்கு அதிகரித்தது.

ப.நா. நிதியத்திலிருந்து ஒரு உறுப்பினர் விலகினால், ப.நா. நிதியத்திற்கான நிகரப் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு தேவையில்லாத அளவிற்கு அதன் ஒதுக்கீட்டு சந்தை மீளப்பெறப்படும். எவ்வாறாயினும் ப.நா. நிதிய ஒதுக்கீட்டின் மீதான வட்டியானது உறுப்பினர்களுக்கு உரிமையில்லை. எனவே, பணத்தின் நேர மதிப்பிற்கு இழப்பீடு எதுவுமில்லை. எனவே, ப.நி.அ.நியமம் 9 இன் கீழ் இது இலாபம்/ நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்படுகின்றது. சீர்மதிப்பு பெறுமதியினைக் கணக்கிடுவதற்கு முதிர்வுக் காலம் எதுவுமில்லாததால் சீர்மதிப்புப் பெறுமதி மதிப்பிறக்கத்திற்குச் சமமாக இருக்கும்.

(i) சந்தாக்கள்: ப.நா. நிதியத்திற்கான அங்கத்தவரின் சந்தாவானது அங்கத்தவரின் அனுமதிப் பங்குக்குச் சமமாகும் என்பதோடு அதன் மூலம் அங்கத்தவர் ப.நா. நிதியத்திற்கு வழங்குவதற்கு கடப்பாடுடைய அதிகபட்ச நிதி வளங்களின் தொகை தீர்மானிக்கப்படுகிறது. அங்கத்தவர் பங்களிப்பை முழுமையாகச் செலுத்துதல் வேண்டும்.

25 சதவீதத்தினை ப.நா.நிதியம் தீர்மானிக்கின்ற ஒதுக்குச் சொத்துக்களிலிருந்தும் (சிஎஉ அல்லது பயன்படுத்தக்கூடிய நாணயங்களில்) மற்றும் எஞ்சிய தொகையை அங்கத்தவரின் சொந்த நாணயத்தின் மூலமும் செலுத்துதல் வேண்டும்.

(ii) வாக்களிக்கும் அதிகாரம்: ப.நா.நிதியத்தின் தீர்மானங்களின் போது அங்கத்தவரின் வாக்களிக்கும் அதிகாரமானது அனுமதிப் பங்கின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு ப.நா.நி. அங்கத்தவரும் அடிப்படை வாக்குகளுடன், அனுமதிப் பங்கின் ஒவ்வொரு சிஎஉ 100,000 க்கு ஒரு மேலதிக வாக்கு வீதமும் உரித்துடையவராவர். 2008 சீர்திருத்தமானது மொத்த வாக்குகளின் 5.50 சதவீதத்தில் அடிப்படை வாக்குகளின் எண்ணிக்கையினை நிர்ணயித்துள்ளது.

(iii) நிதியிடலை பெறுவதற்கான வசதி: அங்கத்தவரால் ப.நா. நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய நிதி வசதிகளுக்கு (வசதியின் எல்லை) அங்கத்தவருடைய அனுமதிப் பங்கு அடிப்படையாய் அமைகிறது. துணைநில் ஒழுங்குகள் மற்றும் நீடிக்கப்பட்ட ஒழுங்குகளுக்கேற்ப அங்கத்தவரால் தற்காலத்தில் வருடாந்த அனுமதிப் பங்கின் 145 சதவீதமும் (கொவிட் -19 பதிலிறுப்பு நிதியத்தின் பகுதியாக 2021ஆம் ஆண்டின் இறுதியை நோக்கி பங்கின் 245 சதவீதத்திற்கு தற்காலிகமாக அதிகரித்தது) திரண்ட ரீதியில் 435 சதவீதம் வரையிலும் கடன் பெறலாம். அசாதாரணமான சந்தர்ப்பங்களில் இவ்வசதி இதை விட அதிகரிக்கலாம்.

(iv) சிஎஉ ஒதுக்கல்: அங்கத்தவருடைய அனுமதிப் பங்குகளின் விகிதாசாரப்படி இவர்களுக்கான சிஎஉ ஒதுக்குகளின் பங்கு தீர்மானிக்கப்படுகிறது. ஐ.அ டொலர் 650 பில்லியனுக்குச் சமமான பொது சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்கீடானது பன்னாட்டு நாணய நிதியத்தில் 2021 ஓகத்து 23 அன்று நடைமுறைக்கு வந்த சிறப்பு எடுப்பனவு உரிமைகள் திணைக்களத்திலுள்ள பங்கேற்பாளர்களின் தற்போதுள்ள பங்குகளின் விகிதத்தில் பன்னாட்டு நாணய நிதிய உறுப்பினர்களுக்கு மேற்கொள்ளப்பட்டது. இதில் பொது சிறப்பு எடுப்பனவு உரிமைப் பங்கில் இலங்கையின் சிறப்பு எடுப்பனவு உரிமைப் பங்காக 554.8 மில்லியன் காணப்பட்டது.

11.2 சிறப்பு எடுப்பனவு உரிமை உடமைகள்

சிறப்பு எடுப்பனவு உரிமை (சிஎஉ) என்பது ப.நா.நி. அங்கத்தவர்களின் எவ்விதத் தடைகளுமின்றிப் பயன்படுத்தக்கூடிய நாணயங்கள் மீதான கோரலாக இருப்பதுடன், இதில் சிஎஉ உடமையாளர்கள் தமது சிஎஉரிமைகளை இந்நாணயங்களுக்காகப் பரிமாறிக் கொள்ள முடியும். ஒதுக்குச் சொத்தொன்றாக சிஎஉரிமையின் பெறுமதியானது சிஎஉரிமையை வைத்திருப்பதற்கும் ஏற்றுக்கொள்வதற்குமான அங்கத்தவர்களின் கடப்பாடுகள் மற்றும் சிஎஉரிமை முறைமையின் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட பல்வேறுபட்ட கடப்பாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய பொறுப்பு என்பவற்றிலிருந்து தோன்றுகின்றது. தடையின்றிப் பயன்படுத்தக்கூடியதான நாணயங்கள் மீதான சிஎஉ கோரலானது மதிப்பளிக்கப்படுவதை ப.நா.நி. இரண்டு விதங்களில் உறுதி செய்கின்றது. அதாவது, பலவீனமான வெளிநாட்டு நிலைமையிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து சிஎஉ வைக் கொள்வனவு செய்வதற்குப் பலம் வாய்ந்த வெளிநாட்டு நிலைமையைக் கொண்ட ப.நா.நி அங்கத்தவர்களைப் பெயர் குறித்துரைப்பதன் மூலமும் அத்துடன் முகாமைக்குட்படுத்தப்பட்ட சந்தையினுள் பங்கேற்கும் அங்கத்தவர்களுக்கிடையிலான தாமாக முன்வந்து பரிமாற்றிக் கொள்ளும் ஒழுங்கின் மூலமுமாகும். மேலே காட்டப்பட்ட தொகையானது தொடர்பான அறிக்கையிடும் திகதிகளிலுள்ளவாறான வங்கியின் மொத்த உடமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

சி.எ.உ. குணாதிசயங்கள் பணத்திற்கு ஒத்த பண்புகளைக் கொண்டுள்ளன. எனவே ப.நி.அ.நி. 9இன் கீழ் இலாபம்/ நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்படுகின்றது. சீர்மதிப்புப் பெறுமதியினைக் கணிப்பிடுவதற்கு முதிர்ச்சிக் காலம் எதுவுமில்லாததால் சீர்மதிப்புப் பெறுமதியானது மதிப்பிறக்கத்திற்குச் சமமாக இருக்கும்.

11.3 ப.நா. நிதியத்துடனான வைப்புக்கள் - பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பு

பன்னாட்டு நாணய நிதியத்தில் நிர்வகிக்கப்படும் விசேட எதிர்பாரா நிகழ்வுக் கணக்கு-2 (வி.எ.நி.கணக்கு-2) இற்குப் பிந்திய கணக்கில் இலங்கையின் வைப்பிலிருந்து சிஎஉ 788,783 இனை மாற்றியதன் மூலம் 2000 ஏப்பிறல் 21ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் பன்னாட்டு நாணய நிதியத்திற்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை வைப்பு மேற்கொள்ளப்பட்டது. வி.எ.நி. கணக்கு-2 ஐ முடிவுறுத்துவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தினால் தீர்மானிக்கப்பட்ட போது, இலங்கைக்கெதிராக வி.எ.நி. கணக்கு-2 இல் வைக்கப்பட்டிருந்த மீதியை மாற்றியதன் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழ் இந்தக் கணக்கு உருவாக்கப்பட்டது. வி.எ.நி. கணக்கு-2 இற்குப் பிந்திய கணக்கிலுள்ள மீதிகளை முழுமையான நன்கொடையாக அல்லது பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி கடனுக்கு மானியம் வழங்கும் ஒரு வழியாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக்கு வழங்குவதற்கு கவனத்தில் கொள்ளுமாறு அந்தக் கணக்கில் மீதிகளைக் கொண்டிருந்த நாடுகளை பன்னாட்டு நாணய நிதியம் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க இலங்கை அரசாங்கம், வி.எ.நி. கணக்கு- 2இற்குப் பிந்திய கணக்கிலுள்ள நிதிகளை முழுமையான நன்கொடையாகவன்றி 2018 வரையிலான வட்டியில்லா வைப்பாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக் கணக்குக்கு மாற்றுவதற்கு இணங்கியது. இது பின்னர் 2024 வரை நீடிக்கப்பட்டது.

11.4 பா.நிதியத்துடன் தொடர்புபட்ட சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

	2022 ரூ. 000	2021 ரூ. 000
கட்டம் 1		
சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை	**3**	2
ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு/ (மீளளித்தல்)	**5**	1
திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை	**8**	3

12. இலங்கை அரச பிணையங்கள்

அரச பிணையங்களின் பட்டியலானது நாணய விதிச் சட்டத்தின் 90(2) பிரிவின் கீழ், நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கில் கொள்வனவு செய்யப்பட்டு பேணப்படுகின்றது.

	2022 ரூ. 000	2021 ரூ. 000
திறைசேரி உண்டியல்கள்	**2,480,822,291**	1,351,378,149
திறைசேரி முறிகள்	**17,708,352**	25,876,232
பெறத்தக்க வட்டி	**464,372**	565,966
	2,498,995,015	1,377,820,347

இ.ம.வ வைத்திருக்கும் அரச பிணையங்கள் ப.நி.அ.நி 9 இன்படி பெறுமதியிழப்பிற்கு உட்பட்டவையாகும். இருப்பினும், 31 டிசம்பர் 2021 வரையிலான நிதியியல் கூற்றுக்களில் அரச பிணையங்களின் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள் பூஜ்ஜிய-இழப்பினை பிரதிபலித்திருந்தன.

இலங்கை மத்திய வங்கியானது நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுடன் இணைந்து 30 மார்ச்சு 2023 அன்று மெய்நிகர் முதலீட்டாளர் விளக்கக்காட்சியை நடத்தியது அதில் உள்நாட்டுக் கடன் மேம்படுத்தல் (உ.க.மே) ஒன்றைச் சுட்டிக்காட்டியது. உ.க.மே இல் மதிப்பீடு செய்வதற்கான விருப்பங்களை அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர். எனினும் இ.ம.வங்கியால் வைத்திருக்கும் இலங்கை அரச பிணையங்கள் முதலீட்டுப்பட்டியலின் எதிர்பார்க்கப்படும் படுகடன் எதிர்நேர்வில் உ.க.மே இன் தாக்கத்தை தீர்மானிக்க போதுமான தகவல்கள் எதுவும் இல்லை.

13. மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	**691,637,000**	567,297,000
மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் மீது பெறத்தக்க வட்டி	**6,432,219**	235,312
	698,069,219	567,532,312

14. அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்

இவை நாணய விதிச் சட்டத்தின் 89ஆவது பிரிவின் கீழ் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட முற்பணங்களைக் குறிக்கின்றன. இது திரண்ட நிதியத்திலிருந்து உறப்படுவதற்காக, அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் செலவுகளுக்கான முற்பணங்களின் வழங்குகையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

அவை வழங்கப்படும் நிதியாண்டிற்கான மதிப்பிடப்பட்ட அரசாங்க வருமானத்தின் 10 சதவீத உச்சவரம்பிற்குட்பட்டது. இந்த முற்பணம் வட்டியில்லா மீள்கடன் வசதியாக அரசாங்கத்தினால் பயன்படுத்தப்படுகின்றது. இது ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்குள் மீளச் செலுத்தப்பட வேண்டும்.

15. நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 105 'ஏ'ற்கு அமைய, இம்முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவின் கீழ் நாணயச் சபையின் கருத்துப்படி வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறையில் மனிதவள மூலவளங்களையும் தொழில்நுட்ப அபிவிருத்தியையும் முன்னேற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் அல்லது இலங்கையில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகளுக்கிடையே கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவினை வசதிப்படுத்துவதற்குமாக ஏதாவது கம்பனி நிறுவப்படுமிடத்து அக்கம்பனிகளிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்து வைத்திருப்பதற்கு வங்கிக்கு வலுவளிக்கப்பட்டுள்ளது.

15.1 முதலீட்டு நிலைமை

கம்பனி	வியாபாரத்தின் தன்மை	2022 பங்குகளின் எண்ணிக்கை	2022 சீர்மதிப்புப் பெறுமதி ரூ. 000	2021 பங்குகளின் எண்ணிக்கை	2021 சீர்மதிப்புப் பெறுமதி ரூ. 000
லங்கா கிளியர் (பிறைவேட்)லிமிடெட்	தன்னியக்கத் தீர்ப்பனவு	**2,986,824**	**769,866**	2,986,824	653,414
வரையறுக்கப்பட்ட லங்கா நிதியியல் பணிகள் பணியகம்	தன்னியக்க நிதிய மாற்றல்	**500,000**	**-**	500,000	-
வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்	கொடுகடன் தகவல் வழங்கல்	**48,244**	**1,047,266**	48,244	1,017,804
			1,817,132		**1,671,218**

15.2 பங்குரிமை முதலீடுகளானவை, வங்கியின் நிதியியல் கூற்றுக்களை தயாரிக்கும் நேரத்தில் இருந்த இக்கம்பனிகளின் மிகப் பிந்திய கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களின் படி பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்களின் அடிப்படையில் 2022திசெம்பர் 31 இலுள்ளவாறு சீர்மதிப்புப் பெறுமதியில் கொண்டு செல்லப்பட்டன. இதன்படி, கீழ்வரும் திகதிகளில் உள்ளவாறான பங்கொன்றிற்கான தேறிய சொத்து பயன்படுத்தப்பட்டது.

லங்காகிளியர் (பிறைவேட்) லிமிடெட் - 2022 திசெம்பர் 31 பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி ரூ.257.75

வரையறுக்கப்பட்ட லங்கா நிதியியல் பணிகள் பணியகம் - 2022நவெம்பர் 30 - பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி ரூ.-4.60

வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் - 2022 திசெம்பர் 31 - பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி ரூ.21,707.60

16. வங்கிகளுக்கான கடன்கள்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
வங்கிகளுக்கான கடன்கள் (குறிப்பு 16.1)	**28,601,832**	90,621,674
கழிக்குக: வங்கிகளுக்கான கடன்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு (குறிப்பு 16.2)	**(343,930)**	(48,928)
	28,257,902	90,572,746

16.1 வங்கிகளுக்கான கடன்கள்

இக்கடன்களானவை நாணய விதிச் சட்டத்தின் அத்தியாயம் V இன் பகுதி III 'அ' இற்கிணங்க, உற்பத்தித்திறன் தேவைகளுக்காக கடன் கொடுத்தலை வசதிப்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளன.

	2022 ரூ. 000	2021 ரூ. 000
நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் திட்டம்		
- தொடர்பான தரப்பினர்கள்	**18,173**	20,368
வடக்கு மற்றும் கிழக்கில் பாதிக்கப்பட்ட வீடுகளின் திருத்தம்		
- தொடர்பான தரப்பினர்கள்	**42,260**	89,707
சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி **(குறிப்பு 16.1.1)**		
- தொடர்பான தரப்பினர்கள்	**1,337,217**	60,373,446
- ஏனையோர்	**484,532**	9,245,265
சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் மீள்நிதியிடல் வசதி **(குறிப்பு 16.1.2)**		
- தொடர்பான தரப்பினர்கள்	**11,207,691**	8,644,208
- ஏனையோர்	**2,570,533**	3,173,742
சௌபாக்கியா கடன் திட்டம் **(குறிப்பு 16.1.3)**		
- தொடர்பான தரப்பினர்கள்	**10,469,090**	6,850,588
- ஏனையோர்	**2,087,594**	2,211,334
இம வங்கியின் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன்கள்		
- தொடர்பான தரப்பினர்கள்	**86,307**	13,016
உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி முன்னோடிக் கட்ட கடன் திட்டம் **(குறிப்பு 16.1.4)**		
- தொடர்பான தரப்பினர்கள்	**227,305**	-
- ஏனையோர்	**71,130**	-
	28,601,832	90,621,674

16.1.1 சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளிப்பு வசதி: கொவிட்-19 நோய்ப்பரம்பலினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தின் மீட்சிக்கு ஆதரவளிப்பதற்காக, கொவிட்-19 நோய்ப்பரம்பலினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு கடன் வழங்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில், 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 83இன் கீழ் இப்புதிய கொடுகடன் திட்டத்தை இலங்கை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது.

16.1.2 சௌபாக்கியா புத்துயிரளிப்பு மீள்நிதியிடல் வசதி: கொவிட்-19 நோய்ப்பரம்பலினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர துறை தொழில்முயற்சிகளை மீட்டெடுப்பதற்காகவும் நாட்டில் பொருளாதார நடவடிக்கையை ஊக்குவிப்பதற்காகவும் சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் ஒரு புதிய மீள்நிதியிடல் வசதியை இலங்கை மத்திய வங்கி ஆரம்பித்தது.

16.1.3 சௌபாக்யா கடன் திட்டம்: நாணய விதிச் சட்டத்தின் 88அ பிரிவின் அடிப்படையில், இது வேளாண்மை, விலங்குவளர்ப்பு, சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்கள் (சி.ந.நி) மற்றும் சி.ந.நி இலங்கையில் ஏற்பட்ட பேரழிவால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களுக்கு கடன் வசதிகளை வழங்கும் நோக்கில் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் 2010ஆம் ஆண்டில் சௌபாக்யா (புத்துயிரளித்தல்) கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.

16.1.4 உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி முன்னோடி கட்ட கடன் திட்டம்: நாணய விதிச் சட்டத்தின் 88அ பிரிவின் அடிப்படையில், பல்வேறு தொழில்நுட்ப உதவிகள் மற்றும் சிறந்த சந்தை வாய்ப்புக்களுடன் மதிப்பு சங்கிலிகள் மூலம் நன்கு இணைக்கப்பட்ட சிறு வேளாண்மையாளர் சமூகத்திற்கு குறைந்த செலவு அடிப்படையில் நிதி வசதிகளை வழங்குவதன் மூலம் இலங்கையில் வேளாண்மைத் துறையின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்காக பிராந்திய அபிவிருத்தி திணைக்களம் 2021ஆம் ஆண்டில் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி முன்னோடி கட்ட கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது.

16.2 வங்கிகளுக்கான கடன்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

	2022				2021			
	கட்டம் 1 ரூ 000	கட்டம் 2 ரூ 000	கட்டம் 3 ரூ 000	மொத்தம் ரூ 000	கட்டம் 1 ரூ 000	கட்டம் 2 ரூ 000	கட்டம் 3 ரூ 000	மொத்தம் ரூ 000
சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை	14,435	21,477	13,016	48,928	6,215	148,153	-	154,368
ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு/ (மீளளித்தல்)	(8,378)	230,088	73,291	295,001	8,220	(126,676)	13,016	(105,440)
திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை	**6,057**	**251,565**	**86,307**	**343,930**	14,435	21,477	13,016	48,928

17. ஏனைய சொத்துக்கள்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
நிதியியல் சொத்துக்கள்		
உள்ளக நிதியங்களின் முதலீடுகள்	**18,557,124**	16,490,667
கழிக்குக: சொத்துக்களின் மீதான பெறுமதியிழப்பிற்கான ஏற்பாடு **(குறிப்பு 17.1)**	**(405)**	(280)
உள்ளக நிதியங்களின் தேறிய முதலீடு	**18,556,719**	16,490,387
பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் திட்டங்களின் முதலீடுகள்	**-**	5,380,169
கழிக்குக: பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் முதலீடுகள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு **(குறிப்பு 17.2)**	**-**	(150)
	-	5,380,019
பதிவழிக்கப்பட்ட செலவில் அலுவலர் கடன்கள்	**5,355,855**	5,592,375
திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெறத்தக்கவை	**3,540,585**	4,087,983
ஏனைய பெறத்தக்கவைகள்	**2,258,723**	2,258,932
கழிக்குக: ஏனைய பெறத்தக்கவைகள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு **(குறிப்பு 17.3)**	**(2,226,887)**	(2,226,887)
	8,928,276	9,712,403
	27,484,994	31,582,809
நிதியல்லாச் சொத்துக்கள்		
அலுவலர் கடன் தொடர்பான பிற்போடப்பட்ட சொத்து	**2,697,566**	2,480,961
	30,182,560	34,063,770

17.1 உள்ளக நிதியங்களின் முதலீடுகளின் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிலான அசைவு

	2022			2021		
	கட்டம் 1 ரூ 000	கட்டம் 2 ரூ 000	மொத்தம் ரூ 000	கட்டம் 1 ரூ 000	கட்டம் 2 ரூ 000	மொத்தம் ரூ 000
சனவரி 1இலுள்ளவாறான நிலுவை	**39**	**241**	**280**	48	79,524	79,572
ஆண்டு காலப் பகுதியிலான விதிப்பு/ (மீளளித்தல்)	**47**	**78**	**125**	(9)	(79,283)	(79,292)
திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை	**86**	**319**	**405**	39	241	280

17.2 பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் முதலீட்டுத் திட்டங்கள் மீதான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிலான அசைவு

	2022 கட்டம் 1 ரூ. 000	2021 கட்டம் 1 ரூ. 000
சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை	**150**	-
ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு	**(150)**	150
திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை	**-**	150

17.3 ஏனைய பெறத்தக்கவைகள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு

	2022 கட்டம் 3 ரூ. 000	2021 கட்டம் 3 ரூ. 000
சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை	**2,226,887**	183,276
ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு	**-**	-
பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் திட்டங்களிலிருந்து மாற்றல் செய்யப்பட்டவை	**-**	2,043,611
திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை	**2,226,887**	2,226,887

18. தங்கம்

இது நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(1) மற்றும் பிரிவு 67(2) இனால் தேவைப்படுத்தப்பட்டவாறு, பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக வைத்திருக்கப்படும் பௌதீக ரீதியான தங்கத்தின் பெறுமதியாகும். நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(2) இன்படி, நாணயச் சபை குறைந்ததொரு அணு ஒதுக்காவது தங்க வடிவிலோ அல்லது மத்திய வங்கியால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலகுவாக தங்கமாக மாற்றக்கூடிய நாணய வடிவிலோ வைத்திருப்பதற்கு முயல வேண்டும்.

19. இருப்புக்கள்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்கள்	**2,485,880**	1,788,014
சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குத்திகள்	**2,074,163**	2,821,514
வழங்குநரிடமிருந்தான இடைப்போக்கிலுள்ள நாணயக் குத்திகள்	**-**	-
வழங்குநரிடமிருந்தான இடைப்போக்கிலுள்ள நாணயத் தாள்கள்	**144,188**	253,168
	4,704,231	4,862,696
கழிக்குக: மெதுவாக அசையும் இருப்புக்களுக்கான ஏற்பாடு	**(2,446)**	(2,446)
	4,701,785	4,860,250
எழுதுகருவிகளும் நானாவித இருப்புகளும்	**86,622**	68,124
மருத்துவ நிலைய இருப்புக்கள்	**-**	159
மொத்த இருப்புக்கள்	**4,788,407**	**4,928,533**

2022 காலப்பகுதியில் ரூ.2,339.65 மில்லியன் (2021இல் ரூ.2,780.25மில்லியன்) பெறுமதியான இருப்புக்கள் ஆண்டுகாலப்பகுதியில் செலவினமாக அங்கீகரிக்கப்பட்டு "இருப்பின் கிரயம்" (புதிய நாணய வழங்கல் செலவு) ஆக உள்ளடக்கப்பட்டது.

20. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

செலவு/ மதிப்பீடு	காணியும் கட்டடமும்	பொறி மற்றும் பொறி ஒருங்கி ணைப்புக்கள்	தள பாடங்களும் உபகர ணங்களும்	உந்து ஊர்திகள்	கணனி கள்	சொத்துக் களின் பாவனை உரிமை	ஏனையவை	நடை பெற்று வரும் கட்டுமானம்	2022 மொத்தம்	2021 மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
சனவரி 1இல் உள்ளவாறு	**18,174,063**	**1,615,478**	**1,394,680**	**611,793**	**1,141,540**	**69,049**	**57,417**	**154,042**	**23,218,062**	24,026,767
ஆண்டுகாலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை	**2,473**	**14,042**	**221,970**	**-**	**9,841**	**-**	**286**	**216,736**	**465,348**	293,823
ஆண்டுகாலப்பகுதியில் அகற்றப்பட்டவை	**-**	**(95)**	**(5,357)**	**-**	**(2,025)**	**-**	**-**	**-**	**(7,477)**	(1,091,338)
ஆண்டுகாலப்பகுதியில் மாற்றல் செய்யப்பட்டவை	**-**	**-**	**-**	**-**	**-**	**-**	**-**	**(177,699)**	**(177,699)**	-
சொத்துப் பாவனை உரிமையின் இளைப்பாறல்	**-**	**-**	**-**	**-**	**-**	**-**	**-**	**-**	**-**	(11,190)
திசெம்பர் 31இல் உள்ளவாறு	**18,176,536**	**1,629,425**	**1,611,293**	**611,793**	**1,149,356**	**69,049**	**57,703**	**193,079**	**23,498,234**	23,218,062

ஒன்றுசேர்ந்த தேய்மானம்	காணியும் கட்டடமும்	பொறி மற்றும் பொறி ஒருங்கி ணைப்புக்கள்	தள பாடங்களும் உபகர ணங்களும்	உந்து ஊர்திகள்	கணனி கள்	சொத்துக் களின் பாவனை உரிமை	ஏனையவை	நடை பெற்று வரும் கட்டுமானம்	2020 மொத்தம்	2010 மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000		ரூ.000	ரூ.000	ரூ.000
சனவரி 1இல் உள்ளவாறு	**219,099**	**1,143,599**	**1,133,460**	**463,386**	**974,746**	**8,194**	**39,584**	**-**	**3,982,068**	3,571,315
ஆண்டுகாலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை	**219,129**	**75,892**	**82,240**	**30,973**	**72,414**	**7,161**	**242**	**-**	**488,051**	503,845
ஆண்டுகாலப்பகுதியில் அகற்றப்பட்டவை	**-**	**(56)**	**(5,198)**	**-**	**(1,909)**	**-**	**-**	**-**	**(7,163)**	(81,902)
சொத்துப் பாவனை உரிமையின் இளைப்பாறல்	**-**	**-**	**-**	**-**	**-**	**-**	**-**	**-**	**-**	(11,190)
திசெம்பர் 31இல் உள்ளவாறு	**438,228**	**1,219,435**	**1,210,502**	**494,359**	**1,045,251**	**15,355**	**39,826**	**-**	**4,462,956**	3,982,068
தேறிய ஏட்டுப் பெறுமதி	**17,738,308**	**409,990**	**400,791**	**117,434**	**104,105**	**53,694**	**17,877**	**193,079**	**19,035,278**	19,235,994

காணிகள் மற்றும் கட்டடங்களின் கொண்டு செல்லும் பெறுமதி சீர்மதிப்புப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது. மிக அண்மைக்கால சுயாதீனமான மதிப்பீடு திரு. ஏ. ஏ. எம். பாதிகு பட்டய மதிப்பீட்டாளரினால் 2022 திசெம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்டதோடு, அது 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறாக அறிக்கையிடப்பட்டுள்ளது. வங்கியின் பார்வையில், இத்தகைய காணி மற்றும் கட்டடங்களின் கொண்டு செல்லும் பெறுமதியானது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீர்மதிப்பு பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பர் 31 இல் கணிசமானளவு மாற்றமின்றிக் காணப்பட்டது.

நிதியியல் ஆண்டு காலப்பகுதியில் வங்கியானது ரூ.617.28 மில்லியன் (2021 - ரூ.680.89 மில்லியன்) ஒன்றுசேர்ந்த செலவில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை காசிற்குக் கொள்வனவு செய்தது.

2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு இன்னும் பயன்பாட்டிலிருக்கும் முழுமையாகப் பெறுமதி தேய்வழிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூ.2,939.00 மில்லியனாக இருந்தது (2021 - ரூ.1,929.35 மில்லியன்).

வங்கியின் இறையிலி காணியிலுள்ள கட்டடங்கள் மற்றும் குத்தகைக் காணியிலுள்ள கட்டடங்கள் என்பனவற்றின் மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு அணுகுமுறை மற்றும் முக்கியமான அவதானிக்க முடியாத உள்ளீடுகள்

ஆதனம்	பட்டயம் பெற்ற மதிப் பீட்டாளரின் பெயர்	மதிப்பீட்டு அணுகுமுறை	பேர்ச் ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை (ரூபா)	சதுர அடி ஒன்றுக்கான மதிப்பிடப் பட்ட விலை (ரூபா)	மாத மொன்றுக் கான மதிப்பிடப் பட்ட வாடகை (ரூபா)	வெளிச் செல்லும் செலவுகள்	கொள்வனவு ஆண்டுகள்	2020 திசெம்பர் 31 இலுள்ள வாறு சீர்மதிப்புப் பெறுமதி (ரூ.000)
காணி மற்றும் கட்டடம்								
தலைமை அலுவலகம் - கொழும்பு 01	ஏ.ஏ.எம். பாதிகு	சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை	15,750,000	11,000 - 18,500	-	-	-	10,437,567
வைற்எவேய்ஸ் கட்டடம் - கொழும்பு 01	ஏ.ஏ.எம். பாதிகு	சந்தை அணுகுமுறை மற்றும் வருமான அணுகுமுறை	13,200,000	-	7,000,000	35%	16.66	783,407
லொய்ட்ஸ் கட்டடம் - கொழும்பு 01	ஏ.ஏ.எம். பாதிகு	சந்தை அணுகுமுறை மற்றும் வருமான அணுகுமுறை	14,400,000	-	10,000,000	35%	16.66	1,077,180
வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் - இராஜகிரிய	ஏ.ஏ.எம். பாதிகு	சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை	3,600,000	3,000 - 12,000	-	-	-	2,660,026
வங்கி இல்லம் - கொழும்பு 07	ஏ.ஏ.எம். பாதிகு	சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை	10,000,000	4,000 - 11,000	-	-	-	1,709,163
பிரதேச அலுவலகம் - மாத்தறை	ஏ.ஏ.எம். பாதிகு	சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை	2,000,000 - 4,000,000	4,000 - 9,500	-	-	-	360,397
பிரதேச அலுவலகம் - மாத்தளை	ஏ.ஏ.எம். பாதிகு	சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை	150,000 - 750,000	3,000 - 9,500	-	-	-	222,786
விடுமுறை இல்லம் - நுவரெலியா	ஏ.ஏ.எம். பாதிகு	சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை	1,350,000	5,000 - 8,750	-	-	-	334,193
விடுமுறை இல்லம் - கதிர்காமம்	ஏ.ஏ.எம். பாதிகு	சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை	270,000	5,000 - 12,500	-	-	-	231,605
குத்தகைக் காணியிலுள்ள கட்டடங்கள்								
பிரதேச அலுவலகம் - அநுராதபுரம்	ஏ.ஏ.எம். பாதிகு	கிரய அணுகுமுறை	-	4,500 - 9,500	-	-	-	90,783
விடுமுறை இல்லம் - அநுராதபுரம்	ஏ.ஏ.எம். பாதிகு	கிரய அணுகுமுறை	-	7,000	-	-	-	21,960
பிரதேச அலுவலகம் - கிளிநொச்சி	ஏ.ஏ.எம். பாதிகு	கிரய அணுகுமுறை	-	2,000 - 8,500	-	-	-	199,050
விடுமுறை இல்லம் - சோமாவதிய	ஏ.ஏ.எம். பாதிகு	கிரய அணுகுமுறை	-	11,750 - 12,000	-	-	-	45,946

காணி, கட்டடங்களின் உள்ளடக்கம்	கொண்டு செல்லும் பெறுமதி 2022 ரூ. 000	கொண்டு செல்லும் பெறுமதி 2021 ரூ. 000
இறையிலி காணி	**10,855,725**	10,855,725
இறையிலி காணிகளிலுள்ள கட்டடங்கள் கட்டடங்கள்	**6,593,850**	6,798,976
குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள்	**288,733**	300,263
	17,738,308	17,954,964

மீள்பெறுமதியிடப்பட்ட காணிகள் மற்றும் கட்டடங்களின் கொண்டு செல்லும் பெறுமதி கிரயத்திலிருந்து தேய்மானங்கள் கழிக்கப்பட்ட பெறுமதியாக நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூ.7,133.73மில்லியனாகும் (2021 - ரூ.7,273.50 மில்லியன்).

21. அருவச் சொத்துக்கள்

	2022			2021
	அருவச் சொத்துக்கள்	அருவச் சொத்துக்கள் - முன்னெடுக் கப்பட்டவை	மொத்தம்	
	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000
கணனி மென்பொருட்கள்:				
கிரயம்:				
சனவரி 1இல் உள்ளவாறு	1,083,541	481,375	1,564,916	1,088,965
ஆண்டுகாலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை	879,377	329,632	1,209,009	475,951
ஆண்டுகாலப்பகுதியில் மாற்றல் செய்யப்பட்டவை	-	(613,507)	(613,507)	-
திசெம்பர் 31இல் உள்ளவாறு	1,962,918	197,500	2,160,418	1,564,916
பதிவழிப்பு:				
சனவரி 1இல் உள்ளவாறு	1,003,284	-	1,003,284	980,713
ஆண்டிற்கான பதிவழிப்புக் கட்டணம்	248,997	-	248,997	22,571
திசெம்பர் 31இல் உள்ளவாறு	1,252,281	-	1,252,281	1,003,284
தேறிய ஏட்டுப் பெறுமதி:				
திசெம்பர் 31இல் உள்ளவாறு	**710,637**	**197,500**	**908,137**	561,632

ஆண்டுகாலப்பகுதியில் வங்கி காசின் மூலம் கொள்வனவு செய்த அருவச் சொத்துக்களின் மொத்தச் செலவு ரூ.879.38 மில்லியனாகும் (2021 - ரூ.78.5 மில்லியன்).

2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு இன்னும் பயன்பாட்டிலிருக்கும் முழுமையாகப் பதிவழிப்புச் செய்யப்பட்ட அருவச் சொத்துக்களின் பெறுமதி ரூ.982.69 மில்லியனாகும் (2021 - ரூ.957.20 மில்லியன்).

22. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
வெளிநாட்டு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை	**146,381,827**	7,380
ஏனைய வெளிநாட்டு நிதியியல் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டியவை	**26,201**	6,321
	146,408,028	13,701

வெளிநாட்டு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியதிலுள்ள ரூ.146.37 பில்லியன் இலங்கை மத்திய வங்கி மற்றும் இந்திய றிசேர்வ் வங்கி ஆகியவற்றுக்கு இடையேயான இருதரப்பு நாணய பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தத்தின் கீழ், செலுத்த வேண்டிய நிலுவையைக் குறிக்கிறது. இது முதலில் 2020 யூலையில் பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சம்மேளனத்தின் (சார்க்) நாணய பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்த கட்டமைப்பின் ஏற்பாட்டின் கீழ் பெறப்பட்டதாகும்.

இருதரப்பு நாணய பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தத்தின் கீழ், ஆரம்பத்தில் ஐ.அ.டொலர் 400 மில்லியன் 2020 யூலையில் இலங்கையால் பெறப்பட்டதுடன் 2020 நவம்பரில் அதன் முதலாது நீடிப்பின் பிறகு, 2021 பெப்புருவரியில் பரஸ்பர பரிமாற்றல் வசதி தீர்க்கப்பட்டது. 2022 சனவரியில், இலங்கை மத்திய வங்கி இரண்டாவது எடுப்பனவாக ஐ.அ.டொலர் 400 மில்லியன் நாணய பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தத்தின் மூலம் பெறப்பட்டது. இது 2022 ஏப்பிறலில் அதன் முதலாவு நீடிப்பின் பிறகு தீர்ப்பனவு செய்ய வேண்டியுள்ளது.

23. ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
ஆ.தீ.ஒ பொறுப்புக்கள்	**731,375,677**	104,755,558
அட்டுறு வடடிகள்	**4,882,452**	9,058
	736,258,129	104,764,616

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியமானது, 1974ஆம் ஆண்டில் பங்குபற்றும் நாடுகளின் மத்திய வங்கிகளுக்கிடையே பிராந்தியங்களுக்கிடையிலான கொடுப்பனவுகளை பல்தரப்பு அடிப்படையில் தீர்த்து வைப்பதற்கான முறைமையொன்றாக, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக அலுவல்கள் ஆணைக்குழுவின் முன்னெடுப்புடன் நிறுவப்பட்டது. இலங்கை, பங்களாதேசம், ஈரான், நேபாளம், பாகிஸ்தான், இந்தியா, பூட்டான், மியன்மார் மற்றும் மாலைதீவு ஆகியன ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தில் பங்குபற்றும் நாடுகளாகும். ஒவ்வொரு ஆசியத்தீர்ப்பனவு ஒன்றிய பங்குபற்றுனரின் தேறிய தீர்ப்பனவு நிலையானது, இரண்டு மாத காலப்பகுதியில் வைத்திருக்கப்பட்ட நாளாந்த வெளிநின்ற தொகையின் அடிப்படையில் கணிப்பிடப்படுவதுடன் தீர்ப்பனவானது அடுத்துவரும் மாதத்தில் நான்கு வேலை நாட்களுக்குள் இடம்பெறும். 2022 காலப்பகுதியில் வட்டி வீதமானது 0.10 சதவீதத்திற்கும் 4.09 சதவீதத்திற்குமிடையில் இருந்தது. (2021 - 0.09 சதவீதம் மற்றும் 0.15 சதவீதம்).

24. பன்னாட்டு நாணய நிதியம்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
வட்டியுடனான கடன்கள் (குறிப்பு 24.1)	**385,639,212**	253,476,993
சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு (குறிப்பு 24.2)	**459,264,653**	266,944,782
அனுமதிப் பங்குப் பொறுப்பு (குறிப்பு 24.3)	**129,765,698**	75,425,522
ப.நா. நிதியத்துக்குச் செலுத்த வேண்டிய ஏனைய தொகை (குறிப்பு 24.4)	**153,255,529**	74,217,946
	1,127,925,092	670,065,243

24.1 வட்டியுடனான கடன்கள், ப.நா.நிதியத்திடமிருந்து பெறப்பட்ட நீடிக்கப்பட்ட நிதிய வசதி (நீ.நி.வசதி) ஒழுங்குகளை உள்ளடக்கியுள்ளது. நீடிக்கப்பட்ட நிதிய வசதி (நீ.நி.வசதி) என்பது சென்மதி நிலுவை மற்றும் அரசினுடைய பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சிநிரல் என்பனவற்றுக்கு உதவுவதற்காக ப.நா. நிதியத்தால் வழங்கப்பட்ட மூன்று வருடகால வசதியாகும். ப.நா. நிதியம் சிஎஉ 1.10 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.50 பில்லியன்) பெறுமதி கொண்ட நீ.நி வசதிக்கு 2016 யூனில் ஒப்புதலளித்தது. இத்தொகையானது நாட்டின் தற்போதைய ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கின் 185 சதவீதத்திற்குச் சமனானதாகும். நீ.நி. வசதியின் கீழ் முதற்கட்ட தொகுதிக் கொடுப்பனவு சிஎஉ 119.89 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 168.10 மில்லியன்) 2016 யூனில் கிடைக்கப்பெற்றது. இரண்டாவது தொகுதிக் கொடுப்பனவு பெறுமதியான சிஎஉ 119.89 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 162.56 மில்லியன்), மூன்றாவது தொகுதிக் கொடுப்பனவு பெறுமதியான சிஎஉ 119.89 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் (167.20 மில்லியன்), நான்காவது தொகுதிக் கொடுப்பனவு பெறுமதியான சிஎஉ 177.77 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 251.40 மில்லியன்), ஐந்தாவது தொகுதி கொடுப்பனவுப் பெறுமதியான சிஎஉ 177.77 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 252.00 மில்லியன்), ஆறாவது தொகுதிக் கொடுப்பனவுப் பெறுமதியான சிஎஉ 118.50 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 164.10 மில்லியன்) மற்றும் ஏழாவது தொகுதிக் கொடுப்பனவுப் பெறுமதியான சிஎஉ 118.50 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 164.00 மில்லியன்) என்பன முறையே 2016 நவெம்பர், 2017 யூலை, 2017 திசெம்பர், 2018 யூன், 2019 மே மற்றும் 2019 நவெம்பரில் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஏழாவது தொகுதிக் கொடுப்பனவுடன் நீடிக்கப்பட்ட நிதிய வசதியின் பேரில் இலங்கை இதுவரை மொத்தமாக ஐ.அ.டொலர் 1.31 பில்லியனை பெற்றிருக்கின்றது. நீ.நி.வ மீது பிரயோகிக்கத்தக்க வட்டிவீதமானது சிஎஉ வட்டி வீதத்திற்குச் சமனான (தற்பொழுது ஆண்டிற்கு 0.05 சதவீதத்தில் இருக்கிறது) அடிப்படை கட்டணவீதத்துடன் 100 அடிப்படைப் புள்ளிகளை கூட்டிய வீதத்தை உள்ளடக்கியிருக்கும்.

	பயனுறுதி வட்டி வீதம் %	முதிர்ச்சி	2022 ரூ. 000	2021 ரூ. 000
நீடிக்கப்பட்ட நிதிய வசதி	0.077	2029	**385,639,212**	253,476,993
வட்டி உழைக்கும் மொத்தக் கடன்கள்			**385,639,212**	253,476,993

24.2 சிறப்பு எடுப்பனவு உரிமை (சிஎஉ) என்பது கைவசமுள்ள ஒதுக்குச் சொத்துக்களுக்கு குறைநிரப்பாக நீண்டகால உலகத் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ப.நா. நிதியத்தால் நிறுவப்பட்டுள்ள ஒதுக்குச் சொத்தாகும். அங்கத்துவ நாடுகளுக்கு அவற்றின் ப.நா.நி. அனுமதிப் பங்கின் பிரகாரம் சிஎஉ ஒதுக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தின் சிஎஉ திணைக்களத்தில் (ப.நா. நிதியத்தினுள் அமைந்துள்ள கணக்குப் பிரிவு) பங்குபற்றுகின்ற நாடுகளுக்கு மாத்திரம் சிஎஉ ஒதுக்கலாம். ப.நா. நிதியத்திற்கு உரித்தாயுள்ள தங்கம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஒதுக்குகளின் நிலைமைகளுக்குக் குறைநிரப்பாக ப.நா. நிதியத்தால் சிஎஉ உருவாக்கப்பட்டது. வங்கியினால் இலங்கை அரசு சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில நிபந்தனைகளின் பிரகாரம் ப.நா. நிதியத்தால் அங்கத்தவர்களுக்கு அவர்களுடைய அனுமதிப் பங்குத் தொகைக்கேற்ப சிஎஉ ஒதுக்கப்படலாம். ப.நா. நிதியத்தால் சிஎஉ ஒதுக்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் கிரயச் செலவற்ற சொத்தொன்று உருவாவதுடன், அதற்காக வட்டி உழைக்கப்படுவதோ அல்லது செலுத்தப்படுவதோ கிடையாது. சிஎஉ ஐ இரத்துச் செய்வதற்குக் கூட உடன்படிக்கையின் நிபந்தனைகள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் இற்றைவரை இவ்வேற்பாடுகள் செயற்படுத்தப்படவில்லை. சிஎஉ ஒதுக்குதல்கள் அதிகரிக்கப்படுவதன் மூலம் 11ஆவது குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு சிஎஉ வைத்திருத்தல் அதிகரிக்கிறது. அதன் தேறிய ஒதுக்குதலுக்குச் சமமான தொகையையும் அது சிஎஉ திணைக்களத்தின் தொழிற்பாடுகளில் பங்குபற்றியதன் காரணமாக ப.நா. நிதியம் சிஎஉ திணைக்களத்தை முடிவுறுத்துகின்ற அல்லது ஒழிக்கின்ற போது செலுத்த வேண்டியதாயுள்ள ஏனைய ஏதேனும் தொகைகள் இருப்பின் அவற்றையும் ப.நா. நிதியத்திற்குச் செலுத்துவதற்கு அங்கத்தவர்கள் கடப்பாடுடையவர்களாயிருப்பர்.

24.3 அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள்: 11.1ஆம் இலக்கக் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளவாறான ப.நா. நிதிய அனுமதிப் பங்கிற்காகச் செலுத்தப்பட்ட தொகை அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

24.4 ப.நா. நிதியத்திற்குச் செலுத்தப்படத்தக்க ஏனைய தொகைகள்: தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகக் கொடுக்கல்வாங்கல்கள் சார்பாக வங்கியானது ப.நா. நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகைகள் இதன் மூலம் காட்டப்படுகிறது.

25. ஏனையவை

	2022 ரூ. 000	2021 ரூ. 000
திறைசேரி துணைச் செயலாளர் - எஸ்குரொ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III **(குறிப்பு 25.1)**	**179**	99
திறைசேரி துணைச் செயலாளர் - எஸ்குரொ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III - கட்டம் II **(குறிப்பு 25.2)**	**30,071**	16,599
திறைசேரி துணைச் செயலாளர் - சிறப்பு டொலர் கணக்கு 2 **(குறிப்பு 25.3)**	**991,218**	1,484,824
பரஸ்பர பரிமாற்றல் வசதியின் கீழ் வங்காளதேச வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகை **(குறிப்பு 25.4)**	**73,060,873**	40,161,167
பரஸ்பர பரிமாற்றல் வசதியின் கீழ் சீன மக்கள் வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகை **(குறிப்பு 25.5)**	**520,231,000**	315,452,000
ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள்	**70,110**	180,987
	594,383,451	357,295,676

25.1 எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III

இவ்வசதி உடன்படிக்கையானது சீன அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் 2014 மார்ச்சு 11ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 300 மில்லியனுக்காக கையெழுத்தானது. இக்கடனின் நோக்கம் யாதெனில் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III - கட்டம் I இன் மேம்பாட்டிற்கும் புனரமைப்பு வேலைகளுக்கும் ஏற்படும் செலவிற்கு நிதியிடுவதேயாகும். வசதி உடன்படிக்கையின்படி, வங்கியானது இலங்கை அரசாங்கத்திற்கான வங்கியாளராக நியமிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, கடன் தொகையினை வைப்புச் செய்வதற்கும் அவ்வாறு பெறப்பட்ட பணத்தினை வீதி அபிவிருத்திக்கு பகிர்ந்தளிப்பதற்குமான ஒரே நோக்கத்திற்காக அதன் பேரேட்டில் கணக்கொன்று திறக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டுகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 19.13 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2020 ஆண்டு காலப்பகுதியில் இந்நிதியினைப் பயன்படுத்தி பல பகிர்ந்தளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதனால், 2020 திசெம்பர் 31 இலுள்ளவாறு இதன் நிலுவை ஐ.அ.டொலர் 0.0004 மில்லியனாக மட்டுமே காணப்பட்டது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களும் இடம்பெறவில்லை என்பதுடன் மீதி 2022 திசெம்பர் 31 அன்று ஐ.அ.டொலர் 0.0004 ஆகத் தொடர்ந்தும் காணப்பட்டது.

25.2 எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III கட்டம் II

இவ்வுடன்படிக்கையின் கட்டம் II 2014 நவெம்பர் 24ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 100 மில்லியனுக்காகப் பெறப்பட்டது. 2019ஆம் ஆண்டுகாலப்பகுதியில்,ஐ.அ.டொலர் 20.24 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 13.83 மில்லியன் பெறுமதியான பகிர்ந்தளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. 2021ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் ஏதேனும் பகிர்ந்தளிப்புக்கள் மேற்கொள்ளப்படாமையினால் 2022 திசெம்பர் 31 இலுள்ளவாறான இதன் நிலுவை ஐ.அ.டொலர் 0.082 மில்லியனாகக் காணப்பட்டது.

25.3 திறைசேரி துணைச் செயலாளர் சிறப்பு டொலர் கணக்கு 2

இது திறைசேரியின் சார்பில் ஐ.அ.டொலரில் பெறப்படும் தொகையை வரவு வைக்கும் பொருட்டு திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் சார்பில் பேணப்படும் டொலர் கணக்காகும். 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், இலங்கை அபிவிருத்தி முறிகளின் பெறுகைகள் மற்றும் சீன டெவலப்மன்ட பாங்க் வழங்கிய வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதி என்பன அரசாங்கத்திற்கெதிரான கடன்களின் மீளச்செலுத்துதலுக்காக வரவு வைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை ஐ.அ.டொலர் 2.73 பில்லியனாகும்.

25.4 வங்காளதேச வங்கிக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட இருபுடை நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையின் கீழ் வங்காளதேச வங்கிக்கு செலுத்தவேண்டிய தொகை

இலங்கை மத்திய வங்கியும் வங்காளதேச வங்கியும் 2021 ஓகத்து 03 அன்று இருபுடை நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையை கைச்சாத்திட்டது. இப்பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையின் கீழ், ஆரம்பத்தில் அதையொத்த காலப்பகுதிக்கு இரு தடவைகள் நீடித்தல் என்ற சாத்தியப்பாட்டுடன் மூன்று மாத காலப்பகுதிக்கு இலங்கை ரூபாவுக்கு சமமான தொகையொன்றின் பரிமாற்றலில் ஐ.அ.டொலர் 200 மில்லியன் மூன்று தொகுதிகளாக 2021 ஓகத்து மற்றும் 2021 செத்தெம்பர் மாத காலப்பகுதியில் பெறப்பட்டது. இதற்கமைய, இருபுடை நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையை கைச்சாத்திடுகின்ற வேளை ஒப்புதல் வழங்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் இரு மத்திய வங்கிகளின் பரஸ்பர சம்மதத்துடன் 2021 நவெம்பர் மற்றும்

2021 திசெம்பர் காலத்தில் முதலாவதாக நீடிக்கப்பட்டது. வரைவுகளுக்கும் எடுப்பனவுகளுக்கும் பிரயோகிக்கத்தக்க வட்டி வீதங்களானது ஒவ்வொரு வரைவு/ எடுப்பனவு அத்துடன் 200 அடிப்படைப்புள்ளிகளின் திகதியன்று நிலவுகின்ற 6 மாத ஐ.அ.டொலர் இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்தில் காணப்படுகின்றன.

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநின்ற நிலுவை 2021 நவெம்பர் மற்றும் திசெம்பரில் புதுப்பிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 200 மில்லியனையும் 2022 பெப்புருவரி மற்றும் மாச்சில் மேற்கொள்ள வேண்டிய இரண்டாவது புதுப்பித்தலையும் இரண்டு மத்திய வங்கிகளினதும் பரஸ்பர இணக்கப்பாட்டிற்குட்பட்டு பிரசன்னப்படுத்துகிறது.

25.5 சீன மக்கள் வங்கிக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட இருபுடை நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையின் கீழ் சீன மக்கள் வங்கிக்குச் செலுத்தவேண்டிய தொகை

இலங்கை மத்திய வங்கியும் சீன மக்கள் வங்கியும் 2021 மாச்சு 19 அன்று இருபுடை நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையை கைச்சாத்திட்டது. இவ்வுடன்படிக்கையின் கீழ், சீன மக்கள் வங்கியிடமிருந்து ரென்மென்பி 10 பில்லியன் தொகை (ஐ.அ.டொலர் 1.5 பில்லியனுக்குச் சமமான) 2021 திசம்பரில் பெறப்பட்டது. இது, ஒரு ஆண்டுக் காலப்பகுதிக்காக இலங்கை ரூபாவிற்கு சமமான தொகையொன்றின் பரிமாற்றலில் மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாட்டிற்காக (குறிப்பு 8.1) பயன்படுத்தப்படும்.

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநின்ற நிலுவையானது ஒரு ஆண்டுக் காலப்பகுதிக்காக 2021 திசெம்பரில் நீடிக்கப்பட்ட ரென்மென்பி (CNY) 10 பில்லியன் பரஸ்பர பரிமாற்றல் தொகையை பிரதிபலிப்பதுடன் சீன மக்கள் வங்கிக்கும் இலங்கை மத்திய வங்கியின் வங்கிகளின் பரஸ்பர சம்மதத்திற்குட்பட்டு இரண்டாவது நீடிப்பானது 2023 திசெம்பரிலிருந்து 2024 மாச்சு வரை இடம்பெறும்.

26. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்

இவை நாணய விதிச் சட்டத்தின் 93ஆம் பிரிவின் கீழ் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் பேணப்படும் வைப்புக்களாக இருப்பதுடன் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள், ஊழியர் சேம நிதியம் மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் பங்கேற்பாளர்கள் ஆகியோரினால் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வங்கிகளினால் தொழிற்படுத்தப்படும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கீழான கொடுப்பனவுகளை கௌரவிப்பதற்காக பேணப்படும் வைப்புக்களாகவும் காணப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், அரசாங்கத்தினால் முழுமையாக பிணையிடப்பட்ட வட்டியற்ற ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி, தீர்ப்பனவு முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டிற்கு வசதியளிப்பதற்காக ஒரு நாளுக்குள்ளேயான கொடுப்பனவுக் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக பங்கேற்பாளர்களுக்குக் கிடைக்கச் செய்யப்படுகிறது. இவ்வைப்புக்கள் கணக்கீட்டு வெளிப்படுத்துகைத் தேவைப்பாட்டு நோக்கங்களுக்காக தொடர்பான தரப்பினர் (அதாவது அரசிற்குச் சொந்தமான வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் ஏனையவை) என வகைப்படுததப்பட்டிருப்பினும், இவ்வைப்புக்கள் தொடர்பான நியதிச்சட்ட ஏற்பாடுகளின் நியதிகளில் பேணப்பட்டு வருகின்றதேயன்றி அவ்வரச நிறுவனங்களுடனான வங்கியின் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொடர்புகளுக்காகவல்ல.

	2022 ரூ. 000	2021 ரூ. 000
வங்கிகளினால் செய்யப்பட்ட வைப்புக்கள்		
- தொடர்பான தரப்பினர்கள்	**240,719,873**	221,738,927
- ஏனையவை	**70,817,929**	67,657,247
	311,537,802	289,396,174
நிதியியல் நிறுவனங்களால் செய்யப்பட்ட வைப்புக்கள்		
- தொடர்பான தரப்பினர்கள்	**216**	21
- ஏனையவை	**11,508,163**	11,307,967
	11,508,379	11,307,988
வங்கிகளினாலும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினாலும் செய்யப்பட்ட மொத்த வைப்புக்கள்	**323,046,181**	**300,704,162**

27. அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்

	2022 ரூ. 000	2020 ரூ. 000
அரச வைப்புக்கள்	**160,513**	160,511
அரச முகவராண்மைகளும் நிதியங்களும்	**60,898**	1,231,790
	221,411	1,392,301

வங்கி, அரச மற்றும்/ அல்லது அரச முகவராண்மைகளின் அல்லது நிறுவனங்களின் வைப்புக்களுக்கான அலுவல்சார் வைப்பாளராக இருப்பதனால் நாணய விதிச் சட்டத்தின் 106 (1)ஆம் பிரிவின் நியதிகளில் இவ்வைப்புக்கள் பேணப்படுகின்றன.

28. மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
துணைநில் வைப்பு வசதிகள்	**330,637,059**	101,062,880
	330,637,059	101,062,880

நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலின் ஒரு பகுதியாக, நாணய விதிச் சட்டத்தின் பிரிவுகள் 90 மற்றும் 91இன் கீழ் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை, பணச்சந்தையின் திரவத்தன்மையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு திறந்த சந்தை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. இம்மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை காலத்திற்குக் காலம் வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற திரவத்தன்மை முகாமைத்துவக் கொள்கைக்கு அமைவாக ஓரிரவு அல்லது தவணை முறையில் அரச பிணையங்களில் மாத்திரம் ஈடுபடுத்தப்படுகின்றன.

துணைநில் வைப்பு வசதியும் பணச் சந்தையில் திரவத்தன்மையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு திறந்த சந்தை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றது. இந்த வசதியானது நாளாந்த மீள்கொள்வனவு ஏலங்களில் தமது திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை பெற்றுக்கொள்ள முடியாத பங்கேற்கும் நிறுவனங்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ளது. இது, பிணையில்லாத வசதியாக இருப்பதுடன் ஓரிரவு அடிப்படையில் மட்டுமே வழங்கப்படுகின்றது.

29. சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கையின் நாணயத்தை வெளியிடும் தனி அதிகாரம் வாய்ந்த நிறுவனமென்ற ரீதியில் மத்திய வங்கியானது தொடர்ச்சியாக சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் நாணயத்தை வெளியிடுகின்றது. வங்கியினால்

வெளியிடப்பட்டு குறிப்பிட்ட அறிக்கையிடல் திகதிகளில் சுற்றோட்டத்தில் உள்ளவாறான நாணயப் பெறுமதிகள் பின்வருமாறு:

பெறுமதி குத்திகள்:	2022 ரூ. 000	2021 ரூ. 000
சதம் 1	**3,631**	3,631
சதம் 2	**5,709**	5,709
சதம் 5	**23,267**	23,267
சதம் 10	**39,236**	39,236
சதம் 25	**122,475**	121,246
சதம் 50	**185,097**	185,147
ரூபா 1	**1,054,291**	1,023,087
ரூபா 2	**1,633,948**	1,587,838
ரூபா 5	**5,373,467**	5,168,455
ரூபா 10	**8,278,530**	7,673,980
ரூபா 20	**149,777**	40,955
ஞாபகார்த்த நாணயக் குத்திகள்	**604,099**	598,953
	17,473,527	**16,471,504**
தாள்கள்:		
ரூபா 1	**4,981**	4,981
ரூபா 2	**26,694**	26,694
ரூபா 5	**37,191**	37,191
ரூபா 10	**1,247,314**	1,249,128
ரூபா 20	**7,714,028**	7,235,137
ரூபா 50	**7,672,840**	7,086,604
ரூபா 100	**27,890,398**	27,472,139
ரூபா 200	**126,206**	126,412
ரூபா 500	**52,838,832**	52,284,157
ரூபா 1000	**154,427,683**	160,770,610
ரூபா 2000	**2,709,640**	2,950,509
ரூபா 5000	**754,397,918**	729,384,000
	1,009,093,725	988,627,562
சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயங்கள்	**1,026,567,252**	1,005,099,066

30. ஏனைய செலுத்தத்தக்கவை

	2022 ரூ. 000	2021 ரூ. 000
ஏற்பாடுகளும் கட்டணங்களும்	**7,910,908**	3,791,015
வர்த்தக வங்கிகளுக்கு கொடுபடத்தக்கவை	**-**	431,145
கைவிடப்பட்ட சொத்துக்களுக்கெதிராகப் பெறப்பட்ட பொறுப்புக்களின் மாற்றல்கள் **(குறிப்பு 30.1)**	**15,415,255**	11,592,360
விஸ்கம் திட்டத்தின் கீழ் பங்களிப்புச் செய்கின்ற வங்கிகளுக்கு கொடுபடத்தக்கவை	**-**	1,683,468
ஊழியர் நன்மைத் திட்டங்களின் நிலுவைகள் **(குறிப்பு 30.2)**	**12,361**	8,701
ஏனைய செலுத்தத்தக்கவை **(குறிப்பு 30.3)**	**44,981,823**	1,657,193
	68,320,347	19,163,882

30.1 கைவிடப்பட்ட ஆதனங்கள் தொடர்பான செலுத்தத்தக்கவை 2009ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட ஆதனங்களை அடையாளம் காணல், அறிக்கையிடல், மாற்றல் செய்தல் மற்றும் பேணுதல் தொடர்பான வழிகாட்டலின் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட கைவிடப்பட்ட ஆதனங்கள் தொடர்பானவையாக இருந்தன. கைவிடப்பட்ட சொத்துக்கள் மீது ஏதேனும் மேலதிகக் கோரல்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் வங்கிகள் அவ்வாறு சேகரிக்கப்பட்ட வைப்புக்களை வட்டியுடன் செலுத்துவதற்குப் பொறுப்புடையனவாகும். எனவே, சேகரிக்கப்பட்ட மொத்த வைப்புக்கள் நிறையேற்றப்பட்ட சராசரி திறைசேரி உண்டியல் வீதங்களில் கணிக்கப்பட்ட வட்டி வீதத்துடன் சேர்த்து வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

30.2 ஊழியர் நன்மைத் திட்டங்களிலுள்ள நிலுவைகள்

வங்கியானது பொதுவான அலுவல்களின் ஒரு பகுதியாக அதன் ஊழியர் நன்மைத் திட்டங்களிற்கு நடைமுறைக் கணக்கு வசதிகளினை வழங்குகின்றது. தனியாக நிருவகிக்கப்படுகின்ற வங்கியின் ஊழியர் நன்மைத் திட்டங்களின் நடைமுறைக் கணக்கு மற்றும் உள்ளக நிறுவகக் கணக்குகளில் வரவாக இருக்கும் தொகைகள் பின்வருமாறு:

	2022 ரூ. 000	2021 ரூ. 000
இ.ம.வ சேம நிதியம், ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் விதவைகள்/ விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் என்பவற்றின் நிலுவைகள்	**12,361**	8,701
	12,361	8,701

30.3 ஏனைய பெறத்தக்கவைகளில் ரூ.37.02 பில்லியன் பிரதிநிதித்துவப்படுத்துவது உள்நாட்டு வங்கிகளின் முதிர்ச்சித் திகதிகளுக்குப் பின்னர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான ஐ.அ.டொலர்/ ரூபா கொள்வனவு - விற்பனை பரிமாற்றங்கள் தொடர்பாக இ.ம.வ பெறவேண்டிய ஐ.அ.டொலரினைக் குறிக்கின்றது. இது, தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபாய் பெறுமதியான ரூ.35.67 பில்லியன் ஏனைய செலுத்தத்தக்கவைகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

31. பிற்போடப்பட்ட கொடைகள்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
சனவரி 1 இல் உள்ளவாறு	**1,178**	789
ஆண்டு காலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை	**1,288**	3,089
இவ்வாண்டு காலப்பகுதியிலான பதிவழிப்புக்கள்	**(632)**	(2,700)
திசெம்பர் 31இல் உள்ளவாறு	**1,834**	1,178

பிற்போடப்பட்ட கொடைகள் அத்தகைய சொத்துக்களின் தேய்மானக் கொள்கையுடன் பொருந்தத்தக்க விதத்தில் இக்காலப்பகுதியில் பதிவழிப்புச் செய்யப்பட்டன. இது, எவ்வித விலையுமில்லாது வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களை உள்ளடக்குகின்றது. சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதி பிற்போடப்பட்ட கொடைக் கணக்கொன்றில் வரவு வைக்கப்படுவதுடன், தொடர்பான சொத்துக்களின் தேய்மானக் கொள்கைகளின்படி அச்சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் ஏனைய வருமானமாகக் கொள்ளப்படுகிறது.

எஸ்.ஏ.பி.பி கடன் திட்டங்களுக்கான புதிய தன்னியக்க அமைப்பைச் செயற்படுத்துவதற்கான மென்பொருள் மேம்பாட்டுச் செலவின் 70 சதவீதத்தினை மானியமாக எஸ்.ஏ.பி.பி முகாமைத்துவப் பிரிவிலிருந்து இலங்கை மத்திய வங்கியினால் பெற்றுக்கொண்ட தொகையும் இதில் அடங்கும். இது பாங்க் ஒவ் கொரியாவின் அறிவு பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்திடமிருந்து பெறப்பட்ட ரூ.1.45 மில்லியன் (2020 மற்றும் 2021இல் பெறப்பட்டது) பெறுமதியான இரு ஆராய்ச்சிக் கொடையையும் உள்ளடக்குகின்றது. இது இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் செலவை ஈடுசெய்யப் பயன்படுத்தப்படுவதுடன் நிலைபெறத்தக்க நிதியியல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்ட ரூ.2.32 மில்லியன் தொகை கொண்ட ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் பயன்படுத்தப்படும்.

32. ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைத் திட்டங்களும்

அனைத்து தகுதியான ஊழியர்களும் உள்ளடங்கக் கூடியவாறான குறித்துரைக்கப்பட்ட ஏழு நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் வங்கியினால் தொழிற்படுத்தப்படுகின்றன. ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் (பழையது) கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு முன்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 ஆண்டு பணிக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். புதிய ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு பின்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 ஆண்டு பணிக்காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். ஊழியர் ஓய்வூதியத் திட்டங்களானது பங்களிப்பில்லாத ஓய்வூதியத் திட்டமாக இருப்பதுடன் இதன் நன்மைகளின் கிரயத்தை முழுமையாகவே வங்கி ஏற்கின்றது. ஆண் ஊழியர்களுக்கான விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் பெண் ஊழியர்களுக்கான விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் 1998 சனவரி 01ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் பணிக்குச் சேர்ந்த ஊழியர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள அதேவேளை, புதிய விதவைகள் மற்றும் அநாதைகள் மற்றும் விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் 1998 சனவரி 01 இற்குப் பின்னர் வங்கியில் பணிக்குச் சேர்ந்த ஊழியர்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ளது. விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் (பழையது), விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் (பழையது) இன் கீழ் தகுதி பெற்ற 1994 ஓகத்து 01இற்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதத் தொகையொன்றைப் பங்களிப்புச் செய்வதுடன் 1994 ஓகத்து 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்தினைப் பங்களிப்புச் செய்வதுடன் புதிய விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தகுதிபெற்ற ஊழியர்கள் தங்களின் மாதாந்த அடிப்படை சம்பளத்தில் 5.5 சதவீதத்தினைப் பங்களிப்புச் செய்கின்றனர்.

வங்கியில் ஐந்து ஆண்டு கால பணியைப் பூர்த்தி செய்தவர்களான, ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறத் தகுதிபெறாத ஊழியர்களுக்காக பணிக்கொடை நன்மைகளை வங்கி வழங்குகின்றது. இப்பொறுப்புப்பைப் பூர்த்தி செய்வதற்காக, ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்ட பொறுப்பிற்குச் சமமானதொரு தொகை ஏற்பாடாக நிதியியல் நிலைமைக் கூற்றில் முன்கொண்டு செல்லப்படுகின்றது.

வங்கித்தொழிலுக்குப பின்னரான மருந்து நன்மைத் திட்டத்தினைக் கொண்டிருப்பதுடன் இதன் கீழ், ஓய்வுபெற்ற ஊழியர்களால் அவர்கள் பெயரில் அல்லது அவர்களது துணைவர் பெயரில், அவர்களது பெற்றோர் பெயரில் மற்றும் ஊழியர்களது விதவைகள்/விதுரர்களாலும் ஏற்கப்படுகின்ற ஒரு சில மருத்துவச் செலவுகள் மீளளிக்கப்படுகின்றன.

ஊழியர் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், புதிய விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், பணிக் கொடைகள் திட்டம் மற்றும் மருத்துவ நனமைத் திட்டம் என்பனவற்றின் குறித்துரைக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நடைமுறைப் பணிச் செலவுகள் தொடர்பில் மீள்மதிப்பீட்டைச் செய்வதற்காக சுயாதீனமான காப்புறுதி மதிப்பீட்டாளரான கே.ஏ.பன்டிற், ஆலோசகர் மற்றும் காப்புறுதி மதிப்பீட்டாளர் (மும்பாய்) ஆண்டுக் காலத்தில் பணியின் பொருட்டு வங்கியினால் அமர்த்தப்பட்டார்.

ஊழியர் ஓய்வூதியத் திட்டங்கள், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் மற்றும் விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் என்பனவற்றின் நிதியங்கள் தனித்தனியாக முகாமைப்படுத்தப்படுவதுடன் தனித்தனியாக ஏடுகளும் பேணப்படுகின்றன. எனினும், பணிக்கொடைத் திட்டமும் மருத்துவ நன்மைகள் திட்டமும் வங்கியின் கணக்கேடுகளிலிருந்து வேறாக்கப்படவில்லை. மேலும் முதலீடுகளும் முதலீட்டு வருமானமும் வங்கி ஏடுகளில் இந்நிதியத்திற்காக தனித்தனியாக பதிவு செய்யப்படுகின்றதுடன், முதலீடுகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்படுவதுடன் பங்கிடப்படாமல் மீளமுதலிடப்படுகின்றன.

அறிக்கையிடும் காலப்பகுதியில் அனைத்து நன்மைக் கடப்பாடுகளினது தற்போதைய பெறுமதியான ரூ.40,853.23 மில்லியன் (2021 - ரூ.66,279.21 மில்லியன்) திட்டச் சொத்துக்களின் மொத்தச் சீர்மதிப்புப் பெறுமதியான ரூ.43,838.73 மில்லியனை (2021 - ரூ.53,334.41 மில்லியன்) விட விஞ்சிக் காணப்பட்டதுடன் ரூ.2,985.49 மில்லியனாகக் 2021 ரூ.12,944.80 மில்லியன் பற்றாக்குறை) காணப்பட்டது

2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு

நன்மை (சொத்துக்கள்)/ பொறுப்புக்கள்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய	விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய	பணிக் கொடைத் திட்டம்	மருத்துவ நன்மை திட்டம்	மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி	**28,743,485**	**742,361**	**6,594,557**	**769,222**	**256,344**	**316,311**	**3,430,954**	**40,853,234**
திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி	**(27,133,747)**	**(4,890,127)**	**(5,575,619)**	**(2,151,516)**	**(1,101,040)**	**(210,570)**	**(2,776,110)**	**(43,838,729)**
தேறிய நன்மைப் பொறுப்பு/ (சொத்து)	**1,609,738**	**(4,147,766)**	**1,018,938**	**(1,382,294)**	**(844,696)**	**105,741**	**654,844**	**(2,985,495)**

நிதியியல் நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள ஓய்வூதியமும் தொழிலுக்குப் பின்னரான ஏனைய நன்மைத் திட்டங்களின் மீதியானது, பின்வரும் காரணங்களின் காரணமாக மதிப்பீட்டாளரின்படியான தேறிய பொறுப்புக்களிலிருந்து வேறுபடுகின்றது:

அ) விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் எஞ்சிய மீதியை வங்கிக்குப் பகிர்ந்தளிப்பதற்கான சாத்தியம் குறைவாக இருப்பதன் காரணமாக இந்நிதியத்தின் தேறிய சொத்து நிலைமை கணக்குகளில் பிரதிபலிக்கப்படவில்லை.

ஆ) வங்கியானது வெவ்வேறான நிதியத்தில் (உள்ளக ரீதியாகப் பேணப்பட்ட) தொடர்பான சொத்துக்களை வைத்திருக்காததன் காரணமாக பணிக்கொடை மற்றும் மருத்துவ நன்மைத் திட்டம் இரண்டிற்கும் நிதியியல் கூற்றுக்கள் மொத்தப் பொறுப்பு நிலைமையைக் காட்டுமேயன்றி, மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்பட்ட தேறிய பொறுப்புக்களைக் காட்டாது.

	2022 ரூ. 000	2021 ரூ. 000
ஊழியர் ஓய்வூதியத் திட்டம்	**1,609,738**	15,142,138
ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய	**(4,147,765)**	(3,589,011)
விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	**1,018,938**	2,649,217
விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய	**(455,747)**	(455,747)
பணிக்கொடைத் திட்டம் (மொத்தம்)	**316,311**	379,276
மருத்துவ நன்மைத் திட்டம் (மொத்தம்)	**3,430,954**	3,803,864
	1,772,429	17,929,737

நன்மைப் பொறுப்புக்கள் / (சொத்து) களிலான அசைவு	ஊழியர் ஓய்வூதியத் திட்டம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய	விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய	பணிக் கொடைத் திட்டம்	மருத்துவ நன்மை திட்டம்	மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
2022 சனவரி 01இல் உள்ளவாறு	15,142,138	(3,589,011)	2,649,217	(1,147,643)	(455,747)	53,957	291,888	**12,944,799**
தேறிய நன்மைச் செலவினம்/ (வருமானம்)	1,753,459	(336,011)	258,156	(146,789)	(175,238)	35,323	1,131,049	**2,519,949**
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை	(11,675,870)	342,225	(1,777,027)	(87,862)	(213,711)	16,461	(768,093)	**(14,163,877)**
செலுத்தப்பட்ட பங்களிப்பு	(3,609,989)	(564,969)	(111,408)	-	-	-	-	**(4,286,366)**
2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு	**1,609,738**	**(4,147,766)**	**1,018,938**	**(1,382,294)**	**(844,696)**	**105,741**	**654,844**	**(2,985,495)**

எறிவுசெய்யப்பட்ட நன்மைக் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதியிலான அசைவு	ஊழியர் ஓய்வூதியத் திட்டம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய	விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய	பணிக் கொடைத் திட்டம்	மருத்துவ நன்மை திட்டம்	மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
2022 சனவரி 01இல் உள்ளவாறு	47,559,244	2,047,071	10,151,236	1,537,384	801,139	379,275	3,803,864	**66,279,213**
வட்டிச் செலவு	5,507,360	237,051	1,175,513	178,029	92,772	43,920	440,487	**7,675,132**
தற்போதைய பணிச் செலவு	-	79,596	-	-	-	29,075	63,979	**172,650**
கடந்த பணிச் செலவு	-	-	-	-	-	-	1,040,563	**1,040,563**
நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட நன்மைகள்	(4,024,579)	(10,118)	(844,658)	(62,097)	(803)	(68,904)	(327,305)	**(5,338,464)**
கடப்பாடுகளின் மீதான ஆயுட்கால இலாபங்கள்	(20,298,540)	(1,611,239)	(3,887,534)	(884,094)	(636,764)	(67,055)	(1,590,634)	**(28,975,860)**
2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு	**28,743,485**	**742,361**	**6,594,557**	**769,222**	**256,344**	**316,311**	**3,430,954**	**40,853,234**

32. ஓய்வூதியமும் தொழிலுக்குப் பின்னரான ஏனைய நன்மைத் திட்டங்களும் (தொடர்ச்சி)

திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் சீர்மதிப்பு பெறுமதியிலான அசைவு	ஊழியர் ஓய்வூதியத் திட்டம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய	விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய	பணிக் கொடைத் திட்டம்	மருத்துவ நன்மை திட்டம்	மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
2022 சனவரி 01இல் உள்ளவாறு	32,417,106	5,636,082	7,502,019	2,685,027	1,256,886	325,318	3,511,976	**53,334,414**
வட்டி வருமானம்	3,753,901	652,658	868,734	310,926	145,547	37,672	406,687	**6,176,125**
தொழில்தருநரின் பங்களிப்புக்கள்	3,609,989	564,969	111,408	-	-	-	-	**4,286,366**
ஊழியர்களின் பங்களிப்புகள்	-	-	48,623	13,892	122,463	-	7,293	**192,271**
நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட நன்மைகள்	(4,024,579)	(10,118)	(844,658)	(62,097)	(803)	(68,904)	(327,305)	**(5,338,464)**
வட்டி வருமானம் தவிர்ந்த திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் வருமானம்	(8,622,670)	(1,953,464)	(2,110,507)	(796,232)	(423,053)	(83,516)	(822,541)	**(14,811,983)**
2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு	**27,133,747**	**4,890,127**	**5,575,619**	**2,151,516**	**1,101,040**	**210,570**	**2,776,110**	**43,838,729**

2022 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட செலவினங்கள்/ (வருமானம்)	ஊழியர் ஓய்வூதியத் திட்டம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய	விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய	பணிக் கொடைத் திட்டம்	மருத்துவ நன்மை திட்டம்	மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
காலப்பகுதிக்குரிய கடப்பாடுகளின் மீதான ஆயுட்கால (இலாபங்கள்)/ நட்டங்கள்								
நிதியியல் எடுகோள்களின் மாற்றத்தின் காரணமாக	(21,280,959)	(1,681,421)	(5,338,738)	(821,271)	(690,550)	(149,497)	(1,908,889)	**(31,871,325)**
அனுபவத்தின் காரணமாக	982,419	70,182	1,451,204	(62,823)	53,786	82,442	318,255	**2,895,465**
வட்டி வருமானம் தவிர்ந்த திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் வருமானம்	8,622,670	1,953,464	2,110,507	796,232	423,053	83,516	822,541	**14,811,983**
காலப்பகுதிக்குரிய ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தேறிய (வருமானம்) / செலவினம்	**(11,675,870)**	**342,225**	**(1,777,027)**	**(87,862)**	**(213,711)**	**16,461**	**(768,093)**	**(14,163,877)**

2022 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நன்மைச் செலவினம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய	விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய	பணிக் கொடைத் திட்டம்	மருத்துவ நன்மைத் திட்டம்	மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
நன்மைக் கடப்பாடுகளின் மீதான வட்டிச் செலவு	5,507,360	237,051	1,175,513	178,029	92,772	43,920	440,487	**7,675,132**
திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் மீதான வட்டி வருமானம்	(3,753,901)	(652,658)	(868,734)	(310,926)	(145,547)	(37,672)	(406,687)	**(6,176,125)**
திட்டச் சொத்துக்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வருவாய்	-	-	-	-	-	-	-	**-**
	-	-	-	-	-	-	-	**-**
	-	-	-		-	-	-	**-**
நடைமுறைப் பணிச் செலவு	-	79,596	-	-	-	29,075	63,979	**172,650**
கடந்த பணிச் செலவு	-	-	-	-	-	-	1,040,563	**1,040,563**
ஊழியர்களின் பங்களிப்புக்கள்	-	-	(48,623)	(13,892)	(122,463)	-	(7,293)	**(192,271)**
நன்மைச் செலவினம்/ (வருமானம்)	**1,753,459**	**(336,011)**	**258,156**	**(146,789)**	**(175,238)**	**35,323**	**1,131,049**	**2,519,949**

32. ஓய்வூதியமும் தொழிலுக்குப் பின்னரான ஏனைய நன்மைத் திட்டங்களும் (தொடர்ச்சி)

திட்டச் சொத்துக்களின் உள்ளடக்கம்/ முதலீடுகள்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய	விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய	பணிக் கொடைத் திட்டம்	மருத்துவ நன்மைத் திட்டம்	மொத்தம்
	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000
அரச பிணையங்களிலான முதலீடுகள்	25,156,360	4,598,490	5,063,782	1,955,169	1,072,593	196,145	2,658,415	**40,700,954**
நேர்மாற்று மீள்கொள்வனவுகளிலான முதலீடுகள்	112,927	42,808	33,002	2,015	9,225	9,252	43,525	**252,754**
தொகுதிக்கடன்களிலான முதலீடுகள்	817,628	222,411	342,261	58,157	17,361	5,173	74,170	**1,537,161**
நிலையான வைப்புக்களிலான முதலீடுகள்	1,043,051	24,187	134,333	134,847	968	-	-	**1,337,386**
நடைமுறைக் கணக்கில் எஞ்சியிருக்கும் நிலுவைகள்	3,781	2,231	2,241	1,328	893	-	-	**10,474**
2022 திசெம்பர் 31இல் உள்ளவாறான மொத்த திட்டச் சொத்துக்கள்/ முதலீடுகள்	**27,133,747**	**4,890,127**	**5,575,619**	**2,151,516**	**1,101,040**	**210,570**	**2,776,110**	**43,838,729**

2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு

நன்மைப் பொறுப்பு/ (சொத்து) இலான அசைவு	ஊழியர் ஓய்வூதியத் திட்டம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய	விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய	பணிக் கொடைத் திட்டம்	மருத்துவ நன்மைத் திட்டம்	மொத்தம்
	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000
2021 சனவரி 01இல் உள்ளவாறு	16,989,329	(2,464,375)	4,660,286	(895,516)	825,451	18,494	2,145,748	21,279,417
தேறிய நன்மைகளுக்கான செலவினம்/(வருமானம்)	1,444,093	(53,181)	364,126	(86,665)	5,855	31,478	262,381	1,968,087
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை	2,157,568	(752,427)	(421,712)	(165,462)	(889,978)	3,986	(1,225,696)	(1,293,721)
செலுத்தப்பட்ட பங்களிப்பு	(5,448,852)	(319,028)	(1,953,483)	-	(397,075)	-	(890,545)	(9,008,983)
2020 திசெம்பர் 31இல் உள்ளவாறு	**15,142,138**	**(3,589,011)**	**2,649,217**	**(1,147,643)**	**(455,747)**	**53,958**	**291,888**	**12,944,800**

எறிவுசெய்யப்பட்ட நன்மைக் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதியிலான அசைவு	ஊழியர் ஓய்வூதியத் திட்டம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய	விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய	பணிக் கொடைத் திட்டம்	மருத்துவ நன்மைத் திட்டம்	மொத்தம்
	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000
2021 சனவரி 01இல் உள்ளவாறு	47,170,831	3,223,066	10,827,211	1,932,117	1,713,506	353,689	5,020,814	**70,241,234**
வட்டிச் செலவு	4,009,521	273,961	920,313	164,230	145,648	30,064	426,769	**5,970,506**
நடைமுறைப் பணிச் செலவு	-	156,290	-	-	-	29,906	87,410	**273,606**
நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட நன்மைகள்	(2,926,130)	(11,321)	(560,527)	(39,986)	-	(21,590)	(277,412)	**(3,836,966)**
கடப்பாடுகள் மீதான ஆயுட்கால (இலாபங்கள்)/ நட்டங்கள்	(694,978)	(1,594,925)	(1,035,761)	(518,977)	(1,058,015)	(12,793)	(1,453,717)	**(6,369,166)**
2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு	**47,559,244**	**2,047,071**	**10,151,236**	**1,537,384**	**801,139**	**379,276**	**3,803,864**	**66,279,214**

திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் சீர்மதிப்பு பெறுமதியிலான அசைவுகள்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய	விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய	பணிக் கொடைத் திட்டம்	மருத்துவ நன்மைத் திட்டம்	மொத்தம்
	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000
2021 சனவரி 01இல் உள்ளவாறு	30,181,502	5,687,441	6,166,925	2,827,633	888,055	335,195	2,875,066	**48,961,817**
வட்டி வருமானம்	2,565,428	483,432	524,189	240,349	75,485	28,492	244,381	**4,161,756**
தொழில்தருநரின் பங்களிப்புக்கள்	5,448,852	319,028	1,953,483	-	397,075	-	890,545	**9,008,983**
ஊழியர்களின் பங்களிப்புகள்	-	-	31,998	10,546	64,308	-	7,417	**114,269**
நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட நன்மைகள்	(2,926,130)	(11,321)	(560,527)	(39,986)	-	(21,590)	(277,412)	**(3,836,966)**
வட்டி வருமானம் தவிர்ந்த திட்டச் சொத்துக்கள்/ முதலீடுகள் மீதான வருமானம்	(2,852,546)	(842,498)	(614,049)	(353,515)	(168,037)	(16,779)	(228,021)	**(5,075,445)**
2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு	**32,417,106**	**5,636,082**	**7,502,019**	**2,685,027**	**1,256,886**	**325,318**	**3,511,976**	**53,334,414**

2021 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட செலவினங்கள்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய	விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய	பணிக் கொடைத் திட்டம்	மருத்துவ நன்மைத் திட்டம்	மொத்தம்
	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000
காலப்பகுதிக்கான கடப்பாடுகள் மீதான ஆயுட்கால (இலாபங்கள்)/ நட்டங்கள்								
நிதியியல் எடுகோள்களின் மாற்றத்தின் காரணமாக	(6,924,201)	(1,751,717)	(3,345,121)	(867,007)	(1,078,686)	(88,794)	(740,428)	**(14,795,954)**
அனுபவத்தின் காரணமாக	6,229,223	156,792	2,309,360	348,030	20,671	76,001	(713,289)	**8,426,788**
வட்டி வருமானம் தவிர்ந்த திட்டச் சொத்துக்கள்/ முதலீடுகள் மீதான வருமானம்	2,852,546	842,498	614,049	353,515	168,037	16,779	228,021	**5,075,445**
காலப்பகுதிக்குரிய ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தேறிய (வருமானம்)/ செலவினம்	**2,157,568**	**(752,427)**	**(421,712)**	**(165,462)**	**(889,978)**	**3,986**	**(1,225,696)**	**(1,293,721)**

2021 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நன்மைச் செலவினம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய	விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய	பணிக் கொடைத் திட்டம்	மருத்துவ நன்மைத் திட்டம்	மொத்தம்
	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000
நன்மைக் கடப்பாடுகளின் மீதான வட்டிச் செலவு	4,009,521	273,961	920,313	164,230	145,648	30,064	426,769	**5,970,506**
திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் மீதான வட்டி வருமானம்	(2,565,428)	(483,432)	(524,189)	(240,349)	(75,485)	(28,492)	(244,381)	**(4,161,756)**
நடைமுறை பணிச் செலவு	-	156,290	-	-	-	29,906	87,410	**273,606**
ஊழியர்களின் பங்களிப்புக்கள்	-	-	(31,998)	(10,546)	(64,308)	-	(7,417)	**(114,269)**
நன்மைச் செலவினங்கள்	**1,444,093**	**(53,181)**	**364,126**	**(86,665)**	**5,855**	**31,478**	**262,381**	**1,968,087**

திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் உள்ளடக்கம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய	விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய	பணிக் கொடைத் திட்டம்	மருத்துவ நன்மைத் திட்டம்	மொத்தம்
	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000
அரச பிணையங்களிலான முதலீடுகள்	26,570,667	5,287,728	5,537,069	2,383,033	1,224,677	310,153	2,806,478	**44,119,805**
நேர்மாற்று மீள்கொள்வனவுகளிலான முதலீடுகள்	1,568,583	75,086	427,511	50,582	13,509	-	224,262	**2,359,533**
தொகுதிக்கடன்களிலான முதலீடுகள்	820,495	219,709	342,517	56,934	16,850	5,094	70,832	**1,532,431**
நிலையான வைப்புக்களிலான முதலீடுகள்	3,454,948	52,207	1,193,074	193,479	869	10,071	410,404	**5,315,052**
நடைமுறைக் கணக்குகளில் எஞ்சியிருக்கும் நிலுவைகள்	2,413	1,352	1,848	999	981	-	-	**7,593**
2021 திசெம்பர் 31இல் உள்ளவாறான மொத்த திட்டச் சொத்துக்கள்/ முதலீடுகள்	**32,417,106**	**5,636,082**	**7,502,019**	**2,685,027**	**1,256,886**	**325,318**	**3,511,976**	**53,334,414**

அனைத்துத் திட்டங்களுக்குமான ஊழியர் நன்மை கடப்பாடுகளைத் தீர்மானிக்கின்ற போது பயன்படுத்தப்பட்ட முக்கியமான எடுகோள்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றன:

	2022	2021
கழிவு வீதம்	**19.00%**	11.58%
சொத்துக்களின் மீதான எதிர்பார்க்கப்பட்ட திரும்பல் வீதம்	**19.00%**	11.58%
சம்பள அதிகரிப்பு வீதம் - பணிக்கொடைத் திட்டம், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டம், விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டம், ஊழியர் ஓய்வூதியத் திட்டம் பழையது	**7.00%**	7.00%
சம்பள அதிகரிப்பு வீதம் - ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய, விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டம் - புதிய	**6.50%**	6.50%
எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்பு - பழைய ஓய்வூதியத் திட்டம்	**6.00%**	7.50%
எதிர்கால ஓய்வுதிய அதிகரிப்பு - புதிய ஓய்பூதியத் திட்டம்	**2.50%**	2.00%
தேய்வு வீதம்	**2.00%**	2.00%
மருத்துவச் செலவு பணவீக்க வீதம்	**4.50%**	4.50%
எஞ்சியுள்ள சராசரி பணி ஆண்டுகள்		
இ.ம. வங்கி ஓய்வூதியம்	**26 ஆண்டுகள்**	26 ஆண்டுகள்
இ.ம. வங்கி ஓய்வூதியம் - புதிய	**39 ஆண்டுகள்**	38 ஆண்டுகள்
விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	**26 ஆண்டுகள்**	26 ஆண்டுகள்
விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	**26 ஆண்டுகள்**	26 ஆண்டுகள்
விதவைகள் மற்றும் அநாதைகள் மற்றும் விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வுதிய திட்டம் - புதிய	**39 ஆண்டுகள்**	38 ஆண்டுகள்
பணிக் கொடைத் திட்டம்	**17 ஆண்டுகள்**	17 ஆண்டுகள்
இ.ம. வங்கி மருத்துவ நன்மைத் திட்டம்	**27 ஆண்டுகள்**	26 ஆண்டுகள்
ஓய்வுபெறும் வயது	**60 ஆண்டுகள்**	60 ஆண்டுகள்

உணர்திறன் பகுப்பாய்வு 0.5% இல் (2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு)	ஊழியர் ஓய்வூதியத் திட்டம்	ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய	விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்	விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய	பணிக் கொடைத் திட்டம்	மருத்துவ நன்மைத் திட்டம்
	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000
நடைமுறை கருதுகோள்களின் மீது எறிவுசெய்யப்பட்ட நன்மைக் கடப்பாடுகள்	**28,743,485**	**742,361**	**6,594,557**	**769,222**	**256,344**	**316,311**	**3,430,954**
கழிவிடல் வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம்	(668,156)	(65,500)	(158,025)	(23,092)	(17,521)	(6,674)	(84,038)
கழிவிடல் வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம்	702,459	31,989	166,673	24,480	19,426	6,982	88,853
தேய்வு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம்	-	-	-	-	-	68,915	-
தேய்வு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம்	-	-	-	-	-	(73,479)	-
சம்பள உயர்வு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம்	24,664	38,679	955	384	11,353	7,748	-
சம்பள உயர்வு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம்	(24,212)	(36,178)	(939)	(376)	(10,648)	(7,438)	-
மருத்துவச் செலவு பணவீக்கத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம்	-	-	-	-	-	-	101,086
மருத்துவச் செலவு பணவீக்கத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம்	-	-	-	-	-	-	(95,784)
ஓய்வூதிய அதிகரிப்பு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம்	761,600	-	185,807	27,040	-	-	-
ஓய்வூதிய அதிகரிப்பு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம்	(727,576)	-	(176,763)	(25,592)	-	-	-

33. நானாவிதப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும்

நானாவிதப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும் செலுத்த வேண்டிய குத்தகைகள், கொடுகடன் உத்தரவாதம் மீது பிற்போடப்பட்ட வருமானம், கணக்குகளில் செலுத்தத்தக்க நிலுவைகள், ஒப்பந்த ரீதியான பிடித்துவைத்தல்கள் மற்றும் மீளளிக்கத்தக்க விலைக்கோரல் வைப்புக்களாக எடுக்கப்பட்ட வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

	2022 ரூ. 000	2021 ரூ. 000
குத்தகைப் பொறுப்பு (குறிப்பு 33.1.4)	**60,142**	61,144
கொடுகடன் உத்தரவாதங்களுக்கான ஏற்பாடு (குறிப்பு 33.2)	**220,347**	1,117,492
ஏனைய பொறுப்புக்கள்	**574,554**	2,848,713
	855,043	4,027,349

33.1 குத்தகைகள்

வங்கியானது 2 இலிருந்து 30 வரையான ஆண்டு கால குத்தகைக் காலப்பகுதிகளைக் கொண்ட காணி மற்றும் கட்டடங்களை குத்தகைக்கு எடுத்திருப்பதுடன் இக்குத்தகைகளில் சில அத்திகதிக்குப் பின்னர் புதுப்பிக்கக்கூடிய தெரிவைத் கொண்டிருக்கின்றன. சில குத்தகைகளைப் பொறுத்தவரையில், சந்தை வாடகைகளைப் பிரதிபலிப்பதற்காக ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கொரு தடவை கொடுப்பனவுகள் மீள இணங்கப்படுகின்றன. வங்கி குத்தகையாளராக இருக்கும் குத்தகை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

33.1.1 சொத்துப் பாவனை உரிமை

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தில் காட்டப்பட்டுள்ள குத்தகைக் காணி மற்றும் கட்டடங்கள் தொடர்பான சொத்துப் பாவனை உரிமை **(குறிப்பு 20)**.

33.1.2 வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகை

	2022 ரூ. 000	2021 ரூ. 000
குத்தகைப் பொறுப்பு மீதான வட்டி	**6,030**	5,482
சொத்துப் பாவனை உரிமையின் பதிவழிப்பு	**7,161**	6,501

33.1.3 காசுப்பாய்ச்சல் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகை

	2022 ரூ. 000	2021 ரூ. 000
குத்தகைகளுக்கான மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல்	**7,032**	5,489

33.1.4 குத்தகைப் பொறுப்புக்கள்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை	**61,144**	52,038
ஆண்டு காலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை	**-**	9,114
ஆண்டுகாலப்பகுதியில் மீள்அளவீடு	**-**	-
ஆண்டுகாலப்பகுதியிலான வட்டிக் கட்டணங்கள்	**6,030**	5,481
ஆண்டுகாலப்பகுதியிலான குத்தகைக் கொடுப்பனவுகள்	**(7,032)**	(5,489)
திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை	**60,142**	**61,144**

33.1.5 குத்தகைப் பொறுப்புக்களின் முதிர்ச்சிப் பகுப்பாய்வு

	2022 ரூ. 000	2021 ரூ. 000
நடைமுறையல்லாத	**57,642**	58,815
நடைமுறை	**2,500**	2,329
திசெம்பர் 31இலுள்ளவாறான நிலுவை	**60,142**	**61,144**

33.1.6 ஒப்பந்த ரீதியான கழிவிடப்படாத காசுப்பாய்ச்சலை அடிப்படையாகக் கொண்ட முதிர்ச்சிப் பகுப்பாய்வு

	2022 ரூ. 000	2021 ரூ. 000
ஒரு ஆண்டிற்குக் குறைவானவை	**8,303**	8,359
ஒன்றிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குட்பட்டவை	**23,198**	20,836
ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்டவை	**119,492**	130,157
மொத்தக் கழிவிடப்படாத குத்தகைப் பொறுப்புக்கள்	**150,993**	**159,352**

33.2 கொடுகடன் உத்தரவாதங்களுக்கான ஏற்பாடு

	2022 ரூ. 000	2021 ரூ. 000
பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் மீதான பிற்போடப்பட்ட வருமானம்	**1,023**	105,760
கொடுகடன் உத்தரவாதங்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு (குறிப்பு 33.2.1)	**219,324**	1,011,732
திசெம்பர் 31இலுள்ளவாறான நிலுவை	**220,347**	**1,117,492**

33.2.1 கொடுகடன் உத்தரவாதங்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

	2022 நிலை 1 ரூ. 000	2021 நிலை 1 ரூ. 000
சனவரி 1இலுள்ளவாறான நிலுவை	**1,011,732**	-
ஆண்டு காலப்பகுதியில் கட்டணம்	**(792,408)**	1,011,732
திசெம்பர் 31இலுள்ளவாறான நிலுவை	**219,324**	**1,011,732**

34. பங்குரிமை மூலதனம்

பங்குரிமை மூலதன விடயங்களின் தன்மை

34.1 மூலதனம் நிதியம்

பங்களிப்பு மூலதனம் - நாணய விதிச் சட்டத்தின் 6ஆம் பிரிவின்படி மூலதனக் கணக்கு, வங்கியின் மூலதனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. 2014ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (திருத்தப்பட்டது) 6ஆம் பிரிவின்படி, வங்கியின் மூலதனம் ரூ.50.00 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. இதன்படி, வங்கி, 2014 செத்தெம்பரில் நிதி அமைச்சரின் சம்மதத்துடன் அதன் ஒதுக்கங்களை மூலதனமாக்கியதன் மூலம் மூலதனத்தினை ரூ.50.00 பில்லியனுக்கு அதிகரித்தது.

34.2 நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு ஒதுக்கு

இவ்வொதுக்கமானது ப.க.நி 16 இன்படி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின்படி மீள்மதிப்பீட்டு மிகையினால் உருவாக்கப்பட்டுள்ளது.

34.3 ஏனைய ஒதுக்குகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:

i) பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கு - பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கு என்பது, நாணய விதிச் சட்டத்தின் 41ஆம் பிரிவின்படி நிறுவப்பட்டுள்ளதொரு ஒதுக்காகும். இதன்படி, தங்கம் அல்லது வெளிநாட்டு நாணயங்களிலுள்ள மத்திய வங்கியின் தேறிய சொத்துக்களும் பொறுப்புக்களும் மீளக் கணிப்பிடப்படுவதனூடாக உருவாகின்ற தேறல் செய்யப்படாத இலாபம் அல்லது நட்டம் வங்கியின் தேறிய இலாபத்தைக் கணிப்பதற்காக கவனத்திற் கொள்ளப்படலாகாதென்பதுடன், அதற்குப் பதிலாக இவ்விலாபம் அல்லது நட்டம் பன்னாட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

ii) சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கு - வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களின் சந்தைப்படியான விலைகளின் மோசமான அசைவிற்கு வழிவகுக்கின்ற பன்னாட்டுச் சந்தைகளின் தளம்பல்களின் ஏதேனும் மோசமான தாக்கத்தினை ஈடுசெய்யும் பொருட்டு வெளிநாட்டுச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலிருந்து கிடைக்கும் விலை மதிப்பீட்டு இலாபங்களை மாற்றல் செய்வதற்காக 2003 சனவரி 30ஆம் நாளன்று நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கு ஏற்படுத்தப்பட்டது. நாணயச் சபையானது இந்த ஒதுக்கினை இலங்கை மத்திய வங்கியின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கில் உயர்ந்தபட்சம் 10 சதவீதத்திற்கு கட்டியெழுப்புவதற்கு தீர்மானித்தது.

மேலும், 2016 பெப்புருவரி 29இல் திகதியிடப்பட்ட வங்கியின் இலாபப் பகிர்ந்தளிப்புக் கொள்கை தொடர்பில் பிரேரிக்கப்பட்ட நாணயச் சபையின் தீர்மானம் MB/DG(W)/7/1/2016 இற்கமைய, நாணயச் சபையானது அவசியம் எனக் கருதும் பட்சத்தில், குறிப்பிடத்தக்க தேறல் செய்யப்படாத சந்தைப்படியான நட்டத்தின் காரணமாக பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் எதிர்மறையாகக் காணப்படுமிடத்து சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கிலிருந்து பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களுக்கு மாற்றல் செய்யமுடியும்.

2021ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட சந்தைப்படியான இலாபத்தை கருத்திற்கொண்டு, 2022 பெப்புருவரி 24ஆம் திகதியிடப்பட்ட நாணயச் சபையின் தீர்மானம் BP MB/F/6/3/2022இன்படி ரூ.49.64 பில்லியன் தொகை பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களிலிருந்து சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றல் செய்யப்பட்டது.

iii) ஏனைய ஒதுக்குகள் - பொது ஒதுக்கு, கட்டட ஒதுக்கு மற்றும் கொடுகடன் உத்தரவாத ஒதுக்கு என்பவற்றை உள்ளடக்குகிறது. பொது ஒதுக்கு, நாணயச் சபையினால் பிடித்துவைக்கப்பட்டிருக்கும் வருவாய்களிலிருந்து வேறாக வைத்திருக்கப்படும் தொகையினை உள்ளடக்குகின்றது.

iv) ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்பு இலாபம்/(நட்டம்): ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள் மற்றும் அலகு முதலீடுகளின் மீள்மதிப்பீடு தொடர்பான தேறல் செய்யப்படாத இலாபங்களும் நட்டங்களும் இவ்வொதுக்கிற்கு மாற்றப்படுகின்றன.

v) அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கடன்கரைப்பு நிதியம் - அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையைப் பயன்படுத்துவதற்காக பங்கேற்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற கட்டணங்களைக் கொண்டு இந்நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

vi) ஓய்வூதிய நிதிய ஒதுக்கு - வெளியக இடர்நேர்வுகளின் காரணமாக வங்கியின் வருமானம் ஈட்டும் ஆற்றலில் ஏற்படும் பாதிப்பினால் ஓய்வூதிய நிதியத்தில் ஏதேனும் பற்றாக்குறை உருவாகுமாயின், அதனை ஈடுசெய்யும் பொருட்டு 2007ஆம் ஆண்டின் இலாபத்திலிருந்து மேலதிகமாக ரூ.3 பில்லியன் மாற்றப்பட்டதன் மூலம் இவ்வொதுக்கு உருவாக்கப்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டு இலாபத்திலிருந்து மேலும், ரூ.1 பில்லியன் தொகை இவ்வொதுக்கத்திற்கு மாற்றப்பட்டது. 2015 யூனில் நாணயச் சபை பத்திர இலக்கம் MB/HR/11/12/2015 இன்படி புதிய ஓய்வூதியத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ஓய்வூதிய நிதிய ஒதுக்கிலிருந்து, புதிய ஓய்வூதிய பொறுப்புக் கணக்கிற்கு ரூ.2 பில்லியன் மாற்றல் செய்யப்படடது.

vii) தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கு - குறிப்பாக தொழில்நுட்ப மேம்பாட்டுத் தேவைப்பாடுகள், நவீனமயமாக்கல் அல்லது இ.ம.வங்கியினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொதுப்பேரேடு, அ.நே.மொ. தீர்ப்பனவு முறை, திறைசேரி முகாமைத்துவ முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை ஆகிய தகவல் தொழில்நுட்ப முறைமையைத் தரமுயர்த்துதல் ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தும் பொருட்டு இவ்வொதுக்கு 2007 ஆம் ஆண்டின் இலாபத்திலிருந்து உருவாக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டு மார்ச்சு மாத காலப்பகுதியில் 2017ஆம் ஆண்டு இலாபத்திலிருந்து ரூ.2.0 பில்லியன் இவ்வொதுக்கிற்கு மேலதிகமாக மாற்றப்பட்டது.

viii) சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்ட ஒதுக்கு - இவ்வொதுக்கு நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் நிதியத்திலிருந்து ரூ.2 பில்லியனை மாற்றல் செய்ததன் மூலம் 2014இல் ஏற்படுத்தப்பட்டது. இதில் ரூ.1 பில்லியன் வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் சௌபாக்கியா கடன் திட்டம், வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (கட்டம் II), கிழக்கில் பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குதல் (கட்டம் II) மற்றும் வடக்கு, கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்தல் என்பனவற்றின் மீளமைத்தலுக்கு ஆதரவளிப்பதற்காக ஒதுக்கப்பட்டது. எஞ்சிய ரூ.1 பில்லியன் வர்த்தக வங்கிகளின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன்வழங்கலுக்கு உதவியளிப்பதற்கான சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினை நடைமுறைக்கிடுவதற்காக ஒதுக்கப்பட்டது.

ix) தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களினை நிதியிடும் நோக்கத்திற்கான ஒதுக்கு - 2016.12.16ஆம் திகதியிடப்பட்ட MB/F/39/20/2016ஆம் இலக்க நாணயச் சபையின் தீர்மானத்திற்கமைய ஆயுட்கால நட்டங்கள் மற்றும் நன்மைச் செலவுகள் காரணமாக பங்குரிமை மூலதனத்திற்கு எதிர்மறையான தாக்கம் ஏற்படக்கூடிய சாத்தியம் இருக்கும் போது அதனை ஈடுசெய்ய தேவையான அளவு பகிரக்கூடிய இலாபம் இருக்குமெனில் கொடுக்கப்பட்ட ஆண்டின் (2016ஆம் ஆண்டிலிருந்து) உண்மையான நன்மைச் செலவுகளின் 50 சதவீதத்தினை குறித்த ஒதுக்கத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்பட்டது. 2021ஆம் ஆண்டிற்குரிய பகிரத்தக்க இலாபங்களிலிருந்து இந்நிதியத்திற்கு 2022 மார்ச்சில் ரூ.1,051.04 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

x) நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் ஒதுக்கு - 2020 ஏப்பிறல் 15ஆம் திகதியிடப்பட்ட MB/FD/11/14/2020 இலக்க நாணயச் சபைத் தீர்மானம் மற்றும் 2020 யூன் 11ஆம் திகதியிடப்பட்ட MB/RD/19/28/2020 இலக்க நாணயச் சபைத் தீர்மானங்களுக்கமைய கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்காக வங்கியினால் முன்னெடுக்கப்படும் மீள்நிதியிடல் கடன்வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்காக, பொது ஒதுக்கு மற்றும் கட்டட ஒதுக்கத்திலிருந்து ரூ.15.46 பில்லியன் சிறப்புக் கொடுகடன் உத்தரவாத திட்ட ஒதுக்கிலிருந்து ரூ.1.96 பில்லியன், தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கிலிருந்து ரூ.3.00 பில்லியன் மற்றும் தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களை நிதியிடும் நோக்கத்திற்கான ஒதுக்கிலிருந்து ரூ.4.33 பில்லியன் 2020 காலப்பகுதியில் நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் ஒதுக்கிற்கு மாற்றப்பட்டன.

மேலும் 2022 பெப்புருவரி 24ஆம் திகதியிடப்பட்ட MB/F/6/4/2022 இலக்க நாணயச் சபை தீர்மானத்தின்படி 2021 திசெம்பர் 31ஆம் திகதி நிகழ்த்தப்பட்ட பிரதேச அபிவிருத்தித் திணைக்கள தேசிய சொத்து ஒருங்கிணைப்பின் அடிப்படையில் 2021ஆம் ஆண்டின் பகிரக்கூடிய இலாபத்திலிருந்து ரூ.15.0 பில்லியன் மாற்றப்பட்டது.

ஏனைய ஒதுக்கங்களிலான அசைவுகள் பின்வருமாறு:

	நிந்தா மற்றும் நீண்ட கால கொடுகடன் ஒதுக்கு	சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கு	ஏனைய ஒதுக்கங்கள்	சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்ட ஒதுக்கம்	ஆசி. மொ. நி. கடன் கரைப்பு நிதியம்	பண்ணாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	மீள் மதிப்பீட்டு ஒதுக்கு	ஏனைய அனைத்தை உள்ளடக்கிய வருமானத்திலான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம்/ (நட்டம்)	ஒப்புதிய நிதிய ஒதுக்கம்	தொழிலுக்குப் பின்னான நன்மைத் திட்டங்களின் நீதிம்ல் தேவை களுக்கான ஒதுக்கம்	மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
2022 சனவரி 01இல் உள்ளவாறு	29,577,739	87,037,512	4,001,226	40,000	3,239,926	11,902,670	182,036,032	(6,210,465)	2,000,000	1,503,586	315,128,226
அ.நே.மொ.தீ. கடன்கரைப்பு நிதியத்திற்கு மாற்றல்	-	-	-	-	438,146	-	-	-	-	-	438,146
இலாபங்களைப் பொது ஒதுக்கிற்கு மாற்றல்	-	-	27,526,076	-	-	-	-	-	-	-	27,526,076
தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபம்/ (நட்டத்தினை) மாற்றல்	15,000,000	-	-	-	-	-	-	-	-	-	15,000,000
ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம்	-	-	-	-	-		(610,149,293)	-	-	-	(610,149,293)
சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு நிதியங்களை மாற்றல்	-	-	-	-	-	-	-	(1,189,382)	-	-	(1,189,382)
தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்ட நிதியிடலுக்கான ஒதுக்கிற்கு மாற்றல்	-	49,638,590	-	-	-	-	-	-	-	-	49,638,590
சந்தை மதிப்பீட்டு ஒதுக்கம் - ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட அரச பிணையங்கள்	-	-	-	-	-	-	-	-	-	1,051,039	1,051,039
சந்தை மதிப்பீட்டு ஒதுக்கம் - அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை முதலீடுகள்	-	-	-	-	-	-	-	11,225,713	-	-	11,225,713
விற்பனைகள் மீதான தேறல் செய்யப்பட்ட மீள்மதிப்பீட்டு இலாபம்	-	-	-	-	-	-	-	145,915	-	-	145,915
2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு	**44,577,739**	**136,676,102**	**31,527,302**	**40,000**	**3,678,072**	**11,902,670**	**(428,113,261)**	**3,971,781**	**2,000,000**	**2,554,624**	**(191,184,970)**

35. இலாபப் பகிர்ந்தளிப்பு

நாணய விதிச்சட்டத்தின்படியும் நாணயச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் இலாபப் பகிர்ந்தளிப்புக் கொள்கை (2018 இலிருந்து நடைமுறைக்குவரும்) இன்படியும் பகிரத்தக்க இலாபத்தினைப் பெறும் பொருட்டு ஆண்டுக்கான தேறிய இலாபத்திற்கு பின்வரும் சீராக்கங்கள் செய்யப்பட்டன.

அ) செலாவணிவீத இலாபத்தை முழுமையாக நீக்குதல் மற்றும் நட்டத்தினை இல்லாமல் செய்வதற்கு தேவையானளவு ஒன்றுசேர்ந்த செலாவணிவீத இலாபம் காணப்படும் வரை வெலாவணிவீத நட்டங்களை அகற்றுதல். எந்தவொரு மேலதிக செலாவணிவீத நட்டத்தையும் உள்ளடக்குதல் (இலங்கை மத்திய வங்கியின் இலாப பகிர்ந்தளிப்பு கொள்கையின்படி).

ஆ) தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிருந்தான இலாபத்தினை நீக்குதல் (தேறல் செய்யப்படாத சந்தைப்படியான இலாபங்கள்). எனினும் தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான நட்டங்களை (தேறல் செய்யப்படாத சந்தைப்படியான நட்டங்கள்) விதித்தல் (இலங்கை மத்திய வங்கியின் இலாப பகிர்ந்தளிப்புக் கொள்கையின்படி).

இ) நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 38 இன்படியான வேறு ஏதேனும் மாற்றல்கள் மற்றும் நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 இலிருந்து எழும் வேறு ஏதேனும் சீராக்கங்கள்.

மேலும், கணக்கீட்டு நியமங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வேறு ஏதேனும் சீராக்கங்கள் பகிரத்தக்க இலாபத்தினைப் பெறும் பொருட்டு சீராக்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட சீராக்கங்களின் அடிப்படையில், 2021 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பகிரத்தக்க இலாபம் பின்வருமாறு:

விடயம்	2022 ரூ. 000
இலாபப் பகிர்விற்கான கணிப்பீடு	
சு.நி.அ.நி இலாபம் (நட்டம்)	**(374,320,973)**
கழிக்குக:	
நாணய விதிச் சட்டத்திற்கமைய பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றப்பட்ட பரிமாற்று நட்டம்	(610,149,293)
உள்ளக நிதியங்கள் மீதான வட்டி வருமானம் தொடர்புடைய நிதியங்களுக்கு மாற்றல்	793,692
நாணய விதிச் சட்டம் மற்றும் இலாபப் பகிர்வுக் கொள்கை அடிப்படையிலான பகிர்ந்தளிக்கக்கூடிய இலாபம்	**235,034,628**
இலாபப் பகிர்ந்தளிப்பு	
மிகைக்கு மாற்றுதல்	235,034,628

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (பி) இன் படி, எஞ்சியிருக்கும் தேறிய இலாபம், உள்நாட்டு சொத்துக்களுக்கான சமபங்கு விகிதம் 15 சதவீதத்தை எட்டும் வரை மிகைக்கு கொண்டு செல்லப்படும். அதன்படி, 2022 இன் முழு பகிர்ந்தளிக்கக்கூடிய இலாபம் ரூ. 235.03 பில்லியன் மிகைக்கு மாற்றப்படும்.

36. நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்		
காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள்	**1,229,509**	274,786
நிதியியல் சொத்துக்கள்	**349,787**	4,104,262
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்	**1,579,295**	4,379,048
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்		
இலங்கை அரச பிணையங்கள்	**357,442,399**	55,718,603
மீள்விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	**117,769,763**	8,806,814
ஏனைய கடன்களும் முற்பணங்களும்	**5,661,688**	2,770,062
ஏனைய சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்	**1,802,677**	1,317,449
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்	**482,676,527**	68,612,928
நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்	**484,255,823**	**72,991,976**

2022 காலப்பகுதியில் பயனுறு வட்டி முறையைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்ட மொத்த வட்டி வருமானம் ரூ.357,596.28 மில்லியனாக இருந்தது (2021 - ரூ.58,662.72 மில்லியன்).

37. தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/ (நட்டம்)

	2022 ரூ. 000	2021 ரூ. 000
வெளிநாட்டுப் பிணையங்கள்	-	(302,953)
தங்கம்	**(3,106,177)**	(7,475,934)
வெளிநாட்டுச் செலாவணி மற்றும் நாணய பரஸ்பர பரிமாற்றல்கள்	**(124,179,927)**	49,638,590
தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான மொத்த இலாபம்	**(127,286,104)**	41,859,703

38. நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவினம்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவினம்		
ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்	**13,109,060**	78,207
பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான பொறுப்புக்கள்	**14,332,873**	2,946,797
ஏனைய வெளிநாட்டு செலுத்தத்தக்கவை	**4,851,344**	609,524
வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம்	**32,293,277**	3,634,528
உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவினம்		
மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்	**465,598**	890,946
துணைநில் வைப்பு வசதி	**29,948,163**	5,668,475
கைவிடப்பட்ட ஆதனம்	**3,072,799**	623,593
நானாவித வட்டிச் செலவினங்கள்	**4,133,034**	1,286,883
உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம்	**37,619,594**	8,469,897
நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம்	**69,912,871**	12,104,425

மிகை திரவத்தன்மை நிலை காரணமாக, சந்தையிலிருந்து திரவத்தன்மையை உள்ளீர்க்கும் விதமாக வங்கியின் நடவடிக்கைகளில் ரூ.72,133.23 மில்லியன் (2021 - ரூ.3,050.59 மில்லியன் செலவு) தேறிய உள்நாட்டு நாணயப் பெறுமதியைக் கட்டுப்படுத்துவதற்கான செலவு காணப்பட்டது. உள்நாட்டு நாணயப் பெறுமதியைக் கட்டுப்படுத்துவதற்கான செலவானது கீழே காட்டப்பட்டுள்ளவாறு மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள், முறிகளின் கடன்பாடு மற்றும் துணைநில் வசதி ஆகியவற்றின் மீது ஏற்பட்ட வட்டிச் செலவுகளிலிருந்து, இலங்கை அரச பிணையங்களிலிருந்தான வட்டி வருமானத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் வட்டி வருமானம் மற்றும் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம் மற்றும் தேறப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம்/(நட்டம்) இல் உள்ளடக்கப்பட்டவாறான ஐ.அ.டொலர்/ இல. ரூபா பெறுதிகளின் இலாபம் என்பனவற்றைக் கழிப்பதன் மூலம் பெறப்பட்ட தேறிய தொகையை உள்ளடக்குகிறது.

	2022 ரூ. 000	2021 ரூ. 000
மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் மீது ஏற்பட்ட வட்டிச் செலவினம்	**465,598**	890,946
துணைநில் வைப்பு வசதி மீதான வட்டிச் செலவினம்	**29,948,163**	5,668,475
கழிக்குக:		
மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் மீது உழைக்கப்பட்ட வட்டி வருமானம்	**117,769,763**	8,806,814
ஐ.அ.டொலர்/ இல.ரூபா பெறுதி இலாபம்	**(15,222,772)**	803,202
	72,133,230	3,050,595

39. நிதியியல் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களின் திரும்பல்/ (கட்டணம்)

	2022 ரூ. 000	2021 ரூ. 000
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		
பதிவழிக்கப்பட்ட செலவிலான நிதியியல் சொத்துக்கள்		
காசு மற்றும் காசிற்குச் சமமானவை **(குறிப்பு 8.2)**	**(759,464)**	184,970
பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான சொத்துக்கள் **(குறிப்பு 11.4)**	**(5)**	(1)
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் **(குறிப்பு 9.2)**	**(3,749)**	2,097,726
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீதான மொத்த எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பின் திரும்பல்/ (கட்டணம்)	**(763,218)**	2,282,695
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		
பதிவழிக்கப்பட்ட செலவிலான நிதியியல் சொத்துக்கள்		
வங்கிகளுக்கான கடன்கள் **(குறிப்பு 16.2)**	**(295,001)**	123,745
உள்ளக நிதியங்களின் முதலீடுகள் **(குறிப்பு 17.1 மற்றும் 17.2)**	**25**	79,291
கொடுகடன் உத்தரவாத ஏற்பாடு **(குறிப்பு 33.2.1)**	**792,408**	(1,011,732)
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீதான மொத்த எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக் கட்டணம்	**497,432**	(808,696)
நிதியியல் சொத்துக்கள் மீதான மொத்த எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பின் திரும்பல்/ (கட்டணம்)	**(265,786)**	1,473,999

40. ஏனைய வருமானம்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
பங்கிலாப வருமானம் - தொடர்பான தரப்பினர்	**138,037**	153,987
கொடைகளிலிருந்து பெறப்படும் சொத்துக்களின் பதிவழிப்பு	**28**	28
நிதியியல் நிறுவனங்களின் உரிமக் கட்டணம்	**673,300**	614,575
வாடகை வருமானம்	**207,766**	282,174
அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைப் பங்கேற்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கட்டணங்கள்	**71,809**	54,237
பிரதேச அபிவிருத்தித் திணைக்கள தேறிய சொத்து ஒருங்கிணைப்பிலிருந்தான ஏனைய வருமானம் **(குறிப்பு 40.2)**	**597,118**	14,705,875
நானாவித வருமானம்	**766,160**	469,494
மொத்த ஏனைய வருமானம்	**2,454,218**	16,280,370

40.1 ஏனைய செலவுகள்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
உள்நோக்கிய வெளிநாட்டுப் பணப்பரிமாற்றல்கள் மீதான ஊக்குவிப்புத் தொகை	**10,260,110**	-
மொத்த ஆளணிச் செலவினங்கள்	**10,260,110**	-

முறையான நிதி பரிமாற்ற வழிகள் மூலம் நாட்டிற்கு அதிகளவிலான பணியாளர்கள் பணம் அனுப்புவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இலங்கை மத்திய வங்கி, வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணப்பரிமாற்றத்தின் மூலம் ஏற்படும் பரிவர்த்தனைச் செலவை திருப்பிச் செலுத்துவதன் மூலம் வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு ஊக்குவிப்புத்தொகையை வழங்க முடிவு செய்தது. அதன்படி, 2022ஆம் ஆண்டில் இ.ம.வங்கியால் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் திருப்பிச் செலுத்தப்பட்ட மொத்த பரிவர்த்தனை செலவு ஏனைய செலவின் கீழ் வெளியிடப்படுகிறது.

40.2 பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் தேறிய சொத்துக்களின் ஒருங்கிணைப்பு

பொதுத் திறைசேரியின் திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட சம்மதத்துடன் 2022 திசெம்பர் 31இன் முடிவுற்ற ஆண்டுக்கான வங்கியின் நிதியியல் கூற்றுக்களில் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள்நிதியிடல் மற்றும் கொடுகடன் உத்தரவாத திட்டங்களுடன் தொடர்புடைய நிலுவைகளை ஒருங்கிணைப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை ஒப்புதலளித்துள்ளது. இந்நிலுவைகளின் சொத்துடமை நிறுவப்படுவதற்கு, வழியமைத்த செய்முறைகள் முடிவடைந்ததன் பின்னர் மாத்திரமே, 2022 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் நிதியியல் கூற்றுக்களில் பதிவுசெய்யப்பட்டன. அதன்படி, 2021ஆம் ஆண்டு திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் தேறிய சொத்து மதிப்பு ரூ.14.706 பில்லியன் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்தான ஏனைய வருமானத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்தான ஏனைய வருமானத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டவை சீராக்கப்பட்டுள்ளது.

41. ஆளணிச் செலவினங்கள்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
சம்பளங்களும் கூலிகளும்	**6,691,770**	7,116,223
நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவு	**11,550,422**	1,717,811
தொழிலுக்குப் பின்னரான நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டச் செலவு	**2,091,404**	1,891,272
மொத்த ஆளணிச் செலவினங்கள்	**20,333,596**	10,725,306

42. நிர்வாகம் மற்றும் ஏனைய செலவினங்கள்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
திருத்தங்களும் பேணல்களும்	**1,277,530**	879,065
ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் விற்பனை மீதான இழப்பு	**-**	669,923
ரொயிட்டர், புளும்பேர்க், சுவிப்ற் போன்றவற்றுக்கான தொழிற்பாட்டுச் செலவினங்கள்	**285,862**	205,041
பயணம்	**48,967**	22,008
அச்சிடல்	**61,428**	41,699
சட்ட ரீதியான கணக்காய்வுக் கட்டணம்	**12,338**	9,225
நாணயச் சபை/ துணைக் குழுக்களின் உறுப்பினர்களுக்கான ஊதியம்	**4,500**	3,975
விளம்பரச் செலவு	**50,765**	48,796
ஆலோசனை, தொடர்பூட்டல், மதியுரை மற்றும் தொழில்சார் நிபுணத்துவக் கட்டணங்கள்	**220,071**	210,337
குத்தகைப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவினம்	**6,030**	5,482
நானாவிதச் செலவினம்	**(57,110)**	183,571
மொத்த நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள்	**1,910,381**	2,279,122

43. வரி

2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறை சட்டத்தின் 9ஆம் பிரிவு மற்றும் அதனைத் தொடர்ந்து திருத்திய 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் மற்றும் 2022ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டத்திற்கமைவாக வங்கியானது வருமானவரி செலுத்தப் பொறுப்புடையதல்ல.

2022ஆம் ஆண்டுகாலப்பகுதியில், வங்கி எந்த வரியையும் செலுத்தவில்லை (2021-ஏதுமில்லை).

44. தொழிற்பாட்டு இலாபங்களை தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சலுடன் இணக்கப்படுத்தல்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அறிக்கையிடப்பட்ட இலாபம்	**(374,320,973)**	158,162,666
கூட்டுக/ (கழிக்குக): காசல்லா விடயங்கள்		
தேய்மானம் மற்றும் பதிவழிப்பு	**737,304**	526,675
பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - முதலீட்டுச் சொத்துப்பட்டியல்	**(475,212,162)**	(64,504,574)
நிர்ணயிக்கப்பட்ட ஊழியர் நன்மைத் திட்டங்களிற்கான தேறிய ஏற்பாடுகள்	**7,810,442**	2,290,446
மொத்தத் தேறல் செய்யப்படாத வெளிநாட்டுச் செலாவணி இலாபம்	**430,181,826**	(43,638,970)
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான நட்டம்/ (இலாபம்)	**548**	669,924
ஏற்பாடுகள் மற்றும் அட்டுறுக்கள்	**43,215,464**	3,144,366
நிதியியல் சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஏற்பாடுகள்	**265,786**	(1,473,999)
பிற்போடப்பட்ட கொடைகள்	**656**	389
வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பின் பதிவழிப்பு	**(3,953)**	(2,372)
நடைமுறையிலுள்ள கட்டுமானப் பதிவழிப்பு	**-**	(356)
நிலையான வருமான பிணையங்களின் பதிவழிப்புச் செலவினங்கள்	**(9,800)**	877,761
பிரதேச அபிவிருத்தித் திணைக்கள தேறிய சொத்து ஒருங்கிணைப்பிலிருந்தான ஏனைய வருமானம்	**5,568,805**	(14,705,875)
கூட்டுக/ (கழிக்குக): ஏனைய தொழிற்படு மூலதன விடயங்களின் அசைவு		
இருப்புக்களின் குறைவு	**140,126**	1,373,286
பெறத்தக்க வட்டியின் குறைவு	**(33,191,964)**	3,593,983
நாணாவிதப் பொறுப்புக்களின் அதிகரிப்பு	**(6,324,458)**	1,539,342
செலுத்தத்தக்க வட்டியின் அதிகரிப்பு	**12,431,642**	425,395
ஏனைய பெறத்தக்கவற்றின் அதிகரிப்பு	**32,570,689**	(2,236,407)
கூட்டுக/ (கழிக்குக): முதலீடு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள்		
தேறிய தேறல்செய்யப்படாத சந்தைப் பெறுமதி மாற்றங்கள்	**127,286,104**	(45,265,635)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்	**228,853,919)**	776,045

45. அரச கொடுக்கல்வாங்கல்களின் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு/ (மீளப்பெறல்)

	2022 ரூ. 000	2021 ரூ. 000
இலங்கை அரச பிணையங்களின் கொள்வனவு	**1,132,877,429**	1,218,291,655
பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - இலங்கை அரச பிணையங்கள்	**(367,603,730)**	(43,061,965)
இலங்கை அரசுக்கான முற்பணங்களின் குறைவு	**85,509,900**	(2,933,100)
அரசு மற்றும் அரச நிறுவனங்களுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு)/ குறைவு	**1,170,890**	68,211
	851,954,489	1,172,364,801

46. வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல்வாங்கல்கள் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு/ (மீளப்பெறல்)

	2022 ரூ. 000	2021 ரூ. 000
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்களிலான (அதிகரிப்பு)/குறைவு	**(22,342,019)**	(171,102,641)
	(22,342,019)	(171,102,641)

47. நிதியிடலின் திரட்சி

47.1 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை

	இலங்கை அரசு	இலங்கை பொதுமக்கள்	இலங்கை வர்த்தக வங்கிகள்	வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்	பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள்	ஏனையவை	மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்							
காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்	-	-	-	643,040	651,044,824	-	651,687,864
இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள்	-	-	-	-	-	-	-
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள்				-	10,867,425		10,867,425
பெறுதி நிதியியல் சாதனங்கள்	-	-	401,580	-	-	-	401,580
ப.நா.நிதியம் தொடர்பான சாதனங்கள்	-	-	-	-	281,421,074	-	281,421,074
ஏனைய பெறத்தக்கவைகள்	-	-	37,022,631	-	-	-	37,022,631
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்	-	-	37,424,211 -	643,040	943,333,323	-	981,400,574
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்							
இலங்கை அரச பிணையங்கள்	2,498,995,015	-	-	-	-	-	2,498,995,015
மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	698,069,219	-	-	-	-	-	698,069,219
அரசிற்கான தற்காலிக முற்பணங்கள்	235,638,700	-	-	-	-	-	235,638,700
நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள்	-	-	-	-	-	1,817,132	1,817,132
வங்கிகளுக்கான கடன்கள்	-	-	28,257,902	-	-	-	28,257,902
ஏனைய சொத்துக்கள்	-	-	-	-	-	30,182,560	30,182,560
மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்	3,432,702,934	-	28,257,902	-	-	31,999,692	3,492,960,528
மொத்த நிதியியல் சொத்துக்கள்	3,432,702,934	-	65,682,113	643,040	943,333,323	31,999,692	4,474,361,102
வெளிநாட்டு நாணய நிதியியலல்லா சொத்துக்கள்							
தங்கம்						10,031,610	10,031,610
	-	-	-	-	-	10,031,610	10,031,610
நாணய நிதியியலல்லா சொத்துக்கள்							
இருப்புக்கள்	-	-	-	-	-	4,788,407	4,788,407
ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் மீள்கொடுப்பனவுகள்	-	-	-	-	-	1,222,568	1,222,568
ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்	-	-	-	-	-	19,035,278	19,035,278
அருவச் சொத்துக்கள்	-	-	-	-	-	908,137	908,137
மொத்த நாணய நிதியியலல்லா சொத்துக்கள்	-	-	-	-	-	25,954,390	25,954,390
மொத்தச் சொத்துக்கள்	**3,432,702,934**	**-**	**65,682,113**	**643,040**	**943,333,323**	**67,985,692**	**4,510,347,102**

47.2 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை

	இலங்கை அரசு	இலங்கை பொதுமக்கள்	இலங்கை வர்த்தக வங்கிகள்	வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்	பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள்	ஏனையவை	மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்							
காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்	-	-	-	51,348,516	461,413,936	-	512,762,452
இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள்	-	-	-	-	-	-	-
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள்	-	-	-	-	8,818,244	-	8,818,244
பெறுதி நிதியியல் சாதனங்கள்	-	-	54,022,836	-	-	-	54,022,836
ப.நா.நிதியம் தொடர்பான சாதனங்கள்	-	-	-	-	188,045,837	-	188,045,837
ஏனைய பெறத்தக்கவைகள்	-	-	-	-	-	-	-
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்	-	-	54,022,836	51,348,516	658,278,017	-	763,649,369
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்							
இலங்கை அரச பிணையங்கள்	1,377,820,347	-	-	-	-	-	1,377,820,347
மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	567,532,312	-	-	-	-	-	567,532,312
அரசிற்கான தற்காலிக முற்பணங்கள்	150,128,800	-	-	-	-	-	150,128,800
நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள்	-	-	-	-	-	1,671,218	1,671,218
வங்கிகளுக்கான கடன்கள்	-	-	90,572,746	-	-	-	90,572,746
ஏனைய சொத்துக்கள்	-	-	-	-	-	34,063,770	34,063,770
மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்	2,095,481,459	-	90,572,746	-	-	35,734,988	2,221,789,193
மொத்த நிதியியல் சொத்துக்கள்	**2,095,481,459**	**-**	**144,595,582**	**51,348,516**	**658,278,017**	**35,734,988**	**2,985,438,562**
வெளிநாட்டு நாணய நிதியியலல்லா சொத்துக்கள்							
தங்கம்	-	-	-	-	-	35,151,981	35,151,981
	-	-	-	-	-	35,151,981	35,151,981
நாணய நிதியியலல்லா சொத்துக்கள்							
இருப்புக்கள்	-	-	-	-	-	4,928,533	4,928,533
ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் மீள்கொடுப்பனவுகள்	-	-	-	-	-	961,456	961,456
ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்	-	-	-	-	-	19,235,994	19,235,994
அருவச் சொத்துக்கள்	-	-	-	-	-	561,632	561,632
மொத்த நாணய நிதியியலல்லா சொத்துக்கள்	-	-	-	-	-	25,687,615	25,687,615
மொத்தச் சொத்துக்கள்	**2,095,481,459**	**-**	**144,595,582**	**51,348,516**	**658,278,017**	**96,574,584**	**3,046,278,158**

47.3 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை

	இலங்கை அரசு	இலங்கை பொதுமக்கள்	இலங்கை வர்த்தக வங்கிகள்	பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள்	ஏனையவை	மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்						
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்	-	-	-	-	146,408,028	**146,408,028**
பெறுதி நிதியியல் சாதனங்கள்	-	-	71,697,994	-	-	**71,697,994**
ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்	-	-	-	736,258,129	-	**736,258,129**
ப.நா.நிதியம்	-	-	-	1,127,925,092	-	**1,127,925,092**
ஏனையவை	1,021,468	-	-	69,173	593,292,810	**594,383,451**
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்	**1,021,468**	**-**	**71,697,994**	**1,864,252,394**	**739,700,838**	**2,676,672,694**
உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்						
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்	-	-	311,537,802	-	11,508,379	**323,046,181**
அரசு மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்	221,406	5	-	-	-	**221,411**
மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்	-	-	330,637,059	-	-	**330,637,059**
சுற்றோட்டத்திலுள்ள நாணயம்	-	1,026,567,252	-	-	-	**1,026,567,252**
ஏனைய செலுத்தத்தக்கவைகள்	86,808	-	-	-	68,233,539	**68,320,347**
மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்	**308,214**	**1,026,567,257**	**642,174,861**	**-**	**79,741,918**	**1,748,792,250**
மொத்த நிதியியல் பொறுப்புக்கள்	**1,329,682**	**1,026,567,257**	**713,872,855**	**1,864,252,394**	**819,442,756**	**4,425,464,944**
ஏனைய பொறுப்புக்கள்						
பிற்போடப்பட்ட கொடைகள்	-	-	-	-	1,834	**1,834**
ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள்	-	-	-	-	1,772,429	**1,772,429**
நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள்	-	-	-	-	855,043	**855,043**
மொத்த ஏனைய பொறுப்புக்கள்	**-**	**-**	**-**	**-**	**2,629,306**	**2,629,306**
மொத்தப் பொறுப்புக்கள்	**1,329,682**	**1,026,567,257**	**713,872,855**	**1,864,252,394**	**822,072,062**	**4,428,094,250**

47.4 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை

	இலங்கை அரசு	இலங்கை பொதுமக்கள்	இலங்கை வர்த்தக வங்கிகள்	பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள்	ஏனையவை	மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்						
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்	-	-	-	-	13,701	13,701
பெறுதி நிதியியல் சாதனங்கள்	-	-	1,139,323	-	-	1,139,323
ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்	-	-	-	104,764,616	-	104,764,616
ப.நா.நிதியம்	-	-	-	670,065,243	-	670,065,243
ஏனையவை	1,501,522	-	-	178,312	355,615,842	357,295,676
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்	1,501,522	-	1,139,323	775,008,171	355,629,543	1,133,278,559
உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்						
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்	-	-	289,396,174	-	11,307,988	300,704,162
அரசு மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்	1,392,104	197	-	-	-	1,392,301
மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்	-	-	99,426,206	-	1,636,674	101,062,880
சுற்றோட்டத்திலுள்ள நாணயம்	-	1,005,099,066	-	-	-	1,005,099,066
ஏனைய செலுத்தத்தக்கவைகள்	26,525	-	8,947,739	-	10,189,618	19,163,882
மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்	**1,418,629**	**1,005,099,263**	**397,770,119**	**-**	**23,134,280**	**1,427,422,291**
மொத்த நிதியியல் பொறுப்புக்கள்	**2,920,151**	**1,005,099,263**	**398,909,442**	**775,008,171**	**378,763,823**	**2,560,700,850**
ஏனைய பொறுப்புக்கள்						
பிற்போடப்பட்ட கொடைகள்	-	-	-	-	1,178	1,178
ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள்	-	-	-	-	17,929,737	17,929,737
நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள்	-	-	-	-	4,027,349	4,027,349
மொத்த ஏனைய பொறுப்புக்கள்	-	-	-	-	21,958,264	21,958,264
மொத்தப் பொறுப்புக்கள்	**2,920,151**	**1,005,099,263**	**398,909,442**	**775,008,171**	**400,722,087**	**2,582,659,114**

48. இடர்நேர்வு முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கியானது (இ.ம.வ) கொள்கைக் குறிக்கோள்களை பின்பற்றுவதில் நிதி மற்றும் நிதியல்லா இயல்புகளையுடைய பல்வேறுபட்ட இடர்நேர்வுகளை எதிர்நோக்குகின்றது. இதில் எந்தவொரு இடர்நேர்வினதும் பொருண்மைத் தன்மையானது இ.ம.வங்கியின் குறிக்கோள்களை அடைதல், நற்பெயர் மற்றும் நிதி நிலைமைகளில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதனால் இ.ம.வங்கிக்கான முறையாக வடிவமைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு மிகவும் முக்கியமானதாகும். இதற்கமைய, மத்திய வங்கியால் எதிர்நோக்கப்படும் இடர்நேர்வுகள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றதா என்பதை உறுதிசெய்வதற்கு நிறுவன அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்று இலங்கை மத்திய வங்கியில் நிறுவப்பட்டது.

நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பானது நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வங்கி எதிர்நோக்கிய நிதி மற்றும் நிதியல்லா இடர்நேர்வுகள் இரண்டையும் உள்ளடக்கிய இடர்நேர்வு முகாமைத்துவ அமைப்பு மற்றும் இடர்நேர்வு ஆளுகை அமைப்பு ஆகிய இரண்டையும் உள்ளடக்கியுள்ளது. இவ்விடர்நேர்வு ஆளுகை அமைப்பில் நாணயச் சபை மற்றும் சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு அத்துடன் நாணயச் சபை ஆலோசனை கணக்காய்வுக் குழு ஆகிய இரண்டு சபையின் உப குழுக்களும் உள்ளடங்கியுள்ளது. வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவப் பணிகளில் இறுதிப் பொறுப்பாண்மையை நாணயச் சபை கொண்டிருப்பதுடன் "முகாமைத்துவத்தின் பொறுப்புடமை" யையும் நிர்ணயிக்கின்றது.

நாணயச் சபையிலிருந்து முறையாக ஒப்படைக்கப்பட்ட குழுவாக சபை இடர்நேர்வு மேற்பார்வை குழுவானது இ.ம.வங்கியினுடைய ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தல் தொழிற்பாடுகளை மேற்பார்வையிடுவதுடன் வங்கியினுடைய இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தல் தொழிற்பாடு ஆகியவற்றிற்கான பரந்த தந்திரோபாயம் மற்றும் கொள்கைகளை அமைப்பதற்கான பொறுப்பையும் கொண்டிருக்கின்றது. மேலும், சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு வங்கியில் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தல்களுக்கு ஒரு பிரத்தியேக கவனம் செலுத்துவதற்கு நாணயச் சபைக்கு உதவிபுரிகின்றது.

இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பானது நிதியியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, முதலீட்டு மேற்பார்வைக் குழு மற்றும் அனைத்து திணைக்களங்களையும் உள்ளடக்குகின்றது. இலங்கை மத்திய வங்கியானது "மூன்று அடுக்குப் பாதுகாப்பைப்" பின்பற்றுகின்றது. இதில் அனைத்து திணைக்களங்களும் முதலாவது அடுக்குப் பாதுகாப்பை உருவாக்குகின்றன. முதலாவது அடுக்குப் பாதுகாப்பில் தொழிற்பாட்டுத் திணைக்களங்களானது இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் அவற்றின் தொடர்புடைய அறிக்கையிடும் வழிகளூடாக அதன் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய நிதியியல் மற்றும்/அல்லது தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை அடையாளங்காணுதல், பகுப்பாய்தல், மதிப்பிடுதல், கையாளுதல், கண்காணித்தல், மீளாய்வு செய்தல் என்பவற்றிற்கு பொறுப்பாக இருக்கின்றது. இரண்டாவது அடுக்குப் பாதுகாப்பு மாதிரியின் ஒரு பகுதியாக, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம், இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியைப் பணிப்பதற்கும் வழிகாட்டுவதற்குமான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுடன் தொடர்புடைய இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையை வசதிப்படுத்துவதற்குப் பொறுப்பாகவிருக்கின்றது. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் தொடர்பில் காலந்தர அடிப்படையில் நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக்குழுவினூடாக சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவிற்கு அறிக்கையிடுவதுடன் நிதியியல் இடர்நேர்வுகள் தொடர்பில் சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவிற்கு அறிக்கையிடுகின்றது. மூன்றாவது அடுக்குப் பாதுகாப்பான உள்ளகக் கணக்காய்வானது கணக்காய்வுகளினூடாக இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளுடன் தொடர்பான கட்டுப்பாட்டுச் சூழலை மேம்படுத்துவதற்கும் பெறுமதியைக் கூட்டுவதற்கும் சுயாதீனமான பாரபட்சமற்ற உறுதிப்படுத்தலையும் விதந்துரைப்புக்களையும் வழங்குவதற்குப் பொறுப்பாகவிருக்கின்றது. உள்ளகக் கணக்கு திணைக்களமானது கணக்காய்வுகளை நாடாத்துவதின் செயன்முறையை நாணயச்சபைக்கும் நாணயச் சபை ஆலோசனைக் கணக்காய்வுக் குழுவுக்கும் காலாண்டு அடிப்படையில் அறிக்கையிடுவதுடன் கணக்காய்வு அறிக்கைகள் மீதான தகவல்களை காலாண்டு அடிப்படையில் கணக்காய்வு தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கின்றது.

கட்டமைப்பிற்கிணங்க இலங்கை மத்திய வங்கி முழுவதும் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைகளை உருவாக்கும் வகையில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கிக்குரிய இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை அறிக்கையொன்றினை தயாரித்தது. இச்செயற்பாட்டில், இலங்கை மத்திய வங்கியானது தெளிவான பொறுப்புக்களுடன் பல்வேறுபட்ட பங்குபற்றுனர்களிடையே இடர்நேர்வு உரிமை மற்றும் முகாமைத்துவத்தை வழங்குகின்றவேளை இடர்நேர்வுகளை முகாமை செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களையும் வழிகாட்டுதல்களையும் பின்பற்றுகின்றது.

தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கும் பொருட்டு, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது பன்னாட்டு ஒதுக்குகள், அத்துடன் இலங்கை மத்திய வங்கியின் உள்முக முதலீட்டு நிதியங்கள், அதே போன்று அரசாங்கத்தின் முகவராக தொழிற்படும் இலங்கை மத்திய வங்கியினால் முகாமை செய்யப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றின் நிதிய முகாமைத்துவச் செயற்பாடுகளிலுள்ள நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு வசதியளிப்பதற்கு பொறுப்பாக இருக்கின்றது. இதற்கமைய, நிதியியல் மேற்பார்வைத் திணைக்களமானது அனைத்து முதலீட்டுக் கொள்கைக் கூற்றுக்கள், உபாயச் சொத்து ஒதுக்கீடு, முதலீட்டு வழிகாட்டல்கள் வடிவமைத்துள்ளதுடன் ஏதேனும் தேவைப்படும் மாற்றங்களை ஒருங்கிணைப்பதற்கு ஒழுங்குமுறையாக மீளாய்வு செய்கின்றது. உபாயச் சொத்து ஒதுக்கீடு, முதலீட்டு கொள்கைக் கூற்றுக்கள், முதலீட்டு வழிகாட்டல் என்பவற்றை ஒப்புதலளித்த நாணயச் சபையினால் குறிக்கபட்ட நிர்ணயிக்கப்பட்ட வரையறைக்குள் முதலீடுகள் உள்ளனவா என்பதை உறுதி செய்வதற்கு இத்தகைய நிதிய முகாமைத்துவ செயற்பாடுகளுடன் தொடர்புடைய சந்தை மற்றும் கொடுகடன் இடர்நேர்வுகளை இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் சுயாதீனமாக கண்காணிப்பதுடன் தொடர்புடைய முதலீட்டு மேற்பார்வைக் குழு, சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு அத்துடன் நாணயச்சபை என்பவற்றிற்கு காலாந்தர அடிப்படையில் அறிக்கையிடுகின்றது.

தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கும் பொருட்டு, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாட்டு இடர்நேர்வுப் பகுப்பியலை வருடாந்தம் மீளாய்வு செய்ததுடன், இடர்நேர்வு வகைகளை உள்ளடக்கி/ அகற்றி அத்துடன் நிலவுகின்ற இடர்நேர்வுச் சூழலுக்குப் பொருந்தும் விதத்தில் தேவையான ஏனைய மாற்றங்களையும் உள்ளடக்கி அதனை இற்றைப்படுத்தியது. வங்கியினுள் இடர்நேர்வு கலாசாரமொன்றை ஊக்குவிப்பதற்கு, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது பல்வேறு மன்றத்தில் ஆண்டு முழுவதும் எண்ணற்ற இடர்நேர்வு விழிப்புணர்வுத் தொடர்களை நடாத்துகின்றது. இதற்கு மேலதிகமாக, தற்போதுள்ள தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ பொறிமுறையுடன் தொடர்புடைய விழிப்புணர்வின் மட்டத்தை தீர்மானிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் தெரிவுசெய்யப்பட்ட அலுவலர்கள் மத்தயில் ஆண்டிற்கு இரு தடவையான அளவீடு நடாத்தப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியினுள் இடர்நேர்வு கலாசாரத்தை மேம்படுத்தவதற்கு வழிவகுத்து, எதிர்கால விழிப்புணர்வு தொடர்களை பொருத்தமாக வடிவமைப்பதற்கும் தற்போது பயன்பாட்டிலுள்ள தொழிற்பாட்டு இடர்நேர்வுப் பொறிமுறையை மேலும் வலுப்படுத்தவும் இவ்வளவீட்டு பெறுபேறுகள் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும், இடர்நேர்வுப் பதிவேடுகளை உருவாக்க வசதியளிப்பதற்கும் இத்தகையை இடர்நேர்வுப் பதிவேடுகளை விரிதாளை அடிப்படையாகக் கொண்ட பதிவேட்டு வடிவத்தை கட்டம் கட்டமான விதத்தில் புதுப்பிப்பதற்கும் இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது ஏனைய திணைக்களங்களுடன் செயற்படுகின்றது. தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையை மேம்படுத்தி இத்தகைய திணைக்கள இடர்நேர்வு பதிவேடுகளைப் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வுத் தோற்றப்பாடு உருவாக்கப்படுகின்றது.

இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது நிகழ்வுகளின் மத்திய சேமிப்பக உருவாக்கத்தை இயலுமைப்படுத்தியும் சரியான வழிமுறைகளின் நடைமுறை மீதான செயன்முறையை கண்காணித்தும் நிகழ்வு அறிக்கையிடல் முறைமையூடாக அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகளை தொடர்ச்சியாக நிருவகிக்கின்றது.

48.1 கொடுகடன் இடர்நேர்வு

(அ) புவியியல் பிரதேசங்களுக்கேற்ப கொடுகடன் இடர்நேர்வுகளுக்கு உள்ளாகும் தன்மையின் திரட்சி

அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறான வங்கியின் குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி புவியியல் பிரதேசங்களுக்கேற்ப (நிறுவனத்திற்கு உரித்தான நாட்டை அடிப்படையாகக் கொண்டு) பின்வருமாறு:

	2022 ரூ. 000	2021 ரூ. 000
இலங்கை	**3,530,384,740**	2,275,756,176
ஐக்கிய அமெரிக்கா	**129,318,087**	130,712,211
யப்பான்	**158,350**	9,457,390
பிரித்தானியா	**140,790**	1,008,405
ஐரோப்பா	**2,232,018**	1,582,664
பல்தேசிய	**284,961,366**	190,963,416
ஏனையவை	**527,165,751**	375,958,300
மொத்த நிதியியல் சொத்துக்கள்	**4,474,361,102**	**2,985,438,562**

(ஆ) நிறுவனங்களுக்கேற்ப கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி

அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறான வங்கியின் குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி நிறுவனங்களின் வகைக்கேற்ப வருமாறு:

	2022 ரூ. 000	2021 ரூ. 000
அரசு	**3,403,598,633**	2,014,470,178
பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள்	**295,828,791**	227,180,460
வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்	**643,040**	15,187,326
இலங்கை வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்	**764,200,061**	718,635,801
ஏனையவை	**10,090,577**	9,964,797
மொத்த நிதியியல் சொத்துக்கள்	**4,474,361,102**	**2,985,438,562**

(இ) கொடுகடன் தரமிடலின்படி கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை

பின்வரும் அட்டவணை ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் மற்றும் பிச் றேட்டிங்ஸ் கொடுகடன் தரமிடல்களின் அடிப்படையில் குறிப்பிட்ட நிதியியல் சொத்துக்களின் அல்லது வெளியிடுபவர்களின் கொடுகடன் தரமிடல்களை காட்டுகின்றது. AAA குறியீடு அதியுயர் கொடுகடன் தரத்தினைக் கொண்ட தரமிடுதல்களையும் மிக மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினையும் காட்டுகின்றது. நிதியியல் கடப்பாடுகளை உரிய நேரத்தில் கொடுப்பனவு செய்யக்கூடிய சிறப்பான பலம் பொருந்திய இயலளவைக் கொண்டவற்றுக்கே இது வழங்கப்படுகின்றது. AA குறியீட்டின் மூலம் உயர் தரமிடுதல் காட்டப்படுவதோடு மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பு காட்டப்படுகின்றது. A குறியீட்டின் மூலம் உயர் மத்திய தரம் காட்டப்படுவதோடு குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பு காட்டப்படுகிறது. BBB குறியீட்டின் மூலம் கீழ்மட்ட முதலீட்டுத் தரமிடுதலும் கொடுகடன் இடர்நேர்வு தொடர்பில் நடைமுறையில் குறைந்த எதிர்பார்ப்பு உள்ளதென்பதும் காட்டப்படுவதோடு, பாதுகாப்பு அளவீடுகளின் தேவையை வலியுறுத்துகிறது. AAA குறியீட்டுக்குக் குறைவான தரங்களை பிரதானமான வகைகளுக்கு இடையிலுள்ள நிலைகளைக் காட்டும் பொருட்டு + அல்லது - அடையாளத்தின் மூலம் வகைப்படுத்திக் காட்டலாம். NR குறியீட்டின் மூலம் நிறுவனம், ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் அல்லது பிச் றேட்டிங்ஸ் தரமிடலுக்கு உள்ளாக்கப்படவில்லையென்பது காட்டப்பட்டுள்ளது.

கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை	கொடுகடன் தரமிடல்	2022 ரூபா 000	%	2021 ரூபா 000	%
காசு மற்றும் காசுக்குச் சமமானவை					
பெடரல் றேசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ றேசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றேசேர்வ் வங்கி/ இந்திய றேசேர்வ் வங்கி/ சீன மக்கள் வங்கி		**651,044,824**	**14.55%**	497,630,980	16.67%
ஏனைய இணைத்தரப்பினர்	**AAA**	**-**	**0.00%**	4,009,562	0.13%
	AA-	**96,911**	**0.00%**	2,004,771	0.07%
	A+	**80,743**	**0.00%**	8,094,146	0.27%
	A-	**353,258**	**0.01%**	768,180	0.03%
	BBB	**68,247**	**0.00%**	40,255	0.00%
	NR	**43,881**	**0.00%**	214,558	0.01%
		651,687,864	**14.56%**	512,762,452	17.18%
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்					
	AAA	**1,090,124**	**0.03%**	2,830,756	0.09%
	AA+	**9,777,301**	**0.23%**	5,987,488	0.20%
		10,867,425	**0.24%**	8,818,244	0.29%
பெறுதி நிதியியல் சாதனங்கள்					
	A	**-**	**0.00%**	55,853	0.00%
உள்நாட்டு ரீதியாகத் தரமிடப்பட்டவை	**AA-**	**-**	**0.00%**	34,088,798	1.14%
	A+	**-**	**0.00%**	19,788,494	0.67%
	A	**343,437**	**0.01%**	33,378	0.00%
	A-	**58,143**	**0.00%**	-	0.00%
	BBB-	**-**	**0.00%**	2	0.00%
	BB+	**-**	**0.00%**	56,311	0.00%
		401,580	**0.01%**	54,022,836	1.81%
ப.நா.நி தொடர்பான சொத்துக்கள்		**281,421,074**	**6.29%**	188,045,837	6.30%
		281,421,074	**6.29%**	188,045,837	6.30%
ஏனைய பெறத்தக்கவைகள்	**A**	**37,022,631**	**0.83%**	-	0.00%
		37,022,631	**0.83%**	-	0.00%
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**981,400,574**	**21.93%**	763,649,369	25.58%

கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை	கொடுகடன் தரமிடல்	2022 ரூபா 000	%	2021 ரூபா 000	%
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்					
இலங்கை அரச பிணையங்கள்	**RD**	**2,498,995,015**	**55.85%**	-	0.00%
	CCC+	**-**	**0.00%**	1,377,820,347	46.15%
மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	**AAA**	**8,624,339**	**0.19%**	-	0.00%
	AA-	**-**	**0.00%**	557,856,718	18.69%
	A	**650,453,702**	**14.54%**	5,656,932	0.19%
	A-	**15,966,586**	**0.36%**	-	0.00%
	BBB-	**3,327,832**	**0.07%**	-	0.00%
	NR	**19,696,760**	**0.45%**	4,018,662	0.14%
அரசிற்கான தற்காலிக முற்பணங்கள்	**RD**	**235,638,700**	**5.27%**	-	0.00%
	CCC+	**-**	**0.00%**	150,128,800	5.03%
நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்	**NR**				
வங்கிகளுக்கான கடன்கள்	**AAA**	**1,817,132**	**0.04%**	1,671,218	0.06%
	AA-	**3,327**	**0.00%**	24,917	0.00%
	A+	**-**	**0.00%**	51,999,491	1.74%
	A	**-**	**0.00%**	16,372,930	0.55%
	A-	**12,416,991**	**0.28%**	9,977,843	0.33%
	BBB+	**5,473,684**	**0.12%**	-	0.00%
	BBB-	**79,516**	**0.00%**	6,201,554	0.21%
	BB+	**1,134,172**	**0.03%**	2,933,926	0.10%
	NR	**9,070,842**	**0.20%**	2,688,669	0.09%
ஏனைய சொத்துக்கள்	**AAA**	**-**	**0.00%**	325,579	0.01%
	AA-	**188,211**	**0.00%**	5,699,123	0.19%
	A+	**-**	**0.00%**	727,308	0.02%
	A	**299,219**	**0.01%**	-	0.00%
	A-	**149,510**	**0.00%**	-	0.00%
	RD	**21,460,386**	**0.48%**	-	0.00%
	CCC+	**-**	**0.00%**	19,206,430	0.64%
	NR	**8,085,234**	**0.18%**	8,105,330	0.27%
மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**3,492,960,528**	**78.07%**	2,221,789,193	74.42%
மொத்த நிதியியல் சொத்துக்கள்		**4,474,361,102**	**100.00%**	2,985,438,562	100.00%

(ஈ) பிரதானமான கொடுகடன் வகைப்படுத்தலின்படியான சுருக்கம்

	கொடுகடன் தரமிடல்	2022 ரூபா 000	%	2021 ரூபா 000	%
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்					
பெடரல் றேசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ றேசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றேசேர்வ் வங்கி/ இந்திய றேசேர்வ் வங்கி/ சீன மக்கள் வங்கி		**651,044,824**	**14.55%**	497,630,980	16.67%
ப.நா. நிதியம் தொடர்பான சொத்துக்கள்		**281,421,074**	**6.29%**	188,045,837	6.30%
	AAA	**1,090,124**	**0.01%**	6,840,318	0.22%
	AA+/-	**9,874,212**	**0.22%**	7,992,259	0.27%
	A+/-	**434,001**	**0.01%**	8,918,179	0.30%
	BBB+/-	**68,247**	**0.00%**	40,255	0.00%
	NR	**43,881**	**0.00%**	214,558	0.01%
உள்நாட்டு ரீதியாக தரமிடப்பட்டவை	**AA+/-**	**-**	**0.00%**	34,088,798	1.14%
	A+/-	**37,424,211**	**0.85%**	19,821,872	0.67%
	BBB+	**-**	**0.00%**	2	0.00%
	BB+	**-**	**0.00%**	56,311	0.00%
	NR	**-**	**0.00%**	-	0.00%
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**981,400,574**	**21.93%**	763,649,369	25.58%
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்	**AAA**	**8,627,666**	**0.19%**	350,496	0.01%
	AA+/-	**188,211**	**0.00%**	615,555,332	20.62%
	A+/-	**684,759,692**	**15.29%**	32,735,013	1.09%
	BBB+/-	**4,541,520**	**0.10%**	9,135,480	0.31%
	BB+/-	**9,070,842**	**0.20%**	2,688,669	0.09%
	CCC+	**2,756,094,101**	**61.60%**	1,547,155,577	51.82%
	NR	**29,678,496**	**0.67%**	14,168,626	0.48%
மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**3,492,960,528**	**78.07%**	2,221,789,193	74.42%
மொத்த நிதியியல் சொத்துக்கள்		**4,474,361,102**	**100.00%**	2,985,438,562	100.00%

(உ) கொடுகடன் தரப் பகுப்பாய்வு

கொடுகடன் தரமிடலின்படி கொடுகடன் இடர்நேர்விற்கான அதிகபட்ச வெளிப்படுத்தல்

கீழேயுள்ள அட்டவணையானது பதிவழிக்கப்பட்ட செலவு மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதியியல் சொத்துக்களின் கொடுகடன் தரம் தொடர்பான தகவலைத் தருகின்றது.

	கொடுகடன் தரமிடல்	எதிர்பார்க்கப் படும் கொடு கடன் இழப்பிற்குட் படாதவை	12 மாத எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு	ஆயுட்கால கொடுகடன் இழப்பு		2022
		ரூபா 000	கட்டம் 1 ரூபா 000	கட்டம் 2 ரூபா 000	கட்டம் 3 ரூபா 000	மொத்தம் ரூபா 000
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்						
காசும் காசிற்குச் சமமானவையும்						
பெடரல் றேசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ றேசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றேசேர்வ் வங்கி/ இந்திய றேசேர்வ் வங்கி/ சீன மக்கள் வங்கி		-	649,672,094	2,217,173	-	651,889,267
	AAA	-	-	-	-	-
	AA-	-	97,027	-	-	97,027
	A+	-	80,749	-	-	80,749
	A-	-	12,185	341,301	-	353,486
	BBB	-	68,279	-	-	68,279
	NR	-	43,887	-	-	43,887
மொத்த கொண்டுசெல்லும் பெறுமதி		-	649,974,221	2,558,474	-	652,532,695
இழப்பீட்டுப் படி		-	(841,440)	(3,391)	-	(844,831)
கொண்டுசெல்லும் பெறுமதி		-	649,132,781	2,555,083	-	651,687,864
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்						
	AAA	-	1,090,124	-	-	1,090,124
	AA+	-	9,777,301	-	-	9,777,301
		-	10,867,425	-	-	10,867,425
ப.நா.நிதியம் தொடர்பான சொத்துக்கள்						
	NR	-	281,421,082	-	-	281,421,082
மொத்த கொண்டுசெல்லும் பெறுமதி		-	281,421,082	-	-	281,421,082
இழப்பீட்டுப் படி		-	(8)	-	-	(8)
கொண்டுசெல்லும் பெறுமதி		-	281,421,074	-	-	281,421,074

	கொடுகடன் தரமிடல்	எதிர்பார்க்கப் படும் கொடு கடன் இழப்பிற்குட் படாதவை	12 மாத எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு	ஆயுட்கால கொடுகடன் இழப்பு		2022
			கட்டம் 1	கட்டம் 2	கட்டம் 3	மொத்தம்
		ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்						
இலங்கை அரச பிணையங்கள்	அரச பிணையங்கள் (இடர்நேர்வில்லாத முதலீடுகள்)	2,498,995,015	-	-	-	2,498,995,015
		2,498,995,015	-	-	-	2,498,995,025
மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	ஏனைய இடர்நேர்வில்லாத முதலீடுகள்	698,069,219	-	-	-	698,069,219
		698,069,219	-	-	-	698,069,219
அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்	அரசிடமிருந்து பெறத்தக்கவைகள் (இடர்நேர்வில்லாத முதலீடுகள்)	235,638,700	-	-	-	235,638,700
		235,638,700	-	-	-	235,638,700
வங்கிகளுக்கான கடன்கள்	AAA	-	-	3,333	-	3,333
	AA+	-	-	-	-	-
	AA	-	-	-	-	-
	AA-	-	-	-	-	-
	A+	-	-	-	-	-
	A	-	5,513,369	6,906,357	-	12,419,726
	A-	-	4,133,725	1,342,976	-	5,476,701
	BBB+	-	-	79,786	-	79,786
	BBB	-	-	-	-	-
	BBB-	-	1,126,323	11,592	-	1,137,915
	BB+	-	-	9,318,648	-	9,318,648
	BB	-	-	-	-	-
	BB-	-	-	-	-	-
	NR	-	79,416	-	-	79,416
	இலங்கை மத்திய வங்கியின் கொடுகடன் உத்தரவாதத் திட்டம்	-	-	-	86,307	86,307
மொத்த கொண்டுசெல்லும் பெறுமதி		-	10,852,833	17,662,692	86,307	28,601,832
இழப்பீட்டுப் படி		-	(6,057)	(251,566)	(86,307)	(343,930)
கொண்டுசெல்லும் பெறுமதி		-	10,846,776	17,411,126	-	28,257,902
ஏனைய சொத்துக்கள்						
	அரச பிணையங்கள் (இடர்நேர்வில்லாத முதலீடுகள்)	17,919,801	-	-	-	17,919,801
	அரசிடமிருந்து பெறத்தக்கவைகள் (இடர்நேர்வில்லாத முதலீடுகள்)	3,540,585	-	-	-	3,540,585
	ஏனைய இடர்நேர்வில்லாத முதலீடுகள்	8,085,234	-	-	-	8,085,234
உள்நாட்டில் தரமிடப்பட்டவை	AAA	-	-	-	-	-
	AA-	-	188,293	-	-	188,293
	A+	-	-	-	-	-
	A	-	130,285	168,989	-	299,274
	A-	-	9,252	140,526	-	149,778
	BBB+	-	-	-	-	-
	BBB	-	-	-	-	-
	BBB-	-	-	-	-	-
	BB+	-	-	-	-	-
	BB	-	-	-	-	-
	BB-	-	-	-	-	-
	NR	-	-	-	2,226,887	2,226,887
மொத்த கொண்டுசெல்லும் பெறுமதி		29,545,620	327,830	309,515	2,226,887	32,409,852
இழப்பீட்டுப் படி		-	(86)	(319)	(2,226,887)	(2,227,292)
கொண்டுசெல்லும் பெறுமதி		29,545,620	327,744	309,196	-	30,182,560

2021 திசெம்பர் 31 இலுள்ளவாறான ஒப்பீட்டுத் தரவுகள் பின்வருமாறு:

	கொடுகடன் தரமிடல்	எதிர்பார்க்கப் படும் கொடுகடன் இழப்பிற்குட் படாதவை	12 மாத எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு	ஆயுட்கால கொடுகடன் இழப்பு		2021
			கட்டம் 1	கட்டம் 2	கட்டம் 3	மொத்தம்
		ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்						
காசும் காசுக்குச் சமமானவையும்						
பெடரல் றேசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ றேசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றேசேர்வ் வங்கி/ இந்திய றேசேர்வ் வங்கி/ சீன மக்கள் வங்கி			487,881,870	9,805,548	-	497,687,418
	AAA	-	4,009,618	-	-	4,009,618
	AA-	-	2,004,789	-	-	2,004,789
	A+	-	8,094,153	-	-	8,094,153
	A	-	-	-	-	-
	A-	-	768,194	-	-	768,194
	BBB+		-	-	-	-
	BBB	-	40,261	-	-	40,261
	NR	-	-	243,387	-	243,387
மொத்த கொண்டுசெல்லும் பெறுமதி		-	502,798,885	10,048,935	-	512,847,820
இழப்பீட்டுப் படி		-	(52,009)	(33,359)	-	(85,368)
கொண்டுசெல்லும் பெறுமதி		-	502,746,876	10,015,576	-	512,762,452
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்						
	AAA	-	2,830,756	-	-	2,830,756
	AA+	-	5,987,488	-	-	5,987,488
	AA	-	-	-	-	-
	AA-	-	-	-	-	-
	A+	-	-	-	-	-
		-	8,818,244	-	-	8,818,244
ப.நா.நிதியம் தொடர்பான சொத்துக்கள்						
	NR	-	188,045,840	-	-	188,045,840
மொத்த கொண்டுசெல்லும் பெறுமதி		-	188,045,840	-	-	188,045,840
இழப்பீட்டுப் படி		-	(3)	-	-	(3)
கொண்டுசெல்லும் பெறுமதி		-	188,045,837	-	-	188,045,837
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்						
இலங்கை அரச பிணையங்கள்	அரச பிணையங்கள் (இடர்நேர்வில்லாத முதலீடுகள்)	1,377,820,347	-	-	-	1,377,820,347
		1,377,820,347	-	-	-	1,377,820,347
மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	ஏனைய இடர்நேர்வில்லாத முதலீடுகள்	567,532,312	-	-	-	567,532,312
		567,532,312	-	-	-	567,532,312
அரசிற்கான தற்காலிக முற்பணங்கள்	அரசிடமிருந்து பெறத்தக்கவைகள் (இடர்நேர்வில்லாத முதலீடுகள்)	150,128,800	-	-	-	150,128,800
		150,128,800	-	-	-	150,128,800

	கொடுகடன் தரமிடல்	எதிர்பார்க்கப் படும் கொடு கடன் இழப்பிற்குட் படாதவை	12 மாத எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு	ஆயுட்கால கொடுகடன் இழப்பு		2021
			கட்டம் 1	கட்டம் 2	கட்டம் 3	மொத்தம்
		ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000
வங்கிகளுக்கான கடன்கள்	AAA	-	24,917	-	-	24,917
	AA+	-	-	-	-	-
	AA-	-	46,591,702	5,408,477	-	52,000,179
	A+	-	16,374,633	-	-	16,374,633
	A	-	9,979,661	-	-	9,979,661
	A-	-	-	-	-	-
	BBB+	-	6,205,432	-	-	6,205,432
	BBB-	-	2,939,496	-	-	2,939,496
	BB+	-	390,018	2,320,747	-	2,710,765
	BB	-	-	-	-	-
	BB-	-	-	-	-	-
	NR	-	373,575	-	-	373,575
	இலங்கை மத்திய வங்கியின் கொடுகடன் உத்தரவாதத் திட்டம்	-	-	-	13,016	13,016
மொத்த கொண்டுசெல்லும் பெறுமதி		-	82,879,434	7,729,224	13,016	90,621,674
இழப்பீட்டுப் படி		-	(14,435)	(21,477)	(13,016)	(48,928)
கொண்டுசெல்லும் பெறுமதி		-	82,864,999	7,707,747	-	90,572,746
ஏனைய சொத்துக்கள்						
	அரச பிணையங்கள் (இடர்நேர்வில்லாத முதலீடுகள்)	15,118,446	-	-	-	15,118,446
	அரசிடமிருந்து பெறத்தக்கவைகள் (இடர்நேர்வில்லாத முதலீடுகள்)	4,087,983	-	-	-	4,087,983
	ஏனைய இடர்நேர்வில்லாத முதலீடுகள்	8,105,330	-	-	-	8,105,330
தொடர்பான தரப்பினர்	AAA	-	325,580	-	-	325,580
	AAA-	-	5,681,358	17,393	-	5,699,251
	AA+	-	-	-	-	-
	A+	-	600,404	127,206	-	727,610
	A	-	-	-	-	-
	A-	-	-	-	-	-
	BBB+	-	-	-	-	-
	BBB	-	-	-	-	-
	BBB-	-	-	-	-	-
	BB+	-	-	-	-	-
	BB	-	-	-	-	-
	BB-	-	-	-	-	-
	NR	-	-	-	2,226,887	2,226,887
மொத்த கொண்டுசெல்லும் பெறுமதி		27,311,759	6,607,842	144,599	2,226,887	36,291,087
இழப்பீட்டுப் படி		-	(189)	(241)	(2,226,887)	(2,227,317)
கொண்டுசெல்லும் பெறுமதி		27,311,759	6,607,653	144,358	-	34,063,770

(ஊ) கொடுகடன் வெளிப்படுத்துகை அசைவு - கட்ட ரீதியாகத் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு

கீழ்வரும் அட்டவணைகள் நிதியியல் சாதனங்களின் வகைப்படுத்தலின்படி பெறுமதி இழப்பிற்கான படியின் ஆரம்பம் முதல் இறுதி நிலுவை வரையான இணங்குவிப்பைக் காட்டுகின்றது.

	2022				2021			
	கட்டம் 1 ரூபா 000	கட்டம் 2 ரூபா 000	கட்டம் 3 ரூபா 000	மொத்தம் ரூபா 000	கட்டம் 1 ரூபா 000	கட்டம் 2 ரூபா 000	கட்டம் 3 ரூபா 000	மொத்தம் ரூபா 000
காசும் காசிற்குச் சமமானவைகள்								
சனவரி 1 இலுள்ளவாறு நிலுவை	52,009	33,359	-	85,368	90,277	180,061	-	270,338
கட்டம் 1 இற்கான மாற்றல்	28,828	(28,828)	-	-	1,164	(1,164)	-	-
கட்டம் 2 இற்கான மாற்றல்	(34)	34	-	-	(52)	52	-	-
கட்டம் 3 இற்கான மாற்றல்	-	-	-	-	-	-	-	-
வருமானக் கூற்றுக்குப் பதியப்பட்ட பெறுமதி	760,638	(1,174)	-	759,464	(39,380)	(145,590)	-	(184,970)
திசெம்பர் 31 இலுள்ளவாறு நிலுவை	841,441	3,391	-	844,832	52,009	33,359	-	85,368
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணைங்கள்								
சனவரி 1 இலுள்ளவாறு நிலுவை	995	-	-	995	36,546	2,062,175	-	2,098,721
கட்டம் 1 இற்கான மாற்றல்	-	-	-	-	-	-	-	-
கட்டம் 2 இற்கான மாற்றல்	-	-	-	-	-	-	-	-
கட்டம் 3 இற்கான மாற்றல்	-	-	-	-	-	-	-	-
வருமானக் கூற்றுக்குப் பதியப்பட்ட பெறுமதி	3,749	-	-	3,749	(35,551)	(2,062,175)	-	(2,097,726)
திசெம்பர் 31 இலுள்ளவாறு நிலுவை	4,744	-	-	4,744	995	-	-	995
ப.நா.நிதிய தொடர்பான சொத்துக்கள்								
சனவரி 1 இலுள்ளவாறு நிலுவை	3	-	-	3	2	-	-	2
கட்டம் 1 இற்கான மாற்றல்	-	-	-	-	-	-	-	-
கட்டம் 2 இற்கான மாற்றல்	-	-	-	-	-	-	-	-
கட்டம் 3 இற்கான மாற்றல்	-	-	-	-	-	-	-	-
வருமானக் கூற்றுக்குப் பதியப்பட்ட பெறுமதி	5	-	-	5	1	-	-	1
திசெம்பர் 31 இலுள்ளவாறு நிலுவை	8	-	-	8	3	-	-	3
வங்கிகளுக்கான கடன்கள்								
சனவரி 1 இலுள்ளவாறு நிலுவை	14,435	21,477	-	35,912	6,215	148,153	-	154,368
கட்டம் 1 இற்கான மாற்றல்	-	-	-	-	140,773	(140,773)	-	-
கட்டம் 2 இற்கான மாற்றல்	(4,804)	4,804	-	-	(37)	37	-	-
கட்டம் 3 இற்கான மாற்றல்	-	-	-	-	-	-	-	-
வருமானக் கூற்றுக்குப் பதியப்பட்ட பெறுமதி	(3,574)	225,285	-	221,711	(132,516)	14,060	-	(118,456)
திசெம்பர் 31 இலுள்ளவாறு நிலுவை	6,057	251,566	-	257,623	14,435	21,477	-	35,912
கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட கோரல்கள்								
சனவரி 1 இலுள்ளவாறு நிலுவை	-	-	13,016	13,016	-	-	-	-
கட்டம் 1 இற்கான மாற்றல்	-	-	-	-	-	-	-	-
கட்டம் 2 இற்கான மாற்றல்	-	-	-	-	-	-	-	-
கட்டம் 3 இற்கான மாற்றல்	-	-	-	-	-	-	-	-
வருமானக் கூற்றுக்குப் பதியப்பட்ட பெறுமதி	-	-	73,291	73,291	-	-	13,016	13,016
திசெம்பர் 31 இலுள்ளவாறு நிலுவை	-	-	86,307	86,307	-	-	13,016	13,016
ஏனைய சொத்துக்கள்								
சனவரி 1 இலுள்ளவாறு நிலுவை	189	241	2,226,887	2,227,317	48	79,524	183,276	262,848
கட்டம் 1 இற்கான மாற்றல்	-	-	-	-	(1)	1	-	-
கட்டம் 2 இற்கான மாற்றல்	(1)	1	-	-	-	-	-	-
கட்டம் 3 இற்கான மாற்றல்	-	-	-	-	-	-	-	-
வருமானக் கூற்றுக்குப் பதியப்பட்ட பெறுமதி	(102)	77	-	(25)	142	(79,284)	2,043,611	1,964,469
திசெம்பர் 31 இலுள்ளவாறு நிலுவை	86	319	2,226,887	2,227,292	189	241	2,226,887	2,227,317
கொடுகடன் உத்தரவாதங்கள்								
சனவரி 1 இலுள்ளவாறு நிலுவை	1,011,732	-	-	1,011,732	-	-	-	-
கட்டம் 1 இற்கான மாற்றல்	-	-	-	-	-	-	-	-
கட்டம் 2 இற்கான மாற்றல்	-	-	-	-	-	-	-	-
கட்டம் 3 இற்கான மாற்றல்	-	-	-	-	-	-	-	-
வருமானக் கூற்றுக்குப் பதியப்பட்ட பெறுமதி	(792,408)	-	-	(792,408)	1,011,732	-	-	1,011,732
திசெம்பர் 31 இலுள்ளவாறு நிலுவை	219,324	-	-	219,324	1,011,732	-	-	1,011,732

(எ) வைத்திருக்கப்பட்ட பிணையுறுதிகள் மற்றும் ஏனைய கொடுகடன் மேம்பாடுகள்

வங்கி அதன் ஒரு சில கொடுகடன் வெளிப்படுத்துகைக்கெதிராக பிணைகள் மற்றும் ஏனைய கொடுகடன் மேம்படுத்தல்களை வைத்திருந்தது. பின்வரும் அட்டவணையானது பல்வேறு வகையான நிதியியல் சொத்துகளுக்கெதிராக வைத்திருக்கபட்ட பிணையுறுதிகளின் முதன்மையான வகைகளை காட்டுகின்றது.

கொடுகடன் வெளிப்படுத்துகையின் வகை

	பிணையுறுதித் தேவைப்பாடுகளுக்குட்பட்ட வெளிப்படுத்துகையின் சதவீதம்		
	2022	**2021**	**வைத்திருக்கப்பட்ட பிணையுறுதியின் முதன்மை வகை**
மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	100	100	சந்தைப்படுத்தக்கூடிய அரச பிணையங்கள்
வங்கிகளுக்கான கடன்கள்			
சௌபாக்யா கொவிட் புத்துயிரளிப்பு வசதி	100	100	சந்தைப்படுத்தக்கூடிய அரச பிணையங்கள் மற்றும் பெறத்தக்க கடன்கள்

ஏ) கொடுகடன் இழப்பிலிருந்து உருவாகின்ற தொகைகள்

இக்காலப்பகுதியில் நிதிக் கருவிகளின் மொத்தக் கொண்டு செல்லும் தொகையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்கள், இழப்புக் கொடுப்பனவின் மாற்றங்களுக்கு எவ்வாறு பங்களித்தன என்பதற்காக விளக்கத்தைப் பின்வரும் அட்டவணை வழங்குகின்றது.

	2021		
	தாக்கம்: அதிகரிப்பு/ (குறைவு)		
	கட்டம் 1	கட்டம் 2	கட்டம் 3
	ரூபா 000	ரூபா 000	ரூபா 000
காசும் காசிற்குச் சமமானவைகள்	789,431	(29,967)	-
குறைவடைந்த கடன் தரப்படுத்தல் மதிப்பீடுகளினால் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நடவடிக்கைகளின் தலையீடு மற்றும் அரச கடன் தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காக திரவச் சொத்துக்களை அதிகரிக்க வேண்டிய நோக்கத்திற்காக காசு மீதிகள் அதிகரிக்கப்பட்டன			
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள்	3,749	-	-
அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணயக் கடன் பொறுப்புக்களைச் செலுத்துவதற்காக நிலையான வருமான பிணைய முதலீடுகளின் பெரும்பகுதி விற்பனை செய்யப்பட்டது			
வங்கிகளுக்கான கடன்கள்			
- ஏற்கனவேயுள்ள நிலுவைகள்			
இவ்வாண்டு காலப்பகுதியில் கடன் மீள்கொடுப்பனவுகளின் காரணமாகக் குறைக்கப்பட்டவை	(8,378)	230,089	-
வங்கிகளுக்கு கொடுகடன் உத்தரவாதக் கோரல்களின் கொடுப்பனவு காரணமாக அதிகரிக்கப்பட்டவை	-	-	73,291
உள்ளக நிதியங்கள்			
- ஏற்கனவேயுள்ள நிலுவைகள்			
தரமிடாத இணைத்தரப்பினர்களுடனான குறைக்கப்பட்ட வெளிப்படுத்துகையின் காரணமாக குறைவடைந்தவை	47	78	-
- உள்ளீர்க்கப்பட்ட நிலுவைகள்			
இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களுக்கு பிரதேச அபிவிருத்தித் திணைக்கள முதலீட்டு நிலுவைகளின் ஒருங்கிணைப்புக் காரணமாக அதிகரிக்கப்பட்டவை	(151)	-	-
கொடுகடன் உத்தரவாதங்கள்			
எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மதிப்பீடு காரணிப்படுத்தப்பட்டமை காரணமாக துணைக் கடன்பாட்டாளர்களின் செயற்படாத விகிதங்களின் காரணமாக அதிகரிக்கப்பட்டவை	(792,408)	-	-
	(7,710)	200,200	73,291

	2021		
	தாக்கம்: அதிகரிப்பு/ (குறைவு)		
	கட்டம் 1	கட்டம் 2	கட்டம் 3
	ரூபா 000	ரூபா 000	ரூபா 000
காசும் காசிற்குச் சமமானவைகள்	(38,267)	(146,702)	-
மேம்பட்ட கொடுகடன் தரமிடல்களுடனும் இணைத்தரப்பினர்களுடனும் காசு மீதிகளின் அதிகரிப்பு			
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள்	(35,551)	(2,062,174)	-
இவ்வாண்டு காலப்பகுதியில் நிலையான வருமான பிணையங்கள் சொத்துப்பட்டியலின் ஒரு பகுதியை அகற்றுதல			
வங்கிகளுக்கான கடன்கள்			
- ஏற்கனவேயுள்ள நிலுவைகள்			
இவ்வாண்டு காலப்பகுதியில் கடன் மீள்கொடுப்பனவுகளின் காரணமாகக் குறைக்கப்பட்டவை	-	(140,425)	-
வங்கிகளுக்கு கொடுகடன் உத்தரவாதக் கோரல்களின் கொடுப்பனவு காரணமாக அதிகரிக்கப்பட்டவை	-	-	13,016
- உள்ளீர்க்கப்பட்ட நிலுவைகள்			
இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களுக்கு பிரதேச அபிவிருத்தித் திணைக்கள முதலீட்டு நிலுவைகளின் ஒருங்கிணைப்புக் காரணமாக அதிகரிக்கப்பட்டவை	4,555	13,749	-
உள்ளக நிதியங்கள்			
- ஏற்கனவேயுள்ள நிலுவைகள்			
தரமிடாத இணைத்தரப்பினர்களுடனான குறைக்கப்பட்ட வெளிப்படுத்துகையின் காரணமாக குறைவடைந்தவை	-	(79,282)	-
- உள்ளீர்க்கப்பட்ட நிலுவைகள்			
இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களுக்கு பிரதேச அபிவிருத்தித் திணைக்கள முதலீட்டு நிலுவைகளின் ஒருங்கிணைப்புக் காரணமாக அதிகரிக்கப்பட்டவை	151	-	-
கொடுகடன் உத்தரவாதங்கள்			
எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மதிப்பீடு காரணிப்படுத்தப்பட்டமை காரணமாக துணைக் கடன்பாட்டாளர்களின் செயற்படாத விகிதங்களின் காரணமாக அதிகரிக்கப்பட்டவை	1,011,732	-	-
	942,620	(2,414,834)	13,016

ஐ) பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் கொடுகடன் பெறுமதியிழப்புச் சொத்துக்களின் தேறிய கொண்டு செல்லும் தொகை

பின்வரும் அட்டவணையானது கொடுகடன் குறைபாடுள்ள சொத்துக்களின் தேறிய கொண்டு செல்லும் தொகையில் ஏற்படும் மாற்றங்களின் ஒரு இணக்கத்தை வெளிப்படுத்துகிறது.

	2022	2021
	ரூபா 000	ரூபா 000
சனவரி 1 இலுள்ளவாறான பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் கொடுகடன் இழக்கப்பட்ட சொத்துக்கள்	-	-
ஆண்டு காலப்பகுதியில் கொடுகடன் பெறுமதியிழக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்பட்டவை	73,291	13,016
பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் திட்டங்களின் கொடுகடன் பெறுமதியிழக்கப்பட்ட சொத்துக்களின் ஒருங்கிணைந்தவை	-	2,043,610
எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புப் படியிலுள்ள மாற்றம்	(73,291)	(2,056,626)
திசெம்பர் 31 இலுள்ளவாறான பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் கொடுகடன் இழக்கப்பட்ட சொத்துக்கள்	-	-

48.2 வட்டி வீத இடர்நேர்வு

(அ) வெளிநாட்டு நாணய வட்டி வீத உணர்திறன்

வட்டி வீத இடர்நேர்வு என்பது வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து எழுகின்ற இடர்நேர்வாகும்

ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்திலான முதலீடுகள் தவிர்ந்த நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் வட்டி வீத உணர்திறனானது, வட்டி வீதம் 10 அடிப்படைப்புள்ளிகளினால் மாற்றமுறுவதன் காரணமாக உருவாகக்கூடிய சாத்தியமான இலாபம் அல்லது இழப்புக்களின் அடிப்படையில் அளவிடப்படுகின்றது. ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் வட்டி வீத உணர்திறனானது, வட்டி வீதம் 1 அடிப்படைப்புள்ளியினால் மாற்றமுறுவதன் காரணமாக உருவாகக் கூடிய சாத்தியமான இலாபம் அல்லது இழப்புக்களின் அடிப்படையில் அளவிடப்படுகின்றது. பிரிவுகளாக்கப்பட்ட நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் வெளிப்படுத்துகையின் உணர்திறனானது கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது:

பட்டியல் பிரிவு	நிகழக்கூடிய இழப்பு (ஐ.அ.டொ. மில்.)	
	2022	2021
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி	**0.10**	0.16

வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வினை பின்வரும் உபாய முறைகளைப் பயன்படுத்தி இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் முகாமை செய்கின்றது:

i) வெளிநாட்டுச் சொத்துப்பட்டியல் மீதான வட்டி வீத மாற்றங்களின் தாக்கத்தினை வட்டி வீத உணர்திறன் அளவிடுகின்ற அதேவேளை, வட்டி வீதத்தினையும் அதேநேரம் முதலீட்டுக் காலவரையறையையும் கவனத்திலெடுக்கின்றதான சீர்செய்யப்பட்ட காலவரையறையை வட்டி வீத இடர்நேர்வினை அளவிடுவதற்காக வங்கி பயன்படுத்துகின்றது. சீர்செய்யப்பட்ட காலவரையறையானது வட்டி வீதத்திலான ஒரு சதவீத மாற்றத்திற்கான பிணையங்களின் விலையிலான மாற்றத்தை (விளைவு) அளவிடுகின்றது. உயர்ந்தளவு சீர்செய்யப்பட்ட காலவரையறையானது உயர்ந்தளவு இடர்நேர்வினைக் குறிக்கின்றது. ஆதலால் வங்கியானது நிதிச் சந்தையிலான அபிவிருத்தி, சொத்துப்பட்டியலின் பண்புகள் மற்றும் முறிப்பட்டியலின் இடர்நேர்வேற்பு விருப்பினைக் கவனத்திற் கொண்டு காலத்திற்குக் காலம் பொருத்தமான சீர்செய்யப்பட்ட காலவரையறையை விதிக்கின்றது. வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் சீர்செய்யப்பட்ட காலவரையறை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

முதலீட்டுப் பிரிவு	மாற்றப்பட்ட காலவரையறை	
	2022	2021
மூலதனச் சந்தை (நிலையான வருமானப் பிணையங்கள்)	**3.36**	3.69

ii) சீர்செய்யப்பட்ட காலவரையானது விலையிலான அதிகளவு மாற்றத்தினைக் கணிப்பிடாததால், வெளிநாட்டு ஒதுக்குப் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வு முகாமைத்துவத்தின் பொருட்டு புறக்குவிவான அளவீடொன்று பயன்படுத்தப்படுகின்றது. காலவரையறையை குறிக்கும் நேர்கோட்டிலிருந்து முறி விலை விளைவு வளையின் வேறுபாட்டினை புறக்குவிவு அளவிடுகின்றது. முறி விலையின் சீர்செய்யப்பட்ட சராசரிக் காலவரையறையின் மேம்பாட்டினை இது அனுமதிக்கின்றது. புறக்குவிவு என்பது விளைவு வீத மாற்றத்திற்கான காலப்பகுதி மாற்றமாகும். இது மாற்றப்பட்ட காலப்பகுதிக்கான ஊகத் தவறுகளை அளவிடுகின்றது. மறுசொல்லில் விளக்குவதாயின் இது, இதன் விளைவு தொடர்பான பிணைய விலைகளின் இரண்டாவது பெறுதியாகும்.

பிரிவாக்கப்பட்ட நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் புறக்குவிவு

பட்டியல் பிரிவு	சாத்தியமான நட்டம் (ஐ.அ.டொ. மில்.)	
	2022	2021
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி	**0.145**	0.180

iii) இடர்நேர்வேற்புப் பெறுமதி

இடர்நேர்வேற்புப் பெறுமதியானது நிதியியல் சந்தை அசைவுகளிலிருந்தான சாதாரண சந்தை நிலைமைகளின் கீழ் சொத்துப்பட்டியலின் கீழ் நோக்கிய இடர்நேர்வை தனி இலக்கத்தில் கணிக்குகின்றது. எனவே, இடர்நேர்வேற்புப் பெறுமதியானது, இலக்கிடப்பட்ட அசைவு மீதான உயர்ந்தபட்ச இழப்பாக இருப்பதனால், உண்மையான இழப்பு அதிகமாக இருப்பதற்குரிய முற்குறிப்பிடப்பட்ட நிகழ்தகவு குறைவாகும். இடர்நேர்வேற்புப் பெறுமதியானது, இடர்நேர்வுகள் மற்றும் நிலைமைகளுக்கிடையில் கூட்டக்கூடிய, பணத்தின் நியதிகளிலான ஒரு இலக்கத்தை எமக்குத் தருகின்றது. வங்கியானது ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டவை தவிர்ந்த நிலையான வருமான பிணையங்கள் பட்டியலிற்கு இடர்நேர்வேற்புப் பெறுமதியைக் கணிப்பதற்கு 99 சதவீத நம்பக இடைவெளியில் 10 நாட்களுக்கான மென்டே கார்லோ முறைமையைப் பயன்படுத்துகின்றது. ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டவை நிலையான வருமான பிணையங்கள் பட்டியலிற்கு இடர்நேர்வேற்புப் பெறுமதியைக் கணிப்பதற்கு 99 சதவீத நம்பக இடைவெளியில் ஒரு மாதகால மென்டே கார்லோ முறைமையைப் பயன்படுத்துகின்றது.

பட்டியல் பிரிவு	இடர்நேர்வேற்புப் பெறுமதி (ஐ.அ.டொ. மில்.)		
	2022		2021
	வரலாற்று தரவு அடிப்படையில்	அளவுரு அடிப்படையில்	
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி	**0.65**	**0.63**	0.48

iv) வர்த்தகப்படுத்தல் மற்றும் திறந்த நிலைமை வரையறைகள்

தனிப்பட்ட வணிகர்களுக்காக "வணிகப்படுத்தல் அதிகாரம்" என்ற முறை மூலம் வங்கியானது ஒரு நாளுக்குள்ளேயான மற்றும் ஓரிரவு நிலை வரையறை மீது குறிப்பிட்ட வணிக வரையறைகளை வழங்கியுள்ளது.

(ஆ) உள்நாட்டு நாணய வட்டி வீத உணர்திறன்

அரசாங்க பிணையங்களின் சொத்துப்பட்டியலானது ப.நி.அ.நி 9இன் கீழ் வியாபார மாதிரி மதிப்பீட்டிற்கிணங்க ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் இ.ம. வங்கியின் நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படுகின்றது. வட்டி வருமானமொன்றை ஈட்டும் நோக்கத்துடன் வங்கி அரசாங்க பிணையங்களைக் கொள்வனவு செய்யாததால் இந்தப் பட்டியல் ஒரு முதலீட்டுப்பட்டியல் அல்ல. அதன் மையக் குறிக்கோள்களிலொன்றான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணுதல் தொடர்பாக நாணயத் தொழிற்பாட்டுக் கொள்கைகளை மேற்கொள்கையில் திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையில் ஏற்படுத்துவதற்காக அல்லது திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையிலிருந்து உள்ளீர்ப்பதற்காக வங்கி அரசாங்கப் பிணையங்களைக் கொள்வனவு செய்கின்றது அல்லது விற்பனை செய்கின்றது. ஆதலால், வங்கியின் பட்டியலிலுள்ள அரசாங்கப் பிணையங்களின் அளவு அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன. அத்துடன், பணச் சந்தையின் அடிப்படை வட்டி வீதங்களான மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் ஆகியவை வங்கியின் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது அதனால் நிர்ணயிக்கப்படும் கொள்கை வீதங்களாகும். மேலும், சந்தைக்கு ரூபாய் திரவத்தன்மையை வழங்குவதில் அல்லது சந்தையிலிருந்து திரவத்தன்மையை உள்ளீர்ப்பதில் வங்கியின் நடவடிக்கைகள் பொதுவான ரூபாய் சந்தை வட்டி வீதங்களில் கணிசமான தாக்கத்தைக் கொண்டுள்ளன. இதன்படி, வங்கியின் அரசாங்க பிணையங்களின் பட்டியலின் அளவுகளின் மாற்றங்களிலிருந்தும் அவ்வாறே வட்டி வீதங்களின் மாற்றங்களிலிருந்தும் எழுகின்ற அரசாங்கப் பிணையங்கள் பட்டியலிலிருந்து ஈட்டப்படும் வட்டி வருமானத்தின் மாற்றங்கள் வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் விளைவாக உருவாவதேயன்றி முதலீட்டுத் தீர்மானங்கள் காரணமாக அல்ல. எனவே, வங்கியானது உள்நாட்டு நாணயச் சொத்துக்களிலிருந்து உருவாகின்ற வட்டி வீத உணர்திறனைக் கவனத்திற் கொள்வதில்லை.

(இ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருகின்ற காலப்பகுதிக்குள் முதிர்ச்சியடையப்படும் அல்லது விலைமாற்றம் செய்யப்படும்

வெளிநாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் இடைவெளி:	நிறையேற்றப் பட்ட சராசரி வட்டி %	2022 மொத்தம்	6 மாதமும் அதற்குக் குறைவான	6 - 12 மாதங்கள்	1 - 2 ஆண்டுகள்	2 - 5 ஆண்டுகள்	5 ஆண்டு களுக்கு மேல்
		ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
வட்டி உணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்							
காசும் காசுக்குச் சமமானவையும்	0.0000	**651,687,864**	651,687,864	-	-	-	-
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீரமதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்	1.3005	**10,867,425**	34,125	1,076,988	-	9,756,312	-
ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்	2.9160	**2,006,502**	2,006,502	-	-	-	-
மொத்த வட்டி உணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**664,561,791**	653,728,491	1,076,988	-	9,756,312	-
வட்டி உணர்திறனற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்							
ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்		**279,414,572**	29,523	-	-	377,081	279,007,968
பெறுதி நிதியியல் சாதனங்கள்		**401,580**	401,580	-	-	-	-
ஏனைய பெறத்தக்கவை		**37,022,631**	37,022,631	-	-	-	-
மொத்த வட்டி உணர்திறனற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**316,838,783**	37,453,734	-	-	377,081	279,007,968
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**981,400,574**	691,182,225	1,076,988	-	10,133,393	279,007,968
வட்டி உணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்							
ப.நா.நி.	3.9160	**385,639,212**	28,807,533	33,580,393	-	308,932,705	14,318,581
ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்	0.0100	**736,258,129**	736,258,129	-	-	-	-
மொத்த வட்டி உணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்		**1,121,897,341**	765,065,662	33,580,393	-	308,932,705	14,318,581
வட்டி உணர்திறனற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்							
வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள்		**146,408,028**	146,408,028	-	-	-	-
பெறுதி நிதியியல் சாதனங்கள்		**71,697,994**	5,537,140	5,238,797	11,469,456	40,991,347	8,461,254
ப.நா.நிதியம்		**742,285,880**	-	-	-	-	742,285,880
ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள்		**594,383,451**	73,060,874	521,322,577	-	-	-
மொத்த வட்டி உணர்திறனற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்		**1,554,775,353**	225,006,042	526,561,374	11,469,456	40,991,347	750,747,134
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்		**2,676,672,694**	990,071,704	560,141,767	11,469,456	349,924,052	765,065,715
வெளிநாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் இடைவெளி		**(457,335,550)**	(111,337,171)	(32,503,405)	-	(299,176,393)	(14,318,581)

உள்நாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் இடைவெளி:	நிறையேற்றப் பட்ட சராசரி வட்டி %	2022 மொத்தம்	6 மாதமும் அதற்குக் குறைவான	6 - 12 மாதங்கள்	1 - 2 ஆண்டுகள்	2 - 5 ஆண்டுகள்	5 ஆண்டு களுக்கு மேல்
		ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
வட்டி உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்							
இலங்கை அரச பிணையங்கள்	4.7333	**2,498,995,015**	2,481,264,384	-	15,768,874	1,961,757	-
மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	15.5000	**698,069,219**	698,069,219	-	-	-	-
வங்கிகளுக்கான கடன்கள்	1.0000	**28,257,902**	26,398,994	196,759	1,561,865	100,284	-
ஏனைய சொத்துக்கள் - அலுவலர் கடன்கள்	3.3688	**8,053,421**	261,770	226,096	461,704	1,469,430	5,634,421
- ஏனையவை	9.0352	**18,556,718**	1,763,964	2,738,646	1,696,628	5,502,281	6,855,199
மொத்த வட்டி உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**3,251,932,275**	3,207,758,331	3,161,501	19,489,071	9,033,752	12,489,620
வட்டி உணர்திறனற்ற உள்நாட்டு நாணயச் சொத்துக்கள்							
அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்		**235,638,700**	235,638,700	-	-	-	-
ஏனைய சொத்துக்கள் - ஏனையவை		**3,572,421**	3,572,421	-	-	-	-
பங்குரிமை பிணையங்களிலான முதலீடுகள் - ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி		**1,817,132**	-	-	-	-	1,817,132
மொத்த வட்டி உணர்திறனற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**241,028,253**	239,211,121	-	-	-	1,817,132
மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**3,492,960,528**	3,446,969,452	3,161,501	19,489,071	9,033,752	14,306,752
வட்டி உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்							
துணைநில் வைப்பு வசதி	14.5000	**330,637,059**	330,637,059	-	-	-	-
மொத்த வட்டி உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்		**330,637,059**	330,637,059	-	-	-	-
வட்டி உணர்திறனற்ற உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்							
வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்		**323,046,181**	323,046,181	-	-	-	-
அரசு மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்		**221,411**	221,411	-	-	-	-
சுற்றோட்டத்திலுள்ள நாணயம்		**1,026,567,252**	1,026,567,252	-	-	-	-
ஏனைய செலுத்ததக்கவைகள்		**68,320,347**	68,320,347	-	-	-	-
மொத்த வட்டி உணர்திறனற்ற உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்		**1,418,155,191**	1,418,155,191	-	-	-	-
மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்		**1,748,792,250**	1,748,792,250	-	-	-	-
உள்நாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் இடைவெளி		**2,921,295,216**	2,877,121,272	3,161,501	19,489,071	9,033,752	12,489,620

2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஒப்பீட்டுத் தரவுகள் பின்வருமாறு:

வெளிநாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் இடைவெளி:	நிறையேற்றப் பட்ட சராசரி வட்டி %	2021 மொத்தம்	6 மாதமும் அதற்குக் குறைவான	6 - 12 மாதங்கள்	1 - 2 ஆண்டுகள்	2 - 5 ஆண்டுகள்	5 ஆண்டு களுக்கு மேல்
		ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
வட்டி உணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்							
காசும் காசுக்குச் சமமானவையும்	0.3942	**512,762,452**	512,762,452	-	-	-	-
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்	1.0799	**8,818,244**	44,216	-	2,798,126	5,975,902	-
ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்	0.0770	**38,244,608**	38,244,608	-	-	-	-
மொத்த வட்டி உணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**559,825,304**	551,051,276	-	2,798,126	5,975,902	-
வட்டி உணர்திறனற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்							
ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்		**149,801,229**	549	-	-	216,785	149,583,895
பெறுதி நிதியியல் சாதனங்கள்		**54,022,836**	396,731	981,508	1,980,676	33,823,817	16,840,104
மொத்த வட்டி உணர்திறனற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**203,824,065**	397,280	981,508	1,980,676	34,040,602	166,423,999
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**763,649,369**	551,448,556	981,508	4,778,802	40,016,504	166,423,999
வட்டி உணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்							
ப.நா.நி.	1.0770	**253,476,994**	12,582,348	16,744,203	-	200,569,216	23,581,227
ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்	0.0900	**104,764,616**	104,764,616	-	-	-	-
மொத்த வட்டி உணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்		**358,241,610**	117,346,964	16,744,203	-	200,569,216	23,581,227
வட்டி உணர்திறனற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்							
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்		**13,701**	13,701	-	-	-	-
பெறுதி நிதியியல் சாதனங்கள்		**1,139,323**	909,548	229,775	-	-	-
ப.நா.நி.		**416,588,249**	-	-	-	-	416,588,249
ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள்		**357,295,676**	40,161,167	317,134,509	-	-	-
மொத்த வட்டி உணர்திறனற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்		**775,036,949**	41,084,416	317,364,284	-	-	416,588,249
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்		**1,133,278,559**	158,431,380	334,108,487	-	200,569,216	440,169,476
வெளிநாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் இடைவெளி		**201,583,694**	433,704,312	(16,744,203)	2,798,126	(194,593,314)	(23,581,227)

உள்நாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் இடைவெளி	நிறையேற்றப் பட்ட சராசரி வட்டி %	2021 மொத்தம்	6 மாதமும் அதற்குக் குறைவான	6 - 12 மாதங்கள்	1 - 2 ஆண்டுகள்	2 - 5 ஆண்டுகள்	5 ஆண்டு களுக்கு மேல்
		ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
வட்டி உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்							
இலங்கை அரச பிணையங்கள்	5.1119	**1,377,820,347**	1,018,529,204	336,001,028	482,143	22,807,972	-
மீளவிற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	7.2022	**567,532,312**	567,532,312	-	-	-	-
வங்கிகளுக்கான கடன்கள்	1.0007	**90,572,746**	70,896,466	18,461,922	1,206,709	7,649	-
ஏனைய சொத்துக்கள் - அலுவலர் கடன்கள்	3.3012	**8,073,335**	437,218	263,936	539,529	1,723,015	5,109,637
- ஏனையவை	9.9582	**21,870,406**	6,509,990	488,099	3,196,792	5,483,148	6,192,377
மொத்த வட்டி உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**2,065,869,146**	1,663,905,190	355,214,985	5,425,173	30,021,784	11,302,014
வட்டி உணர்திறனற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்							
அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்		**150,128,800**	150,128,800	-	-	-	-
ஏனைய சொத்துக்கள் - ஏனையவை		**4,120,029**	4,120,029	-	-	-	-
பங்குரிமை மூலதன பிணையங்களிலான முதலீடுகள் - ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி		**1,671,218**	-	-	-	-	1,671,218
மொத்த வட்டி உணர்திறனற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**155,920,047**	154,248,829	-	-	-	1,671,218
மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்		**2,221,789,193**	1,818,154,019	355,214,985	5,425,173	30,021,784	12,973,232
வட்டி உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்							
துணைநில் வைப்பு வசதி	5.0000	**101,062,880**	101,062,880	-	-	-	-
மொத்த வட்டி உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்		**101,062,880**	101,062,880	-	-	-	-
வட்டி உணர்திறனற்ற உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்							
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்		**300,704,162**	300,704,162	-	-	-	-
அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்		**1,392,301**	1,392,301	-	-	-	-
சுற்றோட்டத்திலுள்ள நாணயம்		**1,005,099,066**	1,005,099,066	-	-	-	-
ஏனைய செலுத்தத்தக்கவைகள்		**19,163,882**	19,163,882	-	-	-	-
மொத்த வட்டி உணர்திறனற்ற உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்		**1,326,359,411**	1,326,359,411	-	-	-	-
மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்		**1,427,422,291**	1,427,422,291	-	-	-	-
உள்நாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் இடைவெளி		**1,964,806,266**	1,562,842,310	355,214,985	5,425,173	30,021,784	11,302,014

48.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு

வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழ் வைத்திருக்கப்படுகின்ற வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் மூலமாக வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் பிரதானமாக உருவாகின்றன. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மாற்றங்கள் உருவாகக்கூடிய போக்கின் காரணமாக வங்கியானது செலாவணி இடர்நேர்வுக்குள்ளாவதற்கான வாய்ப்பு உள்ளது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழுவினால் வங்கியின் பன்னாட்டு ஒதுக்கங்களில் பல்வேறு நாணய வகைகளும் வைத்திருக்கப்பட வேண்டிய வீதத் தொகைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. நாணயங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது அரச கடன்களை மீளச்செலுத்துவதன் தேவைப்பாடு தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுகின்றது. இதற்கிணங்க வங்கியானது பிரதானமான நாணய வகைகள் பலவற்றை, அதாவது ஐக்கிய அமெரிக்கா டொலர், ஸ்டேர்லிங் பவுண், யப்பான் யென், யூரோ, அவுஸ்திரேலிய டொலர் மற்றும் நியூசிலாந்து டொலர் ஆகியவற்றை வைத்திருக்கின்றது. வெளிநாட்டு நாணய நிலைமைகளுக்காக உருவாக்கப்பட்ட வரையறைகளுடனான இணங்குவிப்பு கண்காணிக்கப்படுகின்றது.

வெளிநாட்டு நாணயங்களுக்கான தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை

2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை பின்வருமாறு:

	நாணயம்									
2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு	ஐ. அமெரிக்க டொலர்	யூரோ	யப்பானிய யென்	ஸ்ரேலிங் பவுண்	சிஎஉ	அவுஸ்திரேலிய டொலர்	கனேடியன் டொலர்	நியூசிலாந்து டொலர்	ஏனைய நாணயங்கள்	அனைத்து நாணய வகைகளின் மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
வெளிநாட்டு நாணய நிதியியில் சொத்துக்கள்										
காசும் காசுக்குச் சமமானவையும்	118,593,473	2,002,372	130,117	373,692	-	62,567	17,653	10,635	531,342,187	652,532,696
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீரமதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்	10,867,425	-	-	-	-	-	-	-	-	10,867,425
பெறுதி நிதியியல் சாதனங்கள்	-	-	-	-	-	-	-	-	401,580	401,580
ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்	-	-	-	-	281,421,082	-	-	-	-	281,421,082
ஏனைய பெறத்தக்கவைகள்	63,061,108	-	-	-	-	-	-	-	-	63,061,108
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்	192,522,006	2,002,372	130,117	373,692	281,421,082	62,567	17,653	10,635	531,743,767	1,008,283,891
விகிதம்	19.09%	0.20%	0.01%	0.04%	27.91%	0.01%	0.00%	0.00%	52.74%	100%
வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்										
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்	146,407,286	-	-	687	-	55	-	-	-	146,408,028
பெறுதி நிதியியல் சாதனங்கள்	-	-	-	-	-	-	-	-	71,697,994	71,697,994
ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்	736,258,128	-	-	-	-	-	-	-	-	736,258,128
ப.நா. நிதியம்	-	-	-	-	1,127,925,092	-	-	-	-	1,127,925,092
ஏனையவை	74,083,264	-	-	-	-	12	-	-	520,300,174	594,383,450
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்	956,748,678	-	-	687	1,127,925,092	67	-	-	591,998,168	2,676,672,692
விகிதம்	35.74%	0.00%	0.00%	0.00%	42.14%	0.00%	0.00%	0.00%	22.12%	100%
தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை	(764,226,672)	2,002,372	130,117	373,005	(846,504,010)	62,500	17,653	10,635	(60,254,401)	(1,668,388,801)

காசும் காசிற்குச் சமமானவைகளும் வேறுபட்ட நாணயங்களின் வாங்கல் மற்றும் விற்றலுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கியிருந்ததுடன் இவற்றின் வர்த்தகத் திகதிகள் நடப்பு நிதியாண்டில் இடம்பெற்றதுடன் பெறுமதித் திகதி அடுத்த நிதியாண்டாக இருக்கும். அக்கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு:

2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு	இலங்கை ரூபா ரூ. 000	ஐ. அமெரிக்க டொலர் ரூ. 000	ஸ்ரேலிங் பவுண் ரூ. 000
கொள்வனவுகள்	38,782,950	242,870,513	5,467,529
விற்பனைகள்	(186,160,301)	(38,126,550)	-
முன்னோக்கிய எதிர் கணக்கு	-	-	-

2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை பின்வருமாறு

2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு	நாணயம்									
	ஐ. அமெரிக்க டொலர்	யூரோ	யப்பானிய யென்	ஸ்ரேலிங் பவுண்	சிஎஉ	அவுஸ்தி ரேலிய டொலர்	கனேடியன் டொலர்	நியூசிலாந்து டொலர்	ஏனைய நாணயங்கள்	அனைத்து நாணய வகைகளின் மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
வெளிநாட்டு நாணய நிதியியில் சொத்துக்கள்										
காசும் காசுக்குச் சமமானவையும்	138,000,677	568,045	9,461,477	1,996,158	-	650,773	31,353	11,271	362,128,066	512,847,820
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்	8,818,244	-	-	-	-	-	-	-	-	8,818,244
பெறுதி நிதியியல் சாதனங்கள்	55,853	-	-	-	-	-	-	-	53,966,983	54,022,836
ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்	-	-	-	-	188,045,840	-	-	-	-	188,045,840
ஏனைய பெறத்தக்கவைகள்	-	-	-	-	-	-	-	-	-	-
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியில் சொத்துக்கள்	146,874,774	568,045	9,461,477	1,996,158	188,045,840	650,773	31,353	11,271	416,095,049	763,734,740
விகிதம்	19.23%	0.08%	1.24%	0.26%	24.62%	0.09%	0.00%	0.00%	54.48%	100.00%
வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்										
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்	13,641	-	-	-	-	-	-	-	60	13,701
பெறுதி நிதியியல் சாதனங்கள்	-	-	-	-	-	-	-	-	1,139,323	1,139,323
ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்	104,764,616	-	-	-	-	-	-	-	-	104,764,616
ப.நா. நிதியம்	480,115	-	-	-	669,585,128	-	-	-	-	670,065,243
ஏனையவை	41,662,689	-	-	-	-	-	-	-	315,632,987	357,295,676
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்	146,921,061	-	-	-	669,585,128	-	-	-	316,772,370	1,133,278,559
விகிதம்	12.97%	0.00%	0.00%	0.00%	59.08%	0.00%	0.00%	0.00%	27.95%	100.00%
தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை	(46,287)	568,045	9,461,477	1,996,158	(481,539,288)	650,773	31,353	11,271	99,322,679	(369,543,819)

காசும் காசிற்குச் சமமானவைகளும் வேறுபட்ட நாணயங்களின் வாங்கல் மற்றும் விற்றலுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கியிருந்ததுடன் இவற்றின் வர்த்தகத் திகதிகள் நடப்பு நிதியாண்டில் இடம்பெற்றதுடன் பெறுமதித் திகதி அடுத்த நிதியாண்டாக இருக்கும். அக்கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு:

2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு	இலங்கை ரூபா ரூ. 000	ஐ. அமெரிக்க டொலர் ரூ. 000	யப்பானிய யென் ரூ. 000
கொள்வனவுகள்	145,161,075	50,073,176	-
விற்பனைகள்	(45,145,128)	(147,228,648)	(4,876,735)
முன்னோக்கிய எதிர் கணக்கு	2,016,260	-	-

பின்வரும் குறிப்பிடத்தக்க நாணய மாற்று வீதங்கள் வங்கியினால் பிரயோகிக்கப்பட்டன.

நாணயம்	சராசரி வீதம்		ஆண்டிறுதி உடனடி வீதம்	
	2022	2021	2022	2021
1 ஐ.அ.டொலர்	328.1818	200.1553	363.1100	200.4338
1 யூரோ	343.2079	236.2532	388.3461	227.8832
1 யப்பானிய யென்	2.4762	1.8137	2.7704	1.7417
1 ஸ்ரேலிங் பவுண்	400.7632	275.2172	437.4023	271.2270
1 சி.எ.உ	436.4326	285.0534	483.3276	280.9312
1 அவுஸ்திரேலிய டொலர்	226.3545	149.8331	247.0237	145.5851

உணர்திறன் பகுப்பாய்வு

அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறு இலங்கை ரூபாவிற்கெதிராக மேலேயுள்ள நாணயங்கள் நியாயமான சாத்தியமானளவு உறுதியடைந்தமை/(தேய்வடைந்தமை) ஆனது வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் சாதனங்களின் அளவீட்டைப் பாதித்திருக்கக்கூடும் என்பதுடன் கீழே காட்டப்பட்ட தொகைகளினால் இலாபம் அல்லது நட்டத்தினையும் பாதித்தன.

	இலாபம் அல்லது நட்டம்	
	உறுதியடைந்தமை	தேய்வடைந்தமை
	ரூ. 000	ரூ. 000
2022 திசெம்பர் 31		
ஐ.அ.டொலர் (5% அசைவு)	(38,211,334)	38,211,334
யூரோ (5% அசைவு)	100,119	(100,119)
யப்பானிய யென் (5% அசைவு)	6,506	(6,506)
ஸ்ரேலிங் பவுண் (5% அசைவு)	18,650	(18,650)
சிஎஉ (5% அசைவு)	(42,325,201)	42,325,201
அவுஸ்திரேலிய டொலர் (5% அசைவு)	3,125	(3,125)

	இலாபம் அல்லது நட்டம்	
	உறுதியடைந்தமை	தேய்வடைந்தமை
	ரூ. 000	ரூ. 000
2021 திசெம்பர் 31		
ஐ.அ.டொலர் (5% அசைவு)	(2,314)	2,314
யூரோ (5% அசைவு)	28,402	(28,402)
யப்பானிய யென் (5% அசைவு)	473,074	(473,074)
ஸ்ரேலிங் பவுண் (5% அசைவு)	99,808	(99,808)
சிஎஉ (5% அசைவு)	(24,076,964)	24,076,964
அவுஸ்திரேலிய டொலர் (5% அசைவு)	32,539	(32,539)

48.4 நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவிடப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள்

2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவிடப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த ரீதியான முதிர்ச்சிகள் பின்வருமாறு:

2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு	6 மாதங்களுக்குக் குறைவானவை	6 மாதம் - 1 ஆண்டு	1 - 2 ஆண்டுகள்	2 - 5 ஆண்டுகள்	5 ஆண்டு களுக்கு மேல்	மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்						
காசும் காசுக்குச் சமமானவையும்	651,687,864	-	-	-	-	**651,687,864**
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீரமதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்	76,939	1,166,269	122,550	11,138,399	-	**12,504,157**
ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்	2,036,025	-	-	377,081	279,007,968	**281,421,074**
ஏனைய பெறத்தக்கவைகள்	37,022,631	-	-	-	-	**37,022,631**
மொத்த கழிவிடப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்	**690,823,459**	**1,166,269**	**122,550**	**11,515,480**	**279,007,968**	**982,635,726**
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்						
இலங்கை அரச பிணையங்கள்	2,576,853,759	1,110,750	1,648,793	162,211	-	**2,579,775,513**
மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	698,069,219	-	-	-	-	**698,069,219**
அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்	235,638,700	-	-	-	-	**235,638,700**
நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்	-	-	-	-	1,817,132	**1,817,132**
வங்கிகளுக்கான கடன்கள்	17,790,731	2,406,273	3,778,538	5,463,674	-	**29,439,216**
ஏனைய சொத்துக்கள்	10,080,599	2,433,073	4,303,462	12,088,605	108,728,649	**137,634,388**
மொத்தக் கழிவிடப்படாத உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள்	**3,538,433,008**	**5,950,096**	**9,730,793**	**17,714,490**	**110,545,781**	**3,682,374,168**
மொத்தக் கழிவிடப்படாத நிதியியல் சொத்துக்கள்	**4,229,256,467**	**7,116,365**	**9,853,343**	**29,229,970**	**389,553,749**	**4,665,009,894**
வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்						
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்	146,408,028	-	-	-	-	**146,408,028**
ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்	736,258,129	-	-	-	-	**736,258,129**
ப.நா.நிதியம்	42,676,142	47,398,218	102,078,683	264,345,549	994,038,353	**1,450,536,945**
ஏனையவை	73,060,873	521,322,578	-	-	-	**594,383,451**
மொத்த கழிவிடப்படாத வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்	**998,403,172**	**568,720,796**	**102,078,683**	**264,345,549**	**994,038,353**	**2,927,586,553**
உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்						
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்	323,046,181	-	-	-	-	**323,046,181**
அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்	221,411	-	-	-	-	**221,411**
மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்	330,637,059	-	-	-	-	**330,637,059**
சுற்றோட்டத்திலுள்ள நாணயம்	1,026,567,252	-	-	-	-	**1,026,567,252**
ஏனைய செலுத்தத்தக்கவை	68,320,347	-	-	-	-	**68,320,347**
மொத்த கழிவிடப்படாத உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்	**1,748,792,250**	**-**	**-**	**-**	**-**	**1,748,792,250**
மொத்த கழிவிடப்படாத நிதியியல் பொறுப்புக்கள்	**2,747,195,422**	**568,720,796**	**102,078,683**	**264,345,549**	**994,038,353**	**4,676,378,803**
தேறிய கழிவிடப்படாத நிதியியல் சொத்துக்கள்/ (பொறுப்புக்கள்)	**1,482,061,045**	**(561,604,431)**	**(92,225,340)**	**(235,115,579)**	**(604,484,604)**	**(11,368,909)**

	6 மாதங்களுக்குக் குறைவானவை	6 மாதம் - 1 ஆண்டு	1 - 2 ஆண்டுகள்	2 - 5 ஆண்டுகள்	5 ஆண்டு களுக்கு மேல்	மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு						
பெறுதி நிதியியல் சொத்துக்கள்	27,845,531	5,982,333	14,498,792	51,034,302	6,360,968	**105,721,926**
பெறுதி நிதியியல் பொறுப்புக்கள்	31,340,783	10,620,241	25,779,358	89,890,059	10,076,303	**167,706,744**

வெளிநாட்டு நாணய மாற்று வீதங்கள்

வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் தொடர்புடைய அனைத்து எதிர்கால காசுப்பாய்ச்சல்களும், அறிக்கையிடல் திகதியிலுள்ள நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி அறிக்கையிடும் நாணயத்திற்கு மாற்றப்பட்டன.

2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவிடப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த ரீதியான முதிர்ச்சிகள் பின்வருமாறு:

2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு	6 மாதங்களுக்குக் குறைவானவை	6 மாதம் - 1 ஆண்டு	1/ 2 ஆண்டுகள்	2/ 5 ஆண்டுகள்	5 ஆண்டுகளுக்கு மேல்	மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்						
காசும் காசுக்குச் சமமானவையும்	512,762,452	-	-	-	-	**512,762,452**
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீரமதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்	72,720	72,720	2,851,296	6,215,953	-	**9,212,689**
ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்	38,245,157	-	-	216,785	149,583,895	**188,045,837**
மொத்தக் கழிவிடப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்	**551,080,329**	**72,720**	**2,851,296**	**6,432,738**	**149,583,895**	**710,020,978**
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்						
இலங்கை அரச பிணையங்கள்	1,039,925,021	356,959,017	2,731,167	24,517,061	-	**1,424,132,266**
மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	567,532,312	-	-	-	-	**567,532,312**
அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்	150,128,800	-	-	-	-	**150,128,800**
நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்	-	-	-	-	1,671,218	**1,671,218**
வங்கிகளுக்கான கடன்கள்	79,700,303	4,111,486	4,107,462	3,432,763	-	**91,352,014**
ஏனைய சொத்துக்கள்	13,862,510	1,675,011	5,311,071	10,164,003	15,569,723	**46,582,318**
மொத்தக் கழிவிடப்படாத உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள்	**1,851,148,946**	**362,745,514**	**12,149,700**	**38,113,827**	**17,240,941**	**2,281,398,928**
மொத்தக் கழிவிடப்படாத நிதியியல் சொத்துக்கள்	**2,402,229,275**	**362,818,234**	**15,000,996**	**44,546,565**	**166,824,836**	**2,991,419,906**
வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்						
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்	13,701	-	-	-	-	**13,701**
ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்	104,764,616	-	-	-	-	**104,764,616**
ப.நா. நிதியம்	16,817,583	15,339,852	38,786,708	135,825,841	475,810,517	**682,580,501**
ஏனையவை	40,161,167	317,134,509	-	-	-	**357,295,676**
மொத்தக் கழிவிடப்படாத வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்	**161,757,067**	**332,474,361**	**38,786,708**	**135,825,841**	**475,810,517**	**1,144,654,494**
உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்						
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்	300,704,162	-	-	-	-	**300,704,162**
அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்	1,392,301	-	-	-	-	**1,392,301**
மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்	101,062,880	-	-	-	-	**101,062,880**
சுற்றோட்டத்திலுள்ள நாணயம்	1,005,099,066	-	-	-	-	**1,005,099,066**
ஏனைய செலுத்தத்தக்கவை	19,163,882	-	-	-	-	**19,163,882**
மொத்தக் கழிவிடப்படாத உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்	1,427,422,291	-	-	-	-	**1,427,422,291**
மொத்தக் கழிவிடப்படாத நிதியியல் பொறுப்புக்கள்	1,589,179,358	332,474,361	38,786,708	135,825,841	475,810,517	**2,572,076,785**
தேறிய கழிவிடப்படாத நிதியியல் சொத்துக்கள்/ (பொறுப்புக்கள்)	**813,049,917**	**30,343,873**	**(23,785,712)**	**(91,279,276)**	**(308,985,681)**	**419,343,121**

	6 மாதங்களுக்குக் குறைவானவை	6 மாதம் - 1 ஆண்டு	1 - 2 ஆண்டுகள்	2 - 5 ஆண்டுகள்	5 ஆண்டுகளுக்கு மேல்	மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு						
பெறுதி நிதியியல் சொத்துக்கள்	17,388,862	14,913,000	5,154,573	45,842,140	16,748,562	**100,047,137**
பெறுதி நிதியியல் பொறுப்புக்கள்	16,884,671	15,032,535	5,260,986	46,097,369	16,698,942	**99,974,503**

48.5 திரவத்தன்மை இடர்நேர்வு

நிதியியல் சாதனங்களுக்கான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியங்களைக் குறுகிய கால அறிவித்தலில் பெற்றுக் கொள்கின்ற போது நிறுவனமொன்று முகம் கொடுக்கின்ற இடர்ப்பாடு திரவத்தன்மை இடர்நேர்வாகும். நிறுவனம் தனது நிதியியல் சொத்துக்களை விரைவாக, சீர்மதிப்புப் பெறுமதியைவிட மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டி நேரிடுவதும் திரவத்தன்மை இடர்நேர்வொன்றாகும்.

(அ) வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் உள்ளமைப்பைத் தீர்மானிக்கின்றபோது முக்கியமாக திரவத்தன்மை தொடர்பாகவே கவனம் செலுத்தப்படுகிறது. தேவையான சந்தர்ப்பங்களில் தலையீடு செய்கின்ற நோக்கம் மற்றும் அரச கடன்கள் மற்றும் ப.நா.நிதியக் கடன்களை மீளச் செலுத்துதல் போன்ற கடப்பாடுகளைத் தீர்ப்பதற்காக வெளிநாட்டு ஒதுக்கங்களை காசாக மாற்றுவதற்கான சாத்தியமான தேவைப்பாட்டை இது பிரதிபலிக்கின்றது. நிதியங்கள் விரைவாக பெறப்படுவதை உறுதிசெய்து கொள்ளும் நோக்கத்துடன் வங்கியானது பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுகின்றது:

- வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் திரவத்தன்மை இயல்புகளை அடிப்படையாகக் கொண்ட திரவச்சொத்து விகிதங்கள்
- ஒரு இணைத்தரப்பினருடன் மற்றும் ஒரு நாணயத்தில் வைத்திருக்கப்படக் கூடிய ஒதுக்குகளின் உச்சமட்ட விகிதத்தின் மீதான வரையறை

(ஆ) உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் போது, குறிப்பாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் போது உருவாகின்ற திரவத்தன்மை இடர்நேர்வு மட்டத்தைக் குறைக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியானது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் போன்ற அதிக திரவத்தன்மையுடனான சந்தைப்படுத்தக்கூடிய சாதனங்களை பிணையங்களாகப் பயன்படுத்துகிறது. வங்கியானது, மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு, மத்திய வங்கிப் பிணையங்கள் மற்றும் ஐ.அ.டொலர்/ ரூபா பரஸ்பர பரிமாற்றல்கள் போன்ற நிதியியல் சாதனங்களைப் பயன்படுத்தி முறைமையினுள் நிதியங்களை உட்செலுத்துவதன் மூலம் அல்லது அதிலிருந்து மீளப்பெறுவதன் மூலம் வங்கி முறைமையின் நாளாந்த திரவத்தன்மை நிலைமையை முகாமைப்படுத்துகிறது.

(இ) எதிர்கால நிதியிடலுக்கு உதவுவதற்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்கள்

கீழேயுள்ள அட்டவணை எதிர்கால நிதியிடலுக்கு உதவுவதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள வங்கியின் நிதியியல் சொத்துக்களைக் காட்டுகின்றது.

	கட்டுப்பாடுகளுடன் பிணையிடப்பட்ட பிணை உறுதிகள்	கட்டுப்பாடுகளின்றி கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணை உறுதிகள்	மொத்தம்
2022 திசெம்பர் 31இலுள்ளவாறு	**ரூ. 000**	**ரூ. 000**	**ரூ. 000**
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்			
காசும் காசுக்குச் சமமானவையும்	-	651,687,864	**651,687,864**
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்	1,090,124	9,777,301	**10,867,425**
பெறுதி நிதியியல் சாதனங்கள்	-	401,580	**401,580**
ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்	-	281,421,074	**281,421,074**
ஏனைய பெறத்தக்கவைகள்	-	37,022,631	**37,022,631**
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்			
இலங்கை அரச பிணையங்கள்	-	2,498,995,015	**2,498,995,015**
மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	-	698,069,219	**698,069,219**
அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்	-	235,638,700	**235,638,700**
நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்	-	1,817,132	**1,817,132**
வங்கிகளுக்கான கடன்கள்	-	28,257,902	**28,257,902**
ஏனைய சொத்துக்கள்	-	30,182,645	**30,182,645**
மொத்த நிதியியல் சொத்துக்கள்	**1,090,124**	**4,473,271,064**	**4,474,361,188**

	கட்டுப்பாடுகளுடன் பிணையிடப்பட்ட பிணை உறுதிகள்	கட்டுப்பாடுகளின்றி கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணை உறுதிகள்	மொத்தம்
2021 திசெம்பர் 31இலுள்ளவாறு	**ரூ. 000**	**ரூ. 000**	**ரூ. 000**
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்			
காசும் காசுக்குச் சமமானவையும்	-	512,762,452	**512,762,452**
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்	2,830,756	5,987,488	**8,818,244**
பெறுதி நிதியியல் சாதனங்கள்	-	54,022,836	**54,022,836**
ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்	-	188,045,837	**188,045,837**
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்			
இலங்கை அரச பிணையங்கள்	-	1,377,820,347	**1,377,820,347**
மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	-	567,532,312	**567,532,312**
அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்	-	150,128,800	**150,128,800**
நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்	-	1,671,218	**1,671,218**
வங்கிகளுக்கான கடன்கள்	-	90,572,746	**90,572,746**
ஏனைய சொத்துக்கள்	-	34,063,770	**34,063,770**
மொத்த நிதியியல் சொத்துக்கள்	**2,830,756**	**2,982,607,806**	**2,985,438,562**

49. நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புகள்

49.1 நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தல்கள்

நிதியியல் சாதனங்களின் வகைகள் மற்றும் நிதியியல் நிலைளமைக் கூற்றிலுள்ள வரிசை விடயம் என்பவற்றிற்கிடையேயான இணங்குவித்தல்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

2022 திசெம்பர் 31இலுள்ளவாறு	இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான சாதனங்கள்	ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூ டான சீர்மதிப்புப் பெறுமதியிலான படுகடன் சாதனங்கள்	ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூ டான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை சாதனங்கள்	பதிவழிக்கப்பட்ட செலவு	மொத்தம்
	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்					
காசும் காசுக்குச் சமமானவையும்	-	-	-	651,687,864	**651,687,864**
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்	-	10,867,425	-	-	**10,867,425**
பெறுதி நிதியியல் சாதனங்கள்	401,580	-	-	-	**401,580**
ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்	280,406,015	-	-	1,015,059	**281,421,074**
ஏனைய பெறத்தக்கவைகள்	-	-	-	37,022,631	**37,022,631**
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்	280,807,595	10,867,425	-	689,725,554	**981,400,574**
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்					
இலங்கை அரச பிணையங்கள்	-	2,498,995,015	-	-	**2,498,995,015**
மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	-	-	-	698,069,219	**698,069,219**
அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்	-	-	-	235,638,700	**235,638,700**
நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்	-	-	1,817,132	-	**1,817,132**
வங்கிகளுக்கான கடன்கள்	-	-	-	28,257,902	**28,257,902**
ஏனைய சொத்துக்கள்	-	-	-	30,182,560	**30,182,560**
மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்	-	2,498,995,015	1,817,132	992,148,381	**3,492,960,528**
வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்					
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்	-	-	-	146,408,028	**146,408,028**
பெறுதி நிதியியல் சாதனங்கள்	71,697,994	-	-	-	**71,697,994**
ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்	-	-	-	736,258,129	**736,258,129**
ப.நா. நிதியம்	-	-	-	1,127,925,092	**1,127,925,092**
ஏனையவை	-	-	-	594,383,451	**594,383,451**
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்	71,697,994	-	-	2,604,974,700	**2,676,672,694**
உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்					
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்	-	-	-	323,046,181	**323,046,181**
அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்	-	-	-	221,411	**221,411**
மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	-	-	-	330,637,059	**330,637,059**
சுற்றோட்டத்திலுள்ள நாணயம்	-	-	-	1,026,567,252	**1,026,567,252**
ஏனைய செலுத்தத்தக்கவை	-	-	-	68,320,347	**68,320,347**
மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்	-	-	-	1,748,792,250	**1,748,792,250**

2021 திசெம்பர் 31இலுள்ளவாறு	இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான சாதனங்கள் ரூ.000	ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூ டான சீர்மதிப்புப் பெறுமதியிலான படுகடன் சாதனங்கள் ரூ.000	ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூ டான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை சாதனங்கள் ரூ.000	பதிவழிக்கப்பட்ட செலவு ரூ.000	மொத்தம் ரூ.000
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்					
காசும் காசுக்குச் சமமானவையும்	-	-	-	512,762,452	512,762,452
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்	-	8,818,244	-	-	8,818,244
பெறுதி நிதியியல் சாதனங்கள்	54,022,836	-	-	-	54,022,836
ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்	187,404,111	-	-	641,726	188,045,837
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்	**216,626,384**	**8,818,244**	**-**	**538,204,741**	**763,649,369**
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்					
இலங்கை அரச பிணையங்கள்	-	1,377,820,347	-	-	1,377,820,347
மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	-	-	-	567,532,312	567,532,312
அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்	-	-	-	150,128,800	150,128,800
நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்	-	-	1,671,218	-	1,671,218
வங்கிகளுக்கான கடன்கள்	-	-	-	90,572,746	90,572,746
ஏனைய சொத்துக்கள்	-	-	-	34,063,770	34,063,770
மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்	**-**	**1,377,820,347**	**1,671,218**	**842,297,628**	**2,221,789,193**
வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்					
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்	-	-	-	13,701	13,701
பெறுதி நிதியியல் சாதனங்கள்	1,139,323	-	-	-	1,139,323
ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்	-	-	-	104,764,616	104,764,616
ப.நா. நிதியம்	-	-	-	670,065,243	670,065,243
ஏனையவை	-	-	-	357,295,676	357,295,676
மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்	**1,139,323**	**-**	**-**	1,132,139,236	1,133,278,559
உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்					
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்	-	-	-	300,704,162	300,704,162
அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்	-	-	-	1,392,301	1,392,301
மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்	-	-	-	101,062,880	101,062,880
சுற்றோட்டத்திலுள்ள நாணயம்	-	-	-	1,005,099,066	1,005,099,066
ஏனைய செலுத்தத்தக்கவை	-	-	-	19,163,882	19,163,882
மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்	**-**	**-**	**-**	**1,427,422,291**	**1,427,422,291**

50. சீர்மதிப்புப் பெறுமதி வெளிப்படுத்தல்கள்

50.1 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சீர்மதிப்புப் பெறுமதி

"சீர்மதிப்புப் பெறுமதி" என்பது அளவிடுகின்ற திகதியில் முதன்மைச் சந்தையில் அல்லது அது இல்லாத சந்தர்ப்பத்தில் அத்திகதியில் வங்கிக்கு அணுகக்கூடியதாகவுள்ள மிக அநுகூலமான சந்தையில் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான ஒழுங்குமுறையான கொடுக்கல்வாங்கல்களில் சொத்தொன்றை விற்பது தொடர்பில் பெறப்படுகின்ற விலை அல்லது பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கான கொடுப்பனவு எனப் பொருள்படும். பொறுப்புக்களின் சீர்மதிப்புப் பெறுமதி அதன் செயலாற்றமற்ற இடர்நேர்வைப் பிரதிபலிக்கின்றது.

சந்தை விலைகளை அவதானிக்க முடியாத நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான சீர்மதிப்புப் பெறுமதியினைத் தீர்மானிக்கும் போது கணக்கீட்டுக் கொள்கை குறிப்பு 5.2 இல் விபரிக்கப்பட்டவாறு மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது. அடிக்கடி வர்த்தகப்படுத்தப்படாத மற்றும் குறைந்தளவான விலை வெளிப்படைத்தன்மையைக் கொண்ட நிதியியல் சாதனங்களுக்கு சீர்மதிப்புப் பெறுமதி குறைந்தளவு பாரபட்சமற்றதாக இருப்பதுடன் இது திரவத்தன்மை, செறிவு, சந்தைக் காரணிகளின் நிச்சயமற்ற தன்மை, விலையிடல் எடுகோள்கள் மற்றும் குறிப்பிட்ட சாதனங்களைப் பாதிக்கும் பிற இடர்நேர்வுகள் ஆகியவற்றைப் பொறுத்து பல்வேறுபட்ட விதங்களில் திறனாய்வுகளைத் தேவைப்படுத்துகின்றது. நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்படும் படிநிலைகள் பின்வருமாறு:

மட்டம் 1: ஒத்த தன்மையான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்காக செயற்படும் சந்தைகளில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) விலைகளைப் பயன்படுத்திய சீர்மதிப்புப் பெறுமதி அளவீடுகள்.

மட்டம் 2: மட்டம் 1 இல் குறிப்பிடப்பட்ட விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட விலைகளைத் தவிர வேறு நுட்பத்தின்படி ஒன்றில் நேரடியாக (அதாவது விலைகள்) அல்லது மறைமுகமாக (அதாவது விலைகளிலிருந்து பெறப்பட்டவை) சொத்து அல்லது பொறுப்பிற்காக அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளைப் பயன்படுத்திய சீர்மதிப்புப் பெறுமதி அளவீடுகள்.

மட்டம் 3: சொத்து அல்லது பொறுப்பிற்காக அவதானிக்கத்தக்க சந்தைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்காத (அதாவது அவதானிக்க முடியாத உள்ளீடுகள்) உள்ளீடுகளைப் பயன்படுத்திய சீர்மதிப்புப் பெறுமதி அளவீடுகள்.

பின்வரும் அட்டவணை சீர்மதிப்புப் பெறுமதி படிநிலையில் பதிவுசெய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பகுப்பாய்வொன்றினை தருகின்றது.

2022 திசெம்பர் 31இலுள்ளவாறு	மட்டம் 1 ரூ.000	மட்டம் 2 ரூ.000	மட்டம் 3 ரூ.000	மொத்தம் ரூ.000
நிதியியல் சொத்துக்கள்				
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்	10,867,425	-	-	**10,867,425**
பெறுதி நிதியியல் சாதனங்கள்	-	401,580	-	**401,580**
ப.நா.நிதியம் தொடர்பான சொத்துக்கள்	280,406,015	-	-	**280,406,015**
	291,273,440	401,580	-	**291,675,020**
வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்				
தங்கம்	10,031,610	-	-	**10,031,610**
	10,031,610	-	-	**10,031,610**
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்				
இலங்கை அரச பிணையங்கள்	2,498,995,015	-	-	**2,498,995,015**
நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்	-	-	1,817,132	**1,817,132**
	2,498,995,015	-	1,817,132	**2,500,812,147**
ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்				
காணி	-	-	10,855,725	**10,855,725**
கட்டடம்	-	-	7,099,239	**7,099,239**
	-	-	17,954,964	**17,954,964**
நிதியியல் பொறுப்புக்கள்				
பெறுதி நிதியியல் சாதனங்கள்	-	71,697,994	-	**71,697,994**
	-	71,697,994	-	**71,697,994**

2021 திசெம்பர் 31இலுள்ளவாறு	மட்டம் 1 ரூ.000	மட்டம் 2 ரூ.000	மட்டம் 3 ரூ.000	மொத்தம் ரூ.000
நிதியியல் சொத்துக்கள்				
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்	8,818,244	-	-	8,818,244
பெறுதி நிதியியல் சாதனங்கள்	-	54,022,836	-	54,022,836
ப.நா.நிதியம் தொடர்பான சொத்துக்கள்	187,404,111	-	-	187,404,111
	196,222,355	54,022,836	-	250,245,191
வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்				
தங்கம்	35,151,981	-	-	35,151,981
	35,151,981	-	-	35,151,981
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்				
இலங்கை அரச பிணையங்கள்	1,377,820,347	-	-	1,377,820,347
நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்	-	-	1,671,218	1,671,218
	1,377,820,347	-	1,671,218	1,379,491,565
ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்				
காணி	-	-	10,855,725	10,855,725
கட்டடம்	-	-	7,099,239	7,099,239
	-	-	17,954,964	17,954,964
நிதியியல் பொறுப்புக்கள்				
பெறுதி நிதியியல் சாதனங்கள்	-	1,139,323	-	1,139,323
	-	1,139,323	-	1,139,323

நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்

பங்குரிமை முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதியானது பங்கிற்கான தேறிய சொத்தின் மதிப்பீட்டு நுட்பத்தினை உபயோகித்து கணக்கிடப்பட்டது.

பயன்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க அவதானிக்க முடியாத உள்ளீடுகள்

பங்கொன்றிற்கான தேறிய சொத்தின் பெறுமதி

உணர்திறன் பகுப்பாய்வு

பங்கொன்றிற்கான தேறிய சொத்தின் பெறுமதி 10 சதவீதத்தால் அதிகரித்தால் சீர்மதிப்புப் பெறுமதியும் 10 சதவீதத்தினால் அதிகரிக்கும்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
சனவரி 1இல் உள்ளவாறு நிலுவை	**1,671,218**	1,615,356
ஆண்டுகாலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை	-	-
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதி இலாபம்	**145,915**	55,862
திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை	**1,817,133**	1,671,218

காணி மற்றும் கட்டடங்கள்

மதிப்பிடப்படும் முறை

காணியானது நேரடி ஒப்பீட்டு முறையுடன் சந்தை அணுகுமுறையைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யப்பட்டதுடன், இம்முறையில் மேம்படுத்தப்பட்ட பெறுமதி பெயரளவு கூட்டப்படாத அல்லது கூட்டப்படாத அண்மைய விற்பனையுடன் சொத்துக்கள் ஒப்பிடப்பட்டு வேறுபாடுகளுக்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு சீர்மதிப்புப் பெறுமதி பெறப்படுகின்றது.

சமூகத்திற்குச் சேவை வழங்குகின்ற பொதுத்துறை நிறுவனங்களினால் கட்டுப்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் திறந்த திரவத்தன்மை சந்தையில் விற்பனை செய்யப்படுவதில்லை என்பதைக் கருத்திற்கொண்டு, சென்றல் பொயின்ற், வைற் எவேய்ஸ் மற்றும் லொயிட்ஸ் கட்டடங்கள் தவிர்ந்த அனைத்துக் கட்டடங்களுக்கும் மதிப்பீடு செய்யப்படும் பொழுது பெறுமானத் தேய்விடப்பட்ட நடைமுறைப் பதிலீட்டுக் கிரயமுறை பயன்படுத்தப்பட்டது.

ஏனைய கட்டடங்களை மதிப்பிடுவதற்கு வருமான அணுகுமுறை பயன்படுத்தப்பட்டதுடன் இம்முறையானது ஆதனங்களை எதிர்கால மதிப்பிடப்பட்ட வருமானம், இலாபம் அல்லது காசுப் பாய்ச்சலை தனியொரு நடைமுறைத் தொகைக்கு மாற்றுவதன் (கழிவிடப்படுவதன்) மூலம் மதிப்பிடுகின்றது.

சந்தை அணுகுமுறையின் கீழ், மதிப்பிடப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதியானது பின்வருமாறு அதிகரிக்கலாம்/ (குறைவடையலாம்):

- பேர்ச் ஒன்றுக்கான விலை அதிகரித்தல்/ (குறைதல்)
- சதுர அடி ஒன்றுக்கான விலை அதிகரித்தல்/ (குறைதல்)
- கட்டடங்களிற்கான பெறுமானத்தேய்வு வீதம் குறைதல்/ (அதிகரித்தல்)

வருமான அணுகுமுறையின் கீழ், மதிப்பிடப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதியானது பின்வருமாறு அதிகரிக்கலாம்/ (குறைவடையலாம்)

- மொத்த வருடாந்த வாடகை வருமானம் அதிகரித்தல்/ (குறைதல்)
- கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டுகள் அதிகரித்தல்/ (குறைதல்)

பெறுதிகள்

பெறுமதி மதிப்பீட்டு மாதிரிகள் முன்னோக்கிய விலைகளை (சந்தையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள முன்னோக்கிய புள்ளிகளுக்கு மேலதிக நிறைகளை அறிவிப்பதன் மூலம் கணக்கிடப்பட்டது) பயன்படுத்தியதுடன் பெறுமதித் திகதியிலுள்ளவாறு தொடர்பான நாணயங்களில் பூச்சிய நறுக்கு விளைவு வளைகோட்டினை அடிப்படையாகக் கொண்டு கழிவின் வீதம் கணிக்கப்பட்டது. மதிப்பிடப்பட்ட சாதனமானது இலாபத்தை உள்ளடக்கியிருப்பின் இலாபத்தின் தாக்கத்தை எடுத்துக்காட்டுவதற்காக முன்னோக்கிய விலைகள் மற்றும் அல்லது வட்டி வீதங்களுக்கு சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தங்கம்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
சனவரி 1இல் உள்ளவாறு நிலுவை	**35,151,981**	76,220,055
ஆண்டுகாலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டவை (விற்கப்பட்டவை)	**(26,108,952)**	(38,743,707)
நாணயமாற்று இலாபம் (நட்டம்)	**4,094,758**	5,151,566
தங்கத்தின் விலையிலான மாற்றம்	**(3,106,177)**	(7,475,934)
திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை	**10,031,610**	35,151,981

50.2 மீள்கொள்வனவு மற்றும் மீள்விற்பனை உடன்படிக்கைகள்

உடன்படிக்கைகளின் குறுகிய கால இயல்பின் காரணமாக மீள்கொள்வனவு மற்றும் மீள்விற்பனைகளின் அறிக்கையிடப்பட்ட பெறுமதி சீர்மதிப்புப் பெறுமதியை அண்மித்ததாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு வழங்கப்பட்ட துணைநில் வைப்பு வசதியின் கொண்டு செல்லல் பெறுமதி ரூ.330,637.06 மில்லியனாகவும் (2021 - ரூ.101,062.88 மில்லியன்) 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் கொண்டு செல்லல் பெறுமதி ரூ.698,069.22 மில்லியனாகவும் (2021 - ரூ.567,532.31 மில்லியன்) இருந்தது. 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட வெளிநின்ற அரச பிணையங்கள் எதுவும் காணப்படவில்லை (2021 - ஏதுமில்லை).

50.3 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் சீர்மதிப்புப் பெறுமதியானது, நிதிக் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு அவற்றின் முகப்புப் பெறுமதியாகக் கருதப்படுகிறது.

50.4 வைப்புக்கள்

கோரப்படுகின்ற போது செலுத்தப்பட வேண்டுமாதலால் வைப்புக்களின் கொண்டு செல்லல் பெறுமதியானது சீர்மதிப்புப் பெறுமதியை அண்மித்ததாக இருக்குமென கருதப்படுகின்றது.

50.5 சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படப்படாத நிதியியல் சாதனங்கள்

சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படப்படாத நிதியியல் சாதனங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

	கொண்டு செல்லும் தொகை		சீர்மதிப்புப் பெறுமதி	
	2022 ரூ.000	2021 ரூ.000	2022 ரூ.000	2021 ரூ.000
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்				
காசும் காசுக்குச் சமமானவையும்	**651,687,864**	512,762,452	**651,687,864**	512,762,452
ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்	**1,641,520**	25,442,289	**1,632,712**	25,446,757
ஏனைய பெறத்தக்கவை	**37,022,631**	-	**37,022,631**	-
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்				
மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	**698,069,219**	567,532,312	**698,069,219**	567,532,312
அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்	**235,638,700**	150,128,800	**235,638,700**	150,128,800
வங்கிகளுக்கான கடன்கள்	**28,257,902**	90,572,746	**28,257,902**	88,468,648
ஏனைய சொத்துக்கள்	**30,182,560**	34,063,770	**25,686,027**	33,614,096
வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்				
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்	**146,408,028**	13,701	**146,408,028**	13,701
ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்	**736,258,128**	104,764,616	**736,258,128**	104,764,616
ப.நா. நிதியம்	**1,127,925,092**	670,065,243	**1,127,925,092**	670,065,243
ஏனையவை	**594,383,451**	357,295,676	**594,383,451**	357,295,676
உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்				
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்	**323,046,181**	300,704,162	**323,046,181**	300,704,162
அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்	**221,411**	1,392,301	**221,411**	1,392,301
மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்	**330,637,059**	101,062,880	**330,637,059**	101,062,880
சுற்றோட்டத்திலுள்ள நாணயம்	**1,026,567,252**	1,005,099,066	**1,026,567,252**	1,005,099,066
ஏனைய செலுத்தத்தக்கவை	**68,320,347**	19,163,882	**68,320,347**	19,163,882

பன்னாட்டு நாணய நிதிய வைப்புக்கள், வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் உள்ளக நிதிய முதலீடுகளுடன் தொடர்புபட்ட நிலுவைகளின் சீர்மதிப்புப் பெறுமதியானது அவற்றின் கொண்டு செல்லல் பெறுமதியிலிருந்து வேறுபடுகின்றது.

வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள், உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் மற்றும் அரசிற்கான தற்காலிக முற்பணங்கள், வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம், பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் ஏனையவை அத்துடன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள், அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள், மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள், சுற்றோட்டத்திலுள்ள நாணயம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளின் சீர்மதிப்புப் பெறுமதிகள் அவற்றின் கொண்டு செல்லும் பெறுமதியிலிருந்து வேறுபடவில்லை.

51. ஒப்பிட்டு ரீதியான தகவல்கள்

பின்வரும் ஒப்பீட்டுத் தரவுகள் நடப்பாண்டு சமர்ப்பிப்புடன் ஒத்திருக்கும் விதத்தில் மீள்வகைப்படுத்தப்பட்டது.

51.1 தேறிய விலை மாற்றங்களிலிருந்தான வருமானம், பெறுதிகள் மீதான வட்டி வருமானம் மற்றும் வட்டிச் செலவின் மீள்வகைப்படுத்தல்

	2021		
	முன்னதாக அறிவிக்கப் பட்டவாறு ரூ. 000	சீராக்கம் ரூ. 000	மீள்வகைப் படுத்தப்பட்ட நிலுவை ரூ. 000
வருமானக் கூற்றின் மாற்றங்கள்			
வட்டி வருமானம்	11,815,701	(7,436,653)	4,379,048
வட்டிச் செலவுகள்	(5,609,176)	1,974,648	(3,634,528)
அருவச் சொத்துக்கள்	14,855,788	(5,462,005)	20,317,793
நிதிச் சொத்துகள் மீதான வட்டி வருமானம் குறித்த குறிப்பு 36 இல் மாற்றங்கள்			
வெளிநாட்டு நாணய நிதி சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்	11,815,701	(7,436,653)	4,379,048
பெறுதிகள்	7,436,653	(7,436,653)	-
நிதிச் சொத்துகளிலிருந்தான மொத்த வட்டி வருமானம்	80,428,629	(7,436,653)	72,991,976
நிதிப் பொறுப்புகள் மீதான வட்டிச் செலவுகள் குறித்த குறிப்பு 38 இல் மாற்றங்கள்			
வெளிநாட்டு நாணய நிதி பொறுப்புகள் மீதான மொத்த வட்டி செலவு	(5,609,176)	1,974,648	(3,634,528)
பெறுதிகள்	1,974,648	(1,974,648)	-
நிதி பொறுப்புகள் மீதான மொத்த வட்டி செலவு	14,079,073	(1,974,648)	12,104,425

2021ஆம் ஆண்டில் பெறுதிகளிலிருந்தான வருமானம் ரூ.7,436.65 மில்லியன் வட்டி வருமானமாகவும் மற்றும் பெறுதிகளிலிருந்தான நட்டங்கள் வட்டிச் செலவுகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட ரூ.1,974.65 மில்லியன்கள் இப்போது சிறந்த வெளிப்படுத்துகைக்களுக்காக தேறிய விலை மாற்றங்களிலிருந்தான வருமானமத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

51.2 உள்ளக நிதிய முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானத்தையும் ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வருமானத்தையும் மற்றும் ஏனைய சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானத்தையும் மீள்வகைப்படுத்துதல்

நிதியியல் சொத்துகள் மீதான வட்டி வருமானம் குறித்த குறிப்பு 36இல் மாற்றங்கள்

	2021		
	முன்னதாக அறிவிக்கப் பட்டவாறு ரூ. 000	சீராக்கம் ரூ. 000	மீள்வகைப் படுத்தப்பட்ட நிலுவை ரூ. 000
ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்கள்	2,770,062	1,317,449	1,452,613
ஏனைய சொத்துக்கள்	1,317,449	1,317,449	2,634,898

உள்ளக நிதிய முதலீட்டிலிருந்தான வட்டி வருமானம் ரூ.1,317.45 மில். 2021ஆம் ஆண்டில் ஏனைய கடன்கள் மற்றும் முன்பணங்களின் கீழ் நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானமான குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. சிறந்த வெளிப்படுத்துகைக்காக அதே குறிப்பிலுள்ள ஏனைய சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானத்தின் கீழ் இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

51.3 உள்ளக நிதியியல் முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானத்தையும் ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வருமானத்தையும் மற்றும் ஏனைய சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானத்தையும் மீள்வகைப்படுத்துதல்

ஏனைய வருமானத்தின் குறிப்பு 40இல் மாற்றங்கள்

	2021		
	முன்னதாக அறிவிக்கப் பட்டவாறு ரூ. 000	சீராக்கம் ரூ. 000	மீள்வகைப் படுத்தப்பட்ட நிலுவை ரூ. 000
இதர வருமானம்	469,494	5,525	463,969
நிதி நிறுவனங்களின் உரிமக் கட்டணம்	614,575	5,525	620,100

கட்டண அட்டைகள் மற்றும் மொபைல் கட்டண முறைகளின் உரிமம் பெற்ற சேவை வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்ட உரிமக் கட்டணம் ரூபா 5.52 மில்லியன் 2021 இல் ஏனைய வருமான குறிப்பின் கீழ் இதர வருமானமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. தற்பொழுது சிறந்த வெளிப்படுத்துகைக்காக நிதி நிறுவனங்களின் உரிமக் கட்டணமாக வெளிப்படுத்தப்படுகின்றது.

52. தொடர்பான தரப்பினர்கள்

52.1 அரச மற்றும் அரசினால் கட்டுப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

மத்திய வங்கியின் வழமையான வியாபாரத்தின் போது தொடர்புடைய தரப்பினர்களோடு கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுகின்றது. தொடர்புடைய தரப்பினருள் இலங்கை அரசாங்கம் (அரசு, இ.ம. வங்கியின் உரிமையாளர் என்ற ரீதியில்), பல்வேறு அரச திணைக்களங்கள், அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்கள் என்பன உள்ளடங்குகின்றன. பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் 24 - திருத்தப்பட்ட தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்களுக்கமைய வங்கியினால் அரசுடனும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடனும் மேற்கொள்ளப்பட்ட தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் தனித்தனியாக முக்கியத்துவமில்லாத ஆனால் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஒழுங்குகளின் விபரங்கள் பின்வருமாறு:

கொடுக்கல்வாங்கலின் இயல்பு	2022 ரூ. 000	2021 ரூ. 000
கொடுக்கல்வாங்கல்கள்:		
அரச பிணையங்களின் உடனடிக் கொள்வனவு	**242,099**	980,906
மீள்கொள்வனவு/ விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு/ விற்பனை செய்யப்பட்ட இ.ம.வ. மற்றும் அரச பிணையங்கள்	**143,913,767,948**	68,218,243,292
மீள்கொள்வனவு/ மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட/ விற்பனை செய்யப்பட்ட இலங்கை மத்திய வங்கி மற்றும் அரசாங்க பிணையங்கள் மீதான வட்டி வருமானம்/ செலவினம்	**56,770,262**	8,378,432
அரசாங்கத்தின் சார்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியங்கள்	**210,540,495**	365,111,003
அரசாங்கத்தின் சார்பாக பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியங்கள்	**211,034,101**	362,223,823
திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நாணயத் தாள்களை அச்சிடுவதற்கான செலவு **(குறிப்பு 52.1.3)**	**1,856,465**	1,086,655
திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டு காலப்பகுதியில் பொருட்கள், பணிகள் மற்றும் வரிகளுக்கான கொடுப்பனவுகள் **(குறிப்பு 52.1.4)**	**5,147,957**	1,129,790
ஆண்டினுள் மொத்த வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் **(குறிப்பு 52.1.6)**		
விற்பனை	**872,421,407**	225,597,381
கொள்வனவு	**695,124,187**	61,515,180
ஐ.அ.டொலர்/ இல. ரூபா பெறுதிகள்	**595,270,456**	651,697,925
இவ்வாண்டுப்பகுதியில் கைவிடப்பட்ட ஆதனம் தொடர்பில் பெறப்பட்ட நிதியம்	**365,405**	914,309
வாடகை வருமானம்	**207,763**	282,173
பங்கிலாப வருமானம்	**115,786**	115,786
ஏனைய கொடுக்கல்வாங்கல்கள் **(குறிப்பு 52.1.9)**	**794,842**	1,088,948
நிலுவைகள்:		
மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற இலங்கை அரச பிணையங்கள் **(குறிப்பு 52.1.7)**	**2,498,995,015**	1,377,820,347
அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் **(குறிப்பு 14)**	**235,638,700**	150,128,800
கொவிட்-19 புத்துயிரளித்தல் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள்	**1,821,749**	11,817,950
குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள்	**17,930,602**	15,938,729
வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான அ.நே.மொ.தீ. நிலுவைகள் **(குறிப்பு 26)**	**240,719,873**	221,738,927
இலங்கை வங்கி இலண்டனுடனான நொஸ்ரோ கணக்கு நிலுவைகள்	**43,888**	243,388
திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெறத்தக்கவை	**3,540,670**	4,087,983
திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கு செலுத்தத்தக்கவை **(குறிப்பு 25)**	**1,021,468**	1,484,824
திசெம்பர் 31இல் உள்ளவாறு அரச மற்றும் அரச நிறுவனங்களுடனான நடைமுறைக் கணக்கு நிலுவைகள்	**(297)**	(1,107,407)
கைவிடப்பட்ட ஆதன நிலுவைகள்	**5,998,940**	5,998,940
ஏனைய நிலுவைகள் **(குறிப்பு 52.1.9)**	**13,321,704**	292,917

52.1.1 நாணய விதிச் சட்டத்தின் 28 - 33 பிரிவுகளினால் அதிகாரம் அளிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் மீதான மேற்பார்வைத் தொழிற்பாட்டினையும் ஒழுங்குபடுத்தலையும் மேற்கொண்டு வருகிறது. 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட அல்லது குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்ட 07 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 01 சிறப்பியல்பு வாய்ந்த வங்கி இலங்கை மத்திய வங்கியின் தொடர்புடைய தரப்பினர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களமானது வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் தொழிற்பாட்டையும் ஒழுங்குபடுத்துகையையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கிணங்க, அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது அரசினால் நிதியிடப்பட்ட வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்கள் இத்திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழுள்ளன.

52.1.2 நாணய விதிச் சட்டத்தின் 113ஆம் பிரிவின்படி நாணயச் சபையும் இலங்கை மத்திய வங்கியும் பொதுப்படுகடன் முகாமைத்துவ தொழிற்பாட்டினை ஆற்ற அதிகாரம் பெற்றுள்ளன. இதற்கிணங்க, அரசாங்கத்தின் முகவர் என்ற வகையில் பொதுப்படுகடன் திணைக்களமானது, வரவு செலவுத்திட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக உள்நாட்டுச் சந்தைக்குப் பிணையங்களை வழங்குவதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் தீர்ப்பனவுகளையும் மேற்கொள்கின்றது. பொதுப்படுகடன் திணைக்களமானது பொதுப்படுகடன் முகாமைத்துவம் மற்றும் படுகடன் சந்தை அபிவிருத்தி என்பவற்றைக் கையாளுகின்றது. அரசாங்கத்தினுடைய நிதியிடல் தேவைகள் மற்றும் அதனுடைய பணம் செலுத்துதல் கடப்பாடுகள் என்பவை பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுவதற்காக அரசாங்கக் கடனை இது முகாமைத்துவம் செய்கிறது.

52.1.3 நாணய விதிச் சட்டத்தின் 49ஆம் பிரிவின்படி இலங்கையில் நாணய விநியோகத்தை மேற்கொள்ளும் ஏக உரிமையையும் அதிகாரத்தையும் வங்கி கொண்டுள்ளது. இதற்கிணங்க இ.ம. வங்கியின் நாணயத் திணைக்களம் இலங்கையிலே சட்ட ரீதியான நாணயத்தை விநியோகிக்கும் ஏக அதிகாரத்துவம் உடையதாகத் தொழிற்படுகின்றது. நாணயத் தாள்களை அச்சிடுதலானது, 40 சதவீதப் பங்குகளை அரசாங்கம் சொந்தமாகக் கொண்டுள்ள டி லா ரூ லங்கா கரண்சி அன்ட் செக்குரிட்டி (பிறைவேட்) லிமிடெட் எனும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

52.1.4 வங்கியின் சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வங்கியானது அரச நிறுவனங்கள் அல்லது அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு அல்லது கட்டுப்பாடுள்ள நிறுவனங்களுடன் பல்வேறுபட்ட பொருட்கள் மற்றும் பணிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகிறது.

52.1.5 மத்திய வங்கியானது, குறிப்பு 55 இல் விளக்கப்பட்டுள்ளவாறு, பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் பிற காப்பாளர் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பெறுப்புக்கள், ஓய்வூதிய நன்மைத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன் வருகின்றது.

52.1.6 நாணய விதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியையும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவுக்கான தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலையினையும் கண்காணிக்கின்றது. உள்நாட்டின் வெளிநாட்டுச் சந்தைச் செலாவணி அபிவிருத்தியைக் கண்காணிக்கின்ற போது வங்கியானது சந்தையின் இரு புறங்களிலுமிருந்து இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் மிகை மாற்றமுறும் தன்மையினை மிதமான நிலைக்குக் கொண்டு

வருகின்றது. அத்தகைய கண்காணிப்பு நடவடிக்கையின் பெறுபேறுகளாக வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனைத் தொகைகள் விளங்குகின்றன.

52.1.7 வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களமானது நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நேரடித் தொழிற்பாட்டை, பிரதானமாக 1949ஆம் ஆண்டு 58ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் 90 - 92ஆம் பிரிவின் படியாக, திறந்த சந்தை நடவடிக்கைகளினூடாக செயற்படுத்துவதுடன் நாணய விதிச் சட்டத்தின் 93 - 98 பிரிவுகளின் படியான நியதிச்சட்ட ஒதுக்குத் தேவைப்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதுடன், அரசாங்கம் பங்குடமைகளைக் கொண்டுள்ள வர்த்தக வங்கிகளினதும் வேறும் சில நிதியியல் நிறுவனங்களினதும், அரச நிறுவனங்களினதும் வங்கியாகவும் தொழிற்படுகிறது. 2021 திசெம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு இத்தொழிற்பாட்டின் நிமித்தமாக எழும் திரண்ட நிலுவைகள், குறிப்பு 12இல் தரப்பட்டுள்ளன. அரச பிணையங்களிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி குறிப்பு 36இல் தரப்பட்டுள்ளது.

52.1.8 வங்கியானது எவ்விதக் கட்டணங்களையும் அறவிடாது, அரச கட்டுப்பாட்டிலுள்ள வங்கியொன்றின் காப்பாளர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

52.1.9 ஏனைய மீதிகளும் கொடுக்கல்வாங்கல்களும் அரசாங்கம், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவமில்லாத கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றன.

52.2 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

ஆளுநர், துணை ஆளுநர்கள் மற்றும் உதவி ஆளுநர்கள் உள்ளடங்கலாக நாணயச் சபையின் அங்கத்தவர்கள் வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராவர். முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

52.3 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான கொடுப்பனவு

	2022 ரூ. 000	2021 ரூ. 000
குறுகிய கால ஊழியர் நன்மைகள்	**261,043**	180,218

மேற்படி கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு அவர்களுடனான தொழில் ஒப்பந்தங்களுக்கமைய வங்கியினால் காசல்லாத நன்மைகளும் வழங்கப்படுகின்றன.

52.4 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான ஏனைய கொடுக்கல்வாங்கல்கள்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான வெளிநின்ற கடன்கள்	**329,345**	98,648
இவ்வாண்டுப்பகுதியில் வழங்கப்பட்ட கடன்கள்	**203,018**	6,699
இவ்வாண்டுப்பகுதியில் மீளச்செலுத்தப்பட்ட கடன்கள்	**187,331**	10,038

அனைத்துக் கடன்களும் கடன் வகையைப் பொறுத்து 2 சதவீதம் தொடக்கம் 7 சதவீதம் வரையிலான வட்டி வீத வீச்சிடையுடன் கூடிய போதியளவு பிணையத்தைக் கொண்டுள்ளதுடன் மாதாந்தம் மீளச் செலுத்தப்படுகின்றன.

52.5 தொழில்நிலைக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

	2022 ரூ. 000	2021 ரூ. 000
செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புக்கள்	**106,371**	73,517

குறிப்பு 32இல் தரப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதியத்திற்குப் பின்னரான திட்டங்களுக்கு வங்கி பல்வேறு தொகைகளைப் பங்களித்ததுடன் ஊழியர் சேம நிதியத்திற்கு ரூ.986.99 மில்லியன் (2021இல் ரூ.717.59 மில்லியன்) பங்களிப்புச் செய்துள்ளது. வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது வங்கியானது அதன் தொழிலுக்குப் பின்னரான திட்டங்களுக்கு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பணிகளை வழங்கியது. அத்தகைய திட்டங்களுடனான நிலுவைகளின் தொகைகள் குறிப்பு 30.2இல் தரப்பட்டுள்ளன.

53. எதிர்பாராப் பொறுப்புக்களும் கடப்பாடுகளும்

53.1 நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள்

வங்கியானது அரசாங்கத்தின் அல்லது அதன் முகவராண்மைகளினதும் நிறுவனங்களினதும் முகவராகச் செயற்பட்டு, பொதுத் திறைசேரியினால் இ.ம. வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள பதில் உத்தரவாதங்களைப் பயன்படுத்தி பல்வேறு தரப்பினர்களுக்கும் உத்தரவாதங்களை வழங்குகின்றது. 2022திசெம்பர் 31இல் உள்ளவாறு அத்தகைய வெளிநின்ற உத்தரவாதங்கள் எதுவுமிருக்கவில்லை.

53.2 கொடுகடன் உத்தரவாதங்கள்

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு நிதியிடுவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வெளியக கொடுகடன் மூலங்களிலிருந்தான கடன் பெறுகைகளிலிருந்து மீள்நிதியிடலை வழங்குதல், அத்தகைய தொழில்முயற்சிகளுக்கு கடன்கள் மீதான கொடுகடன் உத்தரவாதங்களை வழங்குதல், உத்தரவாத தவணைத் தொகைகளைச் சேகரித்தல், கொடுகடன் உத்தரவாத நிதியங்களை நிருவகித்தல், கடன் செலுத்தத் தவறுகைகளைத் தடுக்கும் நோக்குடன் கடன் நிதியங்கள் உரிய விதத்தில் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக கொடுகடனுக்குப் பின்னரான சோதிப்புக்கள் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற தொழிற்பாடுகளை வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டது. ஆண்டுகாலப்பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன்களை வழங்கிய பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு எழக்கூடிய இழப்புக்களுக்கெதிராக வங்கி உத்தரவாதங்களை வழங்கியது. இது கடன்பெறுநர்களின் செலுத்தத் தவறுகைகளுக்கான ஒரு உத்தரவாதமல்ல என்பதோடு இழப்புக்களுக்காக மட்டுமேயாகும். அதாவது, பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் மூலம் கடன்களை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் உருவாகின்ற இழப்புக்களுக்காக மாத்திரம் கோரல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வேற்பாடுகளின் கீழ் எழக்கூடிய எதிர்பாராப் பொறுப்புக்களுக்கான தொகைகள் பின்வருமாறு:

உள்நாட்டு வர்த்தக வங்கிகள் - கொடுகடன் உத்தரவாதங்கள் தொடர்பானது:

	வெளிநின்ற உத்தரவாதங்களின் தொகை	
	2022 ரூ. 000	2021 ரூ. 000
தொடர்பான தரப்பினர்கள்	**1,989,471**	21,742,330
ஏனையவை	**88,808**	526,405
மொத்தக் கொடுகடன் உத்தரவாதங்கள்	**2,078,279**	22,268,735

2022 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதம் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு குறிப்பு 39இல் பதியப்பட்டுள்ளது.

53.3 நம்பகமான செயற்பாடுகள்

நாணய விதிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் வங்கியானது நம்பகமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. இவ்வகையான இயலுமையில் செயற்படுவதானது பல்வேறு தரப்பினரது சார்பாக நிதியங்களை வைத்திருக்க அல்லது வழங்கச் செய்கின்றது. ஆனாலும் அச்செயற்பாடுகளின் நிமித்தமாக எழும் எந்தப் பொறுப்பையும் வங்கி எதிர்பார்க்கவில்லை.

53.4 சட்ட ரீதியான கோரல்கள்

2022 திசெம்பர் 31இல் வங்கிக்கெதிரான பல சட்ட நடவடிக்கைகள் எஞ்சியிருந்தன. குறிப்பிடத்தக்க ஏதேனும் நட்டங்கள் ஏற்படுவது சாத்தியமற்றதென்ற அபிப்பிராயத்தை வங்கி கொண்டுள்ளதால், எவ்வித ஏற்பாடுகளும் மேள்கொள்ளப்படவில்லை.

54. கடப்பாடுகள்

அ) 2022 ஆம் ஆண்டில் வர்த்தக வங்கிகளில் வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாடு ஏற்பட்டதன் காரணமாக, நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 108 (2) உடன் படிக்கப்பட்ட பிரிவு 106 (1) இன் படி, இலங்கை ரூபாய்க்கு மாற்றாக வெளிநாட்டு நாணயங்களை வழங்குவதற்கான உறுதிமொழி கடிதங்களை இ.ம.வ வழங்கியுள்ளது. அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதை ஆதரிப்பதற்காக இ.ம.வங்கியால் பராமரிக்கப்படும் திரவ சர்வதேச இருப்புக்களின் அடிப்படையில் வணிக வங்கிகள். 2022 திசெம்பர் 31 நிலுவையிலுள்ள கடப்பாடுகளின் மொத்த நிலுவைத் தொகை ஐ.அ.டொலர் 174.50 மில் ஆகும். இந்த உறுதிப்பாட்டின் பயன்பாடு, அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பிறகு, ஐ.அ.டொலர் 40.00 மில் நடைமுறையிலுள்ள சந்தை விகிதங்களில் மாற்றாக ஆனது

ஆ) 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கையேற்புத் தொடர்பில் வங்கி ரூ.657.37 மில்லியன் பெறுமதியான மூலதனக் கடப்பாட்டைக் கொண்டிருந்தது.

இ) 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு வெளிநின்ற முன்னோக்கிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு காணப்பட்டன.

முன்னோக்கிய செலாவணி ஒப்பந்தங்கள்	2022 ரூ. 000	2021 ரூ. 000
முன்னோக்கிய செலாவணி விற்பனைகள்		
ஐ.அ.டொலர்	**559,112**	734,550
யப்பான் யென்	**12,500**	-
முன்னோக்கிய செலாவணி கொள்வனவுகள்		
ஐ.அ.டொலர்	**4,750**	225,145

55. நிதியியல் சொத்துக்களின் மாற்றல்கள்

வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது நிதியியல் சொத்துக்களின், முக்கியமாக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட படுகடன் பிணையங்களின் மாற்றலுக்கு வழிவகுக்கக்கூடிய கொடுக்கல்வாங்கல்களில் வங்கி ஈடுபடுகின்றது. குறிப்பு 5.3.3இல் குறிப்பிட்ட கணக்கீட்டுக் கொள்கையின்படி மாற்றல் செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள் தொடர்ச்சியாக முழுமையாக அல்லது வங்கியின் தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவிற்கு அங்கீகரிக்கப்படலாம் அல்லது அவை முழுமையாக அங்கீகரிப்பிலிருந்தும் நீக்கப்படலாம்.

வங்கியானது முழுமையாக அங்கீகரிப்பிலிருந்து நீக்கப்படாத அல்லது முக்கியமாக பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் மூலம் வங்கியின் தொடர்ச்சியான ஈடுபாட்டைக் கொண்டிருக்கும் நிதியியல் சொத்துக்களை மாற்றல் செய்கின்றது.

- மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்
- கடன் பிணையங்கள்
- பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள்

55.1 முழுமையாக அங்கீகரிப்பிலிருந்து நீக்கப்படாத மாற்றல் செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள்

அ) மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் வங்கியின் நாணயக் கொள்கை செயற்பாட்டின் ஒரு பகுதியாக செயற்படுத்தப்படுவதுடன் இவை உடமையின் குறிப்பிடத்தக்களவு அனைத்து இடர்நேர்வுகளையும் வெகுமதிகளையும் கொண்டுள்ளமையால் நிதியியல் நிலைமைக் கூற்றில் "இலங்கை அரச பிணையங்கள்" இன் கீழ் தொடர்ச்சியாக முழுமையாக அங்கீகரிக்கப்பட்டன. செலுத்தப்பட வேண்டிய காசு பிரதிபலன்கள் மற்றும் அதனுடன் தொடர்பான அட்டுறு வட்டி என்பன நிதியியல் நிலைமைக் கூற்றின் உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்களின் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

ஆ) கடன் பிணையங்கள்

கடன் பிணையங்கள் விபரிப்பது யாதெனில் கட்டணத்தினால் உருவாக்கப்பட்ட சந்தை நடைமுறைகளில் பிணையங்கள் தற்காலிக அடிப்படையில் ஒரு தரப்பினரிடமிருந்து (கடன்கொடுப்பவர்: உதாரணம் இ.ம.வ) இன்னொரு தரப்பினருக்கு (கடன்பெறுபவர்) மாற்றல் செய்யப்படுவதாகும். கடன்வாங்கியவர் ஒப்பந்த தவணை முடிவில் அல்லது கேட்கப்படும் போது திரும்பச் செலுத்த வேண்டியது கட்டாயமானதாகும். தற்போது பல்வேறு வழங்குநர்களினால் வழங்கப்படும் முறிகள் மற்றும் பல்தேசிய முறிகள் ஆகியவற்றின் கூட்டுக்காப்பாளராக தெரிவுசெய்யப்பட்ட கிளியரிங் ஹவுஸ் செயற்படுகின்றது. அந்த முறிகளின் கேள்வியின் அடிப்படையில் அவற்றை கடன்கொடுப்பதற்கு கிளியரிங் ஹவுசினை ஏதுவாக்குவதற்காக அதனுடன் இலங்கை மத்திய வங்கி ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி கடன் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடாது கிளியரிங் ஹவுஸ் நேரடியாக கடன்படுநர்களுக்கு அவற்றைக் கொடுப்பதனால் இச்செயற்பாடு தன்னியக்க முறி கடன்வழங்கல் என அழைக்கப்படும். ஒவ்வொரு மாத இறுதியிலும் தன்னியக்க கடன்வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட முறிகள் ஏதேனும் இருந்தால் அவற்றின் தன்னியக்க முறி கடன்வழங்கலின் கட்டண வருமானத்தினைக் கட்டுக்காப்பாளர் அனுப்பி வைப்பார். இது உடமையின் குறிப்பிடத்தக்களவு முழுமையான இடர்நேர்வு மற்றும் வெகுமதிகளை கொண்டிருப்பதனால் வங்கியானது நிதியியல் நிலைமைக் கூற்றில் பிணையங்களைத் தொடர்ச்சியாக முழுமையாக அங்கீகரிக்கின்றது. இந்தப் பிணையங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் "ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்களாகக்" காட்டப்படுகின்றன.

இ) பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள்

பிணையங்கள் தீர்ப்பனவு செயன்முறைக்கு வசதியளிக்கும் பொருட்டு அவுஸ்திரேலியா டொலர் 35.0 மில்லியன் பெறுமதியுடைய பிணையங்கள் வங்கியினால் யூரோ கிளியர் வங்கியில் பிணையிடப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 30 மில்லியன் பெறுமதி கொண்ட கொடுகடன் வசதி பெறப்பட்டது. தற்பொழுது, யூரோ கிளியர் வங்கியில் வைத்திருக்கபடும் பிணையிடப்பட்ட பிணையங்கள் ஐ.அ.டொலர் 3 மில்லியனாகும். பிணையிடப்பட்ட

பிணையங்கள் யூரோ கிளியரில் தனியான கணக்கில் வைத்திருக்கப்படுகின்றன.

	ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள் 2022 ரூ. 000	ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான 2021 ரூ. 000
சொத்துக்கள்		
கடன் பிணையங்கள்	-	-
யூரோ கிளியருடன் பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள்	**1,090,124**	2,830,756
பெடரல் றிசேர்வ் உடன் பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள்	-	-
சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதி	**1,090,124**	2,830,756

56. நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

மத்திய வங்கி பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் நம்பகத் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பொறுப்புக்கள், ஓய்வூதிய நன்மைத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன்வருகின்றது. வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நம்பிக்கைப் பொறுப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:

56.1 வங்கியானது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், வெளிநாட்டு நிதியிடப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மற்றும் கொடுகடன் திட்டங்களின் கீழ் கிடைக்கும் பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் பகிர்வையும் மீள்செலுத்துதலையும் கையாள்கின்றது. மேலும், பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் கீழ் இணைத்தரப்பினர் நிதியத்தினை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பெற்று அத்தகைய நிதிகளை வழங்கும் முகவராண்மைகளது வேண்டுகோளின்படி திறைசேரி உண்டியல்களில் முதலிடுகின்றது.

56.2 வங்கியே ஊழியர் சேம நிதியத்தின் கட்டுக்காப்பாளர் ஆகும். சட்ட நியதிகளின்படி பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களை சேகரித்தல், முதலீடுகளிலிருந்து வருமானமீட்டல், ஊழியர் சேம நியதித்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களது முறையான கணக்குகளைப் பேணி வருதல், மிகையான நிதிகளை முதலீடு செய்தல், மற்றும் அங்கத்தவர்களுக்கு நன்மைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் என்பன நாணயச் சபையின் செயற்பாடுகளில் அடங்கும்.

56.3 மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கித்தொழில் நிறுவனங்களிற்கும், 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் வங்கித்தொழிலை மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்படையதான தன்னார்வ வைப்புக் காப்புறுதித் திட்டமாக விளங்கும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கியே நிருவகிப்பதுடன் 2010 ஒத்தோபர் 01ஆம் நாள் தொடக்கம் நிதிகள், 2010 செத்தெம்பர் 28ஆம் நாளிடப்பட்ட 1673/ 11 இலக்க அரச வர்த்தமானியின்படி உருவாக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கு மாற்றல் செய்யப்பட்டுள்ளன.

56.4 2010 செத்தெம்பர் 28ம் நாளிடப்பட்ட 1673/ 11 இலக்க அரச வர்த்தமானியின்படி வங்கி 2010 ஒத்தோபர் 01 ஆம் நாள் தொடக்கம் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் என்ற பெயரில் வைப்பாளர்களின் நிதியினைப் பாதுகாக்கும் தேசிய நல நடவடிக்கையொன்றாக கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டமொன்றினை ஏற்படுத்தியது.

2013 நவெம்பர் 22 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இத்திட்டம் "இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம்" என மீளப்பெயரிடப்பட்டதுடன் வைப்பு காப்புறுதி நிதி "இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதி" என மீளப்பெயரிடப்பட்டது.

மேலும், 2239/52ஆம் இலக்க வர்த்தமானி இலக்கத்திற்கமைவாக, 2010 செத்தெம்பர் 28ஆம் திகதியிடப்பட்ட 2010ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஆரம்ப ஒழுங்குவிதிகளை இரத்துச்செய்து மாற்றீடு செய்வதன் மூலம் 2021 ஓகத்து 06ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டமாக புதிய ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன.

அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் என்பன இத்திட்டத்தின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். இதன்படி, 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு 69 நிறுவனங்கள் இத்திட்டத்தின் உறுப்பினர்களாகவுள்ளனர். காப்புறுதி செய்யப்பட வேண்டிய வைப்புக்கள் மேலே சொல்லப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தல் 5.1 இன்படி விசேட விலக்கல்கள் மற்றும் அனைத்துக் கடன் சாதனங்களும் நீங்கலான உறுப்பினர் நிறுவனங்களின் கேள்வி, தவணை மற்றும் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்கள் மற்றும் ஆரம்பத்தில் வைப்பாளர்களாகயிருந்து 2012 சனவரி 01இற்கு முன்னர் 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் நாணயச் சபையின் வழிகாட்டலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வியாபார மீளமைத்தல் திட்டங்களின் ஒரு பகுதியாக உரிமை மூலதனமாக மாற்றப்பட்ட பங்குதாரர்களின் பங்குகளின் பெறுமதி என்பவற்றை உள்ளடக்கப்படுவதுடன் 5.2ஆம் ஒழுங்குவிதிகளில் நிர்ணயிக்கப்பட்ட அனைத்துப் படுகடன் சாதனங்களையும் வைப்புப் பொறுப்புக்களையும் நீக்குகின்றது.

வைப்புக் காப்புறுதி நிதியமானது, சுய விருப்பு வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் முதலீடான ரூ.350.20 மில்லியன் மாற்றலின் மூலமும் மற்றும் கைவிடப்பட்ட சொத்தாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து சேகரிக்கப்பட்டவற்றிலிருந்து செய்யப்பட்ட ரூ.1,168.31 மில்லியன் முதலீட்டின் மூலமும் உருவாக்கப்பட்டது. 2021 திசெம்பர் 31இல் நிதியத்தின் அளவு ரூ.67,887.33 மில்லியனாக (கணக்காய்வு செய்யப்படாதவை) இருந்தது. தற்பொழுது, வைப்பாளரொருவருக்கு, நிறுவனமொன்றுக்கு கொடுபடத்தக்க இழப்பீட்டுத் தொகை ரூ.1,100,000.00 அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்களாக இருக்குமிடத்து அதற்குச்சமனான தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. இழப்பீட்டுக் கொடுப்பனவிற்கு நாணயச் சபையோ அல்லது இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்கமாட்டாது என்பதுடன் ஏதேனும் அனுமதிக்கப்பட்ட கடன்பாடுகள் மற்றும் பெறப்பட்ட உதவுதொகைகள் உட்பட வைப்புக் காப்புறுதி நிதியத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியம் அல்லது ஒதுக்கப்பட்ட நிதியத்திற்கு ஏற்றவாறு மட்டுப்படுத்தப்படும். நிதியத்தில் வரவு வைக்கப்பட்டுள்ள மொத்தத் தொகைக்கு மேலதிகமாக ஏற்படும் ஏதாவது பொறுப்பிற்கு நாணயச் சபையோ இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்க மாட்டாது.

வைப்புக் காப்புறுதிப் பிரிவு தற்பொழுது தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன், இது, காலத்திற்குக் காலம் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான பணிப்புரைகள்/ ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளின் நியதிகளுக்கிணங்க தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களப் பணிப்பாளரின் அறிவுறுத்தல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் இத்திட்டத்தின் தொழிற்பாடுகளுக்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருக்கின்றது. வைப்புக் காப்புறுதிப் பிரிவானது வங்கியின் நிதியியல் கூற்றுக்களிலிருந்தும் தெளிவாகவும் தனியாகவும் ஏடுகளையும் கணக்குகளையும் பேணல் வேண்டும். அத்துடன் கணக்காய்வாளர் நாயகம் இப்பிரிவின் கணக்காய்வாளாராக இருத்தல் வேண்டும்.

56.5 நாணயச் சபையினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் விடயத்தில் வங்கியானது ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்புடைய விடயங்களை மேற்கொள்கின்றது. இத்தொழிற்பாடுகளை நிறைவேற்றும் அதேவேளையில் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகத் தவறும் நிதிக் கம்பனிகள் சார்பாக வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றதுடன் கடன் தீராற்றலற்ற முறிவு நிலைக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களினுடைய சொத்துக்களை கையகப்படுத்தல் உட்பட பிணையத்தின் ஒரு வடிவமாக நாணயச் சபையைக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

56.6 வங்கியின் நாணயச் சபை சார்பில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியாலும் வெளிநாட்டு நன்கொடையாளர்களினாலும் நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் பிரத்தியேக முகவராக தொழிற்படுகின்றது.

I. இ.ம.வங்கியினால் நிதியிடப்படும் செயற்றிட்டங்கள்

(i) முடிவடைந்த செயற்றிட்டங்கள்

செயற்றிட்டம் அல்லது கடன் திட்டத்தின் பெயர்	நிதியத்தின் மொத்த ஒதுக்கம் (மில்.)		குறிக்கோள்கள்	பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியம் (ரூ. மில்.)
தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்	ஐ.அ. டொலர்	24.50	தேயிலை சிறு உடமையாளர் வருமானத்தினை அதிகரித்தல் மற்றும் செயற்றிட்டப் பிரதேசங்களில் இயற்கைச் சூழலை மேம்படுத்துதல்	2,550.90
இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம்	சிஎஉ	11.56	நீண்ட கால பயிர் துறையினை வர்த்தகப்படுத்தல், உற்பத்தியை அதிகரித்தல், நாற்றுமேடை அபிவிருத்தி, அறுவடைக்குப் பின்னரான கையாளல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல்	1,453.11
பெருந்தோட்டத்துறை சீர்திருத்த செயற்றிட்டம்	ஐ.அ. டொலர்	40.00	உற்பத்தித்திறனையும் இலாபத்தன்மையினையும் அதிகரிக்கும் அதேவேளை இலங்கையின் பெருந்தோட்டத் தொழில் துறையில் அநுகூலங்களைப் பேணுவதற்காக பெருந்தோட்டத் துணைத் துறைகளில் கொள்கை மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களுக்கு உதவியளித்தல்	5,200.00
சிறிய வியாபாரங்களை மீள எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்	இல.ரூ	2,656.00	சிறிய வியாபாரங்களை மீட்பதன் மூலம் சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மீளத் தொடங்குதல்	2,663.40
சிறிய வியாபாரங்களை மீள் எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் -சுழலும் நிதியம்	இல.ரூ	150.00	சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மீளத் தொடங்குதல்	122.72
தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம்	இல.ரூ	94.31	உயர்தர தொழிற்படையை உருவாக்குவதற்காகவும் தேர்ச்சிப் பொருத்தப்பாடின்மையை நீக்குவதற்காகவும் தேர்ச்சிப் பயிற்சியின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் மேம்படுத்தல்	94.59
நகர சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம்	ஐ.அ. டொலர்	4.00	நகரத்திலும் நகர்ப்புறங்களிலும் வசிக்கும் மக்களின் சூழல் வசதிகள், நலம் மற்றும் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துதல்	369.15
வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான வீடமைப்பு புகலிடச் செயற்றிட்டம்	ஐ.அ. டொலர்	25.00	நாட்டிலுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகளைக் கட்ட, புதுப்பிக்க, வாழிடங்களை விரிவாக்க உதவுதல்	1,362.00
நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்புச் செயற்றிட்டம்	சிஎஉ	15.10	வீடுகளைக் கட்டுவதனூடாக வாழ்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு குறைந்த வருமானச் சமூகத்தினருக்கு உதவுதல்	1,915.76
வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம்	ஐ.அ. டொலர்	1.80	வடமேல் மாகாணத்திலுள்ள மக்களின் பொருளாதார, சமூக, ஊட்டச்சத்து நலனோம்புகைகளை மேம்படுத்துதல்	102.76
மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம்	சிஎஉ	2.00	சிறிய தொழில்முயற்சியாளர்களின் வருமானத்தினை நிரந்தரமாக உயர்த்துதல் மற்றும் வலுப்படுத்தல்	249.06
மத்திய நாட்டு நீண்ட கால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம்	சிஎஉ	11.56	மத்திய நாட்டுப் பகுதியில் நீண்ட காலப் பயிர்களின் உற்பத்தி இயலளவை அதிகரித்தல்	642.00
வேளாண்மை புத்தாக்கச் செயற்றிட்டம்	சிஎஉ	17.05	ஐந்து எல்லை மாவட்டங்கள் உள்ளடங்கலாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிவில் குழப்பங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்கும் சொத்துக்களின் புனரமைப்பிற்கும் உதவுதல்	843.00
சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்	ஐ.அ. டொலர்	12.60	சிறு உடமையாளர் தேயிலை துறையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேயிலைக்கான வசதிகளை புனரமைத்தல்	645.93
வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம்	யென்	1,368.00	வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக முறையான கொடுகடன் வழிப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக காத்திரமான கொடுகடன் வழங்கல் பொறிமுறையொன்றினை ஏற்படுத்துதல்	1,402.45
சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்	ஐ.அ. டொலர்	17.40	குறைந்த வருமானம் பெறும் மக்களிடையே தொழில் உருவாக்கத்தினையும் சேமிப்புப் பழக்கத்தினையும் மேம்படுத்தலும் செலவுச் சிக்கனமானதும் உறுதியானதுமான நுண்பாக கொடுகடன் விநியோக முறைமையை நிறுவுதலும்	345.69
கேகாலை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்	சிஎஉ	1.50	வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளினை மேம்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்க்கை நிலைமைகளைத் தரமுயர்த்துதல்	148.00
தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்	சிஎஉ	27.90	தென் மாகாணத்திலுள்ள மக்களின் வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் வாழ்க்கைத்தரத்தினை முன்னேற்றுதல்	564.00
ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் ஒப்பந்தம் பீ	யூரோ	10.00	சுனாமியால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட சுற்றுலா மற்றும் அதன் பணித் துறைகள் உள்ளடங்கலாக சிறிய மற்றும் நடுத்தரளவு செயற்றிட்டங்களை மீளக் கட்டியெழுப்புதல்	1,553.27
இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம்	இல.ரூ	1,200.00	நாட்டின் நீண்ட காலப் பயிர்த் துறையை அபிவிருத்தி செய்தல்	1,199.82

செயற்றிட்டம் அல்லது கடன் திட்டத்தின் பெயர்	நிதியத்தின் மொத்த ஒதுக்கம் (மில்.)		குறிக்கோள்கள்	பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியம் (ரூ. மில்.)
மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம்	இல.ரூ	77.00	மாத்தளை மாவட்டத்தில் கிராமிய மற்றும் பண்ணைக் குடும்பங்களின் வருமானத்தினை உயர்த்துதல், பண்ணையல்லாத தொழில் முயற்சிகளை உருவாக்குவதற்காக நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு நிதியங்களை வழங்குதல் அத்துடன் ஏற்கனவேயிருக்கும் செயற்றிட்டங்களை விரிவாக்குதல்	77.00
சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம்	இல.ரூ	100.00	சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும்	100.00
கட்டுமானத் துறை அபிவிருத்திச் செயற்றிட்டம்	யூரோ	9.00	சுனாமிக்குப் பின்னைய மீள்கட்டுமானங்களில் கட்டுமானம் மற்றும் பொதுப் பணிகளில் வினைத்திறனுடன் பங்கேற்பதற்காக தனியார் உள்நாட்டு வியாபாரங்களின் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப இயலுமைகளை உறுதிப்படுத்துதல்	1,399.73
சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் - கட்டம் II	இல.ரூ	70.00	சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேலும் மேம்படுத்துவதற்கும்	70.00
வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II (பிரபோதினி)	யென்	2381.00	மாத வருமானம் ரூ.15,000 இற்கும் குறைவாகக் கொண்ட குடியிருப்பாளர் அலகுகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்	3,213.20
சுய வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சி	இல.ரூ	250.00	நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனத்தில் சித்தியடைந்து பயிற்சிபெற்ற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புச் செயற்றிட்டங்களைத் தொடங்குவதற்கு நிதியியல் உதவிகளை வழங்குதல்	232.39
வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்	இல.ரூ	252.95	அநுராதபுரம், மொனராகலை, குருணாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வேளாண்மையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளூடாக கூடிய வருமானம் ஈட்டுவதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குதல்	252.95
தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	ஐ.அ. டொலர்	32.90	சந்தை/ பெறுமதிச் சங்கிலித் தொடர் அபிவிருத்தி மூலம் வருமானத்தை அதிகரிப்பதற்கு சிறுஉடமை உற்பத்தியாளர்கள் மற்றும் நிலமற்றோரின் குறிப்பாக இளைஞர்களுக்கு உதவியளித்தல் மற்றும் அவர்களது வருமானத்தினை மேம்படுத்தும் வித்தில் நிதியினையும் பயிற்சியையும் வழங்குதல்	113.13
சிறிய பெருந்தோட்டத் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்றிட்டம்	சிஎஉ	2.60	மொனராகல, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களிலுள்ள குறைந்த வருமானம் பெறும் சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்	487.66
தேசிய வேளாண் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - நுண்பாக நிதி	இல.ரூ	1,049.84	தெரிவு செய்யப்பட்ட செயற்றிட்ட பிரதேசங்களின் வசதி குறைந்தோரின் வருமான மட்டம் மற்றும் சமூக நிலையை முன்னேற்றுதல்.	1,049.84
தேசிய வேளாண் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வெளிப்பயிர் வேளாண்மையாளர் கடன் திட்டத்தின் கீழான பெறுமதிச் சங்கிலி மூலதன வேளாண் கடன் திட்டம்	இல.ரூ	135.69	வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தித் திறன், தரம் மற்றும் கூட்டப்பட்ட பெறுமதியை அதிகரித்தல்	135.69
தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வெளிப்பயிர் வேளாண்மையாளர் கடன் திட்டத்தின் கீழான பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி பருவகால வேளாண்மை கடன் திட்டம்.	இல.ரூ	302.04	வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி, உற்பத்தித் திறன், தரம் மற்றும் கூட்டப்பட்ட பெறுமதியை மேலும் மேம்படுத்தல்	302.04
"தருண திரிய" இளைஞர்களுக்கு வலுவளித்தல் மற்றும் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டம்	இல.ரூ	288.48	சிறிய வியாபாரங்கள் மற்றும் ஏனைய வடிவங்களிலான சுயமுயற்சி செயற்றிட்டங்களை உள்ளடக்கி, தேர்ச்சி மட்டங்களை மேம்படுத்தவும் இயலளவைக் கட்டியெழுப்பவும் கிராம மட்டத்திலான வறிய இளைஞர்களுக்கு உதவுதல்	288.48
வறண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித் திட்டம் - சுழலும் நிதியம்	இல.ரூ	252.90	அநுராதபுரம், மொனராகலை, குருநாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வருமானமீட்டும் நடவடிக்கைகளை மேம்படுத்தல்	252.89
சிறிய வேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் திட்டம் - சுழலும் நிதியம்	இல.ரூ	345.69	சிறு வேளாண்மையாளர்கள் மற்றும் சிறு அளவு வேளாண்மையல்லா கிராமிய தொழில்முயற்சி நிறுவனங்களினாலும் வேளாண்மை உற்பத்தியை செறிவுபடுத்துவதற்கு ஊக்குவித்தல்.	1,564.75
வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II (பிரபோதினி) - சுழலும் நிதி	இல.ரூ	2,764.84	குறைந்த வருமான சமூகத்தினரின் மட்டத்தை மேம்படுத்தல் மற்றும் முறையான நிதியியல்பணிகளின் உள்ளடக்கத்தினை மேம்படுத்தல் மற்றும் அத்தகைய மக்களின் வருமானமீட்டும் நடவடிக்கைகளை மேம்படுத்தல்	7,016.86
சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் 4 பீ மூலதனம்	ஐ.அ. டொலர்	30.29	உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்கி அவற்றின் இயலளவைக் கட்டியெழுப்புதல், தனியார் துறையுடனான பங்குடமையுடன் வலையமைப்பை அமைத்தல் மற்றும் வலுப்படுத்தல் செயன்முறையைப் பயன்படுத்தி வர்த்தக ரீதியான உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமையினூடாக சிறு உடமையாளர்களின் வறுமையைக் குறைத்தல் மற்றும் போட்டித்தன்மையை அதிகரித்தல் மற்றும் 57,500 சிறு உடமையாளர்களின் வருமான மட்டம் மற்றும் உணவுத் தரத்தை அதிகரித்தல் போன்றவற்றிற்குப் பங்களித்தல்	125.85
சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் 4 பீ பருவகாலம்				854.05
சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் இளைஞர்				14.45
சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் வருமான உருவாக்கம்				106.42

(ii) நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்றிட்டங்கள்

செயற்றிட்டம் அல்லது கடன் திட்டத்தின் பெயர்	நிதியத்தின் மொத்த ஒதுக்கம் (மில்.)		குறிக்கோள்கள்	பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியம் (ரூ. மில்.)
தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம்	இல.ரூ	1,100.00	தொழில் துறையிலுள்ள தேயிலைத் துறையை அபிவிருத்தி செய்தல்	964.87
சுவசக்தி கடன் திட்டம்	இல.ரூ	4,000.00	புதிய மற்றும் தற்போதுள்ள முயற்சியாளர்களுக்கு உதவி வழங்கும் அதேவேளை வேலைவாய்ப்புக்களை விரிவுபடுத்தல்	4,448.50
"அத்வெல" - அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட இடங்களில் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல்	இல.ரூ	2,000.00	இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்டவாறு எந்தவொரு அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட எந்தவொரு தகுதிவாய்ந்த பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைக்க ஆதரவளித்தல்	1,687.52
வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் மீள் நிதியிடல் (பிரபோதினி)	இல.ரூ	1,031.00	முறைமை சார்ந்த நிதியியல் துறை வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத குறைந்த வருமானமீட்டும் குழுக்கள் அல்லது சமூகத்தினரால் மேற்கொள்ளப்படும் வருமானமீட்டும் நடவடிக்கைகளுக்கு காத்திரமான கொடுகடன் வழங்கல் பொறிமுறையை உருவாக்குவதற்கு உதவியளித்தல்	5,518.79
சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் 4பீ வேளாண் வியாபாரம்	ஐ.அ. டொலர்	30.29	வேளாண் உற்பத்தியின் உற்பத்தி, உற்பத்தித்திறன், தரம் மற்றும் பெறுமதி கூட்டலை அதிகரித்தல்	458.29
சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் 4பீ இளைஞர்				405.09
சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் சுழலும் நிதியம் இளைஞர்				490.21
சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் சுழலும் நிதியம் வேளாண் வியாபாரம்				173.85
சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் சுழலும் நிதிய வருமான உருவாக்கம்				121.32
சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் 4பீ நிதியியல் நிறுவனங்களின் தொகை வடிவிலான கடன்				237.69
சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் சுழலும் நிதியம் நிதியியல் நிறுவனங்களின் தொகை வடிவிலான கடன்				59.36
சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் சுழலும் நிதியம் ஊக்குவிப்பாளர் தொகை வடிவிலான கடன்				31.16
சுயதொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்பு - கட்டம் II	இல.ரூ	950.00	தேசிய தொழிற்பயிற்சி தகைமையின் சான்றிதழை அல்லது டிப்ளோமை பூர்த்தி செய்த இளைஞர்களுக்கு புதிய வியாபாரமொன்றினை ஆரம்பிப்பதற்கு அல்லது ஏற்கனவேயிருக்கும் வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்கு உதவியளித்தல்	493.13
சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்தெழுச்சி	இல.ரூ	500.00	மீள்நடப்பட்ட தேயிலை மற்றும் புதிதாக நடப்பட்ட இறப்பர் தோட்டங்களிலிருந்தான வருமான உருவாக்கத்தில் தாமதத்தை எதிர்நோக்கும் சிறுஉடமையாளர் வேளாண்மையாளர்களுக்கு சலுகை ரீதியான நிதியியல் வசதிகளை வழங்குதல்	213.75

57. அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

பின்வரும் இரண்டு உருப்படிகளைத் தவிர, நிதியியல் கூற்றுக்களில் சரிசெய்தல் அல்லது வெளிப்படுத்த வேண்டிய முக்கியமான நிகழ்வுகள் எதுவும் அறிக்கையிடும் திகதிக்குப் பிறகு நிகழவில்லை.

அ. 2023 மார்ச் 22 அன்று விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் ப.ந.நிதியத்திலிருந்து இலங்கை அரசாங்கத்தின் மூலம் சி.எ.உ 254.00 மில்லியன் நிதி பெறப்பட்டது.

ஆ. இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதி, பொருளாதார உறுதித்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுடன் இணைந்து, 2023 மார்ச் 30 அன்று ஒரு மெய்நிகர் முதலீட்டாளர் விளக்கக்காட்சியை நடத்தியது அதில் உள்நாட்டுக் கடன் மேம்படுத்தல் ஒன்றைச் சுட்டிக்காட்டியது. உள்நாட்டுக் கடன் மேம்படுத்தலில் மதிப்பீடு செய்வதற்கான விருப்பங்களை அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

2. வங்கி மேற்பார்வை

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம் மற்றும் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொடர்ச்சியான மேற்பார்வையையும் காலாந்தரப் பரீட்சிப்புகளையும் நடாத்துவதற்கும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான ஒழுங்குவிதிகளை வழங்குவதற்குமான விசேட அதிகாரங்களையும் கடமைகளையும் கொண்டதாகும். வங்கித்தொழிற்றுறையின் பாதுகாப்பையும் ஆற்றல்வாய்ந்த தன்மையையும் உறுதிசெய்தல் மற்றும் இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளின் வைப்பாளர்களினதும் ஏனைய ஆர்வலர்களினதும் நலன்களைப் பாதுகாத்தல் என்பவற்றை வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பிரதான குறிக்கோள்கள் நோக்காகக் கொண்டுள்ளன.

மேலே குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை அடையும்பொருட்டு, வங்கித்தொழில் வியாபாரங்களைக் கொண்டு நடாத்துவதற்கு உரிமங்களை வழங்குதல், முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை உருவாக்கி வழங்குதல், உரிமம்பெற்ற வங்கிகளில் தொடர்ச்சியான மேற்பார்வையையும் காலாந்தர நியதிச்சட்டப் பரீட்சிப்புக்களையும் நடாத்துதல், உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியை நியமிப்பதற்கான பொருத்தப்பாடு மற்றும் தகுதியுடைமை ஆகியவற்றை மதிப்பீடுசெய்து ஒப்புதலளித்தல், நாணயச் சபை மூலம் விதந்துரைக்கப்பட்டவாறு ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளைத் தொடங்குதல் அத்துடன் வங்கித்தொழில் துறை பற்றிய விழிப்புணர்வையும் இயலாற்றலையும் கட்டியெழுப்புவதில் ஈடுபடுதல் போன்ற உ ரிமம்பெற்ற வங்கிகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் முதலியவற்றுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் மேற்கொள்கிறது.

2022ஆம் ஆண்டின் இறுதியில் 24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் 6 உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளையும் இலங்கை வங்கித்தொழில் துறை உள்ளடக்கியிருந்தது. இதற்கு மேலதிகமாக 4 வெளிநாட்டு வங்கிகளின் பிரதிநித்துவ அலுவலகங்களும் செயற்பட்டன. உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் பிரதிநித்துவ அலுவலகங்களின் பட்டியல் இணைப்பு II - 1 இல் தரப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளினதும் நடவடிக்கைகளினதும் தொகுப்பு பின்வருமாறு

2.1 முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை வழங்குதல்

வங்கித்தொழில் துறையின் உறுதிப்பாட்டினையும் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கு வங்கி மேற்பார்வைத் திணைக்களம் செயலாற்றல்மிக்க முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை வழங்கிய அதேவேளை பின்கொவிட் அதிர்வுகளிலிருந்தான மீட்சி மற்றும் சவால்மிக்க பொருளாதாரச் சூழ்நிலைக்கு மத்தியிலும் உரிமம்பெற்ற வங்கிகளின் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கான சலுகைகளைத் தொடர்ந்தும் வழங்கியது. 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட சில முக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன. ஒழுங்குவிதியின் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன.

(அ) நிலவும் அசாதாரண பேரண்டப் பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள்

(ஆ) உரிமம்பெற்ற வங்கிகளின் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நிதியியல் நடவடிக்கைகள்

(இ) உரிமம்பெற்ற வங்கிகள் பின்கொவிட்-19 மீளெழுச்சி அலகுகளினை உருவாக்குவது மீதான வழிகாட்டல்கள்

(ஈ) நிலவும் அசாதாரண பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகளுக்கு மத்தியில் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கான சலுகைகள்

(உ) திரவத்தன்மை வீதங்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள்

(ஊ) உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள்

(எ) வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைக்கான பின்னிணைப்பு விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்கள் வங்கித் தொழில் பணிகளை அணுகுவதற்கான வாடிக்கையாளர் சாசனம்

(ஏ) இறக்குமதிகளுக்கெதிரான அளவுக்கட்டுப்பாடுகள்

(ஐ) வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்ட) கட்டளை குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்

(ஒ) உரிமம்பெற்ற வங்கிகளால் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களை கட்டாயமாகப் பதிவுசெய்தல்

(ஓ) உரிமம்பெற்ற வங்கிகளின் கடன்வழங்கல் மற்றும் வைப்புச் சாதனங்களுக்கான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்

(ஔ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மூலம் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் மீதான கட்டுப்பாடுகள்

(க) உரிமம்பெற்ற வங்கிகளின் வருடாந்த உரிமக்கட்டணம்

மேலும், வங்கிமேற்பார்வைத் திணைக்களம் 2022 காலப்பகுதியில் கடன்வழங்கலின் உயர்ந்தபட்சத் தொகைக்கான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் போன்ற முதன்மையான முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத் தகவல்களின் மீளாய்வுகளை ஆரம்பித்தது.

2.2 புதிய வங்கித்தொழில் சட்டத்தை வரைதல்

உரிமம்பெற்ற வங்கிகளின் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் புதிய வங்கித்தொழில் சட்டத்தை இறுதிசெய்யும் செயன்முறையில் ஈடுபடுகின்றது. விகிதாசாரத்தன்மையை வசதியளித்தல், நிறுவன ஆளுகையை வலுப்படுத்தல், ஒருங்கிணைந்த மேற்பார்வை, நிதியியல் அபராதங்களை/ தண்டங்களை விதித்தல், பரவும் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான வங்கிகளின் பாதுகாப்பு வளையம் மற்றும் ஒன்றிணைப்புக்கள், கையகப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தலுக்கான ஏற்பாடுகள் வலுப்படுத்தல் கட்டமைப்பதற்கான ஏற்பாடுகளை முன்மொழியப்பட்ட புதிய வங்கித்தொழில் சட்டம் உள்ளடக்குகின்றது. புதிய வரைபை 2023ஆம் ஆண்டின் இறுதியளவில் சட்டமாக்குவதற்கு இலங்கை மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது.

2.3 நாணயச் சபையினாலும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினாலும் வழங்கப்பட்ட ஒப்புதல்கள்

(அ) உரிமம்பெற்ற வங்கிகளின் கிளைகளும் ஏனைய வங்கித் தொழில் நிலையங்களும்

2022 இறுதியில், 220 கோரிக்கைகள் செயன் முறைப்படுத்தப்பட்டதுடன் 178 ஒப்புதல்கள் வழங்கப்பட்ட அதேவேளை 31 கோரிக்கைகள் முன்மதியுடைய காரணங்களின் அடிப்படையில் பிற்போடப்பட்டன/ நிராகரிக்கப்பட்டன (அட்டவணை 1). அதற்கமைய, 2022 திசெம்பர் இறுதியளவில் 3,630 வங்கிக் கிளைகளும், 3,794 மாணவர் சேமிப்புப் பிரிவுகளும், 6,678 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் தொழிற்பட்டன.

2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு துறைமுக நகரத்தில் வெளியூர் வங்கி வணிகத்தை மேற்கொள்ள 2022ஆம் ஆண்டில் நாணயச் சபை 4 உரிமம்பெற்ற வங்கிகளுக்கு உரிமங்களை நிதி அமைச்சர் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது.

அட்டவணை II - 1
கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்கள் தொடர்பான ஒப்புதல்கள்

ஒப்புதல்களின் வகைகள்	ஒப்புதல்களின் எண்ணிக்கை	
	செயன்முறைப் படுத்தப்பட்டவை	ஒப்புதல் வகுக்கப் பட்டவை
திறத்தல் மற்றும் நிறுவுதல்	**114**	**85**
கிளைகள்	29	23
தன்னியக்க கூற்றுப் பொறிகள்	51	48
மாணவர் சேமிப்புப் பிரிவுகள்	4	3
ஏனைய வங்கித்தொழில் நிலையங்கள்	3	2
உரிமம்பெற்ற வங்கியின் முகவர்கள்	27	9
அமைவிட மாற்றம்	**72**	**62**
கிளைகள்	63	54
தன்னியக்கப் பொறிகள்	5	4
ஏனையவை	4	4
கிளைகளுக்கும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்களுக்கும் வழங்கப்பட்ட மூடுதல் மற்றும் இரத்துச்செய்தல் ஒப்புதல்கள்	**8**	**7**
தன்னியக்க கூற்றுப் பொறிகளுக்கும் ஏனைய தன்னியக்க கூற்றுப் பொறிகளுக்கும் வழங்கப்பட்ட ஒப்புதல்களை இடைநிறுத்தல் மற்றும் இரத்துச்செய்தல்	**12**	**12**
உரிமம்பெற்ற வங்கிகளை முகவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல்களை இடைநிறுத்தல் மற்றும் இரத்துச் செய்தல்	**14**	**12**
மொத்தம்	**220**	**178**

(ஆ) ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள்

2022ஆம் ஆண்டு காலப்பகுதியில், மொத்தமாக 283 ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள் வழங்கப்பட்டன (அட்டவணை 2).

அட்டவணை II - 2
ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள்

ஒப்புதல் வகை	ஒப்புதல்களின் எண்ணிக்கை
புதிய/ தொடர்ந்திருக்கின்ற பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்ற அலுவலர்கள், பிரதான முகாமைத்துவ ஆளணி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற நபர்கள் ஆகியோரை நியமிப்பதற்கான பொருத்தப்பாடு மற்றும் தகுதியுடமையை மதிப்பீடு செய்தல்	185
வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள்	19
சந்தைப் பெறுமதிக்குக் குறைவான சொத்துக்களை கையுதிர்த்தல்	20
அடுக்கு 2 மூலதனத்தில் தொகுதிக் கடன்களை உள்ளடக்குதல்	3
கடன்வசதியின் உயர்ந்தபட்சத் தொகையை விஞ்சுதல்	1
கைவிடப்பட்ட சொத்துக்களின் மீள் செலுத்துகை	1
வெளிநாட்டு ஊழியர்களின் வீசா பரிந்துரைகளுக்கான/ புதுப்பித்தல்களுக்கான கோரிக்கைகள்	17
ஏனைய ஒப்புதல்கள்	37
மொத்தம்	**283**

(இ) ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள்

2022ஆம் காலப்பகுதியில் வங்கித்தொழில் சட்டம் மற்றும் அதன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்கியொழுகாமை தொடர்பில் 25 சம்பவங்கள் தொடர்பில் சீராக்க வழிமுறைகள் எடுக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கோரப்பட்டன.

2.4 தொடர்ச்சியான மேற்பார்வையை நடாத்துதல்

(அ) தொடர்ச்சியான மேற்பார்வை என்பது தனிப்பட்ட வங்கிகளின் அலுவல்கள் மீது தொடர்ந்து கண்காணிக்கின்ற பொறிமுறையொன்றாகும். இது உரிமம்பெற்ற வங்கிகளின் தொழிற்பாட்டு செயற்றிநனையும் நீண்டகாலம் நிலைத்திருக்கும் தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு முன்கூட்டிய எச்சரிக்கை முறைமையொன்றாக தொழிற்படுவதுடன் வைப்பாளர்களின் நிதியின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு தேவைப்படுமிடத்து திருத்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதையும் இயலச்செய்கின்றது. பேரண்டப் பொருளாதாரம் தொடர்பான பிரச்சனைகளால் உருவாகும் வலுவான சவால்களுக்கு மத்தியில் வங்கித் துறையை பாதுகாப்பானதாகவும், உறுதியானதாகவும் மாற்றுவதற்கு தொடர்ச்சியான மேற்பார்வை

தீவிரப்படுத்தப்பட்டது. வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட பின்-நெற் முறைமையூடாக வாரந்த/மாதாந்த/காலாண்டு/வருடாந்த அடிப்படையில் ஒவ்வொரு வங்கியினாலும் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் மற்றும் முன்மதியுடைய தகவல்களின் அடிப்படையில் தொடர்ச்சியான கண்காணிப்பு நடாத்தப்பட்டது.

(ஆ) 2022 இல் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளின் விளைவாக திரவத்தன்மை மற்றும் மூலதன அழுத்தங்களைக் கருத்திற்கொண்டு விசேட சபைப் பத்திரங்கள் நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. மேலதிகமாக, திரவத்தன்மை மற்றும் மூலதனப் போதுமான தன்மை மற்றும் அத்தகைய கட்டுப்பாடுகள் தொடர்பாக வங்கிகள் கையாளும் உத்திகள் குறித்து கலந்துரையாட நாணயச் சபை உறுப்பினர்களுடன் வங்கிகளின் இயக்குநர்கள் குழு மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருடன் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

(இ) 2022ஆம் ஆண்டில் வங்கி முகாமைத்துவ திணைக்களத்தால் தகவல் அறிவதற்கான 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க உரிமைச் சட்டத்தின் கீழ் ஏறத்தாழ 29 கோரிக்கைகள் வாடிக்கையாளர்களின் கோரிக்கைகள் கையாளும் அதேநேரத்தில் கையாளப்பட்டது.

(ஈ) வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது வங்கிகளின் நியதிச்சட்டப் பரீட்சிப்புகளின் போது கண்டறியப்பட்ட மேற்பார்வைக் கரிசனைகளை காலாண்டு அடிப்படையில் குறித்தொதுக்கப்பட்ட கால இலக்கினுள் நிவர்த்திசெய்தல் தொடர்பான முன்னேற்றத்தைத் தொடர்ந்து கண்காணித்திருந்தது.

2.5 காலாந்தரப் பரீட்சிப்புக்களை நடாத்துதல்

(அ) 2022ஆம் ஆண்டில், 4 உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் சட்டரீதியான பரீட்சிப்பு உள்ளடங்கலாக உரிமம்பெற்ற வங்கிகளின் 22 நியதிச் சட்டப் பரீட்சிப்புக்களை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நடாத்தியது. உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளில் நடாத்தப்பட்ட 4 நியதிச் சட்டப் பரீட்சிப்புக்களில், 2 சட்ட ரீதியான பரீட்சிப்புக்கள் அத்தகைய உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகளின் குழு நிறுவனங்களுக்கு விரிவுபடுத்தப்பட்ட ஒருங்கிணைந்த இடர் அடிப்படையிலான மேற்பார்வையில் கவனம் செலுத்தப்பட்டது.

(ஆ) வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 2022ஆம் ஆண்டில் 22 பரீட்சிப்பு அறிக்கைகளை நாணயச் சபைக்குச் சமர்ப்பித்தது. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட நியதிச் சட்டப் பரீட்சிப்புக்களின் 12 மற்றும் 10 பரீட்சிப்பு அறிக்கைகள் இதில் உள்ளடங்கியிருந்ததுடன், இதில் முக்கியத்துவ அடிப்படையில் நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2 உள்நாட்டு அமைப்பு ரீதியான முக்கியத்தும் வாய்ந்த வங்கிகளின் இடைக்கால பரீட்சிப்பு அறிக்கைகளும் உள்ளடங்கும்.

(இ) ஏற்றுமதி வருமானங்களை உள்நாட்டு நாணய அலகிற்கு மாற்றுதல் மற்றும் அவற்றின் பயன்பாடு, தொழிலாளர் பணவனுப்பல்கள், வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள், இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் தகவல் வலையமைப்பின் சட்டரீதியான சமர்ப்பிப்புக்களின் தரவுகளைச் சரிபார்த்தல் என்பவற்றுக்காக வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தெரிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளில் 17 உடனடிப் பரீட்சிப்புக்களை (Spot Examination) நடாத்தியது.

(ஈ) 2022ஆம் ஆண்டில், இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவு, கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களம் என்பவற்றுடன் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் ஒருங்கிணைந்த மேற்பார்வையை நிறைவு செய்தது. அதன்படி, 2022ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 22 சட்டரீதியான பரீட்சிப்புக்களில் 16, 1 மற்றும் 2 பரீட்சிப்புக்கள் முறையே நிதியியல் உளவறிதல் பிரிவு, கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களம் ஆகியவற்றுடன், வெவ்வேறு இடர்நேர்வு காரணிகள் மற்றும் இணக்க நிலைகளை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்டது.

2.6 நெருக்கடியை எதிர்கொள்வதற்கான ஆயத்த நிலைகள்

சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அவசரக் கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குவதற்கான கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் நெருக்கடி தயார்நிலையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நடைமுறைப்படுத்தியது. மேலும், தீர்வு மற்றும் வைப்புத்தொகை காப்புறுதி தொடர்பான ஒழுங்குமுறை கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும் நெருக்கடி முகாமைத்துவக் குழுவை உருவாக்கவும் வங்கி மேற்பார்வைத திணைக்களம் உதவியது.

2.7 விழிப்புணர்வு, திறன் விருத்தி மற்றும் 2022ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கூட்டங்கள்

2022ஆம் ஆண்டில், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கி மற்றும் ஏனைய குறிப்பிட்ட துறைகளின் திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு வளவாளர்களைத் தொடர்ந்து வழங்கியதுடன் அதேபோன்று அதன் ஊழியர்களுக்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்களையும் வங்கி மற்றும் நிதி, ஒழுங்குமுறை இணக்கப்பாட்டு, இடர்மேலாண்மை, நிலையான நிதி போன்ற துறைகளில் வழங்கியது. மேலும் 2022ஆம் ஆண்டிலும் இலங்கை மத்திய வங்கியின் பல்வேறு குழுக்களில் குழு உறுப்பினர்களாக வங்கி மேற்பார்வைத் திணைக்கள அதிகாரிகள் தொடர்ந்தும் பணியாற்றினர்.

2022ஆம் ஆண்டில் உரிமம்பெற்ற வங்கிகளின் பிரதான நிறைவேற்று அதிகாரிகளுடன் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பொருளாதாரம், வங்கித்துறை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்புக்கள் தொடர்பான விடயங்கள் குறித்து விவாதிக்க 10 மாதாந்தக் கூட்டங்களையும் 4 சிறப்புக் கூட்டங்களையும் நடத்தியது. மேலும் வங்கித் துறை செயற்றிறன், பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், தற்போதைய பொருளாதார நெருக்கடியின்போது ஒழுங்குமுறைப்படத்துனரின் எதிர்பார்ப்புக்கள் குறித்து வங்கித் தலைவர்களுடன் 2 கூட்டங்கள் நடத்தப்பட்டன.

2022ஆம் ஆண்டில், நிதித்துறை நிலைப்படுத்தல் நடவடிக்கைகளை செயற்படுத்துவது தொடர்பாக உலக வங்கி ஆகிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியம் ஆகியவற்றின் தொலைநோக்கு பணிகளில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் ஒருங்கிணைத்தது/ பங்கேற்றது.

இணைப்பு II – 1

2022.12.31 இல் உள்ளவாறான உரிமம்பெற்ற வங்கிகளின் பட்டியல்

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அமானா பாங்க் பிஎல்சி
2. இலங்கை வங்கி
3. பாங்க் ஒவ் சைனா லிமிடெட்
4. கார்கிள்ஸ் பாங்க் லிமிடெட்
5. சிற்றி பாங்க் என்.ஏ.
6. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
7. டொயிஷ் பாங்க் ஏஜி
8. டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி
9. ஹபீப் பாங்க் லிமிடெட்
10. அட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி
11. இந்தியன் பாங்க்
12. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
13. எம்சிபி பாங்க் லிமிடெட்
14. நஷனல் டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி
15. நேஷன் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
16. பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
17. மக்கள் வங்கி
18. பப்ளிக் பாங்க் பெர்காட்
19. சம்பத் பாங்க் பிஎல்சி
20. செலான் பாங்க் பிஎல்சி
21. ஸ்ராண்டட் சார்ட்டட் பாங்க்
22. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
23. த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட்
24. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி

உரிமம்பெற்ற சிறப்பியல்வாய்ந்த வங்கிகள்

1. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
2. தேசிய சேமிப்பு வங்கி
3. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
4. சணச டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. அரச ஈட்டு முதலீட்டு வங்கி

வெளிநாட்டு வங்கிகளின் பிரதிநிதித்துவ அலுவலகங்கள்

1. டோகா பாங்க் கியுபிஎஸ்சி
2. ஜேபி மோர்கன் ஷேஷ் வங்கி என்ஏ
3. எம்யுஎவ்ஜே பாங்க் லிமிடெட்
4. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்

3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம்

இலங்கை மத்திய வங்கியின் மனித மூலதன அபிவிருத்தி பிரிவான வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் குறிப்பாக இலங்கையில் நிதியியல் துறையின் திறனை உயர்த்தும் பொருட்டு, காத்திரமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை வடிவமைத்து நடாத்துவதற்கு பொறுப்பாகவுள்ளது. 2022ஆம் ஆண்டில், தொழில்நுட்பத்தில் அபிவிருத்திகளால் தூண்டப்பட்டு நிதியியல் துறையின் துரித மாற்றத்திற்கான பயிற்சி தேவைப்பாடுகளை இனங்கண்டு, வங்கித்தொழில் மற்றும் நிதித் துறையை பாரியளவில் உயர்த்துவதற்கு அதன் ஆர்வலர்களுக்கு தேவைப்படும் இயக்கவாற்றல் வாய்ந்த திறன்களையும் ஆழமான அறிவையும் வழங்குவதன் மூலம் அவர்களின் தொழில்சார் இலக்குகளை அடைவதற்கு உதவுவது தொடர்பில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் முதன்மையாக கவனம்செலுத்தியது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இறுதி கட்டம், பொருளாதார நெருக்கடி மற்றும் சமூக அமைதியின்மை அகியவற்றினால் இடையூறுகள் காணப்பட்டபோதிலும், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையமானது ஆண்டு முழுவதும் அதன் உத்வேகத்தை தொடர்ந்தும் பேணியது.

உயர் கேள்வியுடைய புதிய மற்றும் தோற்றம்பெற்றுவரும் விடயப் பரப்புகளை இனங்கண்டு, தற்போதைய தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான ஏற்கனவேயுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை மேலும் முன்னேற்றும் பொருட்டு, வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையமானது 2022இல் புதிய பயிற்சி இடைத்தலையீடுகளை அறிமுகப்படுத்தியது. இலங்கை நிதியியல் தொழிற்துறைக்கு மாத்திரமன்றி வங்கித்தொழில் மற்றும் நிதி, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவிப்பு, திறைசேரி தொழிற்பாடுகள், கணக்கீடு மற்றும் நிதியியல் முகாமைத்துவம், சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள், ஆராய்ச்சி மற்றும் தரவுகள் பகுப்பாய்வு, பொருளாதாரம், மனித வளங்கள் மற்றும் பொது முகாமைத்துவம், கிராமியத் துறை அபிவிருத்தி மற்றும் நுண்பாகநிதி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் மென் திறன்கள் போன்ற பல்வேறு விடயப் பரப்புகளை உள்ளடக்கிய பிரிவுகளுக்கிடையிலான ஆர்வமிக்க தரப்பினர்களுக்கும் இப்பயிற்சி இடைத்தலையீடுகள் வழங்கப்படுகின்றன.

2022 ஆண்டுகாலப்பகுதியில், வங்கித்தொழில் கற்கைள் நிலையமானது மொத்தமாக 140 நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக நடாத்தியது. இது, 65 முன்அட்டவணைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் (10 புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்) 19 விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் (பல்வேறு நிறுவனங்களின் கோரிக்கையை அடிப்படையாகக்கொண்டு வடிவமைக்கப்பட்டு சந்தை கேள்வியை கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்டது) 4 சான்றிதழ் கற்கைநெறி மற்றும் 4 பன்னாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. மற்றுமொரு மைல்கல்லை நிறுவுவதன் மூலம், ஆசிய பிராந்தியத்தில் முன்னணி திறன் விருத்தி பங்காளராக வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் தடத்தை தாபிப்பதை இலக்காகக் கொண்டு, 2022இல் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையமானது பிரதேச அறிவு பகிர்வு முன்னெடுப்பொன்றை அறிமுகப்படுத்தியது. இந்நிகழ்ச்சித்திட்டமானது "பின்டெக் அபிவிருத்திகள் மற்றும் மத்திய வங்கி டிஜிட்டல் நாணயம்" தொடர்பில் கவனம்செலுத்தியதுடன் ஆசிய பிராந்தியத்திலிருந்து பல்வேறு வெளிநாட்டு பங்கேற்பாளர்கள் பங்குபற்றினர். மேலும், அவ்வபிவிருத்திகளின் வேறுபட்ட நோக்குகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி வல்லுநர்களின் பங்குபற்றலுடன் தற்போதைய பொருளாதார தலைப்புக்களை கலந்துரையாடுவதற்கான தளமொன்றை உருவாக்கும் குறிக்கோளுடன் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் 2022 மார்சில் நிபுணர் குழு கலந்துரையாடல்கள் தொடர் நிகழ்வுகளை காலாண்டில் தொடங்கியது. இத்தகைய கலந்துரையாடல்களின் மூலம், தொழில் சமூகம் மற்றும் பொதுமக்களிடையே பெருமளவில் விழிப்பூட்டல் ஏற்படுத்தப்பட்டு, சீரானதொரு கொள்கை நடைமுறைப்படுத்தல் செயன்முறையை செயல்படுத்தும் அதேவேளை கொள்கை வகுப்பாளர்கள் பிரச்சனைகள் தொடர்பில் வேறுபட்ட கண்ணோட்டங்களை அறிந்துகொள்வதற்கு வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் எதிர்பார்க்கின்றது. இதற்கு மேலதிகமாக, அரச மற்றும் தனியார் துறை ஆகிய இரண்டிற்குமான சிரேஸ்ட மட்டத்திலான அலுவலர்களை இலக்காகக் கொண்டு "இலங்கையில் தற்போதைய வெளிநாட்டு செலாவணி பற்றாக்குறையை எதிர்கொள்ளல்: உலகளாவிய அனுபவத்திலிருந்தான பாடங்கள்" தொடர்பிலும் வருடாந்த உயர் மட்ட கருத்தருங்கை வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் இவ்வாண்டு வெற்றிகரமாக நடாத்தியது.

மேலும், பன்னாட்டு நிதி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து இலங்கையில் நிலைபெறத்தக்க நிதியை நடைமுறைப்படுத்துவதற்காக வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையமானது திறன் விருத்தி முயற்சிகளில்

முனைப்புமிக்க பங்காளராக தொடர்ந்தும் பங்கு வகிக்கின்றது. இதைத்தவிர, தென் கிழக்காசிய மத்திய வங்கிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் மற்றும் டொய்சி பன்ட்ஸ் பாங்க் உள்ளிட்ட பன்னாட்டு நிறுவகங்கள் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்துடன் கூட்டிணைந்து கடன் நிறுவனங்கள் மற்றும் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் பின்டெக் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை, மீட்பு மற்றும் தீர்வு காணுதல் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதன் மூலம் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்துடன் இணைந்து நிகழ்ச்சித்திட்டங்களை மேலும் மேம்படுத்துகின்றன. மேலும், பொருளாதார எண்ணக்கருக்கள் மற்றும் நிதியியல் முறைமையின் அறிவை மேம்படுத்தும் நோக்குடன் ஊடகவியலாளர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட "பேரண்டபொருளாதாரங்கள்" தொடர்பில் புதிய சான்றிதழ் கற்கைநெறியொன்றை வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் தொடங்கியது.

நாட்டின் நிதியியல் மற்றும் பொருளாதார அறிவை அதிகரிக்கும் சமூக கடப்பாட்டை கௌரவிக்கும் வகையில், பல்வேறு விடயப் பரப்புகளை உள்ளடக்குகின்ற 20 பொது நிகழ்வுகள் உள்ளிட்ட அறிவுப் பகிர்வு மன்றங்களை வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் தொகுத்து வழங்கியது. மேலும், நாட்டின் கல்வி சகோதரத்துவத்திற்கு சேவை செய்யும் வகையில், இளங்கலை மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு 8 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இதில், நடுநிலைப் பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு "நிதியியல் கல்வியறிவு" குறித்து புதிதாகத் தொடங்கப்பட்ட 2 நிகழ்ச்சித்திட்டங்கள் காணப்பட்டன.

மேலும், 2022ஆம் ஆண்டில், உயர்தர பொருளியியல் மாணவர்களை இலக்காகக் கொண்டு "தக்சிலாவ" மற்றும் "அறிவூற்று" என்ற தலைப்பிலான இரு தொலைக்காட்சி நிகழ்ச்சித்தொடர்களை வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் தொடர்ந்தும் ஒருங்கிணைத்தது. இங்கு 20 நிகழ்ச்சித்தொடர்கள் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் ஒளிபரப்பப்பட்டன. ஆண்டுகாலப்பகுதியில், இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்துடன் கூட்டிணைந்து வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் பிரதேச மட்டத்திலான நிகழ்ச்சித்திட்ட தொடர்களையும் நடாத்தியது. ஆண்டு முழுவதும், நேரிலும் இணையவழி தளங்களினூடாகவும் 10,447 பங்கேற்பாளர்கள் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலைய நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினர்.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் தொழிற்பாடுகளின் வினைத்திறன் மற்றும் சுமூகத்தன்மையை மேம்படுத்தும் வகையில், 2022இல் புதிதாக தொடங்கப்பட்ட வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலைய ஒன்றிணைந்த இணையதளத்திற்கு இணையாக நிறுவனம்சார் முகாமைத்துவ முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

2022ஆம் ஆண்டின் இறுதியில், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையமானது 2023ஆம் ஆண்டிற்கான அதன் கற்கைநெறி அட்டவணையை தொடங்கி, நிதி வல்லுநர்களை தேவையான அறிவு மற்றும் திறன்களுடன் வளப்படுத்துவதற்கான அதன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதுடன் நிலையான மற்றும் நெகிழ்வான நிதியியல் முறைமைக்கும் வழிவகுக்கின்றது.

4. தொடர்பூட்டல்கள்

2022ஆம் ஆண்டில், அதிக நிச்சயமற்றதன்மைகளுக்கு மத்தியிலும், மத்திய வங்கியானது பல்வேறுபட்ட தொடர்பூட்டல் வழிகளூடாக பொதுமக்கள் உட்பட அதன் பல்வேறு இலக்கு ஆர்வலர்களை முறைமைசார்ந்து சென்றடையவும் தகவல்களைப் பகிர்வதற்கும் பொருளாதாரத்தின் கொள்கைத் தீர்மானங்கள் பற்றியும் அவற்றின் தாக்கங்கள் பற்றியும் மிகுந்த தெளிவுபடுத்தல்களை வழங்குவதற்கும் அத்துடன் எதிர்பார்க்கைகளுக்குச் செல்வாக்குச் செலுத்தவும் ஒழுங்குவரிசையான தொடர்பூட்டல் உபாயமொன்றில் ஈடுபட்டது. அத்தகைய உள்ளக மற்றும் வெளிவாரித் தொடர்பூட்டல் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு தொடர்பூட்டல் திணைக்களம் மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களுக்கு உரியகால அடிப்படையில் உதவிபுரிந்தது.

4.1 உள்ளகத் தொடர்பூட்டல்கள்

தொடர்பூட்டல் திணைக்களமானது பொருத்தமான தகவல் முகாமைத்துவத்தினூடாக, குறிப்பாக நாணயக் கொள்கை மீளாய்வின் மையச் செய்திகள் சென்றடைவதின் விளைவினை மதிப்பிடுகின்ற அதேவேளை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைத் தீர்மானங்களுக்கு ஊடகங்கள் மூலமான எதிர்வினைகளை இனங்காண்பதற்கு நாணயக் கொள்கை மீளாய்வு சுழற்சியின் தொடக்கத்திலும் அத்துடன் ஒவ்வொரு ஊடக மாநாட்டிற்குப் பின்னர் ஒரு வார காலப்பகுதியிலும் ஊடகங்களால் அறிக்கையிடப்பட்டவாறு சந்தை எண்ணப்பாங்குகள் மற்றும் கொள்கை வீத முன்கணிப்புகள் பற்றிய அதன் பகுப்பாய்வினூடாக மத்திய வங்கியின் நாணயக் கொள்கை முயற்சிகளுக்கு ஆதரவளித்தது. தொடர்பூட்டல் திணைக்களமானது மத்திய வங்கியில் நிகழ்கின்ற நிகழ்வுகள் பற்றி அலுவலர்கள் நன்கு அறிந்திருக்கின்றனர் என்பதை உறுதிசெய்வதற்காக அதன் ஊடக மாநாடுகளுக்கும் ஏனைய முக்கிய நிகழ்வுகளுக்குமான நேரலைக் காணொளியை அவர்களின் கணினிகளுக்கு பகிர்வதில் முக்கிய ஏதுவாகவும் விளங்கியது. பணிச்சூழலிலுள்ள சிந்தனைக் களஞ்சியங்களை வெளிப்படுத்துவதற்கும் அலுவலர்களுக்கு மத்தியில் தொடர்பான திணைக்களங்களின் கொள்கைகள் மற்றும் முன்னெடுப்புக்கள் பற்றிய தகவல்களை பகிர்வதற்கும் இணையவழி அறிவைப் பகிர்ந்துகொள்வதற்கான தளமொன்று 2022இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்மூலம் 8 சமகால விடயங்கள் எம்எஸ் டீம்ஸ் (MS Teams) தளத்தினூடாக கலந்துரையாடப்பட்டன. உள்நாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்படும் அபிவிருத்திகள் பற்றியும் அதேபோன்று உலகளாவிய நிதியியல் சந்தைகள் பற்றியும் அனைத்து அலுவலர்களும் நன்கு உணர்ந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு, தொடர்பூட்டல் திணைக்களம் தொடர்புடைய இணையவழிச் செய்திகளை மின்னஞ்சலூடாக பகிர்ந்தது. அனைத்து தொடர்பான பத்திரிகைக் கட்டுரைகளையும் அடையாளப்படுத்துகின்ற தொடர்பூட்டல் திணைக்களத்தின் நூலகம் மற்றும் தகவல்கள் நிலையம் இதற்குத் துணையளித்தது. இவை உள்ளக இணையத்தில் தரவேற்றம்செய்யப்பட்டன. அனைத்து முக்கிய செய்தி விடயங்களும் மூத்த முகாமைத்துவத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அச்சு ஊடகங்களின் அதிகரிக்கின்ற விலையைக் கருத்திற்கொண்டு, கிரயத்தைக் குறைப்பதற்காக நூலகம் மற்றும் தகவல்கள் நிலையம், இலத்திரனியல் பத்திரிகை சேகரிப்பொன்றை ஆரம்பித்தது. நூலகம் மற்றும் தகவல்கள் நிலையமானது ஏனைய நாடுகள் இதையொத்த நெருக்கடியான சூழ்நிலைகளுக்கு எவ்வாறு முகங்கொடுத்தன என்பது பற்றியும் அத்தகைய நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு அவர்களால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் பற்றியும் தகவல்களை வழங்கி, இலத்திரனியல் புத்தகங்கள், புத்தகங்களின் குறித்த அத்தியாயங்கள், அறிவார்ந்த கட்டுரைகள் என்பவற்றின் வாயிலாக கிரமமாக தகவல்களையும் பரப்பியது. இதற்கு மேலதிகமாக, தேசிய வாசிப்பு மாதத்தைக் கொண்டாடும் முகமாக அலுவலர்களுக்கான நூல் மீளாய்வுப் போட்டியை நூலக மற்றும் தகவல்கள் நிலையம் 2022 ஒத்தோபரில் மீளஆரம்பித்தது. இதில் 02 வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். அதேபோன்று, மத்திய வங்கியின் அலுவலரின் சில ஆக்கபூர்வமான அம்சங்களைக் கொண்ட செய்திகளையும் கட்டுரைகளையும் உள்ளடக்கும் "கவலுவ" எனும் அலுவல்சார் உள்ளகச் செய்திமடலானது காலாண்டு அடிப்படையில் டிஜிட்டல் ரீதியாக வெளியீடு செய்யப்பட்டு மன்சல வலைத்தளத்தில் தரவேற்றம் செய்யப்பட்டது.

4.2 வெளிவாரித் தொடர்பூட்டல்கள்

முன்னைய ஆண்டுகளைப்போன்று, தொடர்பூட்டல் திணைக்களமானது பன்னாட்டுத் தொழிற்பாட்டு திணைக்களம் மற்றும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து முறையே கொள்கை வட்டி வீதங்கள் தொடர்பிலும் செலாவணி வீதங்கள் (தந்திமாற்றல் வீதங்கள்)

தொடர்பிலும் குறுஞ்செய்திச் சேவை விழிப்பூட்டல்களை தொடர்ந்தும் அனுப்பியது. மேலும், தொடர்பூட்டல்கள் திணைக்களமானது பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்துடன் இணைந்து ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா உடன் செலாவணி வீதத்தின் நடு வீதம் மற்றும் மாறுபாட்டு எல்லை என்பவற்றை அனைத்து மூன்று மொழிகளிலும் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளின் மூத்த அலுவலர்களுக்கு வழங்கியது. இதற்குமேலதிகமாக, தொடர்பூட்டல் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நாளாந்த, வாராந்த மற்றும் மாதாந்த அடிப்படையில் முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகளைப் புள்ளிவிபரத் திணைக்களத்துடன் இணைந்து பரவச்செய்தது.

நாணயக் கொள்கை மீளாய்வு, நிதியியல் நிறுவனங்கள் மற்றும் நிதியியல் சந்தைகள் தொடர்பில் நாணயச் சபையின் முக்கிய தீர்மானங்களை எடுத்துக்காட்டி தொடர்பூட்டல் திணைக்களம் 1,860 ஊடக வெளியீடுகளை அனைத்து மூன்று மொழிகளிலும் வெளியிட்டது. ஆண்டின் தொடக்கத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு, தொடர்பூட்டல் திணைக்களம், நாணயக் கொள்கை மீளாய்வு தொடர்பான 8 ஊடக மாநாடுகளை ஏற்பாடுசெய்தது. செய்திகளைப் பாரியளவான அவதானிப்பாளர்கள் செவிமடுக்கின்றனர் என்பதை உறுதிசெய்வதற்கு மத்திய வங்கியின் சமூக வலைத்தளங்கள் வாயிலாக இம்மாநாடுகள் நேரலையாக ஒளிபரப்பப்பட்டன. மத்திய வங்கியின் சில தீர்மானங்களுக்கான காரணங்களை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் எளிமையான விதத்தில் விளங்கப்படுத்துவதற்காக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் என்பவற்றுடன் இணைந்து தொடர்பூட்டல் திணைக்களம் 4 மெய்நிகர் விழிப்பூட்டல் அமர்வுகளை முறையே நுவரெலியா, திருகோணமலை, மாத்தளை மற்றும் மாத்தறை பிரதேச அலுவலகங்களில் ஏற்பாடு செய்தது.

வெளிநாட்டுப் பணவனுப்பல்கள், தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் பல்வேறு மேலதிக மாநாடுகளுக்கும் பன்னாட்டு நாணய நிதியத்தின் கோரிக்கையின் பேரில் ஊடக மாநாடொன்றிற்கும் தொடர்பூட்டல் திணைக்களம் வசதியளித்தது. அதேவேளை, 2022ஆம் ஆண்டுகாலப்பகுதியில் ஏனைய திணைக்களங்களின் கோரிக்கைகளுக்கமைய 12 வர்த்தமானி அறிவித்தல்களும் விளம்பரங்கள் உட்பட 141 ஊடக அறிவித்தல்களும் தொடர்பூட்டல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டன.

இளம்வயதினர் மத்தியில் நற்பழக்கவழக்கங்களை மனதில் பதியவைக்கும் நோக்குடனும் பொருளாதார அறிவையும் நிதியியல் அறிவையும் மேம்படுத்தும் நோக்குடனும் தொடர்பூட்டல் திணைக்களமானது அநுராதபுரத்திலுள்ள பிரதேச அலுவலகத்துடன் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கான பிரதேச மட்ட விழிப்புணர்வு செயலமர்வை கெக்கிராவ மற்றும் ராஜங்கனை ஆகிய பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் ஏற்பாடுசெய்தது. இந்நிகழ்விற்கு ஒத்த நிகழ்வாக, நிதியியல் அறிவுச் சமூகத்தை பெருக்குவதற்காக "கிரமமான அடிப்படையில் சேமிப்புப் பழக்கத்திற்கான அவசியம்" எனும் தொனிப்பொருளில் சித்திர மற்றும் கட்டுரைப் போட்டிகள் ஏற்பாடுசெய்யப்பட்டன. மத்திய வங்கியின் நூலக மற்றும் தகவல்கள் நிலையத்தின் ஆதரவுடன் புத்தக நன்கொடை பணியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. புத்தகங்களை நன்கொடையாக வழங்குவதன் மூலம் மத்திய வங்கியின் அலுவலர்களும் இதற்குப் பங்களிப்புச் செய்தனர். மத்திய வங்கியின் குறிக்கோள்கள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பிலும் பொருளாதாரம், வங்கித்தொழில் மற்றும் நிதி என்பவை பற்றி தெரிவுசெய்யப்பட்ட ஏனைய தலைப்புக்கள் தொடர்பிலும் பாடசாலை மாணவர்களினதும் பல்கலைக்கழக மாணவர்களினதும் கோரிக்கையின் பேரில், மத்திய வங்கியின் தலைமை வளாகத்தில் நாணய அரும்பெரும் காட்சிச்சாலைக்கு வழிகாட்டப்பட்ட சுற்றுலாவுடன் தொடர்பூட்டல் திணைக்களம் மூலம் ஏற்பாடுசெய்யப்பட்ட 52 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் மேலதிகமானதாக இப்புத்தக நன்கொடை வழங்கல் அமைந்திருந்தது. இதற்கு மேலதிகமாக "இலங்கையில் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் முன்னோக்கிச் செல்லுதல்" தொடர்பில் தமது அறிவை இற்றைப்படுத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களை இலக்குவைத்து நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்பூட்டல் திணைக்களம் ஏற்பாடு செய்ததுடன் "பிரமிட் திட்டங்கள் உட்பட அதிகாரமளிக்கப்படாத/ சட்டவிரோதமான நிதியியல் நடவடிக்கைகள்" பற்றி விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கு பலப்பிட்டிய மற்றும் அம்பலாங்கொடை ஆகிய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் அலுவலர்களை இலக்குவைத்து மற்றுமொரு நிகழ்ச்சித்திட்டத்தையும் தொடர்பூட்டல் திணைக்களம் ஏற்பாடு செய்தது.

பாடசாலை மாணவர்களின் நிதியியல் அறிவு மட்டங்களை மேம்படுத்தும் பொருட்டு மேலும் மத்திய வங்கியின் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய தலைப்புக்கள் தொடர்பில் "தொழில் முயற்சியாண்மை மற்றும் நிதியியல் அறிவு" என்று புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள பாடத்தின் பாடத்திட்டத்தினுள் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய ஆலோசனைகளை முன்மொழிவதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் தலைமைத் திணைக்களமாக/செயலாளராக தொடர்பூட்டல் திணைக்களம் மத்திய வங்கியின் ஆறு திணைக்களங்களுடனும் தேசிய கல்வி நிறுவகத்துடனும் ஒருங்கிணைந்தது.

வங்கியின் தொடர்புடைய திணைக்களங்களின் ஆதரவுடன், தேசிய மொழிக் கொள்கையுடன் இணங்கும் விதத்தில் அனைத்து மூன்று மொழிகளிலும் இற்றைப்படுத்தப்பட்ட மத்திய வங்கியின் வலைத்தளத்தை தொடர்பூட்டல் திணைக்களம் ஆண்டு முழுவதும் தொடர்ந்தும் பேணியது. வங்கியால் செயலாற்றப்படும் தொழிற்பாடுகள் பற்றி அடிக்கடி பொதுமக்களால் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலிறுத்தும் போது, மத்திய வங்கியின் பொது மின்னஞ்சலூடாக பெற்றுக்கொள்ளப்படும் அனைத்து மின்னஞ்சல்களும் மீளாய்வுசெய்யப்பட்டு நேரடியாக பதிலிறுத்தும் பொருட்டு உரிய திணைக்களங்களுக்கு அனுப்பப்பட்டன. தகவல்கள் கிடைக்கப்பெறுகின்ற போது தொடர்பூட்டல் திணைக்களமும் சில கேள்விகளுக்கு பதிலிறுத்தது.

ஊடக வெளியீடுகள், பத்திரிகை விளம்பரங்கள், பணிப்புரைகள், ஆண்டறிக்கை உட்பட ஏனைய வெளியீடுகள் என்பவற்றிற்கான தமிழ் மொழிபெயர்ப்புத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக தொடர்பூட்டல் திணைக்களத்தில் தாபிக்கப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்புகள் பிரிவு ஆண்டுக்காலப்பகுதியில் 5,022 பக்கங்களை உள்ளடக்கிய 1,161 மொழிபெயர்ப்புக்களில் ஈடுபட்டது.

மேலும், பொதுமக்களின் நிதியியல் அறிவு மட்டங்களை மேம்படுத்துவதற்காகவும் வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியப் பணிகள் போன்ற தொடர்புபட்ட விடயப்பரப்புக்கள் தொடர்பில் பயனுள்ள தகவல்களை வழங்குவதற்காகவும் ஏனைய திணைக்களங்களுடன் ஒன்றிணைந்து தொடர்பூட்டல் திணைக்களம் மூலம் இரு வானொலி கலந்துரையாடல்களும் மூன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் ஏற்பாடுசெய்யப்பட்டன.

தமது ஆய்வு நடவடிக்கைகளுக்காக தகவல்கள் தேவைப்படுகின்ற பல்கலைக்கழக மாணவர்களாலும் ஏனைய வெளிவாரி ஆய்வாளர்களாலும் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை நூலக மற்றும் தகவல் நிலையம் நிறைவேற்றியதுடன் அவர்களின் கலந்துரையாடல்கள், விரிவுரைகள் மற்றும் கற்கைகள் என்பவற்றிற்காக 36 பல்கலைக்கழக உள்ளக பயிலுனர்களுக்கும் வசதியளித்தது.

முன்னைய ஆண்டுகளைப் போன்று, தமது குறித்த துறைகளில் அபிவிருத்தியை நோக்கி பங்களிப்பதற்கு மத்திய வங்கியின் எழுத்தாளர்களுக்கென தளமொன்றை வழங்குகின்ற "சடஹன", "நியூஸ் சேர்வே" மற்றும் "வைப்பகம்" போன்ற காலாந்தர வெளியீடுகளை தொடர்ந்தும் வலைத்தளத்தில் தொடர்பூட்டல் திணைக்களம் வெளியிட்டது.

மத்திய வங்கி மூலம் நடாத்தப்படும் அனைத்து பிரதான நிகழ்வுகளின் புகைப்படப்பிடிப்பு நடவடிக்கைகளும் தொடர்பூட்டல் திணைக்களத்தின் புகைப்பட பிரிவால் கையாளப்பட்டது. ஒட்டுமொத்தமாக, 160 நிகழ்வுகளுக்குச் சேவையளிக்கப்பட்டதுடன் இதில் 64 காணொளி பதிவு நடவடிக்கைகளும் உள்ளடக்கப்பட்டன. தொடர்பூட்டல் திணைக்களமானது புகைப்படம் மற்றும் காணொளி என்பவற்றை பதிப்பித்தல் அத்துடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் வசதியளிக்கப்பட்ட கடனின் அம்சங்கள், ஊழியர் சேமலாப நிதிய இணையவழிச் சேவைகளின் நன்மைகள், மோசடிகளின் இடர்நேர்வினால் ஏற்படும் கடுமையான விளைவுகள் என்பவற்றை எடுத்துக்காட்டுகின்ற ஊடக மாநாடுகளின் போது தருணங்களைச் சேகரிக்கின்ற புதிய காணொளி உள்ளடக்கங்களை உருவாக்குவதற்காக மத்திய வங்கியின் விழிப்பூட்டல் குழுவுடன் நெருக்கமான உறவைப் பேணுதல் போன்ற ஏனைய தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

5. நாணயம்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறு நாணயத் தாள்களையும் குற்றிகளையும் உள்ளடக்கிய நாணயங்களை இலங்கையில் வெளியிடுவதற்கான ஏக உரிமையினையும் அதிகாரத்தினையும் இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது. நாணயச் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட இச்சட்டபூர்வமான பொறுப்புக்களுடன் தொடர்பான தொழிற்பாடுகளை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களம் கையாள்கிறது. கொவிட்-19 சவால்களுக்கு மத்தியிலும் 2022 காலப்பகுதியில் நாணயத் திணைக்களம் நாணயத்தின் பெறுமதி மற்றும் மேன்மையினைப் பேணிப் பாதுகாப்பதன் மூலம் நாணயத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதிலும் அதனைப் பேணுவதிலும் பொருளாதாரத்தின் சுமுகமான தொழிற்பாடுகளுக்கு இன்றியமையாததான நாணயத்திற்கான கேள்வியைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான இருப்புக்களைக் கிடைக்கச் செய்வதிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தது.

5.1 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

2022இன் முதலரைப்பகுதியில் நாணயத்திற்கான கேள்வி முன்னொருபோதுமில்லாத விதத்தில் அதிகரித்து ஏப்பிறலில் ரூ.1,240 பில்லியனுக்கு அதிகரித்ததுடன், பின்னர் 2022 பின்னரைப்பகுதியில் படிப்படியாக குறைவடையத் தொடங்கியது. அட்டவணை II-3 மற்றும் வரைபடம் II-1 இல் காட்டப்பட்டவாறு சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் மொத்தப் பெறுமதி 2022 திசெம்பர் 31இல் ரூ.1,026.0 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டினை விட 2.1 சதவீதத்தினால் அதிகரித்தது.


சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்களின் பெறுமதி 2022இல் ரூ.1,009.1 பில்லியனுக்க 2.1 சதவீதத்தினால் அதிகரித்தது. நாணயத் தாள்களிடையே ரூ.5,000 மற்றும் ரூ.1,000 இன நாணயத் தாள்கள் ஒன்றுசேர்ந்து வரைபடம் II-2இல் தரப்பட்டவாறு 2022 திசெம்பர் 31இல் சுற்றோட்டத்திலுள்ள தாள்களின் மொத்தப் பெறுமதியில் 90.1 சதவீதம் கொண்ட கணிசமான உயர்ந்த பெறுமதிக்கு வகைகூறியது. அத்துடன் ரூ.20 மற்றும் ரூ.100 இன நாணயத் தாள்களின் அளவு ஒன்றுசேர்ந்து ஏறத்தாழ 54 சதவீதத்திற்கு வகைகூறியது.

அட்டவணை II-3:
சுற்றோட்டத்திலுள்ள நாணயம் (2022 திசெம்பர் 31 இலுள்ளவாறு)

விடயம்	பெறுமதி (ரூ.பில்.)					மாற்றம் (%)				
	2018	2019	2020	2021	2022	2018	2019	2020	2021	2022
தாள்கள்	627.1	663.1	819.3	988.6	1,009.1	7.1	5.7	23.6	20.7	2.1
குற்றிகள்[அ]	13.2	14.2	14.9	15.9	16.9	9.0	7.6	4.9	6.7	6.1
மொத்தம்	640.3	677.4	834.2	1,004.5	1,026.0	7.2	5.8	23.1	20.4	2.1

[அ] ஞாபகார்த்த நாணயக் குற்றிகள் நீங்கலாக

வரைபடம் II-1
சுற்றோட்டத்திலுள்ள நாணயம் 2018 - 2022




5.2 நாணய முகாமைத்துவம்


சிறந்த தரத்திலான நாணயத் தாள்களையும் குற்றிகளையும் சுற்றோட்டத்திற்கு விடுதல், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல் அத்துடன் பயன்படுத்த முடியாத (பொருத்தமற்ற) நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகளை சுற்றோட்டத்திலிருந்து திரும்பப் பெறுதல் ஆகியவை நாணய முகாமைத்துவத்தின் முக்கிய தொழிற்பாடுகளாகும். செயற்றிறன் வாய்ந்த நாணய முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக, 2022ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

அ. நாணய அச்சிடலும் வார்த்தலும்

சிறந்த தரமான நாணயங்கள் சுற்றோட்டத்திலிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கும் பொதுமக்களின் கேள்வியைப் பூர்த்திசெய்யும் விதத்தில் போதுமான கையிருப்புக்கள் உள்ளமையினை உறுதிப்படுத்துவதற்குமாக நாணயத் திணைக்களம் 2022ஆம் ஆண்டிற்காக 495 மில்லியன் துண்டுகளைக் கொண்ட புதிய நாணயத் தாள்களுக்கான கட்டளையினை முன்வைத்தது. பொதுமக்களின் கேள்வியைப் பூர்த்திசெய்யும் விதத்தில் நாணயத் திணைக்களம் போதுமான நாணயக் குத்திகளைக் கையிருப்பில் வைத்திருப்பதனால் இவ்வாண்டுப்பகுதியில் சுற்றோட்ட நாணயக் குற்றிகளுக்காக கட்டளைகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை

வரைபடம் II-2 2022
இறுதியிலுள்ளவாறு சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்களின் பெறுமதி மற்றும் அளவு





ஆ. நாணயங்களை வெளியிடல்

உலகளாவிய நோய்த்தொற்றுச் சூழ்நிலைகளின் காரணமாக 2020இல் முன்னெடுக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடையே பயன்படுத்தத்தக்க (பொருத்தமான) நாணயத் தாள்களை நேரடியாக மாற்றிக் கொள்வதற்கான வசதிப்படுத்தலை நாணயத் திணைக்களம் 2022இலும் தொடர்ந்தது. இது 2022இல் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நாணயத் தாள்களில் குறைப்பொன்றை ஏற்படுத்தியது. 2022ஆம் ஆண்டுப்பகுதியில் நாட்டில் சுற்றோட்டத்திற்காக நாணயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நாணயத் தாள்களும் குற்றிகளும் முறையே ரூ.384.5 பில்லியனாகவும் ரூ.1.0 பில்லியனாகவும் காணப்பட்டன.

அட்டவணை II - 4: நாணயத் தாள்கள் குற்றிகளின் வெளியீடு

வழங்கல்	பெறுமதி (ரூ.பில்லியன்)				
	2018	2019	2020	2021	2022
பொருத்தமான நாணயத் தாள்கள்	467.0	526.5	467.1	172.7	167.6
புதிய நாணயத் தாள்கள்	328.4	248.7	229.5	217.3	216.9
குற்றிகள்[அ]	1.1	1.0	0.7	0.9	1.0
மொத்தம்	796.5	776.2	697.3	390.9	385.5

[அ] ஞாபகார்த்த குற்றிகள், குற்றிகளின் வெளியீடுகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

இ. நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல்

நாணயத் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக, முக்கியமாக நாணயக் கொள்கைக் கருவியொன்றாக மத்திய வங்கியினால் விதிக்கப்பட்டுள்ள நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளைப் பேணுவதற்காக நாணயத் திணைக்களம் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்கிறது. 2022ஆம் ஆண்டுப்பகுதியில் நாணயத் திணைக்களம் அட்டவணை II-5இல் காட்டப்பட்டவாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து பயன்படுத்தத்தக்க மற்றும் பயன்படுத்த முடியாத நாணயத் தாள்கள் இரண்டையும் பெற்றுக் கொண்டது. 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் நாணயத் தாள்களின் வைப்புக்களில் அதிகரிப்பு காணப்பட்ட போதும் 2022இல் சராசரியாக நாணயத் தாள் வைப்புக்கள் 2022இல் தொடர்ந்தும் குறைவாக இருந்தமைக்கு பயன்படுத்தத்தக்க நாணயத் தாள்கள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடையே நேரடியாக பரிமாற்றப்பட்டமையே காரணமாகும்.

அட்டவணை II - 5: நாணயத் தாள்களின் வைப்பு

வைப்புகள்	பெறுமதி (ரூ.பில்லியன்)				
	2018	2019	2020	2021	2022
பொருத்தமான நாணயத் தாள்கள்	524.1	606.9	445.0	144.6	272.5
பொருத்தமற்ற நாணயத் தாள்கள்	229.6	132.1	95.4	76.1	91.6
மொத்தம்	753.7	739.0	540.4	220.7	364.1

குறிப்பு: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் இலங்கை மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட நாணயக் குற்றிகளின் பெறுமதி குறிப்பிடத்தக்களவானவையல்ல

ஈ. பொருத்தமற்ற நாணயத் தாள்களை அழித்தல்

நாட்டில் மிகத் தரம் வாய்ந்த நாணயத் தாள்கள் சுற்றோட்டத்தில் இருப்பதனை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன், நாணயத் திணைக்களம் 2022இல் ரூ.207.3 பில்லியன் பெறுமதியான 238.5 மில்லியன் பயன்படுத்த முடியாத துண்டுத் தாள்களை அழித்துள்ளது.

அட்டவணை II - 6: பொருத்தமற்ற நாணயத் தாள்களை அழித்தல்

தாள்கள்	2018	2019	2020	2021	2022
துண்டுகள் (மில்லியன்)	343.8	235.0	127.3	108.2	238.5
பெறுமதி (ரூ. பில்லியன்)	252.2	139.8	62.2	44.3	207.3

5.3 ஏனைய நடவடிக்கைகள்

அ. நாணய கருமபீடங்களைத் தொழிற்படுத்தல்

2022ஆம் ஆண்டுப்பகுதியில் நாணயத் திணைக்களம் ரூ.102 மில்லியன் பெறுமதியான நாணயத் தாள்களை மாற்றிக் கொடுத்தமையின் மூலம் நாணயக் கருமபீடங்களூடாக பொதுமக்களுக்கு வசதியளித்தது. பொதுமக்களுக்காக புறக்கோட்டை இலங்கை வங்கிக் கிளையில் நிறுவப்பட்டுள்ள விசேட மாற்றல் கருமபீடம் முறையே ரூ.1,812.7 மில்லியன் மற்றும் ரூ.59.8 மில்லியன் பெறுமதியான நாணயத் தாள்களையும் குற்றிகளையும் வழங்கியது.

ஆ. பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலையின் தொழிற்பாடு

நாட்டில் நிலவிய உலகளாவிய நோய்த்தொற்று சூழ்நிலையின் காரணமாக, 2022இன் முதலரைப்பகுதியில் பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை அதன் முழுமையான இயலளவுடன் தொழிற்பட முடியவில்லை. எனினும், பொருளாதார அரும்பொருட்காட்சிச்சாலை ஞாபகார்த்த நாணயத் தாள்கள் குற்றிகள் மற்றும் சேகரிப்பு விஷயங்களின் விற்பனைகள் மற்றும் அறிவினைப் பகிர்ந்து கொள்கின்ற விளக்கவுரைகள் என்பன மூலமாக நாணயவியல் தொடர்பில் 4,415 தனிப்பட்டவர்களுக்கு ப் பணிகளை வழங்கியது. மேலும், பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை பண்டைய கலைப்பெறுமானம் மிக்க பொருட்களை பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இ. நாணயம் தொடர்பான பொதுமக்களின் நம்பிக்கையினைப் பாதுகாத்தல்

நாணயத் திணைக்களம் போலி நாணயங்களைத் தயாரிக்கும் எத்தனங்கள் தொடர்பில் பொலிசின் குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் போலி நாணயத் தாள் பணியகத்துடனும் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுடனும் நெருக்கமாக ஒத்துழைத்தது. 2022இல் கண்டுபிடிக்கப்பட்ட போலி நாணயத் தாள்கள் 1987 துண்டுகளாகக் காணப்பட்டன. ஒரு மில்லியன் தாள்களினால் அளவிடப்பட்டவாறு

சுற்றோட்டத்திலுள்ள ஒரு மில்லியன் தாள்களுக்குப் போலி நாணயத் தாளின் விகிதம் 2022இல் 1.4 ஆகக் காணப்பட்டது.

நாணய விதிச் சட்டத்தின் 59ஆவது பிரிவின் நியதிகளுக்கிணங்க ஆண்டு காலப்பகுதியில் நீதிமன்ற விசாரணைகளுக்கு வசதியளிக்கின்ற விதத்தில், போலி நாணயத் தாளுக்கான தீர்மானச் சான்றாக 98 சான்றிதழ்களை வழங்குவதற்கு நாணயத் திணைக்களம் வசதியளித்ததுடன் போலி நாணயத் தாள் தொடர்பில் சான்றுகளை வழங்குவதற்காக 06 நீதிமன்ற வழங்குகளில் சமூகமளித்தது.

ஈ. ஞாபகார்த்த நாணயக் குற்றிகளை வெளியிடல்

இலங்கை மத்திய வங்கி கொழும்பு பல்கலைக்கழக மருத்துவப்பீடத்தின் 150ஆவது ஆண்டு நிறைவினையும் இலங்கை குடித்தொகை மதிப்பு மற்றும் வீடமைப்பின் 150ஆவது ஆண்டு நிறைவினையும் குறிக்குமாக ரூ.20 நாணய இனத்தில் அலுவல்சார் ரீதியாக 02 சுற்றோட்ட நியம ஞாபகார்த்த நாணயக் குற்றிகளை வெளியிட்டது.

6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

6.1 உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

மத்திய வங்கியின் விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாடு அத்துடன் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்ற இரண்டு குறிக்கோள்களுடன் தொடர்புடைய பொறுப்புக்கள் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகள், பங்கேற்கின்ற நிறுவனங்களுடன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடாத்துதல், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் நியதி ஒதுக்குகளை ஒழுங்குமுறைப்படுத்தல், வங்கிகளின், அரசாங்கத்தின், அரச முகவராண்மைகளின் மற்றும் ஏனைய நிறுவனங்களின் வங்கியாளராகவும் அலுவல்சார் வைப்பகமாகவும் செயற்படுதல், வணிகர் நேரடி பங்கேற்பாளர்களுக்கான ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளை வழங்குதல் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்களை ஒழுங்குமுறைப்படுத்தல் என்பனவாயிலாக நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதை உள்ளடக்கியிருக்கின்றன.

6.2 நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்

6.2.1 திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

தற்போதைய நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் தொழிற்பாட்டு இலக்கிடலான குறைவான தளம்பல்களுடன் விரும்பத்தக்க மட்டமொன்றில் பேணுகின்ற விதத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினைப் பேணும் பொருட்டு, உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துகின்றது. 2022இல் மேல்நோக்கிய சீராக்கமொன்றினைப் பதிவுசெய்த சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம், துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையில் தேங்கிக் காணப்பட்டது. சந்தையில், குறிப்பாக, இறைசார் துறை அபிவிருத்திகள் மீதான ஊகங்களில் அதிகரித்த நிச்சயமின்மை காரணமாக அழைப்புப் பணச் சந்தை நடவடிக்கைகள் 2022 ஏப்பிறல் தொடக்கம் குறைவாகக் காணப்பட்டன.

(அ) பணச் சந்தைத் திரவத்தன்மையினை மதிப்பிடல்

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களமானது, பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கையுடன் இசைந்து செல்லும் விதத்தில், பொருத்தமான சந்தைத் தொழிற்பாடுகளூடாக, சந்தைத் தொழிற்பாட்டாளர்களின் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் நோக்குடன் நாளாந்த அடிப்படையில் உள்நாட்டு பணச் சந்தையின் திரவத்தன்மையை மதிப்பிடுகின்றது. திரவத்தன்மைத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்குப் இம் மதிப்பீடு பயன்படுத்தப்படுகின்றது. இந்நோக்கில், மத்திய வங்கியினால் முன்னெடுக்கப்பட்ட நாணயத் தொழிற்பாடுகளின் தாக்கம், அதேபோன்று சுற்றோட்டத்திலுள்ள நாணயம், மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள், வர்த்தக வங்கிகளின் ஒதுக்கு நிலைமையில் ஏற்பட்ட மாற்றங்கள், மத்திய வங்கியுடனான அரசாங்கத்தின் கொடுக்கல்வாங்கல்கள் போன்ற சுயாதீனமான காரணிகள் பரிசீலனைக்கு எடுக்கப்படுகின்றன. 2022 காலப்பகுதியில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் சாவல்மிக்க சூழலொன்றில் திரவத்தன்மை மதிப்பீட்டைச் செயலாற்றியது. ஆண்டின் தொடக்கத்தில் பணச் சந்தைத் திரவத்தன்மை ரூ.333.75 பில்லியனாகக் காணப்பட்டதுடன் ஆண்டு முழுவதும் எதிர்மறையான மட்டங்களில் இருந்தது. எனினும், திரவத்தன்மைப் பற்றாக்குறையானது 2022இன் இரண்டாம் காலாண்டு தொடக்கம் படிப்படியான வீழ்ச்சிப் போக்கினைப் பதிவுசெய்து, 2022 திசெம்பர் அளவில் ரூ.231.25 பில்லியன் கொண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது.

(ஆ) சந்தைத் தொழிற்பாடுகள் குழுவிற்கான விதந்துரைப்புக்கள்

நாணயச் சபையினால் பின்பற்றப்படுகின்ற ஒட்டுமொத்த நாணயக் கொள்கை பரிசீலனைகளை நாளாந்த நாணயத் தொழிற்பாடுகளாக மாற்றுகின்ற பணி சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம், நாணயச் சபையினால் பின்பற்றப்படும் நாணயக் கொள்கை நிலையினை நடைமுறைப்படுத்தும் செயன்முறையில் பணச் சந்தை அபிவிருத்திகள் மற்றும் உள்நாட்டுப் பணச் சந்தை மீதான திரவத்தன்மை மதிப்பீடுகள் பற்றிய உள்ளீடுகளை சந்தை தொழிற்பாடுகள் குழுவிற்கு வழங்குகின்றது. அதற்கமைய, உள்நாட்டுப் பணச் சந்தையிலும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளிலும் இடம்பெறும் அபிவிருத்திகளை நாளாந்த அடிப்படையில் மீளாய்வுசெய்வதனைத் தொடர்ந்து, உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் பணச் சந்தையின் திரவத்தன்மையினையும் குறுகியகால வட்டி வீதங்களையும் முகாமைப்படுத்துவதில் சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவின் பரிசீலனைக்கான நடவடிக்கைகளை முன்மொழிகிறது. சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவானது ஏனையவற்றிற்கு மத்தியில் மதிப்பிடப்பட்ட திரவத்தன்மை நிலைமைகள், விரும்பத்தக்க தொழிற்பாட்டு இலக்கு மட்டம், பணச் சந்தைப் பங்கேற்பாளர்களிடையேயான திரவத்தன்மைப் பரம்பல், பொருத்தமான சந்தை சமிக்ஞைகளுக்கான திட்டமிடல் தேவை என்பனவற்றை கருத்திற்கொள்கின்றது. 2022 காலப்பகுதியில் உள்நாட்டுப் பணச் சந்தையில் சமச்சீரற்ற திரவத்தன்மைப் பரம்பலைத் தீர்ப்பதற்கும் சில பங்கேற்கின்ற நிறுவனங்களுக்கிடையில் திரவத்தன்மை அழுத்தத்தினைக் குறைப்பதற்கும் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நாணயத் தொழிற்பாடுகளை நடத்தியது.

(இ) ஏலங்களை நடத்துதல்

2022இல், ஒட்டுமொத்த திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகளுக்கு ஆதரவளிக்கின்ற விதத்தில், தேவையின் அடிப்படையில் பணச் சந்தைக்கு திரவத்தன்மையினை உள்ளீடு செய்வதற்கும் ஈர்த்துக் கொள்வதற்குமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் ஏலங்களை நடத்தியது. 2022இல் பின்வரும் ஏலங்கள் நடாத்தப்பட்டதுடன் உள்நாட்டுப் பணச் சந்தையில் அளவுக்குமீறிய அழுத்தங்களைக் குறைப்பதில் இவை ஏதுவாக அமைந்தன (அட்டவணை 11-7):

(i) மீள்கொள்வனவு ஏலங்கள்

2022இல் ஆரம்ப காலப்பகுதியில் உள்நாட்டுப் பணச்சந்தையிலிருந்து மிகையான திரவத்தன்மையினை

ஈர்ப்பதற்கு ஓரிரவு மற்றும் குறுகிய கால மீள்கொள்வனவு ஏலங்கள் நடத்தப்பட்டன. அதற்கமைய, ஓரிரவு அடிப்படையில் திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்வதற்காக ஓரிரவு மீள்கொள்வனவு ஏலங்கள் நடத்தப்பட்ட வேளையில், திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்காக குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்கள் ஒரு வாரம் வரையிலான காலப்பகுதிக்கு அதேநாள் தீர்ப்பனவு அடிப்படையில் நடத்தப்பட்டன.

(ii) நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்

சில வங்கிகளுக்கு மத்தியில் திரவத்தன்மை அழுத்தத்தினைக் குறைப்பதற்கு உள்நாட்டுப் பணச் சந்தைக்கு திரவத்தன்மையினை உட்செலுத்துவதற்கு 2022இல் நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களும் நடத்தப்பட்டன. சந்தையின் விடாப்பிடியான திரவத்தன்மை தேவைகளை நிறைவுசெய்வதற்கான திரவத்தன்மையினை உட்செலுத்தும் பொருட்டு அடுத்த தொழில்நாள் அன்று தீர்ப்பனவுடன் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் அத்தகைய நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் நடாத்தப்பட்டன.

(iii) உடனடிக் கொடுக்கல்வாங்கல்கள்

2022ஆம் ஆண்டு காலப்பகுதியில், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு பிணையங்களை விற்பனை செய்வதன் மூலம் பணச் சந்தையிலிருந்து நிரந்தர அடிப்படையில் திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்காக மத்திய வங்கியினால் திறைசேரி உண்டியல்களின் முதனிலைக் கொள்வனவு ஊடாக உட்செலுத்தப்பட்ட திரவத்தன்மையினை ஈர்ப்பதற்கு திறைசேரி உண்டியல் ஏலங்களின் உடனடி விற்பனைகள் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டன. மேலும், அவ்வாறான ஏலங்கள் வெற்றியளிக்காத போதிலும் சந்தைக்கு நிரந்தரமான திரவத்தன்மையினை உட்செலுத்துவதற்கு 2022 இறுதியினை நோக்கி திறைசேரி உண்டியல் ஏலங்களின் உடனடிக் கொள்வனவினை நடாத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. 2022 காலப்பகுதியில் திறைசேரி முறி உடனடி ஏலங்கள் நடாத்தப்படவில்லை.

ஈ. துணைநில் வசதிகளை வழங்குதல்

பணச் சந்தை மற்றும் நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏலங்களினூடாக தமது குறுங்கால திரவத்தன்மை தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்ய இயலாத பங்கேற்கும் நிறுவனங்களுக்கு துணைநில் வசதிகள் வழங்கப்பட்டன. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் மிகையான திரவத்தன்மையினை ஏற்றுக்கொள்வதற்கு துணைநில் வைப்பு வசதி பயன்படுத்தப்பட்ட வேளையில் பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் ஓரிரவு திரவத்தன்மை தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்ய இயலாதனவாக இருந்த போது அவற்றிற்கு திரவத்தன்மை வழங்குவதற்கு துணைநில் கடன்வழங்கல் வசதிகள் கிடைக்கச் செய்யப்பட்டன. 2022 காலப்பகுதியில், துணைநில் வைப்பு வசதி வீதத்திலும் துணைநில் கடன்வழங்கல் வீதத்திலும் பங்கேற்கின்ற நிறுவனங்களுக்கு துணைநில் வசதிகள் வழங்கப்பட்டன. அதற்கமைய, துணைநில் வைப்பு வசதியின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தத் தொகை ரூ.54,528.34 பில்லியனாக இருந்ததுடன் துணைநில் கடன்வழங்கல் வசதியின் கீழ் வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.163,058.05 பில்லியனாகக் காணப்பட்டது (அட்டவணை II - 8).

அட்டவணை II - 7

2022இல் ஏலங்கள் ஊடாக நாணயத் தொழிற்பாடுகள்

ஏலங்களின் வகை	ஏலங்களின் எண்ணிக்கை	ரூ. பில்லியன்	
		முன்வைக்கப்பட்ட மொத்தத் தொகை	ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தத் தொகை
மீள்கொள்வனவு ஏலங்கள்			
ஓரிரவு	25	1,880.00	1,533.3
குறுங்காலம் (7 நாட்கள் வரை)	08	100.00	22.00
நீண்டகாலம் (8 நாட்கள் தொடக்கம் 90 நாட்கள்)	இல்லை	இல்லை	இல்லை
நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்			
ஓரிரவு	இல்லை	இல்லை	இல்லை
குறுங்காலம் (7 நாட்கள் வரை)	03	235.00	235.00
நீண்டகாலம் (8 நாட்கள் தொடக்கம் 90 நாட்கள்)	25	1,235.00	954.50
உடனடி ஏலங்கள்			
திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனைகள்	11	150.00	23.53
திறைசேரி உண்டியல்களின் உடனடி கொள்வனவுகள்	01	20.00	0.00
திறைசேரி முறிகளின் உடனடி விற்பனைகள்	இல்லை	இல்லை	இல்லை
திறைசேரி முறிகளின் உடனடி கொள்வனவுகள்	இல்லை	இல்லை	இல்லை
திரவத்தன்மை ஆதரவு வசதி*			
ஓரிரவு	இல்லை	இல்லை	இல்லை
குறுங்காலம் (7 நாட்கள் வரை)	இல்லை	இல்லை	இல்லை
நீண்டகாலம் (8 நாட்கள் தொடக்கம் 90 நாட்கள்)	இல்லை	இல்லை	இல்லை

*திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் தனியான முதனிலை வணிகர்களுக்காக நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலம் கிடைக்கப்பெறுகின்றது.

அட்டவணை II - 8

2022ஆம் ஆண்டுப்பகுதியில் துணைநில் வசதிகளை வழங்குதல்

துணைநில் வசதி	(ரூ. பில்லியன்)			
	நாளாந்த குறைந்தபட்சம்	நாளாந்த உயர்ந்தபட்சம்	நாளாந்த சராசரி	மொத்த அளவு
துணைநில் வைப்பு வசதி	51.37	378.67	227.20	54,528.34
துணைநில் கடன்வழங்கல் வசதி	424.16	850.60	679.41	163,058.05

6.2.2 நியதி ஒதுக்கு விகிதத்தினை நிருவகித்தல் மற்றும் கண்காணித்தல்

நியதி ஒதுக்கு விகிதமானது, 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 93ஆம் பிரிவின் கீழான ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் மத்திய வங்கியுடனான தீர்ப்பனவுக் கணக்கில் உரிய வங்கியின் மொத்த சராசரி ரூபா வைப்புப் பொறுப்புக்களின் விகிதமாக வைத்திருக்கப்பட வேண்டிய ஒதுக்குகளைத் தீர்மானிக்கிறது. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் இணங்குவிப்புக்களைக் கண்காணிப்பதற்குப் பொறுப்புடையதாகும். 2022 காலப்பகுதியில் நியதி ஒதுக்கு விகிதத்துடனான உரிமம்பெற்ற வங்கிகளின் இணங்குவித்தலை உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்து. இது, ஆண்டு முழுவதும் 4 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டது.

6.2.3 வங்கி வீதத்தினை நிருவகித்தல்

இறுதிக் கடன் ஈவோன் வீதம் என அழைக்கப்படும் வங்கி வீதமானது நாணய விதிச் சட்டத்தின் 86 மற்றும் 87ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழ் வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு அவசர காலக் கடன்கள் வழங்கப்படுதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. 2020 ஏப்பிறல் 16 தொடக்கம் இவ்வீதம் துணைநில் கடன்வழங்கல் வீதத்துடன் சேர்த்து +300 அடிப்படைப் புள்ளிகளுக்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளதுடன் தன்னியக்கமாகவே சீராக்கம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும், 2022 நவெம்பர் 03 அன்று தொழில் முடிவிலிருந்து செயற்படத்தக்க வகையில் சந்தை நிலைமைகளின் அடிப்படையில் அது சீராகக்கூடிய

விதத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதத்துடன் +700 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட எல்லையொன்றுடன் வங்கி வீதம் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், உள்நாட்டுப் பணச் சந்தையின் போக்குகளைக் கருத்திற்கொண்டு, 2023 சனவரி 02 அன்று தொழில் முடிவிலிருந்து செயற்படத்தக்கவாறு வங்கி வீதம் +300 அடிப்படைப் புள்ளிகளுக்குக் குறைக்கப்பட்டது. 2022 காலப்பகுதியில் வங்கித்தொழில் நிறுவனங்கள் மூலம் அவசரகாலக் கடன்களைக் கோரி மத்திய வங்கிக்கு கோரிக்கை ஏதுவும் கிடைக்கப்பெறாத அதேவேளை மத்திய வங்கி அவசர கால கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

6.3 வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள் மற்றும் அரசாங்கத்துடனான தொழிற்பாடுகள்

6.3.1 நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தகைமையுடைய பங்கேற்பாளர்களுக்கு தீர்ப்பனவுக் கணக்குகளை வழங்குவதன் மூலம் மத்திய வங்கியானது பாதுகாப்பான மற்றும் வினைத்திறன்மிக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகளை வசதிப்படுத்துவதனூடாக பொருளாதாரத்தின் தொழிற்பாட்டில் முக்கிய செயலாற்றுகின்றது. பாரிய பெறுமதிக் கொடுப்பனவுகளை அத்துடன் வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தையில் தொழிற்பாடுகளுக்கு துணையளிப்பதன் ஊடாக இது செயலாற்றப்படுகின்றது. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்களிடையேயான பத்திரங்களற்ற பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவுகளின் தீர்ப்பனவு என்பனவற்றிற்கு வசதியளிப்பதற்காக பொதுப் பேரேட்டுக் கணக்குகள் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்றன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் நியதி ஒதுக்கு விகிதத்தின்படியான அவற்றின் ஒதுக்குகளைப் பேணும் நோக்கத்திற்காகவும் இக்கணக்குகளைப் பயன்படுத்துகின்றன. 2022 இறுதியிலுள்ளவாறு உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், தேசிய சேமிப்பு வங்கி மற்றும் 8 தனியான முதனிலை வணிகர்கள் ஆகியவற்றுக்கான பொதுப் பேரேட்டுக் கணக்குகளைப் பேணியது.

6.3.2 அரச கணக்குகளைப் பேணுதல்

அரசாங்கத்திற்கான வங்கியாளர் என்ற ரீதியில் மத்திய வங்கியின் வகிபாகம் தொடர்பிலான தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற விதத்தில், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அரசாங்கத்தின் சார்பில் அரச திணைக்களங்கள், முகவராண்மைகள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட வெளிநாட்டு நிறுவனங்கள் என்பனவற்றிற்கு தொடர்ந்தும் வங்கித்தொழில் வசதிகளை வழங்கியது. அதற்கமைய, 2022 காலப்பகுதியில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அத்தகைய 48 கணக்குகளைப் பேணியது. அத்தகைய கணக்குகளின் கொடுக்கல்வாங்கல் அளவுகளில் 90 சதவீதத்திற்கும் கூடுதலானவை துணைச் செயலாளரின் திறைசேரிக் கணக்கிற்கும் பொதுப்படுகடன் திணைக்களத்தின் நடைமுறைக் கணக்கிற்கும் இறைவரி ஆணையாளரின் பெறுமதிசேர் வரி மீளளிப்புக் கணக்கிற்கும் சனாதிபதி நிதியக் கணக்கிற்கும் உரியனவாகக் காணப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் 89ஆவது பிரிவின் நியதிகளுக்கிணங்க, குறிப்பிட்டதொரு நிதியியல் ஆண்டிற்காக அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பிடப்பட்ட அரசிறையில் பத்து சதவீதத்திற்கு விஞ்சாததொரு தொகையினை மத்திய வங்கி தற்காலிக முற்பணமாக அரசாங்கத்திற்கு வழங்குதல் வேண்டும். இம்முற்பணத்தினை அரசாங்கம் சுழலும் கொடகடன் வசதியாகப் பயன்படுத்த முடியும் என்பதுடன் இதனை ஆறு மாதங்களை விஞ்சாததொரு காலப்பகுதியில் மீளச்செலுத்தவும் வேண்டும். 2022இன் தொடக்கத்தில் தற்காலிக முற்பணங்களின் கீழ் பயன்படுத்துவதற்கு கிடைக்கப்பெறுகின்ற உயர்ந்தபட்சத் தொகை, 2022ஆம் ஆண்டிற்கான அரச அரசிறை மதிப்பீட்டின் அடிப்படையில் ரூ.73.01 பில்லியனால் ரூ.225.05 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. எனினும், 2022 திசெம்பரில் பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட திருத்தப்பட்ட இடைக்கால அரச வரவு செலவுத்திட்டத்துடன் தற்காலிக முற்பணங்களின் கீழ் பயன்படுத்ததக்க உயர்ந்தபட்சத் தொகை ரூ.12.32 பில்லியனால் அதிகரிக்கப்பட்டது. அதற்கமைய, 2022 இறுதியிலுள்ளவாறு, தற்காலிக முற்பணங்கள் 2021 இறுதியிலுள்ளவாறான ரூ.152.04 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.237.37 பில்லியனாக விளங்கியது. 2023ஆம் ஆண்டிற்கான ஒப்புதலளிக்கப்பட்ட அரச வரவு செலவுத்திட்டத்தின் அடிப்படையில் அரசாங்கத்திற்கான தற்காலிக முற்பணங்கள் 2023ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ரூ.107.58 பில்லியனால் ரூ.344.95 பில்லியனுக்கு அதிகரித்தது.

6.4 ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி வழங்கல்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை வழங்குவதன் மூலம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமுகமானதும் வினைத்திறன் மிக்கதுமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தியது. இவ்வசதியானது, கட்டணமெதுவுமின்றி திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் பிணையுறுதிக்கெதிராக வழங்கப்பட்டதுடன் நாளின் போது சந்தை விலைகளில் ஏற்படும் ஏதேனும் வேறுபாடுகளை ஈர்த்துக் கொள்வதற்கான போதுமான உச்ச வரையறையுடன் அவற்றின் நடைமுறைச் சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்டன. இவ்வாண்டுப்பகுதியில் எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மொத்தப் பெறுமதியும் சராசரி நாளாந்த பெறுமதியும் முறையே ரூ.157,166.18 பில்லியனாகவும் ரூ.657.60 பில்லியனாகவும் காணப்பட்டன. இது ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் பயன்பாடு முன்னைய ஆண்டினை விட 2022ஆம் ஆண்டுப்பகுதியில் கணிசமாக அதிகரித்தமையினை எடுத்துக்காட்டியது. இது, ரூ.215.16 பில்லியன் கொண்ட நாளாந்தச் சராசரியுடன் ரூ.50,777.45 பில்லியன் கொண்ட மொத்தத் தொகையாகக் காணப்பட்டது.

6.5 அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களை ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வை செய்தலும்

பணத்தரகர்கள் பணம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் அரச பிணையங்கள் சந்தைகளில் இடையேற்பாட்டாளர்கள் என்ற வகிபாகத்தினை ஆற்றி வருகின்றனர். நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 10(இ)இன் கீழ் விடுக்கப்பட்ட 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கப் பணத் தரகுத்தொழில் ஒழுங்குவிதிகள் (2013 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் விடுக்கப்பட்ட பணத் தரகுத்தொழில் ஒழுங்குவிதிகளை இரத்துச் செய்ததன் மூலம்) உள்நாட்டுப் பணச் சந்தையில் பணத்தரகர்களின் தொழில்சார் நடத்தைகளை உறுதிப்படுத்தும் பொருட்டு இலங்கையிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களின் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கான அதிகாரங்களை உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளருக்கு வழங்கின. அதற்கமைய, 2022 திசெம்பர் இறுதியில், இவ்வொழுங்குவிதிகளின் கீழ் ஒன்பது கம்பனிகளுக்கு "அதிகாரவளிப்புச் சான்றிதழ்" வழங்கப்பட்டதுடன் அவர்கள் "அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்கள்" எனக் குறித்துரைக்கப்பட்டனர். ஆண்டுகாலப்பகுதியில் அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களினதும் வருடாந்த தள த்திலான மேற்பார்வையினை உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் மேற்கொண்டது.

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்கள்

1. பீஎம்ஆர் மணி புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
2. சென்றல் பொரேக்ஸ் அன்ட் மணி புரோக்கர்ஸ் லிமிடெட்
3. பெர்ஸ்ட் அலியன்ஸ் மணி புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
4. ஜோர்ஜ் ஸ்டிவாட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
5. எம்விஎஸ் மணி புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
6. பிஜோட் சப்மன் அன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிடெட்

7. எஸ்எம்பி மணி புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
8. தப்ரபேன் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
9. வைஸ்வின் மணி அன்ட் எக்ஸ்சேன்ஜ் புரோக்கர்ஸ் லிமிடெட்

7. பொருளாதார ஆராய்ச்சி

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 25ஆம் பிரிவிற்கமைய பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திற்குக் கொள்கைகளையும் வழிமுறைகளையும் உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறைவேற்றுதல் என்பவற்றில் நாணயச்சபையினையும் ஆளுநரையும் வழிநடாத்துவதற்கும் நாணய மற்றும் வங்கித்தொழில் மற்றும் பொது அக்கறைசார் ஏனைய பொருளாதார விடயங்களில் பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குவதற்கும் தரவுகளினைத் திரட்டல் மற்றும் பொருளாதார ஆராய்ச்சிகளை நடாத்தல் ஆகிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 2022இல் காணப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத சவால்மிக்க உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சூழலுக்கு மத்தியில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அதன் பொறுப்புக்களை வினைத்திறனாக நிறைவேற்றியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுகையில் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளின் அனைத்தையுமுள்ளடக்கிய பகுப்பாய்வுகளை வழங்கியதுடன் அதன் பிரதான குறிக்கோளான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினை அடைவதற்கான கொள்கைத் தீர்மானங்களை வசதிப்படுத்தும் பொருட்டு முகாமைத்துவத்திற்கும் நாணயச்சபைக்கும் காலந்தவறாத கொள்கைப் பரிந்துரைகளைத் தொடர்ந்தும் வழங்கியது. திணைக்களத்தின் ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரலானது, ஆண்டு முழுவதிலும் இலங்கைப் பொருளாதாரத்தினால் எதிர்கொள்ளப்பட்ட பல்வேறு பேரண்டப் பொருளாதார சவால்களை மையமாகக் கொண்டமைந்து, ஏனையவற்றிற்கிடையில் நாணயக் கொள்கை, வளர்ச்சி மற்றும் பணவீக்க இயக்கவாற்றல்கள் இறைத்துறை மற்றும் வெளிநாட்டுத்துறை போன்றவற்றிற்கு நீடிக்கப்பட்டது. நாணயக் கூட்டுக்கள் மற்றும் சென்மதி நிலுவை என்பன மீதான புள்ளிவிபரங்களின் முதலாந்தர மூலமாக, ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு நேரடி ஈடுபாடுகளுக்கு மேலதிகமாக, அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களினூடாக பொது மக்கள் உள்ளடங்கலாக அனைத்து ஆர்வலர்களுக்கும் புள்ளிவிபரங்கள் மற்றும் ஏனைய பேரண்டப் பொருளாதாரத் தகவல்களைப் பரப்புவதில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அதன் முக்கிய வகிபாகத்தினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. கொள்கை சார்ந்த ஆராய்ச்சி மற்றும் அறிவு பகிர்ந்துகொள்ளும் செயற்பாடுகள் என்பவற்றினை மேற்கொள்வதில் ஏற்கனவே நிறுவப்பட்ட அதன் பாரம்பரியத்திற்குப் பங்களிக்கின்ற விதத்தில், திணைக்களமானது ஆண்டு காலப்பகுதியில் அதன் சொந்தத் திறன்களை வலுப்படுத்திய வேளையில், மத்திய வங்கியினுள் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதனை ஊக்குவித்தது. அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கான அதன் நோக்கத்தினை நிறைவேற்றுகின்ற விதத்தில், பொது மக்கள் உள்ளடங்கலாக அதன் ஆர்வலர்களுக்கு அறிவைப் புகட்டும் பொருட்டு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைத் திணைக்களம் நடாத்தியதுடன் இது பொருளாதாரத்தின் தொழிற்பாட்டினையும் கொள்கை விட்டுக்கொடுப்புகளை சமநிலைப்படுத்துவதில் தற்போதுள்ள சவால்களையும் விளக்குவதற்கான வாய்ப்பொன்றினை வழங்கியது. நாட்டின் நாணய மேலாண்மைச் சபையின் இயலளவில் மத்திய வங்கியின் பன்னாட்டு உறவுகளைப் பேணுவதிலுள்ள தொடர்பின் மையப் புள்ளியாக, வெளிநாட்டு இணைத்தரப்பினர், பன்னாட்டு முகவராண்மைகள் மற்றும் ஏனைய ஆர்வலர்களுடன் நெருக்கமான ஒத்துழைப்பினை நிறுவுவதிலும் பேணுவதிலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் முக்கிய வகிபாகமொன்றினைக் கொண்டிருந்தது. குறிப்பாக, மத்திய வங்கியுடன் தொடர்புடைய விடயங்களில் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி மீதான பன்னாட்டு நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளை வசதிப்படுத்துவதில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பிரதான பங்கினை வகித்து, பன்னாட்டு நாணய நிதியத்துடனான சந்திப்புக்களுக்கான தொழில்நுட்ப உள்ளீடுகளைத் தயாரித்த வேளையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்களது தொழில்நுட்ப மட்டத்திலான வினாக்களுக்கும் பதிலிறுத்தியது. அரசாங்கத்தில் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற படுகடன் மறுசீரமைத்தல் முயற்சிகளை வசதிப்படுத்துவதற்கான உள்ளீடுகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வழங்கியதுடன் அதன்மூலம் படுகடன் மறுசீரமைத்தல் செய்முறையினை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட நிதியியல் மற்றும் சட்ட ஆலோசகர்களுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து செயற்பட்டது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது 2022 ஆண்டு காலப்பகுதியில் நீடிக்கப்பட்ட நிதிய வசதி மற்றும் பல விடயங்களில் தொழில்நுட்ப உதவி என்பன தொடர்பிலான பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான பல்வேறு பணிக்குழுக்களை ஒருங்கிணைத்தது.

7.1 பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுதல்

பொருளாதாரத்தின் அதேபோன்று உலகளாவிய பொருளாதார போக்குகளின் நாணய, வெளிநாட்டு, உண்மை மற்றும் இறை ஆகிய துறைகளின் போக்குகளினையும் அபிவிருத்திகளினையும் தொகுத்தல், கண்காணித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் என்பவற்றினைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் முன்னெடுத்த வேளையில், நாணயச்சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற முன்கூட்டிய மற்றும் தரவினால் உந்தப்பட்ட நாணயக் கொள்கைத் தீர்மானங்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு எறிவுகளையும் எதிர்வுகூறல்களையும் சமர்ப்பித்தது. நாணயக் கொள்கைச் செயற்குழுவிற்கான செயலகமாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அட்டவணையிடப்பட்ட எட்டு நாணயக் கொள்கைச் செயற்குழுக் கூட்டங்களிற்கு வசதியளித்தது. மத்திய வங்கியின் பொருத்தமான நாணயக் கொள்கை நிலைப்பாடு தொடர்பில் நாணயச்சபைக்கு கொள்கை விதந்துரைப்புக்களினை மேற்கொள்வதற்கு நாணயக் கொள்கைச் செயற்குழுவினை இயலச்செய்து, பொருளாதாரம், நாணய நிலைமைகள், வெளிநாட்டுத் துறைப் பிரச்சனைகள் மற்றும் பணவீக்கம் மற்றும் வளர்ச்சி எதிர்வுகூறல்கள் போன்ற மாதிரி அடிப்படையிலமைந்த பேரண்டப் பொருளாதார எறிவுகள் என்பவற்றின் அபிவிருத்திகள் தொடர்பில் அனைத்தையுமுள்ளடக்கிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பல்வேறு பொருளாதார பிரச்சனைகள் தொடர்பில் மத்திய வங்கியின் மூத்த முகாமைத்துவத்திற்கு பகுப்பாய்வுகளினையும் அறிக்கைகளினையும் வழங்கி, பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கு அவசியமான பொருத்தமான கொள்கை வழிமுறைகளை எடுத்துக்காட்டியது. அதேவேளை, முன்னர் தொழிற்பாட்டிலிருந்த நாணயக்கொள்கை ஆலோசனைச் செயற்குழு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைச் செயற்குழு என்பவற்றினைப் பதிலீடு செய்வதன் மூலம் 2022 யூலையில் ஆர்வலர் ஈடுபாட்டுக் குழு தாபிக்கப்பட்டது. ஆர்வலர் ஈடுபாட்டுக் குழு தலைசிறந்த தொழில்சார் நிபுணர்கள், கல்வியலாளர்கள் மற்றும் தனியார் துறை ஆளணியினர் உள்ளடங்கலாக பல்தரப்பட்ட ஆர்வலர்களை உள்ளடக்கியுள்ளது. ஆர்வலர் ஈடுபாட்டுக் குழு பொதுவாக காலாண்டு அடிப்படையில் சந்திப்பதுடன் இக்கூட்டங்கள் செயலக உதவியுடன் இணைந்து பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் வசதிப்படுத்தப்படுகின்றன. நாணயக்கொள்கைத் தீர்மானமெடுத்தல் மற்றும் தொடர்பூட்டல் என்பவற்றிற்குப் பங்களிக்கின்ற பகுப்பாய்வு இயலளவினை நீடிப்பதில் காணப்பட்ட தொடர்ச்சியான முயற்சிகளின் பகுதியொன்றாக பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து பெறப்பட்ட தொழில்நுட்ப உதவியுடன் உள்ளக மாதிரியுரு மற்றும் எதிர்வுகூறல் இயலளவினைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் மேம்படுத்தியது. நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினுள் நாணயக்கொள்கைத் தொடர்பூட்டலானது முக்கியமானதொரு வகிபாகத்தினைக் கொண்டிருக்கின்றமையினால், நடுத்தர காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கப் பாதையுடன் இசைந்து செல்லும் விதத்தில் பணவீக்க எதிர்பார்க்கைகளை உறுதிநிலைப்படுத்தும் நோக்குடன் பொது மக்களிற்கும் ஏனைய ஆர்வலர்களுக்குமிடையே வெளியகத் தொடர்பூட்டலினை மேம்படுத்துவதற்கும் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பல்வேறு

வழிமுறைகளை மேற்கொண்டது. நாணயச்சபையின் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைப் பொது மக்களுக்கு அறிவிக்கின்ற நாணயக்கொள்கை மீளாய்வு தொடர்பிலான எட்டு ஊடக அறிக்கைகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வெளியிட்டது. தொடர்பூட்டல் திணைக்களத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட நாணயக்கொள்கை மீளாய்வு தொடர்பிலான ஊடக மாநாடுகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வசதிப்படுத்தியதுடன் அவை பல்வேறு நேரலை மற்றும் சமூக வலைதளங்களினூடாக நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டமையானது உண்மை நேர நாணயக் கொள்கைத் தொடர்பூட்டலின் பரந்த அடிப்படையிலானதொரு அடைவினை இயலச்செய்தன. மத்திய வங்கியின் முயற்சிகள் பரவலாக மக்களைச் சென்றடைவதற்குப் பங்களிக்கின்ற விதத்தில், நாணயக் கொள்கை அறிவிப்புக்களினைத் தொடர்ந்து மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகங்களினால் ஒருங்கிணைக்கப்பட்ட இணையத்தளம் வாயிலான கருத்தரங்குகளை வசதிப்படுத்துவதற்கான வளவாளர்களைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வழங்கியது. மத்திய வங்கியின் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளில் மத்திய வங்கி அலுவலர்களின் தொழில்நுட்ப ரீதியிலான புரிந்துகொள்ளலினை மேம்படுத்தும் பொருட்டு தொடர்பூட்டல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அறிவைப் பகிர்ந்துகொள்கின்ற செயலமர்வுகளில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமும் பங்களித்தது. அதேவேளை, ஆண்டு காலப்பகுதியில் நாணய மற்றும் வட்டி வீதப் புள்ளிவிபரங்களின் தொகுப்பினையும் பரவலினையும் மேலும் மேம்படுத்தும் பொருட்டு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, நிதியியல் அறிக்கையிடல் தரநியமங்களிற்கான மாற்றங்களினைத் தொடர்ந்து நாணய மற்றும் வட்டி வீதத் தரவு சேகரிப்புச் செய்முறையினை ஒழுங்குமுறைப்படுத்தும் வேளையில், வட்டி வீதப் புள்ளிவிபரங்கள் மீதான மிகவும் நுணுக்கமானதும் உயர் இடைவெளியும் கொண்ட தரவுகளைச் சேகரிக்கத் தொடங்கியது.

7.2 வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டினைப் பேணுதல்

பொருளாதாரத்தின் வெளிநாட்டுத்துறை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துகின்ற நோக்குடன் கிரமமானதோர் அடிப்படையில் பன்னாட்டு வர்த்தகம், வெளிநாட்டு நிதி, செலாவணி வீதம் மற்றும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் என்பவற்றுடன் தொடர்புடைய புள்ளிவிபரங்களைச் சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் என்பனவற்றின் மூலம் வெளிநாட்டுத் துறை மீதான பொருத்தமானதும் காலந்தவறாததுமான கொள்கை மதியுரைகளையும் பரிந்துரைகளையும் நாணயக் கொள்கைச் செயற்குழுவிற்கும் நாணயச்சபைக்கும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் வழங்கியது. சவால்மிக்க மற்றும் பாதிக்கப்படக்கூடிய பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில், செலாவணி வீதத்தின் மீதான அழுத்தங்களைக் கிரமமாக மதிப்பீடு செய்ததுடன் வெளிநாட்டுத் துறை பாதிப்படையக்கூடிய தன்மைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான கொள்கை வழிமுறைகளுடன் இணைந்து வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள் மற்றும் பிரச்சனைகள் தொடர்பிலான முன்னிலைப்படுத்தல்களினையும் சமர்ப்பிப்புக்களினையும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும் நாணயச் சபைக்கும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் வழங்கியது. நாணய விதிச் சட்டத்தின் 114ஆம் பிரிவின் பிரகாரம், அரசாங்கத்தினால் அதன் எதிர்பார்க்கப்பட்ட கடன் பெறுகைகளுக்கு முன்னர் வேண்டப்பட்டவாறு முன்மொழியப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் நாணயத் தாக்கங்களைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் மதிப்பீடு செய்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது காலாண்டு அடிப்படையிலான சென்மதி நிலுவைக் கையேடு 6இன் வடிவத்துடன் இசைந்து செல்கின்ற விதத்தில் வெளியிடப்பட்ட சென்மதி நிலுவை மற்றும் பன்னாட்டு முதலீட்டு நிலைமை மற்றும் மாதாந்த அடிப்படையொன்றில் வெளியிடப்பட்ட பன்னாட்டு ஒதுக்குத் தரவு முன்வடிவம் போன்ற வெளிநாட்டுத்துறையுடன் தொடர்புடைய புள்ளிவிபரங்களைத் தொடர்ந்தும் வெளியிட்ட வேளையில், உலக வங்கிக்கான காலாண்டு வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்கள் மற்றும் வருடாந்த அடிப்படையிலான ஒருங்கிணைந்த நேரடி முதலீட்டு அளவீட்டிற்கான நேரடி முதலீட்டுத் தரவுகள் என்பவற்றுடன் தொடர்புடைய காலந்தவறாத சமர்ப்பிப்புக்களை மேற்கொண்டது. மேலும், தனியார் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான தரவுகளைத் திரட்டுவதற்கான உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான மாதாந்த அளவீடுகள் மற்றும் வருடாந்த பன்னாட்டு முதலீட்டு அளவீடு மற்றும் வதிவுள்ள மற்றும் வதிவற்ற வானூர்திகள், கப்பலேற்றுகின்ற நிறுவனங்கள், தொலைத்தொடர்பூட்டல், கட்டடவாக்கம் மற்றும் காப்புறுதித் துறைகள் போன்றவற்றினை உள்ளடக்கின்ற பணிகளிலுள்ள வர்த்தகத்துடன் தொடர்புடைய அளவீடுகள் என்பவற்றினை உள்ளடக்கின்ற வெளிநாட்டுத் துறைத் தரவுகளின் துல்லியத்தன்மை மற்றும் காலந்தவறாமை என்பவற்றினை நிச்சயப்படுத்தும் பொருட்டு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு அளவீடுகளை மேற்கொண்டது. ஆண்டு காலப்பகுதியில், வங்கித்தொழில் துறையினூடாக மேற்கொள்ளப்படுகின்ற எல்லைகளுக்கிடையிலான வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான நுணுக்கமான தகவல்களைத் திரட்டுவதற்கும் தொகுப்பதற்குமான செயற்றிட்டமொன்றான பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் முறைமையினை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நடைமுறைப்படுத்தியது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது வெளிநாட்டு இணைத்தரப்பினர்களுடனான குறிப்பாக, வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்புச் செய்முறையுடன் தொடர்புடைய கடிதத் தொடர்புகள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டிற்காக அலுவலர் மட்ட உடன்படிக்கையொன்றினை எட்டுதல் போன்ற ஈடுபாடுகளை 2022 செத்தெம்பரில் வசதிப்படுத்தியது.

7.3 முன்கூட்டிய கொள்கை மதியுரைகள்

2022 காலப்பகுதியில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது ஏனையவற்றிற்கிடையில், நாணயக் கொள்கை, செலாவணி வீதக் கொள்கை, பன்னாட்டு வர்த்தகம் மற்றும் இறைத்துறை என்பவற்றுடன் தொடர்புடைய பிரச்சனைகள் மீது நாணயச்சபை, அரசாங்கம் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்குக் கொள்கை மதியுரைகளை வழங்குகின்ற அதன் இன்றியமையாத வகிபாகத்தினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இதற்கமைய, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும் நாணயச் சபைக்கும் மேற்கொள்கின்ற சமர்ப்பிப்புக்களுக்கு மேலதிகமாக, கௌரவ நிதி அமைச்சர், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு பாராளுமன்றக் குழுக்கள் போன்ற பலருக்கு இரகசிய அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பித்ததுடன் முன்னிலைப்படுத்தல்களினையும் வழங்கியது. திணைக்களத்தின் நியதிச்சட்ட வகிபாகத்தினை எய்துகையில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 64 மற்றும் 68 என்பவற்றின் கீழ் கௌரவ நிதி அமைச்சரிற்கு பல்வேறு இரகசிய அறிக்கைகளைச் சமர்ப்பித்தமையானது, நாணய மற்றும் வெளிநாட்டுத் துறைகளில் தற்போதைய நிலை மற்றும் தோற்றப்பாடு என்பவற்றினை எடுத்துக்காட்டுகின்ற வேளையில் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாடு என்பவற்றினை நிச்சயப்படுத்துவதற்கான முன்கூட்டிய வழிமுறைகளைப் பரிந்துரைக்கின்றது. 2023இற்கான தேசிய வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய கொள்கை முன்மொழிவுகளின் தொகுதியொன்றுடன் இணைந்து நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 116(1)இற்கமைய அதன் இலக்குகளை அடையும் பொருட்டு மத்திய வங்கியின் இயலுமையின் மீதான தற்போதைய இறைக் கொள்கையின் தாக்கத்தினை எடுத்துக்காட்டுகின்ற செத்தெம்பர் 15 அறிக்கை என அறியப்படுகின்ற இரகசிய அறிக்கையொன்று கௌரவ நிதி அமைச்சரிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

அவசியமான கொள்கை உள்ளீடுகளை வழங்குகின்ற நோக்குடன் கிரமமானதோர் அடிப்படையில் நாணயச்சபைக் கூட்டங்களில் கலந்துகொண்ட வேளையில், நாணயக் கொள்கைச் செயற்குழு, சந்தைத்

தொழிற்பாடுகள் செயற்குழு, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு, உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவக் குழு, அரச பிணையங்களை வழங்குவதற்கான கேள்வி கோரல் சபைகள், பயிற்சிக் குழு மற்றும் நூலக ஆலோசனைக் குழு போன்றன உள்ளடங்கலாக பல்வேறு உள்ளகக் குழுக்களில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர் உறுப்பினரொருவராகத் தொடர்ந்தும் பணியாற்றினார். மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர் உள்ளக முதலீட்டு மேற்பார்வைக் குழு மற்றும் பன்னாட்டு ஒதுக்கு முதலீட்டு மேற்பார்வைக் குழுவில் பார்வையாளரொருவராகவும் தொடர்ந்தும் பணியாற்றினார். மேலும், பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் சமகால கரிசனைசார் விடயங்கள் என்பன தொடர்பில் உள்ளீடுகளை வழங்குவதன் மூலம் ஏனைய கிரமமான மற்றும் சிறப்புக் கூட்டங்கள் மற்றும் ஏனைய உள்ளக குழுக் கூட்டங்கள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் பொருளாளர்கள் ஆகியோரது கூட்டங்கள் போன்றவற்றில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளரும் பங்களிப்பினை வழங்கினார். மேலும், லங்கா மினரல் ஸேன்ட்ஸ் லிமிடெட்டின் மூலமான கனிம மணலின் விற்பனைக்கான அடிப்படை விலையினைத் தீர்மானித்தல் தொடர்பான செயற்குழு, கூரை மீது பொருத்தப்பட்ட /நிலத்தில் பொருத்தப்பட்ட சூரிய சக்தி உற்பத்தித் தீர்வை வீதங்களைத் திருத்துவதற்கான செயற்குழு, இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கின்ற நிதிக்கான வழிகாட்டியின் நடைமுறைப்படுத்தல் மீதான வழிகாட்டல் குழுவிற்கு உதவியளிப்பதற்கான தொழில்நுட்பச் செயற்குழு, 10 மெகாவாற்று அல்லது அதற்குக் குறைவான மீள்புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களிலிருந்து உருவாக்கப்பட்ட மின்சாரத்தின் தரநியம தீர்வையினை இற்றைப்படுத்தல் தொடர்பான செயற்குழு, குருஞ்சதீவு உப்பளச் செயற்றிட்டத்தின் புனரமைப்பு தொடர்பிலான செயற்குழு, வர்த்தக ஊக்குவிப்பு மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபைத் தகவல் தொடர்பிலான மதியுரைச் செயற்குழு, அரச நிதிப் புள்ளிவிபரவியல் ஒருங்கிணைப்புச் செயற்குழு, திரவ பெற்றோலிய எரிவாயுவிற்கான விலையிடல் சூத்திரம் தொடர்பிலான செயற்குழு, பெற்றோலிய உற்பத்திகளிற்கான விலையிடல் சூத்திரமொன்றினை அறிமுகப்படுத்தல் தொடர்பிலான செயற்குழு, வாழ்க்கைச் செலவினைப் பேணுதல் தொடர்பிலான செயற்குழு, புவியியல்சார் அளவீடு மற்றும் சுரங்கப் பணியகத்தினால் வழங்கப்படும் காபனேற்றுப் பாறைகளினதும் கனிப்பொருட்களினதும் பொருளாதார மதிப்பினை நிர்ணயிப்பதற்கான மதிப்பீட்டுச் செயற்குழு, உணவுக் கொள்கைச் செயற்குழு மற்றும் நெடுஞ்சாலைகள் உள்ளடங்கலாக கட்டடவாக்கத் துறையில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களிலுள்ள விலை வேறுபாடுகளைச் சீராக்குவதற்கான பொருத்தமான முறையினை உருவாக்குவதற்கான செயற்குழு என்பன உள்ளடங்கலாக பல்வேறு செயற்குழுக்களினையும் பல்வேறு வெளிவாரியான நிறுவனங்களின் சபைகளினையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் சிரேஷ்ட அலுவலர்கள் பிரதிநிதித்துவப்படுத்தினர். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளரும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் சிரேஷ்ட அலுவலர்களும் பொருளாதார உறுதிப்பாடு, மீட்சி மற்றும் பல்வேறு வழிகளில் வளர்ச்சி ஊக்குவிப்பு என்பன தொடர்பிலான சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட செயற்குழுவினையும் வசதிப்படுத்தினர். மேலும், கடல்சார் இடவியல் திட்டமிடல் மற்றும் 30*30 பிரச்சாரம்: இலங்கைக்கான நன்மைகள், உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனத்தின் இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கின்ற நிதியிடல் செயற்றிட்டம், நீடித்து நிலைத்திருக்கின்ற அபிவிருத்திக்கான ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக அலுவல்கள் ஆணைக்குழுவின் பேரண்டப் பொருளாதார மாதிரியினை நடைமுறைப்படுத்தல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை வலுப்படுத்துவதற்கான செயலணிக் குழு என்பன உள்ளடங்கலாக ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு செயற்றிட்டங்களில் மத்திய வங்கியினைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் பிரதிநிதித்துவப்படுத்தினர். மேலும், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபை மற்றும் செக் போர்ட் சிட்டி கொழும்பு (பிறைவட்) லிமிட்டெட் என்பன உள்ளடங்கலாக பல்வேறு நிறுவனங்களுடனான கூட்டங்களில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் கலந்து கொண்டனர். அதேவேளை, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் பசுமை நிதியளிப்புப் பகுப்பியல் தொடர்பிலான வழிகாட்டல் குழுவில் கலந்து கொண்டதுடன் பசுமை நிதியளிப்புப் பகுப்பியலின் அங்குரார்ப்பணத்தினை ஒழுங்குபடுத்துவதிலும் ஈடுபட்டனர். எக்ஸ்-பிரஸ் பேர்ல் கப்பல் விபத்து தொடர்பிலான தாக்க மதிப்பீடு, தேசிய எரிபொருள் உரிமத்திற்கான கியுஆர் முறைமையின் கீழான செயலாற்றம், கேள்வி முகாமைத்துவதத்திற்கான உள்நாட்டுப் பெற்றோலிய விலைகளின் அவசர திருத்தமொன்றிற்கான தேவை, உணவுப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார மீட்சி என்பவற்றிற்காக வேளாண்மைத் துறையினை மீளெழுச்சியடையச்செய்தல் மற்றும் கைத்தொழில் துறைப் பிரச்சனைகள் மற்றும் வாய்ப்புக்கள் என்பன உள்ளடங்கலாக சமகால கரிசனைசார் விடயங்கள் தொடர்பிலான பகுப்பாய்வுகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்தனர். சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் பேச்சுவார்த்தைகளை மீளெழுச்சியடையச்செய்வதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்குப் பங்களிக்கின்ற விதத்தில், இலங்கை முதலீட்டுச் சபையினால் நடாத்தப்பட்ட சீன-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைப் பேச்சுவார்த்தைகளுக்கான முதலீட்டுத் துணைக்குழுக்கள் போன்ற அத்தகைய பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு உருவாக்கப்பட்ட குழுக்களிலும் துணைக் குழுக்களிலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

7.4 நியதிச்சட்ட வெளியீடுகள் மற்றும் தரவுகள் மற்றும் தகவல்களைப் பரப்புதல்

நாணய விதிச் சட்டத்தின் கீழ் நியதிச்சட்டத் தேவைப்பாடுகளுக்கமைவாக, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், 2021ஆம் அண்டிற்கான மத்திய வங்கியின் *ஆண்டறிக்கையை* மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களின் உதவியுடன் தயாரித்தது. மத்திய வங்கியின் இத்தகைய வருடாந்த முதன்மை வெளியீடானது கௌரவ நிதி அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2022 ஏப்பிறல் இறுதியளவில் பொதுமக்களுக்கு கிடைப்பனவாகக் காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக, ஏனைய திணைக்களங்களின் ஆதரவுடன் *அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் - 2022இன் முக்கிய பண்புகளும் 2023இற்கான வாய்ப்புக்களும்* எனும் வெளியீடும் 2022 ஒத்தோபரில் வெளியீடு செய்யப்பட்டு தற்போது நிலவுகின்ற பேரண்டப் பொருளாதார நிலைமைகளினதும் 2023ஆம் ஆண்டிற்கான தோற்றப்பாட்டினதும் நடுவாண்டு மதிப்பீட்டை வழங்கியது. மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது *மாதாந்தப் புள்ளிவிபரத் திரட்டையும்* பேரண்டப் பொருளாதார வரைபடத் தொகுதியையும் வெளியீடுசெய்த அதேவேளை, ஊடகத்தில் வெளியீடு செய்யப்பட்டும் மத்திய வங்கியின் இணையவழி நூலகத்தில் கிடைப்பானவாகவும் காணப்படும் நாளாந்த, வாராந்த, மற்றும் மாதாந்த குறிகாட்டிகள் மற்றும் திரட்டுக்கள் என்பவற்றினூடாக பொருளாதார மற்றும் நிதியியல் தகவல்களை தொடர்ந்தும் பரப்பியது. மேலும், பொதுமக்களுக்கான விழிப்புணர்வை மேம்படுத்தும் நோக்குடன், கிரமமான நாணயக் கொள்கை மீளாய்வு மற்றும் வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள் என்பவற்றிற்கு மேலதிகமாக தோற்றம்பெற்றுவரும் விடயங்கள் தொடர்பில் ஊடகசந்திப்பு அறிக்கைகளும் ஊடக அறிக்கைகளும் வெளியீடு செய்யப்பட்டன. சிறப்புத் தரவுப் பரவல் நியமத்துடன் இணங்கியொழுகும் விதத்தில் பொருளாதாரத்தின் அனைத்து துறைகளையும் உள்ளடக்கி பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் புள்ளிவிபரங்களைப் பரப்பியது. சமகால பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் இலத்திரனியல் ஊடகத்தில் இடம்பெற்ற பல்வேறு கலந்துரையாடல்களில் பொருளாதார

ஆராய்ச்சிப் பணிப்பாளர் பங்குபற்றி, வெளிவாரி ஈடுபாடுகளில் மத்திய வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். பல்வேறு மன்றங்களில் வழங்கப்பட்ட உரைகளுக்காக ஆளுநர் பேசத்தக்க கருத்துக்கள் மற்றும் காட்சிபடுத்தல்கள் என்பவற்றையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தயாரித்த அதேவேளை பல்வேறு தலைப்புக்கள் தொடர்பான தகவல்களை கௌரவ அமைச்சர்களுடன் பகிர்ந்து கொண்டது.

7.5 கொள்கை ஆராய்ச்சியில் ஈடுபடுதல் மற்றும் அறிவைப் பகிர்ந்து கொள்ளுதல்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது மத்திய வங்கியின் கொள்கை வகுத்தலை வசதிப்படுத்துவதற்கான ஆய்வையும் பகுப்பாய்வையும் ஊக்குவிக்கும் பொருட்டு திணைக்களத்திலும் மத்திய வங்கியிலும் ஆய்வுக் கலாச்சாரத்தினை தொடர்ந்தும் உருவாக்கியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தில் ஆய்வுக் கலாச்சாரத்தினை வளர்ப்பதை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட உள்ளகக் குழுவொன்றான ஆராய்ச்சி மதியுரைக் குழுவானது ஆய்வுடன் தொடர்புடைய பணிகள் மற்றும் அறிவைப் பகிர்ந்துகொள்ளும் நடவடிக்கைகளில் வழிகாட்டலை தொடர்ந்தும் வழங்கியது. இதற்கமைவாக, ஆராய்ச்சி மதியுரைக் குழு உறுப்பினர்கள், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்துடன் கூட்டிணைந்து, 'பொருளாதாரத்தில் ஆய்வு' மற்றும் பிரயோகப் பொருளாதாரவியல் - EViews மென்பொருள்' போன்றன உள்ளடங்கலாக ஆராய்ச்சி முறையியல் தொடர்பில் பல்வேறு பயிற்சி கற்கைநெறிகளுக்கு வளவாளர்களாக பணியாற்றிய அதேவேளை, மத்திய வங்கியின் அலுவலர்களின் ஆய்வுத் திறன்களை மேம்படுத்துவதற்கு ஆராய்ச்சியாளர்களுக்கு வழிகாட்டும் ஆய்வு நடவடிக்கைகளுக்கு தீவிரமாகப் பங்களித்தனர். 2022 செத்தெம்பரில், தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக, பேரண்டபொருளாதார உறுதிப்பாட்டிற்கான தோற்றம்பெற்றுவரும் சிக்கல்கள் தொடர்பில் கவனம்செலுத்தி, ஆசிய அபிவிருத்தி வங்கி நிறுவகம் மற்றும் ஆசிய பசுபிக் பிரயோகப் பொருளியல் சங்கம் என்பனவற்றுடன் கூட்டிணைந்து பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது கூட்டு வருடாந்த பன்னாட்டு ஆய்வு செயலமர்வொன்றை ஒழுங்கமைத்தது. இச்செயலமர்வில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் ஊழியர்கள் ஆசிய பசுபிக் பிரயோகப் பொருளியல் சங்கத்திலிருந்து ஆய்வாளர்களுடன் இணைந்து தயாரிக்கப்பட்ட மூன்று ஆய்வுக் கட்டுரைகளை முன்வைத்திருந்தனர். 2022 ஒத்தோபரில், தென்னாசியாவில், பணவீக்க இயக்கவாற்றல் மற்றும் அதன் கட்டுப்பாடு தொடர்பில் சார்க் நிதிய மெய்நிகர் கருத்தரங்கில் நாடு அடிப்படையிலான கட்டுரையொன்றை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள ஆய்வாளர்கள் முன்வைத்திருந்தனர். மேலும், பேரண்ட பொருளாதாரங்கள், நுண்பாக பொருளாதாரங்கள், மற்றும் பொருளியல்களுக்கான கணிதம் போன்ற துறைகளில் மத்திய வங்கியின் பட்டப்பின் படிப்பில் ஆர்வம் கொண்டவர்களுக்கு பயிற்சிகளைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வழங்கியது. ஆராய்ச்சி மதியுரைக் குழுவின் வழிகாட்டலின் கீழ் 2022இல் மத்திய வங்கியின் அலுவலர்சார் ஆராய்ச்சி வெளியீடான *அலுவலர்கள் கற்கைகளை* வெளியிட்ட அதேவேளை மத்திய வங்கியின் பட்டப்பின் படிப்பில் ஆர்வம் கொண்டவர்களது ஆய்வு முன்மொழிவுகளையும் ஆய்வுக் கட்டுரைகளையும் ஆராய்ச்சி மதியுரைக் குழு தொடர்ந்தும் மதிப்பீடுசெய்து பல்கலைக்கழக முறைமையில் சில பட்டப்பின் படிப்பினைத் தொடரும் மாணவர்களுக்கு ஆலோசனைப் பணிகளையும் வழங்கியது. மேலும், மத்திய வங்கியின் மூன்று காலாந்திர வெளியீடுகளான நியூஸ் சவே, சட்டஹன, மற்றும் வைப்பகம் என்பனவற்றில் வெளியிடுவதற்கு எழுதப்பட்ட கட்டுரைகளை ஆராய்ச்சி மதியுரைக் குழுக்களின் உறுப்பினர்கள் மீளாய்வு செய்தனர்.

அதேவேளை, பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள், மற்றும் பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் ஊழியர்கள் ஆகியோருக்கு நன்மையளிப்பதற்கு தொடர்பூட்டல் திணைக்களம், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் மற்றும் மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகங்களுடன் இணைந்து இலங்கை மத்திய வங்கியினுள்ளும் மத்திய வங்கிக்கு வெளியிலுமுள்ள ஆர்வங்கொண்ட தரப்பினரின் பொருளாதார அறிவை மேம்படுத்துவதற்கு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பங்களித்தது. மேலும், மத்திய வங்கியின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், நாட்டின் பொருளாதார கொள்கை உருவாக்கத்தில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது 45 பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆய்வு திறன்களை விருத்தி செய்வதற்கு உதவுவதன் மூலமும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினதும் மத்திய வங்கியினதும் வகிபாகத்தை பொதுவாக கற்பிப்பதன் மூலமாகவும் அவர்களுக்கு வழிகாட்டியது. '2021 ஆண்டறிக்கையில் பிரதிபலிக்கப்பட்டவாறு இலங்கை பொருளாதாரத்தின் நிலை, சவால்கள் மற்றும் தோற்றப்பாடு' என்ற முக்கிய பொது விரிவுரையானது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்களினால் மூன்று மொழிகளிலும் நடாத்தப்பட்டது. மேலும், இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை குறிக்கோள்கள், மற்றும் தொழிற்பாடுகள், அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள், மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் பல்வேறு மெய்நிகரான மற்றும் நேரடியான கல்வி சார்ந்த மற்றும் விழிப்பூட்டல் அமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக, 2022 காலப்பகுதியில், முறையே சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்பட்ட தக்ஷிலாவ மற்றும் அறிவூற்று போன்ற வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் ஒழுங்கமைப்பட்ட தொலைக்காட்சி கல்விசார் விரிவுரைத் தொடர்கள் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்களின் பணியைப் பெற்றுக்கொண்டன.

7.6 பன்னாட்டு உறவுகள்

2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி என்பவற்றின் சார்பில் பன்னாட்டு அமைப்புக்களுடனும் பல்புடை நிறுவனங்களுடனும் பொருளாதார மற்றும் நிதியியல் ரீதியான உறவை மேலும் வலுப்படுத்தியது. ஆண்டுக் காலப்பகுதியில், உறுப்புரை IV மற்றும் உறுப்புரை VIII ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவி உள்ளடங்கலாக பல்வேறு பன்னாட்டு நாணய நிதிய பணிமனைக்கு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வசதியளித்த அதேவேளை பன்னாட்டு நாணய நிதியத்துடன் மெய்நிகர் கூட்டங்களை ஒருங்கிணைத்தது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது வருடாந்த தென் கிழக்காசிய மத்திய வங்கிகள் கூட்டம் மற்றும் ஆளுநர் சபைக் கூட்டங்கள் மற்றும் தெற்காசிய மத்திய வங்கிகளின் வேறு ஒருங்கிணைப்பாளர்களுடன் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் மேற்கொள்ளப்படும் சார்க் நிதியக் கூட்டம் என்பவற்றை ஒருங்கிணைப்பதன் வாயிலாக தென் கிழக்காசிய மத்திய வங்கிகள் மையத்தினூடாக பிராந்திய மத்திய வங்கிகளுடன் தொடர்ந்தும் முனைப்பாக ஈடுபட்டது. கொழும்பிலுள்ள நியூசிலாந்து உயர்ஸ்தானிகராலயத்துடன் இணைந்து நியூசிலாந்து றிசேர்வ் வங்கியின் முன்னாள் தற்காலிக ஆளுநர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திற்கு வருகை தந்தவிடத்து, மத்திய வங்கி மற்றும் தொடர்புபட்ட சட்டம் பற்றிய விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டு பகிரங்க விரிவுரையும் வழங்கப்பட்டது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது பிட்ச் (Fitch) தரமிடல்கள், எஸ் மற்றும் பி தரமிடல்கள் மற்றும் மூடிஸ் (Moody's) தரமிடல்கள் ஆகிய நாட்டிற்கான பன்னாட்டுத் தரமிடலை மேற்கொள்ளும் மூன்று முகவர்களுடன் நெருக்கமாக பணியாற்றிய அதேவேளை, நாட்டிற்கான பன்னாட்டு தரமிடல் முகவர்கள் மூலம் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்காக உள்ளீடுகளை வழங்கியது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பன்னாட்டு முதலீட்டாளர்களுக்கும் வெளிநாட்டிலிலுள்ள இலங்கைத் தூதுவர்களுக்கும் பொருளாதாரம் தொடர்பான இற்றைப்படுத்தல்களை வழங்குவதற்கு ஆதரவளித்த அதேவேளை பொருளாதாரத்தின் வெளிவாரி ஆர்வலர்களுடன் தொடர்ந்தும் உரையாடல்களைப் பேணியது. குறைந்த அபிவிருத்தியடைந்த நாடுகள் தொடர்பில் 5ஆவது ஐக்கிய நாடுகள் மாநாட்டிற்கான போதுமான தகவல்களை பொருளதார ஆராய்ச்சித்

திணைக்களம் வழங்கியதுடன் ஏனையவற்றுக்கு மத்தியில் வறுமை ஒழிப்பு, தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகள், கட்டமைப்பு மாற்றம், பிராந்திய ஒருங்கிணைப்பு, காலநிலை மாற்றங்கள் மற்றும் எதிர்கால அதிர்ச்சிகளுக்கெதிராக தாக்குபிடிக்குந்தன்மையைக் கட்டியெழுப்புதல் போன்ற விடயப்பரப்புக்களை எடுத்துக்காட்டியது. மேலும், 2022இன் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 77ஆவது தொடரிற்கும் பன்னாட்டு முதலீட்டாளர்களுக்கும் தூதுவர்களுக்கும் பொருளாதாரம் தொடர்பான இற்றைப்படுத்தல்களை வழங்குவதற்கு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆதரவளித்த அதேவேளை வெளிவாரி ஆர்வலர்களுடன் தொடர்ந்தும் உறவைப் பேணியது.

8. ஊழியர் சேமலாப நிதியம்

ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது (ஊ.சே.நி.திணைக்களம்) ஊழியர் சேமலாப நிதியத்தை நிறுவிய 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக அதன் அதிகாரங்களை பிரயோகிப்பதற்கும் கடமைகளை செயற்படுத்துவதற்கும் அதன் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கும் நாணயச் சபைக்கு வசதியளிக்கின்றது. ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக, நிதிய முகாமைத்துவத்தின் அனைத்து அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பன நிதியத்தின் கட்டுக்காப்பாளர் என்ற வகையில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதேவேளையில், சட்டத்தின் பொது நிருவாகம் தொழில் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை சார்பில், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம், ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ், பங்களிப்புக்கள், மேலதிகக் கட்டணங்கள் மற்றும் கட்டணங்கள் அத்துடன் பண முதலீடுகளிலிருந்தான பெறப்பட்ட வருமானங்களாக செலுத்தப்பட்ட அனைத்து தொகைகளையும் பெற்றுக்கொள்ளவதற்கும், நிதியத்தினுடைய பணத்தின் கட்டுக்காப்பாளராக இருப்பதற்கும், நிதியத்தின் ஒவ்வொரு உறுப்பினர்கள் தொடர்பிலும் வெவ்வேறான கணக்குகளைப் பேணுவதற்கும், சட்டத்தின் கீழ் உரித்துடைய ஆட்களுக்கு தொழில் ஆணையாளரினால் சான்றுபடுத்தப்பட்ட அத்தகைய நன்மைகளைச் செலுத்துவதற்கும், சட்டத்தின் நோக்கத்திற்காக உடனடியாக தேவைப்படுத்தப்படாத நிதியத்தின் பணத்தில் முதலீடுசெய்வதற்கும், நிதியத்துடன் தொடர்புடைய கணக்குகளின் ஏடுகளைப் பேணுவதற்கும், நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்து தொழிலுக்குப் பொறுப்பான அமைச்சருக்கான பிரதியுடன் அதனை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கும் பொறுப்புடையதாகும்.

2022 காலப்பகுதியில், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக மேற்குறித்த நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்த அதேவேளையில், தொழில் ஆணையாளருடன் நெருக்கமான ஒத்துழைப்பினையும் பேணியது. ஆய்விற்குரிய ஆண்டு காலப்பகுதியில் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

(அ) பங்களிப்புக்களை பெற்றுக்கொள்ளலும் உரித்துடையவர்களுக்கு நன்மைகளைச் செலுத்துதலும்

2022இல், மொத்த உறுப்பினர் பங்களிப்புக்கள், 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.165.7 பில்லியனிலிருந்து ரூ.194.6 பில்லியனுக்கு 17.4 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளையில், உறுப்பினர்களுக்கும் அவர்களின் சட்டபூர்வ பின்னுரித்தாளர்களுக்கும் செலுத்தப்பட்ட மொத்த மீளளிப்புக்களும் ரூ.163.0 பில்லியனுக்கு அதிகரித்திருந்தது. இது, 2021ஆம் ஆண்டு ரூ.118.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 37.9 சதவீத அதிகரிப்பொன்றாகக் காணப்பட்டது (அட்டவணை II-9). அதற்கிணங்க, 2021இற்கான தேறிய பங்களிப்பானது 2021 இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.47.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.31.6 பில்லியனுக்கு குறைந்திருந்தது.

அட்டவணை II - 9
நிதியத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய தகவல்கள்

விடயம்	2021	2022 (அ)	மாற்றம் (%)
நிதியத்தின் மொத்தப் பெறுமதி (ரூ. பில்)	3,166.1	3,459.9	9.3
உறுப்பினர்களின் மொத்தப் பொறுப்பு (ரூ. பில்)	3,066.9	3,380.6	10.2
உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்)	20.3	20.4	0.5
பங்களிப்புச் செய்யும் உறுப்பினர் கணக்குகள் (மில்)	2.5	2.4	(4.0)
பங்களிப்புச் செய்யாத உறுப்பினர் கணக்குகள் (மில்)	17.8	18.0	1.1
மொத்தப் பங்களிப்புக்கள் (ரூ. பில்)	165.7	194.6	17.4
மொத்த மீளளிப்புக்கள் (ரூ. பில்)	118.2	163.0	37.9
தேறிய பங்களிப்புக்கள் (ரூ. பில்)	47.5	31.6	(33.6)
மீளளிப்புக்களின் எண்ணிக்கை	179,681	254,630	41.7

(அ) தற்காலிகமானவை

மூலம்: ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(ஆ) நிதியத்தின் பொதுக் கணக்குகளையும் உறுப்பினர் கணக்குகளையும் பேணுதல்

முதலீடுகளிலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் கிடைக்கப்பெற்ற தேறிய பங்களிப்புக்கள் (பங்களிப்புக்களிலிருந்து மீளளிப்புக்களை கழித்த பின்னர்) காரணமாக நிதியத்தின் மொத்தப் பெறுமதியானது 2021இறுதியிலுள்ளவாறான ரூ.3,166.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இன் இறுதியில் ரூ.3,459.9 பில்லியனுக்கு 9.3 சதவீதத்தினால் அதிகரித்தது. உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பானது (உறுப்பினர் நிலுவைகள்) 2021 இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூ.3,066.9 பில்லியனிலிருந்து 10.2 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவு செய்து, 2022 இறுதியில் ரூ.3,380.6 பில்லியனாக்க் காணப்பட்டது. (அட்டவணை II-9)

(இ) நிதியத்தின் முதலீட்டுச் செயற்பாடுகள்

நிதிய முகாமைத்துவச் செயற்பாடுகளின் தீர்மானம் எடுத்தல் தொழிற்பாடு ஊழியர் சேமலாப நிதிய முதலீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. இது காசுப்பாய்ச்சல் நிலைமைகளையும், சந்தை நிலவரங்களையும் மதிப்பிடுதல், முதலீட்டு வாய்ப்புக்களை மதிப்பிடுதல் மற்றும் முதலீடுகள் குறித்த முடிவுகளை எடுப்பதற்கும் தினசரி அடிப்படையில் சந்திக்கின்றது. நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டுக் கொள்கை மற்றும் வழிகாட்டல்களிற்கு இணங்க ஊழியர் சேமலாப நிதிய முதலீட்டு மேற்பார்வைக்குழு முதலீட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் தந்திரோபாய மற்றும் கொள்கை வழிகாட்டல்களை வழங்குகின்றது. மேலும், நிதியத்தின் முதலீடுகள் சம்பந்தமான கொடுக்கல்வாங்கல்கள் மத்திய வங்கியின் மூத்த முகாமைத்துவத்திற்கு நாளாந்த மற்றும் வாராந்த அடிப்படையில் அறிவிக்கப்படுவதுடன் நாணயச் சபைக்கு மாதாந்த அடிப்படையில் நிதியத்தின் முதலீடுகள் மற்றும் சொத்துப்பட்டியல் நிலைமை குறித்து அறிவிக்கப்படுவதுடன், முதலீட்டு செயற்பாடுகளின் கடுமையான கண்காணிப்பு செயன்முறை பலப்படுத்தபடுகின்றது.

2022ஆம் ஆண்டில், நிதியத்தின் முதலீட்டு செயற்பாடுகள் 2022 ஏப்பிறல் 12ஆம் திகதி முதல், இருதரப்பு மற்றும் வணிகக் கடன்களின் வெளிநாட்டுக் கடன் சேவைகளை நிறுத்துவதாக அரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து, உயர்ந்த பேரண்டப் பொருளாதாரத்தின்நிச்சயமற்றசூழலொன்றில் மேற்கொள்ளப்பட்டன. பொருளாதாரம் ஒரு கூர்மையான சுருக்கம், வரலாற்று ரீதியாக உயர்ந்த பணவீக்கம், வட்டி வீதங்களில் கூர்மையான அதிகரிப்பு, வெளித்துறையில் நெருக்கடிகள், அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறைகள் மற்றும் சமூக மற்றும் அரசியல் அமைதியின்மை என்பவற்றிக்கு சாத்தியமாகவிருந்தது. நிதியத்தின் தந்திரோபாய சொத்துக்கள் ஒதுக்கீடு குறித்த வழிகாட்டுதல்களுக்கு இணங்க, ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் அதன், நிதியின் ஒரு பெரும் பகுதியை அரசாங்க பத்திரங்களில் முதலீடு செய்தது. நிதிச் சந்தைகளில் காணப்படும் கணிசமான தளம்பல் நிலைமையைக் கருத்திற்கொண்டு, ஊழியர் சேமலாப நிதியம் நீண்டகால அரசாங்க பத்திரங்களில் முதலீடு செய்வதற்கு அதிக முக்கியத்துவமளித்தது. மேலும், இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டில் நிலவிய பணவீக்க அழுத்தங்களின் பின்னணியில் அதிகரித்துவரும் குறுகியகால வட்டிவீதங்களை மூலதனமாக்குவதற்காக ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் 2022ஆம் ஆண்டில் குறுகிய காலத் திறைசேரி உண்டியல்களில் தனது முதலீடுகளை அதிகரித்தது. பங்குச் சந்தையில் ஏற்ற இறக்கம் அதிகரித்துள்ள பின்னணியில் பங்குச் சந்தையின் முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து ஊழியர் சேமலாப நிதியம் மிகவும் எச்சரிக்கையான அணுகுமுறையொன்றை எடுத்தது. பாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள் காரணமாக, கம்பனித் தொகுதிக் கடன் பத்திரங்களில் முதலீட்டு வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள வேளையில் நிதியத்தின் கம்பனித் தொகுதிக் கடன் சொத்துப்பட்டியலின் கடன் இடரினைக் குறைப்பதற்கு சிறந்த கடன் மதிப்பீடுகளைக் கொண்ட கம்பனிகளில் முதலீடு செய்ய வேண்டியதன் அவசியத்தையும் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் உணர்ந்திருந்தது.

இதற்கிணங்க, 2022ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு, ரூ.3,466.5 பில்லியன் முதலீட்டு சொத்துப்பட்டியலில் அரசாங்க பத்திரங்களில் 96.9 சதவீதமும், பங்குரிமையில் 2.3 சதவீதமும், கம்பனித் தொகுதிக்கடன் பத்திரங்களில் 0.7 சதவீதமும் மீதமுள்ள 0.1 சதவீதம் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையிலும் அடங்குகின்றது.

(ஈ) உறுப்பினர் நிலுவைகளுக்கான வட்டிக்கொடுப்பனவு

ஊழியர் சேமலாப நிதியம் அதன் உறுப்பினர்களுக்கு கடந்த ஆண்டுகளை ஒத்த வட்டிவீதம் ஒன்றினைச் செலுத்த உத்தேசிக்கின்றது.

(உ) உறுப்பினர் பணிகளில் ஈடுபடுதல்

(i) உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களை வழங்குதல்

செயற்பாட்டு உறுப்பினர்களுக்கு நிதியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அவர்களின் தொழில் தருநர்களினூடாக அரையாண்டு அடிப்படையில் உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள் விநியோகிக்கப்படுகின்றன. அதன்படி, 2021ஆம் ஆண்டின் முதலாம் மற்றும் இரண்டாம் அரையாண்டின் உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள் 2022ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்டன. (அட்டவணை II-10)

அட்டவணை II - 10

உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களை வழங்குதல்

காலப்பகுதி	தொழில்தருநர்களின் எண்ணிக்கை	கூற்றுக்களின் எண்ணிக்கை (செயற்பாட்டு உறுப்பினர்கள்)
2021 முதலரையாண்டு	64,257	2,001,329
2021 இரண்டாமரையாண்டு	70,257	2,498,231

மூலம்: ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(ii) வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியளிப்பதற்காக உறுப்பினர்களுக்கு உத்தரவாதச் சான்றிதழ்களை வழங்குதல்

வீடமைப்புக் கடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ், 2022 காலப்பகுதியில், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது, வீடமைப்புக் கடன்களை பெறுவதற்கு தொடர்புடைய உறுப்பினர்களை வசதிப்படுத்துவதற்காக பங்கேற்கும் கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு உறுப்பினர்களின் ஊழியர் சேமலாப நிதிய நிலுவைகளிற்கு எதிராக, ரூ.6,127 மில்லியன் பெறுமதியான 9,443 உத்தரவாதச் சான்றிதழ்களை வழங்கியது. (அட்டவணை II- 11). மேலும், 2022 காலப்பகுதியில், தொடர்புடைய உறுப்பினர் கணக்குகளிலிருந்து அண்ணளவாக ரூ.3,669 மில்லியன் கழிக்கப்பட்டு 2021 ஆண்டுக்காக தொடர்புடைய உறுப்பினர்களின் நிலுவையிலுள்ள கடன்களை தீர்ப்பனவுசெய்வதற்கு பங்கேற்கின்ற கடன்வழங்கும் நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டது.

அட்டவணை II - 11

வீடமைப்புக் கடன் உத்தரவாத வசதி

ஆண்டு	வழங்கப்பட்ட சான்றிதழ்கள் (எண்ணிக்கை)	ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் (ரூ.மில்.)	கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு செலுத்திய தொகை (ரூ.மில்.)
2018	10,036	4,974	2,759
2019	10,022	5,097	3,164
2020	8,537	4,497	3,321
2021	9,068	5,423	3,573
2022	9,443	6,127	3,669

மூலம்: ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(III) ஓய்வுபெறுவதற்கு முன்னரான மீளளிப்புத் திட்டம்

2012ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் (திருத்தம்) சட்டத்தின் ஏற்பாடுகளினதும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நடைமுறைகளினதும் நியதிகளுக்கமைவாக ஓய்வு பெறுவதற்கு முன்னரான மீளளிப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க, 10 ஆண்டுகளுக்கு மேலாக நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் கணக்கு நிலுவை ரூ.300,000 ஐ விட அதிகமாக கொண்டுள்ள உறுப்பினர்கள், 2015ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் வீடமைப்பு அல்லது மருத்துவ சிகிச்சை போன்ற நோக்கங்களிற்காக ரூ.2 மில்லியன் கொண்ட உயர்ந்த தொகைக்குட்பட்டு அவர்களின் கணக்குகளின் நிலுவையில் 30 சதவீதம் வரையில் மீள்எடுப்பனவு செய்வதற்கு தகுதியுடையவராவர்.

மேற்குறிப்பிட்ட திட்டமானது ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்கள் மத்தியில் அதிக வரவேற்பினைப் பெற்றுள்ளது. 2022 ஆண்டு காலப்பகுதியில் இத்திட்டத்தின் கீழ் 27,278 உறுப்பினர்களுக்கு ரூ.16.4 பில்லியன் வழங்கப்பட்ட அதேவேளையில், 2022 இறுதியளவில் 224,335 பயன் பெறுநர்களுக்கு மொத்தமாக ரூ.123.5 பில்லியன் மீளளிக்கப்பட்டது.

(iv) ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புக்களின் இலத்திரனியல் சேகரிப்பு (E-collection)

தற்போதுள்ள இலத்திரனியல் சேகரிப்பு முறைமையை விரிவுபடுத்த ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் அதன் அதிகாரபூர்வ வலைத்தளம் மூலம் ஒரு பொறிமுறையை அறிமுகப்படுத்தியது. இது ஊழியர் சேமலாப நிதியத்தின் இணையத்தளத்தினூடாக இலத்திரனியல் திரட்டு சமர்ப்பிப்பதற்கும், பங்குபற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றுடன் "லங்காபே அதேநேர கொடுப்பனவுத் தளம் (LPOPP)" ஊடாகவோ அல்லது காசோலை மூலமாகவோ அல்லது நேரடி வைப்பாகவோ இணைப்பதன் மூலம் அதேநேரக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கும் தொழில் தருநர்களுக்கு உதவுகிறது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கை கொமர்சல் வங்கி பிஎல்சி, சம்பத் வங்கி பிஎல்சி மற்றும் நேசன்ஸ் டிரஸ்ட் வங்கி ஆகியவை ஊழியர் சேமலாப நிதிய திணைக்களத்துடன் இணைந்து அந்தந்த வசதிகளை வழங்கின. மேலே உள்ள முறைமையின் முக்கிய அம்சங்களில் ஒன்று, வெற்றிகரமாக பணம் செலுத்திய பின்னர், ஒரு நாளுக்குள் உறுப்பினர் கணக்குகளை புதுப்பிக்க உதவுகிறது. மேலும், இந்த முறைமை ஊழியர் சேமலாப நிதிய தரவுத்தளத்தில் உறுப்பினர் விபரங்களின் துல்லியத்தை சரிபார்க்க தொழில்தருநர்களுக்கு உதவுகிறது.

2022 ஆம் ஆண்டின் இறுதியில், இலத்திரனியல் திரட்டு (e-Return) சமர்ப்பிப்பு 12,815 தொழில்தருநர்கள் ஆக அதிகரித்தது, இது செயற்பாட்டு உறுப்பினர் கணக்குகளில் சுமார் 90 சதவீதத்தையும் மொத்த மாதாந்த ஊழியர் செயற்பாட்டு பங்களிப்புக்களில் சுமார் 91 சதவீதத்தையும் உள்ளடக்கியது. இந்த ஆண்டில், இலத்திரனியல் திரட்டு நன்மைகள் குறித்து தொழில்தருநர்களிடையே மேலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது, அதே நேரத்தில் இலத்திரனியல் திரட்டு தொடர்பாக உறுப்பினர் விபரங்களில் உள்ள முரண்பாடுகள் தொடர்பான சிக்கல்களை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதன் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டது. இது பங்களிப்புக்கள் உரிய உறுப்பினர் கணக்குகளில் சரியான நேரத்தில் வரவு வைக்கப்படுவதை உறுதி செய்யும்.

(v) ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களின் மீள்பதிவு

ஒரு தனித்துவமான உறுப்பினர் அடையாள முறையைப் பராமரிப்பதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது அதன் செயற்பாட்டு உறுப்பினர்களின் தேசிய அடையாள அட்டை (NIC) இலக்கங்கள் மற்றும் அவர்களின் தேசிய அடையாள அட்டைகளில் குறிப்பிடப்பட்டுள்ள முழு பெயர்களின் கீழ் மீண்டும் பதிவு செய்யும் செயல்முறையைத் தொடர்ந்தது. மேற்குறிப்பிட்ட மீள்பதிவுச் செயன்முறையில் தேசிய அடையாள அட்டை விபரங்களின் துல்லியத்தை சரிபார்ப்பதற்கு ஆட்பதிவுத் திணைக்களத்தின் தரவுத்தளத்திற்கு வழங்கப்படும் அணுகல் ஊடாக அதன் ஊடான புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் வசதி செய்யப்படுகின்றது. மேலும், 2022 ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தால் மீள்பதிவு செயல்முறையை விரைவுபடுத்தும் நோக்கத்துடன் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன, இந்த ஆண்டில், 26,959 செயற்பாட்டு உறுப்பினர்கள் மீண்டும் பதிவு செய்யப்பட்டனர் மற்றும் 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் செயற்பாட்டு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 1,682,978 ஆகும்

(vi) ஏனைய உறுப்பினர் பணிகள்

ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் பொதுமக்கள் தொடர்புகள் மற்றும் விசாரணைகள் கருமபீடமானது சமூக அரசியல் அமைதியின்மையுடன் 2022ல் சவாலான பணியினை மேற்கொண்டுள்ளது. 2022ல் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்திற்கு வருகை தந்துள்ள உறுப்பினர்கள்/ தொழில்தருநர்களின் எண்ணிக்கை 129,454 ஆக பதிவாகியுள்ளதுடன், திணைக்களமானது 63,365 எண்ணிக்கையான தொலைபேசி மூலமான உறுப்பினர் விசாரணைகளுக்கும், 14,114 எண்ணிக்கையான மின்னஞ்சல் மூலமான உறுப்பினர் விசாரணைகளுக்கும் பதிலளித்துள்ளது. மேலும், திணைக்களமானது உறுப்பினர்கள், தொழில்தருநர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற 1,630 எண்ணிக்கையான கடிதங்களிற்கு பதிலளித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் பதிவு திருத்த பிரிவு (RAD) ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர் கணக்குகள் தொடர்பான சுமார் 89,210 ஊழியர் சேமலாப நிதிய பதிவு திருத்தங்களைக் கவனித்தது. இதன்படி, 2022 ஆம் ஆண்டில் பிராந்திய அலுவலகங்கள் மூலம் பெறப்பட்ட 12,944 பெயர் / தேசிய அடையாள அட்டை திருத்தங்கள் மற்றும் 5,673 கணக்கு திருத்தங்கள் உட்பட 83,537 பெயர்/ தேசிய அடையாள அட்டை திருத்தங்கள் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தினால் கவனிக்கப்பட்டன.

(ஊ) செயன்முறை முன்னேற்றமும் இயலளவு விருத்தியும்

செயன்முறை முன்னேற்ற மற்றும் திறன் அபிவிருத்திப் பிரிவானது கணக்கியல், முதலீடு, அங்கத்தவர் பொறுப்பு முகாமைத்துவம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட தரவுத்தளம் என்பவற்றுக்கான ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்பத் தீர்வொன்றை வடிவமைத்து அமுல்படுத்துவதற்கு வசதியாக நியமிக்கப்பட்ட ஆலோசகருடன் தனது ஒருங்கிணைப்பைத் தொடர்ந்தது. இதற்கமைய, ஊழியர் சேமலாப நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான தற்போதைய வர்த்தக நடைமுறைகள் மற்றும் செயன்முறைகள் தொடர்பான ஆய்வு இவ்வருடத்தில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.

மேற்கண்ட ஆய்வைத் தொடர்ந்து, ஆலோசகர் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் வணிக தொழிற்பாட்டு ஆய்வை (BPR) நிறைவுசெய்தார். மேலும், பிராந்திய சேமலாப நிதியங்களிற்கு அளவுகோலிட்டும் தொழிலில் சிறந்த நடைமுறைகளை வலியுறுத்தியும் இடைவெளி பகுப்பாய்வு அறிக்கை நிறைவு செய்யப்பட்டது. வணிக தொழிற்பாட்டு ஆய்வு மற்றும் இடைவெளி பகுப்பாய்வின் அடிப்படையில், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் செயல்முறைகளின் செயல்பாட்டு வடிவமைப்பு வரைவு நடைபெற்று வருகிறது.

9. வசதிகள் முகாமைத்துவம்

ஆய்விற்குரிய காலப்பகுதியில் நாட்டில் நிலவிய பாதகமான சமூக மற்றும் பொருளாதார ரீதியான நிலைமைகளின் தாக்கங்களின் காரணமாக ஏற்பட்ட பல சவால்களுக்கு மத்தியில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது கட்டடங்களுடனும் சாதனங்களுடனும் தொடர்புடைய

ஏற்பாட்டுப் பணிகளையும் ஏனைய ஆதரவுப் பணிகளையும் தேவையான நவீன ஒருங்கேற்பாடுகளுடன் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் வழங்குவதற்கு வசதியளித்தது. இலங்கை மத்திய வங்கியின் ஆதனங்களை நவீனமயப்படுத்தும் அத்தகைய முயற்சிகளுக்கு நாட்டின் தற்போதைய நிலைமையின் காரணமாக முன்வைக்கப்பட்ட சில இறக்குமதிக் கட்டுப்பாடுகள் பாதகமாக காணப்பட்ட போதிலும், பயனர்களுக்கு பாதுகாப்புமிக்கதும் வினைத்திறன்மிக்கதும் காத்திரமானதுமான பணிபுரிகின்ற சூழலொன்று காணப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒவ்வொரு சாத்தியமான வழிமுறையையும் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் பின்பற்றியது.

இலங்கை மத்திய வங்கியின் வெளியக மற்றும் உள்ளக பயனர்களுக்கு அதிகளவில் தூண்டுதலளிக்கின்ற சூழலொன்றை உருவாக்கும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகக் கட்டடத்தில் காணப்பட்ட காலங்கடந்த உபகரணங்கள், சாதனங்கள், பொருத்துக்கள் மற்றும் துணைப்பொருட்கள் என்பவற்றை வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் தொடர்ந்தும் மாற்றீடு செய்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில், ஜோன் எக்ஸ்டர் பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் இரண்டு தசாப்தங்களாக பழமை வாய்ந்து காணப்பட்ட செவிப்புல-கட்புல முறைமையை இற்றைப்படுத்தும் நடவடிக்கை நிறைவுசெய்யப்பட்டது. வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் மறுசீரமைப்புக் கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டட சுகாதாரப் பரிசோதனைக் காலப்பகுதியில் காலங்கடந்த சில மின்னியந்திரவியல் முறைமைகளை மாற்றீடுசெய்ததுடன் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இனங்காணப்பட்ட மீதமுள்ள முறைமைகளையும் தொடர்ந்து மாற்றீடுசெய்தது. இலங்கை மத்திய வங்கியின் திணைக்களங்களின் சீரான தொழிற்பாட்டை உறுதிப்படுத்தும் பொருட்டு அத்தகைய திணைக்களங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு மேலதிக இடஒதுக்கீட்டினை போதுமான வசதிகளுடன் வழங்குகின்ற நடவடிக்கைகள் துரிதமாக நிறைவுசெய்யப்பட்டன.

வலு விரயமாகாமல் இருப்பதற்காக வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்ட வழிமுறைகளுடன் இணங்கும் விதத்தில், அதிகளவான வலு நுகர்வுத்தன்மையைக் கொண்ட வழமையான விளக்குப் பொருத்துக்கள் ஒளிகாலும் இருவாயி விளக்குகள் (LED lights) மூலம் மாற்றீடுசெய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக, பல்வேறு தசாப்தங்களாக பழமை வாய்ந்து காணப்பட்ட காப்புறைப் பொருட்களின் சிதைவடைந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு, நீட்டிப்பு கட்டடத்திலுள்ள குளிர் நீர் முறைமையுடன் தொடர்புடைய அனல்மின் காப்புறை மாற்றீடு செய்யப்பட்டது. மேலும், இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகக் கட்டடங்களின் கட்டமைப்புச்சார்ந்த ஆற்றல் வாய்ந்த தன்மையை பாதுகாப்பதற்கும் நீர்க்கசிவுகளைத் தடுப்பதற்குமான வழிமுறையொன்றாக, வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகக் கட்டடங்களின் மேற்கூரையில் நீர் புகாமலிருப்பதற்கான பெறுகைச் செயன்முறையை முன்னெடுத்தது.

மேலும், உத்தேசிக்கப்பட்ட பணிகளை காத்திரமாக வழங்குவதற்கான நவீன தொடர்பூட்டல் முறைமையின் கிடைப்பனவு பற்றிய முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு மாத்தளையிலுள்ள பிரதேச அலுவலகம் மற்றும் சேர் பாறோன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ள வைட்வேஸ் கட்டடம் ஆகிய இடங்களில் தனிப்பட்ட தானியங்கிக் கிளைப் பரிமாற்றங்கள் (PABX) நிறுவப்பட்டன.

சேர் பாறோன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ள லொயிட்ஸ் கட்டடத்தின் சொத்தாண்மை அமைச்சரவை செயலகத்திற்கு மாற்றம் பெற்றதன் விளைவாக ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தை அவசரமாக இடமாற்றம் செய்யவேண்டிய தேவைப்பாட்டிற்கு வசதியளிக்கப்பட்டதுடன் கடன் தகவல்கள் பணியகம் முன்னர் செயற்பட்ட வைட்வெயிஸ் கட்டடத்தின் அடித்தளத்திற்கு ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தை மாற்றுவதற்கான நடவடிக்கை இயலுமைப்படுத்திக்கொடுக்கப்பட்டது. மேலும், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் இடமாற்றத்தை இயலுமானவரை விரைவாக நிறைவு செய்வதற்கு தேவையான உட்கட்டமைப்பு ஒருங்கேற்பாடுகள் அதே கட்டடத்தின் 02ஆம் தளத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது இலங்கை போக்குவரத்துச் சபையிலிருந்தான பேரூந்துக்களுக்கு வாடகையைச் செலுத்துவதன் மூலம் விசேட போக்குவரத்து பணிகளை ஒருங்கேற்பாடு செய்ததன் ஊடாக நாட்டில் தற்போது நிலவுகின்ற போக்குவரத்து இடையூறான காலப்பகுதியில், கடமைக்கு நேரடியாக சமூகமளித்து வீடு திரும்புவதற்கு இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு வசதியளித்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில், இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளை தடையின்றி தொடர்ச்சியாக தொடர்வதற்கு முக்கியமாக பங்களிப்புச் செய்த வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் பிரதான முன்முயற்சிகளில் ஒன்றாக இது காணப்பட்டது.

மேலும், காலப்பகுதியில் பிரதேச அலுவலகங்களுக்கு வாகனங்களுடனான வாகனஓட்டுனர் பணிகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் தொடர்ந்தும் வசதியளித்தது. இதற்கு மேலதிகமாக, போதுமானளவு பேணல், வழமையான சேவை அத்துடன் பழுதுபார்த்தல் என்பவற்றின் ஊடாக வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் தற்போதுள்ள ஊர்த்தி தொகுதி மேலும் வலுப்படுத்தப்பட்டது. இதற்குமேல், சந்தையில் எரிபொருள் கிடைப்பனவு மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஊர்திகளுக்கு எரிபொருளை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட கடுமையான சிரமங்களுக்கு மத்தியிலும் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்காக போக்குவரத்து வசதிகளைத் தொடர்ந்தும் வழங்கியது.

இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தின் முன்னால் காணப்படும் பாதுகாப்பு வேலியின் தோற்றத்தையும் அதன் ஆயுட்காலத்தையும் மேம்படுத்தும் நோக்கில், தேவையான பழுதுபார்த்தல்களும் விசேட பூச்சுடன் கூடிய தீந்தை பூச்சுவேலைகளும் முன்னெடுக்கப்பட்டன.

வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது கட்டடங்களின் முக்கிய பணிகளின் அதன் வழக்கமான பேணலை தொடர்ந்ததுடன் தனது முக்கிய பொறுப்புக்களில் ஒரு பகுதியாக போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் என்பவற்றின் அத்தியாவசியமான ஆதரவுப் பணிகளையும் தொடர்ச்சியாக வழங்கியது.

10. நிதி

நிதித் திணைக்களம், பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள்/ பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் தொடர்பான ஏற்பாட்டு நியதிகள் என்பனவற்றிற்கிணங்க இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் தொழிற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருக்கின்றது. 2002 தொடக்கம் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் கட்டமைப்பு பின்பற்றப்படுகின்றன. நிதித் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல், மத்திய வங்கியின் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் கண்காணித்தல், மத்திய வங்கியின் உள்ளக மற்றும் வெளியகத் தரப்பினருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், கொடையாளர் நிதியங்களை பகிர்ந்தளித்தல் மற்றும் அரச வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்தல், நிதியியல் கொடுக்கல்வாங்கல்களின் உள்ளக அறிக்கையிடலுக்கான முறைமைகளைப் பேணுதல், 16 உள்ளக நிதியங்களின் முதலீட்டுச் சொத்துப் பட்டியலை முகாமை செய்தல், மத்திய வங்கியின் நிலையான சொத்துப் பதிவேட்டினைப் பேணுதல் மற்றும் அலுவலர் கடன்களின் தரவுத்தளத்தைப் பேணுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

10.1 நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல்

அ. மாதாந்த ஐந்தொகை: 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க, அரச வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக 2021 திசெம்பர் மற்றும் 2022 சனவரி - நவெம்பர் காலப்பகுதிக்கான மாதாந்த ஐந்தொகைகள் தயாரிக்கப்பட்டன.

ஆ. காலாண்டு ரீதியான அறிக்கைகள்: இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் செயலாற்றம் மற்றும் நிதியியல் நிலைமை தொடர்பான அறிக்கை நாணயச் சபைக்கு காலாண்டு ரீதியில் சமர்ப்பிக்கப்பட்டன.

இ. வருடாந்த நிதியியல் கூற்றுக்கள்: கணக்குகளைத் தயாரிப்பதற்கான கணக்கீட்டு முறைமைகளும் நடவடிக்கை முறைகளும் 2022 திசெம்பர் இறுதியிலுள்ளவாறான தொடர்பான கணக்கீட்டு நியமங்களுடனும் தேவைப்பாடுகளுடனும் இணங்கிச் செல்வதற்காக இற்றைப்படுத்தப்பட்டன. 2022 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான மத்திய வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் ஆண்டறிக்கையின் பகுதி II இல் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

10.2 வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினை தயாரித்தல்

2023ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் வருடாந்த வரவு செலவுத்திட்டம் (பாதீடு) மற்றும் மூலதன பாதீடு மத்திய வங்கியின் ஒவ்வொரு திணைக்களத்தினதும் உபாயத் திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகள் திட்டங்களுக்கிணங்க "நிகழ்நிலை வரவு செலவுத்திட்ட முறைமை" இனைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் 2023இன் வரவுசெலவுத் திட்டத்திற்கான நாணயச் சபையின் ஒப்புதல் 2022 திசெம்பரில் பெறப்பட்டதுடன் வரவுசெலவுத் திட்டம் 2023இன் முதல் வேலை நாளன்று திணைக்களங்களுக்கு கிடைக்கச் செய்யப்பட்டது. அதேவேளை, வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாட்டின் காத்திரமான கண்காணிப்பினைக் கருத்திற்கொண்டு 2022ஆம் ஆண்டிற்கான காலாண்டு ரீதியான வரவுசெலவுத் திட்டச் செயலாற்றக் கூற்றுக்கள் நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

10.3 உள்ளக மற்றும் வெளியகத் தரப்பினருக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்

அ. ஊழியர் ஊதியங்கள், அலுவலர் கடன்கள், தொழிற் பாட்டுச் செலவினங்கள் போன்ற அனைத்து உள்ளகக் கொடுப்பனவுகளும் 2022இல் நேர இலக்குகளுக்குள் மேற்கொள்ளப்பட்டன.

ஆ. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களுக்கான அனைத்து வெளியகக் கொடுப்பனவுகளும் மத்திய வங்கியின் துணைநில் கட்டளைகளின்கீழ் குறிப்பிடப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டன. 2022ஆம் ஆண்டுப்பகுதியில் மொத்த கொடுப்பனவுகள் 6,876ஆகக் காணப்பட்டதுடன் இதில் 6,746 உள்நாட்டு வழங்குநர்களுக்கானதாகவும் 130 வெளிநாட்டு வழங்குநர்க ளுக்கானதாகவும் காணப்பட்டது.

இ. 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொதுத் திறைசேரி மற்றும் தொடர்பான செயற்றிட்டங்களுக்காக ரூ.665.41 பில்லியன் பெறுமதியான 2,631 பகிர்ந்தளிப்புக்களும் வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவு தொடர்பான ரூ.751.02 பில்லியன் பெறுமதியான 280 தவணைக் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், வெளிநாட்டுக் கடன் பொருட்டு இரண்டு வெளிநாட்டு வங்கிகளுடன் 3 வங்கித்தொழில் ஒழுங்குபடுத்தல்கள் 2022இல் கையொப்பமிடப்பட்டன.

10.4 உள்ளக நிதியங்களின் முகாமை

அ. நிதித் திணைக்களத்தின் மத்திய முதலீட்டு அலகு 16 உள்ளக நிதியங்களை முகாமைசெய்கின்றது. அவை இலங்கை மத்திய வங்கி அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியம் பெற்றவர்களின் 8 ஓய்வூதிய நிதியங்கள், நிதித் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் 4 ஏனைய நிதியங்கள், தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம், அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் 3 நிதியங்கள் என்பனவாகும். அனைத்து நிதியங்களும் நிதித் திணைக்களத்தினால் பொது முதலீட்டுக் கொள்கையொன்றின் கீழ் முதலிடப்படுவதுடன் நிதியம் தொடர்பான உரிமைத் திணைக்களங்கள் அத்தகைய நிதியங்களின் நிருவாகச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. நிதிய முகாமைத்துவ செயற்பாடானது, நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டுக் கொள்கைக் கூற்று/ வழிகாட்டல்கள் மற்றும் உபாயச் சொத்து ஒதுக்கீட்டு வழிகாட்டல்களினால் ஆளுகைப்படுத்தப்படுகின்றது. மேலும், இது சுயாதீனமாகத் தொழிற்படுகின்ற ஒரு முன் அலுவலகம் மற்றும் பின் அலுவலகம் போன்றவற்றை உள்ளடக்குவதுடன், நிதியங்களின் முதலீட்டு நடவடிக்கைகள் துணை ஆளுநரின் தலைமையிலான உள்ளக முதலீட்டுக் கண்காணிப்புக் குழுவினால் கண்காணிக்கப்படுவதுடன், முதலீட்டு நிதியங்களைக் கண்காணித்து ஆலோசனை வழங்குவதற்கான இக்குழு 2022 இல் 12 தடவைகள் சந்தித்துக் கொண்டது. முதலீடுகளின் செயலாற்றமானது தகவல் நோக்கங்களுக்காக நாணயச் சபைக்கு காலாண்டு ரீதியில் அறிக்கையிடப்பட்டன.

ஆ. நிதியங்கள் முக்கியமாக அரச பிணையங்கள், நிலையான வைப்புக்கள், உயர் தரமிடப்பட்ட கம்பனித் தொகுதிக் கடன்கள் மற்றும் குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் என்பனவற்றில் முதலீடு செய்யப்படுகின்றன. 2021ஆம் ஆண்டிற்கான ஆறு ஓய்வூதிய நிதியங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் இந்நிதியங்களின் விதிகளுக்கிணங்க நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. 2022 இறுதியிலுள்ளவாறு, மொத்த நிதியத்தளம் ரூ.173.98 பில்லியனுக்கு அதிகரித்தது.

சொத்துப்பட்டியல் நிலைமை (ரூ.பில்)

திணைக்களம்	31 திசெம்பர் 2022இல் உள்ளவாறான சொத்துப் பட்டியல் பெறுமதி (முதலிடப்பட்ட பெறுமதி)	31 திசெம்பர் 2021இல் உள்ளவாறான சொத்துப் பட்டியல் பெறுமதி (முதலிடப்பட்ட பெறுமதி)
நிதி	84.52	75.27
தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல்	89.39	70.98
பிரதேச அபிவிருத்தி	-	5.38
அலுவலர் பணிகள் முகாமைத்துவம்	0.07	0.06
மொத்தம்	**173.98**	**151.69**

10.5 நிலையான சொத்துக்களின் பதிவேட்டினைப் பேணுதல்

நிதித் திணைக்களம் பொதுப் பேரேட்டு முறைமையின் நிலையான சொத்து மாதிரியிலுள்ள நிலையான சொத்து பதிவேட்டில் மத்திய வங்கியின் நிலையான சொத்துக்களின் அனைத்துப் பதிவுகளையும் பேணுகின்றது. 2022 காலப்பகுதியில் புதிய கொள்வனவுகள், அமைவிடங்களின் மாற்றங்கள், தேய்மானங்கள் மற்றும் அகற்றல்கள் போன்ற அனைத்து மாற்றங்களும் இப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டன. 2022 காலப்பகுதியில் இப்பதிவேடானது 554 கொள்வனவுடனும் 232 பொருட்களின் அகற்றல்களுடனும் இற்றைப்படுத்தப்பட்டது.

10.6 அலுவலர் கடன்களின் தரவுத் தளத்தைப் பேணுதல்

நிதித் திணைக்களம், 2022ஆம் ஆண்டுப்பகுதியில் கடன்களின் அறவிடல் பதிவு செயன்முறையினை வசதிப்படுத்துவதற்காகவும் ஊழியர்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் தகவல்களை வழங்குவதற்காகவும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் கடன் தரவுத் தளத்தை தொடர்ச்சியாக இற்றைப்படுத்தியது. 2022 காலப்பகுதியில் ரூ.2.20 பில்லியன் பெறுமதியான 1,631 கடன்கள் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன.

10.7 ஏனைய தொழிற்பாடுகள் - விலைமனுக் கோரல் செயன்முறை

மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளின்படி, நிதித் திணைக்களமானது, பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவிற்கான அனைத்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் விலைக்கோரல் சபைகளிலும் நிலையான சொத்துக்களின் அகற்றலுக்கான அளவீட்டுச் சபைகளிலும் கலந்து கொண்டது. 2022 காலப்பகுதியில் கொள்வனவுகள் தொடர்பான ஏறத்தாழ 81 விலைக்கோரல் சபைகள் மற்றும் 56 தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில், நிதித் திணைக்களத்தின் அலுவலர்கள் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தினர்.

11. நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள்

நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களமானது நிதியியல் வாடிக்கையாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்களினை மேம்படுத்துதல் மற்றும் நிதியியல் வாடிக்கையாளர்களிற்கு வழங்கப்படும் நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளின் நியாயத்துவம் மற்றும் வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிதியியல் நிறுவனங்களிடையே வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை வலுப்படுத்தும் நோக்கில் 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் நிறுவப்பட்டது.

2022இல், திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்கு முறைப்படுத்தப்படும் நிறுவனங்களின் நிதியியல் வாடிக்கையாளர்கள் அத்தகைய நிறுவனங்களின் சேவை வழங்குதல் மற்றும் வியாபார நடத்தை மீது மேற்கொள்ளும் முறைப்பாடுகள் மற்றும் குறைகளின் ஓர் முக்கிய தொடர்பு மையமாகத் தொழிற்பட்டு வந்தது. ஆண்டுகாலப்பகுதியினுள் திணைக்களமானது மொத்தமாக 5,149 முறைப்பாடுகள் மற்றும் குறைகளினைக் கையாண்டுள்ளதுடன், இது மாதாந்த சராசரியாக 430 முறைப்பாடுகளினைக் கொண்டுள்ளது. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்/ குறைகளின் முக்கிய வகைகளாவன, நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட நிதியியல் வசதிகள் மீதான சலுகைகள், உயர் வட்டி வீத விதிப்பனவு, கடன் இசைவுத் தாமதம் தொடர்புடைய விடயங்கள், வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளின் போது நிதி நிறுவனங்கள் ஆவணங்கள்/ தகவல்களை வழங்காமை மற்றும் அதிகளவான கட்டணங்கள் மற்றும் அறவீடுகளின் விதிப்பனவு என்பனவாகும். தொடர்புடைய நிதியியல் நிறுவனங்கள் முறைப்பாடுகள் மீதான பதிலிறுப்புக்களை வழங்குவதற்கு ஏற்றுக்கொள்ளத்தக்க கால அவகாசத்தினை அனுமதித்த போதிலும் 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியினுள் திணைக்களத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளில் அண்ணளவாக 75 சதவீதமானவை முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று இரண்டு மாதங்களினுள் நிறைவுபடுத்தப்பட்டுள்ளன/ தீர்க்கப்பட்டுள்ளன.

திணைக்கள நடவடிக்கைகளின் ஓர் பகுதியாக, நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் தொடர்பு நிலையத்தினை மேற்பார்வை செய்து வருகிறது. 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியினுள், தொடர்பு நிலையமானது இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கப்பெற்ற 60,000 இற்கும் மேற்பட்ட தொலைபேசி விசாரணைகள் மற்றும் வாய்மூல முறைப்பாடுகளிற்கு பதிலளித்துள்ளது. மேலும், நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களமானது வாடிக்கையாளர் விழிப்புணர்வுகளினை உருவாக்குவதன் ஓர் பகுதியாக நிதியியல் வாடிக்கையாளர்களிற்குக் கிடைக்கத்தக்க வழிகள் மற்றும் அத்தகைய உதவியினை நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்கையில் மேற்கொள்ளப்பட வேண்டிய படிமுறைகள் என்பன பற்றிய ஓர் இணையவழி விளம்பரத்தினை வெளியிட்டுள்ளது. மேலும், திணைக்களமானது பரந்தளவிலான வாடிக்கையாளர்களினை அடையும் பொருட்டு நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு கருத்தரங்குகள் மற்றும் நிகழ்ச்சிகளினை பிரதேச மற்றும் தேசிய மட்டங்களில் நடாத்தியுள்ளது. நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களமானது பன்னாட்டு நிதி கூட்டிணையம் மற்றும் விளம்பர நிறுவன தொழில் வல்லுனர்களின் உதவியுடன் நிதியியல் வாடிக்கையாளர் விழிப்புணர்வினை மையப்படுத்திய ஓர் ஊடகப் பிரசாரத்தினை விருத்தி செய்து வருகின்றதுடன் இது 2023இன் முற்பகுதியளவில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், நிதியியல் நிறுவனங்கள் மூலம் பணிகளை வழங்கும் வாடிக்கையாளர் பாதுகாப்பை நிறுவனமையப்படுத்தும் நோக்கில், அனைத்தையுமுள்ளடக்கிய ஓர் புதிய ஒழுங்கு விதிகளைக் கொண்ட தொகுதியொன்றினை விருத்தி செய்ததன் மூலம் இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிதியியல் நிறுவனங்களுக்கான ஒழுங்கிணைக்கப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்வொழுங்குவிதிகள், சந்தை நடத்தை மேற்பார்வைக்கு வசதியளிக்கின்ற அதேவேளை நிதியியல் வாடிக்கையாளர்கள் தொடர்ந்து முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கான தேவையினை குறைப்பதனை இலக்காகக்கொண்டு, நிதியியல் பணிகளை வழங்குதல்/ பெற்றுக்கொள்ளல் என்பவற்றில் கருத்திற்கொள்ளப்படவேண்டிய விடயப்பரப்புக்கள் பற்றி பணி வழங்குநர்கள் மற்றும் பெறுநர்கள் இருவருக்குமான தெளிவினை வழங்குவதற்கு குறித்த ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையாளர்களுக்கென அதிகாரங்களை வரையறைசெய்யும் என எதிர்பார்க்கின்றன. வரைவு ஒழுங்குவிதிகள் ஆர்வலர் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு தொழில்துறை மற்றும் பொதுமக்களிற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ளதுடன் முடிவான ஒழுங்குவிதிகள் 2023இன் நடுப்பகுதியில் நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

12. நிதியியல் உளவறிதல் பிரிவு

இலங்கையின் பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதலை வசதிப்படுத்தும் குறிக்கோளுடன் 2006 மாச்சில் இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவு தாபிக்கப்பட்டது. இதற்கமைவாக, நிதியியல் உளவறிதல் பிரிவானது நாட்டில் காத்திரமான பணம் தூயதாக்கலுக்கெதிரானதும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் கட்டமைப்பினை தாபிப்பதை வசதிப்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பாகவுள்ளது. 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மீதான சமவாயம், 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்குதலைத் தடுத்தல் சட்டம், மற்றும் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம் போன்ற மூன்று முக்கிய சட்டவாக்கங்களை இது அடிப்படையாகக் கொண்டுள்ளது.

12.1 நிதியியல் உளவறிதலைப் பெறுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பரப்புதல்

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 15ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக, 2022இல் பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுடன் தொடர்புடைய சந்தேகத்துக்கிடமான நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏனைய சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பில் தகவல்களைப் பெறுவதிலும், பகுப்பாய்வு செய்வதிலும் பரப்புவதிலும் நிதியியல் உளவறிதல் பிரிவு அதன் முக்கிய பங்கினை வழங்கியது. மேலும், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வெளிநாட்டு நாணயங்களில் ரூ. 1 மில்லியனுக்கு அதிகமான அல்லது அதற்கு நிகரான வெளிநாட்டு நாணயங்களில் பணக் கொடுக்கல்வாங்கல்களை மற்றும் இலத்திரனியல் நிதிய மாற்றல்களை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள், பங்குத் தரகர்கள் மற்றும் பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குநர்களுக்கு தொடர்ந்தும் அறிவித்தனர். 2022 காலப்பகுதியில், 'லங்காபின்' (Lankafin) அறிக்கையிடல் முறைமையினூடாகவும் அதேபோன்று புதிகாக அறிமுகப்படுத்தப்பட்ட 'பணம் தூயதாக்கலெதிரான' (goAML) அறிக்கையிடல் முறைமையினுடாகவும் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு 7.6 மில்லியன் கொண்ட (தற்காலிகமான) காசு கொடுக்கல்வாங்கல்களையும் 10.8 மில்லியன் (தற்காலிகமான) இலத்திரனியல் நிதிய மாற்றல்களையும் (உள்முக மற்றும் வெளிமுக) அறிக்கையிடல் நிறுவனங்கள் அறிக்கையிட்டிருந்தன. 2023 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில், அனைத்து அறிக்கையிடல் வகைக்குமான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்காக 'லங்காபின்' முறைமையை நிதியியல் உளவறிதல் பிரிவு நிறுத்தியது.

மேலும், நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக, நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு 1,481 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கைகளை அறிக்கையிடல் நிறுவனங்கள் சமர்ப்பித்தன. கிடைக்கப்பெற்ற சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளின் பகுப்பாய்வினை நடாத்திய பின்னர், மேலதிக விசாரணைகளுக்காக சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரிகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கு 419 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் பரவலாக்கப்பட்டன. நிதியியல் உளவறிதல் பிரிவானது கண்காணிப்பின் கீழ் 605 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல்களை வைத்துள்ளதுடன் மேலதிக ஆய்வுகளுக்கும் பகுப்பாய்விற்குமாக 453 சந்தேகத்திற்கிடான கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல்களை வைத்திருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. எஞ்சியுள்ள சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் மேலதிக நடவடிக்கை தேவைப்படாதவையாக வகைப்படுத்தப்பட்டன.

12.2 சட்டக் கட்டமைப்பும் நிறுவனசார் கட்டமைப்பும்

2022 காலப்பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவானது பன்னாட்டு பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் நியமங்களுடன் இணங்கும்வகையில் நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் முறைமையின் காத்திரத்தன்மையை முன்னேற்றும் குறிக்கோளுடன் பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் தொடர்பிலான சட்ட கட்டமைப்பிற்கான சட்டவாக்கத் திருத்தங்களை கொண்டுசேர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. 2023 காலப்பகுதியில் இத்திருத்தங்கள் இறுதிப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றன.

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 15(2) ஆம் பிரிவின் நியதிகளில் உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பயனைக்கொண்டு, 2022 ஆண்டு காலப்பகுதியில், பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான சந்தேகங்களின் அடிப்படையில், 38 தனிப்பட்டவர்களுக்கு உரித்துடைய 136 கணக்குகளினதும் 14 சம்பவங்களுடன்/வழக்குகளுடன் தொடர்புடைய 5 நிறுவனங்களினதும் கொடுக்கல்வாங்கல்களை இடைநிறுத்துவதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவு வழிமுறைகளை மேற்கொண்டது. இதற்கிணங்க, ஆண்டு காலப்பகுதியில் ரூ.96 மில்லியன் கொண்ட நிலுவை இடைநிறுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக, முன்னைய ஆண்டுகளில் இடைநிறுத்தப்பட்ட 78 சம்பவங்களுடன் தொடர்புடைய ஏறத்தாழ 1,000 கணக்குகள் தொடர்பாக விசாரணைகளை நடாத்துவதற்காக சட்ட அமுலாக்கல் முகவராண்மைகள் மேலதிக காலத்தை கோரியதற்கமைவாக ஆண்டு காலப்பகுதியில் இரண்டுமாத தவணைகளுக்கு நீடிக்கப்பட்டன. அறிக்கையிடல் நிறுவனங்களுடன் இணங்கும்வகையில் பணம் தூயதாக்கலெக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதலை வலுப்படுத்தும் பொருட்டு, 2022 காலப்பகுதியில் 4 சுற்றறிக்கைகளை நிதியியல் உளவறிதல் பிரிவு வெளியிட்டது. இவை ஆண்டறிக்கையின் III ஆம் பகுதியில் கிடைக்கப்பெறுகின்றது.

மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவானது காத்திரமான கண்காணிப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல், தளத்திலான மற்றும் தளத்திற்கு வெளியிலான மேற்பார்வையினால் நிதியியல் நிறுவனங்கள் தொடர்பாகவும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்கள் போன்றவற்றின் இணங்குவிப்பினை அதிகரிப்பதற்கு தொடர்ந்து வழிமுறைகளை எடுத்ததுடன் இணங்குவிப்பு மீளாய்வு கூட்டங்களை நடாத்தியது. இதற்கமைவாக, 2022இல், நிதியியல் உளவறிதல் பிரிவானது நிதியியல் நிறுவனங்கள் தொடர்பில் 22 இணைந்த இடர்நேர்வு அடிப்படையிலான தளத்திலான பரீட்சிப்புக்களையும், 3 இடர்நேர்வு அடிப்படையிலான தளத்திலான பரீட்சிப்புக்களையும், 15 உடனடிப் பரீட்சிப்புக்களையும் நடாத்தியது. இதற்கு மேலதிகமாக, பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்கள் தொடர்பில் 17 இடர்நேர்வு அடிப்படையிலான தளத்திலான பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டன. மேற்குறிப்பிட்ட பரீட்சிப்புக்களுக்கு அப்பால், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்கள் தொடர்பில் 5 கருத்தியல் ரீதியான மீளாய்வுகளும் நடாத்தப்பட்டன.

2022இல் நடாத்தப்பட்ட பரீட்சிப்புக்களை அடிப்படையாகக்கொண்டு, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தை மற்றும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகளை மீறுதல் தொடர்பாக 6 உரிமம்பெற்ற வங்கிகள் தொடர்பில் ரூ.11.75 மில்லியன் தொகை நிதியியல் அபராதங்களை நிதியியல் உளவறிதல் பிரிவு விதித்தது. மேலும், நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம் மற்றும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகள் மற்றும் அதன்கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் ஏற்படுகளுடன் இணங்காமை தொடர்பில் நிதியியல் நிறுவனங்களுக்கு ஆண்டுகாலப்பகுதியில் 8 காரணம் காட்டும் கடிதங்களும் 11 எச்சரிக்கை கடிதங்களும்

வழங்கப்பட்டன. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவானது 2022 காலப்பகுதியில் 17 பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்கள் நிறுவனங்களுக்கு அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை அறிவிப்பதற்கு வழிமுறைகளை மேற்கொண்டது. பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதலின் இணங்குவிப்பிற்கான பல்வேறு பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்கள் நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்கள் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மேற்பார்வை மேலும் வலுப்படுத்தப்பட்டது.

12.3 பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கராவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் தொடர்புடைய கருமங்கள் மீதான உள்நாட்டு ஒத்துழைப்பையும் பன்னாட்டு ஒத்துழைப்பையும் வலுப்படுத்தல்

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளுக்கமைவாக, உள்நாட்டில் அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் நிறுவனம் அல்லது முகவராண்மையுடன் தகவல்களைப் பரிமாற்றிக்கொள்வதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை கைச்சாத்திட முடியும். 2022 காலப்பகுதியில், லொசோதோ இராச்சியத்தின் நிதியியல் உளவறிதல் பிரிவு, யுனிடேட் டி இன்போர்மாகோ பினான்சிரா டி திமோர்-லெஸ்டே (திமோர்-லெஸ்ட்டின் நிதியியல் உளவறிதல் பிரிவு) மற்றும் உகாண்டாவின் நிதியியல் உளவறிதல் பிரிவுகளுடன் நிதியியல் உளவறிதல் பிரிவு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதை ஆரம்பித்தது.

நிதியியல் நடவடிக்கை பணிக்குழுவின் கண்காணிப்பு அமைப்பான பணம் தூயதாக்கல் தொடர்பில் ஆசிய பசுபிக் குழுவின் வருடாந்த முழுநிறைவுக் கூட்டம் 2022 யூலையில் கலப்பு கூட்டமாக நடாத்தப்பட்டதுடன் நிதியியல் உளவறிதல் பிரிவின் அலுவலர்கள் முழுநிறைவு கூட்டங்களில் மெய்நிகர் வழியூடாக பங்கேற்றனர். மேலும், பிரதானமாக உறுப்பினர்களின் பரஸ்பர மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் பின்தொடர் அறிக்கைகளை கலந்துரையாடுவதற்கு பல்வேறு மெய்நிகர் பரஸ்பர மதிப்பீட்டு குழுக் கூட்டங்களில் நிதியியல் உளவறிதல் பிரிவின் அலுவலர்கள் பங்கேற்றனர். மேலும், 2022 யூலையில் இடம்பெற்ற மெய்நிகர் மதிப்பீட்டு குழுக்களில் 7ஆவது இலங்கையின் பின்தொடர் அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது. இங்கு இலங்கை ஏதேனும் விதந்துரைப்பிற்கான தரமுயர்த்தல்களுக்கு கோரப்படவில்லை. இதற்கமைவாக, 2022இன் இறுதியளவில், 40 நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் பரிந்துரைகளில், இலங்கையின் இணங்குவிப்பு நிலைகள், 7 இணக்கமானவை, 25 பெருமளவில் இணக்கமானவை, 7 பகுதியளவில் இணக்கமானவை அத்துடன் 1 இணக்கமின்மை என்ற வகையில் காணப்பட்டன. முழுநிறைவு கூட்டத்தில், இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவானது ஆசிய பசுபிக் குழுவின் ஆளுகை குழுவின் தென்னாசிய துணைப் பிராந்திய பிரதிநிதியாக ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு தெரிவுசெய்யப்பட்டது.

நிதியியல் உளவறிதல் பிரிவானது விசாரணைகளைக் கொண்டு நடாத்துவதற்கும் அதன் விசாரணைகள் தொடர்பில் புலனாய்வுகளைத் திரட்டுவதற்காக உறுப்பு நாடுகளுடன் கூட்டிணைவதற்கும் 166 உறுப்பினர்களை உள்ளடக்கிய உலகளாவிய நிதியியல் உளவறிதல் பிரிவுகளின் சங்கமான எக்மன்ட் குழுமத்தின் உறுப்பினர்களிடமிருந்து உதவியினைப் பெறுகின்றது. 2022 காலப்பகுதியில், நிதியியல் உளவறிதல் பிரிவானது இணைத்தரப்பு நிதியியல் உளவறிதல் பிரிவுகளிலிருந்து 27 கோரிக்கைகளுக்கு பதிலிறுத்தியதுடன் முன்னெடுக்கப்படுகின்ற விசாரணைகளுடன் தொடர்புடைய தகவல்களைப் பகிர்வதற்காக இணைத்தரப்பு நிதியியல் உளவறிதல் பிரிவுகளின் 35 கோரிக்கைகளையும் முன்வைத்தது. 2022ஆம் ஆண்டிற்கான எக்மன்ட் முழுநிறைவுக் கூட்டமானது நேரடியாக இடம்பெற்றது. எவ்வாறாயினும், நிதியியல் உளவறிதல் பிரிவின் அலுவலர்களுக்கு வெளிவாரி சூழ்நிலைகள் காரணமாக முழுநிறைவு கூட்டங்களில் பங்கேற்க முடியவில்லை.

12.4 பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் பற்றிய தேசிய இடர்நேர்வு மதிப்பீடு

நிதியியல் நடவடிக்கை பணிக்குழுவின் விதந்துரைத்தல் 1 உடன் இணங்கும் வகையில், உலக வங்கியிடமிருந்தான தொழில்நுட்ப உதவியுடன் பணம் தூயதாக்கல்/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பில் தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டை நிதியியல் உளவறிதல் பிரிவு தொடர்ந்தும் நடாத்தியது. தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டின் பெறுபேறு 2023இன் முதலரைப்பகுதியில் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் அடுத்த தேசிய பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் கொள்கை தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டு பெறுபேற்றுக்கமைவாக உருவாக்கப்படும்.

12.5 ஆர்வலர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதலுடன் தொடர்புடைய விழிப்புணர்வினை அதிகரிக்கின்ற தொடர்ச்சியான முயற்சிகளில், 2022 ஆண்டு காலப்பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவானது நிதியியல் நிறுவனங்கள், பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்கள், சட்ட அமுலாக்கல் முகவராண்மைகள் மற்றும் அறிக்கையிடும் அதிகாரிகள் ஆகியோரில் 2,250இற்கு மேற்பட்ட பங்கேற்பாளர்களுக்கு வசதியளித்து 24 விழிப்பூட்டல்/பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்து வள ஆதரவினை வழங்கியது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் நேரடியாகவும் இணையவழி தளத்தினூடாகவும் நடாத்தப்பட்டன.

13. வெளிநாட்டுச் செலாவணி

2017ஆம் ஆண்டின் 20ஆம் நாளன்று நிறுவப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம், இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணியின் சரியான ஊக்குவிப்பினையும் ஒழுங்குவிதிகளையும் உறுதிப்படுத்துவதற்கு 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக, அரசாங்கத்தின் முகவர் என்ற ரீதியில் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களைத் தொடர்ந்தும் நிறைவேற்றியது. வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு கொள்கை, மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள், விசாரணைகள் மற்றும் புள்ளிவிபரவியல் கண்காணிப்பு மற்றும் கம்பனிப் பணிகள் ஆகிய நான்கு பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகள் வருமாறு:

(அ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரினால் விடுக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் வசதியளித்தல்.

(ஆ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளில் மாண்புமிகு நிதி அமைச்சரினால் (அமைச்சர்) விரித்துரைக்கப்பட்டவாறு வெளிநாட்டுச் செலாவணிக் கையாளல்களை மேற்கொள்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களையும் ஏனைய ஆட்களையும் நியமித்தல்.

(இ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு பணிப்புரைகளை விடுத்தல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளின் நியதிகளில் அவர்கள் இணங்கியொழுகுவதனைக் கண்காணித்தல்.

(ஈ) வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளையும் கொடுக்கல்வாங்கல்களையும் கொண்டு நடத்துவதற்காக ஒழுங்குவிதிகளையும் கட்டளைகளையும் வடிவமைப்பதன் மூலமும் பணிப்புரைகளை விடுப்பதன் மூலமும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.

(உ) ஏற்றுமதிப் பெறுகைகளைக் கண்காணிக்கின்ற முறைமையினூடாகப் பெறப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி, நாணய விதிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட விதிகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் இலங்கைக்கு ஏற்றுமதிப் பெறுகைகள் அனுப்பப்படுவதனைக் கண்காணித்தல் மற்றும் அவ்வாறு இணங்கிக்கொள்ளாமைகளுக்கெதிராக ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

(ஊ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பொதுவான அனுமதிகளினால் உள்ளடக்கப்படாத, குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கான கோரிக்கைகளைப் பரிசீலித்தல்.

(எ) வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஏற்படும் அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் தற்போதுள்ள கொள்கைகளின் காத்திரமான தன்மைகளை மீளாய்வு செய்வதுடன் புதிய கொள்கைகளுக்கான தேவையை அடையாளம் காண்பதுடன் அத்தகைய புதிய கொள்கைகளைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தல்.

(ஏ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கிக்கொள்ளாதவை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுதல்.

(ஐ) வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு தெளிவுபடுத்தல்களை வழங்குதல் மற்றும் மத்திய வங்கியின் அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளுக்காக வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கை களுடன் தொடர்புபட்ட தொடர்பான பிரிவுகளைத் தயாரித்தல்.

2022ஆம் ஆண்டுப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணித் திணைக் களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய நடவடிக்கைகளின் தொகுப்பு கீழே தரப்படுகிறது.

13.1 புதிய ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளின் வழங்கலுக்கு வசதியளித்தல்

இவ்வாண்டுப்பகுதியில், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினை தளர்த்துவதற்காகவும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு நாணய திரவத்தன்மைக்கு ஆதரவளிப்பதற்காகவும் மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றைய பல வழிமுறைகளுடன் சேர்த்து அவசியமானவிடத்து வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளில் ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளை விடுத்தது. முக்கியமான சில ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகள் கீழே காட்டப்பட்டுள்ளதுடன் விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன.

i. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ், ஆரம்பத்தில் குறிப்பிட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்காக வெளிமுகப் பணவனுப்பல்களை இடைநிறுத்துவதற்காகவும் அவற்றின் மூல வரையறைகளை விதிப்பதற்காகவும் விடுக்கப்பட்ட கட்டளை, செலாவணி வீத உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்காக இவ்வாண்டுப்பகுதியில் மேலும் நீடிக்கப்பட்டது.

ii. நாட்டிற்குள் வெளிநாட்டுச் செலாவணியின் உட்பாய்ச்சலைக் கவர்வதற்காகக் காணப்படும் உள்ளார்ந்த வளத்தினைக் கவனத்திற் கொண்டு, சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறப்பது தொடர்பான ஒழுங்குவிதிகள் 2023 ஏப்பிறல் 07ஆம் திகதி வரை 12 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்ட வேளையில், அத்தகைய நிதியினை நாட்டிற்குள் பிடித்துவைத்திருப்பதனை ஊக்குவிப்பதற்காக, ஏற்கனவே திறக்கப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகளை அவை திறக்கப்பட்ட திகதியிலிருந்து உயர்ந்தபட்சம் மேலும் 36 மாதங்களுக்கு நீடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

iii. இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதியும் ஆட்களின் உடமையிலுள்ள வெளிநாட்டு நாணயத்தினை வங்கித்தொழில் முறைமைக்குள் ஈர்த்துக் கொள்ளும் நோக்குடன் உடமையில் வைத்திருக்கக்கூடிய வெளிநாட்டு நாணயத்தின் மீதான உயர்ந்தபட்ச வரையறையினை ஐ.அ.டொலர் 15,000 இலிருந்து ஐ.அ.டொலர் 10,000 இற்குக் குறைக்கின்ற விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்று விடுக்கப்பட்டது.

iv. நீண்ட கால வதிவிட விசாவை எதிர்பார்க்கின்ற, இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களுக்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் தங்க சுவர்க்க விசா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிக்கின்ற விதத்தில் 2022 நவெம்பர் தொடக்கத்தில் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

v. பொருட்களின் தயாரிப்பிற்கான மூலப்பொருட்களின் இறக்குமதிக்கான கொடுப்பனவுகளுக்கு வசதியளிக்கின்ற விதத்தில், 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள், வெளிநாட்டிலுள்ள அவற்றின் தாய்க் கம்பனிகளிலிருந்து அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிகளின் அதே குழுமத்திலுள்ள கம்பனிகளிலிருந்து குறுங்கால கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதியளிக்கின்ற விதத்தில் ஒழுங்குவிதிகளும் பணிப்புரைகளும் விடுக்கப்பட்டன.

vi. கொழும்பு துறைமுக நகர சிறப்பு பொருளாதார வலயத்திலுள்ள முதலீட்டாளர்களும் முதலீட்டினைப் பெறுகின்றவர்களும் கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீட்டினை மேற்கொள்வதற்காக வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கு அனுமதியை வழங்குகின்ற விதத்தில் ஒழுங்குவிதிகளும் பணிப்புரைகளும் விடுக்கப்பட்ட வேளையில், கொழும்பு துறைமுக நகரத்திலுள்ள கம்பனிகளின் ஊழியர்கள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் வதிவோர் பொருட்கள் மற்றும் பணிகளை வழங்குவது தொடர்பில் கொழும்பு துறைமுக நகர கம்பனிகளிலிருந்து கொடுப்பனவுகளைப் பெறுவதற்கும் இயலுமைப்படுத்தப்பட்டனர்.

vii. வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த செலாவணி வீதங்கள் வழங்கப்படுவதனை தடைசெய்யும் விதத்தில் (வெளிநாட்டு நாணயங்களுக்கு உயர்ந்த வாங்கும் வீதங்களை வழங்குவது தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் இணங்கி நடக்காமையினைக் கருத்திற்கொண்டு) மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு (அதாவது நாணய மாற்றுநர்களுக்கு) பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

மேலும், இவ்வாண்டுப்பகுதியில், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் அதிகாரமளிக்கப்படாத வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கான வலுவூட்டலைப் பெற்றுக்கொள்வது உட்பட, சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அடையாளம் காணப்பட்ட பல்வேறுபட்ட பிரச்சனைகள் மற்றும் கரிசனைகள் தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலான திருத்தங்களுக்கான முன்மொழிவுகளில் ஈடுபட்டிருந்தது.

13.2 வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களுக்கான அனுமதியினை வழங்குதல்

அ) கீழே அட்டவணை II - 13இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சிறப்பு அனுமதிகள்.

அட்டவணை II - 13

நோக்கம்	ஒப்புதல்களின் எண்ணிக்கை	பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன்
இலங்கைக்கு வெளியே வதிபவர்கள் சார்பில் வங்கி/ நிறுவன உத்தரவாதங்களை வழங்குவதற்கான வதியும் கம்பனிகள்	2	29.1
சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறத்தல்	29	ஏற்புடையதல்ல
வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பொதுவான அனுமதிகளில் உள்ளடக்கப்படாத சில பல்வகை வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களைச் செயன்முறைப்படுத்துவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்/வதியும் கம்பனிகள்	101	ஏற்புடையதல்ல

ஆ) மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு நாணய மாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் அத்தகைய தொழிற்பாடுகளை நிறுத்துதல் மற்றும் கைவிடுதல்

i) வெளிநாட்டு நாணயத் தாள்களை வாங்குவதற்கும் மாற்றுவதற்குமாக 2022ஆம் ஆண்டுப்பகுதியில் 11 புதிய நாணய மாற்று அனுமதிப் பத்திரங்கள் சுற்றுலாவிடுதிகளுக்கு வழங்கப்பட்டன.

ii) 1 நாணய மாற்று அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டதுடன் 1 தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. மேலும், இவ்வாண்டுப்பகுதியில் 02 பட்டியலிடப்பட்ட நிதிக் கம்பனிகள் அவற்றின் நாணய மாற்றுத் தொழிற்பாடுகளை நிறுத்திக் கொண்டன.

iii) நிறுவனங்களின் வகைகளும் நாணய மாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களின் வகைகளும் அட்டவணை II-14 தரப்பட்டுள்ளன.

அட்டவணை II-14

2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு நாணய மாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்

நிறுவனத்தின் வகை	அனுமதிக்கப்பட்ட வியாபாரம்	வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை
நாணய மாற்று வியாபாரத்தில் தனியே ஈடுபட்டுள்ள வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள் (நாணய மாற்றுநர்கள்)	வெளிநாட்டு நாணயக் கொள்வனவு மற்றும் பரிமாற்றல்	59*
	வெளிநாட்டு நாணயக் கொள்வனவு, விற்பனை மற்றும் பரிமாற்றல்	
உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்	வெளிநாட்டு நாணயக் கொள்வனவு, விற்பனை மற்றும் பரிமாற்றல்	06
சுற்றுலா விடுதிகள்	வெளிநாட்டு நாணயக் கொள்வனவு	14
மொத்தம்		79

* 59 கம்பனிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இது 69 நாணய மாற்று நிலையங்களை/ கிளைகளை உள்ளடக்குகின்றது. 69 நிலையங்களுள், வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு செய்வதற்கும் பரிமாற்றல் செய்வதற்கும் 58 நிலையங்கள் அனுமதிக்கப்பட்ட அதேவேளையில், எஞ்சிய 11 நிலையங்கள் வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு, விற்பனை மற்றும் பரிமாற்றல் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டன.

இதன்படி, 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு, 26 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் எம்எம்பீஎல் மணி ரான்ஸ்வர் (பிறைவேற்) லிமிடெட் (நாணய மாற்றல் பணியில் ஈடுபடுகிறது) மற்றும் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (வெளிநாட்டுச் செலாவணியில் கொடுகடன் உத்தரவாதங்களை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது) என்பன உட்பட 81 மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களும் தொழிற்பாட்டிலிருந்தனர். அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினதும் (அதாவது அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியினைக் கையாள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தொடர்பான அதிகாரவளிப்பில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாள்வதற்கு அனுமதிக்கப்பட்ட உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்) மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களினதும் (கிளைகள் உட்பட) பட்டியல் முறையே இணைப்பு II-2 மற்றும் இணைப்பு II-3 இல் தரப்பட்டுள்ளன.

இ) புலம்பெயர்ந்தோர் நிதிகளை மாற்றல் செய்தல்

புலம்பெயர் இலங்கையர்களுக்கான புலம்பெயர் படிகளை அனுப்பி வைக்கும் நோக்கத்திற்காகவும் இலங்கையரல்லாதவர்களுக்கு மரபு வழியாக கிடைத்த நிதிகளின் வெளிமுகப் பணவனுப் பல்களுக்கு வசதியளிப்பதற்காகவும் இவ்வாண்டுப்பகுதியில் 215 மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளைத் திறப்பதற்கு உரிமம்பெற்ற வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர். எனினும், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட கட்டளையின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட இடைநிறுத்தல் காரணமாக, இம்மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினூடாக மாற்றல் செய்யப்பட்ட தொகை ஐ.அ.டொலர் 1.26 மில்லியனாக மட்டுமே காணப்பட்டது,

13.3 வதியும் முதலீட்டாளர்களுக்கு இசைவுக் கடிதங்களை வழங்குதல்

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம், இவ்வாண்டுப்பகுதியில், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வதியும் முதலீட்டாளர்களுக்கெதிராக விசாரணைகள் எதுவும் நிலுவையில் இல்லை என்பதனை உறுதிப்படுத்துகின்ற 12 இசைவுக் கடிதங்களை அத்தகைய முதலீட்டாளர்களுக்கு வழங்கியிருப்பதன் மூலம் அமைச்சரினால் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் அனுமதிக்கப்பட்டவாறு வெளிமுக முதலீடுகளைச் செய்வதற்கு அவர்கள் இயலுமைப்படுத்தப்பட்டனர்.

13.4 வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களை கண்காணித்தல் மற்றும் விசாரணை செய்தல்

i. அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில் அத்தகைய வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது விதிக்கப்பட்ட அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்கிணங்க அவர்களினால் பேணப்படும் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீதான தகவல்களை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். மேலும், நாணய விதிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட, திருத்தப்பட்டவாறான (விதிகள்) 2022ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு அனுப்புகின்ற விதிகளின் நியதிகளில், அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு அனுப்புதல் மற்றும் அவ்வாறு இலங்கைக்கு அனுப்பப்பட்ட பெறுகைகளை, குறித்துரைக்கப்பட்டவாறு இலங்கை ரூபாவிற்கு

மாற்றுதல் தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். இத்தகவல்கள் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால் பகுப்பாய்வு செய்யப்பட்டு கண்காணிப்பு, ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் கொள்கை வகுப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

ii. மேலும், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் ஏற்றுமதியாளர்களும் விதிகளுக்கு இணங்கிச் செல்கின்றார்களா என்பதனை அடையாளம் காண்பதற்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடம் பல தலத்திலான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், தேவையானவிடத்து நிவாரண வழிமுறைகள் அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

iii. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ், விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் மற்றும் கட்டளைகளுடன் இணங்கிச் செல்லாமை தொடர்பாக, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் மற்றும் ஏனைய ஆட்கள் தொடர்பில் 47 புதிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

iv. பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் மூலம் 2022 இற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட 17 விசாரணைகளையும் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட 23 விசாரணைகளையும் உள்ளடக்கிய 40 விசாரணைகள் முடித்து வைக்கப்பட்டன.

v. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் தொடர்பான விடயங்கள் தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிபுணத்துவச் சான்றுகள்/ உறுதிச்சான்றுகள் வழங்கி வைக்கப்பட்டதன் மூலம் வழக்காடல்களிலும் நீதிமன்ற விசாரணைகளிலும் சட்டத்தினை நடைமுறைக்கிடும் அதிகாரிகளுக்கு உதவியளிக்கப்பட்டது.

13.5 ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணிப்பு முறைமை

2021இல், ஏற்றுமதிப் பெறுகைகள் நாட்டிற்குள் அனுப்பப்படுவதனை கண்காணிப்பதற்காக, தகவல் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்காக தொழிற்பாட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இதன் விளைவாக, இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினதும் இலங்கை சுங்கத்தினதும் ஒத்துழைப்புடன் 2022 யூனில் தன்னியக்கப்படுத்தப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணிப்பு முறைமையொன்று அபிவிருத்தி செய்யப்பட்டு நடைமுறைக்கிடப்பட்டது. ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணிப்பு முறைமையின் பிரதான நோக்கம் யாதெனில் நாட்டிலிருந்தான அனைத்து பொருட்கள் ஏற்றுமதிகளும் தரவுத்தளத்திற்குள் உள்ளடக்கப்பட வேண்டுமென்பதும் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குள் அனுப்பி வைப்பது தொடர்பான விதிகளுக்கிணங்க ஏற்றுமதிப் பெறுகைகள் நாட்டிற்குள் அனுப்பப்படுவதனைக் கண்காணிப்பதுமேயாகும். ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணிப்பு முறைமை ஏற்றுமதித் தகவல்கள் இலங்கைச் சுங்கத்தினால் வழங்கப்பட்ட வெப்தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்குள் அனுப்புகின்ற விபரங்கள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் முறைமைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. இதற்கமைய, ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணிப்பு முறைமை, நாட்டிற்குள்வரும் ஏற்றுமதிப் பெறுகைகளின் பணவனுப்பல்களின் கண்காணிப்பினை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

13.6 வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் தொடர்பான விழிப்புணர்வை அதிகரித்தல்

இவ்வாண்டுப்பகுதியில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் ஆர்வலர்களுக்காக தற்பொழுதுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பில் ஒன்பது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும், வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகள் தொடர்பில் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக பத்து பத்திரிகை வெளியீடுகள் விடுக்கப்பட்டன. வெளிநாட்டுச் செலாவணிச் சட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பான பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் அலுவல்சார் வெப்தளம் (www.dfe.lk) இற்றைப்படுத்தப்பட்ட வேளையில், திணைக்களம், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விசாரணைகளுக்கான தெளிவுபடுத்தல்களையும் தொடர்ந்தும் வழங்கியது.

இணைப்பு II-2
2022 திசெம்பர் 31இலுள்ளவாறான அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் பட்டியல்

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்	
1	அமானா பாங்க் பிஎல்சி
2	இலங்கை வங்கி
3	பாங்க் ஒவ் சைனா லிமிடெட்
4	கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்
5	சிற்றி பாங்க் என்.ஏ
6	கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
7	டொய்ச் பாங்க் ஏ ஜி
8	டிஎவ்சிசி பாங்க் லிமிடெட்
9	ஹபிப் பாங்க் லிமிடெட்
10	ஹற்றன் நசனல் பாங்க் பிஎல்சி
11	இந்தியன் வங்கி
12	இந்தியன் ஓவசீஸ் பாங்க்
13	எம்சிபி பாங்க் லிமிடெட்
14	நஷனல் டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி
15	நேஷன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
16	பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
17	மக்கள் வங்கி
18	பப்ளிக் பாங்க் பெர்ஹெட்
19	சம்பத் பாங்க் பிஎல்சி
20	செலான் பாங்க் பிஎல்சி
21	ஸ்ரான்டேர்ட் சார்ரட் பாங்க்
22	ஸ்ரேட் பாங்க் ஒவ் இந்தியா
23	த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
24	யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்	
25	தேசிய சேமிப்பு வங்கி
26	சணச டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி

இணைப்பு II-3
2022 திசெம்பர் 31இல் உள்ளவாறான மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் பட்டியல்

வெளிநாட்டு நாணயத்தைக் கொள்வனவு மற்றும் பரிமாற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்	
நாணய மாற்று நிலையங்கள்	
1	அப்தீன் மணி சேஞ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட்
2	அபிலாஸ் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

3	ஆரியவன்ச என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிடெட்
4	அருணா பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட்*
5	ஏசியன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்
6	பிரசிகா கிராமின் (பிறைவேற்) லிமிடெட்*
7	புள்ளியன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்
8	கெப்பிட்டல் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்
9	சென்றல் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்
10	கொழும்பு மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 01
11	கொழும்பு மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 06
12	தெடிகம குறூப் (பிறைவேற்) லிமிடெட்
13	டேற்றா எக்ஸ்சேஞ் இன்ரநஷனல் (பிறைவேற்) லிமிடெட்
14	தயா ஒதோரைஸ்ட் மணி சேஜ்சேர் (பிறைவேற்) லிமிடெட்
15	கோல் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - காலி
16	கோல் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - காலி துறைமுகம்
17	ஜோர்ஜ் மைக்கல் ஹோல்டிங்ஸ் (பிறைவேற்) லிமிடெட்
18	குளோபல் விலேஜ் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்
19	கோல்டன் மணி சேஜ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட்
20	கோல்ட் லங்கா ஜுவல்லரி (பிறைவேற்) லிமிடெட்
21	ஹய்வா ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (பிறைவேற்) லிமிடெட்
22	இன்ரநஷனல் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்
23	ஜேயஸ் இன்வெஸ்ட்மென்ற் லிமிடெட்
24	ஜெயா பொறக்ஸ் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்*
25	கமல் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிடெட்*
26	கெயிசர் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்
27	குடாமடு மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்*
28	எம்.பி மணி சேஞ்சேர் (பிறைவேற்) லிமிடெட்
29	மாருதி மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - யாழ்ப்பாணம்
30	மயூரி மணி சேஞ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட்
31	மிட்னா மினி மார்க்கட் (பிறைவேற்) லிமிடெட்*
32	மிலானோ மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்
33	நர்மதா கோல்ட் சென்ரர் (பிறைவேற்) லிமிடெட் - யாழ்ப்பாணம்
34	நர்மதா கோல்ட் சென்ரர் (பிறைவேற்) லிமிடெட் - கிளிநொச்சி
35	நியு லங்கா கோல்ட் ஹவுஸ் (பிறைவேற்) லிமிடெட்*
36	நியு நட்டாஷா (பிறைவேற்) லிமிடெட்
37	நியு றீகல்ஸ் மணி சேஞ்சேர் (பிறைவேற்) லிமிடெட்
38	றபீக் ஜெம்ஸ் (பிறைவேற்) லிமிடெட்*
39	றிம்ஹா ஜுவல்லரி (பிறைவேற்) லிமிடெட்*
40	றிவின்டு என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிடெட்
41	றோயல் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 01
42	றோயல் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 06
43	றோயல் மணி மார்ட் (பிறைவேற்) லிமிடெட் - அளுத்கம
44	றோயல் மணி மார்ட் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 01
45	சலாக்கா ரஸ்ட் இன்வெஸ்ட்மென்ற் (பிறைவேற்) லிமிடெட்*
46	சாரங்கா மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்*
47	சிபாஸ் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்
48	சொர்ணம் பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட்*
49	சுவிஸ் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 01
50	சுவிஸ் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 06
51	தாமஸா பொரெக்ஸ் (பிறைவேற்) லிமிடெட்*
52	தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 02 - கொழும்பு சிற்றி சென்ரர்
53	தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 02 - வன் கோல்பேஸ் மோல்
54	தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - கண்டி
55	யுனிக் பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட்
56	வசந்தாஸ் இன்ரநஷனல் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்*
57	வெஸ்ரேன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்
58	வின்சோர் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்
வெளிநாட்டு நாணயத்தைக் கொள்வனவு, விற்பனை மற்றும் பரிமாற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்	
59	அர்ஜுனா ஜுவலரி (பிறைவேற்) லிமிடெட்
60	சிட்டி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்
61	கிறவுன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்
62	தேவி பொரெக்ஸ் (பிறைவேற்) லிமிடெட்
63	ஜுவல் லங்கா மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்
64	மாருதி மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 06
65	மெட்ரோ பொரெக்ஸ் (பிறைவேற்) லிமிடெட்
66	புஸ்பா மணி சேஞ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட்
67	ரவி பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட்
68	தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்
69	யுனிவெர்சல் மணி சேஞ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட்*
உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள்	
70	ஏசியா அசற் பினான்ஸ் பிஎல்சி
71	சிற்றிசன்ஸ் டெவலப்மென்ற் பிசனஸ் பினான்ஸ் பிஎல்சி
72	லங்கா கிரடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட்
73	எல்பீ பினான்ஸ் பிஎல்சி
74	செங்கடகல பினான்ஸ் கம்பனி பிஎல்சி
75	சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
வெளிநாட்டு நாணயத்தைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்	
சுற்றுலா விடுதிகள்	
76	பேள் சிற்றி ஹோட்டல்
77	சங்கிரி-லாஸ் அம்பாந்தோட்டை றிசோட் அன்ட் ஸ்பா
78	சங்கிரி-லா ஹோட்டல் கொழும்பு
79	சினமன் றெட் கொழும்பு
80	சினமன் சிற்றாடல் கண்டி
81	சினமன் லொட்ஜ் ஹபரண
82	ஹபரண விலேஜ் - சினமன்
83	றின்கோ புளு - சினமன்
84	சினமன் பென்தோட்ட பீச்
85	ஹிக்க ரான்ஸ் - சினமன்

86	சினமன் பே பேருவல
87	சினமன் கிறான்ட்
88	சினமன் லேக்சைட்
89	சினமன் வைல்ட் யால
ஏனைய நிறுவனங்கள்	
90	எம்.எம்.பீ.எல்.மணி ரான்ஸ்வர் (பிறைவேட்) லிமிடெட் (உள்நாட்டு நன்மைபெறுநர்களுக்கு இலங்கை ரூபாவில் பகிர்ந்தளிப்பதற்காக வெளிநாட்டு நாணயத்தில் உள்முக பணவனுப்பல்களை வழிப்படுத்துவதற்காக மாத்திரம் அனுமதிக்கப்பட்டது)
91	இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (ஏற்றுமதியாளர்களின் பேரில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் முன்/பின் கப்பற்படுத்தல் கொடுகடன் உத்தரவாதங்களை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டது)
*	இந் நிறுவனங்கள் 2023ஆம் ஆண்டில் நாணய மாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

14. வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல்

நாட்டிற்குள் தொழிலாளர் பணவனுப்பல்களின் உட்பாய்ச்சல்களை வசதிப்படுத்தி நெறிப்படுத்துகின்ற அதேவேளை தொழிலாளர் புலம்பெயர்தலினதும் தொழிலாளர் பணவனுப்பல்களினதும் முழுமையான ஆற்றலுக்குச் செயல்வடிவம் கொடுப்பதை நோக்கி பணியாற்றுவதற்காக வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களம் தாபிக்கப்பட்டது. நிர்ணயித்த இலக்குகளை அடைவதில் வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களமானது 2022ஆம் ஆண்டிலும் 2023ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியிலும் வெளிநாட்டுப் பணவனுப்பல் துறையிலுள்ள ஏனைய தொடர்பான அதிகாரசபைகளுடன் உறவைப் பேணுவதனூடாக வாயிலாக பின்வருகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

14.1 புலம்பெயர் தொழிலாளர்களுக்கான பண அடிப்படையிலமைந்த பணமல்லாத ஊக்குவிப்புக்கள்

(அ) உரிமம்பெற்ற வங்கிகளால் பேணப்படும் ரூபாக் கணக்குகளிற்கு பணத்தை அனுப்புகின்ற போது அல்லது கரும பீடத்தில் பணத்தை பெற்றுக்கொள்ளுகின்ற போது ரூ. 20,000 தொகைக்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு பரிமாற்றலுக்கும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்ற பரிமாற்றல் கிரயங்களுக்கு ரூ. 1000 வரையான மீளச்செலுத்துவதற்கான ஊக்குவிப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்நோக்கில், இத்திட்டத்தை வடிவமைத்து நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் ஸ்டேட் பாங்க் ஒப் பாகிஸ்தான், வெளிநாட்டில் அமைந்துள்ள புலம்பெயர் தொழிலாளர் அமைப்புக்கள், வெளிநாட்டில் அமைந்துள்ள பரிமாற்றலில் ஈடுபடும் நிறுவனங்கள், இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் என்பவற்றுடன் வெளிநாட்டுப் பணவனுப்பல் வசதிப்படுத்தல் திணைக்களம் கலந்துரையாடல்களை மேற்கொண்டது. இத்திட்டம், 2022 பெப்புருவரி 01 தொடக்கம் தொழிற்பாட்டில் உள்ளது.

(ஆ) புலம்பெயர் தொழிலாளர்களுக்கென மேலதிக தீர்வையற்ற கொடுப்பனவொன்றை அறிமுகப்படுத்துவதற்கான திட்டம் வடிவமைக்கப்பட்டது. இத்திட்டமானது புலம்பெயர் தொழிலாளர்கள் தமது வருவாய்களை முறைசார் வழிகளூடாக அனுப்புவதற்கு அவர்களை ஊக்குவித்து நாட்டிற்குள் படுகடன் அல்லாத வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலினுடைய உறுதிப்பாட்டிற்கும் நடுத்தரகால வளர்ச்சிக்கும் வசதியளிக்கின்றது. இத்திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதலளித்ததுடன் அண்மைய எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(இ) புலம்பெயர் தொழிலாளர்களுக்கென மின் ஊர்திகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்கு திட்டமொன்றை வடிவமைப்பதில் ஈடுபட்டது. இத்திட்டம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2022 மே 01 தொடக்கம் திசெம்பர் 31 வரை அனுப்பப்படும் வெளிநாட்டுச் செலாவணியின் 50 சதவீதத்திற்குச் சமமாக அல்லது குறைவான கிரயம், காப்புறுதி, கப்பற்செலவு பெறுமதியில் மின் ஊர்திகளை இறக்குமதிசெய்வதற்கு புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அனுமதியை வழங்குவதன் மூலம் சட்ட ரீதியான முறைகளினூடாக தமது வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை அனுப்புவதற்கு இத்திட்டம் அவர்களை ஊக்குவிக்கின்றது.

14.2 தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் புலம்பெயர்தல் பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வு

(அ) புலம்பெயர் தொழிலாளர்களை மையப்படுத்திய ஊக்குவிப்புத் திட்டங்கள் தொடர்பிலும் முறைசார்ந்த பணப் பரிமாற்றல் முறைகளின் முக்கியத்துவம் பற்றியும் பத்திரிகைகள், வானொலி நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், சமூக வலைத் தளங்கள் மற்றும் ஊடகத் தளங்கள் போன்ற பல்வேறு வழிகளூடாக பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

(ஆ) இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளுடன் நேரடியாக இணைக்கப்பட்ட பணம் அனுப்பும் முகவர்களினதும் வேறு பணவனுப்பல் வழிகளினதும் பட்டியலொன்று இலங்கை மத்திய வங்கியின் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டதுடன் இப்பட்டியல் கிரமமான அடிப்படையில் இற்றைப்படுத்தப்பட்டது. உரிமம்பெற்ற வங்கிகளுடன் நேரடியாக இணைக்கப்பட்ட பணம் அனுப்பும் முகவர்கள் மற்றும் வேறு பணவனுப்பல்கள் தொடர்பில் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களின் விழிப்புணர்வை இப்பட்டியல் மேம்படுத்துவதுடன் அவர்களின் பணத்தை இலங்கைக்கு அனுப்புவதற்கான முறைசார்ந்த வழிமுறைகளை அடையாளங்காணுவதற்கு அவர்களை இயலச்செய்கின்றது.

(இ) வெளிநாட்டு பணவனுப்பல் வசதிப்படுத்தல் திணைக்களமானது நாட்டிற்குள் வெளிநாட்டு நாணயத்தை அனுப்புவது தொடர்பில் தெளிவுபடுத்தல்கள், முறைப்பாடுகள், மற்றும் குறைகள் என்பவற்றை கையாளுவதில் ஈடுபட்ட அதேவேளை புலம்பெயர் தொழிலாளர்களால் முகங்கொடுக்கப்படும் இடர்பாடுகளையும் வரையறைகளையும் தொடர்பான அதிகாரசபைகளுடனும் இலங்கை மத்திய வங்கியின் வேறு திணைக்களங்களுடனும் உறவைப் பேணுவதன் மூலம் தீர்த்துவைத்தது.

14.3 பணவனுப்பல் மற்றும் புலம்பெயர்தல் பற்றிய தகவல்களைப் பகிர்தல்

(அ) இலங்கை மத்திய வங்கியின் வலைத்தளத்தில் தொடர்பான தகவல்களை வெளியிடுவதன் மூலம் தொழிலாளர் புலம்பெயர்தல் மற்றும் தொழிலாளர்கள் பணவனுப்பல்கள் பற்றிய தரவுகள் பரப்பப்பட்டன.

(ஆ) தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் புலம்பெயர்தல் தொடர்பான ஆய்வுகளை நடாத்தி அவற்றைச் சஞ்சிகைகளிலும் இலங்கை மத்திய வங்கியின் வெளியீடுகளிலும் வெளியீடுசெய்தது.

இலங்கைக்கு தமது வருவாய்களை அனுப்புவதற்காக புலம்பெயர் தொழிலாளர்களால் பயன்படுத்தப்படும் முறைகள் மீதான சமச்சீரற்ற தகவல்களைத் தீர்க்கும் பொருட்டும் அத்துடன் காத்திரமான கொள்கை வடிவமைப்பிற்கு போதுமான தகவல்களை வழங்கும் பொருட்டும் வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களமானது இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் பற்றியும் அவர்களது பணவனுப்பல் போக்குகள் பற்றியும் அடிப்படை அளவீடொன்றை கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தொன்றின் அடிப்படையிலான நேரடி செவ்விகள் மூலம் நடாத்துகின்றது. முன்னோக்கிச் சென்று, வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களமானது வேறு தொடர்புடைய

அதிகாரசபைகளுடன் கூட்டிணைந்து பணவனுப்பல்களையும் புலம்பெயர் தொழிலாளர்களின் நலனோம்புகையையும் மேம்படுத்துவதற்கு புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துகின்ற செயன்முறையில் தீவிரமாக ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கின்றது. மேலும், உள்முக பணவனுப்பல் பாய்ச்சல் மீதான நாடு கடந்த ஆய்வைப் பயன்படுத்துவதன் வாயிலாக சந்தையில் நிலவுகின்ற பரிமாற்றல் கிரயங்களை ஆய்வுசெய்வதற்கு வெளிநாட்டுப் பனவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களம் திட்டமிடுகின்றது.

15. மனித வளங்கள்

இலங்கை மத்திய வங்கியின் ஒட்டுமொத்த குறிக்கோள்களையும் எய்துவதற்கு பங்களிக்கக்கூடிய உற்பத்தித்திறனும் செயலூக்கமும் மனநிறைவும் மிக்க ஊழியர் குழாமொன்றின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தும் மனித வளங்கள் திணைக்களத்தின் குறிக்கோளுடன் மனித வளத் திணைக்களம் கொவிட்-19 பரவல், எரிபொருள் பற்றாக்குறையின் காரணமாக பயணம் செய்வதில் ஏற்பட்ட கஷ்டங்கள் போன்ற பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் மனிதவள முகாமைத்துவத்தினை மேற்கொண்டது. மத்திய வங்கியின் உபாய நடவடிக்கைத் திட்டம் - 2022 உடன் இசைந்து செல்லும் விதத்தில் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் மனித வளத் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் புதிய அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், பதவி உயர்வுகள், வேலைச் சுழற்சி, ஊழியர்களின் ஊதியங்கள், பயிற்சி மற்றும் தேர்ச்சி அபிவிருத்திகள், செயலாற்ற மதிப்பீடுகள் அலுவலர்களின் செயலூக்கம், ஊழியர்களின் மனக் குறைகளைக் கையாளுதல் மற்றும் தேவையானவிடத்து மத்திய வங்கியின் குறிப்பிட்ட பணிகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளுதல் என்பனவற்றுடன் தொடர்பான நடவடிக்கைகளை உள்ளடக்கியிருந்தன. மனிதவள முகாமைத்துவம் தொடர்பான அனைத்து விடயங்கள் மற்றும் ஏனைய கம்பனித் தொழிற்பாடுகள் தொடர்பான விடயங்கள் பற்றிய முன்மொழிவுகள் மற்றும் தீர்மானங்கள் பற்றிய கலந்துரையாடல்களுக்கு வசதியளிக்கும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியின் மூத்த முகாமைத்துவத்தின், அதாவது, கம்பனி முகாமைத்துவக் குழு, பயிற்சி குழு மற்றும் பயிற்சித் துணைக் குழு என்பனவற்றின் கூட்டங்களைக் கூட்டியது. மேலும், மனித வளத் திணைக்களம் கலந்துரையாடல்கள் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளுதல் அதேபோன்று கொள்கை விடயங்கள் தொடர்பில் வங்கியின் மைய நடவடிக்கைகள், உபாயங்கள் மற்றும் தொழிற்பாட்டு இயக்கங்கள் தொடர்பான திணைக்களத் தலைவர்களின் கிரமமான கூட்டங்களைக் கூட்டியது.

மனித வளத் திணைக்களமானது மத்திய வங்கி முகாமைத்துவம், அனைத்து மட்ட ஊழியர்கள் அதேபோன்று தொழிற்சங்கங்கள் என்பனவற்றிற்கிடையே தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளுக்கு வசதியளித்தமையின் மூலம் வங்கியில் தொழில் துறை நல்லிணக்கம் பேணப்படுவதற்குப் பங்களித்தது. அது மட்டுமன்றி மனித வளத் திணைக்களம் வங்கி ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் சங்கங்கள் இலங்கை மத்திய வங்கி முகாமைத்துவத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தும் விதத்தில் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்ததுடன் அவர்களது கரிசனைகள்/ கோரிக்கைகளையும் பரிசீலனையில் கொண்டது. மனித வளத் திணைக்களம் 2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 2021-2023 மூன்றாண்டுகளுக்குரிய சம்பளத் திருத்தங்களை இறுதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி முகாமைத்துவத்திற்கும் அனைத்து தொழில் சங்கங்களுக்குமிடையேயான கலந்துரையாடல்களுக்கும் வசதியளித்தது.

மேலும், 2022ஆம் ஆண்டின் தொடக்கப்பகுதியின் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவல் காலத்திலும் அதேபோன்று நாட்டில் எரிபொருள் பற்றாக்குறையின் காரணமாக பயணம் செய்வதில் காணப்பட்ட இடர்ப்பாடுகளின் போதும் வங்கியின் தொழிற்பாடுகளின் சுமுகமான தொழிற்பாடுகளுக்கு வசதியளித்த வேளையில் வீட்டிலிருந்து கொண்டே பணியாற்றும் ஏற்பாடுகளுக்கு வசதியளித்தமையின் மூலம் வங்கியின் தடங்கலற்ற தொழிற்பாடுகள் பேணப்படுவதற்கு வசதியளித்தது.

15.1 மனித வளங்கள் கட்டமைப்பு

2022ஆம் ஆண்டு இறுதியில் மத்திய வங்கி அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை 1,260 ஆக அமைந்து 661 உயர் பதவி வகுப்பு அலுவலர்களையும் 463 முகாமைத்துவ உதவி வகுப்பு அலுவலர்களையும் 136 அலுவலக உதவி வகுப்பு ஊழியர்களையும் உள்ளடக்கிக் காணப்பட்டது. மத்திய வங்கி மொத்த அலுவலர் எண்ணிக்கை 656 ஆண்களையும் 604 பெண் அலுவலர்களையும் உள்ளடக்கியிருந்தமையின் மூலம் இது மொத்த அலுவலர்களில் 52 சதவீதத்தினையும் 48 சதவீதத்தினையும் முறையே பிரசன்னப்படுத்தியது. 2022 யூன் இறுதியில் மத்திய வங்கி ஊழியர்களின் சராசரி வயது 40 ஆண்டுகளாகக் காணப்பட்டது.

15.2 ஊழியர்களின் கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகள்

அட்டவணை II-15இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு, மத்திய வங்கியானது உயர்மட்ட கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகளைக் கொண்ட பன்மைத்துவ திறனுடன் கூடிய மனித வளக் குழுமமொன்றினைக் கொண்டிருக்கிறது.

15.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

(அ) ஆட்சேர்ப்பு

2022இல், மனித வளத் திணைக்களம் கனிஷ்ட தனிப்பட்ட உதவியாளர்களை (ஆங்கிலம் மற்றும் சிங்களம்) மத்திய வங்கிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பொதுவான ஆட்சேர்ப்பு நடைமுறைகளைப் பின்பற்றியது. பரீட்சார்த்திகள் 2022 ஒத்தோபர் 29ஆம் திகதி நடத்தப்பட்ட தேர்ச்சி பரீட்சை மற்றும் 2022 திசெம்பர் 22ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பனவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டனர். தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகளின் நியமனம் 2023 சனவரியிலிந்து நடைமுறைக்குவரும். மேலும், வங்கித்தொழில் உதவியாளர்களை (பயிற்சி) வங்கிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையினை நடத்துவது தொடர்பான ஏற்பாடுகளுக்காக பரீட்சைத் திணைக்களத்துடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், மனித வளத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கியின் பணிப்பாளர்/ பாதுகாப்புப் பணிகள் திணைக்களப் பதவியை ஒப்பந்த அடிப்படையில் 2023 சனவரி 02ஆம் நாளிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்கு நிரப்பிக் கொண்டது.

(ஆ) செயலாற்ற முகாமைத்துவம்

வங்கியின் செயலாற்ற முகாமைத்துவ முறைமையானது ஊழியர்களின் வேலை விபரணங்களைத் தயாரித்தல் மற்றும் மீளாய்வு செய்தல், தனிப்பட்ட ஊழியர்களுக்கு இலக்குகளை நிர்ணயித்தல், ஊழியர்களின் செயலாற்றத்தினைக் கண்காணித்தல் மற்றும் செயலாற்றத்தினை மதிப்பீடு செய்தல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

செயலாற்ற மதிப்பீட்டுச் செய்முறையின் கீழ், ஒவ்வொரு ஊழியரினதும் செயலாற்ற மட்டம் மதிப்பீட்டுப் பிரமாணங்களில் குறித்துரைக்கப்பட்டவாறு பொதுவான மற்றும் தொழில்நுட்ப ரீதியான தகைமைகளில் அடையப்பட்ட செயலாற்றத்திற்கு தரங்களை வழங்குவதன் மூலம் மதிப்பிடப்பட்டன. உயர் அலுவலர் வகுப்பு III (2) வரையான ஊழியர்களின் இறுதிச் செயலாற்றப் புள்ளிகள் பதவி உயர்வின் பிரமாணத் தேவைப்பாடுகளில் ஒன்றாகப் பயன்படுத்தப்படுகிறது.

மனித வளத் திணைக்களம் இவ்வாண்டுப் பகுதியில் திட்டமிட்டவாறு ஊழியர்களின் செயலாற்ற மதிப்பீட்டுச் செய்முறையினை மேற்கொண்டது. மேலும், மனித வளத் திணைக்களம் 2022 இலிருந்து காலாண்டு செயலாற்ற மீளாய்வுச் செய்முறையினையும் அறிமுகப்படுத்தியது. இச்செய்முறையானது, திணைக்கள ரீதியாக

அட்டவணை II-15

2022.12.31இல் உள்ளவாறு மத்திய வங்கியின் ஊழியர்களின் கல்விசார் தகைமைகள்/ தொழில்சார் உறுப்புரிமைகள்

ஊழியர் வகுப்பு	முனைவர் பட்டம் பெற்றோர்	கல்விசார் தகைமைகள்/ தொழில்சார் உறுப்புரிமை பெற்றவர்கள்							
		முதுமானிப் பட்டம், முதற்பட்டம் மற்றும் தொழில்சார் உறுப்புரிமைகள்	முதுமா-னிப் பட்டம் மற்றும் முதற்பட்டம்	முதற்பட்டம் மற்றும் தொழில்சார் உறுப்புரிமைகள்	முதுமானிப் பட்டம் மற்றும் தொழில்சார் உறுப்புரிமைகள்	முதுமானிப் பட்டம் மட்டும்	முதற் பட்டம் மட்டும்	தொழில்சார் உறுப்புரிமைகள் மட்டும்	மொத்தம்
பதவிநிலை வகுப்பு	26	123	169	71	44	3	171	10	617
முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு	-	11	30	16	20	38	42	24	181
மொத்தம்	**26**	**134**	**199**	**87**	**64**	**41**	**213**	**34**	**798**

ஊழியர்களுக்கான உபாயக் குறிக்கோள்களை எய்துவது தொடர்பான ஊழியரின் செயலாற்றத்துடன் இணைக்கப்படும் விதத்தில், அவர்களது வருடாந்த தனிப்பட்ட இலக்குகளை எய்துவதற்கான நெறியாள்கையொன்றாக, முன்னேற்றகரமான முறையொன்றில் ஊழியர்களின் செயலாற்றத்தினை நெருக்கமாகக் கண்காணிப்பதற்காக, மேற்பார்வையாளர்களுக்கு வாய்ப்பொன்றை வழங்குவதனை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

(இ) பதவி உயர்வுகள்

மனித வளத் திணைக்களம் ஊழியர்களின் பதவி முன்னேற்றங்களை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கியின் ஊழியர் பதவி உயர்வுத் திட்டத்தின் கீழ், பதவி உயர்வுகளுக்கு வசதியளித்தது. இதற்கமைவாக, 2022ஆம் ஆண்டில் மொத்தமாக 272 அலுவலர் உறுப்பினர்களுக்கு அவர்களது வகுப்பு மற்றும் தரத்தில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. அதன் அடிப்படையில் ஒரு (01) உதவி ஆளுநர் துணை ஆளுநராகவும் ஒரு திணைக்களத் தலைவர் (01) மூத்த திணைக்களத் தலைவராகவும் ஏழு (07) துணை திணைக்களத் தலைவர்கள் மேலதிகத் திணைக்களத் தலைவர்களாகவும் பதினொரு (11) உயர் வகுப்பு III (1) அலுவலர்கள் துணைத் திணைக்களத் தலைவராகவும் பதவி உயர்த்தப்பட்ட வேளையில் 252 ஊழியர்களுக்கு அவர்களது வகுப்பு மற்றும் தரத்தில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

(ஈ) பயிற்சி மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி

மத்திய வங்கி, வங்கியின் குறிக்கோள்களை நிறைவேற்றுகின்ற நோக்கத்திற்காக, தேர்ச்சியையும் அறிவினையும் காத்திரமான விதத்தில் தரமுயர்த்திக் கொள்வதற்காகவும் வங்கியின் பன்மைத்துவமும் திறனும் கொண்ட அலுவலர்களாக்குவதற்காகவுமான வாய்ப்புக்களை அதன் அலுவலர்களுக்கு வழங்கியது. இதற்கமைய, மத்திய வங்கி பட்டப்பின்படிப்பு கற்கைகளுக்கான, மத்திய வங்கியின் அனுசரணைத் திட்டத்தின் கீழ், பன்னாட்டு ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் பட்டப்பின்படிப்பிற்கான ஆய்வுகளை அதன் அலுவலர்கள் மேற்கொள்வதனை ஊக்குவித்தது. மேலும், வங்கிக்குள் அறிவு, நிபுணத்துவம் மற்றும் தேர்ச்சி என்பனவற்றைத் தொடர்ச்சியாக அதிகரிப்பதற்காகவும் மத்திய வங்கியின் மனித மூலதன அபிவிருத்தியின் தோற்றம் பெற்றுவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவும் விதத்தில் மத்திய வங்கி உள்நாட்டு ரீதியாகவும் வெளிநாட்டு ரீதியாகவும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்து கொள்வதற்கு அதன் அலுவலர்களுக்கு வசதியளித்தது. எனினும், நாட்டில் தற்பொழுது நிலவும் பொருளாதார நிலைமைகளைக் கருத்திற் கொண்டு, 2022ஆம் ஆண்டுப்பகுதியில் பட்டப்பின்படிப்பு கற்கைகள் உட்பட, பயிற்சி வாய்ப்புக்களுக்கு வசதியளிப்பது தொடர்பில் எந்தவொரு வெளிநாட்டு நாணயச் செலவுகளையும் தாங்கிக் கொள்வதில்லை என மத்திய வங்கி தீர்மானித்தது. எனினும், வெளிநாட்டு பயிற்சியில் பங்கேற்பது

அட்டவணை II-16

மத்திய வங்கி புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பட்டப்பின்படிப்புக் கற்கைகள்

ஆண்டு	பட்டப்பின்படிப்பு கற்கைகள்				மொத்தம்	
	முனைவர்		முதுமானிப் பட்டம்		தொடங்கப்பட்டது	நிறைவு செய்யப்பட்டது*
	தொடங்கப்பட்டது	நிறைவு செய்யப்பட்டது*	தொடங்கப்பட்டது	நிறைவு செய்யப்பட்டது*		
2018	8	1	8	14	16	15
2019	4	1	7	7	11	8
2020	2	5	6	8	8	13
2021	1	4	1	6	2	10
2022	0	1	2	1	2	2
மொத்தம்	**15**	**12**	**24**	**36**	**39**	**48**

* பட்டப்பின்படிப்பு கற்கைகளை நிறைவு செய்த பின்னர் திரும்பியோர்

தொடர்பில், ஒழுங்குகளை மேற்கொள்ளும் நிறுவனத்தினால் மொத்தச் செலவுகளுக்கும் அனுசரணை வழங்கப்படுமிடத்து அப்பயிற்சிகளில் பங்கேற்க அலுவலர்கள் அனுமதிக்கப்பட்டனர். பட்டப்பின்படிப்பு ஆய்வுகளைப் பொறுத்தவரை அலுவலர் மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க வெளிநாட்டு மூலங்களிலிருந்து முழுப் புலமைப்பரிசில்களும் பெற்றுக் கொள்ளப்படுமிடத்து அவ்வலுவலர் பட்டப்பின்படிப்பினைத் தொடரலாம்.

2022இல் மனித வளத் திணைக்களம், அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் கீழ் அவுஸ்திரேலியாவிலுள்ள உயர்தரப் பல்கலைக்கழகங்களில் பொருளாதாரத்தில் பட்டப்பின்படிப்பு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இரண்டு அலுவலர்களுக்கு வசதியளித்தது. 2018 இலிருந்து 2022 முடியும் வரையான காலப்பகுதியில் மத்திய வங்கியின் அநுசரணைத் திட்டத்தின் கீழ் பட்டப்பின்படிப்பு ஆய்வுகளை தொடங்கி நிறைவு செய்ததன் பின்னர் திரும்பிய அலுவலர்களின் எண்ணிக்கை கீழே அட்டவணை II-16இல் தரப்பட்டுள்ளது.

மேலேயுள்ளவற்றிற்கு மாற்று ஏற்பாடொன்றாக, மத்திய வங்கிகளினாலும் ப.நா. நிதியம், தென்கிழக்காசிய மத்திய வங்கி, உலக வங்கி போன்ற பன்னாட்டு நிறுவனங்களினாலும் உள்ளூர் நிறுவனங்களினாலும் 2022ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட இணையவழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் அலுவலர்கள் கலந்து கொள்ள வசதியளிக்கப்பட்டது. இதற்கமைவாக, மனித வளத் திணைக்களம் மெய்நிகர் ரீதியாக நடத்தப்பட்ட 402 வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 621 அலுவலர்கள் பங்கேற்பதற்கும் பயிற்சியளிக்கும் அமைப்புக்களினால் முழுமையாக நிதியிடப்பட்ட வெளிநாட்டில் நடத்தப்பட்ட 36 வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 65 அலுவலர்கள் பங்கேற்பதற்கும் வசதியளித்தது.

அதேநேரம், மனித வளத் திணைக்களம் வெளிநாட்டு, உள்நாட்டு பயிற்சி நிறுவனங்களினால் நடத்தப்பட்ட 93 உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 479 அலுவலர்கள் பங்கேற்பதற்கும் மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தினால் நடத்தப்பட்ட 85 உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 1,716 அலுவலர்கள் பங்கேற்பதற்கும் வசதியளித்தது. மேலும், மனித வளத் திணைக்களம், மத்திய வங்கி ஊழியர்கள் நீண்ட கால உள்நாட்டு (பகுதி நேரம்) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைப் பின்பற்றுவதற்கு வசதியளித்ததுடன் பட்டயம்பெற்ற நிதியியல் தகைமைக்கான அதன் அநுசரணை வழங்கும் திட்டத்திற்கு வசதியளித்த வேளையில் உள்நாட்டு நிறுவனங்களினால் வழங்கப்பட்ட ஏனைய சான்றிதழ் பாடநெறிகளுக்கும் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் வசதியளித்தது. மனித வளத் திணைக்களம் மத்திய வங்கி அலுவலர்களுக்கும் ஏனைய மத்திய வங்கிகளின் அலுவலர்களிடையேயும் அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் அமர்வுகளை நடத்தியது. இதன்படி, மனித வளத் திணைக்களம் 2022இல் "வெளிநாட்டுச் சேலாவணிக் கொடுக்கல்வாங்கல்களைக் கண்காணித்தல் மற்றும் சந்தையை உறுதிப்படுத்தும் வழிமுறைகள்" என்ற மகுடத்தின் கீழ், கொரிய வங்கியுடன் அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்தினை நடத்தியது. மேலும், மனித வளத் திணைக்களம் கொரிய வங்கியினால் நடத்தப்பட்ட மற்றும் பல அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் அமர்வுகளுக்கு வசதியளித்தது.

(உ) வேலைச் சுழற்சி

மனித வளத் திணைக்களம் வங்கிக்குள்ளே பல்வேறு தேர்ச்சிகளையும் கொண்ட மனித வளங்களை அபிவிருத்திச் செய்து கொள்கின்ற அதன் ஒட்டுமொத்த குறிக்கோள்களையும் எய்துகின்ற அதேவேளையில், வங்கியின் உற்பத்தித்திறனையும் அதிகரிக்கும் விதத்தில், 2022இல் வருடாந்த வேலை சுழற்சி கொள்கையினைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. இதற்கமைய, மனித வளத் திணைக்களம், வருடாந்த வேலைச் சுழற்சித் திட்டத்தின் கீழ் 23 உயர் பதவி அலுவலர்களினதும் 50 அலுவலர்கள் உதவி வகுப்பு ஊழியர்களினதும் மாற்றல்களை 2022 சனவரி 03 இலிருந்து மேற்கொண்டது. மேலும், 12 அலுவலக உதவி வகுப்பிலுள்ள ஊழியர்கள் வருடாந்த வேலை சுழற்சி திட்டத்தின் கீழ், உருவாக்கப்பட்ட முறை மாற்றுத் திட்டத்தின் அடிப்படையில் மாற்றல் செய்யப்பட்டனர்.

(ஊ) தொழில்துறை நல்லிணக்கம்

மனித வளங்கள் திணைக்களம் முகாமைத்துவத்திற்கும் தொழிற் சங்கங்களுக்குமிடையில் நெருக்கமான கலந்துரையாடல்களைப் பேணுவதற்கான வசதி ஏற்பாட்டாளர் என்ற அதன் வகிபாகத்தினைத் தொடர்ந்தும் ஆற்றியது. இதற்கமைய, ஊதியம், பதவி உயர்வுகள், பயிற்சி, நலன்புரி, ஆட்சேர்ப்பு மற்றும் வங்கியின் பொதுவான நிருவாகம் என்பன தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக முகாமைத்துவத்திற்கும் தொழிற் சங்கங்களுக்குமிடையில் சந்தர்ப்பங்களை வழங்குவதற்காக 2022இல் ஒன்பது கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

(எ) வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல்

வங்கியின் மையத் தொழிற்பாடுகளுடன் தொடர்புபடாத, வங்கிக்குத் தேவையான மனித வலுப் பணிகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான அதிகாரம் மனித வளத் திணைக்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக மனித வளத் திணைக்களம் தொடர்பான திணைக்களங்களின் கோரிக்கையினை அடுத்து, வங்கிப் பணிகளை வெளியிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான விலைக்கோரல் நடைமுறைகளை மனித வளத் திணைக்களம் பின்பற்றுகிறது. 2022இல் மனித வளத் திணைக்களம் வங்கியின் தேவைப்பாடுகளுக்கேற்ப ஆறு துறைகளில், அதாவது, பாதுகாப்புப் பணிகள், மென்பொருள் பொறியியலாளர்கள், விடுமுறைக்கான பங்களாவுகளுக்கான பணி வழங்குவோர், கணக்காய்வு நிறுவனங்களின் பணிகள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கான பணிகளைப் பெற்றுக்கொண்டது.

15.4 திணைக்களங்களை மூடிவிடுதல்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 33ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, நாணயச் சபை 2022 ஏப்பிறல் 08ஆம் நாளன்று இடம்பெற்ற அதன் இல.11/2022 இலக்கக் கூட்டத்தில் ஆளுநர் செயலகத் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை செயலகத் திணைக்களத்துடன் இணைந்திருந்த ஆளுநர் செயலகத் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கான அனுமதியினை வழங்கியதுடன் ஆளுநர் செயலகத் திணைக்களம் 2022 ஏப்பிறல் 08ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் மூடப்பட்டது.

15.5 2022ஆம் ஆண்டுப்பகுதியில் ஆளுநர் கலந்து கொண்ட கூட்டங்கள்

(அ) ஆளுநர் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்கள்

i. 2022 சனவரி 04ஆம் நாளன்று கட்டார் மத்திய வங்கியின் ஆளுநர் மேதகு ஷேக் பன்டர் பின் முகமட் பின் சவுத் அல்-தானி உடனான கூட்டம்.

ii. 2022 மார்சு 25-27 காலப்பகுதியில் டோகா, கட்டாரில் இடம்பெற்ற டோகா ஆய்வரங்கு.

iii. 2022 ஏப்பிறல் 17-24 காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்கா, வாஷிங்டன் டிசி இல் பன்னாட்டு நாணய நிதியம்/உலக வங்கியின் இளவேனில் காலக் கூட்டங்கள்.

iv. 2022 ஒத்தோபர் 10-16 காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவின் வாஷிங்டன் டிசி இல் இடம்பெற்ற ப.நா. நிதியம்/ உலக வங்கியின் ஆண்டுக் கூட்டங்கள்.

(ஆ) ஆளுநர் கலந்து கொண்ட விசேட நிகழ்வுகள் (உள்நாடு)

i. 2022 சனவரி 18ஆம் நாளன்று சினமன் கிறான்ட் ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 32ஆவது மாநாட்டில் பிரதம விருந்தினராக.

ii. 2022 பெப்புருவரி 14ஆம் நாளன்று இடம்பெற்ற "தேசிய பாதுகாப்பின் தவிர்க்க முடியாததொரு பகுதியாகப் பொருளாதார பாதுகாப்பு" தொடர்பில் தேசிய பாதுகாப்பு கல்லூரியில் இடம்பெற்ற ஆய்வரங்கில் பிரதான உரையினை.

iii. 2022 ஏப்பிறல் 28ஆம் நாளன்று இடம்பெற்ற இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் மாதாந்த கூட்டத்தில் பிரதம விருந்தினர் உரை.

iv. 2022 மே 11ஆம் நாளன்று இடம்பெற்ற தெற்கு - தெற்கிற்கிடையே கொள்கை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல்: அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் படுகடன் உறுதித்தன்மை தொடர்பான வெப்தளத்திற்கான பிரதான உரை.

v. 2022 மே 25ஆம் நாளன்று இடம்பெற்ற இளம் இலங்கையர் தொழில்முயற்சியாண்மை சம்மேளனத்தின் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினர் மற்றும் முதன்மைப் பேச்சாளராக

vi. 2022 மே 28ஆம் நாளன்று இடம்பெற்ற கொச்சி வர்த்தகம் மற்றும் கைத்தொழில் வர்த்தக சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வெப்தளக் கூட்டத்தில் பிரதம பேச்சாளராக.

vii. 2022 யூன் 03ஆம் நாளன்று இடம்பெற்ற இலங்கை வேளாண்மை நிறுவனத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக.

viii. 2022 யூன் 24ஆம் நாளன்று இடம்பெற்ற கொழும்பு றோயல் கிளப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட இரவு உணவுக் கூட்டத்தில் பிரதான உரையினை ஆற்றுவதற்கு.

ix. 2022 யூலை 19ஆம் நாளன்று இடம்பெற்ற கொழும்பு கிளப்பின் மதிய உணவுக் கூட்டத்தில் பிரதம பேச்சாளராக.

x. 2022 யூலை 29ஆம் நாளன்று இடம்பெற்ற களனிப் பல்கலைக்கழகத்தின் வியாபார நிருவாக முனைவர் பட்டத்திற்கான 7ஆவது தொகுதியினருக்கான ஆட்சேர்ப்பிற்கான ஆரம்பக் கொண்டாட்டத்தில் பிரதம விருந்தினராக.

xi. 2022 யூலை 31ஆம் நாளன்று இடம்பெற்ற "இலங்கை தொடர்பான நெருக்கடியும் மீட்சிக்கான பாதையும்" என்ற தலைப்பில் யப்பானிய சபையோருக்கான கூட்டத்தில் (மெய்நிகர்) பிரதான உரை.

xii. 2022 செத்தெம்பர் 15ஆம் நாளன்று இடம்பெற்ற இலங்கை மின்னியல் மற்றும் எந்திர பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தின் இரவு உணவு களரியில் பிரதம விருந்தினர் பேச்சாளராக.

xiii. 2022 செத்தெம்பர் 20ஆம் நாளன்று இடம்பெற்ற உபாய முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் பழைய மாணவர் ஆய்வரங்கில் முக்கிய பேச்சாளராக.

xiv. 2022 செத்தெம்பர் 30ஆம் நாளன்று இடம்பெற்ற கொழும்பு தேயிலை வர்த்தகச் சங்கத்தின் 128ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினர்/ முக்கிய பேச்சாளராக.

xv. 2022 ஒத்தோபர் 22ஆம் நாளன்று இடம்பெற்ற களனிப் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடலில் பிரதம விருந்தினராக.

xvi. 2022 ஒத்தோபர் 25ஆம் நாளன்று இடம்பெற்ற "இலங்கை: பொருளாதார நிலை – நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான தூண்டல் கொள்கை நடவடிக்கை" நிகழ்வில் பிரதமப் பேச்சாளராக.

xvii. 2022 நவெம்பர் 15ஆம் நாளன்று இடம்பெற்ற வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வரவு செலவுத்திட்ட ஆய்வரங்கில் முதன்மைப் பேச்சாளராக.

xviii. 2022 நவெம்பர் 15ஆம் நாளன்று இடம்பெற்ற கட்டுமானக் கைத்தொழிலினூடாக கைத்தொழில் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணல் மற்றும் பொருளாதாரத்தை உத்வேகப்படுத்தல் ஆய்வரங்கில் பிரதமப் பேச்சாளராக.

xix. 2022 நவெம்பர் 19ஆம் நாளன்று மாத்தறை றாகுல கல்லூரியினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒல்கொட் இரவில் பிரதம விருந்தினராக.

xx. 2022 நவெம்பர் 22ஆம் நாளன்று இலங்கையின் தகவல் தொழில்நுட்பவியல் தொழில் துறையின் கூட்டமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட இலங்கை இணையத்தள தினம் 2022 குழுவில் ஒருவராகக் கலந்து கொண்டார்.

xxi. 2022 நவெம்பர் 22ஆம் நாளன்று இடம்பெற்ற இலங்கை ஏற்றுமதியாளர் தேசிய சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வரவு செலவுத்திட்டத்திற்குப் பின்னரான ஆய்வரங்கக் குழுவில்.

xxii. 2022 நவெம்பர் 24ஆம் நாளன்று இடம்பெற்ற கொழும்பு பல்கலைக்கழகத்தில் வியாபார பொருளாதார மாணவர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வில் பிரதம பேச்சாளராக.

xxiii. 2022 நவெம்பர் 25ஆம் நாளன்று இலங்கை மருத்துவ நிருவாகத்தினர் கல்லூரியின் 29ஆவது வருடாந்த விஞ்ஞான அமர்வில் தலைவர் மற்றும் தொடக்க அறிமுக ஆய்வரங்கில் பிரதம பேச்சாளராக.

xxiv. 2022 நவெம்பர் 26ஆம் நாளன்று இடம்பெற்ற முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழாவில் பிரதம பேச்சாளராக.

xxv. 2022 நவெம்பர் 28ஆம் நாளன்று வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்களுக்கான சி ரி சி எல் எஸ் ஏ செக்குறிட்டீஸ் (பிறைவேற்) லிமிடெட்டின் வருடாந்த முதலீட்டு ஆய்வரங்கில் பிரதம பேச்சாளராக.

xxvi. 2022 நவெம்பர் 30ஆம் நாளன்று பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட "இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான வழிகாட்டல்" தொடர்பான பன்னாட்டு மாநாட்டில் கௌரவ பிரதம/முக்கிய பேச்சாளராக.

xxvii. 2022 திசெம்பர் 02 நாளன்று இடம்பெற்ற இலங்கை தகவல் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் நீடித்துநிலைத்திருக்கக் கூடிய மற்றும் டிஜிட்டல் வியாபாரம் - 2022இன் மீதான பன்னாட்டு மாநாட்டில் பிரதம விருந்தினராக.

xxviii. 2022 திசெம்பர் 02 நாளன்று இடம்பெற்ற பட்டய பொது நிதிக் கணக்காளர் மற்றும் இலங்கை பொது நிதிக் கணக்காளர் சங்கத்தின் வருடாந்த மாநாடு – 2022இல் பிரதம பேச்சாளராக.

xxix. 2022 திசெம்பர் 03 நாளன்று இடம்பெற்ற வங்கியாளர் வர்த்தக நிதிச் சங்கத்தின் 125ஆவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்தின் பிரதம விருந்தினராக.

xxx. 2022 திசெம்பர் 05 நாளன்று இடம்பெற்ற 58ஆவது தென்கிழக்கு ஆசிய மத்திய வங்கிகளின் ஆளுநர்கள் மாநாட்டில் (மெய்நிகர்) பேச்சாளராக.

xxxi. 2022 திசெம்பர் 06 நாளன்று இலங்கை பொருளாதார உச்சி மாநாடு - 2022இல் முக்கிய பேச்சாளராக.

xxxii. 2022 திசெம்பர் 06 நாளன்று இடம்பெற்ற பொருளாதார மீட்சி மற்றும் நீடித்தநிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சிக்கான அமைப்பியல் சீர்திருத்தங்கள் தொடர்பில் உயர் மட்ட வட்ட மேசை கலந்துரையாடலில்

xxxiii. 2022 திசெம்பர் 09 நாளன்று இடம்பெற்ற இலங்கை பொருளியல் சங்கத்தின் வருடாந்த பன்னாட்டு மாநாட்டின் தொடக்க அமர்வில் பிரதம விருந்தினர்/முக்கிய பேச்சாளராக

15.6 பதவி உயர்வுகள்/ நியமனங்கள்

i. திருமதி ரி.எம்.ஜே.வை.பி. பர்னாந்து 2022 திசெம்பர் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியின் மூத்த துணை ஆளுநராக பதவி குறித்துரைக்கப்பட்டார்.

ii. திருமதி கே.எம்.ஏ.என். தவுலகல 2022 ஒத்தோபர் 07ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநராக பதவி உயர்த்தப்பட்டார்.

iii. திரு. பீ.எல்.ஜே.எஸ். பாலசூரியா 2022 பெப்புருவரி 03ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் அலுவலர் வகுப்பு சிறப்புத் தரத்திற்கு மூத்த திணைக்களத் தலைவராக பதவி உயர்த்தப்பட்டார்.

iv. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் முனைவர் ஆர்.ஏ.ஏ. பெரேரா, 2022 சனவரி 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து அவர் 2022 ஏப்பிறல் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

v. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் முனைவர் பி.கே.ஜி ஹரிச்சந்திர, 2022 சனவரி 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து அவர் 2022 ஏப்பிறல் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

vi. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திருமதி ஆர்.எம்.சி.எச்.கே. ஜெயசிங்க 2022 சனவரி 03ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

vii. ஆளுநர் செயலகத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. டபிள்யு. ஆர்.எம்.கே பர்னாந்து 2022 ஏப்பிறல் 08ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் செயலகத் திணைக்களத்தின் பணிப்பாளராக (சிறப்புச் செயற்றிட்டங்கள்) நியமிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து அவர் 2022 ஏப்பிறல் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

viii. புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. ஜி.டி.பி.டி. ஜயதிலக 2022 ஏப்பிறல் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் தொடர்பூட்டல் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

ix. நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர் திருமதி. டி.ஆர். கருணாரத்ன 2022 ஏப்பிறல் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

x. தொடர்பூட்டல் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. ஈ.எச். மொஹொட்டி 2022 ஏப்பிறல் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xi. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் முனைவர் (திருமதி.) எச்.கே.ஜே. ஏக்கநாயக்க 2022 ஏப்பிறல் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xii. வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளர் முனைவர் (திருமதி.) ஏ.ஏ.ஐ.என். விக்கிரமசிங்க 2022 ஏப்பிறல் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xiii. நாணயத் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளர் திரு. பி.டி.ஆர். தயானந்த 2022 ஏப்பிறல் 17ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நாணயத் திணைக்களத்தின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xiv. சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் முனைவர் (திருமதி.) டபிள்யூ.ஜி.எஸ்.எஸ்.ஜே. கீர்த்திரத்ன 2022 மே 06ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xv. நிதியியல் உளவறிதல் பிரிவின் மேலதிகப் பணிப்பாளர் திரு. டபிள்யூ.எம். பிறியன்கரா 2022 மே 06ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் செயலகத் திணைக்களத்தின் மேலதிகச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

xvi. வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. ஜி.சி.ஏ. ஆரியதாச 2022 மே 06ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xvii. பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. என்.டி.வை.சி. வீரசிங்க 2022 மே 06ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் பொதுப்படுகடன் முகாமைத்துவத் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து அவர் 2022 திசெம்பர் 06ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் பொதுப் படுகடன் திணைக்களத்தின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xviii. பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திருமதி. டி.கே. மயாதுன்ன 2022 மே 06ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து அவர் 2022 யூன் 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர், அவர் 2022 யூலை 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xix. பொதுப்படுகடன் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளர் முனைவர் ஈ.டபிள்யூ.கே.ஜே.பீ. எகிலபொல 2022 யூன் 16ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xx. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. எம்.ஆர். விஜயவர்த்தன 2022 யூலை 14ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xxi. தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. கே.வி.கே. அல்விஸ் 2022 யூலை 14ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xxii. பொதுப்படுகடன் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளர் திரு. டி.எல். நிகால் 2022 யூலை 14ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xxiii. ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளர் திருமதி. டபிள்யூ.எல்.எஸ்.டபிள்யூ. ஜெயசுந்திர 2022 யூலை 14ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xxiv. தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. எச்.எம்.பி.பீ ஹெரத் 2022 யூலை 14ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

15.7 விடுவிப்பிலுள்ள ஊழியர்கள்

i. முனைவர் சி. அமரசேகரா, உயர் வகுப்பு தரம் IV அலுவலர் 2022 சனவரி 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக விடுவிக்கப்பட்டார்.

ii. திரு. கே.எம்.எம். சிறிவர்த்தன, துணை ஆளுநர் 2022 ஏப்பிறல் 8ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நிதி அமைச்சின் செயலாளராக திறைசேரிக்கு விடுவிக்கப்பட்டார்.

iii. திருமதி. எவ்.ஆர். பங்கசாஜயயா, கம்பனிப் பணிகளிலுள்ள உயர் வகுப்பு தரம் II அலுவலர் 2022 ஏப்பிறல் 11ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நிதி அமைச்சின் செயலாளர் அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்டார்.

iv. திரு. எம்.ஜி. அசோக முகாமைத்துவ உதவி வகுப்பு தரம் II (மீள்தரமிடப்பட்ட) அலுவலர் 2022 ஏப்பிறல் 11ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நிதி அமைச்சின் செயலாளர் அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து அவர் 2022 யூன் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் வங்கிப் பணிக்கு மீண்டார்.

v. திருமதி. எம்.இசட்.என். ஹுனிபா, கம்பனிப் பணிகளில் உயர் வகுப்பு தரம் I அலுவலர் 2022 செத்தெம்பர் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு நிருவாக உதவியாளராக விடுவிக்கப்பட்டார்.

15.8 ஓய்வுபெறல்கள்/ இராஜினாமாச் செய்தல்

2022ஆம் ஆண்டுப்பகுதியில் ஒரு துணை ஆளுநர், ஒரு உதவி ஆளுநர், ஒரு மூத்த திணைக்களத் தலைவர், மூன்று திணைக்களத் தலைவர்கள், இரண்டு மேலதிகத் திணைக்களத் தலைவர்கள் மற்றும் இரண்டு துணைத் திணைக்களத் தலைவர்கள் உட்பட, 42 அலுவலர்கள் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றனர். 2022ஆம் ஆண்டில் ஒரு திணைக்களத் தலைவர், ஒரு துணைத் திணைக்களத் தலைவர் மற்றும் மூன்று (03) ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் உட்பட, மொத்தமாக 51 அலுவலர்கள் மத்திய வங்கிப் பணியிலிருந்து இராஜினாமாச் செய்தனர்.

16. தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது மத்திய வங்கியின் மையக் குறிக்கோள்களை எய்துவதற்காக அதன் ஆற்றல்வாய்ந்த பங்களிப்பு வகிபாகத்தினை தொடர்ந்தும் நிறைவேற்றியது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், நிறுவன மட்டத்தில் ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளையும் நிறுவனப் பணிகளையும் வழங்கிய அதேவேளை, உட்கட்டமைப்பை வசதிப்படுத்துவதற்கான பாதுகாப்பை தொடர்ந்தும் மேம்படுத்தியது.

ஆண்டு காலப்பகுதியில், தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது, (அ) செலவுச் சிக்கன பிரயோக மென்பொருள் தீர்வுகளை வழங்குதல்; (ஆ) தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் தொடர்ச்சியான மேம்படுத்தல் (இ) அதிநவீன நிதியியல் சந்தை உட்கட்டமைப்பை நிறுவுவதற்காக பங்களித்தல்; (ஈ) தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பையும் தாக்குபிடிக்கும் தன்மையையும் வலுப்படுத்தல்; அத்துடன் (உ) தகவல் தொழில்நுட்ப ஆதரவு மற்றும் அலுவலர்களின் திறன்களை மேம்படுத்துதல் ஆகிய முக்கிய துறைகளின் கீழ் அதன் பணிகளை வழங்கியது.

(அ) செலவுச் சிக்கன பிரயோக மென்பொருள் தீர்வுகளை வழங்குதல்

ஏற்றுமதி பெறுகைகளை திருப்பியனுப்புதல் மற்றும் அத்தகைய பெறுகைகளை இலங்கை ரூபாவிற்கு மாற்றுவதை கண்காணிப்பதற்கு வெளிநாட்டு செலாவணித் திணைக்களத்தை வசதிப்படுத்துவதற்கு ஏற்றுமதி பெறுகைகள் கண்காணிப்பு முறைமையொன்றை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் உருவாக்கியது. ஏற்றுமதி பெறுகைகள் கண்காணிப்பு முறைமையானது இலங்கை சுங்கத்திலிருந்து பொருட்களின் ஏற்றுமதிகளுடன் தொடர்புடைய தரவுகளை நாளாந்த அடிப்படையில் பெற்றுக்கொண்டு அதிலிருந்து ஏற்றுமதி பெறுகைகளை திருப்பியனுப்புதல் தொடர்பில் வாராந்த அடிப்படையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட தரவுகளுடன் ஒப்பிடுகின்றது. மேலும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அறிக்கையிடப்பட்ட பணிகளின் ஏற்றுமதிக்காக பெறுகைகளை திருப்பியனுப்புதலுடன் தொடர்புடைய தரவுகளை முறைமை பெற்றுக்கொள்கின்றது. இம்முறைமையானது நன்கு அறிந்த மற்றும் தரவுகளினால் இயக்கப்படும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வெளிநாட்டு செலாவணி திணைக்களத்திற்கு வசதிப்படுத்துவதற்கு தரவுகளை தொகுத்து தேவைப்படும் அறிக்கைகளை உருவாக்குகின்றது.

தரவுகளை தொடர்ச்சியாக கண்காணித்து செம்மைப்படுத்தலை மேம்படுத்துவதற்கான புதிய அம்சங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் வாடிக்கையாளரின் எல்லைக்கு கடந்த வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் விரிவான தரவுகளின் சேகரிப்பிற்காக உருவாக்கப்பட்ட பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் மேலும் மேம்படுத்தியது. இதற்கு மேலதிகமாக, இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாட்டு மற்றும் கொள்கை தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறையை உயர்த்தும் பொருட்டு எல்லைக்கு தாண்டிய தரவுகளை பகுப்பாய்வுசெய்வதற்கான பகுப்பாய்வு தொகுதிகள் (dashboards) உருவாக்கப்பட்டன. மேலும், பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் சீரான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கான தொழில்நுட்ப உதவியை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தொடர்ந்தும் வழங்கியது.

நிதியியல் நிறுவனங்கள் மீதான தொடர்ச்சியான மேற்பார்வையையும் பரீட்சிப்பு செயன்முறையையும் வலுப்படுத்துவதற்காக, (உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் என்பவற்றிடமிருந்து ஒழுங்குமுறைப்படுத்தல் தரவுகள் சேகரிப்பு முறைமை) இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கமைவாக, நிதியியல் தகவல்களை அறிக்கையிடுவதற்கு இயலச்செய்து நிதியியல் தகவல் வலையமைப்பு (FinNet) முறைமை மேலும் மேம்படுத்தப்பட்டது.

தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்திற்கு அனைத்து வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளிடமிருந்து கிரமமான நேர இடைவெளிகளில் தரவுகளை சேகரிப்பதற்காக வைப்பாளர் வாரியான தரவுகள் சேகரிப்பு முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டது. மத்திய வங்கிக்கு தேவையான தகவல்களை சரிபார்த்து சமர்ப்பிப்பதற்கு நிதியியல் நிறுவனங்களை இயலச்செய்கின்ற வைப்பாளர் தரவுகள் சரிபார்த்தல் கருவி, சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் சுருக்க தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்திற்கான இணைய இடைமுகம், நிதியியல் தகவல் வலையமைப்பின் மூலமாக கிரமமான நேர இடைவெளிகளில் ஒழுங்குமுறைப்படுத்தல் திரட்டுக்களை சமர்ப்பிப்பதற்கான தொகுதி போன்ற மூன்று தொகுதிகளை இம்முறைமைக் கொண்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் பல்வேறு கைமுறை தொழிற்படுத்தல்களின் தானியகத்தை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் மேலும் வசதிப்படுத்தியது. காலப்பகுதியில், இணையவழி முறைமைகளினூடாக அதேபோன்று தொடர்புடைய வங்கி கருமபீடங்களினூடாக மேற்கொள்ளப்படும் தொழில்தருநர் கொடுப்பனவுகளை இணக்கப்படுத்தல், அக்கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முன்னர் மீளளிப்பு கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய பரீட்சை மீதியை சரிபார்த்தல், தொடர்புடைய வங்கிகளினூடாக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளை செயன்முறைப்படுத்தல், விசா நோக்கங்களுக்கான இலத்திரனியல் ஆவணங்களை வழங்குதல் போன்ற சில கைமுறை செயன்முறைகள் தன்னியக்கப்படுத்தப்பட்டன.

நாணயத் திணைக்களத்தின் நாணயக் கருமபீட தொழிற்பாடு, தேவையான அனைத்து அறிக்கைகளுடன் நாணய முகாமைத்துவ முறைமையுடன் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டு, காகிதப் பயன்பாட்டைக் குறைத்தது. மேலும், நாணயத் திணைக்களத்திற்காக போலி நாணயத் தாள்களை அடையாளங்காணும் புதிய முறைமை உருவாக்கப்பட்டது. இம்முறைமை நீதிமன்ற வழக்குகளுக்கு மத்திய வங்கியினால் வழங்கப்படும் அனைத்து தகவல்களையும் பதிவுசெய்து எதிர்காலத்தில் ஏற்படும் நீதிமன்ற வழக்குகளை இலகுவாக தொடர்புபடுத்த உதவுகிறது.

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர துறை தொழில்முயற்சிகளுக்கு வங்கிகளினூடாக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்கப்படும் மீள்நிதியிடல், வட்டி உதவுத்தொகை மற்றும் கடன் உத்தரவாதத் திட்டங்களை முகாமைசெய்வதற்கு முறைமையொன்றின் உருவாகத்தினை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் முன்னெடுத்தது. இம்முறைமையானது கடன் செயன்முறைப்படுத்தலை ஒழுங்குமுறைப்படுத்தி உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை அதிகரிக்கும் அதேவேளை கைமுறை வேலைகளை குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட முறைமையின் மீள்நிதியிடல் தொகுதி நடைமுறைப்படுத்தப்பட்டு நேரடிதொழிற்பாட்டில் இருக்கின்ற அதேவேளை வேறு தொகுதிகளின் உருவாக்கம் செயற்பாட்டிலுள்ளது.

திறைசேரி முறிகளுக்காக பொதுப் படுகடன் திணைக்களத்தினால் நேரடி வழங்கல் தளத்தை நடைமுறைப்படுத்துவதை வசதிப்படுத்துவதற்கு திறைசேரி முறி வழங்கல் முறைமை மாற்றியமைக்கப்பட்டது. இது கட்டம் I இல் முழுமையாக ஒதுக்கீடுசெய்யப்பட்டு திறைசேரியின் நிதியிடல் தேவைப்பாடுகளை வசதிப்படுத்தியது.

மத்திய வங்கியினுள் தகவல் தொழில்நுட்ப சொத்துக்களின் வாழ்க்கை சுழற்சியை வினைத்திறன்மிக்க மற்றும் காத்திரமான முறையில் முகாமைசெய்வதற்கு தகவல் தொழில்நுட்பத்தின் நிலையான சொத்துக்களுக்கான பொருட்பட்டியல் முகாமைத்துவ முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டது.

அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் அலுவலர் கடன் செயன்முறைப்படுத்தலின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு, தகவல் தொழில்நுட்ப திணைக்களமானது அலுவலர் நன்மை திட்டத்திற்காக புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட இணைய அடிப்படையிலான கடன் வழங்கல் முறைமையை உருவாக்கிய அதேவேளை அலுவலர் வீடமைப்பு கடன்களுக்காக புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட முறையை உருவாக்குவதை முன்னெடுத்தது.

கணக்காய்வு மதியுரைக் குழுவிலிருந்து விதந்துரைப்புக்களைப் பின்பற்றும் புதிய பணிப்பாய்வுகளை உள்ளடக்குவதற்கு உள்ளக பணிப்பாய்வுகளை தானியங்கப்படுத்தும் பணி கண்காணிப்பு முறைமை புதுப்பிக்கப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட செயற்றிட்டங்களை நிறைவுசெய்ததற்கு மேலதிகமாக, மத்திய வங்கியின் தொழிற்பாடுகளுக்கு முக்கியமாக விளங்கும் பல்வேறு புதிய முறைமைகளையும் மேம்பாடுகளையும் தகவல் தொழில்நுட்ப திணைக்களம் தொடங்கி முன்னெடுத்தது.

ஐஎஸ்ஓ 20022 சுவிப்ட் எம்எக்ஸ் (ISO 20022 SWIFT MX) புலம்பெயர்விற்காக சுவிப்ட் வழிகாட்டலுடன் (உலகளாவிய வங்கிகளுக்கிடையிலான நிதியியல் தொலைத்தொடர்பூட்டலுக்கான அமைப்பு) இணங்கும் பொருட்டு, ஏற்கனவேயுள்ள சுவிப்ட் எம்டி தகவல் மாதிரிகளை ஐஎஸ்ஓ 20022 எம்எக்ஸ் தகவல் மாதிரிகளுக்கு மாற்றல் செய்தல் செயன்முறையானது இலங்கை மத்திய வங்கியின் பொது பேரேட்டு முறைமையின் iGLASஇன் வெளிவாரி தகவல்களுக்காக வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது மத்திய வங்கியின் விசேட தரவுத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்து மென்பொருள் முறைமைகள் மற்றும் தொடர்புடைய செயன்முறைகளில் மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளையும் எளிதாக்கியது.

மேலும், ஆவண கையாள்கையுடன் தொடர்புடைய தனியாள் உற்பத்தித்திறனை அதிகரித்து பல்வேறு திணைக்களங்களில் பௌதீக ஆவண டிஜிட்டல் மயமாக்கல் செயன்முறைகளை நிறைவுசெய்வதன் மூலமாக தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஆவண முகாமைத்துவ முறைமையின் பயன்பாட்டை தொடர்ந்தும் விரிவுபடுத்தியது.

(ஆ) தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைத் தொடர்ச்சியாக மேம்படுத்தல்

அனைத்து தகவல் முறைமைகளும் தாக்குபிடிக்கும் தன்மையில் இருப்பதையும் பிந்திய தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் இசைந்துசெல்வதையும் உறுதிசெய்வதற்கு ஆண்டு காலப்பகுதியில் மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு பேணப்பட்டது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தொலைத்தொடர்பூட்டல் தொழிற்துறை அமைப்பு 942 தரமிடல் - 3 நியமத்துடன் இணங்குகின்ற விதத்தில் புதிய தலைமை அலுவலக தரவு நிலையத்தின் கட்டுமானத்தை பூர்த்திசெய்தது. இது, தேவையற்ற திறன் கூறுகள் மற்றும் கணினி உபகரணங்களுக்கு பணிபுரியும் சுயாதீன விநியோக பாதைகளைக் கொண்ட தரவுகளாகும்.

மேற்கூறிய புதிய தரவு மையத்துடன், தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது அதிவேக ஒளியிழை (fibre) மற்றும் கிகாபிட் ஈதர்நெட் (Gigabit Ethernet) மூலம் இறுதிப் பயனருக்கு அதிவேக கம்பி அகலப்பட்டியை விரிவுபடுத்துவதன் மூலம் தலைமை அலுவலக கட்டிடத்தின் உள்ளக பகுதி வலையமைப்பை (LAN) வடிவமைத்து மேம்படுத்த திட்டமிட்டுள்ளது.

(இ) அதிநவீன நிதியியல் சந்தை உட்கட்டமைப்பை நிறுவுவதற்காக பங்களிப்புச் செய்தல்

ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு தேசிய மட்டத்திலான தகவல் தொழில்நுட்ப செயற்றிட்டங்களுக்கான தொழில்நுட்ப நிபுணத்துவம் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது நோக்கெல்லை உருவாக்கம், வடிவமைத்தல், மற்றும் சோதனை கட்டங்களின் முறைமை நடைமுறைப்படுத்தலில் தீவிரமாக ஈடுபடுவதன் மூலம் தேசிய கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை நவீனமயமாக்கலிற்கு பங்களித்தது.

(ஈ) தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பையும் தாக்குபிடிக்கும் தன்மையையும் வலுப்படுத்துதல்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது வங்கியின் அனைத்து ஊழியர்களுக்காகவும் வீட்டிலிருந்து பணியாற்றக்கூடிய பாதுகாப்பான சூழலுக்கு வசதியளித்த அதேவேளை மத்திய வங்கியின் அனைத்து தகவல்தொழில்நுட்ப சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் வழிமுறைகளை மேற்கொண்டது. மத்திய வங்கியின் தகவல் பாதுகாப்பை நடைமுறைப்படுத்துவதற்கான முக்கிய ஆவணமான தகவல் பாதுகாப்பு கொள்கையானது வீட்டிலிருந்து பணியாற்றும் கொள்கை மற்றும் மடிக்கணினி பயன்பாட்டுக் கொள்கையை உள்ளடக்கியதுடன் இற்றைப்படுத்தப்பட்டது.

மென்பொருள் செயலிகள் தொடர்பில் உள்ளக ரீதியாக மேற்கொள்ளப்பட்ட அவ்வப்போதான பாதிக்கப்படக்கூடியதன்மை மதிப்பீடுகளுக்கு மேலதிகமாக, எந்தவொரு இணையவழி பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கும் தாக்குபிடிக்கக் கூடிய வகையில் முறைமைகள் சிறந்தமுறையில் இருப்பதை உறுதிசெய்வதற் காக தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புடன் தொடர்புடைய நிதியியல் தகவலனுப்பும் வலையமைப்புத் தொடர்பான மதிப்பீடொன்றும் செயலாற்றப்பட்டது. உயர்ந்த மட்டத்திலான பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக நிதியியல் தகவல் வலையமைப்பு மற்றும் ஏனைய இன்றியமையாத பணி முறைமைகளை இலக்காகக் கொண்டு வெளிவாரி தகவல் பாதுகாப்பு மதிப்பீடும் முன்னெடுக்கப்பட்டது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பாதுகாப்பு கொள்கைகள், தரவுகள் வகைப்படுத்தல் மற்றும் தரவுகளை மீளப்பெறும் முறைகள் தொடர்பான அறிவு மற்றும் வழிகாட்டல்களை வங்கி ஊழியர்களுக்கு வழங்குவதற்காக மெய்நிகர் பயனர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. போலியான மின்னஞ்சல்களை அடையாளம் காண்பதில் பயனர் விழிப்புணர்வை மேம்படுத்த போலியான உருவகப்படுத்துதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

(உ) தகவல் தொழில்நுட்ப ஆதரவு மற்றும் அலுவலர்களின் திறன்களை மேம்படுத்துதல்

தொழில்துறையின் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி, முறைமைகளுக்கு பாதுகாப்பான அணுகலை உறுதிசெய்கின்ற அதேவேளையில், வங்கியின் நாளாந்த தொழிற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்காக தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கான ஏற்பாடுகளுக்கு ஆதரவளிக்கப்பட்டன. தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தினால் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தொழில்துறை தரங்களுக்கு இணையாக முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகளின் கிடைப்பனவை உயர்மட்டத்தில் (99.5 சதவீதத்திற்கு மேல்) பேண மற்றும் அதேவேளையில் உதவி கருமபீடம் வரும் அனைத்து வினவல்களுக்கும் உரிய தீர்வையும் வழங்க முடிந்தது.

அலுவலர்களின் தகவல் தொழில்நுட்பத் திறன்களை அதிகரிப்பதற்கும் வங்கியினுள் அதிகளவான தொழில்நுட்பரீதியான திறனையும் அச்சுறுத்தல்களுக்குத் தயார்நிலையிலுள்ள சமூகத்தையும் பேணி வளர்ப்பதற்கும் உள்ளக வலையமைப்பில் மீது பொதுமக்கள் விழிப்புணர்வு பதாதைகள் வெளியிடப்படுவதை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டதுடன் அலுவலர்களுக்கு மின்னஞ்சலினூடாக பாதுகாப்பு ஆலோசனை விழிப்பூட்டல்களையும் அனுப்பியது.

இதற்கு மேலதிகமாக, தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் அலுவலர்கள், தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் தரத்தினையும் வங்கியுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பினையும் உயர்த்துவதற்குத் தேவையான தகவல் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் தொடர்பாக தமது திறன்களையும் அறிவையும் மேம்படுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச வலைத்தள கருத்தரங்குகள், மெய்நிகர் செயலமர்வுகள், மற்றும் மாநாடுகளில் முனைப்புடன் பங்குபற்றியிருந்தனர்.

17. உள்ளகக் கணக்காய்வு

1951ஆம் ஆண்டிலிருந்து இலங்கை மத்திய வங்கியில் உள்ளகக் கணக்காய்வு தொழிற்பட்டு வருகின்றது. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் நோக்கு, பணி, வேலைகளின் செயற்பரப்பு, அதிகாரம், பொறுப்புவாய்ந்ததன்மை, சுயாதீனம் மற்றும் இலக்கு என்பன நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுச் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. கணக்காய்வுகளை மேற்கொள்ளும் போது உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது உள்ளகக் கணக்காய்வாளர்களின் பன்னாட்டு தொழில்சார் நிபுணத்துவ நடைமுறைகளுக்கான கட்டமைப்பை பின்பற்றுகின்றது. 2022ஆம் ஆண்டில் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் தொகுப்பொன்று கீழே தரப்படுகின்றது.

17.1 உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள்

2023-2026ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கான உபாய கணக்காய்வுத் திட்டமும் 2023ஆம் ஆண்டிற்கான வருடாந்தக் கணக்காய்வுத் திட்டமும் தொகுக்கப்பட்டு 2022 திசெம்பர் இறுதியில் நாணயச் சபையின் ஒப்புதல் பெறப்பட்டது.

17.2 கணக்காய்வு ஒப்படைகளை மேற்கொள்ளுதல்

(அ) செய்முறை கணக்காய்வுகள் மற்றும் தகவல் முறைமைகளின் கணக்காய்வுகள்

செய்முறை மற்றும் தகவல் முறைமைகள் என்பவற்றின் கணக்காய்வுகள் 2022இல் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு கணக்காய்வு ஒப்படைப்பும் திட்டமிடல், செயற்படுத்தல், கணக்காய்வுப் பெறுபேறுகளை தொடர்பூட்டல் மற்றும் கணக்காய்வு விதந்துரைப்புக்களின் நடைமுறைப்படுத்தலை பின்தொடர்தல் எனும் நான்கு கிரமமான படிகளில் மேற்கொள்ளக்கொள்ளப்பட்டன. கொள்கை, இணங்குவிப்பு, தொழிற்பாடு, சட்டம் மற்றும் ஏனைய தொடர்பான இடர்நேர்வு விடயப்பரப்புக்களை உள்ளடக்கி ஆண்டுக் காலப்பகுதியில் நாற்பத்தேழு (47) கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்டதுடன் அதற்கமைவான கணக்காய்வு விதந்துரைப்புக்களுடன் கூடிய கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பான திணைக்களங்களுக்கு தொடர்பூட்டப்பட்டன.

(ஆ) செய்முறை அறிக்கையிடல்

கணக்காய்வு ஒப்படைப்புக்களை மேற்கொள்வதில் காணப்படும் முன்னேற்றம் நாணயச் சபைக்கும் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவிற்கும் அறிக்கையிடப்பட்டது. கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வுக் குழுவினூடாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கண்காணிப்பாளருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. மேலும், கோரப்பட்டவாறும் 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுடன் இசைந்து செல்லும் விதத்திலும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் உள்ளடக்கங்கள் நிதி அமைச்சின் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

17.3 தரமதிப்பீடு மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

ஆண்டுக் காலப்பகுதியில், உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பில் முன்னெடுக்கப்படுகின்ற செயலாற்றக் கண்காணிப்பு மற்றும் காலாந்தர சுய மதிப்பீடு என்பன மேற்கொள்ளப்பட்டதுடன் பெறுபேறுகள் மதியுரைக் கணக்காய்வுக் குழுவினூடாக நாணயச் சபைக்கு தொடர்பூட்டப்பட்டது.

17.4 இயலுமையைக் கட்டியெழுப்புதல் மற்றும் விழிப்புணர்வு

ஆண்டுக் காலப்பகுதியில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் இயலாற்றலைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்கள் பல்வேறு தொடர்புடைய துறைகளில் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 2022இன் முதலாம் காலாண்டில் "உள்ளகக் கணக்காய்வு வசதிப்படுத்தல் வழிகாட்டல்கள்" மீது வங்கியின் கணக்காய்வு ஒருங்கிணைக்கும் அலுவலர்களுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்றை உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் நடாத்தியது. உள்ளகக் கணக்காய்வு திணைக்கள அலுவலருக்கு நன்மையக்கும் தகவல் முறைமைகள் கணக்காய்வு தொழில்சார் நிபுணரால் விருந்தினர் விளக்கக்காட்சியொன்று முன்வைக்கப்பட்டது.

17.5 நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவிற்கு வசதிப்படுத்தல்

மதியுரைக் கணக்காய்வுக் குழு என்பது நிதியியல் அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடு, உள்ளகக் கணக்காய்வு, வெளியகக் கணக்காய்வு மற்றும் நாணயச் சபையால் நியமிக்கப்பட்ட வேறு ஏதேனும் விடயங்கள் தொடர்பில் நாணயச் சபைக்கு மதியுரையை

வழங்குகின்ற நாணயச் சபையின் துணைக்குழுவாகும். உள்ளகக் கணக்காய்வு குழுவின் பணிப்பாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் துணைச் செயலாளராக தொழிற்படுகின்றார். இதற்கமைய, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் மதியுரைக் கணக்காய்வுக் குழுவிற்கு செயலக வசதிப்படுத்தலை வழங்குகின்றது. மேலும், ஆண்டுக் காலப்பகுதியில் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் விதந்துரைப்புக்களின் நடைமுறைப்படுத்தலை பின்தொடர்கின்ற நடவடிக்கைகளும் காலாந்தர ரீதியாக முன்னெடுக்கப்பட்டது.

18. பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் ஏற்படுகளால் வலுவூட்டப்பட்டவாறு, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் ஒழுங்கானதும் சுமூகமானதும் தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளை முகாமை செய்தல் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை கண்காணித்தல் என்பவற்றிற்கான பொறுப்பு பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

18.1 பன்னாட்டு ஒகுக்குகள் முகாமைத்துவம்

பன்னாட்டு ஒதுக்குகள் முதலீட்டு மேற்பார்வைக் குழுவின் பரந்தளவான வழிகாட்டலின் கீழ் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டுக் கொள்கைக் கூற்று மற்றும் முதலீட்டு வழிகாட்டல்களுக்கமைவாக பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தால் மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2016ஆம் ஆண்டிலிருந்து அதன் வெளிநாட்டு ஒதுக்குகளை முகாமைசெய்யும் போது, சொத்து மற்றும் பொறுப்புக் கட்டமைப்பிலிருந்து தோன்றுகின்ற மாதிரியொன்றை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞான ரீதியான கட்டமைப்பொன்று மத்திய வங்கியால் பின்பற்றப்பட்டது. இது, மத்திய வங்கியின் இடர்நேர்வு சகிப்புத்தன்மைக்குட்பட்டு திரவத்தன்மைத் தேவைப்பாடுகள், மூலதனப் பாதுகாப்பு, வருமானம் ஈட்டல் ஆகிய குறிக்கோள்களை கருத்திற்கொண்டு உருவாக்கப்படதாகும்.

நியதி ஒதுக்கு முகாமைத்துவத் தொழிற்பாடுகள் வரையறுக்கப்பட்டமையாலும் நேரம் மற்றும் சூழ்நிலை குறித்த அணுகுமுறைகளைக் கொண்ட பாதையொன்றைப் பின்பற்றுவதற்கு பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் கட்டாயப்படுத்தப்பட்டதாலும் 2022ஆம் ஆண்டு வரலாற்றிலேயே மிகவும் அசாதரணமான சவால்மிக்க ஆண்டாக குறிப்பிடப்பட்டது. உலகளாவிய துறைகளில் எளிமையான யதார்த்தமிக்கவையாக மாறுகின்ற பல்வேறு அழுத்தச் சூழ்நிலைகளுக்கு மத்தியில் 2020இலிருந்து தோன்றிய முன்னெப்பொழுதுமில்லாத வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை நெருக்கடியானது 2021இன் நடுத்தர காலத்திலிருந்து வேறுபட்ட பரிமாணத்திற்கு மாறுகின்ற மரபார்ந்த ஒதுக்கு முகாமைத்துவ இலக்குகளுக்கு வழிவகுத்தது. இலங்கையில் மிகவும் முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையின் பற்றாக்குறையுடன் கடுமையான சவால்களையும் எதிர்கொண்டது.

வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையின் இத்தகைய பற்றாக்குறையானது 2021இலிருந்து அடிப்படையில் எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் நிலக்கரி போன்ற அத்தியாவசியத் தேவைகளில் கடுமையான பற்றாக்குறையை ஏற்படுத்தும் குழப்பம்மிக்க சூழ்நிலையாக மாறியதுடன் 2022இன் முதலாம் காலாண்டின் இறுதியளவில் இத்தகைய சூழ்நிலை முன்னெப்பொழுதுமில்லாத மட்டமொன்றிற்கு தீவிரமடைந்தது. வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடியை முறியடிக்கையில் பல்வேறு நெருக்கடி தொடர்பான வழிமுறைகளை வழங்குவதற்கும் அத்துடன் மிக ஆகக்குறைந்த மட்டங்களால் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளைப் பேணுவதற்கு அவசியமான வெளிநாட்டுச் செலாவணித் தேவைகளை நிறைவுசெய்வதில் அருமையாக கிடைக்கப்பெற்ற வெளிநாட்டுச் செலவாணியை உகந்த முறையில் ஒதுக்குவதற்கும் இது காரணமாக அமைந்தது. அதேநேரம், அத்தியாவசிய தேவைகளுக்கான பாரியளவான அழுத்தமும் அதிகப்படியான பொதுமக்கள் எதிர்ப்பும் காணப்பட்ட போது, தீவிரமாக மட்டுப்படுத்தப்பட்டதும் விரைவாக நலிவடைந்ததுமான வெளிநாட்டு ஒதுக்குகளைக் கொண்ட வெளிநாட்டு செலாவணியின் கேள்வி முகாமைத்துவமானது மத்திய வங்கியின் ஒதுக்கு முகாமைத்துவக் குழுவிற்கு ஒருமித்த கருத்தைக் கொண்ட கடினமான பணியொன்றாக காணப்பட்டதுடன் அக்குழுவின் முதன்மையான கவனம் திரவத்தன்மை முகாமைத்துவம் மீதே தெளிவாக காணப்பட்டது. 2022 ஏப்பிறலில் மேற்கொள்ளப்பட்ட படுகடன் மீள்கட்டமைப்பு முன்முயற்சிகளின் அறிவித்தலுடன், வெளிநாட்டுச் செலாவணி படுகடன் தீர்ப்பனவானது பல்புடைய நிறுவனங்களுக்கான படுகடன்களின் தீர்ப்பனவுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. எனினும், மத்திய வங்கியானது நியம ஒதுக்கு முகாமைத்துவ நடத்தைகளிலிருந்து விலகுகின்ற காலம் மற்றும் சூழ்நிலை சார்ந்த குறித்த வழிமுறைகளை பின்பற்றவேண்டியிருந்தது. இதன் விளைவாக, ஆண்டின் இறுதியளவை நோக்கி, உள்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மேம்பாட்டுடன் வெளிநாட்டு நாணயத்திற்கான தீவிரமான கேள்வியொன்றில் படிப்படியான தளர்வொன்று அவதானிக்கப்பட்டது.

18.2 செயலாற்ற பகுப்பாய்வு மற்றும் வசதிப்படுத்தல் நடவடிக்கைகள்

வெளிநாட்டு ஒதுக்கு மட்டங்களில் ஏற்பட்ட சடுதியான வீழ்ச்சிக்கு மத்தியிலும், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது மத்திய வங்கி ஒதுக்குகளையும் மொத்த அலுவல்சார் ஒதுக்குக்களையும் வழமை போன்று நாளாந்த அடிப்படையில் தொகுத்த அதேவேளையில் தேறல்செய்யப்பட்ட ஆதாய அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்ட ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைகளின் செயலாற்றத்தினை மதிப்பீடுசெய்தது. தேவைப்பட்டவாறு, ஒதுக்கு முகாமைத்துவத்தின் செயலாற்றம் முறையே பன்னாட்டு ஒதுக்குகள் முதலீட்டு மேற்பார்வைக் குழுவிற்கும் நாணயச் சபைக்கும் காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் இங்கே ஒதுக்குமுகாமைத்துவம் மீதான கட்டுப்பாடுகள் கலந்தாலோசிக்கபட்டது.

அலுவல்சார் ஒதுக்குகளை கட்டியெழுப்புதல் இடம்பெறும் வரை குறுகிய கால வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையிலும் கூட தாங்கியிருப்பொன்றை வழங்கும் நோக்குடன், மத்திய வங்கியின் இணைத் தரப்பினர்களான றிசேர்வ் பாங்க் ஒப் இந்தியா, வங்காளதேச வங்கி மற்றும் சீன மக்கள் வங்கி என்பவற்றுடன் இணைந்து இருபுடைய நாணய பரஸ்பர உடன்படிக்கைளுடாக வெளியக நிதிய ஏற்பாடுகள் பெறப்பட்டது. றிசேர்வ் பாங்க் ஒப் இந்தியா சார்க் பரஸ்பர வசதியின் இரண்டாவது எடுப்பனவு 2022 சனவரியில் நிறைவேற்றப்பட்ட அதேவேளை, ஆரம்பத்தில் இரு தடவை கால நீடிப்பு செய்யப்பட்டு ஓகத்து/செத்தெம்பர் 2021 இல் வங்காளதேசமிடமிருந்து பெறப்பட்ட பரஸ்பர வசதியானது 2022இல் மேலும் கால நீடிப்பு செய்யப்பட்டது. பியூபிள் பாங்க் ஒப் சைனாவிடமிருந்து பெறப்பட்ட பரஸ்பர வசதி மேலும் பன்னிரண்டு மாதங்களுக்கு கால நீடிப்பு செய்யப்பட்டது.

அதேவேளை, தீவிர சவால்மிக்கதாக காணப்பட்ட உலகளாவிய மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தை நிலைமைகளுக்கு மத்தியில், வெளிநாட்டு இணைத்தரப்பினர்களின் பணம் தூயதாக்கலுக்கு எதிராதல்/ தீவிரவாத நிதியிடலை முறியடித்தல் என்பவற்றை பின்பற்றுதலை/ இணங்கியொழுகுதலை மதிப்பிடுவதற்கு வருடாந்த மீளாய்வு தற்போது செயற்பாட்டிலுள்ள இணைத் தரப்பினர்களுக்காக 2022இல் கொண்டு நடாத்தப்பட்டது.

திறைசேரி முகாமைத்துவ முறைமையினுடைய உரிமத்தின் காலம் முடிவடைதலின் மீது புதிய ஒதுக்கு முகாமைத்துவ முறைமையொன்று 2022இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஒதுக்கு முகாமைத்துவ முறைமையின் முறைமை நிர்வாகத் தொழிற்பாட்டிற்குரிய பொறுப்பு ஒதுக்கு முகாமைத்துவ முறைமையின் பயனராக, பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு உரித்தாக்கப்படுகின்றது.

18.3 உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தை அபிவிருத்திகள்

ஆண்டுக் காலப்பகுதியில், கடுமையான திரவத்தன்மைப் பற்றாக்குறையொன்றை முகம்கொடுத்த உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையை கண்காணித்து வழிகாட்டுவதில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் தீவிரமாக ஈடுபட்டது. 2021 செத்தெம்பரிலிருந்து மத்திய வங்கியால் வழங்கப்பட்ட வழிகாட்டலுக்கமைவாக, ஐக்கிய அமெரிக்க டொலர்/இலங்கை ரூபா செலாவணி வீதம் 2022 மார்சின் ஆரம்ப காலம் வரை ரூ.200 - ரூ.203 இடையிலான வீச்சில் காணப்பட்டது. எவ்வாறாயினும், நாட்டின் மொத்த அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளின் கடுமையான வீழ்ச்சியின் காரணமாகவும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலவாணிச் சந்தையில் ஏற்பட்ட கணிசமான அழுத்தங்களின் காரணமாகவும் 2022 மார்சு 07 அன்று செலாவணி வீதத்தில் அளவிடப்பட்ட சீரமைப்பை அனுமதிப்பதற்கான மத்திய வங்கியின் அனுமதியைத் தொடர்ந்து, ஐக்கிய அமெரிக்க டொலர்/இலங்கை ரூபா செலாவணி வீதம் விஞ்சத் தொடங்கியது. சவால்மிக்க திரவத்தன்மை நிலைமைக்கும் செயற்படும் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையற்ற நிலைமைக்கும் மத்தியில் செலாவணி வீதத்தின் ஒருநாளுக்குள்ளான திரவத்தன்மையை முகாமை செய்கின்ற வழிமுறையொன்றாக 2022 மே 13இலிருந்து வேறுபாடு எல்லையுடன் மத்திய வங்கி செலாவணி வீத வழிகாட்டலொன்றை அறிவிக்க ஆரம்பித்தது. அதனைத்தொடர்ந்து, 2022 மேயிலிருந்து 2022 திசெம்பர் வரையான காலப்பகுதியில் செலாவணி வீதம் படிப்படியாக அதிகரித்ததுடன் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிறையேற்றப்பட்ட சராசரி உடன் செலாவணி வீதம் ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றிற்கு ரூ.360 - ரூ.363இற்கும் இடையில் காணப்பட்டது. 2022 மே மாதத்தின் நடுப்பகுதியில், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது, ஐம்பத்து நான்கு வேறு உலக நாணயங்களுக்கான நடு செலாவணி வீதங்களுடன் இணைந்து விதந்துரைக்கப்பட்ட வேறுபாடு எல்லையுடன் ஐக்கிய அமெரிக்க டொலர்/ இலங்கை ரூபா நடுத்தர உடன் வீதத்தை மத்திய வங்கியின் வலைத்தளத்தில் நாளாந்த அடிப்படையில் வெளியிடுவதற்கு ஆரம்பித்தது. இதற்கு மேலதிகமாக, இலங்கை ரூபாக்கெதிரான ஒன்பது பிரதான நாணயங்களுக்கான சராசரி தந்தி மாற்றல் கொடுப்பனவு மற்றும் விற்பனை செலாவணி வீதங்களும் நாளாந்த அடிப்படையொன்றில் மத்திய வங்கியின் வலைத்தளத்தில் வெளியீடு செய்யப்பட்டது.

2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், கட்டாயமாக மாற்றப்பட்ட பொருட்கள் ஏற்றுமதிப் பெறுகைகள், மாற்றப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் மாற்றப்பட்ட பணி ஏற்றுமதிப் பெறுகைகள் என்பவற்றின் ஒரு பகுதியை மத்திய வங்கி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் தேசிய சேமிப்பு வங்கிகளிடமிருந்தும் தொடர்ந்தும் கொள்வனவு செய்தது. இதற்கு மேலதிகமாக, உரிமம்பெற்ற வங்கியும் தேசிய சேமிப்பு வங்கியும் அத்தகைய பெறுகைகளின் மற்றுமொரு பகுதியை நிலக்கரி மற்றும் எரிபொருள் என்பவற்றை இறக்குமதி செய்தலின் நிதியிடலுக்கு தாமாகவே வழங்கியது. மேலும், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையை தீர்க்கும் பொருட்டு, விரிவான அளவிலான அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்காக வெளிநாட்டுச் செலாவணியை பயன்படுத்துகின்ற அதேவேளை அத்தியாவசிய இறக்குமதிகளை முன்னுரிமைப்படுத்தி அனைத்து வங்கிகளுக்கும் அறிவுறுத்தல் அத்துடன் கிடைப்பனவாகவுள்ள வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களுடன் வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்களை முகாமை செய்வதற்கு அவ்வங்கிகளை ஊக்குவித்தல் போன்ற பல்வேறு புதிய வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கி வற்புறுத்தியது.

பொதுமக்களின் அமைதியின்மைக்கு மத்தியில் பொருளாதார நடவடிக்கைகளை பேணுவதில் பல்வேறு பொருட்களுக்கு மத்தியில் எரிபொருள், சமையல் வாயு, நிலக்கரி, மருந்தாக்கல் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் போன்ற வெளிநாட்டுச் செலாவணியை அவசியமாகக் கொண்ட பொருட்களுக்கான கணிசமான எண்ணிக்கையிலான கோரிக்கைகளின் தேசியளவான முக்கியத்துவத்தின் காரணமாக அக்கோரிக்கைகளுக்கு கணிசமாக வசதியளித்து தேறிய விற்பனையாளரொருவராக மத்திய வங்கி தொழிற்பட்டதே உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நடவடிக்கைகளின் குறிப்பிடத்தக்க அம்சமாக காணப்பட்டது. இத்தகைய முயற்சியில், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது அரசாங்கம், அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகள், தனியார் துறை தொழிற்பாட்டாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் உட்பட பல்வேறு ஆர்வலர்களுடன் தீவிரமாக ஈடுபட்டதுடன் அவர்களின் வினாக்களையும்/ கரிசனைகளையும் தீர்ப்பதற்கு குறிப்பிடத்தக்க நேரத்தை அர்ப்பணித்தது.

அதேவேளை, சந்தை நடத்தையின் அதிகளவான நியமத்தை உறுதிசெய்கின்ற அதேவேளை வெளிநாட்டுச் செலாவணியின் மிகையான தளம்பலை பாதுகாத்து வெளிநாட்டு செலாவணி நிலைமைகளை கட்டியெழுப்புவதை தவிர்ப்பதை உறுதிசெய்வதற்காக பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையின் மிதமான தொழிற்பாட்டிற்கு வசதியளிப்பதற்கு விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் குறித்த உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கிகளுக்கு ஏற்புடைத்தான தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலைமைகளை தற்காலிகமாக மீள்திருத்துவதற்கு வழிமுறைகளை எடுத்தது.

சந்தை எண்ணப்பாங்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், உள்நாட்டு வெளிநாட்டு சந்தையின் ஒழுங்கான நடத்தையை உறுதிப்படுத்தும் விதத்திலான பொறுப்பாண்மை தமக்கு ஒப்படைக்கப்பட்டதற்கமைவாக பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது வெளிநாட்டுச் செலாவணியில் தேவையற்ற தளம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு தமது சொந்த விதந்துரைப்புக்களை வழங்கிய அதேவேளை, ஆண்டு முழுவதும் மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களாலும் அதேபோன்று வேறு நிறுவனங்களாலும் அனுப்பப்படும் விடயங்கள் தொடர்பில் பல்வேறு கொள்கை மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் சாத்தியமான தாக்கங்கள் மீது அதன் எண்ணங்கள், அவதானிப்புக்கள் மற்றும் விதந்துரைப்புகள் என்பவற்றை தொடர்ந்தும் வழங்கியது.

பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது சந்தை தொழிற்பாடுகள் குழுவின் செயலகமாக தொடர்ந்தும் தொழிற்பட்டதுடன் அதையொத்த தொழிற்பாட்டிற்கு காத்திரமான விதந்துரைப்புக்களை உருவாக்குவதற்காக அனைத்து தொடர்பான தகவல்களையும் வழங்கியது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மற்றும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் என்பவற்றின் நியதிகளுக்கமைவாக அபிவிருத்திகள் மீது அதன் நுட்பங்களையும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நாணயக் கொள்கை குழுவிற்கு வழங்கியது. மேலும் உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையின் அபிவிருத்திகள் மீதான கரிசனைகளும் தொலைநோக்கும் உரிய காலத்தில் எடுத்துக்காட்டப்பட்டதுடன் நாணயச் சபைக்கு தெரியப்படுத்தப்பட்டு பொருத்தமான விதைந்துரைப்புக்கள் வழங்கப்பட்டது.

அதேவேளை, உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையை அபிவிருத்திசெய்கின்ற அதேவேளை சந்தை கண்காணிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதலை நோக்காகக் கொண்டு பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது மத்திய வங்கியால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மூலதன சந்தை அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான பங்களிப்பையும் உள்ளீடுகளையும் தொடர்ந்து வழங்கியது.

19. சட்டம் மற்றும் இணங்குவிப்பு

சட்டத் திணைக்களம் பேரண்ட பொருளாதார இடர்பாடுகளால் ஏற்பட்ட சவாலான சூழலுக்கு மத்தியிலும் மத்திய வங்கியின் அனைத்து மூலோபாய முன்னுரிமைகளை அடைவதில் தீவிரமாக பங்களித்தது. 2022 ஆம் ஆண்டின்போது சட்டத் திணைக்களத்தால் நிகழ்த்தப்பட்ட சில முக்கிய செயற்பாடுகள் சுருக்கமாக பின்வருமாறு.

01.11.2019 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் முன் நடவடிக்கை ஒன்றுமான இலங்கை

மத்திய வங்கி சட்டத்தினை நிதியமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர் திணைக்களம் மற்றும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியும் உள்ளடங்கலாக பல்வேறு ஆர்வலர்களின் உதவியுடன் சட்டத் திணைக்களமானது சட்டமாக இயற்றுவதில் ஈடுபட்டது. சொல்லப்பட்ட சட்டமூலமானது அத்தகைய ஆர்வலர்களுடன் இணைந்து மத்திய வங்கியியலில் புதிய பகுதிகளை உள்ளடக்கம் செய்வதற்காக மேலும் விருத்தியாக்கப்பட்டது. சட்டமூலமானது, மற்றவற்றுக்கிடையில், மத்திய வங்கிக்கு மேம்படுத்தப்பட்ட நிருவாக நியமங்கள், அதன் குறிக்கோள்களை பாதுகாப்பதற்கான மேம்படுத்தப்பட்ட சபைக் கட்டமைப்பு, மேம்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரங்கள் போன்றவற்றுடனான சுயாட்சியை வழங்குகிறது. சட்டமாக இயற்றப்பட்டவுடன் அது 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தினை பதிலீடு செய்யும்.

மேலும், 2022 ஆம் ஆண்டின் போது, பல்வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் அரங்குகளில் மத்திய வங்கியின் அதிகாரங்களை மேம்படுத்துகின்ற ஏனைய சில சட்டங்களின் வரைபில் சட்டத் திணைக்களம் ஈடுபட்டது. மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை மற்றும் தீர்மானக் கட்டமைப்பினை மேம்படுத்துகின்ற வர்த்தகம், தீர்வு மற்றும் வலையமைப்புச் சட்டம், வங்கி (விசேட ஏற்பாடுகள்) சட்டம், நுண்கடன் மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரச் சட்டம் மற்றும் நிதியியல் சொத்துக்கள் முகாமைத்துவ முகவராண்மைச் சட்டம் ஆகியவை சொல்லப்பட்ட புதிய சட்டங்களில் உள்ளடங்குகின்றன. மேலும், நாட்டின் சந்தை வளர்ச்சியிலிருந்து எழும் பல்வேற சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரங்களை மேம்படுத்தும் நோக்குடன் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம், 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக்குத்தகை சட்டம், 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம் ஆகியவற்றுக்கு மேலதிக திருத்தங்களை அறிமுகம் செய்வதற்காக மற்றைய மேற்பார்வை திணைக்களங்களுடன் சட்டத் திணைக்களம் இணைந்து செயற்பட்டது.

2022 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதார வீழ்ச்சியை தொடர்ந்து மத்திய வங்கிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளில் கவனிக்கத்தக்க அதிகரிப்பு காணப்பட்டதுடன் சட்டத் திணைக்களம் தொடர்புடைய திணைக்களங்களின் உதவியுடன் வங்கியின் நலவுரித்துகளை பாதுகாப்பதற்கான சமர்ப்பணங்களை மேற்கொண்டது. நாட்டின் சட்ட அமலாக்க அதிகார சபைகளுடன் இணைந்து தடைசெய்யப்பட்ட திட்டங்கள், அதிகாரமளிக்கப்படாத நிதிக்கம்பனிகளுக்கெதிராக வழக்கு தொடர்வதை சட்டத் திணைக்களம் தொடர்ந்ததோடு நாணயச்சபையினால் உரிமம் இரத்துசெய்யப்பட்ட நிதி நிறுவனங்களை அத்தகைய நிறுவனங்களின் கடன்கொடுநர்கள் மற்றும் வைப்பாளர்களின் நலவுரித்துகளை பாதுகாக்கும் நோக்குடன் ஒடுக்குவதற்கான வழக்குகளையும் தொடர்ந்தது.

ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரத்தை மேம்படுத்துவதன் மூலம் வங்கி மற்றும் நிதியியல் துறையின் உறுதிப்பாட்டினை உறுதி செய்யும் நோக்குடன் மத்திய வங்கியால் நிருவகிக்கப்படும் சட்டங்களின் கீழ் நாணய சபையால் வெளியிடப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களை உருவாக்குதல் மற்றும் திருத்துவதில் சட்டத் திணைக்களம் மத்திய வங்கியின் மற்றைய திணைக்களங்களுடன் தீவிரமாக இணைந்து செயற்பட்டது. 2022 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டம் மற்றும் 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டம் உள்ளடங்கலாக மத்திய வங்கிக்கு வெளியில் உருவாக்கப்பட்ட நியதிச்சட்டங்களை மீளாய்வு செய்து அதன் ஏற்பாடுகளுக்கான அவதானிப்புகளை சட்டத் திணைக்களம் வழங்கியது.

மேலும் 2022 ஆம் ஆண்டில் சட்டத் திணைக்களமானது பணம் தூயதாக்கலுக்கு எதிரான கண்ணோட்டத்தில் வருடாந்த எதிர்தரப்பு மீளாய்வுகளை மேற்கொண்டு வெளிநாட்டு எதிர் தரப்பின் இணங்குவிப்பு தேவைப்பாடுகளை வசதிப்படுத்துவதற்காக வங்கியின் இணங்குவிப்பு செயற்பாட்டினை கையாளுவதில் ஈடுபட்டது. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மத்திய வங்கி இணங்குவதை உறுதி செய்யம் பொருட்டு சட்டத் திணைக்களத்திற்குள் தாபிக்கப்பட்டுள்ள தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு மத்திய வங்கி தொடர்பாக 188 தகவல் கோரிக்கைகளையும் 23 மேன்முறையீடுகளையும் கையாண்டது. நிதி மற்றும் நிதிக்குத்தகை துறைகளில் வளர்ந்துவரும் பிரச்சினைகள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்கள், அதிகாரமளிக்கப்படாத நிதித்தொழில் போன்ற நிதியியல் துறையின் பிரச்சினைகள் மீதான பொதுமக்கள் விழிப்புணர்வை மேம்படுத்துவதில் சட்டத் திணைக்களம் தீவிரமாக ஈடுபட்டது. சட்டத் திணைக்களத்தின் அதிகாரிகள் பல அரங்குகளில் வளவாளர்களாக வங்கியை பிரதிநிதித்துவம் செய்ததோடு நிதியியல் சொத்துக்கள் முகாமைத்துவ முகவராண்மைக் கட்டமைப்பு மற்றும் நாட்டின் தேசிய நிதியியல் சேர்க்கை உபாயம் ஆகியவற்றின் உருவாக்கம், நிவ்யோர்க் பெடரல் நீதிமன்றத்தில் ஹமில்டன் ரிசர்வ் வங்கியினால் தொடரப்பட்ட வழக்கு, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட் இன் கடன் மறுசீரமைப்பு படிமுறை, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் மீளாய்வு உள்ளடங்கலாக பல்வேறுபட்ட உள்ளக/வெளியக செயற்குழுவில் பணியாற்றினர்.

20. பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்பு

மத்திய வங்கியின் மைய நியதிச்சட்ட குறிக்கோள்களில் ஒன்றான நாட்டில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பேணும் நோக்குடன் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது நிதியியல் முறைமையைப் பாதிக்கின்ற முறைமைசார்ந்த இடர்நேர்வுக் கட்டியெழுப்பப்படுதலை மதிப்பீடு செய்வதற்கு பரந்தளவான பகுப்பாய்வொன்றை நடாத்துகின்றது. இத்தகைய நோக்கத்திற்காக பகுப்பாய்வுகளை நடாத்தும் பொருட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்கள், பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள், பல்வேறுபட்ட ஏனைய மூலங்கள் என்பவற்றிலிருந்தான தரவுகளை பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் ஒன்றுதிரட்டுகின்றது. நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை பேணும் பொருட்டு முறைமைசார்ந்த இடர்நேர்வுகளைத் தணிப்பதற்காக இத்தகைய மதிப்பீடுகளின் பெறுபேறுகள் மத்திய வங்கியின் கொள்கை வடிவமைப்பு செயன்முறைக்கு வசதியளித்து பேரண்டமுன்மதியுடைய கொள்கை வழிமுறைகளின் அறிமுகத்திற்கு வசதியளிக்கின்றன. இதற்கமைய அத்தகைய பகுப்பாய்வுகளானது நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தும் அதேவேளையில் நுண்பாக முன்மதியுடைய ஒழுங்குமுறைகளையும் மேற்பார்வையையும் முழுமையாக்குகின்றன.

ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் மூலம் அறிக்கையிடப்பட்ட தரவுகளையும் வேறு மூலங்களிலிருந்து பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட தரவுகளையும் பயன்படுத்தி உலகளாவிய மற்றும் உள்நாட்டு ரீதியான பேரண்ட பொருளாதார அபிவிருத்திகள், நிதியியல் சந்தை நடவடிக்கைகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் துறை என்பவற்றிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளை பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புக் கட்டமைப்பு உள்ளடக்குகின்றது. மேலும், நிதியியல் நிறுவனங்களில் காணப்படும் பாதிக்கப்படக்கூடிய தன்மைகளை மதிப்பீடுசெய்வதற்கு அழுத்தப்பரிசோதனைகளையும் வீட்டலகு மற்றும் கூட்டாண்மைத் துறையின் அபிவிருத்திகளினால் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீதான தாக்கத்தை மதிப்பீடு செய்யும் பகுப்பாய்வுகளையும் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் நடாத்துகின்றது. இதற்குமேலதிகமாக, உள்நாட்டு நிதியியல் முறைமையின் பல்வேறு துணைப் பிரிவுகளின் உறுதிப்பாட்டையும் ஆற்றல்வாய்ந்ததன்மையையும் மதிப்பீடு செய்வதற்கு பல்வேறு கூட்டு நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குறிகாட்டிகளை பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் தொடர்ச்சியாக தொகுத்த அதேவேளை, இத்தகைய குறிகாட்டிகளின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்தது.

அத்தகைய பகுப்பாய்வுகளைத் தொடர்ந்து, 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் மூலம் காலாண்டு ரீதியான இடர்நேர்வு மதிப்பீடுகள் உட்பட சபை பத்திரங்கள், நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கான சாத்தியமான இடர்நேர்வுகளும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு மீதான வேறு சமகால கரிசனைகளும் எடுத்துக்காட்டப்படும் வகையில் நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், நிலைபெறத்தக்க நிதியுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் தொடர்ச்சியாக வசதியளித்ததுடன் அதே நோக்கத்திற்காக திணைக்களத்திற்குள் தனியான பிரிவொன்றையும் தாபித்தது. 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகளின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

(அ) அழுத்தப் பரிசோதனைக் கட்டமைப்பு

பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து பெறப்பட்ட தொழில்நுட்ப உதவியுடன் உருவாக்கப்பட்ட கட்டமைப்பின் மூலம் வங்கித்தொழில் துறை மீதான இயக்கவாற்றல்மிக்க கடன்தீராற்றல் அழுத்தப் பரிசோதனையை பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் ஆண்டுக்கு இருமுறை என்ற அடிப்படையில் நடாத்தியது. இயக்கவாற்றல்மிக்க கடன்தீராற்றல் அழுத்தப் பரிசோதனை மாதிரியானது கருதுகோள்சார்ந்த ஆனால் நிகழக்கூடிய சூழ்நிலைகளின் கீழ் நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மதிப்பீடு செய்வதன் மூலம் பேரண்டமுன்மதியுடைய அணுகுமுறையை வழங்குகின்றது. பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது பேரண்ட பொருளாதார சூழ்நிலைகளை வடிவமைப்பதிலும் வங்கித்தொழில் துறையின் மீதான ஆழமான தரவுச் சேகரிப்புக்களிலும் ஈடுபட்டதுடன் அதனைத்தொடர்ந்து வங்கிகளின் தாக்குபிடிக்கும் தன்மை தொடர்பில் எதிர்பார்க்கப்பட்ட அதிர்ச்சிகளின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு அழுத்தப் பரிசோதனை காலவரம்பிற்கு விரிவுபடுத்தப்பட்ட இடர்நேர்வு மாதிரிகளை உள்வாங்குகின்ற கணியம்சார்ந்த கருவித்தொகுதியை செயற்படுத்தியது. கருதுகோள்சார்ந்த பேரண்ட பொருளாதார சூழ்நிலைகளை அடிப்படையாகக்கொண்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் மீதான ஆண்டுக்கு இருமுறை ரீதியான நிலையான கடன்தீராற்றல் அழுத்தப் பரிசோதனையை பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது.

பன்னாட்டு நாணய நிதிய தொழில்நுட்ப உதவியுடன் உருவாக்கப்பட்ட, காசு உட்பாய்ச்சல்-வெளிப்பாய்ச்சல் என்பவற்றின் பொருத்தமின்மைகளை அடையாளம் காணக்கூடிய முதிர்வு படிமுறை அமையுருக்களூடாக வங்கித்தொழில் துறையிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு நடாத்தப்பட்ட திரவத்தன்மை அழுத்தப் பரிசோதனைகள் மூலம் முறைமைசார்ந்த இடர்நேர்வு பகுப்பாய்வை பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் மேம்படுத்தியது. திரவத்தன்மை அழுத்த பரிசோதனைகளானது முறைமைசார்ந்த திரவத்தன்மை அதிர்ச்சிகளுக்கான வங்கித் தொழில் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மதிப்பீடு செய்கின்றது.

ஆண்டுக் காலப்பகுதியில், வங்கித் தொழில் துறையின் இடைத்தொடர்புத்தன்மை மற்றும் பரவக்கூடியதன்மை என்பவற்றின் பகுப்பாய்விற்கான புதிய கட்டமைப்பொன்று பன்னாட்டு நாணய நிதிய தொழில்நுட்ப உதவியுடன் உருவாக்கப்பட்டது. இடைத்தொடர்புத்தன்மை மற்றும் பரவக்கூடியத்தன்மை என்பவற்றின் பகுப்பாய்வானது கடன்தீராற்றல், திரவத்தன்மை ஊடகங்களை காரணிப்படுத்துகின்ற மாதிரியினூடாக வங்கிகளுக்கிடையிலான வெளிப்படுத்துகையூடாக வங்கித்தொழில் முறைமையை நோக்கிய இடர்நேர்வுகளில் பிரதான கவனத்தைச் செலுத்துவதுடன் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிடமிருந்தும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளிடமிருந்தும் தோன்றுகின்ற வங்கித்தொழில் துறைக்கு பரவக்கூடிய இடர்நேர்வுகளையும் மதிப்பீடுசெய்வதற்காக விரிவாக்கப்பட்டது. ஆண்டுக்காலப்பகுதியில் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் பரீட்சார்த்த இடைத்தொடர்புகளை மற்றும் பரவக்கூடியத்தன்மை பகுப்பாய்வினை நடாத்தியது.

(ஆ) அளவீடுகள், சுட்டெண்கள் மற்றும் தரவு சேகரிப்பு

பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் ஆண்டிற்கு இருமுறை என்ற அடிப்படையில் முறைமைசார்ந்த இடர்நேர்வு அளவீட்டைத் தொடர்ந்தும் நடாத்தியது. இது, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கெதிரான சாத்தியமான இடர்நேர்வுகள், ஏதேனும் முறைமைசார்ந்த பாதிக்கப்படும் தன்மைகள் ஒன்றுதிரள்வதனை காட்டும் சமிக்ஞைகள், மற்றும் சாத்தியமுடையதாக உணரப்பட்ட அதீத தாக்கமுடைய நிகழ்வு என்பனவற்றின் மீது சந்தைப் பங்கேற்பாளர்களின் கருத்தை அளவிடுகின்ற மற்றும் கண்காணிக்கின்ற முன்னோக்கி பார்க்கும் அளவீடொன்றாக காணப்படுகின்றது. இத்தகைய இடர்நேர்வுகளின் இடம்பெறுகையானது நிதியியல் இடையீட்டுச் செயன்முறைக்கு கணிசமானளவில் இடையூறு ஏற்படுத்தக்கூடும் என்பதுடன் நிதியியல் முறைமை மீதான பொதுமக்களின் நம்பகத்தன்மையையும் பாதிக்கக்கூடும். மேலும், நிதியியல் முறைமையின் பாதிக்கப்படும் தன்மைகள் பற்றி பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தின் உள்ளக மதிப்பீடுகளை உறுதிப்படுத்துவதற்கு முறைமைசார்ந்த இடர்நேர்வு அளவீடு உதவுகின்றது.

மேலும், பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது முறையே வங்கித்தொழில் ஆற்றல்வாய்ந்த தன்மைச் சுட்டெண், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறை ஆற்றல்வாய்ந்த தன்மைச் சுட்டெண், நிதியியல் சந்தை உறுதிப்பாட்டுச் சுட்டெண் என்பனவற்றுடன் நிதியியல் சந்தை உறுதிப்பாட்டுச் சுட்டெண்ணையும் வங்கித்தொழில் ஆற்றல்வாய்ந்த தன்மைச் சுட்டெண்ணையும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறை ஆற்றல்வாய்ந்த தன்மைச் சுட்டெண்ணெய்யையும் பயன்படுத்தி ஒருங்கிணைந்த நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுச் சுட்டெண் போன்ற பல்வேறு சுட்டெண்களை காலாண்டு ரீதியாக தொகுத்தது.

தரவுத் தளத்தை மேம்படுத்தும் நோக்குடன், ஏனைய பல்வேறு தரவு மூலங்களிற்கு மத்தியில், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்கள், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட ஆணைக்குழு, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், கொடுகடன் தகவல் பணியகம் போன்ற வெளியக நிறுவனங்களிலிருந்து விளக்கமான தரவுகளைப் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் தொடர்ந்தும் சேகரித்தது.

(இ) மத்திய வங்கியின் நியதிச்சட்ட அறிக்கைகளுக்கும் ஏனைய வெளியீடுகளுக்கும் பங்களிப்புச் செய்தல்

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு: இலங்கையின் நிதியியல் துறையால் முகங்கொடுக்கப்படும் இடர்நேர்வுகள் மற்றும் பாதிக்கப்படும் தன்மைகள் என்பவற்றை மதிப்பீடு செய்கின்ற நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வை பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் வெளியீடு செய்தது. இது கரிசனையிற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் பின்பற்றப்பட்ட இடர்நேர்வு தணிப்பு வழிமுறைகளையும் கலந்தாலோசிக்கின்றது.

நியதிச்சட்ட வெளியீடுகள்: மத்திய வங்கி ஆண்டறிக்கை 2021, "அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் 2022" என்பவற்றின் "நிதியியல் துறைச் செயலாற்றம் மற்றும் முறைமை உறுதித்தன்மை" மீதான அத்தியாயத்தை ஒருங்கிணைத்து தொகுப்பதனூடாக மத்திய

வங்கியின் முக்கிய வெளியீடுகளுக்கு பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்தது. மேலும், பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது நிதிக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும் இரகசிய அறிக்கையொன்றாக காணப்படுகின்ற செத்தெம்பர் 15ஆவது அறிக்கையின் நிதியியல் துறையுடன் தொடர்புடைய பிரிவொன்றை வடிவமைப்பதற்கு பங்களிப்புச் செய்தது. இதற்கு மேலதிகமாக, நிதியியல் துறைத் தரவுகளை தொகுப்பதன் மூலமும் நிதியியல் துறையின் துணைத் துறைகள் தொடர்பில் பகுப்பாய்வுகளை வழங்குவதன் மூலமும் மத்திய வங்கியின் ஏனைய வெளியீடுகளுக்கும் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் பங்களிப்புச்செய்தது.

(ஈ) கூட்டாண்மைத் துறை மற்றும் வீட்டலகுத் துறை பகுப்பாய்வை நடாத்துதல்:

பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது வீட்டலகுத்துறை மற்றும் கூட்டாண்மைத் துறைகளிலிருந்து தோன்றுகின்ற நிதியியல் பாதிப்புக்களை மதிப்பிடுவதற்காக அவ்விரண்டு துறைகள் மீதும் பகுப்பாய்வை நடாத்துகின்றது. எனவே, நிதிசாராக் கூட்டாண்மைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் காணப்படும் பட்டியலிடப்பட்ட நிதிசாரக் கூட்டாண்மைகளின் தகவல்களைப் பயன்படுத்தி நிதிசாராக் கூட்டாண்மைகளிடமிருந்து நிதியியல் முறைமைக்கு தேன்றுகின்ற இடர்நேர்வை மதிப்பிடுவதற்கு கூட்டாண்மைத் துறையின் பாதிக்கப்படும் தன்மைகள் காலாண்டு அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது வீட்டலகு மற்றும் கூட்டாண்மை ரீதியான துறைகளின் கடப்பாட்டை பகுப்பாய்வுசெய்து, அத்தகைய கடன்பெறுநர்களிடமிருந்து தோன்றுகின்ற நிதியியல் பாதிப்புக்களை மதிப்பிடுவதற்கு முறைமைசார்ந்த இடர்நேர்வுகளின் சாத்தியமான கட்டியெழுப்புதலை இனங்காண்கின்றது. கொடுகடன் தகவல் பணியகத்திடமிருந்து பெறப்பட்ட வங்கிகளினதும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையினதும் காலாண்டிற்கான திரண்ட கொடுகடன் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

(உ) நிதியியல் முறைமை உறுதிப்பாடு மீதான குழுக்களின் ஒருங்கிணைப்பு

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு: நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவின் செயலகமாக பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் தொழிற்பட்டது. இது, நிதியியல் துறையைப் பாதிக்கின்ற இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்காகவும் இடர்நேர்வுகளை தணிப்பதற்கான வழிமுறைகள் பற்றிய கலந்துரையாடல்களுக்கு வசதியளிப்பதற்காகவும் அத்துடன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை ஊக்குவிப்பதற்கு திணைக்களங்களிடையே ஒருங்கிணைப்பு முயற்சிகளை வலுப்படுத்துவதற்காகவும் மத்திய வங்கியில் நிறுவப்பட்ட திணைக்களங்களுக்கிடையேயான மன்றமொன்றாகும். 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க விடயங்களுக்காக ஏழு மட்டுப்படுத்தப்பட்ட நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு கூட்டங்கள் உள்ளடங்கலாக 11 நிதியியல் முறைமை உறுதிபாட்டுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. நாணய சபைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் உறுப்பினர்களின் அபிப்பிராயங்களைப் பெறுவதற்காக நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவிற்கு காலாண்டு ரீதியான இடர்நேர்வு மதிப்பீடுகளும் 2022இன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வும் முன்வைக்கப்பட்டன.

நிதியியல் முறைமை மேற்பார்வை சபை: நிதியியல் முறைமையின் வினைத்திறன், ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றினை உறுதிப்படுத்துவதற்கு உறுப்பினர் நிறுவனங்களுக்கிடையில் ஒருங்கிணைத்தலை வசதியளிக்கும் விதமாக மைய நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்துனர்களின் தலைவர்களை உள்ளடக்குகின்ற நிதியியல் முறைமை மேற்பார்வை சபையின் செயலகமாகவும் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் தொழிற்பட்டது. அதற்கமைய, 2022 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தொடர்புடைய நிதியியல் நிறுவன ஒழுங்குமுறைப்படுத்துனர்களின் கண்ணோட்டத்தின் கீழ் வருகின்ற இடர்நேர்வுகளை கலந்துரையாடுவதற்கும் அத்தகைய விடயங்களைப் பற்றி விரிவாக கலந்தாலோசிப்பதற்கும் இரண்டு கூட்டங்கள் நிதியியல் முறைமை மேற்பார்வை சபையினால் நடாத்தப்பட்டன.

ஆர்வலர்கள் ஈடுபாட்டுக் குழு: பொருளாதாரத்தின் நாணய மற்றும் நிதியியல் துறைகளின் இடைத்தொடர்பையும் கொள்கை நிலைப்பாட்டிலுள்ள மாற்றங்கள் மற்றும் பதிலிறுப்புக்களால் ஒரு துறையிலிருந்து மற்றைய துறைக்கான உள்ளார்ந்தங்களையும் கருத்திற்கொண்டு ஆர்வலர்கள் ஈடுபாட்டுக் குழு 2022ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டதுடன் வேறுபட்ட துறைகளின் குழுவிலிருந்தான உறுப்பினர்களையும் உள்ளடக்கியது. அதற்கமைய, பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது ஆர்வலர்கள் ஈடுபாட்டுக் குழுவின் கூட்டங்களில் பங்கேற்றதுடன் பேரண்ட நிதியியல் மீதான அபிவிருத்திகளை ஆர்வலர்கள் ஈடுபாட்டுக் குழுவிற்கு தெரியப்படுத்துவதற்காக தேவைக்கேற்ப தேவைப்படும்போதும் விளக்கக்காட்சிகளை நடாத்தி, குழுவின் கூட்டங்களில் தொடர்பான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு, குழுவினால் முன்மொழியப்பட்ட தொடர்பான நடவடிக்கைகளை பின்தொடர்கின்றது.

(ஊ) இலங்கையில் நிலைபெறத்தக்க நிதியியல் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து வசதிப்படுத்தல்

இலங்கையில் நிலைபெறத்தக்க நிதியியலுக்கான வழிகாட்டலுடன் இசைந்து செல்லும் விதத்தில் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது நிலைபெறத்தக்க நிதியியலில் ஈடுபடும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ஆர்வலர்களுடன் ஒருங்கிணைந்துள்ளதுடன் அவ்வழிகாட்டலை நடைமுறைப்படுத்துவதற்கும் வசதியளித்துள்ளது. மேலும், இது தொடர்பில் தாபிக்கப்பட்ட உள்ளக குழுக்களுக்கான செயலகமாகவும் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் தொழிற்பட்டது.

(எ) பன்னாட்டு முகவராண்மைகளுடன் ஒருங்கிணைத்தல்

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் கொத்தணியின் ஒருங்கிணைப்புத் திணைக்களமான பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது பேரண்டமுன்மதியுடைய அளவீட்டுக்கு பதிலிறுத்துவதில் பன்னாட்டு நாணய நிதியத்துடன் ஈடுபட்டது. மேலும், இலங்கையில் நிலைபெறத்தக்க நிதியியலுக்கான வழிகாட்டலுடன் இசைந்து செல்லும் விதத்தில் நிலைபெறத்தக்க நிதியியல் செயற்பாடுகளுக்கு வசதியளிப்பதற்கான தொடர்புடைய அதிகாரசபையாக பன்னாட்டு நிதியியல் கூட்டுத்தாபனம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஆசிய மற்றும் பசுபிக்கிற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு உள்ளடங்கலாக பல்புடை முகவராண்மைகளுடன் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் ஒருங்கிணைந்தது.

(ஏ) நெருக்கடி முகாமைத்துவக் குழுவொன்றினை தாபித்தல்

நிதியியல் நெருக்கடிகளானது வழமையாகவே குறைந்த நிகழ்தகவுடையதாகவும் உயர்வான தாக்கமிக்க நிகழ்வுகளைக் கொண்டும் காணப்படுகின்றன. அநேகமான நாடுகள் இவற்றிற்குத் தயாரற்ற நிலையிலுள்ளன. எனவே, பன்னாட்டு முகவராண்மைகளாலும் இலங்கை மத்திய வங்கியாலும் நெருக்கடி வெளிப்படும் போது நெருக்கடியை எதிர்கொள்ளும் தயார்நிலையை

வலுப்படுத்துவதற்கும் நெருக்கடியை முகாமைசெய்வதற்குமான தேவை ஏற்படுவது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு உரியவாறும் வினைத்திறனாகவும் பதிலிறுக்கும் பொருட்டு சட்டம், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிறுவனரீதியான அமைப்பு என்பனவற்றைக் கட்டியெழுப்பத் தேவைப்படுகின்றது. இதனால், கொள்கை ஒன்றிணைப்பிற்கான மன்றமாக நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவின் உருவாக்கத்தை உலக வங்கி எடுத்துக்காட்டியது. இதற்கமைய, நெருக்கடி முகாமைத்துவக் குழுவை தாபிப்பதற்கான கட்டமைப்பை உருவாக்குவதற்கான முயற்சியை பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் மேற்கொண்டது. இது, வினைத்திறன்மிக்க நிதியியல் நெருக்கடி முகாமைத்துவத்திற்காக நெருக்கடியான காலப்பகுதியிலும் நிதியியல் நெருக்கடி தயார்நிலை கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக நெருக்கடியல்லாத காலப்பகுதியிலும் செயற்படுவதுடன் நாட்டில் நிரந்தரமான மன்றமொன்றாக காணப்படும்.

21. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 5ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு, இலங்கை மத்திய வங்கி இலங்கையில் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமைகளின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல்களுக்குப் பொறுப்பான அதிகாரசபையாக இருந்து வருகிறது. 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்ட நியதிச் சட்ட பொறுப்பாணை கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இது, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வதுடன் இலங்கையில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் பாதுகாப்பு வினைத்திறன், போட்டித்தன்மை மற்றும் உறுதித்தன்மை என்பனவற்றை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன் தேசிய கொடுப்பனவு முறைமை கொள்கையினையும் நடைமுறைப்படுத்துகிறது.

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பிரதான தொழிற்பாடுகளாக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் தொழிற்பாடுகள், பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவம் தொடர்பான பின்னரங்க அலுவலகத் தொழிற்பாடுகளை நடத்துதல், இலங்கை மத்திய வங்கியின் சார்பாக உலகளாவிய வங்கிகளுக்கிடையிலான நிதியியல் தொலைத்தொடர்பூட்டல் (சுவிப்ற்) முறைமையின் முகாமைத்துவம், ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையூடாக வழிப்படுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளல், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்தல் மற்றும் கொடுப்பனவு பணிவழங்குவோரை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்தல் என்பன காணப்படுகின்றன.

21.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைத் தொழிற்பாடுகள்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 62A பிரிவு, நிதிகளின் மாற்றல்களுக்காக முறைமைகளை நிறுவித் தொழிற்படுத்தவும் கொடுப்பனவுக் கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்யவும், பங்கேற்கும் நிறுவனங்களுக்கு முறைமை விதிகளை விடுக்கவும் மத்திய வங்கிக்கு அதிகாரங்களை வழங்குவதுடன், இதற்கிணங்க, கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினைத் தொழிற்படுத்துகிறது. இது, திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் அதேபோன்று துணைநில் வைப்பு வசதி மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி தொடர்பான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களுடனான கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவுகள் நேரமுக்கியத்துவம் வாய்ந்த பாரிய பெறுமதி கொண்ட பங்கேற்பாளர்களிடையேயான கொடுப்பனவுகளையும் அதேபோன்று வாடிக்கையாளர் கொடுப்பனவுகளையும் அதேநேர மொத்த அடிப்படையில் தீர்ப்பனவு செய்கிறது.

சிறந்த பன்னாட்டு நடைமுறைகளைப் பின்பற்றும் விதத்தில், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினையும் பத்திரங்களற்ற அரச பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையினையும் உள்ளடக்கிய லங்காசெட்டில் முறைமையின் கிடைப்பனவு இவ்வாண்டுப்பகுதியில் சராசரியாக 99.75 மட்டத்தில் பேணப்பட்டது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமுகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தும் பொருட்டு, மேலதிக நிதிகளைக் கோருகின்ற பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியூடாக திரவத்தன்மை வழங்கப்படுவதனைக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் கண்காணித்தது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்கும் நிறுவனங்களாக மத்திய வங்கி, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், ஒரு உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி, தனியான முதனிலை வணிகர்கள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் மத்திய வைப்பக முறைமை என்பன காணப்படுகின்றன.

2022 இறுதியில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள பங்கேற்கும் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 35 ஆகக் காணப்பட்டது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை ரூ.827 றில்லியன் மொத்தப் பெறுமதியுடன் 638,733 கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தது. நாளொன்றில் தீர்ப்பனவு செய்யப்பட்ட அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கொடுக்கல்வாங்கல்களின் சராசரி அளவும் பெறுமதியும் முறையே 2,661 ஆகவும் ரூ.3,446 பில்லியனாகவும் காணப்பட்டது. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி தொழிற்பாடுகள் தொடர்பில் சராசரியாக நாளொன்றிற்கு ரூ.658.5 பில்லியன் கொண்ட தொகை பங்கேற்கும் நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டது.

(அ) பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவம் தொடர்பான பின்னரங்க அலுவலகத் தொழிற்பாடுகள்

நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கும் விதத்தில் பின்னரங்க அலுவலகத்தின் தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகப்படுத்தல் மற்றும் நிதியிடல், பணச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஓரிரவு மீள்கொள்வனவு/ மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் என்பனவற்றை உள்ளடக்கி மொத்தமாக 3,495 கொடுக்கல்வாங்கல்கள் 2022 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

(ஆ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், துணைநில் வைப்பு வசதி மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி என்பனவற்றுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு

சந்தைத் திரவத்தன்மை முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கும் நோக்கத்திற்காக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், துணைநில் கடன்வழங்கல் வசதி மற்றும் துணைநில் வைப்பு வசதியுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதற்குப் புறம்பாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதில் ஈடுபட்டிருந்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், ரூ.1,550.3 பில்லியன் கொண்ட 232 நேர்மாற்று மீள்கொள்வனவுகளையும் ரூ.1,189.5 பில்லியன் தொகை கொண்ட 78 நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.54,183.1 பில்லியன் தொகை கொண்ட 4,966 துணைநில் வைப்பு வசதிகளையும் ரூ.163,073.8 பில்லியன் தொகை கொண்ட 9,563 துணைநில் கடன்வழங்கல் வசதிகளையும் ரூ.27.7 பில்லியன் கொண்ட 43 உடனடி விற்பனை கொடுக்கல்வாங்கல்களையும் செயற்படுத்தி அவற்றிற்கு வசதியளித்தது.

21.2 சுவிப்ற் தொடர்பூட்டல் வலையமைப்பின் முகாமைத்துவம்

சுவிப்ற் தலைமையகத்தினால் விதிக்கப்பட்ட ஆளுகை ஏற்பாடுகள், செய்முறைகள், இடர்நேர்வு முகாமைத்துவ நடவடிக்கை முறைகள்

மற்றும் கட்டுப்பாடுகள் போன்ற நடவடிக்கை முறைகளுக்கிணங்க, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் மத்திய வங்கியின் அனைத்துப் பயன்படுத்துநர்களின் சார்பிலும் சுவிப்ற் முறைமையினை முகாமைப்படுத்தியது.

2022 காலப்பகுதியில், சுவிப்ற் முறைமையினை பலப்படுத்துவதற்காகவும் பன்னாட்டு தரங்களுக்கு அமைவாக சுவிப்ற் பயன்படுத்துநர்களுக்கு உயர் பாதுகாப்பானதும் கூடியளவு வினைத்திறன் கொண்டதுமான பணிகளை வழங்குவதற்காகவும் சுவிப்ற் இனால் கட்டாய இற்றைப்படுத்தல்கள் வழங்கப்பட்டன.

சுவிப்ற், நிதியியல் செய்திகளை தரப்படுத்தலுக்கான பன்னாட்டு அமைப்பு - ISO 20022 தர நியமங்களுக்கு மாற்றுவதற்காக உலகளாவிய செயற்றிட்டமொன்றினை ஆரம்பித்திருக்கின்றது. இது மிகச் சிறந்த வடிவமைப்பினைக் கொண்டதாக இருப்பதுடன் சிறந்த தகவல் பாய்ச்சல்களுக்கும் வசதியளிக்கின்ற திறந்த நியமமாக இருக்கின்றது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களமும் தரப்படுத்தலுக்கான பன்னாட்டு அமைப்பு - ISO 20022 செய்தியனுப்பல் நியமத்தினை பின்பற்றுவதனை நோக்கிச் செயற்படுகின்றது.

21.3 ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்தல்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் இலங்கைக்கும் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் மற்றைய உறுப்பு நாடுகளுக்குமிடையிலான கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பான தகைமையுடைய வர்த்தகத்தினைத் தீர்ப்பனவு செய்ய தொடர்ந்தும் வசதியளித்தது. எனினும், 2022 ஒத்தோபர் 14 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில், வர்த்தக வங்கிகள் அவற்றின் வர்த்தகம் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களை மேலதிக அறிவித்தல் வரை, ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்கு வெளியேயுள்ள பொறிமுறைகளைப் பயன்படுத்தி ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய உறுப்பு நாடுகளிலுள்ள வங்கிகளுடன் நேரடியாகத் தீர்ப்பனவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டன.

2022 சனவரியிலிருந்து ஒத்தோபர் வரையான காலப்பகுதியில் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாக மேற்கொள்ளப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதியுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் எண்ணிக்கை 3,301 ஆக விளங்கியதுடன் இக்கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி முறையே ஐ.அ.டொலர் 1,741.8 மில்லியனாகவும் ஐ.அ.டொலர் 181.9 மில்லியனாகவும் காணப்பட்டன.

இலங்கை மத்திய வங்கி, 2022 ஏப்பிறலில் இந்திய றிசேர்வ் வங்கியினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் விசேட துணைநில் தொழில்நுட்பக் குழுவின் கூட்டத்தில் பங்கேற்றமைக்குப் புறம்பாக, 2022 மேயில் பாகிஸ்தான் அரச வங்கியினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் சபையின் 50ஆவது கூட்டத்திலும் விசேட துணைநில் பொதுக் குழுக் கூட்டத்திலும் கலந்து கொண்டது.

21.4 கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வதுடன் கொடுப்பனவு பணி வழங்குவோரை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்தல்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் டிஜிட்டல் கொடுப்பனவு தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கு வசதியளித்ததுடன் இலத்திரனியல் கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்பினையும் வினைத்திறனையும் உறுதிப்படுத்துவதற்காக அதன் ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இதற்கமைய, 2022இல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் பின்வரும் முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அ. தேசிய சேமிப்பு வங்கி தகைமைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த பின்னர் அதற்கு லங்காசெட்டில் முறைமையில் பங்கேற்கும் அந்தஸ்து வழங்கப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கி லங்காசெட்டில் முறைமையில் பங்கேற்கும் அந்தஸ்தினைப் பெற்றுக்கொண்ட முதலாவது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாகக் காணப்படுகிறது.

ஆ. தேசிய சேமிப்பு வங்கி அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பங்கேற்பாளரொருவராக மாறிய பின்னர், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை, பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி, பொதுவான விற்பனை மைய ஆளி என்பனவற்றில் முதன்மை உறுப்புரிமையினைப் பெறுவதனை இயலுமைப்படுத்துவதற்காக இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை, பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி, பொதுவான விற்பனை மைய ஆளி என்பன மீதான பொதுவான பணிப்புரைகள் திருத்தியமைக்கப்பட்டு, 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டன.

இ. உள்முக வெளிநாட்டு பணவனுப்பல்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தேசிய பணவனுப்பல் செல்லிடத் தொலைபேசிப் பிரயோகமான 'லங்கா றெமிட்' 2022 பெப்புருவரியில் ஆரம்பிக்கப்பட்டது. இது வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர் இலங்கைக்கு பணத்தினை அனுப்பவும் வெளிநாட்டில் வழங்கப்பட்ட கொடுப்பனவு அட்டைகளைப் பயன்படுத்தி பொதுப் பயன்பாட்டு பட்டியல்களைச் செலுத்துவதனையும் இயலுமைப்படுத்துகிறது. மேலும், புலம்பெயர் வேலையாட்களிடையே லங்கா றெமிட் செல்லிடத் தொலைபேசிப் பிரயோகத்தினைப் பிரபல்யப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும் 2022 ஓகத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்றினை நடத்தின.

ஈ. 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுச் சட்டத்தினை மீளாய்வு செய்வதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தொழில்நுட்ப உதவிக் குழுவொன்று 2022 ஒத்தோபரில் மத்திய வங்கிக்கு விஜயம் செய்தது. குழுவின் கூட்டங்கள் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தினை மீளாய்வு செய்வதற்காக மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட உள்ளகக் குழு உள்ளிட்ட மத்திய வங்கி அலுவலர்கள் மற்றும் ஏனைய பல வெளிவாரி ஆர்வலர்களினதும் பங்கேற்புடன் நடைபெற்றன.

உ. 2021 ஒத்தோபரில் தொழில்நுட்பப் பேரேட்டினை அடிப்படையாகக் கொண்ட பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்கின்ற நிரூபணக்கருதுகோள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து, இலங்கைக்குப் பொருத்தமான பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள் வசதியைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஊ. இலங்கையிலுள்ள கொடுப்பனவுச் சாதனங்கள்/ முறைகள் மற்றும் உட்கட்டமைப்புக்கள் என்பனவற்றைத் தெளிவுபடுத்தும் நூலான இலங்கையில் கொடுப்பனவுப் பணிகளுக்கான வழிகாட்டல் ஒன்று அச்சிலும் இலத்திரனியல் வடிவத்திலும் வெளியிடப்பட்டன. இலத்திரனியல் பதிப்பு இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டது.

எ. இலங்கையிலுள்ள பிரசைகளிடையே டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஊக்குவிக்கும் பொருட்டு, டிஜிட்டல் கொடுப்பனவுகளைப் பயன்படுத்துவது தொடர்பாக பாடசாலைப் பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவதற்காக விதந்துரைக்கப்பட்ட பாடவிதானமொன்று தேசிய கல்வி நிறுவகத்திடம் கையளிக்கப்பட்டது.

ஏ. இலங்கையில் மத்திய வங்கி டிஜிட்டல் நாணயத்தினை அறிமுகப்படுத்துவதற்கான சாத்தியம் மீதான ஆய்வொன்று நடத்தப்பட்டது.

ஐ. வாடிக்கையாளர் வசதியையும் வணிகர்களுக்கான தீர்ப்பனவின் வினைத்திறனையும் மேம்படுத்தக்கூடிய புதிய கொடுப்பனவுச் சாதனங்களை அறிமுகப்படுத்துவதற்காக அனுமதியைக் கோருகின்ற விதத்தில் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்த பல நிதியியல் நிறுவனங்களுக்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

ஒ. கொடுப்பனவு அட்டைகளையும் செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவு முறைமைகளையும் வழங்குகின்ற உரிமம்பெற்றவர்கள் தொடர்பான அத்தகைய முறைமைகளின் நம்பகத்தன்மையினையும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதற்காக தலத்திலான மேற்பார்வையும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.

ஓ. லங்காசெட்டில் பங்கேற்பாளர்கள் மற்றும் லங்காபே (பிறைவேட்) லிமிட்டெட்டின் இன் தடங்கலற்ற வியாபாரமானது எதிர்பாராத சூழ்நிலையொன்றில் தடங்கலற்ற வியாபாரம் தொழிற்படுவதற்கான அவற்றின் இயலாற்றலை உறுதிப்படுத்தும் பொருட்டு அவை மதிப்பீடு செய்யப்பட்டு கண்காணிக்கப்பட்டன.

21.5 தேசிய கொடுப்பனவுச் சபை

தேசிய கொடுப்பனவுச் சபையின் செயலகமாக, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் தொழிற்படுகிறது. தேசிய கொடுப்பனவுச் சபையானது நாட்டின் கொடுப்பனவு முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. தேசிய கொடுப்பனவுச் சபையின் பொறுப்புக்கள் கொடுப்பனவுகளுக்கான புதிய முறைகளையும் தொழில்நுட்பங்களையும் அபிவிருத்தி செய்வதற்கு வசதியளித்தல், கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்பினையும் வினைத்திறனையும் மேம்படுத்தல் மற்றும் நிதியியல் முறைமைகளின் உறுதித்தன்மைக்கு வசதியளித்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. 2022இல் தேசிய கொடுப்பனவுச் சபை புதிய கொடுப்பனவு தொழில்நுட்பங்கள், பாதுகாப்பான டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகள் தொடர்பாக வாடிக்கையாளர் விழிப்புணர்வினை அதிகரித்தல் என்பனவற்றில் கவனம் செலுத்துகின்ற கொடுப்பனவு முறைமை வழிகாட்டல் 2022 - 2024 இன் நடைமுறைப்படுத்தல் தொடர்பான முன்னேற்றங்களைக் கண்காணித்தது.

21.6 பொதுமக்கள் விழிப்புணர்வு

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், நாட்டில் தொழிற்படுகின்ற கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் பற்றிய தகவல்களையும் புள்ளிவிபரங்களையும் பரப்புவதற்காக இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் "கொடுப்பனவுச் செய்தித் திரட்டு" என்ற காலாண்டு வெளியீட்டினைத் தொடர்ந்தும் வெளியிட்டது. மேலும், டிஜிட்டல் கொடுப்பனவுகள், ஏமாற்று மற்றும் மோசடி தொடர்பான கொடுப்பனவுகள். மெய்நிகர் நாணயங்களின் இடர்நேர்வுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான ஏனைய விடயங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதுடன் ஊடக வெளியீடுகளையும் வெளியிட்டது.

22. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியால் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகளின் தாக்கத்தை மீளாய்வு செய்து மதிப்பீடு செய்வதுடன் இலங்கை மத்திய வங்கியின் உபாய மற்றும் நடவடிக்கைத் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலைக் கண்காணிக்கும் குறிக்கோள்களுடன் 2007இல் தாபிக்கப்பட்டது. மேலும், வங்கியின் உபாயத் திட்டமிடல் முன்னேற்றத்திற்கும் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் வசதியளித்து வருகின்றது.

22.1 இலங்கை மத்திய வங்கியின் உபாய மற்றும் நடவடிக்கைத் திட்டம்

உபாயங்களையும் நடவடிக்கைகளையும் வங்கியின் இலக்குகளுடன் அணிசேர்த்து, தனிப்பட்ட திணைக்களத்தின் மூலம் 2022இல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய உபாயங்கள் மற்றும் நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடுவதற்கு "சமநிலைப்படுத்தல் அடிப்படை" என்ற தொனிப்பொருளின் கீழ் 2022இன் உபாயத் திட்டமிடல் மீளாய்வுக் கூட்டம் 2022 பெப்புருவரியில் இடம்பெற்றது. இதற்கமைய, 2022 ஏப்பிறல் - திசெம்பர் காலப்பகுதிக்கான இலங்கை மத்திய வங்கியின் உபாயம் மற்றும் நடவடிக்கைத் திட்டம்-2022 இறுதிசெய்யப்பட்டது.

"உறுதிப்பாட்டை மீளஅடைதல்" என்ற தொனிப்பொருளின் கீழ் 2023இன் உபாயத் திட்டமிடல் மீளாய்வுக் கூட்டம் 2022 நவெம்பரில் இடம்பெற்றது. உபாயத் திட்டமிடல் மீளாய்வுக் கூட்டத்தில், கொள்கை மீளாய்வு மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் அவதானிப்புக்களையும் விதந்துரைப்புக்களையும் உள்ளடக்கிய 2022இன் திணைக்கள நடவடிக்கைத் திட்டங்களின் ஒட்டுமொத்த முன்னேற்றங்களையும் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் முன்வைத்த அதேவேளை 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கியின் குறிக்கோள்களை அடைவதற்கான தமது பங்களிப்புக்களை ஒவ்வொரு திணைக்களமும் ஆண்டுக் காலப்பகுதியில் தாம் முகம்கொடுக்க நேரிட்ட சவால்களுடன் முன்வைத்தது. 2023ஆம் ஆண்டிற்கான தனிப்பட்ட திணைக்களங்களின் நடவடிக்கைத் திட்டங்களும் முன்வைக்கப்பட்டன. உபாயத் திட்டமிடல் மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு உபாய மற்றும் நடவடிக்கைத் திட்டம்-2023 இறுதி செய்யப்பட்டது.

நாணயச் சபை உறுப்பினர்களினதும் வங்கியின் மூத்த முகாமைத்துவத்தினதும் பங்கேற்புடன் மேற்குறிப்பிட்ட இரு உபாயத் திட்டமிடல் மீளாய்வுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

22.2 முன்னேற்றத்தைக் கண்காணித்தல்

கொள்கை கண்காணிப்பு மற்றும் மீளாய்வுத் திணைக்களமானது முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளின் முன்னேற்ற மட்டத்தை மதிப்பீடு செய்வதற்காக ஒவ்வொரு முக்கிய செயலாற்ற குறிகாட்டியின் கீழ் அடையாளம் காணப்பட்ட வெளியீடுகளிற்கு எதிராக தனிப்பட்ட திணைக்களம்சார் நடவடிக்கைத் திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான முன்னேற்றத்தை கண்காணித்தது. இந்நோக்கத்திற்காக ஒவ்வொரு திணைக்களத்துடனும் நேரடிக் கூட்டங்கள் காலாண்டு ரீதியாக நடாத்தப்பட்டன.

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் அவதானிப்புக்களுடனும் விதந்துரைப்புக்களுடனும் நடவடிக்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம், சில நடவடிக்கைகளை நிறைவு செய்வதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் என்பன கூட்டாண்மை முகாமைத்துவக் குழுவிற்கும் நாணயச் சபைக்கும் அறிக்கையிடப்பட்டன.

22.3 முக்கிய கவனத்திற்குள்ளாகும் விடயப்பரப்புக்கள்

பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை மீளடைவதை நோக்கி, 2023ஆம் ஆண்டிற்காக ஐந்து முக்கிய கவனத்திற்குள்ளாகும் விடயப்பரப்புகளை இலங்கை மத்திய வங்கி இனங்கண்டது. இதற்கமைய, இத்தகைய ஐந்து விடயப்பரப்பில் ஏற்படும் நடைமுறையானதும் எதிர்பார்க்கப்பட்டதுமான சவால்களிலிருந்து மீண்டெழும் பொருட்டு உபாயங்களை அபிவிருத்தி செய்வதற்கான தலைமை திணைக்களமொன்றும் ஏனைய பொறுப்புமிக்க திணைக்களங்களும் அடையாளம் காணப்பட்டதுடன் நடுத்தர காலத்திற்கான பணிப்புரையுடன் வெளியக மற்றும் உள்ளக இரு காரணிகளுக்கும் உரிய கவனம் செலுத்தப்பட்டன. முக்கிய கவனத்திற்குள்ளாகும் ஐந்து விடயப்பரப்புகளும் பின்வருமாறு:

- பேரண்டபொருளாதார உறுதிப்பாட்டுக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக விலை மற்றும் பேரண்ட பொருளாதார உறுதிப்பாடு என்பவற்றை மீளஅடைதல்.
- மேம்படுத்தப்பட்ட நெருக்கடித் தயார்நிலை மற்றும் முகாமைத்தவம் என்பவற்றுடன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பாதுகாத்தல்
- பொதுமக்களினதும் ஏனைய ஆர்வலரினதும் புரிந்துணர்வை மேம்படுத்துவதற்கு தெளிவானதும் துல்லியமானதுமான தொடர்பூட்டல்
- உயர்ந்தளவில் ஆற்றல்வாய்ந்ததும், ஊக்குவிப்பானதும், ஈடுபாடுள்ளதும், திருப்தியானதுமான மனித வளங்கள் குழுவின் கிடைப்பனவு
- மேம்படுத்தப்பட்ட சுயாதீனம் அதிகாரசபை கிடைக்கின்ற அதேவேளை இலங்கை மத்திய வங்கியின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல்

22.4 கொள்கை மீளாய்வு

இலங்கை மத்திய வங்கியின் பெறுகை செயன்முறையின் காத்திரத்தன்மை, பிரதேச அபிவிருத்தி மீது இலங்கை மத்திய வங்கியின் வகிபாகம் மற்றும் மீள்கட்டமைப்பினூடாக இலங்கை மத்திய வங்கியின் வள ஒதுக்கீட்டை மேம்படுத்தல் என்பவை மீதான மூன்று ஆய்வுகள் ஆண்டு காலப்பகுதியில் நடாத்தப்பட்டன.

23. பொதுப்படுகடன்

இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்ட 1950 ஒகத்து 28ஆம் நாளன்று நிறுவப்பட்ட பொதுப்படுகடன் திணைக்களம் நாணய விதிச் சட்டத்தின் 113ஆவது பிரிவின் நியதிகளில் அரச படுகடன் முகாமைத்துவத்திற்கான முகவர் என்ற ரீதியில் மத்திய வங்கியின் நியதிச் சட்டக் கடப்பாடுகளை மேற்கொள்வதற்குப் பொறுப்பாக இருக்கின்றது. இம்முயற்சியில், பொதுப்படுகடன் ஆற்றிய முக்கிய தொழிற்பாடுகள், மற்றைய விடயங்களுடன், வினைத்திறன் மிக்க அரச பிணையங்கள் சந்தையினை அபிவிருத்தி செய்து பேணுதல், சந்தைப் பங்கேற்பாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் தேவையான தகவல்கள் கிடைப்பதனை உறுதிப்படுத்தல், சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் முன்மதியுடைய இடர்நேர்வு மட்டங்களில் அரசாங்கத்தின் நிதியிடல் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படுவதனை உறுதிப்படுத்துகின்ற வேளையில் சிறந்த நியமங்களையும் நடைமுறைகளையும் பின்பற்றுதல், மற்றும் தொடர்பான கொள்கைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் அரச படுகடன்களைத் தீர்ப்பனவு செய்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

23.1 அரசாங்கத்தின் மொத்த கடன்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதிகளைத் திரட்டுதல்

அ. தேய்வடைந்த பேரண்ட பொருளாதார அடிப்படைகளிலிருந்து தோன்றிய கடுமையான சவால்மிக்க சூழல், சமூக அரசியலின் உறுதியற்ற தன்மையிலிருந்து தோன்றிய நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் படுகடன் மறுசீரமைப்பு அளவு தொடர்பான ஊகங்கள் என்பனவற்றிற்கு மத்தியிலும் முதிர்ச்சியடைந்த, படுகடன் மீதான அரசாங்கத்தின் கணிசமான உள்நாட்டு நிதியிடல் தேவைப்பாடுகள் முக்கியமாக திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளுக்கான சந்தை உதவுதொகையூடாக தீவிரமான முறையில் பெறப்பட்ட வேளையில், முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவ வழிமுறைகள் பின்பற்றப்பட்டன.

ஆ. முதலீட்டாளர் முன்னுரிமைகள் குறுங்கால திறைசேரி உண்டியல் முதிர்ச்சிகளை நோக்கி சாய்ந்திருந்த வேளையில், பெரிய முதலீட்டாளர் முன்னுரிமை நீண்ட கால திறைசேரி முறிகளின் மீது காணப்பட்டது.

இ. பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு நாணய தேவைப்பாடுகளின் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்வதற்கான நிதியம், 2022இன் முதலரைப்பகுதியில் ஏலம் மற்றும் நேரடி வழங்கல் நிலைய ஏற்பாடுகள் ஆகிய இரண்டினூடாகவும் திரட்டப்பட்டது.

ஈ. நிதியத்தின் ஒவ்வொரு மூலங்களின் கீழுமான நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

23.2 அரச படுகடன்களைத் தீர்ப்பனவு செய்தல்

2022ஆம் ஆண்டின் ஏப்பிறல் 12ஆம் திகதியிடப்பட்ட வெளிநாட்டுப் படுகடனைத் தீர்ப்பனவு செய்தல் தொடர்பான அதன் இடைக்காலக் கொள்கையுடன் இசைந்து செல்லும் விதத்தில், அரசாங்கம் பல்புடை முகவர்களுக்குரிய படுகடன் நீங்கலாக, வெளிநின்ற வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்களைத் தீர்ப்பனவு செய்வதனை நிறுத்தியது. அதேவேளை, அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடனை மறுசீரமைப்பதற்காக லசார்ட் பெரேராஸ் எஸ்ஏஎஸ் மற்றும் கிளிவோர்ட் சான்ஸ் எல்எல்பி ஆகிய நிறுவனங்கள் முறையே நிதியியல் மற்றும் சட்ட மதியுரையாளர்களாக 2022 மேயில் நியமிக்கப்பட்டனர்.

2022 ஏப்பிறல் 12ஆம் திகதியிடப்பட்ட வெளிநாட்டுப் பொதுப்படுகடனைத் தீர்ப்பனவு செய்வது பற்றிய இடைக்கால கொள்கையின் கீழ் அடையாளம் காணப்பட்ட "பாதிக்கப்பட்ட படுகடன்" இல் இருந்து

அட்டவணை II-17
சாதனங்கள் மற்றும் வழங்கல் செயலாற்றம் 2021 மற்றும் 2022

சாதனம்	2021				2022			
	வழங்கல்கள் ரூ. பில்.	நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் (%)	முதிர்ச்சிக்கான சராசரிக் காலம் (ஆண்டுகள்)	ஏலங்களின் எண்ணிக்கை	வழங்கல்கள் ரூ. பில்	நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் (%)	முதிர்ச்சிக்கான சராசரிக் காலம் (ஆண்டுகள்)	ஏலங்களின் எண்ணிக்கை
திறைசேரி உண்டியல்கள் (அ)	3,821.4	6.09	0.48	53	9,942.8	25.21	0.33	52
திறைசேரி முறிகள்	1,762.0	8.70	5.12	22	2,373.0	21.24	5.15	24
	வழங்கல்கள் ஐ.அ.டொ. மில்.	**நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் (%) (ஆ)**	**முதிர்ச்சிக்கான சராசரிக் காலம் (ஆண்டுகள்)**	**ஏலங்களின் எண்ணிக்கை**	**வழங்கல்கள் ஐ.அ.டொலர் மில்.**	**நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் (%)**	**முதிர்ச்சிக்கான சராசரிக் காலம் (ஆண்டுகள்)**	**ஏலங்களின் எண்ணிக்கை**
இலங்கை அபிவிருத்தி முறிகள் (இ)	1,041.3	7.34	1.47	5	622.3	7.76 (3.40)	0.53	2

நி.ச.வி.வீ: நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்/கிரயம்; மு.ச.கா: முதிர்ச்சிக்கான சராசரிக் காலம்

(அ) மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் உட்பட மொத்த திறைசேரி உண்டியல் வழங்கல்

(ஆ) ( ) இல் உள்ள பெறுமதிகள் இலங்கை அபிவிருத்தி முறிகளின் மிதக்கும் வீதத்திற்கான இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்திற்கு மேலான வீச்சின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தினைக் காட்டுகிறது. 2021இல் வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கு மிதக்கவிடும் வீதம் இல்லை.

(இ) இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல்கள் 2022.12.30 வரை முதலீட்டாளர் உறுதிப்படுத்துதலை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் மாற்றுத் தீர்ப்பனவு பொறிமுறையின் கீழான முதிர்ச்சி நீடிப்புக்களையும் உள்ளடக்குகிறது

இலங்கை அபிவிருத்தி முறிகள் நீக்கப்பட்டன. இலங்கை அபிவிருத்தி முறிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான மாற்று ஏற்பாடொன்று திரவ வெளிநாட்டு நாணய மூலங்களின் கிடைப்பனவு மீதான தடைகளின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் கீழ் பின்வரும் தெரிவுகள் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டன.

அ. நாணயக் கொள்கை பரிசீலனைகளுக்குட்பட்டு இலங்கை ரூபாவில் தீர்ப்பனவு

ஆ. மூல நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன், அதாவது, மூல வழங்கலின் ஒவ்வொரு தனிப்பட்ட விலைக் குறிப்பீட்டிற்கும் ஏற்புடைத்தான வட்டி வீதங்களுடன் குறைந்தபட்சம் 6 மாதங்கள் வரையான இலங்கை அபிவிருத்தி முறிகள் (வட்டிக் கொடுப்பனவுகள் உட்பட) தொடர்பான முதிர்ச்சி நீடிப்பு

இ. அரச பிணையங்களுக்கு (திறைசேரி முறிகள்) உடனடியாக முற்போந்த முதலாந்தரச் சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களில் பெரும்பாலும் தொடர்பான முதலாந்தர ஏலங்களிலிருந்து ஏழு வேலை நாட்களுக்குள் வசதியளித்தல். உடனடியாக முற்போந்த முதலாந்தர ஏலத்தில் முன்வைக்கப்பட்ட முதிர்ச்சிகள் நீங்கலாக, எஞ்சிய முதிர்ச்சிகளுடன் கூடிய மற்றைய ஏதேனும் அரச பிணையங்களுக்கு அவசியமானவிடத்து முதலாந்தரச் சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைவுகளின் இடைச்செருகல்கள்/ மேலதிகச் செருகல் வசதிகள்

2022 காலப்பகுதியில் ரூ. 2,997,645 பில்லியன் கொண்ட மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளுக்கு வசதியளிக்கப்பட்டது. இது முறையே ரூ. 2,510,281 பில்லியன் மற்றும் ரூ. 487,364 பில்லியன் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகளை உள்ளடக்கியிருந்தன. இதில் வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவு 2022 ஏப்பிறல் 12ஆம் திகதியிடப்பட்ட வெளிநாட்டுப் படுகடனைத் தீர்ப்பனவு செய்வது தொடர்பான அரசாங்கத்தின் இடைக்காலக் கொள்கைக்கு இசைவான முறையில் மேற்கொள்ளப்பட்டது. உள்நாட்டு நாணயப் படுகடனைத் தீர்ப்பனவு செய்வது தொடர்பில் 2021 காலப்பகுதியில் செய்முறைப்படுத்தப்பட்ட 224 பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்க கூப்பன் மற்றும் மறுதலையான முதிர்ச்சிக் கொடுப்பனவுகளுக்கு மாறாக 2022 காலப்பகுதியில் 218 பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கங்கள் செய்முறைப்படுத்தப்பட்டன. இதேபோன்று வெளிநாட்டு நாணய படுகடனைத் தீர்ப்பனவு செய்வது தொடர்பில் 2021இல் செய்முறைப்படுத்தப்பட்ட 1,836 கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில் 2022இல் 1,249 தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் செய்முறைப்படுத்தப்பட்டன.

23.3 அரச பிணையங்களில் உரித்து பதிவினைப் பேணுதல்

பத்திரங்களற்ற அரச பிணையங்களின் உரித்துப் பதிவு மத்திய வைப்பக முறைமையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. 2022 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு பத்திரங்கள்ள பிணையங்களினது உடமைகளின் மொத்த எண்ணிக்கை முகப்புப் பெறுமதியில் ரூ.12,848.5 பில்லியனாக விளங்கி ரூ.4,126.3 பில்லியன் கொண்ட திறைசேரி உண்டியல்களையும் ரூ.8,722.1 பில்லியன் கொண்ட திறைசேரி முறிகளையும் உள்ளடக்கியிருந்தது. 2022 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட மத்திய வைப்பக முறைமைக் கணக்கு உடமையாளர்களின் எண்ணிக்கை 129,627 ஆகவும் பதிவுசெய்யப்பட்டது.

மத்திய வைப்பக முறைமைக் கணக்கு உடமையாளர்களுக்கு அவர்களின் உடமைகள் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பிலான காலாந்தரக் கூற்றுக்கள் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக அனுப்பப்பட்டன. 2022இல் கணக்குடமையாளர்களுக்கு பொதுப்படுகடன் திணைக்களம் 13,424 கூற்றுக்களை இலத்திரனியல் வடிவத்திலும் 48,530 உடமைகளின் அரையாண்டு கூற்றுக்களையும் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் 105,863 மாதாந்தக் கூற்றுக்களையும் 40,089 கொடுப்பனவுக் கூற்றுக்களை அஞ்சல் மூலமும் அனுப்பி வைத்தது.

2019இல் அறிமுகப்படுத்தப்பட்ட மத்திய வைப்பக முறைமையின் கணக்குடமையாளர்களுக்கான அதேநேர அறிவித்தல் வசதியின் கீழ் ஒவ்வொரு பிணையங்கள் கணக்கிலும் மேற்கொள்ளப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்களின் ஒவ்வொரு பற்று மற்றும் வரவுகளுக்கான அதேநேர அறிவித்தல் அத்தகைய மத்திய வைப்பக கணக்குடமையாளர்களுக்கு குறுஞ்செய்திப் பணியினூடாக அல்லது/ அத்துடன் மின்னஞ்சல் எச்சரிக்கை வாயிலாக விநியோகிக்கப்பட்டன. அதேநேர அறிவித்தலாக 2021இல் அறிவிக்கப்பட்ட முறையே 147,744 மற்றும் 47,561 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 260,028 மின்னஞ்சல்களும் 121,634 குறுஞ்செய்தி எச்சரிக்கைகளும் அனுப்பப்பட்டன.

மேலும், அரச பிணையங்கள் முதலீடுகளின் பாதுகாப்புப் பண்புகளை அதிகரிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஏனைய வசதிகளிடையே மத்திய வைப்பக முறைமை கணக்குடமையாளர்களுக்கு அவர்களது கணக்குகளை இணையவழியில் பார்வையிடுவதற்கான வசதியையும் வழங்கியது.

23.4 அரச பிணையங்களின் தீர்ப்பனவிற்கு வசதியளித்தல்

மத்திய வைப்பக முறைமையுடன் சேர்ந்து பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையினை உள்ளடக்குகின்ற லங்காசெகுயர் முறைமை பொதுப்படுகடன் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருகின்றது. பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை அரச பிணையங்களின் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான தீர்ப்பனவு வசதிகளை வழங்குகிறது. லங்காசெகுயர் முறைமை தடங்கலற்ற அதேநேரத் தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துகின்றமையின் மூலம் அரச பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு வசதியளிப்பதில் பொதுப்படுகடன் திணைக்களம் பிரதான வகிபாகத்தினை ஆற்றுகின்றது.

2022 இறுதியில், லங்காசெகுயர் முறைமை தங்கள் சார்பிலும் தங்களின் வாடிக்கையாளர்களாக இருக்கக்கூடிய அரச பிணையங்களின் முதலீட்டாளர்கள் சார்பிலும் கணக்குகளை வைத்துள்ள 32 வணிகர் நேரடி பங்கேற்பாளர்களையும் (24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், 1 உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியையும் 7 முதனிலை வணிகர் கம்பனிகளையும்) அவர்களின் சார்பில் சொந்தமாகக் கணக்குகளை வைத்துள்ள 3 நேரடிப் பங்கேற்பாளர்களையும் (இலங்கை மத்திய வங்கி, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை மற்றும் ஊழியர் சேமலாப நிதியம்) உள்ளடக்கியுள்ளது.

23.5 படுகடன் முகாமைத்துவ முன்முயற்சிகள் மற்றும் சந்தை அபிவிருத்திகள்

வினைத்திறன், காத்திரமான தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பனவற்றை மேம்படுத்தும் பொருட்டும் அதேவேளையில் அரசாங்கத்தின் பிணையங்கள் சந்தையினை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடனும் பொருத்தமான மூலவளங்களினூடாக தேவையான மூலவளங்களைத் திரட்டிக் கொள்வதற்காகவும் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் பின்வரும் முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அ. திறைசேரி உண்டியல்களுக்காக கட்டம் II இனை அறிமுகப்படுத்தல்

திறைசேரி உண்டியல் ஏலங்கள் தொடர்பாக மேலதிக உதவுதொகையின் பொருட்டு திறைசேரி உண்டியல்களுக்காக கட்டம் II அறிமுகப்படுத்தப்பட்டது. கட்டம் II இற்காக முன்வைக்கப்பட்ட உயர்ந்தபட்சத் தொகை ஏலப் பற்றாக்குறையினையும் (ஏதாவதிருப்பின்) அத்துடன் ஏலங்களில் தொடர்பான முதிர்ச்சிகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் ஏலங்களின் பங்கேற்பாளர்களினால் உதவப்படுகின்ற ஏலங்களில் முன்வைக்கப்பட்ட கூட்டுத்தொகையில் 25 சதவீதத்தினையும் கூட்டியதாக இருத்தல் வேண்டும். மேலதிகமாக உதவப்படும் சந்தர்ப்பத்தில் ஒதுக்குகள் ஏலத்தில் ஏலப் பங்கேற்பாளர்களின் வெற்றிகரமான பங்கேற்பின் கூட்டுத்தொகையினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. நேரடி வழங்கல் நிலையத்தினூடாக இலங்கை அபிவிருத்தி முறிகளில் செய்யப்படும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக ஊக்குவிப்புத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தல்

நேரடி வழங்கல் நிலையத்தினூடாக இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடுகளை ஏற்பாடு செய்பவர்களுக்கான ஒரு ஊக்குவிப்புத் திட்டம், குறிப்பாக, ஏற்றுமதிப் பெறுகைகளை பெறுவோரினாலும் ஏனைய வெளிநாட்டு நாணய உடமையாளர்களினாலும் இலங்கை அபிவிருத்தி முறிகளில் செய்யப்படும் முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் 2022 பெப்புருவரியில் அறிமுகப்படுத்தப்பட்டது. நேரடி வழங்கல் நிலையத்தினூடாகக் கொண்டு வரப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் முதலீடுகள் மீது 0.5 சதவீதத்திற்கு (50 அடிப்படைப் புள்ளிகள்) சமமான ஊக்குவிப்பு அல்லது கையாளுகின்ற கட்டணமொன்று வழங்கப்பட்டது.

இ. திறைசேரி முகாமைத்துவ முறைமைக்குப் பதிலாக ஒதுக்கல்லாத முகாமைத்துவ முறைமையினை அறிமுகப்படுத்தல்

நடைமுறையிலுள்ள திறைசேரி முகாமைத்துவ முறைமைக்குப் பதிலாக ஒதுக்கல்லா முகாமைத்துவ முறைமையின் கீழ் புதிய வெளிநாட்டுப் படுகடன் கொடுப்பனவு முறைமையினை நிறுவுவதற்கான செய்முறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முறைமையின் பிரதான நோக்கம் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுச் செய்முறையின் வினைத்திறனை அதிகரிப்பதேயாகும். இது 2022 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வந்திருக்கிறது.

ஈ. மூலதனச் சந்தை உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம்

தற்பொழுது இடம்பெற்றுவரும் மூலதனச் சந்தை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்டுள்ள அதிநவீனத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்பின் உத்தேச நடைமுறைப்படுத்தலானது வர்த்தகப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு தொடர்பான அதன் தோற்றப்பாட்டினைத் தரமுயர்த்துவதன் மூலம் சிறந்த பன்னாட்டு நடைமுகைளுக்கு இணையாக இலங்கை அரச பிணையங்கள் சந்தையினை அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கிய இராச்சியத்தின் பீரிஏ கொன்சல்ரிங் லிமிடெட் இச்செயற்றிட்டத்திற்கான ஆலோசனைகளை வழங்குகிறது. மூலதனச் சந்தை அபிவிருத்திச் செயற்றிட்டம் இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் தளம், மத்திய தீர்ப்பனவு இல்லம், தரமுயர்த்தப்பட்ட மத்திய பிணையங்கள் வைப்பகம் மற்றும் சந்தைக் கண்காணிப்பு முறைமை என்பனவற்றை நடைமுறைக்கிட எதிர்பார்க்கிறது. எனினும், நாட்டின் மோசமான பொருளாதார நிலைமைகளின் காரணமாக 2022இல் கொள்வனவுகள் எதுவும் இடம்பெறவில்லை என்பதுடன் வரும் ஆண்டில் விதந்துரைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

உ. லங்காசெகுயர் பணிகளின் டிஜிட்டல் மயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்தல்

லங்காசெகுயரினால் வழங்கப்படும் இலத்திரனியல் பணிகளை மேம்படுத்துவதற்காக 2022 நடுப்பகுதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் தற்போதுள்ள பௌதீக மற்றும் காகிதங்களை அடிப்படையாகக் கொண்ட பணிகளை 2023 இலிருந்து லங்காசெகுயர் பணிகளை இலத்திரனியல் முறைக்கு முழுமையாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணிகளை டிஜிட்டல் மயப்படுத்துவதனூடாக லங்காசெகுயர் உலகின் தொழில்நுட்பவியல் முன்னேற்றங்களுக்கு இணையானதாக மாற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் தொடர்பூட்டலிலும் முதலீட்டாளர் தகவல்களைப் பரப்புவதிலும் காணப்படும் செலவுகளும் தாமதங்களும் குறைக்கப்படும்.

ஊ. எதிர்பார்க்கப்படும் பொதுப்படுகடன் முகாமைத்துவ முகவரை நிறுவுவதற்காக அதிகாரிகளுக்கு உதவுதல்

2022 ஓகத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் இது தொடர்பான தற்போதைய ஏற்பாடுகளுக்குப் பதிலாக தேசிய படுகடன் முகாமைத்துவ முகவர் ஒன்றினை ஏற்படுத்துவது பற்றி அரசாங்கம் அறிவித்தது. பொதுப்படுகடன் திணைக்களம் கேட்டுக் கொள்ளப்படுமிடத்து தேவையானவாறு இது தொடர்பான தொழில்நுட்ப உதவிகளை வழங்கும்.

23.6 நாட்டிற்கான தரமிடல் மீளாய்வு தூதுக்குழுவினை இணைத்தல்

2022இல் பொதுப்படுகடன் திணைக்களம் பன்னாட்டுத் தரமிடல் முகவராண்மைகளுக்கு (பிட்ஜ் றேடிங், மூடிஸ் இன்வெஸ்டர்ஸ் சேர்விஸஸ், எஸ் அன் பி குளோபல் றேட்டிங்) தரமிடல் நடவடிக்கைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் அவர்களது தரமிடல் மீளாய்வுகளுக்கு வசதியளிக்கப்பட்டது.

24. பிரதேச அபிவிருத்தி

2022இல், பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது நாட்டின் நிதியியல் வசதிக்குட்படுத்தலை அதிகரிக்கும் பொருட்டு, புதிய கொள்கை மூலோபாயங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தத் தொடங்கியதுடன் அத்தொழிற்பாடுகளுடன் ஈடுபட்டுள்ள கைமுறைச் செயன்முறைகளைப் பகுதியளவில் தன்னியக்கப்படுத்துவதன் மூலமாக வழமையான கடன் தொழிற்பாடுகளின் வினைத்திறனை அதிகரிக்கும் வழிவகைகளை ஆராய்ந்தது. வேளாண்மையாளர்கள் மற்றும் வேறு பெறுமதிச் சங்கிலிப் பங்கேற்பாளர்களின் அடிப்படைத் தேவைப்பாடுகளையும் தேசிய பொருளாதாரத்திற்குப் பங்களிப்பதற்கான அவர்களின் ஆற்றலையும் அங்கீகரித்து பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வேளாண்மைப் பெறுமதிச் சங்கிலி நிதியிடல் முன்னெடுப்புக்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தியது.

இப்பின்னணியில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு மீள்நிதியிடல் வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களைத் தொடர்ந்தும் ஒருங்கிணைத்து, வசதிப்படுத்தி மற்றும் நடைமுறைப்படுத்திய அதேவேளை கொடுகடன் துணைப் பணிகளின் வீச்சையும் வழங்கியது. மத்திய வங்கி அரசாங்கம், கொடை முகவராண்மைகள் மற்றும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் போன்றவற்றினால் இத்திட்டங்களுக்கு நிதியளிக்கப்பட்டன.

நிதியியல் வசதிக்குட்படுத்தல் துறையில், 2021இல் தொடங்கப்பட்ட இலங்கையின் முதலாவது தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, கண்காணித்து மற்றும் மதிப்பீடு செய்வதற்குத் தாபிக்கப்பட்ட தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் செயலகத்தைப் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் கொண்டுள்ளது. 2022ஆம் ஆண்டிறுதியளவில், மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சு ஆகியவற்றின் தலைமையிலான முக்கிய நடைமுறைப்படுத்தல் முகவராண்மைகளின் ஆதரவுடன் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்றினை அடைந்தது.

முக்கிய உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் சாத்தியப்பாட்டை ஆராய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் சார்பில் பிரைஸ்வோட்டர் ஹவுஸ் கூப்ர்ஸிலிருந்தான ஆலோசனைக் குழுவினால் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னோடிக் கட்டம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. இது 2024ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆண்டு காலப்பகுதியில், ஏற்புடைய வட்டி வீதங்களை மாற்றுதல், தொழிற்பாட்டுக் காலத்தை நீடித்தல், படுகடன் சட்டஇசைவுத் தாமதத்தை வழங்குதல், சந்தை மற்றும் நன்மைபெறுநர்களுக்கான தேவைப்பாடுகளை இனங்காணுதல், பின்தங்கிய வகுப்பினர்களுக்கு சிறந்த உற்பத்திக்களை

வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு வழிமுறைகள், பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் மூலமாக மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட கொடுகடன் இடர்நேர்வைக் கருத்திற்கொண்டு, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு எதிரான உத்தரவாதத் திட்டங்களினூடாக கொடுகடன் இடர்நேர்வைத் தொடர்ந்தும் பகிர்ந்தது.

சமூக இடைவெளி நடைமுறைகளும் ஒழுங்குவிதிகளும் நிறுத்தப்பட்டவுடன், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச மட்டத்தில் மத்திய வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதேச அலுவலகங்களுடன் இணைந்து பொருளாதாரத்தின் தேவைப்படும் வகுப்பினருக்கான தேவைகளைப் பூர்த்திசெய்து நாட்டில் நிதியியல் வசதிக்குட்படுத்தலையும் அதிகரிப்பதற்கு நிதியியல் அறிவு, முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நேரடியாக மீண்டும் அறிமுகப்படுத்தியது.

24.1 வசதியான கொடுகடன் வசதிகளை விரிவுப்படுத்தல்

2022 காலப்பகுதியில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது 22 மீள்நிதியிடல், வட்டி ஊக்குவிப்பு அத்துடன்/ அல்லது கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிதியியல் செயற்பாட்டைத் தொடர்ந்தும் விரிவு படுத்தியது. திட்டங்களின் விபரங்கள் அட்டவணை II-8இல் தரப்பட்டுள்ளன.

2022 காலப்பகுதியில், ரூ.17,244.4 மில்லியன் மொத்த கடன்கள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கடன் திட்டங்களினூடாக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் மூலம் 63,202 நன்மை பெறுநர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. மத்திய வங்கியின் நிதியுதவி பெற்ற கடன் திட்டங்கள் மொத்த கடன்களில் 50.7 சதவீத பங்களிப்பை அளித்த அதேவேளை, அரசாங்கம் மற்றும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதிய நிதியளிக்கப்பட்ட திட்டங்கள் முறையே, 47.8 சதவீதம் (அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட வட்டி ஊக்குவிப்பு திட்டங்களுக்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பகிர்ந்தளிப்புக்கள் உட்பட) மற்றும் 1.5 சதவீதம் பங்களித்தன. மொத்த கடன் பகிர்ந்தளிப்புக்களில், 57.6 சதவீதம் மீள்நிதியிடல் திட்டங்களினூடாக வழங்கப்பட்டதுடன் மிஞ்சிய 42.4 சதவீதம் வட்டி உதவுதொகை அத்துடன்/ அல்லது கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டது.

24.1.1 அரசாங்க நிதியிடப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

அரசாங்கத்தின் முகவராக பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், 2022இல், 9 மீள் நிதியிடல் திட்டங்கள் மற்றும் 3 வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் என்பவற்றினை உள்ளடக்குகின்ற அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட 12 திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இத்தகைய திட்டங்களினூடாக பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள், 2022இல் 54,046 பயன்பெறுநர்களுக்குப் பகிர்ந்தளிக்கின்ற வகையில் மொத்த கடன் பகிர்ந்தளிப்புக்களின் ரூ. 8,240.8 மில்லியன் அல்லது 47.8 சதவீதமாகக் காணப்பட்டன.

(அ) அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள்

வேளாண்மையாளர்களுக்கான பெருமளவிலான தீர்வை வழங்குகின்ற கொடுகடன் தெரிவாகவுள்ள, வட்டி உதவுதொகை திட்டம் மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டமான "சருசார" என்ற புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டமானது 2022ஆம் ஆண்டிலும் தொடர்ந்து அதன் தொழிற்பாடுகளை முன்னெடுத்து நாடளாவிய வேளாண்மையாளர்களுக்கு அவர்களின் குறுங்கால தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஆதரவளித்தது. புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் மூலம் 34 குறுங்கால பயிர் உற்பத்திகளை பயிரிட்ட 48,762 வேளாண்மையாளர்களுக்காக 2022இல் ரூ. 7,251.7 மில்லியன் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன் தொகைகள் அரசாங்க நிதியிடப்பட்ட திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 88.0 சதவீத பகிர்ந்தளிப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியன.

புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்குத் திருத்தங்களை வழங்குவதன் மூலம் 2022இல் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் ஏற்புடைய வட்டி வீதங்கள் மற்றும் நிதி அளவு என்பன திருத்தப்பட்டன. உணவுப் பாதுகாப்பை நிச்சயப்படுத்தும் பொருட்டு, நாட்டின் வேளாண்மை நடவடிக்கைகளை ஊக்குவிப்பதும், உணவு இறக்குமதிகள் மீதான வெளிநாட்டுச் செலாவணி வெளிப் பாய்ச்சலைக் குறைப்பதும், வேளாண்மை உற்பத்திகளை நோக்கி அதிகளவில் மக்களை ஈடுபடுத்துவதும், அத்துடன் சிறிய அளவிலான வேளாண்மையாளர்களின் சமூக பொருளாதார நிலைமைகளை உயர்த்துவதும் இத்திருத்தங்களின் நோக்கமாகக் காணப்பட்டது. இத்திருத்தங்களை அறிமுகப்படுத்தும் போது, நாட்டில் நிலவிய பொருளாதார நிலைமைகளும் தொடர்புடைய அரசாங்க கொள்கை வழிமுறைகளும் கவனத்திற் கொள்ளப்பட்டன. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்திற்கான கடன் நிதியங்கள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, அரசாங்கமானது ஆண்டிற்கு 7 சதவீத வீதமொன்றில் வட்டி உதவுதொகையை வழங்கியது. இறுதி கடன்பாட்டாளருக்கான வட்டிச் செலவானது ஆண்டிற்கு 8 சதவீதத்தில் காணப்படுகின்றது. புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வட்டி உதவுதொகையாக 2022 காலப்பகுதியில் ரூ.78.6 மில்லியனை அரசாங்கம் செலுத்தியது.

2022.12.31 அன்றுடன் முடிவடைகின்ற சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலானது சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தலின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் திட்டத்தின் நீடித்தலுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2023.06.30 அன்று வரை நீடிக்கப்பட்டது. மேலும், சந்தை அபிவிருத்திகளுக்கமைவாக, சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தில் வட்டி உதவுதொகை திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் வட்டி வீதங்களை உரிய வகையில் மாற்றுகின்றன. இதற்கமைவாக, 2022 யூலை 08 தொடக்கம் 2022 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு 6.5 சதவீதத்திலிருந்து 9 சதவீதம் வரை இறுதி கடன்பாட்டாளருக்கு வீதத்தை அதிகரிப்பதற்கு சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகை திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன. நிதியியல் துறையில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவுடன் கூட்டிணைந்து 2022இல், 180 பயன்பெறுநர்களுக்கிடையில் ரூ. 37.8 மில்லியன் தொகையினைப் பகிர்ந்தளித்தது.

(ஆ) அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட மீள்நிதியிடல் திட்டங்கள்

2022இல், பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது 9 அரசாங்க நிதியிடப்பட்ட மீள்நிதியிடல் திட்டங்களினூடாக 5,104 பயன்பெறுநர்களுக்கிடையில் ரூ. 951.3 மில்லியனைப்

அட்டவணை: II-18

பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொடுகடன் திட்டங்களின் தொகுப்பு

நிதி மூலம்	பெயர்	குறிக்கோள்	திட்டத்தின் வகை	2022இல் வழங்கப்பட்ட நிதியங்கள் (ரூ. மில்லியன்)	இறுதிக் கடன் பெறுநருக்கான வட்டி வீதம் - (ஆ.வீ.)
இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டவை	வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிக் கருத்திட்டம் - சுழலும் நிதியம்	வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஊக்குவித்தலூடாக வறுமையை ஒழித்தலும் முறையான வங்கித்தொழில் முறைமையுடன் குறைந்த வருமானக் குழுக்களை இணைப்பதற்கு அவர்களை ஒழுங்கமைத்தலும்	மீள்நிதியிடல்	69.30	12.00
	சுவசக்தி கடன் திட்டம்	நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சி துறைகளில் வருமானம் ஈட்டுகின்ற நடவடிக்கைகள் புதிதாக வருகின்றவர்களுக்கும் ஏற்கனவே ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்களுக்கும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்	மீள்நிதியிடல்	175.00	5.50
	சுய-தொழில் ஊக்குவிப்புத் தொடக்க முயற்சி கடன் திட்டம் II	அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனங்களினால் பயிற்றப்பட்ட இளையோருக்கு தமது சொந்த சுயதொழில் கருத்திட்டங்களைத் தாபிப்பதற்காக நிதியுதவியினை வழங்குதல்.	மீள்நிதியிடல்	2.00	7.00
	சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்- சுழலும் நிதியம் வருமானம் ஈட்டும் கடன் திட்டம்	வேளாண்மை உற்பத்தியின் உற்பத்தி, உற்பத்தித்திறன், தரம் மற்றும் பெறுமதி கூட்டலை அதிகரித்தல்	மீள்நிதியிடல்	83.10	6.50
	சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்- சுழலும் நிதிய வேளாண்வியாபார கடன் திட்டம்		மீள்நிதியிடல்	161.70	6.50
	சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்- சுழலும் நிதிய இளையோருக்கான கடன் திட்டம்		மீள்நிதியிடல்	357.80	6.50
	சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்- சுழலும் நிதிய நிதியியல் இடையீட்டாளர் கடன் திட்டம்		மீள்நிதியிடல்	59.36	6.50
	சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்சித்திட்டம்- சுழலும் நிதிய ஊக்குவிப்பாளர் மொத்த கடன் திட்டம்		மீள்நிதியிடல்	31.16	6.50
	வழங்கல் சங்கிலி மீள் வலுவூட்டல் கடன் திட்டம்	ஏற்கனவே காணப்படுகின்ற தேயிலைத் தயாரிப்பாளர்களுக்கு அவர்களது வியாபாரங்களை சீரமைப்பதற்கு உதவுவதன் மூலம் தேயிலை வழங்கல் சங்கிலியினை மீள் வலுவூட்டுதல்.	மீள்நிதியிடல்	12.00	3.50
	புதிய அளைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்[1]	வீட்டுத்தோட்டமைத்தல் உள்ளடங்கலாக நெல் மற்றும் குறுகிய கால பயிற்செய்கையில் ஈடுபட்டுள்ள நுண்பாக மற்றும் சிறியளவிலான வேளாண்மையாளர்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளை உயர்த்துதல்.	வட்டி உதவு தொகை	5,034.60	15.06.2022 வரை 4.00 அதன்பின்னர் 8.00
	இலங்கையில் இறால் வளர்ப்பை அதிகரிப்பதற்கான வட்டி உதவுதொகைக் கடன்திட்டம்[1]	இறால் வளர்ப்பில் ஈடுபடும் வேளாண்மையாளர்களின் பண்ணைகளை தரமுயர்த்துவதற்கு உதவுதல்	வட்டி உதவு தொகை		முதல் 18 மாதங்கள் 4.50 அடுத்த 6 மாதங்கள்-8.50
	சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டம்[1]	மீள்நடுகை செய்யப்பட்ட மற்றும் புதிதாக நடுகை செய்யப்பட்ட தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களிலிருந்து வருமானம் ஈட்டுவதில் தமத்தை எதிர்கொள்கின்ற சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் கருத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள சிறு உடமையாளர் வேளாண்மையாளர்களுக்கு அவர்களது மீள்நடுகை செய்யப்பட்ட அல்லது புதிதாக நடுகைசெய்யப்பட்ட தோட்டங்களிலிருந்து வருமானம் ஈட்டுகின்ற அத்தகைய காலம் வரை சுயதொழிலொன்றினை அல்லது குறுகிய கால வருமானமீட்டும் செயற்பாடொன்றினை நிறுவுவதற்கு அவர்களுக்கு உதவுவதன் மூலம் சலுகை கொடுகடன் வசதிகளை வழங்குதல்	வட்டி உதவு தொகை	37.80	9.0
மத்திய வங்கியால் நிதியளிக்கப்பட்டவை	சௌபாக்யா கடன் திட்டம்	ஏதேனும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியினை அல்லது அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட ஏதேனும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியினை தொடங்குவதற்கான அல்லது விரிவுபடுத்துவதற்கானது.	மீள்நிதியிடல்	7,706.6	9.00
	கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சியாளர்களுக்கான மீள்நிதியிடல் திட்டம் - சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதி கட்டம் IV	தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நியதிச்சட்டக் கடப்பாடுகளை அமைத்தல்	மீள்நிதியிடல்	-	4.00
	உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்- முன்னோடிக் கட்டம்	உள்நாட்டு வேளாண்மை துறையை அபிவிருத்தி செய்து வேளாண்மை ஏற்றுமதிகளை ஊக்குவித்தல்	மீள்நிதியிடல்	337.11	<ரூ.1 மில் - 4.00 >ரூ.1 மில் - ரூ.25 மில் - 5.00
	சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதி கட்டம் I	கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் எதிர்மறையாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களின் பொருளாதார மீட்பு முயற்சிகளுக்கு ஆதரவளித்தல்	மீள்நிதியிடல்	677.5	4.00
	சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதி கட்டம் II		மீள்நிதியிடல்	-	4.00
	சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதி கட்டம் III		வட்டி உதவு தொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதம்	-	4.00
	இலங்கையில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியின் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம்[2]	நெல் கொள்வனவு செய்கின்ற நோக்கத்திற்காகத் திட்டத்தின் கீழ் தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு கடன்களை வழங்குகின்ற பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத்தை வழங்குதல்.	கொடுகடன் உத்தரவாதம்	-	நிலவுகின்ற சந்தை வீதம்
கொடையாளிகளால் நிதியளிக்கப்பட்டவை	சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் 4பி வேளாண்வியாபார கடன் திட்டம்[3]	வேளாண்மை உற்பத்தியின் உற்பத்தி, உற்பத்தித்திறன், தரம் மற்றும் பெறுமதி கூட்டல் போன்றவற்றை அதிகரித்தல்.	மீள்நிதியிடல்	38.78	6.50
	சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் 4பி இளையோர் கடன் திட்டம்[3]			45.79	6.50
	சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் நிதியியல் இடையீட்டாளர் மொத்த கடன்[3]			178.84	6.50

குறிப்புக்கள்

[1] பங்கேற்கின்ற நிதி நிறுவனங்களின் சொந்த நிதியங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் வட்டி உதவுதொகை

2 மத்திய வங்கி - கொடுகடன் உத்தரவாதப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் - கடன் நிதியிடல்

3 வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம்

பகிர்ந்தளித்தது. அரசாங்கமானது சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் அதன் இணைத்தரப்பு நிதியளிக்கின்ற பகுதியொன்றாக, 2022இல், சுழலும் நிதியம் வேளாண்வியாபார கடன் திட்டம், சுழலும் நிதியம் இளையோர் கடன் திட்டம், சுழலும் நிதியம் நிதியியல் இடையீட்டாளர் மொத்த கடன் திட்டம், சுழலும் நிதியம் வருமான ஈட்டல் கடன் திட்டம் மற்றும் சுழலும் நிதியம் ஊக்குவிப்பாளர் மொத்த கடன் திட்டம் போன்றவற்றுக்கு நிதியளித்தது.

மேலும், அரசாங்கத்துடன் கைச்சாத்திட்ட நிருவாக உடன்படிக்கையானது சுய வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்பு கடன் திட்டம் - கட்டம் IIஇன் தொழிற்பாட்டு காலத்தை நீடிப்பதற்கு திருத்தப்பட்டது. இது 2023.01.01இலிருந்து தொடங்குகின்ற வகையில், ஐந்து ஆண்டுகளுக்கு அவற்றின் சுய வேலைவாய்ப்புச் செயற்றிட்டங்களைத் தாபிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட தொழிற்கல்வி பயிற்சி நிறுவனங்களினால் பயிற்சியளிக்கப்பட்ட இளையோருக்கு நிதியியல் உதவியை வழங்குவதை நோக்காகக் கொண்டுள்ளது.

24.1.2. மத்திய வங்கியினால் நிதியிடப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

இலங்கையில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் நிதியியல் செயற்பாட்டை விரிவுபடுத்தும் நோக்குடன், மத்திய வங்கியானது 2022இல் 7 முக்கிய கொடுகடன் திட்டங்களுக்குத் தொடர்ந்தும் நிதியளித்ததுடன் இத்தகைய 7 திட்டங்களின் கீழ் 8,559 பயன்பெறுநர்களுக்கிடையில் ரூ.8740.2 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது.

மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்பட்ட சௌபாக்யா (சுபீட்ச) கடன் திட்டத்தின் கொடுகடன் தொழிற்பாடுகள் கடன் திட்டம், முதன்மை கடன் திட்டம் போன்றன 8,062 பயன்பெறுநர்களுக்கிடையில் ரூ.7,706.63 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டு 2022இல் தொடர்ந்தும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன. மேலும், திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 9 சதவீத வட்டி வீதத்திற்கு அதிகரிப்பதற்குத் திருத்தப்பட்ட அதேவேளை வேளாண்மைத் துறைக்கு நிதிய பகிர்ந்தளிப்புக்களை உயர்த்துவதன் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, குறைந்தபட்சம் 80 சதவீத புதிய கடன்கள் வேளாண்மை, கால்நடை, மீன்பிடி, மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டன என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டன.

சிறு உடமையாளர் வேளாண்மைச் சமூகத்திற்கு உற்பத்தி மற்றும் உற்பத்தித் தரத்தை மேம்படுத்தி நன்கு இணைக்கப்பட்ட வேளாண்மைப் பெறுமதிச் சங்கிலிகளின் மூலம் சந்தை வாய்ப்புக்களை ஊக்குவித்து தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உதவியின் எல்லையை வழங்கி அவர்களின் நன்மைக்காக அனைத்தையுமுள்ளடக்கிய அபிவிருத்தித் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தும் நோக்குடன், உள்நாட்டு வேளாண்வியாபார அபிவிருத்தி - முன்னோடிக் கட்ட நிகழ்ச்சித்திட்டம் மீள்நிதியிடல் திட்டமொன்றைத் தாபித்தது. அடையாளங்காணப்பட்ட பெறுமதிச் சங்கிலியை ஒழுங்குமுறைப்படுத்தலில் முன்னணி வகித்து தொடர்புடைய வேளாண்மைப் பெறுமதிச் சங்கிலியில் தொழிற்பாட்டாளர்களின் பங்கேற்பை உறுதிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள பங்கேற்பு நிதியியல் நிறுவனங்களினால் தெரிவுசெய்யப்பட்ட முன்னணி தொழிற்பாட்டாளர்களின் ஈடுபாடு இத்திட்டத்தின் முக்கிய அம்சமாக விளங்குகின்றது. அவை, முன்னணி தொழிற்பாட்டாளராக பங்கு வகிப்பதற்கு உடன்படுகின்ற பெறுமதிச் சங்கிலியில் அல்லது வேறு ஏதேனும் பெறுமதிச் சங்கிலியில் ஈடுபட்டுள்ள தனியார் துறை நிறுவனங்களாக இருக்கலாம். இத்திட்டமானது ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியிடலுடன் 2024இல் அனைத்தையுமுள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டமொன்றாக அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பாக, தற்போதைய சூழ்நிலையில் நன்கு கூட்டிணைக்கப்பட்ட வேளாண்மைப் பெறுமதிச் சங்கிலி நிகழ்ச்சித்திட்டதைத் தாபிப்பதன் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, ஐ.அ.டொலர் 100 மில்லியனை வழங்குவதன் மூலம் முழுமையான அளவில் உள்நாட்டு வேளாண் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்வதற்கான நிதியியல் உதவியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஆர்வத்தை வெளிப்படுத்தியது. இதற்கமைவாக, ஆசிய அபிவிருத்தி வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரைஸ் வோட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் ஆலோசகர்களின் குழு 2022இன் பிற்பகுதியில் உள்நாட்டு வேளாண் அபிவிருத்தி முன்னோடிக் கட்ட நிகழ்ச்சித்திட்டத்தை மீளாய்வுசெய்துள்ளதுடன் மீளாய்வின் கற்றல் பெறுபேறுகள் உள்நாட்டு வேளாண் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டதுடன் இணைக்கப்படவுள்ளன.

24.1.3. கொடையாளர்களினால் நிதியிடப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

2022இல், வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட சிறு உடமையாளர்களுக்கான வேளாண்மை வியாபாரத்திற்கான பங்குடமைத் திட்டத்தின் கொடையாளர்களினால் நிதியிடப்பட்ட பகுதியின் கீழ் அரச தனியார் உற்பத்தியாளர் பங்குடமை வேளாண்வியாபாரம், 4பி இளையோர் கடன் திட்டம் மற்றும் 4பி நிதியியல் இடையீட்டாளர் மொத்த கடன் திட்டம் போன்ற திட்டங்களைப் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. இத்திட்டங்களினூடாகப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் ரூ.263.4 மில்லியன் ஆகவிருந்ததுடன் வேளாண்மைத் துறையில் 597 பயன்பெறுநர்களுக்கிடையில் அக்கடன்கள் வழங்கப்பட்டன.

வறுமையைக் குறைத்து இலங்கையிலுள்ள சிறு உடமையாளர் சமூகத்தின் போட்டித்தன்மையை அதிகரிப்பதானது சிறு உடமையாளர்களுக்கான வேளாண்மை வியாபாரத்திற்கான பங்குடமைத் திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். சிறு உடமையாளர்களுக்கான வேளாண்மை வியாபாரத்திற்கான பங்குடமை திட்டத்துடன் இணைக்கப்பட்ட வர்த்தகம்சார் வேளாண்மை உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமைகளில் ஈடுபட்டுள்ள சிறு உடமையாளர் வேளாண்மையாளர் வீட்டுத்துறையினரின் வருமானத்தையும் ஊட்டத்தின் தரத்தையும் அதிகரிப்பதையும் இது நோக்காகக் கொண்டுள்ளது.

24.2 இலங்கையில் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தை நடைமுறைப்படுத்தல்

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயமானது 2021 மார்ச்சில் அதன் தொடக்கத்திலிருந்து முக்கிய நடைமுறைப்படுத்தல் நிறுவனங்களின் கூட்டிணைவுடனும் பன்னாட்டு நிதிக் கூட்டுறவின் தொடர்ச்சியான ஆதரவுடனும் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆர்வலர்களின் முயற்சிகளை ஒருங்கிணைத்துத் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணித்து மதிப்பீடு செய்வதற்குப் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தில் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் செயலகம் தாபிக்கப்பட்டுள்ள அதேவேளை செயற்றிட்டத்தின் சுமூக தொழிற்பாட்டை உறுதிசெய்வதற்கு நடைமுறைப்படுத்தல் நிறுவனங்களை வசதிப்படுத்தியது. 2022 காலப்பகுதியில், தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய செயலகமானது 2 தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் சபை கூட்டங்கள், 3 முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் மற்றும் 25விடவும் அதிகமான தொழிற்பாட்டுக் குழுக் கூட்டங்கள் என்பவற்றை நடாத்தியது. 2022இறுதியளவில், 24 சதவீத நடவடிக்கைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்ட அதேவேளை, 60 சதவீதத்தை விடவும் அதிகமான நடவடிக்கைகள் செயற்பாட்டிலிருந்தன.

24.3 நிதியியல் அறிவு

பொதுமக்களின் நிதியியல் அறிவு, திறன்கள் மற்றும் இயலாற்றல் என்பவற்றை மேம்படுத்துவதின் இன்றியமையாத தேவையை அடையாளங்காணும் நோக்குடன், பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது 2022 காலப்பகுதியில் 490 நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்து வழங்கியது.

நிதியியல் வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமையினால் ஏற்பட்ட குறைபாடுகள் தொடர்பான விழிப்பூட்டலை உருவாக்குவதை இந்நிகழ்ச்சித்திட்டங்கள் நோக்காகக் கொண்டுள்ளதுடன் கிராம மற்றும் நகர்ப் புறங்களிலுள்ள பாதிக்கப்படும் சமூகப் பிரிவுகளுக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. பிரதேச அபிவிருத்தித் திணைக்களமும் பிரதேச அலுவலகங்களும் இலக்கு வைக்கப்பட்ட சமூகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நிதியியல் துறையில் நுழைவதினதும் இணைப்பதினதும் வெகுமதிகளை அடிப்படையில் எடுத்துக்காட்டுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை தேவைக்கேற்ப உருவாக்கியிருந்தது. மேலும், தொழில்முயற்சியாண்மையாளர்களின் தேவைகளைக் கண்டறிந்து அவர்களின் திட்டங்களை விரிவாக்குவதன் மூலம் அதிகளவிலான பொருளாதார வெளியீட்டை உருவாக்குவதற்கு பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது பிரதேச அலுவலகங்களுடன் இணைந்து, 2022ஆம் ஆண்டில் 799 கள விஜயங்களை மேற்கொண்டது.

பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் அட்டவணை II-19இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை II-19: 2022ஆம் ஆண்டுப்பகுதியில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

நிகழ்ச்சித்திட்டத்தின் வகை	நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை
நிதியியல் அறிவு, தொழில்முயற்சி, இயலாற்றல் விருத்தி மற்றும் திறன் அபிவிருத்தி	476
பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	11
தொலைக்காட்சி மற்றும் வானொலி அறிவினைப் பகிர்ந்துகொள்ளல்	02
கள விஜயங்கள்	01
	799
மொத்தம்	**1,289**

24.4 பிரதேச மட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தல்

பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது அநுராதபுரம், கிளிநொச்சி, மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஆறு பிரதேச அலுவலகங்களினூடாக மத்திய வங்கியின் பிரதேச மட்ட பிரதிநிதித்துவத்தை நிச்சயப்படுத்துகின்றது. பிரதேச பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தி ஊக்குவிக்கின்ற அதேவேளை, பிரதேச அலுவலகங்கள் ஊழியர் சேமலாப நிதியத்துடன் தொடர்புடைய விடயங்களை கையாளுதல், தரவு சேகரிப்பு முன்னெடுப்புக்கள், அளவீட்டுடன் தொடர்புடைய நடவடிக்கைகள், மத்திய வங்கி வெளியீடுகள் மற்றும் ஞாபகார்த்த நாணயக் குற்றிகள் மற்றும் நாணயத் தாள்களை விற்பனை செய்தல் போன்ற மத்திய வங்கியின் முக்கிய நடவடிக்கைகளைப் பிரதேச ரீதியில் ஒருங்கிணைக்கின்றன.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் சிறப்பு செயற்றிட்டங்களின் குறிக்கோள்களுக்கேற்ப பிரதேச அளவில் பொதுமக்களிடையே நிதியியல் வசதிக்குட்படுத்தல் மற்றும் நிதியியல் அறிவை மேம்படுத்துவதற்கு வலுவான முயற்சிகளையும் பிரதேச அலுவலகங்கள் மேற்கொள்கின்றன. அதிகாரமளிக்கப்பட்ட/ உரிமம்பெற்ற நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற முறையான வங்கி, நிதியியல் சேவைகள் மற்றும் அந்நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டங்கள் மற்றும் போலியான நாணயத் தாள்களை அடையாளங்காணுதல் போன்ற மத்திய வங்கியின் பணிகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பில் விழிப்பூட்டல் அமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் போன்றவற்றை பிரதேச மட்டத்தில் நடாத்துவதன் மூலம் பொதுமக்கள், சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற முகவராண்மைகள மற்றும் பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை அவை மேற்கொண்டன.

2022ஆம் ஆண்டில், ஆறு பிரதேச அலுவலகங்கள் ஊழியர் சேமலாப நிதியத்துடன் தொடர்புடைய 143,882 வினவல்களையும்/ கோரிக்கைகளையும் பல்வேறு அம்சங்களில் 1,658 பொதுமக்களின் குறைகளையும் நேரடியாகக் கையாண்டன. அளவீட்டுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் தொடர்பில், அனைத்துப் பிரதேச அலுவலகங்களும் வெவ்வேறு மாவட்டங்களில் 1,262 மாதிரிகளை உள்ளடக்கிய அதேவேளை வெளிநாட்டுப் பணவனுப்பல், அதிகாரமளிக்கப்படாத வைப்புக்களை ஏற்றல், தடைசெய்யப்பட்ட நிதியியல் திட்டங்கள், போலியான நாணயத் தாள்கள் மற்றும் பொய்யான நாணயத் தாள்களை அடையாளங்காணுதல் தொடர்பில் 184 விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

24.5 ஏனைய முன்னெடுப்புகள்

24.5.1 பசுமை கிராமிய நிகழ்ச்சித்திட்டம்

2020இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் முன்னோடித் திட்டமொன்றாக அறிமுகப்படுத்தப்பட்ட பசுமை கிராமிய நிகழ்ச்சித்திட்டம் 2022இலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது பிரதேச அலுவலகங்களுடன் இணைந்து 2022ஆம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் பல முன்னெடுப்புக்களை நடாத்தியது. இந்நிகழ்ச்சித்திட்டங்களில் வீட்டுத்தோட்டப் பயிற்சிகள், மழைநீர் பாதுகாப்பு, கழிவு மீள்சுழற்சி, புதுப்பிக்கத்தக்க வலு, மரம் நடுதல், சூழலியல் சார்ந்த சுற்றுலா, பசுமை வருமானம் உருவாக்கல் நடவடிக்கைகள் போன்ற சூழலியல் சிநேகபூர்வ செயற்றிட்டங்களை உள்ளடக்கியது. மேலும், கிராமத்தவர்கள் தமது வருமானத்தை உருவாக்கும் ஆற்றலை அடைவதற்குப் புதிய திறன்களை அவர்கள் வளர்த்துக்கொள்வதை இலக்காகக் கொண்டு, பல்வேறு இயலாற்றலை விருத்தி செய்கின்ற நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்தும் அத்துடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் ஆகியவற்றினால் நடாத்தப்படும் கடன் முகாம்கள், தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், மற்றும் நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்களின் மூலமாகவும் நன்மையடைந்தனர்.

24.5.2 பன்னாட்டு இணைப்புக்கள்

2022 காலப்பகுதியில், நிதியியல் வசதிக்குட்படுத்தல் அணி, ஆசிய கொடுகடன் குறைநிரப்பு நிறுவனக் கூட்டமைப்பு மற்றும் ஆசிய பசுபிக் கிராமிய மற்றும் வேளாண்மைக் கொடுகடன் அமைப்பு போன்ற உபாய ரீதியில் முக்கியத்துவம்வாய்ந்த பன்னாட்டு அமைப்புக்களுடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தொடர்ந்து உறவுகளைப் பேணியது. ஆண்டுகாலப்பகுதியில், நாட்டின் நிதியியல் வசதிக்குட்படுத்தலை முன்னெடுப்பதற்கான சாசனத்தில் கைச்சாத்திட்டதன் மூலம் நிதியியல் வசதிக்குட்படுத்தல் அணியின் தெற்காசிய அணியாக கருத்தப்படும் தெற்காசிய பிராந்திய நிதியியல் வசதிக்குட்படுத்தல் முன்னெடுப்புடன் மத்திய வங்கி இணைந்து கொண்டது.

25. தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம்

இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தினுடைய பிரதான நிதிப்பாதுகாப்புப் பொறிமுறையினை வினைத்திறனாக முகாமை செய்வதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் "நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பேணுதல்" எனும் பிரதான குறிக்கோளை அடைவதற்கு தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் பங்களிப்புச் செய்துள்ளது. மேலும், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83(இ) ஆம் பிரிவின் ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தடைசெய்யப்பட்ட திட்டங்கள் மீது விசாரணைகளை மேற்கொள்ளுதல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தீர்மானக் கட்டமைப்பை உருவாக்குதல் என்பவற்றின் மூலம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் பங்களிப்புச் செய்துள்ளது.

2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் தொகுப்பொன்று கீழே வழங்கப்பட்டுள்ளது.

25.1 இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் நிர்வாகம்

தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் ஆண்டு காலப்பகுதியில் நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் கொள்கைகளுக்கு அமைவாக இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தினுடைய அனைத்து செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ ஏற்பாடுகள் மேற்கொள்வதைத் தொடர்ந்தது. மேலும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தினை வலுப்படுத்தும்பொருட்டு 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உருவாக்கப்படவுள்ள வங்கிச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்காக இலங்கை வைப்புக் காப்புறுதி திட்டம் தொடர்பான ஏற்பாடுகள் வரைபுசெய்யப்பட்டுள்ளன. வங்கிச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் உருவாக்கத்துடன் இலங்கை வைப்புக் காப்புறுதி திட்டம் குறிப்பிடத்தக்க தீர்மான நடவடிக்கைகளுக்கு பங்களிக்ககூடிய நிலையிலிருக்கும் மற்றும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தினுடைய தற்போதுள்ள ஆணை தற்போதுள்ள அதனுடைய கொடுப்பனவுப்பெட்டியுடைய ஆணையிலிருந்து மேம்படுத்தப்படும்.

2022 இறுதியிலுள்ளவாறு, ஏறத்தாழ ரூ. 86,107.9 மில்லியன் (கணக்காய்வு செய்யப்பட்டவை) மொத்த நிதித் தொகையுடன் அறுபத்தேழு(67) அங்கத்துவ நிறுவனங்களை இத்திட்டம் உள்ளடக்குகின்றது. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் நிதியியல் சிறப்பம்சங்கள் கீழே அட்டவணை II-20 இல் வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை II-20

இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் நிதியியல் சிறப்பம்சங்கள்

விடயம்	தொகை (ரூ.மில்)	
	2021.12.31இல் உள்ளவாறு	2022.12.31இல் உள்ளவாறு
நிதியத்தின் அளவு	67,877.3	86,107.9
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமான ஒதுக்கம்	(2,103.0)	(25,931.5)
இலங்கை வைப்புக்காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டத்தின் மொத்த மூலதனம்	**65,784.4**	**60,176.4**
மொத்த வருமானம்	19,298.9	24,882.9
மொத்தச் செலவினம்	(96.6)	(226.3)
ஆண்டுக்கான மிகை (வரிக்கு முன்னர்)	19,202.4	24,656.6
வருமான வரி	(2,647.1)	(6,436.1)
ஆண்டுக்கான மிகை (வரிக்கு பின்னர்)	**16,555.2**	**18,220.6**
மொத்தச் சொத்துக்கள்	**74,443.9**	**69,017.6**
அரச பிணையங்களில் முதலீடுகள்	69,529.2	63,596.0
கடன்களும் பெறத்தக்கவையும் (தேறிய ஏற்பாடுகள்)	381.9	192.7

25.2 நிதி இடர்பாட்டுநிலையிலுள்ள நிதியியல் கம்பனிகளின் வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்

2022ஆம் ஆண்டு காலப்பகுதியில், இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகளுக்கமைவாக, உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்ட/ இடைநிறுத்தப்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகளைத் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. அதற்கமைவாக உரிமம் இரத்துச்செய்யப்பட்டதும் மற்றும் இடைநிறுத்தப்பட்டதுமான அனைத்து ஆறு கம்பனிகளின் 72,641 வைப்பாளர்களுக்கு ரூ. 30,499.24 மில்லியனுக்கு தொகையிடப்பட்ட இழப்பீட்டை இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டம் செலுத்தக்கூடியதாக இருந்ததுடன் அத்தகைய கம்பனிகளின் விபரங்கள் கீழே அட்டவணை II-21 இல் வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை II - 21

31.12.2022 இல் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் மூலம் செலுத்தப்பட்ட மொத்த இழப்பீட்டுத் தொகை

கம்பனியின் பெயர்	காப்புறுதி செய்யப்பட்ட மொத்தத் தொகை (ரூ.மில்லியன்)	செலுத்தப்பட்ட வைப்பாளர்களின் எண்ணிக்கை	செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்)	மொத்த காப்பீட்டு மதிப்பின் சதவீதமாக செலுத்தப்பட்ட இழப்பீடு
சென்றல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி	2,465.66	3,497	1,982.76	80.41%
த ஸ்டான்ரட் க்ரடிட் பினான்ஸ் லிமிடெட்	1,667.84	2,536	1,311.24	78.62%
ரீகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்	1,190.74	1,876	1,017.37	85.44%
த பினான்ஸ் கம்பனி பிஎல்சி	14,735.82	35,343	12,573.62	85.33%
ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்	13,915.89	26,782	12,565.68	90.30%
சுவர்ணமஹால் பினான்சியல் சேர்வீஸ் பிஎல்சி	1,253.27	2,607	1,048.57	83.67%
மொத்தம்	**35,229.22**	**72,641**	**30,499.24**	**86.57%**

25.3 விசாரணை நடவடிக்கைகள்

தடைசெய்யட்ட திட்டங்கள் மற்றும் பிற நிதி மோசடிகள் மீது பல்வேறு வடிவங்களிலான புகார்களைத் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் பெற்றுள்ளது. ஆண்டு காலப்பகுதியில் வங்கிச்சட்டத்தின் 83 (இ) பிரிவின் விதிகளுக்கு முரணானதாகக் குற்றம் சாட்டப்பட்ட தடைசெய்யப்பட்ட நிதித்திட்டங்கள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களுடனும் மற்றும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுடனும் இணைந்து பல நேரடியான மற்றும் மறைமுக விசாரணைகள் நடத்தப்பட்டன. தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களமானது 02 விசாரணைகளை நிறைவுசெய்து சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கூடுதலாக ஆண்டு காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற பொதுமக்களின் முறைப்பாடுகளின் அடிப்படையில் 16 உண்மை கண்டறியும் விசாரணைகளும் நடாத்தப்பட்டன.

மேலும், தடைசெய்யப்பட்ட திட்டங்களில் முதலீடு செய்வதிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் பொருட்டு அரச அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், வங்கி ஊழியர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட சமூகத்தின் பல்வேறு குழுக்களை இலக்குவைத்து ஏராளமான பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

அட்டவணை II-22

2022 இல் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரங்கள்

விபரம்	நடத்தப்பட்ட நிகழ்வுகள்
பத்திரிகை வெளியீடுகள் மற்றும் வர்த்தமானிகள்	02
செய்தி விளம்பரங்கள் மற்றும் பத்திரிகை அறிவிப்புக்கள்	04
பிரமிட் திட்டங்கள் தொடர்பான முகப்புத்தக விசாரணைகள்	42
சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுர விநியோகம்	11,508
கலந்துரையாடல்கள்	1
நடத்தப்பட்ட வலைத்தள மற்றும் நேரடிக் கருத்தரங்குகள்	29

25.4 இலங்கை மத்திய வங்கியின் தீர்மானமெடுத்தல் கட்டமைப்பை விருத்தி செய்தல்.

இலங்கை மத்திய வங்கியினுடைய உரிமம் பெற்ற நிதிநிறுவனங்களுக்காக தீர்மானக்கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியினுடைய தொழினுட்ப உதவியைப் பெற்று வங்கிச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை வரைவுசெய்வதற்குப் பங்களித்திருக்கிறது.

முன்மொழியப்பட்ட வங்கிச் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டமானது உரிமம் பெற்ற வங்கிகளுக்கான தீர்மான அதிகாரமாக இலங்கை மத்திய வங்கியை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்குவதோடு இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்ற வங்கியல்லாத நிதிநிறுவனங்களுக்கு அத்தகைய அதிகாரத்தைப் பிரயோகிப்பதை இயலச்செய்கிறது.

முன்மொழியப்பட்ட சட்டம் ஒரு நிதிநிறுவனத்தைத் தொடர்ந்து செல்லும் வகையில் அதன் வைப்பாளர்கள் மற்றும் கடன்கொடுநர்களின் நலன்களை உறுதிசெய்வதற்காக அந்நிறுவனத்தை புதுப்பிப்பதற்கும், அதன்மூலம் நிதியியல் உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கும் அச்சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிநிறுவனத்தைச் சரியான நேரத்தில் தீர்ப்பதற்கும் இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் செயல்படுத்தக்கூடிய தீர்மான நடவடிக்கைகளை வரையறை செய்கின்றது. கூடுதலாக இலங்கை வைப்புக்காப்புறுதி திட்டம் தொடர்பான மேம்படுத்தப்பட்ட ஏற்பாடுகளையும் மற்றும் குறிப்பிடப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான முடிவுறுத்தல் நடைமுறைகளையும் இது உள்ளடக்குகிறது.

முன்மொழியப்பட்ட வங்கிச் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்திற்கான அமைச்சரவை ஒப்புதல் தொடர்பாக சட்டம் வரைவதற்காக சட்ட வரைவுத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளப்பட்டுள்ளது. இச்சட்டம் 2023 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இயற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

26. இடர் மேலாண்மை

இலங்கை மத்திய வங்கியானது தனது கொள்கை நோக்கங்களை செயற்படுத்தும் போது நிதி மற்றும் நிதி சாராத பல்வேறு இடர்களை எதிர்கொள்ளும் தன்மையுடையது. இந்த அபாயங்களில் ஏதேனும் இடம் பெறுவது நோக்கங்களை அடைதல், நிதி நிலை மற்றும் வங்கியின் நற்பெயருக்கு கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால், முறையாக வடிவமைக்கப்பட்ட இடர் மேலாண்மை கட்டமைப்பைக் கொண்டிருப்பது மிகவும் அத்தியாவசியமானது.

இடர் மேலாண்மைத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் இடர் மேலாண்மை கட்டமைப்பிற்கிணங்க உருவாக்கப்பட்ட இடர் மேலாண்மை கொள்கைக் கூற்றில் (Risk Management Policy Statement) குறிப்பிடப்பட்டுள்ளவாறு வங்கி முழுமைக்குமான இடர் மேலாண்மையை செயற்படுத்துவதற்கான கொள்கைகளை வகுக்கின்றது. இந்த செயற்பாட்டில், இலங்கை மத்திய வங்கியானது இடர்களை நிர்வகிப்பதற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள், வழிகாட்டுதல்கள் மற்றும் உத்தம நடைமுறைகளைப் பின்பற்றுகின்ற அதே நேரத்தில், இடர் உரிமையையும் இடர் மேலாண்மையையும் வெவ்வேறு பங்குதாரர்களிடையே தெளிவான பொறுப்புக்கூறலுடன் ஒப்படைக்கிறது.

26.1 செயற்பாட்டு இடர்கள் (Operational Risk)

இடர் கண்டறிதல் செயற்பாட்டை இற்றைப்படுத்துவதற்காகவும், செயற்பாடுகளுடன் தொடர்புடைய இடர்களைத் திறம்பட மேலாண்மை செய்வதற்காகவும் இடர் மேலாண்மைத் திணைக்களம் 2022 காலப் பகுதியில் செயற்பாட்டு இடர் வகைபிரிப்பை (Operational Risk Taxonomy) மீளாய்வு செய்து, தேவையான திருத்தங்களையும் மேற்கொண்டது.

திணைக்கள இடர் மதிப்பீடுகளுக்கு வழங்கப்பட்ட வசதிகளின் தொடர்ச்சியாக, இடர் மேலாண்மைத் திணைக்களமானது இடர் பதிவேடுகளை உருவாக்க உதவும் பொருட்டு மற்றைய திணைக்களங்களுடன் இணைந்து பணியாற்றியது.

வங்கியில் இடர் மேலாண்மை கலாச்சாரத்தை மேம்படுத்தும் வகையில், இடர் மேலாண்மைத் திணைக்களமானது ஆண்டு முழுவதும் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களுக்கான இடர் விழிப்புணர்வு அமர்வுகளை நடத்தியது.

இடர் மேலாண்மைத் திணைக்களமானது சம்பவ அறிக்கை முறைமை (Incident Reporting System) மூலம் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் நிர்வகிப்பை தொடர்ந்ததுடன் சம்பவங்களின் தரவு மையத்தை உருவாக்குவதற்கு மற்றும் சம்பவங்களின் திருத்த நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும் வழிவகுத்தது. இந்த முறைமையின் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் சாத்தியமான இடர் போக்குகள் மற்றும் பாதிப்புகளின் பகுதிகளை அடையாளம் காணவும் தொடர்புடைய இடர் சீர்ப்படுத்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தவும் உதவுகிறது.

26.2 நிதி சார்ந்த இடர்கள் (Financial Risk)

இடர் மேலாண்மைத் திணைக்களமானது, இரண்டாம் கட்ட பாதுகாப்பு நடவடிக்கையாக, கடன், சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்களை உள்ளடக்கிய நிதி இடர்களை சுயாதீனமாக கண்காணித்து, பகுப்பாய்ந்து, மதிப்பீடு செய்து அறிக்கையிடுகிறது. மேலும், இடர் மேலாண்மைக் கொள்கைக் கூற்றுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட பன்னாட்டு ஒதுக்குகள் (International Reserves). உள்ளக முதலீட்டு நிதியங்கள் (Internal Investment Funds) மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் (Employee's Provident Fund) (இது அரசாங்கத்திற்கான ஒரு முகவர் செயல்பாடாக மேற்கொள்ளப்படுகிறது) என்பவற்றின் முதலீட்டுக் கொள்கைக் கூற்று (Investment Policy Statement) மூலோபாய சொத்து ஒதுக்கீடு (Strategic Asset Allocation) மற்றும் முதலீட்டு வழிகாட்டுதல்கள் (Investment Guidelines) ஆகியவற்றுடன் இணக்கப்பாட்டினை கண்காணிக்கின்றது.

இடர் மேலாண்மைத் திணைக்களமானது 2022 ஆம் ஆண்டில் உள்ளக முதலீட்டு நிதியங்கள் மற்றும் பன்னாட்டு ஒதுக்குகளுக்கான முதலீட்டு கொள்கை கூற்று, உள்ளக முதலீட்டு நிதியங்கள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் பன்னாட்டு ஒதுக்குகளுக்கான முலோபாய சொத்து ஒதுக்கீடு, மற்றும் உள்ளக முதலீட்டு நிதியங்கள் மற்றும் பன்னாட்டு ஒதுக்குகளுக்கான முதலீட்டு வழிகாட்டுதல்கள் என்பவற்றினை தேவையான திருத்தங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்தது. இடர் மேலாண்மைத் திணைக்களமானது தொடர்புடைய இடர் குறிகாட்டிகளை அடிக்கடி பகுப்பாய்வு செய்வதன் மூலம் சந்தை அபாயங்கள் மற்றும் கடன் அபாயங்களை மதிப்பிட்டதுடன் பன்னாட்டு ஒதுக்குகள், உள்ளக முதலீட்டு நிதியங்கள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றிற்கான மூலோபாய சொத்து ஒதுக்கீடு, முதலீட்டுகொள்கை கூற்றுகள், மற்றும் முதலீட்டு வழிகாட்டுதல்கள் ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ள வரையறை கட்டமைப்புகள் கடைப்பிடிக்கப்படுவதையும் கண்காணித்தது. இந்த இடர் மதிப்பீடுகள் மற்றும் இணக்க மீறல்கள் அனைத்தும் தொடர்புடைய மாதாந்த முதலீட்டு மேற்பார்வைக் குழு (Investment Oversight Committees) ஒற்றுகூடல்களில் தெரியப்படுத்தப்பட்டன.

இடர் மேலாண்மைத் திணைக்களமானது, தற்போது பயன்பாட்டில் உள்ள இடர் மேலாண்மை பொறிமுறையை மேலும் மேம்படுத்தும் நோக்கில் இடர் மேலாண்மை கொள்கைக் கூற்றினை (RMPS) மதிப்பாய்வு செய்து திருத்தியது.

கூடுதலாக, இடர் மேலாண்மைத் திணைக்களமானது, இலங்கை மத்திய வங்கிக்கான இடர் ஏற்பனவு கட்டமைப்பை (Risk Appetite Framework) உருவாக்கத் தொடங்கியதுடன், இடர் ஏற்பனவு கட்டமைப்பை பற்றிய ஒரு ஆய்வு அறிக்கையை நிறைவு செய்து அதனை நிதியல்லாத இடர் மேலாண்மைக் குழு (Non-Financial Risk Management Committee) மற்றும் சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவின் (Board Risk Oversight Committee) இரண்டு வெளியக உறுப்பினர்களுக்கு விநியோகித்து விவாதிக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கி செயற்பாடுகள் மற்றும் நிதி மேலாண்மை நடவடிக்கைகள் தொடர்பான இடர்களைத் திறம்பட முகாமைத்துவம் செய்யும் நோக்கத்தில், செயற்பாட்டு இடர் தொடர்பாக நிதி அல்லாத இடர் மேலாண்மைக் குழுவிற்கு காலாண்டு அறிக்கையிடலும், செயற்பாட்டு இடர் மற்றும் நிதி இடர் தொடர்பாக சபை இடர் மேற்பார்வைக் குழு மற்றும் நாணயச் சபைக்கு காலாண்டு அறிக்கையிடலும் இடர் மேலாண்மைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

27. செயலகம்

மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் நிறுவப்பட்ட சில திணைக்களங்களில் செயலகத் திணைக்களமும் ஒன்றாகும். செயலகத் திணைக்களம் பெறுகை முகாமைத்துவம், ஓய்வூதிய நிதியங்களைத் நிருவாகித்தல், வெளிநாட்டு கற்கைகளுக்கும் பயிற்சிகளுக்கும் வசதியளித்தல், சொத்துக்களை கையுதிர்த்தல் முகாமைத்துவத்திற்கான அளவீட்டுச் சபையை நடாத்துதல், நாணயச் சபைக்கு, ஆளுநருக்கு, துணை ஆளுநர்களுக்கு மற்றும் பிரதி ஆளுநர்களுக்கு உபசரணை உதவிகளை வழங்குதல் என்பனவாகும்.

(அ) ஒட்டுமொத்த நிறுவனத்தையும் நிருவகித்தல்

2022ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஒட்டுமொத்த நிறுவனத்தினதும் நிருவாகமானது ஆளுகை ஒழுங்குவிதிகள், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் சிறந்த ஆளுகையின் ஏனைய பிரதான பண்புக் கூறுகள் என்பவற்றுடன் இசைந்துசெல்லும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு மேற்கொள்வதில், ஆண்டுகாலப்பகுதியில் செயலகத் திணைக்களம், மத்திய வங்கியின் ஆதனங்கள் தொடர்பில் அளவீடொன்றை நடாத்தி, இடர்நேர்வு விடயப்பரப்புக்களை இனங்கண்டு, மத்திய வங்கியின் அனைத்து ஆதனங்களையும் உள்ளடக்குகின்ற கூட்டுக் காப்புறுதியொன்றை பெற்றுக்கொண்டதுடன் அதன் அஞ்சல் முகாமைத்துவ பணியின் மூலம் மத்திய வங்கிக்கு உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் அஞ்சல் பணிகளுக்கு வசதியளித்தது. மேலும், காகிதாதி களஞ்சிய முகாமைத்துவம் வினைத்திறனாகவும் சிக்கனமாகவும் நடாத்தப்படுவதை உறுதி செய்தது. இதற்கு மேலதிகமாக, மத்திய வங்கிக்கான பலதரப்பட்ட நிகழ்வுகளை ஒழுங்கமைத்திருந்துடன் பணி வழங்குநர்களுடன் பல உடன்படிக்கைகளை நாணயச்சபை சார்பில் கைச்சாத்திட்டது.

(ஆ) பெறுகை முகாமைத்துவம்

நாணயச் சபை மூலம் ஒப்புதலளிக்கப்பட்ட மத்திய வங்கியின் 2022ஆம் ஆண்டின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்திற்கு அமைவாக, செயலகத் திணைக்களமானது 2022 ஆண்டுக்காலப்பகுதியில் வங்கிக்குத் தேவைப்படுகின்ற பொருட்கள் மற்றும் பணிகளின் பெறுகையை முன்னெடுத்தது. தேசியப் பெறுகை வழிகாட்டல்களுடன் பரந்தளவில் இணங்குகின்ற இலங்கை மத்திய வங்கியின் கைநூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ள பெறுகை நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் விலைக்கோரல் நடைமுறைகளுடாகவும் அதேபோன்று விலைகோரல் அல்லாத நடைமுறைகளுடாகவும் பெறுகைகள் மேற்கோள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக, செயலகத் திணைக்களம் பல அவசரகால தேவைக்கேற்ற பெறுகைகளில் உடனடியாக ஈடுபட்டது.

(இ) ஓய்வூதிய நிதியங்களை நிருவகித்தல்

செயலகத் திணைக்களமானது 2,307 பயனாளிகளை நிதியங்களுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளின் நிருவாகியாக தொடர்ந்தும் செயற்பட்டது. அதற்கமைய, பணிக் கொடைகள், திரட்டிய ஓய்வூதியங்களைக் கொடுப்பனவு செய்தல், சேமலாப நிதிய நிலுவைகளை விடுவித்தல், அத்துடன் மாதாந்த ஓய்வூதியங்கள், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவுகள், விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் போன்றவற்றை மேற்கொள்கின்ற செயற்பாட்டில் செயலகத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் கைநூலில் குறித்துரைக்கப்பட்ட ஓய்வூதிய விதிகளுக்கமைய உயிர் வாழ்வுச் சான்றிதழ்களைச் சேகரித்தல் உள்ளடங்கலாக அவர்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு பயனாளிகளுடன் தொடர்புடைய பல்வேறு தொடர்புகளை செயலகத் திணைக்களம் கையாண்டது.

(ஈ) வெளிநாட்டு கற்கைகளுக்கும் பயிற்சிகளுக்கும் வசதியளித்தல்

2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் செயலகத் திணைக்களமானது, ஊழியர்களுக்கான பட்டப்பின்படிப்பு கற்கைகளையும் கடமைசார்ந்த வெளிநாட்டுப் பயணங்களையும் வசதிப்படுத்தியது. இது தொடர்பில், செயலகத் திணைக்களம் பல்கலைக்கழகங்களுடனும் மேற்குறித்த நோக்கங்களுக்காக வெளிநாடுகளுக்குப் பயணிக்கின்ற அலவலர்களுடனும் தொடர்புடைய கொடுப்பனவுகளை

மேற்கொள்வதில் வீசா பெற்றுக்கொள்வதனை இயலச்செய்வதற்கு செயலகத் திணைக்களம் வீசாக் கடிதங்களையும் சேமநிதிய நிலுவை உறுதிப்படுத்தல் கடிதங்களையும் வழங்கியதுடன் விமானப் பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்கும் பயணக் காப்புறுதியைப் பெறுவதற்கும் வசதியளித்தது. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இவ்வாண்டில் அத்தகைய வெளிநாட்டுப் பயணங்களுக்கான சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை குறைந்தளவான மட்டத்தில் காணப்பட்டது.

(உ) அளவீட்டுச் சபையினை நடாத்துதல்

வழக்கற்றுப்போன, சேதத்துக்குள்ளான, திருத்தம் செய்யவியலாத, இழப்பீடு வழங்கவியலாத நிலையான சொத்துக்களை இனங்காண்பதற்கு அளவீட்டுச் சபை ஆண்டுக் காலப்பகுதியில் பூர்த்திசெய்யப்பட்டு மத்திய வங்கியின் கையேட்டின் ஏற்புடைய ஏற்பாடுகளுக்கமைவாக அப் பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டன.

(ஊ) ஆளுநருக்குச் செயலக மற்றும் உபசரணை உதவிகளை வழங்குதல்

2022 ஏப்பிறல் 08அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில், ஆளுநரின் செயலகத் திணைக்களம் தொழிற்பாட்டிலிருந்து நிறுத்தப்பட்டு ஆண்டுகாலப்பகுதியில் செயலகத் திணைக்களத்தின் பிரிவொன்றாக ஆளுநருக்கான செயலக மற்றும் உபசரணை உதவிகளை செயலகத் திணைக்களத்தின் ஆளுநரின் செயலகப் பிரிவு வழங்கியது. சந்திப்புக்களையும் கூட்டங்களையும் அட்டவணைப்படுத்துதல், ஆளுநருக்காக எடுத்துரைப்புக்களையும் உரைகளையும் தயாரித்தல் மற்றும் தொகுத்தல், ஆளுநரின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணங்களை ஒருங்கிணைத்து ஏற்பாடுசெய்தல், ஆளுநரால் விருந்தளிக்கப்பட்ட அலுவல்சார் நிகழ்வுகளை ஏற்பாடுசெய்தல் அத்துடன் ஆளுநரினதும் மத்திய வங்கியினதும் விசேட அதிதி வருகைதருநர்களுக்கு வழங்கப்பட்ட உபசரணைச் சேவைகள் ஆகியவற்றை செயலக மற்றும் உபசரணை உதவிகள் உள்ளடக்கியிருந்தன.

28. பாதுகாப்புப் பணிகள்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவாகவும் அண்மைக் காலத்தில் பல்வேறு தரப்பினர்களால் நடாத்தப்பட்ட நீண்ட கவனயீர்ப்புப் போராட்டத்தின் விளைவாகவும் ஆண்டுக் காலப்பகுதியில் எதிர்கொள்ளப்பட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியில், பிரதேச அலுவலகங்களையும் ஏனைய நிறுவனங்களையும் உள்ளடக்கிய மத்திய வங்கியின் ஊழியர்களை, வருகைதருநர்களை மற்றும் ஆதனங்களைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் அதன் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. நிறுவன ரீதியான முன்னுரிமைகளாக வழியிடையில் நாணயங்களை அனுப்பிவைப்பதற்காக இலங்கை பொலிசாருடன் இணைந்து விசேட பாதுகாப்பு ஒருங்கேற்பாடுகள் வழங்கப்பட்டன. மத்திய வங்கியின் தொடர்ச்சியாக அனைத்து தொழிலை மேற்கொள்வதற்கான ஒத்திகைகளுக்கும் பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் முனைப்பாகப் பங்களிப்புச்செய்தது.

(அ) முறைமை மேம்பாடுகள்

தலைமை அலுவலகத்திலும் ஏனைய வளாகங்களிலும் அமைந்துள்ள அனைத்து தீயணைப்புச் சாதனத்தின் தொழிற்பாட்டுத் தகுதிநிலையும் ஆண்டுக் காலப்பகுதியில் கிரமமான அடிப்படையொன்றில் பரிசோதிக்கப்பட்டு பேணப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது. பொதிகளை ஸ்கேன் செய்தல், சரக்கை ஸ்கேன் செய்தல் உட்பட அனைத்து வேறு பாதுகாப்புச் சாதனத்தையும் பேணுகின்ற பணிகளானது தொடர்புடைய பணி வழங்குநர்களுடன் மேற்கொள்ளப்பட்ட பணி ஒப்பந்தங்களுக்கமைய மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்பு முறைமைய மேம்படுத்தும் பொருட்டு வெடிபொருட்களைக் கண்டறியக்கூடிய இரு மின்னணுச் சாதனங்களை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது உளவறிதல் தகவல்களுடன் தொடர்ச்சியாக தன்னை இற்றைப்படுத்தியதுடன் தொடர்பான அதிகாரிகளுடன் உறவைப் பேணியது.

(ஆ) கண்காணிப்பு நடவடிக்கைகள்

பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு வருகைதந்த 85,299 வருகைதருநர்களையும் பிரதேச அலுவலகங்களுக்கு வருகைதந்த அனைத்து வருகைதருநர்களையும் பரிசோதித்து வசதியளித்தது. ஆண்டு முழுவதும் 30,514 வழியிடையில் கொண்டுசெல்லப்பட்ட நாணயப் பெட்டிகள் பரிசோதிக்கப்பட்டன.

(இ) கொவிட்-19 பரவலைத் தடுத்தல்

சுகாதார அதிகாரிகளால் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கமைவாக பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது அலுவலர்கள், வருகைதருநர்கள் போன்றோரின் வெப்பநிலையைக் கண் காணித்திருந்ததுடன் இவர்கள் வளாகத்திற்குள் உள்நுழைவதற்கு முன்னர் வருகைதருநர் முகாமைத்துவ முறைமையின் ஊடாக அனைத்து வருகைதருநர்களையும் பரிசோதித்தல் மற்றும் பதிவுசெய்தல் போன்ற தடுப்பு வழிமுறைகளையும் மேற்கொண்டிருந்தது. உலகளாவிய நோய்த்தொற்று நிலைமையின் காரணமாக அலுவலர்களின் பணிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்த அனைத்து திணைக்களங்களினதும் ஆவணப்படுத்தல் மற்றும் அஞ்சல் முகாமைத்துவ முறைமைகள் என்பவற்றிற்குப் பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் ஆதரவளித்தது. வங்கி வளாகங்களினுள் மனித தொடர்பினைக் குறைப்பதற்கு புதிய கடமைச் சுழற்சி முறைமையொன்றினையும் பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் அறிமுகப்படுத்தியது.

(ஈ) பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை மதிப்பிடல்

பாதுகாப்புக் கட்டுப்பாட்டு மதிப்பீட்டில் கண்டறியப்பட்டவற்றினை அடிப்படையாகக் கொண்டு பாதுகாப்புத் திட்டம் இற்றைப் படுத்தப்பட்டதுடன் அதற்கமைய வெடிபொருளை கண்டறியக்கூடிய இரு கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டு அவற்றை அண்மைய எதிர்காலத்தில் தொழிற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

(உ) மனித மூலதனத்தை வலுப்படுத்தலும் திறனை கட்டியெழுப்புதலும்

நவீன தொழில்நுட்பம் தொடர்பான திறன்களை விருத்திசெய்யும் நோக்கில் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட வெடிபொருளை கண்டறியக்கூடிய கருவிகள் தொடர்பாக தெரிவுசெய்யப்பட்ட பாதுகாப்பு அலுவலர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. பாதுகாப்பு அலுவலர்களுக்காக ஆண்டுதோறும் திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் வெற்றிகரமாக நடாத்துவதற்கு இயலுமாகவிருந்தது.

29. அலுவலர் பணிகள் முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கிக்கென வினைத்திறன்மிக்கதும், ஆரோக்கியமானதும் திருப்திகரமானதுமான தொழிற்படையொன்றினை உறுதிசெய்து இலங்கை மத்திய வங்கியினுடைய அலுவலர்களின் நலனோம்புகைக்கு வசதிளியளிப்பதே அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் வகிபாகமாகும். எனவே, அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் நலனோம்புகை வசதிகளானது இலங்கை மத்திய வங்கியினுடைய ஊழியர்களது சிறந்த உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியத்தினை பேணிவளர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்டமையால் இவை இலங்கை மத்திய வங்கியில் ஆரோக்கியமாக பணிபுரிகின்ற சூழலொன்றையும் ஊக்குவிக்கின்றன.

அலுவலர் வீடமைப்பு (ஈட்டு) கடன் திட்டம், சேமலாப நிதியக் கடன் திட்டம், அலுவலர் வாகனக் கடன் திட்டம் உட்பட அலுவலர் நலத் திட்டம், என்பவற்றின் கீழ் கடன்களைப் பகிர்ந்தளித்தல் தொழில்தருநர் பங்களிப்புடன்கூடிய மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழான மருத்துவச் செலவீனங்களை மீளளித்தல், அலுவலர்களுக்கான மருத்துவ வசதிகளை வழங்குதல், உணவக வசதிகளையும் ஏனைய நலனோம்புகை பணிகளையும் வழங்குதல் என்பன திணைக்களத்தால் வழங்கப்படும் முக்கிய பணிகளாக காணப்படுகின்றன. இத்தகைய பணிகளானது ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உதவிபுரிகின்ற வீடமைப்பு, வாகனம், மருத்துவம் மற்றும் ஏனைய நலனோம்புகைத் தேவைகளை உள்ளடக்கி அதிகளவான வினைத்திறனுடனும் நம்பகத்தன்மையுடனும் ஊழியர்கள் பணிபுரியக்கூடிய நிறைவானதும் ஊக்கமளிக்கப்பட்டதுமான தொழிற்படைக்கு வசதியளித்தது. மேலும், இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுடன் தங்கிவாழ்வோர் மற்றும் அதேபோல் ஓய்வூதியம்பெறுவோர் ஆகியோரின் மருத்துவத் தேவைகளும் மருத்துவ நன்மைத் திட்டத்தின் கீழ் கரிசனையிற்கொள்ளப்பட்டன.

கொவிட்-19 உலகளாவிய நோய்தொற்றினால் ஏற்பட்ட சவாலான சூழலுக்கு மத்தியில், 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அனைத்து பயன்பெறுநர்களுக்குமான நலன்புரி வசதிகளை விரிவுபடுத்துவதை அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் தொடர்ச்சியாக மேற்கொண்டது. கொவிட்-19 உலகளாவிய நோய்தொற்று தொடர்பில் சுகாதார அதிகாரிகள் மூலம் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுடன் இணங்கியொழுகும்விதத்தில் சிறப்பு வழிமுறைகள் எடுக்கப்பட்டதுடன் 2022இல் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலக வளாகத்தில் ஊழியர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் நிகழ்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டமை உட்பட அலுவலர்களினால் கோரப்பட்டவாறான மேலதிகப் பணிகளுக்கும் வசதியளித்தது. அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களமானது ஆண்டுக் காலப்பகுதியில் அலுவலர்களுக்கான வீடமைப்பு, வாகனம் மற்றும் ஏனைய நலன்புரி கடன்களைப் பகிர்ந்தளித்தல் அத்துடன் மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அனைத்து நன்மை பயன்பெறுநர்களாலும் உறப்பட்ட மருத்துவச் செலவினங்களையும் மீளளித்தல் என்பவற்றை தொடர்ந்தும் மேற்கொண்டது. 2022ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் விதவைகள்/விதுரர்கள் ஆகியோருடன் இணைந்து அவர்களுடன் பதிவுசெய்யப்பட்டு தங்கிவாழ்வோர் ஆகியோரை உள்ளடக்கிய மருத்துவ நன்மைத் திட்டத்தின் கீழ் காணப்பட்ட பயன்பெறுநர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 9,842 ஆகும். மேலும், அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களமானது அலுவலக நேரத்தில் மருத்துவ நிலையமொன்றினூடாக நியாயமான கட்டணத்தில் வழங்கப்படும் மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் ஆய்வுகூட பணிகளுடன் கூடிய ஊழியர்களுக்கான மருத்துவ வசதிகளை வழங்கியது. சனவரியில் இலங்கை மத்திய வங்கியின் வளாகத்தில் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்ளும் பணிவழங்குநர் மூலம் தொழிற்படுத்தப்படும் மருந்தகமொன்றை திறந்துவைப்பதற்கான ஒருங்கேற்பாட்டை அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களம் மேற்கொண்டது. அமைதிமிக்க மனம், கொவிட் நோய்த்தொற்றிற்குப் பின்னரான இருதய நோய்கள், ஆரோக்கியமான குழந்தை பிறப்பு மற்றும் வீட்டுத்தோட்டமைத்தல் என்பவை தொடர்பிலான அறிவையும் விழிப்புணர்வையும் மேம்படுத்துவதற்கு அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் அலுவலருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் 2022இல் எம்.எஸ் ரீம்ஸ் (MS teams) ஊடாக நடாத்தியது.

வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் பணி வழங்குநரூடாக அலுவலக உறுப்பினர்களுக்கு உணவகப் பணிகள் அலுவலக நேரத்தில் வழங்கப்பட்டன. அலுவலருக்கு நியாயமான விலையில் தரமான உணவும் குடிபானங்களும் வழங்கப்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்கு உணவகங்களினதும் பேஸ்ரி கடைகளினதும் தொழிற்பாடுகளை அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் மேற்பார்வைசெய்தது.

அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களமானது அதன் பணிகளின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக அலுவலர் வீடமைப்பு (ஈட்டு) கடன் திட்டம், சேமலாப நிதியக் கடன் திட்டம் மற்றும் மருத்துவ நன்மைகள் திட்டம் மற்றும் புகையிரதப் பயணச்சீட்டை வழங்கும் முறைமை என்பவற்றுக்கான புதிய தகவல் தொழிநுட்ப முறைமைகளை உருவாக்குகின்ற செயன்முறைமையை தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்துடன் இணைந்து முன்னெடுத்தது.

30. புள்ளிவிபரவியல்

குறிப்பிட்ட மாதங்களில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட தரவுச் சேகரிப்புக்களுக்கான தடங்கல்கள் மற்றும் நடமாடல் கட்டுப்பாடுகள் போன்ற வடிவங்களில் தோன்றிய பல சவால்களுக்கு மத்தியிலும் புள்ளிவிபரவியல் திணைக்களம் திட்டமிடப்பட்டவாறு 2022ஆம் ஆண்டில் அதன் நடவடிக்கைகளை நிறைவு செய்திருக்கிறது.

2022ஆம் ஆண்டுப்பகுதியில் திணைக்களத்தின் முக்கிய நடவடிக்கைகள் கொள்கை உருவாக்கச் செய்முறைகளில் பயன்படுத்தப்படுவதற்கான அண்மைக்கால பணவீக்கம் மற்றும் மொ.உ.உற்பத்திகளை எதிர்வுகூறல், கொள்கை வகுப்பு செய்முறைத் தரவுகளுக்கான தகவல்களை உரிய நேரத்தில் வழங்குவதற்கான தரவுகளைச் சேகரித்தல், சுட்டெண்களைத் தொகுத்தல் மற்றும் வெளியீடுகளூடாகத் தகவல்களைப் பரப்புதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

30.1 கொள்கை வகுப்புச் செய்முறையில் பயன்படுத்தப்படுவதற்காக அண்மைக் கால பணவீக்கம் மற்றும் மொ.உ.உற்பத் தியை எதிர்வுகூறுதல்

புள்ளிவிபரவியல் திணைக்களம் மத்திய வங்கியின் எதிர்வுகூறல் மற்றும் கொள்கை பகுப்பாய்வு முறைமைக்கு பங்களிக்கின்ற விதத்தில் அண்மைக்கால பணவீக்கத்தினையும் மொ.உ.உற்பத்தியையும் எதிர்வுகூறுவதில் தொடர்ந்தும் ஈடுபட்டது. இதன்படி, மாதிரியை அடிப்படையாகக் கொண்ட மற்றும் குறிகாட்டியை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல்கள் பல்வேறு மூலங்களிலிருந்தான உள்ளீடுகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டன. இவ்வெதிர்வுகூறல்கள் கிரமமான நாணயக் கொள்கை சுற்றில் விபரமாக ஆராயப்படுவதுடன் கொள்கைத் தீர்மானங்களை எடுக்கும் செய்முறைக்கு வசதியளிப்பதற்காக நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

30.1.1 அண்மைக்கால பணவீக்கம் பற்றிய எதிர்வுகூறல்

சந்தை அபிவிருத்திகள் மற்றும் பொருளியலளவை உத்திகளுடன் இணைந்து காணப்பட்ட பிந்திய விலைப் போக்குகளும் எதிர்பார்க்கப்பட்ட விலை அசைவுகளும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் இரண்டினையும் அடிப்படையாகக் கொண்டு அண்மைக்கால பணவீக்கத்தினை எதிர்வுகூறுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. பணவீக்க எதிர்வுகூறலை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் புள்ளிவிபரவியல் திணைக்களம் பணவீக்கத்தின் மீதான நிரம்பல் மற்றும் கேள்விப்பக்கத் தாக்கங்கள் இரண்டினையும் பிரதிபலிக்கின்ற புதிய மாறிகளையும் தரவு மூலங்களையும் காலத் தொடர் மற்றும் எந்திர பயில்தல் உத்திகளைப் பயன்படுத்திய புதிய எதிர்வுகூறல் மாதிரிகளையும் கண்டறிந்தது.

30.1.2 அண்மைக்கால மொ.உ.உற்பத்தி எதிர்வுகூறல்

அண்மைக்கால மொ.உ.உற்பத்தி வளர்ச்சி எதிர்வு கூறல் குறிகாட்டிகள் மற்றும் மாதிரியை அடிப்படையாகக்கொண்ட உத்திகள் இரண்டினையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டன. முதலாந்தர மற்றும் இரண்டாந்தர முன்னணி பொருளாதாரக் குறிகாட்டிகளும் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பில் அளவீட்டில் கண்டறியப்பட்டவைகளும் குறிகாட்டிகளை

அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல்களில் காணப்பட்ட நிபுணத்துவ நியாயப்படுத்தல்களுடன் இணைக்கப்பட்ட வேளையில், மாதிரியை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல்கள் பொருளியலளவை உத்திகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டன.

30.2 தரவினை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களை மேற்கொள்கின்ற செய்முறைக்குச் சரியான நேரத்தில் தகவல்களை வழங்குவதற்காக தரவுகளைச் சேகரித்தல் மற்றும் சுட்டெண்களைத் தொகுத்தல்

புள்ளிவிபரவியல் திணைக்களம் குறிகாட்டிகள்/ சுட்டெண்ணைத் திரட்டுவதற்காக அளவீடுகள், நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமை மற்றும் ஏனைய பல நிறுவனங்களூடாக தரவுகளைச் சேகரிப்பதில் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தது. இப்பகுப்பாய்வுகளின் பெறுபேறுகள், மொ.உ.உற்பத்தி/ பணவீக்கத்தின் எதிர்வுகூறலில் பயன்படுத்தப்பட்டதுடன் தீர்மானங்களை மேற்கொள்ளும் செய்முறையில் பரிசீலனையில் கொள்ளப்படுவதற்காக முகாமைத்துவத்திற்கு அவை வழங்கப்பட்ட அதேவேளையில் சில தகவல்கள் மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டன.

30.2.1 அளவீட்டினை அடிப்படையாகக் கொண்ட தரவுச் சேகரிப்பு மற்றும் சுட்டெண்களைத் தொகுத்தல்

30.2.1.1 கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடுகள்

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடுகள் பொருளாதாரத்தின் சரியான நேரத் தகவல்களைத் திரட்டுவதற்காக மாதாந்த அடிப்படையில் நடத்தப்படுகின்றன. கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடானது தயாரிப்பு, கட்டுமானம் மற்றும் பணி நடவடிக்கைகளை உள்ளடக்கி மேல் மாகாணத்தில் குவிந்து காணப்படும் முனைப்புப் பெற்ற பாரிய கம்பனிகளை இலக்காகக் கொண்டிருந்தது. பெறுபேறுகள், குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட மொ.உ.உற்பத்தி எதிர்வுகூறல் செய்முறையில், பொருளாதாரத்தின் தொடர்பான துறைகளிலுள்ள அபிவிருத்திகளை மதிப்பிடுவதற்கான உயர் தாக்கமுள்ள முன்னணி குறிகாட்டிகளாகப் பயன்படுத்தப்பட்டன. மேலும், அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் கொள்கை வகுப்பு நோக்கங்களுக்காக முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடப்பட்டன. தயாரிப்பு மற்றும் பணிகளின் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் பகுப்பாய்வாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் பத்திரிகை வெளியீடுகளாக மாதாந்தம் வெளியிடப்படுகின்றன.

30.2.1.2 வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடு

தற்போதுள்ள மற்றும் எதிர்பார்க்கப்படும் பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பான வியாபார மனோபாவங்களின் கணநேர நடவடிக்கைகளை வழங்குகின்ற வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடு 2022ஆம் ஆண்டுப்பகுதியில் காலாண்டு அளவீடாகத் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. இவ்வளவீட்டின் இலக்கிடப்பட்ட குடித்தொகையாக, பொருளாதாரத்தின் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணி நடவடிக்கைகளை உள்ளடக்கிய பாரியளவு தொழில்முயற்சிகள் காணப்பட்டன. ஒட்டுமொத்த பெறுபேறுகளும் முக்கியமான உள்ளக விடயங்களும் நாணயக் கொள்கைக் குழுவிற்கும் நாணயச் சபைக்கும் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில், பொருளாதார வளர்ச்சி எதிர்வுகூறல்கள் அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்களின் அடிப்படையில் புள்ளிவிபரவியல் முறையியல்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டன. மேலும், முக்கியமான சுட்டெண்களுடன் சேர்த்து நிறைவேற்றுச் சுருக்கமொன்று வெளிவாரி பயன்படுத்துநர்களின் தகவல்களுக்காக காலாண்டு அடிப்படையில் மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டன.

30.2.1.3 கூட்டு ஆதன தொடர்மாடிமனைகளின் சந்தை அளவீடு

காலாண்டு கூட்டு ஆதன தொடர்மாடிமனைகளின் சந்தை அளவீடுகள் உண்மையான விற்பனைகள், விலை மாற்றங்களுக்கான காரணங்கள், உண்மையான மற்றும் எதிர்பார்க்கப்படும் கேள்வி, நிதியிடல் அமைப்பு, தற்போதுள்ள மற்றும் இனிவரவிருக்கும் வீடமைப்பு அலகுகளின் எண்ணிக்கை, செயற்றிட்ட தங்கல் மட்டங்கள் மற்றும் வாங்குநர் சொத்துப்பட்டியல் தகவல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய கூட்டு ஆதன தொடர்மாடிமனைகள் துறையின் அபிவிருத்தி மீதான தரவுகளைச் சேகரிப்பதற்காக காலாண்டு அடிப்படையில் நடத்தப்பட்டன. அளவீட்டினூடாக சேகரிக்கப்பட்ட தகவல்கள், உள்ளக விடயங்களுடன் சேர்த்து காலாண்டு அறிக்கையொன்றினூடாக, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் நியதிகளில், மத்திய வங்கியின் கொள்கை வகுப்புச் செய்முறைக்காக முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடப்பட்டன. மேலும், புதிய கூட்டு ஆதன தொடர்மாடிமனைகளின் விலை மட்டங்களில் ஏற்படும் ஒட்டுமொத்த மாற்றங்களை அடையாளம் காண்பதற்கு வசதியளிக்கின்ற புதிய கூட்டு ஆதன தொடர்மாடிமனைகளுக்கான காலாண்டு விலைச் சுட்டெண்ணொன்று அளவீட்டினூடாகச் சேகரிக்கப்பட்ட விற்பனைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு திரட்டப்பட்டது. அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்கள் சுருக்க வடிவத்தில் காலாண்டு அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டன.

30.2.1.4 பணவீக்க எதிர்ப்பார்ப்புக்கள் அளவீடு

இரண்டு முக்கிய பொருளாதார முகவர்களான கம்பனித் துறை மற்றும் வீட்டுத் துறை ஆகிய வகைகளின் பணவீக்க எதிர்ப்பார்ப்புக்கள் மீதான தரவுகளையும் தகவல்களையும் சேகரிப்பதற்காக மாதாந்த அடிப்படையில் பணவீக்க எதிர்ப்பார்புக்கள் அளவீடு தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. 2022ஆம் ஆண்டுப்பகுதியில் கம்பனித் துறை அளவீடுகள் மின்னஞ்சல்கள் அடிப்படையிலான அளவீடுகளாக தொடரப்பட்ட வேளையில், வீட்டுத் துறையின் அளவீடுகள் மெய்நிகர் முறையில் நடத்தப்பட்டன. இம்மெய்நிகர் அளவீடுகள், இலங்கை மத்திய வங்கியின் மாத்தளை, அனுராதபுரம், கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் நுவரெலியா பிரதேச அலுவலகங்களின் உதவியுடன் தெரிவுசெய்யப்பட்ட அரச துறை நிறுவனங்களின் ஊழியர்களுக்கு நடத்தப்பட்டன. இதன்போது பதிலிறுப்பாளர்களுக்கு அளவீட்டை மேற்கொள்வதன் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் தொடர்பாகவும் பணவீக்கம் தொடர்பான கோட்பாடு விளக்கங்களும் சுருக்கமாக வழங்கப்பட்டன. மேலும் வீட்டுத் துறை அளவீடுகளின் பதிலிறுப்புக்கள் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் ஆசிரிய பரீட்சகர்களிடமிருந்தும் மாதாந்த அடிப்படையில் சேகரிக்கப்பட்டன. இதேவேளை பணவீக்க எதிர்ப்பார்க்க அளவீடு ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்து அவர்களது பதிலிறுப்புக்களை பெறும் நோக்கில் 2022 நான்காம் காலாண்டிலிருந்து விரிவுபடுத்தப்பட்டது. அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்கள் கொள்கை வகுப்புச் செய்முறையில் பரிசீலனையில் கொள்வதற்காக நாணயக் கொள்கை குழுவிற்கும் நாணயச் சபைக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

30.2.1.5 ஏனைய அளவீடுகள்

பொருளாதாரத்தின் கொடுகடன் நிலைமைகளை மதிப்பிடுவதற்காக, கொடுகடன் கேள்வி அளவீடு மற்றும் கொடுகடன் நிரம்பல் அளவீடு என்ற பெயர்களிலான இரண்டு அளவீடுகள் நடத்தப்பட்டன. கொடுகடன் சந்தை நடவடிக்கைகளின் கேள்வி மற்றும் வழங்கல்பக்க அபிவிருத்திகளைச் சேகரித்துக் கொள்ளும் இவ்வளவீடுகள் 2022இலும் தொடர்ந்தன. பொருளாதாரத்தின் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை இலக்காகக் கொண்ட கொடுகடன் கேள்வி அளவீடு, குறிப்பாக, முன்னொருபோதுமில்லாத

இக்காலப்பகுதியில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளினால் அனுபவிக்கப்பட்ட கொடுகடனுடன் தொடர்பான அபிவிருத்திகளையும் பிரச்சனைகளையும் அடையாளம் காண்பதற்காக மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களுடன் இணைந்து வருடாந்த அளவீடொன்றாக மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை, கொடுகடன் நிரம்பல் அளவீடு, இலங்கையில் கொடுகடன் நிரம்பல் தொடர்பான நடவடிக்கைகளின் அண்மைய அபிவிருத்திகளையும் தோற்றப்பாட்டினையும் உள்ளடக்கிக் கொள்வதற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்குகின்ற விதத்தில் 2022இல் காலாண்டு அடிப்படையில் நடத்தப்பட்டது. கொடுகடன் கேள்வி அளவீடு மற்றும் கொடுகடன் நிரம்பல் அளவீடு இரண்டினதும் பெறுபேறுகள் மத்திய வங்கியின் கொள்கை வடிவமைப்புச் செய்முறையில் பயன்படுத்தப்பட்ட வேளையில், கொடுகடன் நிரம்பல் அளவீட்டின் பெறுபேறுகள் பொதுமக்களின் நன்மை கருதி மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டன.

மேலும், மாதாந்தச் சில்லறை விற்பனை அளவு அளவீடும் காலாண்டு சிறப்பு அங்காடி, சில்லறை வர்த்தக அளவீடும் சில்லறைத் துறையின் பொதுவான மற்றும் நவீன வர்த்தகப் பிரிவுகளின் அபிவிருத்தியைப் புரிந்து கொள்வதற்காக இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. கண்டறியப்பட்ட விடயங்கள் குறிகாட்டியினை அடிப்படையாகக் கொண்ட மொ.உ.உற்பத்தி எதிர்வுகூறல் செய்முறையில் பயன்படுத்தப்பட்டன.

போக்குவரத்துத் துறையின் அபிவிருத்திகளைப் பெற்றுக் கொள்வதற்காக தரைப் போக்குவரத்து, வான் போக்குவரத்து, துறைமுக மற்றும் ஏற்பாட்டுப் பணிகள் என்பனவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துப் பணிகள் மீதான அளவீடு 2022ஆம் ஆண்டுப்பகுதியில் மாதாந்த அளவீடாக தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் வியாபாரச் செய்முறை முகாமைத்துவத் துறை தொடர்பில் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் இடம்பெற்ற அபிவிருத்திகளையும் 2023ஆம் ஆண்டிற்கான வாய்ப்புக்களையும் அடையாளம் காண்பதற்கான அளவீடொன்று முன்னெடுக்கப்பட்டது. இவ்வளவீடுகளில் கண்டறியப்பட்ட விடயங்கள் உள்ளகப் பொருளாதாரப் பகுப்பாய்வுகளில் குறிப்பாக, பொருளாதார வளர்ச்சி எதிர்வுகூறல் செய்முறைகளில் பயன்படுத்தப்பட்டன.

அரச துறை தொழில்நிலையில் ஏற்பட்ட அபிவிருத்திகளை மதிப்பிடுவதற்காக அனைத்து அரச துறை நிறுவனங்களையும் அதாவது மத்திய அரசாங்கத்தின் கீழும் மாகாண சபைகளின் கீழும் உள்ள நிறுவனங்களையும் உள்ளடக்குகின்ற விதத்தில் வருடாந்த அரச துறை தொழில் அளவீடு 2022இலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.

புள்ளிவிபரத் திணைக்களம், அதன் கிரமமான அளவீடுகளுக்குப் புறம்பாக, பொருளாதாரம் அத்துடன்/அல்லது மத்திய வங்கித்தொழில் நடவடிக்கைகள் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்கக்கூடிய எதிர்பாராத நிகழ்வுகள் காரணமாக சுயாதீனமாக எழக்கூடிய தேவைப்பாடுகளின் அடிப்படையில் அநேக அளவீடுகளை மேற்கொள்கின்றது. 2022ஆம் ஆண்டுப்பகுதியில் அத்தகைய அநேக அளவீடுகள் அதாவது, ஏனைய தனியாள் பணிகள் மீதான அளவீடு, தொழிலாளர் கேள்வி மீதான அளவீடு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கொவிட்-19 சலுகைக் கடன்களின் பயனுறு தன்மை மீதான அளவீடு என்பன நடத்தப்பட்டன.

30.2.2 நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமை

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் பொருட்களின் ஒரேவிதமான கூடையொன்றின் சில்லறை விலைகள், வேளாண்மைப் பண்டங்கள் மற்றும் கட்டட மூலப்பொருட்களின் உற்பத்தியாளர் விலைகள், முறைசாரா துறை வேலையாட்களின் நாளாந்தக் கூலிகள், பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மற்றும் பொருட்களின் தெரிவுசெய்யப்பட்ட வகைகளின் சில்லறை விற்பனைகளின் அளவு என்பனவற்றைச் சேகரிக்கும் பொருட்டு 53 ஆசிரிய பரீட்சகர்களின் ஈடுபாட்டுடன் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையின் தொழிற்பாடுகளை 2022இலும் தொடர்ந்தமையின் மூலம் உள்ளக கொள்கை வகுப்புச் செய்முறைகளுக்குச் சரியான நேரத்தில் உள்ளீடுகளை வழங்கமுடிந்தது. நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையூடாகச் சேகரிக்கப்பட்ட தரவுகளின் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன், இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களின் ஒத்துழைப்புடன் தலத்திலான மற்றும் தலத்திற்கு வெளியேயான மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், தரவின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டும் தரவுச் சேகரிப்பு செய்முறையின் போது ஆசிரிய பரீட்சகர்களினால் எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் பற்றி கலந்துரையாடுவதற்காகவும் அனைத்து ஆசிரிய ஆலோசகர்களின் பங்கேற்புடன் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தில் வருடாந்த ஆய்வரங்கொன்று நடத்தப்பட்டது. "டப்ளூ" மென்பொருட்களூடாக நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையின் தரவுகளிலிருந்து அறிக்கைகள் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டதுடன் இவ்வாண்டுப்பகுதியில் வாராந்தம், மாதாந்தம் மற்றும் காலாண்டு அடிப்படையில் சேகரிக்கப்பட்ட தரவுகள்/தகவல்கள் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகளை எதிர்வுகூறுவதற்காக பயன்படுத்தப்பட்டன. மேலும், நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையினால் கேட்டுக் கொள்ளப்பட்டதற்கிணங்க, நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையிலிருந்தான குறிப்பிட்ட தரவுகள் வாராந்த அடிப்படையில் அவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

முகாமைத்துவ தகவல் முறைமையினை வலுப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, புறக்கோட்டைச் சந்தை, மரந்தகமுல்ல அரசிச் சந்தை, தம்புள்ளை மற்றும் நாரஹேன்பிட்ட சிறப்பு பொருளாதார நிலையங்கள் மற்றும் நீர்கொழும்பு மற்றும் பேலியகொட மீன் சந்தைகள் என்பனவற்றிலிருந்து நாளாந்த அடிப்படையில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விலைகள் மீதான தரவுகள்/தகவல்களைச் சேகரிப்பதற்காக ஆசிரியரல்லாத தரவுப் பரீட்சகர்களின் பணிகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. மேலும், இவ்விலைத் தரவுகளின் சுருக்கம் நாளாந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டன. மேலும், சனாதிபதி செயலகத்தின் கோரிக்கைக்கிணங்க, தெரிவுசெய்யப்பட்ட உணவுப்பொருட்களின் விலைகள் நாளாந்த அடிப்படையில் அவர்களுடன் பகிரப்பட்டன.

மேலும், புள்ளிவிபரத் திணைக்களம் இரண்டு முன்னணி சிறப்பு அங்காடிகளின் வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள உணவு விலைகளைப் பயன்படுத்தி திரட்டப்பட்ட முன்னணிக் குறிகாட்டிகளினை தொடர்ந்தும் தொகுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

30.2.3 ஏனைய மூலங்களினூடான தரவுச் சேகரிப்பும் சுட்டெண்களைத் தொகுத்தலும்

30.2.3.1 கூலி வீதச் சுட்டெண்கள்

பொருளாதாரத்தில் சம்பளங்கள் மற்றும் கூலிகளின் அசைவுகளை மதிப்பிடுவதற்காக புள்ளிவிபரவியல் திணைக்களம் அரச, முறைசார்ந்த மற்றும் முறைசாரா தனியார் துறைகளுக்கான கூலி வீதச் சுட்டெண்களைத் தொகுத்தது. இதற்கமைவாக, அரச துறைக்கான பெயரளவு மற்றும் உண்மைக் கூலி வீதச்

சுட்டெண்கள் பொது நிருவாக சம்பள சுற்றறிக்கைகளின் அடிப்படையில் மாதாந்த அடிப்படையில் தொகுக்கப்பட்டன. முறைசார்ந்த தனியார் துறை நியதிகளில், உண்மைக் கூலி வீதச் சுட்டெண்கள் தொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கூலி நிர்ணய சபை வர்த்தகங்களிலுள்ள ஊழியர்களுக்கான பெயரளவு கூலி வீதச் சுட்டெண்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டன.

அதேவேளை, உண்மையான மற்றும் பெயரளவு முறைசாரா தனியார் துறைக் கூலிகள் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையினூடாகச் சேகரிக்கப்பட்ட கூலித் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு திரட்டப்பட்டன. சுட்டெண்ணில் தற்போது முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருவதனால் 2022இல் இத்தொடரின் அடிப்படை ஆண்டு 2012 இலிருந்து 2018 இற்குத் திருத்தப்பட்டது. மேலும் இக்கூலி வீதச் சுட்டெண்கள் கொள்கை வகுப்புச் செய்முறையின் பரிசீலனைக்காக, சிறப்பு தரவுப் பரப்பு முறைமை எதிர்வுகூறல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமை, நாணயக் கொள்கைக் குழு மற்றும் நாணயச் சபை என்பனவற்றிற்குத் தொடர்ந்தும் சமர்ப்பிக்கப்பட்டன.

30.2.3.2 ஆதனச் சந்தைச் சுட்டெண்கள்

கொழும்பு மாவட்டத்திலுள்ள வதிவிடச் சொத்துக்களுக்கான (கூட்டுஆதன தொடர்மாடிமனைகள், காணிகள் மற்றும் வீடுகள்) விலைச் சுட்டெண்கள் பகிரங்கமாகக் கிடைக்கின்ற சொத்து விளம்பரப்படுத்தல் தரவுகளைப் பயன்படுத்தி மாதாந்த அடிப்படையில் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டன. திணைக்களம் 2022இன் முதலாம் காலாண்டிலிருந்து, மத்திய வங்கியின் வெப்தளத்தில் உண்மைச் சொத்து சந்தைப் பகுப்பாய்வு அறிக்கையினை வெளியிடத் தொடங்கியது. இது கூட்டுஆதன தொடர்மாடிமனைச் சந்தை அளவீடு மற்றும் மேற்குறிப்பிட்ட விலைச் சுட்டெண்கள் என்பனவற்றினூடாகத் திரட்டப்பட்ட கூட்டுஆதன தொடர்மாடிமனை சந்தை தகவல்களை உள்ளடக்கியிருந்தது.

புள்ளிவிபரவியல் திணைக்களம் காணி மதிப்பீட்டுக் குறிகாட்டியை அரையாண்டு அடிப்படையில் உண்மைச் சொத்து ஆதனச் சந்தையிலுள்ள அபிவிருத்தியை அறிந்து கொள்ளும் விதத்தில் தொடர்ந்தும் தொகுக்கிறது. இக்காணி மதிப்பீட்டுக் குறிகாட்டியானது வதிவிட, வர்த்தக மற்றும் கைத்தொழில் காணிகளை உள்ளடக்கியிருந்ததுடன் குறிப்பிட்ட மூன்று வகைக் காணிகளின் கீழும் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து சேகரிக்கப்பட்ட பேர்ச் ஒன்றிற்கான வெற்றுக் காணியின் விலை மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பொதுமக்களின் தகவல்களுக்காக 2022இல் காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி தொடர்பில் இரண்டு பத்திரிகை வெளியீடுகள் விடுக்கப்பட்டன.

30.2.4 பிரதேச புள்ளிவிபரங்களை தொகுத்தல்

30.2.4.1 இலங்கை சுபீட்சச் சுட்டெண்

இலங்கை சுபீட்சச் சுட்டெண் என்பது மொ.உ.உற்பத்தியில் பரிசீலிக்கப்பட்ட அம்சங்களுக்கு, விசேடமாக சமூக, பொருளாதார அம்சங்களுக்கும் அப்பால் நாட்டினை நகரச் செய்கின்ற முன்னேற்றங்களை அளவிடுவதற்காக மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட பல்பரிமாண குறிகாட்டியாகும். சுட்டெண்ணானது பொருளாதாரம் மற்றும் வியாபாரச் சூழல், மக்களின் நலனோம்புகைகள் மற்றும் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு ஆகிய மூன்று துணைச் சுட்டெண்களை உள்ளடக்கியிருந்ததுடன் இவை பொருத்தமான மாகாண ரீதியான குறிகாட்டிகளைப் பயன்படுத்தி ஆண்டுதோறும் தொகுக்கப்படுகிறது. 2022இல் புள்ளிவிபரவியல் திணைக்களம் 41 பிரதிநிதித்துவ மாறிகளைப் பயன்படுத்தி 2021ஆம் ஆண்டிற்கான இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணினைத் தொகுத்து வெளியிட்டது.

30.2.4.2 மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி

2021ம் ஆண்டிற்கான மாகாண ரிதியான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் தேசிய கணக்கு மதிப்பீடுகளை வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகள் தொடர்பான பொருத்தமான குறிகாட்டிகள் / மாறிகளை பயன்படுத்தி மாகாணங்களுக்கு பிரிப்பதன் மூலம் தொகுக்கப்பட்டது. இது தொடர்பான பத்திரிகை வெளியீடு 2022 திசெம்பரில் வெளியிடப்பட்டது. இம்மதிப்பீடுகள் ஒவ்வொரு மாகாணமும் தேசிய மொ.உ.உற்பத்திக்குப் பங்களிக்கும் மேலெழுந்தவாரியான தொகையினை வழங்குகிறது. இது மாகாணங்களிடையே மூலவளங்களை ஒதுக்குவது மீதான அரச அதிகாரிகளின் தீர்மானத்திற்குப் பயன்மிக்கதாக விளங்கும்.

30.2.5 தொழிற்சந்தை தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்

தொழிற்படை, தொழில்நிலை, தொழிலின்மை, வெளிநாட்டு தொழில் வாய்ப்பு, தொழிலாளர் உறவுகள், தொழிற்சந்தைச் சீர்திருத்தங்கள் தொடர்பான ஒட்டுமொத்த தொழிற்சந்தைத் தரவுப் பகுப்பாய்வொன்று தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம், இலங்கை வேலைவாய்ப்புப் பணியகம், தொழில் திணைக்களம் மற்றும் நம்பகமான தரவு மூலங்களிலிருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்கள்/தகவல்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இப்பகுப்பாய்வுகளின் அடிப்படையில், கொள்கை வகுப்புச் செய்முறைக்கு உதவுவதற்காக முகாமைத்துவத்திற்கு காலாண்டு அடிப்படையில் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

30.3 தகவல்களைப் பரப்புதல்

தரவுச் சேகரிப்பில் சவால்கள் எதிர்நோக்கப்பட்டமைக்கிடையிலும், புள்ளிவிபரவியல் திணைக்களம் 2022இல் அலுவல்சார் புள்ளிவிபரங்களை இலத்திரனியல் முறையில் கிரமமாக வெளியிட்டது. வருடாந்த புள்ளிவிபரவியல் வெளியீடுகளான "இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்கள் 2022 தொகுதி XLIV மற்றும் இலங்கை சமூக பொருளாதாரத் தரவு 2022 – தொகுதி XLV என்பன வெளியிடப்பட்டன. மேலும், துரிதமாக கிடைக்கக் கூடியதாகவுள்ள தரவு பரப்புதல் நாளாந்தப் பொருளாதாரக் குறிகாட்டிகளை வெளியிடுவதன் மூலமாக மேற்கொள்ளப்பட்டன. இவை செலாவணி வீதங்கள், பணச் சந்தை வீதங்கள், பங்குச் சந்தை மற்றும் வலுத் துறை புள்ளிவிபரங்களை உள்ளடக்கியிருந்ததுடன் குறிப்பிட்ட நுகர்வுப்பொருட்களின் நாளாந்த விலை அறிக்கையும் வெளியிடப்பட்டது. வாராந்த மற்றும் மாதாந்தப் பொருளாதாரக் குறிகாட்டிகளும் ஆண்டு முழுவதும் சரியான நேரத்தில் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டன.

திணைக்களம் மத்திய வங்கியின் ஆண்டறிக்கையிலும் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்தி தொடர்பான அறிக்கையிலும் இரண்டு அத்தியாயங்களுக்கு பங்களிப்புச் செய்து வருகின்ற வேளையில் மத்திய வங்கியின் மாதாந்த செய்தித்திரட்டிற்குத் தொடர்ந்தும் தரவுகளை வழங்குகிறது.

மத்திய வங்கியின் இணையவழித் தரவுத் தளமான "தரவு நூலகம்" தொடர்பான நிருவாகத் தொழிற்பாடுகளை புள்ளிவிபரவியல் திணைக்களம் மேற்கொள்வதுடன் இது ஆராய்ச்சியாளர்களுக்கும் மற்றைய ஆர்வலர்களுக்குமான தரவுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் இற்றைப்படுத்தப்பட்டும் பேணப்பட்டும் வருகிறது.

31. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் (நிதித்தொழில் சட்டம்), 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக்

குத்தகைக்குவிடல் சட்டம் (நிதிக் குத்தகைக்குவிடல் சட்டம்) மற்றும் 2016ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நுண்பாக நிதிச் சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகளின் கீழ் முறையே உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் என்பவற்றை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வைசெய்யும் பொறுப்பாணை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், திருத்தப்பட்டவாறான 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகள் மற்றும் திருத்தப்பட்டவாறான 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகள் என்பனவற்றின் ஏற்பாடுகளின் கீழ் முதனிலை வணிகர் கம்பனிகளினையும் மேற்பார்வை செய்கிறது.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் மேற்பார்வைத் தொழிற்பாடானது உரிமம்பெற்ற/ பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் நியதிச்சட்ட பரீட்சிப்புக்களையும் (தளத்திலான மேற்பார்வை) மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பினையும் (தளத்திற்கு வெளியேயான மேற்பார்வை) நடாத்தும் வேளையில் ஒழுங்குமுறைப்படுத்தல் தொழிற்பாடுகளான உரிமங்களை/ பதிவுகளை வழங்குதல், முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல்கள், ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குதல், அதிகாரமின்றி நிதித்தொழிலை மேற்கொள்கின்ற கம்பனிகள் பற்றி விசாரணை மேற்கொள்ளுதல் என்பனவற்றை உள்ளடக்குகின்றது. முக்கிய தொழிற்பாடுகளுக்குப் புறம்பாக, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், இத்துறையின் இயலாற்றலை கட்டியெழுப்புதல், நீதிமன்ற நடவடிக்கை முறைகளை வசதிப்படுத்தல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகளைக் கவனித்தல் போன்ற பல ஏனைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

2022 இறுதியில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையானது 37 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், 1 சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி, 4 உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள், 7 முதனிலை வணிகர் கம்பனிகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி உள்ளடங்கலாக 54 பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள் நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி, பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர்களின் பெயர்கள் இப்பிரிவின் இறுதியில் தரப்பட்டுள்ளன.

2022ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளினதும் நடவடிக்கைகளினதும் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

31.1. கொள்கை வழிமுறைகள்

(அ) முன்மதிமிக்க ஒழுங்குவிதிகளை வழங்குதல்

2022 காலப்பகுதியில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினதும் துறையின் தொடர்புடைய வேறு ஆர்வலர்களினதும் ஆலோசனையுடன் நடப்பு சந்தை நிலைமைகளுக்கும் பன்னாட்டு சிறந்த நடத்தைகளுக்கும் இசைவாக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் ஏற்கனவேயுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினைச் சீரமைப்பதற்கு பல்வேறு முன்மதிமிக்க ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன. நிலவுகின்ற பேரண்டப் பொருளாதார நிலைமைகள் காரணமாக எடுக்கப்பட்ட அதிவிசேட வழிமுறைகள் உள்ளடங்கலாக ஆண்டுகாலப்பகுதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகள் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட அத்தகைய ஒழுங்குவிதிகள் இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் தரப்பட்டுள்ளன. 2022 காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய முன்மதியுடைய வழிமுறைகளின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

i. தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குப்பிடிக்கும்தன்மை மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

ii. உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீது வெளிநாட்டில் பணியாற்றுகின்ற இலங்கையர்களுக்கான ஊக்கத்தொகை

iii. செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலமைந்த இலத்திரனியல் பணச் சேவைகள்

iv. வைப்புகள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களைத் திருத்துதல்

v. நுண்பாக நிதிக் கடன்கள் மீது உயர்ந்தபட்ச வட்டி வீதத்தினை அகற்றுதல்

vi. தற்போதைய பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் காரணமாக தமது வருமானம் அல்லது வியாபாரங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கான சலுகைகள்

vii. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களின் தனித்துவ அடையாள இலக்கங்களை கட்டாயமாகப் பதிவுசெய்தல்

viii. நிலைபேறான நிதி நடவடிக்கைகள் மீதான வழிகாட்டல்கள்

(ஆ) நிதித்தொழில் சட்டத்திற்கும் நிதிக்குத்தகைக்குவிடல் சட்டத்திற்குமான திருத்தங்கள்

நிதி உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளின் மேற்பார்வை, ஒழுங்குபடுத்தல் மற்றும் தீர்மானம் என்பவற்றினை மேம்படுத்துவதற்கு நிதித்தொழில் சட்டத்திற்கு அவசியான திருத்தங்களையும் நிதிக் குத்தகைக்குவிடும் தொழிலில் முறைகேடுகளை சீர்படுத்துவதற்கு நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்திற்கு தேவையான திருத்தங்களையும் மேற்கொள்ளும் செயன்முறையினை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் முன்னெடுக்கின்றது.

(இ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையினை ஒன்றிணைக்கும் முதன்மைத் திட்டத்தை (முதன்மைத் திட்டம்) நடைமுறைப்படுத்தல்

i. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளில்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளில் காணப்படுகின்ற பலவீனங்களையும் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையினையும் நிவர்த்திசெய்யும் பொருட்டு 2020இல் முதன்மைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

ii. முதன்மைத் திட்டத்தின் கட்டம் I இன் கீழ், இந்த ஆண்டு காலப்பகுதியில் 5 பரிவர்த்தனைகள் முழுமையாக நிறைவுசெய்யப்பட்டன. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சியுடன் சிங்கபுத்திர பினான்ஸ் பிஎல்சி, எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சியுடன் கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி அத்துடன் எச்என்பீ பினான்ஸ் பிஎல்சியுடன் பிறைம் பினான்ஸ் பிஎல்சி ஆகியவற்றின் ஒன்றிணைப்பு இந்த ஆண்டுகாலப்பகுதியில் நிறைவுபெற்றன. அசட் லைன் பினான்ஸ் லிமிடெட் (அசட் லைன் லீசிங் கம்பனி லிமிடெட் என முன்னர் அறியப்பட்ட) அத்துடன் எஸ்எம்பீ பினான்ஸ் பிஎல்சி (எஸ்எம்பீ லீசிங் பிஎல்சி என முன்னர்

அறியப்பட்ட) என்பனவற்றுக்கு புதிய நிதித்தொழில் உரிமங்கள் வழங்கப்பட்டன. மேலும், முதன்மைத் திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டில் நாணயச் சபையினால் அனுமதிக்கப்பட்ட 3 முன்மொழியப்பட்ட ஒன்றிணைப்புகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.[1]

iii. மேலும், முதன்மைத் திட்டத்தின் கீழ் ஒன்றுசேர்தல் பங்காளரொருவரைத் தேடிக்கொள்ளமுடியாத கம்பனிகள், உரிமம் இரத்துச்செய்யப்பட்டதன் பின்னர் சந்தையிலிருந்து வெளியேறுவதற்கு பணிக்கப்பட்டன. அதற்கமைய, சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட நிதித்தொழில் உரிமம், நிதித்தொழில் சட்டத்தின் 37(3)ஆம் பிரிவிற்கமைய இரத்துச்செய்யப்பட்டதுடன் கன்றிச் பினான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பொதுப் பொறுப்புக்களை முழுமையாக தீர்ப்பனவுசெய்வதற்கு பணிப்பதற்கு நிதித்தொழில் சட்டத்தின் 25(1)(க) பிரிவின் நியதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்துள்ளது.

31.2. உரிமம்பெற்ற நிறுவனங்களின் மேற்பார்வை

(அ) நியதிச்சட்ட (தளத்திலான) பரீட்சிப்புக்களை நடத்துதல்

i. 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், 13 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் 4 முதனிலை வணிகர் கம்பனிகள் தொடர்பில் நியதிச்சட்டப் பரீட்சிப்புக்களை நடத்தியது. வருவாய்கள் மற்றும் சொத்துக்களின் தரத்தில் சீர்குலைவு, உயர்ந்தளவில் திரட்சிப்படுத்தப்பட்ட கடன் வழங்கல்களின் இடர்நேர்வு, தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் உட்பட ஆளுகைக் கட்டமைப்பு பலவீனம், இடர்நேர்வு முகாமைத்துவக் குறைபாடுகள், தொழிற்பாடுகளை செயல்திறன் மிக்க விதத்தில் செயலாற்றுவதற்கு போதுமான மூலவளப் பற்றாக்குறை உள்ளடங்கலாக உள்ளக கணக்காய்வு மற்றும் இணங்குவித்தல் தொழிற்பாடுகள், அத்துடன் ஒழுங்குமுறைபடுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்காமை போன்றவை பரீட்சிப்புக்களில் முக்கியமாக கண்டறியப்பட்டவை உள்ளடக்கியிருந்தன.

ii. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின்/ முதனிலை வணிகர் கம்பனிகளின் பரீட்சிப்புக்களின் போது அடையாளங்காணப்பட்ட மேற்பார்வை கரிசனைகளை சீர்திருத்துவதற்கான விதந்துரைப்புக்கள் உள்ளடங்கலாக கால வரையறைசெய்யப்பட்ட நடவடிக்கைத் திட்டங்களுக்கு நாணயச் சபை ஒப்புதலளித்ததுடன் தேவையான நடவடிக்கைகளுக்காக இவை தொடர்பாக கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

iii. மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், பெறுமதியழிப்பு மாதிரியை மதிப்பிடுவதற்கு 12 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் உடனடிப் பரீட்சிப்புக்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தகவல் சமர்ப்பிக்கும் செயன்முறையினை மதிப்பிடுவதற்கு 10 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் உடனடிப் பரீட்சிப்புக்கள் உள்ளடங்கலாக 25 உடனடிப் பரீட்சிப்புக்களை நடாத்தியது.

(ஆ) தொடர்ச்சியான (தளத்திற்கு வெளியேயான) கண்காணிப்பை நடத்துதல்

i. வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட பின்-நெற் முறைமையினூடாக உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்/ உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள்/ முதனிலை வணிகர் கம்பனிகள் மூலம் இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தர நிதியியல் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளும் உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளும் முதனிலை வணிகர் கம்பனிகளும் மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றன. கணக்காய்வாளர் அறிக்கைகள், முகாமைத்துவக் கடிதங்கள், வெளிவாரித் தரமிடல்கள் மற்றும் ஊடக அறிக்கைகள் உட்பட ஏனைய நிதியியல் தகவல்களையும் இத்திணைக்களம் மீளாய்வு செய்தது. இம்மீளாய்வுகள் மூலதனம், திரவத்தன்மை மற்றும் பெறுமதியழிப்பு ஆகிய விடயங்கள் மீதான முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டிகள் மற்றும் உள்ளகத் தரமிடல் முறைமை என்பவற்றினூடாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகளின் சாத்தியமான இடர்நேர்வுகளை அடையாளம் கண்டதுடன் தேவைப்படும் போது அத்தியாவசியமான விதந்துரைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

ii. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களமானது மதிப்பீடுகள் மற்றும் கண்டறியப்பட்டவற்றின் தீவிரத்தன்மை என்பவற்றின் அடிப்படையில் தெளிவாக குறித்துரைக்கப்பட்ட காலவரையறையொன்றினுள் துறையின் மேற்பார்வை கரிசனைகளை சீர்செய்வதற்கு உடனடியாக சரிபடுத்தும் நடவடிக்கைகளை எடுத்தது. மேலும், துறையில் காணப்படுகின்ற அண்மைய அபிவிருத்திகளை மூத்த முகாமைத்துவத்திற்கு அறியப்படுத்தும் நோக்கில், துறையின் செயலாற்றம் தொடர்பில் காலாண்டு அடிப்படையில் நாணயச் சபைக்கு அறிக்கையிடப்பட்டது.

iii. படுகடன் சாதனங்களை வழங்குதல், பங்குமூலதனத்தினை அதிகரித்தல், சொத்தாண்மை கைமாற்றல்கள், புதிய முதலீட்டாளர்களின் மூலதன உட்செலுத்தல்கள், அகவிதிகளைத் திருத்துதல், துணைக் கம்பனிகளை உருவாக்குதல், வருடாந்த கிளை விரிவாக்கத் திட்டங்கள், விளம்பரங்கள் மற்றும் வைப்பு ஊக்குவிப்புத் திட்டங்கள், புதிய பணிப்பாளர்களையும் முக்கிய முகாமைத்துவ ஆளணியையும் நியமித்தல், என்பன தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் 1180 ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் வழங்கியது.

iv. தளத்திலான பரிசோதனைகளின் போது இனங்காணப்பட்ட முக்கிய மேற்பார்வைக் கரிசனைகளைச் சீர்செய்வதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் முதன்மை வணிகர் கம்பனிகள் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் பற்றி பின்தொடர் நடவடிக்கையினை மேற்கொண்டது.

v. கொள்கைசார்ந்த கருமங்களுடன் பெருமளவில் தொடர்புடையதாகவிருந்த உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் தொழிற்பாடுகள் தொடர்பிலும், மற்றும் உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் தொடர்பிலும் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற 258 முறைப்பாடுகளை தீர்ப்பதற்கு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் மத்தியஸ்தம் அளித்தது.

31.3. ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் தீர்மான நடவடிக்கைகள்

2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய கவனம், முன்மதியுடைய பணிப்புரைகளுடன் இணங்காத கம்பனிகள் மீது துரிதமாக

1 இதனைத் தொடர்ந்து, எல்ஓஎல்சி டெலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி 2023.01.31ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சியுடன் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது.

ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதும் உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட கம்பனிகள் மீது வழிமுறைகளை வசதிப்படுத்துவதுமாக இருந்தது. அதற்கமைய, இது தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

i. உடனடியாக சரிப்படுத்தும் நடவடிக்கைக் கட்டமைப்பிற்கமைய மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்காதிருந்த உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மீது வைப்புகள், கடன் வழங்கல் மற்றும் கடன் பெறுகைகள் மீதான கட்டுப்பாடுகளை விதித்தல் உள்ளடங்கலாக பல்வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

ii. 2022 ஆண்டு காலப்பகுதியில் பெப்பர்சுவல் ரெசரீஸ் லிமிடெட்டின் வியாபாரத்தை இடைநிறுத்தியமை, 2022.01.05 மற்றும் 2022.07.05 ஆம் திகதிகளில் இருதடவைகள் நீடிக்கப்பட்டதுடன் இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் பொருட்டு 2023.01.05 தொடக்கம் மேலும் ஆறு மாதகாலப்பகுதிக்கு தொடர்ந்தும் வலுவிலிருக்கும்.

iii. உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட கம்பனிகளில் தற்போது நிலவுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் மூத்த முகாமைத்துவம் மற்றும் நியமிக்கப்பட்ட முகாமைத்துவக் குழுக்களுடன் கூட்டங்களும் நடைபெற்றன.

31.4. பொதுமக்கள் விழிப்புணர்வு மற்றும் இயலளவு விருத்தி

i. பொதுமக்களுக்கு வெளிப்படுத்தல்

முன்மதியுடைய மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்காமை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகள் என்பவற்றைச் சுட்டிக்காட்டி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் பெயர்கள் இலங்கை மத்திய வங்கியின் வலைத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டன.

ii. இயலளவு விருத்தி

இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளின் ஆய்வுநிலையத்தில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக பயிற்சித் தொடர்களில் வளவாளர்களாகத் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் தொடர்ந்தும் பணியாற்றினர்.

iii. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் வேறு ஆர்வலர்களுடனான கூட்டங்கள்

பொருளாதாரம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் முன்னேற்றங்கள் தொடர்பான விடயங்களில் இலங்கை மத்திய வங்கிக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்குமிடையில் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளும் குறிக்கோளுடன் ஆளுநர் தலைமையில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின்/சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் தலைவர்கள் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடன் கூட்டங்களை நடத்தியது. மேலும், தனிப்பட்ட உரிமம்பெற்ற நிறுவனங்கள்/ஒட்டுமொத்தமாக துறை தொடர்பிலான பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்கும் சீராக்க நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், த பினான்ஸ் கவ்சஸ் அசோவியேசன், லீசிங் அசோசியேசன், வெளிவாரிக் கணக்காய்வாளர்கள் மற்றும் பன்னாட்டு முகவராண்மைகள் போன்ற நிறுவனங்களுடன் திணைக்களம் தொடர்ந்தும் கூட்டங்களை நடத்தியது.

iv. பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம், தொடர்பூட்டல் திணைக்களம் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் போன்ற ஏனைய திணைக்களங்களின் கோரிக்கையின் பேரில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு உதவிகளை வழங்கியது. 'அதிகாரமளிக்கப்படாத வைப்பு எடுக்கும் நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் பற்றி அவதானமாக இருங்கள்' என்ற தலைப்பில் செய்திப் பத்திரிகை கட்டுரையொன்றினை திணைக்களம் வெளியிட்டதுடன் அதிகாரமளிக்கப்படாத நிதித்தொழில் இடர்நேர்வுகள் பற்றி பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு பிராந்திய மட்டத்தில் 6 பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்ட அதேவேளை 5 தொலைக்காட்சி/ வானொலி நிகழ்ச்சிகளில் பங்கேற்றது.

31.5. அதிகாரமளிக்கப்படாத நிதித்தொழில் தொடர்பான விசாரணை

இலங்கை மத்திய வங்கிக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையும் தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு அதிகாரமளிக்கப்படாத வைப்பு ஏற்றல், நிதித்தொழில்கள் பற்றி 2022ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு திணைக்களம் 125 விசாரணைகளை கையாளுகின்றது. 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் 4 விசாரணைகள் தொடர்பில் நிதித்தொழில் சட்டத்தின் 44ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட தடைக்கட்டளைகளுக்கான நீடிப்புக்களை கொழும்பு மேல் நீதிமன்றத்திலிருந்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் பெற்றுக்கொண்டார். விசாரணைகளுக்குட்பட்டுள்ள 4 நிறுவனங்களின் தொடர்புடைய தரப்பினர்கள் வெளிநாடுகளுக்கு பயணிப்பதை தடுப்பதற்காக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் தொடர்புடைய நீதவான் நீதிமன்றத்திலிருந்து கட்டளைகளைப் பெற்றுக்கொண்டார்.

அட்டவணை 11-22

2022 காலப்பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தினால் செயலாற்றப்பட்ட பணி விபரங்கள்

பணியின் வகை	எண்.
ஒழுங்குமுறைப்படுத்தல் அனுமதிகள்	1180
கையாளப்பட்ட வாடிக்கையாளர் முறைப்பாடுகள்	258
வெளிவாரி தரப்பினர்களுடன் நடாத்தப்பட்ட கூட்டங்கள்	103
தளத்திற்கு வெளியிலான கண்காணிப்பு அறிக்கைகள்	542
அதிகாரமளிக்கப்படாத நிதித்தொழில் பற்றிய விசாரணை	125
நியதிச் சட்ட (தளத்திலான) பரீட்சிப்புக்கள்	17
உடனடி பரிசோதனைகள்	25
நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட சபைப் பத்திரங்கள்	97
கையாளப்பட்ட தகவலுக்கான உரிமைக் கோரிக்கைகள்	35

இணைப்பு 11 - 4

அதிகாரமளிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் (2022.12.31 அன்று உள்ளவாறு)

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. ஏஎம்டபிள்யு கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
4. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
5. அசற்லைன் பினான்ஸ் லிமிடெட்(அ)
6. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
7. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி(ஆ)
8. சிபீசி பினான்ஸ் லிமிடெட்
9. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
10. சிற்றிசென்ஸ் டெவலெப்மென்ற் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
11. கொமர்சல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
12. டயலொக் பினான்ஸ் பிஎல்சி
13. ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் (இ)
14. பின்ரெக்ஸ் பினான்ஸ் லிமிடெட்
15. எச்என்பீ பினான்ஸ் பிஎல்சி (ஈ)
16. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்(உ)
17. லங்கா கிறெடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி (ஊ)
18. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
19. எல்ஓஎல்சி டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி (எ)
20. எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி (ஏ)
21. மஹிந்ரா ஐடியல் பினான்ஸ் லிமிடெட் (ஐ)
22. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
23. மோர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி (ஒ)
24. மல்ரி பினான்ஸ் பிஎல்சி (ஓ)
25. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி (ஔ)
26. ஒறியன்ட் பினான்ஸ் பிஎல்சி
27. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
28. பீஎம்எவ் பினான்ஸ் பிஎல்சி (க)
29. றிச்சேர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட் (ங)
30. சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் பிஎல்சி (ச)
31. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
32. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
33. சியப்பத பினான்ஸ் பிஎல்சி
34. எஸ்எம்பீ பினான்ஸ் பிஎல்சி (ஞ)
35. சொவ்ற்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி (ட)
36. யு பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
37. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி

பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள்

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அமானா வங்கி பிஎல்சி
2. இலங்கை வங்கி
3. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
4. டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி
5. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
6. எம்சிபி பாங்க் லிமிடெட்
7. நசனல் டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி
8. நேசன்ஸ் ட்ரஸ்ட் பாங்க் பிஎல்சி
9. பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
10. சம்பத் பாங்க் பிஎல்சி
11. செலான் பாங்க் பிஎல்சி
12. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி

(ஆ) உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்

1. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
2. பிரதேசிய சங்வர்தன பாங்க்
3. சணச டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி
4. சிறிலங்கா சேர்விங்ஸ் பாங்க் லிமிடெட்

(இ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. ஏஎம்டபிள்யு கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
4. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
5. அசற்லைன் பினான்ஸ் லிமிடெட்(அ)
6. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
7. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி(ஆ)
8. சிபீசி பினான்ஸ் லிமிடெட்
9. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
10. சிற்றிசென்ஸ் டெவலெப்மென்ற் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
11. கொமர்சல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
12. டயலொக் பினான்ஸ் பிஎல்சி
13. ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் (இ)
14. பின்ரெக்ஸ் பினான்ஸ் லிமிடெட்
15. எச்என்பீ பினான்ஸ் பிஎல்சி (ஈ)
16. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்(உ)
17. லங்கா கிறெடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி (ஊ)
18. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
19. எல்ஓஎல்சி டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி (எ)
20. எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி (ஏ)
21. மஹிந்ரா ஐடியல் பினான்ஸ் லிமிடெட் (ஐ)
22. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
23. மோர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி (ஒ)
24. மல்ரி பினான்ஸ் பிஎல்சி (ஓ)
25. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி (ஔ)
26. ஒறியன்ட் பினான்ஸ் பிஎல்சி
27. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
28. பீஎம்எவ் பினான்ஸ் பிஎல்சி (க)
29. றிச்சேர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட் (ங)
30. சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் பிஎல்சி (ச)
31. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
32. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
33. சியப்பத பினான்ஸ் பிஎல்சி
34. எஸ்எம்பீ பினான்ஸ் பிஎல்சி (ஞ)
35. சொவ்ற்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி (ட)
36. சுவர்ணமஹால் பினான்ஸியல் சேர்விஸஸ் பில்சி (ண)
37. யு பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
38. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி

(ஈ) சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்

1. கோபரேடிவ் லீசிங் கம்பனி லிமிடெட்

உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள்

1. பெரண்டினா மைக்ரோ இன்வெஸ்ட்மன்ட்ஸ் கம்பனி லிமிடெட்
2. லக் ஜய மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
3. தும்பர மைக்ரோ கிரடிட் லிமிடெட்
4. செஜய மைக்ரோ கிரடிட் லிமிடெட்

முதனிலை வணிகர் கம்பனிகள்

1. அக்குயிட்டி செக்குறிட்டீஸ் லிமிடெட்
2. கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி
3. என்ட்ரஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி (த)
4. பார்ஸ்ட் கப்பிட்டல் ரெசறீஸ் பிஎல்சி
5. என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடெட்
6. பேப்பச்சுவல் ரெசரீஸ் லிமிடெட் (ந)
7. வெல்த்றஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட்

(அ) முதன்மைத் திட்டத்தின் கீழ் 2022.08.29 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் உரிமம்பெற்ற நிதிக்கம்பனியொன்றாக 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் அசற்லைன் லீசிங் கம்பனி லிமிடெட்டிற்கு உரிமம் வழங்கப்பட்டு, அதன் பெயர் அசற்லைன் பினான்ஸ் லிமிடெட்டாக மாற்றப்பட்டது.

(ஆ) ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு அத்துடன்/அல்லது முதன்மைத் திட்டத்தைக் கடைப்பிடிப்பதற்கு கம்பனியின் இயலாமையின் காரணமாக புதிய கடன்களை வழங்குவதும் புதிய வைப்புக்களை ஏற்பதும் முடக்கப்பட்டுள்ளது. கம்பனி, அதன் வைப்புத் தளத்தை 2022.06.03 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மீளச்செலுத்துவதற்கு வேண்டப்பட்டுள்ளது.

(இ) 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 31(5)(ஆ) பிரிவின் நியதிகளின் பிரகாரம் ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்டை முடிவுறுத்துவதற்காக தகைமைவாய்ந்த நீதிமன்றமொன்றுக்கு விண்ணப்பம்செய்யுமாறு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரை பணிப்பதற்கு நாணயச் சபை தீர்மானித்துள்ளது.

(ஈ) பிறைம் பினான்ஸ் பிஎல்சி 2022.05.12ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் எச்என்பீ பினான்ஸ் பிஎல்சியுடன் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளது.

(உ) ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான கம்பனியின் இயலாமை காரணமாக கடன் வழங்குதல் மற்றும் வைப்புகள் மீது தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. மேலும், பல நிபந்தனைகளை நிறைவுசெய்வதற்குட்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு முதன்மைத் திட்டத்தின் கீழ் கன்றிச் பினான்ஸ் லிமிடெட் மற்றும் நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி என்பவற்றுக்கிடையிலான முன்மொழியப்பட்ட ஒன்றிணைவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் முன்மொழியப்பட்ட ஒன்றிணைவு வெற்றிகரமாக நிறைவுபெற்ற பின்னர் நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி நிறுவனமொன்றாகத் தொடர்ந்தும் இருக்கும். மேலும், கன்றிச் பினான்ஸ் லிமிடெட், 2022.12.26 தொடக்கம் 2023.02.28 வரையான காலப்பகுதியினுள் அதன் பொதுப் பொறுப்புக்களை முழுமையாக தீர்ப்பனவு செய்வதற்குப் பணிக்கப்பட்டுள்ளது.

(ஊ) முதன்மைத்திட்டத்தின் பட்டியல்படுத்தல் தேவைப்பாடு காரணமாக லங்கா கிறெடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட் 2022.01.21ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் லங்கா கிறெடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி என பெயர் மாற்றப்பட்டது.

(எ) எல்ஓஎல்சி டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி 2023.01.31ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சியுடன் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது.

(ஏ) கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி 2022.03.31ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சியுடன் ஒன்றுசேர்க்கப்பட்டதுடன், எல்ஓஎல்சி டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி 2023.01.31ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சியுடன் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளது.

(ஐ) ஐடியல் பினான்ஸ் லிமிடெட் 2022.01.28ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் மஹிந்ரா ஐடியல் பினான்ஸ் லிமிடெட் என பெயர் மாற்றப்பட்டது.

(ஒ) ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு அத்துடன்/அல்லது முதன்மைத் திட்டத்தைக் கடைப்பிடிப்பதற்கு கம்பனியின் இயலாமையின் காரணமாக கடன் வழங்குதல், வைப்புகள் மற்றும் உயர்ந்தபட்ச வட்டி வீதம் வழங்குதல் என்பன மீது தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

(ஓ) ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு அத்துடன்/அல்லது முதன்மைத் திட்டத்தைக் கடைப்பிடிப்பதற்கு கம்பனியின் இயலாமையின் காரணமாக கடன் வழங்குதல் மற்றும் வைப்புகள் என்பன மீது தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. மேலும், முதன்மைத் திட்டத்தின் கீழ் எல்பி பினான்ஸ் பிஎல்சியுடனான ஒன்றிணைவுச் செயன்முறையைக் கம்பனி முன்னெடுக்கின்றது.

(ஔ) ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு அத்துடன்/அல்லது முதன்மைத் திட்டத்தைக் கடைப்பிடிப்பதற்கு கம்பனியின் இயலாமையின் காரணமாக சிலவகையான கடன்களை வழங்குவதும் புதிதாக வைப்புக்களை ஏற்றுக்கொள்வதும் முடக்கப்பட்டுள்ளது. பல நிபந்தனைகளை நிறைவுசெய்வதற்குட்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு முதன்மைத் திட்டத்தின் கீழ் கன்றிச் பினான்ஸ் லிமிடெட் மற்றும் நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி என்பவற்றுக்கிடையில் முன்மொழியப்பட்ட ஒன்றிணைவுக்கு நாணயச் சபை ஒப்புதலளித்துள்ளது. முன்மொழியப்பட்ட ஒன்றிணைவு வெற்றிகரமாக நிறைவுபெற்றதன் பின்னர் நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி நிறுவனமொன்றாகத் தொடர்ந்தும் இருக்கும்.

(க) பீபில்ஸ் மோர்சன்ற் பினான்ஸ் பிஎல்சியின் பெயர் 2022.10.21 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் பிஎம்எவ் பினான்ஸ் பிஎல்சி என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(ங) 2022.10.31 தொடக்கம் குறைந்தபட்ச மைய மூலதனம் மீதான 2017ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையுடனும் மூலதனப் போதுமை தேவைப்பாடுகள் மீதான 2018ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பணிப்புரையுடனும் இணங்கவில்லை. 2023.01.31இலிருந்து கம்பனி மேலே கூறப்பட்ட பணிப்புரைகளுக்கு இணங்கியது.

(ச) முதன்மைத் திட்டத்தின் பட்டியல்படுத்தல் தேவைப்பாடு காரணமாக சர்வதோய டெவலப்மென்ட் பினான்ஸ் லிமிடெட் 2022.01.06 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் சர்வதோய டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி என பெயர் மாற்றப்பட்டது.

(ஞ) முதன்மைத் திட்டத்தின் கீழ் 2022.12.01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றாக 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் எஸ்எம்பி லீசிங் பிஎல்சிக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய, பெயர் எஸ்எம்பீ பினான்ஸ் பிஎல்சி என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(ட) ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு அத்துடன்/அல்லது முதன்மைத் திட்டத்தைக் கடைப்பிடிப்பதற்கு கம்பனியின் இயலாமையின் காரணமாக கடன் வழங்குதல், வைப்புகள் மற்றும் உயர்ந்தபட்ச வட்டி வீதம் வழங்குதல் என்பன மீது தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. புதிய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல் 2022.08.12 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் முடக்கப்பட்டுள்ளது.

(ண) சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சிக்கு வழங்கப்பட்ட நிதித்தொழில் உரிமம் 2022.12.28 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் இரத்துச்செய்யப்பட்டுள்ளதுடன் பதிவுசெய்யப்பட்ட நிதி குத்தகைக்குவிடும் நிறுவனமாக 2023.01.18 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் பதிவு இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

(த) அரசாங்கப் பிணையங்கள் முதனிலை ஏலத்தில் பங்கேற்றல் 2017.07.24 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் தடுக்கப்பட்டுள்ளது.

(ந) முதனிலை வணிகர் ஒருவரின் தொழிலை கொண்டு நடாத்துவதிலிருந்தும் நடவடிக்கைகளிலிருந்தும் 2017.07.06 தொடக்கம் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் தற்போதைய இடைநிறுத்தல் 2023.07.05 வரை வலுவிலுள்ளது.

பகுதி III

பகுதி III

ஆண்டுப்பகுதியில் அரசாங்கத்தினாலும் நாணயச்சபையினாலும் இலங்கை மத்திய வங்கி மற்றும் வங்கித்தொழில் நிறுவனங்களின் நடைமுறைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிருவாக வழிமுறைகள்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், சுற்றிக்கைகள், பணிப்புரைகள் மற்றும் அறிவித்தல்கள்

		தொடர்பு எண்	பக்கம்
வங்கி மேற்பார்வை			
1.	2022இன் 01ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளை: உரிமம்பெற்ற வங்கிகளின் கடன்வழங்கல் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கான திருத்தம்		1
2.	2022இன் 02ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளை: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கியினதும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கான திருத்தம்		1
3.	2022இன் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வெளிநாட்டுச் செலாவணியில் மேற்கொள்ளப்படும் முன்னோக்கிய விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள்		1
4.	2022இன் 01ஆம் இலக்கச் சுற்றறிக்கை: உரிமம்பெற்ற வங்கிகளில் கொவிட்-19இற்குப் பின்னரான மீளெழுச்சிப் பிரிவுகளை நிறுவுதல் தொடர்பான வழிகாட்டல்கள்		2
5.	2022இன் 03ஆம் இலக்க நாணயவிதிச் சட்டக் கட்டளை: உரிமம்பெற்ற வங்கிகளின் கடன் வழங்கல் மற்றும் வைப்புச் சாதனங்களுக்கான வட்டி வீதங்கள்		4
6.	2022இன் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிவுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள்		5
7.	2022இன் 03ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: இறக்குமதிகளுக்கெதிரான எல்லைத்தேவைப்பாடுகள்		6
8.	2022இன் 04ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: தற்பொழுது நிலவுகின்ற அசாதாரணமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள்		7
9.	2022இன் 04ஆம் இலக்க நாணயவிதிச் சட்டக் கட்டளை: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்		9
10.	2022இன் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வங்கிகளின் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதி நடவடிக்கைகள்		9
11.	2022இன் 06ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: 2011ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைக்கான பின்னிணைப்பு: விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்கள் வங்கித்தொழில் பணிகளை அணுகுவதற்கான உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம்		14
12.	2022இன் 02ஆம் இலக்கச் சுற்றறிக்கை: தற்போது நிலவுகின்ற வழமைக்கு மாறான பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகளுக்கு மத்தியில் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கான சலுகைகள்		17
13.	2022இன் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்ட) கட்டளை குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்		19
14.	2022இன் 07ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வங்கிகளினால் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களை கட்டாயமாகப் பதிவுசெய்யப்படுதல்		20

15.	2022இன் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: திரவத்தன்மை விகிதங்கள் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள்		22
16.	2022இன் 01ம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தீர்மானம்: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணம்		22
வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்			
17.	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடமானது): 2263/41ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு சனவரி மாதம் 21ஆந் திகதி வெள்ளிக்கிழமை	2263/41	23
18.	2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள்: தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்		25
19.	2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்		25
20.	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடமானது): 2270/66ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு மார்சு மாதம் 11ஆந் திகதி வெள்ளிக்கிழமை	2270/66	26
21.	2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகள்: தாய் பாத்தினை குறித்துரைத்தல் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்		28
22.	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடமானது): 2273/06ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு மார்சு மாதம் 28ஆந் திகதி திங்கட்கிழமை	2273/06	28
23.	2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கப் பணிப்புரைகள்: சிறப்பு வைப்புக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்		29
24.	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடமானது): 2282/27ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு யூன் மாதம் 01ஆந் திகதி புதன்கிழமை	2282/27	29
25.	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடமானது): 2282/59ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு யூன் மாதம் 03ஆந் திகதி வெள்ளிக்கிழமை	2282/59	30
26.	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடமானது): 2282/60ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு யூன் மாதம் 03ஆந் திகதி வெள்ளிக்கிழமை	2282/60	31
27.	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடமானது): 2284/34ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு யூன் மாதம் 16ஆந் திகதி வியாழக்கிழமை	2284/34	31
28.	2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வெளிநாட்டு நாணயங்களை வாங்குதல், விற்றல் மற்றும் பரிமாற்றுதல் தொடர்பில் நாணய மாற்றல் வியாபாரத்தில் தனியே ஈடுபடுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்		32
29.	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடமானது): 2284/40ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு யூன் மாதம் 16ஆந் திகதி வியாழக்கிழமை	2284/40	33

30.	2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கப் பணிப்புரைகள்: கொழும்புத் துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்		33
31.	2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கப் பணிப்புரைகள்: கொழும்புத் துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்		35
32.	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடமானது): 2286/27ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு யூன் மாதம் 30ஆந் திகதி வியாழக்கிழமை	2286/27	36
33.	2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கப் பணிப்புரைகள்: தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்		38
34.	2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்		39
35.	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடமானது): 2287/16ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு யூலை மாதம் 05ஆந் திகதி செவ்வாய்க்கிழமை	2287/16	39
36.	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடமானது): 2292/50ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12ஆந் திகதி வெள்ளிக்கிழமை	2292/50	40
37.	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடமானது): 2293/07ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15ஆந் திகதி திங்கட்கிழமை	2293/07	41
38.	2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கப் பணிப்புரைகள்: இந்திய ரூபாய்களைக் குறித்துரைத்தல் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்		42
39.	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடமானது): 2296/12ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08ஆந் திகதி வியாழக்கிழமை	2296/12	42
40.	2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரைகள்: தங்க சுவர்க்க விசா நிகழ்ச்சித்திட்ட - விசேட கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்		43
41.	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடமானது): 2308/51ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02ஆந் திகதி வெள்ளிக்கிழமை	2308/51	45
42.	2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிப்புரைகள்: சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - வெளிநாடுகளிடமிருந்தான குறுங்கால வெளிநாட்டு நாணயக் கடன்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்		45
43.	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடமானது): 2311/38ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22ஆந் திகதி வியாழக்கிழமை	2311/38	48

உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

44.	2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்: லங்கா செட்டில் முறைமை மீதான பத்திரங்களற்ற அரச பிணையங்களுக்கெதிராக ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியின் ஏற்பாட்டுடன் தொடர்புடைய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்		48
45.	நாணயக் கடிதங்களுக்கெதிராக காசு எல்லை வைப்புத் தேவைப்பாட்டினைப் பேணுவதன் மீது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 103ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட கட்டளை		52
46.	2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை: முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் (வங்கி வீதம்)		57

நிதியியல் உளவறிதல் பிரிவு

47.	சுற்றறிக்கை இல. 01/2022: 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் நோக்கங்களுக்காக சிசிரிவி தொழிற்பாடுகள் மீதான நிதியியல் நிறுவனங்களுக்கான வழிகாட்டல்களுக்கான திருத்தம்	037/06/008/0006/020	57
48.	சுற்றறிக்கை இல. 02/2022: சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கைகள் தொடர்பில் கோரப்படும் மேலதிக தகவல்கள்	037/05/002/0005/022	58
49.	சுற்றறிக்கை இல. 03/2022: வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு வினைத்திறன்மிக்க வங்கித்தொழில் பணிகளை வழங்குதல்	037/06/006/0005/022	58
50.	சுற்றறிக்கை இல. 04/2022: குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினூடாக வாடிக்கையாளர் அடையாள விபரங்களை அத்தாட்சிப்படுத்தல்	037/05/003/0005/022	59

வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல்

51.	"தொழிலாளர் பணவனுப்பல்களின் பரிமாற்றல் செலவை மீளளித்தல்" மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்	69/02/002/0002/001	59
52.	"தொழிலாளர் பணவனுப்பல்களின் பரிமாற்றல் செலவை மீளளித்தல்" மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்	69/02/002/0002/002	62

பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

53.	"உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான மேலதிக ஊக்குவிப்புத் திட்டம்" மற்றும் "தம்வசமுள்ள வெளிநாட்டு நாணயத்தை வைப்பிலிடுவதற்காக, மாற்றுவதற்காக மற்றும் முதலிடுவதற்காக பொதுமக்களுக்கான ஊக்குவிப்புக்கள்" மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் செயலுறு காலப்பகுதியை நீடித்தல்	33/04/012/0012/001	62
54.	பாரியளவிலான பேரண்டபொருளாதார உறுதிப்பாட்டுக்கு ஆதரவளிப்பதற்கான கொள்கைசார்ந்த திட்டம்: செலாவணி வீதத்தில் நெகிழ்ச்சித்தன்மையை அனுமதித்தல்		63
55.	"உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" மற்றும் "ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்" மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள	33/04/012/0012/002	63
56.	"உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" மற்றும் "ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்" மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்	33/04/012/0012/003	64
57.	செலாவணி வீதத்தின் ஒரு நாளுக்குள்ளேயான தளம்பலை முகாமைசெய்தல் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்	33/04/012/0012/004	64
58.	"ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்" மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்	33/04/012/0012/005	65

59.	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடமானது): 2292/50ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12ஆந் திகதி வெள்ளிக்கிழமை:	2292/50	65
60.	"உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்	33/04/012/0012/006	66
பொதுப் படுகடன்			
61.	"இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான நேரடி வழங்கல் தளங்களினூடாக ஊக்குவிப்பு கொடுப்பனவுத் திட்டம்" மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்	08/21/007/047/002	66
கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்			
62.	2022இன் 01ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் பொதுவான பணிப்புரை: 2022இன் 01ஆம் இலக்க இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை மீதான பொதுவான பணிப்புரை		68
63.	2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் பொதுவான பணிப்புரை: பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளியைத் தொழிற்படுத்துதல்		76
64.	2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் பொதுவான பணிப்புரை: பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் தொழிற்பாடுகள்		80
65.	2022ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் பொதுப் பணிப்புரை: பொதுவான விற்பனை மைய ஆளியின் தொழிற்பாடுகள்		84
66.	2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கை: 2022.05.11 அன்று லங்காசெட்டில் முறைமையின் விசேட நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை	34/07/029/0001/002	87
67.	2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கை: லங்காபே பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளி மற்றும் லங்காபே பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியிலுள்ள பொறுப்பு முகாமையாளர் வரையறைகள்		91
68.	04/2022 ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கை: 2022 யூலை 22 அன்று அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து லங்கா செட்டில் முறைமையின் நேரலைத் தொழிற்பாடுகள்	34/01/024/0106/06	92
பிரதேச அபிவிருத்தி			
69.	தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்: சுபீட்சக் கடன் திட்டத்தின் (சௌபாக்யா) தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம் - துணைக் கடன்களுக்கு ஏற்புடைய வட்டி வீதத்தை அதிகரித்தல்	RDD/PR/2010/03 (A-7)	93
70.	தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்: "சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின்" தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம்	RDD/STaRR-IS/2019/01 - (திருத்தம் 1)	94
71.	தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்: புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்	RDD/NCRCS/2011/2022/01	95
72.	தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்: "சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளிக்கும் வட்டி உதவுதொகைத் திட்டத்தின்" தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம்	RDD/STaRR-IS/2019/01- (திருத்தம் 2)	97
73.	தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்: "சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளிக்கும் வட்டி உதவுதொகைத் திட்டத்தின்" தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம்	RDD/STaRR-IS/2019/01- (திருத்தம் 3)	98
74.	இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களுக்காக வழங்கப்படுகின்ற சலுகைகள்	32/04/034/0001/001	99

75.	2022இன் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல்		103
76.	2022இன் 02ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகள்		119
77.	உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கான திருத்தங்கள	24/06/002/0002/002	125
78.	2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கச் சுற்றறிக்கை: நிலவுகின்ற அசாதாரண பேரண்டப்பொருளாதார சூழ்நிலைகளுக்கு மத்தியில் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கான சலுகைகள்		128
79.	2022இன் 03ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்தல்		130
80.	நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகள் மீதான வழிகாட்டல்கள்	24/10/001/0019/005	132

2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளை 2022 மார்ச் 11

உரிமம்பெற்ற வங்கிகளின் கடன்வழங்கல் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கான திருத்தம்

திருத்தப்பட்டவாறான, 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 104(1)(ஆ)ஆம் பிரிவுகளின் கீழ் விடுக்கப்பட்டது.

பொருளாதாரத்திலுள்ள கேள்வி அழுத்தங்களின் கீழ் காணப்படுகின்ற சாதகமான கட்டியெழுப்பலை தளர்வுறச் செய்வதற்கான வட்டி வீதங்களை அதிகரித்தல் உள்ளடங்கலாக கடந்த காலத்தில் நாணயக்கொள்கை இறுக்க வழிமுறைகளை இலங்கை மத்திய வங்கி பின்பற்றியது. இது வெளிநாட்டுத் துறையிலுள்ள அழுத்தங்களைக் குறைக்க உதவுவதுடன் அதன் மூலம் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டை பாரியளவில் மேம்படுத்துகின்றது. இதன் விளைவாக, ஒட்டுமொத்த சந்தை வட்டி வீதங்களையும் பரிசீலனையிற்கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளின் கடன்வழங்கல் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் மீது 2020ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளைக்கான திருத்தமொன்று இத்தால் நாணயச் சபையால் விடுக்கப்படுகின்றது.

இதற்கமைவாக, எடுத்துக் காட்டப்பட்ட கட்டளையின் 2.1ஆம் கட்டளை பின்வருகின்றவாறு பதிலீடு செய்யப்பட்டு 2.2ஆம் கட்டளை நீக்கப்படுகின்றது.

2. இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வீதங்கள்

2.1 2022 மார்ச்சு 14ஆம் திகதியன்று ஆரம்பமாகின்ற விதத்தில், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளாலும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளாலும் கொடுகடன் அட்டை முற்பணங்கள், முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட தற்காலிக மேலதிகப் பற்றுக்கள் மற்றும் அடகு முற்பணங்கள் என்பனவற்றிற்கு விதிக்கப்பட வேண்டிய உயாந்தபட்ச வட்டி வீதங்கள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன.

(i) அடுத்த பட்டியலிடல் சுழற்சியிலிருந்து ஆரம்பமாகின்ற விதத்தில் கொடுகடன் முற்பணங்கள் மீது ஆண்டிற்கு 20 சதவீதம்.

(ii) முன்கூட்டியே ஏற்பாடுசெய்யப்பட்ட தற்காலிக மேலதிகப்பற்றுக்கள் மீது ஆண்டிற்கு 18 சதவீதம்.

(iii) தங்கத்தினால் உருவாக்கப்பட்ட தனிப்பட்ட ஆபரணங்களால் ஈடுசெய்யப்படும் அனைத்து புதிய அடகு முற்பணங்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட தற்போதுள்ள அடகு வசதிகளின் மீது வழங்கப்பட்ட பணம் மீது ஆண்டிற்கு 12 சதவீதம்.

நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளை 2022 மார்ச் 11

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கியினதும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கான திருத்தம்

திருத்தப்பட்டவாறான, 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 104(1)(அ)ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது.

உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான அண்மைய நாணயக் கொள்கையை இறுக்கமடையச் செய்கின்ற வழிமுறைகள், எதிர்பார்க்கப்பட்ட பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் நிலவுகின்ற வட்டி வீதங்களைக் கருத்திற்கொண்டு, நாணயச் சபையானது உரிமம்பெற்ற வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கியினதும் வெளிநாட்டு நாணய வைப்புக்களின் மீது விதிக்கப்பட்ட தற்போதுள்ள உச்சபட்ச வட்டி வீத வரையறைகளை நீக்கும் விதத்தில், உரிமம்பெற்ற வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கியினதும் வெளிநாட்டு வைப்புப்புக்கள் மீதான உச்சபட்ச வட்டி வீதம் தொடர்பில் 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளைக்கான திருத்தமொன்றை இத்தால் விடுக்கிறது.

இதற்கமைவாக, எடுத்துக்காட்டப்பட்ட கட்டளைகள் 2 மற்றும் 3 நீக்கப்படுகின்றன.

நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2022 மார்ச் 22

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வெளிநாட்டுச் செலாவணியில் மேற்கொள்ளப்படும் முன்னோக்கிய விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள்

திருத்தப்பட்டவாறான, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1)ஆம் பிரிவினால் ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களின் நியதிகளில் விடுக்கப்பட்டது.

உரிமம்பெற்ற வங்கிகளினால் வெளிநாட்டுச் செலாவணியில் மேற்கொள்ளப்படும் முன்னோக்கிய விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் மீதான 2021 ஏப்பிறல் 25ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றன.

நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கச் சுற்றறிக்கை 2022 மார்ச் 24

உரிமம்பெற்ற வங்கிகளில் கொவிட்-19 இற்குப் பின்னரான மீளெழுச்சிப் பிரிவுகளை நிறுவுதல் தொடர்பான வழிகாட்டல்கள்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் நீடித்தத்தன்மை வியாபாரங்களின் வருமானத்தை ஈட்டுகின்ற நடவடிக்கைகளில் இடையூறுக்கு வழிவகுத்துள்ளமையானது கடன்களை முழுமையாக மீளச்செலுத்துவதற்கான அவற்றின் வாய்ப்பை மோசமாக பாதித்து இதன்மூலம் உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் (இதனகத்துப்பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கடன் அறவிடல் செயன்முறையை சேதமிழக்கச் செய்கிறது. ஆகையால், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களின் நிலைபெறத்தக்க பொருளாதார மீட்சிக்கு வசதியளித்து உரிமம்பெற்ற வங்கிகளின் கடன்பெறுமதியிழந்த சொத்துக்களின் அதிகரிப்பை குறைக்கும் நோக்குடன், இலங்கை மத்திய வங்கியானது உரிமம்பெற்ற வங்கிகளில் கொவிட்-19இற்குப் பின்னரான மீளெழுச்சிப் பிரிவுகளை நிறுவுவதற்கான அவசியத்தை அதன் "பேரண்டப்பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்துவதற்கான ஆறு-மாதகால வழிகாட்டலில்" அறிவித்தது. இதற்கமைவாக, இலங்கை மத்திய வங்கியானது உரிமம்பெற்ற வங்கிகளில் கொவிட்-19இற்குப் பின்னரான மீளெழுச்சிப் பிரிவுகளை நிறுவுதலை நடைமுறைப்படுத்தும் விதத்தில் விரிவான வழிகாட்டல்களை இத்தால் வழங்குகிறது.

1. குறிக்கோள்

1.1 கொவிட்-19இற்குப் பின்னரான மீளெழுச்சி அலகை (இதனகத்துப்பின்னர் பிரிவு எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறுவுதலின் நோக்கமானது கொவிட்-19இனால் பாதிக்கப்பட்டுள்ள அத்துடன் வருமானம் அல்லது விற்பனைகளின் குறைப்பு வியாபாரத் தொழிற்பாடுகளின் குறைப்பு அல்லது சேதமிழப்பு அல்லது வியாபாரத்தை மூடுதல் போன்றன காரணமாக நிதியியல் இடர்பாடுகளை எதிர்கொள்கின்ற உரிமம்பெற்ற வங்கிகளின் குறைசெயற்பாட்டு மற்றும் செயற்படாக் கடன்பாட்டாளர்களை அடையாளம் காண்பதும் உதவுவதுமாக காணப்படுகின்றது. அத்தகைய கடன்பாட்டாளர்களுக்கு பயன்களை வழங்கும் சாத்தியமான வியாபாரங்களை மீட்சியடைச்செய்யும் நோக்குடன் பொருளாதார நடவடிக்கைகளின் மேம்பாட்டிற்கு வழிவகுத்து தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கிறது.

2. ஆளுகை கட்டமைப்பு மற்றும் வளங்கள்

2.1 உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட வங்கியொன்றுக்காக பணிப்பாளர் சபையினால் மற்றும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கியொன்றுக்காக பிரதேச/வெளிநாட்டு தலைமை அலுவலகத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட மீளெழுச்சி மற்றும் புனரமைப்பு கொள்கையொன்றை உருவாக்குவதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

2.2 மீளெழுச்சி மற்றும் புனரமைப்பு கொள்கை குறைந்தபட்சம் ஏனையவற்றுக்கு மத்தியில் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:

(i) பிரிவை நிறுவுவதற்கான பொறுப்பாணை

(ii) விளைவுகள் உள்ளடங்கலாக அதன் நடவடிக்கைகளின் நோக்கெல்லை

(iii) தற்போதுள்ள கொடுகடன் வசதிகளை மீள்அட்டவணைப்படுத்தல்/மீளக்கட்டமைத்தல் ஆகியவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத நிதியியல் மற்றும் நிதியல்லா உபாயங்கள் உள்ளடங்கலாக கடன்பாட்டாளர்களுக்கான மீளெழுச்சி பொறிமுறை

(iv) தேவைப்பாடுகளின் அடிப்படையில் ஏனைய மேலதிக கொடுகடன் வசதிகளை வழங்குதல் மற்றும்

(v) கொவிட்-19இற்குப் பின்னரான காலப்பகுதியில், பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களின் மீளெழுச்சிக்காக வேறு ஏதேனும் உரிய வழிமுறைகளை வழங்குதல்.

2.3 பிரிவின் காத்திரமானதும் வினைத்திறன்மிக்கதுமான மேற்பார்வையையும் மீளெழுச்சி மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளின் துரித நடைமுறைப்படுத்தலையும் உறுதிசெய்யும் பொருட்டு, பிரிவானது போதியளவான அதிகாரத்துடனும் முதுநிலையுடனும் உரிமம்பெற்ற வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியொன்றால் தலைமைத்தாங்கப்பட வேண்டும்.

2.4 பிரிவானது போதியளவான ஊழியர்களையும் கொடுகடன் மதிப்பீட்டுக்கும் கண்காணிப்பிற்குமாக போதியளவு தேர்ச்சியையும் அதிகாரத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் தேவைப்பாடுகளின் அடிப்படையில் ஏனைய வளங்களுடன் வழங்கப்படுதல் வேண்டும் என்பதையும் உரிமம்பெற்ற வங்கிகள் உறுதிசெய்தல் வேண்டும்.

2.5 50 வங்கிக் கிளைகளுக்கு மேலான வங்கிகளின் விடயத்தைப் பொறுத்த வரையில், பொருத்தமானவாறு வங்கிகளின் பெரிய கிளைகள்/பிரதேச அலுவலகங்களில் பிரிவுகளை நிறுவுவது தொடர்பில் அத்தகைய உரிமம்பெற்ற வங்கிகள் கருத்திற்கொள்ளலாம். ஏனைய உரிமம்பெற்ற வங்கிகள் கொவிட்-19இற்கு பின்னரான மையப்படுத்தப்பட்ட மீளெழுச்சி அலகுகளைப் பேணலாம்.

3. மீளெழுச்சிப் பிரிவுகளின் கடமைகளும் பணிகளும்

3.1 பிரிவானது கிளைகளுடனும் வங்கியின் ஏனைய தொழிற்பிரிவுகளுடனும் தீவிரமாக தொடர்புகளை மேற்கொள்ள வேண்டும்.

(i) கடன் சலுகைக் காலத்தை நிறைவுசெய்வதற்கான திரவத்தன்மை ஆதரவு தேவைப்படும் கடன்பாட்டாளர்கள் உள்ளடங்கலாக, புனரமைப்பு உதவியை வேண்டுகின்ற கடன்பாட்டாளர்களை இனங்காணுவதற்கு

(ii) முழுமையான பகுப்பாய்வை நிறைவுசெய்த பின்னர் மற்றும் அனைத்து தொடர்புடைய தரப்பினருடனும் ஒருங்கிணைந்து புனரமைப்பு முன்மொழிவுகளை உருவாக்குதற்கும்

(iii) தேவையான அனுமதிகளைப்பெற்று செயலாற்றத்தை மீளாய்வுசெய்வதற்கும்

3.2 மேலே குறிப்பிடப்பட்ட 3.1(i)இன் விடயத்தைப் பொறுத்தவரையில், உரிமம்பெற்ற வங்கிகள் மீளெழுச்சிக்காக பின்வரும் கடன்பாட்டாளர்களை கருத்திற்கொள்ளலாகாது.

(அ) வேண்டுமென்று கடனைச் செலுத்தத் தவறியவறாக இனங்காணப்பட்டுள்ள கடன்பாட்டாளர்கள்

(ஆ) நிதியங்களை குறித்த நோக்கத்திற்கல்லாத பல்வேறு வழிகளில் பயன்படுத்தியதன் காரணமாக கடனை செலுத்தத்தவறிய கடன்பாட்டாளர்கள் (உதாரணமாக, உரிமம்பெற்ற வங்கிகளிடமிருந்து கடன்பெறப்பட்ட நிதியங்கள் கடன்பாட்டாள் புரியும் தொழிலின் தொழிற்பாடுகளுக்கு தொடர்பற்ற நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.)

(இ) தொழிலில் தவறானமுகாமைத்துவம் அத்துடன்/அல்லது முறைகேடான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் காரணமாக செலுத்தத்தவறிய கடன்பாட்டாளர்கள்

(ஈ) சாத்தியமற்ற திட்டங்களில் ஈடுபட்ட கடன்பாட்டாளர்கள்

3.3 மேலே குறிப்பிடப்பட்ட 3.1(i)இன் விடயத்தைப் பொறுத்தவரையில், வங்கிகளின் தற்றுணிபில், உரிமம்பெற்ற வங்கிகள் மீளெழுச்சிக்காக பின்வரும் கடன்பாட்டாளர்களை கருத்திற்கொள்ளலாம்.

(i) 2020 ஏப்பிறல் 01இற்கு முன்னர், செயற்படாதவர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள கடன்பாட்டாளர்கள்

(ii) வழக்காடலின் கீழ் காணப்படுகின்ற கடன்பாட்டாளர்கள்

3.4 பிரிவானது தொடர்புடைய ஆர்வலர்கள் குறிப்பாக, வங்கியின் கிளைகள் மற்றும் தொழிற்பிரிவு, கடன்பாட்டாளர்கள் ஆகியோருக்கான புனரமைப்பு, முன்னெடுப்புக்கள், அணுகுமுறைகள் மற்றும் முறையியல்கள் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் வேண்டும்.

3.5 பிரிவானது தேவைப்படுமாயின், கடன் ஆலோசனையையும் தொழில் ஆலோசனைப் பணிகளையும் வழங்குதல் வேண்டும். அத்துடன் ஆற்றல்வாய்ந்த முதலீட்டாளர்களை அடைவதற்கும் ஆரம்ப மூலதனத்தையும், பங்குரிமை மூலதனத்தையும் பெறுவதற்கும் வியாபாரங்களுக்கு உதவுதல் வேண்டும்.

4. கணக்கீட்டுப் பரிசீலனைகள்

4.1 கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் விடுக்கப்படும் தொடர்புடைய சுற்றறிக்கைகள்/ வழிகாட்டல்கள் என்பவற்றிற்கு அமைவாக பிரிவின் கீழ் கருத்திற்கொள்ளப்படும் வசதிகளுக்கான கணக்கீட்டு கையாளுகையை உரிமம்பெற்ற வங்கிககள் பின்பற்றுதல் வேண்டும். இடர்நேர்வு அதிகரித்த கடன்பாட்டாளர்களையோ அல்லது துறைகளையோ பொறுத்தவரையில், உரிமம்பெற்ற வங்கிகள் போதுமான கடன்பெறுமதியிழப்புக் கட்டணங்களை உருவாக்குமாறு கோரப்படுகின்றன. இது தொடர்பில், மேலதிக வழிகாட்டல்களுக்கும் தெளிவுபடுத்தல்களுக்கும் இலங்கை பட்டயக் கணக்காய்வளர்கள் நிறுவனம் மற்றும் கணக்காய்வாளர்கள் ஆகியோரிடம் இருந்து ஆலோசனைகளை உரிமம்பெற்ற வங்கிகள் பெற்றுக்கொள்ள முடியும்

5. இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிக்கையிடுதல்	5.1	இத்தகைய பிரிவிற்கு மாற்றப்பட்ட கொடுகடன் வசதிகளை அறிக்கையிடுவதற்காக அறிக்கையிடும் முறைமையொன்றை இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் மதியுரையுடன் உரிமம்பெற்ற வங்கிகள் உருவாக்குதல் வேண்டும், எனவே, இத்தகைய பிரிவின் மீளெழுச்சி மற்றும் புனரமைப்புத் திட்டங்கள் என்பவற்றில் பங்களிப்புச் செய்தல் என்பது எதிர்காலத்தில் கடன்பாட்டாளர்களின் கொடுகடன் மதிப்பெண்ணில் தாக்கம் செலுத்தாது அல்லது கொடுகடன் தகவல் பணியகத்தின் எதிர்கால அறிக்கைகளை பாதாகமாக தோற்றுவிக்காது.
6. மீள்நிதியிடல் அல்லது வட்டி உதவுதொகை திட்டங்கள்	6.1	இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தால் அல்லது நிதி அமைச்சால் வழங்கப்பட்ட தொடர்புடைய வழிகாட்டல்களுக்கு அமைவாக மீள்நிதியிடல் அல்லது வட்டி உதவுதொகை திட்டங்களின் கீழான மீள்கட்டமைப்பு வசதிகள் இது தொடர்பில் பரிசீலனையிற் கொள்ளப்படுதல் வேண்டும்.
7. மீளெழுச்சிக்குப் பின்னர் பணம் செலுத்தத் தவறுவதற்கான மீட்பு நடவடிக்கை	7.1	வங்கியின் உள்ளக வழிகாட்டல்கள் மற்றும் கொள்கைகளுக்கமைவாக இப்பிரிவின் கீழ் மீளெழுச்சி மற்றும் புனரமைப்பு என்பவற்றுக்காக உடன்பட்ட நியதிகளையும் நிபந்தனைகளையும் கடைபிடிக்க தவறிய கடன்பாட்டாளர்களுக்கெதிராக பொருத்தமான கடன் அறவீட்டு நடவடிக்கைகளை உரிமம்பெற்ற வங்கிகள் பின்பற்றலாம்.
8. நடைமுறைப்படுத்தல்	8.1	கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு பின்னரான மீளெழுச்சிப் பிரிவுகளை தாபிப்பதற்கு போதுமான ஒழுங்கேற்பாடுகளை 2022 ஏப்பிறல் 30 அளவில் மேற்கொள்ளுமாறு உரிமம்பெற்ற வங்கிகள் வேண்டப்படுகின்றன. மீளெழுச்சிப் பிரிவுகள் ஏற்கனவே தாபிக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளைப் பொறுத்தவரையில் அத்தகைய வங்கிகளானது இச்சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளுடன் இசைந்து செல்லும் வகையில் இத்தகைய பிரிவுகளின் நோக்கெல்லையை விரிவுபடுத்தலாம்.
9. அறிக்கையிடும் தேவைப்பாடு	9.1	ஒவ்வொரு காலாண்டின் இறுதியில் உள்ளவாறும் வங்கி கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள புனரமைப்பு முன்மொழிவுகளின் முன்னேற்றம் மீதான விபரங்களை இணைப்பு Iஇல் வழங்கப்பட்ட அறிக்கையிடும் வடிவத்திற்கமைவாக உரிமம்பெற்ற வங்கிகள் 15 வேலை நாட்களுக்குள் 2022 யூன் 30ஆம் நாளன்று ஆரம்பமாகின்ற விதத்தில் அறிக்கையிடுதல் வேண்டும்.

நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

இச்சுற்றரிக்கையின் இணைப்புக்கள்
https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/ bsd_circular_no_1_of_2022_e.pdf
என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.

2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளை 2022 ஏப்பிறல் 21

உரிமம்பெற்ற வங்கிகளின் கடன் வழங்கல் மற்றும் வைப்புச் சாதனங்களுக்கான வட்டி வீதங்கள்

1. இதுவரை பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகளைப் பரிசீலனையில் கொண்டு, இலங்கை மத்திய வங்கி 2022 மார்சு 11ஆம் திகதியிடப்பட்ட 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நாணயவிதிச் சட்டக் கட்டளையின் 2.1 கட்டளையினால் திருத்தப்பட்டவாறான 2020 ஓகத்து 21ஆம் திகதியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் கட்டளை 2.1 இத்தால் இரத்துச்செய்யப்படுவதன் மூலம் அதன் பயனுறுதி பின்வருமாறு அமைகிறது.
   (i) கொடுகடன் அட்டை முற்பணங்கள், அடுத்த பட்டியலிடல் சுற்றிலிருந்து ஆரம்பமாகின்றது.
   (ii) அனைத்து புதிய முன்கூட்டியே ஒழுங்குசெய்யப்பட்ட தற்காலிக மேலதிகப் பற்றுக்கள் மற்றும் ஏற்கனவேயுள்ள முன்கூட்டியே ஒழுங்குசெய்யப்பட்ட புதுப்பிக்கப்படுகின்ற / நீடிக்கப்படுகின்ற தற்காலிக மேலதிகப் பற்றுக்கள்.
   (iii) அனைத்து புதிய அடகு முற்பணங்கள் மற்றும் ஏற்கனவேயுள்ள புதுப்பிக்கப்படுகின்ற அடகு முற்பணங்கள்.
2. வைப்புக்களை வங்கித்தொழில் முறைமைக்குள் கவர்ந்துகொள்வதற்காக, இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் வர்த்தக வங்கிகள் வைப்பு வீதங்களைப் போதுமானளவிற்கு சீராக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

திருமதி. ரி. எம். ஜே. வை. பி பர்னாந்து
மூத்த துணை ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2022 மே 06

உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிவுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, தற்பொழுது நிலவுகின்ற பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் காரணமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினதும் (இதனகத்துப்பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) திரவத்தன்மை மீதும் ஏனைய முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளின் மீதும் ஏற்படக்கூடிய மோசமான தாக்கத்தினையும் உரிமம்பெற்ற வங்கிகளின் திரவத்தன்மை மற்றும் மூலதனத் தாங்கிருப்புக்களின் பொருத்தமான மட்டங்களைப் பேணுவதன் முக்கியத்துவத்தினையும் பரிசீலனையில் கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிவு கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள் தொடர்பில் இப்பணிப்புரைகளை இத்தால் விடுக்கிறது.

1. அதிகாரவளிப்பு

1.1 வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் விதத்தில், வங்கித்தொழில் சட்டத்தின் 46(1)ஆம் பிரிவின் நியதிகளில், அத்தகைய வங்கியின் அல்லது வங்கிகளின் ஏதேனும் வியாபார அம்சங்கள் எவ்விதத்தில் கொண்டு நடத்தப்படவேண்டும் என்பது பற்றி அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

1.2 வங்கித்தொழில் சட்டத்தின் 76ஒ(1) இன் பிரிவினது நியதிகளில், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் ஏதேனும் வகை, ஏதேனும் வியாபார அம்சங்கள் எவ்விதத்தில் கொண்டு நடத்தப்படவேண்டும் என்பது பற்றி அத்தகைய வங்கிகளுக்கு பணிப்புரைகளை வழங்குவதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

2. பிரயோகத்தின் செயற்பரப்பு

2.1 இப்பணிப்புரைகள், இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கிக்கும், தனியான அடிப்படையில் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள வங்கியொன்றின் கிளையாகவுள்ள ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கிக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

3. தற்றுணிவுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள்

3.1 இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் காசுப்பங்கிலாபக் கொடுப்பனவுகளை 2022ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள்/ இடைக்கால நிதியியல் கூற்றுக்கள் இறுதிப்படுத்தப்பட்டு வெளிவாரிக் கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படும் வரை பிற்போடுதல் வேண்டும்.

3.2 இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் 2021 மற்றும் 2022ஆம் நிதியியல் ஆண்டுகளுக்காக ஏற்கனவே வெளிப்படுத்தப்படாத இலாபங்களை தாய்நாட்டிற்கு அனுப்புவதனை 2022ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் இறுதிப்படுத்தப்பட்டு வெளிவாரி கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படும் வரை பிற்போடுதல் வேண்டும்.

3.3 உரிமம்பெற்ற வங்கிகள், காசுப்பங்கிலாப கொடுப்பனவுகள் மற்றும் இலாபங்களை தாய்நாட்டிற்கு அனுப்புவது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது, உரிமம்பெற்ற வங்கிகளுக்கான பாசல் III இன் கீழான மூலதனத் தேவைப்பாடுகள் தொடர்பில் எதிர்பார்க்கப்படும் சொத்து வளர்ச்சி, வியாபார விரிவாக்கம் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் சாத்தியமான தாக்கம் மற்றும் தற்போது நிலவுகின்ற பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் தேவைகளுக்கு உரிய கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

3.4 உரிமம்பெற்ற வங்கிகள் பின்வரும் விடயங்களை உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் 2022 திசெம்பர் 31 வரை பின்பற்றுதல் வேண்டும்.

(அ) அதன் சொந்தப் பங்குகளை மீண்டும் வாங்குவதிலிருந்தும் விலகியிருத்தல்

(ஆ) முகாமைத்துப் படிகளையும் பணிப்பாளர் சபைக்கான கொடுப்பனவுகளையும் அதிகரிப்பதிலிருந்தும் விலகியிருத்தல்

(இ) அத்தியாவசியமல்லாத அத்துடன்/ அல்லது அவசரமல்லாத செலவினங்களை ஏற்படுத்துவதிலிருந்தும் விலகியிருத்தல் அத்துடன் ஏற்படக்கூடிய அத்தகைய செலவினத்தினை சிக்கனப்படுத்தும் விதத்தில் சபை ஒப்புதலளித்த கொள்கையொன்றினைக் கொண்டிருத்தல்.

(ஈ) ஏதேனும் மூலதனச் செலவினம் ஏற்படும் போது கடுமையான விழிப்புணர்வினையும் முன்மதியுடைய தன்மையினையும் பின்பற்றுதல்.

4. நடைமுறைக்கு வரும் திகதி	4.1	இப்பணிப்புரைகள் உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்

முனைவர் பி. நந்தலால் வீரசிங்க
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2022 மே 19

இறக்குமதிகளுக்கெதிரான எல்லைத்தேவைப்பாடுகள்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஒ)(1) ஆம் பிரிவுகளினால் கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில் விடுக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி, செலாவணி வீதத்தின் உறுதித்தன்மையினையும் வங்கித்தொழில் முறைமையில் வெளிநாட்டு நாணயத்தின் திரவத்தன்மையினையும் பேணும் நோக்குடன் குறிப்பிட்ட இன்றியமையாதன அல்லாத மற்றும் அவசரமல்லாத பொருட்களின் இறக்குமதி மீது பின்வரும் வழிமுறைகளை உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் மறுஅறிவித்தல் வரை பின்பற்றுமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் தேசிய சேமிப்பு வங்கியையும் கேட்டுக்கொள்கிறது.

1. ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் மற்றும் கொடுப்பனவிற்கெதிரான ஆவணங்களின் நியதிகளுக்கெதிராக செய்யப்படும் இணைப்பு Iஇல் குறித்துரைக்கப்பட்ட இறக்குமதிகளின் பொருட்பட்டியல் பெறுமதியின் மீது 100 சதவீதமான வட்டி உழைக்காத வைப்புத்தொகையொன்று வைத்திருக்கப்படல் வேண்டும்.

2. தேசிய சேமிப்பு வங்கியைப் பொறுத்தவரை, மேலே பணிப்புரை 1இல் குறித்துரைக்கப்பட்ட எல்லைத்தேவைகள் ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான ஆணவங்கள் மற்றும் கொடுப்பனவுகளுக்கெதிரான ஆவணங்களின் நியதிகளுக்குப் புறம்பாக, நாணயக் கடிதத்தின் கீழ் செய்யப்படும் இறக்குமதிகளுக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

3. ஏற்கனவேயுள்ள ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் மற்றும் கொடுப்பனவுகளுக்கெதிரான ஆவணங்களின் உள்ளடக்கத்தினைப் பொறுத்தவரை, இப்பணிப்புரைகளினால் உள்ளடக்கப்பட்ட, இறக்குமதிப் பொருட்கள், மேலேயுள்ள பணிப்புரை 1இல் தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தகைய காசு எல்லை வைப்புக்களினால் உள்ளடக்கப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் மற்றும் கொடுப்பனவுகளுக்கெதிரான ஆவணங்களின் பெறுமதியில் அதிகரிப்புக்களை செய்ய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் தேசிய சேமிப்பு வங்கியினாலும் அனுமதி வழங்கப்படக்கூடாது.

4. இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் விடுக்கப்பட்ட 2022.05.12ஆம் திகதியிடப்பட்ட இல. 05/2022 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளில், இறக்குமதியாளரினால் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரத்தில் அல்லது உரிமம்பெற்ற வங்கிகளினால் புறக்குறிப்பீடுகள் செய்யப்படும் நேரத்தில், ஆவணங்களை விடுவிக்கும் வங்கியில் இறக்குமதியாளரினால் அத்தகைய வட்டி உழைக்காத காசு எல்லைகள் வைப்பிலிடப்படவேண்டும்.

5. அதே பொருட்பட்டியலிலுள்ள பொருட்கள் இப்பணிப்புரைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதனைக் கருத்திற்கொள்ளாது அத்தகைய வட்டி உழைக்காத காசு வைப்புத்தேவைப்பாடுகள் பொருட்பட்டியலின் மொத்தப்பெறுமதி மீதானதாக இருத்தல் வேண்டும்.

6. எல்லை வைப்புக்கள் பெறப்பட்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளும் தேசிய சேமிப்பு வங்கியும் பொருட்பட்டியலை புறக்குறிப்பீடு செய்தல் வேண்டும்.

7. கொடுப்பனவுகள் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் மார்க்கங்களினூடாக செய்யப்பட்டமைக்கான ஆவணக்கூற்றுக்களும் இறக்குமதிகளினை அகற்றுவது தொடர்பான சுங்க ஆவணங்களும் வழங்கப்படுவதனைத் தொடர்ந்து எல்லை வைப்புக்கள் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

8. இவ்விறக்குமதிகள் தொடர்பில் எல்லை வைப்புக்களைச் செய்வதற்கு இறக்குமதியாளர்களை இயலச்செய்யும் விதத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் தேசிய சேமிப்பு வங்கியும் கடன் வசதிகளை வழங்கக்கூடாது.

9. இப்பணிப்புரையின் ஏற்பாடுகள், இதேதருணத்தில் நடைமுறையிலிருக்கின்ற ஏதேனும் தேவைப்பாடுகளும் பொருட்களின் இறக்குமதி தொடர்பாக அறிமுகப்படுத்தப்படவுள்ள ஏதேனும் சட்டங்களின் நியதிகளுக்கும் மேலதிகமாக நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

முனைவர் பி. நந்தலால் வீரசிங்க
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

இச்சுற்றறிக்கையின் இணைப்புக்கள் (Attachments of this Circular can be accessed via https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/ Banking_Act_Directions_No_03_of_2022_e.pdf) என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.

தற்பொழுது நிலவுகின்ற அசாதாரணமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள்

ஏதேனும் இழப்புக்களை பூர்த்திசெய்வதற்குப் போதுமான மூலதனத்தினைப் பேணுகின்றதொரு வழிமுறையாக, வங்கித்தொழில் துறையானது, ஆற்றலுடனும் தாக்குப்பிடிக்கும் விதத்திலும் தொழிற்படுவதற்கு வங்கிகளை இயலச்செய்யும் விதத்தில் ஆண்டாண்டுகாலமாக மூலதனத்தினைக் கட்டியெழுப்பி வருகின்றது. இத்தாங்கிருப்புக்கள் சவால்மிக்க காலப்பகுதியில் ஏற்பட்ட எதிர்பாராத இழப்புக்களை ஈர்த்துக்கொள்வதற்கு நன்கு செயற்பட்டிருந்ததுடன் வங்கிகள், குறைந்த மட்டத்திலான இடர்நேர்வு கட்டணத்தில் நீண்டகால நிதிகளைத் திரட்டிக்கொள்வதற்கும் அதேபோன்று அவற்றின் கொடுகடன் தரமிடலைப் பேணிக்கொள்வதற்கும் உதவின.

எனினும், தற்போதைய பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் காரணமாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளை கவனமாக பரிசீலனை செய்ததன் பின்னர், நாணயச் சபையானது, பின்வரும் பணிப்புரைகளை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கும் (இதனகத்துப்பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) காலாந்தர மீளாய்வுகளுக்குட்பட்டு இத்தால் விடுக்கிறது.

1. அதிகாரவளிப்பு

1.1 வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் விதத்தில், வங்கித்தொழில் சட்டத்தின் 46(1)ஆம் பிரிவின் நியதிகளில், அத்தகைய வங்கியின் அல்லது வங்கிகளின் ஏதேனும் வியாபார அம்சங்கள் எவ்விதத்தில் கொண்டு நடத்தப்படவேண்டும் என்பது பற்றி அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

1.2 வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(1)இன் பிரிவினது நியதிகளில், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் ஏதேனும் வகை, ஏதேனும் வியாபார அம்சங்கள் எவ்விதத்தில் கொண்டு நடத்தப்படவேண்டும் என்பது பற்றி அத்தகைய வங்கிகளுக்கு பணிப்புரைகளை வழங்குவதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

2. மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பு

2.1 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கான பாசல் III இன்கீழ் மூலதனத் தேவைப்பாடுகள் தொடர்பாக 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமம்பெற்ற வங்கிகள் 2.5 சதவீதம் வரையிலான மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பினை எடுப்பனவு செய்யலாம். இவை கீழே குறித்துரைக்கப்படுகின்றன.

(i) பகிர்ந்தளிப்புக்கள் அட்டவணை 01இல் குறித்துரைக்கப்பட்டவாறான பின்வரும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டனவாக இருக்கும்.

அட்டவணை 01 - குறைந்தபட்ச மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பு விகிதங்கள்

மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பு பேணல் விகிதங்கள்	ஏற்புடைத்தான குறைந்தபட்ச வருவாய் பிடித்துவைக்கும் விகிதம்
2.5%	0%
>1.875% - 2.5%	40%
>1.25% - 1.875%	60%
>0.625% - 1.25%	80%
0% < - 0.625%	100%

(ii) உரிமம்பெற்ற வங்கிகள் இப்பணிப்புரையினை மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பில் எடுப்பனவு செய்வதற்கான நாணயச் சபையின் முன்னொப்புதலாக கருதமுடியும் என்பதுடன் 03 ஆண்டுகளுக்குள் மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பினை மீளக்கட்டியெழுப்புவது தொடர்பாக சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட மூலதன பெருக்கத் திட்டத்தினை, மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பு எடுப்பனவு செய்யப்பட்ட 21 நாட்களுக்குள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

3. மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகளின் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்காக இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களைக் கணித்தல்

3.1 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் எழுத்துமூலமான முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்வதற்குட்பட்டு, பணிப்புரைகளுடன் இணங்கிச்செல்லும் விதத்தில் பொருத்தமான வியாபாரத் தொடர்களுடன் அதன் தற்போதைய வியாபார நடவடிக்கைத் திட்டமிடுவதற்காக முன்மதியுடைய ஆவணப்படுத்தப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் 2023.12.31 வரை தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களைக் கணிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையினை அல்லது மாற்று ஏற்பாட்டு முறையில் நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையொன்றினை நோக்கி நகரலாம்.

4. சந்தைப்படியான சந்தை இழப்புக்களை படிப்படியாக பரவலாக்கிக் கொள்ளுதல்

4.1 கீழேயுள்ள பணிப்புரை 4.2 மற்றும் 4.3 இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைக்குட்பட்டு, மூலதனப் போதுமை விகிதத்தினை கணிக்கும் நோக்கத்திற்காக கீழே குறித்துரைக்கப்பட்டவாறு 2024இன் 2ஆம் காலாண்டு வரை 2022.04.08ஆம் திகதியிடப்பட்ட நாணயக் கொள்கை மீளாய்வில் அறிவிக்கப்பட்டவாறு கொள்கை வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து தோன்றுகின்ற சந்தைப் பெறுமதியில் வைத்திருக்கப்பட்ட இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் மீதான ஓரிரவு சந்தைப்படியான இழப்புக்களை உரிமம்பெற்ற வங்கிகள் படிப்படியாக பரவலாக்கிக் கொள்ளமுடியும்.

அட்டவணை 02 - மூலதனப் போதுமை விகிதத்தினைக் கணிப்பதற்காக ஓரிரவு சந்தைப்படியான சந்தை இழப்புக்களை படிப்படியாக பரவலாக்கியமைத்தல்

ஈர்த்துக்கொள்ளும் தன்மையின் ஒன்று சேர்ந்த சதவீதம்		
2ஆம் காலாண்டு 2022	**2ஆம் காலாண்டு 2023**	**2ஆம் காலாண்டு 2024**
33.33%	66.66%	100%

4.2 படிப்படியாக பரவலாக்கிக்கொள்ளப்பட வேண்டிய அத்தகைய இழப்பின் மதிப்பீடொன்றினை, வெளிவாரி/ உள்ளகக் கணக்காய்வாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட தொகை பற்றிய சான்றிதழுடன் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

4.3 உரிமம்பெற்ற வங்கியொன்று மேற்குறிப்பிட்ட சந்தைப்படியான இழப்பினை படிப்படியாக சரிசெய்வதற்கு தீர்மானிக்குமாயின் அத்தகைய உரிமம்பெற்ற வங்கிகள் ஏதேனும் பங்கிலாபங்களை செலுத்தவோ/ ஏதேனும் இலாபங்களை தாய்நாட்டிற்கு அனுப்பவோ கூடாது என்பதுடன் அரச பிணையங்கள் தொடர்பில் ஏற்பட்ட சந்தைப்படியான இழப்பு முழுவதும் மூலதனப் போதுமை கணிப்பில் முழுமையாக அங்கீகரிக்கப்படும் வரை இன்றியமையாதன அல்லாத மற்றும் மூலதன செலவினங்களை மேற்கொள்வதிலிருந்தும் சாத்தியமானளவிற்கு விலகியிருத்தலும் வேண்டும்.

5. மற்றைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினைக் கையாளுதல்

5.1 உரிமம்ற்ற வங்கிகள் 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட மற்றைய அனைத்து நிபந்தனைகளுடனும் இணங்கிச்செல்வதற்கு உட்பட்டு, கிடைக்கத்தக்கதாகவுள்ள பிந்திய ஆண்டறிக்கை அல்லது கணக்காய்வு செய்யப்பட்ட இடைக்கால டிஜிட்டல் கூற்றுக்களின்படி, பங்குரிமை மூலதனத்தில் காணப்படும் மாற்றங்களின் கூற்றுக்களில் பிரதிபலிக்கப்பட்டுள்ள ஒன்றுசேர்ந்த மற்றைய அனைத்து வருமான இலாபங்களின் 100 சதவீதத்தினை உள்ளடக்கிக்கொள்ளமுடியும்.

6. திரவத்தன்மை பாதுகாப்பு விகிதம் மற்றும் தேறிய உறுதியான நிதியிடல் விகிதம்

6.1 உரிமம்பெற்ற வங்கிகளின் திரவத்தன்மை தோற்றப்பாட்டினை அதிகரித்த மேற்பார்வை மற்றும் அடிக்கடி அறிக்கையிடல் என்பனவற்றுடன் சீராக்கிக்கொள்வதற்கான குறுங்கால வழிமுறையொன்றாக உரிமம்பெற்ற வங்கிகள் 2022.09.30 வரை திரவத்தன்மை பாதுகாப்பு விகிதத்தினையும் தேறிய உறுதித்தன்மைவாய்ந்த நிதியிடலையும் 90 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச மட்டத்தில் பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டன.

7. குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு

7.1 2022.12.31 அளவில் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினைப் பூர்த்திசெய்ய தவறிய உரிமம்பெற்ற வங்கிகளுக்காக, 2017ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்டவாறு உரிமம்பெற்ற வங்கிகளின் குறைந்தபட்ச மூலதன தேவைப்பாட்டினை உயர்த்துவதற்கான இறுதித்திகதி 2023.12.31 வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

7.2 அத்தகைய உரிமம்பெற்ற வங்கிகள், குறைந்தபட்ச தேவைப்பாடுகளை 2023.12.31 அளவில் பூர்த்திசெய்வதற்காக பொருத்தமான நிதியியல் நிறுவனங்களை ஒன்றுசேர்ப்பதற்கு அல்லது இணைப்பதற்கான திட்டங்கள் உட்பட, அவற்றின் மூலதன பெருக்கத்திட்டத்தினை நேரக் கட்டமைப்புடன் சேர்த்து வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்படும் வரை பங்கிலாபங்களை பகிர்ந்தளித்தல்/இலாபங்களை தாய்நாட்டிற்கு அனுப்புவதிலிருந்தும் விலகியிருத்தலும் வேண்டும்.

8. உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செய்முறையினை சமர்ப்பித்தல்

8.1 2022ஆம் ஆண்டிற்கான உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செய்முறை ஆவணத்தினை 2022.06.30 வரை சமர்ப்பிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது.

முனைவர் பி. நந்தலால் வீரசிங்க
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

2022ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளை 2022 ஜூன் 08

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 104(1)(அ) இன்கீழ் விடுக்கப்பட்டது.

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் தொடர்பில் 2021ஆம் ஆண்டு திசெம்பர் 30ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நாணயவிதிச் சட்டக் கட்டளையின் 7ஆம் கட்டளை தவிர்ந்தவை இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றன.

முனைவர் பி. நந்தலால் வீரசிங்க
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

2022ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2022 ஜூன் 22

உரிமம்பெற்ற வங்கிகளின் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதி நடவடிக்கைகள்

ஐக்கிய நாடுகளின் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளை எய்துவதற்கான கடப்பாட்டின் முக்கியத்துவத்தினையும் இலங்கையில் பசுமை நிதியியல் வசதிக்குட்படுத்தல் மற்றும் சமச்சீரான பொருளாதாரம் என்பனவற்றை நோக்கி மாறிச்செல்லவேண்டியதன் அவசியத்தினையும் பரிசீலனையில் கொண்ட இலங்கை மத்திய வங்கி 2019இல் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதிக்கான வழிகாட்டலொன்றினை வெளியிட்டது. வழிகாட்டலானது சூழல் தன்மை, சமூக மற்றும் ஆளுகை அவர்கள் நிதியிட்டிருக்கின்ற செயற்றிட்டங்களுடன் சேர்ந்து காணப்படும் இடர்நேர்வு மற்றும் பசுமைத்தன்மை கொண்டதும் காலநிலை - சிநேகபூர்வமானதும் சமூக ரீதியான தன்மைகளை உள்ளடக்கியதுமான வியாபாரங்களுக்கான உதவியை ஊக்குவிப்பதற்கும் காத்திரமான முறையில் முகாமைப்படுத்துவதற்கு நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்துநர்களுக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் பரந்தளவு பணிப்புரைகளை வழங்குகிறது.

வழிகாட்டலானது, நீடித்துநிலைத்திருக்கும் நடவடிக்கைகளுக்காக, அனைத்து ஆர்வலர்களினதும் ஆதரவுடன் இலங்கையில் பசுமை நிதி நடவடிக்கைகளுக்காக, அதாவது உயர்மட்ட வகைப்படுத்தலுக்காக அறவிடல் முறைமையொன்று நிறுவப்படுவதனை தேவைப்படுத்துகிறது. இலங்கை பசுமை நிதி பற்றிய உயர்மட்ட வகைப்படுத்தல் 2022 மே 06 ஆம் நாளன்று இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டது.

நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதியியல் முன்னெடுப்புக்களை மேம்படுத்துவதன் தேசிய முக்கியத்துவத்தினையும், நீடித்துநிலைத்திருக்கும் நிதியியல் நடவடிக்கைகள் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை வழங்குவதற்கான அவசியத்தினையும் பரிசீலனையில் கொண்டு, நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கியின் நீடித்துநிலைத்திருக்கும் நிதி வழிகாட்டலுடன் இசைந்துசெல்லும் விதத்தில் நீடித்துநிலைத்திருக்கும் பொருளாதாரத்திற்கு வசதியளிப்பதனையும் உரிமம்பெற்ற வங்கிகளின் நீடித்துநிலைத்திருக்கும் நிதியியல் நடைமுறைகளை ஊக்குவிப்பதனையும் நோக்கமாகக்கொண்டு, இதனகத்துப்பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் என குறிப்பிடப்படும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிலும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்களிலுமுள்ள நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதி நடவடிக்கைகள் தொடர்பில் பின்வரும் பணிப்புரைகளை விடுக்கிறது.

1. அதிகாரவளிப்பு

1.1 வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் விதத்தில், வங்கித்தொழில் சட்டத்தின் 46(1)ஆம் பிரிவின் நியதிகளில், அத்தகைய வங்கியின் அல்லது வங்கிகளின் ஏதேனும் வியாபார அம்சங்கள் எவ்விதத்தில் கொண்டு நடத்தப்படவேண்டும் என்பது பற்றி அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

1.2 வங்கித்தொழில் சட்டத்தின் 76ஒ(1) இன் பிரிவினது நியதிகளில், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் ஏதேனும் வகை, ஏதேனும் வியாபார அம்சங்கள் எவ்விதத்தில் கொண்டு நடத்தப்படவேண்டும் என்பது பற்றி அத்தகைய வங்கிகளுக்கு பணிப்புரைகளை வழங்குவதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

2. ஏற்புடைத்தன்மை

2.1 இப்பணிப்புரைகள் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

3. உறுதித்தன்மை வாய்ந்த நிதியியல் முன்னெடுப்புக்கள்

3.1 உரிமம்பெற்ற வங்கிகள் அவற்றின் வியாபார நடவடிக்கைகளை நீடித்து நிலைத்திருக்கக்கூடிய முறையில் நடத்துவதற்கு பொருத்தமான வழிகாட்டலை அடையாளம் கண்டு அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

3.2 உரிமம்பெற்ற வங்கிகள் நீடித்து நிலைத்திருக்கும் முன்னெடுப்புக்களுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் புத்தாக்கமளிக்கும் நிதியியல் தீர்வுகளை அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

3.3 உரிமம்பெற்ற வங்கிகள் பசுமையான/ நீடித்து நிலைத்திருக்கும் முறிகள் போன்ற சாதனங்களினூடாக நிதிகளை திரட்டுவது பற்றி பரிசீலனையில் கொள்ளவேண்டும் என்பதுடன் அத்தகைய நிதியினை, நீடித்து நிலைத்திருக்கும் நடவடிக்கைகளில் முதலீடு செய்ய/ நிதியிட ஒதுக்குதல் வேண்டும்.

4. முன்னுரிமைத் துறைகளை அடையாளம் காணுதல்

4.1 உரிமம்பெற்ற வங்கிகள் நீடித்து நிலைத்திருக்கும் கடன் வழங்கல் வசதிகளை வழங்குவதற்கான முன்னுரிமைத் துறைகளாக பின்வரும் துறைகளை/ நடவடிக்கைகளை அடையாளம் காணப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்பட்ட துறைகள்	முன்னுரிமையளிக்கப்பட்ட துணைத் துறைகள்
வேளாண்மை, காடாக்கல் மற்றும் மரக்குற்றி களாக்குதல்	நீடித்து நிலைத்திருக்கும் வேளாண்மை, காடாக்கல் அபிவிருத்தி
தயாரிப்பு	வலுவினைச் சேமிக்கின்ற பொறிகள்/ கருவிகள்
மின்வலு உருவாக்கம், கடத்தல் மற்றும் விநியோகம்	புதுப்பிக்கத்தக்க வலுச் செயற்றிட்டங்கள்
போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல்	நீடித்து நிலைத்திருக்கும் போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தலின் அனைத்து வடிவங்களும்
நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் கழிவு முகாமைத்துவம்	நீர் வழங்கல்/ முகாமைத்துவச் செயற்றிட்டங்கள், கழிவு முகாமைத்துவ செயற்றிட்டங்கள்
கட்டுமானம்	பசுமை கட்டுமான செயற்றிட்டங்கள்
நீடித்து நிலைத்திருக்கக் கூடிய சுற்றுலா மற்றும் பொழுது போக்கு	அனைத்து நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சுற்றுலா மற்றும் பொழுது போக்கு நடவடிக்கைகள்
ஏனைய துறைகள்	வாயு, நீராவி மற்றும் குளிரூட்டிகளின் விநியோகம், நிதியியல் பணிகள், தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பம், வேறு ஏதேனும் துறைகளின் கீழ் உள்ளடக்கப் படாதிருப்பின், நீடித்து நிலைத்திருக்கக் கூடிய மகளிர் வலுவூட்டல் முன்னெடுப்புக்கள்

4.2 உரிமம்பெற்ற வங்கிகள் ஏற்புடைத்தான சூழல்/ காலநிலைக்கு இசைவாகப்பெறுவது பற்றி பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் தணித்தல் அம்சங்கள், சமூக தாக்கம், ஒழுங்குவிதிகள், உறுதிப்படுத்தல்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட முன்னுரிமைத் துறைகளுக்கு நிதியிடல்களை வழங்குகின்ற நீடித்துநிலைத்திருக்கும் நடவடிக்கைகள் தொடர்பான வெளிவாரி மற்றும் உள்ளக வழிகாட்டல்களையும் மேற்குறிப்பிட்ட தகவல்களை அறிக்கையிடுவது தொடர்பானவற்றையும் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

4.3 உரிமம்பெற்ற வங்கிகள், மேற்குறிப்பிட்ட முன்னுரிமைத் துறைகளையும் நடவடிக்கைகளையும் அடையாளம் காணும் போது இலங்கையின் பசுமை நிதி உயர்மட்ட பகுப்பாய்வின் தேவைப்பாடுகளுடன் இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

5. நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நிதி முன்னெடுப்புக்களுக்கான ஆளுகைக் கட்டமைப்பு

5.1 பணிப்பாளர் சபையும் மூத்த முகாமைத்துவமும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நிதி நடவடிக்கைகள் காத்திரமான விதத்திலும் வினைத்திறனுடனும் மேற்பார்வை செய்யப்படுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் பணிப்பாளர் சபை பின்வருவன உட்பட பணிப்பாளர் சபையினால் ஒப்புலதளிக்கப்பட்ட குறைந்தபட்ச கொள்கைகளையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(அ) வங்கியின் சூழல், சமூக இடர்நேர்வுகள் மற்றும் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வியாபார நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பில் பணிப்பாளர் சபையினதும் மூத்த முகாமைத்துவத்தினதும் தெளிவான வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள்

(ஆ) சூழல் தொடர்பான அம்சங்கள், பசுமை மற்றும் காலநிலை நிதியிடல் நடவடிக்கைகள் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஏற்படக்கூடிய முக்கிய இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல்

(இ) நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதியிடல் நடவடிக்கைகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட சூழல் இடர்நேர்வுகள் என்பன வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பிற்குள் கட்டுப்படுத்துவதனை உறுதிப்படுத்தல்

(ஈ) அத்தகைய இடர்நேர்வுகளை மதிப்பிடல், கண்காணித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடலுக்கான கொள்கைகள் மற்றும் செய்முறைகள்

(உ) நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதியியல் முன்னெடுப்புக்களின் முன்னேற்றத்தினை அளவிடுவதற்கான அளவு முறைகள் மற்றும் அளவையியல் அத்துடன்

(ஊ) நடைமுறைக்கிடப்பட வேண்டிய பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகள்.

5.2 பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களின் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலரும் தொடர்பான முக்கிய முகாமைத்துவ ஆளணியினரும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(அ) நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நிதி தொடர்பில் வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கொள்கைகள், கருவிகள், அளவை முறைகள், தொழிற்பாட்டு நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் கிரமமான முறையில் மீளாய்வு செய்யப்பட்டு (குறைந்தபட்சம் ஆண்டு தோறும்) வங்கியின் மற்றைய தொடர்பான கொள்கைகளுடனும் நடவடிக்கைகளுடனும் ஒருங்கிணைக்கப்படுவதனை

(ஆ) நீடித்துநிலைத்திருக்கும் நிதியிடல் நடவடிக்கைகளின் முகாமைத்துவத்திற்காக போதுமான மூலவளங்கள், தேர்ச்சிகள் மற்றும் நிபுணத்துவம் என்பன ஒதுக்கப்பட்டிருப்பதனை

(இ) நீடித்துநிலைத்திருக்கும் நிதியுடன் இணைந்து காணப்படும் இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதில் வியாபார பிரிவுகளின் வகிபாகத்தினையும் பொறுப்புக்களையும் தொழிற்பாடுகளையும் தெளிவாக்குதல் அத்துடன்

(ஈ) நீடித்துநிலைத்திருக்கும் நிதியிடல் மற்றும் வியாபார நடைமுறைகள் தொடர்பில் பொருண்மிய ரீதியான பிரச்சனைகள் பற்றி சரியான நேரத்தில் பணிப்பாளர் சபைக்கு அறிவித்தல்.

6. இடர்நேர்வு முகாமைத்துவம்

6.1 உரிமம்பெற்ற வங்கிகள், அவற்றின் தொழிற்பாடுகளினது தன்மை, அளவு, சிக்கலான தன்மை என்பனவற்றினை பரிசீலனையில் கொண்டு இணைந்த காலநிலை, சூழல் மற்றும் ஏனைய பசுமை நிதியிடல் நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு மதிப்பிடவேண்டும் என்பதுடன் அத்தகைய இடர்நேர்வுகளின் அளவினையும் பொருண்மியத் தன்மையினையும் மதிப்பிடுதலும் வேண்டும்.

6.2 உரிமம்பெற்ற வங்கிகள் சூழல் இடர்நேர்வு, ஆளுகை இடர்நேர்வு முகாமைத்துவத்தினை சூழல் மற்றும் சமூக கொள்கைகள், இடர்நேர்வு மதிப்பீடு, சூழல் மற்றும் சமூகக் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட முழுத் தீர்மானங்களையும் மேற்கொள்கின்ற செய்முறைகளுடன் கூட்டிணைத்தல் வேண்டும்.

6.3 மேலே பணிப்புரை 6.1இல் வரைவிலக்கணம் செய்யப்பட்ட அனைத்து பொருண்மிய இடர்நேர்வுகளும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகளின் கீழ், கட்டம் II மதிப்பீட்டில் பரிசீலனையில் கொள்ளப்படல் வேண்டும்.

6.4 உரிமம்பெற்ற வங்கிகள், பணிப்புரை 6.1இல் இடர்நேர்வுகள் எவ்வாறு அடையாளம் காணப்படுகின்றன என்பதனை அடையாளம் காண்பது அவற்றின் வியாபார மாதிரியில் தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதுடன் வங்கியின் மீது ஏற்படக்கூடிய தாக்கத்தினையும் மதிப்பிடல் வேண்டும்.

6.5 உரிமம்பெற்ற வங்கிகள், காத்திரமான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் மேலே பணிப்புரை 6.1 இல் உள்ள இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான உள்ளகக் கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

6.6 உரிமம்பெற்ற வங்கிகள், சாத்தியமான/ மாற்று காலநிலையுடன் தொடர்பான இடர்நேர்வுகளினதும் பசுமை நிதியிடல் நடவடிக்கைகளினதும் தாக்கத்தினை மதிப்பிடுவதற்கு சூழ்நிலைகளின் பகுப்பாய்வுகளையும் அழுத்தப்பரீட்சிப்புக்களையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

7. இயலளவினை கட்டியெழுப்புதல் மற்றும் புத்தாக்கம்

7.1 உரிமம்பெற்ற வங்கிகள் அலுவலக உறுப்பினர்களுக்கு போதுமான பயிற்சியை வழங்கும் பொருட்டு முன்னோக்கிய நீடித்துநிலைத்திருக்கும் நிதி நடவடிக்கைகளின் மீது இயலளவினை கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

7.2 உரிமம்பெற்ற வங்கிகள், வாடிக்கையாளர்களுக்கு புதிய புத்தாக்க நீடித்து நிலைத்திருக்கும் நிதித் தீர்வுகளை அபிவிருத்தி செய்து வழங்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றன.

7.3 உரிமம்பெற்ற வங்கிகள், சூழல் அழுத்தப்பரீட்சிப்பு மற்றும் சூழ்நிலைப் பகுப்பாய்வில் நிபுணத்துவத்தினை அபிவிருத்தி செய்துகொள்கின்ற வேளையில், சூழல் மற்றும் காலநிலையுடன் தொடர்பான இடர்நேர்வு அம்சங்கள் தொடர்பில் பொருத்தமான வெளிநாட்டு நிபுணத்துவத்தினையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

8. வெளிப்படுத்துகைகள் மற்றும் அறிக்கையிடல்

8.1 உரிமம்பெற்ற வங்கிகள் அவற்றின் ஆண்டறிக்கைகளில் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நிதி நடைமுறைகளுடன் தொடர்பான பின்வரும் தகவல்களை வெளிப்படுத்துதல் வேண்டும்:

(அ) வங்கியின் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நிதிக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பிலான பொதுநோக்கு

(ஆ) நீடித்துநிலைத்திருக்கும் நிதியுடன் தொடர்பான இடர்நேர்வுகளையும் அதனுடன் இணைந்த தணித்தல் வழிமுறைகளையும் அடையாளம் காணுதல்

(இ) நீடித்து நிலைத்திருக்கும் நிதி நடவடிக்கைகள் மற்றும் முன்னோக்கிச் செல்லுதல் தொடர்பில் வங்கியின் அணுகுமுறை மீதான அறிக்கையொன்று.

8.2 உரிமம்பெற்ற வங்கிகள் உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்புக்கள் மற்றும் காலநிலையுடன் தொடர்பான நிதியியல் வெளிப்படுத்துகைகள் போன்ற பன்னாட்டு ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அறிக்கையிடல் கட்டமைப்புகளைப் பயன்படுத்தி, வியாபார நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்படுகின்ற சூழல் மற்றும் சமூகத் தாக்கத்தினை வெளிப்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன.

8.3 உரிமம்பெற்ற வங்கிகள், ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்ததிலிருந்து 30 நாட்களுக்குள், இணைப்பு I இல் தேவைப்படுத்தப்பட்டவாறான தகவல்களை வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

முனைவர் பி. நந்தலால் வீரசிங்க
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

இணைப்பு I

உரிமம்பெற்ற வங்கிகளின் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதியிடல் நடவடிக்கைகள் தொடர்பான காலாண்டுக் கூற்று ..... இல் உள்ளவாறு						
உரிமம்பெற்ற வங்கியின் பெயர்:-						
	துறை	துணைத் துறை (ஏற்புடைத்தான வசதிகளுக்கான இலங்கை பசுமை நிதி முக்கியத்துவத்தின் அடிப்படையிலான உயர் வகைப்படுத்தலில் வரையறுக்கப்பட்டவாறு அடையாளம் காணுதல்)	கொடுகடன் வசதிகளின் எண்ணிக்கை	..... காலாண்டில் உள்ளவாறு வெளிநின்ற கொடுகடன் வசதிகளின் பெறுமதி	..... காலாண்டில் பகுதியில் வழங்கப்பட்ட புதிய கொடுகடன் வசதிகளின் எண்ணிக்கை	..... காலாண்டுப் பகுதியில் வழங்கப்பட்ட புதிய கொடுகடன் வசதிகளின் பெறுமதி
1.	வேளாண்மை, காடாக்கல் மற்றும் மரக்குற்றி களாக்குதல்	நீடித்து நிலைத்திருக்கும் வேளாண்மை				
		காடாக்கல் மற்றும் குற்றிகளாக்குதல்				
		ஏனைய நீடித்து நிலைத்திருக்கும் நடவடிக்கைகள்				
2.	தயாரிப்பு	வலுவினைச் சேமிக்கின்ற பொறிகள்/ கருவிகள்				
		ஏனைய நீடித்து நிலைத்திருக்கும் தயாரிப்பு				
3.	மின்வலு உருவாக்கம், கடத்தல் மற்றும் விநியோகம்	புதுப்பிக்கத்தக்க வலுச் செயற்றிட்டங்கள்				
		ஏனைய நீடித்து நிலைத்திருக்கும் நடவடிக்கைகள்				
4.	போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல்	நீடித்து நிலைத்திருக்கும் போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தலின் அனைத்து வடிவங்களும்				
5.	நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் கழிவு முகாமைத்துவம்	நீர் வழங்கல்/ முகாமைத்துவச் செயற்றிட்டங்கள்				
		கழிவு முகாமைத்துவ செயற்றிட்டங்கள்				
		ஏனைய நீடித்து நிலைத்திருக்கும் நடவடிக்கைகள்				
6.	கட்டுமானம்	பசுமை கட்டுமான செயற்றிட்டங்கள்				
		ஏனைய நீடித்து நிலைத்திருக்கும் நடவடிக்கைகள்				
7.	நீடித்து நிலைத்திருக்கக் கூடிய சுற்றுலா மற்றும் பொழுது போக்கு	அனைத்து நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சுற்றுலா மற்றும் பொழுது போக்கு நடவடிக்கைகள்				

8.	ஏனைய துறைகள்	வாயு, நீராவி மற்றும் குளிரூட்டிகளின் விநியோகம்				
		நிதியியல் பணிகள்				
		தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பம்				
		வேறு ஏதேனும் துறைகளின் கீழ் உள்ளடக்கப்படாதிருப்பின், நீடித்து நிலைத்திருக்கக் கூடிய மகளிர் வலுவூட்டல் முன்னெடுப்புக்கள்				
		ஏனைய நீடித்து நிலைத்திருக்கக் கூடிய கடன் வழங்கல் (தயவுசெய்து குறிப்பிடவும்)				
		மொத்தம்				

ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்ததிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத் தரவுத் தளத்திற்கு bsddb@cbsl.lk மின்னஞ்சல் செய்யவும்.

2022ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2022 ஜூலை 04

2011ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைக்கான பின்னிணைப்பு : விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்கள் வங்கித்தொழில் பணிகளை அணுகுவதற்கான உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம்

திருத்தப்பட்டவாறான, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஒ)(1)ஆம் பிரிவுகளால் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளுக்கமைய விடுக்கப்பட்டது.

விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்களுக்காக நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு வழிமுறைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன், உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம் மீதான 2011ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைக்கான பின்வரும் பின்னிணைப்பை இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை இத்தால் விடுக்கின்றது.

அதற்கமைய, உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம் மீதான 2011ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைக்கான பின்னிணைப்பின் 07ஆம் பந்தி பின்வருகின்றவாறு விரிவாக்கம் செய்யப்படுகின்றது.

7. விசேட கவனம் மற்றும் பராமரிப்பு

7.1 முதியோர், மாற்றுத்திறனாளிகள் அல்லது குறைந்தளவான நிதியியல் அறிவைக் கொண்ட வாடிக்கையாளர்கள் (இதனகத்திற்குப்பின்னர் விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்கள் என குறிப்பீடுசெய்யப்படும்) வங்கித்தொழில் பணிகளை இலகுவாக அணுகுவதற்காக அவர்களுக்கு வசதியளித்தல் தொடர்பில் விசேட கவனத்தை பெற்றுக்கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர்.

7.2 அதற்கமைய, அட்டவணை 01இல் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் உள்ளடங்கலாகவும் அதேவேளை, அதற்கு மாத்திரம் வரையறுக்கப்படாது விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்களுக்கு வங்கித்தொழில் பணிகளுக்கென மேம்படுத்தப்பட்ட அணுகுவழியை உறுதிசெய்வதற்கு அனைத்தையுமுள்ளடக்கிய கொள்கைகளையும் நடைமுறைகளையும் உரிமம்பெற்ற வங்கிகள் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

7.3 கரிசனைக்குட்பட்ட வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்ப்பதற்காக அத்தகைய வழிமுறைகளை கிளைகளில் நடைமுறைப்படுத்துவதை உரிமம்பெற்ற வங்கிகள் துரிதப்படுத்துதல் வேண்டும்.

முனைவர் பி. நந்தலால் வீரசிங்க
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

இணைப்பு 1

விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்கள் வங்கித்தொழில் பணிகளை அணுகுவதை மேம்படுத்துவதற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்குமான வழிக்காட்டல்கள்

1. அறிமுகம்

1.1 இவ்வழிகாட்டல்கள், விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்களுக்காக வங்கித்தொழில் பணிகளை அணுகுவதற்கு வசதியளிப்பதற்கும், நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பை மேம்படுத்துத்துவதற்கும் அத்துடன் அத்தகைய வாடிக்கையாளர்களின் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான குறைந்தபட்ச தேவைப்பாடுகளை நிர்ணயிக்கின்றது.

1.1 இவ்வழிகாட்டல்களைப் பொறுத்தவரையில், "விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்கள்" என்பது பார்வைக் குறைபாடுகள், செவிப்புலன் குறைபாடுகள், அவையம்/அவையங்களை இழந்தோர் போன்றோர் அத்துடன் முதுமை உட்பட ஆனால் அவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாத உடல் அல்லது உள ரீதியான நிலைமைகளின் காரணமாக வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்களை செயலாற்றுவதற்கு அத்துடன்/அல்லது வங்கித்தொழில் பணிகளை பெற்றுக்கொள்வதற்கு மேலதிக உதவிகள் தேவைப்படுகின்ற தனியாட்களை குறிக்கின்றது.

2. பொதுவான வழிகாட்டல்கள்

2.1 வங்கித்தொழில் பணிகளுக்கான அணுகுவழியை மேம்படுத்தல்

(i) விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்கள் எவரேனும் வேறு வாடிக்கையாளரை ஒத்தவிதத்தில் வங்கித்தொழில் பணிகளுக்கும் உற்பத்திகளுக்கும் நியாயமான அணுகுவழியினைக் கொண்டுள்ளனர் என்பதை உரிமம்பெற்ற வங்கிகள் உறுதிசெய்தல் வேண்டும்.

(ii) இது தொடர்பில், உரிமம்பெற்ற வங்கிகள் விசேட தேவைகளையுடைய தனியாட்களுக்காக அணுகக்கூடிய வங்கித்தொழில் பணிகளை உறுதிசெய்வதற்கு பின்வருவனவற்றை வழங்குதல் வேண்டும்.

அ) வங்கிக் கிளைகள், நடமாடும் வங்கித்தொழில் பிரிவுகள் மற்றும் தன்னியக்கக்கூற்றுப் பொறிகள், மற்றும் பண வைப்புப் பொறிகள் உட்பட சுயமாக பணிகளை புரிகின்ற பொறிகள் போன்ற புதிதாக ஆரம்பிக்கப்படும் அனைத்து பௌதீக ரீதியான பணி நிலையங்களும் சக்கர நாற்காலிகளை, நடைத் துணைக்கோல்களை, ஊன்றுகோல்களை பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் அடங்கலாக விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்கள் அணுகக்கூடிய வகையில் உள்ளன என்பதை உரிமம்பெற்ற வங்கிகள் உறுதிசெய்தல் வேண்டும்.

ஆ) பொருத்தமானவிடத்து, திரை உருப்பெருக்கி, திரை வாசிப்பான்கள், உரைப்பகுதியை குரல் வடிவாக்குதல் மற்றும் உரைப்பகுதி எழுத்துப்பிதியை அணுகத்தக்க செவிப்புல தகவல்களாக இயலச்செய்வதை வழங்குதல் போன்ற தெரிவுகளுக்கு இடமளிக்கின்ற பன்னாட்டு அணுகுவழி நியமங்களுடன் ஒத்தியங்கும் இணையவழி வங்கித்தொழில் மற்றும் செல்லிட வங்கித்தொழில் செயலிகள் உள்ளடங்கலான டிஜிட்டல் வங்கித்தொழில் வழிகள். இது தொடர்பில், விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்களால் பயன்படுத்தப்படும் சாதனங்களின் (செல்லிடத் தொலைபேசி, மடிக்கணினி, டப் கணனி) உள்ளமைக்கப்பட்ட, நியமமான அணுகுவழி அம்சங்களுடன் ஒத்தியங்குவதற்கு தமது செயலிகளையும் வலைத்தளங்களையும் நெறிப்படுத்துவதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இ) வங்கித்தொழில் பணிகளும் உற்பத்திகளும் விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்களால் சிநேபூர்வமாக அணுகும் வகையில் உள்ளன என்பதை உறுதிசெய்வதற்கு தரக் கட்டுப்பாட்டு/உறுதிப்படுத்தல் பிரிவை அல்லது அதையொத்த ஒருங்கேற்பாடொன்றை தாபிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் கோரப்படுகின்றன.

2.2 விசேட கவனம் மற்றும் உரிய விழிப்புக்கவனம்

(i) விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்களை இனங்காண்பதற்கு வங்கி ஊழியர்களை இயலச்செய்கின்ற விதத்தில் அத்தகைய வாடிக்கையாளர்களின் வங்கிக் கணக்குகளுக்கு விசேட அடையாளமிடுவதற்கும் அத்தகைய வாடிக்கையாளர்களுக்கு வங்கித்தொழில் பணிகளை வழங்கும் போது விசேட கவனத்தையும் உரிய விழிப்புக் கவனத்தையும் செலுத்தவதற்கும் உரிமம் பெற்ற வங்கிகள் பரிசீலிக்கலாம்.

(ii) விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்களுக்கு அன்பானதும் வினைத்திறனானதுமான பணிகளை வழங்குவதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் தொடர்புடைய வங்கிக் கிளைகளிலும் வேறு பணி நிலையங்களிலும் உள்ள ஊழியர்களுக்கு வசதிகளை வழங்கி பயிற்சியளித்தல் வேண்டும்.

(iii) வாடிக்கையாளரொருவர் வங்கித்தொழில் பணிகளை செயலாற்றுவதற்கு/பெறுவதற்கு அவர்களுக்கு வங்கி ஊழியரிடமிருந்தான உதவி அத்தியாவசியமானது என நம்புமிடத்து, விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்கள் அவ்வுதவியை பெறுவதற்கான அணுகுவழியைக் கொண்டுள்ளனர் என்பதை உரிமம்பெற்ற வங்கிகள் உறுதிசெய்தல் வேண்டும்.

(iv) விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகளையும்/ பிரச்சினைகளையும் தீர்த்துவைக்கும் நோக்குடன் அவர்களுக்கு உதவுவதற்காக வாடிக்கையாளர் கவனிப்பு துரித அழைப்பு இலக்கம்/இலத்திரனியல் ஊடகம் (நேரலை உரையாடல்)

என்பவற்றை உரிமம்பெற்ற வங்கிகள் பேணுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வசதிகள் பற்றி வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

2.3 நியாயமாக நடாத்ததலை உறுதிசெய்தல்

(i) விசேட தேவைகளையுடையோர் உட்பட அனைத்து வாடிக்கையாளர்களையும் நியாயமாக நடாத்துவதை உரிமம்பெற்ற வங்கிகள் உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்கமைய, விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்கள் மூலம் வங்கித்தொழில் பணிகளை நியாயமாக அணுகுவதற்கு தடையை ஏற்படுத்துகின்ற தமது உள்ளக கொள்கைகளையும் நடைமுறைகளையும் உரிமம்பெற்ற வங்கிகள் மீளாய்வுசெய்தல் வேண்டும்.

(ii) உரிமம்பெற்ற வங்கிகள், வாடிக்கையாளர்களை அவர்களின் வயது அல்லது விசேட தேவையுடையோர் என்ற அடிப்படையில் அவர்களுக்கான வங்கித்தொழில் பணிகளை வழங்குவதை மறுக்கவோ அன்றில் அத்தகைய வாடிக்கையாளர்களை பிரதிகூலமான நிலைமையொன்றிற்கு இட்டுச் செல்லக்கூடிய ஏதேனும் மேலதிக நியதிகளை மற்றும் நிபந்தனைகளை (தொடர்புடைய கணக்கு திறக்கப்பட்ட கிளை தவிர வேறு கிளையிலிருந்து வங்கித்தொழில் பணிகளை பெற்றுக்கொள்வதிலிருந்து அத்தகைய வாடிக்கையாளரை தடுக்கின்ற ஏதேனும் தேவைப்பாடு உள்ளடங்கலாக) விதித்தலாகாது.

(iii) செல்லுபடியான கையொப்பமொன்றை இடமுடியாத காரணத்தால் அடையாளம் சரிபார்க்க முடியாமல் உள்ள அத்தகைய வாடிக்கையாளர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தவதற்கு கைவிரல்பதிப்பு வாசிப்புப்பொறிகள் போன்ற உயிரியக்க சான்றுப்படத்தல் தெரிவுகளைப் பயன்படுத்துவதை உரிமம்பெற்ற வங்கிகள் கவனத்தில் கொள்ளலாம்.

(iv) விசேட தேவைகளையுடைய தனியாட்களுக்காக வரவேற்புச் சூழலொன்றை உருவாக்குவதற்கு பன்முகப்பட்டதும் வசதிக்குட்படத்துகின்றதுமான கலாசாரமொன்றை ஊக்குவிப்பதற்கும் ஏதேனும் காரணத்தின் மீதான பாகுபாடு காட்டலுக்கு பூஜ்ஜிய சகிப்புத்தன்மையை உறுதிசெய்வதற்கும் உரிமம்பெற்ற வங்கிகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

3. பார்வைக் குறைபாடுகளைக் கொண்ட வாடிக்கையாளர்களுக்காக வங்கித்தொழில் அனுபவத்தை மேம்படுத்துவதற்கான விசேட வழிகாட்டல்கள்

3.1 அறிந்த தீர்மானமெடுத்தலுக்கு வசதியளித்தல்: அறிந்த தீர்மானமெடுத்தலுக்காக வங்கித்தொழில் உற்பத்திகளின் மற்றும் பணிகளின் அம்சங்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் ஆனால் அவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கபடாது, பார்வைக் குறைபாடுகளை கொண்ட வாடிக்கையாளர்கள் பணிகளை பெறத் தொடங்கும் போதும் அதன் பின்னரும், வங்கித்தொழில் உற்பத்திகளின் மற்றும் பணிகளின் போதுமான தகவல்களுக்கு அணுகுதலை கொண்டுள்ளனர் என்பதையும் உரிமம்பெற்ற வங்கிகள் உறுதிசெய்தல் வேண்டும்.

3.2 விசேட தேவைகளையுடைய வாடிக்கையளார்களுக்கு உதவுவதற்கு பிரத்தியேகமான ஊழியர்களை ஒதுக்கீடு செய்வதையும் அறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கு முக்கிய ஆவணங்களை சிநேகபூர்வமாக அணுகத்தக்க இலத்திரனியல் ஊடகத்தில் கிடைக்கப்பெறச் செய்வதையும் வங்கிகள் பரிசீலிக்கலாம்.

3.3 அணுகுவழி மற்றும் காட்சிப்படத்தல் தெரிவுகள்: வயது முதிர்ந்த வாடிக்கையாளர்களுக்கும் பகுதியாளவான பார்வைக் குறைபாடுகளை கொண்ட வாடிக்கையாளர்களுக்குமான நன்மைகளுக்காக பெரியளவிலான எழுத்து வடிவங்கள் மற்றும் உயர்ந்தளவில் மாறுபட்ட நிறங்களுடனான வங்கிக்கூற்றுகள், பொறுப்பாணைகள், பல்வேறு விண்ணப்பங்கள் போன்ற பல்றே ஆவணங்களின் உயர் காட்சிப்படுத்தல் வடிவங்களை தெரிவுசெய்வதற்காக வாடிக்கையாளர்களுக்கு தெரிவுகளை வழங்குவதற்காக கால எல்லைகளுடனான திட்டமொன்றை உரிமம்பெற்ற வங்கிகள் வகுத்தல் வேண்டும்.

3.4 பார்வைக் குறைபாடுகளை கொண்ட வாடிக்கையாளர்களுக்காக வங்கித்தொழில் பணிகளுக்கு அணுகுவழியை வழங்குவதற்காக பிரெயில் சாவி எண்தளம் மற்றும் குரல் உள்ளீடு/வெளியீடு வசதிகள் என்பவற்றின் பயன்பாட்டை கொண்டுவரும் நோக்குடன் புதிய தன்னியக்ககூற்றுப் பொறிகள், பண வைப்பு பொறிகள் மற்றும் வேறு சுயமாக பணிகளை புரியும் பொறிகளை கொள்வனவு செய்யும் போது பார்வை குறைபாடுகள் கொண்ட வாடிக்கையாளர்களுக்கான அணுகுதல் பண்புகளையும் முக்கியமானதொன்றாக உரிமம்பெற்ற வங்கிகள் கவனத்திற் கொள்ளல் வேண்டும். இது தொடர்பில், பார்வை குறைபாடுள்ள வாடிக்கையாளர்களுக்கு வசதியளிப்பதற்காக அத்தகைய பொறிகளை வங்கிகள் அறிமுகப்படுத்தல் வேண்டும் என்பதுடன் தற்போதுள்ள ஒத்தியங்காத தன்னியக்க கூற்றுப் பொறிகளை எதிர்காலத்தில் ஒழுங்கான அடிப்படையில் புதிய பொறிகளைக் கொண்டு மாற்றீடு செய்தலும் வேண்டும்.

3.5 பார்வை குறைபாடுடைய வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்திசெய்யும் பொருட்டு, ஒவ்வொரு பிரதேசத்திலும் குறைந்தது அத்தகைய ஒரு பொறியாவாது பொதுவாக கிடைக்கப்பெறுகின்றது என்பதை உறுதிசெய்வதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் ஏனைய வங்கிகளுடனான ஆலோசனையுடன் மேற்குறிப்பிட்ட பொறிகளை உபாய ரீதியாக நிறுவுதல் வேண்டும்.

3.6 இணைந்த கணக்குகளை திறப்பதற்கு கட்டாயப்படுத்தல், அத்தகைய வாடிக்கையாளர்கள் தமது வங்கிக் கணக்குகளை திறந்துள்ள கிளைக்கே வங்கித்தொழில் பணிகளை மட்டுப்படுத்தல் போன்ற மேலதிக நிபந்தனைகள் பார்வைக் குறைபாடுடைய வாடிக்கையாளர்கள் மீது விதிக்கப்படவில்லை என்பதை உரிமம்பெற்ற வங்கிகள் உறுதிசெய்தல் வேண்டும்.

4. நடைமுறைப்படுத்தல்

4.1 வங்கித்தொழில் பணிகளை பெற்றுக்கொள்வதில் அத்தகைய வாடிக்கையாளர்களால் முகங்கொடுக்கப்படும் ஏதேனும் நடைமுறையான சிக்கல்களை தீர்க்கும் நோக்குடன், வழிகாட்டல்களை உள்ளடக்கி ஆனால் அவற்றுக்கு மாத்திரம் வரையறுக்காது விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்களுக்கென வங்கித்தொழில் பணிகளுக்கான மேம்படுத்தப்பட்ட அணுகுவழியை உறுதிசெய்வதற்கு அனைத்தையுமுள்ளடக்கிய கொள்கைகளையும் நடைமுறைகளையும் உரிமம்பெற்ற வங்கிகள் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

4.2 வங்கித்தொழில் பணிகளை பெறுகையில் அத்தகைய அணுகுவழி தெரிவுகளை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு ஏதேனும் மேலதிகக் கட்டணத்தை அல்லது விதிப்பனவை உரிமம்பெற்ற வங்கிகள் அறவிடலாகாது.

4.3 சில தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபடுத்தப்படும் மேலதிக வளங்களை கருத்திற்கொண்டு, 2022.12.31 அன்று அளவில் முழு இணங்குவிப்பையும் அடையும் நோக்கில், வங்கிகள் தளர்வான நடைமுறைப்படுத்தலுக்கு அனுமதிக்கப்படுகின்றன.

2022ஆம் ஆண்டின 02ஆம் இலக்கச் சுற்றறிக்கை 2022 ஜூலை 07

தற்போது நிலவுகின்ற வழமைக்கு மாறான பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகளுக்கு மத்தியில் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கான சலுகைகள்

தற்போது நிலவுகின்ற வழமைக்கு மாறான பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகளின் காரணமாக பல்வேறு பொருளாதாரத் துறைகளில் ஈடுபடும் வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொள்ளும் நோக்குடன், பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு பின்வருகின்ற சலுகைகளை தேவையடிப்படையொன்றில் வழங்குவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் என்பவற்றை (இதனகத்துப்பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் என குறிப்பிடப்படும்) இலங்கை மத்திய வங்கி கோருகின்றது.

விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் கடன்பெறுநரின் புதிய மீள்கொடுப்பனவு இயலுமைகளை அடிப்படையாகக்கொண்டு பொருத்தமான மீள்கொடுப்பனவு ஒருங்கேற்பாடுகளை உருவாக்கின்ற அதேவேளை நிதியியல் முறைமை மீதான ஏதேனும் அதிகரித்த தாக்கத்தை தடுப்பதன் மூலம் வங்கித்தொழில்துறை உறுதிப்பாட்டை பாதுகாப்பதற்கு இத்தகைய சலுகைகள் வழங்கப்படுகின்றன. இதற்கமைய, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகள் மத்தியிலும் ஒத்திசைவான நடைமுறைப்படுத்தலுக்காக முன்மதியுடைய தேவைப்பாடுகளுடனான பரந்தளவிலான வழிகாட்டல்களை வழங்குவதற்காக இச்சுற்றறிக்கை வழங்கப்படுகின்றது. 2022 மார்சு 24 அன்று வழங்கப்பட்ட 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கையின் நியதிகளுக்கமைவாக ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ள கொவிட்-19 இற்குப் பின்னரான புத்துயிரளித்தல் பிரிவுகளினூடாக இத்தகைய சலுகைகளை நடைமுறைப்படுத்துவதை உரிமம்பெற்ற வங்கிகள் பரிசீலனையிற்கொள்ள முடியும்.

1. செயலாற்றுகின்ற கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகள்

1.1 ஏற்கனவே கொவிட்-19 சட்டஇசைவுத்தாமதங்களுக்குட்பட்ட கடன்பெறுநர்கள் உள்ளடங்கலாக தற்போதைய பேரண்டப் பொருளாதார நிலமைகளினால் வருமானம் அல்லது வியாபாரம மோசமாகப் பாதிக்கப்பட்ட தனிநபர்களின் மற்றும் வியாபாரங்களின் (இதனகத்துப்பின்னர் கடன்பெறுநர்கள் எனக் குறிப்பிடப்படும்) செயலாற்றுகின்ற கொடுகடன் வசதிகளுக்காக பொருத்தமான சலுகைகளை (அதாவது, மூலதனம் அல்லது வட்டி அல்லது மூலதனம் மற்றும் வட்டி ஆகிய இரண்டிற்கும் அல்லது பகுதியளவான மூலதனம் அல்லது வட்டி என்பவற்றிற்குமான சலுகைக்காலம், கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல் அல்லது ஏதேனும் வேறு சலுகைகள்) வழங்குவதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் கோரப்படுகின்றன. கடன்பெறுநரின் புதிய மீள்கொடுப்பனவு இயலாற்றலை அல்லது சாத்தியத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு, இச்சுற்றறிக்கையின் திகதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதிற்காக விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையொன்றில் சுற்றுலாத்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் தயாரிப்பு, பணிகள், வேளாண்மை மற்றும் கட்டுமானம் போன்ற வியாபாரத் துறைகளில் ஈடுபடும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் உட்பட ஆனால் அவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாத அனைத்துப் பொருளாதாரத் துறைகளிலும் உள்ள பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கும் இத்தகைய சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

1.2 கிரமமான தவணைக்கொடுப்பனவு கடன்களைப் பொறுத்தவரையில், கடன்பெறுநர்களின் கொடுப்பனவு இயலளவுடன் பொருந்தக்கூடிய விதத்தில் நீடிக்கப்பட்ட காலப்பகுதியுடன்கூடிய ஏற்கனவேயுள்ள கொடுகடன் வசதியின் அல்லது வசதிகளின் ஒப்பந்தம்செய்யப்பட்ட தவணைக்கொடுப்பனவு பெறுமதியை விஞ்சாத வகையில் மீள்கொடுப்பனவு திட்டத்தை கட்டமைப்பதற்கான பொறிமுறையொன்றை உரிமம்பெற்ற வங்கிகள் உருவாக்க வேண்டும். வேறு கொடுகடன் வசதிகளைப் பொறுத்தவரையில், உரிமம்பெற்ற வங்கிகள் மீள்கொடுப்பனவுத் திட்டத்தை கட்டமைப்பதற்கு பொருத்தமான பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டும்.

1.3 சலுகைகளுக்காக பரிசீலனையிற்கொள்ளப்பட்ட ரூபா வசதிகளைப் பொறுத்தவரையில், சலுகைக் காலப்பகுதிகு ஏற்புடைய வட்டிவீதமானது (அறவீட்டு காலப்பகுதி அடங்கலாக) ஆகப்பிந்திய ஒப்பந்தம்செய்யப்பட்ட வட்டி வீதத்தினை அல்லது சுற்றறிக்கையின் திகதி அன்று துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினை (15.5 சதவீதம்) இதில் எது உயர்வானதோ அதனை விஞ்சுதல் ஆகாது என்பதுடன் சலுகைக்காக கருத்திற்கொள்ளப்பட்ட தொகை மீது மாத்திரம் அறவிடப்படுதல் வேண்டும். வெளிநாட்டு நாணய வசதிகளைப பொறுத்தவரையில், உரிமம்பெற்ற வங்கிகள் வாடிக்கையாளருடன் பரஸ்பரம் இணங்குகின்றவாறான சலுகை வட்டி வீதத்தை அறவிடலாம்.

2. மீள்நிதியிடல்/உதவுதொகைத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகளின் ஏற்புடைமை

2.1 அரசாங்கம் அல்லது வேறு முகவராண்மைகள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு மீள்நிதியிடல் அல்லது வட்டி உதவுதொகை திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்காக இத்தகைய சலுகைகளை வழங்குதல் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகள் தொடர்புடைய முகவராண்மைகளிடமிருந்தும் அரச அதிகாரிகளிடமிருந்தும் தேவையான வழிகாட்டல்களைக் கோருதல் வேண்டும்.

3. முன்கூட்டிய தீர்ப்பனவுகளுக்கு வசதியளித்தல்

3.1 எவரேனும் கடன்பெறுநர் தற்போதுள்ள ஏதேனும் கொடுகடன் வசதிகளை முழுமையாக தீர்ப்பனவுசெய்ய விரும்புகின்றவிடத்து, முன்கூட்டிய தீர்ப்பனவுக் கட்டணங்கள் போன்ற ஏதேனும் மேலதிக கட்டணங்களை விதிக்காது அத்தகைய கடன்பெறுநருக்கு அவ்வாறு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். குத்தகை வசதிகளைப் பொறுத்தவரையில், எதிர்கால வட்டியை அறவிடுதலும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3.2 உரிமம்பெற்ற வங்கிகள் விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையொன்றில், அத்தகைய முன்கூட்டிய தீர்ப்பனவுகளுக்கான தள்ளுபடிகளை வழங்குவதை பரிசீலனையிற்கொள்ளலாம்

3.3 கொடுகடன் வசதிகளின் முன்கூட்டிய தீர்ப்பனவொன்றை விரும்புகின்ற கடன்பெறுநர் எவரேனும், 2022.09.30 அன்று அல்லது அதற்கு முன்னர் தொடர்புடைய உரிமம்பெற்ற வங்கிக்கான கோரிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

4. செயற்படாக் கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகள்

4.1 தற்போதுள்ள நீண்ட காலமாக செயற்படாமலிருக்கின்ற கொடுகடன் வசதிகளுக்காக அத்தகைய தனிநபர்கள் மற்றும் வியாபாரங்களின்/செயற்றிட்டங்களின் என்பவற்றின் எதிர்கால மீள்கொடுப்பனவு இயலளவை/சாத்தியத்தன்மையை பரிசீலனையிற்கொண்டு, விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையொன்றில் மீளஅட்டவணைப்படுத்தல் உட்பட, பொருத்தமான சலுகைகள் வழங்குவதை உரிமம்பெற்ற வங்கிகள் பரிசீலனையிற் கொள்ளலாம்.

4.2 மீள்கொடுப்பனவு திட்டத்தை கட்டமைப்பதற்கான பொருத்தமான பொறிமுறையொன்றை உரிமம்பெற்ற வங்கிகள் உருவாக்க வேண்டும்.

4.3 ரூபா கடன்வசதிகளைப் பொறுத்தவரையில், செயற்படாக் கொடுகடன் வசதிகளுக்கு வழங்கப்படும் சலுகைகளுக்கு சலுகைக் காலப்பகுதிக்கு ஏற்புடைய வட்டிவீதமானது ஆகப்பிந்திய ஒப்பந்தம்செய்யப்பட்ட வட்டி வீதத்தினை அல்லது சுற்றறிக்கையின் திகதி அன்று துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினை (15.5 சதவீதம்) இதில் எது உயர்வானதோ அதனை விஞ்சுதல் ஆகாது. வெளிநாட்டு நாணய வசதிகளைப் பொறுத்தவரையில், உரிமம்பெற்ற வங்கிகள வாடிக்கையாளருடன் பரஸ்பரம் இணங்குகின்றவாறான சலுகை வட்டி வீதத்தை அறவிடலாம்.

4.4 கடன்பெறுநர்களின் உரியகால மீள்கொடுப்பனவுகளை இயலுமைப்படுத்தும் பொருட்டு, 2020.01.01 அன்று அல்லது அதற்கு பின்னர் செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து கொடுகடன் வசதிகளுக்கும் எதிரான நீதிமன்ற நடவடிக்கைகள், குத்தகைச் சொத்துக்களை பறிமுதல்செய்தல் மற்றும் கட்டாய மீள உடமைப்படுத்தல் உள்ளடங்கலாக அறவீட்டு நடவடிக்கைகளை உரிமம்பெற்ற வங்கிகள் 2022.12.31 வரை இடைநிறுத்தல் வேண்டும்.

4.5 சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சி அரிசி ஆலையாளர்களுக்கெதிரான அறவீட்டு நடவடிக்கைகள் விடயத்தில், வங்கிகள், ஏதேனும் செயற்படா கொடுகடன் வசதிகளுக்கெதிராக நீதிமன்ற நடவடிக்கைகளின்றி குத்தகைச் சொத்துக்களை பறிமுதல்செய்தல் உள்ளடங்கலாக அறவீட்டு நடவடிக்கைகளை 2022.12.31 வரை இடைநிறுத்தலாம் ஆயின், தற்போதுள்ள வாக்குறுதியளிக்கப்பட்ட கடன்களை முழுமையாக அத்துடன்/அல்லது செயற்படாக் கொடுகடன் வசதிகளை (பகுதியளவான அல்லது முழுமையான தீர்ப்பனவு) தீர்ப்பனவு செய்வதற்கான பொருத்தமான பொறிமுறையொன்றினூடாக எதிர்வரும் அறுவடை காலப்பகுதியின் விற்பனை வருவாய்களை வங்கிகளுக்கு நேரடியாக அனுப்புவதன் மீது கடன்பெறுநருக்கும் உரிமம்பெற்ற வங்கிக்குமிடையில் இணக்கம் ஏற்பட வேண்டும்.

4.6 1990ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் அல்லது திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க ஈட்டுச் சட்டம் அல்லது 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடுதல் சட்டம் அல்லது இது தொடர்பில் வேறு ஏதேனும் சட்டம் என்பவற்றின் கீழ் உரிமம்பெற்ற வங்கி, அறவீட்டு நடவடிக்கையை ஆரம்பித்துள்ள அல்லது அறிவித்தலை வழங்கியுள்ளவிடத்தான சந்தர்ப்பத்தில், குறித்த உரிமம்பெற்ற வங்கியும் கடன்பெறுநரும் படுகடன் மீள்கொடுப்பனவு இணக்கப்பாட்டை எட்டியுள்ளனர் என்ற நிபந்தனையின் மீது அத்தகைய மீட்பு நடவடிக்கைகள் 2022.12.31 வரை இடைநிறுத்தப்படல் வேண்டும்.

4.7 உரிமம்பெற்ற வங்கியும் கடன்பெறுநரும் படுகடன் மீள்கொடுப்பனவு இணக்கப்பாட்டை எட்டியுள்ளனர் என்ற நிபந்தனையின்பேரில் 2022.12.31 வரை அத்தகைய கடன்களினதும் முற்பணங்களினதும் அறவிடலுக்காக, மேற்குறித்த சட்டங்களின் கீழ் புதிய தீர்மானங்களை நிறைவேற்றுவதை உரிமம்பெற்ற வங்கி பிற்போடுதல் வேண்டும். அறவீட்டு நடவடிக்கைகளுக்கான தீர்மானங்கள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்குமிடத்து, வரை சொத்துக்களின் ஏலங்கள் 2022.12.31 இடைநிறுத்தப்பட வேண்டும்.

4.8 அறவீடு தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்காடல் முன்னெடுக்கப்படுகின்றவிடத்தான சந்தர்ப்பங்களில் கடன்பெறுநர் இத்தகைய சலுகைகளைப் பயன்படுத்துவதற்கு நீதிமன்றங்களில் உடன்படிக்கையை கைச்சாத்திட வேண்டும்.

4.9 எவ்வாறாயினும், வேண்டுமென்றே தவணைதவறுபவர்கள், நிதியங்களை திசைதிருப்புவதன் காரணமான தவணைதவறுதல்கள், வியாபாரங்களில் தவறான முகாமைத்துவம் அத்துடன்/அல்லது மோசடிகள் மற்றும் நீடித்துழைக்காத செயற்றிட்டங்கள் என்பவற்றின் காரணமாக ஏற்படும் தவணைதவறுதல்கள் போன்ற ஏதேனும் மேற்குறிப்பிட்ட சலுகைகளுக்காக பரிசீலனையிற்கொள்ளப்படலாகாது.

4.10 கடன்பெறுநரைத் மிதமிஞ்சி தொடர்பு கொள்ளாமல், அவரின் இருப்பிடத்திற்குச் சமூகமளிக்காமல், அல்லது அவரைக் கட்டாயப்படுத்தாமல் வழமையான சேகரிப்பு நடைமுறையை/அறவீட்டை உரிமம்பெற்றவங்கிகள் தொடர முடியும்.

5. கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிக்கையிடல்

5.1 உரிமம்பெற்ற வங்கிகள், கொடுகடன் தகவல் பணியகத்தின் ஏகமாக பாதகமான பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு கடன்பெறுநர்களிடமிருந்து புதிய கடன் விண்ணப்பங்களை நிராகரித்தலாகாது.

5.2 தேவைப்படுமிடத்து, பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை அறிக்கையிடுவதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் தகவல் கொடுகடன் பணியகத்துடனான ஆலோசனையுடன் அறிக்கையிடும் முறைமையொன்றை உருவாக்குதல் வேண்டும்.

6. கணக்கீட்டை கையாளுதல் மற்றும் சேதமிழப்பு

6.1 சலுகைகளுக்காக பரிசீலனையிற்கொள்ளப்படும் வசதிகளுக்கான கணக்கீட்டுடன் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமங்களையும் இச்சுற்றிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வழங்கப்பட்ட அநுபந்தத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் வழிகாட்டல்களையும் உரிமம்பெற்ற வங்கிகள் கடைபிடித்தல் வேண்டும்.

6.2 இது தொடர்பில், மேலதிக வழிகாட்டல்/தெளிவுபடுத்தல்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் கணக்காய்வாளர்கள் ஆகியோரிடமிருந்தான உதவிகளை உரிமம்பெற்ற வங்கிகள் நாடலாம்.

7. சலுகைகளின் வெளிப்படைத்தன்மை

7.1 மேற்குறிப்பிட்ட சலுகைகளுக்காக தகைமையுடைய கடன்பெறுநர்கள் எழுத்திலான அல்லது இலத்திரனியல் வடிவில் 2022 யூலை 31இற்கு முன்னர் கோர முடியும்.

7.2 கடன்பெறுநரினால் மேற்கொள்ளப்படும் கோரிக்கையை அத்தகைய கோரிக்கையைப் பெறுகின்ற ஒருமாத காலத்திற்குள் அக்கோரிக்கையை ஏற்றுக்கொள்வதா அல்லது நிராகரிப்பதா என்பது பற்றிய தீர்மானத்தை உரிமம்பெற்ற வங்கி மேற்கொண்டு அத்தகைய தீர்மானத்தை கடன்பெறுநருக்கு உரியவாறு அறிவித்தல் வேண்டும்.

7.3 கோரிக்கை நிராகரிக்கப்படுமிடத்து, உரிமம்பெற்ற வங்கிகள் அத்தகைய நிராகரிப்பிற்கான காரணங்களை கடன்பெறுநருக்கு அறிவிப்பதுடன் அத்தகைய நிராகரிப்பிற்கு எதிராக இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் பணிப்பாளருக்கு மேன்முறையீடு செய்வதற்கான வாய்ப்பொன்று உள்ளது என்பதை அதே கடிதத்தினூடாக கடன்பெறுநருக்கு ஆலோசனையளித்தல் வேண்டும்.

7.4 ஒப்புதலுக்கு முன்னர் கொடுகடன் வசதிகளை பிற்போடும் கட்டமைப்பு அல்லது மீள்கட்டமைப்பு பற்றியும் ஏற்புடைய வட்டி வீதம் பற்றியும் கடன்பெறுநருக்கு தெளிவுபடத்தப்பட்டுள்ளது என்பதை உரிமம்பெற்ற வங்கிகள் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் கடன்பெறுநரின் சம்மதம் எழுத்தில் அல்லது இலத்திரனியல் வாயிலாக பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

8. அறிக்கையிடும் தேவைப்பாடு

உரிமம்பெற்ற வங்கிகள், அவற்றின் கடன்பெறுநர்களால் பயன்படுத்தப்படும் சலுகைகளின் விபரங்களை வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு 2022 யூலை 31இலிருந்து ஆரம்பித்து, ஒவ்வொரு மாத இறுதியுள்ளவாறான 15 வேலை நாட்களுக்குள் அறிக்கையிடுதல் வேண்டும். அறிக்கையிடும் படிவம் காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

முனைவர். பி. நந்தலால் வீரசிங்க
நாணயச்சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

இச்சுற்றறிக்கையின் இணைப்புக்கள்

https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/bsd_circular_no_2_of_2022_e.pdf என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.

2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2022 ஆகஸ்ட் 26

வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்ட) கட்டளை குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 23, 25 மற்றும் 26ஆம் பிரிவுகளின் கீழ், அமைச்சரின் ஒப்புதலுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் உருவாக்கப்பட்ட கட்டளை.

1. குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்

1.1 இக்கட்டளையின் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயங்கள், வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்ட) கட்டளையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

1.2 இக் கட்டளையிலுள்ள அட்டவணை, 2021.06.18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்ட) கட்டளையிலுள்ள அட்டவணையினைப் பதிலீடு செய்கிறது.

முனைவர் பி. நந்தலால் வீரசிங்க
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்

1.	அவுஸ்திரேலிய டொலர்	9.	நியுசிலாந்து டொலர்
2.	கனடிய டொலர்	10.	நோர்வே குறோணர்
3.	சீன ரென்மின்பீ	11.	ஸ்டேர்லிங் பவுண்
4.	டெனிஷ் குறோணர்	12.	சிங்கப்பூர் டொலர்
5.	யூரோ	13.	சுவிடன் குறோணர்
6.	ஹொங்கொங் டொலர்	14.	சுவிஸ் பிராங்க்
7.	இந்திய ரூபா	15.	தாய்லாந்து பாத்
8.	யப்பானிய யென்	16.	ஐக்கிய அமெரிக்க டொலர்

2022ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2022 ஆகஸ்ட் 29

உரிமம்பெற்ற வங்கிகளினால் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களை கட்டாயமாகப் பதிவுசெய்யப்படுதல்

இலங்கை மத்திய வங்கி, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினதும் (இதனகத்துப்பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் தகவல் முகாமைத்துவச் செய்முறையின் ஒருங்கிணைந்த தன்மையினையும் வலுப்படுத்தும் நோக்குடன், தொடர்பான வங்கித்தொழில் முறைமைகளில் உரிமம்பெற்ற வங்கிகளினால் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களை கட்டாயமாகப் பதிவுசெய்தல் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு பின்வரும் பணிப்புரைகளை இத்தால் விடுக்கின்றது.

1. **அதிகாரவளிப்பு**

1.1 வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் விதத்தில், வங்கித்தொழில் சட்டத்தின் 46(1)ஆம் பிரிவின் நியதிகளில், அத்தகைய வங்கியின் அல்லது வங்கிகளின் ஏதேனும் வியாபார அம்சங்கள் எவ்விதத்தில் கொண்டு நடத்தப்படவேண்டும் என்பது பற்றி அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

1.2 வங்கித்தொழில் சட்டத்தின் 76ஒ(1) இன் பிரிவினது நியதிகளில், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் ஏதேனும் வகை, ஏதேனும் வியாபார அம்சங்கள் எவ்விதத்தில் கொண்டு நடத்தப்படவேண்டும் என்பது பற்றி அத்தகைய வங்கிகளுக்கு பணிப்புரைகளை வழங்குவதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

2. **செயற்பரப்பும் ஏற்புடைத்தான தன்மையும்**

2.1 இப்பணிப்புரைகள், மூன்றாந்தரப்பு பணி வழங்குநர்கள் மற்றும் முகவர்களூடாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் உள்ளடங்கலான எல்லா உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் ஏற்புடையதாகும்.

3. **வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கத்தினை கட்டாயமாகப் பதிவுசெய்தல்**

3.1 அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் இப்பணிப்புரைகளுக்கான இணைப்பு Iஇல் தரப்பட்டுள்ள அடையாள இலக்கத்தினை வைப்பாளரின் ஒவ்வொரு வகைக்குமென தனித்துவமான அடையாள இலக்கமாக கட்டாயமாகப் பதிவுசெய்தல் வேண்டும்.

4. **நடைமுறைப்படுத்தல்**

4.1 உரிமம்பெற்ற வங்கிகள் அனைத்து புதிய வைப்பாளர்களுக்குமாக 2022.10.01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இப்பணிப்புரைகளின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

4.2 உரிமம்பெற்ற வங்கிகள் ஏற்கனவேயுள்ள வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களை முறைமையில் பதிவுசெய்வதனை 2023.12.31 அளவில் நிறைவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

முனைவர் பி. நந்தலால் வீரசிங்க
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

இணைப்பு I

அட்டவணை 1: வைப்பாளர்களின் ஒவ்வொரு வகையினருக்குமான தனித்துவமான அடையாள இலக்கங்கள்

வைப்பாளரின் வகை	அடையாள இலக்கத்தின் வகை	குறிப்பு
தனிப்பட்டவர்கள்		
இலங்கைப் பிரசைகள்	தேசிய அடையாள அட்டை இலக்கம்	உரிமம்பெற்ற வங்கிகள் கணக்குகளைத் திறப்பதற்கு வாடிக்கையாளரின் ஓட்டுநர் உரிமத்தினை அல்லது கடவுச்சீட்டினை ஏற்றுக்கொள்ளமுடியும். எனினும், வங்கிகளின் முறைமையில் தேசிய அடையாள அட்டையினை பதிவுசெய்வது கட்டாயமானதாகும்.
இலங்கைப் பிரசைகள் (இலங்கைக்கு வெளியே வதிபவர்/ நிரந்தர வதிவிட உடமையாளர்/ தற்காலிக வதிவிட உடமையாளர்) இரட்டைப் பிரசாவுரிமையினைப் பெற்ற இலங்கையர் (இலங்கையில் வதிபவர்) இரட்டைப் பிரசாவுரிமையினைப் பெற்ற இலங்கையர் (இலங்கைக்கு வெளியே வதிபவர்)	தேசிய அடையாள அட்டை இலக்கம்	வைப்பாளரொருவரினால் தேசிய அடையாள அட்டை தற்காலிகமாக கையளிக்கப்பட்டுள்ள போது மாத்திரமே இலங்கை கடவுச்சீட்டு இலக்கம் பயன்படுத்தப்பட முடியும்.
இலங்கையரல்லாத பிரசைகள்	வெளிநாட்டு கடவுச்சீட்டு இலக்கம்	இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட வெளிநாட்டவர் உட்பட (இலங்கைக்கு வெளியே வதிபவர்) இலங்கைக்கு தற்காலிக விஜயம் செய்கின்ற அல்லது இலங்கைக்கு விஜயம் செய்ய எண்ணியுள்ள வெளிநாட்டு பிரசைகள், வெளிநாட்டு இராசதந்திரிகள்
சிறிய வைப்பாளர்கள்	பிறந்த திகதி பிறப்புச்சான்றிதழ் இலக்கம் உ-ம்: பிறந்த திகதி: 2005 சனவரி 07 (2005.01.07) பிறப்புச் சான்றிதழ் இலக்கம்: 0325 200501070325	12 எண்களைக் கொண்ட இலக்கமொன்றினை உருவாக்குவதற்காக பிறந்த திகதியினைத் தொடர்ந்து பிறப்புச் சான்றிதழ் இலக்கத்தினை இடுதல் வேண்டும்.
நிறுவனங்கள்		
கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள்	கம்பனிப் பதிவு இலக்கம்	-
அரசல்லா நிறுவனங்கள்	அரசல்லா அமைப்புகளுக்காக தேசிய செயலகத்தினால் வழங்கப்பட்ட பதிவு இலக்கம்	-
சொந்த/ பங்குடமை/ கூட்டு தொழில்முயற்சிகள் போன்ற பிரதேச செயலகம்/ உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள்	வியாபாரப் பதிவு இலக்கம்	-
களரிகள், சங்கங்கள், சமூக சங்கங்கள் போன்ற ஏனைய அனைத்து நிறுவனங்கள்	தொடர்பான அதிகார சபையினால் வழங்கப்பட்ட பதிவு இலக்கம்	-

2022ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2022 நவம்பர் 18

திரவத்தன்மை விகிதங்கள் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள்

தற்போதைய பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் காரணமாக ஏற்பட்ட அசாதாரணமான சூழ்நிலைகளைப் பரிசீலனையில் கொண்டு, நாணயச் சபை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கும் பின்வரும் பணிப்புரைகளை விடுத்தது.

1. அதிகாரமளித்தல்

1.1 வங்கித்தொழில் சட்டத்தின் 21(1)ஆம் பிரிவின் நியதிகளில், ஒவ்வொரு வர்த்தக வங்கியும் அத்தகைய வங்கியினால் கொண்டு நடத்தப்படுகின்ற வியாபாரத்தின் தன்மையினை கவனத்திற்கொண்டு நாணயச் சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையானது நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்ட சதவீதத்திற்கு உட்பட்டு 20 சதவீதத்திற்குக் குறையாமலும் 40 சதவீதத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

1.2 வங்கித்தொழில் சட்டத்தின் 46(1)ஆம் பிரிவின் நியதிகளில், வங்கித்தொழில் முறைமைகளின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும்பொருட்டு, அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் அத்தகைய வங்கியின் அல்லது வங்கிகளினது வியாபாரத்தின் எந்தவொரு அம்சமும் எவ்வாறு கொண்டு நடத்தப்படவேண்டும் என்பது தொடர்பில் பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

1.3 வங்கித்தொழில் சட்டத்தின் 76ஒ(1)ஆம் பிரிவின் நியதிகளில், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கியின் ஏதேனும் வகைக்கும் அத்தகைய வங்கியின் வியாபாரத்தின் எந்தவொரு அம்சமும் எவ்வாறு கொண்டு நடத்தப்படவேண்டும் என்பது தொடர்பில் பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

2. நியதி திரவச்சொத்துக்களின் விகிதம்

2.1 2022 திசெம்பரிலிருந்து ஆரம்பமாகின்ற விதத்தில், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மொத்த சீராக்கப்பட்ட பொறுப்புக்களில் 20 சதவீதத்திற்கும் குறையாத தொகையொன்றினை திரவச் சொத்ததாக, ஒட்டுமொத்த வங்கிக்குமாக திரட்டிய அடிப்படையில், மறுஅறிவித்தல் வரை பேணவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டன.

2.2 2003 சனவரி 21, 2003 ஒத்தோபர் 08 மற்றும் 2004 மே 20ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவு நியதி திரவச்சொத்து விகிதத்தினை தனித்தனியாக பேணவேண்டும் என்ற தேவைப்பாடு தற்காலிகமாக பிற்போடப்பட்டிருக்கிறது.

2.3 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவிற்கும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவிற்கும் தனித்தனியாக நியதி திரவச்சொத்து விகிதத்தினை கண்காணிப்பு நோக்கங்களுக்காக, வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு தொடர்ந்தும் அறிக்கையிடுதல் வேண்டும்.

3. திரவத்தன்மை பாதுகாப்பு விகிதம் மற்றும் தேறிய உறுதித்தன்மை நிதியிடல் விகிதம்

3.1 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளும், குறுங்கால வழிமுறையொன்றாக உரிமம்பெற்ற வங்கிகளினதும் திரவத்தன்மை தோற்றப்பாட்டினைச் சீராக்கிக்கொள்வதற்கு மேலும் கால அவகாசத்தினை அனுமதிக்கின்ற விதத்தில், அதிகரித்த மேற்பார்வை மற்றும் அடிக்கடி அறிக்கையிடல் தேவைப்பாட்டுடன் திரவத்தன்மை பாதுகாப்பு விகிதத்தினையும் தேறிய உறுதித்தன்மை நிதியியல் விகிதத்தினையும் 2022.12.31 வரை 90 சதவீதத்திற்கும் குறையாத மட்டமொன்றில் பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டன.

முனைவர் பி. நந்தலால் வீரசிங்க
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தீர்மானம் 2022 டிசம்பர் 05

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணம்

திருத்தப்பட்டவாறான, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 8 மற்றும் 76ஈ(6)ஆம் பிரிவுகளின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 8(1) மற்றும் 76ஈ(6)ஆம் பிரிவுகளின் நியதிகளில், நாணயச் சபை, ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கியும் கீழேயுள்ள அட்டவணையில்

எடுத்துக்காட்டப்பட்டவாறு 2022 இறுதியில் உள்ளவாறு அத்தகைய வங்கியின் மொத்தச் சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு 2023 கலண்டர் ஆண்டுடன் தொடர்பான உரிமக் கட்டணத்தினை 2023 சனவரி 31ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டுமெனத் தீர்மானித்திருக்கிறது.

2023ஆம் ஆண்டிற்கான உரிமக் கட்டணம்

2022 இறுதியிலுள்ளவாறு மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்.)	உரிமக் கட்டணம் (ரூ.மில்.)
2,000 இற்கு மேல்	38.0
1,000 இற்கு மேல் 2,000 வரை	35.0
500 இற்கு மேல் 1,000 வரை	28.5
200 இற்கு மேல் 500 வரை	25.0
125 இற்கு மேல் 200 வரை	18.5
75 இற்கு மேல் 125 வரை	12.5
25 இலிருந்து 75 வரை	6.5
25 இற்குக் குறைவான	3.3

முனைவர் பி. நந்தலால் வீரசிங்க
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

2263/41ஆம் இலக்க - 2022ஆம் ஆண்டு சனவரி மாதம் 21ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(ஆணையத்தால் வெளியிப்பட்டது)
பகுதி I: தொகுதி (I) - பொது
இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்
1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ)ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விதிகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

இலங்கை மத்திய வங்கி
கொழும்பு,
2022 சனவரி 21

சுற்றுலாவிடுதிப் பணிகளை வழங்குவோரினால் இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணியினை ஏற்றுக்கொள்ளுதல்

1. இவ்விதிகள் 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க "சுற்றுலாவிடுதிப் பணிகளை வழங்குவோரினால் இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணியினை ஏற்றுக்கொள்ளுதல்" விதி என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும் என்பதுடன் 2022 சனவரி 21 இலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

2. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 10(இ)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் ஒன்றிணைந்து வாசிக்கப்படும் 68ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய செயற்பட்டு, சுற்றுலாவிடுதிப் பணிகளை வழங்குவோரினால் இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணியினை ஏற்றுக்கொள்வது தொடர்பில் விதிகளை விடுக்கின்றது.

3. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்து கொண்டுள்ள, அத்துடன் அதனால் உரிமம் வழங்கப்பட்டுள்ள சுற்றுலாவிடுதிப் பணி வழங்குவோர் இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கு வழங்கிய பணிகள் தொடர்பில், இவ்விதிகள் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியில் மாத்திரம் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

4. மேலேயுள்ள விதி 3இன் நியதிகளில் அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயத்தினை அத்தகைய வெளிநாட்டு நாணயம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து மூன்று வேலைநாட்களுக்குள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றிற்கு அல்லது அனுமதிக்கப்பட்ட உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கியொன்றிற்கு விற்றுவிட வேண்டும் அல்லது சுற்றுலாவிடுதிப் பணிகளை வழங்குவோரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

5. மேலேயுள்ள விதி 3இன் நியதிகளில் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளினூடாகச் செய்யப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளும் சுற்றுலாவிடுதி பணி வழங்குவோரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு உடனடியாக வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

6. மேலேயுள்ள விதி 3இற்கு எவ்விதபங்கமுமின்றி, இலங்கைக்கு வெளியே வதியும் ஆள் இலங்கைக்குள் வெளிநாட்டு நாணயத்தினைக் கொண்டு வந்தமைக்கும் அதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வணிகரூடாக மாற்றிக்கொண்டமைக்கும் மூல ஆவணச்சான்றுகளை அத்தகைய ஆள் சமர்ப்பிப்பதற்குட்பட்டு, இலங்கைக்கு வெளியே வதியும் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட பணிகள் தொடர்பில் இலங்கை ரூபாவில் செய்யப்படும் கொடுப்பனவுகளைச் சுற்றுலாவிடுதிப் பணிகளை வழங்குவோர் ஏற்றுக்கொள்ளலாம்.

7. சுற்றுலாவிடுதிப் பணி வழங்குபவர், இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளினால் அவருக்கு வழங்கப்பட்ட மூல ஆவணங்களில் புறக்குறிப்பீட்டினைச் செய்து அத்தகைய ஆவணச்சான்றின் பிரதியை அத்தகைய இலங்கை ரூபாவினை ஏற்றுக்கொண்ட திகதியிலிருந்து ஆறு ஆண்டு காலப்பகுதிக்கு அல்லது மற்றைய பதிவேடுகளைப் பேண வேண்டுமென சட்டத்தினால் விதிக்கப்படும் ஏற்புடைத்தான காலப்பகுதிவரை அதனைப் பேணிவருதல் வேண்டும்.

8. அனைத்து சுற்றுலாவிடுதிப் பணி வழங்குவோரும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் அத்துடன்/ அல்லது இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரினால் காலத்திற்குக் காலம் கேட்டுக்கொள்ளப்படுகின்றவாறான அறிக்கைகளையும் அத்துடன்/ அல்லது கூற்றுக்களையும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கான பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

9. இவ்விதிகளின் நோக்கத்திற்காக, பேணப்படும் பதிவேடுகளை பரிசோதிப்பதற்கும் அல்லது பரீட்சிப்பதற்கும் இவ்விதிகளுடன் முழுமையாகவும் கண்டிப்பாகவும் இணங்குவதனை உறுதிசெய்வதில் அத்தகைய சுற்றுலாவிடுதி பணி வழங்குவோரினால் எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் மீளாய்வு செய்வதற்கும் விடயத்திற்கேற்றவாறு ஆளுநர் அல்லது துணை ஆளுநரால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு தங்குதடையற்ற அணுகுவழிகளை வழங்குதலும் வேண்டும்.

10. எவரேனும் சுற்றுலாவிடுதி பணி வழங்குவோரினால் ஏதேனும் இணங்கிக்கொள்ளாமை தொடர்பில் அல்லது இவ்விதிகளை மீறுகின்றமை தொடர்பில் அவற்றிற்கெதிராக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான உரிமையினை இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளர் கொண்டிருத்தல் வேண்டும்.

11. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக

"அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12அம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ள அதேகருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை" என்பது, கொடுகடன் அட்டை, பற்று அட்டை மற்றும் பெறுமதி சேமிப்பு அட்டை என்பன உட்பட பயன்படுத்துநர் வரவு, பற்று அல்லது வேறு ஏதேனும் வடிவங்களில் பெறுமதிகளை மாற்றல் செய்வதனை இயலுமைப்படுத்துகின்ற ஒரு அட்டை அல்லது சாதனம் எனப் பொருள்படுகின்றதுடன் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் தொடர்பில் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகின்ற நோக்கங்களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் கொடுக்கல்வாங்கல் விபரங்களை அடையாளம் காண முடிகின்றதும் எனப் பொருள்படும்.

"வெளிநாட்டுச் செலாவணி" என்பது, அத்தகைய கொடுப்பனவுகள் வெளிநாட்டு நாணயத்தில் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கரைகடந்த வங்கித்தொழில் கட்டளைகளின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் அடையாளம் காணப்பட்டவாறான குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியில் செய்யப்பட்டிருக்குமிடத்து 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

"சுற்றுலாவிடுதி பணி வழங்குவோர்" என்பது, சுற்றுலாவிடுதிகள், வில்லாக்கள், பங்காளாக்கள், விருந்தினர் இல்லங்கள், வீடுகளில் தங்குதல் அல்லது இவற்றுடன் தொடர்பான வேறு ஏதேனும் நிறுவனங்களை உள்ளடக்கிய சுற்றுலா தொழில்முயற்சிகளையும்

2005ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க சுற்றுலாச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு செய்யப்பட்டு அதனால் உரிமம் வழங்கப்பட்ட சுற்றுலாப் பணிகளையும் உள்ளடக்குவது எனப் பொருள்படல் வேண்டும்.

"இலங்கைக்கு வெளியே வதியும் ஆள்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள்

தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/38ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணிவருதல்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவு என்பனவற்றின் நியதிகளில், தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (பணிப்புரைகள்) தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2021.03.18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்கப் பணிப்புரைகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

1. பணிப்புரைகளின் **பந்தி 1.4இல்** குறித்துரைக்கப்பட்ட **அனுமதிக்கப்பட்ட பற்றுக்களுக்குப்** புறம்பாகப் பின்வரும் விடயம் உள்ளடக்கப்பட்டு இத்தால் **(ந)** ஆக வாசிக்கப்படுதல் வேண்டும்.

   (ந) கணக்கு வைத்திருப்பவர் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையராக இருக்குமிடத்து (புலம்பெயர்ந்தவர் தவிர) உள்நாட்டுக் கல்வி நிறுவனங்களின் மாணவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற உடனடிக் குடும்ப உறுப்பினர்கள் தொடர்பில் பாடநெறிக்கான அல்லது கல்விக் கட்டணக் கொடுப்பனவாக அத்தகைய உள்நாட்டுக் கல்வி நிறுவனங்களின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்குச் செய்யப்படுகின்ற மாற்றல்கள்.

பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
2022 பெப்புருவரி 24

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள்

வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில்அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/38ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணிவருதல்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவு என்பனவற்றின் நியதிகளில் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (பணிப்புரைகள்) தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2021.03.18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்கப் பணிப்புரைகள் இத்தால் திருத்தப்பட்டு பின்வருமாறு வாசிக்கப்படுதலாதல் வேண்டும்.

1.1 பணிப்புரைகளின் **பந்தி 1.3இல்** குறித்துரைக்கப்பட்ட **அனுமதிக்கப்பட்ட வரவுகளுக்குப்** புறம்பாகப் பின்வரும் விடயம் உள்ளடக்கப்பட்டு இத்தால் **(ல)** ஆக வாசிக்கப்படுதலாதல் வேண்டும்.

   (ல) கணக்கு வைத்திருப்பவர் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையராக இருக்குமிடத்து (புலம்பெயர்ந்தவர் தவிர) உள்நாட்டுக் கல்வி நிறுவனங்களின் மாணவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற உடனடிக் குடும்ப உறுப்பினர்கள் தொடர்பில் பாடநெறிக்கான அல்லது கல்விக் கட்டணக் கொடுப்பனவாக அத்தகைய உள்நாட்டுக் கல்வி நிறுவனங்களின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்குச் செய்யப்படுகின்ற மாற்றல்கள்.

பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
2022 பெப்புருவரி 24

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

2270/66ஆம் இலக்க - 2022ஆம் ஆண்டு மார்சு மாதம் 11ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(ஆணையத்தால் வெளியிடப்பட்டது)

பகுதி I: தொகுதி (I) - பொது

மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ)ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,
நாணயச் சபையின் தலைவரும்,
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

இலங்கை மத்திய வங்கி
கொழும்பு
2022, மார்சு 11.

ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்

1. இவ்விதிகள் "2022ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள்" என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

2. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 10(இ) பிரிவின் ஏற்பாடுகளுடன் ஒன்றிணைத்து வாசிக்கப்படும் 68ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய செயற்பட்டு, இலங்கையினுள் ஏற்றுமதிப் பெறுகைகளின் கிடைப்பனவு மற்றும் அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கை ரூபாவாக மாற்றுதல் தொடர்பில் இத்தால் விதிகளை வழங்குகின்றது.

3. **பொருட்கள் அத்துடன்/அல்லது பணிகளின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும்**

   (i) இலங்கைக்கு வெளியில் ஏற்றுமதி செய்யப்படும் எல்லாப் பொருட்கள் அல்லது வழங்கப்படும் பணிகள் தொடர்பில், விடயத்திற்கேற்றவாறு, கப்பலேற்றும் அல்லது பணிகளை வழங்கும் திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களினுள் ஏற்றுமதிப் பெறுகைகளை கட்டாயமாக இலங்கையில் பெறுதல் வேண்டும் மற்றும்,

   (ii) கிடைக்கப்பெறுகின்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் எல்லா மற்றும் ஒவ்வொரு கிடைப்பனவின்/ கிடைப்பனவுகளின் மீதும், பொருட்கள் அத்துடன்/அல்லது பணிகளின் ஒவ்வொரு ஏற்றுமதி தொடர்பிலும் ஒவ்வொரு ஏற்றுமதிப் பெறுகைகள் மீதுமான அனைத்து தொடர்புடைய ஆவண ரீதியான சான்றினையும், இலங்கையில் அத்தகைய பெறுகைகளை பெறுகின்ற உரிய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கு அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிக்கு (இதனகத்துப்பின்னர் "உரிமம்பெற்ற வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தாமதமின்றி உடனடியாக சமர்ப்பித்தல் வேண்டும்.

4. மேலே 3ஆம் விதியின் நியதிகளின் பிரகாரம், இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெறுகின்ற பொருட்கள் அத்துடன்/அல்லது பணிகளின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும், கீழே குறிப்பிடப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் மாத்திரம் அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தி இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியதை தொடர்ந்துவருகின்ற மாதத்தின் ஏழாவது (07வது) நாளன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை ரூபாவாக கட்டாயமாக மாற்றுதல் வேண்டும்.

   (i) குறித்த பொருட்கள் அத்துடன்/அல்லது பணிகள் ஏற்றுமதியுடன் தொடர்புடைய அதிலுள்ள ஒரு மாத கடமைப் பொறுப்புக்கள் உள்ளடங்கலாக நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிமுக பணவனுப்பல்கள்

   (ii) பொருட்கள் அத்துடன்/அல்லது பணிகளின் ஏற்றுமதியுடன் தொடர்பான பயண நோக்கங்களிற்காக வெளிநாட்டு நாணயத் தாள்களின் எடுப்பனவு அல்லது நிதியங்களின் மாற்றல்

   (iii) அத்தகைய வெளிநாட்டு நாணயக் கடன் மற்றும் வசதி, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அல்லது திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளின் நியதிகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட கடன்பெறுகையொன்றாக இருக்கின்றவிடத்து ஒருமாத கடன் கடமைப்பொறுப்புக்கள் உள்ளடங்கலாக பொருட்கள் அத்துடன்/அல்லது பணிகளின் ஏற்றுமதியாளர்களினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களினதும் வசதிகளினதும் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் அத்துடன் மீள்கொடுப்பனவு

   (iv) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு வதிவற்ற முதலீட்டாளர்களுக்கு பிரகடனம் செய்யப்பட்ட பங்கிலாபங்களின் கொடுப்பனவு அத்துடன்/அல்லது வெளிநாட்டு

தேசத்தவர்களாக அல்லது இரட்டை பிரசாவுரிமைகளாகவுள்ள புலம்பெயர்ந்த ஊழியர்களுக்கான சம்பளங்களின் கொடுப்பனவுகள்

(v) அவ்வாறு கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் பத்து சதவீதம் (10%) வரை வெளிநாட்டு நாணயத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடுகளைச் செய்வது தொடர்பிலான கொடுப்பனவுகள் அத்துடன்

(vi) குறிப்பிட்ட பொருட்கள் அத்துடன்/அல்லது பணிகளின் ஏற்றுமதியுடன் தொடர்பான கொள்வனவிற்காக 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட உள்நாட்டு வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகள்.

5. மேலே 4ஆம் விதியில் குறிப்பிடப்பட்ட அத்தகைய மாற்றல் திகதியானது, மேலே 3(i)ஆம் விதியினால் வேண்டப்பட்டவாறு ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கைக்குக் கிடைத்திருக்க வேண்டிய முந்திய திகதியினைவிட பிந்திய திகதியொன்றாக இருத்தலாகாது (அதாவது கப்பலேற்றல் அல்லது பணிகள் வழங்குதல் திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களுக்குப் பிந்தாது).

6. மேலே விதியின் 4(vi)இன் நியதிகளுக்கமைவாக ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவினைப் பெறுகின்ற ஒவ்வொரு உள்நாட்டு வழங்குனருக்கும், மேலே விதி 4இன் (i)இலிருந்து (v)வரையான நியதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் மாத்திரம் அதனை பயன்படுத்தி அத்தகைய கிடைப்பனவுகளின் எஞ்சியவற்றை தொடர்ந்துவரும் மாதத்தின் ஏழாவது (7ஆவது) நாளன்று அல்லது அதற்கு முன்னர் கட்டாயமாக இலங்கை ரூபாவாக மாற்றுதல் வேண்டும்.

7. நாணயச் சபையானது அதன் தற்றுணிபில், விடயத்திற்கு விடயம் எனும் அடிப்படையில், திருத்தப்பட்டவாறான 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க உபாய அபிவிருத்தி செயற்றிட்ட சட்டத்தின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடனான "உபாய அபிவிருத்தி செயற்றிட்டங்கள்" ஆக பதிவுசெய்யப்பட்டுள்ள பொருட்கள் அத்துடன்/அல்லது பணிகளின் ஏற்றுமதியாளர்கள் தொடர்பில் மாத்திரம், இவ்விதிகளின் கீழ் ஏதேனும் அல்லது அனைத்து தேவைப்பாடுகளிலிருந்தும் விலக்களிப்பினை வழங்கலாம்.

8. மேலே விதி 3இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளின் கிடைப்பனவுகளையும் மேலே 4 மற்றும் 6ஆம் விதிகளில் வேண்டப்பட்டவாறு அத்தகைய பெறுகைகளின் மாற்றலையும் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் கண்டிப்பாகவும் கட்டாயமாகவும் கண்காணிப்பதற்கு வேண்டப்படுதல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பிலான அல்லது அதனுடன் இணைந்த எல்லா அவசியமான ஆவண ரீதியான சான்றினையும் எல்லா நேரங்களிலும் பேணுதலும் வேண்டும்.

9. காலத்திற்கு காலம் வேண்டப்படக்கூடியவாறு அறிக்கைகளை அத்துடன்/அல்லது கூற்றுக்களை இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிப் பணிப்பாளருக்கு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் மேலே 8ஆம் விதியின் கீழ் பேணப்படுகின்ற பதிவுகளைப் பரிசோதிப்பதற்கு அல்லது பரீட்சிப்பதற்கும் இவ்விதிகளுடன் முழுமையாகவும் கண்டிப்பாகவும் இணங்குவதை உறுதிசெய்வதில் அத்தகைய உரிமம்பெற்ற வங்கிகளினால் எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் மீளாய்வதற்கும், விடயத்திற்கு ஏற்றவாறு ஆளுநர் அல்லது பிரதி ஆளுநரால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு தங்குதடையற்ற பெறுவழியினை வழங்குதல் வேண்டும்.

10. இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி திணைக்களப் பணிப்பாளர், இவ்விதிகளின் நியதிகளுக்கமைய பொருட்கள் அத்துடன்/அல்லது பணிகள் ஏற்றுமதி தொடர்பில் எவரேனும் ஏற்றுமதியாளர்/உள்நாட்டு வழங்குனர் அல்லது உரிமம்பெற்ற வங்கி இவ்விதிகளுடன் இணங்காமைக்கு அல்லது இவ்விதிகளின் மீறுகைக்கெதிராக நடவடிக்கையினைத் தொடங்குவதற்கு உரிமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11. இவ்விதிகள் செயற்பாட்டுக்கு வரும் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் அத்துடன்/அல்லது பணிகளின் எல்லா மற்றும் ஒவ்வொரு ஏற்றுமதி தொடர்பிலும் இவ்விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பொருட்களின் கப்பலேற்றல் அல்லது பணிகள் வழங்கல் திகதியிலிருந்து நூற்றியெண்பதாவது (180வது) நாளானது இவ்விதிகள் வலுவுக்கு வந்தபின்னர் ஏதேனும் திகதியன்று வருகின்றவிடத்து, இவ்விதிகள் செயற்பாட்டுக்கு வருகின்ற திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் அத்துடன்/அல்லது பணிகள் ஏற்றுமதிக்கு ஏற்புடையதாதலும் வேண்டும்.

12. ஏதேனும் சந்தேகத்தைத் தவிர்ப்பதற்கும் இவ்விதிகளின் நோக்கங்களுக்காகவும் "ஏற்றுமதிப் பெறுகைகள்", என்பது திருத்தப்பட்டவாறான 2021 பெப்புருவரி 03ஆம் திகதியிடப்பட்ட 2213/37ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (நானாவித மூலதனக் கொடுக்கல்வாங்கல் வகுப்புகள்) ஒழுங்குவிதிகளின் கீழும் நியதிகளுக்கமைவாகவும் இலங்கைக்கு அனுப்பப்படுவதற்கு வேண்டப்பட்ட அத்தகைய பெறுகைகள், ஏற்றுமதிப் பட்டியல்கள் கொள்வனவுகளின் பெறுகைகள் (பட்டியல் கழிவீடுகள்), உள்நாட்டு பணிகள் வழங்குனர்கள்/உள்நாட்டு தயாரிப்பாளர்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுக்காக மற்றும்/அல்லது பணிகளுக்காக உள்நாட்டு முகவர்கள்/இடையீட்டாளர்கள் ஊடாக பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆளொருவருக்கு வழங்கப்பட்ட தொழில்சார், வாழ்க்கைத்தொழில், தொழில் அல்லது வியாபாரப் பணிகள் உள்ளடங்கலாக வழங்கப்படும் பணிகளுக்காக இலங்கையில் வதிகின்ற ஆளொருவருக்கு வெளிநாட்டுச் செலாவணியில் கிடைக்கப்பெற்ற கொடுப்பனவுகள் ஆகியவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

13. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக, "உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்" மற்றும் "உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்"

என்ற சொற்பதங்கள், திருத்தப்பட்டவாறான, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக அவற்றிற்கு குறித்தொதுக்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

14. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக "நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்" என்ற சொற்பதம் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

15. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக "பயண நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயத் தாள்களின் மீளெடுப்பு அல்லது நிதியங்களின் மாற்றல்" என்ற சொற்பதம் அது சார்பில் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளுக்கமைவானதாக இருத்தல் வேண்டும்.

16. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்டு, 2021 ஒத்தோபர் 28ஆம் திகதியிடப்பட்ட 2251/42ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள் இத்தால் நீக்கப்படுகின்றது.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகள்

தாய் பாத்தினை குறித்துரைத்தல் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/34, 2213/35, 2213/36, 2213/37 மற்றும் 2213/38ஆம் இலக்கங்களைக் கொண்ட அரச வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கையில் வதியும் ஆளொருவரினால் இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்படுகின்ற மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள், 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரினால் இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள், 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (புலம்பெயர்ந்தவர்களினால் அனுப்பப்படும் நிதியங்கள்) ஒழுங்குவிதிகள், 2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (பல்வேறு வகையான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணிவருதல்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவு என்பனவற்றின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு பின்வரும் விடயம் பற்றி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளின் நோக்கங்களுக்காகக் **குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள் 'தாய் பாத்'** இனையும் உள்ளடக்குதல் வேண்டும்.

பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
2022 மார்சு 11

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

2273/06ஆம் இலக்க - 2022ஆம் ஆண்டு மார்சு மாதம் 28ஆந் திகதி திங்கட்கிழமை
(ஆணையத்தால் வெளியிடப்பட்டது)

பகுதி I: தொகுதி (I) - பொது
அரசாங்க அறிவித்தல்கள்
2017 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டம்

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்:

1. 2020, ஏப்பிறல் 08 ஆந் திகதியிடப்பட்ட 2170/4ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 2020, நவெம்பர் 17ஆந் திகதியிடப்பட்ட 2202/7ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2021, ஏப்பிறல் 07 ஆந் திகதியிடப்பட்ட 2222/37ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்டு வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:

   (அ) பந்தி 1இல் காணப்படுகின்ற "இருபத்து நான்கு மாதங்கள்" என்ற சொற்கள் இத்தால் நீக்கப்பட்டு "முப்பத்தியாறு மாதங்கள்" எனப் பதிலீடு செய்யப்படுகின்றது.

2. 2020, யூலை 01ஆந் திகதியிடப்பட்ட 2182/32ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 2020, நவெம்பர் 17ஆந் திகதியிடப்பட்ட 2202/7ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2021, ஏப்பிறல் 07ஆந் திகதியிடப்பட்ட 2222/37ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்டு வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:

(அ) பந்தி 1இல் மற்றும் பந்தி 2இல் காணப்படுகின்ற "இருபத்துநான்கு மாதங்கள்" என்ற சொற்கள் இத்தால் நீக்கப்பட்டு "முப்பத்தியாறு மாதங்கள்" எனப் பதிலீடு செய்யப்படுகின்றது.

பசில் ராஜபக்ஷ,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
2022, மார்சு 28.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கப் பணிப்புரைகள்

சிறப்பு வைப்புக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2020 ஏப்பிறல் 08ஆம் திகதியிடப்பட்ட 2170/4ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள், அதனைத் தொடர்ந்து 2020 யூலை 01ஆம் திகதியிடப்பட்ட 2182/32ஆம் இலக்கம், 2020 ஒத்தோபர் 06ஆம் திகதியிடப்பட்ட 2196/22ஆம் இலக்கம், 2020 நவெம்பர் 17ஆம் திகதியிடப்பட்ட 2202/7ஆம் இலக்கம், 2021 ஏப்பிறல் 07ஆம் திகதியிடப்பட்ட 2222/37ஆம் இலக்கம், 2021 யூலை 30ஆம் திகதியிடப்பட்ட 2234/19ஆம் இலக்கம் மற்றும் 2022 மார்சு 28ஆம் திகதியிடப்பட்ட 2273/06ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவு என்பனவற்றின் நியதிகளில் 2021ஆம் ஆண்டின் 25ஆம் இலக்கப் பணிப்புரைகள் பின்வருமாறு **திருத்தப்படுகின்றன.**

2. 2021ஆம் ஆண்டின் 25ஆம் இலக்கப் பணிப்புரைகள்

2.1 பந்தி 3(அ) மற்றும் 7(ஆ)இல் காணப்படுகின்ற "இருபத்து நான்கு" என்ற சொல் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக "முப்பத்தியாறு" என்ற சொல் இடப்படுகிறது.

பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
2022 ஏப்பிறல் 07

இலங்கை சனநாய சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

2282/27ஆம் இலக்க - 2022ஆம் ஆண்டு யூன் மாதம் 01ஆந் திகதி புதன்கிழமை

(ஆணையத்தால் வெளியிடப்பட்டது)

பகுதி I: தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

பிரிவு 4 இன் கீழான கட்டளை

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் 2ஆம் உப பிரிவின் பந்தி (இ) இனால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகிய நான் 2021, மார்சு 26ஆந் திகதியிடபபட்ட 2220/69 இலக்கமுடைய வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட "பிரிவு 4இன் கீழான கட்டளை" யினை இரத்துச் செய்கின்றேன்.

ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

கொழும்பு,
2022, மே 31.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

2282/59ஆம் இலக்க - 2022ஆம் ஆண்டு யூன் மாதம் 03ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(ஆணையத்தால் வெளியிடப்பட்டது)

பகுதி I: தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்
2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

கொழும்பு
2022, மே 31.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (கொழும்பு துறைமுக நகரில் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனும் ஆளுக்கு அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களுக்கு முழுமையாகச் சொந்தமான இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட/ கூட்டிணைக்கப்பட்ட (அதாவது முதலீட்டாளர்) கூட்டு தொழில்முயற்சிக்கு, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிக்குட்பட்டு, கொழும்பு துறைமுக நகரில் நிதிகளை முதலீடு செய்வதற்காக வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல்களிலிருந்து கொழும்பு துறைமுக நகரில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

3. கொழும்பு துறைமுக நகரிலுள்ள முதலீடுகளுக்கு பெறுகைகளை வழிப்படுத்துவதற்கும் வதிவற்ற முதலீட்டாளர்களுக்கு செலுத்தப்படத்தக்க அத்தகைய முதலீடுகளின் வருமானத்தினை அல்லது மூலதனப் பெறுகைகளைத் திருப்பி அனுப்புவதற்குமாக இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்குட்பட்டு, முதலீட்டாளர் இலங்கையிலுள்ள அதிகாரம்பெற்ற வணிகர்களுடன் "கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டாளர்" கணக்கினைத் திறக்கலாம்.

4. 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், கொழும்பு துறைமுக நகரில் நிறுவப்பட்டுள்ள முதலீட்டினைப் பெறுபவர், இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்குட்பட்டு, இலங்கையிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் திறந்திருக்கும் "கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டாளர்" கணக்கிற்கு வரவு வைப்பதற்காக முதலீட்டுப் பெறுகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

5. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக

"அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"கூட்டுச் தொழில்முயற்சிகள்" என்பது, வதிகின்ற அல்லது வதிவற்ற பங்குடைமையாளருக்குச் சொந்தமான 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கொழும்பு துறைமுக நகரத்திலுள்ள முதலீட்டு நோக்கத்திற்காக வதியும் மற்றும் வதிவற்ற ஆட்களுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் கூட்டுத் தொழில்முயற்சிகள் எனப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

2282/60ஆம் இலக்க - 2022ஆம் ஆண்டு யூன் மாதம் 03ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(ஆணையத்தால் வெளியிடப்பட்டது)

பகுதி I: தொகுதி (I) - பொது
அரசாங்க அறிவித்தல்கள்

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 5, 7 மற்றும் 8ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

கொழும்பு
2022, மே 31.

ஒழுங்குவிதிகள்

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட, 2021ஆம் ஆண்டு பெப்புருவரி 03 ஆந் திகதியிடப்பட்ட 2213/38ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கங்களுக்காக கணக்குகளைத் திறந்து பேணி வருதல்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:

பின்வருவது ஒழுங்குவிதிகளின் அட்டவணையின் பந்தி 2இன் துணைப்பந்தி (3)ஆக உட்புகுத்தப்படுகிறது.

3. "2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் கொழும்பு துறைமுக நகர அதிகாரசபையின் பிரதேசத்திலும் அதிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள அதிகாரம்பெற்ற ஆளொருவரிடமிருந்து வெளிநாட்டுச் செலாவணியினை ஈட்டுகின்ற இலங்கையில் வதியும் பின்வரும் ஆட்கள்-

(அ) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் ஊழியரொருவர்.
(ஆ) பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குகின்ற நோக்கத்திற்காக, அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருடன் வியாபாரங்களில் ஈடுபடுகின்ற ஆளொருவர்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

2284/34ஆம் இலக்க - 2022ஆம் ஆண்டு யூன் மாதம் 16ஆந் திகதி வியாழக்கிழமை
(ஆணையத்தால் வெளியிடப்பட்டது)

அரசாங்க அறிவித்தல்கள்

பகுதி I: தொகுதி (I) - பொது

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

பிரிவு 8இன் கீழான கட்டளை

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) 8ஆம் பிரிவின் (1)ஆம் உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகள் மூலம் எனக்குரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம், 2213/39ஆம் இலக்க 2021, பெப்புருவரி 03ஆந் திகதியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேட அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறான சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கட்டளையை (கட்டளை) பின்வருமாறு திருத்துகின்றேன்

I. அட்டவணையின் IIஆம் பகுதியின் பந்தி 1 இன் (1)ஆம் உப பந்தியிலும் பந்தி 2இன் (2) ஆம் உப பந்தியின் (ஆ) விடயத்திலும் தோன்றுகின்ற "ஐ.அ.டொலர் 15,000" என்ற சொற்கள் இத்தால் நீக்கப்பட்டு **"ஐ.அ.டொலர் 10,000"** என்ற சொற்கள் மூலம் பதிலீடு செய்யப்படுகின்றன.

II. பின்வருவன உட்சேர்க்கப்பட்டு இக்கட்டளைக்கான அட்டவணையின் **பகுதி III** ஆக வாசிக்கப்படும்.

(1) இதிலுள்ள அட்டவணையின் பகுதி II இன் 1ஆம் மற்றும் 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதி மற்றும் பெறுமதி மட்டுப்பாடுகள் எவ்வாறிருப்பினும், சட்ட ரீதியாகப் பெற்றுக்கொள்ளப்பட்டு அவரது உடமையில் அவ்வாறு வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தாள்களை வைத்திருக்கின்ற இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற எவரேனும் ஆள், **இக்கட்டளை நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து பதிநான்கு (14) வேலை நாட்களைக் கொண்ட பொதுமன்னிப்பு மற்றும் அதற்கு பிந்தாத காலப்பகுதியினுள்,** அத்தகைய வெளிநாட்டு நாணயத்தின் சட்ட ரீதியான பெறுகையுடன் தொடர்புடைய அவசியமான சான்றுப்படுத்தலை உரிய அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு சமர்ப்பிப்பதன் மீது,

அ. அத்தகைய ஆளின் பெயரில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் திறந்து பேணப்படுகின்ற தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு, விடயத்திற்கு ஏற்றவாறு, அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை வைப்புச்செய்யலாம் அல்லது

ஆ. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவருக்கு அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை விற்பனைசெய்யலாம்.

(2) மேலே II (1) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு அல்லாமல் வேறுவிதமாக பெற்று அவரது உடமையில் வெளிநாட்டு நாணயத் தாள்களை வைத்திருக்கின்ற இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற எவரேனும் ஆள் இக்கட்டளை **நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து பதிநான்கு (14) வேலை நாட்களைக் கொண்ட பொதுமன்னிப்பு மற்றும் அதற்கு பிந்தாத காலப்பகுதியினுள்,** அவ்வாறு வைத்திருக்கும் அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு விற்பனைசெய்வதற்கு கட்டாயமாக வேண்டப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின் பிரிவு 11 இன் ஏற்பாடுகளின் நியதிகளுக்கு அமைவாக இக்கட்டளையில் எடுத்துரைக்கப்பட்டவாறு வெளிநாட்டுச் செலாவணியை வைத்திருக்கும் காலப்பகுதிக்கு அப்பால் அவரது உடமையில் வெளிநாட்டு நாணயத் தாள்களை வைத்திருக்கின்ற அத்தகைய ஆள்கள் மீதும் இக்கட்டளையின் ஏதேனும் மீறுகைக்கு அல்லது எல்லை மீறுகைக்கு எதிராக நடவடிக்கை முறைகளைத் தொடுப்பதற்கு இலங்கை மத்திய வங்கி உரிமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2022, யூன் 13.

இக்கட்டளையின் நோக்கத்திற்காக -

"சட்டம்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்பது பொருளாகும்

"அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறு அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

"ஆள்" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறு அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

"இலங்கையில் வதிகின்ற" என்பது, திருத்தப்பட்டவாறான 2213/40ஆம் இலக்க 2021.02.03ஆந் திகதியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறு 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 31இன் கீழ் வழங்கப்பட்ட கட்டளையின் நியதிகளுக்கமைவாக அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகள்

வெளிநாட்டு நாணயங்களை வாங்குதல், விற்றல் மற்றும் பரிமாற்றுதல் தொடர்பில் நாணய மாற்றல் வியாபாரத்தில் தனியே ஈடுபடுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 4(2) உடன் சேர்த்து வாசிக்கப்படுவதான பிரிவு 9இன் நியதிகளில், வெளிநாட்டு நாணயங்களை வாங்கல், விற்றல் மற்றும் பரிமாற்றுதல் தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு

விடுக்கப்பட்ட 2020.12.15ஆம் திகதியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரைகள் (பணிப்புரைகள்) பின்வருமாறு வாசிக்கப்படும் விதத்தில் இத்தால் திருத்தப்படுகின்றன.

பணிப்புரைகளின் **பந்தி 2இல்** குறித்துரைக்கப்பட்ட **பொதுவான நிபந்தனைகளுக்குப்** புறம்பாக, பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டு (2.14) (2.15) மற்றும் (2.16) என வாசிக்கப்படுதலாதல் வேண்டும்.

(2.14) வெளிநாட்டு நாணயங்களை வைப்புச் செய்வதற்காக நாணய மாற்றுநர் எவருடன் கணக்குகளைப் பேணுகின்றாரோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் நாணய மாற்றுநருக்கு வழங்கப்பட்ட செலாவணி வீதத்திலும் பார்க்க உயர்ந்த செலாவணி வீதங்களை நாணய மாற்றுநர்கள் வாடிக்கையாளர்களுக்கு **வழங்கக்கூடாது.**

(2.15) ஒவ்வொரு நாணய மாற்றுநரும் பார்வையாளர்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட தொலைக்காட்சி (சிசிரிவி) முறைமையின் தொடர்ச்சியானதும் தடங்கலற்றதுமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தும் விதத்தில் தேவையான முன்னெச்சரிக்கையான மற்றும் உரிய நேரத்திலான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(2.16) ஒவ்வொரு நாணய மாற்றுநரும் பார்வையாளர்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட தொலைக்காட்சி (சிசிரிவி) முறைமையினை குறைந்தபட்சம் 30 நாட்களுக்குப் பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளர் கோருமிடத்து அதனை வழங்குதலும் வேண்டும்.

பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
2022 யூன் 15

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

2284/40ஆம் இலக்க - 2022ஆம் ஆண்டு யூன் மாதம் 16ஆந் திகதி வியாழக்கிழமை

(ஆணையத்தால் வெளியிடப்பட்டது)

பகுதி I: தொகுதி (I) - பொது
இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்
1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டம்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 10(இ) இன் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்

பி. நந்தலால் வீரசிங்க
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2022, யூன் 16.

சுற்றுலாவிடுதிப் பணிகளை வழங்குவோரினால் இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணியினை ஏற்றுக்கொள்ளுதல்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 10(இ)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் ஒன்றிணைந்து வாசிக்கப்படும் 68ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய செயற்பட்டு, 2022 சனவரி 21 திகதியிடப்பட்ட 2263/41 இலக்கமுடைய வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட "2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க, சுற்றுலாவிடுதிப் பணிகளை வழங்குவோரினால் இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணியினை ஏற்றுக்கொள்ளுதல் விதிகளினை" உடன் நடைமுறைக்கு வரும்வகையில் இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கப் பணிப்புரைகள்

கொழும்புத் துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2022 யூன் 03ஆம் திகதியிடப்பட்ட 2282/59ஆம் இலக்க அரச வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2022ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (கொழும்பு துறைமுக நகரத்தின் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம்

ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6 மற்றும் 7ஆம் விதிகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 9ஆம் பிரிவு என்பனவற்றின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வருவனவற்றிற்குட்பட்டு கொழும்பு துறைமுக நகர முதலீட்டாளர் கணக்கு - முதலீட்டாளர் இனைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்படுகின்றனர்.

2. **தகைமையுடைய ஆட்கள்**

இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனும் ஆள் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களுக்கு முழுமையாகச் சொந்தமான இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள ஏதேனும் கம்பனி அல்லது கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீட்டினைச் செய்யும் நோக்கத்திற்கான கூட்டுத் தொழில்முயற்சிகள்.

3. **கணக்குகளைத் திறந்து பேணி வருதல்**

கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டாளர் இனை ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் சேமிப்புக் கணக்குகள் வடிவில் திறந்து பேணிவர முடியும்.

4. **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகரத்தின் முதலீடுகளுக்கு நிதியிடுகின்றமைக்கான ஏதேனும் உள்முகப் பணவனுப்பல்கள்.

(ஆ) கொழும்பு துறைமுக நகரத்தில் செய்யப்படும் முதலீடுகள் தொடர்பில் வதிவற்ற முதலீட்டாளருக்குச் செலுத்தப்படத்தக்க ஏதேனும் வருமானம் அல்லது மூலதனப் பெறுகைகள்.

(இ) கணக்கில் வைத்திருக்கப்படுகின்ற நிதியங்கள் மீது ஈட்டப்படும் வட்டி.

5. **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) கொழும்பு துறைமுக நகரத்தில் செய்யப்படும் முதலீடுகள் தொடர்பில் கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் இற்கான மாற்றல்கள்.

(ஆ) இலங்கை ரூபாவில் இலங்கையில் செய்யப்படும் பகிர்ந்தளிப்புக்கள்.

(இ) கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டவாறான ஏதேனும் மாற்றல்கள்.

6. **ஏனைய நிபந்தனைகள்**

(அ) ஏதேனும் அனுமதிக்கப்பட்ட வரவுகளை மேற்கொள்ளும் போது, எந்தவொரு சூழ்நிலையின் கீழும் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட நிதியினை கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கக்கூடாது.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கொழும்பு துறைமுக நகர முதலீட்டு கணக்கு - முதலீட்டாளர் கணக்கினைத் திறக்கும் நேரத்தில் கணக்கின் தேவைப்பாட்டு நியதிகளில், விண்ணப்பதாரியின் தகைமையினைத் தீர்மானிக்கும் விதத்தில் போதுமான ஆவணச்சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(இ) இப்பணிப்புரைகளின் நியதிகளில் கொழும்பு துறைமுக நகர முதலீட்டு கணக்கு - முதலீட்டாளர் ஊடாக வெளிநாட்டுச் செலாவணியில் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உரிய விழிப்புக்கு கவனத்தினைப் பின்பற்றுதல் வேண்டும்.

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டாளர் ஊடாகச் செய்யப்படும் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலுமான ஆவணச்சான்றுகளை (ஒன்றில் வன்பிரதியாகவோ அல்லது இலத்திரனியல் முறையில்/ டிஜிட்டல் வடிவில்) கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டாளர் கணக்கு மூடப்பட்டதிலிருந்து 6 ஆண்டுகள் அல்லது விடயத்தினைப் பொறுத்து அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு ஏற்புடைத்தான ஏதேனும் மற்றைய சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதிக்கு பேணிவருதல் வேண்டும்.

7. **அறிக்கையிடும் தேவைப்பாடு**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இப்பணிப்புரைகளின் கீழ் கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டாளர் இனைத் திறந்து பேணிவருதல் தொடர்பான தகவல்களை பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால் விபரிக்கப்பட்டவாறான படிவமொன்றில் இத்திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கையிடும் தேவைப்பாடுகளுக்கேற்ப, வங்கியின் கணக்கேடுகளிலிருந்து தொடர்பான தகவல்களை உருவாக்கும் அல்லது பிரித்தெடுக்கும் விதத்தில் வங்கிக்குள்ளே முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

8. **கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் இனை மூடிவிடுதல்**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் இனை கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் மூடிவிடலாம்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அத்தகைய மூடுதல் பற்றி பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு (கணக்குடமையாளரின் பெயர், கணக்கு இலக்கம் மற்றும் மூடிவிடுவதற்கான காரணங்கள் உட்பட) மூடப்பட்ட திகதியிலிருந்து ஒருவாரத்திற்குள் dfem@cbsl.lk மின்னஞ்சலொன்றினூடாக அறிவித்தல் வேண்டும்.

9. இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக

"குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்" என்பது 2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/38ஆம் இலக்க அரச வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடும் நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணிவருதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகளிலுள்ள அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"கூட்டுத்தொழில் முயற்சிகள்" என்பது கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடு செய்யும் நோக்கத்திற்காக வதியும் அல்லது வதியாத பங்குடமையாளர்களுக்கு அல்லது வதியும் மற்றும் வதியாத ஆட்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் கூட்டுத் தொழில்முயற்சி ஒப்பந்தத்திற்குச் சொந்தமானதும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதுமான கம்பனியொன்று எனப் பொருள்படும்.

பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
2022 யூன் 28

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ்

2022ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கப் பணிப்புரைகள்

கொழும்புத் துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2022 யூன் 03ஆம் திகதியிடப்பட்ட 2282/59ஆம் இலக்க அரச வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 மற்றும் 6ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 9ஆம் பிரிவு ஆகியவற்றின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கொழும்பு துறைமுக நகரத்திலுள்ள முதலீடுகளுக்கு வசதியளிப்பதற்காக, பின்வருவனவற்றிற்குட்பட்டு கொழும்பு துறைமுக நகரமுதலீட்டுக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் கணக்கினைத் திறந்து பேணிவருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

2. தகைமையுடைய ஆட்கள்

2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர்.

3. கணக்குகளைத் திறந்து பேணி வருதல்

(அ) கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் இனை ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் சேமிப்பு கணக்குகள் வடிவில் திறந்து பேணிவரலாம்.

(ஆ) தகைமையுடைய ஆட்கள் கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் கணக்கினைத் தனியொரு கணக்காகப் பேணிவரலாம்.

4. அனுமதிக்கப்பட்ட வரவுகள்

(அ) கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டாளர் இலிருந்தான மாற்றல்கள்.

(ஆ) கணக்கு வைத்திருப்பவரின் வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட வருமானம் அல்லது வேறு ஏதேனும் பெறத்தக்கவைகள்.

(இ) கணக்கில் வைத்திருக்கப்படும் நிதியங்களிலிருந்து ஈட்டப்பட்ட வட்டி

5. அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்

(அ) இலங்கை ரூபாவில் மேற்கொள்ளப்படும் உள்நாட்டுப் பகிர்ந்தளிப்புக்கள்.

(ஆ) மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் தொடர்பில் வதிவற்ற முதலீட்டாளர்களுக்கு செலுத்தப்படத்தக்க ஏதேனும் வருமானம் அல்லது மூலதனப் பெறுகையாக கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டாளர் இற்கு செய்யப்படுகின்ற மாற்றல்கள்.

(இ) கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டவாறான ஏதேனும் மாற்றல்கள்/ கொடுப்பனவுகள்.

6. மற்றைய நிபந்தனைகள்

(அ) அனுமதிக்கப்பட்ட ஏதேனும் வரவுகளை மேற்கொள்ளும் போது, எந்தவொரு சூழ்நிலையின் கீழும் கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் இற்கு ரூபா மாற்றல் நிதியமெதனையும் வரவு வைக்கக்கூடாது.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கணக்கின் தேவைப்பாட்டு நியதிகளில் விண்ணப்பதாரியின் தகைமையினைத் தீர்மானிக்கும் விதத்தில் கொழும்பு துறைமுக நகர முதலீட்டு கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் இனைத் திறக்கும் நேரத்தில் போதுமான ஆவணச்சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(இ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இப்பணிப்புரைகளின் நியதிகளில் கொழும்பு துறைமுக நகர முதலீட்டு கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் ஊடாக வெளிநாட்டுச் செலாவணியில் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் போது உரிய விழிப்புக்கு கவனத்தினைப் பின்பற்றுதல் வேண்டும்.

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் ஊடாகச் செய்யப்படும் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய ஆவணச்சான்றுகளை (ஒன்றில் வன்பிரதியாகவோ அல்லது இலத்திரனியல் முறையில்/ டிஜிட்டல் வடிவில்) கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் கணக்கு மூடப்பட்டதிலிருந்து 6 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு அல்லது விடயத்தினைப் பொறுத்து அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு ஏற்புடைத்தான ஏதேனும் மற்றைய சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதிக்குப் பேணிவருதல் வேண்டும்.

7. அறிக்கையிடும் தேவைப்பாடுகள்

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இப்பணிப்புரைகளின் கீழ் கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் இனைத் திறந்து பேணிவருதல் தொடர்பான தகவல்களைப் பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால் விபரிக்கப்பட்டவாறான படிவமொன்றில் இத்திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கையிடும் தேவைப்பாடுகளுக்கேற்ப, வங்கியின் கணக்கேடுகளிலிருந்து தொடர்பான தகவல்களை உருவாக்கும் அல்லது பிரித்தெடுக்கும் விதத்தில் வங்கிக்குள்ளே முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

8. கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் இனை மூடிவிடுதல்

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் இனை கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் மூடிவிடலாம்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அத்தகைய மூடுதல் பற்றி பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு (கணக்குடமையாளரின் பெயர், கணக்கு இலக்கம் மற்றும் மூடிவிடுவதற்கான காரணங்கள் உட்பட) மூடப்பட்ட திகதியிலிருந்து ஒருவாரத்திற்குள் dfem@cbsl.lk மின்னஞ்சலொன்றினூடாக அறிவித்தல் வேண்டும்.

9. இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக

(அ) **"குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்"** என்பது 2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/38ஆம் இலக்க அரச வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடும் நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணிவருதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகளிலுள்ள அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
2022 யூன் 28

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது
2286/27ஆம் இலக்க - 2022ஆம் ஆண்டு யூன் மாதம் 30ஆந் திகதி வியாழக்கிழமை
(ஆணையத்தால் வெளியிடப்பட்டது)

பகுதி I: தொகுதி (I) - பொது
அரசாங்க அறிவித்தல்கள்
2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

22ஆம் பிரிவின் கீழான கட்டளை

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகிய நான், இக்கட்டளையின் மூலம்,

i. 2021, பெப்புருவரி 03ஆந் திகதியிடப்பட்ட 2213/36ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் (இதனகத்துப் பின்னர் "2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க ஒழுங்குவிதிகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அட்டவணையின் பகுதி 1இல் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்திலிருந்து (அசையக்கூடிய, அசையாத, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் அடங்கலாக) தேறிய நிதியங்களாகவிருக்கின்ற, உடனடிக் குடும்ப உறுப்பினரொருவரிடமிருந்து புலம்பெயர்ந்த ஒருவர் மூலம் பண அன்பளிப்புக்களாகப் பெறப்பட்ட நிதியங்களிலிருந்து புலம்பெயர் அனுமதிக்கப்பட்ட தொகையின் கீழ் நிதியங்களை சொந்த நாட்டுக்கு அனுப்புவதை இடைநிறுத்துகின்றேன்.

ii. இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது இக்கட்டளையின் திகதியளவில், 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் ஏற்கனவே புலம்பெயர் அனுமதிக்கப்பட்ட தொகையினைக் கோரியுள்ள புலம்பெயர்ந்தவர்களினால் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாய்க் கணக்குகளூடாக புலம்பெயர் அனுமதிக்கப்பட்ட தொகையின்கீழ் நிதியங்களைச் சொந்த நாட்டிற்குத் திருப்பியனுப்புவதை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 10,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

III. இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது, 2021இல் 3ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் முதற்தடவையாக புலம்பெயர் அனுமதிக்கப்பட்ட தொகையினைக் கோருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான தகைமையுடைய புலம்பெயர் அனுமதிக்கப்பட்ட தொகையினை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

iv. இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின்போது, 2021ஆம் ஆண்டின் 3ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாய்க் கணக்குகள் அல்லது புலம்பெயர்ந்தவர்களின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்குகள் ஊடாக புலம்பெயர்ந்தவர்கள் மூலம் ஏதேனும் நடப்பு வருமானத்தினை அல்லது திரண்ட நடப்பு வருமானத்தினை (ஊழிய சேமலாப நிதியம், ஊழிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், பணிக்கொடை மற்றும் ஓய்வூதியங்கள் அல்லது ஏதேனும் ஓய்வு நலன்கள் அடங்லாக) சொந்த நாட்டிற்கு அனுப்புவதை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

v. 2021ஆம் ஆண்டின் 3ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின்கீழ் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வதிகின்ற அத்துடன் வேறொரு நாடொன்றில் தற்காலிக வதிவிட வீசாவைப் பெற்றுக்கொண்டுள்ள எவரேனும் தனிப்பட்ட இலங்கையருக்கான வெளிமுகப் பணவனுப்பல்களை அல்லது வெளிநாட்டுச் செலாவணி வழங்கலை ஆளொருவருக்கு உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

vi. 2021 பெப்புருவரி 03 ஆந் திகதியிடப்பட்ட 2213/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க ஒழுங்குவிதியின் அட்டவணையில் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் வேறொரு நாட்டின் தற்காலிக வீசாவின் கீழ் இலங்கையிலிருந்து செல்வதற்கு உத்தேசிக்கின்ற இலங்கையில் வதிகின்ற எவரேனும் ஆளுக்கான வெளிநாட்டுச் செலாவணி வழங்கலை ஆளொருவருக்கு உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 10,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

vii. 2021 பெப்புருவரி 03 ஆம் திகதியிடப்பட்ட 2213/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஒழுங்குவிதியின் (இதனகத்துப்பின்னர் 2021ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஒழுங்குவிதிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) அட்டவணையில் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் வெளிநாடுகளில் முதலீடுகளை மேற்கொள்கின்ற நோக்கத்திற்காக பின்வருவன நீங்கலாக, வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதை இடைநிறுத்துகின்றேன்:

(அ) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனொன்றிலிருந்து நிதியளிக்கப்படவுள்ள முதலீடுகள், அல்லது

(ஆ) சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு, இணங்கி முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளை அலுவலகமொன்றில் ஏற்கனவே செய்யப்பட்ட முதலீடு மீது பிரயோகிக்கப்படக்கூடிய அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தலினை நிறைவுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக முதலீடொன்று, அல்லது

(இ) முதலீட்டினைப் பெறுபவரின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகள் நோக்கத்திற்காக, உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 15,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு வெளிநாடுகளில் கூட்டிணைக்கப்பட்ட/

தாபிக்கப்பட்ட ஏற்கனவே தாபிக்கப்பட்ட துணை நிறுவனங்களில் அல்லது கிளை அலுவலகங்களில் தகைமையுடைய வதியும் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படவுள்ள நிதியங்களின் மேலதிக முதலீடு/ மேலதிக உட்செலுத்தல் (ஏற்புடையவாறு), அல்லது

(ஈ) தகைமையுடைய வதியும் கம்பனிகளால் சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு வெளிநாட்டில் ஏற்கனவே தாபிக்கப்பட்ட தொடர்புபடுத்தல், சந்தைப்படுத்தல், முகவராண்மை, கருத்திட்டம், பிரதிநிதி அல்லது வேறு ஏதேனும் அதனையொத்த அலுவலகங்களின் பராமரிப்பு நோக்கத்திற்காக உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரையான பணவனுப்பல்கள்,

ஆயின், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவர் அத்தகைய தேவைப்படுத்தலினை நிறைவு செய்தல் பற்றி திருப்தியடைய வேண்டும்.

viii. 2021ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் அட்டவணையின் பகுதி I இன் பந்தி 6இன் கீழ் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் ஊழியர் பங்கு உரிமைத் திட்டம் அல்லது ஊழியர் பங்கு விருப்பத் திட்டத்திற்கு பங்களிக்கும் நோக்கத்திற்காக ஊழியர்கள் சார்பில் வெளிநாட்டில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் துணை நிறுவனமாக அல்லது கிளை அலுவலகமாக இருக்கின்ற 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியினால் மேற்கொள்ளப்படுகின்ற வெளிமுக பணவனுப்பல்களை இடைநிறுத்துகின்றேன்.

ix இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது, இலங்கையில் வதிகின்ற ஆளொருவரின் மூலம் வைத்திருக்கப்படுகின்ற வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது/ அத்துடன் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளூடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்களை உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 20,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

x. 2021இன் 1ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் பொதுவான அனுமதியின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சுகின்ற முதலீடுகளுக்காக விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் சட்டத்தின் 7(10)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் அனுமதி வழங்குவதற்கு நாணயச் சபை அதிகாரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆயின்,

(அ) முன்மொழியப்பட்ட முதலீடானது சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன் ஒன்றிலிருந்து நிதியளிக்கப்படுவதாக இருத்தல், அல்லது

(ஆ) முன்மொழியப்பட்ட முதலீடானது சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளை அலுவலகமொன்றில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முதலீடு மீது ஏற்புடைய அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருத்தல்.

இக்கட்டளையானது, இக்கட்டளையின் திகதியிலிருந்து 6 மாத காலப் பகுதிக்கு செல்லுபடியானதாகும்.

ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி அமைச்சு
கொழும்பு 01,
2022, யூன் 29.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கப் பணிப்புரைகள்

தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2022.06.03ஆம் திகதியிடப்பட்ட 2282/60ஆம் இலக்க அரச வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினால் திருத்தப்பட்டவாறான 2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/38ஆம் இலக்க அரச வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணிவருதல்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவு என்பனவற்றின் நியதிகளில் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (பணிப்புரைகள்) தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2021.03.18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்கப் பணிப்புரைகள் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றன.

1. பணிப்புரைகளின் **பந்தி 1.3இல்** குறித்துரைக்கப்பட்ட **அனுமதிக்கப்பட்ட வரவுகளுக்குப்** புறம்பாக பின்வருவன உள்ளடக்கப்பட வேண்டுமென்பதுடன் அதன்பால் **விடயம் (ம)** என வாசிக்கப்படுதலாதலும் வேண்டும்.

   (ம) 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, கொழும்பு துறைமுக நகர அதிகாரசபையின் பிரதேசத்திற்குள்ளும் அதிலிருந்துமான வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து கணக்கு வைத்திருப்பவரால் பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த வருவாய்கள்/ கொடுப்பனவுகள்.

பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
2022 யூன் 30

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கப் பணிப்புரைகள்

வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2022.06.03ஆம் திகதியிடப்பட்ட 2282/60ஆம் இலக்க அரச வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினால் (ஒழுங்குவிதிகள்) திருத்தப்பட்டவாறான 2022.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/38ஆம் இலக்க அரச வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணிவருதல்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவு ஆகியவற்றின் நியதிகளில் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2021.03.18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்கப் பணிப்புரைகள் இத்தால் திருத்தப்பட்டு பின்வருமாறு வாசிக்கப்படுகின்றன.

1. பணிப்புரைகளின் **பந்தி 1.3இல்** குறித்துரைக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட **வரவுகளுக்குப் புறம்பாக** பின்வருவன உள்ளடக்கப்பட வேண்டுமென்பதுடன் அதன்பால் **விடயம் (வ)** என வாசிக்கப்படுதலாதலும் வேண்டும்.

   (வ) 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, கொழும்பு துறைமுக நகர அதிகாரசபையின் பிரதேசத்திற்குள்ளும் அதிலிருந்துமான வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றிலிருந்து ஒழுங்குவிதிகளின் அட்டவணை 2ஆம் பந்தியில் துணைப்பந்தி (3) இன் நியதிகளில் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறந்து பேணி வருவதற்கு தகைமையுடைய ஆளாகவுள்ள கணக்கு வைத்திருப்பவரினால் பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த வருவாய்கள்/ கொடுப்பனவுகள்.

பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
2022 யூன் 30

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

2287/16ஆம் இலக்க - 2022ஆம் ஆண்டு யூலை மாதம் 05ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(ஆணையத்தால் வெளியிடப்பட்டது)

பகுதி I: தொகுதி (I) - பொது
அரசாங்க அறிவித்தல்கள்
2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

8ஆம் பிரிவின் கீழான கட்டளை

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) 8 ஆம் பிரிவின் (1)ஆம் துணைப்பிரிவின் பந்திகள் (அ) மற்றும் (ஆ) இனால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், 2284/34ஆம் இலக்க 2022, யூன் 16ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கட்டளை மூலம் திருத்தப்பட்ட 2213/39ஆம் இலக்க 2021, பெப்புருவரி 03ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கட்டளையினை பின்வருமாறு மேலும் திருத்துகின்றேன்.

கட்டளையின் அட்டவணையின் பகுதி III இன் பந்தி (1) மற்றும் (2)இன் கீழ் வழங்கப்பட்ட பதினான்கு (14) வேலை நாட்களைக் கொண்ட பொதுமன்னிப்பு காலப்பகுதி 2284/34ஆம் இலக்க 2022, யூன் 16ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வழங்கப்பட்ட பதினான்கு (14) வேலை நாட்களைக் கொண்ட காலப்பகுதி முடியும் நாளிலிருந்து மேலும் பதினான்கு (14) வேலை நாட்களைக் கொண்ட காலத்திற்கு நீடிக்கப்படுகிறது மற்றும் அதற்குப் பிந்திய காலத்திற்கு அல்ல.

ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி அமைச்சு
கொழும்பு 01,
2022, யூலை 05.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது
2292/50ஆம் இலக்க - 2022ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 12ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(ஆணையத்தால் வெளியிடப்பட்டது)

பகுதி I: தொகுதி (I) - பொது
இலங்கை மத்திய வங்கி அறிவித்தல்கள்
1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ)ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்

பி. நந்தலால் வீரசிங்க
நாணயச் சபையின் தலைவரும்,
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்,

இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 01,
2022 ஒகத்து 12

ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்

1. இவ்விதிகள் 2022ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள்" என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

2. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்டு 2022 மார்ச்சு 11ஆம் திகதியிடப்பட்ட 2270/66ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள், அதன் 4ஆம் விதி நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக, பின்வரும் புதிய விதியை பதிலீடுசெய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"4. மேலே 3ஆம் விதியின் நியதிகளின் பிரகாரம், இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெற்றுக்கொள்கின்ற பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும், கீழே குறிப்பிடப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் மாத்திரம் அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தியதன் பின்னர், இலங்கையில் கிடைக்கப்பெற்ற அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியுள்ள தொகையினை தொடர்ந்துவருகின்ற மாதத்தின் ஏழாவது (07வது) நாளன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை ரூபாவாக கட்டாயமாக மாற்றுதல் வேண்டும்.

(i) குறித்த ஏற்றுமதிப் பொருட்கள் தொடர்பில், அதன் மீதான ஒரு மாத கடமைப்பொறுப்புக்கள் உள்ளடங்கலாக நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிமுகப் பணவனுப்பல்கள்

(ii) பொருட்கள் ஏற்றுமதி தொடர்பில் பயண நோக்கத்திற்கான வெளிநாட்டு நாணயத் தாள்களின் எடுப்பனவு அல்லது நிதியங்களின் மாற்றல்

(iii) அத்தகைய வெளிநாட்டு நாணயக் கடன் அல்லது வசதி, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அல்லது திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், கட்டளைகளின் அத்துடன் பணிப்புரைகளின் நியதிகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட கடன்பெறுகையொன்றாக இருக்கின்றவிடத்து, ஒரு மாத கடமைப்பொறுப்புக்கள்

உள்ளடங்கலாக பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களினதும் வசதிகளினதும் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் அத்துடன் மீள்கொடுப்பனவு

(iv) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு வதியாத முதலீட்டாளர்களுக்கு பிரகடனப்படுத்தப்பட்ட பங்கிலாபங்களின் கொடுப்பனவுகள் அத்துடன்/ அல்லது வெளிநாட்டவர்களாக அல்லது இரட்டைப் பிரசாவுரிமையுடையவர்களாவிருக்கின்ற வெளிநாட்டு ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள்

(v) அவ்வாறு கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் பத்து சதவீதம் (10%) வரை வெளிநாட்டு நாணயத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடுகளைச் செய்வது தொடர்பிலான கொடுப்பனவுகள் அத்துடன்

(vi) குறித்த பொருட்கள் ஏற்றுமதியுடன் தொடர்புடைய கொள்வனவுகளுக்காக 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில் வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்ட உள்நாட்டு வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகள்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது
2293/07ஆம் இலக்க - 2022ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15ஆந் திகதி திங்கட்கிழமை
(ஆணையத்தால் வெளியிடப்பட்டது)

பகுதி I: தொகுதி (I) - பொது
அரசாங்க அறிவித்தல்கள்
2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

8 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) 8ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகள் மூலம் எனக்குரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான் இக்கட்டளை மூலம், 2213/39 ஆம் இலக்க 2021, பெப்புருவரி 03ஆந் திகதியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேட அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறான சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கட்டளையை (கட்டளை), கட்டளையின் அட்டவணையின் பகுதி III ஆக பின்வருவதை உட்சேர்ப்பதன் மூலம் பின்வருமாறு திருத்துகின்றேன்

(1) இதிலுள்ள அட்டவணையின் பகுதி II இன் 1 ஆம் மற்றும் 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதி மற்றும் பெறுமதி மட்டுப்பாடுகள் எவ்வாறிருப்பினும், சட்ட ரீதியாகப் பெற்றுக்கொள்ளப்பட்டு அவரது உடமையில் அவ்வாறு வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தாள்களை வைத்திருக்கின்ற இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற எவரேனும் ஆள், இக்கட்டளை நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஒரு (01) மாத கால பொதுமன்னிப்பு மற்றும் அதற்கு பிந்தாத காலப்பகுதியினுள், அத்தகைய வெளிநாட்டு நாணயத்தின் சட்டரீதியான பெறுகையுடன் தொடர்புடைய அவசியமான சான்றுப்படுத்தலை உரிய அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு சமர்ப்பிப்பதன் மீது,

அ. அத்தகைய ஆளின் பெயரில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் திறந்து பேணப்படுகின்ற தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு, விடயத்திற்கு ஏற்றவாறு, அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை வைப்புச் செய்யலாம் அல்லது

ஆ. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவருக்கு அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை விற்பனை செய்யலாம்.

(2) மேலே II (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அல்லாமல் வேறுவிதமாக பெற்று அவரது உடமையில் வெளிநாட்டு நாணயத் தாள்களை வைத்திருக்கின்ற இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற எவரேனும் ஆள் **இக்கட்டளை நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஒரு (01) மாத கால பொதுமன்னிப்பு மற்றும் அதற்கு பிந்தாத காலப்பகுதியினுள்,** அவ்வாறு வைத்திருக்கும் அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு விற்பனை செய்வதற்கு கட்டாயமாக வேண்டப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின் பிரிவு 11இன் ஏற்பாடுகளின் நியதிகளுக்கு அமைவாக இக்கட்டளையில் எடுத்துரைக்கப்பட்டவாறு வெளிநாட்டுச் செலாவணியை வைத்திருக்கும் காலப்பகுதிக்கு அப்பால் அவரது உடமையில் வெளிநாட்டு நாணயத் தாள்களை வைத்திருக்கின்ற அத்தகைய ஆள்கள் மீதும் இக்கட்டளையின் ஏதேனும் மீறுகைக்கு அல்லது எல்லைமீறுகைக்கு எதிராக நடவடிக்கைமுறைகளைத் தொடுப்பதற்கு இலங்கை மத்திய வங்கி உரிமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு
மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி அமைச்சு
கொழும்பு 01,
2022 ஒகத்து 15

இக்கட்டளையின் நோக்கத்திற்காக -

"சட்டம்" என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலவணிச் சட்டம் என்பது பொருளாகும்

"அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்" 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறு அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

"ஆள்" 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறு அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

"இலங்கையில் வதிகின்ற" என்பது திருத்தப்பட்டவாறான 2213/40ஆம் இலக்க 2021.02.03 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறு 2017 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 31இன் கீழ் வழங்கப்பட்ட கட்டளையின் நியதிகளுக்கமைவாக அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கப் பணிப்புரைகள்
இந்திய ரூபாய்களைக் குறித்துரைத்தல் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021.02.03ஆம் திகதியிடப்பட்ட முறையே 2213/34, 2213/35, 2213/36, 2213/37 மற்றும் 2213/38 ஆம் இலக்கங்களைக் கொண்ட அரச வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கையில் வதியுமாளொருவரினால் இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள், 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதியுமாளொருவரினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள், 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (புலம்பெயர்ந்தவரினால் மேற்கொள்ளப்படும் நிதியவனுப்பல்கள்) ஒழுங்குவிதிகள், 2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (பல்வகை மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணிவருதல்) ஒழுங்குவிதிகள், அவற்றிற்குச் செய்யப்பட்ட ஏதேனும் திருத்தங்கள் (ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 9 என்பனவற்றின் நியதிகளில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக **குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்** என்பது **"இந்திய ரூபாய்கள்"** இனையும் உள்ளடக்க வேண்டும் என்பது பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

மேலதிகப் பணிப்பாளர்
வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
2022 ஒகத்து 26

இலங்கை சனநாய சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது
2296/12ஆம் இலக்க - 2022ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08ஆந் திகதி வியாழக்கிழமை
(ஆணையத்தால் வெளியிடப்பட்டது)

பகுதி I: தொகுதி (I) - பொது
அரசாங்க அறிவித்தல்கள
2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

2234/19ஆம் இலக்க, 2021 யூன் 30ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

(அ) ஒழுங்குவிதிகளில் தோன்றுகின்ற "இருபத்தி நான்கு மாதங்கள்" என்ற சொற்பதங்கள் இத்தால் நீக்கப்பட்டு "முப்பத்தாறு மாதங்கள்" என்ற சொற்பதங்கள் பதிலீடு செய்யப்படுகின்றன.

ரணில் விக்ரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி அமைச்சு
கொழும்பு 01,
2022, செத்தெம்பர் 08.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரைகள்

தங்க சுவர்க்க விசா நிகழ்ச்சித்திட்ட - விசேட கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/38ஆம் இலக்க அரச வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணிவருதல்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவு ஆகியவற்றின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வருவனவற்றிற்குட்பட்டு, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினால் (நடைமுறைப்படுத்தும் முகவராண்மை) நடைமுறைப்படுத்தப்படும் **"தங்க சுவர்க்க விசா நிகழ்ச்சித்திட்டத்தின்"** கீழ் 10 ஆண்டுகள் வதிவிட விசாவின் கீழ் இலங்கையில் தங்கியிருக்கின்ற வெளிநாட்டுப் பிரசைகளின் பெயர்களில் **தங்க சுவர்க்க வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத்** திறந்து பேணிவருவதற்கு இத்தால் அனுமதிக்கப்படுகின்றனர்.

2. கணக்குகளைத் திறந்து பேணி வருதல்

(அ) குறைந்தபட்சம் **ஐ.அ.டொலர் 200,000** அல்லது அதற்குச் சமனான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்திலான ஆரம்ப வைப்பொன்றுடன் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் செய்யப்பட்ட எழுத்து மூலமான கோரிக்கையொன்றினைச் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பதாரிகள் தங்க சுவர்க்க வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறக்கலாம்.

(ஆ) தங்க சுவர்க்க வெளிநாட்டு நாணயக் கணக்குகளை, உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் எந்தவொரு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலும் சேமிப்பு அல்லது கால வைப்புக் கணக்குகளாகப் பேணிவர வேண்டும்.

(இ) விண்ணப்பதாரிகள், தங்க சுவர்க்க விசா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விசா வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டு முடிவடைந்ததன் பின்னர் மாத்திரம் உள்நாட்டுச் செலவுகள் மற்றும் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான பணவனுப்பல் நோக்கங்களுக்காக, இப்பணிப்புரைகளில் பந்தி 2(அ)இல் குறிப்பிடப்பட்டவாறான ஆரம்ப வைப்புத் தொகையில் 50 சதவீதமான தொகையினை எடுப்பனவு செய்யலாம்.

(ஈ) மேலேயுள்ள பந்தி 2(இ) இல் குறிப்பிடப்பட்டவாறு எடுப்பனவுகளை மேற்கொண்டதன் பின்னர் எஞ்சியுள்ள ஏதேனும் நிதியங்களை, இத்திட்டத்தின் கீழ் விசா செல்லுபடியாகும் காலம் முழுவதும் தங்க சுவர்க்க வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வைப்பொன்றாக வைத்திருத்தல் வேண்டும்.

3. அனுமதிக்கப்பட்ட வரவுகள்

(அ) கணக்கு உடமையாளரின் பேரில் வங்கித்தொழில் மார்க்கமூடாக இலங்கைக்கு வெளியிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த பணவனுப்பல்கள்.

(ஆ) பிரகடனமொன்றினைத் தொடர்ந்து கணக்கு வைத்திருப்பவரினால் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி.

(இ) கணக்கில் வைத்திருக்கப்படும் நிதியத்திலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்ட வட்டி

4. அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்

(அ) மேலேயுள்ள பந்தி 2(இ) மற்றும் 2(ஈ) இற்குட்பட்டு, தங்க சுவர்க்க விசா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கையில் வதிகின்ற கணக்கு வைத்திருப்பவர், வாழ்க்கைத்துணை மற்றும் சேர்ந்து வாழ்கின்ற தங்கியிருப்பவர்களின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான கொடுப்பனவுகளுக்கான பணவனுப்பல்கள்.

(ஆ) மேலேயுள்ள பந்திகள் 2(இ) மற்றும் 2(ஈ) என்பனவற்றிற்குட்பட்டு, இலங்கை ரூபாவில் இலங்கையில் பகிர்ந்தளிக்கப்பட்டவைகள்.

(இ) தங்க சுவர்க்க விசா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 10 ஆண்டு வதிவிட விசா முடிவடைந்ததும் அல்லது குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வதிவோர் விசா இரத்துச் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் செய்யப்படும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றின்படி கணக்கு வைத்திருப்பவரின் பெயரில் இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கிற்கு அனுப்பப்படுகின்ற நிதியங்கள்.

5. ஏனைய நிபந்தனைகள்

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், பந்தி 4(அ) இலிருந்து 4(இ) வரையான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட பற்றுக்களின் கீழான கொடுக்கல்வாங்கல்கள்/ மாற்றல்கள் இப்பணிப்புரையின் பந்திகள் 2(இ) மற்றும் 2(ஈ)இல் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்குட்பட்டு கணக்கு வைத்திருப்பவரினால் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6. மாதாந்தக் கூற்றுக்கள்

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இப்பணிப்புரைகளின் கீழ் திறக்கப்பட்ட கணக்குகள் மீதான தகவல்களை பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால் விபரிக்கப்பட்டவாறான படிவமொன்றில், அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ dfem@cbsl.lk என்ற மின்னஞ்சலூடாகச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேற்குறிப்பிட்ட அறிக்கையிடும் தேவைப்பாடுகளுக்கேற்ப பந்தியின் கணக்கேடுகளிலிருந்து தொடர்பான தகவல்களை உருவாக்கும் அல்லது பிரித்தெடுக்கும் விதத்தில் வங்கிக்குள்ளே முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

7. இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் வராத ஏதேனும் நோக்கங்களுக்காக தங்க சுவர்க்க வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான/ கணக்குகளிலிருந்தான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள்/ மாற்றல்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகவர்களின் சம்மதத்துடன் பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

8. இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக

(அ) **"பணவனுப்பல்கள்"** என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளுக்கிடையேயான மாற்றல்கள், வங்கி வரைபுகள், ஏனைய கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவுப் பொறிமுறைகள் அல்லது தளங்களூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத் தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பனிகளிலிருந்து/ இல்லங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் என்பனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(ஆ) **"பிரகடனம்"** என்பது வெளிநாட்டுச் செலாவணி ஐ.அ.டொலர் 15,000 இனை அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தினை விஞ்சுகின்றவிடத்து சுங்கத் திணைக்களத்திற்கும் ஐ.அ.டொலர் 15,000 இற்கு அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயங்களுக்குக் குறைவாக இருக்குமிடத்து அதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்குப் பொருத்தமான விதத்தில் செய்யப்படும் பிரகடனமொன்றாகக் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(இ) **"நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்"** என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ் வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது எவரேனும் ஆளை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
2022 நவெம்பர் 03

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது
2308/51ஆம் இலக்க - 2022ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(ஆணையத்தால் வெளியிடப்பட்டது)

பகுதி I: தொகுதி (I) - பொது
இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்
2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி அமைச்சு
கொழும்பு,
2022 திசெம்பர் 02.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், 2022இன் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றிடமிருந்து குறுகிய கால வெளிநாட்டு நாணயக் கடன்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. குறைந்தது 30 சதவீதம் கொண்ட உள்நாட்டு பெறுமதி சேர்த்தலைக் கொண்டுள்ள தமது உற்பத்திகளைத் தயாரிப்பதற்கான மூலப்பொருட்களை இறக்குமதி செய்கின்ற, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்காக (கடன்பெறுநர்), அத்தகைய இறக்குமதிகளின் கொடுப்பனவுகளுக்கு நிதியளிக்கும் நோக்கத்திற்காக பின்வரும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டும், சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் பணிப்புரைகளுக்கு அமைவாகவும், இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட தாய் கம்பனியிடமிருந்து அல்லது அதே கம்பனிகள் குழுமத்தினுள் கம்பனியொன்றிடமிருந்து (கடன் வழங்குநர்) குறைந்தபட்சம் ஓர் (1)ஆண்டு சலுகைக் காலப்பகுதி உள்ளடங்கலாக (3) ஆண்டுகளுக்கு குறைவான காலப்பகுதியுடன் வெளிநாட்டு நாணயக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

   (i) இறக்குமதி செய்யப்படவுள்ள அத்தகைய மூலப்பொருட்களைப் பயன்படுத்துகின்ற கம்பனி மூலம் தயாரிக்கப்படும் இறுதி உற்பத்தி, குறைந்தது 30 சதவீதம் கொண்ட உள்நாட்டு பெறுமதி சேர்த்தலினைக் கொண்டுள்ளது என்பதற்கு கைத்தொழில் அமைச்சின் செயலாளரிடமிருந்து கடன்பெறுநர் பரிந்துரையொன்றினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்

   (ii) கடன்பெறுநர், அத்தகைய கடனின் கிடைப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் கடனைத் தீர்ப்பனவுசெய்து மீள்கொடுப்பனவு செய்வதற்கும் மத்திய வங்கியினால் வழங்கப்படும் பணிப்புரைகளுக்கு உட்பட்டு "விசேட வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுகிய காலக் கடன்கள்" கணக்கை திறந்து பேணுதல் வேண்டும்.

   (iii) அத்தகைய கடனின் வட்டிவீதம், இலங்கையில் நிலவுகின்ற சந்தை வட்டிவீதங்களுக்கு ஒப்பிடத்தக்க நியாயமான சலுகை வீதத்தில் இருத்தல் வேண்டும்.

   (iv) கடன் மீள்கொடுப்பனவுகள் (வட்டி உள்ளடங்கலாக), சலுகைக் காலத்தின் பின்னர் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு கடன்கழிப்புச் செய்யப்படல் வேண்டும்.

   (v) மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கொடுப்பனவுகள், நாட்டின் நடைமுறையிலுள்ள வர்த்தக சட்டங்களுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

இவ்வொழுங்குவிதிகளானது இவ்வொழுங்குவிதிகளின் திகதியிலிருந்து ஓர் (1) ஆண்டு காலப்பகுதிக்கு செல்லுபடியானதாகயிருக்கும்.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிப்புரைகள்
சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்டப் பணிப்புரைகள் -
வெளிநாடுகளிலிருந்தான குறுங்கால வெளிநாட்டு நாணயக் கடன்கள்
(சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்காலக் கடன்கள்)

2012.12.02 திகதியிடப்பட்ட 2308/51ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2022இன் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியிலிருந்தான குறுங்கால வெளிநாட்டு நாணயக் கடன்கள்) ஒழுங்குவிதிகளின் (ஒழுங்குவிதிகள்) நியதிகளுக்கமைவாகவும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6ஆம் மற்றும் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 09ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாகவும், பின்வருவனவற்றிற்குட்பட்டு இலங்கைக்கு வெளியே ஒருங்கிணைக்கப்பட்ட முதன்மைக் கம்பனியிலிருந்து அல்லது அதே கம்பனிக் குழுக்களுக்குள் காணப்படும் கம்பனியிலிருந்து (அதாவது கடன்வழங்குநர்), குறைந்தபட்ச 01 ஆண்டு சலுகைக் காலத்தை (குறுங்காலம்) உள்ளடக்கிய 3 ஆண்டுகளுக்கும் குறைவான காலப்பகுதிக்காக பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களில், 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனிகள் மூலம் (அதாவது கடன்பெறுநர்), உற்பத்திகளின் தயாரிப்புக்களுக்கான மூலப்பொருட்களுக்கான கொடுப்பனவுகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு **சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்களை** திறந்து பேணுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

2. தகைமையுடைய ஆட்கள்

2007 ஆம் 07ஆம் இலக்க ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள். இவை, ஆகக்குறைந்தது 30 சதவீத உள்நாட்டுப் பெறுமதி கூட்டலைக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களைப் பயன்படுத்தி கம்பனி மூலம் தயாரிக்கப்படுகின்ற இறுதி உற்பத்தி என கைத்தொழில் அமைச்சின் செயலாளரிடமிருந்து பெறப்பட்ட விதந்துரைப்பிற்குட்பட்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டு தலைமையதிபதியிடமிருந்து தேவைப்படுமிடத்து பெறப்பட்ட அதிகாரமளிப்புக் கடிதத்துடன் தமது உற்பத்திகளை தயாரிப்பதற்காக மூலப் பொருட்களை இறக்குமதி செய்கின்றன.

3. கணக்குகளைத் திறந்து பேணுதல்

(அ) பெறப்பட்ட குறுங்கால வெளிநாட்டு நாணயக் கடனின் பெறுகைகளில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் நடைமுறை (மேலதிகப்பற்று வசதியும் காசோலை எடுப்பனவு வசதியும் அல்லாமல்) அல்லது சேமிப்புக் கணக்கு வடித்தில் ஏக கணக்கொன்றாக திறந்து பேணக்கூடிய சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்கள்.

(ஆ) ஒவ்வொரு கடன் வழங்குநரிடமிருந்தும் குறுங்கால கடனின் பெறுகைகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்களை தகைமையுடைய ஆட்கள் திறந்து பேணுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கடன்களின் வட்டிக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக அனைத்து மீள்கொடுப்பனவுகளும் அதே சிறப்பு வெளிநாட்டு நாணய கணக்கு - குறுங்கால கடன்களினூடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(இ) இத்தகைய பணிப்புரைகளின் கீழ் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்களை திறத்தல் என்பது ஒழுங்குவிதிகளில் அனுமதிக்கப்பட்டவாறு ஒரு (01) ஆண்டு காலப்பகுதிக்குள் மாத்திரமே செல்லுபடியாகுதல் வேண்டும் என்பதுடன் சொல்லப்பட்ட கடனைத் தீர்ப்பனவு செய்தல்/ மீள்கொடுப்பனவு செய்தல் ஆகியவை நிறைவேறும் வரை அதே கணக்கு பேணப்படுதல் வேண்டும்.

4. அனுமதிக்கப்பட்ட வரவுகள்

(அ) கடன்வழங்குநரிடமிருந்து இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கொன்றிலிருந்து அல்லது உள்முக முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்து அல்லது அத்தகைய கடன்வழங்குநரின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிலிருந்து கணக்குடைமையாளரால் பெறப்பட்ட கடன் பெறுகைகளின் பணவனுப்பல்கள்/மாற்றல்கள்.

(ஆ) கடனைத் தீர்ப்பனவு செய்யும் நோக்கத்திற்காக, கணக்கு உடைமையாளரின் இலங்கை ரூபாக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்.

(இ) இத்தகைய பணிப்புரைகளின் 5(அ) ஆம் பந்தி தொடர்பில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, அதே கணக்கு உடைமையாளரின் மற்றுமொரு சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்களிலிருந்தான மாற்றல்கள்.

(ஈ) கணக்கில் வைத்திருக்கப்படும் நிதியங்கள் தொடர்பில் உழைக்கப்பட்ட வட்டிகள், ஏதேனுமிருப்பின்.

5. அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்

(அ) உற்பத்திகளைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுகின்ற மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கொடுப்பனவுகள் தொடர்பிலான வெளிமுக பணவனுப்பல்கள்.

(ஆ) கடன் உடன்படிக்கைகளின் நியதிகளுக்கமைய ஒழுங்குவிதிகளின் கீழ் பெறப்பட்ட கடன்களைத் தீர்ப்பனவு செய்தல் மற்றும் மீளளித்தல் ஆகிய நோக்கத்திற்காக கடன்வழங்குநரிடமிருந்து இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கொன்றிற்கு அல்லது உள்முக முதலீட்டுக் கணக்கொன்றிற்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கு நிதியங்களின் பணவனுப்பல்கள் /மாற்றல்கள்.

(இ) குறுங்கால கடன் தொடர்பில் கொடுபடத்தக்க வங்கிக் கட்டணங்கள், விதிப்பனவுகள், தரகுகள் போன்றவை.

(ஈ) இத்தகைய பணிப்புரைகளின் 5(அ) ஆம் பந்தி தொடர்பில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, அதே கணக்கு உடைமையாளரின் மற்றுமொரு சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்களுக்கான மாற்றல்கள்.

6. ஏனைய நிபந்தனைகள்

(அ) சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்களூடாக மேற்கொள்ளப்படும் கணக்கு உடைமையாளரின் தகைமையையும் பரிமாற்றங்களின் நம்பகத்தன்மையையும் தாபிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் போதுமான ஆவணப்படுத்தல் சான்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் இச்சான்று ஒழுங்குவிதிகளுடனும் இத்தகையை பணிப்புரைகளுடனும் இணங்கியொழுகின்றது என்பதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் வேறு நியதிச் சட்டத் தேவைப்பாடுகளுக்குட்பட்டு ஏற்றுமதி பெறுகைகள் அல்லது வேறு உள்முக பணவனுப்பல்கள் போன்ற வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்குட்பட்டு காணப்படுகின்ற உள்முக பணவனுப்பல்களானது சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்களுக்கு வரவு வைப்பதற்கு தகைமையற்று காணப்படுகின்றது என்பதை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(இ) நாட்டின் வியாபாரங்களுக்கும் வரிச்சட்டங்களுக்கும் (அதாவது இறக்குமதி கொடுப்பனவு நியதி ஒழுங்குவிதிகள், மாற்றல் விலையிடல் ஒழுங்குவிதிகள்) உட்பட்டு தயாரிப்பு, பெறுமதி கூட்டல் மற்றும் மீள் ஏற்றுமதி நோக்கங்கள் ஆகியவற்றிற்கு மட்டும் மூலப் பொருட்களாக இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களுக்கான கொடுப்பனவுகள் தொடர்பிலான ஒழுங்குவிதிகளுக்கமைவாக கடன்களை பயன்படுத்துவதைக் காத்திரமாகக் காண்காணித்தல் உட்பட சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்களூடாக வெளிநாட்டுச் செலாவணில் மேற்கொள்ளப்படும் பரிமாற்றங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவதிலுள்ள உரிய விழிப்புக்கவனம் அனைத்தையும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

(ஈ) இத்தகைய பணிப்புரைகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட பரிமாற்றங்களிலிருந்து எழக்கூடிய நிகழத்தக்கச் செலாவணி வீத இடர்நேர்வுகளைத் தணிக்கும் பொருட்டு கடன்பெறுநரின் கோரிக்கையின் பேரில் பொருத்தமான பெறுமதி சாதனங்களுக்குள் (திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விடுக்கப்பட்ட தொடர்பான பணிப்புரைகளுடன் இணங்கியொழுகும் விதத்தில்) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் நுழைதல் வேண்டும்.

(உ) கணக்கை பேணும் காலப்பகுதியிலும் அத்தகைய கணக்கை மூடியதன் பின்னர் நியதிச்சட்ட பதிவை வைத்திருக்கின்ற தேவைப்பாடுகள் வரையான காலப்பகுதியிலும் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்களூடாக மேற்கொள்ளப்படும் அனைத்து பரிமாற்றங்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ஆவணப்படுத்தல் சான்றை (ஒன்றில் வன் பிரதியில் அல்லது இலத்திரனியல்/டிஜிட்டல் வடிவத்தில்) பேணுதல் வேண்டும்.

7. அறிக்கையிடும் தேவைப்பாடு

(அ) வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரால் குறித்துரைக்கப்பட்டவாறான வடிவத்தில் இத்தகைய பணிப்புரைகளின் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்களை திறந்து பேணுதல் தொடர்பான தகவல்களை அடுத்துவருகின்ற மாதத்தின் 15ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் dfem@cbsl.lk என்ற மின்னஞ்சல் மூலம் இத்திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கோரப்படுகின்றனர்.

(ஆ) மேலே குறிப்பிட்ட அறிக்கையிடும் தேவைப்பாட்டிற்கமைவாக தமது குறித்த வங்கிகளின் கணக்குகளிலிருந்து அனைத்து தேவையான தகவல்களையும் உருவாக்கும் அல்லது பிரித்தெடுக்கும் பொருட்டு வங்கிக்குள் முறைமையொன்றை நடைமுறைப்படுத்துமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கோரப்படுகின்றனர்.

8. கணக்கை மூடிவிடுதல்

(அ) கடன்பெறுநர் குறித்த கடனை முற்றாக தீர்ப்பனவு செய்யும் சூழ்நிலையில் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மூடிவிடுதல் வேண்டும்.

(ஆ) மற்றுமொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் திறக்கப்பட வேண்டிய சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன் ஒன்றினூடாக தொடர்ச்சியாக எதிர்கால மீள்கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக குறித்த கடனை முற்றாகத் தீர்ப்பனவு செய்வதற்கு முன்னர் கடன்பெறுநர் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்களை மூடுவதற்கு கோருகின்ற சந்தர்ப்பத்தில், புதிய சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்களை திறப்பதற்கு விரும்புகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் திருப்திக்காக தொடர்புடைய தகவல்களை/ ஆணவங்களை (அதாவது கடன் பெறுகை விபரங்கள் பற்றிய சான்றுபடுத்தல், சேகரிக்கப்பட்ட அனைத்து ஆவணங்கள்) அனுப்பியதன் பின்னர் மட்டும் அசலான சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்களை வைத்திருக்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கணக்கை மூட முடியும்.

(இ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அத்தகைய மூடுதல் பற்றி கணக்கு மூடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வார காலப்பகுதிக்குள் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளருக்கு dfem@cbsl.lk என்ற மின்னஞ்சலூடாக அறிவித்தல் வேண்டும்.

9. இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் உள்ளடக்கப்படாத வேறு ஏதேனும் நோக்கத்திற்காக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்களுக்கு/ சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுங்கால கடன்களிலிருந்து ஏதேனும் பரிமாற்றங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் முந்தைய அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கோரப்படுகின்றனர்.

10. **இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக:**

(அ) "குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்" என்பது ஐக்கிய அமெரிக்க டொலர், யூரோ, ஸ்ரேலிங் பவுண்ட், அவுஸ்திரேலியன் டொலர், சிங்கப்பூர் டொலர், ஸ்வீடிஷ் குரோனார், சுவிஸ் பிராங், கனேடியன் டொலர், கொங்கொங் டொலர், யப்பானிய ஜென், டேனிஷ் குரோனார், நோர்வேயியன் குரோனார், சீன றென்மின்பி, நியூசிலாந்து, டொலர் தாய் பாட் மற்றும் இந்திய ரூபாய் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(ஆ) "பணவலுப்பல்கள்" என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளுக்கிடையிலான மாற்றல்கள், வங்கி வரைவுகள், ஏனைய கொடுப்பனவுச் சாதனங்கள், பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய கொடுப்பனவு பொறிமுறைகளினூடாக அல்லது தளங்களூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள், நாணயத்தாள்களை விட வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் ஈடுபடும் பரிவர்த்தனைக் கம்பனிகள்/ இல்லங்கள் ஆகியவற்றிலிருந்தான நிதியங்கள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

11. இப்பணிப்புரையில் கோரப்பட்ட எதுவும், இப்பணிப்புரைகளின் கீழ் வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனுமாளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது அல்லது விடுவிக்கின்றது என பொருள்கேடலாகாது.

பணிப்பாளர்
வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
2022 திசெம்பர் 09

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

2311/38ஆம் இலக்கம் - 2022ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22ஆந் திகதி வியாழக்கிழமை
(ஆணையத்தால் வெளியிடப்பட்டது)

பகுதி I: தொகுதி (I) - பொது
அரசாங்க அறிவித்தல்கள்
2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

22ஆம் பிரிவின் கீழான கட்டளை

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 22இன் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம், 2022 யூன் 30ஆந் திகதியிடப்பட்ட 2286/27 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 22இன் கீழான கட்டளை செல்லுபடியாகும் காலத்தினை 2022 திசெம்பர் 30ஆந் திகதியிலிருந்து மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கின்றேன்.

ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி அமைச்சு
கொழும்பு 01,
2022 திசெம்பர் 22

2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2022 பெப்புருவரி 02

சேரல்: அனைத்து வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள்

லங்காசெட்டில் முறைமை மீதான பத்திரங்களற்ற அரசாங்கப் பிணையங்களுக்கெதிரான நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி ஏற்பாட்டுடன் தொடர்புடைய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்

2018 ஏப்பிறல் 12 அன்று நடைமுறைக்கு வரும் விதத்தில் மேலே விடுக்கப்பட்ட 35/01/005/0006/36ஆம் இலக்க உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்கள சுற்றறிக்கையானது இரத்துச்செய்யப்பட்டு இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்படும் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியை பயன்படுத்துவதற்கு தகைமைவாய்ந்த பங்கேற்பாளர்களுக்கு திருத்தங்களுடன் மீண்டும் விடுக்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றீர்கள்.

இதற்கமைய, 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2022 பெப்புருவரி 02 தொடக்கம் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்பதுடன் அனைத்து வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களும் அதையொத்தவற்றுடன் இணங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முனைவர். பி. கே. ஜி. ஹரிச்சந்திர
பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2022 பெப்புருவரி 02

சேரல்: அனைத்து வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள்

லங்காசெட்டில் முறைமை மீதான பத்திரங்களற்ற அரசாங்கப் பிணையங்களுக்கெதிரான நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி ஏற்பாட்டுடன் தொடர்புடைய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2022 பெப்புருவரி 02ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவருதல் வேண்டும் என்பதுடன் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களுக்கு நியாயமான காலத்திலான அறிவித்தலொன்றுடன் காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் திருத்தப்படலாம் அல்லது மாற்றப்படலாம். தகைமையுடைய பிணைய உறுதிக்கெதிராக இலங்கை மத்திய வங்கி மூலமான நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி வழங்கலுடன் தொடர்புடைய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் கீழ்வருமாறு எடுத்துரைக்கப்படுகின்றன.

லங்காசெட்டில் முறைமை விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு, இலங்கை மத்திய வங்கியானது அதன் தற்துணிபின் பேரில், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் சீரான தொழிற்பாட்டினை வசதிப்படுத்தும் நோக்குடன், லங்காசெட்டில் முறைமையில் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களுக்கு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் நிதியங்களை வழங்கலாம்.

1. பொதுவாக, பெயர்குறிக்கப்பட்ட வணிகரல்லாத விலைக் குறிப்பீட்டாளர்கள் தவிர, லங்காசெட்டில் மீதான அனைத்து வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களும் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியினைப் பயன்படுத்துவதற்கு தகைமை பெற்றவர்களாவர். இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல் நோக்கங்களுக்காக:

   i. லங்காசெட்டில் முறைமை விதிகள் (இதனகத்துப் பின்னர் முறைமை விதிகள் என குறிப்பீடு செய்யப்படும்) என்பது காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்படக்கூடிய நாணய விதிச் சட்டத்தின் நியதிகளுக்கமைய லங்காசெட்டில் முறைமையின் தொழிற்பாடுகளுக்காக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் விதிகளாகும்.

   ii. வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் என்பது முறைமை விதிகளின் பொது ஏற்பாடுகளின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான பங்கேற்பாளர்களாகும். நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியினை பயன்படுத்துவதற்கு தகைமைபெறும் பொருட்டு வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள், முறைமை விதிகளின் 2ஆம் தொகுதியின் 7.1ஆம் விதியில் தேவைப்படுத்தப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் இலங்கை மத்திய வங்கியுடன் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட வேண்டும் அத்துடன்

   iii. தகைமையுடைய பிணையங்கள், முறைமை விதிகளின் 2ஆம் தொகுதியின் 7.2ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு அதே பொருளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

2. நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியினைப் பயன்படுத்திக் கொள்வதற்கான பிணைய உறுதியாக தமக்கு உரித்தல்லாத அல்லது மூன்றாம் தரப்பினரொருவருக்குச் சொந்தமான பிணையமொன்றினை வணிகர் நேரடிப் பங்கேற்பாளரொருவரினால் பயன்படுத்தப்படலாகாது. வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் அத்தகைய பிணையமொன்றினைப் பயன்படுத்தியுள்ளனர் என்பது கண்டுபிடிக்கப்படும் சந்தர்ப்பத்தில், முறைமை விதிகளின் 3ஆம் தொகுதியின் 11.3ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய பயன்படுத்தலுக்கு ஏற்புடைய கொடுப்பனவுகள் விதிக்கப்படும்.

3. நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநின்ற தொகையினை முறைமை விதிகளின் நாளாந்த தொழிற்படுத்தல் அட்டவணையிலுள்ள அத்தகைய தொகையின் மீள்கொடுப்பனவுக்காக குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் மீள்கொடுப்பனவு செய்வதன் மூலம் சொல்லப்பட்ட பிணையங்கள், வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் மூலம் மீள்கொள்வனவு செய்யப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனையின் மீது இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கமைவாக வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் இலங்கை மத்திய வங்கிக்கு தகைமையுடைய பிணையங்களை மாற்றல் செய்வதன் மீது நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் நிதியங்கள் வட்டியின்றி வழங்கப்படுகின்றது.

4. நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிகளுக்கான பிணைய உறுதியாக வழங்கப்பட்ட பிணைங்களை பிரதியிடுதல் அனுமதிக்கப்படலாகாது.

நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் கடன் நிதியங்களைப் பெறுவதற்கான நடைமுறை

5. இலங்கை மத்திய வங்கியானது கொடுக்கப்பட்ட நேரத்தில் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களின் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிக் கணக்கில் கிடைக்கப்பெறுகின்ற தகைமையுடைய பிணையங்களின் பெறுமதியின் அடிப்படையில் மாத்திரம் நாளுக்குள்ளான திரவத் தன்மை வசதியின் கீழ் நிதியங்களை வழங்கும். அத்தகைய நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படுகின்ற உத்தியோகபூர்வ விலைகளை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகின்ற தகைமையுடைய பிணையங்களின் பெறுமதியானது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் ஒவ்வொரு வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களினதும் தீர்ப்பனவுக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

6. முந்திய தொழில்நாளின் இறுதியில் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களின் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிக் கணக்கில் கிடைக்கப்பெறுகின்ற தகைமையுள்ள பிணையங்கள் தொழிலுக்காக முறைமை தொடக்கப்படுகின்ற நேரத்தில் இலங்கை மத்திய வங்கியின் நாளுக்குள்ளான கணக்கிற்கு தன்னியக்கமாக மாற்றல் செய்யப்படும்.

7. நாளுக்குள்ளான திரவத்தன்மைத் தேவைப்பாடுகள் தோன்றுகின்ற போதும் தோன்றுகின்றவாறும் முறைமை ஊடாக கோரிக்கை யொன்றினை ஏற்படுத்துவதன் மூலம் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் தொழில் நாளொன்றினுள் தமது தற்றுணிபின் பேரில் பல எண்ணிக்கையான நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி நிதியங்களைப் பெற்றக்கொள்ளவும் மீள்கொடுப்பனவு செய்யவும்முடியும். நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் நிதியங்களைப் பெற்றுக்கொள்ளவதற்கு விரும்புகின்ற வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள், நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியினை பயன்படுத்திக்கொள்ளும் பொருட்டு லங்கா செக்குயரிலுள்ள அவற்றின் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிக் கணக்குகளில் போதுமான தகைமையுடைய பிணையங்களின் அளவை மீளவும் நிலைப்படுத்த வேண்டும்.

பிணையங்களின் உத்தியோகபூர்வ விலைகள்

8. தகைமையுடைய பிணையங்களின் உத்தியோகபூர்வ விலைகள் நடப்புச் சந்தையில் பிந்திக் கிடைக்கக்கூடியதாகவுள்ள விலைகள் மற்றும் சந்தை அபிவிருத்திகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு, நாளாந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். பிணையத்தினதும் மீள்கொடுப்பனவுக் காலத்தினதும் வகை மற்றும் காலம் என்பவற்றைச் சார்ந்து உத்தியோகபூர்வ விலையினைத் தீர்மானிப்பதில் உச்சவரம்பொன்று பிரயோகிக்கப்படுகின்றது. அத்தகைய உத்தியோகபூர்வ விலைகள் லங்காசெக்குயர் முறைமையிலும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் இணையத்தளமூடான இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையிலும் பதிவுசெய்யப்படும்.

நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் பெற்றுக்கொண்ட நிதியங்களை தொழில்நாளின் இறுதியில் தீர்ப்பனவு செய்தல்

9. வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள், நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் கடன் பெற்ற நிதியங்களை முறைமை விதிகளின் நியதிகளுக்கமைவாக வழங்கப்பட்ட நாளாந்த தொழிற்படுத்தல் அட்டவணையில் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் பெற்றுக்கொண்ட நிதியங்களின் மீள்கொடுப்பனவிற்காக குறித்துரைக்கப்பட்ட காலத்திற்கு முன்னர் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ திரும்பச்செலுத்தி பிணைய உறுதியாக பயன்படுத்தப்பட்ட பிணையங்களை முழுமையாக அல்லது பகுதியினை மீளப்பெறலாம்.

10. அனைத்து வெளிநிற்கும் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி நிலுவைகளும் முறைமை விதியின் நியதிகளுக்கமைய வழங்கப்படும் நாளாந்த தொழிற்படுதல் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு தொழில் முடிவிற்கு முன்னர் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் களினால் தீர்ப்பனவு செய்யப்படவேண்டும். இந்நோக்கத்திற்காக, வெளிநிற்கின்ற ஏதேனும் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி நிலுவைகளை இலங்கை மத்திய வங்கி மீள்அறவிடுவதனை இயலச்செய்வதற்கு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி நிலுவைகளின் நேர்மாற்று நேரத்தில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள தமது தீர்ப்பனவுக் கணக்குகளில் போதிய நிதியங்கள் கிடைக்கப்பெறுகின்றன என்பதனை வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் உறுதிசெய்ய வேண்டும்.

11. வெளிநிற்கின்ற நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி நிலுவைகளை மீள அறவிடும் செயன்முறையானது லங்காசெட்டில் முறைமை விதிகளின் நியதிகளுக்கமைய வழங்கப்பட்ட நாளாந்த தொழிற்படுத்தல் அட்டவணையில் அந்நோக்கத்திற்காக குறித்துரைக் கப்பட்ட நேரத்தில் முறைமையின் ஊடாக ஆரம்பிக்கப்படுகின்றது. வழங்கல் எதிர் கொடுப்பனவு நியதிகளின் அடிப்படையில் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்படும் அது தொடர்புடைய அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கணக்கில் நிதியங்கள் கிடைக்கப்பெறுகின்றமைக்குட்பட்டு இலங்கை மத்திய வங்கியின் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிக் கணக்கிலிருந்து வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களின் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிக் கணக்கிற்கு பிணையங்களை மாற்றல் செய்யும். நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி நிலுவைகளின் நேர்மாற்றலானது மூல விலையிலும் மூலக் கொடுக்கல்வாங்கல் பெறுமதியிலும் மேற்கொள்ளப்படும்.

நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் கடன் பெற்ற நிதியங்களின் தவணை தவறுதல்

12. மேலே 10ஆம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் நிலுவையாகவுள்ள தொகையினை இலங்கை மத்திய வங்கிக்கு முழுமையாகத் தீர்ப்பனவு செய்வதற்கு எதுவாயினும் ஏதேனும் காரணத்தினால் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் தவறுமிடத்து, வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் அவ்வாறு நிலுவையாகவுள்ள மொத்தத் தொகைக்கு தவணை தவறியதாக கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், கீழே 16ஆம் வாசகத்தில் எடுத்துரைக்கப்பட்டவாறு தவணை தவறுதலுக்கான வட்டியினைக் கொடுப்பனவு செய்வதற்கு பொறுப்புடையதாதல் வேண்டும். அத்தகைய தவணை தவறுதலுக்கான வட்டியானது அடுத்த தொழில் நாளன்று இலங்கை மத்திய வங்கியுடனான வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களின் தீர்ப்பனவுக் கணக்கில் பற்று வைக்கப்படுதல் வேண்டும்.

13. மேலே எடுத்துரைக்கப்பட்டவாறு, வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் தவணை தவறியுள்ளதாக கருதப்படுமிடத்து, அத்தகைய வணிகர் நேரடிப் பங்கேற்பாளர், அடுத்த தொழில் நாளன்று தொழில் மூடப்படுவதற்கு முன்னர் தவணை தவறிய, அத்துடன் தவணை தவறியதற்கான வட்டித் தொகையினை முழுமையாக மீளச்செலுத்தல் வேண்டும்.

14. இலங்கை மத்திய வங்கியின் கட்டுக்காப்பிலுள்ள பிணையங்களை முறைமை மீள் விலைமதிப்பீடு செய்யும் என்பதுடன் அடுத்த தொழில் நாளுக்கு தொடர்புடைய உத்தியோகபூர்வ விலைகளின் அடிப்படையிலமைந்த அடுத்த தொழில் நாள் மீதான நேர்மாற்றுக் கொடுப்பனவுத் தொகையினை உருவாக்கும். மீள்விலைமதிப்பிட்ட தொகையானது தவணை தவறிய அத்துடன் தவணை தவறியமைக்கான வட்டியின்

மொத்தத் தொகையினை விட உயர்வாகவிருப்பின், இலங்கை மத்திய வங்கியானது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள வணிகர் நேரடிப் பங்கேற்பாளரின் தீர்ப்பனவுக் கணக்கின் வரவிற்கு மிகையான தொகையினை மீளச் செலுத்தும். மீள் விலை மதிப்பிடப்பட்ட தொகையானது தவணை தவறிய தொகை அத்துடன் தவணை தவறியமைக்கான வட்டி என்பவற்றின் மொத்தத் தொகையினை விட குறைவாகவிருப்பின் இலங்கை மத்திய வங்கியானது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள வணிகர் நேரடிப் பங்கேற்பாளரின் தீர்ப்பனவுக் கணக்குகளில் பற்று வைப்பதன் மூலம் வேறுபாட்டினை அறவிடும்.

15. தவணை தவறிய மற்றும் தவணை தவறியமைக்கான வட்டி என்பவற்றின் மீள் மதிப்பீட்டுத் தொகையினை அடுத்த தொழில் நாளன்று தொழில் முடிவின்போது அல்லது அதற்கு முன்னர் மீளச்செலுத்துவதற்கான அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள அதன் தீர்ப்பனவுக் கணக்கில் போதிய நிதியங்கள் கிடைக்கப்பெறுகின்றமையினை வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் உறுதிசெய்ய வேண்டும். மேலே எடுத்துரைக்கப்பட்ட தொகையினை அடுத்த தொழில் நாளன்று தொழில் முடிவடைவதற்கு முன்னர் தீர்ப்பனவு செய்வதற்கு வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் தவறுகின்ற சந்தர்ப்பத்தில், இலங்கை மத்திய வங்கியானது, அத்தகைய நிதியங்கள் வழங்கப்பட்டமைக்கெதிரான பிணையங்களைப் பிடித்துவைத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கி பொருத்தமானது என கருதுகின்ற நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும்.

16. முதற்தடவை நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி தவணை தவறுதலின் மீது, வணிகர் நேரடிப் பங்கேற்பாளரிடம் மாதமொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு 5 சதவீத தவணை தவறியமைக்கான வட்டி அறவிடப்பட வேண்டும். ஒரு பஞ்சாங்க ஆண்டின் போது அதனைத் தொடர்கின்ற ஒவ்வொரு தவணை தவறுகின்ற நிகழ்வின்போதும் அத்தகைய தவணை தவறியமைக்கான வட்டி வீதமானது 100 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரிக்கப்படுதல் வேண்டும். ஆயினும், அத்தகைய தவணை தவறுதலானது முன்னுறுகின்ற தவணை தவறுதலிலிருந்து, 30 நாட்களுக்குள் ஒன்றுக்கு மேலதிகமாக நிகழ்கின்றவிடத்து, இவ்வாசகத்தில் விதந்துரைக்கப்பட்டவாறு தவணை தவறியமைக்கான வட்டியினை அறவிடுவதற்கான உரிமைக்கு மேலதிகமாக, நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி வழங்கப் படுவதற்கு எதிராக வைக்கப்பட்ட பிணையங்களை பிடித்துவைப்பதற்கான உரிமையினையும், இலங்கை மத்திய வங்கி பொருத்தமானது எனக் கருதுகின்ற நடவடிக்கை எடுப்பதற்கான உரிமையினையும் கொண்டிருத்தல் வேண்டும். மீண்டும் மீண்டும் தவணை தவறுகின்ற நிகழ்வின் போது, இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படுகின்ற காலப்பகுதியொன்றுக்கு வணிகர் நேரடிப் பங்கேற்பாளருக்காக கிடைக்கப்பெறுகின்ற நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியினை இலங்கை மத்திய வங்கி புறக்கீடு செய்யலாம்.

17. நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி உடன்படிக்கையின் அல்லது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் வேறு ஏற்பாடுகள் எவ்வாறிருப் பினும் அத்துடன் முன்னுறுகின்ற 30 நாள் காலப்பகுதியினுள் ஒன்றுக்கு மேற்பட்ட தவணை தவறுதல் ஏற்பட்டிருக்கவில்லை என்ற விடயம் எவ்வாறிருப்பினும், இலங்கை மத்திய வங்கியானது அதன் ஏக தற்றுணிபின் பேரில் தவணை தவறுகையொன்றின் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, பிணையங்களைப் பிடித்துவைப்பதற்கும், பொருத்தமானது என இலங்கை மத்திய வங்கி கருதுகின்றவாறு நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கலாம்.

18. மேலே 2ஆம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியினைப் பயன்படுத்துவதற்காக வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் 3ஆம் தரப்புப் பிணையங்களைப் பயன்படுத்தியுள்ளமை கண்டுபிடிக்கப்படுமெனில் அத்தகைய வணிகர் நேரடிப் பங்கேற்பாளர், முறைமை விதிகளையும் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களையும் மீறியுள்ளதாகக் கருதப்படும். அத்தகைய மீறுகைகளுக்காக சொல்லப்பட்ட விதிகளில் குறித்துரைக்கப்பட்ட பின்வரும் கொடுப்பனவுகள் விதிக்கப்படுதல் வேண்டும்.

அட்டவணை 1: நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியுடன் தொடர்புடைய விதிகளின் மீறுகைக்கான கொடுப்பனவுகள்

3ஆம் தரப்பினர் பிணையங்களுக்கெதிராக கடன்பட்ட தொகை (ரூ. மில்லியன்)	நாளொன்றுக்கு விதிக்கப்படும் வீதங்கள் (%)
1,000 வரை	2.0
1,000 இற்கு மேல்	2.5

19. இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் ஏனைய ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் தவணை தவறுதலொன்றின் அல்லது மூன்றாம் தரப்புப் பிணையங்களை பயன்படுத்துகின்ற சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு இலங்கை மத்திய வங்கியானது அதன் ஏக தற்றுணிபின் பேரில், வணிகர் நேரடிப் பங்கேற்பாளருக்காக நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி கிடைக்கப்பெறுவதனை நிரந்தரமாக அல்லது இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படும் காலப்பகுதியொன்றுக்காக புறக்கீடு செய்யலாம்.

20. 2018 ஏப்பிறல் 12ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0006/36, இலக்கத்தினைக் கொண்ட "லங்காசெட்டில் மீதான பத்திரங்களற்ற அரசாங்கப் பிணையங்களுக்கெதிராக நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி வழங்கல் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்" என்ற தலைப்பிலான சுற்றறிக்கைகளின் நியதிகளுக்கமைய வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றன.

21. இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மற்றும் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி உடன்படிக்கை என்பவற்றுக்கிடையிலான ஏதேனும் முரண்பாடு தோன்றும் பட்சத்தில் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி உடன்படிக்கை மேலோங்கி நிற்கும்.

முனைவர். பி. கே. ஜி. ஹரிச்சந்திர
பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை 2022 மே 19

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்

நாணயக் கடிதங்களுக்கெதிராக காசு எல்லை வைப்புத் தேவைப்பாடுகளைப் பேணுவதன் மீது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 103ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட கட்டளை

1. உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் நாணயக் கடிதத்தினைத் திறக்கின்ற நேரத்தில் உரிய உரிமம்பெற்ற வங்கிகளில் பேணப்படுகின்ற 100 சதவீத வட்டி உரித்தற்ற காசு எல்லை வைப்பினால் அத்தகைய நாணயக் கடிதங்கள் உள்ளடக்கப்பட்டாலன்றி இதற்கு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதிக்காக உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் நாணயக் கடிதங்கள் திறக்கப்படலாகாது என உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் இத்தால் பணிக்கப்பட்டுள்ளன.

2. இக்கட்டளை மூலம் உள்ளடக்கப்படும் பொருட்களின் இறக்குமதிக்காக பின்வரும் நிபந்தனைகளும் ஏற்புடையதாதல் வேண்டுமெனவும் உரிமம்பெற்ற வங்கிகள் மேலும் பணிக்கப்பட்டுள்ளன.

   அ) அதே விலைப்பட்டியல் இக்கட்டளை மூலம் உள்ளடக்கப்படாத பொருட்களை உள்ளடக்கியுள்ள விடயம் எவ்வாறிருப்பினும் காசு எல்லை வைப்புத் தேவைப்பாடுகள் விலைப் பட்டியலின் மொத்தப் பெறுமதி மீதானதாக இருத்தல் வேண்டும்.

   ஆ) இக்கட்டளை மூலம் உள்ளடக்கப்படும் பொருட்கள் இறக்குமதியினை உள்ளடக்குகின்ற ஏற்கனவேயுள்ள நாணயக் கடிதங்கள் விடயத்தில், அத்தகைய அதிகரிப்பானது மேலே (1)இல் வேண்டப்பட்டவாறு காசு எல்லை வைப்புக்களினால் உள்ளடக்கப்பட்டாலன்றி அத்தகைய நாணயக் கடிதங்களின் பெறுமதியில் அதிகரிப்பு எதுவும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அனுமதிக்கப்படலாகாது.

   இ) இக்கட்டளை மூலம் விதிக்கப்பட்ட குறைந்தபட்ச காசு எல்லை வைப்புத் தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு அத்தகைய வாடிக்கையாளர்களை இயலச்செய்யும் நோக்கத்திற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு ஏவையேனும் முற்பணங்களை வழங்கலாகாது.

   ஈ) இக்கட்டளைக்கமைவாக காசு எல்லை வைப்பு பேணப்படுகின்றதா என்பதனை சான்றுபடுத்தி தொடர்புடைய விலைப் பட்டியலை உரிமம்பெற்ற வங்கிகள் புறக்குறிப்பீடு செய்தல் வேண்டும்.

   உ) எல்லை வைப்பானது இலங்கையிலுள்ள வங்கித்தொழில் வழிகளூடாக கொடுப்பனவுகள் மீதான ஆவண ரீதியான சான்றினதும் இறக்குமதிகளை அப்புறப்படுத்தல் தொடர்பில் சுங்க ஆவணங்களினதும் சமர்ப்பித்தலின் மீது விடுவிக்கப்படுதல் வேண்டும்.

3. இக்கட்டளையின் ஏற்பாடுகள் தற்போது வலுவிலுள்ள ஏதேனும் தேவைப்படுத்தலுக்கு மேலதிகமாகவும் பொருட்கள் ஏற்றுமதி தொடர்பில் ஏதேனும் சட்டத்தின் நியதிகளுக்கமைய அறிமுகப்படுத்தப்படக்கூடிய அத்தகைய வேறு தேவைப்படுத்தல்களுக்கும் மேலதிகமாக வலுவுள்ளதாகவிருத்தல் வேண்டும்.

முனைவர் ஆர் ஏ அனில் பெரேரா
பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

இணைப்பு I: எல்லைத் தேவைப்பாட்டிற்குட்பட்ட இணங்குவிப்பு குறியீடுகளின் பட்டியல்கள் 2022ஆம் ஆண்டின் 01ஆம்

இல.	இணங்குவிப்புக் குறியீடு
1	030441
2	030449
3	030451
4	030461
5	030462
6	030469
7	030474
8	04029990
9	040310
10	040390

இல.	இணங்குவிப்புக் குறியீடு
11	040510
12	040620
13	040630
14	040690
15	060311
16	060490
17	08011190
18	08011990
19	08021190
20	08023190

இல.	இணங்குவிப்புக் குறியீடு
21	08028090
22	08041010
23	08041020
24	08051010
25	08052110
26	080610
27	080620
28	080810
29	080830
30	080940

இல.	இணங்குவிப்புக் குறியீடு
31	081050
32	08109090
33	081120
34	081190
35	081320
36	081330
37	08134090
38	081350
39	081400
40	090121

இல.	இணங்குவிப்புக் குறியீடு
41	090122
42	09022019
43	09022093
44	09022099
45	100490
46	110412
47	110419
48	110422
49	110423
50	110429
51	110430
52	110510
53	110520
54	110710
55	110720
56	110814
57	110900
58	180620
59	180631
60	180632
61	180690
62	190211
63	190219
64	190220
65	190230
66	190240
67	190410
68	190420
69	200799
70	200811
71	20081910
72	20081920
73	20081990
74	20083090
75	200860
76	200870
77	200897
78	20089910
79	20089990
80	20091110
81	20091190
82	200912

இல.	இணங்குவிப்புக் குறியீடு
83	200949
84	200969
85	200971
86	200979
87	200981
88	20098990
89	200990
90	220210
91	220291
92	22029910
93	22029930
94	22029940
95	22029951
96	22029959
97	22029961
98	22029969
99	22029970
100	22029991
101	22029999
102	22030010
103	22030020
104	22030090
105	220410
106	220421
107	220510
108	220710
109	220820
110	220830
111	22084010
112	220850
113	220860
114	220870
115	22089010
116	240210
117	24022020
118	24022050
119	24022060
120	24031920
121	24031990
122	24039190
123	24039990
124	33030010

இல.	இணங்குவிப்புக் குறியீடு
125	33030021
126	33030022
127	33030029
128	330410
129	330420
130	330430
131	330491
132	330499
133	330510
134	330520
135	330530
136	330590
137	330610
138	330690
139	330710
140	330720
141	330730
142	330749
143	33079090
144	34011920
145	34012010
146	34013020
147	34029010
148	340510
149	340520
150	340530
151	34054010
152	34054090
153	340590
154	340600
155	38070010
156	38140010
157	38140090
158	381900
159	39262020
160	39262090
161	401519
162	401590
163	401691
164	401694
165	40169510
166	40169590

இல.	இணங்குவிப்புக் குறியீடு
167	40169990
168	420100
169	420211
170	420212
171	420219
172	420221
173	420222
174	420229
175	420231
176	420232
177	420239
178	420291
179	420292
180	420299
181	420310
182	420321
183	420329
184	420330
185	420340
186	42050010
187	42050090
188	430400
189	441911
190	441990
191	442090
192	44219190
193	44219990
194	480300
195	48181010
196	48181090
197	481820
198	481830
199	48185090
200	48189020
201	48189090
202	570110
203	57019090
204	57022010
205	570231
206	570232
207	570241
208	570249

இல.	இணங்குவிப்புக் குறியீடு
209	570292
210	570299
211	570320
212	570330
213	57039090
214	57049090
215	570500
216	610120
217	610130
218	610190
219	610210
220	610220
221	610230
222	610290
223	610310
224	610322
225	610323
226	610329
227	610331
228	610332
229	610333
230	610339
231	610341
232	610342
233	610343
234	610349
235	610413
236	610419
237	610422
238	610423
239	610429
240	610431
241	610432
242	610433
243	610439
244	610442
245	610443
246	610444
247	610449
248	610452
249	610453
250	610459

இல.	இணங்குவிப்புக் குறியீடு
251	610461
252	610462
253	610463
254	610469
255	610510
256	610520
257	610590
258	610610
259	610620
260	610690
261	610721
262	610729
263	610791
264	610799
265	610831
266	610832
267	610839
268	610891
269	610892
270	610899
271	610910
272	610990
273	611011
274	611012
275	611019
276	611020
277	611030
278	611090
279	611120
280	611130
281	611190
282	611211
283	611212
284	611219
285	611231
286	611239
287	611241
288	611249
289	611300
290	611420
291	611430
292	611490

இல.	இணங்குவிப்புக் குறியீடு
293	611510
294	611529
295	611530
296	611594
297	611595
298	611596
299	611599
300	611610
301	611691
302	611692
303	611693
304	611699
305	611710
306	61178010
307	61178020
308	620111
309	620112
310	620113
311	620119
312	620192
313	620193
314	620199
315	620211
316	620212
317	620213
318	620219
319	620291
320	620292
321	620293
322	620299
323	620311
324	62031290
325	62031990
326	62032290
327	62032390
328	62032990
329	620331
330	62033290
331	62033390
332	62033990
333	620341
334	62034290

இல.	இணங்குவிப்புக் குறியீடு
335	62034390
336	62034911
337	62034990
338	62041290
339	62041390
340	62041990
341	62042290
342	62042390
343	62042990
344	620431
345	62043290
346	62043390
347	62043990
348	620441
349	62044219
350	62044290
351	62044390
352	62044419
353	62044490
354	62044990
355	62045290
356	62045390
357	62045990
358	620461
359	62046219
360	62046290
361	62046390
362	62046919
363	62046990
364	62052090
365	62053090
366	62059090
367	62061090
368	620620
369	62063090
370	62064019
371	62064090
372	62069090
373	62072290
374	62082190
375	62082290
376	62082990

இல.	இணங்குவிப்புக் குறியீடு
377	62089190
378	620920
379	620930
380	620990
381	621010
382	621020
383	621030
384	621040
385	621050
386	621111
387	621112
388	621120
389	62113290
390	62113390
391	62113990
392	62114219
393	62114292
394	62114299
395	62114319
396	62114392
397	62114399
398	62114919
399	62114992
400	62114999
401	62132090
402	62139090
403	62141090
404	62144090
405	62149090
406	621510
407	621520
408	621590
409	621600
410	630110
411	630120
412	630130
413	630140
414	630190
415	630210
416	63022190
417	63022290
418	63022990

இல.	இணங்குவிப்புக் குறியீடு
419	63023190
420	63023290
421	63023990
422	630240
423	63025190
424	63025990
425	63026090
426	63029190
427	63029390
428	63029990
429	630312
430	630319
431	630391
432	630392
433	630399
434	630411
435	63041990
436	630420
437	630491
438	63049290
439	63049390
440	63049990
441	63051010
442	63051090
443	630520
444	630532
445	630533
446	630539
447	630590
448	630612
449	630619
450	630622
451	630629
452	630630
453	630640
454	630690
455	630710
456	630720
457	630790
458	63079090
459	640110
460	640199

இல.	இணங்குவிப்புக் குறியீடு
461	640212
462	64021910
463	64021919
464	640220
465	640291
466	640299
467	640312
468	64031910
469	64031919
470	640320
471	640340
472	640351
473	640359
474	640391
475	640399
476	640411
477	640419
478	640420
479	640510
480	640520
481	640590
482	650100
483	650200
484	650400
485	65050010
486	65050090
487	65061090
488	65069110
489	65069190
490	65069910
491	65069990
492	650700
493	660110
494	660191
495	660199
496	670300
497	670411
498	670419
499	670420
500	670490
501	691110
502	69120010

இல.	இணங்குவிப்புக் குறியீடு
503	69120090
504	69139090
505	701310
506	701322
507	701328
508	701333
509	701337
510	701341
511	701342
512	701349
513	701391
514	70139990
515	701810
516	701820
517	701890
518	732111
519	732112
520	732119
521	732181
522	732182
523	732189
524	732310
525	732391
526	732392
527	732393
528	732394
529	732399
530	73241010
531	73241090
532	732421
533	732429
534	732490
535	74181090
536	741820
537	76151020
538	76151090
539	76152090
540	821000
541	821110
542	821191
543	821192
544	821194

இல.	இணங்குவிப்புக் குறியீடு
545	82121010
546	82121090
547	82122090
548	821300
549	821410
550	821420
551	821490
552	821510
553	821520
554	821599
555	830300
556	830621
557	830629
558	830630
559	841451
560	841459
561	84151021
562	84151022
563	84151023
564	84151024
565	84151029
566	84151032
567	84151033
568	84151034
569	84151035
570	84151039
571	84158190
572	84158290
573	84158390
574	84159019
575	84159029
576	84181090
577	84182190
578	84182920
579	84182990
580	84231020
581	84501110
582	84501131
583	84501132
584	84501133
585	84501134
586	84501139

இல.	இணங்குவிப்புக் குறியீடு
587	84501141
588	84501142
589	84501143
590	84501144
591	84501149
592	84501210
593	84501231
594	84501232
595	84501233
596	84501234
597	84501239
598	84501910
599	84501931
600	84501932
601	84501933
602	84501934
603	84501939
604	850811
605	850940
606	850980
607	851010
608	851020
609	851030
610	85131010
611	85131090
612	851610
613	851621
614	851629
615	851631
616	851632
617	851633
618	851640
619	851650
620	85166010
621	85166090
622	851671
623	851672
624	85167910
625	85167920
626	85167990
627	851680
628	851711

இல.	இணங்குவிப்புக் குறியீடு
629	85171210
630	85171220
631	85171290
632	851718
633	85258090
634	852712
635	852713
636	852719
637	852721
638	852729
639	852791
640	852792
641	852799
642	85285990
643	852869
644	85287120
645	85287190
646	85287210
647	85287231
648	85287232
649	85287233
650	85287234
651	85287235
652	85287236
653	85287239
654	85287241
655	85287249
656	85287291
657	85287299
658	85287320
659	85287390
660	85291010
661	85291030
662	85291090
663	852990
664	853910
665	85392110
666	85392190
667	85392210
668	85392220
669	85392290
670	853929

இல.	இணங்குவிப்புக் குறியீடு
671	85392910
672	85392990
673	85393110
674	85393190
675	853932
676	853939
677	853941
678	853949
679	853950
680	853990
681	900410
682	900490
683	900510
684	900580
685	910111
686	91011990
687	910121
688	910129
689	910191
690	910199
691	910211
692	910212
693	910219
694	910221
695	910229
696	910291
697	910299
698	910511
699	910519
700	910521
701	910529
702	910700
703	920110
704	920120
705	920190
706	920210
707	920290
708	920510
709	920590
710	920600
711	920710
712	920790

இல.	இணங்குவிப்புக் குறியீடு	இல.	இணங்குவிப்புக் குறியீடு	இல.	இணங்குவிப்புக் குறியீடு	இல.	இணங்குவிப்புக் குறியீடு
713	920890	730	94054040	747	950440	764	950790
714	94012090	731	94054090	748	950450	765	950890
715	94013090	732	94055010	749	95049090	766	960340
716	94017190	733	94055020	750	950510	767	960400
717	94019090	734	94055090	751	950590	768	960500
718	94032090	735	940560	752	95062910	769	961310
719	94039090	736	940591	753	95062920	770	961320
720	94051010	737	940592	754	95062990	771	961390
721	94051020	738	94059910	755	950631	772	961511
722	94051090	739	94059990	756	950651	773	961519
723	94052010	740	95030010	757	950659	774	961590
724	94052020	741	95030030	758	950661	775	96161010
725	94052090	742	95030050	759	950662	776	96161090
726	940530	743	95030070	760	950669	777	96170090
727	94054010	744	95030080	761	950691	778	961800
728	94054020	745	95030090	762	950699	779	962000
729	94054030	746	950420	763	950720		

2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை 2022 நவெம்பர் 03

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் (வங்கி வீதம்)

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு விதிவிலக்கான கடன்களை அல்லது முற்பணங்களை வழங்குவதற்காக, மத்திய வங்கியினால் அவசர காலங்களின் போது பயன்படுத்தக்கூடிய நிருவாக ரீதியாகத் தீர்மானிக்கப்படுகின்ற வீதமொன்றான வங்கி வீதமானது 700 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட அளவுடன் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட தற்போது கிடைக்கத்தக்கதாகவுள்ள சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதத்திற்கு நிகரான விதத்தில் 2022 நவெம்பர் 03 இலிருந்து அதேயளவிற்குச் சீராக்கப்படும் என்பது பற்றி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

முனைவர் ஆர். ஏ. அனில் பெரேரா
பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

சுற்றறிக்கை இல. 01/2022 2022 சனவரி 10

தொடர்பு: 037/06/008/0006/020

சேரல்: அனைத்து நிதியியல் நிறுவனங்களினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்/பொது முகாமையாளர்கள்/ முகாமைத்துவப் பணிப்பாளர்கள்

ஐயா/அம்மணி,

2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் நோக்கங்களுக்காக சிசிரிவி தொழிற்பாடுகள் மீதான நிதியியல் நிறுவனங்களுக்கான வழிகாட்டல்களுக்கான திருத்தம்

மேற்குறித்தவை தொடர்பில் 2021 யூலை 20ஆம் திகதியிடப்பட்டு வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு மேலதிகமானது,

மேற்குறித்த வழிகாட்டல்களின் 15ஆம் வாசகம் கீழ்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

15. நிதியியல் நிறுவனங்கள், சிசிரிவி முறைமையில் பதிவாகிய அனைத்துத் தகவல்களையும் குறைந்தபட்சம் 90 நாட்களைக் கொண்ட காலப்பகுதிக்காகப் பேண வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள
டி. ஆர். கருணாரத்ன
பணிப்பாளர்
நிதியியல் உளவறிதல் பிரிவு

பிரதி: பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
பணிப்பாளர் நாயகம், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
அனைத்து நிதியியல் நிறுவனங்களின் இணங்குவிப்பு அலுவலர்கள்

சுற்றறிக்கை இல. 02/2022 2022 மார்சு 22

தொடர்பு: 037/05/002/0005/022

சேரல்: நிதியியல் நிறுவனங்களின் பொது முகாமையாளர்கள்/முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கைகள் தொடர்பில் கோரப்படும் மேலதிக தகவல்கள்

சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து கோரப்படும் "தகவல்களுக்கான அழைப்பு" அறிக்கைகளுக்கு பதில்களைப் பெற்றுக்கொள்வதில் நிதியியல் உளவறிதல் பிரிவு சில தாமதங்களை அவதானித்துள்ளது. ஆகையினால், சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல்கள் மீதான மேலதிக தகவல் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கின்ற போது பின்வரும் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினை கடைப்பிடிக்குமாறு நிதியியல் நிறுவனங்கள் வேண்டப்படுகின்றன.

- "மிகவும் அவசரமானது" தகவல் கோரிக்கைகளுக்கு, நிதியியல் நிறுவனங்கள் 24 மணித்தியாலங்களுக்குள் அல்லது கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு தகவல்களை வழங்குவதற்கு வேண்டப்படுகின்றன.
- "அவசரமானது" தகவல் கோரிக்கைகளுக்கு, கடிதத் திகதியிலிருந்து மூன்று வேலைநாட்களினுள் தகவல்களை வழங்குவதற்கு வேண்டப்படுகின்றன.
- ஏனைய கோரிக்கைகளுக்கு, கடிதத் திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தகவல்களை வழங்குவதற்கு வேண்டப்படுகின்றன.

2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம், 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம்) விதிகள், அத்துடன் அதன் கீழ் வழங்கப்பட்ட ஏனைய விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றுடனான இணங்குவித்தலை உறுதிசெய்வதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவினால் மேற்கொள்ளப்படும் "தகவலுக்கான அழைப்புளூ கோரிக்கைகளுக்கு பதிலளிக்கின்ற போது மேலே குறிப்பிட்ட காலவரையறைகளுடன் கண்டிப்பாக இணங்கியொழுகுமாறு நீங்கள் இத்தால் கோரப்படுகின்றீர்கள்.

தங்கள் உண்மையுள்ள
பணிப்பாளர்
நிதியியல் உளவறிதல் பிரிவு

பிரதி : இணங்குவிப்பு அலுவலர்கள்

சுற்றறிக்கை இல. 03/2022 2022 ஒகத்து 25

தொடர்பு: 037/06/006/0005/022

சேரல்: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் / பொது முகாமையாளர்கள்/ முகாமைத்துவப் பணிப்பாளர்கள்

ஐயா/அம்மணி,

வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு வினைத்திறன்மிக்க வங்கித்தொழில் பணிகளை வழங்குதல்

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையினைக் கருத்திற்கொண்டு இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியை ஈர்க்கின்ற அதேவேளை தேசிய சட்டங்கள் மற்றும் விதிகள், ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் அத்துடன் அத்தகைய சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள் என்பவற்றை கடைப்பிடிப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

வெளிநாடுகளிலிருந்து கணக்குகளை ஆரம்பிக்கின்ற போதும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் என்பவற்றுடன் பேணப்படுகின்ற கணக்குகளூடாக நிதிப் பரிமாற்றல்களை மேற்கொள்ளுகின்ற போதும் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் பற்றி இலங்கை மத்திய வங்கிக்கும் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்பது எமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆற்றுப்படுத்தப்பட்ட பல முறைப்பாடுகள் பின்வருவன தொடர்பானவை

1. அலுவலர்களால் வழங்கப்படும் சேவைகளை நிறைவுசெய்வதற்கு நியாயமற்ற ரீதியில் எடுத்துக்கொள்ளப்படும் நீண்ட நேரம்,
2. வெளிநாடுகளிலிருந்து நிதியங்கள் அனுப்பப்படுகின்ற போது தொடர்புடைய உள்நாட்டு கணக்குகளுக்கு வரவுவைப்பதில் தாமதங்கள் மற்றும் நீண்டகாலம் எடுத்தல்,
3. இலங்கை மத்திய வங்கி/நிதியியல் உளவறிதல் பிரிவு சுற்றறிக்கைகளுக்கு வங்கி அலுவலர்கள் தவறான பொருள் விளக்கம் வழங்குதல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு தவறான தகவல்களை வழங்குதல்.

இம்முறைப்பாடுகளில் அநேகமானவை பிராந்தியத்தில் அத்துடன் வெளியிடங்களிலுள்ள கிளைகளின் நடத்தையினை மையப்படுத்தியிருந்தன.

ஆகையினால், பிராந்திய மற்றும் வெளியிடக் கிளைகள் மூலம் பணவனுப்பல்களை கவருவதற்கான செயன்முறைகளை சீரமைப்பதற்கு உங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

தங்கள் உண்மையுள்ள
(திருமதி) ஈ எச் மொஹொட்டி
பணிப்பாளர்
நிதியியல் உளவறிதல் பிரிவு

பிரதி: பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் இணங்குவிப்பு அலுவலர்கள்

சுற்றறிக்கை இல. 04/2022 2022 நவெம்பர் 21

தொடர்பு: 037/05/003/0005/022

சேரல்: அனைத்து நிதியியல் நிறுவனங்களினதும் பொது முகாமையாளர்கள்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

ஐயா/அம்மணி,

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினூடாக வாடிக்கையாளர் அடையாள விபரங்களை அத்தாட்சிப்படுத்தல்

2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகள் மூலம் கோரப்பட்டவாறு வாடிக்கையாளர் அடையாள விபரங்களை அத்தாட்சிப்படுத்தும் சேவையினை வழங்குவதற்கு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் இணங்கியுள்ளது.

உங்களது நிறுவனம் மேற்குறித்த சேவையினைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வமுடையதாகவிருப்பின், நீங்கள் கோரிக்கையொன்றினை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் திரு. ஐ.எஸ்.எச்.ஜே. இலுக்குபிட்டிய என்பவருக்கு அனுப்பலாம். சேவையினைப் பெற்றுக்கொள்வதில் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினுடனான தற்போதைய ஏற்பாட்டையொத்த புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துடன் கைச்சாத்திடுவதற்கு உங்களது நிறுவனம் வேண்டப்படுமென்பதை தயவுசெய்து கருத்திற்கொள்ளவும்.

தங்கள் உண்மையுள்ள
பணிப்பாளர்
நிதியியல் உளவறிதல் பிரிவு

பிரதி: திரு. ஐ.எஸ்.எச்.ஜே. இலுக்குபிட்டிய, குடிவரவு மற்றும் குடியகல்வுத திணைக்களத்தின கட்டுப்பாட்டாளர் நாயகம்
இணங்குவிப்பு அலுவலர்.

எமது தொடர்பு இலக்கம்: 69/02/002/0002/001 2022 சனவரி 19

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

“தொழிலாளர் பணவனுப்பல்களின் பரிமாற்றல் செலவை மீளளித்தல்” மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

முறைசார்ந்த நிதி மாற்றல் வழிகளினூடாக நாட்டிற்கு அதிகளவிலான தொழிலாளர் பணவனுப்பல்களை ஊக்குவிக்கும் குறிக்கோளுடன், மத்திய வங்கியானது கொடுக்கல்வாங்கலொன்றுக்கு ரூ.1000 கொண்ட நிலையான கொடுப்பனவாக உள்முக தொழிலாளர் பணவனுப்பல்களின் கணக்கில் ஏற்படுகின்ற பரிமாற்றல் செலவை மீளளிப்பதன் மூலம் ஊக்குவிப்புத்தொகையொன்றை வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, 2022.02.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் பொறிமுறையை தொழிற்படுத்துவதில் பின்வரும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு இத்தால் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் அறிவுறுத்தப்படுகின்றன.

1. **தகைமையுடைய கொடுக்கல்வாங்கல்கள்**

   வெளிநாட்டில் தொழில்புரிகின்ற/தொழில்புரிந்துள்ள இலங்கையர்களினால் புரியப்படும் தொழிலினூடாக அத்துடன்/அல்லது அவர்களின் பயன்பெறுநர்களினால் ஈட்டப்படும் வெளிநாட்டு நாணய வருமானமானது இலங்கையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினூடாக அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாய்க்கு மாற்றுவதன் மீதான இவ்வூக்குவிப்பிற்கு தகைமையுடைதாகவிருக்கும்.

   இலங்கை மத்திய வங்கியானது பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு தொழிலாளர் பணவனுப்பல்களின் பரிமாற்றல் செலவை மீளளிப்புசெய்யும்:

   (i) ஒவ்வொரு புலம்பெயர் தொழிலாளரும் அல்லது அவரது பயன்பெறுநரும் மாதமொன்றுக்கு இரு பரிமாற்றல்களுக்கு மாத்திரம் இவ்வூக்குவிப்பை பெறுவதற்கு தகைமையுடையவராவர்.

   (ii) தனிப்பட்ட வெளிநாட்டு நாணய கணக்குகளுக்கான நேரடி நிதிய மாற்றல்கள் இவ்வூக்குவிப்பை பெறுவதற்கு தகைமையற்றவையாகும்.

   (iii) இலங்கையில் வதிகின்ற மற்றும் வெளிநாட்டு தொழிலின் தன்மையில் வழங்கப்படும் பணிகளினூடாக வெளிநாட்டு நாணயத்தை ஈட்டுகின்ற இலங்கை தேசத்தவர் இவ்வூக்குவிப்பைப் பெறுவதற்கு தகைமையற்றவராவர்.

2. **தொழிற்பாட்டு கட்டமைப்பு**

   (i) உரிமம்பெற்ற வங்கிகள், தகைமையுடைய கொடுக்கல்வாங்கலொன்றுக்கு பயன்பெறுநருக்கு ரூ.1000 வரவுவைப்பதற்கு அல்லது பகிர்ந்தளிப்பதற்கு வேண்டப்பட்டுள்ளன.

   (ii) இடையீட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினூடாக கிடைக்கப்பெற்ற பணவனுப்பல்களைப் பொறுத்தவரையில், பயன்பெறுநரின் இலங்கை ரூபாய்க் கணக்கைப் பேணுகின்ற அல்லது பயன்பெறுநருக்கு இறுதியாக ரூபாய் கொடுப்பனவை மேற்கொள்கின்ற இறுதியாக பெற்றுக்கொள்ளும் வங்கியினால் ரூ.1000 வரவுவைக்கப்பட வேண்டும் அல்லது பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

   (iii) இணைப்பு 1இல் தரப்பட்டுள்ள படிவத்திற்கமைவாக இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களத்திற்கு ஒவ்வொரு காலாண்டிறுதிக்குப் பின்னர் 15 நாட்களுக்குள் காலாண்டு அடிப்படையில் மீளளிப்பிற்கான கோரலை சமர்ப்பிக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

   (iv) கோரலை சமர்பிப்பதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் கோரல்கள் இணங்குகின்றன என்பதை சரிபார்ப்பதற்கு அனைத்து மீளளிப்பு கோரல்களும் உரிமம்பெற்ற வங்கிகளின் உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும்.

3. **கணக்கீடும் பதிவேடுகளைப் பேணுதலும்**

   அனைத்து தேவையான துணை ஆவணங்களுடன் பரிமாற்றல் செலவை மீளளித்தல் தொடர்பாக வெவ்வெறான கணக்குகளையும் பதிவேடுகளையும் பேணுமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

4. புலம்பெயர் தொழிலாளர்களுக்கு மத்தியில் திட்டம் தொடர்பான விழிப்பூட்டலை ஊக்குவிக்கும் பொருட்டு, தொடர்புடைய உரிமம்பெற்ற வங்கியுடன் உள்நாட்டு பணவனுப்பலுடன் தொடர்புடைய ஏற்பாடுகளை கொண்டுள்ள அனைத்து கடல்கடந்த நிறுவனங்களுக்கு மத்தியில் மேற்குறிப்பிட்ட திட்டத்தின் உள்ளடக்கங்களை தெரியப்படுத்துமாறு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் அறிவுறுத்தப்படுகின்றன.

மேலதிக் தகவல்கள் அல்லது தெளிவுபடுத்தல்களுக்கு, இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களத்தை 0112477448, 0112398754 அல்லது 0112477426இல் தொடர்புகொள்ளலாம்.

அஜித் நிவார்ட் கப்ரால்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

இணைப்பு I

..... நிறுவன கடிதத் தலைப்பு .....

வங்கியின் பெயர்: .....

அறிக்கையிடும் காலம்:..... காலாண்டு இறுதி

"தொழிலாளர் பணவனுப்பல்களின் பரிமாற்றல் செலவை" மீளளித்தல்

(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)	(ஊ)	(எ)	(ஏ)
திகதி	ஐ.அ.டொலரிற்கு* நிகரான மொத்த பணவனுப்பல் உட்பாய்ச்சல்	பரிமாற்றல்களின் மொத்த எண்ணிக்கை	உரிமம்பெற்ற வங்கிகளுக்கு நேரடியாக வழிப்படுத்தப்படுகின்ற மற்றும் இலங்கை ரூபாவில் இறுதி பயன்பெறுநருக்கு வரவு வைக்கப்படும்/ பகர்ந்தளிக்கப்படும் தகைமையுடைய பரிமாற்றல்களின் எண்ணிக்கை	ஏனைய உரிமம்பெற்ற வங்கிகளினூடாக வழிப்படுத்தப்படுகின்ற மற்றும் இலங்கை ரூபாவில் இறுதி பயன்பெறுநருக்கு வரவு வைக்கப்படும்/ பகர்ந்தளிக்கப்படும் தகைமையுடைய பரிமாற்றல்களின் எண்ணிக்கை	மீளளித்தலுக்கு தகைமையுடைய பரிமாற்றல்களின் மொத்த எண்ணிக்கை (ஈ+உ)	தகைமையுடைய பரிமாற்றல்களின் மொத்த எண்ணிக்கையுடன் தொடர்புடைய ஐ.அமெ.டொலரிற்கு* நிகரான மொத்த பணவனுப்பல் உட்பாய்ச்சல் (ஊ)	கோரப்படவேண்டிய மொத்த தொகை (ரூ.)

*இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட கிடைக்கப்பெறுகின்ற குறிகாட்டி செலாவணி வீதத்தைப் உரிமம்பெற்ற வங்கிகள் பயன்படுத்தல் வேண்டும்

மேலேயுள்ள திரட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் செம்மையானவை என்றும் பூரணமானவை எனவும் வங்கியினால் பேணப்படும் கணக்கேடுகள் மற்றும் வாடிக்கையாளர் பட்டியல்களிலிருந்து/பதிவுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டவை எனவும் இத்தால் நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்.

கையொப்பம்	.....	.....	.....	.....
பெயர்	.....	.....	.....	.....
பதவி	முதன்மை நிறைவேற்று அலுவலர்	முதன்மை இணங்குவிப்பு அலுவலர்	முதன்மை நிதியியல் அலுவலர்	உள்ளகக் கணக்காய்வு பிரதானி
திகதி	.....	.....	.....	.....

2022 சனவரி 27

எமது தொடர்பு இலக்கம்: 69/02/002/0002/002

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

தொழிலாளர் பணவனுப்பல்களின் பரிமாற்றல் செலவை மீளளித்தல் - மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்

2022.01.19 அன்று விடுக்கப்பட்ட "தொழிலாளர் பணவனுப்பல்களின் பரிமாற்றல் செலவை மீளளித்தல்" மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுடன் (தொடர்பு 69/02/002/0002/001) இது தொடர்புடையது.

சொல்லப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் தொடர்பாக பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன:

அ) I (i) பின்வருமாறு இக்கூற்று பதலீடு செய்யப்படுகின்றது:

ஒவ்வொரு புலம்பெயர் தொழிலாளரும் அல்லது அவரது பயன்பெறுநரும் ரூ.20,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை கொண்ட உள்முகப் பணவனுப்பல் கொடுக்கல்வாங்கலுக்கு மாத்திரம் ஊக்குவிப்பொன்றைப் பெறுவதற்கு தகைமையுடையவராவர்.

ஆ) I (iii) இக்கூற்று நீக்கப்பட்டுள்ளது.

2022.01.19 அன்று விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களிலுள்ள ஏனைய அனைத்து நிபந்தனைகளும் மாற்றமின்றி காணப்படும்.

மேலதிக தகவல்கள் அல்லது தெளிவுபடுத்தல்களுக்கு, இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களத்தின் 0112477448, 0112398754 அல்லது 0112477426 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்புகொள்ளலாம்.

அஜித் நிவார்ட் கப்ரால்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

தொடர்பு இல. 33/04/012/0012/001 2022 சனவரி 31

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

"உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான மேலதிக ஊக்குவிப்புத் திட்டம்" மற்றும் "தம்வசமுள்ள வெளிநாட்டு நாணயத்தை வைப்பிலிடுவதற்காக, மாற்றுவதற்காக மற்றும் முதலிடுவதற்காக பொதுமக்களுக்கான ஊக்குவிப்புக்கள்" மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் செயலுறு காலப்பகுதியை நீடித்தல்

"உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான மேலதிக ஊக்குவிப்புத் திட்டம்" மீது 2021.12.01 (தொடர்பு இல. 33/04/012/0011/014) அன்றும் "உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான மேலதிக ஊக்குவிப்புத் திட்டம்", "ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்", "உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான மேலதிக ஊக்குவிப்புத் திட்டம்" "ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்"இ உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான மேலதிக ஊக்குவிப்புத் திட்டம்" மற்றும் "தம்வசமுள்ள வெளிநாட்டு நாணயத்தை வைப்பிலிடுவதற்காக, மாற்றுவதற்காக மற்றும் முதலிடுவதற்காக பொதுமக்களுக்கான ஊக்குவிப்புக்கள்" மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள் மீதான 2021.12.27 (தொடர்பு இல. 33/04/012/0011/017) அன்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுடன் இது தொடர்புடையது.

வெளிநாட்டில் தொழில்புரிகின்ற இலங்கையர்களின் பயன்பெறுநர்களுக்கும், இலங்கையில் வதிகின்ற இலங்கையர்களுக்குமான நிதிசார் அனுகூலங்களையும் அத்துடன் வெளிநாட்டு தொழில் ஒன்றிலிருந்து ஈட்டப்படுகின்ற வெளிநாட்டு நாணய வருமானம் மற்றும் இதன் விளைவாக முறையான வழிகளூடாக நாட்டிற்கு வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல் நியதிகளில் எதிர்பார்க்கப்படுகின்ற மேம்பாடு என்பவற்றைப் பரிசீலனையில் கொண்டும் அத்துடன் முறையான வங்கித்தொழில் முறைமையூடாக வெளிநாட்டு நாணயத்தாள்கள் நாட்டிற்கு அனுப்பப்படுவதை ஊக்குவிப்பதற்கும் இலங்கை மத்திய வங்கியானது "உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான மேலதிக ஊக்குவிப்புத் திட்டம்" மற்றும் "தம்வசமுள்ள வெளிநாட்டு நாணயத்தை வைப்பிலிடுவதற்காக, மாற்றுவதற்காக மற்றும் முதலிடுவதற்காக பொதுமக்களுக்கான ஊக்குவிப்புக்கள்" மீதான மேற்குறித்த தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் செயலுறு காலப்பகுதிகளை மறு அறிவித்தல் வரை நீடிப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, மேற்குறித்த தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கீழ் வழங்கப்படும் ஊக்குவிப்புகள் மறு அறிவித்தல் வரும்வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பது அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் இத்தால் அறிவிக்கப்படுவதுடன் அதற்கேற்றவாறு தொடர்புடைய உரிமைக் கோரிக்கைப் படிவங்களை தொடர்ந்து வருகின்ற மாதத்தின் 15 ஆவது நாளளவில் மாதாந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கோரப்படுகின்றன. மேலும், இலங்கை ரூபாய்களாக மாற்றப்படுகின்ற பொதுமக்கள் தம்வசம் வைத்திருக்கின்ற வெளிநாட்டுச் செலாவணியின் இருபத்தைந்து சதவீதத்தை (25 சதவீதம்) ஐ.அ.டொலர்களில் வாராந்த அடிப்படையில் மறுஅறிவித்தல் வரை இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யுமாறு உரிமம்பெற்ற வங்கிகள் இத்தால் வேண்டப்படுகின்றன.

மேற்குறித்த திட்டங்கள் மீது முன்னர் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்ட ஏனைய அனைத்துத் தேவைப்பாடுகளும் மாற்றமின்றி இருக்கும்.

மேலதிகத் தகவல்களுக்கு அல்லது தெளிவுபடுத்தல்களுக்கு நீங்கள் 0112398707, 0112398711 அல்லது 0112398708 என்ற இலக்கங்களினூடாக இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தைத் தொடர்புகொள்ளலாம்.

அஜித் நிவாட் கப்றால்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

2022 மார்சு 08

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

பாரியளவிலான பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டுக்கு ஆதரவளிப்பதற்கான கொள்கைசார்ந்த திட்டம்: செலாவணி வீதத்தில் நெகிழ்ச்சித்தன்மையை அனுமதித்தல்

2022 மார்சு 07 அன்று உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் செலாவணி வீதத்தில் மேலும் நெகிழ்ச்சித்தன்மையை அனுமதிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்துள்ளதுடன் வெளிநாட்டுக் கொடுக்கல்வாங்கல்கள் ஐ.அ.டொலரொன்றிற்கு ரூ.230இனையும் நிகரான குறுக்கு நாணய வீதங்களையும் விஞ்சாத மட்டங்களில் இடம்பெறுமென இலங்கை மத்திய வங்கி கருதுகின்றது. நாணயச் சபையின் மேற்குறித்த தீர்மானத்தின் நோக்கில், 2021 செத்தெம்பர் 06 அன்று அப்போதைய ஆளுநரினால் கோரப்பட்டதற்கமைவாக முறையாக உடன்பட்ட செலாவணி வீத வீச்சானது 2022 மார்சு 08இலிருந்து ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

முறையே, உள்முகத் தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான மேலதிக ஊக்குவிப்புத் திட்டம்' மற்றும் 'வெளிநாட்டு நாணயத்தை வைப்புச்செய்தல், மாற்றுதல் அத்துடன் முதலீடுசெய்தல்' என்பவற்றுக்கான பொதுமக்களுக்கான ஊக்குவிப்புகள் மீது விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கமைவாக, 2022.03.09 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில், செலாவணி வீதத்தில் மேலும் நெகிழ்ச்சித்தன்மை தற்போது அனுமதிக்கப்பட்டிருப்பதால், தொழிலாளர் பணவனுப்பல்களை மாற்றல் செய்தல் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலரொன்றுக்கு ரூ.8.00 கொண்ட ஊக்குவிப்பையும் கைவசமுள்ள வெளிநாட்டு நாணயத் தாள்களை மாற்றல் செய்தல் தொடர்பில் ஐ.அ.டொலரொன்றுக்கு ரூ.10.00 கொண்ட ஊக்குவிப்பையும் மத்திய வங்கி நிறுத்தும்.

மத்திய வங்கியினால் வங்கிகளுக்கு 25 சதவீதம் கொண்ட மாற்றல் செய்யப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களினதும் கட்டாயமாக மாற்றப்பட்ட ஏற்றுமதி பெறுகைகளினதும் விற்பனை தேவைப்பாடு தொடர்ந்துமிருக்கும்.

பணவனுப்பல்களை மாற்றுகின்ற வெளிநாட்டில் தொழில்புரிவோருக்கான புதிய ஊக்குவிப்பொன்றை வழங்குவதற்கான அண்மைய தீர்மானம் காலக்கிரமத்தில் அரசாங்கத்தினால் தெளிவுப்படுத்தப்படும்.

அஜித் நிவாட் கப்றால்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

எமது தொடர்பு இல. 33/04/012/0012/002 2022 மார்சு 22

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

"உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" மற்றும் "ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்" மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்

2021 திசெம்பர் 27 அன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கமைவாக, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் இலங்கை ரூபாவாக மாற்றப்படுகின்ற உள்முக தொழிலாளர் பணவனுப்பல்களின் (பல்வேறு நாணயங்களில் கிடைக்கப்பெற்ற) அத்துடன் அத்துடன் இலங்கை ரூபாவாக மாற்றுவதற்கு கட்டாயமாக்கப்பட்டுள்ள ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சிய தொகையின் **இருபத்தைந்து சதவீதத்தை (25%)** ஐ.அ.டொலர்களில் வாராந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கிக்கு வெளிநாட்டுச் செலாவணியை விற்பனை செய்துவருகின்றன. நாட்டின் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்கு தேவையான வெளிநாட்டுச் செலாவணியை வழங்குவதற்கு இவ்வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் இலங்கை மத்திய வங்கியிக்கு உதவுகின்றன.

இந்நோக்கில், அண்மைக்காலத்தில் இடம்பெறும் அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டும் அதேபோன்று நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கினை மேலும் மேம்படுத்துவதற்கும், இடைத்தடங்கலற்ற அத்தியாவசிய இறக்குமதிகளை வழங்குவதை (குறிப்பாக எரிபொருள், எரிவாயு, நிலக்கரி மற்றும் மருந்து) உறுதிசெய்வதற்கும் இலங்கை ரூபாவாக மாற்றப்பட்ட உள்முகத் தொழிலாளர் பணவனுப்பல்களினதும் (பல்வேறு நாணயங்களில் கிடைக்கப்பெற்ற) அத்துடன் இலங்கை ரூபாவாக மாற்றுவதற்கு கட்டாயமாக்கப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சிய தொகையினதும் **ஐம்பது சதவீதத்தை (50%)** ஐ.அ.டொலர்களில் 2022.03.21 அன்று தொடங்குகின்ற

வாரத்திலிருந்து 2022.07.29 அன்று முடிவடைகின்ற வாரம் வரை வாராந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யுமாறு அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் இலங்கை மத்திய வங்கி இத்தால் பணிக்கின்றது.

மேற்குறித்த திட்டங்கள் மீது முன்னர் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்ட ஏனைய அனைத்துத் தேவைப்பாடுகளும் மாற்றமின்றி இருக்கும்.

மேலதிகத் தகவல்களுக்கு அல்லது தெளிவுபடுத்தல்களுக்கு நீங்கள் 0112398707, 0112398711 அல்லது 0112398715 என்ற இலக்கங்களினூடாக இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தைத் தொடர்புகொள்ளலாம்.

எமது தொடர்பு இல. 33/04/012/0012/003 2022 ஏப்பிறல் 11

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

"உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" மற்றும் "ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்" மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்

"உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" மற்றும் "ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்" மீது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுடன் தொடர்புடையது.

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவுகின்ற நிலைமையினைக் கருத்திற்கொண்டும் உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி கடமைப் பொறுப்புக்களை பரிசீலனையில் கொண்டும் மாற்றப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் கட்டாயமாக மாற்றப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகள் கணக்கில் இலங்கை மத்திய வங்கிக்கான வாராந்த கட்டாய வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் தேவைப்பாட்டினை 2022.01.11ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் **ஐம்பது சதவீதத்திலிருந்து (50%) இருபத்தைந்து சதவீதத்திற்கு (25%)** குறைப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, இலங்கை ரூபாவாக மாற்றப்பட்ட உள்முக தொழிலாளர் பணவனுப்பல்களினதும் (பல்வேறு நாணயங்களில் கிடைக்கப்பெற்ற) இலங்கை ரூபாவாக கட்டாயமாக மாற்றப்படவேண்டிய ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சிய தொகையினதும் **இருபத்தைந்து சதவீதத்தினை (25%)** 2022.04.11 ஆம் திகதியிலிருந்து தொடங்குகின்ற வாரத்திலிருந்து மறு அறிவித்தல் வரை ஐ.அ.டொலர்களில் வாராந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யுமாறு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளையும் இலங்கை மத்திய வங்கி இத்தால் கோருகின்றது.

மேற்குறித்த திட்டங்கள் மீது முன்னர் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்ட ஏனைய அனைத்துத் தேவைப்பாடுகளும் மாற்றமின்றி இருக்கும்.

மேலதிகத் தகவல்களுக்கு அல்லது தெளிவுபடுத்தல்களுக்கு நீங்கள் 0112398707, 0112398711 அல்லது 0112398715 என்ற இலக்கங்களினூடாக இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தைத் தொடர்புகொள்ளலாம்.

எமது தொடர்பு: 33/04/012/0012/004 2022 மே 12

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

செலாவணி வீதத்தின் ஒரு நாளுக்குள்ளேயான தளம்பலை முகாமைசெய்தல் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவுகின்ற நிலைமையையும் செலாவணி வீதத்தில் காணப்படுகின்ற மிதமிஞ்சிய தளம்பலையும் கருத்திற்கொண்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின்/செலாவணி வீதத்தின் ஒழுங்கான நடத்தையை வசதிப்படுத்தும் பொருட்டு பின்வரும் வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கு நாணயச் சபை தீர்மானித்துள்ளது.

இதற்கமைவாக, 2022 மே 13 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிகளுக்கிடையிலான சந்தையில் நிலவுகின்ற முன்னைய நாளின் நிறையேற்றப்பட்ட சராசரி உடனடி செலாவணி வீதத்தை அடிப்படையாகக்கொண்டு, வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கலுக்காக ஏற்புடைய குறியீட்டு ஐ.அ.டொலர்/இலங்கை ரூபா செலாவணி வீதமொன்றை இலங்கை மத்திய வங்கி அறிவிக்கும் என அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் இத்தால் அறியத்தருகின்றது. மேலும், சந்தை திறப்பதற்கு முன்னர், நாளாந்த அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட ஐ.அ.டொ/இல.ரூபா வேறுபாட்டு எல்லையையும் இலங்கை மத்திய வங்கி அறிவிக்கும். அறிவிக்கப்பட்ட ஐ.அ.டொ/இல.ரூபா வீதத்தையும் வேறுபாட்டு எல்லையையும் அடிப்படையாகக்கொண்டு, ஏனைய நாணயங்களுக்கான ஏற்படைய வீதங்கள் உரிமம்பெற்ற வங்கிகளினால் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

வங்கிகளுக்கிடையிலான சந்தையின் ஒரு நாளுக்குள்ளேயான செலாவணி வீதத்தின் வேறுபாட்டு எல்லை, அனுமதிக்கப்பட்ட வீச்சுக்குள் இருக்க வேண்டும் என்பதுடன் அறிவிக்கப்பட்ட நிறையேற்றப்பட்ட சராசரி வங்கிகளுக்கிடையிலான ஐ.அ.டொ/இல.ரூபா உடனடி செலாவணி வீதத்தின் கூட்டல் அல்லது கழித்தலாகப் பிரயோகிக்கப்பட வேண்டும். வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கலுக்காக ஏற்புடைய வீதங்களை நிர்ணயிப்பதில் நியாயமான எல்லைகளை மாத்திரம் பிரயோகிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. உரிமம்பெற்ற வங்கிகளின் முன்னோக்கிய வீதங்கள் வங்கிகளுக்கிடையிலான சந்தை உடன் வீதங்களுடன் சீராகவும் இருத்தல் வேண்டும்.

உரிமம்பெற்ற வங்கிகளின் கட்டணங்கள்/தரகு கட்டமைப்பு நியாயமானதாகவும் வெளிப்படையானதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் கொடுக்கல்வாங்கலின் சமமான ரூபாய் பெறுமதியின் மூன்று (3%) சதவீதத்தை விஞ்சலாகாது.

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை கண்டிப்பாகப் பின்பற்றுமாறு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

எமது இலக்கம்: 33/04/012/0012/005 2022 ஓகத்து 25

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளதும் தேசிய சேமிப்பு வங்கியினதும் பிரதம நிறைவேற்று அலுவலர்கள்

"ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்" மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்

2022.08.12ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் பணி ஏற்றுமதி கிடைப்பனவுகளை/பெறுகைகளை மாற்றும் கட்டாயத் தேவைப்பாட்டினை முடிவுறுத்திய 2292/50ஆம் இலக்க 2022.08.12ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையினைத் தொடர்ந்து, பணி ஏற்றுமதிகள் தொடர்பில் மாற்றிய வெளிநாட்டுச் செலாவணி கிடைப்பனவுகளை/பெறுகைகளை இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனைசெய்யும் கட்டாயத் தேவைப்பாட்டினை மேற்கொள்வதற்கு மேற்குறித்தவை மீது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டுள்ளன என்பது அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் (உரிமம்பெற்ற வங்கிகள்) இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய, 2022.08.12ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் இலங்கை ரூபாவாக மாற்றப்பட்ட பணி ஏற்றுமதி கிடைப்பனவுகளின்/பெறுகைகளின் **இருபத்தைந்து சதவீதத்தை (25%)** இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யுமாறு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளையும் இலங்கை மத்திய வங்கி இத்தால் கோருகின்றது.

மேலும், இலங்கை ரூபாவாக கட்டாயமாக மாற்றப்பட்ட பொருட்கள் ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியவற்றின் **இருபத்தைந்து சதவீதத்தை (25%)** தொடர்ந்தும் இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யுமாறு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் வேண்டப்படுகின்றன.

மேற்குறித்த திட்டம் மீது முன்னர் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்ட அனைத்து ஏனைய தேவைப்பாடுகளும் மாற்றமின்றியிருக்கும்.

மேலதிகத் தகவல்களுக்கு அல்லது தெளிவுபடுத்தல்களுக்கு 0112398707, 0112398711, 0112398715 என்ற இலக்கங்களூடாக இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தை நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

முனைவர் பி நந்தலால் வீரசிங்க
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

2292/50ஆம் இலக்க - 2022ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I: தொகுதி (I) - பொது
இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்
1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ)ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்

பி. நந்தலால் வீரசிங்க
நாணயச் சபையின் தலைவரும்,
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்,

இலங்கை மத்திய வங்கி
கொழும்பு
2022 ஓகத்து 12

ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்

1. இவ்விதிகள் "2022ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள்" என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

2. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்டு 2270/66ஆம் இலக்க 2022 மார்சு 11ஆம் திகதியிடப்பட்ட

வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள், அதன் 4ஆம் விதி நீக்கப்பட்டு அதற்காக, பின்வரும் புதிய விதியை பதிலீடுசெய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"4. மேலே 3ஆம் விதியின் நியதிகளின் பிரகாரம், இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெற்றுக்கொள்கின்ற பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும், கீழே குறிப்பிடப்பட்ட **அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள்** தொடர்பில் மாத்திரம் அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தியதன் பின்னர், இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியுள்ள தொகையினை தொடர்ந்துவருகின்ற மாதத்தின் ஏழாவது (07வது) நாளன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை ரூபாவாக கட்டாயமாக மாற்றுதல் வேண்டும்.

(i) குறித்த ஏற்றுமதிப் பொருட்கள் தொடர்பில், அதன் மீதான ஒரு மாத கடமைப்பொறுப்புக்கள் உள்ளடங்கலாக நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிமுகப் பணவனுப்பல்கள்

(ii) பொருட்கள் ஏற்றுமதி தொடர்பில் பயண நோக்கத்திற்கான வெளிநாட்டு நாணயத் தாள்களின் எடுப்பனவு அல்லது நிதியங்களின் மாற்றல்

(iii) அத்தகைய வெளிநாட்டு நாணயக் கடன் அல்லது வசதி, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அல்லது திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், கட்டளைகளின் அத்துடன் பணிப்புரைகளின் நியதிகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட கடன்பெறுகையொன்றாக இருக்கின்றவிடத்து, ஒரு மாத கடமைப்பொறுப்புக்கள் உள்ளடங்கலாக பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களினதும் வசதிகளினதும் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் அத்துடன் மீள்கொடுப்பனவு

(iv) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு வதியாத முதலீட்டாளர்களுக்கு பிரகடனப்படுத்தப்பட்ட பங்கிலாபங்களின் கொடுப்பனவுகள் அத்துடன்/அல்லது வெளிநாட்டவர்களாக அல்லது இரட்டைப் பிரசாவுரிமையுடையவர்களாவிருக்கின்ற வெளிநாட்டு ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள்

(v) அவ்வாறு கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் பத்து சதவீதம் (10%) வரை வெளிநாட்டு நாணயத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடுகளைச் செய்வது தொடர்பிலான கொடுப்பனவுகள் அத்துடன்

(vi) குறித்த பொருட்கள் ஏற்றுமதியுடன் தொடர்புடைய கொள்வனவுகளுக்காக 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளுக்கமைவாக வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள உள்நாட்டு வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகள்.

எமது இலக்கம்: 33/04/012/0012/006 2022 திசெம்பர் 30

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

"உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

2020.12.22ஆம் திகதியிடப்பட்ட அத்துடன் அதனைத்தொடர்ந்து 2021.01.01 அன்று திருத்தப்பட்ட "உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத்திட்டம்" மீது இலங்கை மத்திய வங்கியினால் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுடன் இது தொடர்புடையது.

உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் உள்முக தொழிலாளர் பணவனுப்பல்களின் மாற்றுதல் மீது கொடுப்பனவுசெய்யப்படும் ஐ.அ.டொலர் ஒன்றிற்கு ரூ.2.00 கொண்ட ஊக்குவிப்பினை முடிவுறுத்துமாறு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளையும் அறிவுறுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியினை திறைசேரிக்கான செயலாளர் கோரியுள்ளார். அதற்கமைய, முறையே 33/04/012/0011/004 மற்றும் 33/04/012/0011/005 தொடர்பு இலக்கங்களின் கீழ் 2020.12.22 அன்று இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும் 2022.01.01 அன்று வழங்கப்பட்ட தொடர்புடைய திருத்தங்களும் 2023.01.01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றன என்பதனை தயவுசெய்து கவனத்திற்கொள்க.

முனைவர் பி நந்தலால் வீரசிங்க
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

தொடர்பு: 08/21/007/047/002 2022 மார்சு 23

சேரல்: இலங்கை அபிவிருத்தி முறிகளில் அனைத்து பெயர்குறிக்கப்பட்ட முகவர்களினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

"இலங்கை அபிவிருத்தி முறிகளுக்காக நேரடி வழங்கல் தளத்திற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டம்" மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடுகளை மேலும் ஊக்குவிக்கும் நோக்குடன் இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கென நேரடி வழங்கல் தளமொன்றினை இலங்கை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. இது தொடர்பில், ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, அதாவது, நேரடி வழங்கல் தளத்தினூடாக கொண்டுவரப்படுகின்ற இலங்கை அபிவிருத்தி முறி மீது பெயர்குறிக்கப்பட்ட முகவர்களுடான முதலீடுகளின் ஏற்பாட்டாளருக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவான 0.5 சதவீதத்திற்கு (50 அடிப்படைப் புள்ளிகள்) சமமான ஊக்குவிப்பு அத்துடன்/அல்லது கையாளுதல் கட்டணம் இலங்கை ரூபாவில் வழங்கப்பட வேண்டும். ஏற்பாட்டாளர் என்பது இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடுகளைக் கொண்டுவருகின்ற பெயர்குறிக்கப்பட்ட முகவர்கள் உள்ளடங்கலாக எவரேனும் தனிப்பட்டவர் அல்லது நிறுவனமொன்று என வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, 2022 பெப்புருவரி 01ஆம் திகதி தொடக்கம் நேரடி வழங்கல் தளமூடாக இலங்கை அபிவிருத்தி முறிகளில் தகைமையுடைய முதலீடுகளுக்கான பொறிமுறையினை தொழிற்படுத்துவதில் பின்வரும் அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிக்குமாறு அனைத்து பெயர்குறிக்கப்பட்ட முகவர்களுக்கும் இத்தால் அறிவுறுத்தப்படுகின்றது.

1. **தகைமையுடைய முதலீடுகள்**

   பெயர்குறிக்கப்பட்ட முகவர்களால் கொண்டுவரப்படும் நேரடி வழங்கல் தளமூடான இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடுகள்

2. **தொழிற்பாட்டுக் கட்டமைப்பு**

   i. ஏற்கனவேயுள்ள சேவைநாடிகள் மற்றும் முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் மத்தியில் இலங்கை அபிவிருத்தி முறிகளை ஊக்குவிக்குமாறு பெயர்குறிக்கப்பட்ட முகவர்கள் வேண்டப்படுகின்றனர்.

   ii. நேரடி வழங்கல் தளமூடாக கொண்டுவரப்படுகின்ற இலங்கை அபிவிருத்தி முறி முதலீடுகள் மீது 0.5 சதவீதத்திற்கு (50 அடிப்படைப் புள்ளிகள்) சமமான ஏதேனும் ஊக்குவிப்பு அல்லது கையாளுகைக் கட்டணம், இலங்கை மத்திய வங்கியினால் இலங்கை ரூபாவில் பெயர்குறிக்கப்பட்ட முகவர்களூடாக ஏற்பாட்டாளர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்படுதல் வேண்டும். இலங்கை ரூபா மாற்றுதலுக்காக இலங்கை அபிவிருத்தி முறி முதலீட்டு தீர்ப்பனவுத் திகதியன்று இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட குறியீட்டு ஐ.அ.டொலர் செலாவணி வீதத்தை இலங்கை மத்திய வங்கி கருத்திற்கொள்ளும்.

   iii. அத்தகைய ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கான தமது கோரிக்கையை இணைப்பு I இல் தரப்பட்ட வடிவத்திற்கமைவாக மாதாந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தின் முன்னரங்கு அலுவலகத்திற்கு fopdd@cbsl.lk என்ற மின்னஞ்சல் வாயிலாக சமர்ப்பிக்குமாறு பெயர்குறிக்கப்பட்ட முகவர்கள் வேண்டப்படுகின்றனர். 2022 பெப்புருவரி 01 தொடக்கம் 2022 பெப்புருவரி 28 வரையான காலப்பகுதியுடன் தொடர்புடைய கோரிக்கைகள் 2022 மார்சு 31 இற்குப் பிந்தாது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2022 மார்சிலிருந்து தொடர்புடைய மாதத்திற்கான கோரிக்கைகள் ஒவ்வொரு மாதத்தின் இறுதியின் பின்னர் ஏழு வேலைநாட்களுக்குள் பெயர்குறிக்கப்பட்ட முகவர்களால் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

   iv. கோரிக்கை கிடைக்கப்பெற்றதன் மீது இலங்கை மத்திய வங்கி அதனை சரிபார்க்கும் என்பதுடன் ஏதேனும் குறைபாடுகள் காணப்படின் பெயர்குறிக்கப்பட்ட முகவருக்கு கோரிக்கைத் திகதியிலிருந்து ஏழு வேலைநாட்களுக்குள் அறிவிக்கும். குறைபாடுகள் எதுவும் காணப்படாதவிடத்து இலங்கை மத்திய வங்கி, கோரிக்கை கிடைக்கப்பெற்றதிலிருந்து 14 வேலைநாட்களினுள் ஊக்குவிப்புக் கொடுப்பனவைச் செலுத்தும்.

   v. இயையானவிடத்து, ஏற்பாட்டாளருக்கும் பெயர்குறிக்கப்பட்ட முகவருக்குமிடையில் இணங்கிய நியதிகளுக்கமைய கொடுப்பனவுசெய்யப்படும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் தொகையினை ஏற்பாட்டாளருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். நேரடி வழங்கல் தளத்தினூடாக இலங்கை அபிவிருத்தி முறி முதலீடொன்றின் ஏற்பாட்டாளருக்கு இலங்கை மத்திய வங்கி நேரடியாக ஈடளிக்காது.

3. **கணக்கீடும் பதிவேடுகளைப் பேணுதலும்**

   ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டம் மற்றும் ஏற்பாட்டாளருக்கான அத்தகைய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் கையாளுதல் கட்டணங்கள் போன்றன தொடர்பில் பெயர்குறிக்கப்பட்ட முகவர்கள் பதிவுகளைப் பேணுதல் வேண்டும்.

   மேலதிகத் தகவல்களுக்கு அல்லது தெளிவுபடுத்தல்களுக்கு நீங்கள் இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தின் முன்னரங்கு அலுவலகத்தை தொலைபேசி இல. 0112398611, 0112398877, 0112477574, 0112477316 அல்லது 0112477011 இல் தொடர்புகொள்ளலாம்.

பொதுப் படுகடனின் கண்காணிப்பாளர்
இலங்கை மத்திய வங்கி

இணைப்பு I

.....நிறுவனக் கடிதத் தலைப்பு .....

பெயர்குறிக்கப்பட்ட முகவரின் பெயர்: .....

அறிக்கையிடும் காலப்பகுதி: ..... அன்று முடிவடைகின்ற மாதம்

நேரடி வழங்கல் தளம் வாயிலாக "இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடுகள்" இற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுக் கோரிக்கை

விண்ணப்பத் திகதி	தீர்ப்பனவுத் திகதி	முதலீட்டாளரின் பெயர்	முதலீட்டுத் தொகை ஐ.அ.டொலர்களில்
காலப்பகுதிக்கான மொத்தம்			

ஊக்குவிப்புக் கொடுப்பனவு கிடைப்பனவிற்கான பெயர்குறிக்கப்பட்ட முகவரின் கணக்கு விபரங்கள்

கணக்கின் பெயர் : .....

கணக்கு இலக்கம் : .....

வங்கி : .....

கிளை : .....

மேற்குறித்த திரட்டில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் செம்மையானவையும் பூரணமானவையும் அத்துடன் எம்முடன் பேணப்படுகின்ற கணக்கு ஏடுகள் மற்றும் வாடிக்கையாளர்/பதிவு அட்டவணைகள் என்பவற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை என நாம் சான்றுபடுத்துகின்றோம்.

கையொப்பம்	.....	.....	.....
பெயர்	.....	.....	.....
பதவி	முதன்மை வணிகர்/திறைசேரி பிரதானி	முதன்மை இணங்குவித்தல் அலுவலர்	முதன்மை நிதி அலுவலர்
திகதி	.....	.....	.....

2022இன் 01ஆம் இலக்க கொள்வனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் பொதுவான பணிப்புரை

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம்

2005ஆம் ஆண்டு 28ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் பிரிவு 44இன் கீழ் இலங்கை மத்திய வங்கியினுடைய நாணயச் சபையால் வழங்கப்பட்ட பொதுவான பணிப்புரைகள்

திருமதி. ரி.எம்.ஜே.வை.பி பர்னாந்து
துணை ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

கொழும்பு
2022 பெப்புருவரி 28

பொதுவான பணிப்புரை

மேற்குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளை முறையாகவும் காத்திரமாகவும் நடைமுறைப்படுத்தி, நிர்வாகித்து அமுலாக்குவதற்காக, 2005ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் 44ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய இப்பணிப்புரை விடுக்கப்படுகின்றது. இப்பணிப்புரையானது 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை மீதான பொதுவான பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் 2011ஆம் ஆண்டின் 01ஆம்

இலக்க இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை மீதான பொதுவான பணிப்புரைக்கு பதிலிடுவதாகவும் இருத்தல் வேண்டும். இப்பணிப்புரையானது லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைகளுடைய உறுப்பினர்களுக்கு ஏற்புடையதாதல் வேண்டும் என்பதுடன் 2022ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

இப்பணிப்புரையானது லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்கள் என்பன காலத்திற்கு காலம் உட்படுகின்ற மற்றும்/அல்லது உட்படக்கூடிய ஏதேனும் எழுத்து மூலமான சட்டம், விதிகள், ஒழுங்குவிதிகள் அத்துடன் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றிற்கு மேலதிகமாக மற்றும் குறைவாக காணப்படுகின்றது.

மேலே குறிப்பிட்ட பந்தியின் பொதுவான தன்மைக்கு பாரபட்சமின்றி இப்பணிப்புரையானது 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளால் விதக்கப்படும் ஏதேனும் கடப்பாடுகள் அல்லது பொறுப்புகளின் வரம்பிற்கு உட்படுதலாகாது.

அறிமுகம்

இலங்கை வங்கிளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை, நாணய கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிப்பதற்காக கொடுப்பனவு கட்டளைகளை முன்னெடுக்கும் ஓர் இலத்திரனியல் முறைமையாகும். இலங்கை வங்கிளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை தளத்திற்கு வெளியேயான வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையொன்றாக 1993இல் இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டது. காசோலைகள் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைகள் என்பவற்றின் தீர்ப்பனவுத் தொழிற்பாடுகளை லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட்டிற்கு இலங்கை மத்திய வங்கி 2022இல் நீக்கியது. ஒருமித்ததும் பொதுவானதுமான சில்லறை கொடுப்பனவு முறைமையை தாபித்து பாதுகாப்பானதும் காத்திரமானதும் கொடுப்பனவு முறைமையை ஊக்குவிக்கின்ற அதேவேளை நாட்டின் சில்லறைக் கொடுப்பனவு முறைமைகளின் வளர்ச்சியில் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் மத்தியில் ஒத்துழைப்பொன்றை ஊக்குவித்தல் ஆகியன இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைகளின் இலக்குகளாக காணப்படுகின்றன. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைகளானது அதே தொழில் நாளன்று கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவொன்றை வசதியளிப்பதற்காக லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டால் தளத்தில் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையொன்றிற்கு 2010 செத்தெம்பரில் இற்றைப்படுத்தப்பட்டது.

அ) வரைவிலக்கணங்கள்

3. "**பயனாளி**" என்பது கொடுப்பனவு கட்டளையில் நாணயப் பெறுமதியின் பயனாளியாக பெயரிடப்படும் ஏதேனும் சட்ட ரீதியான அல்லது இயற்கையான ஆள் மற்றும்/அல்லது அத்தகைய ஆளின் பரிந்துரைக்கப்பட்ட முகவர் அல்லது பிரதிநிதி என பொருள்படும்.

4. "**தொழில் நாள்**" என்பது (உத்தரவாதம்) வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கிகளின் அமைப்பு மற்றும் இலங்கை மத்திய வங்கி என்பவற்றின் ஒப்புதலுடன் லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டால் அன்றைய நாள் தொழில் நாள் அல்ல என தீர்மானிக்கப்படும் வரை, இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை தொழிற்பட வேண்டிய பஞ்சாங்க நாளின் ஏதேனும் ஒரு நாள் என பொருள்படும்.

5. "**தீர்ப்பனவுச் சுழற்சிவட்டம்**" என்பது ஒரு தீர்ப்பனவுக் காலத்திலிருந்து அடுத்த உடனடித் தீர்ப்பனவுக் காலத்திற்கான கால இடைவேளை என பொருள்படும்.

6. "**வாடிக்கையாளர்**" என்பது எந்தவொரு சட்டரீதியான அல்லது இயற்கையான ஆள் என பொருள்படும். இவர் தன்சார்பில் அல்லது சில மூன்றாம் தரப்பினரின் சார்பில் கொடுப்பனவுக் கட்டளையொன்றை வழங்கும், பணிப்பிற்கும் அல்லது அங்கீகரிக்கும் ஆளாவர் என்பதுடன் அத்தகைய நோக்கத்திற்காக, கொடுப்பனவுக் கட்டளையின் பெறுமதியின் அளவிற்கு கணக்கொன்றை அல்லது கோரல்களுக்கு நாணயப்பெறுமதியை வரவு வைப்பதற்கு இலங்கை வங்கிகளுக்கிடையிலான பங்கேற்பாளரை அங்கீகரிக்கின்றார்.

7. "**இலங்கை மத்திய வங்கி**" என்பது நாணய விதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி (அத்தியாயம் 422) என பொருள்படும்.

8. "**டிஜிட்டல் சான்றிதழ்**" என்பது இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை செய்திகளை மறுதலிப்பின்றி பேணுதல், அவற்றின் நம்பகத்தன்மை, மற்றும் துல்லியத்தன்மை ஆகிய நோக்கங்களுக்காக ஒவ்வொரு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை முதன்மை பங்கேற்பாளர் மற்றும்/அல்லது இரண்டாந்தரப் பங்கேற்பாளருக்கும் சான்றிதழ் பணி வழங்குநரின் இயலாற்றலில் நிதியியல் துறைக்கு லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட்டினால் வழங்கப்படும் டிஜிட்டல் சான்றளிப்பு என பொருள்படும்.

9. "**இலத்திரனியல் தகவல்கள்**" என்பது இலத்திரனியல் ரீதியாக, காந்தத்தன்மையாக, ஒளியியல் ரீதியாக, அல்லது ஊடகத்தை கருத்திற்கொள்ளாத அதையொத்த இயலாற்றல்கள் ரீதியாக உருவாக்கப்பட்ட, அனுப்பப்பட்ட, கிடைக்கப்பெற்ற, அல்லது சேகரிக்கப்பட்ட தகவல்கள் என பொருள்படும்.

10. "**இலத்திரனியல் ரீதியாக**" என்பது ஒன்றில் இணையதளம் அல்லது மின்னஞ்சல் உட்பட்ட இணைய வழி ரீதியான தொலைத்தொடர்பூட்டல்கள் மூலமாகவோ அல்லது பதிவு நாடாக்கள், வட்டுக்கள் அல்லது அதையொத்த இணையவழியல்லாத கருவிகள் என்பவை மூலமான நேரடி வழங்கல் மூலமாகவோ மேற்கொள்ளப்படும் வழிகள் என பொருள்படும்.

11. "**நிதியங்கள்**" என்பது கணக்கில் வைத்திருக்கப்படும் காசு, வைப்புக்கள், நாணயப் பெறுமதி, மற்றும் மீளப்பெறுகைக்கு கிடைப்பனவாகவுள்ள வேறு ஏனைய கொடுகடன் என பொருள்படுவதுடன் அவற்றை உள்ளடக்குகின்றன.

12. "**உரிமம்பெற்ற வர்த்தக வங்கி**" அல்லது "**உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கி**" அல்லது "**வங்கி**" என்பது இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உரியாவாறு ஒருங்கிணைக்கப்பட்ட பொதுக்கம்பனியாகும் அல்லது எழுத்துமூலமான சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கம்பனி நிறுவனமாகும். இது, திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் நிதி விடயத்திற்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒப்புதலுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிலிருந்து வங்கித்தொழில் உரிமமொன்றை கொண்டுள்ளது.

13. "**லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட்**" என்பது 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கபட்டதும் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள்பதிவுசெய்யப்பட்டதுமான நிறுவனமாகும். இது, இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையை இலங்கையில் தொழிற்படுத்துவதற்கான சட்டரீதியான அதிகாரசபையாக இருத்தல் வேண்டும்.

14. "**பணத்தை ஊடுகடத்தல்**" என்பது வாடிக்கையாளார் அல்லது பண அனுப்புனர் ஆகியோரிடமிருந்து பயனாளிக்கு நாணயப் பெறுமதியை வழங்குதல் மற்றும்/அல்லது பணத்தை அல்லது நாணயப் பெறுமதியை பெறுதல் என்பதுடன் பணத்தை எடுப்பனவு செய்தல், கணக்குகளிக்கிடையிலான நாணயப்பெறுமதியின் மாற்றல் செய்தல் அல்லது மூன்றாந்தரப்பினர்களுக்கு நாணயப் பெறுமதியின் கொடுப்பனவு செய்தல் என்பவற்றுக்கான வசதிகளை வழங்குவதையும் உள்ளடக்குகின்றது. வாடிக்கையாளர், பணம் அனுப்புபவர் அல்லது பயனாளி இருவரும் அத்தகைய பரிமாற்றலுக்கோ அல்லது ஒருங்கேற்பாட்டிற்கோ ஒரு தரப்பினராகவோ அல்லது நேரடிப் பங்கேற்பாளராகவோ இல்லாவிட்டாலும், வாடிக்கையாளர் அல்லது பணம் அனுப்புபவரிடமிருந்து பயனாளிக்கு பணத்தை ஊடுகடத்துவதில் ஈடுபட்டுள்ள எந்தவொரு பரிமாற்றத்திலும் அல்லது ஏற்பாட்டிலும் பங்கேற்கும் செயற்பாட்டை இச்சொற்பதம் உள்ளடக்குகின்றது. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படும் பணம் ஊடுகடத்தலானது இலங்கைக்குள் உள்நாட்டு நாணயத்தில் இருத்தல் வேண்டும்.

15. "**நாணயப் பெறுமதி**" என்பது கணக்கொன்றிற்கு சேர்த்துவைக்கப்பட்ட பெறுமதி, கொடுப்பனவுச் சாதனம் அல்லது கொடுகடன் வடிவம் உட்பட பணத்தில் ஈடுசெய்ய முடியாத பரிமாற்றல் ஊடகம் என பொருள்படும்.

16. "**கொடுப்பனவுக் கட்டளை**" என்பது இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களூடாக பெயர்குறிக்கப்பட்ட பயனாளிக்கு நாணயப் பெறுமதியின் கொடுப்பனவொன்றை நடைமுறைப்படுத்தி நிறைவேற்றுவதற்கும் பொருட்டு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை முதன்மை பங்கேற்பாளரை அல்லது இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை இரண்டாந்தர பங்கேற்பாளரை நெறிப்படுத்தி அல்லது அறிவுறுத்தி வாடிக்கையாளர் ஒருவரால் விடுக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட எழுத்தாவணம் என பொருள்படும்.

17. "**தேறிய பணவனுப்பல்கள்**" என்பது இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் கீழ் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளரால் கிடைக்கப்பெற்ற அனைத்து கொடுப்பனவுக் கட்டளைகளினதும் நடைமுறைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுக் கட்டளைகளினதும் தேறிய நாணய பெறுமதி என பொருள்படும். அத்தகைய இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர் என்பவர் ஒவ்வொரு தீர்ப்பனவுச் சுழற்சிவட்டத்தின் இறுதியில் மற்றுமொரு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளருக்கு தேறிய கடன்பெறுநராக அல்லது தேறிய கடன்வழங்குநராக காணப்படுவார்.

18. "**தொழிற்பாட்டு நடவடிக்கை கையேடு**" என்பது இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் தொழிற்பாடுகள் தொடர்பில் லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை என்பவற்றின் வழிகாட்டலுக்காக குறிக்கப்பட்ட நடைமுறைகளை உள்ளடக்குகின்ற ஆவணம் என பொருள்படும்.

19. "**பணமனுப்புனர்**" என்பது கொடுப்பனவொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக பெறுநரை அங்கீகரித்து இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை கொடுக்கல்வாங்கலொன்றை முன்னெடுத்து உருவாக்கின்ற இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர் என பொருள்படும்.

20. "**பெறுநர்**" என்பது பணவனுப்பினரிடமிருந்து இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை கொடுக்கல்வாங்கலொன்றை பெறுகின்ற இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர் என்பதுடன் கொடுப்பனவொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அதிலுள்ள இலங்கைவங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை தரவுகளால் அங்கீகரிக்கப்பட்டவர் என பொருள்படும்.

21. "**அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை**" என்பது இலங்கை மத்திய வங்கியால் உடமையாக்கப்பட்டு தொழிற்படுத்தப்பட்ட முற்றிலும் தன்னியக்க முறைமையான முக்கிய கொடுப்பனவு முறைமையாகும். லங்காசெட்டில் முறைமையின் கூறொன்றாக அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை காணப்படுகின்றது.

22. "**இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை**" என்பது இலங்கை மத்திய வங்கிக்காகவும் இலங்கை மத்திய வங்கியின் சார்பிலும் லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டினால் பேணப்பட்டு மற்றும்/அல்லது மையமாக கட்டுப்படுத்தப்பட்ட ஓர் இலத்திரனியல் முறைமை, முன்னெடுப்பு அல்லது ஒருங்கேற்பாடாகும் என்பதுடன் நாணயக் கொடுக்கல்வாங்கல்கள், நாணய எடுப்பனவுகள் அல்லது நாணயப் பெறுமதி மாற்றல்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்தி, கட்டளைப்படுத்தி, இயலச்செய்து, அதிகாரமளித்து அல்லது வசதியளித்து கொடுப்பனவு கட்டளைகளினதும் வேறு செய்திகளினதும் தொடர்பூட்டலுக்கும் முன்னெடுத்தலுக்கும் வசதியளிக்கின்றது. இது, இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளரால் நடைமுறைப்படுத்த முயல்கின்ற கொடுப்பனவின் இலத்திரனியல் மாற்றலுக்காகவும் பரிமாற்றலுக்காகவும் லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட் முறைமைகள், முன்னெடுப்புகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

23. "**இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைத் தரவுகள்**" வெளிமுகத் தரவுகள் மற்றும் உள்முகத் தரவுகள் உள்ளடங்கலாக, இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை, இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்கள், மற்றும் லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட் என்பவற்றால் உருவாக்கப்பட்டு தரவுகளிலிருந்து பெறப்பட்ட தனித்துவமான அடையாளப்படுத்தல் குறியீடுகள் மற்றும் வேறு அனைத்து தகவல்கள் என பொருள்படும்.

24. "**இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைக் கோப்பு**" தீர்ப்பனவுக்காக அதன் வெளிமுக இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்ற இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பற்கேற்பாளரால் உருவாக்கப்பட்டு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையூடாக லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டிற்கு மாற்றப்பட்ட இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை தரவுகளின் கோப்பு என பொருள்படும்.

25. "**இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை கொடுக்கல்வாங்கல்**" கொடுப்பனவுக் கட்டளையொன்றை நடைமுறைப்படுத்தல், தொடர்பூட்டல் அல்லது நிறைவேற்றுதல் என்பவற்றிற்கு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையூடாக இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளரால் மற்றும்/அல்லது இலங்கை மத்திய வங்கியால் உருவாக்கப்படும் இலத்திரனியல் கொடுக்கல்வாங்கலாகும்.

26. "**இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பதிவு**" இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையுடன் தொடர்பில் அருவமான ஊடகமொன்றில் வரையப்பட்டு இலத்திரனியல் அல்லது வேறு ஊடகமொன்றில் சேகரிக்கப்பட்ட தகவல்களாகும் என்பதுடன் இவை எளிதான வடிவத்தில் மீளப்பெறக்கூடியதாகவும் காணப்படுகின்றன.

27. "**இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை**" என்பது இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை தரவுகளை வரையறையின்றி, அகற்றுதல், பெறுதல், முன்னெடுத்தல் மற்றும் காப்பகப்படுத்தல் போன்றவற்றிற்கான முறைமைகள் உள்ளடங்கலாக இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை தொடர்பில் லங்காகிளியர் பங்கேற்பாளராலும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களாலும் தொழிற்படுத்தப்பட்டு பேணப்படும் முறைமைகளாகும்.

28. "**இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்**" என்பது இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை முதன்மை பங்கேற்பாளர் மற்றும்/ அல்லது இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை இரண்டாந்தர பங்கேற்பாளர் என பொருள்படும்.

29. "**இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை முதன்மை பங்கேற்பாளர்**" என்பது இலங்கை மத்திய வங்கி அல்லது இலங்கையில் தொழிற்படுகின்ற ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கி என்பதுடன் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் ஒரு பங்கேற்பாளராக இலங்கை மத்திய வங்கியுடன் தொழிற்படுவதுடன் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையில் பங்கேற்பதற்கு இலங்கை மத்திய வங்கியாலும் லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட்டினாலும் அதிகாரமளிக்கப்பட்டது என பொருள்படும்.

30. "**இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை இரண்டாந்தர பங்கேற்பாளர்**" என்பது இலங்கை வங்கிளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை மீதான கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்கும் சொல்லப்பட்ட முதன்மை பங்கேற்பாளரால் பேணப்படும் அதேநேர மொத்த தீர்ப்பனவுக் கணக்கினூடாக தேறிய நிலுவைகளை தீர்ப்பனவு செய்வதற்கும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை முதன்மை பங்கேற்பாளரால் அதிகாரமளிக்கபட்டும் அத்துடன் இலங்கை வங்கிகளுக்கிடையிலான முறைமையில் பங்கேற்பதற்கு இலங்கை மத்திய வங்கியாலும் லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டினாலும் அதிகாரமளிக்கப்பட்ட சட்ட ரீதியான நிறுவனம் என பொருள்படும்.

31. "**தீர்ப்பனவு நாள்**" என்பது இலங்கையில் தொழிலுக்காக வங்கிகள் திறக்கப்படும் நாளொன்றாகும் (இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலுடன் இலங்கை வங்கிகளின் அமைப்பால் தீர்மானிக்கப்பட்டவாறு) என்பதுடன் அதே நேர மொத்த தீர்ப்பனவு முறைமையூடாக பல்புடை தேறிய தீர்ப்பனவு/ தீர்ப்பனவுகள் இடம்பெறக்கூடிய நாளொன்றாகும்.

32. "**தீர்ப்பனவு நேரம்**" என்பது இலங்கை மத்திய வங்கியால் காலத்திற்கு காலம் குறித்துரைக்கப்படும் நேரமாகும். இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களுக்கிடையிலான தேறிய தீர்ப்பனவு அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை மூலம் இதில் தீர்மானிக்கப்படுகின்றது.

33. "**இலங்கை வங்கிகளின் அமைப்பு**" என்பது வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கிகளின் (உத்தரவாதம்) அமைப்பு.

34. "**கொடுக்கல்வாங்கல் எல்லைகள்**" என்பது இலங்கை மத்திய வங்கி, லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை முதன்மை பங்கேற்பாளர்கள் ஆகியோராலும் ஆகியோருக்கு மத்தியிலும் ஒப்புதலளிக்கப்பட்டவாறு கொடுக்கல்வாங்கல் ஒன்றிற்கு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைக்குள் குறித்துரைக்கப்பட்ட உயர்ந்தபட்ச பெறுமதி என பொருள்படும்.

35. "**பயனர் உடன்படிக்கை**" இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை தொடர்பில் ஒவ்வொரு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை முதன்மை பங்கேற்பாளர் மற்றும்/அல்லது இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை இரண்டாந்தரப்பு பங்கேற்பாளர் ஆகியோருடன் லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிட்டினால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை என பொருள்படும்.

36. "**பயனர் கடவுச்சொல்**" இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையொன்றிற்கான அணுகலை ஒவ்வொரு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை முதன்மை பங்கேற்பாளர் மற்றும்/அல்லது இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை இரண்டாந்தரப் பங்கேற்பாளருக்கு வழங்குவதற்கு அவர்களுடன் லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டால் குறித்துரைக்கப்பட்ட இரகசிய குறியீடாகும்.

37. "**பெறுமதித் திகதி**" என்பது பணவனுப்புனர் அல்லது வாடிக்கையாளர் ஆகியோரால் தனது கொடுப்பனவுக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட திகதியாகும். இத்திகதியில் பயனாளி கொடுப்பனவுக் கட்டளையில் எடுத்துரைக்கப்பட்ட நாணயப் பெறுமதியை எடுத்துரைப்பதற்கு உரித்துடையவராவர்.

ஆ) லங்காகிளியர் (பிறைவட்) லிமிடெட் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைகள் பங்கேற்பாளர்களின் பொறுப்புக்கள்

1. ஒவ்வொரு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைகள் பங்கேற்பாளர்களும் லங்காகிளியர் பிறைவட் லிமிடெட்டும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் பங்களிப்புடனும் தொழிற்பாட்டுடனும் தொடர்புடைய பயனர் உடன்படிக்கையொன்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

2. தெளிவுத்தன்மையையும் நியமங்களையும் உறுதிசெய்வதற்கு இலங்கை வங்கிகளுக்கிடையிலான முறைமை தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலுடன் லங்கா கிளியர் பிறைவட் லிமிடெட்டினால் நிர்ணயிக்கப்பட்ட விபரக்குறிப்புகளை இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைகள் பங்கேற்பாளர்களும் லங்காகிளியர் பிறைவட் லிமிடெட்டும் பின்பற்றுதல் வேண்டும்.

3. டிஜிட்டல் சான்றிதழ்கள் மற்றும் பயனர் கடவுச்சொற்கள் என்பவற்றை ஒவ்வொரு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளருக்கும் லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட் வழங்க வேண்டும். இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்கள் மிகவும் இரகசியமாக இவற்றைக் கையாளுதல் வேண்டும்.

4. விதிகள், நடைமுறைகள் வடிவங்கள் உள்ளடங்கலாக இலத்திரனியல் நிதிய மாற்றல்கள் அல்லது இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலுடன் காலத்திற்கு காலம் லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட் மூலம் பரிந்துரைக்கப்பட்ட அத்தகைய வேறு ஒருங்கேற்பாடுகள் என்பவை தொடர்பில் இலங்கை வங்கிகளுக்கிடையிலான பங்கேற்பாளர்கள் மற்றும் லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட் என்பவற்றிற்கிடையிலான ஒருங்கேற்பாடுகளை இலங்கை வங்கிகளுக்கிடையிலான பங்கேற்பாளர்களும் லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட்டும் பின்பற்றுதல் வேண்டும்.

5. தொழிற்பாட்டு நடவடிக்கை கைந்நூலிலும் அதன் பின்னிணைப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட நிபந்தனைகளையும் வழிகாட்டல்களையும் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கை கைந்நூலில் இணைக்கப்பட்ட அட்டவணையில் பட்டியலிடப்பட்ட தொடர்பான அறிவித்தல்களையும் பின்பற்றுவதற்கு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்கள் மற்றும் லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட் ஒப்புதலளித்தல் வேண்டும்.

6. லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட்டும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை இரண்டாந்தரப் பங்கேற்பாளர்களும் அத்தகைய பங்கேற்பாளர்களின் கொடுப்பனவு கட்டளைகளை கொடுத்துத் தீர்ப்பதற்கு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முதன்மைப் பங்கேற்பாளர்களூடாக ஒருங்கேற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இ) லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட்டின் பொறுப்புக்கள்

1. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் ஏக தொழிற்பாட்டாளராக லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட் இருத்தல் வேண்டும்.

2. லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட்டானது முதன்மைத் தளத்தில் முக்கிய தொழிற்பாடு செயலிழக்கின்ற சூழ்நிலையில், இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலுடன் அனர்த்த மீட்பு தளத்தில் அறிவிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் தொழில் நாட்களில் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையை தொழிற்படுத்துவதற்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

3. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைக்கும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை தொடர்பூட்டல் வலையமைப்பிற்குமிடையில் இணைப்பை தாபித்துப் பேணுவதற்கு அத்தியாவசியமான இலங்கை

வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையையும் வேறு ஏதேனும் முறைமைகளையும் நிறுவுதல், ஒழுங்கமைத்தல், பேணுதல், தொழிற்படுதல், பாதுகாப்பு மற்றும் அணுகல் கட்டுப்பாடு என்பவற்றிற்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

4. பல்புடை தீர்ப்பனவுக் கொள்கைக்கமைவாக, இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களால் சமர்ப்பிக்கப்படும் கொடுப்பனவுக் கட்டளைகளின் அடிப்படையில் தேறிய கோரல்களையும் பொறுப்புக்களையும் கணிப்பிடுவதன் மூலம் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களுக்கான கொடுப்பனவுகளை கொடுத்து தீர்ப்பதற்கு வசதியளித்து இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையை லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட் தொழிற்படுத்துதல் வேண்டும்.

5. லங்கா கிளியர் (பிறைவெட்) லிமடெட்டானது பங்கேற்பாளர் எழுத்துவடிவில் சம்மதத்தை வெளிப்படுத்தும் வரை அல்லது ஏதேனும் எழுத்து மூலமான சட்டத்தினால் வேண்டப்பட்டவாறு தகவல்களை வெளிப்படுத்தும் வரை பங்கேற்பாளர்களின் கொடுப்பனவுத் தகவல்கள், தொழில்நுட்ப மற்றும் நிறுவன ரீதியான தகவல்கள் உட்பட அனைத்து இரகசியமான தகவல்களையும் மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களையும் கையாளுதல் வேண்டும்.

6. லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டானது ஒவ்வொரு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளரின் தேறிய தீர்ப்பனவு நிலைமையை எதிரீடு செய்கின்ற இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பல்புடை தீர்ப்பனவு தொகுதிக் கோப்புக்களை இலங்கை மத்திய வங்கியால் தீர்மானிக்கப்படும் ஒவ்வொரு தீர்ப்பனவுச் சுழற்சி வட்டத்தின் தீர்ப்பனவு காலத்திலன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கிக்கு கிடைப்பனவாகச் செய்தல் வேண்டும்.

7. இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலுடனும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான முறைமைக்கான தொழிற்பாட்டு நடவடிக்கை கைநூலுடனும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு விதிகளை லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட் உருவாக்கி விடுத்தல் வேண்டும். இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் அத்தகைய விதிகளும் தொழிற்பாட்டு நடைமுறைகளும் தெளிவாகவும் கிரமமாகவும் குறிப்பிடப்பட வேண்டும். லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டினால் விடுக்கப்படும் முறைமை விதிகளும் தொழிற்பாட்டு நடவடிக்கை கைநூலும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் தொழிற்பாடுகளையும் நிர்வாகத்தையும் ஆளுகை செய்ய வேண்டும் என்பதுடன் லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட்டிற்கும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களுக்குமிடையில் பிணைப்பாக இருத்தல் வேண்டும்.

8. தேவைப்படும் போதும் தேவைப்படும்வாறும் இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலுடன் மற்றும்/அல்லது தொழிற்பாட்டு நடவடிக்கை கைநூலுடன் முறைமை விதிகளை லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட் திருத்தியமைத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய திருத்தங்களை சுற்றறிக்கைகள் மூலம் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

9. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைகளூடாக அனுப்பப்பட்ட அனைத்து கொடுக்கல்வாங்கல்களும்

   i பாதுகாப்பனதும் உண்மையானதுமான ஊடுகடத்தலை உறுதிசெய்வதற்காக பாதுகாப்பான வழிமுறைகளுடன் இணங்குகின்றன மற்றும்

   ii 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடுதல் சட்டத்திற்கமைவாக காப்பகப்படுத்தப்படுகின்றன என்பதை லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட் உறுதிப்படுத்தல் வேண்டும்.

10. லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டானது தேர்ச்சி, திறன் மற்றும் அறிவு என்பவற்றின் நியமத்துடனும் முன்மதி, நலம், கவனம் என்பவற்றின் நியமத்துடனும் இணங்கும் விதத்தில் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைகள் தொடர்பில் அதன் கடமைகள், கடப்பாடுகள் மற்றும் முயற்சிகள் ஆகியவற்றிற்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

11. சேவை தொடர்பில் எதிர்கொள்ளப்பட்ட ஏதேனும் இடர்பாடுகளை தீர்ப்பதற்கு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைக்கு உதவும் பொருட்டு லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டில் உதவிப்பீடமொன்றை லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட் தாபித்து பேணுதல் வேண்டும்.

12. அனைத்து வர்த்தக வங்கிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் பிரதிநிதித்துவப்படுத்தும் லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டின் அனைத்து பணிப்பாளர் சபையும் காலத்திற்கு காலம் கட்டணங்களை திருத்துவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

13. பொருத்தமின்மை மற்றும் விதிகளை மீறல் தொடர்பில் தண்டப்பணங்களையும் கட்டணங்களையும் உள்ளடக்குகின்ற அட்டவணையொன்று இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனையுடன் லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டின் பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதுடன் காலத்திற்கு காலம் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களுடன் தொடர்பூட்டப்படுதல் வேண்டும்.

14. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் தொடர்ச்சியான அடிப்படையொன்றில் இலங்கை வங்கிகளுக்கிடையிலான முறைமை பற்றிய பயிற்சி, விழிப்பூட்டல் மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட் நடாத்துதல் வேண்டும்.

ஈ) இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களின் பொறுப்புக்கள்

ஒவ்வொரு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளரும்

1. லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் சில்லறைக் கொடுப்பனவுகளையும் தீர்ப்பனவு முறைமைகளையும் தவிர, சில்லறை கொடுப்பனவுகளை மையமாக தீர்க்கின்ற ஏதேனும் தேசிய மட்ட வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையை தொழிற்படுத்தலாகாது அல்லது பங்கெடுத்தலாகாது.

2. தமது சொந்த வன்பொருள், மென்பொருள் மற்றும் வலையமைப்பு உட்கட்டமைப்பை பெறுகை செய்வதற்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

3. பெறப்பட்ட வன்பொருள் மற்றும் மென்பொருள் எதிர்கால மேம்பாடுகளுக்கான ஏற்பாடுகளுடன் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் கீழ் கொடுக்கல்வாங்கல்களை பெறுவதற்கும் செயல்படுத்துவதற்கும் கிடைப்பனவாகவுள்ளதை உறுதிசெய்து, அத்தகைய வன்பொருள் மற்றும் மென்பொருளை நல்ல முறையில் பேணுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

4. கோப்பு வடிவத்துடனும் குறித்துரைக்கபட்ட கொடுக்கல்வாங்கல் பாய்ச்சல்களுடனும் இணங்குவதற்கும் வாடிக்கையாளர்கள் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைகள் பங்கேற்பாளர்களின் கொடுப்பனவு கட்டளைகளை சரியாகவும் துல்லியமாகவும் காலமுறையாக சமர்ப்பிப்பதற்கும் அனைத்து கொடுப்பனவு கட்டளைகளின் நம்பகத்தன்மைக்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

5. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையை பாதுகாப்பதற்கு பொறுப்பாகவிருப்பதுடன் லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டினால் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களுக்கு விடுக்கப்பட்ட அனைத்து பாதுகாப்பு அம்சங்களையும் அறிவுறுத்தல்களையும் இணங்கி அவதானித்து ஒட்டுமொத்த இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் பாதுகாப்பிற்கும் வேறு ஏதேனும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான பங்கேற்பாளரின் முறைமையின் பாதுகாப்பிற்கும் எந்தவொரு சட்டம்/சட்டங்கள் அல்லது வழு/வழுக்கள் அச்சத்தை ஏற்படுத்தாது அல்லது நியாயதிக்கத்தை தோற்றுவிக்காது என்பதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

6. அங்கீகரிக்கப்படாத அணுகலும் (ஊடுறுவுதல், தகவல் நெரிசலை உருவாக்குதல், துப்பறிதல் போன்றவை) மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையை மாற்றுதல்/சேதப்படுத்தல் மற்றும் சிதைவை ஏற்படுத்தும் வேறு நடடிவக்கைகளும் தடுக்கப்படுகின்றன என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

7. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையில் பங்கேற்பதற்கு தமது சட்ட ரீதியான நிலையிலும் இயலாற்றலிலும் ஏற்படும் ஏதேனும் மாற்றத்தை இலங்கை மத்திய வங்கிக்கும் லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டிற்கும் அறிவித்தல் வேண்டும்.

8. ஒவ்வொரு தீர்ப்பனவு சுழற்சி வட்டத்தின் இறுதியிலும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள இலங்கை வங்கிகளுக்கிடையிலான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதியை தீர்ப்பதற்கு தமது அதேநேர மொத்த தீர்ப்பனவுக் கணக்குகளில் போதுமானளவு நிதியம் கிடைப்பனவாகவுள்ளது என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

9. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை மூலம் வாடிக்கையாளருக்கு பண ஊடுகடத்தலை நிறைவு செய்தல் அல்லது முடிவுறாதவற்றை ஒப்புக்கொள்வதற்கான நடைமுறையை மற்றும்/அல்லது பொறிமுறையை அமைத்தல் வேண்டும்.

10. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை தொடர்பாக காலத்திற்கு காலம் லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டால் குறித்துரைக்கப்பட்ட தொழில்நுட்ப, சட்ட, நிர்வாக, பாதுகாப்பு மற்றும் வேறு தேவைப்பாடுகள் என்பவற்றை கடைப்பிடித்தல் வேண்டும்.

11. லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட் தொடர்பில் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை தரவுகளைப் பெறுகையில், கொடுப்பனவுக் கட்டளையின் பெறுமதி தேதியில், பயனாளியின் கணக்கில் வரவு வைப்பதை அல்லது பயனாளிக்கு நாணய பெறுமதி கோருவதை உறுதி செய்தல் வேண்டும்.

12. மேலே 11 இல் எடுத்துரைக்கப்பட்ட வசதிகளை வழங்குவதற்கு சேவை விதிமுறைகளையும் நியமங்களையும் அமைத்து, மற்றும் உள்கட்டமைப்பை பேணுதல் வேண்டும்.

13. தரவுத்தளங்களின் வழமையான காப்புப்பிரதிகள் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையுடன் தொடர்புடைய அதன் அனைத்து தகவல் மற்றும் தரவுகளை உருவாக்குவதற்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

14. நாளாந்த கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளை இணக்கம்செய்து, ஏதேனும் வேறுபாடுகளிருப்பின் உண்மையான கொடுக்கல்வாங்கல் நேரத்திலிருந்து ஒரு தொழில் நாளுக்குப் பிந்தாமல் லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட் உதவி பீடத்திற்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கவும்.

15. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் தொழிற்பாடுகள் தொடர்பில் லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டால் குறித்துரைக்கப்பட்ட விதிகள், அறிவுறுத்தல்கள் மற்றும் நடைமுறைகளுடனோ அல்லது இலங்கை மத்திய வங்கியால் விடுக்கபட்ட வேறு ஏதேனும் பணிப்புரைகளுடனும் இணங்குதல் வேண்டும்.

16. 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடும் சட்டத்தின் நியதிகளுக்கமைவாக, குறிப்பிட்ட வாடிக்கையாளரிடமிருந்து இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையூடாக நிறைவேற்றுவதற்கு கொடுப்பனவுக் கட்டளைகளின் எண்ணிக்கையிலும் பெறுமதியிலும் ஏதேனும் அசாதாரண அதிகரிப்பு இருந்தால், இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவுக்கு தெரிவிப்பதுடன் நிதியியல் உளவறிதல் பிரிவின் அறிவுறுத்தல்களுக்கமைவாக செயல்படுதல் வேண்டும்.

உ) தடங்கலற்ற தொழில் திட்டமிடல்

1. மிக அதிக மட்டத்திலான முறைமையை உறுதிப்படுத்துவதற்கு குறித்த பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கபட்ட இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைக்காக நன்கு விபரிக்கப்பட்ட தடங்கலற்ற தொழில் திட்டமிடலை லங்கா கிளியர் பிறைவெட் லிமிடெட்டும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களும் கொண்டிருத்தல் வேண்டும்.

2. இடையூறொன்றிற்குப் பின்னர் உடனடியாக தொழில் தொழிற்பாடுகளை தொடர்வதற்கும் முன்னெடுக்கப்படுகின்ற இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை தொழிற்பாடுகளை தொடர்ந்து நிறைவேற்றுவதற்கும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைகளுக்கு முற்றிலும் மேம்படுத்தப்பட்ட அறவீட்டுத் தளங்களையும் நன்றாக பயிற்றுவிக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவத்தையும் அத்துடன் தொழில் அறவீட்டுக் குழுக்களையும் லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களும் கொண்டிருத்தல் வேண்டும்.

3. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைத் தொழிற்பாடுகளை ஏதேனும் தடையின்றி கொண்டு நடாத்துவதை உறுதிசெய்யும் பொருட்டு, ஊழியர் முரண்பாடுகள் உட்பட நிகழக்கூடிய சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்கு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைகளின் மையத் தொழிற்பாடுகள் தொடர்பில் திறனானதும் பயிற்றுவிக்கப்பட்டதுமான காப்பு அலுவலர்களை லங்கா கிளியர் பிறைவெட் லிமிடெட் கொண்டிருத்தல் வேண்டும்.

4. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையில் அதன் தொழிற்பாடுகளை செயலாற்றுவதிலிருந்து தடுக்கின்ற ஏதேனும் தொழில்நுட்ப ரீதியான அல்லது தொழிற்பாட்டு ரீதியான பிரச்சினைகளை லங்கா கிளியர் பிறைவெட் லிமிடெட் எதிர்கொண்டிருப்பின், அப்பிரச்சனை பற்றி 15 நிமிடங்களுக்குள் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்பட வேண்டும். முதன்மை தளத்தில் மீண்டெழமுடியாத இழப்பு ஏற்படுகின்ற சூழ்நிலையில், லங்காகிளியர் (பிறைவெட்) லிமிடெட் உடனடியாக இலங்கை மத்திய வங்கிக்கு அறிவித்து அனர்த்த மீட்பு தளத்தில் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையை ஆரம்பிப்பதுடன் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி கோப்புகளை இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். முதன்மை தளம் மற்றும் அனர்த்த மீட்பு தளம் இரண்டிலும் நீண்டகாலமாக மீண்டெழமுடியாத இழப்புக்கள் ஏற்படுகின்ற சூழ்நிலையில், லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட் இலங்கை மத்திய வங்கிக்கு உடனடியாக அறிவித்து முறைமை செயலிழந்த நேரத்திற்கான இறுதி கூற்று சுழற்சிவட்டத்திலிருந்து காலப்பகுதிக்கான இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பல்புடை தேறிய தீர்ப்பனவை பெற்றுக் கொள்வதற்கு மாற்று முறைகளை பயன்படுத்துவதுடன் அவற்றை இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

5. வெட்டு நேரங்களை எதிர்கொள்ளும் பொருட்டு, முறைமை செயலிழப்பு அல்லது தகவல் ஊழல் அல்லது தகவல் இழப்பு இடம்பெறுகின்ற சூழ்நிலையில் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை தொடர்பான அதன் தரவுத்தளங்கள் அதன் தகவல்கள் மற்றும் தரவுகள் என்பவற்றை கிரமமாக காப்புவிப்பதற்கும் தரவுகளின் மிகை மற்றும் மீட்பு நடைமுறைகளை பேணுவதற்கும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்கள் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

ஊ) இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை தரவுகளினதும் பதிவுகளினதும் இரகசியத்தன்மை

1. கொடுக்கல்வாங்கல்கள், கணக்குகள் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களுக்கு விடுக்கப்பட்ட ஏதேனும் அறிவுறுத்தல்கள் தொடர்பான தகவல்கள் உட்பட அனைத்து இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பதிவுகள் தொடர்பில் இங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்கள் இரகசியத்தன்மையை பேணுதல் வேண்டும் என்பதுடன் அதன் அலுவலர்கள், ஊழியர்கள், முகவர்கள் மற்றும்.அல்லது ஏதேனும் இயலாற்றலில் தொழிற்படுகின்ற ஏதேனும் ஆள் ஆகியோர் இப்பணிப்புரை மற்றும் ஏற்புடைத்தான விதிகள் என்பவற்றிக்கமைய, அனைத்து நேரங்களிலும் இரகசியத்தன்மையை பேணுகின்றனர் என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

2. இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளினதும் சட்டத்தால் அல்லாவிடின் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களின் தொழிற்பாடுகளால் நேரத்திற்கு நேரம் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களினதும் நடைமுறையில் இலங்கை மத்திய வங்கியின் கட்டுப்பாடு, மேற்பார்வை, ஒழுங்குமுறை மற்றும் கண்ணோட்டம் என்பவற்றிற்கு லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டும் அனைத்துப் பங்கேற்பாளர்களும் இணைந்தும் தனித்தனியாகவும் தாமாகவே உட்படுதல் வேண்டும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் அனைத்து கட்டளைகளுடனும் பணிப்புரைகளுடனும் இணங்குதல் வேண்டும்.

3. மேற்கூறியவற்றிற்கு பாரபட்சமின்றி நிறைவேற்றுகையில், இலங்கை மத்திய வங்கி நேரத்திற்கு நேரம் மற்றும் தேவையான நேரத்தில் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை தொடர்பில் அத்தகைய தகவல்களை வழங்குவமாறு லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்கள் என்பவற்றிடம் கோரமுடியும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கிக்கான அத்தகைய தகவல்களை வழங்குவதற்கு லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களும் கடமைப்பட்டிருத்தல் வேண்டும்.

4. இத்தகைய பணிப்புரையின் ஏற்பாடுகளுக்கான இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை இணக்கம் தொடர்பில் லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களிடமிருந்து இலங்கை மத்திய வங்கிக்கான அனைத்து அறிக்கைகளும் தகவல்களும் துல்லியமானதும் முழுமையானதுமென கருதப்பட வேண்டும்.

எ) பிணக்குகளுக்குத் தீர்வுகாணுதல்

1. லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டிற்கும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களுக்குமிடையில் மற்றும்/அல்லது இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை தொழிற்பாடுகள் தொடர்பில் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களுக்கிடையில் தோன்றுகின்ற ஏதேனும் முரண்பாடொன்றை தீர்ப்பதற்காக லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை பங்கேற்பாளர்களும் பரஸ்பர கலந்துரையாடல்கள், பேச்சுவார்த்தைகள் அல்லது மத்தியஸ்தம் ஊடாக ஒவ்வொரு முயற்சியை மேற்கொள்ளுதல் வேண்டும்.

2. அத்தகைய பரஸ்பர கலந்துரையாடல்கள், பேச்சுவார்த்தைகள் அல்லது மத்தியஸ்தம் என்பவை கேள்வி ரீதியான முரண்பாட்டைத் தீர்க்கத் தவறுமிடத்து மாத்திரம் நீதிமன்றத்திற்கு முன்னால் தீர்வு அல்லது வழக்காடல் மூலமான பிணக்குகளுக்கு தீர்வுகாணும் விதத்தில் தீர்த்துவைத்தல் வேண்டும்.

3. அத்தகைய பரஸ்பர கலந்துரையாடல்கள், பேச்சுவார்த்தைகள் அல்லது மத்தியஸ்தம் மற்றும் தீர்வு என்பவற்றிற்கான நடைமுறையை இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை விதிகளில் தெளிவாகவும் விரிவாகவும் குறிப்பிடுதல் வேண்டும்.

ஏ) குற்றங்கள்

இத்தகைய பணிப்புரையுடன் அல்லது இத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் பணிப்புரை, அறிவுறுத்தல் அல்லது விதியுடன் எவரேனும் ஆள் இணங்கியொழுகுவதற்கு தவறுமிடத்து 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் குற்றவாளியாக கருதப்படுவர்.

2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளியைத் தொழிற்படுத்துதல்

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம்

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் 44ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட பொதுவான பணிப்புரை.

திருமதி. டி.எம்.ஜே.வை.பி. பர்ணாந்து
துணை ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

கொழும்பு
2022 பெப்புருவரி 28

2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளியைத் தொழிற்படுத்துதல்

இப்பணிப்புரையானது, 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளியின் தொழிற்பாடுகளை பதிலீடு செய்தல் வேண்டும். இப்பணிப்புரையானது லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் உறுப்பினர்களுக்கு ஏற்புடைத்தானதாகவும் 2022 பெப்புருவரி 28இல் தொழிற்பாட்டிற்கு வருதலாதலும் வேண்டும்.

2. வரைவிலக்கணங்கள்

வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலன்றி, இப்பணிப்புரையில்:

2.1 **"த.கூ.பொறி" அல்லது "தன்னியக்கக் கூற்றுப் பொறி"** என்பது தனிப்பட்ட அடையாள இலக்கத்தினைச் சரிபார்க்கவும் அனைத்து கொடுக்கல்வாங்கல்களுக்குப் பயன்படுத்தப்படுவதுமான அட்டை வைத்திருப்பவரினால் தொழிற்படுத்தப்படுகின்ற முனைக்கோடி எனப் பொருள்படும்.

2.2 **"இ.ம.வங்கி"** என்பது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருள்படும் (அத்தியாயம் 422).

2.3 **"பொ.த.ஆ"** அல்லது **"பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி"** என்பது லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் இலத்திரனியல் கொடுப்பனவு முறைமையாகும். இது காசு மீளப்பெறல், நிலுவை தொடர்பான விசாரணைகள் மற்றும் ஏதேனும் மற்றைய தன்னியக்கக் கூற்றுப் பொறிப் பணிகளின் தொடர்பூட்டல் மற்றும் செயற்பாடுகளுக்கு வசதியளிப்பதுடன் லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட் முறைமைகள், செயன்முறைகள் மற்றும் இலத்திரனியல் தரவு

மாற்றலுக்கான நடைமுறைகள் என்பனவற்றையும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்களினால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் கொடுப்பனவுகளிற்கான அதிகாரமளிப்பினையும் உள்ளடக்குதல் வேண்டும்.

2.4 "**பொ.த.ஆ. உறுப்பினர்**" என்பது பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் முதனிலை உறுப்பினர் மற்றும் இரண்டாந்தர உறுப்பினர் எனப் பொருள்படும்.

2.5 "**தீர்ப்பனவு வட்டம்**" என்பது லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் வரைவிலக்கணம் செய்யப்படுகின்றவாறான ஒரு தீர்ப்பனவு நேரத்திற்கும் அதனை உடனடுத்து வருகின்ற மற்ற தீர்ப்பனவு நேரத்திற்குமிடையிலான காலம் எனப் பொருள்படும்.

2.6 "**தொழிற்பாட்டு ரீதியான நடைமுறைக் கைநூல்**" என்பது பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழித் தொழிற்பாடுகள் பற்றி லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்களுக்கான வழிகாட்டலுக்கான நடைமுறைகளை உள்ளடக்கிய லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று பொருள்படும்.

2.7 "**முதனிலை உறுப்பினர்**" என்பது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பங்கேற்பாளராகவுள்ள பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினரொருவராக இருப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினாலும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினாலும் ஒப்புதலளிக்கப்பட்ட ஏதேனும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி அல்லது ஏதேனும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி என்று பொருள்படும்.

2.8 "**அ.நே.மொ.தீ.முறைமை**" என்பது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை எனப் பொருள்படும். இது மத்திய வங்கிக்குச் சொந்தமானதும் அதனால் தொழிற்படுத்தப்படுவதுமான முழுமையாக தன்னியக்கப்படுத்தப்பட்ட கொடுப்பனவு முறைமையொன்றாகும்.

2.9 "**இரண்டாந்தர உறுப்பினர்**" என்பது பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்கு முதனிலை உறுப்பினரால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் சட்ட ரீதியான நிறுவனம் எனவும் அத்தகைய முதனிலை உறுப்பினரின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை கணக்கினூடாக தேறிய நிலுவைகளை தீர்ப்பனவு செய்கின்றதும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினராக இருப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினாலும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினாலும் ஒப்புதலளிக்கப்பட்ட நிறுவனம் என பொருள்படும்.

2.10 "**உறுப்புரிமை உடன்படிக்கை**" என்பது பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி உறுப்பினர் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் உடன் செய்து கொண்ட உடன்படிக்கையென பொருள்படும்.

3. லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினரின் பொறுப்புக்கள்:

3.1 பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியில் பங்கேற்றல் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பில் ஒவ்வொரு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினரும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டும் உறுப்புரிமை உடன்படிக்கையொன்றை செய்து கொள்ளுதல் வேண்டும்.

3.2 ஒவ்வொரு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினரும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டும் விதிகள், நடைமுறைகள் என்பன வடிவிலான மற்றும் காலத்திற்குக் காலம் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் விபரிக்கப்பட்ட ஏனைய ஒழுங்குகள் உட்பட பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகள் தொடர்பில் அவற்றிற்கிடையேயான உடன்படிக்கைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்.

3.3 ஒவ்வொரு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினரும், லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டும் தொழிற்பாட்டு நடைமுறைக்காக கைநூலில் குறித்துரைக்கப்பட்டவற்றையும் வழிகாட்டல்களையும் பின்பற்ற உடன்பட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

3.4 ஒவ்வொரு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினரும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் விதிக்கத்தக்க ஏதேனும் வரையறைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

4. லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டின் பொறுப்புக்கள்:

4.1 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் ஏகத் தொழிற்பாட்டாளராவர்.

4.2 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் பின்வருவனவற்றிற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்

4.2.1 ஒவ்வொரு நாளும் இருபத்து நான்கு மணி நேரமும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியினைத் தொழிற்படுத்தல்

4.2.2 இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலுடன் தகைமை வாய்ந்த நிறுவனங்களுக்கு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியில் முதலாந்தர மற்றும் இரண்டாந்தர உறுப்புரிமைகளை வழங்குதல்

4.2.3 இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் தெளிவானதும் அனைத்தையும் உள்ளடக்கியதுமான முறைமை விதிகளை ஏற்படுத்துகின்றமை. லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் விடுக்கப்படுகின்ற முறைமை விதிகளை மற்றைய விடயங்களுடன் அதிகாரங்கள், உரிமைகள் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்களின் கடமைகள் மற்றும் கடப்பாடுகள், சேருதல், விலகிக்கொள்ளுதல், நிறுத்துதல் மற்றும் இடைநிறுத்துதல் என்பன உள்ளிட்ட பங்கேற்புகளுக்கான நிபந்தனைகள், தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகள், பிணக்குகளைத் தீர்க்கும் பொறிமுறைகள் மற்றும் தகவல்களின் இரகசியத் தன்மையினை பேணுவதற்கான நிபந்தனைகள் என்பனவற்றைக் குறித்துரைத்தல் வேண்டும்

4.2.4 பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகளுக்கு ஏற்புடைத்தான விளக்க விபரங்கள், நியமங்கள், பாதுகாப்புப் பண்புகள் மற்றும் கணக்காய்வு இணங்குவிப்புகளை வரைவிலக்கணம் செய்தல்

4.2.5 இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வெட்டு நேரத்தின் போதோ அல்லது அதற்கு முன்னதாகவோ ஒவ்வொரு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினரினதும் தேறிய நிலைமையினைப் பற்றிக் குறிப்பிடும் பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆழியின் பல்புடை தேறிய தீர்ப்பனவு தொகுதி கோவைகளை இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்

4.2.6 பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறித் தொழிற்பாடுகளுடன் தொடர்பான ஏதேனும் பணி வழங்குநருடன் உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல் மற்றும் அவற்றை முடிவுறுத்தல்

4.2.7 3.4இல் தரப்பட்டுள்ள வாசகத்திற்கு உட்பட்டு காலத்திற்குக் காலம் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் திருத்தப்படக்கூடிய ஒரே சீரான கட்டணங்களையும் தண்டப் பண அமைப்பினையும் பின்பற்றுதல்

4.2.8 பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையிடல் தொழிற்பாடுகளுடன் இணங்கியொழுகுதல்

5. பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்களின் பொறுப்புக்கள்:

ஒவ்வொரு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினரும் பின்வருவனவற்றிற்குப் பொறுப்பானவராக இருத்தல் வேண்டும்

5.1 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டின் விளக்க விபரங்களுடன் முழுமையாக இணங்கிச் செல்கின்ற வன்பொருள், மென்பொருள் மற்றும் வலையமைப்பு உட்கட்டமைப்புக்களினதும் கொள்வனவிற்கு

5.2 அதன் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளை சரியான முறையில் பேணுவதற்கும் அதன் தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் ஒவ்வொன்றிலும் எல்லா நேரங்களிலும் போதுமான காசு இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு

5.3 பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி முறைமையினைப் பாதுகாப்பதற்கும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் விடுக்கப்பட்ட அனைத்துப் பாதுகாப்புப் பண்புகளையும் அறிவுறுத்தல்களையும் உறுதிப்படுத்தி அவற்றைக் கண்காணிப்பதற்கு

5.4 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்பட்ட தொழில்நுட்ப, நிருவாக மற்றும் ஏனைய தேவைப்பாடுகளைப் பின்பற்றுவதற்கு

5.5 இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட வெட்டு நேரத்தில், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆழி பல்புடை ரீதியான தேறிய தீர்ப்பனவுத் தொகுதியினைத் தீர்ப்பனவு செய்வதற்கு அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக் கணக்கில் போதுமான நிதியம் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு

5.6 தரவுத் தளங்களின் கிரமமான பின்னூட்டல்களையும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகளுடன் தொடர்பான அதன் அனைத்துத் தகவல்கள் மற்றும் தரவுத் தளங்களையும் கிடைக்கச் செய்வதற்கும், கணனி முறைமை பழுதடைகின்ற அல்லது தரவுகள் பழுதடைந்து போதல் அல்லது இழக்கப்படுதல் போன்ற சந்தர்ப்பங்களில் மீட்பு நடைமுறைகளை உருவாக்கிப் பேணுவதற்கும்

5.7 நாளாந்த கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளை மீளிணக்கப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு அறிக்கை கிடைக்கப் பெற்று 24 மணித்தியாலங்களுக்குள் ஏதேனும் குறைபாடுகளிருப்பின் அவற்றினை எழுத்தில் வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டிற்கு அறிவிப்பதற்கு

5.8 லங்கா செட்டில் பிறைவேற் லிமிடெட்டினால் ஏற்படுத்தப்பட்ட பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் முறைமை ஒழுங்குவிதிகளைப் பின்பற்றுவதற்கு

5.9 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் அறிவிக்கப்பட்ட கட்டணம் மற்றும் தண்டப் பண அமைப்புக்களுக்கு இணங்கியொழுகுவதற்கு

6. தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல்

6.1 எல்லா நேரங்களிலும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழிப் பணியின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தும் விதத்தில் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி என்பனவற்றின் உறுப்பினர்கள் தொடர்பான பணிப்பாளர் சபைகளினால் ஒப்புதலளிக்கப்பட்ட பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகளுக்கான நன்கு வரைவிலக்கணம் செய்யப்பட்ட தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.2 இடையூறுகளற்ற தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி என்பனவற்றின் உறுப்பினர்கள் முழுமையாக கருவி மயப்படுத்தப்பட்ட அனர்த்த மீட்பு அமைவிடத்தினையும் நன்கு பயிற்றப்பட்ட அனர்த்த முகாமைத்துவத்தினையும் வியாபார மீட்புக் குழுவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

6.3 எந்தவொரு இடையூறுகளுமில்லாமல் தொழிற்பாடுகள் கொண்டு நடத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில், தொழிலாளர் பிணக்குகள் உட்பட, எதிர்பாராத சூழ்நிலையில் பணிக்கமர்த்தப்படுவதற்காக பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆழியின் மையத் தொழிற்பாடுகள் தொடர்பில் தேர்ச்சியும் பயிற்சியும் பெற்ற பின்னூட்டல் அலுவலர்களை லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் கொண்டிருத்தல் வேண்டும்.

6.4 பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி அதன் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்குத் தடையாக விளங்கும் ஏதேனும் தொழில்நுட்ப அல்லது தொழிற்பாட்டுப் பிரச்சனைகளை லங்கா கிளியர் லிமிடெட் உணருமாயின் அத்தகைய பிரச்சனைகள் தெரிய வந்தவுடன் உடனடியாக இலங்கை மத்திய வங்கிக்கு தெரியப்படுத்தப்படல் வேண்டும். முக்கியமான அமைவிடத்தில் திருத்த முடியாத பழுதுகள் நிகழ்ந்திருக்கும் சந்தர்ப்பத்தில் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் உடனடியாக அதனை இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்க வேண்டியதுடன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து தொழிற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதுடன் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதி கோப்பினையும் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து சமர்ப்பித்தல் வேண்டும். பிரதான இடத்திலும் அனர்த்த மீட்பு அமைவிடத்திலும் நீண்ட காலம் திருத்த முடியாத பழுதுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் இது பற்றி மத்திய வங்கிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டியதுடன், இறுதித் தீர்ப்பனவு வட்டத்திலிருந்து முறைமை பழுதடைந்த நேரம் வரையிலான காலப்பகுதிக்காக பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் பல்புடை தேறிய தீர்ப்பனவினைப் பெறுவதற்கான மாற்று ஏற்பாட்டு முறைகளையும் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அவற்றை இலங்கை மத்திய வங்கிக்கும் கிடைக்கச் செய்தலும் வேண்டும்.

7. இரகசியமானது

7.1 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்கள் அனைத்துத் தரவுகள், தகவல்கள் மற்றும் பதிவேடுகள் தொடர்பில் இரகசியத்தினைப் பேண வேண்டும் என்பதுடன் அதன் அலுவலர்கள், ஊழியர்கள், முகவர்கள் அத்துடன்/ அல்லது ஏதேனும் பதவியில் தொழில்புரியும் எவரேனும் ஆள் எல்லா நேரங்களிலும் ஏற்புடைத்தான சட்டங்களுக்கிணங்க இரகசியத்தினைப் பேணுதல் வேண்டும்

7.2 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்கள், பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகள் தொடர்பில் சட்டத்தின் மூலம் அல்லது வேறு ஏதேனும் விதத்தில் காலத்திற்குக் காலம் கையளிக்கப்பட்ட அதிகாரங்களிலிருந்து அதன் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் விதத்தில் தாமாகவே கூட்டாகவும் தனித்தனியாகவும் கட்டுப்பாடுகள், மேற்பார்வை, ஒழுங்குவிதிகள் என்பனவற்றிற்கு உட்பட வேண்டியவர்களாக இருப்பதுடன் மத்திய வங்கியின் அனைத்து அறிவுறுத்தல்கள், கட்டளைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுக வேண்டும்.

7.3 மேலும், மேலே சொல்லப்பட்டவற்றிற்கு எவ்வித பங்கமுமில்லாமல் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுப் பணிப்பாளர் காலத்திற்குக் காலமும் எந்த நேரத்திலும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்களை, பொதுவான தன்னியக்கக் கூற்று ஆழியின் தொழிற்பாடுகள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளலாம் என்பதுடன் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்கள் அத்தகைய தகவல்களை இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளருக்கு வழங்குதலும் வேண்டும்.

7.4 பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு பணிப்பாளருக்கான லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் உறுப்பினர்களிடமிருந்தான அனைத்து அறிக்கைகளும் தகவல்களும் துல்லியமானவையாகவும் சரியானவையாகவும் இருத்தல் வேண்டும்.

8. பொது

8.1 இப்பணிப்புரையானது மேலதிகமானதாகவும் ஏதேனும் எழுதப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிகள், ஒழுங்குவிதிகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் வலுக்களை குறைக்காததொன்றாக விளங்குமென்பதுடன் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்கள் இவற்றிற்கு உட்பட்டவர்களாகவும் அல்லது காலத்திற்குக் காலம் உட்படும் விதத்திலும் தொழிற்படுதல் வேண்டும்.

8.2 மேற்குறிப்பிட்ட பந்தியின் பொதுவான தன்மைக்குப் பங்கமின்றி, இப்பணிப்புரையானது, 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை மட்டுப்படுத்துகின்ற விதத்தில் பொருள் கொள்ளப்படவும் கூடாது.

2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் தொழிற்பாடுகள்

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம்

2005ஆம் ஆண்டு 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் பிரிவு 44இன் கீழ் இலங்கை மத்திய வங்கியினுடைய நாணயச் சபையால் ஆக்கப்பட்ட பொதுவான பணிப்புரைகள்.

திருமதி. டி. எம். ஜே. வை. பி. பர்னாந்து
துணை ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

கொழும்பு
2022 பெப்புருவரி 28

2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் தொழிற்பாடுகள்

இப்பணிப்புரையானது 2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் தொழிற்பாடுகள் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் தொழிற்பாடுகளுக்கு பதிலிடுவதாகவும் இருத்தல் வேண்டும். இப்பணிப்புரையானது லங்காகிளியர் (பிறைவேட்) லிமிடெட்டுக்கு மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினர்களுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும் என்பதுடன் 2022 பெப்புருவரி 28 அன்று நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

2. வரைவிலக்கணங்கள்

சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய இப்பணிப்புரையில்:

2.1 **"பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி"** என்பதால் கருதப்படுவது யாதெனில் உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான அதேநேர நிதிய மாற்றல்களுக்கு வசதியளிக்கின்ற லங்காகிளியர் (பிறைவேட்) லிமிடெட்டினால் செயற்படுத்தப்படுகின்ற ஒரு இலத்திரனியல் முறைமையாவதுடன் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினர்களுக்கிடையில் நிதிய மாற்றல்களை மாற்றுதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல் என்பவற்றுக்கான முறைமைகள், செயன்முறைகள் மற்றும் நடைமுறைகளை உள்ளடக்குதல் வெண்டும்.

2.2 **"பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினர்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய முதன்மை உறுப்பினர் அல்லது இரண்டாம் நிலை உறுப்பினர்.

2.3 **"பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி முறைமை"** என்பதால் கருதப்படுவது யாதெனில் எதுவித கட்டுப்பாடுகளுமின்றி பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய தகவல்களை அனுப்புதல், பெற்றுக்கொள்ளுதல், செயற்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான முறைமைகள் உள்ளடங்கலாக பொதுவான இலத்திரனியல் நிதியமாற்றல் ஆளிக்காக லங்காகிளியர் கம்பனியால் செயற்படுத்தப்படுகின்றதும் மற்றும் பேணப்படுகின்றதுமான முறைமைகள் மற்றும் செயற்பாடுகள் ஆகும்.

2.4 **"தீர்ப்பனவுச் சுழற்சி"** என்பதால் கருதப்படுவது யாதெனில் தீர்ப்பனவுகளுக்காக கொடுக்கல்வாங்கல்களை தெறச்செய்வதற்கு இலங்கை மத்திய வங்கியினுடைய கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களப் பணிப்பாளர் சம்மதத்துடன் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் முன்னரே நிர்ணயிக்கப்பட்ட கால அளவு ஆகும்.

2.5 **"வாடிக்கையாளர்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் சம்பந்தப்பட்ட பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினருக்கு கொடுப்பனவு கட்டளையின் பெறுமதி அளவிற்கு சம்பந்தப்பட்ட கணக்கில் பற்றுவைப்பதற்கு அல்லது நாணயப் பெறுமதியைக் கொடுப்பனவுசெய்வதற்கு கொடுப்பனவுக் கட்டளையை வழங்குகின்ற அல்லது பணிக்கின்ற மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் உறுப்பினருக்கு அதிகாரமளிக்கின்ற எவரேனும் சட்ட ரீதியான அல்லது இயற்கையான ஆள் ஆவார்.

2.6 **"தொழிற்பாட்டு நடைமுறைக் கைந்நூல்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய செயற்பாடுகள் குறித்து பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினர்களுக்கு

வழிகாட்டுவதற்காக வரையப்பட்ட நடைமுறைகளை உள்ளடக்கிய லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் தயாரிக்கப்பட்ட ஆவணம் ஆகும்.

2.7 **"முதன்மை உறுப்பினர்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்குபற்றுனராக இருக்கின்ற மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய அங்கத்தவராவதற்கு மத்திய வங்கி மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் ஒப்புதலளிக்கப்பட்டதுமான ஏதேனும் உத்தரவாதமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஆகும்.

2.8 **"அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை"** என்பதால் கருதப்படுவது யாதெனில் இலங்கை மத்திய வங்கியினால் செயற்படுத்தப்படுகின்றதும் அதற்கு உரிமையானதுமான முழுமையான தன்னிச்சையான கொடுப்பனவு முறைமையாக இருக்கின்றதுமான அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை ஆகும்.

2.9 **"இரண்டாம்நிலை உறுப்பினர்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினராவதற்கு இலங்கை மத்திய வங்கி மற்றும் லங்காகிளியர் கம்பனியினால் ஒப்புதலளிக்கப்பட்டதும் அத்தகைய முதன்மை உறுப்பினர்களுடைய அதேநேர மொத்தக் கொடுப்பனவுக் கணக்கினூடாக தேறிய நிலுவையைத் தீர்ப்பதற்கு முதன்மை உறுப்பினருடன் ஒழுங்குகளை மேற்கொண்டிருக்கின்றதுமான ஏதேனும் சட்டரீதியான நிறுவனம் ஆகும்.

2.10 **"உறுப்பினர் உடன்படிக்கை"** என்பதால் கருதப்படுவது யாதெனில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி தொடர்பாக லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டுடன் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினரால் நிறைவேற்றப்பட்ட உடன்படிக்கை ஆகும்.

3. லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினதும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் உறுப்பினரினதும் பொறுப்புக்கள்:

3.1 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய தொழிற்பாடுகள் மற்றும் பங்கேற்றல் தொடர்பில் ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினர்களும் மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் உறுப்புரிமை உடன்படிக்கை ஒன்றினைச் செய்துகொள்ளுதல் வேண்டும்.

3.2 விதிகள், நடைமுறைகள் என்பன வடிவிலான மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் காலத்திற்குக்காலம் விதித்துரைக்கப்பட்ட அத்தகைய ஏனைய ஒழுங்குகள் உட்பட பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளிகளியினுடைய தொழிற்பாடுகள் தொடர்பில் அவற்றிற்கிடையிலான ஒழுங்குகளை ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினரும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பின்பற்றி நடத்தல் வேண்டும்.

3.3 ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினரும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் தொழிற்பாட்டு நடைமுறைக் கைந்நூலில் குறித்துரைக்கப்பட்டவற்றையும் வழிகாட்டல்களையும் பின்பற்றுவதற்கு உடன்படுதல் வேண்டும்.

3.4 ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினரும் லங்காகிளியர் பிறைவேட் லிமிட்டெட்டும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் கொடுக்கல்வாங்கல் தொடர்பாக அறவிடத்தக்க கட்டணங்கள், ஏதுமிருப்பின் இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட வரையறைகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

4. லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டின் பொறுப்புக்கள்

4.1 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய ஏக தொழிற்பாட்டாளராக லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் இருத்தல் வேண்டும்.

4.2 லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் பின்வருவனவற்றிற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

4.2.1 ஒவ்வொரு நாளும் இருபத்துநான்கு மணி நேர அடிப்படையில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினைத் தொழிற்படுத்தல்.

4.2.2 கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் தகைமைவாய்ந்த நிறுவனங்களுக்கு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை உறுப்புரிமையை வழங்குதல்.

4.2.3 இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் தெளிவானதும் விரிவானதுமான முறைமை விதிகளை ஏற்படுத்துதல், லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் விடுவிக்கப்படுகின்ற முறைமை விதிகள் மற்றைய விடயங்களுடன் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினாலும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினதும் உறுப்பினர்களுடைய கடமைகள் மற்றும் பொறுப்புக்கள், இணைதல், விலகிக் கொள்ளுதல், முடிவுறுத்துதல் மற்றும் இடைநிறுத்துதல் என்பன உள்ளிட்ட பங்கேற்பிற்கான நிபந்தனைகள், தொழிற்பாட்டு தேவைப்பாடுகள், பிணக்குகளைத் தீர்க்கும் பொறிமுறைகள் மற்றும் தகவல்களின் இரகசியத்தன்மையினைப் பேணுவதற்கான நிபந்தனைகள் என்பவற்றை குறித்துரைத்தல் வேண்டும். லங்காகிளியர் பிறைவேற் லிமிடெட்டானது இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் தேவை ஏற்படுகின்றவாறும் தேவைப்படுகின்ற போதும் முறைமை விதிகளில் திருத்தங்களைச் செய்தல்.

4.2.4 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய தொழிற்பாடுகளுக்கு ஏற்புடையதாக இருக்கின்ற விளக்க விபரங்கள், நியமங்கள், பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் கணக்காய்வு இணக்குவிப்புக்கள் என்பவற்றை வரைவிலக்கணம் செய்தல்.

4.2.5 இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வெட்டு நேரத்தில் அல்லது அதற்கு முன்பாக ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினருடைய தேறிய நிலைமையினை நிர்ணயிப்பதற்கு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதிக் கோப்பினை இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கச் செய்தல்

4.2.6 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய தொழிற்பாடுகள் தொடர்பான ஏதேனும் பணி வழங்குனருடன் உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களை முறையாக மேற்கொள்ளுதல்.

4.2.7. கிளைவாசகம் 3.4 இல் தரப்பட்டுள்ள விடயங்களுக்கு உட்பட்டு காலத்திற்குக் காலம் லங்காகிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் திருத்தங்கள் செய்யப்படக்கூடிய ஒரே சீரான கட்டணங்கள் மற்றும் தண்டப்பண அமைப்புக்களைப் பின்பற்றுதல்.

4.3 லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட், பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய தொழிற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பில் மத்திய வங்கியினுடைய அறிக்கையிடல் தேவைப்பாடுகளுடன் இணங்கி நடத்தல் வேண்டும்.

4.4 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தேவைப்படும்போதும் தேவைப்படுகின்றவாறும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி தொடர்பான பயிற்சி, விழிப்புணர்வு மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை லங்காகிளியர் பிறைவேற் லிமிடெட் நடாத்த வேண்டும்.

5. பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினர்களின் பொறுப்புக்கள்

5.1 ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினரும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியால் செயற்படுத்தப்படும் தீர்வக முறைமை தவிர்ந்த ஏதாவது தேசிய மட்ட வங்கிகளுக்கிடையிலான தீர்வக மாற்றம் தீர்ப்பனவு முறைமையில் ஈடுபடக்கூடாது.

5.2 ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினரும்

5.2.1 லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் அமைக்கப்பட்ட பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய முறைமை விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

5.2.2 லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்பட்ட பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய சுமுகமான செயற்பாட்டிற்காக தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் ஏனைய தேவைப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

5.2.3 நிகழ்நேர வாடிக்கையாளர்களுக்கு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினூடாக கொடுக்கல்வாங்கல் நிறைவடைந்தமை அல்லது நிறைவடையாமையைத் தெரிவிப்பதற்கான ஒரு நடைமுறையை அத்துடன் அல்லது பொறிமுறையை நிறுவுதல்.

5.2.4 இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வெட்டு நேரத்தில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதியைத் தீர்ப்பனவு செய்வதற்கு அதனுடைய அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமானளவு நிதி கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தல்.

5.2.5 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை கிரமமான காப்பெடுத்தல் மற்றும் முறைமை பழுதடைதல் அல்லது தரவு களவாடப்படல் அல்லது முக்கியமான அமைவிடத்தில் தரவினை இழத்தல் போன்ற நிகழ்வின்போது மீட்பு நடைமுறைகளை நிறுவுதல் மற்றும் பேணுவதற்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

5.2.6 நாளாந்த கொடுக்கல்வாங்கல்களின் அறிக்கையினை இணக்கப்படுத்தி தீர்ப்பனவு அறிக்கையைப் பெற்ற 24 மணித்தியாலங்களுக்குள் எவையேனும் வேறுபாடுகள் காணப்படின் எழுத்தில் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டிற்கு அறிவித்தல் வேண்டும்.

5.2.7. பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினுடைய ஒப்புதலுடன் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் குறிப்பிடப்பட்ட கொடுக்கல்வாங்கல் வரையறைகளைப் பின்பற்றவேண்டும்.

5.2.8 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றம் ஆளியின் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்பான விடயங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையிடும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

5.2.9 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை 2006ஆம் ஆண்டு 06ஆம் இலக்க நிதிக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிட வேண்டும் என்பதுடன் நிதியியல் உளவறிதல் பிரிவின் அறிவுறுத்தலிற்கிணங்கி நடத்தலும் வேண்டும்.

6. தடங்கலற்ற தொழில் திட்டமிடல்

6.1 எல்லா நேரங்களிலும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய பணிகள் கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, சம்பந்தப்பட்ட பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய தொழிற்பாடுகளுக்காக நன்கு வரைவிலக்கணம் செய்யப்பட்ட தடங்கலற்ற தொழில் திட்டங்களை லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினர்களும் வைத்திருத்தல் வேண்டும்.

6.2 தடங்கலற்ற தொழிற்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முழுமையாக வசதியளிக்கப்பட்ட அனர்த்தமீட்பு அமைவிடம் மற்றும் நன்கு பயிற்றப்பட்ட அனர்த்த முகாமைத்துவம் மற்றும் வணிக மீட்புக் குழுக்கள் என்பவற்றை வரையறுக்கப்பட்ட லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினர்களும் கொண்டிருக்க வேண்டும்.

6.3 எந்தவித தடைகளுமின்றி தொழிற்பாடுகள் கொண்டு நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் நோக்கில், எதிர்பாராத சூழ்நிலைகளில் பணிக்கமர்த்தப்படுவதற்காக பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய மையத் தொழிற்பாடுகள் தொடர்பாக தேர்ச்சிபெற்ற மற்றும் பயிற்றப்பட்ட காப்பெடுத்தல் அலுவலர்களை லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் கொண்டிருத்தல் வேண்டும்.

6.4 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி அதன் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்குத் தடையாக விளங்கும் ஏதேனும் தொழில்நுட்ப அல்லது தொழிற்பாட்டுப் பிரச்சினைகளை லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் உணருமாயின் அத்தகைய பிரச்சினைகள் தெரியவந்தவுடன் உடனடியாக இலங்கை மத்திய வங்கிக்கு தெரியப்படுத்தல் வேண்டும். முக்கியமான அமைவிடத்தில் திருத்தமுடியாத பழுதுகள் நிகழ்ந்திருக்கும் சந்தர்ப்பத்தில் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் உடனடியாக அதனை இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்க வேண்டியதுடன் நேரடிப் பதிவு முறைமையில் தொழிற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதுடன் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதி கோப்பினையும் சமர்ப்பிக்க வேண்டும். பிரதான இடத்திலும், நேரடிப் பதிவு முறைமையிலும் நீண்டகாலம் திருத்த முடியாத பழுதுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் இது பற்றி இலங்கை மத்திய வங்கிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டியதுடன் இறுதித் தீர்ப்பனவு சுழற்சியின் இறுதியின் முறைமை பழுதடைந்த நேரம் வரையிலான காலப்பகுதிக்காக பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி பல்புடை தேறிய தீர்ப்பனவினைப் பெறுவதற்கான மாற்று ஏற்பாட்டு முறைகளையும் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அவற்றை இலங்கை மத்திய வங்கிக்கும் கிடைக்கச் செய்தலும் வேண்டும்.

7. இரகசியத்தன்மை

லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் மற்றும் ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினரும் தரவு, தகவல் மற்றும் பதிவுகள் தொடர்பான இரகசியத்தன்மையைப் பேண வேண்டுமென்பதுடன் அதனுடைய அலுவலர்கள், ஊழியர்கள், முகவர்கள் அல்லது ஏதாவது தகைமையுடன் வேலை செய்கின்ற எந்தவொரு நபரும் எல்லாத் தருணத்திலும் இரகசியத்தன்மையைப் பேணுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

8. பொது

8.1 மேற்குறிப்பிட்டவற்றின் பொதுவான தன்மைக்குப் பங்கமின்றியும் மேலதிகமாகவும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினர்களும் தேவைப்படும் நேரத்தில் காலத்திற்கு காலம் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினுடைய தொழிற்பாடுகள் தொடர்பான அத்தகைய தகவல்களை இலங்கை மத்திய வங்கி வழங்க வேண்டப்படுவதுடன் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினர்கள் இலங்கை மத்திய வங்கிக்கு அத்தகைய தகவல்களை வழங்கவேண்டும்.

8.2 இப்பணிப்புரையானது மேலதிகமானதொன்றாக விளங்குவதுடன் ஏதேனும் ஏனைய எழுத்து மூலமான சட்டம் மற்றும் விதிகள், ஒழுங்குவிதிகள் பணிப்புரைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் வலுக்களைக் குறைக்காததொன்றாக விளங்கும் என்பதுடன் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினர்கள் இவற்றிற்கு உட்பட்டவர்களாகவும் அத்துடன் அல்லது காலத்திற்குக் காலம் உட்படும் விதத்திலும் தொழிற்படுதல் வேண்டும்.

8.3 மேற்குறிப்பிட்ட பந்தியினுடைய பொதுப்படைத் தன்மைக்கு பங்கமின்றி, இப்பணிப்புரையானது 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைச் சட்டத்தால் அல்லது ஏதேனும் விதி, ஒழுங்குவிதி, அறிவுறுத்தல், பணிப்புரை அல்லது கட்டளை அல்லது யாதேனும் மற்றைய எழுதப்பட்ட சட்டத்தால் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினர்கள் மீது சுமத்தப்பட்ட யாதேனும் கடப்பாடுகள் அல்லது பொறுப்புக்களை மட்டுப்படுத்துகின்ற விதத்தில் பொருள் கோடப்படல்கூடாது.

2022ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க பொதுப் பணிப்புரை - பொதுவான விற்பனை மைய ஆளியின் தொழிற்பாடுகள்

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம்

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் 44ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் ஆக்கப்பட்ட பொதுவான பணிப்புரை.

திருமதி. டி. எம். ஜே. வை. பி. பர்னாந்து
துணை ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

கொழும்பு
2022 பெப்புருவரி 28

2022ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான விற்பனை மைய ஆளியின் தொழிற்பாடுகள்

இப்பணிப்புரையானது 2022ம் ஆண்டின் 04ஆம் இலக்க பொதுப் பணிப்புரை - பொதுவான விற்பனை மைய ஆளியின் தொழிற்பாடுகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் பொதுவான விற்பனை மைய ஆளியினதும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினதும் உறுப்பினர்களுக்கு ஏற்புடைத்தானதாகவும் இருத்தல் வேண்டும். பொதுவான விற்பனை மைய ஆளி என்பது லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் இலத்திரனியல் முறைமையாக இருப்பதுடன் அது வழங்குனரும் பெறுனரும் ஒருவராகவிராத அட்டைகளின் விற்பனை மைய ஆளியின் கொடுக்கல்வாங்கல்களின் ஆளியையும் தீர்ப்பனவினையும் வசதிப்படுத்துவதற்காக அதன் உறுப்பினர்களை விற்பனை மையத்துடன் இணைக்கிறது. இப்பணிப்புரையானது 2018ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான விற்பனை மைய ஆளியின் தொழிற்பாடுகள் இனைப் பதிலீடு செய்தலும் 2022 பெப்புருவரி 28 அன்று நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

2. வரைவிலக்கணங்கள்

சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய இப்பணிப்புரையில்

2.1 **"பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய உறுப்பினர்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் பொதுவான விற்பனை மைய ஆளினுடைய முதன்மை உறுப்பினர் அல்லது இரண்டாம்நிலை உறுப்பினர் ஆவர்.

2.2 **"தீர்ப்பனவுச் சுழற்சி"** என்பதால் கருதப்படுவது யாதெனில் இலங்கை மத்திய வங்கியினுடைய கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களப் பணிப்பாளரால் தேறிய கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவிற்காக தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதி ஆகும்.

2.3 **"அட்டையின் வழங்குனரும் கையேற்பவரும் ஒருவராயிராத விற்பனை மைய கொடுக்கல்வாங்கல்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் வேறொரு பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினருடைய வாடிக்கையாளரால் பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர்களுடைய விற்பனை மைய முனையத்தில் தோற்றிவிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் என்பதாகும்.

2.4 **"தொழிற்பாட்டு நடவடிக்கைக் கைநூல்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் பொதுவான விற்பனைப் மைய ஆளியினுடைய தொழிற்பாடுகள் தொடர்பாக பொதுவான விற்பனை மைய ஆளியின் உறுப்பினர்களுடைய வழிகாட்டலிற்காக வரையப்பட்ட நடைமுறைகளை உள்ளடக்கிய லங்காகிளியர் பிறைவேட் லிமிட்டெட்டினால் தயாரிக்கப்பட்ட ஆவணம் ஆகும்.

2.5 **"முதன்மை உறுப்பினர்"** என்பது யாதெனில் பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய உறுப்பினராவதற்கு இலங்கை மத்திய வங்கி மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் ஒப்புதலளிக்கப்பட்டதும் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையில் பங்குபற்றுனராக இருக்கின்றதுமான உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது ஏதேனும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கி எனப்பொருள்படும்.

2.6 **"அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை"** என்பதன் கருத்து யாதெனில் இலங்கை மத்திய வங்கிக்கு உரித்தானதும் அதனால் தொழிற்படுத்தப்படுகின்றதுமான முழுமையான தன்னியக்க கொடுப்பனவு முறைமை அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை.

2.7 **"இரண்டாம்நிலை உறுப்பினர்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் முதன்மை உறுப்பினருடைய தேறிய மீதிகளை அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை கணக்கினூடாக தீர்ப்பனவு செய்வதற்கு முதன்மை உறுப்பினருடன் ஏற்பாடுகளைச் செய்து இருக்கின்றதும் பொதுவான விற்பனைப் மைய ஆளி உறுப்பினராவதற்கு இலங்கை மத்திய வங்கி மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் ஒப்புதலளிக்கப்பட்டதுமான ஏதேனுமொரு சட்ட ரீதியான நிறுவனம் ஆகும்.

2.8 **"உறுப்பினர் உடன்படிக்கை"** என்பதால் கருதப்படுவது யாதெனில் பொதுவான விற்பனை மைய ஆளி தொடர்பாக லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டுடன் பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர் செய்துகொண்ட ஒப்பந்தம் ஆகும்.

3. லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் மற்றும் பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினருடைய பொறுப்புக்கள்:

3.1 ஒவ்வொரு பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினரும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய தொழிற்பாடுகள் மற்றும் பங்குபற்றுதல் தொடர்பாக உறுப்பினர் உடன்படிக்கையொன்றினைச் செய்தல் வேண்டும்.

3.2 ஒவ்வொரு பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினரும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் தொழிற்பாட்டு நடைமுறை கைநூலில் குறித்துரைக்கப்பட்டவற்றையும் வழிகாட்டல்களையும் பின்பற்றுவதற்கிணங்க வேண்டும்.

3.3 ஒவ்வொரு பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர் மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய தொழிற்பாடுகள் தொடர்பாக அவர்களுக்கிடையிலான ஏற்பாடுகள் மற்றும் விதிகள், நடைமுறைகள் வடிவத்தில் உள்ளவைகள் உள்ளடங்களானவற்றையும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் காலத்திற்கு காலம் பரிந்துரைக்கப்பட்ட அத்தகைய மற்றைய ஏற்பாடுகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

3.4 ஒவ்வொரு பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர் மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பொதுவான விற்பனை மைய ஆளியின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக விதிக்கப்படும் கட்டணங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட வரையறைகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

4. லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டின் பொறுப்புகள்

4.1 பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய ஏக தொழிற்பாட்டாளராக லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் இருக்கவேண்டும்.

4.2 லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் பின்வருவனவற்றிற்கு பொறுப்பாகயிருத்தல் வேண்டும்.

4.2.1 ஒவ்வொரு நாளும் இருபத்துநான்கு மணி நேர அடிப்படையில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினைத் தொழிற்படுத்தல்.

4.2.2. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் தகைமைவாய்ந்த நிறுவனங்களுக்கு பொதுவான விற்பனை மைய ஆளியின் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை உறுப்புரிமையை வழங்குதல்.

4.2.3 இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் தெளிவானதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான முறைமை விதிகளை ஏற்படுத்துதல் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் விடுக்கப்படுகின்ற முறைமை விதிகள் மற்றைய விடயங்களுடன் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பொதுவான விற்பனை மைய ஆளியினதும் உறுப்பினர்களுடைய கடமைகள் மற்றும் பொறுப்புக்கள், இணைதல், விலகிக் கொள்ளுதல், நிறுத்துதல் மற்றும் இடைநிறுத்துதல் என்பன உள்ளிட்ட பங்கேற்பிற்கான நிபந்தனைகள், தொழிற்பாட்டு தேவைப்பாடுகள், பிணக்குகளைத் தீர்க்கும் பொறிமுறைகள் மற்றும் தகவல்களின் இரகசியத்தன்மையினைப் பேணுவதற்கான நிபந்தனைகள் என்பவற்றை குறித்துரைத்தல் வேண்டும். லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டானது இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் தேவை ஏற்படுகின்றவாறும் தேவை ஏற்படுகின்ற போதும் முறைமை விதிகளில் திருத்தங்களைச் செய்யவேண்டும்.

4.2.4 இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வெட்டு நேரத்தில் அல்லது அதற்கு முன்பாக, பொதுவான விற்பனை மைய ஆளியின் கொடுக்கல்வாங்கல்களுடைய தீர்ப்பனவிற்காக பொதுவான விற்பனை மைய ஆளி பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதிக் கோப்பினை இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கச்செய்தல் வேண்டும்.

4.2.5 பொதுவான விற்பனை மைய ஆளி கொடுக்கல்வாங்கல் தொடர்பாக விதிக்கத்தக்க கட்டணங்கள் ஏதுமிருப்பின் இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட வரையறைகளுக்குட்பட்டு கட்டணங்கள் மற்றும் அறவீடுகளுக்காக பின்பற்றப்படுகின்ற ஒரே சீரான அமைப்பின் மீது காலத்திற்குக்காலம் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் திருத்தங்கள் செய்யப்படலாம்.

4.3 பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய தொழிற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பில் மத்திய வங்கியினுடைய அறிக்கையிடும் தேவைப்பாடுகளுடன் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் இணங்கியொழுக வேண்டும்.

5. பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர்களின் பொறுப்புக்கள்

5.1 ஒவ்வொரு பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினரும்

5.1.1 லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் மூலம் எடுத்துரைக்கப்பட்ட பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய முறைமை விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

5.1.2 பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய சுமுகமான தொழிற்பாட்டிற்கான லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் காலத்திற்குக் காலம் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் ஏனைய தேவைப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

5.1.3 பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய தொழிற்பாடுகள் தொடர்பான தகவல்களை கிரமமாக தரவுத்தளங்களின் காப்பெடுப்புகளை மேற்கொள்வதற்கும் மற்றும் முறைமை செயலிழத்தல் அடைதல் அல்லது தரவு களவாடப்படல்

அல்லது பிரதான அமைவிடத்தில் தரவினை இழத்தல் போன்ற நிகழ்வின்போது மீட்பு நடைமுறைகளை நிறுவுதல் மற்றும் பேணுவதற்கும் பொறுப்பாக இருக்க வேண்டும்.

5.1.4 நாளாந்த கொடுக்கல்வாங்கலின் அறிக்கையினைச் இணக்கப்படுத்தல் வேண்டும் என்பதுடன் தீர்ப்பனவு அறிக்கையைப் பெற்ற 24 மணித்தியாலத்திற்குள் ஏதாவது குறைபாடுகள் காணப்படின் எழுத்தில் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டுக்கு அறிவித்தலும் வேண்டும்.

5.1.5 பொதுவான விற்பனை மைய ஆளியின் தொழிற்பாடுகள் மற்றும் அவை தொடர்பான விடயங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினுடைய அறிக்கையிடும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

5.2 இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வெட்டு நேரத்தில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பொதுவான விற்பனை மைய ஆளி பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதியை தீர்ப்பனவு செய்வதற்கு அதனுடைய அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமானளவு நிதி கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது என்பதை ஒவ்வொரு பொதுவான விற்பனை மைய ஆளி முதனிலை உறுப்பினரும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த கிளைவாசகத்துடன் பொதுவான விற்பனை மைய ஆளி முதனிலை உறுப்பினர் இணங்காத சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கியானது இலங்கை தீர்ப்பனவு முறைமை விதிகளுக்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

6. தடங்கலற்ற தொழில் திட்டமிடல்

6.1 எல்லா நேரத்திலும் பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய பணிகள் கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய தொழிற்பாடுகளுக்காக நன்கு வரைவிலக்கணம் செய்யப்பட்ட தடங்கலற்ற தொழில் திட்டங்களை லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய உறுப்பினர்களும் வைத்திருக்க வேண்டும்.

6.2 முழுமையாக வசதியளிக்கப்பட்ட அனர்த்த மீட்புத் தளங்கள் மற்றும் நன்கு பயிற்றப்பட்ட அனர்த்த முகாமைத்துவம் மற்றும் தடங்கலற்ற தொழிற்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தொழில் மீட்புக் குழுக்கள் என்பவற்றை லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் மற்றும் பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர்களும் வைத்திருக்க வேண்டும்.

6.3 எந்தவித இடையூறுகளுமில்லாமல் தொழிற்பாடுகள் கொண்டு நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் நோக்கில் எதிர்பாராத சூழ்நிலைகளில் பணிக்கமர்த்தப்படுவதற்காக பொதுவான விற்பனை மைய ஆளி மையத்தொழிற்பாடுகள் தொடர்பாக தேர்ச்சிபெற்ற மற்றும் பயிற்றப்பட்ட காப்பெடுத்தல் அலுவலர்களை லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் கொண்டிருத்தல் வேண்டும்.

6.4 பொதுவான விற்பனைப் மைய ஆளி அதன் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்குத் தடையாக விளங்கும் ஏதேனும் தொழில்நுட்ப அல்லது தொழிற்பாட்டுப் பிரச்சினைகளை லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் உணருமாயின் அத்தகைய பிரச்சினைகள் தெரியவந்தவுடன் உடனடியாக இலங்கை மத்திய வங்கிக்கு தெரியப்படுத்தல் வேண்டும். முக்கியமான அமைவிடத்தில் திருத்தமுடியாத செயழிழப்புக்கள் நிகழ்ந்திருக்கும் சந்தர்ப்பத்தில் லங்காகிளியர் பிறைவேட் லிமிட்டெட் உடனடியாக அதனை இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்க வேண்டியதுடன் நேரடிப்பதிவு முறைமையில் தொழிற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டுமென்பதுடன் பொதுவான விற்பனை மைய ஆளி பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதிக் கோப்பினையும் சமர்ப்பிக்கவேண்டும். பிரதான அமைவிடத்திலும், நேரடிப்பதிவு முறைமையிலும் நீண்டகாலம் திருத்த முடியாத செயழிழப்புகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் இது பற்றி இலங்கை மத்திய வங்கிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டியதுடன் இறுதித் தீர்ப்பனவு சுழற்சியிலிருந்து முறைமை பழுதடைந்த நேரம் வரையிலான காலப்பகுதிக்காக பொதுவான விற்பனை மைய ஆளி பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகைகளை பெறுவதற்கான மாற்று ஏற்பாட்டு முறைகளையும் பயன்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அவற்றை இலங்கை மத்திய வங்கிக்கும் கிடைக்கச் செய்தலும் வேண்டும்.

7. இரகசியத்தன்மை

லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் ஒவ்வொரு பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய உறுப்பினரும் தரவு, தகவல் மற்றும் பதிவுகள் தொடர்பான இரகசியத் தன்மையைப் பேண வேண்டுவதுடன் அதனுடைய அலுவலர்கள், ஊழியர்கள், முகவர்கள் அல்லது ஏதாவது தகைமையுடன் வேலை செய்கின்ற எந்தவொரு நபரும் எல்லாத் தருணத்திலும் இரகசியத்தன்மையைப் பேணுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

8. பொது

8.1 மேற்குறிப்பிட்டவற்றின் பொதுவான தன்மைக்குப் பங்கமின்றியும் மேலதிகமாகவும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர்களும் தேவைப்படும் நேரத்தில் காலத்திற்கு காலம் பொதுவான விற்பனை மைய மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினுடைய தொழிற்பாடுகள் தொடர்பான அத்தகைய தகவல்களை இலங்கை மத்திய வங்கி வழங்க வேண்டப்படுவதுடன் பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர்கள் இலங்கை மத்திய வங்கிக்கு அத்தகைய தகவல்களை வழங்கவேண்டும்.

8.2 இப்பணிப்புரையானது மேலதிகமானதொன்றாக விளங்குவதுடன் ஏதேனும் ஏனைய எழுத்து மூலமான சட்டம் மற்றும் விதிகள், ஒழுங்கு விதிகள் வழிகாட்டல்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் வலுக்களைக் குறைக்காததொன்றாக

விளங்கும் என்பதுடன் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் மற்றும் பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர்கள் இவற்றிற்குட்பட்டவர்களாகவும் அத்துடன்/அல்லது காலத்திற்குக் காலம் உட்படும் விதத்திலும் தொழிற்படுதல் வேண்டும்.

8.3 மேற்குறிப்பிட்ட பந்தியினுடைய பொதுப்படைத் தன்மைக்கு பங்கமின்றி, இப்பணிப்புரையானது 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தால் அல்லது யாதேனும் விதி, ஒழுங்கு விதி, அறிவுறுத்தல், பணிப்புரை அல்லது கட்டளை அல்லது ஏதேனும் மற்றைய எழுதப்பட்ட சட்டத்தால் பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய உறுப்பினர்கள் மீது சுமத்தப்பட்ட யாதேனும் கடப்பாடுகள் அல்லது பொறுப்புக்களை மட்டுப்படுத்துகின்ற விதத்தில் பொருள் கோடப்படல்கூடாது.

தொடர்பு எண்: 34/07/029/0001/002 2022 மே 10

2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை

சேரல்: லங்காசெட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

2022.05.11 அன்று லங்காசெட்டில் முறைமையின் விசேட நாளாந்த தொழிற்பாட்டு

பின்வருகின்ற நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணைகள் 2022.05.11 அன்று பின்பற்றப்படும்

அட்டவணை 01 : பெறுமதித் திகதி 2022.05.10இற்கு

நேரம்	நிகழ்வு	நடவடிக்கைகள்/கொடுக்கல்வாங்கல்கள்
0630 மணி	முறைமை ஆரம்பித்தல்	அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை/ பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை பிரயோகங்களை தொடங்குதல்
0730 மணி தொடக்கம் 0800 மணி வரை	நாளாந்தச் செயன்முறைகள் ஆரம்பித்தல்	பிணையங்களின் அலுவல்சார் விலைகளை இற்றைப்படுத்தல், நாளுக்குள்ளா திரவத்தன்மை வசதிகளுக்கான பிணையங்களை குறிப்பிட்டு ஒதுக்குதல்
0800 மணி	தொழிலுக்காக லங்காசெட்டில் முறைமை 2022.05.10 அன்று திறக்கப்படுகின்றது	2022.05.10இன் கொடுக்கல்வாங்கல்களை செயற்படுத்துவதற்கு முறைமை திறக்கப்படுகின்றது
0800 மணி	நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி / தன்னியக்கமான நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் துணைநில் வைப்பு வசதி	நாளுக்குள்ளான திரவத் தன்மை வசதியை வழங்குதல் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வைப்பு வசதி என்பவற்றின் மீள்கொள்வனவின் இரண்டாம் பிரிவினைத் தீர்த்தல்.
0815 மணி	முதிர்ச்சிகள் / வட்டிக்கொடுப்பனவுகள், நாற்கோவை மற்றும் இலங்கை மத்திய வங்கி பிணையங்களின் முதிர்ச்சிகள் ஆரம்பமாகின்றன.	பிணையங்களின் முதிர்ச்சிப் பெறுகைகள்/நறுக்கு கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்தல், லங்காசெட்டில் கட்டணங்கள்/தண்டப்பணங்களை விதித்தல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் முதிர்ச்சிகள்.
0830 மணி	லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி	காசோலை பிரதிமை மற்றும் துரிதமை முறைமையின் பிரதான தீர்ப்பனவு (2022.05.10 இன்) இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை சுற்று 1 மற்றும் 2 (2022.05.10 இன்)
0830 மணி	முதனிலை ஏலத் தீர்ப்பனவு/ உடனடி விற்பனை/ கொள்வனவு/ நீண்டகால மீள்கொள்வனவு ஏலம்.. இலங்கை மத்திய வங்கி பிணையங்களை வழங்குதல்	முதனிலை ஏலத்தின் தீர்ப்பனவு, திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் உடனடி விற்னைகள், கொள்வனவுகள், நீண்ட கால இலங்கை மத்திய வங்கி பிணையங்கள், மற்றும் நீண்ட கால மீள்கொள்வனவு ஏலத்தின் முதலாம் பிரிவு
0845 மணி	லங்காகிளியரிலிருந்தான பல்புடைய தேறிய தீர்ப்பனவுத் தொகுதி	பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி சுற்று 1 மற்றும் 2 (2022.05.10) பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 1 மற்றும் 2 (2022.05.10) பொதுவான விற்பனை மைய ஆளி சுற்று 1 மற்றும் 2 (2022.05.10 இன்)

0900 மணி	லங்காகிளியரிலிருந்தான பல்புடைய தேறிய தீர்ப்பனவுத் தொகுதி	பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி சுற்று 3 மற்றும் 4 (2022.05.10) பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 3 மற்றும் 4 (2022.05.10) பொதுவான விற்பனை மைய ஆளி சுற்று 3 மற்றும் 4 (2022.05.10 இன்)
0900 மணி	நேர்மாற்று மீள்கொள்வனவுகளையும் துணைநில் கடன்வழங்கல் வசதியையும் திருப்புதல்	திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி என்பவற்றின் கீழ் இரண்டாவது பிரிவின் தீர்ப்பனவு (2022.05.10 அன்று முதிர்ச்சியடைய வேண்டியது)
0915 மணி	லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி	இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைச் சுற்று (2022.05.10) கொடுத்துத் தீர்த்தல் மற்றும் சீராக்கல் தீர்ப்பனவு (2022.05.10)
0925 மணி	மூன்றாந்தரப்பு கொடுக்கல்வாங்களுக்கான முதன்மை வெட்டுநேரம்	வங்கிக்கு வங்கி MT2XX (தொடர்கள்) நீங்கலாக மூன்றாந்தரப்பினரின் சார்பில் புதிய கொடுக்கல்வாங்கல்களுக்காக (T + 0இற்காக) மூடிவிடுதல். (2022.05.10)
0930 மணி	லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி	பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி சுற்று 5 (2022.05.10) பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 5 (2022.05.10) பொதுவான விற்பனை மைய ஆளி சுற்று 5 (2022.05.10 இன்)
0930 மணி	துணைநில் வசதிகளுக்கான வெட்டுநேரம்	துணைநில் கடன்வழங்கல் வசதி மற்றும் துணைநில் வைப்பு வசதி தளங்கள் 0930 மணிக்கு பங்கேற்பாளர்களுக்காக மூடப்பட்டிருக்கும்.
0940 மணி	நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொள்வனவு உருவாக்கத்தினை முகாமைப்படுத்தும் பங்கேற்பாளர்களுக்கான வெட்டுநேரம்	பங்கேற்பாளர்கள் 0940 மணியிற்குப் பின்னர் ஒரு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொள்வனவுகளை ஆரம்பித்தலாகாது.
0945மணி	துணைநில் வைப்பு வசதி	துணைநில் வைப்பு வசதியின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு
1045மணி	துணைநில் கடன் வழங்கல் வசதி	துணைநில் கடன்வழங்கல் வசதியின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு
1050மணி	நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொடுப்பனவு	நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் மீள்கொடுப்பனவு
1100மணி	இறுதிவெட்டு நேரம் வியாபார முறைமையினை மூடிவிடுதல்	மேலும் உள்ளீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது, வியாபாரத்திற்காக முறைமை மூடப்பட்டதுடன் காரணமாக காத்திருத்தல்/ தீர்ப்பனவுச் செயன்முறை முடிவுறுத்தப்படும் அத்துடன் மேலும் காத்திருக்கின்ற ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் முறைமையினால் நிராகரிக்கப்படும்.
1100 மணியிலிருந்து 1115 மணிவரை	நாள்முடிவை செயன்முறைப்படுத்தல்	நாள் முடிவுச் செயன்முறைகள் உ-ம்: அறிக்கைகள்/ பொதுப்பேரேட்டு அறிக்கை (நாள் முடிவு), பேரேட்டு ஏற்றுமதி கோவைகளைத் தயாரித்தல், பட்டியலிடல்/ கூற்று அச்சிடல் நோக்கங்களுக்காக தரவுத் தளத்தினைப் பேணுகை

1115 மணி	முறைமையினை மூடிவிடுதல்	அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை/ பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை பிரயோகங்களை மூடுவதை தொடங்குதல், தளத்திற்கு வெளியேயான பின்னூட்டல்களைப் பெறுதல்.

குறிப்பு: இலங்கை மத்திய வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட 2022.05.10 திகதியிடப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் 2022.05.11 அன்று 1000 மணியளவில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும்.

அட்டவணை 02 : பெறுமதித் திகதி 2022.05.11இற்கு

நேரம்	நிகழ்வு	நடவடிக்கைகள்/கொடுக்கல்வாங்கல்கள்
1200 மணியிலிருந்து 1215 மணிவரை	முறைமை ஆரம்பித்தல்	அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை/ பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை பிரயோகங்களை தொடங்குதல்
1215 மணியிலிருந்து 1230 மணிவரை	நாளாந்தச் செயன்முறைகள் ஆரம்பித்தல்	பிணையங்களின் அலுவல்சார் விலைகளை இற்றைப்படுத்தல், நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிகளுக்கான பிணையங்களை குறிப்பிட்டு ஒதுக்குதல்
1230 மணி	வியபாரத்திற்காக லங்காசெட்டில் முறைமை 2022.05.11 அன்று திறக்கப்படுகின்றது	2022.05.11இன் கொடுக்கல்வாங்கல்களை செயற்படுத்துவதற்கு முறைமை திறக்கப்படுகின்றது
1230 மணி	நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி / தன்னியக்கமான நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் துணைநில் வைப்பு வசதி	நாளுக்குள்ளான திரவத் தன்மை வசதியை வழங்குதல் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வைப்பு வசதி என்பவற்றின் மீள்கொள்வனவுகின் இரண்டாம் பிரிவினைத் தீர்த்தல்.
1245 மணி	முதிர்ச்சிகள் / வட்டிக்கொடுப்பனவுகள், நாற்கோவை மற்றும் இலங்கை மத்திய வங்கி பிணையங்களின் முதிர்ச்சிகள் ஆரம்பமாகின்றன	பிணையங்களின் முதிர்ச்சிப் பெறுகைகள் / நறுக்கு கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்தல், லங்காசெட்டில் கட்டணங்கள் / தண்டப்பணங்களை விதித்தல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் முதிர்ச்சிகள்.
1300 மணி	லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி	காசோலை பிரதிமை மற்றும் துரிதமை முறைமையின் பிரதான தீர்ப்பனவு (2022.05.11 இன்) இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை சுற்று 1 மற்றும் 2 (2022.05.11 இன்)
1315 மணி	லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி	பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி சுற்று 1 மற்றும் 2 (2022.05.11)
1330 மணி	லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி	பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 1 மற்றும் 2 (2022.05.11) பொதுவான விற்பனை மைய ஆளி சுற்று 1 மற்றும் 2 (2022.05.11 இன்)
1345 மணி	நேர்மாற்று மீள்கொள்வனவுகளையும் துணைநில் கடன்வழங்கல் வசதியையும் திருப்புதல்	திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி என்பவற்றின் கீழ் இரண்டாவது பிரிவின் தீர்ப்பனவு (2022.05.11 அன்று முதிர்ச்சியடைய வேண்டியது)
1400 மணி	லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி	பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி சுற்று 3 (2022.05.11) பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 3 (2022.05.11) பொதுவான விற்பனை மைய ஆளி சுற்று 3 (2022.05.11 இன்)
1430 மணி	குறுங்கால மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு (ஏலம்)	திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் குறுங்கால மீள்கொள்வனவு / நேர்மாற்று மீள்கொள்வனவு முதலாவது பிரிவின் தீர்ப்பனவு
1445 மணி	லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி	கொடுத்துத் தீர்த்தல் மற்றும் திருத்தியமைத்து தீர்த்தல் (2022.05.11)

1500 மணி	மூன்றாந்தரப்பு கொடுக்கல்வாங்களுக்கான முதன்மை வெட்டுநேரம்	வங்கிக்கு வங்கி (MT2XX) தொடர்கள் நீங்கலாக மூன்றாந்தரப்பினரின் சார்பில் புதிய கொடுக்கல்வாங்கல்களுக்காக (T + 0இற்காக) மூடிவிடுதல். (2022.05.11)
1500 மணி	லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி	இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை சுற்று 3 (2022.05.11 இன்) பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி சுற்று 4 (2022.05.11)
1515 மணி	லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி	பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 4 (2022.05.11) பொதுவான விற்பனை மைய ஆளி சுற்று 4 (2022.05.11 இன்)
1530 மணி	துணைநில் வசதிகளுக்கான வெட்டுநேரம்	துணைநில் கடன்வழங்கல் வசதி மற்றும் துணைநில் வைப்பு வசதி தளங்கள் 1530 மணிக்கு பங்கேற்பாளர்களுக்காக டப்பட்டிருக்கும்.
1545 மணி	நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொள்வனவு உருவாக்கத்தினை முகாமைப்படுத்தும் பங்கேற்பாளர்களுக்கான வெட்டுநேரம்	பங்கேற்பாளர்கள் 1545 மணியிற்குப் பின்னர் ஒரு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொள்வனவுகளை ஆரம்பித்தலாகாது.
1545 மணி	லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி	பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி சுற்று 5 (2022.05.11) பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 5 (2022.05.11) பொதுவான விற்பனை மைய ஆளி சுற்று 5 (2022.05.11 இன்)
1545 மணி	துணைநில் வைப்பு வசதி	துணைநில் வைப்பு வசதியின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு
1600 மணி	துணைநில் கடன் வழங்கல் வசதி	துணைநில் கடன்வழங்கல் வசதியின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு
1615 மணி	நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொடுப்பனவு	நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் மீள்கொடுப்பனவு
1630 மணி	இறுதிவெட்டு நேரம் வியாபார முறைமையினை மூடிவிடுதல	மேலும் உள்ளீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது, வியாபாரத்திற்காக முறைமை மூடப்பட்டதுடன் காரணமாக காத்திருத்தல்/ தீர்ப்பனவுச் செயன்முறை முடிவுறுத்தப்படும் அத்துடன் மேலும் காத்திருக்கின்ற ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் முறைமையினால் நிராகரிக்கப்படும்.
1630 மணியிலிருந்து 1700 மணிவரை	நாள்முடிவை செயன்முறைப்படுத்தல்	நாள் முடிவுச் செயன்முறைகள் உ-ம்: அறிக்கைகள்/ பொதுப்பேரேட்டு அறிக்கை (நாள் முடிவு), பேரேட்டு ஏற்றுமதி கோவைகளைத் தயாரித்தல், பட்டியலிடல்/ கூற்று அச்சிடல் நோக்கங்களுக்காக தரவுத் தளத்தினைப் பேணுகை
1700 மணி	முறைமையினை மூடிவிடுதல்	அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை/ பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை பிரயோகங்களை மூடுவதை தொடங்குதல், தளத்திற்கு வெளியேயான பின்னூட்டல்களைப் பெறுதல்.

பங்கேற்பாளர்கள் பணிநிலையங்களூடாக தமது தீர்ப்பனவுக் கணக்குகளை கண்காணிக்குமாறும் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையிலுள்ள பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதிகளின் தீர்ப்பனவு நேரத்தில் தீர்ப்பனவுக் கணக்குகளில் போதியளவு நிதியங்கள் உள்ளனவா என்பதை உறுதிசெய்யுமாறும் ஆலோசிக்கப்படுகின்றனர்.

எம்.ஆர் விஜயவர்த்தன
பணிப்பாளர் - கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள்

எம்.சீ.எம். ஆசிம்
கண்காணிப்பாளர் - பொதுப் படுகடன்

2022 யூன் 20

2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கை

சேரல்: பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளி, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி மற்றும் லங்காகிளியர் (பிறைவேற்) லிமிடெட் என்பனவற்றின் அனைத்து முதன்மை அலுவலர்கள்

லங்காபே பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளி மற்றும் லங்காபே பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியிலுள்ள பொறுப்பு முகாமையாளர் வரையறைகள்

லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்பு அந்தஸ்தையும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளி மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி ஆகியவற்றின் முதன்மை உறுப்புரிமையையும் பெற்றுள்ள தேசிய சேமிப்பு வங்கியை உள்ளடக்கும் பொருட்டு, 2020 நவெம்பர் 27ஆம் திகதி விடுக்கப்பட்ட 2020ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கையில் தரப்பட்டுள்ள பல - அடுக்கு பொறுப்பு முகாமையாளர் வரையறைகளை திருத்தம் செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. பொறுப்பு முகாமையாளர் வரையறைகளை வரைவிலக்கணம் செய்யும் நோக்கத்திற்காக பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி மற்றும் இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் முதன்மை உறுப்பினர்களின் திருத்தப்பட்ட வகைப்படுத்தல் இணைப்பு ஐ இல் தரப்பட்டுள்ளது.

2. பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி என்பனவற்றிற்கு ஏற்புடைத்தான குறைந்தபட்ச பொறுப்பு முகாமையாளர் வரையறைகள் வருமாறு:

i. பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளிக்கான குறைந்தபட்சப் பொறுப்பு முகாமையாளர் வரையறைகள்			
	வகை அ	வகை ஆ	வகை இ
வகை அ	ரூ.200 மில்லியன்	ரூ.150 மில்லியன்	ரூ.100 மில்லியன்
வகை ஆ	ரூ.150 மில்லியன்	ரூ.150 மில்லியன்	ரூ.100 மில்லியன்
வகை இ	ரூ.100 மில்லியன்	ரூ.100 மில்லியன்	ரூ.100 மில்லியன்

ii. பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய ஆகக் குறைந்த பொறுப்பு முகாமையாளர் வரையறைகள்			
	வகை அ	வகை ஆ	வகை இ
வகை அ	ரூ.500 மில்லியன்	ரூ.350 மில்லியன்	ரூ.250 மில்லியன்
வகை ஆ	ரூ.350 மில்லியன்	ரூ.350 மில்லியன்	ரூ.250 மில்லியன்
வகை இ	ரூ.250 மில்லியன்	ரூ.250 மில்லியன்	ரூ.250 மில்லியன்

3. முதன்மை உறுப்பினர்கள், எந்தவொரு வகையிலுமுள்ள ஏதேனும் முதன்மை உறுப்பினர்களுடனான புரிந்துணர்வு உடன்படிக்கைகளினூடாக இலங்கை மத்திய வங்கியினால் வரைவிலக்கணம் செய்யப்பட்ட குறைந்தபட்ச வரையறைகளிலும் பார்க்க உயர்வான பொறுப்பு முகாமையாளர் வரையறைகளை அனுமதிக்கலாம்.

4. பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி முறைமைகளில் இலங்கை மத்திய வங்கியினால் வரையறுக்கப்பட்ட ஆகக் குறைந்த பொறுப்பு முகாமையாளர் வரையறைகளை லங்காகிளியர் (பிறைவேற்) லிமிடெட் நடைமுறைப்படுத்தவும் பேணவும் வேண்டும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் வரைவிலக்கணம் செய்யப்பட்ட குறைந்தபட்ச பொறுப்பு முகாமையாளர் வரையறைகளை விட உயர்வான பொறுப்பு முகாமையாளர் வரையறைகளை நிர்ணயிப்பதற்கு முதன்மை உறுப்பினர்கள் விடுக்கும் கோரிக்கைகளையும் அனுமதித்தல் வேண்டும்.

5. ஏதேனும் வகைக்கு அல்லது/ அனைத்து வகைகளுக்குமாக ஒதுக்கப்பட்ட ஆகக் குறைந்த பொறுப்பு முகாமையாளர் வரையறைகளையும் முதன்மை உறுப்பினர் வகைகளையும் இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யலாம் என்பதுடன் தேவைப்படின் திருத்தலாம்.

6. முதன்மை உறுப்பினர்கள் ஆகக் குறைந்த பொறுப்பு முகாமையாளர் வரையறைகளை வரைவிலக்கணம் செய்யும் ஒரே நோக்கத்திற்காக, இம்முறையில் வகைப்படுத்தப்பட்டனர் என்பதுடன் வேறு ஏதேனும் நோக்கத்திற்காக இதனைப் பயன்படுத்தக்கூடாது.

7. இச்சுற்றறிக்கையானது 2020ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகள் சுற்றறிக்கையினை மாற்றீடு செய்வதுடன் 2022 யூன் 27ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,
எம்.ஆர். விஜயவர்தன
பணிப்பாளர்/கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

இணைப்பு I

பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி அத்துடன்/ அல்லது பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் முதனிலை உறுப்பினர்கள்

- **வகை அ**

இலங்கை வங்கி
மக்கள் வங்கி
கொமர்ஷல் வங்கி ஒவ் சிலோன் பிஎல்சி
சம்பத் வங்கி பிஎல்சி
அட்டன் நஷனல் வங்கி பிஎல்சி
செலான் வங்கி பிஎல்சி
நெஷனல் டெவலப்மன்ட் வங்கி பிஎல்சி

- **வகை ஆ**

டிஎவ்சிசி வங்கி பிஎல்சி
நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி
த ஹொங்கொங் அன்ட் சங்காரி பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட்
பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
ஸ்டார்ட் சார்ட்டட் வங்கி
அமானா வங்கி பிஎல்சி
யூனியன் வங்கி ஒவ் கொழும்பு பிஎல்சி
கார்கில்ஸ் வங்கி லிமிடெட்

- **வகை இ**

தேசிய சேமிப்பு வங்கி
டியூச் வங்கி ஏ.ஜீ.
சிட்டி வங்கி என்.ஏ.
எம்.சி.பீ. வங்கி லிமிடெட்
இந்தியா ஸ்டேட் வங்கி
ஹபீப் வங்கி லிமிடெட்
பப்ளிக் பாங்க் பேஹர்ட்
இந்தியன் வங்கி
பாங் ஒவ் சைனா லிமிடெட்
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

இந்த வகைப்படுத்தலானது பல அடுக்குகளைக் கொண்ட பொறுப்பு முகாமையாளர் வரையறைக் கட்டமைப்பின் தனி நோக்கத்திற்காக விதிக்கப்பட்டிருக்கின்றதேயன்றி வேறெந்த நோக்கத்திற்காகவும் இதனைப் பயன்படுத்தக்கூடாது.

தொடர்பு இல. : 34/01/024/0106/06 2022 யூலை 18

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 04/2022

சேரல்: : லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்கள்

2022 யூலை 22 அன்று அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து லங்கா செட்டில் முறைமையின் நேரலைத் தொழிற்பாடுகள்

தடங்கலற்ற தொழில் ஏற்பாடுகளை பரீட்சிக்கும் நோக்கத்திற்காக 2022 யூலை 22 (வெள்ளிக்கிழமை) அன்று இலங்கை மத்திய வங்கி அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து அதன் லங்கா செட்டில் முறைமையின் (அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் லங்கா செக்குயர் முறைமை) அத்துடன் ஏனைய தொடர்புபட்ட முறைமைகளின் தொழிற்பாடுகளை நடாத்தும் என்பது உங்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கியின் அனர்த்த மீட்பு அமைவிடத்தை அனுகுவதற்கு CBSLNet உடன் இணைக்கப்பட்டுள்ள உங்களது நிறுவனத்தின் கணனிகள் ஏற்கனவே அமைப்புருவாக்கம் செய்யப்பட்டுள்ளன. எனினும், இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினை தொடர்புகொண்டு தயார்நிலையினை உறுதிப்படுத்துவதற்கு 2022 யூலை 21ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகையினைப் பரீட்சிக்குமாறு நீங்கள் வேண்டப்படுகின்றீர்கள். இத்தடங்கலற்ற தொழில் திட்டமிடல் பயிற்சியின் போது தகவல் தொழில்நுட்பக் கருமங்களுக்காக தொடர்புகொள்ளக்கூடியவர்களாக இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் பின்வரும் அலுவலர்கள் பணியாற்றுவர்.

- திரு. பிலேஸ் கொக்கலஹேவா - 011-2398841 (bilesh@cbsl.lk)
- திரு. நிபுண சமரதீவாஹர - 011-2398887 (nipunas@cbsl.lk)

தயவுசெய்து உங்களது நிறுவனத்தின் பெயர்குறிக்கப்பட்ட தடங்கலற்ற தொழில் திட்டமிடல் அலுவலரூடாக மேற்குறித்த அலுவலர்களைத் தொடர்புகொள்வதற்கு உங்களது நிறுவனத்தின் அனைத்து தொழிற்படுத்தல் அலுவலர்களையும் அறிவுறுத்தவும்.

கே வி கே அல்விஸ்
பணிப்பாளர்
கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

பிரதி: செயலாளர் நாயகம் - இலங்கை வங்கியாளர்கள் அமைப்பு தலைவர் - முதன்மை வணிகர்கள் அமைப்பு } தகவலுக்காக

முதன்மை நிறைவேற்று அலுவலர் - லங்கா கிளியா பிறைவேட் லிமிடெட் முதன்மை நிறைவேற்று அலுவலர் - லங்கா பினான்சியல் சேர்விசஸ் பியூரோ லிமிடெட் } தேவைப்படுமெனில் பங்கேற்பாளர்களுக்கு அவசியமான உதவிக்காக

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. RDD/PR/2010/03 (A-7)

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அஞ்சல் பெட்டி இலக்கம் 590
இல. 30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
2022 மே 20

சேரல்: அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்

சுபீட்சக் கடன் திட்டத்தின் (சௌபாக்யா) தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள் - துணைக் கடன்களுக்கு ஏற்புடைய வட்டி வீதத்தை அதிகரித்தல்

சுபீட்சக் கடன் திட்டத்திற்காக (சௌபாக்யா) இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட 2010.03.22ஆம் திகதியிடப்பட்ட ஆர்டிடி/பீஆர்/2010/03ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுடன் (திருத்தப்பட்டவாறான) இது தொடர்பானது.

சந்தையில் காணப்படும் வட்டி வீதங்களின் கணிசமான அதிகரிப்புக்களையும் தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலைகளையும் பரிசீலனையிற்கொண்டு, மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை பின்வருமாறு திருத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

புதிய பிரிவை உள்ளடக்குதல்

3.2 கடன் வரையறைகள்: இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திகதியிலிருந்து புதிய கடன்களில் குறைந்தபட்சம் 80 சதவீதமானவை வேளாண்மை, விலங்குவளர்ப்பு, மீன்பிடி, மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டனவாக இருப்பதை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் இவை அரையாண்டு அடிப்படையொன்றில் கணிப்பிடப்படுதலும் வேண்டும்.

தற்போதைய பிரிவுகளிற்கான திருத்தங்கள்

3.6 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான மீள்நிதியிடல் கடன்கள் மீதான வட்டி வீதம் : ஆண்டிற்கு 4 சதவீதம்.

3.7 துணைக் கடன்களுக்கான வட்டி வீதம் : ஆண்டிற்கு 9 சதவீதம்.

மேலே குறிப்பிடப்பட்ட திருத்தங்கள் 2022 மே 20 திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்பதுடன் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் ஏனைய அனைத்து வாசகங்களும் மாற்றமின்றிக் காணப்படும்.

இத்திருத்தங்களின் உள்ளடக்கங்களை தயவுசெய்து உங்கள் வங்கியுடன் தொடர்புடைய திணைக்களங்கள்/கிளைகளிலுள்ள அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டுவரவும்.

எம்.எஸ்.கே. தர்மவர்த்தன
பணிப்பாளர்/பிரதேச அபிவிருத்தி

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இலக்கம்: RDD/STaRR-IS/**2019/01 - (திருத்தம் 1)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
தொ. பேசி: 2477452, 2398748
தொலை நகல் : 24477724
2022 மே 27

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்

"சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின்" தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம்

இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட 2019.11.13 திகதியிடப்பட்ட இல.RDD/STaRR-IS/2019/01 தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் (இதனகத்துப் பின்னர் **"முதன்மை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்"** எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது என்பது சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளிக்கும் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. முதன்மை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் வாசகம் 1 இத்தால் நீக்கப்பட்டு அதற்காக பின்வரும் வாசகம் பதிலீடு செய்யப்படுகின்றது:-

   1 அறிமுகம்

   "தேயிலை மீள் பயிரிடல், இறப்பர் புதிய பயிரிடல் மற்றும் அவற்றுடன் தொடர்பான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கையில் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் கைத்தொழிலுக்கு புத்துயிரளிக்கும் முக்கிய குறிக்கோளுடன், இலங்கை அரசாங்கம் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்துடன் ஒழுங்குகளைச் செய்திருக்கிறது.

   இலங்கை அரசாங்கத்தினாலும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினாலும் கூட்டாக நிதியிடப்பட்ட சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டம், சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்தியிரளித்தல் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் நடைமுறைப்படுத்துகிறது. சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தும் காலம் 2016 இலிருந்து 2022 வரையானதாக இருக்கும்.

   இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்ட வட்டி உதவுதொகைத் திட்டம் (திட்டம்) சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின் "கூறு இ: கிராமிய நிதியியல் வசதிக்குட்படுத்தல்" இன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 2019.10.15இலிருந்து 2025.12.31 வரை செயற்பாட்டிலிருக்கும்.

2. முதன்மைத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் **வாசகம் 6.5** இத்தால் நீக்கப்பட்டு அதற்காக பின்வரும் வாசகம் பதிலீடு செய்யப்படுகிறது:-

   பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான வட்டி உதவுதொகை- 2021.11.01 தொடக்கம் 2022.05.31 வரையான காலப்பகுதிக்காக ஆண்டிற்கு 4.0 சதவீதம் மற்றும் 2022.06.01 தொடக்கம் 2022.12.31 வரையான காலப்பகுதிக்கான ஆண்டிற்கு 7.0 சதவீதம் ஆகும். தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரிவு 12.3இல் குறித்துரைக்கப்பட்டவாறு, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு காலாண்டு அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினூடாக இலங்கை அரசாங்கத்தினால் வட்டி உதவுதொகை வழங்கப்படும்.

3. முதன்மைத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் **வாசகம் 11.2** இத்தால் நீக்கப்பட்டு அதற்காக பின்வரும் வாசகம் பதிலீடு செய்யப்படுகிறது:-

   "பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், 2022.12.31இற்கு பின்னர் திட்டத்தின் கீழ் துணைக் கடன்களை வழங்கலாகாது. எனினும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அனைத்து வட்டி உதவுதொகை கோரல்களையும் தீர்ப்பனவு செய்யும் வரை சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டி உதவுதொகை வழங்கப்படும்".

சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்தியிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான இத்திருத்தம் 2021.11.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும். கடன் திட்டத்தின் முதன்மை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் இத்திருத்தத்தின் உள்ளடக்கத்தினை தொடர்பான அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள,
எம்.எஸ்.கே தர்மவர்தன
பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/2011/2022/01

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ.இல. 590
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2022 யூன் 13

சேரல்: அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்

புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்

2011 செத்தெம்பர் 23ஆம் திகதியிடப்பட்ட ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/2011ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், அதனைத்தொடர்ந்து 2016 சனவரி 10, 2015 யூலை 06, 2016 ஓகத்து 22, 2020 ஏப்பிறல் 08, 2021 ஏப்பிறல் 05 மற்றும் 2021 ஏப்பிறல் 20 ஆகிய திகதிகளில் விடுக்கப்பட்ட திருத்தங்கள் என்பன பின்வருமாறு திருத்தப்படுவது பற்றி அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. **வட்டி வீதம்**

இலங்கை அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட உதவுதொகையளிக்கப்பட்ட வட்டி வீத பகுதி	கடன்பாட்டாளர்களுக்கு ஏற்புடைய வட்டி வீதம்	பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஏற்புடைய விளைவு வீதம்
7 சதவீதம்	8 சதவீதம்	15 சதவீதம்

2. **நிதியின் அளவு - Iஆம் இணைப்பிற்கமைவாக**

மேலே குறிப்பிடப்பட்ட திருத்தங்கள் 2022 யூன் 15இலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்பதுடன் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்ட நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றிக் காணப்படும்.

இத்திருத்தங்களின் உள்ளடக்கங்களை தயவுசெய்து உங்கள் வங்கியின் தொடர்புடைய திணைக்களங்கள்/கிளைகளிலுள்ள அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டுவரவும்.

எம்.எஸ்.கே. தர்மவர்த்தன
பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

இணைப்பு I

புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

தகுதிபெற்ற பயிர்களுக்கான நிதியின் அளவு

பயிர் மற்றும் குறியீடு		நிலம் பண் படுத்தல் (ரூ.)	நாற்று மேடை மற்றும் பயிரிடல் (ரூ.)	வளமாக்கி (ரூ.)	இரசாயனம் பூச்சி/ களை பங்கசுக் கொல்லி (ரூ.)	ஏனையவை (ரூ.)	மொத்த செலவு (ரூ.)	ஏக்கர் ஒன்றிற்கான உயர்ந்தபட்சக் கடன் எல்லை (ரூ.)	நில அலகுகளின் பரப்பு (ஏக்கர்)	
									குறைந்தது	கூடியது
நெல்										
	நீர்ப்பாசனம் (PI)	45,268.67	14,335.22	15,449.89	20,568.78	37,710.78	133,333.33	100,000.00	0.25	20
	மழை நீர் (PR)	39,887.47	27,678.47	16,222.47	16,972.47	40,572.47	141,333.33	106,000.00	0.25	
மிளகாய்	(C)	54,715.49	37,904.54	39,121.99	69,082.49	151,175.49	352,000.00	264,000.00	0.125	4
வெங்காயம்	(O)	45,552.70	328,132.20	42,221.20	37,713.20	106,380.70	560,000.00	420,000.00	0.125	4
பருப்பு வகை										
	தட்டைப்பயறு (M1)	21,072.08	16,679.90	7,562.10	9,063.64	29,622.28	84,000.00	63,000.00	0.125	
	பயறு (M2)(M2)	27,119.80	19,881.98	14,434.76	18,814.42	27,749.06	108,000.00	81,000.00	0.125	
	உழுந்து (M3)	17,236.36	8,434.66	24,574.66	20,987.66	12,766.66	84,000.00	63,000.00	0.125	10
	சோயா அவரை (M4)	13,387.56	9,615.04	30,156.52	23,148.30	11,692.58	88,000.00	66,000.00	0.125	
	குரக்கன் (M5)	28,326.50	5,939.20	20,702.56	13,379.40	7,652.34	76,000.00	57,000.00	0.125	
	சோளம் (M)	44,969.77	12,097.68	20,875.76	30,954.70	27,102.08	136,000.00	102,000.00	0.125	20
எண்ணெய் விதைகள்										
	நிலக்கடலை (L1)	26,027.30	33,454.30	12,754.30	16,059.30	35,704.80	124,000.00	93,000.00	0.125	
	எள்ளு (L2)	24,971.06	11,286.98	7,550.98	7,550.98	24,639.98	76,000.00	57,000.00	0.125	10
	சூரியகாந்தி (L3)	12,973.75	11,361.25	10,555.00	8,136.25	12,973.75	56,000.00	42,000.00	0.125	
கிழங்கு வகை										
	உருளைக்கிழங்கு (T)	154,370.59	377,166.66	143,918.62	148,252.65	184,291.50	1,008,000.00	756,000.00	0.125	4
	வத்தாளை (T1)	31,115.40	22,990.40	10,705.40	22,573.40	48,615.40	136,000.00	102,000.00	0.125	
	மரவள்ளி (T2)	32,604.51	24,652.45	30,847.05	13,861.99	26,034.01	128,000.00	96,000.00	0.125	10
	பால் கிழங்கு (T)	52,937.50	40,037.50	28,750.00	20,687.50	33,587.50	176,000.00	132,000.00	0.125	
காய்கறிகள்										
	கத்தரிக்காய் (V1)	48,898.00	13,548.00	17,858.00	45,898.00	113,798.00	240,000.00	180,000.00	0.125	
	வெண்டிக்காய் (V2)	22,238.00	6,388.00	5,398.00	13,438.00	76,538.00	124,000.00	93,000.00	0.125	
	பீட்ரூட் (V3)	82,596.20	50,215.20	22,996.20	27,396.20	96,796.20	280,000.00	210,000.00	0.125	
	அவரை (V4)	39,906.00	46,506.00	21,526.00	31,956.00	136,106.00	276,000.00	207,000.00	0.125	
	கோவா (V5)	113,298.00	82,048.00	61,658.00	81,898.00	137,098.00	476,000.00	357,000.00	0.125	
	கரட் (V6)	97,512.80	71,608.80	62,612.80	53,552.80	142,712.80	428,000.00	321,000.00	0.125	
	குடை மிளகாய் (V7)	101,130.00	74,480.00	47,130.00	69,530.00	155,730.00	448,000.00	336,000.00	0.125	
	தக்காளி (V8)	81,854.40	61,182.40	53,054.40	81,554.40	178,354.40	456,000.00	342,000.00	0.125	4
	லீக்ஸ் (V9)	74,685.00	96,560.00	30,385.00	32,585.00	97,785.00	332,000.00	249,000.00	0.125	
	முள்ளங்கி (V10)	49,084.00	24,084.00	14,564.00	4,384.00	55,884.00	148,000.00	111,000.00	0.125	
	நோகோல் (V11)	59,467.80	30,648.80	10,147.80	9,467.80	54,267.80	164,000.00	123,000.00	0.125	
	லூவா (V12)	9,856.00	8,776.00	3,756.00	21,556.00	172,056.00	216,000.00	162,000.00	0.125	
	பாகற்காய் (V13)	1,108.80	36,607.80	25,880.80	55,464.80	170,137.80	228,000.00	171,000.00	0.125	
	புடலங்காய் (V14)	14,452.00	13,192.00	8,352.00	9,652.00	178,352.00	224,000.00	168,000.00	0.125	
	பூசணிக்காய் (V15)	33,802.00	29,862.00	26,682.00	22,352.00	39,302.00	152,000.00	114,000.00	0.125	

ஏனையவை										
	இஞ்சி (W1)	38,600.00	127,050.00	41,500.00	32,800.00	40,050.00	280,000.00	210,000.00	0.250	4
	கரும்பு (W2)	30,898.00	28,311.75	40,206.75	30,380.50	70,203.00	200,000.00	150,000.00	1.00	10
	மஞ்சள்	112,000.00	295,000.00	91,320.00	12,000.00	461,000.00	971,320.00	728,490.00	0.125	1
வீட்டுத் தோட்டம் அமைத்தலுக்கான உயர்ந்தபட்சத் தொகை ரூ.100,000/-										
நாற்றுமேடைகளுக்கான உயர்ந்தபட்சத் தொகை (விதை உற்பத்தி உள்ளடங்கலாக) ரூ.500,000/-										

குறிப்பு: மொத்தக் கடன் தொகையில் உயர்ந்தபட்சம் 60 சதவீதம் வரையிலான தொகையினை நிலத்தினைப் பண்படுத்தல், விதை, பயிர், வளமாக்கி, பூஞ்சணவன், பூச்சிகளின் தாக்கம் போன்றவற்றிற்காக முதல் தவணையிலும் மீதியினை கள அலுவலரின் விதந்துரைப்பின்படி வளமாக்கியின் கொள்வனவு அல்லது அறுவடைக்கான ஒரு அல்லது இரு தவணைகளிலும் வழங்க வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு கடன்பாட்டாளர்களின் தேவைப்பாடுகளுக்கிணங்க பயிர்ச்செய்கைக் கடன்களை வழங்குவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மேலே அட்டவணையில் தரப்பட்ட மேற்குறிப்பிட்ட செலவுக் கூறுகளை நிறைவேற்றும் பொருட்டு வேளாண்மையாளர்களினது இயலாற்றலைக் கருத்திற்கொண்டு தனது சுய அபிப்பிராயத்திற்கமைய ஒவ்வொரு வேளாண்மையாளர் மூலமும் வேண்டப்பட்ட தொகையை மாத்திரம் விடுவிப்பதற்கு கிளை முகாமையாளர்கள் வேண்டப்படுகின்றனர். ஏக்கரொன்றிற்கான மேற்குறிப்பிட்ட உயர்ந்தபட்சக் கடன் தொகைக்குட்பட்டு, பயிர்ச்செய்கை மாதிரி, நீர்ப்பாய்ச்சல் அல்லது மழையை நம்பிய பருவகாலம் - சிறுபோகம் அல்லது பெரும்போகம், கலப்புப் பயிர்ச்செய்கை மற்றும் மீள்கொடுப்பனவிற்கான இயலாற்றல் போன்றவற்றிற்கிணங்க ஒவ்வொரு வேளாண்மையாளர்களுக்கும் கடன் தொகைகளை வழங்குவதற்கான தீர்மானத்தினை மேற்கொள்ள கிளை முகாமையாளர்கள் உரித்துடையவர்களாவர்.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இலக்கம்: RDD/STaRR-IS/2019/01 - **(திருத்தம் 2)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
2022 யூன் 20

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்

"சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளிக்கும் வட்டி உதவுதொகைத் திட்டத்தின்" தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம்

இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட அதன்பின்னர் 2022.05.27 அன்று திருத்தப்பட்ட 2019.11.13 திகதியிடப்பட்ட இல.RDD/STaRR-IS/2019/01 தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் (இதனகத்துப் பின்னர் **"முதன்மை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்"** எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது என்பது சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளிக்கும் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது

1. 2022.05.27 அன்று திருத்தப்பட்ட முதன்மை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் **வாசகம் 1** இத்தால் நீக்கப்பட்டு அதற்காக பின்வரும் வாசகம் பதிலீடு செய்யப்படுகின்றது:-

1. அறிமுகம்

"தேயிலை மீள்பயிரிடல், இறப்பர் புதிய பயிரிடல் மற்றும் அவற்றுடன் தொடர்பான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கையில் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பருக்கு புத்துயிரளிக்கும் முக்கிய குறிக்கோளுடன், இலங்கை அரசாங்கம் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்துடன் ஒழுங்குகளைச் செய்திருக்கிறது."

இலங்கை அரசாங்கத்தினாலும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினாலும் கூட்டாக நிதியிடப்பட்ட சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டம், தலைமை நிகழ்ச்சித்திட்ட முகவராண்மையான பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்தியிரளித்தல் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் நடைமுறைப்படுத்துகிறது. சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தும் காலம் 2016 இலிருந்து 2022 வரையானதாக இருக்கும்.

இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்ட வட்டி உதவுதொகைத் திட்டம் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின் "கூறு சி: கிராமிய நிதியியல் வசதிக்குட்படுத்தல்" இன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 2019.10.15 இலிருந்து 2025.12.31 வரை செயற்பாட்டிலிருக்கும்.

2. முதன்மைத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் **வாசகம் 5.9** இத்தால் நீக்கப்பட்டு அதற்காக பின்வரும் வாசகம் பதிலீடு செய்யப்படுகின்றது:-

"நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியங்கள்" என்பது சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்தியிரளித்தல் உதவுதொகைத் திட்டத்தன் கீழ் வழங்குகின்ற வட்டி உதவுதொகைக்காக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் மூலமாக நிதி அமைச்சினால் இலங்கை மத்திய வங்கிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியும் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவும் எனப் பொருள்படும்.

3. முதன்மைத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் **வாசகம் 8.5** இத்தால் நீக்கப்பட்டு அதற்காக பின்வரும் வாசகம் பதிலீடு செய்யப்படுகிறது:-

"வட்டி உதவுதொகை கொடுப்பனவு பதிவுகளைப் பேணுதல்"

4. முதன்மைத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் **வாசகம் 9.3** இத்தால் நீக்கப்பட்டு அதற்காக பின்வரும் வாசகம் பதிலீடு செய்யப்படுகிறது:-

"இலங்கை மத்திய வங்கியின் அறுவுத்தல்களையும் விதந்துரைப்புக்களையும் அடிப்படையாகக்கொண்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கியுனூடாக காலமுறையான வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்"

5. முதன்மை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் **வாசகம் 12.3(இ)** இத்தால் நீக்கப்பட்டு அதற்காக பின்வரும் வாசகம் பதிலீடு செய்யப்படுகிறது:-

"முன்னுறுகின்ற நான்கு காலாண்டுகளில் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களுக்காக ஒவ்வொரு ஆண்டின் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒத்தோபர் மாதங்களின் இறுதியளவில் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினுடாக அத்துடன்/அல்லது பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினூடாக வட்டி உதவுதொகை விண்ணப்பங்களை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகம் சமர்ப்பிக்க வேண்டும்".

6. முதன்மை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் **வாசகம் 14** இத்தால் நீக்கப்பட்டு அதற்காக பின்வரும் வாசம் பதிலீடு செய்யப்படுகிறது:-

"கணக்காய்வு செய்கின்ற நோக்கத்திற்காக சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்தியிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் நிதியியல் கூற்றுக்களைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தயாரித்தல் வேண்டும்".

சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்தியிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான இத்திருத்தம் 2021.11.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும். கடன் திட்டத்தின் முதன்மை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் (2022.05.27 அன்று திருத்தப்பட்டவாறு) மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் இத்திருத்தத்தின் உள்ளடக்கத்தினை தொடர்பான அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள,
எம்.எஸ்.கே தர்மவர்தன
பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இலக்கம்: RDD/STaRR-IS/2019/01 – **(திருத்தம் 3)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ. பெ. இல 590
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01.
2022 யூலை 08

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்

"சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளிக்கும் வட்டி உதவுதொகைத் திட்டத்தின்" தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம்

இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட அதன் பின்னர் 2022.05.27 அன்றும் 2022.06.20 அன்றும் திருத்தப்பட்ட 2019.11.13 திகதியிடப்பட்ட இல.RDD/STaRR-IS/2019/01 தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் (இதனகத்துப் பின்னர் **"முதன்மை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்"** எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது என்பது சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளிக்கும் வட்டி உதவுதொகை திட்டத்தின் அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது

1. முதன்மை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் **வாசகம் 6.4** இத்தால் நீக்கப்பட்டு அதற்காக பின்வரும் வாசகம் பதிலீடு செய்யப்படுகின்றது:-

"தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கான வட்டி வீதம்: ஆண்டிற்கு 9.0 சதவீதம்

சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்தியிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான இத்திருத்தம் 2022.07.08 தொடக்கம் நடைமுறைக்குவரும். கடன் திட்டத்தின் முதன்மை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் (2022.05.27 அன்றும் 2022.06.20 அன்றும் திருத்தப்பட்டவாறு) மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் இத்திருத்தத்தின் உள்ளடக்கத்தினை தொடர்பான அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள,
சதுர ஆரியதாச
மேலதிகப் பணிப்பாளர்
பணிப்பாளருக்கு

தொடர்பு இல: 32/04/034/0001/001 2022 ஓகஸ்ட் 16

சேரல்: அனைத்து பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்

கனம் ஐயா/ அம்மணி,

இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களுக்காக வழங்கப்படுகின்ற சலுகைகள்

நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நிலைமையின் காரணமாக வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்படுகின்ற சவால்களை அடையாளம் கண்டுகொண்ட இலங்கை மத்திய வங்கி பின்வரும் மீள்நிதியிடல் திட்டங்களின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தமொன்றாக பின்வரும் சலுகைகளை வழங்குவதற்கு தீர்மானித்திருக்கிறது.

அ. 2010.03.22ஆம் திகதியிடப்பட்ட ஆர்டிடி/பிஆர் /2010/03 (சௌபாக்யா கடன் திட்டம் - சுபீட்சம்)

ஆ. 2020.04.01ஆம் திகதியிடப்பட்ட ஆர்டிடி/பிஆர்-கொவிட்19/2020/01, 2020.06.19ஆம் திகதியிடப்பட்ட ஆர்டிடி/பிஆர்-கொவிட்19/2020/03 (சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி)

இ. 2021.05.04ஆம் திகதியிடப்பட்ட ஆர்டிடி/டிஏடி-பிபி/2021/01 (உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னோடிக் கட்டம்)

ஈ. 2019.08.06ஆம் திகதியிடப்பட்ட திருத்தப்பட்டவாறான ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2019/01 மற்றும் ஆர்டிடி/எஸ்ஏபிபி/ஆர்எவ்/2019/01 (சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்)

2. பின்னணி

2.1 இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட 2022.07.07ஆம் திகதியிடப்பட்ட 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நாணயச் சபையின் சுற்றறிக்கையுடன் (இணைப்பு அ) இசைந்துசெல்லும் விதத்தில், இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டங்களுக்கு சலுகைகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

2.2 பிரிவு 2.1இல் குறிப்பிடப்பட்ட நாணயச் சபை சுற்றறிக்கையில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, கடன்பாட்டாளர்களினால் கேட்டுக்கொள்ளப்பட்ட விதத்தில் ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து சலுகைகளை தொடர்பான கடனின் மூலதனத்திற்காக அல்லது வட்டிக்காக அல்லது இரண்டிற்குமாக மற்றும் மூலதனத்தின் அல்லது வட்டியின் ஒரு பகுதிக்காக வழங்கமுடியும்.

2.3 சலுகைகளை பயன்படுத்திக்கொள்ள விரும்பும் தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் அத்தகைய சலுகைகளை பெற்றுக்கொள்ள தொடர்பான பங்கேற்கும் நிறுவனங்களிடம் 2022.09.15 அளவில் கோருதல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் விரைவான முறையில் சலுகைகள், இறுதித்திகதி, சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவம் என்பனவற்றை தகைமையுடைய அனைத்து கடன்பாட்டாளர்களுக்கும் மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் உள்ளிட்ட அச்சு அத்துடன்/அல்லது இலத்திரனியல் முறைகளூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

2.4 இதற்கமைவாக, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், சலுகைகளை பயன்படுத்த விரும்பும் தகைமையுடைய கடன்பாட்டாளர்களிடமிருந்தான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளுமாறும், இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் (இணைப்பு I) உள்ளவாறு ஒவ்வொரு திட்டங்கள்/ கட்டங்களுக்கான விபரங்களை தனித்தனியாக 2022.09.30 அளவில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிக்கையிடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. தயவுசெய்து சௌபாக்யா கடன் திட்டம் மற்றும் சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி என்பனவற்றின் மென்பிரதியை (எக்சல்) sehan@cbsl.lk மற்றும் lansakara@cbsl.lk இற்கும் மற்றைய திட்டங்களை gihan@cbsl.lk இற்கும் அனுப்பிவைக்கவும்.

3. வழங்கப்பட்ட சலுகைகள்

3.1 மீள்நிதியிடல் திட்டங்கள்

3.1.1 சலுகைக்காலம் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு கடன்பாட்டாளர்களினால் மேற்கொள்ளப்படும் மீள்கொடுப்பனவுகள்.

அ. கடன்பாட்டாளர்கள் சலுகைக்காலத்திற்காக 2022 திசெம்பர் 31 வரையும் மீள்கொடுப்பனவு காலப்பகுதியை 6 மாதங்களினால் (06) நீடிப்பதற்கும் விண்ணப்பிக்கமுடியும்.

ஆ. சலுகைக்காலம் தொடர்பில் வட்டியை கணித்தல் மற்றும் கொடுப்பனவு செய்தல்

i. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், ஒவ்வொரு திட்டங்களுக்குமாக இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட தொடர்பான அறிவுறுத்தல் தொழிற்பாடுகளில் தரப்பட்டுள்ள வட்டி வீதங்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் சலுகைக் காலத்திற்கான வட்டியினை கணித்தல் வேண்டும்.

ii. எவரேனும் கடன்பாட்டாளர்கள் சலுகைக் காலப்பகுதியில் வட்டியைச் செலுத்தவிரும்பாதிருப்பாராயின் ஒன்று திரண்ட வட்டியை எஞ்சியுள்ள கடன் தவணைகளிடையே சமமாக பிரித்துக்கொள்ளுதல் வேண்டும் அல்லது கடன்பாட்டாளருடன் பரஸ்பரம் இணங்கிக்கொள்ளப்பட்டவாறு அறவிட்டுக்கொள்ளுதல் வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சலுகைக் காலப்பகுதியில் வட்டியை விதிக்கவோ அல்லது ஒன்று திரண்ட வட்டியின் மீது கூட்டு வட்டியை விதிக்கவோ கூடாது.

இ. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், சலுகைக் காலப்பகுதியில் ஒன்று திரண்ட மூலதனத்தின் மீள்கொடுப்பனவுகளுக்காக நாணயச் சபையின் சுற்றறிக்கையினைப் பின்பற்றுதல் வேண்டும் என்பதுடன் ஒன்று திரண்ட மூலதனத்தின் மீதான வட்டியை மேலே ஆ(i)இல் தரப்பட்டுள்ள வட்டி வீதத்தில் கணித்தலும் வேண்டும்.

3.1.2. சலுகைக் காலம் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மீள்கொடுப்பனவுத் திட்டங்களை இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்தல்.

அ. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், சலுகைகளுக்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கடன் தொடர்பான அனைத்து விபரங்களையும் இணைப்பு I இல் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆ. கடனின் சலுகைக் காலம்

i. 03 மாதங்களுக்கும் குறைவாக அல்லது அதற்குச் சமமானதாக இருக்குமாயின் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தற்போதுள்ள மீள்கொடுப்பனவு அட்டவணையின்படி இலங்கை மத்திய வங்கிக்கு மீள்கொடுப்பனவுகளைச் செய்யலாம்.

ii. 03 மாதங்களுக்கும் கூடுதலானதாக இருப்பின்,

- பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு மீள்கொடுப்பனவிற்காக 6 மாதங்கள் வழங்கப்படுகின்றன.
- சலுகைக் காலத்தில் ஒன்று திரண்ட வட்டி சலுகைக் காலமுடிவில் செலுத்தப்படுதல் வேண்டும் அல்லது எஞ்சியுள்ள கடன் தவணைகளிடையே சமமாக பங்கிடப்படுதல் வேண்டும்.
- இதற்கமைவாக புதிய மீள்கொடுப்பனவு அட்டவணை வழங்கப்படும்.

3.2 வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள்

3.2.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் நாணயச் சபையின் சுற்றறிக்கைக்கிணங்க கடன்பாட்டாளர்களுக்குத் தேவையான சலுகைகளை வழங்கலாம்.

3.2.2 கொடுகடன் உத்தரவாதங்களையும் வட்டி உதவுதொகையினையும் ஏற்கனவே இணங்கிக்கொள்ளப்பட்ட காலம் வரை மட்டுமே வழங்குதல் வேண்டும்.

3.2.3 நாணயச் சபைச் சுற்றறிக்கையின் பிரிவு 4.4 உடன் இசைந்துசெல்லும் விதத்தில் அறவிடல் நடவடிக்கையினை 2022.12.31 வரை மேற்கொள்ளமுடியாது. அதன்பின்னர், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் கீழ் விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களைப் பின்பற்றும் விதத்தில் கொடுகடன் உத்தரவாத கோரல்களை மேற்கொள்ளவதற்காக செலுத்தத்தவறிய கடன்பாட்டாளர்கள் மீது அறவிடல் நடவடிக்கைகளைத் தொடங்கலாம்.

4. நீடிக்கப்பட்ட காலப்பகுதி தொடர்பிலான வட்டியைக் கணிப்பதுடன் இணங்கியொழுகுதல்

ஏதேனும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் (திருத்தப்பட்டவாறான) தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்ட வட்டி

வீதத்திலும் பார்க்க உயர்ந்த வட்டி வீதமொன்றினை எவரேனும் கடன்பாட்டாளர் மீது விதித்திருக்கும் சந்தர்ப்பத்தில் அத்தகைய பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் கடன்பாட்டாளரின் சார்பில் விதிக்கப்பட்ட அத்தகைய வட்டி வீதத்தினை திருத்திக்கொள்வதற்கு ஏற்பாடுகளை உடனடியாகச் செய்தல்வேண்டும்.

5. செயற்படாக் கடன் வகையிலுள்ள கடன்களுக்காக சலுகைகளை வழங்குதல்

நாணயச் சபையின் சுற்றறிக்கையுடன் இசைந்துசெல்லும் விதத்தில், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் செயற்படாக் கடன்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட அனைத்து பணிப்புரைகளுடனும் இணங்கியொழுகுதல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, செயற்படாக் கடன் வகையிலுள்ள கடன்களின் இனிவரும் கடன் தவணைகளுக்காக சலுகைகளை வழங்குவது பற்றி பரிசீலிக்கலாம். மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் செயற்படாக் கடன் வகையிலுள்ள கடன்பாட்டாளர்களுக்காக சலுகைகளை பிற்திகதியிடவோ அத்தகைய கடன்பாட்டாளர்களை செயற்படும் வகைக்குள் மாற்றவோ முடியாது.

6. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இவ்வறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

7. தயவுசெய்து இக்கடிதத்தின் உள்ளடக்கத்தினை உங்கள் வங்கியினது தொடர்பான திணைக்களங்கள்/ கிளைகளின் அலுவலர்களது கவனத்திற்கு கொண்டுவருவதுடன் திட்டங்களின் தொழிற்பாட்டு வினைத்தினைப் பேணுவதில் குறிப்பிடப்பட்ட கால அவகாசம் பூர்த்திசெய்யப்படுவதனையும் உறுதிப்படுத்தவும்.

8. இத்திருத்தங்கள், 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நாணயச் சபை சுற்றறிக்கையின் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும் (அதாவது 2022.07.07).

உங்கள் உண்மையுள்ள
எம் எஸ் கே தர்மவர்த்தன
பணிப்பபாளர்
பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

கடன் சட்ட இசைவுத்தாமதம் - 2022

கடன் திட்டம் (கட்டம்):

| # | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பெயரி: | | |

நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2022இன் 01ஆம் இலக்கம் 2022 சனவரி 28

தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல்

1. **சட்ட ஏற்பாடுகள்**

1.1 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளுக்கமைவாக, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் மீதான இத்தகைய பணிப்புரைகளை இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை இத்தால் விடுக்கின்றது.

2. **பணிப்புரைகளின் குறிக்கோள்கள்**

2.1 முகவர்களிற்கும் மூன்றாம் தரப்பினர்களுக்குமான புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பவியலை பின்பற்றுவதுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளானது இடர்நேர்வு முகாமைத்துவத்திற்குள் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய தொழில்நுட்பவியல் இடர்நேர்வைப் பின்பற்றியது. இத்தகைய பணிப்புரைகள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் மீதான குறைந்தபட்ச ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளை அமைப்பதற்கு உத்தேசிக்கின்றன.

3. **ஏற்புடைத்தன்மை**

3.1 முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குநர்கள் மூலம் செயலாற்றப்படும் தொழிற்பாடுகள் உள்ளடங்கலாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் ஒட்டுமொத்த தொழிற்பாடுகளுக்கு இத்தகைய கட்டமைப்பிலுள்ள தேவைப்பாடுகள் ஏற்புடையாதல் வேண்டும்.

3.2 இத்தகைய பணிப்புரைகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நடைமுறைப்படுத்தும் அளவானது பயன்படுத்தப்படும் தொழில்நுட்பவியல்களின் இடர்நேர்வு மற்றும் சிக்கல்களின் மட்டத்துடன் பொருத்தமாதல் வேண்டும். குறைந்தபட்சத் தேவைப்பாடுகளை தாண்டிச்செல்லுமிடத்து அவை பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும்.

3.3 இத்தகைய பணிப்புரைகளின் ஏற்பாடுகள் 10ஆம் இலக்க பணிப்புரைகளிலுள்ள இடைக்கால ஏற்பாடுகளுக்கு உட்பட்டு 2023.01.01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

4. **தொழில்நுட்பவியல்இடர்நேர்வு ஆளுகை மற்றும் மேற்பார்வை**

4.1 **பணிப்பாளர் சபையின் வகிபாகம்**

அ) தொழில்நுட்பவியல், வியாபார உத்தி மற்றும் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் என்பவற்றின் மூலம் ஏற்படுத்தப்படும் சாத்தியமான இடர்நேர்வுகளுடன் இணைகின்ற தகவல் தொழில்நுட்பவியலையும் சைபர் பாதுகாப்பு உபாயத்தையும் வடிவமைப்பதற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

ஆ) நன்கு எழுதப்பட்ட தகவல் பாதுகாப்பு கொள்கை, பொருத்தமான சபை மேற்பார்வையுடன் ஆற்றல்வாய்ந்ததும் வலுமிக்கதுமான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு, போதுமான தொழில்நுட்பவியல் வளங்கள், விடயம் மற்றும் சுயாதீனமான கணக்காய்வு என்பவற்றைக் கட்டியெழுப்பும் விழிப்புணர்விற்காக நிறுவன ரீதியான ஒருங்கேற்பாடு என்பன உள்ளடங்கலாக சபை மூலம் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகளால் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் சைபர் பாதுகாப்பு உத்தி ஆதரவளிக்கப்பட வேண்டும்.

இ) கிளவுட் பணிகள் மற்றும் நிதியியல் தொழிலநுட்பம் என்பவற்றின் பயன்பாட்டிலிருந்து எழுகின்ற இடர்நேர்வுகள் உள்ளடங்கலாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கு ஏற்படுத்தக் கூடிய சாத்தியமான தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் சைபர் இடர்நேர்வுகளை நோக்காகக் கொண்டு மதிப்பிடப்பட வேண்டிய மூன்றாம் தரப்பினர் மற்றும் முகவர்கள் ஆகியோருடனான ஈடுபாடு.

ஈ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தகவல் பாதுகாப்பிற்கும் தொழில்நுட்பவியல் புத்துயிரளித்தலுக்கும் பொறுப்பாகவுள்ள சபை மட்ட தகவல் பாதுகாப்பு குழுவொன்றை தாபிப்பதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

உ) தொழில்நுட்பவியல் இடர்நேர்வு மற்றும் புத்துயிரளித்தல் பணிப்புரையிலுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதற்கு போதுமான மேற்பார்வை வழிமுறைகளை பணிப்பாளர் சபை தாபித்தல் வேண்டும்

4.2 தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம்

அ) தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் கவனமானது அடையாளப்படுத்தல், பாதுகாப்பு, கண்டறிதல், பதிலிறுப்பு மற்றும் மீட்புத் தொழிற்பாடுகள் என்பனவற்றில் பரந்துபட்டு காணப்படுதல் வேண்டும். தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவமானது போதுமை, செயற்றிறன் வாய்ந்ததும் பொருத்தபாடுமிக்கதுமான கட்டுப்பாடுகளை மதிப்பீடு செய்வதுடன் அதையொத்த கால இடைவெளிகளை கண்காணிக்கின்ற அதேவேளை ஏதேனும் இணங்காமையான பிரதான அவதானிப்புக்கள் தொடர்பில் சபைக்கு தொடர்ந்தும் அறிவித்தல் வேண்டும்.

ஆ) பின்வருகின்ற தொழிற்பாடுகளுடன் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை தாபித்தல்:

i) இடர்நேர்வை அடையாளப்படுத்தல்
முகவர்கள் அல்லது மூன்றாம் தரப்பினர் ஆகியோர் மூலம் பேணப்படுகின்ற அல்லது ஆதரவளிக்கப்படுகின்ற தகவல் முறைமைகள் உள்ளடங்கலாக தகவல் தொழில்நுட்பவியல் சூழலுக்கு ஏற்புடைத்தான அச்சுறுத்தல்களையும் பாதிக்கப்படும் தன்மைகளையும் அடையாளம் காணுதல்.

ii) இடர்நேர்வு மதிப்பீடு
ஒட்டுமொத்த வியாபாரம் மற்றும் தொழிற்பாடுகள் என்பவற்றின் தகவல் தொழில்நுட்பவியல் அச்சுறுத்தல்கள் மற்றும் பாதிக்கப்படும் தன்மைகளின் சாத்தியமான தாக்கம்.'.விளைவுகள் மற்றும் வாய்ப்புக்கள் பற்றிய பகுப்பாய்வொன்றைச் செயலாற்றுதல். இடர்நேர்வு சூழ்நிலைகளின் சாத்தியக்கூறு மற்றும் தாக்கத்தை அளவிடுவதற்கும் தீர்மானிப்பதற்கும் அளவுகோள்களை அமைத்தல்.

iii) இடர்நேர்வைக் கையாளுதல்
தகவல் முறைமைகளின் மிகமுக்கியத்தன்மை மற்றும் இடர்நேர்வு சகிப்புத்தன்மை மட்டம் என்பவற்றுடன் நிலையாக காணப்படும் இடர்நேர்வு தணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு வழிமுறைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தல். தணிப்பு வழிமுறைகளை ஏற்புடைத்தான பின்னர் ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டமொன்றிற்கு இடர்நேர்வுகள் குறைக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

iv) இடர்நேர்வை கண்காணித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடுதல்
அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகளிற்கு எதிராக தகவல் முறைமை கட்டுப்பாடுகளின் வடிவமைப்பையும் தொழிற்பாட்டு வினைத்திறனையும் மதிப்பீடு செய்து கண்காணிப்பதற்கான செயன்முறையொன்றை தாபித்தல்.

4.3. மூத்த முகாமைத்துவத்தின் வகிபாகம்

அ) ஒப்புதலளிக்கப்பட்ட இடர்நேர்வு சகிப்புத்தன்மையுடனும் ஆதரவளிக்கப்பட்ட வினைத்திறனான மேற்பார்வை, அறிக்கையிடல், அதிகரிக்கும் நடைமுறை என்பவற்றுடனும் நிலையாகவுள்ள குறிப்பிட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைக்குள் ஒப்புதலளிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் இடநேர்வு முகாமைத்துவ கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதுடன் ஏதேனும் பாதகமான அபிவிருத்திகளை பணிப்பாளர் சபைக்கு தெரியப்படுத்துதல்.

ஆ) தொழில்நுட்பவியல் பின்பற்றுகை, தகவல் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு, வெளிகளிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் திரட்சி என்பவை தொடர்பிலான பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் தகவல் சபை மட்ட தகவல் பாதுகாப்பு குழுவிற்கு ஆதரவளிப்பதற்கும் முதன்மை நிறைவேற்று அதிகாரி மூலம் தலைமைப்படுத்தப்படும் முகாமைத்துவ மட்ட தகவல் பாதுகாப்பு குழுவொன்றை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கொண்டிருத்தல் வேண்டும். முகாமைத்துவ மட்ட தகவல் பாதுகாப்பு குழுவின் வகிபாங்களும் பொறுப்புக்களும் இணைப்பு Iஇல் வழங்கப்படுகின்றன.

இ) தொடர்ந்து செல்லும் அடிப்படையொன்றில் நிறுவனத்திற்குள்ளேயும் மூன்றாம் தரப்பினர் வெளியிலிருந்து பணிகளை பெற்றுக்கொள்ளும் முகவராண்மைக்குள்ளேயும் சைபரின் தூய்மை பேணப்படுகின்றது என்பதை உறுதிசெய்தல். அலுவலர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் மூலம் காலமுறையாக மேற்கொள்ளப்படும் வகிபாகத்தை அடிப்படையாகக் கொண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தப்பட வேண்டும்.

ஈ) நேரடி அணுகல், தர்க்க முறையிலான அணுகல், மாற்ற முகாமைத்துவம், இணைப்பு முகாமைத்துவம் மற்றும் கட்டமைப்பு முகாமைத்துவம் பல்வேறு தகவல் பாதுகாப்பு நியமங்களில்/ கட்டமைப்புக்களில் வெளிப்படுத்தலுக்கு அமைவாக சிறந்த நடத்தைகள் என்பவற்றுடன் தொடர்புடைய பொருத்தமான கட்டுப்பாடுகளை தாபிப்பதுடன் தகவல் முறைமைகளின் ஒட்டுமொத்த வாழ்க்கைச் சுழற்சியையும் அத்தகைய கட்டுப்பாடுகள் கருத்திற்கொள்ள வேண்டும்.

உ) தகவல் பாதுகாப்பு கட்டுப்பாடுகளின் வினைத்திறனையும் பொருத்தப்பாட்டினையும் மீளாய்வு செய்வதுடன் தேவையான நிவாரண செயற்றிட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்தல

4.4 முதன்மைத் தகவல் பாதுகாப்பு அலுவலர்

அ) தகவல் பாதுகாப்பின் தேவைப்பாடுகள் பற்றிய தலைமைத்துவத்தை வழங்குவதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் முதன்மைத் தகவல் பாதுகாப்பு அலுவலரொருவரை நியமித்தல் வேண்டும். பின்வருகின்றவாறான முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் முக்கிய பொறுப்புக்கள்:

i) தகவல் பாதுகாப்பு உத்தியை உருவாக்குதல், முகாமை செய்தல் மற்றும் தொழிற்படுத்தல்.

ii) தகவல் பாதுகாப்பு நடத்தைகளை தொடர்ச்சியாக கண்காணித்து மதீப்பீடு செய்தல்.

iii) தகவல் பாதுகாப்பு கணக்காய்வு மற்றும் இடர்நேர்வு மதிப்பீடுகளை செயலாற்றுதல்.

iv) தகவல் பாதுகாப்பு ஒழுங்குமுறைப்படுத்தலுடன் நிறுவனத்தை இணங்குவித்தல்.

v) வியாபார தொடர்ச்சித் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.

vi) தகவல் பாதுகாப்பு இடர்நேர்வுகள் மற்றும் உத்தி என்பவற்றுடன் தொடர்புடைய பயிற்சியும் விழிப்புணர்வும்.

vii) தகவல் பாதுகாப்பு வரவுசெலவுத்திட்டத்தை முகாமை செய்தல் அத்துடன்

viii) தகவல் பாதுகாப்பு பற்றி பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுதல்.

ஆ) முதன்மைத் தகவல் பாதுகாப்பு அலுவலர் என்பவர் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் மூத்த முகாமைத்துவக் குழுவின் நிறைவேற்று அலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

இ) முதன்மை நிறைவேற்று அதிகாரி ஒருவருக்கோ அல்லது முதன்மை நிறைவேற்று அதிகாரியை அறிக்கையிடும் இறுதி மட்டமாகக் கொண்ட பொருத்தமான அறிக்கையிடும் மட்டத்திற்கோ முதன்மைத் தகவல் பாதுகாப்பு அலுவலர் அறிக்கையிடுதல் வேண்டும்.

ஈ) தகவல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மிதமாக நடைமுறைப்படுத்துவதற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் தொழிற்பாடுகள் என்பவற்றுடன் முதன்மைத் தகவல் பாதுகாப்பு அலுவலர் ஒருங்கிணைய வேண்டும்.

உ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியால் எதிர்நோக்கப்படும் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் பாதுகாப்பு இடர்நேர்வுகளின் அளவு சிறப்பு முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரொருவரை நியமிப்பதனை தேவைப்படுத்தவில்லை என்ற தீர்மானத்தினைக் பணிப்பாளர் சபை நடைமுறைப்படுத்துமிடத்து, முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலராக சமகாலத்தில் தொழிற்படுதவற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தற்போதுள்ள மூத்த முகாமைத்துவக் குழுமத்திலிருந்து அலுவலரொருவரை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நியமிக்கலாம். எவ்வாறெனினும், அத்தகைய அலுவலரொருவர் முதன்மை தகவல் அலுவலர், முதன்மை உள்ளக கணக்காளர், முதன்மை இடர்நேர்வு அலுவலர் அல்லது இணங்குவிப்பு அலுவலர் போன்ற பதவிகள் உட்பட அவர்களின் பொறுப்புக்களுக்கு இடர்நேர்வை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் தொழிற்பாட்டை தொழிற்படுத்தல் ஆகாது.

4.5 உள்ளகக் கணக்காய்வு

இத்தகைய பணிப்புரைகளிலுள்ள தேவைப்பாடுகளுடன் குறைந்தபட்சம் ஆண்டு ரீதியில் உள்ளகக் கணக்காய்வினூடாக இணங்குகின்றது என்பதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதி செய்ய வேண்டும்.

5. தகவல் மற்றும் தகவல் முறைமை பாதுகாப்பு

5.1 வாடிக்கையாளர் தரவுகளின் நியாயமானதும் ஒழுக்கவியல் சார்ந்ததுமான பயன்பாடு

அ) இத்தகைய தரவுகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பயன்படுத்துவதற்கு நியாயமாக எதிர்பார்க்கக்கூடிய வழிகளில் மாத்திரம் வாடிக்கையாளர் தரவுகள் பயன்படுத்தக்கூடும் என்பதை உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் உறுதிசெய்ய வேண்டும்.

ஆ) அனைத்து நேரங்களிலும் வாடிக்கையாளர் தரவுகள் நியாயமானதும் ஒழுக்கவியல் சார்ந்ததுமாக பயன்படுத்தப்படுகின்றது என்பதை உறுதிசெய்வதற்கான வினைத்திறனான கொள்கைகளையும் நடைமுறைகளையும் பணிப்பாளர் சபை நடைமுறைப்படுத்தல் வேண்டும். மேலும், அத்தகைய தரவுகள் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டாலொழிய அவற்றை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் முடிவுறுத்தலாகாது.

இ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்டு அதேயொத்த ஒழுங்குவிதிகளுக்கு அவை உட்பட்டிருப்பின்,வாடிக்கையாளர் தரவுகளின் நியாயமானதும் ஒழுக்கவியல் சார்ந்ததுமாக பயன்படுத்தல் தொடர்பில் எதிர்பார்ப்புக்கள் மூலம் பின்பற்றப்படும் நிதியியல் தொழில்நுட்பவியல் உள்ளடங்கலாக வெளியிலிருந்தான விற்பனையாளர்களை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதிசெய்தல் வேண்டும்.

5.2 தகவல்களை வகைப்படுத்தி பட்டியலிடல்

அ) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு என்பவற்றின் விதந்துரைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு பணிப்பாளர் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தகவல் வகைப்படுத்தல் கொள்கையொன்றை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ) இலத்திரனியல் ரீதியாக பேணப்படும் அனைத்துத் தரவுகளும் தகவல் பாதுகாப்பு மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பேணப்பட்டு தகவல் வகைப்படுத்தல் கொள்கைக்கு அமைவாக ஒதுக்கப்பட்ட வகைப்படுத்தலுடன் பட்டியலிடல் வேண்டும்.

5.3 மிகமுக்கியமான தகவல் முறைமைகளை அடையாளம் காணுதல்

அ) அதன் வாடிக்கையாளர்கள் அல்லது இணைதரப்பினர்கள், வியாபாரத் தொழிற்பாடுகள், நிதியியல் நிலைமை, நன்மதிப்பு அல்லது ஏற்புடைத்தான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்குவித்தல் போன்வற்றிற்கான நிதியியல் பணிகளின் நிதியியல் நிறுவன ஏற்பாடுகளை முறைமையின் தோல்வி பாதிக்குமிடத்து, மிக முக்கியமான உரிமம்பெற்ற நிதிக்கம்பனி நடவடிக்கைகள் அல்லது கொடுப்பனவு பணிகளின் ஏற்பாடுகளுக்கு ஆதரவளிக்கின்ற ஏதேனும் தகவல் முறைமையை மிகமுக்கியமான தகவல் தொழில்நுட்பவியல் என்பது குறிக்கின்றது.

ஆ) நிதியியல் வியாபாரம் இடையூறில்லமால் கொண்டு நடாத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு கொடுக்கல்வாங்கல் நடைமுறை முறைமைகள், பொது நாளேடு முறைமைகள், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள், விநியோக மார்க்கங்கள், பணம் தூயதாக்கலுக்கெதிராதல்/உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள் நடைமுறைகள் என்பவற்றிற்காக பயன்படுத்தப்படும் முறைமைகள், மற்றும் ஏதேனும் வேறு முறைமை என்பவற்றைக் மிகமுக்கியமான தகவல் முறைமையொன்று கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் வரையறுக்கப்படல் ஆகாது. மேற்குறிப்பிட்டவற்றிலிருந்து நீக்கப்படுகின்ற ஏதேனும் தகவல் முறைமையும் உள்ளக ரீதியாக தாபிக்கப்பட்ட கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அனைத்து அத்தகைய விலக்கல்களும் ஆகக்குறைந்தது ஆண்டிற்கு இரு தடவைகள் மீளாய்வுசெய்யப்பட வேண்டும்.

இ) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு என்பவற்றின் விதந்துரைப்புக்கள் தொடர்பிலான முகமுக்கியமான தகவல் முறைமையின் வரைவிலக்கணத்திற்குள் அமைகின்ற தகவல் முறைமைகளை பணிப்பாளர் சபை அடையாளங்காணுதல் வேண்டும்.

5.4 பயன்படுத்துநர் அணுகு முகாமைத்துவம்

அ) மிகமுக்கியமான தகவல் முறைமைகளுக்கும் வாடிக்கையாளர் தரவுகளை வெளிப்படுத்தும் தகவல் முறைமைகளுக்கும் பயன்படுத்துநர் அணுகு கட்டுப்பாடு ஏற்புடையாதல் வேண்டும்.

ஆ) இரகசியமான வாடிக்கையாளர் அல்லாதவர்களின் தரவுகளை வெளிப்படுத்தும் மிகமுக்கியமான தகவல் முறைமைகளுக்காக மிகமுக்கியமான தகவல் முறைமையுடன் ஒத்தவாறான பயன்படுத்துநர் கட்டுப்பாடு தேவைப்பாடுகளை பிரயோகிப்பதன் அவசியம் பற்றி பணிப்பாளர் சபையானது ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்புக் குழு என்பனவற்றின் ஆலோசனையுடன் தீர்மானத்தினை மேற்கொள்ள வேண்டும்.

இ) சிறப்புரிமையை பெற்ற பயன்படுத்துநர்கள் உள்ளடங்கலாக அனைத்து பயன்படுத்துநர்களையும் முகாமை செய்வதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் தொழில்துறை நியம பயன்படுத்துநர் அணுகலொன்றையும் அடையாள முகாமைத்துவ முறைமைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

ஈ) தொழில்துறை நியம பயன்படுத்துநர் அணுகு மற்றும் அடையாள முகாமைத்துவ முறைமை (முறைமைகள்) என்பன சாத்தியமற்றதாகவோ அல்லது பொருத்தமற்றதாகவோ காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில், சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு என்பவற்றின் விதந்துரைப்புக்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்குட்பட்டு தற்போதுள்ள ஏதேனும் தகவல் முறைமைக்காக பொருத்தமான கட்டுப்பாடொன்றை நடைமுறைப்படுத்தும் விதத்தில் பதிலீட்டுக் கட்டுப்பாடுகளை உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் பயன்படுத்த முடியும்.

உ) சிறப்புரிமையை பெற்ற பயன்படுத்துநர்கள் அணுகுவசதியை "கொண்டிருப்பது அவசியம்" என்ற அடிப்படையில் மாத்திரமே வழங்க வேண்டும் என்பதுடன் உயர்ந்த மட்ட அணுகு தளம், அத்தகைய அணுகுவசதி தேவைப்படும் போது மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்திற்கு வழங்கப்படல் வேண்டும். உரிமம்பெற்ற நிதிக்கம்பனியின் தொடர்ந்து மேற்கொள்ளும் கண்காணிப்பின் ஒரு பகுதியாக இத்தகைய கணக்குகளின் நடவடிக்கைகள் நுழைந்து மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

ஊ) பின்வருகின்ற கால இடைவெளிகளுக்கமைவாக உரிமம்பெற்ற கம்பனிகள் பயன்படுத்துநர் அணுகு மீளாய்வுகளை நடாத்த வேண்டும்.

i) முகமுக்கியமான தகவல் முறைமைகளுக்காக ஆகக்குறைந்தது மாதாந்த அடிப்படையில்.

ii) வாடிக்கையாளர் தரவுகளிற்கும் இரகசியமான வாடிக்கையாளர் அல்லாதவர் தரவுகளிற்கும் வெளிப்படுத்தப்படும் முகமுக்கியமற்ற தகவல் முறைமைகளுக்காக ஆகக்குறைந்தது காலாண்டு அடிப்படையில்.

iii) வேறு அனைத்து தகவல் முறைமைகளுக்காக ஆகக்குறைந்தது வருடாந்த அடிப்படையில்.

iv) இணைக்கப்பட்ட கணக்குகளின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கிணங்க பொருத்தமான முறையியலொன்றினைப் பயன்படுத்தி இலத்திரனியல் விநியோக மார்க்கங்கள் உட்பட உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் ஏதேனும் தகவல் முறைமையினைப் பயன்படுத்துவதற்கு பதிவுசெய்யப்பட்டுள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளைப் பொறுத்தவரை குறைந்தபட்சம் ஆண்டிற்கு இரு தடவை என்ற அடிப்படையில்.

எ) தகவல் பாதுகாப்பு குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்டதற்கு அமைவாக பயன்படுத்துநர் அணுகு சிறப்புரிமை மீளாய்வுகளை நடாத்துவதற்கு பொருத்தமான முறையியலை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பின்பற்றுதல் வேண்டும்.

ஏ) பயன்படுத்துநர் அணுகு சிறப்புரிமை மீளாய்வுகளை நடாத்தும் போது, மூன்றாம் தரப்பு பணி வழங்குநர்கள் போன்ற உள்ளக மற்றும் வெளியக பயன்படுத்துநர்களை அடையாளங்காணுதல், உறுதிப்படுத்தல் மற்றும் அங்கீகரித்தல் என்பவற்றை மீளாய்வு செய்வதற்கான பொருத்தமான பொறிமுறையொன்றை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

5.5 கணினிப் பாதுகாப்பு மற்றும் பயன்படுத்துநர் நடவடிக்கை பதிவு முகாமைத்துவம்

அ) கணினிப் பாதுகாப்பையும் மிகமுக்கியமான தகவல் முறைமைகள் மற்றும் வாடிக்கையாளர் தரவுத் தகவல் முறைமைகள் என்பவற்றின் பயன்படுத்துநர் நடவடிக்கைப் பதிவையும் முகாமை செய்வதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பதிவு முகாமைத்துவம் ஒன்றை நடைமுறைப்படுத்தல் வேண்டும். சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் தற்றுணிபில் இத்தகைய கொள்கை வேறு தகவல் முறைமைகளுக்கு நீடிக்கப்படலாம்.

ஆ) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு என்பவற்றின் விதந்துரைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு பணிப்பாளர் சபையால் கொள்கை ஒப்புதலளிக்கப்பட வேண்டும்.

இ) கொள்கையானது பேணப்படவேண்டிய பதிவுகளின் வகைகள், பிடித்துவைத்திருக்கும் காலம், மீளாய்வின் கால இடைவெளி, மீளாய்வு முறை மற்றும் பயன்படுத்துவதற்கான கருவிகள், சம்பவத்தினை அடையாளம் காணுதல் மற்றும் பதிலிறுத்தல் மற்றும் பதிவுகளினைப் பேணுதல் மற்றும் மீளாய்வு செய்வதற்கான பொறுப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

ஈ) கணனி பாதுகாப்பு பதிவானது பாதுகாப்பு மென்பொருள், தொழிற்பாட்டு முறைமைகள் மற்றும் பிரயோகங்களால் உருவாக்கப்பட்ட பதிவுகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். பேணப்படுகின்ற பாதுகாப்பு பதிவானது தகவல் பாதுகாப்பு தொடர்பான எதிர்பாரத நிகழ்வுகளை அடையாளம் காணவும் புலனாய்வு செய்யவும் போதுமானதாக இருத்தல் வேண்டும்.

உ) சிறப்புரிமையை பெற்ற பயன்படுத்துநர்களின் பதிவுகளுக்கு மிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் பொருத்தமான கருவிகளையும் முறைகளையும் கொண்டு அண்மைய அதே நேர அடிப்படையொன்றில் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

5.6 தரவு மறைக் குறியாக்கம்

5.6.1 வாடிக்கையாளர் தரவு குறியாக்கம்

அ) வாடிக்கையாளர் தரவு குறியாக்கம் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஆ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குநர்கள் என்பவற்றுடன் பேணப்படும் வாடிக்கையாளர் தரவு குறியாக்கம் ஏற்புடையாதல் வேண்டும்.

இ) தரவு குறியாக்கத்தின் மட்டங்கள்

i) எஞ்சியுள்ள தரவுக் குறியாக்கம்
வாடிக்கையாளர் தரவானது இறுதியில் தரவுத்தள குறியாக்கம் அல்லது கோப்பு மட்ட மறைக் குறியாக்கம் என்பவற்றிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

ii) இடைப்போக்கிலுள்ள தரவு குறியாக்கம்
வாடிக்கையாளர் தரவைக் கொண்ட கோப்பு மாற்றப்படும் போதெல்லாம், இது கோப்பு மட்டத்தில் குறியீடாக்கப்படல் வேண்டும்.

iii) முடிவுப் புள்ளிச் சாதனங்கள் மற்றும் அகற்றத்தக்க சாதனங்களுக்கான முழுவட்டு குறிமுறையாக்கம்
மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் மற்றும் முகவர்களின் முடிவுப்புள்ளிச் சாதனங்களை உள்ளடக்கி ஒன்றில் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் வாடிக்கையாளர் தரவினை சேமிக்கின்ற அத்தகைய சாதனங்கள் மற்றும் அகற்றத்தக்க சாதனங்கள் முழுமையான வட்டு குறியாக்கத்திற்கு உட்பட்டனவாகும்.

ஈ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் தொழில்துறை நியம குறியாக்க முறைகளை பயன்படுத்த வேண்டும். அத்தகைய முறைகளின் தெரிவானது சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு என்பவற்றின் விதந்துரைப்புகள் தொடர்பிலான பணிப்பாளர் சபையின் ஒப்புதலிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

உ) தொழில்துறை நியம குறியாக்க முறைமைகள் சாத்தியமற்றோ அல்லது பொருத்தமற்றோ காணப்படும் போது, சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு என்பவற்றின் விதந்துரைப்புக்கள் தொடர்பிலான பணிப்பாளர் சபையின் ஒப்புதலிற்கு உட்பட்டு வாடிக்கையாளர் பாதுகாப்பு தரவை பாதுகாப்பதற்கு மாற்றுக் கட்டுப்பாடுகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பயன்படுத்தலாம்.

5.6.2 இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத தரவு குறியாக்கம்

குறியாக்கத் தேவைப்பாடுகள், தரவுக் கசிவு அல்லது சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறான குறியாக்கத்தினைத் தடுக்கக்கூடிய வேறேதேனும் மோசமான தகவல் பாதுகாப்பு சம்பவங்களுக்கு உட்பட்டிருக்குமாயின், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கு மிகச் சொற்பமான மோசமான தாக்கத்தினை மட்டுமே ஏற்படுத்தக்கூடிய இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத தரவு முறைமைகள் தவிர, இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத தரவுகளுக்கும் பிரயோகித்தல் வேண்டும்.

5.7 பாதுகாப்புத் தொழிற்பாடுகள் மையம்

இலத்திரனியல் விநியோக மார்க்கங்களை வழங்குகின்ற அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் இணைப்பு ஐஐஇல் உள்ள குறைந்தபட்ச தேவைப்பாடுகளுக்கு அமைவாக பாதுகாப்புத் தொழிற்பாடுகள் மையத்தை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

5.8 தரவு இழப்பு தடுப்பு

அ) தரவு கசிவுகளின் இடர்நேர்வைக் குறைப்பதற்கு தொழில்துறை நியம தரவு இழப்பு தடுப்பு கருவிகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நடைமுறைப்படுத்தல் வேண்டும். நடைமுறைப்படுத்தலின் நோக்கெல்லையானது தரவுகளை வெளிப்படுத்தவதற்கு உரிமம்பெற்ற நிதிக்கம்பனி, ஏதேனும் மூன்றாம தரப்பு பணி வழங்குநர்கள் மற்றும் முகவர்கள் அனைத்தையும் உள்ளடக்க வேண்டும்.

ஆ) மூன்றாம் தரப்பு பணி வழங்குநர்களைப் பொறுத்தவரையில், உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளால் குறித்துரைக்கப்படும் குறைந்தபட்ச தேவைப்பாடுகளுக்கமைவாக தரவு இழப்பு தடுப்பை நடைமுறைப்படுத்துவதற்கு உரிமம்பெற்ற நிதிக்கள் அவற்றை அனுமதிக்கலாம்.

இ) போதுமான தரவு இழப்பு தடுப்பு வழிமுறைகள் உள்ளனவா என்பதை உறுதி செய்வதற்கு மூன்றாம் தரப்பு பணி வழங்குநர்கள் மற்றும் முகவர்களால் மேற்கொள்ளப்படும் அத்தகைய நடைமுறைகளின் மீளாய்வை ஆகக்குறைந்தது ஆண்டுரீதியாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நடாத்தல் வேண்டும்.

ஈ) தொழில்துறை நியம தரவு இழப்பு தடுப்புக் கருவிகள் சாத்தியமற்றதாகவும் பொருத்தமற்றதாகவும் காணப்படும் போது, சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு என்பவற்றின் விதந்துரைப்புக்களை அடிப்படையாகக் கொண்ட பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்குட்பட்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வாடிக்கையாளர் தரவை பாதுகாப்பதற்கு மாற்றுக் கட்டுப்பாடுகளை பயன்படுத்த முடியும்.

5.9 தகவல் பாதுகாப்பு நிகழ்வுப் பதில் மற்றும் மீட்பு

5.9.1 தகவல் பதில் திட்டம்.

அ) நிகழ்வு அதிகரிப்பிற்கான நடைமுறைகள், தீர்வுகாணல், மீட்பு மற்றும் உள்ளக மற்றும் வெளிவாரி ஆர்வலர்களுடன் தொடர்புரையாடல் போன்றவை உள்ளடங்கலாக பணிப்பாளர் சபையால் ஒப்புதலளிக்கப்படும் தகவல் பதில் திட்டத்தை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் இற்றைபடுத்திக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ) சைபர் பாதுகாப்பு நிகழ்வுகள் தவிர்ந்த தகவல் பாதுகாப்பு நிகழ்வுகளின் பொதுவாக அறியப்பட்ட வகைகளை கையாள்வதற்கு குறித்துரைக்கப்பட்ட நடைமுறைகளை தகவல் பதில் திட்டம் கொண்டிருத்தல் வேண்டும்.

5.9.2 நிகழ்வுப் பதில் மற்றும் மீட்பு பரீட்சிப்பு

தகவல் பதில் மற்றும் மீட்பு இயலுமைகளானது, உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் நிகழ்வு பதில் ஆயத்த நிலையை தீர்மானிப்பதற்கு இயலுமானவரை உண்மை வாழ்வுடன் நெருங்கிய சூழ்நிலைகளைப் பயன்படுத்தி ஆகக்குறைந்தது ஆண்டுதோறும் பரீட்சிக்கப்படல் வேண்டும். தகவல் பாதுகாப்புக் குழு மூலம் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவினூடாக பணிப்பாளர் சபைக்கு அத்தகைய பரீட்சிப்பின் பெறுபேறுகளை அறிக்கையிடுதல் வேண்டும்.

5.10 தகவல் பாதுகாப்பு பரீட்சிப்பு

5.10.1 நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்பு பரீட்சிப்பு

அ) நோக்கெல்லை

i) மிகமுக்கியமான தகவல் முறைமைகளும் வாடிக்கையாளருக்கு வெளிப்படுத்தப்பட்ட தகவல் முறைமைகளும் நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்பு பரீட்சிப்புக்களுக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். பாதிக்கப்படக்கூடிய வாடிக்கையாளர் தரவிற்கு வெளிப்படுத்தப்படும் ஏதேனும் முகமுக்கியமான தகவல் முறைமையையோ அல்லது ஏதேனும் தகவல் முறைமையையோ சாத்தியமாக்கக்கூடிய ஏதேனும் வேறு தகவல் முறைமையும் நடைமுறைப்படுத்தலுக்கு பின்னரான தகவல் பாதுகாப்பு பரீட்சிப்புக்களுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

ii) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு என்பவற்றின் விதந்துரைப்புக்கள் மீதான இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத தரவிற்கு வெளிப்படுத்தப்படும் மிகமுக்கியமல்லா தகவல் முறைமைகளிற்காக நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்பை நடாத்துவுதற்கான தேவையை பணிப்பாளர் சபை தீர்மனித்தல் வேண்டும்.

iii) ஆரம்ப நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரும் மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னரும் நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்பு பரீட்சிப்புக்களை நடாத்துதல் வேண்டும். பணிப்பாளர் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளியேற்றக் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு, நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்பு பரீட்சிப்புக்களிலிருந்து சிறிதளவான மாற்றங்களை நீக்கக்கூடும்.

ஆ) வழங்கப்பட்ட நடைமுறைப்படுத்தலுக்கு ஏற்புடைத்தவாறு பின்வருகின்ற நடைமுறைப்படுத்தலுக்கு பின்னரான பரிசோனைகளின் வகைகள் கொண்டு நடாத்தப்பட வேண்டும்.

i) ஏதேனும் கேடான அல்லது பாதுகாப்பற்ற கோவையை தீர்மானிப்பதற்கான நிலையான பிரயோக பாதுகாப்பு பரீட்சிப்பு அல்லது மூலக் கோவை மீளாய்வுகள்

ii) தாக்குபவர் பூரணப்படுத்தக்கூடிய பிரயோக மட்ட பாதுகாப்பு பரீட்சிப்பை தீர்மானிப்பதற்கு இயக்கவாற்றல் பிரயோக பாதுகாப்பு பரீட்சிப்பு

iii) உள்ளக கடுமையாக்கமான கொள்கைகளுடன் இணங்குவதை உறுதிசெய்வதற்கு கணனிப்படுத்தல் மற்றும் வலையமைப்பு உட்கட்டமைப்பு மீதான தரத்தை உறுதிப்படுத்தும் பரீட்சிப்பு

iv) கணனிப்படுத்தல் மற்றும் வலையமைப்பு உட்கட்டமைப்பிலுள்ள பாதிக்கப்படும் தன்மைகளை இனங்காண்பதற்கு உட்கட்டமைப்பு பாதிக்கப்படும் தன்மை மதிப்பீடு.

இ) தகவல் முறைமையை உருவாக்குதல் மற்றும்/அல்லது நடைமுறைப்படுத்தல் என்பவற்றிற்காக குழுவிற்கு பொறுப்பாவதில் இருந்து சுயாதீனமொன்றால் நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான பரீட்சிப்புக்கள் நடாத்தப்படல் வேண்டும்.

ஈ) 5.10.1(ஆ) இற்கு அமைவாக நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான பரீட்சிப்புகளை நடாத்துவது சாத்தியமற்றுக் காணப்பட்டால் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் பொருத்தமான மாற்று பாதுகாப்பு மதிப்பீட்டு வழிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

உ) வெளிவாரி விற்பனையாளர்களால் தகவல் முறைமைகள் வழங்கப்படும் சூழ்நிலையில் 5.10.1(ஆ)(i)இற்கு மாற்று வழியொன்றாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனி மற்றும் தகவல் முறைமை வழங்குநர் ஆகிய இருவராலும் பரஸ்பரமாக ஏற்றுக்கொள்ளப்படும் மூன்றாம் தரப்பினரொருவரால் வழங்கப்படும் உத்தரவாதத்தின் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் நம்பியிருக்கலாம்.

ஊ) நடைமுறைப்படுத்தலுக்கு பின்னரான தொர்புடைய பரீட்சிப்புக்களுக்கு பின்னர் மூலக் குறியீடு பாதுகாப்பு சூழலுக்கு மாற்றப்பட்ட போது கேடான குறியீடை உறுதிசெய்வதற்கு தொழில்துறை நியம கட்டுப்பாடுகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

5.10.2 பாதிக்கப்படும் தன்மைகளை மதிப்பிடல்

அ) தகவல் தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்பு மற்றும் முறைமை மாற்றங்கள் என்பவற்றுக்கான மாற்றம் ஏற்படும் போது, வாடிக்கையாளர் தரவுகளை எடுத்துக்காட்டும் மிகமுக்கியமான தகவல் முறைமைகள் மற்றும் தகவல் முறைமைகள் என்பன குறைந்தபட்சம் ஆண்டிற்கு இரு தடவையாவது பாதிக்கப்படும் தன்மை பற்றிய மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

ஆ) உட்கட்டமைப்பு மற்றும் பிரயோக பாதிக்கப்படும் தன்மைகள் ஆகிய இரண்டிலும் பாதிக்கப்படும் தன்மை மதிப்பீடுகள் கவனம் செலுத்த வேண்டும்.

இ) உற்பத்திச் சூழல்களில் பாதிக்கப்படும் தன்மை மதிப்பீடுகள் செயலாற்றப்பட வேண்டும்.

ஈ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் உள்ளக தகவல் பாதுகாப்பு அலுவலர் அல்லது வெளியக நிபுணர்கள் என்பவற்றால் பாதிக்கப்படும் தன்மை மதிப்பீடுகளை செயலாற்றப்பட வேண்டும்.

உ) அடையாளங்காணப்பட்ட பாதிக்கப்படும் தன்மைகள் தகவல் பாதுகாப்பு குழுவினால் குறித்த காலப்பகுதிக்குள் திருத்தப்பட வேண்டும்.

5.10.3 ஊடுருவல் பரீட்சிப்பு

அ) பின்வருவனவற்றை தீர்மானிப்பதற்கு சுயாதீன வெளிவாரி நிபுணரொருவரை பயன்படுத்தி ஊடுருவல் பரீட்சிப்பைஉரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நடாத்துதல் வேண்டும்.

i) உலகின் உண்மையான தாக்குதல்களை தாங்கிக்கொள்வதற்கு பரீட்சிப்பு செய்யப்படும் தகவல் முறைமைகளின் இயலுமை.

ii) பரீட்சிப்பு செய்யப்பட்ட தகவல் முறைமைகளை வெற்றிகரமாக இணங்கச்செய்வதற்கு தாக்குபவர் நடைமுறைப்படுத்த வேண்டிய நுட்பம் மற்றும் நிலைத்தன்மையின் போதுமான மட்டம்.

iii) அத்தகைய தாக்குதல்களை கண்டறியவும் பொருத்தமான பதிலிறுப்பிற்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தகவல் பாதுகாப்பு, தொழிற்பாடு மற்றும் தலைமைத்துவ குழுக்களின் இயலாற்றல்.

iv) எதிர்காலத்தில் அத்தகைய அச்சுறுத்தல்களை தணிப்பதற்கு தேவைப்படும் ஏதேனும் சட்டங்கள்.

ஆ) வாடிக்கையாளர் தரவுகளை வெளிப்படுத்தும் மிகமுக்கியமான தகவல் முறைமைகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோருடனான வாடிக்கையாளர் தரவுக் களஞ்சியம் என்பன ஆகக்குறைந்தது சுயாதீனமான வெளிவாரி ஊடுருவல் பரீட்சிப்பு நிபுணர்களின் ஊடுருவல் பரீட்சிப்புக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். ஊடுருவல் பரீட்சிப்பின் நடாத்தல் தொடர்பான எடுத்துக்காட்டும் வழிகாட்டல் ஒன்று இணைப்பு-IIIஇல் வழங்கப்பட்டுள்ளது.

இ) முதிர்வடைகின்றதும் தமது வியாபார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கின்ற கடுமையான தொழில்நுட்பவியலைக் கொண்டதுமான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் ஊடுருவல் பரீட்சிப்பின் நீடிப்பொன்றாக எதிரிச் செயற்பாடுகளை மதிப்பீடு செய்யும்குழு நடவடிக்கைகளை நடாத்தக்கூடும். எதிரிச் செயற்பாடுகளை மதிப்பீடு செய்யும்குழு நடவடிக்கைகளை எவ்வாறு நடாத்த வேண்டும் என்பது பற்றிய எடுத்துக் காட்டும் வழிகாட்டல் ஒன்று இணைப்பு-IV இல் வழங்கப்படுகின்றன.

5.11 தகவல் பாதுகாப்பு பயிற்சி மற்றும் சான்றுபடுத்தல்

5.11.1 பணிப்பாளர் சபைக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு

அ) பின்வரும் தேவைப்பாடுகளிற்கமைவாக, பணிப்பாளா சபைக்கான தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான அனைத்தையுமுள்ளடக்கிய வருடாந்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்றை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உள்ளடக்குதல் வேண்டும்.

i) அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள் யாதெனில், தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் நடைமுறைகளின் போதுமை மற்றும் காத்திரமான தன்மைகள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் காத்திரமான மேற்பார்வையினை கொண்டிருப்பதனை இயலுமைப்படுத்துவதேயாகும்.

ii) இவ்வொழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிலுள்ள தேவைப்பாடுகளின் நியதிகளுக்கமைவாக பணிப்பாளர் சபையினதும் பணிப்பாளர் குழுவினதும் பொறுப்புக்கள் அத்துடன் தகவல் பாதுகாப்பு முறைமையுடனும் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துடனும் தொடர்புபட்ட வேறு ஏற்புடைத்தான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்றவையும் இத்தகைய நிகழ்ச்சித்திட்டம் ஊடாக உள்ளடக்கப்படல் வேண்டும்.

iii) இப்பயிற்சியானது ஆகக்குறைந்தது ஆண்டு தோறும் கட்டமைக்கப்படும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் அல்லது ஒவ்வொரு வருடமும் தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவ நிபுணர்கள் மூலம் வழங்கப்படும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட விழிப்புணர்வு தொடர்களை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iv) மேற்குறிப்பிட்ட பயிற்சி மற்றும் விழிப்புணர்வுத் திட்டம் மீதான தேவைப்பாடுகள் பணிப்பாளர் சபையுடன் இணங்கப்படுகின்றதா என்பதை சபைச் செயலாளர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

5.11.2 அலுவலர்களுக்கான தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி மற்றும் சான்றுபடுத்தல் தேவைப்பாடுகள்

அ) உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள், உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளின் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் மிக முக்கியமான தகவல் முறைமைகளுக்கு உள்ளாகின்ற அல்லது உள்ளாகக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதனையும் அத்துடன் வாடிக்கையாளர் தரவு அல்லது இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத் தரவுகளில் பயிற்சியளிக்கப்படுவதனையும் பின்வரும் தேவைப்பாடுகளுக்கு இணங்க தகவல் பாதுகாப்பில் சான்றுபடுத்தப்படுவதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

i) தகவல் பாதுகாப்புக் கொள்கை மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் நடைமுறைகள் என்பனவற்றின் அடிப்படையில் தேவைப்படுத்தப்பட்ட ஆட்கள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தினை நிறைவுசெய்தல் வேண்டும்.

ii) 5.11.2(அ)(i) இன்படி, அத்தகைய நிகழ்ச்சித்திட்டமானது பயிற்சிபெறுபவரின் தகவல் பாதுகாப்புப் பொறுப்புக்களுக்கு ஏற்ற விதத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் நிதிக்கம்பனியின் தகவல் பாதுகாப்புக் கொள்கைகள் எப்பொழுதெல்லாம் இற்றைப்படுத்தப்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் இவையும் கிரமமான முறையில் இற்றைப்படுத்தப்படல் வேண்டும்.

iii) தேவைப்படுத்தப்பட்ட ஆட்கள் தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சியை அடிப்படையாகக் கொண்ட உள்ளகச் சான்றிதழ் வழங்கும் பரீட்சையை குறைந்தபட்சம் ஆண்டு தோறுமாவது நிறைவுசெய்தல் வேண்டும்.

ஆ) முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் போதுமானளவு விழிப்புணர்வு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுமிடத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் பணிப்பாளர் சபை அத்தகைய முகவர்கள் அல்லது மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரின் அலுவலர்களுக்கு 5.11.2(அ)(i) இன் தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கலாம்.

6. தகவல் முறைமையின் கிடைப்பனவு மற்றும் அனர்த்த மீட்பு

6.1 செயற்பரப்பு

6.2 இலிருந்து 6.5 வரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளை மிகமுக்கியமான தகவல் முறைமைகளுக்கு பிரயோகித்தல் வேண்டும்.

6.2 முறைமை கிடைக்கும்தன்மை

அ) மிகமுக்கியமான தகவல் முறைமைகள், உயர்ந்த மட்டத்திலான முறைமைகளின் கிடைப்பனவினைப்பெற்றுக்கொள்கின்றன என்பதனை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

ஆ) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் விதந்துரைப்பின் அடிப்படையில் பணிப்பாளர் சபை ஒவ்வொரு மிக முக்கியமான தகவல் முறைமைகளுக்குமாக முறைமைக் கிடைப்பனவு இலக்குகளை நிறுவுதல் வேண்டும்.

இ) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, மிகமுக்கியமான தகவல் முறைமைகளின் முறைமைக் கிடைப்பனவு இலக்குகளின் சாதனங்கள் கண்காணிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்பட்டமையினை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6.3 அனர்த்த மீட்பு ஏற்பாடுகள்

அ) பின்வரும் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளை உறுதிப்படுத்துகின்ற விதத்தில், சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் விதந்துரைப்புக்களின் மீது பணிப்பாளர் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட மீட்பு நேரக் குறிக்கோள்கள் மற்றும் அனர்த்த மீட்பு நிலைய குறிக்கோள்களுடன் மிகமுக்கியமான தகவல் முறைமைகள் இணங்கியொழுகுவதற்கான அனர்த்த மீட்பு ஏற்பாடுகளை உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

i) உரிமம்பெற்ற நிதக் கம்பனிகளின் மிகமுக்கியமான தகவல் முறைமைகள் 6 மணித்தியாலங்களுக்கும் குறைவான மீட்பு நேரக் குறிக்கோள்களையும் கொண்டிருத்தல்; அத்துடன்

ii) பூஜ்யத்தினை அல்லது கிட்டிய பூஜ்யத்தினைக் கொண்ட மீட்பு நேரக் குறிக்கோள்கள் (அதாவது அனர்த்தத்தின் போது தரவு இழப்பு ஏற்படாமை)

6.4 அனர்த்த மீட்பினைச் செயற்படுத்தல்

அ) பணிப்பாளர் சபையானது சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்புக் குழு என்பனவற்றின் விதந்துரைப்புக்களினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மிகமுக்கியமான தகவல் முறைமைக்குமாக அனர்த்த மீட்பு நடவடிக்கைகளை உந்தும் செயற்பாடொன்றினை நிறுவுதல் வேண்டும்.

ஆ) அத்தகைய நடவடிக்கை செயற்பாடுகள் 6.3இல் குறித்துரைக்கப்பட்ட மீட்பு நேரக் குறிக்கோள் இலக்குடன் இசைந்துசெல்லும் விதத்தில் அனர்த்த மீட்பு ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்குப் போதுமான நேரத்தினைக் கொண்டிருப்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6.5 அனர்த்த மீட்புப் பரீட்சிப்பு

அ) அனர்த்த மீட்பு உட்கட்டமைப்பின் ஏற்பாடுகளை அனைத்து மிகமுக்கியமான தகவல் முறைமைகளையும் பயன்படுத்தி, குறைந்தபட்சம் ஆண்டிற்கொருதடவை 7 நாட்கள் அல்லது அதற்கும் கூடுதலான காலப்பகுதிக்கு பரீட்சித்தல் வேண்டும்.

ஆ) 6.5(அ) இன்படி, அனர்த்த மீட்பு உட்கட்டமைப்பின் பரீட்சிப்பிற்குப் புறம்பாக, அனர்த்த மீட்பு உருப் போலிகளின் வருடாந்த சுழற்சி, தேவைப்படுத்தப்பட்ட மீட்பு நேரக் குறிக்கோள் மற்றும் மீட்பு மையக் குறிக்கோளை எய்துவதற்கு, உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் வேறுபட்ட அனர்த்த சூழல்களின் கீழ் இயலாற்றலைத் தீர்மானிப்பதற்காக, பணிப்பாளர் சபை நடைமுறைப்படுத்துவதற்கு இயலக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதுடன் அவசியமானவிடத்து தேவையான சீர்செய்யும் வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும்.

7 அலுவலர் தகைமைத் தேவைப்பாடுகள்

7.1 அ) தகவல் பாதுகாப்பு, தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளில் தேவைப்படுகின்ற தகைமையுடன் அலுவலர்கள் தொழில்புரிகின்றனர் என்பதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்களின் ஊழியர் அங்கத்தவர்களும் இத்தகைய தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட வகிபாகத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளுடன் தொடர்புடைய எடுத்துக் காட்டும் வழிகாட்டலும் இணைப்பு-V இல் வழங்கப்படுகின்றன.

ஆ) 7.1 (அ) ஆம் பிரிவில் உள்ள தேவைப்பாடுகளுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனி இணங்கவியலாத சூழ்நிலையில், சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழுவின் விதந்துரைப்புகளுக்குட்பட்டு தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவத்திலுள்ள பொருத்தமான அனுபவம் மற்றும் திறன்களுக்காக எடுத்துக்காட்டும் தகைமைகளை மாற்றுவதற்கு தீர்மானித்தல் வேண்டும்.

8 மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர் முகாமைத்துவம்

8.1 மிகமுக்கியமான தொழில்நுட்பவியல் தொழிற்பாடுகள் மற்றும் முறைமைகளுக்காக மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்களில் ஈடுபடும் போது பணிப்பாளர் சபையும் மூத்த முகாமைத்துவமும் வினைத்திறனான மேற்பார்வையை நடைமுறைப்படுத்துவதுடன் ஒருங்கிணைப்பட்ட இடர்நேர்வுகளை தீர்த்தல் வேண்டும். ஈடுபாடு சுயாதீன மதிப்பீடுகளுக்கான ஈடுபாடுகள் உட்பட மூன்றாம் தரப்பினரின் பணி வழங்குநர்கள், தொழிற்பாடுகள் மற்றும் தொழில்நுட்பவியல் முறைமைகளின் பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மைக்கான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வகைகூறல்களையும் பொறுப்புக்களையும் எந்த வகையிலும் குறைக்கவோ அல்லது அகற்றலாகாது.

8.2 மூன்றாம் தரப்பினர் வழங்குநர் மூலம் ஏதேனும் வாடிக்கையாளர் தரவு இரகசியத்தன்மை மீறல்களுக்காக பணிப்பாளர் சபை பொறுப்புடையதாதல் வேண்டும்.

8.3 மூன்றாம் தரப்பினர் பணி வழங்கல் மதிப்பீடு

அ) உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் தனது பணிகளுக்கு ஈடுபடுவதன் முன்னர் மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்களின் தேர்ச்சி, முறைமை உட்கட்டமைப்பு மற்றும் நிதியியல் ஆற்றல் என்பனவை மீது முறையான உரிய விழிப்புக் கவனத்தை நடாத்துதல் வேண்டும்.

ஆ) இதற்கு மேலதிகமாக, பின்வரும் குறிப்பிட்ட இடர்நேர்வுகளை முகாமை செய்வதிலுள்ள மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்களின் இயலாற்றல்கள் தொடர்பில் மதிப்பீடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

i) வாடிக்கையாளரின் அதிகாரமில்லாத வெளிப்படுத்துகை மற்றும் எதிர்தரப்பினர் தகவல்கள் உள்ளடங்கலாக தரவுக் கசிவு.

ii) இயலாற்றல் செயலாற்றம் உள்ளடங்கலாக பணி இடையூறு

iii) செயன்முறைப்படுத்தல் வழுக்கள்

iv) நேரடி பாதுகாப்பு மீறல்கள்

v) சைபர் அச்சுறுத்தல்கள்

vi) முக்கிய ஆளணி மீதான அதீத நம்பிக்கை

vii) தகவலை மாற்றம் செய்தல், செயன்முறைப்படுத்தல் அல்லது சேகரித்து வைத்தல் போன்றவற்றை மேற்கொள்கையில் நிதியியல் நிறுவனத்துடன் அல்லது அதன் வாடிக்கையாளருடன் தொடர்புடைய இரகசிய தகவலை தவறாகப் பயன்படுத்துதல்.

viii) திரட்சி இடர்நேர்வு

இ) 8.3 (ஆ) இல் எடுத்துக்காட்டப்பட்ட இடர்நேர்வுகளை மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர் வெளிக்காட்டுகின்ற சூழ்நிலையில், உரிமம்பெற்ற நிதிக்கம்பனி அத்தகைய இடர்நேர்வுகளை தணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

8.4 பணி மட்ட உடன்படிக்கைகள்

அ) மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்களுடன் ஈடுபடும் போது பணி மட்ட உடன்படிக்கையொன்றை உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் தாபித்தல் வேண்டும். குறைந்தபட்சத்தில் பின்வருவனவற்றை பணி மட்ட உடன்படிக்கை கொண்டிருத்தல் வேண்டும்.

i) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் ஏதேனும் நிறுவனத்தை அல்லது நிறுவனத்தை பரீட்சிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியால் நியமிக்கப்பட்ட ஏதேனும் தரப்பினர்களுக்கான அணுகும் உரிமைகள். முகாமைத்துவ தகவல்கள் மற்றும் அனைத்து ஆலோசனையானதும் தீர்மானமெடுத்தல் செயன்முறையினதும் அறிக்கைகள் உள்ளடங்கலாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் ஏதேனும் பதிவை, கோப்பை அல்லது தரவை இவை உள்ளடக்க வேண்டும்.

ii) மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர் மற்றும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிக்கான பணிகளை வழங்குவதுடன் ஒருங்கிணைக்கப்பட்ட அதன் அலுவலர்கள் போன்றோரை பரீட்சிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் உரிமைகள்.

iii) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கு வழங்கப்பட்ட பணிகளை கருத்திற்கொண்டு பணிப்பாளர் மூலம் கோரப்படும் ஏதேனும் தகவல் அல்லது தரவை கிடைப்பனவாகச் செய்வதற்கான மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்.

iv) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியால் வழங்கப்படும் பணிகளுடன் தொடர்புடைய ஏதேனும் தகவல் அல்லது தரவைக் கோருவதற்கும் பெறுவதற்கும் இலங்கை நீதித்துறையின் உரிமைகள்.

v) நியாயமாகவும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனியால் பகிரப்படும் தரவிற்காகவும் பயன்படுத்தக்கூடிய வாடிக்கையாளர் தரவை மூன்றாம் தரப்பினர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

vi) மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநருக்கு கிடைப்பனவாகவுள்ள அனைத்து வாடிக்கையாளர் தரவுகளும் இரகசியமான வாடிக்கையாளரல்லாத தரவுகளும் ஒப்பந்த இறுதி காலப்பகுதியில் முன்ஒப்புக்கொள்ளப்பட்ட காலத்தில் நிரந்தரமாக அழிக்கப்படல வேண்டும்.

vii) இத்தகைய பணிப்புரைகளில் வழங்கப்பட்ட உள்ளக கணக்காய்வுத் தேவைப்பாடுகளுக்கும் தகவல் பாதுகாப்பு பரீட்சிப்பு தேவைப்பாடுகளுக்கும் வசதியளிப்பதற்கான மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்கள்.

viii) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கான போதுமான முன்னைய அறிவித்தலை வழங்குவதற்கு பணி வழங்குநருக்கும் ஏதேனும் துணை ஒப்பந்ததாரருக்குமான தேவைப்பாடுகள்.

ix) தொடர்புடைய சட்டவாக்கங்களின் கீழ் இரகசிய ஏற்பாடுகளுடன் இணங்குவித்தல் மீதான பணி வழங்குநரால் மேற்கொள்ளப்பட்ட எழுத்தாவணம் ஒன்று. ஈடுபாடு முடிவடைந்த பின்னர் கூட ஒப்பந்தத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட இரகசிய ஏற்பாடுகளால் எல்லைப்படுத்தப்பட வேண்டிய பணி வழங்குநருக்காக மேலும் தெளிவாக பணி மட்ட உடன்படிக்கை வழங்கப்படும்.

x) அனர்த்த மீட்பு மற்றும் பின்னூட்டல் இயலுமைக்கான ஏற்பாடு.

xi) மூன்றாம் தப்பினரால் நியமிக்கப்பட்ட அலுவலர் இடையூறில்லாத பணியை வழங்குவதற்கும் அத்தகைய மாற்றங்களின் போதுமான அறிவித்தல்களை வழங்குவதற்கும் அர்பணித்துள்ளார் என்பதை உறுதிபடுத்தவும்.

xii) மூன்றாம் தரப்பு பணி வழங்குநர் மூலம் ஏதேனும் வாடிக்கையாளர் தரவு இரகசியத்தன்மை மீறல்களுக்கான ஈடுசெய்யும் பொறிமுறை மற்றும் சரிபார்க்கும் நடைமுறை.

xiii) மிகமுக்கியமான முறைமையின் கிடைப்பனவு

xiv) பணி வழங்குநரை வெளியேற்றுவதில் அல்லது இடைநிறுத்தவதில் வியாபார தொடர்ச்சியைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள்.

ஆ) மூன்றாம் தரப்பினர் ஏற்பாட்டின் தன்மையினதும் இடையூறினதும் காரணமாக பணி மட்ட உடன்படிக்கையில் 8.4(அ) இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனி ஒருங்கிணைப்பதற்கு இயலாமல் உள்ள சூழ்நிலையில், சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழுவின் விதந்துரைப்புடன் பணி மட்ட உடன்படிக்கையிலிருந்து அத்தகைய விலக்குதல்களை பணிப்பாளர் சபை தீர்த்தல் வேண்டும்.

8.5 வழங்கப்பட்ட பணிகளுடன் தொடர்புடைய அண்மைய பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்திகளை கருத்திற்கொள்வதற்கு மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்களுடன் பணி மட்ட உடன்படிக்கை கிரமமாக மீளாய்வு செய்வதற்கான அதன் இயலுமையை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதி செய்தல் வேண்டும்.

8.6 இப்பணிப்புரைகளில் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் அதன் மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்கள் இணங்கியொழுகுவதை உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் உறுதிசெய்தல் வேண்டும்.

8.7 மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்களால் வழங்கப்பட்ட தரவுகளும் காலமுறையாக மீளப்படக்கூடியவை என்பதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதிசெய்தல் வேண்டும். சைபர் நிகழ்வொன்று ஏற்படும் போது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கான காலமுறையான இற்றைப்படுத்தல்கள் மற்றும் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் நிலைப்பாடுகள் அத்துடன் உரிமம்பெற்ற நிதிக்கம்பனியின் உடனடி அறிவித்தல்களுக்கு வசதியளிப்பதற்கு மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநருடனான தெளிவாக வரைவிலக்கணப்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் நடைமுறைபடுத்தப்படுகின்றன என்பதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதிப்படுத்த வேண்டும்.

8.8 தனது தகவல் சேகரிப்பானது ஆகக்குறைந்தது மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநரின் வேறு வாடிக்கையாளர்களிடமிருந்து தர்க்கரீதியாக பிரிக்கப்பட்டது என்பதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதி செய்தல் வேண்டும். அதிகாரமற்ற பயன்படுத்துநர்களுக்கு வழங்கப்பட்ட அணுகலுக்கு முறையான கட்டுப்பாடுகளும் காலாந்தர மீளாய்வுகளும் நடைமுறைப்படுத்தபட வேண்டும்.

8.9 மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர் மூலம் மேற்கொள்ளப்படும் ஏதேனும் தவறான அல்லது திருப்திகரமற்ற செயலாற்றம் நிகழ்கையில் வலுவாக மீள்வதற்கும் மீண்டும் தொடர்வதற்குமான இயலாற்றல் மற்றும் ஒழுங்கான வெளியேற்றத்தை வசதியளிப்பதற்கான ஏற்பாடுகள் என்பவற்றை மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்களால் தொகுக்கப்படும் ஏதேனும் முக்கியத்துவமான முறைமை கொண்டுள்ளன என்பதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதி செய்தல் வேண்டும்.

9 கிளவுட் பணிகள்

9.1 இணையதளம் முழுவதும் பல்புடையான வாடிக்கையாளர்கள் ஊடாக வளங்கள் மற்றும் பணிகளை பகிர்தல் தொடர்பிலான வெளிநாட்டு செலாவணிகளை கொண்ட கிளவுட் பணிகளின் உள்ளார்ந்த கட்டமைப்பைக் கருத்திற்கொண்டு கிளவுட் பணிகளை பின்பற்றுவதில் உள்ள உள்ளார்ந்த இடர்நேர்வை உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் முழுமையாக புரிந்துணர வேண்டும்.

9.2 அனைத்தையுமுள்ளடக்கிய இடர்நேர்வு மதிப்பீடு

அ) இடர்நேர்வை பின்பற்றுவதற்கு முன்னர் இடர்நேர்வு மதிப்பீடொன்றை உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் நடாத்துதல் வேண்டும்.

i) வரிசைப்படுத்தல் மாதிரியின் நுட்பம்.

ii) தற்போதுள்ள முறைமைகளை கிளவுட் உட்கட்டமைப்பிற்கு மாற்றுதல்.

iii) கிளவுட் உட்கட்டைப்பின் அமைவிடம்.

iv) பல குத்தகை அல்லது தரைவை இணைத்தல்

v) விற்பனையாளர் ஊடுருவல்தடை மற்றும் பிரயோகக் கையாண்மை அல்லது இடைக்கையாண்மை

vi) உயர்ந்தளவிலான தரவு மற்றும் தொழில்நுட்பவியல் முறைமை பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு கிளவுட் உட்கட்டமைப்பின் பாதுகாப்பு கட்டமைப்புக்களை வடிவமைப்பதற்கான இயலுமை

vii) கிளவுட் பணி வழங்குநர்களினூடாக சைபர் தாக்குதல்களை வெளிப்படுத்துதல்.

viii) இடைநிறுத்துவதைத் தொடர்ந்து நிதியியல் நிறுவனத்தின் தரவுகளை பாதுகாப்பதற்கான இயலாற்றல் உள்ளடங்கலாக கிளவுட் பணி வழங்குநர் ஒருவரை இடைநிறுத்தம்செய்தல்.

ix) பொறுப்புக்கள், வரையறைகள் மற்றும் பணி வழங்குநரின் பொறுப்பை சிதைத்தல்.

x) தொடர்ச்சியான அடிப்படையொன்றில் கிளவுட் கணனிப்படுத்தல் தொடர்பில் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளையும் பன்னாட்டு நியமங்களையும் முகங்கொடுப்பதற்கான இயலுமை.

ஆ) 9.2 (அ) இல் எடுத்துரைக்கப்பட்ட இடர்நேர்வுகளை கிளவுட் பணி வழங்குநர் வெளிப்படுத்துகின்ற சூழ்நிலையில், உரிமம்பெற்ற நிதிக் கம்பனி அத்தகைய இடர்நேர்வுகளை தணிப்பதற்கான தேவையான நடைமுறைகளை கொண்டுள்ளனர் என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

9.3 தேர்ந்தெடுக்கப்பட்ட கிளவுட் உள்ளமைப்பு பின்வரும் பண்புக்கூறுகளை எந்த அளவிற்கு போதியளவில் உள்ளன என்பதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மதிப்பிடுதல் வேண்டும்.

அ) புவியியல்ரீதியான பன்முகப்படுத்தப்பட்ட சேவையகங்கள்

ஆ) உயர்ந்தளவான கிடைப்பனவு

இ) உயர்ந்தமட்ட அளவு

ஈ) பெயர்வுத்திறன்

உ) இயங்கக்கூடிய தன்மை

ஊ) சாத்தியமான இணையத்தள தவறுகளுக்கு எதிராக பாதுகாப்பதற்கான பொருத்தமான மாற்றல் உள்ளக வழி உள்ளடங்கலாக வலுவான மீட்பு மற்றும் மீள ஆரம்பித்தலின் திறன்

9.4 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் குறைந்தபட்சம் பின்வரும் பகுதிகளில் கிளவுட் பணி வழங்குநர்களின் சுயாதீனமான, பன்னாட்டு அளவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களின் கிடைப்பனவை மதிப்பிடுதல் வேண்டும்:

அ) பயனர் தரவின் குறியாக்கம், மறைகுறியாக்கம் போன்ற கிரிப்டோகிராபிக் தொகுதிகள் உட்பட தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ கட்டமைப்பு.

ஆ) வாடிக்கையாளர் மற்றும் இணைத்தரப்பின் பாதுகாப்பிற்கான கிளவுட் - குறிப்பிட்ட பாதுகாப்பு கட்டுப்பாடுகள் அல்லது பயன்பாட்டிலுள்ள, சேமிப்பிலுள்ள மற்றும் நிலைமாற்றலில் உள்ளக கொடுப்பனவு கொடுக்கல்வாங்கல் தரவு உள்ளடங்கலான தனியுரிமை தகவல்.

9.5 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் ஏதேனும் கிளவுட் பணிகளைப் பயன்படுத்துவதற்கு முன்னர் முக்கியமான மற்றும் முக்கியமற்ற முறைமைகளை தனித்தனியாக இனங்காணுதல் வேண்டும். பந்தி 9.2இல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கமைவாக இடர்நேர்வு மதிப்பீடானது ஆவணப்படுத்தப்பட்டு பின்பற்றுவதற்கு முன்னர் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

9.6 அங்கீகரிக்கப்படாத வெளிப்பாடுகள் மற்றும் அணுகலுக்கு எதிராகப் பாதுகாப்பதற்கு கிளவுட் பணிகளைப் பயன்படுத்தும்போது, வாடிக்கையாளர் மற்றும் இணைத்தரப்பினர் தகவல் மற்றும் தனியுரிமைத் தரவு ஆகியவற்றில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பொருத்தமான பாதுகாப்புகளை நடைமுறைப்படுத்த வேண்டும். தொடர்புடைய கிரிப்டோகிராபிக் முக்கிய முகாமைத்துவம் உள்ளடங்கலாக வாடிக்கையாளர் மற்றும் இணைத்தரப்பினர் தகவல், தனியுரிமை தரவு மற்றும் கிளவுட்டில் தரப்பட்டுள்ள பணிகளுடன் தொடர்புடைய அனைத்து தரவுகளினதும் தக்கவைக்கின்ற உடைமை, கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றை இது உள்ளடக்குதல் வேண்டும்.

10 நிலைமாறுகால ஏற்பாடுகள்

10.1 கீழே அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளதற்கமைவாக பணிப்புரை மீதான நிலைமாறு கால ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

அட்டவணை 1: இணக்கத்திற்கான காலகெடுக்கள்		
தொடர்பு	**தேவைப்பாடு**	**இணக்கத் திற்கான திகதி**
4.3(ஆ)	நிறைவேற்று மட்டத்திலான தகவல் பாதுகாப்பு குழு	2023.07.01
4.4	தலைமை பாதுகாப்பு அலுவலரை நியமித்தல்	2025.01.01
5.2	தகவல் வகைப்படுத்தல் மற்றும் பட்டியலிடல்	2023.07.01
5.3	முக்கிய தகவல் முறைமைகளை இனங்காணுதல்	2023.07.01
5.4	பயனர் அணுகல் முகாமைத்துவம்	2024.01.01
5.5	கணினி பாதுகாப்பு மற்றும் பயனர் பதிவு முகாமைத்துவம்	2024.01.01
5.6	தரவு குறியாக்கம்	2024.01.01
5.7	பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையம்	2026.01.01
5.8	தரவு இழப்பை தடுத்தல்	2024.01.01
5.9	தகவல் பாதுகாப்பு நிகழ்வு பதில் மற்றும் மீட்பு	2024.01.01
5.10.2 5.10.3	தகவல் பாதுகாப்பு பரீட்சிப்பு அ)பாதிப்பு தொடர்பான மதிப்பீடுகள் ஆ)ஊடுருவல் பரீட்சிப்பு	2024.01.01
5.11.1 5.11.2	தகவல் பாதுகாப்பு பயிற்சி மற்றும் உறுதிப்படுத்தல் அ) பணிப்பாளர் சபைக்கான பயிற்சியும் விழிப்புணர்வும் ஆ) தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி மற்றும் ஊழியருக்கான உறுதிப்படுத்தல் தேவைப்பாடு	2023.07.01 2023.07.01
6.2	முறைமை கிடைப்பனவு	2023.07.01
6.3/6.4/6.5	அனர்த்த மீட்பு	2023.07.01

11 வரைவிலக்கணங்கள்

11.1 பின்வரும் வரைவிலக்கணங்கள் இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக ஏற்புடையதாதல் வேண்டும்.

அ) **"முகவர்"**- முகவர் அல்லது துணை முகவர் என்பது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் சார்பில் மட்டுப்படுத்தப்பட்ட நிதி வியாபார நடவடிக்கைகளை வழங்குவதற்கு பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்படும் உள்ளக கொள்கைகளுக்கமைவாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினால் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்று அல்லது ஆளொருவர் எனப் பொருள்படும்.

ஆ) "**இரகசியத்தன்மை வாய்ந்த வாடிக்கையாளர் அல்லாத தரவு**" வாடிக்கையாளர் தரவின் வரைவிலக்கணத்திற்குள் வராததும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கொடுக்கல்வாங்கல்கள், பணிப்பாளர் குழுவிற்கான சமர்ப்பிப்புகள், முக்கிய பணியாளர் தரவு, மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினால் தீர்மானிக்கப்பட்டதற்கமைவாக வேறு ஏதேனும் தரவு உள்ளடங்கலாக அவை தீங்கிழைக்கும் வகையில் பயன்படுத்தப்படுகின்ற அல்லது வெளியிடப்படுகின்றதாயின், குறிப்பிடத்தக்க நிதியியல் அல்லது கீர்த்தி தொடர்பான இழப்பை ஏற்படுத்தும் ஏதேனும் பொது அல்லாத தரவாகும்.

இ) **"வாடிக்கையாளர் தரவு"** – கடந்த, தற்போதுள்ள அல்லது சாத்தியமான வாடிக்கையாளருடன் தொடர்புடைய ஏதேனும் பொது அல்லாத தரவாகும். எனினும், இனங்காணப்படாத வாடிக்கையாளர் தரவு வாடிக்கையாளர் தரவாக கருதப்பட வேண்டியதில்லை.

ஈ) **"இனங்காணப்படாத வாடிக்கையாளர் தரவு"**- தரவு முதலில் யாருடன் தொடர்புடையது என்பதற்கு வாடிக்கையாளரை இனங்காண்பதற்கு தனியாகவோ அல்லது வேறு எந்தத் தரவோடும் பயன்படுத்த முடியாத வேண்டுமென்றே மாற்றப்பட்ட வாடிக்கையாளர் தரவாகும்.

உ) **"பணிப்பாளர்"** என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் எனப்பொருள்படும்.

ஊ) **"பொது தரவு"** - எந்தவொரு தடையுமின்றி பயன்படுத்துவதற்கும் மீள வெளியிடுவதற்கும் அனைவருக்கும் இலவசமாகக் கிடைக்ககூடிய தரவாகும்.

எ) **"பணி வழங்குநர்"** - 2018ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க அல்லது திருத்தப்பட்டவாறான நிதித் தொழில் சட்டத்திற்கமைவாக (வியாபார தொழிற்பாடுகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல்) அல்லது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் வெளியிலிருந்தான ஏற்பாட்டில் ஈடுபட்டுள்ள பணி வழங்குநர் ஆகும்.

ஏ) **"மூத்த முகாமைத்துவம்"** - 2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க அல்லது திருத்தப்பட்டவாறான நிதித் தொழில் சட்டப் பணிப்புரையில் (முக்கிய பொறுப்புவாய்ந்த வாய்ந்த ஆட்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடல்) தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

இணைப்பு I, II, III, IV மற்றும் V என்ற https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/snbfi_finance_business_act_directions_no_01_of_2022_e.pdf வெப்தளத்தில் கிடைப்பனவாக உள்ளன.

நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2022இன் 02ஆம் இலக்கம் 2022 மார்சு 18

செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகள்

1. **சட்ட ஏற்பாடுகள்**

1.1. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினூடாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகள் தொடர்பில் இப்பணிப்புரைகளை விடுக்கிறது.

2. **பணிப்புரைகளின் குறிக்கோள்**

2.1 நாடெங்கிலுமுள்ள வங்கி மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் தற்போதுள்ள நேரடியான கிளை வலையமைப்புக்கள் வாடிக்கையாளர்களுக்கு நிதியியல் பணிகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை மாத்திரம் வழங்குகின்றன. ஆகையால், வங்கிச் சேவையை வசதியான முறையில் இயலுமைப்படுத்தி, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தொழிற்பாடுகளின் வினைத்திறனை விருத்திசெய்வதன் மூலமாக நிதியை எளிதாக அணுகுவதற்கான தீர்வாக செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகள் இருக்கக்கூடும்.

3. **ஏற்புடைத்தன்மை மற்றும் செயற்பரப்பு**

3.1. இப்பணிப்புரைகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்காக உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் பணிப்புரை 4.1 தரப்பட்டுள்ள செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

3.2. இப்பணிப்புரைகள், பின்வரும் பணிப்புரைகளின் தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.

(அ) நிதித்தொழில் சட்டத்தின் '2.1 அ', '2.1 ஏ', மற்றும் '2.1 ஓ' ஆம் இலக்கப் பணிப்புரை (வியாபாரத் தொழிற்பாடுகளை வெளியாட்களிடம் ஒப்படைத்தல்) 2018ஆம் அண்டின் 07ஆம் இலக்கப் பணிப்புரை, மற்றும்

(ஆ) நிதித்தொழில் சட்டத்தின் 6.2ஆம் இலக்கப் பணிப்புரை (வியாபார விரிவாக்கம் மற்றும் தொழிற்பாடுகள்) 2020ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கப் பணிப்புரை.

4. செல்லிடத் தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண முறைமையூடாக அனுமதிக்கப்பட்ட சேவைகள்

4.1. உரிமம்பெற்ற நிதிக் கம்பனியானது உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களின் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண முறைமைகளினூடாக பின்வருவனவற்றை மேற்கொள்ளலாம்.

அ) வைப்பினை ஏற்றல்

ஆ) வைப்பினை எடுப்பனவு செய்தல்

இ) கடன் பகிர்ந்தளிப்புக்கள்

ஈ) கடன் மீள்கொடுப்பனவை பெற்றுக்கொள்ளுதல்

உ) 4.1 அ) தொடக்கம் ஈ) வரையுள்ள பிரிவுகளுக்கான ஏற்புடைய கட்டணங்களும் அறவீடுகளும், மற்றும்

ஊ) பணிப்பாளரினால் அனுமதிக்கப்பட்டவாறான வேறு ஏதேனும் நடவடிக்கை.

5. உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பொறுப்பு

5.1. பணிப்பாளர் சபை

அ) வியாபார உத்திகளுக்கமைவாக உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகள் தொடர்பான உத்தியை உருவாக்குவதற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையதாதல் வேண்டும்.

ஆ) பொருத்தமான சபை மேற்பார்வை, போதியளவு தொழில்நுட்ப வளங்கள் மற்றும் வணிகர்களை உள்ளடக்கிய சுயாதீனமான கணக்காய்வொன்று ஆகியவற்றுடன் சபை அனுமதித்த கொள்கைகள், ஆற்றல்வாய்ந்த மற்றும் வலுவான இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்புக்களினால் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகள் மூலோபாயம் ஆதரவளிக்கப்பட வேண்டும்.

இ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களின் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளினால் ஏற்படக்கூடிய சாத்தியமான இடர்நேர்வுகளைத் தெளிவாக அறிந்து கொடுகடன் இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு, நன்மதிப்பு தொடர்பான இடர்நேர்வு, தொழில்நுட்ப இடர்நேர்வு, சட்ட மற்றும் இணங்குவிப்பு இடர்நேர்வு போன்றன உள்ளடங்கலான அனைத்து தொடர்புடைய இடர்நேர்வுகளையும் முகாமை செய்தல். அத்தகைய இடர்நேர்வுகள் குறைந்தபட்சம் வருடாந்த அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

5.2 தலைமை நிறைவேற்று அலுவலர்

(அ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்கள் மூலமாகப் பெறப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளை அவற்றின் நம்பகத்தன்மை, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கு வெளிப்படும் இடர்நேர்வு ஆகியவற்றைக் கொண்டு தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதுடன் தொடர்ச்சி பற்றிய தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.

(ஆ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் இடர்நேர்வு தோற்றப்பாட்டுடன் இசைந்துசெல்லும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளுக்கான வரையறுக்கப்பட்ட கட்டமைப்புக்களின் (கொடுக்கல்வாங்கல் வரையறைகள், நாளுக்கான வரையறைகள், வாடிக்கையாளர் வரையறைகள், சேவை வழங்குநர் வரையறைகள், வணிக வரையறைகள்) உரிய மதிப்பீட்டை மேற்கொள்ளுதல்.

(இ) உள்ளக கணக்காய்வுகளையும் வெளியக கணக்காய்வுகளையும் நடாத்துவதன் மூலமாக கட்டுப்பாடுகளின் போதுமாந்தன்மையை மதிப்பீடு செய்தல்.

(ஈ) வாடிக்கையாளர் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான முறைமைகள் மற்றும் நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துதல்.

(உ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கும் உரிமம்பெற்ற சேவை வழங்குநருக்கும் இடையிலான இணங்குவிப்பில் உள்ள ஏற்பாடுகள் இப்பணிப்புரைகளின் ஏற்பாடுகளுடன் இணங்கிச்செல்வதை உறுதிசெய்தல்.

6. பணிப்பாளருக்கான அறிவித்தல்கள் மற்றும் சமர்ப்பிப்புகள்

6.1. உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளை ஆரம்பித்தல், இடைநிறுத்துதல் அல்லது ஏதேனும் திருத்தத்தை மேற்கொள்வதற்கு முன்னர் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

6.2. உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று பணிப்பாளருக்கு பின்வருவனவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகள் தொடர்பான உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபையின் அனுமதி.

(ஆ) அட்டவணை Iஇல் தரப்பட்டுள்ள முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளின் குறைந்தபட்ச தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் தொடர்பான உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபையின் உறுதிப்படுத்தல்.

(இ) அட்டவணை IIஇல் தரப்பட்டுள்ள முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளின் குறைந்தபட்ச தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் தொடர்பான உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தலைமை நிறைவேற்று அலுவலரின் உறுதிப்படுத்தல்.

(ஈ) அட்டவணை III இல் தரப்பட்டுள்ளவாறான முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளில் ஈடுபட்டுள்ள வணிகர்களின் விபரங்கள்.

(உ) அட்டவணை IV இல் தரப்பட்டுள்ளவாறான முக்கிய இடர்நேர்வு வகைகளையும் தணிக்கைகளையும் உள்ளடக்கிய முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவை மற்றும் அதன் வியாபார தாக்கத்தின் மதிப்பீடு தொடர்பான சுருக்கமான அறிக்கை.

(ஊ) பணிப்பாளரினால் வேண்டப்படும் முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவையுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் தகவல்.

7. வாடிக்கையாளர் பாதுகாப்பு

7.1 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையின் ஏற்பாடுகள் (நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு கட்டமைப்பு) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்காக உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளுடன் இணங்கிச்செல்வதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனி உறுதிப்படுத்தல் வேண்டும்.

8. மத்திய வங்கி மேற்பார்வை

8.1 இப்பணிப்புரைகளுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றினால் மேற்கொள்ளப்படும் இணங்குவிப்பை பணிப்பாளர் கண்காணிப்பார் மற்றும்:

அ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்காக உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகள் தொடர்பான எந்த தகவல்களும் எந்த நேரத்திலும் அவசியமாகக் கருதப்படுமிடத்து கோரிக்கை விடுக்கலாம்.

ஆ) தேவை ஏற்படின், செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளில் ஈடுபட்டுள்ள உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களின் புத்தகங்களையும் வளாகங்களையும் ஆய்வு செய்யலாம்.

இ) அவசியமானது எனக் கருதப்படுமாயின், உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களுடனான செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவை ஏற்பாட்டை நிறுத்துவதற்கும் இடைநிறுத்துவதற்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியை பணிக்கலாம்.

ஈ) பொருத்தமானவாறு உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களுக்கு எதிராக ஏதேனும் நடவடிக்கை அல்லது வழிமுறையை எடுப்பதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியை பணிக்கலாம்.

உ) செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகள் தொடர்பான உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களின் நடத்தையிலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் நிவாரண நடவடிக்கையை எடுப்பதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியை பணிக்கலாம்.

ஊ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபையானது இணங்காமையின் திருத்தத்தை உறுதிப்படுத்துகின்ற வரை, உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவையை இடைநிறுத்துவதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியை பணிக்கலாம்.

9. ஏனைய நிபந்தனைகள்

9.1. உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளை நடாத்தும்பொருட்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் குறைந்தபட்ச மூலதனப் போதுமை விகிதங்கள், குறைந்தபட்ச மைய மூலதனம் மற்றும் திரவச் சொத்துக்கள் என்பன மீதான பணிப்புரைகள் உட்பட, ஆனால் அவற்றுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிராத விதத்தில், முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் இணங்கியொழுகுவதாக இருத்தல் வேண்டும்.

9.2. உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகள் தொடர்பாக அறவிடப்பட்ட அதிகபட்ச கொடுக்கல்வாங்கல் வரையறைகள் மற்றும் கட்டணங்கள் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தினால் அல்லது பணிப்பாளரினால் விதிக்கப்படும் கொடுக்கல்வாங்கல் வரையறைகளையும் கட்டணங்களையும் விஞ்சலாகாது.

9.3. இப்பணிப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகள் இப் பணிப்புரைகளிலிருந்து 6 மாதத்திற்குள் இப்பணிப்புரைகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் அத்துடன் இணங்குவிப்பு தொடர்பாக பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

10. நடைமுறைக்கு வரும் திகதி

10.1. இப்பணிப்புரைகள் இப்பணிப்புரையின் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

11. வரைவிலக்கணங்கள்

11.1 'பணிப்பாளர்' என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் எனப் பொருள்படும்.

11.2 'இலத்திரனியல்-பணம்' என்பது நிதியங்களின் கிடைப்பனவு மீது வழங்கப்படும் அத்துடன் கொடுப்பனவாக பயன்படுத்துகின்ற நோக்கத்திற்காகவும் நிதியியல் கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்வதற்கும் இலத்திரனியல் ரீதியாக சேமிக்கப்படும் நாணயப் பெறுமதி எனப் பொருள்படும்.

11.3. 'வணிகர்' என்பது செல்லிடக் கொடுப்பனவு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு உரிமம்பெற்ற சேவை வழங்குநர்களினால் நியமிக்கப்படும் நிறுவனங்கள்/ஆட்கள் எனப் பொருள்படும்.

11.4. 'உரிமம்பெற்ற சேவை வழங்குநர்' என்பது 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க அல்லது திருத்தப்பட்டவாறான கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைமைகள் ஒழுங்குவிதிகளுக்கமைவாக சேவை வழங்குநர் எனப் பொருள்படும்.

நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

அட்டவணை I

பணிப்பாளர் சபையின் உறுதிப்படுத்தல்

உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபையின் உறுதிப்படுத்தலானது உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளுடன் தொடர்புடைய பின்வரும் தேவைப்பாடுகளை குறைந்தபட்சம் உள்ளடக்குதல் வேண்டும்.

அ) செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகள் தொடர்பான இப்பணிப்புரைகளுக்கான இணங்குவிப்பும் பின்பற்றுதலும்.

ஆ) சபைக்கான இணங்குவிப்பும் பின்பற்றுதலும்,

i. உரிமம்பெற்ற சேவை வழங்குநர் மற்றும் அவர்களின் வணிகரின் தேர்வு கொள்கை.

ii. இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பு

iii. வாடிக்கையாளர் பாதுகாப்பு பொறிமுறை

iv. செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவை முகாமைத்துவம், கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு பொறிமுறை் மற்றும்

v. தொழிற்பாட்டு நடைமுறைகள் மற்றும் கையேடுகள்

போன்றனவற்றுக்கு அங்கீகரிக்கப்பட்டது.

இ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனி மற்றும் உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் தேவையான ஏற்பாடுகளின் கிடைப்பனவு மற்றும் இப்பணிப்புரைகளுடன் அத்தகைய ஏற்பாடுகள் இணங்குகின்றன.

ஈ) 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க அல்லது திருத்தப்பட்டவாறான கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைகள் ஒழுங்குவிதிகளுடனும் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதிகளுடனும் உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்கள் இணங்கிச்செல்வதை உறுதிப்படுத்தல்.

உ) செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளை செயற்படுத்துவதற்கு போதுமான வளங்கள் மற்றும் நிபுணத்துவம் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளிடம் கிடைக்கப்பெறுகின்றன.

ஊ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளுடன் தொடர்புடைய அனைத்து இடர்நேர்வுகளும் இனங்காணப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு மற்றும் தணிப்பதற்கும் மாற்றல் செய்வதற்குமான பொருத்தமான நடவடிக்கைகள் நிறுவப்பட்டுள்ளன.

எ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளின் பயன்பாட்டுடன் முறைப்பாட்டு வழிமுறைகள் மற்றும் நிவாரணப் பொறிமுறையுடன் தொடர்புடைய வாடிக்கையாளர் பாதுகாப்பிற்கான முறைமைகளும் நடைமுறைகளும் நிறுவப்பட்டுள்ளன.

ஏ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளை தொடர்ந்துசெல்லும் அடிப்படையில் கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் போதுமான உள்ளக கட்டுப்பாடுகள், முறைமைகள் மற்றும் ஆளணியினர் அத்துடன் குறித்துரைக்கப்பட்ட கடப்பாடுகளுடன் உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் மேற்கொள்ளப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் அல்லது தவறுகளை நிவர்த்திசெய்வதற்கு போதியளவான மேற்பார்வை.

ஐ) பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் நடவடிக்கைகளை ஒழிக்கும் பொருட்டு விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் அதனுடன் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களில் குறிப்பிடப்படுள்ளதற்கமைவாக 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளின் ஏற்பாடுகளுக்கான பின்பற்றுதல்.

ஒ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனி வாடிக்கையாளர்களின் தகவலின் இரகசியத்தன்மையையும் பாதுகாப்பையும் பேணுவதை உறுதிப்படுத்துவதற்கான முறைமைகள் மற்றும் நடைமுறைகளை நிறுவுதல்.

ஓ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் தங்குதடையற்ற செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளை உறுதிப்படுத்துவதற்கான வியாபாரத்தை தொடர்வதற்கான திட்டத்தின் கிடைப்புத்தன்மை.

ஔ) பின்வரும் குறைந்தபட்ச பிரமாணம் தொடர்பில் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவையை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களின் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்தல்.

i. அதன் வியாபார நடத்தையில் நேர்மையையும் தொழில்சார் நியமங்களையும் எடுத்துரைத்தல்.

ii. பணம் தூயதாக்கலுக்கெதிராக மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகள், பதிவைப் பேணுதல், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகளை திறம்பட நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவளிப்பதற்கு போதுமான வளங்களை கொண்டிருத்தல்.

iii. ஏதேனும் சட்டவிரோத/ ஒழுக்கவிழுமியங்களற்ற நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல்.

iv. உயர் தரத்திலான செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளை வழங்குவதற்கான அறிவையும் தேர்ச்சியையும் கொண்டிருத்தல்.

v. செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய அனைத்து இடர்நேர்வுகளையும் கட்டுப்படுத்துவதற்கான ஆற்றலை வெளிப்படுத்தல்.

அட்டவணை II

தலைமை நிறைவேற்று அலுவலரின் உறுதிப்படுத்தல்

தலைமை நிறைவேற்று அலுவலரின் உறுதிப்படுத்தலானது உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளுடன் தொடர்புடைய பின்வரும் தேவைப்பாடுகளை குறைந்தபட்சம் உள்ளடக்குதல் வேண்டும்.

அ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளின் பயன்பாடு தொடர்பில் விழிப்புணர்வு பிரச்சாரங்களின் மூலமாக தெளிவான, அறிந்த மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட தீர்மானமொன்றை மேற்கொள்ளுதல்.

ஆ) நன்மைபெறும் நிதிக் கம்பனி கணக்கு உடமையாளருக்கு செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண கொடுக்கல்வாங்கல் குறித்து அதேநேர அடிப்படையில் நிதிக் கம்பனியொன்றினால் அனுப்பப்படும் குறுஞ்செய்தி மற்றும்/அல்லது மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்பட வேண்டும்.

இ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தொழிற்பாட்டு கைநூல்களில் பிரதிபலிக்கப்பட்டவாறு உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளின் செயன்முறைகளின் கிடைப்பனவு.

ஈ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகள், உரிமம்பெற்ற சேவை வழங்குநர், உரிமம்பெற்ற நிதிக் கம்பனி மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் வாடிக்கையாளர் கணக்கு ஆகியவற்றுக்கிடையில் இணங்கிசெல்வதை உறுதிப்படுத்துவதற்கான முறைமைகளினதும் நடைமுறைகளினதும் கிடைப்பனவு.

உ) செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவையில் ஈடுபட்டுள்ள உரிமம்பெற்ற சேவை வழங்குநர் மற்றும் அவர்களின் வணிகர்களின் தொலைபேசி இலக்கம் மற்றும் நேரடி அமைவிடம்/முகவரி ஆகியவற்றை உள்ளடக்கிய இற்றைப்படுத்தப்பட்ட பட்டியலொன்றை/தரவுத்தளமொன்றை பேணுதல்.

ஊ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர் மற்றும் அவர்களின் வணிகர்கள் உள்ளக மற்றும் வெளியக இரண்டிலுமுள்ள அச்சுறுத்தல்களிலிருந்து தகவல்களை பாதுகாப்பதற்கான பொருத்தமான பாதுகாப்பு கட்டுப்பாடுகளை கொண்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தல்.

எ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர் மற்றும் அவர்களினால் வழங்கப்படும் முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகளுடன் தொடர்புடைய முறைப்பாடுகள் அல்லது குறைகளை தெரிவிப்பதற்கு வாடிக்கையாளருக்காக பிரத்தியேக துரித இலக்கமொன்றின் கிடைப்பனவு.

அட்டவணை III

உரிமம்பெற்ற சேவை வழங்குநரின் வாடிக்கையாளர்களின் விபரங்கள் (ஆனால் கீழே குறிப்பிடப்பட்டவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டவை அல்ல).

அ) வணிகரின் பெயர்

ஆ) வியாபார பதிவு இலக்கம்

இ) பதிவுசெய்யப்பட்ட முகவரி மற்றும் தொடர்பு விபரங்கள் (பதிவுசெய்யப்பட்ட முகவரியிலிருந்து வேறுபடுமாயின், அஞ்சல் முகவரியை உள்ளடக்கவும்)

ஈ) முக்கிய வியாபார நடவடிக்கைகள்

உ) நிதியியல் ஆற்றல்வாய்ந்த தன்மை

அட்டவணை IV

உரிமம்பெற்ற சேவை வழங்குநர் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பணச் சேவைகள் தொடர்பில் சுருக்கமான வாய்ப்புவள அறிக்கையொன்று.

அ) வியாபார முன்மொழிவின் நோக்கெல்லை

ஆ) ஈடுபட்ட தரப்பினர்கள்

இ) செலவு/ நன்மை தொடர்பான பகுப்பாய்வு

ஈ) வாடிக்கையாளர்களுக்கான அறவீடுகள்/கட்டணங்கள்

தொடர்பு: 24/06/002/0002/002 2022 ஏப்பிறல் 18

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அனைத்து முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

கனம் ஐயா/அம்மணி

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கான திருத்தங்கள்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2022.04.12 அன்று இடம்பெற்ற அதன் கூட்டத்தில் பின்வருவனவற்றுக்கு அனுமதி வழங்கியுள்ளது என்பதை உங்களுக்கு அறியத்தருகின்றது.

1. வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கான திருத்தங்கள் தொடர்பில் 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க நிதித் தொழில் சட்டப் பணிப்புரையை இரத்துச்செய்து 2022.03.31 அன்று உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட கடிதத்தை புறக்கீடுசெய்தல்,

2. 'ஏற்புடைய துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் விளைவு வீதம்' மீதான வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் தொடர்பில் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் மீதான 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையின் 2ஆம் பிரிவை இரத்துச் செய்தல், மற்றும்

3. (அ) நடைமுறையிலுள்ள துணைநில் வைப்பு வசதி வீதம், மற்றும்

   (ஆ) கீழே அட்டவணை 1 மற்றும் அட்டவணை 2[1] இல் தரப்பட்டவாறு இறுதி நான்கு முதலாந்தர ஏலங்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தின் அசைவு சராசரி.

ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை தீர்மானிப்பதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை அனுமதித்தல். உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் திறைசேரி உண்டியல்கள் ஏலத்தின் தொடர்ந்துவரும் நாளிலுள்ள வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை அவற்றின் தற்றுணிபில் திருத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 01: உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான வைப்புக்களுக்கான முதிர்ச்சியில் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்

வைப்புக் காலம்	ஆண்டுக்கான உயர்ந்தபட்ச வட்டி வீதம்
சேமிப்புக்கள் அத்துடன் ஒரு மாதத்திற்கும் குறைவான காலப்பகுதியுடைய அல்லது முதிர்ச்சி குறித்துரைக்கப்படாத ஏனைய வைப்புக்கள்	நடைமுறையிலுள்ள துணைநில் வைப்பு வசதி வீதம்
வுநசஅ னுநிழளவைள	
01 மாதம் மற்றும் 03 மாதங்களை விடவும் குறைவு	91 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்
03 மாதங்கள் மற்றும் 06 மாதங்களை விடவும் குறைவு	182 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 0.25%
06 மாதங்கள் மற்றும் 01 ஆண்டை விடவும் குறைவு	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 0.50%
01 ஆண்டு மற்றும் 02 ஆண்டுகளை விடவும் குறைவு	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 2.00%
02 ஆண்டுகள் மற்றும் 03 ஆண்டுகளை விடவும் குறைவு	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 2.75%
03 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டுகளை விடவும் குறைவு	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 3.25%
05 ஆண்டுகள்	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 4.25%

1 எதிர்காலத்தில் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை கணிப்பதற்கான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான வழிகாட்டலொன்றாக 2022.04.18 அன்றுள்ளவாறு ஏற்புடைய வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் இக்கடிதத்திற்கான இணைப்பு ஐஇல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 02: உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் படுகடன் சாதனங்களுக்கான முதிர்ச்சியில் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்

படுகடன் சாதனங்களின் காலம்	ஆண்டுக்கான உயர்ந்தபட்ச வட்டி வீதம்
01 ஆண்டை விடவும் குறைவு	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 0.50%
01 ஆண்டு மற்றும் 02 ஆண்டுகளை விடவும் குறைவு	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 2.75%
02 ஆண்டுகள் மற்றும் 03 ஆண்டுகளை விடவும் குறைவு	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 3.25%
03 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டுகளை விடவும் குறைவு	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 3.75%
05 ஆண்டுகள்	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 4.75%

எனினும், முறையான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்துவ நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் வைப்பாளர்களுக்கு வழங்கப்படும் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் தொடர்பில் உரிய விழிப்புடன் இருக்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன.

வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் தொடர்பில் 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித் தொழில் சட்டப் பணிப்புரையின் 1.1(i)ஆம் பிரிவு 1.1(ii)ஆம் பிரிவு மற்றும் 1.2ஆம் பிரிவு இத்துடன் இரத்துச் செய்யப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள,
(திருமதி.) ஆர் எம் சி எச் கே ஜயசிங்க
பணிப்பாளர்

இணை: இணைப்பு I

இணைப்பு I

இறுதி நான்கு திறைசேரி உண்டியல்கள் முதலாந்தர ஏலங்களை அடிப்படையாகக்கொண்டு 2022.04.18 உள்ளவாறான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை கணிப்பிடுதல்

அட்டவணை 1: அசையும் சராசரி நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தை கணிப்பிடுதல்

இறுதி நான்கு திறைசேரி உண்டியல்கள் முதலாந்தர ஏலங்கள்	22-ஏப்-11	22-ஏப்-06	22-மார்-30	22-மார்-23	அசையும் சராசரி நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்
91 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்	19.71	14.12	12.92	12.10	14.71
182 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்	22.73	15.36	12.25	11.98	15.58
364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்	23.36	15.69	12.28	12.00	15.83

அட்டவணை 2: கால வைப்புக்கள் தொடர்பில் உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை கணிப்பிடுதல்

கால வைப்புக்களின் காலம்	ஆண்டுக்கான உயர்ந்தபட்ச வட்டி வீதம்	தற்போதுள்ள ஏற்புடைய உயர்ந்தபட்ச வட்டி வீதம் (%)
01 மாதம் மற்றும் 03 மாதங்களை விடவும் குறைவு	91 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்	14.71
03 மாதங்கள் மற்றும் 06 மாதங்களை விடவும் குறைவு	182 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 0.25%	15.58 + 0.25 = 15.83
06 மாதங்கள் மற்றும் 01ஆண்டை விடவும் குறைவு	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 0.50%	15.83 + 0.50 = 16.33
01ஆண்டு மற்றும் 02ஆண்டுகளை விடவும் குறைவு	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 2.00%	15.83 + 2.00 = 17.83
02ஆண்டுகள் மற்றும் 03ஆண்டுகளை விடவும் குறைவு	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 2.75%	15.83 + 2.75 = 18.58
03ஆண்டுகள் மற்றும் 05ஆண்டுகளை விடவும் குறைவு	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 3.25%	15.83 + 3.25 = 19.08
05ஆண்டுகள்	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 4.25%	15.83 + 4.25 = 20.08

அட்டவணை 3: படுகடன் சாதனங்கள மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை கணிப்பிடுதல்

கால வைப்புக்களின் காலம	ஆண்டுக்கான உயர்ந்தபட்ச வட்டி வீதம்	தற்போதுள்ள ஏற்புடைய உயர்ந்தபட்ச வட்டி வீதம் (மூ)
01ஆண்டை விடவும் குறைவு	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 0.50%	15.83 + 0.50 = 16.33
01ஆண்டு மற்றும் 02ஆண்டுகளை விடவும் குறைவு	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 2.75%	15.83 + 2.75 = 18.58
02ஆண்டுகள் மற்றும் 03ஆண்டுகளை விடவும் குறைவு	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 3.25%	15.83 + 3.25 = 19.08
03ஆண்டுகள் மற்றும் 05ஆண்டுகளை விடவும் குறைவு	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 3.75%	15.83 + 3.75 = 19.58
05ஆண்டுகள்	364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 4.75%	15.83 + 4.75 = 20.58

சுற்றறிக்கை இல:2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கம்

2022 யூலை 20

நிலவுகின்ற அசாதாரண பேரண்டப் பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கு மத்தியில் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கான சலுகைகள்

நிலவுகின்ற அசாதாரண பேரண்டப்பொருளாதார சூழ்நிலைகள் காரணமாக, பல்வேறு பொருளாதார துறைகளில் ஈடுபடும் வியாபாரங்களும் தனிப்பட்டவர்களும் எதிர்நோக்கும் சவால்களை எதிர்கொள்ளும் நோக்குடன், தேவை அடிப்படையில் கடன்பெறுநர்களுக்கு பின்வரும் சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் (இதனகத்துப் பின்னர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை மத்திய வங்கி கோருகின்றது.

நிதியியல் முறைமை மீதான ஏதேனும் அதிகரித்த தாக்கத்தை தடுப்பதன் மூலம் வங்கியல்லா நிதியியல் துறைகளின் உறுதிப்பாட்டை பாதுகாக்கும் அதேவேளை விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் கடன்பெறுநரின் புதிய மீள்கொடுப்பனவு இயலுமைகளை அடிப்படையாகக்கொண்டு, பொருத்தமான மீள்கொடுப்பனவு ஒருங்கேற்பாடுகளை உருவாக்க இத்தகைய சலுகைகள் வழங்கப்படுகின்றன. அதற்கமைய, அனைத்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினதும் ஒத்திசைவான நடைமுறைப்படுத்தலுக்கான முன்மதியுடைய தேவைப்பாடுகளுடன் பரந்தளவிலான வழிகாட்டல்களை வழங்குவதற்கு இச்சுற்றறிக்கை வழங்கப்படுகின்றது. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், 2021 ஒத்தோபர் 29 அன்று வழங்கப்பட்ட கடிதத்தின் நியதிகளின் பிரகாரம் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள கொவிட்-19இற்கு பின்னரான புத்துயிரளித்தல் பிரிவுகளூடாக இச்சலுகைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பரிசீலனையிற்கொள்ளலாம்.

1. செயலாற்றுகின்ற கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகள்

1.1 ஏற்கனவே கொவிட்-19 சட்டஇசைவுத்தாமதங்களுக்குட்பட்ட கடன்பெறுநர்கள் உள்ளடங்கலாக தற்போதைய பேரண்டப் பொருளாதார நிலைமைகளினால் வருமானம் அல்லது வியாபாரம் மோசமாகப் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்களின் மற்றும் வியாபாரங்களின் (இதனகத்துப் பின்னர் கடன்பெறுநர்கள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) செயலாற்றுகின்ற கொடுகடன் வசதிகளுக்காக பொருத்தமான சலுகைகளை (அதாவது, மூலதனம் அல்லது வட்டி அல்லது மூலதனம் மற்றும் வட்டி ஆகிய இரண்டிற்கும் அல்லது பகுதியளவான மூலதனம் அல்லது வட்டி என்பவற்றிற்குமான சலுகைக்காலம், கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல் அல்லது ஏதேனும் வேறு சலுகைகள்) வழங்குமாறு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் கோரப்படுகின்றன. கடன்பெறுநர்களின் புதிய மீள்கொடுப்பனவு இயலளவை/ சாத்தியத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு இச்சுற்றறிக்கையின் திகதியிலிருந்து ஆறு மாதகாலப்பகுதியொன்றுக்காக விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையொன்றில் சுற்றுலாத்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் தயாரிப்பு, பணிகள், வேளாண்மை மற்றும் கட்டுமானம் போன்ற வியாபாரத் துறைகளில் ஈடுபடும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் உட்பட ஆனால் அவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாது அனைத்துப் பொருளாதாரத் துறைகளிலும் உள்ள பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கும் இத்தகைய சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

1.2 குத்தகை வசதிகளைப் பொறுத்தவரையில், கடன்பெறுநர்களின் மீள்கொடுப்பனவு இயலுமைகளுடன் பொருந்துவதற்கு, நியாயமான வட்டி வீதமொன்றுடனான நீடித்தகாலமொன்றுடன், தற்பேதைய கொடுகடன் வசதி அல்லது வசதிகளின் ஒப்பந்த தவணைப் பெறுமதியை விஞ்சாத மீள்கொடுப்பனவு திட்டத்தை கட்டமைப்பதற்கான பொறிமுறையொன்றை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் உருவாக்க வேண்டும். ஏனைய கொடுகடன் வசதிகளைப் பொறுத்த வரையில், மீள்கொடுப்பனவு திட்டத்திற்கான பொருத்தமான பொறிமுறையொன்றை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் உருவாக்க வேண்டும்.

1.3 சலுகையொன்றாக நயப்புக் காலத்துடன் வழங்கப்படும் கொடுகடன் வசதிகளைப் பொறுத்தவரையில், இச்சுற்றிக்கையின் கீழ் சலுகைக் காலத்திற்கான ஏற்புடைய வட்டி வீதமானது 20 சதவீதத்தினை அல்லது சலுகைக் காலத்தினைப் பரிசீலனையில்கொள்வதற்கு முன்னர் பிரயோகிக்கப்பட்ட ஒப்பந்த வட்டி வீதத்துடன் சேர்த்து 5 சதவீதத்தினை, இதில் எது குறைவானதோ அதனை விஞ்சலாகாது என்பதுடன் சலுகைக் காலத்திற்காக பரிசீலிக்கப்பட்ட தொகை மீது மாத்திரம் அறவிடப்படுதல் வேண்டும்.

2. முன்கூட்டிய தீர்ப்பனவுகளுக்கு வசதியளித்தல்

2.1 எவரேனும் கடன்பெறுநர் ஏற்கனவேயுள்ள ஏதேனும் கொடுகடன் வசதிகளை முழுமையாக தீர்ப்பனவு செய்வதற்கு விரும்புகின்றவிடத்து, முன்கூட்டிய தீர்ப்பனவுக் கட்டணங்கள் மற்றும் எதிர்கால வட்டி அறவீடு போன்ற ஏதேனும் மேலதிக கட்டணங்களை விதிக்காது அத்தகைய கடன்பெறுநருக்கு அவ்வாறு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

2.2 கொடுகடன் வசதிகளை முன்கூட்டிய தீர்ப்பனவு செய்வதற்கு விருப்பத்தைக் கொண்டுள்ள எவரேனும் கடன்பெறுநர் 2022.09.30 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரிய வங்கியல்லா நிதியியல் நிறுவனத்திடம் கோரிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

3. செயற்படாக் கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகள்

3.1 அத்தகைய தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களின/ செயற்றிட்டங்களின் எதிர்கால மீள்கொடுப்பனவு இயலளவை/ சாத்தியத் தன்மையை பரிசீலனையில்கொண்டு, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில், மூலதனம் அல்லது வட்டி அல்லது மூலதனம் மற்றும் வட்டி ஆகிய இரண்டிற்கும் அல்லது பகுதியளவான மூலதனம் அல்லது வட்டி என்பவற்றிற்குமான சலுகைக்காலம், கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல் அல்லது ஏதேனும் வேறு சலுகைகள் போன்ற பொருத்தமான சலுகைகளை வழங்குவதை பரிசீலனையிற்கொள்ளலாம்.

3.2 செயற்படாக் கொடுகடன் வசதிகளுக்காக வழங்கப்படும் சலுகைக்காலம் தொடர்பான சலுகைகளுக்கான ஏற்புடைய வட்டி வீதமானது 20 சதவீதத்தினை அல்லது சலுகைக் காலத்தினைப் பரிசீலனையில்கொள்வதற்கு முன்னர் பிரயோகிக்கப்பட்ட ஒப்பந்த வட்டி வீதத்துடன் சேர்த்து 5 சதவீதத்தினை, இதில் எது குறைவானதோ அதனை விஞ்சலாகாது.

3.3 கடன்பெறுநர்களின் உரிய கால மீள்கொடுப்பனவுகளை இயலுமைப்படுத்தும் பொருட்டு, 2020.01.01 அன்று அல்லது அதற்கு பின்னர், செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்பட்டுள்ள குத்தகைகச் சொத்துக்களின் கட்டாயப் பறிமுதல்செய்தலையும் மீள் உடமைப்படுத்தலையும 2022.12.31 வரை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் இடைநிறுத்தல் வேண்டும்.

3.4 வங்கியல்லா நிதியியல் நிறுவனமொன்று குத்தகைக்குச் சொத்தின் அறவீட்டு நடவடிக்கையை ஆரம்பித்துள்ள அல்லது அறிவித்தலை வழங்கியுள்ள விடயத்தில், தொடர்புடைய வங்கியல்லா நிதியியல் நிறுவனமும் கடன்பெறுநரும் படுகடன் மீள்கொடுப்பனவு இணக்கப்பாட்டை எட்டியுள்ளனர் என்ற நிபந்தனையின்பேரில், 2022.12.31 வரை அத்தகைய அறவீட்டு நடவடிக்கையானது இடைநிறுத்தப்படல் வேண்டும்.

3.5 தொடர்புடைய வங்கியல்லா நிதியியல் நிறுவனமும் கடன்பெறுநரும் படுகடன் மீள்கொடுப்பனவு இணக்கப்பாட்டை எட்டியுள்ளனர் என்ற நிபந்தனையின்பேரில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், 2022.12.31 வரை அக்கடன்களையும் முற்பணங்களையும் அறவிடுவதற்கான புதிய தீர்மானங்களை நிறைவேற்றுவதை பிற்போடுதல் வேண்டும். அறவீட்டு நடவடிக்கைகளுக்கான தீர்மானங்கள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட சந்தர்ப்பத்தில், குத்தகைக்குச் சொத்தின் பறிமுதலும் மீள் உடமைப்படுத்தலும் 2022.12.31 வரை இடைநிறுத்தப்படல் வேண்டும்.

3.6 எனினும், வேண்டுமென்றே தவணைதவறுபவர்கள், நிதியங்களை திசைதிருப்புவதன் காரணமான தவணைதவறுதல்கள், வியாபாரங்களில் தவறான முகாமைத்துவம் அத்துடன்/அல்லது மோசடிகள் மற்றும் நீடித்துழைக்காத செயற்றிட்டங்கள் என்பவற்றின் காரணமாக ஏற்படும் தவணைதவறுதல்கள் போன்றன ஏதேனும் மேற்குறிப்பிட்ட சலுகைகளுக்காக பரிசீலனையிற்கொள்ளப்படலாகாது.

3.7 கடன்பெறுநரைத் மிதமிஞ்சி தொடர்பு கொள்ளாமல், அவரின் இருப்பிடத்திற்குச் சமூகமளிக்காமல், அல்லது அவரைக் கட்டாயப்படுத்தாமல் வழமையான சேகரிப்பு நடைமுறையை/ அறவீட்டை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கலாம்.

4. கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிக்கையிடுதல்

4.1 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், கடன்பெறுநர்களிடமிருந்தான புதிய கடன் விண்ணப்பங்களை கொடுகடன் தகவல் பணியகத்தின் பாதகமான பதிவேடுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நிராகரிக்கக்கூடாது.

4.2 தேவைப்படுமிடத்து, பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை அறிக்கையிடுவதற்கு கொடுகடன் தகவல் பணியகத்துடனான ஆலோசனையுடன் அறிக்கையிடும் முறைமையொன்றை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் உருவாக்குதல் வேண்டும்.

5. கணக்கீட்டைக் கையாளுதல்

5.1 சலுகைகளுக்காக பரிசீலனையிற்கொள்ளப்படும் வசதிகளுக்கான கணக்கீடு செய்தல் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமங்களை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் கடைபிடித்தல் வேண்டும்.

5.2 இது தொடர்பில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேலதிக வழிகாட்டல்கள்/தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமிடத்து இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்திடமிருந்தும் கணக்காய்வாளர்களிடமிருந்தும் ஆலோசனை பெறலாம்.

6. சலுகைகளின் வெளிப்படைத்தன்மை

6.1 மேற்குறிப்பிட்ட சலுகைகைகளுக்காக தகைமையுடைய கடன்பெறுநர்கள், 2022 ஓகத்து 15 அன்று அல்லது அதற்கு முன்னர் எழுத்திலான அல்லது இலத்திரனியல் வடிவில் கோர முடியும்.

6.2 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், கோரிக்கை கிடைக்கப்பெற்ற ஒரு மாதக்காலப்பகுதியினுள் கடன்பெறுநர்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையை ஏற்றுக்கொள்வதா அல்லது நிராகரிப்பதா என்பது தொடர்பிலான தீர்மானத்தை மேற்கொண்டு அத்தீர்மானத்தை உரிய முறையில் கடன்பெறுநருக்கு அறிவித்தல் வேண்டும்.

6.3 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், கொடுகடன் வசதிகளையும் ஏற்புடைய வட்டி வீதத்தையும் பிற்போடும் கட்டமைப்பு அல்லது மறுசீரமைத்தல் தொடர்பில் ஒப்புதலுக்கு முன்னர் கடன்பெறுநருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் கடன்பெறுநரின் சம்மதம் எழுத்தில் அல்லது இலத்திரனியல் வடிவில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

7. அறிக்கையிடும் தேவைப்பாடு

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் கடன்பெறுநர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சலுகைகளின் விபரங்களையும் சலுகைத் தொடர்பிலான கோரிக்கை நிராகரிப்புக்களையும் 2022 ஓகத்து 31ஆம் நாளிலிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலுள்ளவாறான 15 வேலை நாட்களுக்குள் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும். அறிக்கையிடுகின்ற படிவம் காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

முனைவர் பி. நந்தலால் வீரசிங்க
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2022இன் 03ஆம் இலக்கம் 2022 செத்தெம்பர் 02

வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்தல்

1. சட்ட ஏற்பாடுகள்

1.1 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற அனைத்து நிதிக் கம்பனிகளினதும் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்வதன் மீது இப்பணிப்புரைகளை அறிமுகப்படுத்துகின்றது.

2. பணிப்புரைகளின் குறிக்கோள்கள்

2.1 இப்பணிப்புரையானது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் உதவித் திட்டத்தின் மூலம் தகவல்களை தொகுப்பதனை வசதிப்படுத்தி நிதியியல் துறையின் முக்கிய கொள்கைத் தீர்மானங்களுக்காக தகவல் முகாமைத்துவச் செயன்முறையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் ஒருமைப்பாட்டினையும் வலுப்படுத்துவதற்கு அனைத்து நிதிக் கம்பனிகளினதும் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்வதை பொறுப்பாணையளிப்பதற்கு வழங்கப்படுகின்றது.

3. வைப்பாளரின் தனித்துவமான அடையாள இலக்கத்தினைப் பதிவுசெய்தல்

3.1 அனைத்து நிதிக் கம்பனிகளும் இணைப்பு I இன் அட்டவணை 1இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு தமது மையத்தகவல் முறைமையில் ஒவ்வொரு வைப்பாளருக்கும் தனித்துவமான அடையாள இலக்கத்தினைப் பதிவுசெய்து அறிக்கையிடுதல் வேண்டும்.

4. செயற்பாட்டுக்கு வரும் திகதி

4.1 இப்பணிப்புரைகள் 2022.10.01 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும். அதற்கமைய, அனைத்து நிதிக் கம்பனிகளும் கீழே 5ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட மாறுதலடைதல் ஏற்பாடுகளுக்குட்பட்டு அனைத்து புதிய வைப்பாளர்களுக்கும் 2022.10.01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் இப்பணிப்புரைகளின் தேவைப்படுத்தல்களுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

5. மாறுதலடைதல் ஏற்பாடுகள்

5.1 அனைத்து நிதிக் கம்பனிகளும் 2023.12.31ஆம் திகதியளவில் இப்பணிப்புரைகளின் நியதிகளுக்கமைய ஏற்கனவேயுள்ள அனைத்து வைப்பாளர்களினதும் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்தலை நிறைவுசெய்தல் வேண்டும்.

முனைவர். நந்தலால் வீரசிங்க
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

இணைப்பு I

அட்டவணை 1: நிதிக் கம்பனிகளின் ஒவ்வொரு வைப்பாளர்கள் வகைக்குமான தனித்துவமான அடையாள இலக்கங்கள்

#	வைப்பாளரின் வகை	அடையாள இலக்கத்தின் வகை	குறிப்புகள்
1	**தனிப்பட்டவர்கள்**		
1.1	இலங்கைப் பிரசைகள்	தேசிய அடையாள அட்டை இலக்கம்	கணக்குகளை ஆரம்பிப்பதற்கு நிதிக் கம்பனிகள், வைப்பாளரின் சாரதி அனுமதிப்பத்திரத்தை அல்லது கடவுச்சீட்டை ஏற்றுக்கொள்ளலாம். ஆயினும், அவர்களது முறைமையில் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினைப் பதிவுசெய்வது கட்டாயமாகும்.
1.2	இலங்கைப் பிரசைகள் (இலங்கைக்கு வெளியில் வதிகின்ற/ நிரந்தர வதிவிடத்தை வைத்திருப்பவர்கள், தற்காலிக வதிவிடத்தை வைத்துள்ளவர்கள்), இரட்டைப் பிரசாவுரிமையுடைய இலங்கையர்கள் (இலங்கையில் வதிகின்ற), இரட்டை பிரசாவுரிமையுடைய இலங்கையர்கள் (இலங்கைக்கு வெளியில் வதிகின்ற)	தேசிய அடையாள அட்டை இலக்கம்	வைப்பாளரினால் தேசிய அடையாள அட்டை தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற போது மாத்திரம் இலங்கை கடவுச்சீட்டு இலக்கம் பயன்படுத்தப்படலாம்.
1.3	இலங்கையரல்லாத பிரசைகள்	வெளிநாட்டு கடவுச்சீட்டு இலக்கம்	இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட வெளிநாட்டுத் தேசத்தவர்கள் (இலங்கைக்கு வெளியில் வதிகின்ற), இலங்கைக்கு தற்காலிகமாக விஜயம் செய்கின்ற அல்லது விஜயம் செய்வதற்கு உத்தேசிக்கின்ற வெளிநாட்டுத் தேசத்தவர்கள் வெளிநாட்டு இராஜதந்திரிகள் உள்ளடங்கலாக
1.4	பராயமடையாத வைப்பாளர்கள்	பிறந்த திகதி + பிறப்புச் சான்றிதழ் இலக்கம் உ-ம்: பிறந்த திகதி: 2005 சனவரி 07 (2005.01.07) பிறப்புச் சான்றிதழ் இலக்கம்: 0325 2 0 0 5 0 1 0 7 0 3 2 5	அதே கூண்டில் 12 இலக்கங்களை உருவாக்குவதற்கு பிறந்த திகதியைத் தொடர்ந்து பிறப்புச் சான்றிதழ் இலக்கம்
2.	**நிறுவனங்கள்**		
2.1	கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள	கம்பனிப் பதிவிலக்கம்	-
2.2	அரசுசாரா அமைப்புக்கள்	அரசுசாரா அமைப்புகளுக்காக தேசிய செயலகத்தினால் வழங்கப்பட்ட பதிவிலக்கம்	-
2.3	தனியுரிமை/ பங்குடமை/ இணைந்த கூட்டு முயற்சிகள் போன்ற பிரதேச/ உள்ளூராட்சி நிறுவனங்களில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள்	வியாபாரப் பதிவிலக்கம்	-
2.4	கழகங்கள், அமைப்புக்கள், சங்கங்கள் போன்ற ஏனைய அனைத்து நிறுவனங்களும்	இயைபுடைய அதிகார சபையினால் வழங்கப்பட்ட பதிவிலக்கம்	-

தொடர்பு: 24/10/001/0019/005 2022 நவெம்பர் 29

முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்

கனம் ஐயா/அம்மணி

நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகள் மீதான வழிகாட்டல்கள்

அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் ஏற்புடைய 'நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகள் மீதான வழிகாட்டல்களை' இத்துடன் இணைத்துள்ளோம்.

2019இல் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கான வழிகாட்டலுக்கமைவாக, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகளை வசதிப்படுத்தும் நோக்குடன், நிலைபெறத்தக்க பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தையும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகளுக்காக ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பை வழங்குவதற்கான தேவையையும் கருத்திற்கொண்டு இவ்வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் மூலம், அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் இணைக்கப்பட்ட வழிகாட்டல்களை அனைத்து தொடர்புடைய அலுவலர்களுக்கும் தொடர்பூட்டுவதற்கும் வழிகாட்டலில் குறித்துரைக்கப்பட்டவாறு தேவைப்படுத்தல்களை நடைமுறைப்படுத்துவதற்கும் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள,
(திருமதி) ஆர் எம் சி எச் கே ஜயசிங்க
பணிப்பாளர்

இணைப்பு: நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகள் மீதான வழிகாட்டல்கள்

நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகள் மீதான வழிகாட்டல்கள்

1. அறிமுகம்

1.1. ஐக்கிய நாடுகளால் நிர்ணயிக்கப்பட்ட நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு அர்ப்பணிக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் பசுமை, வசதிக்குட்படுத்தல் மற்றும் சமநிலையான பொருளாதாரம் என்பவற்றை நோக்கி இலங்கை மாறுதலடைவதற்கான தேவைப்பாட்டையும் கருத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கி நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கான வழிகாட்டலை 2019.04.10 அன்று வெளியிட்டது. நிதியியல் நிறுவனங்கள் நிதியளிக்கின்ற கருத்திட்டங்களுடன் இணைந்த சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளை காத்திரமாக முகாமைசெய்வதற்கும் பசுமையானதும், காலநிலை சிநேகமிக்கதானதும் சமூக ரீதியான வசதிக்குட்படுத்துவதற்குமான வியாபாரங்களுக்கு உதவிபுரியும் பொருட்டும் அத்தகைய நிறுவனங்களுக்கு பரந்தவொரு பணிப்புரையொன்றினை இவ்வழிகாட்டல் வழங்குகின்றது.

1.2. மேலும், இலங்கையில் நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளுக்கான வகைப்படுத்தலையும் அளவீட்டு முறைமையையும் நிறுவி இலங்கை மத்திய வங்கி இலங்கையின் பசுமை நிதி பகுப்பியலை 2022.05.06 அன்று வெளியிட்டது.

2. வழிகாட்டல்களின் குறிக்கோள்கள்

2.1. வழிகாட்டலுடன் இசைந்துசெல்லும் விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிலைபெறத்தக்க நிதி முன்முயற்சிகளுக்கு வசதியளிக்கும் நோக்குடன் நிலைபெறத்தக்க பொருளாதாரத்தின் முக்கியத்துவம் பற்றியும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகளுக்கு ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு என்பவற்றை வழங்குவதற்கான தேவைப்பாடு பற்றியும் கருத்திற்கொண்டு இத்தகைய வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன.

3. ஏற்புடைமை

3.1. இவ்வழிகாட்டல்கள் அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் ஏற்புடையாதல் வேண்டும்.

4. வழிகாட்டலை நடைமுறைப்படுத்தி வங்கியல்லா நிதியியல் நிறுவனத்தின் மேற்பார்வை பணிப்பாளருக்கு (பணிப்பாளர்) அறிக்கையிடுதல்

4.1. வழிகாட்டலை நடைமுறைப்படுத்தி அவற்றின் பின்வரும் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள அல்லது திருத்தப்பட்டவாறான காலப்பகுதிகளை நடைமுறைப்படுத்துமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கோரப்படுகின்றன.

4.2. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 15ஆம் பிரிவால் பணிப்பாளருக்கு உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் பணிப்பாளரால் பணிக்கப்பட்டவாறு தமது நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகள் மீது பணிப்பாளரால் குறித்துரைக்கப்பட்டவாறான விதத்தில், அத்தகைய படிவத்தில் அல்லது அத்தகைய காலஇடைவெளிகளில், அத்தகைய காலங்களில் தகவல்களை அல்லது ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கோரப்படுகின்றன.

5. நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளுக்காக இனங்காணப்பட்ட முன்னுரிமைத் துறைகள்

5.1. நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளுக்காக பின்வரும் முன்னுரிமை துறைகளை பகுப்பியல் அடையாளம் காண்கின்றது:

அ) காடாக்கல் மற்றும் மரக்குற்றியாக்கல்
ஆ) வேளாண்மை
இ) தயாரித்தல்
ஈ) மின்வலு சக்தி உருவாக்கம், கடத்தல் மற்றும் விநியோகம்
உ) நீர் வழங்கல், கழிவு நீர் மற்றும் கழிவு முகாமைத்துவம்
ஊ) கட்டுமானம்
எ) போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல்
ஏ) சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு
ஐ) தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பம்
ஒ) நிதியியல் பணிகள் (வேளாண்மை மற்றும் சுற்றுலா நடவடிக்கைகள் காலநிலையிலிருந்து தாக்குபிடிக்கும்தன்மையை அதிகரிப்பதற்கு வசதியான காப்புறுதி உற்பத்திகள் வழங்குவதை வசதியளித்தல்) மற்றும்
ஓ) எரிவாயு, நீராவி, மற்றும் குளிரூட்டல் வழங்கல், நிலக்கீழ் நிரந்தர காபனீரொட்சைட்டு புவிச்சரிதவியல் களஞ்சியம், ஐதரசன் களஞ்சியம்.

5.2 நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகள் தொடர்பில் நிதிகளை வழங்கும் போதும் அறிக்கையிடும் போதும் மேற்குறித்த முன்னுரிமையளிக்கப்பட்ட பிரிவுகளுக்கு மேலதிகமாக அவற்றுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை இனங்கண்டு வகைப்படுத்துவதற்கு பகுப்பியலைப் பயன்படுத்துமாறு உரிமம்பெற்ற வங்கிகள் வேண்டப்படுகின்றன.

5.3 நிலைபெறத்தக்க குத்தகைக்குவிடும் சாதனங்கள் உட்பட சேமிப்பு உற்பத்திகளையும் நிலைபெறத்தக்க கடன் உற்பத்திகளையும் உருவாக்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன.

5.4 வேண்டப்பட்டவாறு, பசுமையானதும் சமூக ரீதியாக வசதிக்குட்பட்டதுமான கருத்திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் வழிகாட்டல் மற்றும் தொழிற்பாட்டு கருவிகளை வழங்குவதற்கும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

6. நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகள்/ முன்முயற்சிகளுக்கான ஆளுகைக் கட்டமைப்பு

6.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்கவாறும் செயற்றிறன்வாய்ந்தும் மேற்பார்வை செய்வதற்கு பணிப்பாளர் சபை ஊக்குவிக்கப்படுகின்றனர்.

6.2 குறைந்தபட்சமாக பின்வருவனவற்றை உள்ளடக்கி பணிப்பாளர் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட நிலைபெறத்தக்க நிதியியல் கொள்கையொன்றை உருவாக்குவதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன.

அ) நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துகின்ற பணிப்பாளர் சபையினதும் மூத்த முகாமைத்துவத்தினதும் தெளிவான வகிபாகங்கள் மற்றும் பொறுப்பாண்மைகள்

ஆ) சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளையும் நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளையும் அடையாளங்கண்டு முகாமைசெய்தல் அத்துடன்

இ) நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பிரமாணங்கள் மற்றும் அளவுருக்கள்.

6.3 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலரும் தொடர்புடைய முக்கிய பொறுப்புடைய ஆட்களும் பணிப்பாளர் சபையால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் கீழ், பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்கு வேண்டப்படுகின்றனர்:

அ) நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகள் தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளால் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகள், கருவிகள், அளவுருக்கள், தொழிற்பாட்டு நடைமுறைகள், மற்றும் கட்டுப்பாடுகள் என்பன மீளாய்வுசெய்யப்பட்டு ஆகக் குறைந்தது ஆண்டுதோறும் இற்றைப்படுத்தப்படுவதுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் ஏனைய வேறு கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடன் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

ஆ) நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி முகாமைத்துவம்செய்வதற்கு போதுமானளவு வளங்கள், திறன்கள் மற்றும் நிபுணத்துவம் என்பன ஒதுக்கீடுசெய்யப்படுதல்.

இ) நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வுகளை முகாமைசெய்வதில் வியாபார பிரிவுகளினதும் தொழிற்பாடுகளினதும் வகிபாகங்களினதும் பொறுப்பாண்மைகளினதும் தெளிவாக எடுத்துரைத்தல் மற்றும்

ஈ) நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய முன்னேற்றம் மற்றும் முக்கிய பிரச்சினைகள் பற்றி உரிய காலத்தில் பணிப்பாளர் சபைக்கு அறிவித்தல்.

7. இடர்நேர்வு முகாமைத்துவம்

7.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் அவற்றின் தொழிற்பாடுகளின் தன்மை, அளவு, சிக்கல்வாய்ந்ததன்மை மற்றும் இடைத்தொடர்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டு, சுற்றுச்சூழல் சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளையும் நிலைபெறத்தக்க வியாபார நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளையும் அடையாளங்கண்டு மதிப்பிடுவதற்கும் அத்தகைய இடர்நேர்வுகளின் பரிமாணம் மற்றும் முக்கியத்துவம் என்பவற்றை கணிப்பிடுவதற்கும் வேண்டப்படுகின்றன.

7.2 அடையாளங்காணப்பட்ட சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பில் கூட்டிணைக்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன.

7.3 அடையாளங்காணப்பட்ட இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு காத்திரமான இடர்நேர்வு முகாமைத்துவ நடத்தைகளையும் உள்ளக கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதற்கும் ஒட்டுமொத்த தீர்மானமெடுத்தல் செயன்முறையில் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளை கூட்டிணைப்பதற்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன.

8. இயலாற்றலைக் கட்டியெழுப்புதலும் புத்தாக்கமும்

8.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பின்வருவனவற்றிற்கு ஊக்குவிக்கப்படுகின்றன:

அ) உள்ளக மற்றும் வெளிவாரி பயிற்சிகளினூடாக தமது ஊழியர்களின் சுற்றுச்சூழல், சமூக, ஆளுகை இடர்நேர்வு முகாமைத்துவத் திறன்களை மேம்படுத்துதல்.

ஆ) நிலைபெறத்தக்க நிதியியலுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான உள்ளக நிபுணத்துவத்தை உருவாக்குதல் அல்லது அத்தகைய நடைமுறைப்படுத்தலுக்கு பொருத்தமானவாறு நிலைபெறத்தக்க நிதியியல் நிபுணரை/நிபுணர்களை சேர்த்துக்கொள்ளல் அத்துடன்

இ) சுற்றுச்சூழல் அழுத்த சோதனைகளிலும் சூழ்நிலைப் பகுப்பாய்வுகளிலும் நிபுணத்துவத்தை உருவாக்குதல்.

9. வெளிப்படுத்துகையும் அறிக்கையிடுதலும்

9.1 உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் அவற்றின் ஆண்டறிக்கைகளில் நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பின்வரும் தகவல்களை வெளிப்படுத்துவதற்கு வேண்டப்படுகின்றன:

அ) நிலைபெறத்தக்க நிதி கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய பொதுநோக்கு

ஆ) அடையாளங்காணப்பட்ட சுற்றுச்சூழல், சமூக, ஆளுகை மற்றும் நிலைபெறத்தக்க நிதியுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளும் அவற்றுடன் இணையப்பெற்ற தணிப்பு வழிமுறைகளும்

இ) நடப்பில் முன்மொழியப்பட்டதுமான முதலீடுகள் மற்றும் வியாபார நடவடிக்கைகளின் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்கம்

ஈ) வழிகாட்டலை நடைமுறைப்படுத்தல் மற்றும் அடுத்த ஆண்டிற்கான செயற்றிட்டம் உள்ளடங்கலாக நிலைபெறத்தக்க நிதியுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஏற்பட்ட முன்னேற்றம்

உ) நிலைபெறத்தக்க நிதியங்களுக்காக திரட்டப்பட்ட நிதியங்களினதும் நிலைபெறத்தக்க நிதியத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியங்களினதும் மொத்த மற்றும் ஆண்டுத் தொகைகள்.

9.2 உலகளாவிய அறிக்கையிடும் முன்முயற்சி மற்றும் காலநிலை தொடர்புட்ட நிதியியல் வெளிப்படுத்துகை மீதான செயலணியின் விதந்துரைப்பு போன்ற பன்னாட்டு ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அறிக்கையிடும் கட்டமைப்புக்களைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்கத்தை வெளிபடுத்துமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன.

பகுதி IV

பகுதி IV

2022ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான முக்கிய சட்டவாக்கங்கள்(அ)

		பக்கம்
1.	2022ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, மாகாண சபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) (திருத்தச்) சட்டம்	1
2.	2022ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம்	1
3.	2022ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, வேலையாட்கள் நட்டஈடு (திருத்தம்) சட்டம்	27
4.	2022ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, மிகைக்கட்டண வரிச் சட்டம்	31
5.	2022ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம்	34
6.	2022ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்	36
7.	2022ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டம்	37
8.	2022ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம்	41
9.	அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தம்	42
10.	2022ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, நொத்தாரிசு (திருத்தச்) சட்டம்	57
11.	2022ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க, ஆவணங்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம்	64
12.	2022ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம்	67
13.	2022ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்	77
14.	2022ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்	78

(அ) மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் பிரசுரிக்கப்பட்டுள்ள உரைக்கும் அரசாங்க அச்சுத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ள உரைக்குமிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் அரசாங்க அச்சுத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்பட்ட உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

மாகாண சபைகள்

2022ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

மாகாண சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

2011ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கம் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, மாகாணசபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இரண்டாயிரத்துப் பதினோராயமாண்டின் 13ஆம் இலக்க, மாகாணசபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) சட்டத்தின் 2ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் 2ஆம் பிரிவை அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1)ஆம் உட்பிரிவில், "கைமாற்றப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும்:-

"கைமாற்றப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும்,-

(அ) எவரேனுமாளினால் தகுந்தமுறையில் செலுத்தப்படற்பாலதான தொகைக்கு விஞ்சுதலான ஏதேனும் முத்திரைத் தீர்வையை அவர் செலுத்தியுள்ளாரென அல்லது

(ஆ) அத்தகைய முத்திரைத் தீர்வை எந்தச் சாசனம் தொடர்பானதோ அந்தச் சாசனத்தின்மீது பிழையான முறையில் ஏதேனும் முத்திரைத் தீர்வையை எவரேனுமாள் செலுத்தியிருந்து அத்துடன், 2006ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய முத்திரைத் தீர்வையைச் செலுத்துவதற்கு அவர் ஆளாகவிருக்கவில்லையெனவும் காணப்பட்டுள்ளதென,

எழுத்தில் செய்யப்பட்டவோர் உரிமைக் கோரிக்கையின் மூலம் ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கின்ற அத்தகைய ஆளுக்கு அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை மாகாண சபைகளுக்குக் கைமாற்றப்படுவதற்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதியின்போது முத்திரைத் தீர்வையாகச் சேகரிக்கப்பட்ட ஏதேனும் தொகையிலிருந்து மீளளிக்கப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(3) மீள இலக்கமிடப்பட்ட (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) இரண்டாயிரத்து ஆறாமாண்டின் 12ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 11ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இப்பிரிவின் கீழான மீளளிப்புக்கான எல்லா உரிமைக் கோரிக்கைகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ஆணையாளர் தலைமையதிபதி என்பது, 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்.".

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2022ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம்

[2022ஆம் ஆண்டு மார்சு மாதம் 19ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துவதனை ஒழுங்குபடுத்துவதற்காக ஏற்பாடு செய்வதற்கும்; தனிப்பட்ட தரவைப் பாதுகாத்தல் தொடர்பாகத் தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளை அடையாளங்காண்பதற்கும் பலப்படுத்துவதற்கும்; தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையை தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

தரவுடன் தொடர்புபட்டோரின் தனிப்பட்ட தரவு உரிமைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற அதேவேளையில் இலங்கையில் எண்ணிமைப் பொருளாதாரத்திலான வளர்ச்சியையும் புத்தாக்கத்தையும் வசதிப்படுத்துவது அவசியமாக வந்துள்ளதாதலாலும்:

அத்துடன் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புக் கட்டுக்கோப்புகளிடையே இடைத்தொழிற்படத்தகுநிலையைச் சீராக்குவதும் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு வலுவுறுத்தல் அதிகாரசபைகளிடையே எல்லைக்கப்பாலான ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதும் அவசியமாக வந்துள்ளதாதலாலும்:

அத்துடன் உள்நாட்டு எழுத்திலான சட்டங்களுக்கும் ஏற்புடையற்பாலனவான சர்வதேசச் சட்ட சாதனங்களுக்கும் மதிப்பளிக்கும் அதேவேளையில் பாவனையாளர் நம்பிக்கையை உறுதிப்படுத்தியும் பிரத்தியேகத்தன்மையைக் காத்தும் தரவுடன் தொடர்புபட்டோரின் தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகளை வழங்குவதற்கு சட்டக் கட்டுக்கோப்பொன்றுக்கான ஏற்பாட்டைச் செய்வது இலங்கை அரசாங்கத்துக்கு அவசியமாக வந்துள்ளதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. (1) இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகள், அரசியலமைப்பின் 79ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை எத்தேதியன்று புறக்குறிப்பிடப்படுகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் பாகம் IV மற்றும் பாகம் V என்பவற்றின் ஏற்பாடுகள்தவிர, இச்சட்டத்தின் மற்றெல்லா ஏற்பாடுகளும் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் அத்தேதியானது, (2)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட சபாநாயகரின் சான்றுரைத் தேதியிலிருந்து பதினெட்டு மாதங்களுக்கு முந்தியதானதும் முப்பத்தாறு மாதங்களுக்குப் பிந்தியதானதுமானவொரு தேதியாகவிருத்தலாகாது.

(4) இச்சட்டத்தின் பாகம் IV இன் ஏற்பாடுகள் நடைமுறைக்குவரும் தேதியானது (2)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சான்றுரைத் தேதிக்கு இருப்பத்திநான்கு மாதங்களுக்கு முந்தியதாகவிராததும் நாற்பத்தெட்டு மாதங்களுக்குப் பிந்தியதாகவிராததுமானவொரு தேதியாகவிருத்தல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் பாகம் V இன் ஏற்பாடுகள் நடைமுறைக்குவரும் தேதியானது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்பட்டவொரு தேதியாகவிருத்தல் வேண்டும்; அத்தேதியானது, (3)ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தேதிக்குப் பிந்தாதவொரு தேதியாகவிருத்தல் வேண்டும்.

2. (1) (அ) தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலானது இலங்கையினுள் முழுமையாக அல்லது பகுதியளவில் நடைபெறுகின்றவிடத்து; அல்லது

(ஆ) தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலானது-

(i) இலங்கையில் வாழுரிமைகொண்ட அல்லது வழமையாக வதிகின்ற;

(ii) இலங்கையின் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்படுகின்ற அல்லது தாபிக்கப்படுகின்ற;

(iii) இலங்கையிலுள்ள தரவுடன் தொடர்புபட்டோரைக் குறிப்பாக இலக்காகக் கொண்டு பண்டங்களை அல்லது சேவைகளை முனைதலுட்பட இலங்கையிலுள்ள தரவுடன் தொடர்புபட்டோருக்குப் பண்டங்களை அல்லது சேவைகளை முனைகின்ற; அல்லது

(iv) தரவுடன் தொடர்புபட்டோரின் நடத்தை இலங்கையில் இடம்பெறும் அளவுவரை அத்தகைய நடத்தை தொடர்பாக முடிபுகளைச் செய்யும் உட்கருத்துடன் தோற்றுருவம்செய்தல் உட்பட இலங்கையிலுள்ள தரவுடன் தொடர்புபட்டோரின் நடத்தையைக் குறிப்பாகக் கண்காணிக்கின்ற,

கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவரினால் நிறைவேற்றப்படுகின்றவிடத்து,

தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலுக்கு இச்சட்டம் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் முறையே பந்திகள் (iii) மற்றும் (iv) என்பவற்றின் நோக்கங்களுக்காக, அதிகாரசபையானது

(அ) தரவுடன் தொடர்புபட்டோரைக் குறிப்பாக இலக்குக்குட்படுத்துதல் எச்சூழ்நிலைகளில் இடம்பெறலாமோ அச்சூழ்நிலைகளை; அல்லது

(ஆ) தரவுடன் தொடர்புபட்டோரைக் குறிப்பாகக் கண்காணித்தல் எச்சூழ்நிலைகளில் இடம்பெறலாமோ அச்சூழ்நிலைகளை,

இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் என்ற வகையாகத் தீர்மானிக்கலாம்.

(3) இச்சட்டம் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையதாதலாகாது:-

(அ) தனிப்பட்ட, வீட்டு அல்லது குடும்ப நோக்கங்களுக்காக மட்டுமே தனியாளொருவரினால் செய்முறைப்படுத்தப்பட்ட ஏதேனும் தனிப்பட்ட தரவு; அத்துடன்

(ஆ) தனிப்பட்ட தரவல்லாத ஏதேனும் தரவு.

3. (1) தரவுடன் தொடர்புபட்டோரின் தனிப்பட்ட தரவைப் பாதுகாத்தல் தொடர்பாக, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுறுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், பகிரங்க அதிகாரசபையொன்று வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் ஆளப்படுகின்றவிடத்து, அத்தகைய எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலை நிறைவேற்றுவது, தரவுடன் தொடர்புபட்டோரின் தனிப்பட்ட தரவைப் பாதுகாத்தல் இச்சட்டத்துடன் ஒத்திருக்கின்ற அளவுவரை அத்தகைய அதிகாரசபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாகம் I
தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தல்

4. ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தல் வேண்டும்.

5. கட்டுப்பாட்டாளர் ஒருவர் -

(அ) இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிபந்தனைக்கு

(ஆ) தனிப்பட்ட தரவின் விசேட வகுதிகளைச் செய்முறைப்படுத்தலின் விடயத்தில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிபந்தனைக்கு

(இ) இதற்கான அட்டவணை I இன் (அ) என்னும் விடயத்தின் கீழ் அல்லது அட்டவணை II இன் (அ) என்னும் விடயத்தின் கீழ் தரவுடன் தொடர்புபட்டவரினது சம்மதத்தின் அடிப்படையில் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தும் விடயத்தில் இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட எல்லா நிபந்தனைகளுக்கும்; அல்லது

(ஈ) குற்றவியற் புலனாய்வுகள் தொடர்பில் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தும் விடயத்தில் இதற்கான அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட எல்லா நிபந்தனைகளுக்கும்,

இணங்கியொழுகினால் தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலானது சட்டமுறையானதாகவிருத்தல் வேண்டும்.

6. (1) தனிப்பட்ட தரவானது -

(அ) குறித்துரைக்கப்பட்டதும்

(ஆ) தெளிவானதும்; அத்துடன்

(இ) சட்டமுறையானதும்,

ஆன நோக்கங்களுக்காகச் செய்முறைப்படுத்தப்படுவதனை ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரும் உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தனிப்பட்ட தரவு அத்தகைய நோக்கங்களுடன் ஒத்ததாகவிராதவொரு முறையில் மேற்கொண்டு செய்முறைப்படுத்தப்படுதலுமாகாது.

(2) இச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பொதுமக்களின் அக்கறைகருதிய ஆவணக்காப்பு நோக்கங்களுக்காக, விஞ்ஞானரீதியிலான ஆராய்ச்சி, வரலாற்று முறையான ஆராய்ச்சி அல்லது புள்ளிவிபரஞ்சார் நோக்கங்களுக்காகக் கட்டுப்பாட்டாளர் ஒருவரினால் அத்தகைய தனிப்பட்ட தரவின் மேற்கொண்ட செய்முறைப்படுத்தலானது, (1)ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தொடக்க நோக்கங்களுடன் ஒவ்வாததாகவிருப்பதெனக் கருதப்படுதலாகாது.

7. செய்முறைப்படுத்தப்படுகின்ற தனிப்பட்ட தரவு, அத்தகைய தரவு எந்த நோக்கத்துக்காகச் சேகரிக்கப்படவேண்டுமோ அல்லது செய்முறைப்படுத்தப்படவேண்டுமோ அந்த நோக்கம் தொடர்பாக அவசியமாகவிருக்கின்றவாறான அளவுக்கு -

(அ) போதியதாகவும்;

(ஆ) இயைபானதாகவும்; அத்துடன்

(இ) விகிதாசாரப்படியானதாகவும்,

இருப்பதனை ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

8. ஏதேனும் செம்மையற்ற அல்லது காலங்கடந்த தனிப்பட்ட தரவைத் தகாத தாமதமின்றி அழித்துவிடுவதற்கான அல்லது நிவர்த்திசெய்வதற்கான ஒவ்வொரு நியாயமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுவருவதுடன் செய்முறைப்படுத்தப்படுகின்ற தனிப்பட்ட தரவு -

(அ) செம்மையானதாகவும்; அத்துடன்

(ஆ) நாளதுவரையாக வைத்திருக்கப்பட்டதாகவும்,

இருத்தல் வேண்டுமென்பதனை ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

9. செய்முறைப்படுத்தப்பட்டு வருகின்ற தனிப்பட்ட தரவு, அத்தகைய தனிப்பட்ட தரவு எந்த நோக்கங்களுக்காகச் செய்முறைப்படுத்தப்படுகின்றதோ அந்த நோக்கங்களுக்கு அவசியமாகக் கூடியவாறான அல்லது தேவைப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்காக மட்டுமே தரவுடன் தொடர்புபட்டோரை அடையாளங்காண்பதனை அனுமதிக்கின்றவொரு படிவத்தில் வைத்திருக்கப்படுவதனை ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரும் உறுதிப்படுத்துதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, தனிப்பட்ட தரவு பொதுமக்களின் அக்கறை கருதிய ஆவணக்காப்பு நோக்கங்களுக்காக, விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சி, வரலாற்றுமுறையான ஆராய்ச்சி அல்லது புள்ளிவிபரஞ்சார் நோக்கங்களுக்காக மேற்கொண்டு செய்முறைப்படுத்தப்பட வேண்டியவாறான அளவுவரை, நீட்டியகாலப் பகுதிகளுக்காகத் தனிப்பட்ட தரவைக் கட்டுப்பாட்டாளர் ஒருவர் களஞ்சியப்படுத்தலாம்.

10. (அ) தனிப்பட்ட தரவின் அதிகாரமளிக்கப்படாத அல்லது சட்டமுறையற்ற செய்முறைப்படுத்தலை; அல்லது

(ஆ) தனிப்பட்ட தரவின் இழப்பு, அழிவு அல்லது சேதத்தை,

தடுக்கும்வகையில் மறைமுகப்படுத்துதல், போலிமயமாக்குதல், அநாமதேயமாக்குதல் அல்லது அணுகுகைக் கட்டுப்பாடுகள் அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு வழிமுறைகள் உட்பட, தோதான தொழினுட்ப மற்றும் ஒழுங்கமைப்புச்சார் வழிமுறைகளைப் பயன்படுத்துவதன்மூலம், செய்முறைப்படுத்தப்பட்டுவருகின்ற தனிப்பட்ட தரவின் நேர்மையையும் அந்தரங்கத்தன்மையையும் ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

11. கட்டுப்பாட்டாளர் ஒருவர் -

(அ) அட்டவணை V இல் குறிப்பீடுசெய்யப்பட்ட தகவல்களையும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் பாகம் II இன்கீழ் விடுக்கப்பட்டவொரு கோரிக்கையைப் பின்பற்றி எடுக்கப்பட்ட ஏதேனும் முடிபு தொடர்பான தகவல்களையும்,

எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலம் மற்றும் சுருக்கமான, வெளிப்படையான, விளங்கத்தக்க அத்துடன் இலகுவாக

அணுகத்தக்க படிவத்தில் தரவுடன் தொடர்புபட்டோருக்கு வழங்குதல் வேண்டும்.

12. (1) பிரிவுகள் 5, 6, 7, 8, 9, 10 மற்றும் 11 என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் நோக்கத்துக்காக-

(அ) பிரிவுகள் 5, 6, 7, 8, 9, 10 மற்றும் 11 என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட தரவுப் பாதுகாப்புக் கடப்பாடுகளின் நடைமுறைப்படுத்துகை எம்முறையில் கட்டுப்பாட்டாளரினால் நிறைவேற்றப்படுகின்றதோ அம்முறையை எடுத்துக்காட்டுவதற்கு முறையாகப் பெயர்ப்பட்டியலிடப்பட்ட பதிவேடுகளை நிலைநாட்டிப் பேணுகின்றவையும்;

(ஆ) கட்டுப்பாட்டாளரின் செய்முறைப்படுத்தற் செயற்பாடுகளின் கட்டமைப்பு, அளவு, தொகை மற்றும் உணர்ச்சிக் கூர்மையின் அடிப்படையில் வடிவமைக்கப்படுகின்றவையும்;

(இ) பிரிவு 24 இல் குறித்துரைக்கப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீடுகளின் அடிப்படையின்மீது தோதான காப்புகளுக்காக ஏற்பாடுசெய்கின்றவையும்;

(ஈ) கட்டுப்பாட்டாளரின் ஆளுகைக் கட்டமைப்பினுள் ஒன்றிணைக்கப்படுகின்றவையும் ;

(உ) உள்ளக மேற்பார்வைப் பொறிமுறைகளைத் தாபிக்கின்றவையும்;

(ஊ) முறைப்பாடுகளையும் விசாரணைகளின் நடாத்துகையையும் பெறுவதற்கும் தனிப்பட்ட தரவின் மீறுகைகளை அடையாளங்காண்பதற்குமான பொறிமுறையொன்றைக் கொண்டிருக்கின்றவையும்;

(எ) காலாகாலக் கண்காணித்தலினதும் மதிப்பீடுகளினதும் அடிப்படையின்மீது நாளதுவரையாக்கப்படுகின்றவையும்; அத்துடன்

(ஏ) பிரிவுகள் 13, 14, 15, 16 மற்றும் 18 என்பவற்றின்கீழ் தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளினது பிரயோகத்தை வசதிப்படுத்துகின்றவையும்,

(இதனகத்துப்பின்னர் "தரவுப் பாதுகாப்பு முகாமை நிகழ்ச்சித் திட்டம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) உள்ளகக் கட்டுப்பாடுகளையும் நடவடிக்கைமுறைகளையும் நடைமுறைப்படுத்துவது ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரினதும் கடமையாதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, காலத்துக்குக்காலம், தரவுப்பாதுகாப்பு முகாமை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பிலான அத்தகைய வழிகாட்டு நெறிகளை வழங்குதல் வேண்டும்.

பாகம் II
தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகள்

13. (1) தரவுடன் தொடர்புபட்ட ஒவ்வொருவரும் கட்டுப்பாட்டாளருக்கு அத்தகைய தரவுடன் தொடர்புபட்டவரினால் செய்யப்பட்ட எழுத்திலான கோரிக்கையின்மேல், அத்தகைய தரவுடன் தொடர்புபட்டவரின் தனிப்பட்ட தரவுக்கான அணுக்கத்துக்கும், அத்தகைய தனிப்பட்ட தரவு செய்முறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றிய உறுதிப்படுத்துகை மற்றும் அட்டவணை V இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய தகவல்கள் வழங்கப்படுவதற்குமான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கட்டுப்பாட்டாளர், (1)ஆம் உட்பிரிவின்கீழ் தரவுடன் தொடர்புபட்டவரினால் செய்யப்பட்ட எழுத்திலானவொரு கோரிக்கையைப் பெற்றதன்மேல், 17ஆம் பிரிவுக்கமைய, அட்டவணை V இன்கீழ் வழங்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய தகவல்களைத் தரவுடன் தொடர்புபட்டவருக்கு வழங்குதல் வேண்டும்.

14. (1) தரவுடன் தொடர்புபட்ட ஒவ்வொருவரும் அத்தகைய செய்முறைப்படுத்தலானது இச்சட்டத்தின் அட்டவணை I இன் விடயம் (அ) வில் அல்லது அட்டவணை II இன் விடயம் (அ) வில் குறித்துரைக்கப்பட்ட ஏதுக்களினது அடிப்படையின்மீது இருப்பின், அத்தகைய தரவுடன் தொடர்புபட்டவரினால் விடுக்கப்பட்ட எழுத்திலான கோரிக்கையொன்றின்மேல் அவரது சம்மதத்தை எந்நேரத்திலும் மீளப்பெறுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்:

ஆயின், அத்தகைய சம்மதத்தை மீளப்பெறுதலானது, அத்தகைய மீளப்பெறுதலுக்குமுன்னர் இடம்பெற்ற ஏதேனும் செய்முறைப்படுத்தலின் சட்டமுறையானதன்மையைப் பாதித்தலாகாது.

(2) தரவுடன் தொடர்புபட்ட ஒவ்வொருவரும், அத்தகைய செய்முறைப்படுத்தலானது அட்டவணை I இன் விடயம் (உ) அல்லது (ஊ) இல் அல்லது அட்டவணை II இன் விடயம் (ஊ) இல் குறித்துரைக்கப்பட்ட ஏதுக்களினது அடிப்படையின்மீது இருப்பின், அத்தகைய தரவுடன் தொடர்புபட்டவர் தொடர்பான தனிப்பட்ட தரவை மேற்கொண்டு செய்முறைப்படுத்தாது தவிர்க்கும்படி எழுத்தில் கட்டுப்பாட்டாளர் ஒருவருக்குக் கோரிக்கைவிடுப்பதற்கு உரிமைகொண்டிருத்தல் வேண்டும்.

15. ஒன்றில் செம்மையற்றதாக அல்லது பூரணமற்றதாக உள்ளதும் தரவுடன் தொடர்புபட்டவர் தொடர்பானதுமான தனிப்பட்ட தரவை நிவர்த்திசெய்யும்படி அல்லது பூரணப்படுத்தும்படி தரவுடன் தொடர்புபட்ட ஒவ்வொருவரும் எழுத்தில் கட்டுப்பாட்டாளருக்குக் கோரிக்கை விடுப்பதற்கு உரிமைகொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கட்டுப்பாட்டாளர், தரவுடன் தொடர்புபட்டவரினால் விடுக்கப்பட்ட அத்தகையவோர் எழுத்திலான கோரிக்கையின்மேல், 17ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, தகாத தாமதமின்றித் தனிப்பட்ட தரவை நிவர்த்திசெய்தல் வேண்டும் அல்லது பூரணப்படுத்துதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் ஏற்பாடுகள், செய்முறைப்படுத்தல் நோக்கத்துக்காகத் தேவைப்படாத ஏதேனும் மேலதிக தனிப்பட்ட தரவைச் சேகரிப்பதற்கும் செய்முறைப்படுத்துவதற்கும் கட்டுப்பாட்டாளர் ஒருவர் மீது ஏதேனும் கடப்பாட்டைச் சுமத்துதலாகாது:

ஆயின், மேலும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அல்லது ஒரு தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் கட்டளையொன்றின்மீது சான்றுரீதியிலான நோக்கங்களுக்காகத் தனிப்பட்ட தரவைப் பேணுவதற்குக் கட்டுப்பாட்டாளர் ஒருவர் தேவைப்படுத்தப்படுமிடத்து, கட்டுப்பாட்டாளர், நிவர்த்தி செய்யாமல் அத்தகைய தனிப்பட்ட தரவை மேற்கொண்டு செய்முறைப்படுத்தாது தவிர்த்தல் வேண்டும்.

16. தரவுடன் தொடர்புபட்ட ஒவ்வொருவரும், பின்வரும் சூழ்நிலைகளின்கீழ் அவரது தனிப்பட்ட தரவு அழித்துவிடப்படுவதற்காகக் கட்டுப்பாட்டாளருக்கு எழுத்திலான கோரிக்கையொன்றை விடுப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலானது பிரிவுகள் 5, 6, 7, 8, 9, 10 மற்றும் 11 என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட கடப்பாடுகளுக்கு முரணாக நிறைவேற்றப்படுமிடத்து

(ஆ) தரவுடன் தொடர்புபட்டவர் அட்டவணை I இன் விடயம் (அ) வுக்கு அல்லது அட்டவணை II இன் விடயம் (அ) வுக்கு இணங்க, செய்முறைப்படுத்தலானது எந்தச் சம்மதத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதோ அந்தச் சம்மதத்தை மீளப்பெறுமிடத்து

(இ) தனிப்பட்ட தரவை அழித்துவிடுவதற்கான தேவைப்பாடு, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது தரவுடன் தொடர்புபட்டவர் அல்லது கட்டுப்பாட்டாளர் எந்தத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்துக்கு அமைந்தவராகவுள்ளாரோ அந்தத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் கட்டளையொன்றின்மீது தேவைப்படுத்தப்படுமிடத்து.

17. (1) பிரிவுகள் 13, 14, 15 அல்லது 16 என்பவற்றின்கீழ் கட்டுப்பாட்டாளரொருவர் தரவுடன் தொடர்புபட்ட ஒருவரிடமிருந்து எழுத்திலான கோரிக்கையொன்றைப் பெறுமிடத்து, அத்தகைய கட்டுப்பாட்டாளர் அத்தகைய கோரிக்கைத் தேதியிலிருந்து இருபத்தொரு வேலை நாட்களினுள் -

(அ) அத்தகைய கோரிக்கை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

(ஆ) அத்தகைய வெளிவிடுகை ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தடைசெய்யப்பட்டாலொழிய, அத்தகைய கோரிக்கை (2)ஆம் உட்பிரிவின்கீழ் மறுக்கப்பட்டுள்ளதா என்பதையும் அதற்கான காரணங்களையும் அல்லது

(இ) கட்டுப்பாட்டாளர், 14(2) அல்லது 15 ஆம் பிரிவுகளின்கீழ் அத்தகைய தனிப்பட்ட தரவை மேற்கொண்டு செய்முறைப்படுத்துவதனைத் தவிர்த்துள்ளாரா என்பதையும், அதற்கான காரணங்களையும்,

தரவுடன் தொடர்புபட்டவருக்கு எழுத்தில் தெரிவித்தல் வேண்டுமென்பதுடன் (ஆ) அல்லது (இ) என்னும் பந்திகளின்கீழ் கட்டுப்பாட்டாளரினால் செய்யப்பட்ட முடிபுகள் தொடர்பில் தரவுடன் தொடர்புபட்டவருக்கு மேன்முறையீட்டுரிமை கிடைக்கக் கூடியதாகவுள்ளமையைத் தெரிவித்தலும் வேண்டும்.

(2) கட்டுப்பாட்டாளர், பின்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு, தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவரினால் இச்சட்டத்தின் பிரிவுகள் 13, 14, 15 அல்லது 16 என்பவற்றின்கீழ் விடுக்கப்பட்டவொரு கோரிக்கையின்மீது செயலாற்றுவதற்கு மறுக்கலாம்:-

(அ) தேசிய பாதுகாப்பு;

(ஆ) பொதுமக்கள் ஒழுங்கமைதி;

(இ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட ஏதேனும் விசாரணை, புலனாய்வு அல்லது நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைமுறை;

(ஈ) குற்றவியல் தவறுகளைத் தடுத்தலும், கண்டுபிடித்தலும், புலனாய்வுசெய்தலும் அல்லது அவற்றுக்கெதிராகக் குற்றவழக்குகளைத் தொடுத்தலும்;

(உ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஏனைய ஆட்களின் உரிமைகளும் சுதந்திரங்களும்;

(ஊ) உட்பிரிவு (4)இன் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய கோரிக்கையின்மீது செயலாற்றுவதற்குக் கட்டுப்பாட்டாளரின் தொழில்நுட்ப மற்றும் தொழிற்பாடுசார் சாத்தியம்;

(எ) உட்பிரிவு (4)இன் ஏற்பாடுகளுக்கமைய, தரவுடன் தொடர்புபட்டவரின் ஆளடையாளத்தை நிலைநாட்டுவதற்குக் கட்டுப்பாட்டாளரின் இயலாமை; அல்லது

(ஏ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துவதற்கான தேவைப்பாடு.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான ஏதேனும் மறுப்புக்கான காரணங்களைக் கட்டுப்பாட்டாளரொருவர் பதிதல் வேண்டுமென்பதுடன் அதிகாரசபையின் எழுத்திலான கோரிக்கையொன்றின் மேல் அத்தகைய பதிவேடுகளை அதிகாரசபைக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(4) பிரிவுகள் 13, 14, 15 அல்லது 16 என்பவற்றின்கீழ் கோரிக்கையொன்றை விடுக்கின்ற தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவரின் ஆளடையாளத்தை நிலைநாட்டுவதற்குக் கட்டுப்பாட்டாளர் ஒருவர் இயலாதவராகவுள்ளவிடத்து, அத்தகைய கட்டுப்பாட்டாளர், அத்தகைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குக் கட்டுப்பாட்டாளரை இயலச்செய்வதற்கு மேலதிகத் தகவலை வழங்கும்படி தரவுடன் தொடர்புபட்டவருக்குக் கோரிக்கை விடுக்கலாம்.

(5) இப்பாகத்தின் கீழ் தரவுடன் தொடர்புபட்ட ஒருவருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் உரிமை-

(அ) தரவுடன் தொடர்புபட்டவர் பராயமடையாத ஒருவராகவிருக்குமிடத்து, பெற்றோரினால் அல்லது பராயமடையாதவர்மீது பெற்றோருக்குள்ள அதிகாரத்தைக் கொண்டுள்ள அல்லது அவரது சட்டப் பாதுகாவலராக நியமிக்கப்பட்டுள்ள ஆளொருவரினால்; அல்லது

(ஆ) தரவுடன் தொடர்புபட்டவர் உடல்ரீதியில் அல்லது உளரீதியில் தகுதியற்றவராகவிருக்குமிடத்து, நீதிமன்றமொன்றினால் அவரது பாதுகாவலராக அல்லது நிருவாகியாக நியமிக்கப்பட்டுள்ள ஆளொருவரினால்; அல்லது

(இ) பந்திகள் (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயங்களிற்றவிர, இப்பாகத்தின்கீழ் கோரிக்கையொன்றை விடுப்பதற்குத் தரவுடன் தொடர்புபட்டவரினால் எழுத்தில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால்; அல்லது

(ஈ) இறந்தவராகவுள்ள தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவர் இறந்த தேதியிலிருந்து பத்தாண்டுக் காலப்பகுதியொன்றினுள் அத்தகைய தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கான மரபுரிமையாளரொருவரினால், ஒழுங்குவிதிகளின் மூலம் விதித்துரைக்கப்பட்ட முறையில் பிரயோகிக்கப்படலாம்.

(6) பிரிவுகள் 13, 14, 15 அல்லது 16 என்பவற்றின்கீழ் தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவரினால் விடுக்கப்பட்ட கோரிக்கையொன்று இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்மூலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணங்களுடன் சேர்த்து அனுப்பப்படலாம்.

(7) உட்பிரிவு (6)இன் கீழ் கட்டணமொன்று விதிக்கப்படுமிடத்து, கட்டுப்பாட்டாளர், அத்தகைய கட்டணங்கள் பற்றிய விபரங்களையும் அவற்றைவிதிப்பதற்கான காரணங்களையும் தரவுடன் தொடர்புபட்டவருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

18. (1) பத்தொன்பதாம் பிரிவுக்கமைய, தரவுடன் தொடர்புபட்டவர் ஒவ்வொருவரும், தன்னியக்கமாக்கப்பட்ட செய்முறைப்படுத்தலின் அடிப்படையின் மீது மட்டுமேயானதும், எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழ் தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் மீது எதிர்மாறாக்கப்பட முடியாத, தொடர்ச்சியான தாக்கத்தை உருவாக்கியுள்ளதும் அல்லது உருவாக்கும் சாத்தியங்கொண்டதுமான அத்தகைய கட்டுப்பாட்டாளரொருவரின் முடிபொன்றைப் பரிசீலனைசெய்யும்படி அக்கட்டுப்பாட்டாளருக்குக் கோரிக்கைவிடுப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) தன்னியக்கமாக்கப்பட்ட செய்முறைப்படுத்தலின் அடிப்படையின்மீது கட்டுப்பாட்டாளர் ஒருவரின் முடிபொன்று-

(அ) கட்டுப்பாட்டாளர் ஒருவர் எந்த எழுத்திலான சட்டத்துக்கு அமைந்தவராகவுள்ளாரோ அந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றவிடத்து;

(ஆ) அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்டவொரு முறையில் அதிகாரமளிக்கப்படுகின்றவிடத்து;

(இ) தரவுடன் தொடர்புபட்டவரினதும் சம்மதத்தின் அடிப்படையிலுள்ளவிடத்து; அல்லது

(ஈ) தரவுடன் தொடர்புபட்டவருக்கும் கட்டுப்பாட்டாளருக்கும் இடையேயான ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்வதற்காக அல்லது புரிவதற்காக அவசியமாகவுள்ளவிடத்து,

(1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது என்பதுடன் கட்டுப்பாட்டாளர், தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் காப்பதற்கு அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் அதிகாரசபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வழிமுறைகளுக்கும் ஏற்புடையற்பாலனவான கட்டளைக்கற்களுக்கும் இணங்கியொழுகுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், (ஈ) என்னும் பந்தியின் கீழான தேவைப்பாடு, தனிப்பட்ட தரவின் விசேட வகுதிகளுக்கு ஏற்புடையதாதலாகாது.

19. (1) கட்டுப்பாட்டாளர் ஒருவர்

(அ) பிரிவு 14இன் கீழ் தனிப்பட்ட தரவை மேற்கொண்டு செய்முறைப்படுத்துவதனைத் தவிர்க்காதுள்ளவிடத்து; அல்லது

(ஆ) பிரிவு 15இன் கீழ் தனிப்பட்ட தரவை நிவர்த்தி செய்வதற்கு அல்லது பூரணப்படுத்துவதற்கு மறுத்துள்ளவிடத்து; அல்லது

(இ) பிரிவு 16இன் கீழ் தனிப்பட்ட தரவை அழித்துவிடுவதற்கு மறுத்துள்ளவிடத்து; அல்லது

(ஈ) பிரிவு 17(2)இன் கீழ் தனிப்பட்ட தரவுடன் தொடர்புபட்டவரின் கோரிக்கையை மறுத்துள்ளவிடத்து; அல்லது

(உ) பிரிவு 18(1)இன் கீழ் தன்னியக்கமாக்கப்பட்ட செய்முறைப்படுத்தலின் அடிப்படையின்மீது மட்டுமேயுள்ள முடிபொன்றைப் பரிசீலனை செய்வதற்கான கோரிக்கையை மறுத்துள்ளவிடத்து,

தரவுடன் தொடர்புபட்டவர் விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவத்திலும், முறையிலும் அத்தகைய காலப்பகுதியினுள்ளும் அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) (அ) பிரிவு 14இன் கீழ் தனிப்பட்ட தரவை மேற்கொண்டு செய்முறைப்படுத்துவதிலிருந்து தவிர்க்காதுதிருப்பதற்குக் கட்டுப்பாட்டாளரின் முடிபு சட்டமுறையானதாக இருந்ததாவென்பதையும்;

(ஆ) பிரிவு 15இன் கீழ் தனிப்பட்ட தரவை நிவர்த்தி செய்வதற்கு அல்லது பூரணப்படுத்துவதற்குக் கட்டுப்பாட்டாளரின் முடிபு சட்டமுறையானதாக இருந்ததாவென்பதையும்;

(இ) பிரிவு 16 இன் கீழ் தனிப்பட்ட தரவை அழித்துவிடுவதற்குக் கட்டுப்பாட்டாளரின் முடிபு சட்டமுறையானதாக இருந்ததாவென்பதையும்;

(ஈ) பிரிவு 17(2)இன் கீழ் கட்டுப்பாட்டாளரினாலான மறுப்பு சட்டமுறையானதாக இருந்ததாவென்பதையும்;

(உ) பிரிவு 18(1)இன் கீழ் தன்னியக்கமாக்கப்பட்ட செய்முறைப்படுத்தலின் அடிப்படையின்மீது மட்டுமேயுள்ள முடிபொன்றைப் பரிசீலனை செய்வதற்கான மறுப்பு சட்டமுறையானதாக இருந்ததாவென்பதையும், அதிகாரசபை தீர்மானிக்கலாம்.

(3) அவசியமான புலனாய்வுகளை நிறைவுசெய்த பின்னர், அதிகாரசபையானது, மேன்முறையீடு அனுமதிக்கப்படுகின்றதா அல்லது அதற்கு அனுமதிமறுக்கப்படுகின்றதா என்பதை விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் அதிகாரசபையானது, அத்தீர்மானத்தை, அதற்கான காரணங்களுடன் தரவுடன் தொடர்புபட்டவருக்கும் கட்டுப்பாட்டாளருக்கும் தெரிவித்தலும் வேண்டும்.

(4) அதிகாரசபையானது (2)ஆம் உட்பிரிவின் கீழ் மேன்முறையீட்டை அனுமதிக்குமிடத்து, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அதிகாரசபையின் முடிபுக்குப் பயன்கொடுப்பதற்குக் கட்டுப்பாட்டாளர் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன் அதிகாரசபையின் முடிபுக்குப் பயன்கொடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தரவுடன் தொடர்புபட்டவருக்கும் அதிகாரசபைக்கும் கட்டுப்பாட்டாளர் தெரிவித்தலும் வேண்டும்.

(5) அதிகாரசபையின் முடிபினால் இன்னலுறும் எவரேனும் தரவுடன் தொடர்புபட்டவர் அல்லது கட்டுப்பாட்டாளர், அத்தகைய முடிபுத்தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

பாகம் III

கட்டுப்பாட்டாளர்களும் செய்முறைப்படுத்துநர்களும்

20. (1) ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரும் செய்முறைப்படுத்துநரும், பின்வரும் சூழ்நிலைகளில், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்குத் தரவுப் பாதுகாப்பு அலுவலரொருவரைப் பெயர்குறித்தல் வேண்டும் அல்லது நியமித்தல் வேண்டும்:-

(அ) அவர்களின் நீதிமுறைப் பதவியில் செயலாற்றுகின்ற நீதித்துறை தவிர, செய்முறைப்படுத்தலானது ஓர் அமைச்சினால், அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் நிறைவேற்றப்படுகின்றவிடத்து அல்லது

(ஆ) கட்டுப்பாட்டாளரினாலான அல்லது செய்முறைப்படுத்துநரினாலான நிறைவேற்றப்பட்ட செய்முறைப்படுத்தலின்மையச் செயற்பாடுகள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்குமிடத்து:-

(i) அவற்றின் தன்மையின், அவற்றின் நோக்கெல்லையின் அல்லது அவற்றின் நோக்கங்களின் பயனைக்கொண்டு விதித்துரைக்கப்படுகின்றவாறானவோர் அளவிலும் முக்கியத்துவத்திலும் தரவுடன் தொடர்புபட்டோரின் கிரமமான மற்றும் முறையான கண்காணிப்பைத் தேவைப்படுத்துகின்ற தொழிற்பாடுகள்; அல்லது

(ii) விதித்துரைக்கப்படுகின்றவாறானவோர் அளவிலும் முக்கியத்துவத்திலும் தனிப்பட்ட தரவின் விசேட வகுதிகளைச் செய்முறைப்படுத்தல்; அல்லது

(iii) செய்முறைப்படுத்தலின் தன்மையினதும் தரவுடன் தொடர்புபட்டோரின் மீதான அதன் தாக்கத்தினதும் அடிப்படையில் இச்சட்டத்தின்கீழ் பாதுகாக்கப்பட்ட தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளைப் பாதிக்கின்றதும் தீங்கேற்படும் ஆபத்தை விளைவிக்கின்றதுமான செய்முறைப்படுத்தல்.

(2) தரவுப் பாதுகாப்பு அலுவலர் ஒருவர், விதித்துரைக்கப்படக் கூடியவாறான இயைபான கல்விசார் மற்றும் உயர்தொழில்சார் தகைமைகளை உடையவராகவிருத்தல் வேண்டும்; இது, தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தலுடன் தொடர்புபட்ட விசாரணைகளுக்கும் சம்பவங்களுக்கும் பதிலிறுப்பதற்கு மூலோபாயங்களையும் பொறிமுறைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கான தகுதியையும் ஆற்றலையும் கொண்டிருக்கின்ற தரவுப் பாதுகாப்புத் தொடர்பான கருமங்களில் கல்விசார் பின்னணி, அறிவு மற்றும் தொழில்நுட்பத் தேர்ச்சிகளையும் உள்ளடக்கலாம்.

(3) கட்டுப்பாட்டாளர் உருவகங்களைக் கொண்ட ஒரு தொகுதியாக இருக்குமிடத்து, அத்தகைய கட்டுப்பாட்டாளர், ஒவ்வோர் உருவகத்தினாலும் இலகுவானமுறையில் அணுகத்தக்கவராகவுள்ள தனியொரு தரவுப் பாதுகாப்பு அலுவலரொருவரை நியமிக்கலாம். கட்டுப்பாட்டாளர் ஒருவர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவர் ஒரு பகிரங்க அதிகாரசபையாக இருக்குமிடத்து, அத்தகைய பல்வேறு பகிரங்க அதிகாரசபைகளின் ஒழுங்கமைப்புச்சார் கட்டமைப்புகளைக் கணக்கிற்கெடுத்து, அவற்றுக்கான தனியொரு தரவுப் பாதுகாப்பு அலுவலர் பெயர்குறிக்கப்படலாம்.

(4) ஒரு கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் தரவுப் பாதுகாப்பு அலுவலரின் தொடர்பு விபரங்களை வெளியிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விபரங்களை அதிகாரசபைக்கு அறிவித்தலும் வேண்டும்.

(5) தரவுப் பாதுகாப்பு அலுவலரின் பொறுப்புடைமை பின்வருமாறாக இருத்தல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தரவுச் செய்முறைப்படுத்தல் தேவைப்பாடுகள் பற்றிக் கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்கு மற்றும் அவர்களின் ஊழியர்களுக்கு மதியுரையளித்தல்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவெனக் கட்டுப்பாட்டாளரின் அல்லது செய்முறைப்படுத்துநரின் சார்பில் உறுதிப்படுத்துதல்;

(இ) தரவுச் செய்முறைப்படுத்தல் தொழிற்பாடுகளில் சம்பந்தப்பட்ட பணியாட்டொகுதியினரின் ஆற்றலைக் கட்டியெழுப்புவதனை வசதிப்படுத்துதல்;

(ஈ) தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீடுகள் பற்றி மதியுரை வழங்குதல்; அத்துடன்

(உ) தரவுப் பாதுகாப்புத் தொடர்பான கருமங்கள் மீது அதிகாரசபையினால் வழங்கப்பட்ட எல்லாப் பணிப்புரைகளுடனும் அறிவுறுத்தல்களுடனும் ஒத்துழைத்தல் மற்றும் அவற்றுக்கு இணங்கியொழுகுதல்.

21. (1) ஒரு கட்டுப்பாட்டாளர் சார்பில் செய்முறைப்படுத்துநர் ஒருவரினால் செய்முறைப்படுத்தல் நிறைவேற்றப்படவுள்ளவிடத்து, கட்டுப்பாட்டாளர்-

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்குத்தோதான தொழில்நுட்ப மற்றும் ஒழுங்கமைப்புச்சார் வழிமுறைகள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துகின்றவர்களும் இச்சட்டத்தின் கீழ் தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளினது பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றவர்களுமான செய்முறைப்படுத்துநர்களை மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) செய்முறைப்படுத்தலின் விடயப்பொருளும் காலநீட்சியும், செய்முறைப்படுத்தலின் தன்மையும் நோக்கமும், தனிப்பட்ட தரவின் வகையும் தரவுடன் தொடர்புபட்டோரின் வகுதிகளும் மற்றும் கட்டுப்பாட்டாளரின் கடப்பாடுகளும் என்பவற்றை எடுத்துக்கூறுகின்ற ஓர் ஒப்பந்தத்தினால் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளினால் அத்தகைய செய்முறைப்படுத்துநர் பிணிக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட கட்டுப்பாட்டாளர்கள் செய்முறைப்படுத்தலின் நோக்கங்களையும் வழிவகைகளையும் கூட்டாகத் தீர்மானிக்குமிடத்து, அத்தகைய கட்டுப்பாட்டாளர்கள் "கூட்டுக் கட்டுப்பாட்டாளர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர்கள் இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குக் கூட்டாகப் பொறுப்பாதலும் வேண்டும்.

22. (1) செய்முறைப்படுத்துநர் ஒருவர் கட்டுப்பாட்டாளரின் சார்பில் செய்முறைப்படுத்தற் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவிடத்து, அச்செய்முறைப்படுத்துநர்-

(அ) செய்முறைப்படுத்தற் செயற்பாடுகள் கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான அறிவுறுத்தல்களின் மீது மட்டுமே நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஆ) தோதான தொழில்நுட்ப மற்றும் ஒழுங்கமைப்புச்சார் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அந்தரங்கத்தன்மை மற்றும் இரகசியத்தன்மை பற்றிய ஒப்பந்தமுறையான கடப்பாடுகளினால் அதன் ஆளணியினர் பிணிக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(இ) செய்முறைப்படுத்தலின் தன்மையையும் செய்முறைப்படுத்துநருக்குக் கிடைக்கக்கூடிய தகவல்களையும் கணக்குக்கெடுத்து, கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான கோரிக்கையின்மேலான சோதனைகளுட்பட, இணங்கியொழுகுகைக் கணக்காய்வுகளைக் கட்டுப்பாட்டாளர் நிறைவேற்றுவதனை வசதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான அறிவுறுத்தல்களின் மேல், செய்முறைப்படுத்தல் தொடர்பான சேவைகளின் வழங்குகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் தனிப்பட்ட தரவு பற்றி ஏலவேயுள்ள பிரதிகளை அழித்துவிடுதல் வேண்டும் அல்லது எல்லாத் தனிப்பட்ட தரவுகளையும் திருப்பிக்கொடுத்தல் வேண்டும்.

(2) செய்முறைப்படுத்துநர் ஒருவர், (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து அல்லது செய்முறைப்படுத்தலின் நோக்கங்களையும் வழிவகைகளையும் தானாகவே தீர்மானிக்குமிடத்து, அத்தகைய செய்முறைப்படுத்துநர், அத்தகைய செய்முறைப்படுத்தல் தொடர்பில், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு கட்டுப்பாட்டாளராக இருக்கின்றவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) குறித்த செய்முறைப்படுத்தற் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக (இதனகத்துப் பின்னர், "உப செய்முறைப்படுத்துநர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வேறொரு செய்முறைப்படுத்துநரைச் செய்முறைப்படுத்துநர் ஒருவர் ஈடுபடுத்துமிடத்து, இப்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய உப செய்முறைப்படுத்துநருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) உபசெய்முறைப்படுத்துநரொருவர் (3)ஆம் உட்பிரிவின் கீழ் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறுமிடத்து, அத்தகைய உபசெய்முறைப்படுத்துநரின் கடப்பாடுகளைப் புரிவதற்காக அல்லது நிறைவேற்றுவதற்காகச் செய்முறைப்படுத்துநர் கட்டுப்பாட்டாளருக்குப் பொறுப்பாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "ஆளணியினர்" என்பது, எவரேனும் ஊழியர், ஆலோசகர், முகவர், இணையாளர் அல்லது தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துவதற்குச் செய்முறைப்படுத்துநரினால் ஒப்பந்தத்தின் மூலம் ஈடுபடுத்தப்பட்ட எவரேனுமாள் என்று பொருளாகும்.

23. (1) தனிப்பட்ட தரவு மீறுகையொன்று ஏற்படும் பட்சத்தில், கட்டுப்பாட்டாளர் ஒருவர், இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும், படிவத்திலும், அத்தகைய காலப்பகுதியினுள்ளும் அத்தகைய தனிப்பட்ட தரவு மீறுகை தொடர்பாக அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள் என்ற வகையாகப் பின்வருவனவற்றுக்காக ஏற்பாடு செய்தல் வேண்டும்:-

(அ) அத்தகைய தரவுமீறுகை பற்றி அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட வேண்டிய சூழ்நிலைகள்;

(ஆ) பாதிக்கப்பட்ட தரவுடன் தொடர்புபட்டவருக்கு அறிவிக்கப்பட வேண்டிய சூழ்நிலைகள்; அத்துடன்

(இ) அத்தகைய அறிவிப்பின் படிவமும், அதனைச் செய்யும் முறையும், தரவுமீறுகை தொடர்பாக அத்தகைய அறிவிப்பில் வழங்கப்படவேண்டிய தகவல்களும்.

24. (1) (அ) தோற்றுருவம் செய்தல் உட்பட, தனிப்பட்ட தரவின் அல்லது தரவின் விசேட வகுதிகளின் முறைமையான மற்றும் பரந்தளவிலான மதிப்பீடொன்றை;

(ஆ) பகிரங்க ரீதியில் அணுகத்தக்க இடப் பிரதேசங்களின் அல்லது தொலைத்தொடர்பு வலையமைப்புகளின் முறைமையான கண்காணிப்பொன்றை; அல்லது

(இ) ஒரு செய்முறைப்படுத்தற் செயற்பாட்டின் நோக்கெல்லையையும் இணைந்த ஆபத்துக்களையும் கவனத்துட்கொண்டு விதிகள் என்றவகையாகத் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அந்தச் செய்முறைப்படுத்தலொன்றை,

உட்படுத்துகின்ற ஏதேனும் செய்முறைப்படுத்தலைக் கட்டுப்பாட்டாளர் ஒருவர் நிறைவேற்றுவதற்கு உட்கருதுமிடத்து, அத்தகைய கட்டுப்பாட்டாளர், அத்தகைய செய்முறைப்படுத்தலுக்கு முன்னர், இச்சட்டத்தின் பாகம் Iஇன் கீழ் கட்டுப்பாட்டாளருக்குச் சுமத்தப்பட்ட கடப்பாடுகள்மீது உட்கருதப்பட்ட செய்முறைப்படுத்தலின் தாக்கத்தையும் இச்சட்டத்தின் பாகம் IIஇன் கீழ் தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளையும் நிச்சயிப்பதற்கு, விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஒரு படிவத்திலும் முறையிலும் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீடொன்றை நிறைவேற்றுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட செய்முறைப்படுத்தலின் மூலம் தரவுடன் தொடர்புபட்டவருக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் தீங்குக்கான ஆபத்தைத் தணிப்பதற்குத் கட்டுப்பாட்டாளரினால் எடுக்கப்பட்ட எவையேனும் வழிமுறைகளும் காப்புகளும் உட்பட்ட அத்தகைய தகவல்களையும் விபரங்களையும் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீடு கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத்தாக்க மதிப்பீடொன்றை நிறைவேற்றும்போது, கட்டுப்பாட்டாளர், பெயர்குறிக்கப்பட்டவிடத்து, தரவுப் பாதுகாப்பு அலுவலரின் உதவியை நாடுதல் வேண்டும்.

(4) எந்தச் செய்முறைப்படுத்தலுக்காகத் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீடு ஏலவே நிறைவேற்றப்பட்டுள்ளதோ அந்தச் செய்முறைப்படுத்தலில் கடைப்பிடிக்கப்பட்ட முறைமையியல், தொழில்நுட்பவியல் அல்லது நடைமுறையில் ஏதேனும் மாற்றம் இருக்கும்போதெல்லாம் கட்டுப்பாட்டாளர், இப்பிரிவுக்கிணங்கப் புதிய தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீட்டை நடாத்துதல் வேண்டும்.

(5) கட்டுப்பாட்டாளர் இப்பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்படும் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீட்டை அதிகாரசபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அதிகாரசபையினால் செய்யப்பட்ட எழுத்திலான கோரிக்கையின் மீது, செய்முறைப்படுத்தலின் இணங்கியொழுகுகை

மீது மற்றும் தரவுடன் தொடர்புபட்டவரின் தனிப்பட்ட தரவைப் பாதுகாத்தலுடன் இணைந்த தீங்கின் எவையேனும் ஆபத்துக்கள் மற்றும் அதிகாரசபையினால் விதந்துரைக்கப்பட்ட தொடர்புபட்ட காப்புகள் தொடர்பில் மதிப்பீடொன்றைச் செய்யும் நோக்கத்துக்காக வேறெவையேனும் தகவல்களை வழங்குதலும் வேண்டும்.

25. (1) செய்முறைப்படுத்தலானது இச்சட்டத்தின் கீழ் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளுக்குத் தீங்கேற்படுத்தும் ஆபத்தொன்றை விளைவிக்கக்கூடுமென 24ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீடொன்று சுட்டிக்காட்டுமிடத்து, கட்டுப்பாட்டாளர் ஒருவர், தனிப்பட்ட தரவின் ஏதேனும் செய்முறைப்படுத்தலுக்குமுன்னர் அத்தகைய தீங்கேற்படுத்தும் ஆபத்தைத் தணிப்பதற்கு அத்தகைய வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

(2) கட்டுப்பாட்டாளர் ஒருவர், (1)ஆம் உட்பிரிவின் கீழான வழிமுறைகளை எடுத்துள்ளமையைப் பொருட்படுத்தாது, தரவுடன் தொடர்புபட்டவருக்கு அத்தகைய தீங்கேற்படுத்தும் ஆபத்துக்களைத் தணிப்பதற்கு இயலாதவராக உள்ளவிடத்து, அத்தகைய கட்டுப்பாட்டாளர் அத்தகைய செய்முறைப்படுத்தலுக்குமுன்னர் அதிகாரசபையைக் கலந்தாலோசிக்கலாம்.

(3) அத்தகைய கலந்தாலோசனையின்மேல், அதிகாரசபையானது, தரவுடன் தொடர்புபட்டவருக்குத் தீங்கேற்படுத்தும் ஏதேனும் ஆபத்தைத் தணிப்பதற்கு மேலதிக வழிமுறைகளை எடுக்கும்படி அல்லது அத்தகைய செய்முறைப்படுத்தலிலிருந்து இல்லாதொழியும்படி கட்டுப்பாட்டாளரைத் தேவைப்படுத்தி அவருக்கு எழுத்திலான அறிவுறுத்தல்களை வழங்கலாம்.

(4) கட்டுப்பாட்டாளர் (2)ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரசபையைக் கலந்தாலோசிக்குமிடத்து, கட்டுப்பாட்டாளர், அதிகாரசபையினால் கோரப்படக்கூடியவாறாக எவையேனும் மேலதிகத் தகவல்களை வழங்குதல் வேண்டும்.

(5) கட்டுப்பாட்டாளர் ஏதேனும் நியாயமான காரணமின்றி அதிகாரசபையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அத்தகைய கட்டுப்பாட்டாளர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுபவராதல் வேண்டும்.

(6) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அட்டவணை II இன் (ஆ), (ஊ), (எ) மற்றும் (ஏ) என்னும் விடயங்களில் குறிப்பீடுசெய்யப்பட்ட தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தும்போது அத்தகைய செய்முறைப்படுத்தலானது, அட்டவணை II இன்கீழ் தேவைப்படுத்தப்பட்ட தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அத்தகைய வழிமுறைகளையும் தோதான காப்புகளையும் வழங்கியுள்ளதெனக் கருதப்படுவதாக வெளிப்படுத்தப்படுகின்றது.

(7) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பிரிவு 24(1)இல் குறிப்பீடுசெய்யப்படும் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துவதில் கட்டுப்பாட்டாளர் ஈடுபடும் போதெல்லாம் அத்துடன் அத்தகைய செய்முறைப்படுத்தலானது, தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கமைதி மற்றும் பொதுச் சுகாதாரம் தொடர்பாக ஒரு கட்டுப்பாட்டாளரினால் நிறைவேற்றப்படுமிடத்து, கட்டுப்பாட்டாளர் அதிகாரசபையைக் கலந்தாலோசித்தல் வேண்டும்.

26. (1) பகிரங்க அதிகாரசபையொன்று ஒரு கட்டுப்பாட்டாளராக அல்லது செய்முறைப்படுத்துநராகத் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துமிடத்து, அத்தகைய தனிப்பட்ட தரவு, அதிகாரசபையானது, விடயத்துக்கேற்ப, அக்கட்டுப்பாட்டாளருடனான அல்லது செய்முறைப்படுத்துநருடனான மற்றும் இயைபான ஒழுங்குபடுத்தும் அல்லது நியதிச்சட்டமுறையான குழுவுடனான கலந்தாலோசனையுடன் ஒரு மூன்றாம் நாட்டில் செய்முறைப்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடியனவும், (2)ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட போதுமாந்தன்மை முடிபொன்றைப் பின்பற்றி அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்டனவுமான தனிப்பட்ட தரவின் வகுதிகளை வகுப்பாக்கஞ் செய்தாலொழிய, இலங்கையில் மட்டுமே செய்முறைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் ஒரு மூன்றாம் நாட்டில் செய்முறைப்படுத்தப்படுதலுமாகாது.

(2) (அ) "போதுமாந்தன்மை முடிபு" ஒன்றைச் செய்யும் நோக்கத்துக்காக, அமைச்சர், அதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடன், ஒரு மூன்றாம் நாட்டில் தனிப்பட்ட தரவைப் பாதுகாத்தல் தொடர்பாக இயைபான எழுத்திலான சட்டத்தையும் வலுவுறுத்தற் பொறிமுறைகளையும் மற்றும் இச்சட்டத்தின் பாகம் I, பாகம் II என்பவற்றினதும் பாகம் III இன் பிரிவுகள் 20, 21, 22, 23, 24 மற்றும் 25 என்பவற்றினதும் ஏற்பாடுகளின் ஏற்புடைமையையும் எல்லைக்கப்பாலான தரவோட்டத்தின் நோக்கத்துக்காக ஒரு மூன்றாம் நாட்டில் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தல் தொடர்பான அத்தகைய வேறு விதித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்களையும் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) இவ்வுட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் போதுமாந்தன்மை முடிபு

(i) அத்தகைய முடிபுகளைப் பாதிக்கக் கூடியவையும் ஒரு மூன்றாம் நாட்டிலுள்ளவையுமான அபிவிருத்திகளின் காலாகாலக் கண்காணிப்புக்கு அமையவிருத்தல் வேண்டுமென்பதுடன் அமைச்சர் அத்தகைய முடிபை ஆகக்குறைந்தது இரண்டாண்டுகளுக்கு ஒருதடவையேனும் பரிசீலனைசெய்யலாம்; அத்துடன்

(ii) அதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் திருத்தப்படும்வரை அல்லது இல்லாதொழிக்கப்படும்வரை வலுவில் இருத்தல் வேண்டும்.

(3) ஒரு பகிரங்க அதிகாரசபையல்லாத கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவர், தனிப்பட்ட தரவை

(அ) ஒரு போதுமாந்தன்மை முடிபைப் பின்பற்றி விதித்துரைக்கப்பட்ட ஒரு மூன்றாம் நாட்டில்; அல்லது

(ஆ) ஒரு போதுமாந்தன்மை முடிபைப் பின்பற்றி விதித்துரைக்கப்பட்ட ஒரு மூன்றாம் நாடாகவிராத நாடொன்றில், இச்சட்டத்தின் பாகம் I, பாகம் II மற்றும் பாகம் III இன் பிரிவுகள் 20, 21, 22, 23, 24 மற்றும் 25 என்பவற்றின் கீழ் விதிக்கப்பட்ட முறையான கடப்பாடுகளுக்கான இணங்கியொழுகுகையை, விடயத்துக்கேற்ப, அத்தகைய கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் உறுதிப்படுத்துமிடத்து மட்டுமே, செய்முறைப்படுத்தலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் இணங்கியொழுகுகையை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக, ஒரு கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர், இச்சட்டத்தினால் பாதுகாக்கப்பட்ட தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளுக்குத் தோதான காப்புகளையும் பரிகரிப்புகளையும் உறுதிப்படுத்துவதற்கு மூன்றாம் நாட்டில் பெறுநருக்குள்ள பிணிக்கின்றவையும் வலுவுறுத்தப்படற்பாலவையுமான ஈடுபாடுகளை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரசபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சாதனங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவைப் பின்பற்றி ஏதேனும் போதுமாந்தன்மை முடிபு அல்லது (4)ஆம் உட்பிரிவைப் பின்பற்றி தோதான பாதுகாப்புகள் இல்லாதவிடத்து, ஒரு பகிரங்க அதிகாரசபை தவிர்ந்த கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவர், பின்வருமாறிருப்பின் இலங்கைக்கு வெளியே தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தலாம்:-

(அ) போதுமாந்தன்மை முடிபும் தோதான பாதுகாப்புகளும் இல்லாமை காரணமாகத் தரவுடன் தொடர்புபட்டவருக்கு ஏற்படக்கூடிய அத்தகைய செய்முறைப்படுத்தலின் நிகழ்தகு ஆபத்துக்கள் பற்றி அறிவிக்கப்பட்டபின்னர், தரவுடன் தொடர்புபட்டவர் இலங்கைக்கு வெளியே தனிப்பட்ட தரவின் உத்தேசிக்கப்பட்ட செய்முறைப்படுத்தலுக்குத் தெளிவான முறையில் சம்மதித்திருப்பின்; அல்லது

(ஆ) தரவுடன் தொடர்புபட்டவருக்கும் கட்டுப்பாட்டாளருக்கும் இடையேயான ஒப்பந்தமொன்றைச் செயல்நிறைவேற்றுவதற்காக அல்லது தரவுடன் தொடர்புபட்டவரின் கோரிக்கையின் பேரில் கட்டுப்பாட்டாளரினால் எடுக்கப்பட்ட எவையேனும் ஒப்பந்தத்துக்குமுன்னரான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காகக் கைமாற்றமானது அவசியமாகவிருப்பின்; அல்லது

(இ) தரவுடன் தொடர்புபட்டவர் தொடர்பான சட்ட உரிமைக்கோரிக்கைகளை நிலைநாட்டுவதற்காக, பிரயோகிப்பதற்காக அல்லது எதிர்வாதிடுவதற்காகக் கைமாற்றமானது அவசியமாகவிருப்பின்; அல்லது

(ஈ) இச்சட்டத்தின் அட்டவணை Iஇன் (எ) என்னும் விடயத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு பொதுமக்களின் அக்கறை காரணங்களுக்காகக் கைமாற்றமானது அவசியமாகவிருப்பின்; அல்லது

(உ) தரவுடன் தொடர்புபட்டவரின் அல்லது வேறோராளின் உயிருக்கு, உடனலத்துக்கு அல்லது காப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ள அவசரநிலைமைக்குப் பதிலிறுப்பதற்கும் மற்றும் தரவுடன் தொடர்புபட்டவர் அல்லது அவரது சட்டப்பாதுகாவலர் சம்மதமளிப்பதற்கும் உடல்ரீதியில் அல்லது சட்டப்படி இயலாதவராகவுள்ளவிடத்து கைமாற்றமானது அவசியமாகவிருப்பின்; அல்லது

(ஊ) இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறெவையேனும் நிபந்தனைகளின் கீழ் அத்தகைய செய்முறைப்படுத்தல் அனுமதிக்கப்படின்.

பாகம் IV

பரிந்துகேட்கப்படாத செய்திகளைப் பரப்புவதற்குத் தனிப்பட்ட தரவைப் பயன்படுத்துதல்

27. (1) பதினான்காம் பிரிவுக்கமைய, (இதனகத்துப்பின்னர், "பரிந்துகேட்கப்பட்ட செய்திகள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்தகைய செய்திகளைப் பெறுவதற்குத் தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவர் சம்மதம் அளித்திருப்பின் மட்டுமே ஒரு கட்டுப்பாட்டாளர் செய்திகளைப் பரப்பும் நோக்கங்களுக்காக அஞ்சற் சேவைகளை, தொலைத்தொடர்புச் சேவைகளை, இலத்திரனியல் வழிவகைகளை அல்லது வேறெவையேனும் ஒத்த வழிவகைகளைப் பயன்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, இச்சட்டத்தின் அட்டவணை IIIஇன் நிபந்தனைகளுக்கிணங்கக் கட்டுப்பாட்டாளரொருவரினால் சம்மதம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான சம்மதமொன்றைப் பெற்றுக்கொள்ளும் போது, கட்டுப்பாட்டாளர், தொடர்புத் தகவல்களைச் சேகரிக்கின்ற நேரத்திலும் ஒரு செய்தி அனுப்பப்படுமிடத்து, ஒவ்வொரு தடவையும் கட்டணமின்றிப் பரிந்துகேட்கப்பட்ட செய்திகளைப் பெறுவது தொடர்பில் எவ்வாறு விருப்புத்தெரிவிப்பது என்பது பற்றிய விபரங்களைத் தரவுடன் தொடர்புபட்டவருக்கு வழங்குதல் வேண்டும்.

(4) ஏதேனும் பரிந்துகேட்கப்பட்ட செய்தியைப் பரப்புவதற்கு அஞ்சல், இலத்திரனியல், தொலைத்தொடர்பு அல்லது வேறெவையேனும் ஒத்த வழிவகைகளைப் பயன்படுத்துகின்ற கட்டுப்பாட்டாளர் ஒருவர், செய்தியின் தன்மையையும் கட்டுப்பாட்டாளரின் அல்லது எந்த மூன்றாந்திறத்தவர் சார்பில் கட்டுப்பாட்டாளரினால் செய்தியானது பரப்பப்படுகின்றதோ அந்த மூன்றாந்திறத்தவரின் பரிந்துகேட்கப்பட்ட செய்திகளைப் பரப்புவதற்குத் தனிப்பட்ட தரவைப் பயன்படுத்துதல் அந்தத் தரவுடன் தொடர்புபட்டோருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(5) அதிகாரசபையானது, இயைபான ஒழுங்குபடுத்தும் அல்லது நியதிச்சட்டமுறையான குழுவின் கலந்தாலோசனையுடன், வெவ்வேறு வகுதியினவான பரிந்து கேட்கப்பட்ட செய்திகளை அடையாளங்காண்பதற்கெனக் கட்டுப்பாட்டாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஏதேனும் குறியீட்டை அல்லது முற்கூறை, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள் என்ற வகையாகத் தீர்மானிக்கலாம்.

(6) மனித இடையீட்டுடனோ அல்லது அதுவின்றியோ, தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவர் எந்த இணையத்தள அடிப்படையிலான விளம்பரங்களுக்குக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து கட்டணமின்றிச் சேவையொன்றைப் பெற்றுக்கொள்வதற்குச் சம்மதித்துள்ளாரோ அந்த எவையேனும் இணையத்தள அடிப்படையிலான விளம்பரங்கள் தவிர, தன்னியக்கமாக்கப்பட்ட இடையீட்டுடனோ அல்லது அதுவின்றியோ தன்னியக்கமாக்கப்பட்ட அழைப்பு மற்றும் தொடர்பாடல் முறைமைகளைப் பயன்படுத்துதலுட்பட, அஞ்சல், இலத்திரனியல் அல்லது தொலைத்தொடர்புச் சேவைகளை அல்லது வேறெவையேனும் ஒத்த முறைகளைப் பயன்படுத்தி-

(அ) கட்டுப்பாட்டாளரின் அல்லது எவரேனும் மூன்றாந்திறத்தவரின் பண்டங்களை அல்லது சேவைகளை; அல்லது

(ஆ) கட்டுப்பாட்டாளர் உட்பட எவரேனுமாளை, உருவகத்தை அல்லது ஒழுங்கமைப்பை,

மேம்படுத்துவதற்கு உட்கருதப்படுகின்ற ஏதேனும் எழுத்திலான, இலத்திரனியல், வாய்மொழிமூலமான, படவகையான அல்லது காணொளிச் "செய்தியை" உள்ளடக்கும்.

பாகம் V

தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை

28. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, (இச்சட்டத்தில் "அதிகாரசபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கைத் தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை எனவழைக்கப்படவேண்டிய அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, (1)ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும் படலாம்.

29. (1) அதிகாரசபையின் அலுவல்களினது நிருவாகமும், முகாமையும், கட்டுப்பாடும், (இச்சட்டத்தில் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர் சபையொன்றுக்குரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது, அதிகாரசபையின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட, அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அல்லது அதன் மீது சுமத்தப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) பொறியியல், மருத்துவ, வங்கித்தொழில் மற்றும் நிதி, தொலைத்தொடர்புகள் அத்துடன் சட்டம் என்ற துறைகளில் திறமையையும் எண்பிக்கப்பட்ட உயர்தொழிற்சார் நிபுணத்துவத்தையும் எய்தியுள்ள ஆட்களிடையேயிருந்து சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஐந்துக்குக் குறையாதவர்களும் ஏழுக்கு மேற்படாதவர்களுமான உறுப்பினர்களையும் பொதுப் பயன்பாடுகள், தொழிற்செய்முறைப் புறவொப்படைப்பு (தொசெபு), ஏற்பாட்டியல், காப்புறுதி, வங்கித்தொழில் மற்றும் நிதிசார்துறைகள் என்ற வெவ்வேறு துறைகளில் அனுபவம் கொண்டுள்ளவர்களும் அவர்களுள் ஆகக்குறைந்தது இரு உறுப்பினர்களேனும் பகிரங்கத் துறை உருவகங்களில் முன்னனுபவம் கொண்டிருப்பவர்களுமான ஆட்களையும் சபையானது கொண்டிருத்தல் வேண்டும்.

(4) சபைக்கு நியமிக்கப்பட்ட ஆட்கள், ஒழுங்குபடுத்தும் கருமங்கள், அந்தரங்கத்தன்மை மற்றும் தரவுப் பாதுகாப்பு, தகவற்காப்பு, தரவு விஞ்ஞானம், தரவுப் பகுப்பாய்வியல், பொருளியல், நிதி, தகவல், தொழிநுட்பவியல் அல்லது தொடர்புபட்ட துறைகள் என்பவற்றில் அனுபவத்தையும் அறிவையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(5) இச்சட்டத்துக்கான அட்டவணை VIஇன் ஏற்பாடுகள், சபையுறுப்பினர்களின் தகைமையீனங்கள் மற்றும் அகற்றுகைக்கான ஏதுக்கள், அவர்கள் பதவிவிலகுதல், அவர்களின் லீவு அல்லது அவர்கள் வராமை, பதவிக்காலம் மற்றும் அதிகாரசபையின் கூட்டங்களும் இலச்சினையும் என்பன தொடர்பாகப் பயனுறுதல் வேண்டும்.

30. (1) சனாதிபதியினாவர், சபையின் தவிசாளராகவிருப்பதற்கு பகிரங்க அல்லது தனியார்துறை உருவகங்களில் பயனுள்ள தலைமைத்துவத்தை வெளிக்காட்டியுள்ள உறுப்பினர்களுள் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளரானவர், சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின் மூலம் தனது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை, அது எத்தேதியன்று சனாதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(3) சனாதிபதி, அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காகத் தவிசாளர் பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம்.

(4) இரண்டாம் மற்றும் (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம், அவர் சபையின் உறுப்பாண்மையைக் கொண்டிருக்கும் காலப்பகுதியாதல் வேண்டும்.

(5) தவிசாளரானவர், சுகவீனம் காரணமாக, வேறு உடற்றகுதியீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தனது பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுதற்கும் தற்காலிகமாக இயலாதவராகவுள்ளவிடத்து, சனாதிபதி, நியமிக்கப்பட்ட உறுப்பினராக அவரது வழமையான கடமைகளுடன் சேர்த்து மேலதிகமாகத் தவிசாளராகச் செயலாற்றுவதற்கு வேறெவரேனும் உறுப்பினரை நியமிக்கலாம்.

31. அதிகாரசபையின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலை ஒழுங்குபடுத்துதல்;

(ஆ) பகிரங்க மற்றும் தனியார் துறைகளிலுள்ள நடவடிக்கை முறைகளையும் சேவைகளையும் எண்ணிமையப்படுத்தலிலிருந்து எழுகின்ற ஏதேனும் பாதகமான தாக்கத்திலிருந்து தரவுடன் தொடர்புபட்டோரின் பிரத்தியேகத்தன்மையைக் காத்தல்;

(இ) எண்ணிமைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் தொடர்பாடல்களில் ஈடுபட்டுள்ள தரவுடன் தொடர்புபட்டோரின் தனிப்பட்ட தரவு பாதுகாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறைகளுக்காக ஏற்பாடு செய்தல்;

(ஈ) எண்ணிமைப் பொருளாதாரத்திலான வளர்ச்சியையும் புத்தாக்கத்தையும் வசதிப்படுத்துவதற்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒழுங்குபடுத்தும் இணங்கியொழுகுகையை உறுதிப்படுத்தல்.

32. இச்சட்டத்தின் கீழான கடமைகளைப் புரியும் மற்றும் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அதிகாரசபையானது **பின்வரும்** தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்:-

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாக் கருமங்களையும் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது அதிகாரசபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், முகவர், ஏதேனும் உருவகம் அல்லது நிறுவனத்தினூடாகவாயினுஞ்சரி நிறைவேற்றுதல்;

(ஆ) கட்டுப்பாட்டாளர்களும் செய்முறைப்படுத்துநர்களும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரது கடமைகளையும் கடப்பாடுகளையும் நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் மற்றும் அவரது கடமைகளினதும் கடப்பாடுகளினதும் செயல்நிறைவேற்றுகையை உறுதிப்படுத்துவதற்கென ஒரு கட்டுப்பாட்டாளரினால் அல்லது செய்முறைப்படுத்துநரினால் வைத்திருக்கப்பட்ட எவையேனும் தகவல்களைச் சோதனையிடுதல்;

(இ) செய்முறைப்படுத்தற் செயற்பாடுகள் எந்த நியதி நிபந்தனைகளுக்கமையவும் எந்த முறையிலும் நிறைவேற்றப்படுகின்றனவோ அந்த நியதிநிபந்தனைகளையும் அந்த முறையையும் வெளியிடுவதற்கான தேவைப்பாடு உட்பட, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி ஒரு கட்டுப்பாட்டாளரை அல்லது செய்முறைப்படுத்துநரைப் பணித்தல்;

(ச) உரிய நேரத்திலான முறையில் தேவைப்பட்ட தகவல்களை வழங்குவதற்குத் தவறியமைக்காகத் தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவரிடமிருந்து விதிக்கப்பட்ட கட்டணங்களை மீளளிக்கும்படி ஒரு கட்டுப்பாட்டாளரை அல்லது எவரேனும் இயைபான தரவுப் பாதுகாப்பு அலுவலரைப் பணித்தல்;

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க விசாரணைகளை நடாத்துதல், முறைப்பாடுகளைப் பெறுதல், அதன் முன்னர் தோன்றும்படி எவரேனுமாளைத் தேவைப்படுத்துதல், பணிப்புரைகளை விடுத்தல் மற்றும் குற்றப்பணங்களை விதித்தல்;

(ஊ) இச்சட்டத்தின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, சத்தியத்தின் கீழ் அல்லது உறுதியுரையின் கீழ் ஆளொருவரை விசாரணை செய்தல் மற்றும் விதித்துரைக்கப்பட்ட முறையில் கட்டுப்பாட்டாளரின் அல்லது செய்முறைப்படுத்துநரின் பணிகளைச் செய்முறைப்படுத்தல் தொடர்பான எவையேனும் தகவல்களைக் காண்பிக்கும்படி அவசியமானவிடத்து அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துதல்;

(எ) செய்முறைப்படுத்தலானது தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளுக்கு உடனடி ஆபத்தொன்றை விளைவிக்குமென நம்புவதற்கு அதிகாரசபைக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, எவரேனும் கட்டுப்பாட்டாளரின் அல்லது செய்முறைப்படுத்துநரின் வளவுகளினுட் பிரவேசித்தல் மற்றும் பதிவேடுகளைச் சோதனையிடுதல் அல்லது கைப்பற்றுதல் அத்துடன் புலனாய்வுகளை நிறைவேற்றுதல்;

(ஏ) தரவுப் பாதுகாப்பு முகாமை நிகழ்ச்சித்திட்டம் உட்பட, ஒரு கட்டுப்பாட்டாளரினால் அல்லது செய்முறைப்படுத்துநரினால் நிறைவேற்றப்பட்ட எவையேனும் செய்முறைப்படுத்தற் செயற்பாடுகளுக்கான முறை பற்றியும் பயன்படுத்தப்பட்ட நடவடிக்கை முறைகள் பற்றியும் காலாகால மதிப்பீடுகளை நிறைவேற்றுதல்;

(ஐ) எந்த உறுப்பினர்களின் தகைமைகள், அனுபவம் மற்றும் தத்துவங்கள் அத்துடன் கடமைகள் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டுமோ அந்த உறுப்பினர்களைக் கொண்டுள்ள மதியுரைக் குழுக்களை நியமித்தல்;

(ஒ) தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தொடர்பாகச் சான்றுப்படுத்துகையையும் சான்றுப்படுத்துகின்ற குழுக்களையும் ஏற்றங்கீகரித்தல்;

(ஓ) ஒன்றில் தனியாக அல்லது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே தரவுப் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவுள்ள வேறு தலைமை அரசாங்க அல்லது ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களுடன் அல்லது சர்வதேச முகவராண்மைகளுடன் அல்லது ஒழுங்கமைப்புகளுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல் அல்லது அவற்றுடன் இணைந்து ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடுதல்;

(ஔ)ஏதேனும் கொள்வனவு, எவையேனும் மானியக்கொடைகள், கொடைகளின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக வரக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளுதல், எடுத்தல் மற்றும் வைத்திருத்தல் அத்துடன் அத்தகைய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை விற்பனைசெய்தல், ஈடுவைத்தல், குத்தகைக்குக்கொடுத்தல், மானியக்கொடையாக அளித்தல், மாற்றளித்தல், விருப்புறுதியளித்தல், குறித்தளித்தல், கொடுத்து மாற்றுதல் அல்லது கையுதிர்த்தல்;

(க) அதிகாரசபை அதன் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தோதானவர்களென அதிகாரசபை கருதக்கூடியவாறாக நிபுணர்களாகச் சேவையாற்றுவதற்கான ஆலோசகர்களும் மதியுரைநர்களும் உட்பட்ட அத்தகைய அலுவலர்களையும் பணியாட்டொகுதியினரையும் அத்தகைய தொழில் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய, தொழிலுக்கமர்த்துதல்;

(ங) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன், விடயத்துக்கேற்ப, அதிகாரசபையினால் அதன் எந்தப் பணியாட்டொகுதியினர் மற்றும் அலுவலர்கள், ஆலோசகர்கள் அல்லது மதியுரைநர்கள் என்போருடன் தொழில் அல்லது சேவை ஒப்பந்தமொன்று செய்துகொள்ளப்படுகின்றதோ அந்தப் பணியாட்டொகுதியினர் மற்றும் அலுவலர்கள், ஆலோசகர்கள் அல்லது மதியுரைநர்களுக்கு அத்தகைய ஊதியத்தையும் வேறு நன்மைகளையும் செலுத்துதல் மற்றும் அவர்களின் நன்மைக்காக அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான சகாய நிதியங்களை அல்லது ஓய்வூதியத் திட்டங்களைத் தாபித்தல்;

(ச) அவசியமென அதிகாரசபையானது கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் அதன் நிதிகளை முதலீடுசெய்தல்;

(ஞ) வங்கிக் கணக்குகளைத் திறத்தல், தொழிற்படுத்துதல் மற்றும் மூடிவிடுதல்;

(ட) தரவுப் பாதுகாப்பு அத்துடன் தரவுக் களஞ்சியப்படுத்துகை, தரவு செய்முறைப்படுத்தல், சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு கருமங்கள் தொடர்பான நியமங்களை நிலைநாட்டுதல்;

(ண) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்தாயினுஞ்சரி மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுதல்:

ஆயின், எவ்வாறாயினும், அதிகாரசபையானது, எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகளும், கொடைகளும் அல்லது நன்கொடைகளும் தொடர்பில் நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்

(த) இச்சட்டத்தின்கீழ் எந்தக் கருமங்கள் தொடர்பில் விதிகள், வழிகாட்டுநெறிகள் மற்றும் பணிப்புரைகள் ஆக்கப்படுவதற்கு அல்லது வழங்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்தக் கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்குதல் மற்றும் வழிகாட்டுநெறிகளையும் பணிப்புரைகளையும் வழங்குதல்; அத்துடன்

(ந) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது உகந்தனவாகக்கூடியவாறான வேறெவையேனும் செயல்களைச் செய்தல்.

33. அதிகாரசபையானது, அதன் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காகப் பின்வரும் எல்லா அல்லது எவையேனும் கடமைகளையும் பணிகளையும் புரிதல் வேண்டும் மற்றும் நிறைவேற்றுதல் வேண்டும்:-

(அ) இதற்கான அட்டவணை Vஇல் தரப்பட்டுள்ள தகவல்களுக்கிணங்க 11ஆம் மற்றும் 13ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும்படி கட்டுப்பாட்டாளர்களைப் பணித்தல் வேண்டும்

(ஆ) ஒன்றில் அதன் சொந்தப் பிரேரணையின்பேரில் அல்லது தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவரின் கோரிக்கையின் பேரில், இச்சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டாளர்களின்மீது அல்லது செய்முறைப்படுத்துநர்களின் மீது சுமத்தப்பட்ட கடப்பாடுகள் அத்தகைய கட்டுப்பாட்டாளர்களினாலும் அல்லது செய்முறைப்படுத்துநர்களினாலும் முறையாக இணங்கியொழுகப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு எல்லாத் தரவுச் செய்முறைப்படுத்தல் தொழிற்பாடுகளையும் கண்காணித்துப் பரிசோதனைசெய்தல் வேண்டும் ;

(இ) குறிப்பிட்ட எவரேனும் கட்டுப்பாட்டாளரினால் அல்லது செய்முறைப்படுத்துநரினால் புரியப்பட்ட ஏதேனும் செய்முறைப்படுத்தற் செயற்பாடு தொடர்பாக அத்தகைய கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்குப் பணிப்புரைகளை வழங்குதல் வேண்டும்;

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயனுற நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்குக் கட்டுப்பாட்டாளர்களுக்காகவும் செய்முறைப்படுத்துநர்களுக்காகவும் மிகச்சிறந்த சர்வதேசச் செயல்முறைகளின் அடிப்படையில் பயிற்சியை வசதிப்படுத்துதல் வேண்டும் அல்லது பொறுப்பேற்றல் வேண்டும்

(உ) கட்டுப்பாட்டாளர்களினால் தரவுப் பாதுகாப்பு முகாமை நிகழ்ச்சித்திட்டங்களின் பயனுள்ள நடைமுறைப்படுத்துகையை உறுதிப்படுத்துவதற்குப் பணிப்புரைகளை வழங்குதல் வேண்டும்

(ஊ) கட்டுப்பாட்டாளர்களுக்கும் செய்முறைப்படுத்துநர்களுக்கும் இடையே வெளிப்படையான தன்மையையும் சுயஒழுங்குபடுத்துகையையும் மேம்படுத்துதல் வேண்டும்

(எ) சர்வதேசச் சமவாயங்களின் கீழ் தரவுப் பாதுகாப்புக் கடப்பாடுகளுக்கு உள்நாட்டில் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்

(ஏ) தரவுப் பாதுகாப்புத் தொடர்பான எல்லாக் கருமங்கள் மீதும் அரசாங்கத்துக்கு விதந்துரைத்தல் வேண்டும்

(ஐ) அமைச்சரின் அங்கீகாரத்துடன் தரவுப் பாதுகாப்புத் தொடர்பான கருமங்கள் பற்றிச் சர்வதேச ரீதியில் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் வேண்டும்

(ஒ) கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் அவை தொடர்பான கருத்தவைகளை ஒழுங்குபடுத்துதலும் நடாத்துதலும், அத்தகைய செயற்பாடுகளை நடாத்துகின்ற வேறு ஒழுங்கமைப்புகளுக்கு ஆதரவளித்தலும் உட்பட, தரவுப் பாதுகாப்புத் தொடர்பான கற்கைகளையும் கல்விசார் செயற்பாடுகளையும் மேம்படுத்துதல் வேண்டும்

(ஓ) அதன் சொந்தச் சார்பில் அல்லது அரசாங்கத்தின் சார்பில், வெளிநாட்டுத் தரவுப் பாதுகாப்பு அதிகாரசபைகளும் சர்வதேச அல்லது அரசாங்கங்களுக்கிடையேயான ஒழுங்கமைப்புகளுமுட்பட, ஏனைய ஒழுங்கமைப்புகளுடன் தரவுப் பாதுகாப்பு என்ற துறையில் தொழில்நுட்ப ஒத்துழைப்பையும் பரிமாற்றத்தையும் முகாமை செய்தல் வேண்டும்

(ஔ)வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்

(க) தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலின்மீது புதிய தொழினுட்பவியல்களின் பயன்பாடும் தாக்கமும்பற்றி ஆராய்ச்சியைப் பொறுப்பேற்றல் வேண்டும்

(ங) வேறொரு கட்டுப்பாட்டாளரிடம் ஏலவே கிடைக்கக்கூடியதாகவுள்ள தரவின் சேகரிப்பினதும் களஞ்சியப்படுத்துகையினதும் இரட்டிப்பை அதன்மூலம் மட்டுப்படுத்தி, கட்டுப்பாட்டாளர்களுக்கிடையே தனிப்பட்ட தரவைப் பகிர்வதற்குப் பணிப்பாணைவிடுக்கும் கட்டளைக்கற்களை நிலை நாட்டலுட்பட, ஓர் உறுதியான இடைத்தொழிற்படத் தகுநிலைத் தளத்தினூடாகப் பகிரங்க அதிகாரசபைகளாகவுள்ள கட்டுப்பாட்டாளர்களுக்கிடையே தனிப்பட்ட தரவைப் பகிரமுடியுமாக உள்ளவிடத்து கட்டுப்பாட்டாளர்களுக்கிடையே அத்தகைய தரவின் பகிர்வை ஆளுகின்ற விதிகளை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆக்குதல் வேண்டும்

(ச) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தரவுடன் தொடர்புபட்டோருக்கு வழங்கப்பட்ட அடையாளங்காண் முகாமையை மற்றும் தொடர்புபட்ட சேவைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துக்காக துறைசார் வழிகாட்டு நெறிகளையும் விதிகளையும் வகுத்தமைப்பதற்கும் உரிமம் தேவைப்படுகின்ற கட்டுப்பாட்டாளர்களினாலான அல்லது செய்முறைப்படுத்துநர்களினாலான செய்முறைப்படுத்தலின் கட்டளைக்கற்களை அடையாளங்காண்பதற்கும் வரைவிலக்கணங்கூறுவதற்குமான மதியுரைக் குழுக்களை நியமித்தல்

(ஞ) விசேட வகுதியினவான தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்துதல், பரிந்துகேட்கப்பட்ட செய்திகளைப் பரப்புவதற்காகத் தனிப்பட்ட தரவைப் பயன்படுத்துதல், பிரிவு 27 இற்கிணங்க தனியாட்களைத் தோற்றுருவம் செய்வதற்காகத் தனிப்பட்ட தரவைப் பயன்படுத்துதல், மற்றும் தன்னியக்கமாக்கப்பட்ட முடிபாக்கலுக்காகத் தனிப்பட்ட தரவைப் பயன்படுத்துதல் தொடர்பாக விதிகளை ஆக்குதல் வேண்டும்; அத்துடன்

(ட) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு அவசியமானவாறாக இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அத்தகைய வேறு செயல்களைப் புரிதல் வேண்டும்.

34. (1) அதிகாரசபையானது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தரவுடன் தொடர்புபட்டோருக்கு வழங்கப்பட்ட அடையாளங்காண் முகாமையை மற்றும் தொடர்புபட்ட சேவைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துக்காக மதியுரைக் குழுவினது விதப்புரைகளின் அடிப்படையின்மீது, உரிமமொன்று தேவைப்படுகின்ற கட்டுப்பாட்டாளர்களுக்கு அல்லது செய்முறைப்படுத்துநர்களுக்கு உரிமங்களை வழங்கலாம்.

(2) மதியுரைக் குழுவின் விதப்புரைகள், உரிமமொன்று தேவைப்படுகின்ற கட்டுப்பாட்டாளர்களினால் அல்லது செய்முறைப்படுத்துநர்களினால் செய்முறைப்படுத்தலின் கட்டளைக் கற்களை அடையாளங்கண்டு வகுதிகளை வரையறுத்துக்கூறுதல் வேண்டும்.

(3) அத்தகைய உரிமங்கள் தொடர்பான வகுதிகள், கட்டளைக் கற்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள், படிவமும் காலஎல்லையும், விண்ணப்பத்துக்கான நடவடிக்கைமுறை, புதுப்பித்தல், இடைநிறுத்துகை, இல்லாதாக்குகை, உரிமத்தை மறுத்தல், இடைநிறுத்துதல் அல்லது இல்லாதாக்குதலுக்கெதிரான மேன்முறையீடு மற்றும் விதிக்கப்படவேண்டிய கட்டணங்கள் என்பன விதித்துரைக்கப்படலாம்.

(4) அத்தகைய உரிமங்களின் ஏற்புடையற்பாலனவான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அத்தகைய கட்டுப்பாட்டாளர்கள் அல்லது செய்முறைப்படுத்துநர்கள் இணங்கியொழுகுவதனை அதிகாரசபையானது பரிசீலனைசெய்து கண்காணிக்கலாம்.

35. (1) ஒரு முறைப்பாடு பெறப்பட்டதன்மீது அல்லது வேறு வகையாக, எவரேனும் கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர்-

(அ) இச்சட்டத்திற்கு முரணாக ஏதேனும் செய்முறைப்படுத்தற் செயற்பாட்டில் ஈடுபடுகின்றார் அல்லது ஈடுபடும் தறுவாயிலுள்ளார் என அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது 52 ஆம் பிரிவின் பந்திகள் (ஈ), (உ) அல்லது (ஊ) என்பவற்றின்கீழான ஏதேனும் விதியை, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை, வழிகாட்டுநெறியை அல்லது கட்டளையை அல்லது தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தல் தொடர்பான வேறேதேனும் எழுத்திலான சட்டத்தை மீறியுள்ளார் அல்லது அவற்றுக்கிணங்கியொழுகத் தவறியுள்ளார் அல்லது அவற்றை மீறும் அல்லது அவற்றுக்கிணங்கியொழுகத் தவறும் சாத்தியங் கொண்டுள்ளார் என, நம்புவதற்கு அதிகாரசபைக்குக் காரணமுள்ளவிடத்து, அதிகாரசபையானது, விதித்துரைக்கப்படக்கூடியவாறான நடவடிக்கை முறைக்கிணங்க விசாரணையொன்றை நடாத்தலாம்.

(2) அதிகாரசபையானது, (1)ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் விசாரணையில் கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்குக் கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை அளித்த பின்னர், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள்-

(அ) செய்முறைப்படுத்தல் தொடர்பான செயலில், செய்யாமையில் அல்லது நடத்தைநெறியில் ஈடுபடாதொழியும்படியும் ஈடுபடுவதனைத் தவிர்க்கும்படியும் அல்லது

(ஆ) அதிகாரசபையின் அபிப்பிராயத்தில் நிலைமையை நிவர்த்திசெய்வதற்கு அவசியமாகவுள்ள அத்தகைய செயல்களைப் புரியும்படியும் அல்லது

(இ) (1)ஆம் உட்பிரிவின்கீழ் கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவரினாலான ஏதேனும் மீறுகையின் விளைவாகத் தீங்கை, இழப்பை அல்லது சேதத்தை உற்றுள்ள இன்னலுற்ற ஆளொருவருக்கு அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்டவாறாக நட்டஈடாக அத்தகைய பணத்தொகையைக் கொடுப்பனவு செய்யும்படியும்,

அத்தகைய கட்டுப்பாட்டாளரை அல்லது செய்முறைப்படுத்துநரைத் தேவைப்படுத்தி அக்கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்குப் பணிப்புரையொன்றை வழங்கலாம்.

(3) இப்பிரிவின்கீழ் அத்தகைய கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு பணிப்புரையும் எழுத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன் அது அத்தகைய எந்தக் கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்கு நெறிப்படுத்தப்படுகின்றதோ அந்தக் கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்குப் பதிவஞ்சல் மூலம், இலத்திரனியல் தொடர்பாடல் மூலம் அல்லது அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படும் வேறு ஒத்த வழிவகைகள் மூலம் அறிவிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பணிப்புரை அத்தகைய கட்டுப்பாட்டாளரை அல்லது செய்முறைப்படுத்துநரைப் பிணிப்பாதல் வேண்டுமென்பதுடன் அவர் அத்தகைய தொடர்பாடல் தேதியிலிருந்து அத்தகைய பணிப்புரைக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

பாகம் VI

அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியும் பணியாட்டொகுதியினரும்

36. (1) சபையானது, பகிரங்கத்துறைக்கு அல்லது தனியார் துறைக்குத் தலைமைத்துவத்தை வழங்குவதில் திறமையையும் எண்பிக்கப்பட்ட உயர்தொழிற்சார் நிபுணத்துவத்தையும் எய்தியுள்ள பணிப்பாளர் தலைமையதிபதியொருவரை அதிகாரசபைக்கு நியமித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதியின் ஊதியமுட்பட அவரது தொழில் நிபந்தனைகள் விதிகள் என்ற வழியாக சபையினால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(3) எவரேனும் ஆள் பின்வருமாறிருப்பின், சபையானது அத்தகைய ஆளை அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமித்தலாகாது:-

(அ) ஒரு நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாக முன்னர் காணப்பட்டிருப்பின் அல்லது ஓர் ஒழுங்குபடுத்தும் குழுவினால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டிருப்பின்;

(ஆ) பதவியிலிருந்து முன்னர் நீக்கப்பட்டிருப்பின்; அல்லது

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் மீறுகையைப் புரிந்திருப்பின்;

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அதிகாரசபையின் அலுவல்களினதும் கொடுக்கல்வாங்கல்களினதும் பணிப்பும், அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் பிரயோகமும், புரிகையும், நிறைவேற்றுகையும் அத்துடன் அதிகாரசபையின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் நிருவாகமும் கட்டுப்பாடும் பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்.

(5) சபையானது, பின்வரும் காரணங்களுள் ஏதேனுமொன்றைக் கருத்திற்கொண்டு, (1)ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியிலிருந்து அகற்றலாம்:-

(அ) அதிகாரசபைக்காக அவரது கடமைகளை அல்லது பணிகளை நிறைவேற்றுகையில் ஏதேனும் அக்கறை முரண்பாடு ஏற்படக்கூடிய சாத்தியம்;

(ஆ) அவ்வாள் சித்தசுவாதீனமற்றவராக அல்லது அவரது கடமைகளை அல்லது பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராக வந்தால்;

(இ) அவ்வாள் அவரது கடமைகள் அல்லது பணிகள் தொடர்பாகப் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாக இருந்தல்; அல்லது

(ஈ) அவ்வாள் அவரது கடமைகளை அல்லது பணிகளை நிறைவேற்றுகையில் அவரது சுதந்திரத்துடன் தலையிடக் கூடிய ஏதேனும்

செயற்பாட்டில் சம்பந்தப்பட்டிருந்தால் அல்லது சபையின் பொதுவான பணிப்புகளுடன் இணங்கியொழுகாதிருந்தால்:

ஆயின், சபையானது, அத்தகைய அகற்றுகைக்குமுன்னர், கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அளித்தல் வேண்டும்.

37. (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அதிகாரசபையானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதன் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றும் நோக்கங்களுக்காக, அதன் பணிகளின் வினைத்திறனான நிறைவேற்றுகைக்கு அவசியமென அது கருதுகின்றவாறான ஊழியர் கோப்புப் பதவிகளை உருவாக்கலாம் மற்றும் அலுவலர்களையும் ஊழியர்களையும் தொழிலுக்கமர்த்தலாம் என்பதுடன் அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் சம்பளங்களையும் வேதனங்களையும் அல்லது வேறு ஊதியத்தையும், நன்மைகளையும் மற்றும் ஓய்வூதியங்களையும் நிர்ணயிக்கலாம்.

(2) அதிகாரசபையானது, தகவற்காப்பு, தரவு விஞ்ஞானம், தரவுப் பகுப்பாய்வியல், தகவல் தொழில்நுட்பவியல், நிதி, சட்டம் என்ற விடயங்களின் மீதும் மற்றும் வேறு தொடர்புபட்ட விடயங்களின் மீதும் தொழில்நுட்ப ஆளணியினரின் பயிற்சியை மேம்படுத்துதலும் அதற்கு அனுசரணையளித்தலும் வேண்டுமென்பதுடன் இந்நோக்கத்துக்காக, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு எண்பிக்கப்பட்ட திறனுடைய அதிகாரசபையின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் இலங்கையிலான அல்லது வெளிநாட்டிலான கற்கைச் செலவு தொகைகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு அதிகாரமளிக்கப்படுதலும் வேண்டும்.

(3) அதிகாரசபையின் அலுவலர்களுக்கு ஊழியர்களுக்கும் ஏற்புடையற்பாலதாகவிருக்க வேண்டிய நடவடிக்கைக் கோவையொன்றை அதிகாரசபை தயாரித்தல் வேண்டும்.

(4) அத்தகைய நடவடிக்கைக் கோவையை காலத்துக்குக்காலம் திரிபுபடுத்துகின்றதன் மூலம், ஒழிக்கின்றதன் மூலம் அல்லது திருத்துகின்றதன் மூலம் அதிகாரசபை அதனை மீளாய்வு செய்யலாம்.

(5) எவரேனுமாள் பின்வருமாறிருக்குமிடத்து, அதிகாரசபையானது அத்தகைய ஆளை அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நியமித்தலாகாது:-

(அ) ஒரு நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாக முன்னர் காணப்பட்டிருப்பின் அல்லது ஓர் ஒழுங்குபடுத்தும் குழுவினால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டிருப்பின்;

(ஆ) பதவியிலிருந்து முன்னர் நீக்கப்பட்டிருப்பின்; அல்லது

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் மீறுகையைப் புரிந்திருப்பின்.

(6) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் அரசியலமைப்பினால் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்காக அதிகாரசபைக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(7) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(8) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(9) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காக அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனுமாளை அதிகாரசபை தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் அதிகாரசபைக்கான ஏதேனும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(10) அதிகாரசபையானது, அத்தகைய அலுவலரின் அல்லது ஊழியரின் சம்மதத்துடன், இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள வேறு அரச நிறுவனங்களுக்கு அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைகளுக்கு, அத்தனை நிறுவனத்துக்கும் அதிகாரசபைக்குமிடையே உடன்பட்டுக்கொள்ளப்பட்ட ஒரு வேலைக்கமர்த்துகையின் மீது அதன் அலுவலர்களை அல்லது ஊழியர்களை மாற்றுச்சேவைக்கு விடுவதற்கு முன்மொழியலாம். மாற்றுச் சேவைக் காலப்பகுதியானது அதிகாரசபைக்கான சேவையாகக் கொள்ளப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

பாகம் VII

தண்டங்கள்

38. (1) கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவர் 35ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரையொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அதிகாரசபையானது, தரவுடன் தொடர்புபட்டோரின் மீதான தாக்கம், இயைபான இணங்கியொழுகாமைகளின் தன்மையும் அளவும் மற்றும் இச்சட்டத்தின் 39ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கருமங்கள் என்பவற்றைக் கவனத்துட்கொண்ட பின்னர், ஒவ்வோர் இணங்கியொழுகாமைக்கும் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாதிருக்க வேண்டிய ஒரு தண்டத்தை செலுத்தும்படி அத்தகைய கட்டுப்பாட்டாளரை அல்லது செய்முறைப்படுத்துநரை அறிவித்தல் மூலம் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(2) முன்னையவொரு சந்தர்ப்பத்தில் தண்டமொன்றுக்கு அமைந்தவராக்கப்பட்ட கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவர், மேற்கொண்ட ஏதேனும் சந்தர்ப்பத்தில் ஒரு பணிப்புரைக்கு இசைந்தொழுக அடுத்துப்பின்னர் தவறுமிடத்து, அத்தகைய ஆள், (1)ஆம் உட்பிரிவின்கீழ் அவர்மீது விதிக்கப்படக்கூடிய தண்டத்துடன் சேர்த்து மேலதிகமாக, இரண்டாவது மற்றும் ஒவ்வோர் அடுத்துப்பின்னரான இணங்கியொழுகாமைக்கும் தண்டமொன்றாக விதிக்கப்பட்ட தொகையின் இருமடங்குகளைக் கொண்டுள்ள மேலதிகத் தண்டமொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தண்டமொன்றைச் சேகரிப்பதற்கு அதிகாரசபை பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம், 35ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை காரணமாகப் பாதிக்கப்பட்ட இன்னலுற்ற ஆளுக்குச் செலுத்தப்படற்பாலதான நட்டஈடாக தீர்மானிக்கப்பட்ட ஏதேனுமிருப்பின் அத்தகைய பணத்தொகையைக் கழித்தபின்னர் திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(4) ஓராம் அல்லது (2)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தண்டமொன்றுக்கு ஆளாகவருகின்ற கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவர், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய தண்டத்தைச் செலுத்தத் தவறுமிடத்து, அத்தகைய பணத்தொகை அந்நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் அது விதிக்கக்கூடிய குற்றப்பணத் தொகையை விஞ்சக்கூடுமென்பது எவ்வாறிருப்பினும், அத்தகைய நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட ஒரு குற்றப்பணம் என்றாற் போன்று அதேமுறையில் அறவிடப்படும் அத்தண்டத்தைச் செலுத்தும்படி தேவைப்படுத்துகின்ற கட்டளையொன்றுக்காக அதிகாரசபையானது கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு மறுதிறத்தவரில்லா விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(5) இப்பிரிவின்கீழான தண்டமொன்றை விதித்தலானது, அத்தகைய கட்டுப்பாட்டாளரை அல்லது செய்முறைப்படுத்துநரை ஒழுங்குபடுத்துவதற்காக அல்லது மேற்பார்வை செய்வதற்காக ஏதேனும் ஏற்புடையதான எழுத்திலான சட்டத்தின் அல்லது விதிகளின் நியதிகளின்படி அனுமதிக்கப்படக்கூடியவாறாக, ஒரு தொழிலை அல்லது உயர்தொழிலைக் கொண்டுநடாத்துவதிலிருந்து அத்தகைய கட்டுப்பாட்டாளரை அல்லது செய்முறைப்படுத்துநரை இடைநிறுத்துதல் அல்லது ஒரு தொழிலை அல்லது உயர்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்காக அளிக்கப்பட்ட உரிமத்தை அல்லது அதிகாரத்தை இல்லாதாக்குதல் உட்பட, ஆனால் அதற்கு வரையறுக்கப்படாமல், வேறெவையேனும் ஒழுங்குபடுத்தும் வழிமுறைகளை எடுப்பதிலிருந்து இயைபான ஒழுங்குபடுத்தும் குழுவை அல்லது நியதிச்சட்டமுறையான குழுவைத் தடை செய்தலாகாது.

(6) இப்பிரிவின்கீழ் ஆட்கள் குழுவொன்றின் மீது தண்டமொன்று விதிக்கப்படுமிடத்து, அப்போது-

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், (1)ஆம் உட்பிரிவின்கீழான இணங்கியொழுகாமை புரியப்பட்ட நேரத்தில் பணிப்பாளரொருவராக மற்றும் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முகாமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பான வேறு அலுவலராக இருந்த ஆள் ஒவ்வொருவரும்;

(ஆ) அவ்வாட்கள் குழு ஒரு குழுமமாகவிருப்பின், அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்; அல்லது

(இ) அக்குழு ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இராதிருப்பின், (1)ஆம் உட்பிரிவின்கீழான தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படாத நேரத்தில் அக்குழுவின் முகாமை மற்றும் கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பான அலுவலராகவிருந்த ஆள் ஒவ்வொருவரும்,

(1)ஆம் உட்பிரிவின்கீழான தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறியமைபற்றி அவர் அறிந்திருக்கவில்லையென்று அல்லது அதனோடு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு உரிய எல்லாக் கவனத்தையும் விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென்று அவர் எண்பித்தாலொழிய, அத்தகைய தண்டத்தைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழான நிருவாகத் தண்டமொன்று விதிக்கப்பட்டமையினால் இன்னலுறுகின்ற கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவர், அத்தகைய ஆளுக்கு அத்தகைய நிருவாகத் தண்டம் விதிக்கப்பட்டமை பற்றி அறிவிக்கப்பட்ட அறிவித்தல் தேதியிலிருந்து இருபத்தொரு வேலைநாட்களினுள் அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(8) இப்பிரிவின்கீழான மேன்முறையீடுகள் தொடர்பில் அரசியலமைப்பின் 136ஆம் உறுப்புரையின் கீழ் விதிகள் ஆக்கப்படும்வரை, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான மீளாய்வு என்றவகையான விண்ணப்பமொன்று தொடர்பில் அந்த உறுப்புரையின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள், இப்பிரிவின் (7)ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(9) ஏழாம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்றைச் செய்கின்ற எவரேனும் கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர், மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் முன்னிலையில், (1)ஆம் அல்லது (2)ஆம் உட்பிரிவுகளின் கீழ் விதிக்கப்பட்ட தண்டத்துக்குச் சமமான அத்தகைய பணத் தொகையைப் பிணைப்பொறுப்பொன்றாகக் காசாக வைப்பிலிடுதல் வேண்டும்.

(10) ஏழாம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீடொன்று செய்யப்படுமிடத்து, எண்பிப்பதற்கான பொறுப்பு, விடயத்துக்கேற்ப, கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகச் செயலாற்றியுள்ளாரென்பதை எண்பிப்பதற்கு அவர்மீதாதல் வேண்டும்.

39. முப்பத்தியெட்டாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான தொகையுட்பட ஒரு நிருவாகத் தண்டத்தை விதிப்பதற்குத் தீர்மானமொன்றைச் செய்வதில், அதிகாரசபை பின்வரும் கருமங்களுக்கு உரிய கவனஞ்செலுத்தியிருத்தல் வேண்டும்:-

(அ) சம்பந்தப்பட்ட செய்முறைப்படுத்தலின் தன்மை, நோக்கெல்லை அல்லது நோக்கம், பாதிக்கப்பட்ட தரவுடன் தொடர்புபட்டோரின் எண்ணிக்கை மற்றும் அவர்களினால் அடையப்பட்ட சேதத்தின் மட்டம் என்பவற்றைக் கணக்கிற்கெடுத்து முரண்பாட்டின் தன்மை, பாரதூரமான தன்மை மற்றும் காலநீட்சி;

(ஆ) தரவுடன் தொடர்புபட்டோரினால் அடையப்பட்ட சேதத்தைத் தணிப்பதற்குக் கட்டுப்பாட்டாளரினால் அல்லது செய்முறைப்படுத்துநரினால் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கை;

(இ) 12ஆம் பிரிவின் கீழ் கட்டுப்பாட்டாளரிடமிருந்து தேவைப்படுத்தப்பட்ட தரவுப் பாதுகாப்பு முகாமை நிகழ்ச்சித்திட்டத்தின் பயனுறுதன்மை;

(ஈ) முரண்பாட்டைப் பரிகரிப்பதற்கும், அத்தகைய முரண்பாட்டின் நிகழ்தகு பாதகமான விளைவுகளைத் தணிப்பதற்குமென, அதிகாரசபையுடனான ஒத்துழைப்பின் மட்டம்;

(உ) ஏதேனும் முரண்பாட்டினால் பாதிக்கப்படும் தனிப்பட்ட தரவின் வகுதிகள்;

(ஊ) முரண்பாடொன்றை அதிகாரசபை அறியவந்த முறையும், குறிப்பாக, கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் முரண்பாட்டை அறிவித்தாரா மற்றும் அவ்வாறாயின், எந்த அளவுக்கு முரண்பாட்டை அதிகாரசபைக்கு அறிவித்தார் என்பதுவும்;

(எ) அத்தகைய கட்டுப்பாட்டாளரினால் அல்லது செய்முறைப்படுத்துநரினால் இச்சட்டத்தின்கீழ் முன்னைய இணங்கியொழுகாமைகள்;

(ஏ) விடயத்துக்கேற்ப, கட்டுப்பாட்டாளரினால் அல்லது செய்முறைப்படுத்துநரினால் இச்சட்டத்தின் மீறுகையிலிருந்து அல்லது அது தொடர்பாக, நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், ஈட்டப்பட்ட நிதிசார் நன்மைகள் அல்லது தவிர்க்கப்பட்ட இழப்புக்கள் போன்ற, விடயத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்புடையனவான வேறெவையேனும் தீங்குபெருக்கும் அல்லது தணிக்கும் காரணிகள்.

40. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கான ஏதேனும் விலக்களிப்பு, மட்டுப்பாடு அல்லது மதிப்புக்குறைப்பு, அத்தகைய விலக்களிப்புக்கு, மட்டுப்பாட்டுக்கு அல்லது மதிப்புக்குறைப்புக்கு ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு, அடிப்படை உரிமைகளினதும் சுதந்திரங்களினதும் சாராம்சத்துக்கு மதிப்புக் கொடுப்பதுடன் பின்வருவனவற்றுக்காகச் சனநாயக சமூகமொன்றில் அவசியமான மற்றும் விகிதாசாரப்படியான வழிமுறையொன்றை அமைத்துருவாக்குமிடத்துத் தவிர, அனுமதிக்கப்படுதலாகாது:-

(அ) இலங்கைக் குடியரசின் தேசியப் பந்தோபஸ்து, பாதுகாப்பு, பொதுமக்கள் காப்பு, பொதுச் சுகாதாரம், பொருளாதார மற்றும் நிதிசார் முறைமைகளின் நிலையுறுதி என்பவற்றைப் பாதுகாத்தல்;

(ஆ) நீதித்துறையின் பாரபட்சமின்மையும் சுதந்திரமும்;

(இ) குற்றவியல் தவறுகளைத் தடுத்தல், புலனாய்வுசெய்தல் மற்றும் அவற்றுக்கெதிராகக் குற்றவழக்குகளைத் தொடுத்தல்;

(ஈ) குற்றவியல் தண்டங்களை நிறைவேற்றுதல்; அத்துடன்

(உ) ஆட்களின் உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும், குறிப்பாகப் பேச்சுச் சுதந்திரத்தையும் தகவலுக்கான உரிமையையும் பாதுகாத்தல்.

பாகம் VIII

அதிகாரசபையின் நிதியம்

41. (1) அதிகாரசபையானது (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டுக்காகப் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) அதிகாரசபையனாது இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கட்டணங்களாகச் செலுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஈ) திரட்டு நிதியத்திலிருந்து, அரசாங்கத்திடமிருந்து அல்லது ஒரு வெளிநாட்டு அரசாங்கத்திடமிருந்து, அரச முகவராண்மைகளிடமிருந்து மற்றும் இலங்கையினுள்ளான அல்லது இலங்கைக்கு வெளியேயான பல்புடை அத்துடன் இருபுடை முகவராண்மைகளிடமிருந்து கொடைகள், மானியக்கொடைகள், நன்கொடைகள் என்ற வகையாக அதிகாரசபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) அதிகாரசபையானது இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் மற்றும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் நிதியத்துக்குச் சொந்தமான பணங்கள், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அதிகாரசபையினால் முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

42. (1) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் கணக்குகளினது கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

பாகம் IX

நானாவிதமானவை

43. நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அளிக்கப்பட்ட அமைச்சரின் சம்மதத்துடன், அதிகாரசபையானது, இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதில், புரிவதில் மற்றும் நிறைவேற்றுவதில் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு அதிகாரசபைக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை மேலதிகப்பற்று என்ற வகையாக அல்லது வேறுவகையாகத் தற்காலிகமாகக் கடனாகப்பெறலாம்:

ஆயின், இப்பிரிவின் கீழ் அதிகாரசபையினால் திரட்டப்பட்ட எவையேனும் கடன்கள் தொடர்பில் நிலுவையாகவுள்ள தொகைகளின் கூட்டுமொத்தம், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை விஞ்சுதலாகாது.

44. (1) சபையானது, எழுத்திற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுள் எவற்றையும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்குக்

கையளிக்கலாம் என்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அத்தகைய அலுவலர், சபையினால் வழங்கப்பட்ட எவையேனும் விசேடமான அல்லது பொதுவான பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், சபையானது, அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் மற்றும் நிறைவேற்றலாம்.

45. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின்கீழான அவரது தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுள் எவற்றையும் அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் எவ்வலுவலருக்கு ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி கையளிக்கப்படுகின்றதோ அவ்வலுவலரொருவர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் விடுவிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை, கடமையை மற்றும் பணியைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, (1)ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

46. (1) அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்திற் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபையினால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட செலவுதொகைகள் மட்டுமே அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) சபையின் ஓர் உறுப்பினரினால், அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அதன் எவரேனும் அலுவலரினால் அல்லது வேறு ஊழியரினால் அல்லது அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில், இச்சட்டத்தின் கீழ் அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் உறப்பட்ட ஏதேனும் செலவு, அச்செயலானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அறவிடப்பட்டாலொழிய, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

47. அமைச்சர் காலத்துக்குக் காலம், அதிகாரசபையின் செயல் நிறைவேற்றத்தைப் பரிசீலனை செய்தல் வேண்டுமென்பதுடன் அமைச்சரினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அதன் அலுவல்களும் செயற்பாடுகளும் தொடர்பான அத்தகைய அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்படி அதிகாரசபையைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

48. (1) அதிகாரசபையானது, ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவிலிருந்து ஆறுமாதங்களினுள், அதிகாரசபையின் செயல் நிறைவேற்றத்தை மதிப்பீடு செய்வதற்காக அமைச்சர் காலத்துக்குக் காலம் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய ஆதாரப்படுத்துகின்ற ஆவணங்களுடன் அந்நிதியாண்டின்போது அதிகாரசபையினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் பற்றிய வருடாந்த அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அமைச்சர், (1)ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினதும் ஆவணங்களினதும் பிரதிகளை, அத்தகைய அறிக்கையும் ஆவணங்களும் பெறப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்.

49. இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபை மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்கு அளிக்கப்பட்ட ஏதேனும் பணியை அல்லது தத்துவத்தைப் புரிவதில் அல்லது பிரயோகிப்பதில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட எதற்காகவும் குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்பொன்றாக விருப்பினுஞ்சரி, அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது அத்தகைய அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு இணைதலாகாது.

50. அதிகாரசபையின் எல்லா அலுவல்களும் ஊழியர்களும் (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

51. அதிகாரசபையானது, (26ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

52. (1) அதிகாரசபை பின்வருவன தொடர்பிலான விதிகளை ஆக்குதல் வேண்டும்:-

(அ) பல்வேறு அலுவலர்களின் மற்றும் ஊழியர்களின் ஆட்சேர்ப்புத் திட்டங்களும், நியமனநியதிகளும், அவர்களைத் தொழிலுக்கமர்த்துதலும் பதவிநீக்குதலும் மற்றும் பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்களும் பணிகளுமுட்பட அவர்களின் தத்துவங்களும் பணிகளும் அவர்களுக்கு ஊதியமளித்தலும்;

(ஆ) அதிகாரசபையின் கூட்டங்களை அழைப்பதிலும் நடாத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை;

(இ) அதிகாரசபையின் அலுவல்களை முகாமைசெய்தல்;

(ஈ) பாகம் IIஇன் கீழ் தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளைப் பிரயோகிக்கும் மாதிரியும் முறையும்;

(உ) 17ஆம் பிரிவின் கீழ் தரவுடன் தொடர்புபட்டோரின் கோரிக்கையை மறுப்பதற்கான கட்டளைக்கற்கள்;

(ஊ) எந்தக் கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழான விதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்த எல்லாக் கருமங்களும்.

(2) இச்சட்டத்தின் பாகம் Vஇன் ஏற்பாடுகளின் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து இருபத்திநான்கு மாதங்களினுள் அதிகாரசபையானது (1)ஆம் உட்பிரிவின் கீழான விதிகளை ஆக்குதல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, (1)ஆம் உட்பிரிவின் பந்திகள் (ஈ), (உ) அல்லது (ஊ) என்பவற்றின்கீழான விதிகளை ஆக்குமுன்னர் இரண்டு வாரங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்குப் பகிரங்கக் கலந்தாலோசனையை நடாத்துதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பகிரங்கக் கலந்தாலோசனைக் காலப்பகுதி, அதிகாரசபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மேலதிகக் காலப்பகுதியொன்றுக்கு நீடிக்கப்படலாம்.

(5) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்று அமைச்சரினால் அங்கீகரிக்கப்படும்வரையும் அங்கீகரிக்கப்பட்ட விதிகளும் அத்தகைய அங்கீகாரம்பற்றிய அறிவிப்பும் வர்த்தமானியில் வெளியிடப்படும்வரையும் பயனுறுதலாகாது.

(6) ஓராம் உட்பிரிவின் பந்திகள் (ஈ), (உ) அல்லது (ஊ) என்பவற்றின்கீழ் ஆக்கப்பட்டவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் விதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(7) அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

53. (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது எக்கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமம் தொடர்பில் அமைச்சர் அதிகாரசபையின் ஒருப்பாட்டுடன் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1)ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர் அதிகாரசபையின் ஒருப்பாட்டுடன் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) அட்டவணைகள் I, II, III மற்றும் IVஇன் நிபந்தனைகளைத் திருத்துதல், அவற்றுக்கு எதனையும் சேர்த்தல் அல்லது அவற்றை வேறுபடுத்துதல்;

(ஆ) இயைபான சட்டவாக்கங்கள், தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் வலுவுறுத்தக்கூடியதன்மை, சர்வதேச ஈடுபாடுகள் மற்றும் எந்தத் தரவுடன் தொடர்புபட்டோரின் தனிப்பட்ட தரவு கைமாற்றப்படுகின்றதோ அந்தத் தரவுடன் தொடர்புபட்டோருக்கான பயனுள்ள நிருவாக மற்றும் நீதிமுறை நிவர்த்தி என்பவற்றைக் கவனத்துட்கொண்டு, 26ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட போதிய பாதுகாப்பு மட்டத்தை உறுதிப்படுத்துகின்ற மூன்றாம் நாடுகளை அடையாளங்காணுதல்;

(இ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் சேவைக்காக அறவிடப்பட்ட கட்டணங்களையும் விதிப்பனவுகளையும் குறித்துரைத்தல்;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படவேண்டிய உரிமங்களின் வகுதிகளைக் குறித்துரைத்தல்;

(உ) உரிமங்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள், படிவம் மற்றும் கால எல்லையும், விண்ணப்பத்துக்கான நடவடிக்கைமுறை, அத்தகைய உரிமங்களைப் புதுப்பித்தல், இடைநிறுத்துதல், இல்லாதாக்குதல் மற்றும் அத்தகைய உரிமங்களை மறுத்தல், இடைநிறுத்துதல் அல்லது இல்லாதாக்குதலுக்கெதிரான மேன்முறையீடு;

(ஊ) உரிமங்களை வழங்குவதற்காகக் கட்டணங்களை விதித்தல்;

(எ) தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு தொடர்பில் தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் தோதான காப்பை வழங்குவதற்கான நிபந்தனைகளைக் குறித்துரைத்தல்;

(ஏ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எப்படிவத்திலும் முறையிலும் அதிகாரசபைக்கு மேன்முறையீடுகள் செய்யப்படலாமோ அப்படிவத்தையும் முறையையும் குறித்துரைத்தல்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

54. இச்சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வோராளும், அவரது கடமைகளை ஏற்குமுன்னர், இச்சட்டத்தின் கீழ் அவரது தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அவரது அறிவுக்கெட்டக்கூடிய எவையேனும் தகவல்கள் தொடர்பில் கண்டிப்பாக இரகசியத்தைத் தாம் கடைப்பிடிப்பாரென வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் சூழ்நிலைகளில் தவிர அத்தகைய ஏதேனும் தகவலை வெளிவிடமாட்டாரென அத்தகைய வெளிப்படுத்துகையின் மூலம் அவர் வாக்குறுதியளித்தலும் வேண்டும்:-

(அ) ஒரு சட்டநீதிமன்றத்தினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போதும்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுக்கும் இணங்கியொழுகுவதற்கெனவும்.

55. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள் அல்லது கட்டளைகளுக்குப் பயன்கொடுப்பதில் ஏதேனும் சிரமம் எழுந்தால், அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அச்சிரமத்தை அகற்றுவதற்கு

அவசியமென அல்லது உசிதமென அமைச்சருக்குத் தோன்றுகின்றவாறு, இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத அத்தகைய ஏற்பாட்டைச் செய்யலாம்:

ஆயின், அத்தகைய கட்டளையெதுவும், இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து ஐந்தாண்டுக்காலப்பகுதியொன்று முடிவுற்றபின்னர் ஆக்கப்படுதல் ஆகாது.

(2) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும், அது ஆக்கப்பட்ட பின்னர் மூன்றுமாதங்களினுள் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

பாகம் X

பொருள்கோடல்

56. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய

"அநாமதேயப்படுத்தல்" என்பது, தனிப்பட்ட தரவு தொடர்பாக, தனிப்பட்ட தரவு அடையாளம் காணப்பட்ட அல்லது அடையாளம் காணத்தக்க இயற்கையாளுடன் தொடர்புபடாதிருப்பதனைச் செய்வதற்கு அத்தகைய ஏதேனும் தனிப்பட்ட தரவிலிருந்து எவையேனும் தனிப்பட்ட அடையாளங் காட்டிகளை நிரந்தரமாக அகற்றுதல் என்று பொருளாகும்;

"தன்னியக்கமாக்கப்பட்ட செய்முறைப்படுத்தல்" என்பது, கையினாலான ஏதேனும் செய்முறைப்படுத்தலை உட்படுத்தாத செய்முறைப்படுத்தல் என்று பொருளாகும்;

"உயிரியற் செய்திகளின் ஆயளவைமுறைத்தரவு" என்பது, முகஞ்சார் உருவங்கள், விரல் வரிவறிவு ஆய்வுத்தரவு அல்லது விழித்திரைப்படலத்துடன் தொடர்புபட்ட தரவு போன்ற இயற்கை ஆளொருவரின் தனித்துவமான அடையாளங்காணலை அனுமதிக்கும் அல்லது உறுதிப்படுத்தும் அந்த இயற்கை ஆளின் உடல்சார், உடல்நூல்சார் அல்லது நடத்தைசார் பண்பியல்புகள் தொடர்பாகக் குறித்த தொழில்நுட்பச் செய்முறைப்படுத்தலிலிருந்து விளைகின்ற தனிப்பட்ட தரவு என்று பொருளாகும்;

"சான்றுப்படுத்துகின்ற குழுக்கள்" என்பது, தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தல் அல்லது தரவுப் பாதுகாப்பு அலுவலர்களின் தகைமைகள் தொடர்பான சான்றுப்படுத்துகைச் சேவைகளை வழங்கும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டுக் குழுக்கள் என்று பொருளாகும்;

"சிறுவர்" என்பது, 16 வயதுக்குக் குறைந்த இயற்கை ஆளொருவர் என்று பொருளாகும்;

"சம்மதம்" என்பது, தரவுடன் தொடர்புபட்டவரின் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துவதற்கு அவரின் உடன்பாட்டைக் குறிப்பிட்டு எழுத்திலானவொரு வெளிப்படுத்துகை அல்லது ஓர் உறுதிப்படுத்துகின்ற நடவடிக்கை என்றவகையாகச் சுதந்திரமாகக் கொடுக்கப்பட்ட, குறிப்பிட்ட, தகவலறிந்த மற்றும் ஐயப்பாடற்ற சுட்டிக்காட்டுகை என்று பொருளாகும்;

"கட்டுப்பாட்டாளர்" என்பது, தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலுக்கான நோக்கங்களையும் வழிவகைகளையும் தனியாக அல்லது ஏனையோருடன் கூட்டாகத் தீர்மானிக்கின்ற எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆள், பகிரங்க அதிகாரசபை, பகிரங்கக் கூட்டுத்தாபனம், அரசசார்பற்ற ஒழுங்கமைப்பு, முகவராண்மை அல்லது வேறேதேனும் குழு அல்லது உருவகம் என்று பொருளாகும்;

"எல்லைக்கப்பாலான தரவோட்டம்" என்பது, ஒரு மூன்றாம் நாட்டில் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தும் நோக்கத்துக்காக இலங்கையின் ஆள்புலத்திலிருந்து வெளியே செல்லும் தனிப்பட்ட தரவின் நகர்வு என்று பொருளாகும்;

"விரல் வரிவறிவு ஆய்வுத்தரவு" என்பது, விரலடையாளங்கள் தொடர்பான தரவு என்று பொருளாகும்;

"உடல் நலம் சம்பந்தமான தரவு" என்பது, ஓர் இயற்கையாளின் உடல் ரீதியிலான அல்லது உள ரீதியிலான சுகாதாரம் தொடர்பான தனிப்பட்ட தரவு என்று பொருளாகும் என்பதுடன் இது அவரது உடல் நல நிலையை அல்லது நிலைமையைச் சுட்டிக்காட்டுகின்ற எவையேனும் தகவல்களையும் உள்ளடக்கும்;

"தரவுப்பாதுகாப்பு அதிகாரசபை" என்பது, இச்சட்டத்தின் 28ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்படும் அதிகாரசபை என்று பொருளாகும்;

"தரவுப் பாதுகாப்பு அலுவலர்" என்பது, இச்சட்டத்தின் 20ஆம் பிரிவின்கீழ் பெயர்குறிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள் என்று பொருளாகும்;

"தரவுடன் தொடர்புபட்டவர்" என்பது, தனிப்பட்ட தரவு எந்தவோர் உயிரோடுள்ள அல்லது இறந்துள்ள அடையாளங்காணப்பட்ட அல்லது அடையாளங் காணத்தக்க இயற்கை ஆள் தொடர்பானதோ அந்த ஓர் இயற்கையாள் என்று பொருளாகும்;

"அடையாங்காணத்தக்க இயற்கையாள்" என்பது, ஏதேனும் தனிப்பட்ட தரவைக் குறிப்பீடுசெய்வதன் மூலம் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அடையாளங் காணப்படமுடியுமான ஓர் இயற்கையாளாகவுள்ளார்;

"மறைமுகப்படுத்தல்" என்பது, அதிகாரமளிக்கப்படாத பாவனையாளர்களுக்குத் தரவை விளங்கமுடியாத தாக்குவதற்குக் கணக்கியல் சார்ந்த பதின்முறை இலக்கமானத்தைப் பயன்படுத்தி அத்தகைய தரவை மறைகுறிப்பாக எழுதுகின்ற அல்லது மாற்றுகின்ற செயல் என்று பொருளாகும்;

"நிதிசார் தரவு" என்பது, தரவுடன் தொடர்புபட்ட ஒருவரினால் திறக்கப்பட்ட கணக்கொன்றையும், அல்லது தரவுடன் தொடர்புபட்ட ஒருவருக்கு நிதிநிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட அட்டையையும் அல்லது கொடுப்பனவுச் சாதனத்தையும் அல்லது நிதிநிலைமையும் கடன் வரலாறும் ஊதியமும் உட்பட ஒரு நிதிநிறுவனத்துக்கும் தரவுடன் தொடர்புபட்ட ஒருவருக்கும் இடையேயான தொடர்புமுறை தொடர்பான ஏதேனும் தனிப்பட்ட தரவையும் அடையாளங்காணமுடியுமான ஏதேனும் அகர எண் அடையாளங்காட்டி அல்லது வேறு தனிப்பட்ட தரவு என்று பொருளாகும்;

"மரபுவழித் தரவு" என்பது, இயற்கையாள் ஒருவரின் உயிரியல்சார் மாதிரியின் அல்லது உடல்திரவத்தின் பகுப்பாய்வொன்றிலிருந்து விளைகின்றதும் அந்த இயற்கையாளின் உடலியங்கியல் அல்லது உடனலம் பற்றித் தனித்துவமான தகவல்களைக் கொடுக்கின்றதும் அந்த இயற்கையாளின் மரபுவழிப் பண்பியல்புகள் தொடர்பானதுமான தனிப்பட்ட தரவு என்று பொருளாகும்;

"உள்ளூரதிகாரசபை" என்பது, ஒரு மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேசசபை என்று பொருளாகுமென்பதுடன் அத்தகைய ஏதேனும்

சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு நேரொத்ததாக உள்ள அல்லது அவற்றை ஒத்த தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44ஆம் அல்லது 45ஆம் உறுப்புரையின் கீழ் தரவுப் பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

"தனிப்பட்ட தரவு" என்பது, பின்வருவனவற்றைக் குறிப்பீடு செய்வதன் மூலம் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் தரவுடன் தொடர்புபட்ட ஒருவரை அடையாளங்காண முடியுமான எவையேனும் தகவல்கள் என்று பொருளாகும்:-

(அ) ஒரு பெயர், அடையாளங்காண் இலக்கம், நிதிசார் தரவு, அமைவிடத்தரவு அல்லது ஓர் இயங்கலை அடையாளங்காட்டி போன்றவோர் அடையாளங்காட்டி; அல்லது

(ஆ) அந்தத் தனியாளின் அல்லது இயற்கையாளின் உடல்சார், உடல்நூல்சார், மரபுவழி, உளஞ்சார், பொருளாதார, கலாசார அல்லது சமூக ஆளடையாளத்துக்குக் குறிப்பான ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட காரணிகள்;

"தனிப்பட்ட தரவு மீறுகை" என்பது, கடத்தப்பட்ட, களஞ்சியப்படுத்தப்பட்ட அல்லது வேறுவகையில் செய்முறைப்படுத்தப்பட்ட தனிப்பட்ட தரவின் தற்செயலான அல்லது சட்டமுறையற்ற அழிவு, இழப்பு, மாற்றம், அதிகாரமளிக்கப்படாத வெளிக்காட்டுகை அல்லது அதற்கான அணுக்கம் என்பவற்றை விளைவிக்கின்ற ஏதேனும் செயல் அல்லது செய்யாமை என்று பொருளாகும்;

"இனஞ்சார்ந்த அல்லது இனத்துக்குரிய தோற்றுவாயை வெளிக்காட்டுகின்ற தனிப்பட்ட தரவு" என்பது, ஓர் இயற்கையாளின் இனத்தை அல்லது இனப்பிரிவைச் சுட்டிக்காட்டக்கூடிய அல்லது அது தொடர்பான நிழற்படங்கள் உட்பட்ட ஏதேனும் தனிப்பட்ட தரவு என்று பொருளாகும்;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும்;

"செய்முறைப்படுத்தல்" என்பது, தனிப்பட்ட தரவைச் சேகரித்தல், களஞ்சியப்படுத்துதல், பேணிக்காத்தல், மாற்றுதல், மீட்டுப்பெறுதல், வெளிக்காட்டுதல், கடத்துதல், கிடைக்கக் கூடியதாக்குதல், அழித்துவிடுதல், அழித்தல், அதன் மீதான கலந்தாலோசனை, வரிசைப்படுத்துகை, இணைப்பு அல்லது தர்க்கரீதியிலான அல்லது கணக்குச்சார் தொழிற்பாடுகள் என்பனவுட்பட ஆனால் அவற்றிற்கு வரையறுக்கப்படாமல் தனிப்பட்ட தரவின்மீது மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் தொழிற்பாடு என்று பொருளாகும்;

"செய்முறைப்படுத்துநர்" என்பது, கட்டுப்பாட்டாளரின் சார்பில் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துகின்றதும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதுமான ஓர் இயற்கை அல்லது சட்ட ஆள், பகிரங்க அதிகாரசபை அல்லது வேறு உருவகம் என்று பொருளாகும்:

ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, செய்முறைப்படுத்துநர் ஒருவர், கட்டுப்பாட்டாளரிலிருந்து தனிவேறான உருவகமொன்றாக அல்லது ஆளொருவராக மற்றும் கட்டுப்பாட்டாளரின் ஏதேனும் படிநிலைசார் கட்டுப்பாட்டுக்கு அமையாதுள்ள ஆளொருவராக இருத்தல் வேண்டுமென்பதுடன் ஒரு பகுதி இன்னொரு பகுதிக்காகச் செய்முறைப்படுத்தல் அல்லது ஊழியர் ஒருவர் அவரின் தொழில்தருநரினது சார்பில் தரவைச் செய்முறைப்படுத்தல் போன்ற உள்ளகரீதியில் செய்யப்படுகின்ற செய்முறைப்படுத்தலைத் தவிர்க்கின்றது;

எடுத்துக்காட்டுகை: வைத்தியசாலை ஒன்று அதன் நோயாளிகளின் பதிவேடுகளினது பகுப்பாய்வை முகாமை செய்வதற்கு ஊழியர் ஒருவராகத் தரவுவிஞ்ஞானி ஒருவரைத் தொழிலுக்கமர்த்துகின்றது. கம்பெனி B இனால் ஆதரிக்கப்பட்ட மூன்றாந்திறத்தவரின் உள்நாட்டுக் கிளவுட் தளத்தில் அதன் நோயாளிகளின் பதிவேடுகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு வைத்தியசாலை முடிபுசெய்துள்ளது. நோயாளிகளின் பதிவேடுகளினது முகாமையைப் பொறுத்தவரை வைத்தியசாலை கட்டுப்பாட்டாளராகவும் கம்பெனி B செய்முறைப்படுத்துநராகவும் உள்ளன. வைத்தியசாலையின் தரவு விஞ்ஞானி, கட்டுப்பாட்டாளரின் ஊழியர் ஒருவராக மட்டுமே உள்ளார்; செய்முறைப்படுத்துநர் ஒருவர் அல்லர்;

"தோற்றுருவம்செய்தல்" என்பது, வேலைத்தலத்தில் தரவுடன் தொடர்புபட்டவரின் செயல்நிறைவேற்றம், பொருளாதார நிலைமை, உடனலம், தனிப்பட்ட முந்துரிமைகள், அக்கறைகள், நம்பகமானதன்மை, நடத்தை, பழக்கவழக்கங்கள், அமைவிடம் அல்லது நடமாட்டங்கள் சம்பந்தமான அம்சங்களை மதிப்பிடுவதற்கு, பகுப்பாய்வு செய்வதற்கு அல்லது எதிர்வுகூறுவதற்குத் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தல் என்று பொருளாகும்;

"போலிமயமாக்குதல்" என்பது, மேலதிகத் தகவல்களைப் பயன்படுத்தாமல் தரவுடன் தொடர்புபட்ட ஒருவரை அடையாளங்காண்பதற்குத் தனிப்பட்டதரவைப் பயன்படுத்த முடியாதுள்ள அத்தகையவொரு முறையில் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தல் என்றும் அத்தகைய மேலதிகத் தகவல்கள் தனிவேறாக வைத்திருக்கப்பட்டு அத்தனிப்பட்ட தரவானது தரவுடன் தொடர்புபட்ட ஒருவருக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதாக இராதமையை உறுதிப்படுத்துவதற்குத் தொழில்நுட்ப மற்றும் ஒழுங்கமைப்புச்சார் வழிமுறைகளுக்கு அமைந்ததாகவுள்ளது என்றும் பொருளாகும்

"பகிரங்க அதிகாரசபை" என்பது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஓர் அமைச்சு, ஏதேனும் திணைக்களம் அல்லது மாகாணசபை, உள்ளூரதிகார சபை, நியதிச்சட்ட முறையான குழு அல்லது ஏதேனும் நிறுவனம் அல்லது ஒரு மாகாண சபையினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஓர் அமைச்சு, ஏதேனும் திணைக்களம் அல்லது வேறு அதிகாரசபை அல்லது நிறுவனம் என்று பொருளாகும்;

"இயைபான ஒழுங்குபடுத்தும் அல்லது நியதிச்சட்டமுறையான குழு" என்பது, கட்டுப்பாட்டாளரை ஒழுங்குபடுத்துகின்றதும், அவருக்கு அதிகாரமளிக்கின்றதும் அல்லது அவரை மேற்பார்வை செய்கின்றதும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதுமான ஒழுங்குபடுத்தும் அல்லது நியதிச்சட்டமுறையான குழு என்று பொருளாகும் என்பதுடன் இச்சட்டத்தின் 26ஆம், 27ஆம் மற்றும் 38ஆம் பிரிவுகளின் நோக்கத்துக்காக மேற்பார்வைப் பணிகளை நிறைவேற்றுகின்ற ஓர் அமைச்சையும் உள்ளடக்கும்;

"பெறுநர்" என்பது, தனிப்பட்ட தரவு எந்த இயற்கை அல்லது சட்ட ஆளுக்கு வெளிப்படுத்தப்படுகின்றதோ அந்த ஆள் அல்லது ஒரு பகிரங்க அதிகாரசபை அல்லது தனிப்பட்ட தரவு எந்தக் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவுக்கு வெளிப்படுத்தப்படுகின்றதோ அந்த ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழு என்று பொருளாகும்

"தனிப்பட்ட தரவின் விசேடவகுதிகள்" என்பது, இனஞ்சார்ந்த அல்லது இனத்துக்குரிய தோற்றுவாய், அரசியல் அபிப்பிராயங்கள், மத அல்லது தத்துவவியற்சார் நம்பிக்கைகள், மரபுவழித்தரவைச் செய்முறைப்படுத்தல், இயற்கையாள் ஒருவரைத் தனித்துவமான முறையில் அடையாளங்காணும் நோக்கத்துக்காக உயிரியற் செய்திகளின் ஆயளவை முறைத்தரவு, உடல் நலம் சம்பந்தமான தரவு அல்லது ஓர் இயற்கையாளின் பாலியல் வாழ்க்கை அல்லது பாலியற் போக்குச் சம்பந்தமான தரவு, தவறுகள், குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் மற்றும் குற்றத்தீர்ப்புகள் தொடர்பான தனிப்பட்ட தரவு அல்லது ஒரு சிறுவர் தொடர்பான தனிப்பட்ட தரவு என்று பொருளாகும்;

"இலங்கை" என்பது, அரசியலமைப்பின் 5ஆம் உறுப்புரையினால் விதிக்கப்பட்டவாறு இலங்கையின் ஆள்புல எல்லைகள் என்று பொருளாகும் என்பதுடன் இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளை அல்லது வான்வெளியை, இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கப்பலை அல்லது வானூர்தியை, ஓர் இலங்கைத் தூதரகத்தின் வளவுகளினுள்ளான ஏதேனும் அமைவிடத்தை அல்லது இலங்கைக்கு வெளியே அல்லது இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அல்லது இலங்கையில் தாபிக்கப்பட்டு இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள ஏதேனும் சட்டமுறையான குழுவின்சார்பில் இருப்பாட்சி கொள்ளப்பட்ட அல்லது அதன் கட்டுப்பாட்டின்கீழுள்ள எவையேனும் வளவுகளினுள் அமைந்துள்ள அத்தகைய தூதரகத்தலைவரின், தூதுவ முகவரின் அல்லது அத்தகைய தூதரகத்தின் வேறெவரேனும் உறுப்பினரின் வதிவிடத்தை உள்ளடக்கும்;

"மூன்றாம் நாடு" என்பது, எல்லைக்கப்பாலான ஓட்டத்தின் நோக்கத்துக்காக 26ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட ஒரு நாடு என்று பொருளாகும்;

"மூன்றாந்திறத்தவர்" என்பது, தரவுடன் தொடர்புபட்டவர், கட்டுப்பாட்டாளர், செய்முறைப்படுத்துநர் மற்றும் கட்டுப்பாட்டாளரின் அல்லது செய்முறைப்படுத்துநரின் நேரடி அதிகாரத்தின் கீழ் உள்ளவர்களும் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டவர்களுமான ஆட்கள் அல்லாத ஓர் இயற்கை அல்லது சட்ட ஆள், பகிரங்க அதிகாரசபை, முகவராண்மை அல்லது வேறு குழு என்று பொருளாகும்;

"எழுத்திலான" என்பது, கையினால் அல்லது இலத்திரனியல் முறையில் எழுதப்பட்ட ஓர் ஆவணத்தை உள்ளடக்கும்.

57. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

(பிரிவு 5(அ))

அட்டவணை I

சட்டமுறையான செய்முறைப்படுத்தலுக்கான நிபந்தனைகள்

(அ) தரவுடன் தொடர்புபட்டவர் தனது தனிப்பட்ட தரவின் செய்முறைப் படுத்தலுக்குச் சம்மதம் அளித்துள்ளார்; அல்லது

(ஆ) தரவுடன் தொடர்புபட்டவர் எந்த ஒப்பந்தத்துக்குத் திறத்தவரொருவராகவுள்ளாரோ அந்த ஒப்பந்தமொன்றைப்புரிவதற்காக அல்லது ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ளுமுன்னர் தரவுடன் தொடர்புபட்டவரின் கோரிக்கையின்பேரில் நடவடிக்கைகளை எடுப்பதற்கெனச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(இ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் எந்தச் சட்டப்படியான கடப்பாட்டுக்கு அமைந்தவராகவுள்ளாரோ அந்தச் சட்டப்படியான கடப்பாட்டுக்கு இணங்கியொழுகுவதற்காகச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(ஈ) தரவுடன் தொடர்புபட்டவரின் அல்லது வேறோர் இயற்கை ஆளின் உயிருக்கு, உடல் நலத்துக்கு அல்லது காப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ளவோர் அவசரநிலைமைக்குப் பதிலிறுப்பதற்குச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(உ) பொதுமக்களின் அக்கறைகருதி அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் சுற்றறிக்கை, பணிப்பு அல்லது சட்டக்கோவை உள்ளடங்கலாகக் கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்கு அளிக்கப்பட்ட, அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களை, பணிகளை அல்லது கடமைகளைப் பிரயோகிப்பதில் நிறைவேற்றப்பட்ட ஒரு பணியைப் புரிவதற்காகச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(ஊ) கட்டுப்பாட்டாளரினால் அல்லது ஒரு மூன்றாந்திறத்தவரினால் பின்பற்றப்பட்ட சட்டமுறையான அக்கறைகளின் நோக்கங்களுக்காக, அத்தகைய அக்கறைகள், குறிப்பாகத் தரவுடன் தொடர்புபட்டவர் ஒரு சிறுவராக இருக்குமிடத்து, தனிப்பட்ட தரவின் பாதுகாப்பைத் தேவைப்படுத்துகின்ற தரவுடன் தொடர்புபட்டவரின் அக்கறைகளினால் மேலோங்கப்படுமிடத்துத் தவிர, செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது;

(எ) இவ்வட்டவணையின் (உ) என்னும் விடயத்தின் நோக்கத்துக்காக, "பொதுமக்களின் அக்கறை" என்பது, -

(i) பொதுச்சுகாதாரம் மற்றும் சமூகப்பாதுகாப்புப் போன்ற சுகாதார நோக்கங்களுக்காகவும் அத்துடன் சுகாதாரக் கவனிப்புச் சேவைகளை முகாமைசெய்வதற்காகவும் அவசியமாகவுள்ள தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலையும்;

(ii) தொற்றக்கூடிய நோய்களையும் சுகாதாரத்துக்கான மற்றும் வேறு பாரதூரமான அச்சுறுத்தல்களையும் கட்டுப்படுத்துவதற்காக அவசியமாகவுள்ள தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலையும்;

(iii) சட்டத்தினால் விதிக்கப்பட்ட நோக்கங்களையும் குறிக்கோள்களையும் எய்துவதற்காக அலுவலகமுறையான அதிகாரிகளினால் அவசியமாகவுள்ள தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலையும்,

உள்ளடக்கும்;

(ஏ) இவ்வட்டவணையின் (ஊ) என்னும் விடயத்தின் நோக்கத்துக்காகச் "சட்டமுறையான அக்கறை" என்பது, -

(i) தரவுடன் தொடர்புபட்டவர் கட்டுப்பாட்டாளரொருவரின் ஒரு வாடிக்கையாளராக அல்லது அவரின் சேவையில் உள்ளவராக இருக்கும் நிலைமைகளிலான செய்முறைப்படுத்தலையும்;

(ii) தனிப்பட்ட தரவு சேகரிக்கப்படும் நேரத்திலும் சந்தர்ப்பத்திலும் அந்நோக்கத்துக்கான செய்முறைப்படுத்தல் இடம்பெறலாமாவென்பதைத் தரவுடன் தொடர்புபட்ட ஒருவர் நியாயமான முறையில் எதிர்பார்க்கின்றாராவென்பதையும்;

(iiii) மோசடியைத் தடுக்கும் நோக்கங்களுக்காகக் கண்டிப்பாக அவசியமாகவுள்ள தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தலையும்;

(iv) வலையமைப்பு மற்றும் தகவற் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கங்களுக்காகக் கண்டிப்பாக அவசியமாகவுள்ள மற்றும் விகிதாசாரப்படியுள்ள அளவுக்குத் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தலையும்,

உள்ளடக்கும்.

(பிரிவு 5(ஆ)

அட்டவணை II

தனிப்பட்ட தரவின் விசேட வகுதிகளைச் செய்முறைப்படுத்தலுக்கான நிபந்தனைகள்

(அ) சம்பந்தப்பட்ட தரவுடன் தொடர்புபட்டவரின் சம்மதத்தைப் பொருட்படுத்தாது செய்முறைப்படுத்தல் புரியப்பட்ட நேரத்தில் கட்டுப்பாட்டாளரினால் குறித்துரைக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நோக்கங்களுக்காகத் தனிப்பட்ட தரவின் விசேட வகுதிகளைச் செய்முறைப்படுத்தலை வேறேதேனும் எழுத்திலான சட்டம் தடைசெய்தாலொழிய, அத்தகைய தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துவதற்குத் தரவுடன் தொடர்புபட்டவர் தமது சம்மதத்தை அளித்துள்ளார். ஒரு சிறுவரின் விடயத்தில், "சம்மதம்" என்பது, அத்தகைய சிறுவரின் பெற்றோரினது அல்லது சட்டப்படியான பாதுகாவலரினது சம்மதம் என்று பொருளாதல் வேண்டும்; அல்லது

(ஆ) தொழில், ஓய்வூதியமுட்படச் சமூகப் பாதுகாப்பு என்ற துறையில் கட்டுப்பாட்டாளரின் கடப்பாடுகளை நிறைவேற்றும் மற்றும் தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளைப் பிரயோகிக்கும் நோக்கங்களுக்காகவும், தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளுக்கான தோதான பாதுகாப்புகளை வழங்குகின்ற ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட அளவுவரை நிகழவுள்ள சுகாதார அல்லது வேறு அவசரகாலநிலைமைகள் தொடர்பாகப் பொதுமக்களின் காப்பை உறுதிப்படுத்துகின்ற பொதுச் சுகாதார நோக்கங்களுக்காகவும், கண்காணிப்பு மற்றும் பொதுமக்களுக்கான எச்சரிக்கை முறைமைகள், தொற்றக்கூடிய நோய்களையும் பொதுச்சுகாதாரத்துக்கான வேறு பாரதூரமான அச்சுறுத்தல்களையும் தடுத்தல் அல்லது கட்டுப்படுத்துதல் மற்றும் பொதுச் சுகாதாரக் கவனிப்புச் சேவைகளை முகாமைசெய்தலுக்குச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(இ) தரவுடன் தொடர்புபட்டவர் உடல்ரீதியாக அல்லது சட்டரீதியாகச் சம்மதமளிக்க இயலாதுள்ளவிடத்து தரவுடன் தொடர்புபட்டவரின் அல்லது வேறோர் இயற்கையான ஆளின் உயிருக்கு, உடனலத்துக்கு அல்லது காப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ள அவசரகாலநிலைமையொன்றுக்குப் பதிலிறுப்பதற்குச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(ஈ) தரவுடன் தொடர்புபட்டவரினால் வெளிப்படையாகப் பகிரங்கப்படுத்தப்படுகின்ற தனிப்பட்ட தரவுடன் செய்முறைப்படுத்தல் தொடர்புபட்டுள்ளது; அல்லது

(உ) ஒரு நீதிமன்றம் அல்லது நியாயசபை அல்லது அத்தகைய ஒத்த அரங்கின் முன்னர் அல்லது நீதிமன்றங்கள் அவற்றின் நீதிமுறைத் தன்மையில் செயலாற்றும்போதெல்லாம் சட்டப்படியான உரிமைக் கோரிக்கைகளை நிலைநாட்டுவதற்காகவும், பிரயோகிப்பதற்காகவும் அல்லது எதிர்வாதிடுவதற்காகவும் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(ஊ) தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்குப் பொருத்தமான மற்றும் குறிப்பிட்ட வழிமுறைகளை வழங்கும் அதேவேளையில், பின்பற்றப்பட்ட இலக்குக்கு அவசியமானதாகவும் விகிதாசாரப்படியானதாகவும் இருக்க வேண்டிய அட்டவணை Iஇன் (எ) என்னும் விடயத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்டவாறான ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது பொதுமக்களின் அக்கறையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான ஏதேனும் நோக்கத்துக்காகச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(எ) தடுப்புச்சார் அல்லது தான்புரிதொழில்சார் மருத்துவ நோக்கங்களுக்காக, மருத்துவ நோய்நாட்டத்துக்காக, கவனிப்பை அல்லது சிகிச்சையை வழங்குவதற்காக அல்லது சுகாதாரக் கவனிப்புச் சேவைகளை முகாமை செய்வதற்காக மற்றும் அத்தகைய தரவு, இலங்கையில் நிலவுகின்ற ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட அல்லது அச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு சுகாதார உயர்தொழிலரினால் செய்முறைப்படுத்தப்படுமிடத்து செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(ஏ) இச்சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எடுத்துக்கூறப்பட்ட தரவுப் பாதுகாப்பு உரிமைகளைப் பாதுகாக்கின்றதும் பின்பற்றப்பட்ட இலக்குக்கு விகிதாசாரப்படியானதாக இருக்கவேண்டியதுமான சட்டத்துக்கிணங்கப் பொதுமக்களின் அக்கறைகருதி ஆவணக்காப்பு நோக்கங்களுக்காக, அறிவியல் ஆராய்ச்சி அல்லது வரலாற்றுமுறை ஆராய்ச்சி நோக்கங்களுக்காக அல்லது புள்ளிவிபரஞ்சார் நோக்கங்களுக்காக மற்றும் தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்குப் பொருத்தமான மற்றும் குறிப்பிட்ட வழிமுறைகளை வழங்குவதற்குச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது.

(பிரிவு 5(இ)

அட்டவணை **III**

தரவுடன் தொடர்புபட்டவரின் சம்மதத்துக்கான நிபந்தனைகள்

(அ) தரவுடன் தொடர்புபட்டவர் தொடர்பான அவரது தனிப்பட்ட தரவைத் தரவுடன் தொடர்புபட்டவர் செய்முறைப்படுத்துவதற்குச் சம்மதித்துள்ளாரெனக் கட்டுப்பாட்டாளர் எடுத்துக்காட்டுதல் வேண்டும்;

(ஆ) வேறு கருமங்களுடனும் சம்பந்தப்பட்ட எழுத்திலான வெளிப்படுத்துகையொன்றின் சந்தர்ப்பத்தில் தரவுடன்தொடர்புபட்டவரின் சம்மதம் அளிக்கப்படின், சம்மதத்துக்கான கோரிக்கையானது, தெளிவான, சாதாரண மொழியைப் பயன்படுத்தி, விளங்கத்தக்க மற்றும் இலகுவாக அணுகக்கூடிய படிவத்தில், ஏனைய கருமங்களிலிருந்து தெளிவான முறையில் வேறுபிரித்துக்காட்டப்படத்தக்கவொரு முறையில் முகாமைப்படுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகையவொரு வெளிப்படுத்துகை இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளின் மீறுகையொன்றாக அமைதலாகாது;

(இ) சம்மதமானது சுதந்திரமாக அளிக்கப்படுகின்றதாவென்பதனை மதிப்பீடுசெய்யும்போது, சேவையொன்றின் வழங்குகையுட்பட, மற்றவற்றுக்கிடையில், ஓர் ஒப்பந்தத்தின் புரிகைக்காக அவசியமாகவிராத தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலுக்கான சம்மதத்தின் மீதான நிபந்தனையின்

மீதுள்ளாதாவென்பதுபற்றி விசேடமாக கவனத்திற்கொள்ளப்படுதல் வேண்டும் அத்துடன்

(ஈ) சம்மதத்தை அளிக்குமுன்னர், தரவுடன் தொடர்புபட்டவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எந்நேரத்திலும் சம்மதத்தை மீளப்பெறமுடியுமென்பது அவருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(பிரிவு 5(ஈ)

அட்டவணை IV

குற்றவியற் புலனாய்வுகள் தொடர்பாகத் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தல்

(அ) தவறுகளின் சட்டமுறையான புலனாய்வுகள் அல்லது தொடர்புபட்ட பாதுகாப்பு வழிமுறைகள் தொடர்பான தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தலானது, தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளுக்கான மற்றும் சுதந்திரங்களுக்கானதோதான பாதுகாப்புகளை வழங்கும் அதேவேளையில், ஏற்புடையற்பாலனவான எழுத்திலான சட்டங்களுக்கிணங்க மட்டுமே நிறைவேற்றப்படுதல் வேண்டும்;

(ஆ) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழான ஏற்பாடுகளைப் பின்பற்றிப் புலானாய்வுகள் நிறைவேற்றப்படின், தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தல் இவ்வட்டவணையின் கீழ் சட்டமுறையானதாகக் கருதப்படலாம்; அத்துடன்

(இ) இவ்வட்டவணையின்கீழ் தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளுக்காகவும் சுதந்திரங்களுக்காகவும் தோதான பாதுகாப்புகளை வழங்குவதற்கான நிபந்தனைகள் விதித்துரைக்கப்படக்கூடியறானதாகும்.

(பிரிவுகள் 11 மற்றும் 13)

அட்டவணை V

தனிப்பட்ட தரவைச் சேகரித்தல்

1. தரவுடன் தொடர்புபட்ட ஒருவர் தொடர்பான தனிப்பட்ட தரவானது தரவுடன் தொடர்புபட்டவரிடமிருந்து சேகரிக்கப்படுமிடத்து, கட்டுப்பாட்டாளர், அத்தகைய தனிப்பட்ட தரவைச் சேகரிக்கும் நேரத்தில், தரவுடன் தொடர்புபட்டவருக்குப் பின்வரும் தகவல்களை வழங்குதல் வேண்டும்:

(அ) கட்டுப்பாட்டாளரின் மற்றும் ஏற்புடையற்பாலவிடத்து கட்டுப்பாட்டாளரினது பிரதிநிதியின் ஆளடையாளமும் தொடர்பு விபரங்களும்;

(ஆ) ஏற்புடையற்பாலவிடத்து, தரவுப் பாதுகாப்பு அலுவலரின் தொடர்பு விபரங்கள்;

(இ) தனிப்பட்ட தரவு எந்த உட்கருதப்பட்ட நோக்கங்களுக்காகச் செய்முறைப்படுத்தப்படுகின்றதோ அந்த உட்கருதப்பட்ட நோக்கங்களும் செய்முறைப்படுத்தலுக்கான சட்ட அடிப்படையும்;

(ஈ) செய்முறைப்படுத்தலானது அட்டவணை I இன் (*ஊ*) என்னும் விடயத்தின் அடிப்படையின் மீதானதாக இருக்குமிடத்து, கட்டுப்பாட்டாளரினால் அல்லது ஒரு மூன்றாந்திறத்தவரினால் பின்பற்றப்பட்ட சட்டமுறையான அக்கறை;

(உ) சேகரிக்கப்படுகின்ற தனிப்பட்ட தரவின் வகுதிகள்;

(ஊ) அட்டவணை I இன் (*அ*) என்னும் விடயத்தையும் அட்டவணை II இன் (*அ*) என்னும் விடயத்தையும் பின்பற்றிய சம்மதத்தை அடிப்படையாகக் கொள்வதற்குச் செய்முறைப்படுத்தலானது உட்கருதப்படுமிடத்து, சம்மதம் மீளப்பெறப்படுமுன்னர் அதன் அடிப்படையின்மீதான செய்முறைப்படுத்தலின் சட்டத்தன்மையைப் பாதிக்காமல் தரவுடன் தொடர்புபட்டவருக்கு அவரது சம்மதத்தை மீளப்பெறுவதற்கு உரிமை உள்ளமை மற்றும் அத்தகைய மீளப்பெறுகைக்கான நடவடிக்கைமுறை;

(எ) ஏற்புடையதாயின், அத்தகைய தனிப்பட்ட தரவு எந்தப் பெறுநர்களுடன் அல்லது மூன்றாந்திறத்தவர்களுடன் பகிரப்படலாமோ அந்தப் பெறுநர்கள் அல்லது மூன்றாந் திறத்தவர்கள்;

(ஏ) ஏற்புடையதாயின், கட்டுப்பாட்டாளர் நிறைவேற்றுவதற்கு உட்கருதுகின்ற தனிப்பட்ட தரவின் ஏதேனும் எல்லைக்கப்பாலான கைமாற்றம் தொடர்பான தகவல்;

(ஐ) ஒன்பதாம் பிரிவின் நியதிகளின்படி தனிப்பட்ட தரவு வைத்திருக்கப்படவேண்டிய காலப்பகுதி அல்லது அத்தகைய காலப்பகுதி பற்றி அறியப்படாதிருக்குமிடத்து, அத்தகைய காலப்பகுதியைத் தீர்மானிப்பதற்கான கட்டளைக்கற்கள்;

(ஒ) பாகம் IIஇல் குறிப்பீடுசெய்யப்பட்ட தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகள் உள்ளமையும் அவற்றைப் பிரயோகிப்பதற்கான நடவடிக்கைமுறையும்;

(ஓ) அதிகாரசபைக்கு முறைப்பாடுகளைக் கோப்பிடுவதற்கான உரிமையொன்று உள்ளமை;

(ஔ) தரவுடன் தொடர்புபட்டவரினால் தனிப்பட்ட தரவின் வழங்குகை ஒரு நியதிச்சட்டமுறையான அல்லது ஒப்பந்தஞ்சார் தேவைப்பாடா அல்லது ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதற்கு அவசியமான ஒரு தேவைப்பாடா என்பதுவும், தரவுடன் தொடர்புபட்டவர் தனிப்பட்ட தரவை வழங்குவதற்குக் கடப்பாடுள்ளவரா என்பதுவும், அத்தகைய தரவை வழங்கத்தவறியமையின் நிகழ்தகு விளைவுகளும்; அத்துடன்

(க) பிரிவு 18இல் குறிப்பீடுசெய்யப்பட்ட தோற்றுருவம்செய்தல் உட்பட, தனியாளினால் தன்னியக்கமாக்கப்பட்ட முடிபுசெய்தல் உள்ளமை மற்றும் ஆகக்குறைந்தது அவ்விடயங்களிலேனும், உட்படுத்தப்பட்ட தர்க்கம் பற்றி நியாயமான முறையில் அர்த்தமுள்ள தகவல்களும், தரவுடன் தொடர்புபட்டவருக்கு அத்தகைய செய்முறைப்படுத்தலின் குறிப்பிடத்தக்கதன்மையும் எதிர்நோக்கப்பட்ட விளைவுகளும்.

2. தனிப்பட்ட தரவானது தொடக்கத்தில் எந்த நோக்கத்துக்காகச் சேகரிக்கப்பட்டதோ அந்த நோக்கமொன்றல்லாதவொரு நோக்கத்துக்காக அத்தனிப்பட்ட தரவை மேற்கொண்டு செய்முறைப்படுத்துவதற்குக் கட்டுப்பாட்டாளர் உட்கருதுமிடத்து, கட்டுப்பாட்டாளர், இவ்வட்டவணையின் 1ஆம் விடயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் மேற்கொண்ட செய்முறைப்படுத்தல்மீதான விபரமான தகவல்களையும் அதன் நோக்கத்தையும் தரவுடன் தொடர்புபட்டவருக்கு வழங்குதல் வேண்டும்.

3. இவ்வட்டவணையின் 1ஆம் மற்றும் 2ஆம் விடயங்கள், தரவுடன் தொடர்புபட்டவர் அத்தகவல்களை ஏலவே பெற்றுக்கொண்டுள்ளவிடத்து அல்லது அத்தகவல்கள்பற்றி அவருக்கு அறியத்தரப்பட்டுள்ளவிடத்து ஏற்புடையனவாதலாகாது.

4. தரவுடன் தொடர்புபட்டவரின் தனிப்பட்ட தரவு, தரவுடன் தொடர்புபட்டவருடனான நேரடி இடைச்செயலாற்றுகையினூடாகவல்லாது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளவிடத்து, கட்டுப்பாட்டாளர், தனிப்பட்ட தரவு பெறப்பட்ட மூலத்தையும், இவ்வட்டவணையின் 1ஆம் விடயத்தின் கீழ் தேவைப்பட்ட தகவல்களுடன் சேர்த்து, ஏற்புடையற்பாலவிடத்து, அது பகிரங்கமானமுறையில் அணுகத்தக்க மூலத்திலிருந்து வந்ததா அல்லதாவென்பதையும் தரவுடன் தொடர்புபட்டவருக்கு வழங்குதல் வேண்டும்.

5. தரவுடன்தொடர்புபட்டவரின் தனிப்பட்ட தரவு, தரவுடன் தொடர்புபட்டவருடனான நேரடி இடைச்செயலாற்றுகையினூடாகவல்லாது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளவிடத்து, கட்டுப்பாட்டாளர், இவ்வட்டவணையின் 1ஆம், 4ஆம் விடயங்களின்கீழான தகவல்களைப் பின்வருமாறு வழங்குதல் வேண்டும்:

(அ) தனிப்பட்ட தரவு செய்முறைப்படுத்தப்படும் குறிப்பிட்ட சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, தனிப்பட்ட தரவைப் பெற்றுக்கொண்டபின்னர் நியாயமானவொரு காலப்பகுதியினுள், ஆனால் ஆகக்குறைந்தது ஒருமாதத்தினுள்;

(ஆ) தனிப்பட்ட தரவு, தரவுடன் தொடர்புபட்டவருடன் தொடர்பாடுவதற்காகப் பயன்படுத்தப்படவுள்ளதெனின், ஆகக் குறைந்தது அத்தரவுடன் தொடர்புபட்டவருக்கு முதலாவது தொடர்பாடல் செய்யப்பட்ட நேரத்தில்; அல்லது

(இ) வேறொரு பெறுநருக்கு வெளிக்காட்டுகையொன்று எதிர்நோக்கப்படின், ஆகக்குறைந்தது தனிப்பட்ட தரவு முதன்முதலாக வெளிக்காட்டப்படும்போது.

6. இவ்வட்டவணையின் 1 முதல் 4 வரையிலான விடயங்கள் பின்வருமிடத்து ஏற்புடையனவாதலாகாது:

(அ) தரவுடன் தொடர்புபட்டவருக்குத் தகவல்கள் ஏலவே வழங்கப்பட்டுள்ளன அல்லது அவை பற்றி அவர் அறிவிக்கப்பட்டுள்ளாரென்ற நிகழ்வைக் கட்டுப்பாட்டாளர் நிலைநாட்டியுள்ளவிடத்து; அல்லது

(ஆ) இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிபந்தனைகளுக்கும் காப்புகளுக்கும் அமைய அல்லது இவ்வட்டவணையின் 1ஆம் விடயத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட கடப்பாடு அச்செய்முறைப்படுத்தலின் குறிக்கோள்களை எய்துவதனை இயலாததாக்கும் அல்லது பாரதூரமான முறையில் அதற்குக் கேடுவிளைவிக்கும் சாத்தியங்கொண்டதாக இருக்குமளவுக்கு, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால், அறிவியல் ஆராய்ச்சி, வரலாற்றுமுறைசார் ஆராய்ச்சி அல்லது புள்ளிவிபரஞ்சார் ஆராய்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பொதுமக்களின் அக்கறைகருதி ஆவணக்காப்பு நோக்கங்களுக்காகக் குறிப்பாகச் செய்முறைப்படுத்துவதற்காக அத்தகைய தகவலை வழங்குதல் இயலாததாக எண்பிக்கப்படுமிடத்து அல்லது அளவொவ்வாத முயற்சியொன்றை உட்படுத்துமிடத்து. அத்தகைய விடயங்களில் கட்டுப்பாட்டாளர், இயைபான தகவல்களைப் பகிரங்கமான முறையில் கிடைக்கக்கூடியதாக்குதலுட்பட, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் பாதுகாக்கப்பட்ட தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்குத் தோதானவழிமுறைகளை எடுத்தல் வேண்டும்; அல்லது

(இ) கட்டுப்பாட்டாளர் எந்த எழுத்திலான சட்டத்துக்கு அமைந்தவராக்கப்பட்டுள்ளாரோ மற்றும் இச்சட்டத்தின் கீழும் அத்தகைய எழுத்திலான சட்டத்தின் கீழும் பாதுகாக்கப்பட்ட தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்குத் தோதான வழிமுறைகளை அது வழங்குகின்றதோ அந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் பெற்றுக்கொள்கை அல்லது வெளிக்காட்டுகை வெளிப்படையாக விதிக்கப்பட்டவிடத்து; அல்லது

(ஈ) உயர்தொழில்சார் சிறப்புரிமைக் கடப்பாடுகளின் விளைவாகத் தனிப்பட்ட தரவு அந்தரங்கமானதாக வைத்திருக்கப்பட வேண்டியவிடத்து அல்லது இரகசியம் பற்றிய நியதிச்சட்ட முறையான கடப்பாடொன்றுட்பட, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் வெளிகாட்டப்படுவதற்கு அனுமதிக்கப்படாதவிடத்து.

(பிரிவு 29(5)

அட்டவணை VI

1. தவிசாளர் தவிர்ந்த சபையின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் இறப்பின் மூலம், பதவிவிலகுவதன் மூலம் அல்லது அகற்றப்படுவதன் மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத்தேதியிலிருந்து மூன்றாண்டுகாலமொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய, மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்:

ஆயின், இறப்பின்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது அகற்றப்படுவதன் மூலம் பதவியை வறிதாக்கியுள்ள உறுப்பினரொருவரின் இடத்தில் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

2. (1) சபையின் எவரேனும் உறுப்பினர் எந்நேரத்திலும் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் தனது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை, அது சனாதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(2) இறப்பு, பதவிவிலகுகை, அகற்றுகை காரணமாக எவரேனும் உறுப்பினர் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், சனாதிபதியானவர், 29ஆம் பிரிவின் (3)ஆம் மற்றும் (4)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, வேறோராள் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகிப்பதற்கு அவரை நியமிக்கலாம்.

(3) தவிசாளர் தவிர்ந்த அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினர் சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக மூன்று மாதங்களை விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்குத் தனது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருப்பின், சனாதிபதியானவர் 29ஆம் பிரிவின் (3)ஆம், (4)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய காலப்பகுதியின் போது அவரது இடத்திற் செயலாற்றுவதற்கு வேறோராளை நியமிக்கலாம்.

(4) அதிகாரசபையின் அனுமதியை முதலில் பெற்றுக்கொள்ளாமல் அதிகாரசபையின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதராத சபையின் உறுப்பினரொருவர் தனது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

3. (1) ஆளொருவர் பின்வருமாறிருப்பின் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) அவர் பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராக அல்லது ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூராதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) சித்தசுவாதீனமற்றவராக அல்லது தனது கடமைகளை நிறைவேற்ற இயலாதவராக இருந்தால் அல்லது வந்தால்;

(இ) பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கிமுறிந்தவராக இருந்தால் அல்லது வந்திருந்தால்;

(ஈ) ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால் அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால்;

(உ) பதவியிலிருந்து முன்னர் அகற்றப்பட்டிருந்தால்.

(2) சனாதிபதியானவர், அதிகாரசபையின் உறுப்பினரொருவர் பின்வருமாறிருப்பின், அவரை ஓர் உறுப்பினராகத் தொடர்ந்திருப்பதிலிருந்து அகற்றுதல் வேண்டும்:-

(அ) அவரது கடமைகள் தொடர்பாகப் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாகவிருந்தால்;

(ஆ) அவரைத் தொடர்ந்தும் பதவியில் வைத்திருப்பதனால் அதிகாரசபையின் நலனுக்குத் தீங்குவிளைவிக்கும் வகையில் தனது பதவியைத் துர்ப்பிரயோகம் செய்தால்;

(இ) விடயம் 3இன் (1)ஆம் பந்தியின் கீழ் தகைமையற்றவராகவிருந்தால்; அல்லது

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறினால்.

4. சபையினால் ஏதேனும் கருமத்தின்மீது எடுக்கப்படவேண்டிய ஏதேனும் முடிபில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ அக்கறை கொண்டுள்ள ஓர் உறுப்பினர், அத்தகைய முடிபு எடுக்கப்படும் சபையின் கூட்டத்தில் அத்தகைய அக்கறையின் தன்மையை வெளிக்காட்டுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளிக்காட்டுகை, சபையின் கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புகளில் பதியப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய உறுப்பினர், அக்கருமம் தொடர்பாக சபையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்குபற்றுதலாகாதென்பதுடன் அத்தகைய கலந்தாராய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அல்லது அத்தகைய முடிபு செய்யப்படுகையில் அத்தகைய கூட்டத்திலிருந்து வெளியேறுதலும் வேண்டும்.

5. சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சனாதிபதியினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஊதியமளிக்கப்படலாமென்பதுடன் அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய அவர்களின் பணிகளை அவர்கள் நிறைவேற்றுதலும் வேண்டும்.

6. (1) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண், தவிசாளருட்பட மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர் சபையின் எல்லாக் கூட்டங்களையும் அழைத்தல் வேண்டும்.

(3) சபையின் கூட்டமொன்று பின்வருமாறு நடாத்தப்படலாம், ஒன்றில்-

(அ) ஒரு கூட்டநடப்பெண்ணாகவமைகின்ற எண்ணிக்கையினரான உறுப்பினர்கள், கூட்டத்துக்காக நியமிக்கப்பட்ட இடத்திலும், தேதியிலும், நேரத்திலும் ஒன்றுகூடியிருப்பதன் மூலம்; அல்லது

(ஆ) கட்புல-செவிப்புலத் தொடர்பாடல்மூலம்; இதனூடாக, பங்கு பற்றுகின்றவர்களும் ஒரு கூட்டநடப்பெண்ணாகவமைகின்றவர்களுமான எல்லா உறுப்பினர்களும் கூட்டம் நடைபெறும்வரை ஒவ்வொரு பங்குபற்றும் உறுப்பினரையும் சமகாலத்தில் பார்க்கவும் கேட்கவும் முடியுமானவர்களாக இருப்பர்.

(4) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரினால் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில் தவிசாளர் தனது சொந்த வாக்குடன் சேர்த்து, அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராதல் வேண்டும்.

(5) தவிசாளர், சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் வராதிருப்பின், சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் சபையின் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(6) சபையின் கூட்டங்கள், அதனால் காலத்துக்குக்காலம் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் நிலைநாட்டப்பட்ட நடவடிக்கைமுறைக்கும் இசைந்தொழுக நடாத்தப்படுதல் வேண்டும்.

7. சபையின் வழக்கு நடவடிக்கை, செயல் அல்லது முடிபு எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

8. (1) அதிகாரசபையின் இலச்சினை சபையின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினை சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) அதிகாரசபையின் இலச்சினை சபையின் ஓர் உறுப்பினரினதும் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினதும் முன்னிலையிலும் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி வராதிருப்பின் சபையின் எவரேனும் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலும் தவிர, ஏதேனும் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கு அத்தாட்சியாக அச்சாசனத்தில் அல்லது ஆவணத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) சபையானது, இலச்சினை எந்தச் சாசனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாசனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

2022ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, வேலையாட்கள் நட்டஈடு (திருத்தம்) சட்டம்

(2022ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 19ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

வேலையாட்கள் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம் (139ஆம் அத்தியாயமான)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, வேலையாட்கள் நட்டஈடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (139ஆம் அத்தியாயமான) வேலையாட்கள் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்துக்கான விரிவுப் பெயர், "வேலையாட்களின் தொழிலின் போது ஊறுக்குட்படுகின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வேலையாட்களின் தொழிலின் போது அல்லது அவர்களது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்திற்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவர்களது வதிவிடத்துக்கு திரும்பிச் செல்லுகையில் ஊறுக்குட்படுகின்ற" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவானது, "பகுதியளவிலான இயலாமை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"வதிவிடம்" என்பது, வேலையாள் ஒருவரின் ஏதேனும் நிரந்தமான வதிவிடம் அல்லது வேலையாள் ஒருவர் அவரது வேலைத்தளத்துக்கு வரும் நோக்கத்துக்காக தற்காலிகமாக வசிக்கும் தங்குமனையொன்றை அல்லது வேறு ஏதேனும் இடத்தை உள்ளடக்கும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவானது, "தொழிலின் போதுமான விபத்தொன்றின் மூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிலின் போதுமான விபத்தொன்றின் மூலம் அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்திற்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்துக்கு திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவானது, "தொழிலின் போதும் எழுந்துள்ளதாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிலின் போதும் எழுந்துள்ளதாக அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்துக்கு வருகையில் அல்லது வேலைத் தளத்திலிருந்து அவரது வதிவிடத்துக்குத் திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்றுள்ளதாக" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவானது, "தொழிலின் போது எழுகின்றதுமான விபத்தொன்றின் மூலம் குறிப்பிட்ட ஊறொன்றுக்கு நேரடியாக ஏற்றிக்கூறப்படற்பாலதானதாக இருந்தாலொழிய அல்லது அந்நோயானது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிலின் போது எழுகின்றதுமான விபத்தொன்றின் மூலம் அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்திற்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்துக்கு செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் மூலம் குறிப்பிட்ட ஊறொன்றுக்கு நேரடியாக ஏற்றிக்கூறப்படற்பாலதானதாக இருந்தாலொழிய அல்லது அந்நோயானது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

7. பின்வரும் புதிய பிரிவானது, முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அச்சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும் :-

6 அ. ஆறாம் பிரிவில் அடங்கியுள்ளவை எது எவ்வாறிருப்பினும், நிரந்தர அல்லது பகுதியளவிலான இயலாமையின் விடத்தில், ஏதேனும் ஊறு தொடர்பான வேலையாள் ஒருவரின் தொழிலின் தன்மை, நட்டஈட்டுத் தொகையைக் கணக்கிடுவதில் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். அத்தகைய நட்டஈடு, இயைபான வைத்தியரொருவரினால் வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கையை அடிப்படையாகக் கொண்டதாக விருத்தல் வேண்டும்.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:-

"(ஈ) நாட்சம்பளம் பெறுகின்ற அல்லது துண்டுவீத அடிப்படையிலான வேலையாள் ஒருவரின் விடயத்தில், அத்தகைய வேலையாளின் மாதாந்த வேதனங்கள், பன்னிரெண்டால் பிரிக்கப்பட்டு மீண்டும் இருபத்தைந்தால் பிரிக்கப்பட்ட, எந்த கடைசியான பன்னிரெண்டு மாத காலப்பகுதியின் போது அத்தகைய வேலையாள் விபத்துக்கு நேர் முன்னர் சேவையில் இருந்துள்ளாரோ அந்த கடைசியான பன்னிரெண்டு மாத காலப்பகுதிக்கான நாளாந்த கொடுப்பனவுகள் அல்லது துண்டுவீதங்களின் ஈட்டுகைகளின் கூட்டுமொத்தமாகவிருத்தல் வேண்டும்.".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவு அதன் (1)ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், "கூட்டுமொத்தமாக பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டு மொத்தமாக இருபதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு பின்வரும் உட்பிரிவுகளினால் மாற்றீடுசெய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1) இறந்த வேலையாள் ஒருவர் தொடர்பில் நட்டஈடாக 11ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் பணத்தை வைப்பிலிட்டதன் மீது, ஆணையாளர், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றிற்கு வேலையாளின் மரணச்சடங்கு செலவுகளின் உள்ளபடியான ஆகுசெலவை அதிலிருந்து கழித்தல் வேண்டும் என்பதுடன் அதனை எந்த ஆளினால் அத்தகைய செலவுகள் உறப்பட்டதோ அந்த ஆளுக்கு செலுத்துதலும் வேண்டும்.

(1அ) ஆணையாளர், நட்டஈட்டின் பகிர்ந்தளித்தலை தீர்மானிப்பதற்கு அவர் நிர்ணயிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று அவரின் முன்னர் தோன்றுமாறு இலங்கையிலுள்ள இறந்த வதிவாளரின் ஒவ்வொரு தங்கிவாழுநரையும் கோரி அத்தகைய தங்கிவாழுநர்களின் மீது

அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்படுவதனை செய்வித்தல் வேண்டும். ஆணையாளர், அவர் அவசியமென கருதக்கூடியவாறான ஏதேனும் விசாரணையின் பின்னர், தங்கிவாழுநர் எவரும் இல்லையென திருப்திப்படின், அவர் எந்த தொழில்தருநரினால் பணம் செலுத்தப்பட்டதோ அந்த தொழில்தருநருக்கு அதன் மீதியை மீளச்செலுத்துதல் வேண்டும். ஆனால் அத்தகைய மீள்கொடுப்பனவு எதுவும், 11 ஆம் பிரிவின்கீழ் எந்தத் தேதியன்று பணம் வைப்பிலிடப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து கணக்கிடப்படும் பன்னிரெண்டு மாத காலப்பகுதியொன்று முடிவுறுவதன் பின்னர் வரை செய்யப்படுதலாகாது. ஆணையாளர் தொழில்தருநரினாலான விண்ணப்பத்தின்மீது, செய்யப்பட்ட எல்லா செலுத்தீடுகளையும் விபரமாகக் காட்டுகின்ற கொடுத்துத் தீர்த்தலொன்றை கொடுத்துதவுதல் வேண்டும்.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவில், "விபத்து இடம்பெற்ற இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விபத்து இடம்பெற்றதிலிருந்து இரண்டு ஆண்டுகளினுள் அல்லது இறப்பின் விடயத்தில், இறந்த தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளினுள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2)ஆம் உட்பிரிவில், "ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) இரண்டாம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(3) தொழில்தருநர் ஒவ்வொருவரும், (1)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அறிவித்தற் புத்தகத்துக்கு மேலதிகமாக, பதிவேட்டுப் புத்தகமொன்றைப் பேணுதல் வேண்டும்; அதில் ஏதேனும் தொழிற்சாலை அல்லது வேலைத்தளத்திலான ஏதேனும் விபத்து பற்றிய தகவல்களும் விபரங்களும் இருத்தல் வேண்டும். தொழில்தருநர் அத்தகைய பதிவேட்டுப் புத்தகத்துக்குப் பொறுப்பாகவிருப்பதற்கு பொறுப்பான ஆளொருவரையும் நியமித்தல் வேண்டும். ஆணையாளர் அத்தகைய பதிவேட்டுப் புத்தகத்துக்கு அணுக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் சோதனைக்காக அதன் பிரித்தெடுகைகளை அல்லது பிரதிகளைக் கோருதலும் வேண்டும்.".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1)ஆம் உட்பிரிவில், "தொழிலின் போது எழுகின்றதுமான விபத்தொன்றின் விளைவாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிலின் போது எழுகின்றதுமான அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்துக்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்திற்கு திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் விளைவாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(5) ஆணையாளர், இறந்த வேலையாளின் மரணச் சடங்குச் செலவினமாக தொழில்தருநரினால் செலுத்தப்படற்பாலதான ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத பணத்தொகையொன்றை தீர்மானிக்கலாம். அத்தகைய பணத்தொகை தொழில்தருநரினால் செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டுக்கு மேலதிகமாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், இயைபான தொழில்தருநரினால் ஆணையாளருக்கு அல்லது அத்தகைய வேலையாளின் கிட்டிய உறவினருக்கு வைப்பிலிடப்படுதலும் வேண்டும்.".

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:-

"23அ. இச்சட்டத்தின்கீழ், விடயத்துக்கேற்ப வேலையாள் ஒருவருக்கு அல்லது அவரது மரபுரிமையாளர்களுக்கு நட்டஈடாக வருமதியாகவுள்ள ஏதேனும் பணத் தொகையைச் செலுத்துவதற்கு ஆளாகவிருந்து அப்பணத்தொகையை உரிய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துவதற்கு தவறுகின்ற அல்லது தவணை தவறுகின்ற எவரேனும் தொழில்தருநர் விடயத்துக்கேற்ப, அவ்வேலையாளுக்கு அல்லது அவரது மரபுரிமையாளர்களுக்கு நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத்தொகைக்கு மேலதிகமாக பின்வரும் முறையில் கணக்கிடப்பட்ட அப்பணத்தொகையின் மீது மிகைக்கட்டணமொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்:-

(அ) நட்டஈட்டுக் கொடுப்பனவானது உரிய தேதியிலிருந்து ஒரு மாதத்தை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கு நிலுவையாகவுள்ள விடத்து, நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத்தொகையின் பத்து சதவீத மிகைக்கட்டணமொன்று;

(ஆ) நட்டஈட்டுக் கொடுப்பனவானது ஒரு மாதத்தை விஞ்சிய ஆனால், உரிய தேதியிலிருந்து மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கு நிலுவையாகவுள்ளவிடத்து, நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத்தொகையின் பதினைந்து சதவீத மிகைக்கட்டணமொன்று;

(இ) நட்டஈட்டுக் கொடுப்பனவானது மூன்று மாதங்களை விஞ்சிய ஆனால், உரிய தேதியிலிருந்து ஆறு மாதங்களை விஞ்சாத காலப் பகுதியொன்றிற்கு நிலுவையாகவுள்ளவிடத்து, நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத்தொகையின் இருபது சதவீத மிகைக்கட்டணமொன்று;

(ஈ) நட்டஈட்டுக் கொடுப்பனவானது ஆறு மாதங்களை விஞ்சிய ஆனால், உரிய தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கு நிலுவையாகவுள்ளவிடத்து, நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத்தொகையின் இருபத்தைந்து சதவீத மிகைக் கட்டணமொன்று; அல்லது

(உ) நட்டஈட்டுக் கொடுப்பனவானது உரிய தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களை விஞ்சிய காலப்பகுதியொன்றிற்கு நிலுவையாகவுள்ளவிடத்து, நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத்தொகையின் முப்பது சதவீத மிகைக் கட்டணமொன்று.".

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அச்சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

27அ. இச்சட்டத்தின் நோக்கத்துக்காக வேலையாட்கள் நட்டஈட்டுப் பதிவாளர் ஒருவர் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.".

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41ஆம் பிரிவு, (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகை அவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில் அறவிடப்பட முடியாவிடின், ஆணையாளர் தவணைதவறுபவரின் அசையா ஆதனத்தை கைப்பற்றுவதன் மூலம் அல்லது விற்பனை செய்வதன் மூலம் அத்தகைய பணத்தொகையை அறவிடுவதற்கான கட்டளையொன்றை ஆக்கலாம். 27அ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட வேலையாட்கள் நட்டஈட்டுப் பதிவாளர், எந்த இயைபான மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அத்தகைய தவணைதவறுபவர் வசிக்கிறாரோ அந்த இயைபான மாவட்ட நீதிமன்றத்தின் பதிவாளரினூடாக அத்தகைய கட்டளையை நிறைவேற்றுதல் வேண்டும். நீதிமன்றமொன்றினால் வழங்கப்படும் எழுத்தாணையொன்றை நிறைவேற்றுகையில் பிசுக்காலினாலான அசைவற்ற ஆதனத்தின் கைப்பற்றுகை மற்றும் விற்பனை அத்துடன் பிசுக்காலினால் கைப்பற்றப்பட்ட அசைவற்ற ஆதனம் தொடர்பில் உரிமைக் கோரிக்கைகளைச் செய்தலும் அவை மீது தீர்ப்பளித்தலும் தொடர்பான (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள், ஆணையாளரின் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையை அறவிடுவதற்கான அசைவற்ற ஆதனத்தின் கைப்பற்றுகை மற்றும் விற்பனைக்கும் அத்தகைய பணத்தொகையை அறவிடுவதற்காக கைப்பற்றப்பட்ட அசைவற்ற ஆதனம் தொடர்பில் உரிமைக் கோரிக்கைகளைச் செய்தலுக்கும் அவை மீது தீர்ப்பளித்தலுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும். அத்தகைய ஏற்பாடுகளின் ஏற்புடைமை நோக்கத்துக்காக, அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட பணத்தொகை நீதிமன்றத்தினால் பதியப்பட்ட தீர்வையொன்றின் மீது வருமதியாகவுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் ஆணையாளர் தீர்ப்புக் கடன்கொடுநராகவும் அத்தகைய பணத்தொகையைச் செலுத்துவதற்கு ஆளான ஆள் தீர்ப்புக் கடனாளி ஒருவராகவும் கருதப்படுதலும் வேண்டும்.".

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவு, "உடன்படிக்கையானது மோசடி மூலம் அல்லது தகாத செல்வாக்கு மூலம் அல்லது வேறு முறையீனமான வழிவகைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டதென அவர் திருப்திப்படும் வகையில் எண்பிக்கப்படின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உடன்படிக்கையானது மோசடி மூலம் அல்லது தகாத செல்வாக்கு மூலம் அல்லது வேறு முறையீனமான வழிவகைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டதென அவர் திருப்திப்படும் வகையில் எண்பிக்கப்படின் அல்லது உடன்படிக்கை அமைப்புப் புறவிதிகளின் கீழ் வேலையாளுக்கு செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டுத் தொகையின் பிறழ் கணக்கிடுகை அல்லது குறைமதிப்பீடு காரணமாக" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45ஆம் பிரிவு, அதன் (2)ஆம் உட்பிரிவில், "ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஆம் பிரிவு, "நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவில், "நூறு ரூபா பெறுமதிக்கான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டாயிரம் ரூபா பெறுமதிக்கான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52ஆம் பிரிவு, "மேன்முறையீட்டு நீதிமன்றமானது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமானது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53ஆம் பிரிவு, "மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றத்தினால்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவில், "தொழிலிலிருந்தும் தொழிலின் போதும் எழுகின்ற விபத்தொன்றின் விளைவாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிலிலிருந்தும் தொழிலின் போதும் எழுகின்ற விபத்தொன்றின் விளைவாக அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்துக்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்துக்கு திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆம் பிரிவு, "தொழிலிலிருந்து அல்லது தொழிலின்போது எழுகின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிலிலிருந்து அல்லது தொழிலின் போது அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்துக்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்துக்கு திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் மூலம் எழுகின்ற" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60அ ஆம் பிரிவு, "தொழிலிலிருந்து அல்லது தொழிலின்போது எழுகின்ற விபத்தொன்றின் மூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிலிலிருந்து அல்லது தொழிலின் போது எழுகின்ற விபத்தொன்றின் மூலம் அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்துக்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்துக்கு திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை I இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:-

[பிரிவு2]

அட்டவணை I

நிரந்தர/பகுதியளவிலான இயலாமையை விளைவிப்பதாகக் கருதப்படும் ஊறுகள் பற்றி நிரல்

ஊறுகள்	*சம்பாதிக்கும் ஆற்றல் இழப்பின் சதவீதம்*
நிரந்தரமானதும் குணப்படுத்த முடியாததுமான அவயங்களின் பாரிசம் அல்லது நிரந்தரமாக படுக்கையில் இருப்பதனை விளைவாக்குகின்ற ஊறுகள்	100
நிரந்தரமாகவே வேலை செய்ய முடியாத நிலையில் முடிந்ததான நிரந்தரமான குணப்படுத்த முடியாததான உளத்திறன் இழப்பு அல்லது நிரந்தரமாகவே வேலை செய்யமுடியாத நிலையினை ஏற்படுத்தும் வேறு ஏதேனும் ஊறு	100
கண் ஊறுகள்	
(i) இரண்டு கண்களினதும் கண் பார்வையினை முழுமையாக இழத்தல்	100
(ii) ஒரு கண்ணின் கண் பார்வையினை முழுமையாக இழத்தல்	80
கேள்விப்புலன் ஊறுகள்	
(i) கேள்விப்புலன் முழுமையாக இழத்தல்	80
(ii) ஒரு காதில் கோள்விப்புலனை முழுமையாக இழத்தல்	50
பேச்சை இழத்தல்	
(i) பேச்சை முழுமையாக இழத்தல்	100
உணர்திறன் இழப்பு	
(i) மணமும் சுவையும் அறியும் புலன்கள் முழுமையாக இழத்தல்	60
(ii) மணம் அறியும் புலனை முழுமையாக இழத்தல்	60
(iii) சுவை அறியும் புலனை முழுமையாக இழத்தல	60
முன்னங்கை ஊறுகள்	
(i) முழங்கையோடு அல்லது முழங்கைக்கு மேலேயிருந்து முன்னங்கையினை இழத்தல்	85
(ii) முழங்கையோடு அல்லது முழங்கைக்குக் கீழேயிருந்து முன்னங்கையினை இழத்தல்	80
கை ஊறுகள்	
(i) இரண்டு கைகளையும் இழத்தல்	100
(ii) கையினை இழத்தல் அல்லது பெருவிரலையும் நாலு விரல்களையும் இழத்தல்	80
(iii) பெருவிரல் (இருமொழிகளும்)	50
(iv) பெருவிரல் (ஒரு மொழி)	40
(v) நாலு விரல்களையும் இழத்தல்	80
சுட்டு விரல் இழத்தல்	
(i) மூன்று மொழிகள்	50
(ii) இரண்டு மொழிகள்	40
(iii) ஒரு மொழி	20
நடு, மோதிர மற்றும் சின்ன விரல்களை இழத்தல்	
(i) மூன்று மொழிகள்	30
(ii) இரண்டு மொழிகள்	20
(iii) ஒரு மொழி	15
காலை இழத்தல்	
(i) முழங்காலில் அல்லது முழங்காலுக்கு மேலே	90
(ii) முழங்காலில் அல்லது முழங்காலுக்கு கீழே	80
பாதத்தின் ஊறுகள்	
(i) இரண்டு பாதங்களையும் இழத்தல்	100
(ii) ஒரு பாதத்தினை இழத்தல்	90
கால் விரல்களை இழத்தல்	
(i) கால் பெருவிரல்-இரு மொழிகளும்	40

(ii)	கால் பெருவிரல்-ஒரு மொழி	20
(iii)	கால் பெருவிரல் தவிர்ந்த விரல்களில் ஒன்றுக்கு அதிகமானதை இழந்தால், ஒவ்வொன்றும்	20
நானாவிதமானவை		
(i)	பாலுறுப்புக்களை முழுமையாக இழத்தல்	75
(ii)	பாலுறுப்பினை பகுதியளவில் இழத்தல்	60
(iii)	முகத்தினை மோசமாக வடுப்படுத்தல் அல்லது உருவழித்தல்	90
(iv)	அதிகபட்ச அளவொன்றுக்கு, முகத்தினை வடுப்படுத்தல் அல்லது உருவழித்தல் தவிர்ந்த மோசமான உடல்சார்ந்த உருவழித்தல்	60
(v)	ஒரு பல்லை இழத்தல்	10
(vi)	மேலே குறிப்பிடப்படாததான (உதாரணம் மூக்கு, மார்பு, காது முதலியன) ஏதேனும் உறுப்பின் அல்லது அதன் பாகத்தின் இழப்பு, மருத்துவ அலுவலர்ஒருவரால் மதிப்பீடு செய்யப்படவேண்டிய அதிகபட்சமானது.".	60

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை IV இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய அட்டவணை இடப்படுகின்றது:-

[பிரிவு 6]

அட்டவணை IV

செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டுத்தொகை

ஊறுற்ற வேலையாளின் மாதாந்த வேதனங்கள்		வேலையாளின் இறப்பு	வேலையாளின் நிரந்தர இயலாமை	வேலையாளின் தற்காலிக இயலாமைக்கு அரை மாத நட்டஈடு
ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
0	10,000	1,140,000	1,200,000	5,000
10,001	12,500	1,180,000	1,240,000	5,625
12,501	15,000	1,220,000	1,280,000	6,875
15,001	17,500	1,260,000	1,320,000	8,125
17,501	20,000	1,300,000	1,360,000	9,375
20,001	22,500	1,340,000	1,400,000	10,625
22,501	25,000	1,380,000	1,440,000	11,875
25,001	27,500	1,420,000	1,480,000	13,125
27,501	30,000	1,460,000	1,520,000	14,375
30,001	35,000	1,510,000	1,570,000	16,250
35,001	40,000	1,560,000	1,630,000	18,750
40,001	45,000	1,610,000	1,680,000	21,250
45,001	50,000	1,660,000	1,730,000	23,750
50,001	55,000	1,710,000	1,780,000	26,250
55,001	60,000	1,760,000	1,830,000	28,750
60,001	70,000	1,820,000	1,890,000	32,500
70,001	80,000	1,880,000	1,960,000	37,500
80,001	90,000	1,940,000	2,000,000	42,500
90,001	100,000	2,000,000	2,000,000	47,500
100,000	அத்துடன் அதற்கு மேல்	2,000,000	2,000,000	47,500

28. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

2022ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, மிகைக்கட்டண வரிச் சட்டம்

[2022ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

மிகைக்கட்டண வரியினை விதிப்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, மிகைக்கட்டண வரிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டத்தின் அடுத்துறும் ஏற்பாடுகளிற்கு அமைய, (இதனகத்துபின்னர் "வரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மிகைக் கட்டண வரி என அழைக்கப்படவேண்டிய வரி ஒன்று:-

(அ) 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கணிப்பிடப்படும் எந்த எவரேனும் தனியாளின், ஏதேனும் பங்குடைமையின் அல்லது கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், 2020, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டுக்காக, இரண்டாயிரம் மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றதோ அந்த தனியாளின், பங்குடைமையின் அல்லது கம்பெனியின் அத்தகைய வரிமதிப்பீட்டாண்டுக்காக வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீது இருபத்தைந்து சதவீதத்தில் அத்தகைய தனியாளிடமிருந்து பங்குடமையிடமிருந்து அல்லது கம்பெனியிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும்:

ஆயினும் எவ்வாறாயினும், பங்குடைமை ஒன்றிலிருந்து பெறப்பட்ட பங்காளர் ஒருவரின் வருமானம் இப்பந்தியின் கீழ் தனியாள் ஒருவராக அத்தகைய பங்காளரின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தை கணிப்பீடு செய்யும்போது அந்த வரி அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீது பங்குடைமையால் செலுத்தப்பட்டிருந்திருப்பின், கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படலாகாது; அத்துடன்

(ஆ) எந்தக் கம்பெனிகளினது குழுவொன்றின் ஒவ்வொரு கம்பெனியும் அந்தக் கம்பெனிகளின் குழுவிலுள்ள எல்லாத் துணைநிலைக் கம்பெனிகளினதும் கொளிக் கம்பெனிகளினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் கூட்டுமொத்தம் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கணிக்கப்படுகையில், அத்தகைய கம்பெனிகளின் ஏதேனும் ஒன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் இரண்டாயிரம் மில்லியன் ரூபாவை விஞ்சாது இருப்பது எவ்வாறிருப்பினும், அத்தகைய வரிமதிப்பீட்டாண்டுக்கான அத்தகைய ஒவ்வொரு கம்பெனியினதும் அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் பாகமாகவுள்ள துணைநிலைக் கம்பெனி ஒன்றிடமிருந்து பெறப்பட்ட பங்குலாபங்களிலிருந்து ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களை கழித்த பின்னர், அத்தகைய ஒவ்வொரு கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீது இருபத்தைந்து சதவீதத்திற்கு 2020, ஏப்பிறல் 1ஆந் தேதி தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டுக்கு இரண்டாயிரம் மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றதோ அந்த கம்பெனியிடமிருந்து அறிவிடப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், *(ஆ)* என்னும் பந்தியின் நியதிகளின்படி வரியைச் செலுத்துவதற்குக் கம்பெனியொன்று பொறுப்பானதாகவிருப்பின், அத்தகைய கம்பெனியானது *(அ)* என்னும் பந்தியின் நியதிகளின்படி வரியைச் செலுத்துவதற்கு பொறுப்பானதாதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் *(ஆ)* என்னும் பந்தியின் கீழ் வரிவிதிக் கப்படற்பாலதான வருமானத்தின் கூட்டுமொத்தத்தை கணக்கிடு கையில், இழப்புகள் அல்லது நிவர்த்தி செய்யப்படாத இழப்புகள் காரணமாக வரிவிதிக்கப்படற்பாலனதான பூச்சிய தொகையைக் கொண்டுள்ள கம்பெனிகளின் அத்தகைய குழுவின் ஏதேனும் துணைநிலைக் கம்பெனி அல்லது ஏதேனும் கொளிக் கம்பெனியை கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படலாகாது.

(3) இச்சட்டத்தின் கீழ் வரிச்செலுத்துகைக்கு பொறுப்பான ஏதேனும் கம்பெனியின் கணக்குகளைப் பேணுகின்ற நோக்கத்திற்காக, 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பன்னிரெண்டு மாதங்கள் கொண்ட மாற்றுக் காலப்பகுதியொன்றை ஆணையாளர் தலைமையதிபதி அங்கீகரித்துள்ளவிடத்து, அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட காலப்பகுதி இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக 2020, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டாக இருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் கீழ் வரி செலுத்துவதற்கு பொறுப்பாகவுள்ள ஒவ்வொரு தனியாள், பங்குடைமை, கம்பெனி மற்றும் கம்பெனியின் ஒவ்வொரு குழுவானது துணை நிலைக் கம்பெனிகள் மற்றும் கொளிக் கம்பெனிகள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு 2022ஆம் ஆண்டு ஏப்பிறல் இருபதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னரும் மற்றும் யூலை இருபதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னரும் இரண்டு சமமான தவணைக் கட்டணங்களில் வரியை செலுத்துதல் வேண்டும்.

(5) வரியானது ஆணையாளர் தலைமையதிபதியினால் சேகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் சேகரிப்புத் தேதியிலிருந்து பதினைந்து நாட்களினுள் திரட்டு நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும்.

(6) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும்,-

(அ) இச்சட்டத்தின் கீழ் அறிவிடப்படும் வரியானது 2020, ஏப்பிறல் 1ஆந் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பான நிதிக்கூற்றில் செலவினமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) இச்சட்டத்தின் கீழான வரிக்கொடுப்பனவுக்கு ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் வரிவிதிக்கப்படற்பாலதான வருமான கணிப்பீட்டில் கழிப்பனவு எதுவும் வழங்கப்படலாகாது;

(இ) இச்சட்டத்தின் கீழான வரிக்கொடுப்பனவுக்கு 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத்தின் கீழ் நிதிச்சேவைகளை வழங்குவதன் மீது சேர்பெறுமதி வரிக் கணிப்பீட்டில் கழிப்பனவு எதுவும் வழங்கப்படலாகாது.

(7) இப்பிரிவின் நோக்கத்திற்காக, "வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம்",-

(அ) 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச்சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளதும் அத்தகைய உடன்படிக்கைக்கிணங்க தீர்மானிக்கப்பட்ட வருமான வரிக்குப் பொறுப்பாக வந்துள்ளதும் அத்தகைய உடன்படிக்கையில் தரப்பட்டுள்ள அதன் வரிவிலக்களிப்பு காலப்பகுதி முடிவடைந்த பின்னர், ஒரு கம்பெனி தொடர்பில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றின்படி அத்தகைய கம்பெனியின் வருமான வரிக்கு முன்னரான இலாபம் என்று பொருள்படும்.

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனிகள் தவிர்ந்த, தனியாள் ஒருவர் அல்லது பங்குடைமை ஒன்று, கம்பெனி ஒன்று மற்றும் கம்பெனிகள் குழுவொன்றினது துணைநிலைக் கம்பெனிகள் மற்றும் கொளிக் கம்பெனி என்பன தொடர்பில் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 3ஆம் பிரிவின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்கு குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. (1) இச்சட்டத்தின் கீழ் வரிவிதிக்கப்படற்பாலதான ஒவ்வொரு தனியாளும், பங்குடமையும், கம்பெனியும் மற்றும் கம்பெனியின் ஒவ்வொரு குழுவினது துணைநிலைக் கம்பெனிகளும் மற்றும் கொளிக் கம்பெனியும் 2022ஆம் ஆண்டு ஏப்பிறல் இருபதாம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களை கொண்டுள்ள குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் விபரத்திரட்டொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி-

(அ) வரி விபரத்திரட்டுகளுக்கான படிவத்தை;

(ஆ) வரி விபரத்திரட்டுடன் கோப்பிடப்படுவதற்கு தேவைப்படுத்தப்படும் வரி விபரத்திரட்டு மற்றும் இணைப்புகள் ஏதேனும் இருப்பின், அவை பற்றி கொடுத்துதவப்பட வேண்டிய தகவல் ஏதேனும் இருப்பின் அதனையும்; அத்துடன்

(இ) கோப்பிடும் முறையினையும்,

குறித்துரைத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் நோக்கத்திற்காக, (1)ஆம் உட்பிரிவின் கீழ் கொடுத்துதவப்படும் வரி விபரத்திரட்டொன்று 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் "வரி விபரத்திரட்டு" ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் சுயவரிமதிப்பீடு ஒன்றை விளைவித்தலும் வேண்டும்.

4. (1) இச்சட்டத்தின் கீழ் வரியை செலுத்துவதற்கு பொறுப்பாகவுள்ள எவரேனும் தனியாள், பங்குடமை, கம்பெனி அல்லது கம்பெனிகளின் ஏதேனும் குழுவொன்றினது துணைநிலைக் கம்பெனிகள் மற்றும் கொளிக் கம்பெனி இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தகைய வரியைச் செலுத்துவதற்கு தவறியுள்ளவிடத்து, அத்தகைய தனியாள், பங்குடமை, கம்பெனி அல்லது கம்பெனிகள் குழுவொன்றினது துணைநிலைக் கம்பெனிகள் மற்றும் கொளிக் கம்பெனி என்பன இச்சட்டத்தின் கீழ் வரிசெலுத்தத் தவறியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) பங்குடமையின் பெயரில் வரிமதிப்பீடொன்று செய்யப்பட வேண்டியது சட்டமுறையானதாதல் வேண்டும் என்பதுடன் அதன் மீதான தொகைகள் பங்குடமையின் சொத்துக்களிலிருந்து அல்லது எவரேனும் பங்காளரிடமிருந்து அல்லது பங்குடைமையின் எவரேனும் முகவரிடமிருந்து அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்.

5. (1) உட்பிரிவுகள் (2) மற்றும் (3) இற்கு அமைய, 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தியாயம் IX அத்தியாயம் X அத்தியாயம் XI அத்தியாயம் XII அத்தியாயம் XIII அத்தியாயம் XIV அத்தியாயம் XV அத்தியாயம் XVI அத்தியாயம் XVII அத்தியாயம் XVIII என்பனவற்றின் எற்பாடுகள் இச்சட்டத்திற்கான நிருவாகம், பதிவேட்டை பேணுதல் மற்றும் தகவல் சேகரிப்பு, வரி விபரத்திரட்டுகள், மதிப்பீடுகள், ஆட்சேபனைகள் மற்றும் மேன்முறையீடுகள் என்பவற்றுக்கும் அத்துடன் இச்சட்டத்தின் கீழான வரிக்கொடுப்பனவு, வட்டி, வரி அறவீடு, தண்டங்கள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் என்பவற்றுக்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தகைய எவையேனும் ஏற்பாடுகளில் வருமான வரிக்கான குறிப்பீடு ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அறவிடப்பட்டு விதிக்கப்படும் வரிக்கான குறிப்பீடு ஒன்றாக இருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் தவறுகை மதிப்பீடு, திருத்தப்பட்ட மதிப்பீடு அல்லது மேலதிக மதிப்பீடு என்பன 2024, திசெம்பர் 31ஆம் நாளின் பின்னர் தனியாளின், பங்குடமை ஒன்றின், கம்பெனி ஒன்றின் அல்லது கம்பெனிகளின் குழுவொன்றினது துணைநிலைக் கம்பெனிகளின் மற்றும் கொளிக் கம்பெனிகளின் தொடர்பில் செய்யப்படுதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், மேலேயுள்ள காலவரையறையானது ஆட்சேபனை அல்லது மேன்முறையீடு பற்றியவொரு முடிபின் அடிப்படையின் மீது ஏதேனும் திருத்தப்பட்ட வரிமதிப்பீட்டைச் செய்வதற்கு ஏற்புடையதாதலாகாது.

6. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி-

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அத்தகைய சொல்லமைப்புக்கு குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

"கம்பெனி" என்பது, 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான அத்தகைய சொல்லமைப்புக்கு குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ஆனால் பின்வருவன உட்பட ஏதேனும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை, சகாய நிதியத்தை, ஓய்வூதிய நிதியத்தை, ஓய்வூதிய நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தை, பணிக்கொடை அல்லது முடிவுறுத்துகை நிதியத்தை உள்ளடக்குவதில்லை:-

(அ) 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியம்;

(ஆ) 1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்;

(இ) 1969ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் (ஒ) என்னும் பந்தியின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மின்சார சபைச் சகாய நிதியம் மற்றும் இலங்கை மின்சார சபை ஓய்வூதிய நிதியம்;

(ஈ) 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 90ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் சகாய நிதியம்;

(உ) (289ஆம் அத்தியாயமான) வர்த்தகப் பணிமனைக் கட்டளைச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட வணிகச் சேவைச் சகாயச் சங்கம்;

(ஊ) (397ஆம் அத்தியாயமான) இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கியினால் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கிச் சகாய நிதியம்;

(எ) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப் பட்ட ஹற்றன் நஷனல் வங்கி வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனியினால் தாபிக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி ஊழியர் சகாய நிதியம்;

(ஏ) 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஒள) என்னும் பந்தியின்கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கி ஓய்வூதிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்;

(ஐ) (422ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் 10ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி ஊழியர் ஓய்வூதிய நிதியம்;

(ஒ) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஸ்ரீ லங்கா ரெலிகொம் வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனியினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ லங்கா ரெலிகொம் சகாய நிதியம்;

(ஓ) 2006ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்;

(ஔ) (87ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கி ஓய்வூதிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் 2014 (போஸ்ட் 1996); அத்துடன்

(க) 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் பாகம் IV இன் நியதிகளின்படி தொழில் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சகாய நிதியம் அல்லது உதவுதொகை செலுத்தும் ஓய்வூதியத் திட்டம்.

"கம்பெனிகளின் குழு" என்பது, கொளிக் கம்பெனி ஒன்று மற்றும் அதனது துணைநிலைக் கம்பெனிகள் எனப் பொருள்படும்.

"கொளிக் கம்பெனி" என்பது, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் XVIIIஆம் அத்தியாயத்தின் கீழ் பதிவுசெய்யப்படாததுமான கொளிக் கம்பெனி ஒன்று தவிர்ந்த வேறு நேரடியாக அல்லது மறைமுகமாக வேறொரு கம்பெனியில் வாக்களிக்கும் உரிமையுடன் 2021, மாச்சு முப்பத்தோராம் நாளன்றுள்ளவாறு ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகளைச் சொந்தமாக வைத்திருக்கின்ற ஒரு கம்பெனி எனப் பொருள்படும்

"பங்குடமை" என்பது, 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான அத்தகைய சொல்லமைப்புக்கு குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

"வரி விபரத்திரட்டு" என்பது 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான அத்தகைய சொல்லமைப்புக்கு குறித்தொதுக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

"துணைநிலைக் கம்பெனி" என்பது, எந்தக் கம்பெனி ஒன்றில் வாக்களிக்கும் உரிமைகளுடன் 2021, மாச்சு முப்பத்தோராம் நாளன்றுள்ளவாறு அதனது பங்குகளின் ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்டவை இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் XVIIIஆம் அத்தியாயத்தின் கீழ் பதிவுசெய்யப்படாதுமான கொளிக் கம்பெனி ஒன்றின் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதும் கம்பெனிகள் சட்டத்தின் XVIII அத்தியாயத்தின் கீழ் பதிவு செய்யப்படாததுமான துணைநிலைக் கம்பெனி ஒன்று தவிர நேரடியாக அல்லது நேரடியாகவல்லாது இன்னொரு கம்பெனியினால் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றதோ அந்தக் கம்பெனி எனப் பொருள்படும்

"வரிமதிப்பீட்டாண்டு" என்பது, 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 20ஆம் பிரிவின் கீழான அத்தகைய சொல்லமைப்புக்கு குறித்தொதுக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2022ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம் (131ஆம் அத்தியாயமான)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (131ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 31ஈஈ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகளை உட்புகுத்தப்படுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1அ) நியாயசபையொன்றின் ஏதேனும் கட்டளைக்கெதிராக வேலையாள் ஒருவரினால் செய்யப்பட்ட மேன்முறையீடு ஒன்றின் மீது அத்தகைய வேலையாளுக்குச் சார்பாக அரசியலமைப்பின் 154ஞ எனும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றின் இறுதிக் கட்டளை யொன்றுடன் திருப்தியுறாத தொழில்தருநரொருவர் அத்தகைய கட்டளைக்கெதிராக உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன றைச் செய்கின்றவிடத்து, அத்தகைய மேன்முறையீட்டின் விடயமாகவுள்ள கட்டளையானது-

(அ) வேலையாளுக்கு அத்தகைய பணத்தொகைக்குச் சமமான தொகையொன்றிலான பணத்தொகையின் செலுத்துகையை மாத்திரம் பணிக்கின்றவிடத்து;

(ஆ) வேலையாளுக்கு அத்தகைய பணத்தொகைக்குச் சமமான தொகையொன்றிலான பணத்தொகையின் செலுத்துகையையும் அத்தகைய

வேலையாளை பணியில் மீளவமர்த்துலையும் அத்துடன் அவரது சேவைகள் முடிவுறுத்தப்பட்ட நேரத்தில் அத்தகைய வேலையாளின் மாதச் சம்பளத்தின் அல்லது வேதனத்தின் பன்னிரெண்டு மடங்குகளின் செலுத்துகையையும் பணிக்கின்றவிடத்து,

அவர், பணத்திலான பிணைப்பொறுப்பொன்றை அத்தகைய நியாயசபையின் தலைவருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(1ஆ) உட்பிரிவு (1அ)இன் கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடு ஒவ்வொன்றும், (1அ) எனும் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான பிணைப்பொறுப்பொன்று தொழில்தருநரினால் உரிய முறையில் கொடுத்துதவப்பட்டுள்ளதெனப் பொருள்பட நியாயசபையின் தலைவரின் கைப்பட்ட சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(1இ) நியாயசபை ஒவ்வொன்றினதும் தலைவர், (1அ) என்னும் உட்பிரிவின்கீழ் பிணைப்பொறுப்பாகக் கொடுத்துதவப்பட்ட எல்லாப் பணங்களையும் இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக் கப்பட்ட வங்கியில் வட்டியை ஈட்டுகின்ற கணக்கொன்றில் வைப்பிலிடச் செய்தல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈஈஈஈ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈஈஈஈஈ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

31 ஈஈஈஈ (1) பிரிவு 17(1)இன் கீழ் நடுத்தீர்ப்பாளர் ஒருவரினால் அல்லது 24ஆம் பிரிவின் கீழ் கைத்தொழில் நீதிமன்றமொன்றினால் செய்யப்பட்ட அளிப்பொன்றுக்கெதிராக ஓர் எழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளையொன்றை வழங்குவதற்கான விண்ணப்பமொன்று தொழில்தருநர் ஒருவரினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்டுள்ளவிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றமானது, அத்தகைய விண்ணப்பத்தின் விடயமாகவுள்ள அத்தகைய அளிப்பானது வேலையாளுக்கு அத்தகைய பணத்தொகைக்குச் சமமான தொகையொன்றிலான பணத்தொகையைச் செலுத்தும்படி பணிக்கின்ற விடத்து, தொழில்தருநரினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு பணத்திலான பிணைப் பொறுப்பொன்று கொடுத்துதவப்படுவதன் மேல் அத்தகைய விண்ணப்பத்தை ஏற்றுக்கவனித்தல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி (1)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான தொகையை இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் அவரினால் பேணப்படும் வட்டியை ஈட்டுகின்ற கணக்கொன்றில் வைப்பிலிடச் செய்தல் வேண்டும்.

(3) இவ்வுட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட விண்ணப் பம் ஒவ்வொன்றும், (1)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான பிணைப்பொறுப்பொன்று அத்தகைய தொழில்தருநரினால் உரியமுறையில் கொடுத்துதவப்பட்டுள்ளதெனப் பொருள்பட ஆணையாளர் தலைமையதிபதியின் கைப்பட்ட சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 33அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

33அ. (1) வேலையாள் ஒருவருக்குச் சார்பாக ஆக்கப்பட்டுள்ள நியாயசபையின் கட்டளை யொன்றுக்கு, கைத்தொழில் நீதிமன்றமொன்றின் அல்லது நடுத்தீர்ப்பாளர் ஒருவரின் அளிப்பொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றமை காரணமாக தொழில்தருநரொருவருக்கு எதிராக 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 136ஆ என்னும் பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட ஏதேனும் எழுத்திலான முறைப்பாட்டின் மீதான நீதிவான் நீதிமன்றமொன்றின் கட்டளையொன்றுடன் திருப்தியுறாத அத்தகைய தொழில்தருநரொருவர், அத்தகைய கட்டளை தொடர்பில் அரசியலமைப் பின் 154ஞ எனும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தின் மீளாய்வுசார் நியாயாதிக்கத்தை வேண்டி விண்ணப்பமொன்றைச் செய்கின்றவிடத்து, அத்தகைய விண்ணப்பத்தின் போது, அத்தகைய விண்ணப்பத்தின் விடயமாகவுள்ள கட்டளையானது வேலையாளுக்கு பணத்தொகை ஒன்றைச் செலுத்தும்படி பணிக்கின்றவிடத்து, அத்தகைய பணத்தொகைக்குச் சமமான தொகையில் பணத்திலான பிணைப் பொறுப்பொன்றை இயைபான நீதிவான் நீதிமன்றத்துக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளர், (1)ஆம் உட்பிரிவின் கீழ் பிணைப்பொறுப்பாகக் கொடுத்துவப்பட்ட எல்லாப் பணங்களையும் இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் ஆணையாளர் தலைமையதிபதியினால் பேணப்படும் வட்டியை ஈட்டுகின்ற கணக்கொன்றில் வைப்பிலிடப்படுவதற்கென ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பச் செய்தல் வேண்டும்.

(3) இவ்வுட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும் (1)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான பிணைப்பொறுப்பொன்று அத்தகைய தொழில்தருநரினால் உரியமுறையில் கொடுத்துதவப்பட்டுள்ளதெனப் பொருள்பட இயைபான நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளரின் கைப்பட்ட சான்றிதழ் ஒன்றின்மூலம் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி, விடயத்துக்கேற்ப, 154ஞ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இறுதிக் கட்டளைக்கு இணங்கியொழுகி, அப்பணத்தொகை மீதான வட்டியுடன் சேர்த்து (1)ஆம் உட்பிரிவின் கீழ் கொடுத்துதவப்பட்ட பணத்தொகையை இயைபான திறத்தவருக்கு மீளளித்தல் வேண்டும்.".

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2022ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

1971ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1971ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (3)ஆம் உட்பிரிவில், "ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (3)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரு வதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(3அ) (1) தொழில்தருநரொருவருக்கு (3)ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அத்தகைய தொழில்தருநர், (2)ஆம் உட்பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமை யதிபதியினால் செய்யப்பட்ட முடிபுக்கு இணங்கியொழுகுவதற்கு அவர் தொடர்ச்சியாகத் தவறினால், (3)ஆம் உட்பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் குற்றப்பணத்துக்கு மேலதிகமாக, குற்றத்தீர்ப்பின் பின்னர் இணங்கியொழுகாமை தொடரப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாவான மேலதிகக் குற்றப் பணமொன்றை வேலையாளுக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) இரண்டாம் உட்பிரிவின் *(உ)* என்னும் பந்தியின் கீழ் வேலையாளொருவருக்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகையை எவரேனும் தொழில்தருநர் செலுத்தத் தவறுகின்றவிடத்து, அத்தகைய தொகையானது, தொழில்தருநர் எந்த நீதிவான் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாரோ அந்த நீதிவான் நீதிமன்றத்தின் கட்டளையொன்றின் மூலம், அது அந்நீதிமன்றத்தினால் அவர் மீது விதிக்கப்பட்டவொரு குற்றப்பணம் என்றாற் போன்று, அறவிடப்படலாம் என்பதுடன் அறவிடப்பட்ட தொகை வேலையாளுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "ஐம்பது ரூபாவான குற்றப்பணமொன்றை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவான குற்றப்பணமொன்றை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 10அ மற்றும் 10ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

10அ. (1) நீதிவான் நீதிமன்றத்தின் கட்டளையொன்றுடன் தொழில்தருநரொருவர் அதிருப்தியடையுமிடத்து, அத்தகைய தொழில்தருநர், எழுத்திலான மனுவொன்றின்மூலம் அக்கட்டளைக்கெதிராக மீளாய்விலான விண்ணப்பமொன்றை, அத்தகைய நீதிவான் நீதிமன்றம் எந்த மாகாணத்தினுள் அமைந்துள்ளதோ அந்த மாகாணத்துக்காக அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்துக்குச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பமொன்றைச் செய்கின்ற தொழில்தருநர் ஒவ்வொருவரும், அத்தகைய விண்ணப்பத்தின் விடயமாகவுள்ள கட்டளையானது ஒரு பணத்தொகையை வேலையாளுக்குச் செலுத்தும்படி பணிக்குமிடத்து, அத்தகைய பணத்தொகைக்குச் சமமானவொரு தொகையிலான காசுப் பிணைப் பொறுப்பொன்றை அத்தகைய நீதிவான் நீதிமன்றத்துக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும், (2)ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறான பிணைப்பொறுப்பு அத்தகைய தொழில்தருநரினால் முறையாகக் கொடுத்துதவப்பட்டுள்ளதென்ற பயன்பட இயைபான நீதிவான் நீதிமன்றப் பதிவாளரின் கைப்பட்ட சான்றிதழொன்றினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) நீதிவான் நீதிமன்றப் பதிவாளர், (2)ஆம் உட்பிரிவின் கீழ் பிணைப்பொறுப்பாகக் கொடுத்துதவப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில், ஆணையாளர் தலைமையதிபதியினாற் பேணப்படும் வட்டி ஈட்டுவதுமான கணக்கொன்றில் வைப்பிலிடப்படுவதற்கு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

10ஆ. (1) பிரிவு 6 அல்லது 6அ இன் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுடன் தொழில்தருநர் ஒருவர் அதிருப்தியடைகின்றவிடத்து, அத்தகைய தொழில்தருநர் எழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளையொன்றின் வழங்குகைக்காக அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யலாம்.

(2) எழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளையொன்றின் வழங்குகைக்காக (1)ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பமொன்றைச் செய்கின்ற ஒவ்வொரு தொழில்தருநரும், அத்தகைய விண்ணப்பத்தின் விடயமாகவுள்ள கட்டளை பின்வருமாறு பணிக்குமிடத்து, காசுப் பிணைப் பொறுப்பொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்:-

(அ) நட்டஈடாக ஒரு பணத்தொகையைச் செலுத்துதலையும் மீளத்தொழிலுக்கமர்த்துதலையும், அத்தகைய கட்டளைத் தேதியிலிருந்து அத்தகைய வேலையாள் மீளத் தொழிலுக்கமர்த்தப்பட வேண்டிய தேதி வரை கணக்கிடப்படவுள்ள சம்பளமாக அல்லது வேதனங்களாக ஒரு பணத் தொகையைச் செலுத்துதலையும் மற்றும் மீளத் தொழிலுக்கமர்த்துவதற்காக அத்தகைய வேலையாளின் மாதாந்தச் சம்பளத்தின் அல்லது வேதனங்களின் பன்னிரெண்டு மடங்குகளினதானவொரு தொகையைச் செலுத்துதலையும்; அத்துடன்

(ஆ) நட்டஈடாக வேலையாளுக்குச் செலுத்தப்பட வேண்டியவொரு பணத்தொகைக்குச் சமமான தொகையிலான அத்தகைய பணத்தொகையை மட்டுமே செலுத்துதலையும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட எழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளையொன்றின் வழங்குகைக்கான ஒவ்வொரு விண்ணப்பமும், (2)ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறான பிணைப்பொறுப்பு அத்தகைய தொழில்தருநரினால் முறையாகக் கொடுத்துதவப்பட்டுள்ளதென்ற பயன்பட ஆணையாளர் தலைமையதிபதியின் கைப்பட்ட சான்றிதழொன்றினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி, (2)ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறான பணத்தொகையானது, இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில், ஆணையாளர் தலைமையதிபதியினாற் பேணப்படும் வட்டி ஈட்டுவதுமான கணக்கொன்றில் வைப்பிலிடப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(5) ஆணையாளர் தலைமையதிபதி, (2)ஆம் உட்பிரிவின் கீழ் கொடுத்துதவப்பட்ட பணத்தொகையை, விடயத்துக்கேற்ப, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அல்லது உயர் நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் இறுதித் தீர்மானத்தின் நியதிகளின்படி இயைபான திறத்தவருக்கு அத்தகைய பணத்தொகையின் மீதான வட்டியுடன் சேர்த்து மீளளித்தல் வேண்டும்."

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு, "ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

6. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2022ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அற்றோணித் தத்துவக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம் (அத்தியாயம் 122)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (122ஆம் அத்தியாயமான) அற்றோணித் தத்துவக் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "அற்றோணித் தத்துவம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

"அற்றோணித் தத்துவம்" என்பது ஆளொருவரின் சார்பாக சட்டத்தரணியொருவராகத் தோன்றுகின்ற நோக்கத்திற்கென சட்டத்தரணியொருவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான தத்துவம் அல்லது அதிகாரம் தவிர்ந்த, ஆளொருவரினால் ஏதேனும் வேலையைப் புரிவதற்கு, ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது ஏதேனும் வியாபாரத்தை அல்லது தொழிலைக் கொண்டு நடாத்துவதற்குத் தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக இன்னோர் ஆளுக்கு வழங்கப்பட்டதும்; அத்துடன்-

(அ) அது இலங்கையில் நிறைவேற்றப்பட்டிருப்பின், இரண்டு சாட்சிகளுக்கு முன்னிலையில் நிறைவேற்றப்பட்டதும் அத்துடன் பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் அல்லது

(ஆ) அது இலங்கைக்கு வெளியே நிறைவேற்றப்பட்டிருப்பின் இரண்டு சாட்சிகளினதும் மற்றும் 1981ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, காவற்தூதுப் பணிகள் சட்டத்தின் கருத்திற்குட்பட்ட தூதுவரின், உயர்ஸ்தானிகரின் அல்லது தூதாண்மை அலுவலரின் காவற்தூதுவரின் அல்லது அந்நாட்டின் சட்டத்திற்கிணங்க அத்தகைய அற்றோணித் தத்துவத்தை அத்தாட்சிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றவரான ஆளொருவரின் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டதுமான;

ஏதேனும் எழுத்திலான தத்துவம் அல்லது அதிகாரம் எனப் பொருள்படும்.

(2) "பதிவாளர் தலைமையதிபதி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

"பதிவாளர் தலைமையதிபதி" என்பது உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி, சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் தலைமையதிபதி, பிரதிப் பதிவாளர் தலைமையதிபதி, உதவிப் பதிவாளர் தலைமையதிபதி மற்றும் பதிவாளர் தலைமையதிபதி, உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி, சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் தலைமையதிபதி, பிரதிப் பதிவாளர் தலைமையதிபதி அல்லது உதவிப் பதிவாளர் தலைமையதிபதியின் கடமைகளை அப்போதைக்கு சட்டரீதியாக நிறைவேற்றுகின்ற எவரேனும் ஆளையும் உள்ளடக்குதல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

(1) *(அ)* இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் நிறைவேற்றப்படும் அற்றோணித் தத்துவம் ஒவ்வொன்றும் பதிவாளர் தலைமையதிபதியினால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) (இதனகத்துப்பின்னர் "அற்றோணி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அற்றோணித் தத்துவத்தை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும்-

(i) உண்மைப் பிரதியொன்றாகவிருப்பதென பிரசித்த நொத்தாரிசினால் சான்றுப்படுத்தப்பட்ட அதன் பிரதியொன்றுடனும்; அத்துடன்

(ii) இதற்கான Iஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு ஆக்கப்பட்ட சத்தியக் கடதாசி ஒன்றுடனும்

சேர்த்தும் அற்றோணித் தத்துவம் நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து அது இலங்கையில் நிறைவேற்றப்பட்டிருப்பின் ஒரு மாதத்தினுள்ளும் மற்றும் இலங்கைக்கு வெளியே நிறைவேற்றப்பட்டிருப்பின் மூன்று மாதங்களினுள்ளும் பதிவு செய்வதற்கான தனது அற்றோணித் தத்துவத்தைப் பதிவாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) பதிவாளர் தலைமையதிபதி, (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அற்றோணித் தத்துவம் சரியானது எனத் திருப்திப்பட்டதன் மேல், அற்றோணித் தத்துவத்தை பதிவுசெய்து அத்தகைய சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை கோப்பிடுதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய பதிவு எந்தத் தொகுதியிலும் இருமடித்தாளிலும் பதியப்பட்டுள்ளதோ அந்தத் தொகுதிக்கும் இரு மடித்தாளுக்குமான குறிப்பீடு ஒன்றுடன் சேர்த்து, அதன் பதிவிலக்கத்தையும் திகதியையும் அத்தகைய சான்றுப்படுத்தப்பட்ட பிரதி மற்றும் மூல அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மேல் புறக்குறிப்பிடுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய மூல அற்றோணித் தத்துவத்தைச் சமர்ப்பிக்கின்ற ஆளுக்கு அதனை திருப்பிக்கொடுத்தலும் வேண்டும்.

(3) அத்தகைய பதிவு இதற்கான IIஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் வைத்திருக்கப்படுவதும் பதிவாளர் தலைமையதிபதியால் பேணப்பட வேண்டியதுமான புத்தகமொன்றில் பதியப்படுதல் வேண்டும்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவினை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 3அ, 3ஆ, 3இ மற்றும் 3ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

3அ. (1) (70ஆம் அத்தியாயமான) மோசடிகள் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் நோக்கெல்லைக்குள் வருகின்ற கொடுக்கல்வாங்கல் ஒன்றின் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுவதற்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் ஒன்று, விடயத்திற்கேற்ப (2)ஆம் அல்லது (3)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இல் குறித்துரைக்கப்பட்ட அற்றோணித் தத்துவம் ஒன்று இலங்கையில் நிறைவேற்றப்பட்டிருப்பின், அது-

(அ) (107ஆம் அத்தியாயமான) நொத்தாரிசுமார் கட்டளைச் சட்டத்திற்கும் மற்றும் மோசடிகள் தடுப்புக் கட்டளைச் சட்டத்திற்கும் இணங்க பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால் முறையாக அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்;

(ஆ) காணியின் அல்லது காணிச் சிறுகூறின் விடயத்தில் எல்லைகள் மற்றும் வரையறைகளுடன் விஸ்தீரத்துடன், விடயத்திற்கேற்ப காணியின் அல்லது காணிச் சிறுகூறின் விபரணம் ஒன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(இ) கூட்டாட்சி ஆதனமொன்றின் விடயத்தில் கூட்டாட்சியாதன சிறுகூறு அதன் எந்த வேறு அம்சங்களினால் அடையாளங் காணப்பட முடியுமாக இருக்குமோ அந்த வேறு அம்சங்களினால் கூட்டாட்சியாதன சிறுகூறின் விபரணம் ஒன்றையும் கூட்டாசியாதன சிறுகூறு இணங்காணப்பட முடியாதுள்ளவிடத்து முழுக்காணி பற்றிய விபரணமொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஈ) காணியொன்றின் முன்பதிவுடன் அல்லது காணி சிறுகூறின் அல்லது கூட்டாட்சியாதன சிறுகூறின் விடயத்தில், கொடுக்கல்வாங்கல் தொடர்பான காணி அல்லது காணிச் சிறுகூறு அல்லது கூட்டாட்சியாதன சிறுகூறு எந்தத் தொகுதியில் அல்லது இருமடித்தாளில் பதிவு செய்யப்பட்டிருக்கிறதோ அந்த தொகுதி மற்றும் இருமடித்தாளின் முற்பதிவுக்கான குறிப்பீடு ஒன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(உ) அளிப்பவரின் கையொப்பத்திற்கு மேலதிகமாக, அளிப்பவரின் இடது அல்லது வலது பெருவிரல் அடையாளத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவரின் இரு பெருவிரல்களும் இல்லாதவிடத்து, ஒன்றில் அளிப்பவரின் இடது அல்லது வலது கையின் வேறு ஏதேனும் விரல் அடை யாளத்தையும், அத்துடன் அவரின் இரு கைகளும் இல்லாதவிடத்து, அவர் பிரசித்த நொத்தாரிசு மற்றும் சாட்சிகளின் முன்னிலையில் அவரது கால்விரல் அடையாளத்தை இடுதல் வேண்டும்;

(ஊ) அத்தகைய அற்றோணித் தத்துவத்தை அளிப்பவரினதும், அதன் அற்றோணியினதும் கடவுச் சீட்டின், தேசிய அடையாள அட்டையின் அல்லது சாரதி உரிமத்தின் சுயவிபரப்பக்கத்தினது பிரதியும், அத்துடன் நொத்தாரிசினால் சான்றுப்படுத்தப்பட்ட அத்தகைய அற்றோணித் தத்துவத்தினது பிரதியும் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1)இல் குறித்துரைக்கப்பட்ட அற்றோணித் தத்துவம் ஒன்று இலங்கைக்கு வெளியே நிறைவேற்றப்பட்டிருப்பின், அது-

(அ) இச்சட்டத்தின் 2ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் முன்னர் உரியமுறையில் நிறைவேற்றப்படல் வேண்டும்

(ஆ) காணி ஒன்றினது அல்லது காணிச் சிறுகூறின் விடயத்தில் எல்லைகள் மற்றும் வரையறைகள் மற்றும் விஸ்தீரணம் என்பவற்றுடன் விடயத்திற்கேற்ப அக் காணியின் அல்லது காணிச் சிறுகூறின் விபரணம் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்

(இ) கூட்டாட்சியாதனம் அதன் எந்த வேறு அம்சங்களினால் அடையாளங் காணப்பட முடியுமோ அந்த வேறு அம்சங்களுடன் சேர்த்து கூட்டாட்சியாதன சிறுகூறின் விபரணம் ஒன்றையும் மற்றும் கூட்டாட்சியாதனம் ஒன்றின் விடயத்தில் கூட்டாட்சியாதன சிறுகூறு அடையாளங்காணப்பட முடியாதுள்ளவிடத்து முழுக்காணி பற்றிய விபரணம் ஒன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்

(ஈ) காணி ஒன்றின் அல்லது காணிச் சிறுகூறொன்றை அல்லது கூட்டாட்சியாதன சிறுகூறொன்றின் விடயத்தில், கொடுக்கல்வாங்கல் தொடர்பான காணி அல்லது காணிச் சிறுகூறு அல்லது கூட்டாட்சியாதனம் எந்தத் தொகுதி மற்றும் இருமடித்தாளில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றதோ அந்தத் தொகுதி மற்றும் இரு மடித்தாளின் முன்பதிவுக்கான குறிப்பீடொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்

(உ) அளிப்பவரினால் கையொப்பமிடப்பட்ட அத்தகைய அளிப்பவரின் கடவுச்சீட்டின் சுயவிபரப்பக்கத்தின் பிரதியொன்றுடனும் மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்ட அத்தகைய அற்றோணித் தத்துவப்பத்திரத்தின், அற்றோணியின் கடவுச் சீட்டின், தேசிய அடையாள அட்டையின் அல்லது சாரதி உரிமத்தின் சுயவிபரப்பக்கத்தின் பிரதி ஒன்றுடனும் சேர்த்து

அனுப்பப்படுதல் வேண்டும்.

3ஆ. (1) இச்சட்டத்தின் 3அ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல் தொடர்பில், நொத்தாரிசுமார் கட்டளைச் சட்டத்தின் நிதியதிகளின்படி உறுதி அல்லது சாதனம் ஒன்றை அத்தாட்சிப்படுகின்ற பிரசித்த நொத்தாரிசு ஒவ்வொருவரும்-

(அ) பதிவாளர் தலைமையதிபதி திணைக்களத்திலுள்ள இயைபான தொகுதிகளையும் இருமடித்தாள்களையும் பரிசோதித்தல் வேண்டும்;

(ஆ) அற்றோணித் தத்துவப்பத்திரம் கைமீட்கப்படவில்லை அல்லது இல்லாதொழிக்கப்படவில்லை எனத் திருப்திப்படுதல் வேண்டும் என்பதுடன், அவரது அத்தாட்சிப்படுத்தலில் அத்தகைய நிகழ்வைக் குறிப்பிடுதலும் வேண்டும்; அத்துடன்

(இ) விடயத்திற்கேற்ப அளிப்பவரின் மற்றும் அற்றோணியின் தேசிய அடையாள அட்டையின் அல்லது சாரதி உரிமத்தின் அல்லது கடவுச்சீட்டின் சுயவிபரப்பக்கத்தின் பிரதிகளையும் அத்துடன் அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் பிரதி ஒன்றையும் வைத்திருத்தல் வேண்டும்.

(2) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அத்தகைய அற்றோணித்தத்துவப் பத்திரம் கைமீட்கப்பட்டுள்ளதா அல்லது இல்லாதொழிக்கப்பட்டுள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்காக, பதிவாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் இயைபான தொகுதிகள் மற்றும் இருமடித்தாள்களை பரிசோதிப்பது அத்தகைய உறுதி அல்லது சாசனத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற பிரசித்த நொத்தாரிசுக்குப் போதுமானதாக இருத்தல் வேண்டும் என வெளிப்படுத்தப்படுகின்றது.

3இ. அரச நிறுவனம் ஒன்றினால் எழுதி நிறைவேற்றப்படும் அற்றோணித் தத்துவம் தவிர, வேறு ஒரு அற்றோணித்தத்துவம் அத்தகைய அற்றோணித் தத்துவத்தில் செல்லுபடியாகும் காலப்பகுதி அதில் குறித்துரைக்கப்பட்டிருந்தாலொழிய அல்லது 4ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய அற்றோணித் தத்துவம் கைமீட்கப்பட்டாலொழிய அல்லது இல்லாதாக்கப்பட்டாலொழிய அதன் எழுதி நிறைவேற்றல் தேதியிலிருந்து ஐந்து வருடகாலப்பகுதி ஒன்றிற்கு மட்டும் செல்லுபடியாதல் வேண்டும்.

3ஈ. அரச நிறுவனம் ஒன்று தவிர வேறு ஆளொருவர் கைமீட்கப்படமுடியாத அற்றோணித் தத்துவம் ஒன்றை நிறைவேற்றலாகாது.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

4. (1) ஏதேனும் அற்றோணித் தத்துவத்தை அளிப்பவர் அற்றோணித் தத்துவத்தை கைமீட்பதற்கு அல்லது இல்லாதொழிப்பதற்கு விரும்புகின்றவிடத்து அல்லது ஏதேனும் அற்றோணித் தத்துவத்தின் அற்றோணி அத்தகைய அற்றோணித் தத்துவத்தின் கீழ் செயற்படவிரும்பாதவிடத்து, விடயத்திற்கேற்ப, அத்தகைய அளிப்பவர் அல்லது அற்றோணி-

(அ) அத்தகைய உட்கருத்தை மற்றைய திறத்தவருக்கு அறிவித்தல் வேண்டும்;

(ஆ) விடயத்திற்கேற்ப அற்றோணித் தத்துவத்தினைக் கைமீட்கின்ற அல்லது இல்லாதொழிக்கின்ற அவரது உட்கருத்தை வெளிப்படுத்துகின்றதும் அல்லது அந்த அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் கீழ் தொழிற்படவிரும்பவில்லை என்ற அவரது உட்கருத்தை வெளிப்படுத்துகின்றதும் நொத்தாரிசினால் எழுதி நிறைவேற்றப்படுகின்றதுமான ஓர் ஆவணத்தை எழுதி நிறைவேற்றுதல் வேண்டும்; அத்துடன்

(இ) பந்தி *(ஆ)*வில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஆவணத்தை பதிவாளர் தலைமையதிபதிக்கு, அத்தகைய அற்றோணித் தத்துவப் பத்திரம் எந்தத் தொகுதியிலும் இருமடித்தாளிலும் பதிவு செய்யப்பட்டதோ அந்தத் தொகுதிக்கும் இருமடித்தாளிற்குமான குறுக்கு குறிப்பீட்டுடன் இயைபான தொகுதியிலும் இரு மடித்தாளிலும் அத்தகைய ஆவணத்தைப் பதிவுசெய்வதற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) *(அ)* ஓராம் உட்பிரிவின் *(ஆ)* என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஆவணம் நிறைவேற்றப்பட்டு பதிவாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்படும் வரை, ஏதேனும் அற்றோணித் தத்துவப் பத்திரத்தை அளிப்பவர் உடனடியாகப் பயனுறும் வகையில் அவரது அற்றோணித தத்துவப் பத்திரத்தை கைமீட்பதற்கு அல்லது இல்லாதொழிப்பதற்குத் தேவைப்படுத்தியிருப்பின், அளிப்பவர் அல்லது அவரது சட்டத்தரணி IIIஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலுள்ள இணைப்பிரதியிலான அறிவிப்பு ஒன்றின் மூலம் பதிவாளர் தலைமையதிபதிக்கு கைமீட்டல் அல்லது இல்லாதொழித்தல் பற்றிய அவரது உட்கருத்தை அறிவிக்கலாம்:

ஆயினும் எவ்வாறாயினும் அத்தகைய அறிவிப்பு, அறிவிப்புத் தேதியிலிருந்து மூன்று மாதங்கள் காலப்பகுதி ஒன்றிற்கு மட்டும் செல்லுபடியான தாதல் வேண்டும்;

(ஆ) பந்தி *(அ)* இல் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய அறிவிப்பு ஒன்றைப் பெற்றுக் கொண்டதன் மேல், பதிவாளர் தலைமையதிபதி இயைபான தொகுதிகளிலும் இருமடித்தாள்களிலும் அத்தகைய கைமீட்பு அல்லது இல்லாதொழித்தல் பற்றிய உட்கருத்து, பற்றி புறக்குறிப்பிடுதல் ஒன்றை செய்தல் வேண்டும்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவானது "அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட என்னும் சொற்களுக்குப் பதிலாக, IIஆம் "அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை இத்தால் நீக்கப்படுகின்றது என்பதுடன் அதற்குப் பதிலாக பின்வரும் அட்டவணைகள் இடப்படுகின்றன:-

[பிரிவு 3(1)]

அட்டவணை I

..... ஆம் இலக்க முகவரியை சேர்ந்தவரும் (..... என்னும் இலக்கத்தைக் கொண்ட அடையாள அட்டையை வைத்திருப்பவருமான) ..... ஆகிய நான் ..... ஆக இருப்பதனால் இத்தால் பின்வருமாறு நேர்மையுடனும் பயபக்தியுடனும் உண்மையாகவும் வெளிப்படுத்துகின்றேன் மற்றும் உறுதி செய்கின்றேன/சத்தியம் செய்து கூறுகின்றேன்.

(1) மேலுள்ள பெயரில் உறுதியளித்தவர்/ உறுதிப்படுத்தியவர் நானாவேன்.

(2) ..... ஆம் இலக்க முகவரியை சேர்ந்தவரும் ..... என்னும் இலக்கத்தைக் கொண்ட அடையாள அட்டையை வைத்திருப்பவருமான) ஆகிய ..... இதன்கண் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திறனாக அவரது/அவளது அற்றோணியாக என்னை நியமிக்கின்ற பிரசித்த நொத்தாரிசு ..... என்பவரால் ..... ஆந் தேதியிடப்பட்ட ..... ஆம் இலக்க கொண்ட அற்றோணித் தத்துவத்தை எழுதி, நிறைவேற்றியுள்ளார் என நான் வெளிப்படுத்தி உறுதிசெய்கின்றேன்.

(3) சொல்லப்பட்ட அற்றோணித் தத்துவமானது உண்மையானதும் மற்றும் இன்னும் வலுவிலுள்ளதுமாகும் என்பதுடன் அதனை அளித்தவர் உயிருடனுள்ளார் எனவும் நான் நம்புகிறேன்.

.....
அற்றோணி

மேற்போந்த சத்தியக்கடதாசி மேலே பெயர்குறிப்பிட்டவருக்கு வாசித்துக்காட்டபட்டு விளங்கப்படுத்தப்பட்டதுடன் அதன் உள்ளீடுகளைப் புரிந்து கொண்டு ..... ஆம் ஆண்டு ..... ஆம் மாதம் ..... ஆம் நாளாகிய இன்று கையொப்பமிட்டு உறுதிப்படுத்தியுள்ளார்/சத்தியஞ் செய்துள்ளார்.

.....
எனது முன்னிலையில்

.....
சமாதான நீதிவான் / சத்திய பிரமாண ஆணையாளர்

[பிரிவு 3(3) மற்றும் 5]

அட்டவணை II

தொடர் இல.	
பதிவுத் தேதி	
அளிப்பவரின் பெயரும் முகவரியும்	
அற்றேணியின் பெயரும், முகவரியும்	
அற்றோணி தத்துவத்தின் தேதி	
பதிவு செய்வதற்காக எவ்வாளினால் அற்றோணித் தத்துவம் சமர்ப்பிக்கப்பட்டது.	
அற்றோணித் தத்துவம் பதிவு செய்யப்பட்ட தொகுதியும் இருமடித்தாளும்.	
கைமீட்டல் அல்லது இல்லாதொழித்தல் பற்றி நொத்தாரிசு முறையில் நிறைவேற்றப்பட்ட ஆவணத்தின் திகதியும் இலக்கமும்.	
கைமீட்டல் அல்லது இல்லாதொழித்தல் பற்றிய நொத்தாரிசு முறையில் நிறைவேற்றப்பட்ட ஆவணம் எவ்வாளினால் வழங்கப்பட்டது.	
கைமீட்டல் அல்லது இல்லாதொழித்தல் பற்றிய நொத்தாரிசு முறையில் எழுதி நிறைவேற்றப்பட்ட ஆவணம் பதியப்பட்டிருக்கும் தொகுதியும் இரு மடித்தாளும்.	

[பிரிவு 4(2)]

அட்டவணை III

பதிவாளர் தலைமையதி
பதிபதிவாளர் தலைமையதிபதி திணைக்களம்
.....

..... ஆம் முகவரியைச் சேர்ந்த (அளிப்பவரின் பெயர்)..... ..... ஆகிய நான் இவ்வறிவித்தலின் தேதியிலிருந்து மூன்றுமாதங்களினும் பதிவுசெய்யப்படுவதற்கு அற்றோணித் தத்துவத்தின் பதிவேட்டின் ..... ஆம் தொகுதியையும் ..... ஆம் இருமடித்தாளையும் கொண்ட ..... ஆம் இலக்க நாளேட்டின் கீழ் ..... இல் பதிவுசெய்யப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழிக் கின்ற சாதனத்தை உங்களிடம் சமர்ப்பிப்பதற்கு உட்கருதுகின்றேன் என அற்றோணித் தத்துவக் கட்டளைச் சட்டத்தின்கீழ் கவனித்திற் கொள்ளவும்.

..... ஆண்டின் .....
மாதத்தின் ..... நாளன்று
..... இல

.....

அளிப்பவரினது அல்லது அளிப்பவரின்
சட்டத்தரணியினது கையொப்பம்

..... முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

1. கையொப்பம்
முழுப்பெயர்
தே.அ.அ
முகவரி

2. கையொப்பம்
முழுப்பெயர்
தே.அ.அ
முகவரி

8. (1) முதன்மைச்சட்டவாக்கதிலும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளிலும் முரணாக எது எவ்வாறிருப்பினும் -

(அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்படாததும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கைமீட்கப்படாதுள்ள அல்லது இல்லாதொழிக்கப்படாதுள்ளதுமானவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவம் ஒவ்வொன்றும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதி ஒன்றினுள் பதிவாளர் தலைமையதிபதிக்கு பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கைமீட்கப்படாதுள்ள அல்லது இல்லாதொழிக்கப்படாதுள்ளதுமான இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் எழுதி நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவம் ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் கைமீட்கப்படும் அல்லது இல்லாதொழிக்கப்படும் வரை தொடர்ந்து செல்லுபடியானதாதல் வேண்டும் என்பதுடன் பயனுறுதலும் வேண்டும்;

(இ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் எழுதி நிறைவேற்றப்பட்டதும் பதிவாளர் தலைமையதிபதிக்கு பதிவு செய்யவதற்காக சமர்ப்பிக்கப்படவுள்ளதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு முடிவுறாதிருக்கின்றதுமான அற்றோணித் தத்துவம் ஒவ்வொன்றும் பதிவளார் தலைமையதிபதினால் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(2) அப்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்படாத (1)ஆம் உட்பிரிவின் *(அ)* என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அற்றோணித் தத்துவம் ஒவ்வொன்றும் அக்காலப்பகுதி முடிவுறாத தேதியிலிருந்து பயனுறும் வகையில் வெற்றும் வறிதானதுமாகக் கருதப்படுதல் வேண்டும்.

9. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2022ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

மோசடிகளைத் தடுத்தல் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம் (70ஆம் அத்தியாயம்)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (70ஆம் அத்தியாயமான) மோசடிகளைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தின் 2ஆம் பிரிவானது, "அது எழுத்திலிருந்தாலொழியவும்" என்பதிலிருந்து அப்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(அ) இயைபான உறுதி அல்லது சாதனம் எழுத்திலிருந்தாலொழியவும், ஒவ்வோர் உறுதிமுடிப்பவரினாலும் கையொப்பமிடப்பட்டாலொழியவும், அத்துடன் ஒரேநேரத்தில் சமுகமளிக்கும் இரு சாட்சிகளின் முன்னிலையில் பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டாலொழியவும்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஒவ்வோர் உறுதிமுடிப்பவரினதும் இடதுகை அல்லது வலதுகைப் பெருவிரலடையாளம் அல்லது அத்தகைய உறுதிமுடிப்பவரின் இரு கைப்பெருவிரல்களும் இல்லாதிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, வேறேதேனும் கைவிரலின் அல்லது கால்விரலின் அடையாளம் இயைபான உறுதியின் அல்லது சாதனத்தின் மூலப்பிரதியில், இணைப்பிரதியில் மற்றும் நொத்தாரிசுவின் பிரதியில் கையொப்பத்துக்கு மேல் அல்லது அதற்கருகில் இடப்பட்டிருந்தாலொழியவும்,

சட்டத்தில் வலுவுடையதாகவோ அல்லது பயனுடையதாகவோ இருத்தலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய எவரேனும் உறுதிமுடிப்பவரின் கையொப் பத்தை அல்லது கைப்பெருவிரல் அடையா ளத்தை ஏதேனும் காரணத்துக்காகப் பெற்றுக் கொள்ளமுடியாதிருக்கும் பட்சத்தில், பிரசித்த நொத்தாரிசு, அத்தாட்சிப்படுத்துகையில் அத்தகைய காரணத்தைக் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுதி முடிப்பவர் விடயத்துக்கேற்ப, வேறேதேனும் கைவிரலடையாளத்தை அல்லது கால்விரல் அடையாளத்தை இடுதலும் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை (1)ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) "இதனகத்துப்பின்னர் குறிப்பிடப்பட்ட முறையில் நிறைவேற்றப்பட்டாலொழியவும் செல்லுபடியாதலாகாது;" என்பதிலிருந்து அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1)ஆம் உட்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, "விடயத்துக்கேற்ப, (2)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய நிறைவேற்றப்பட்டாலொழியவும் செல்லுபடியாதலாகாது." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) மரணசாதனக்காரர், ஒரேநேரத்தில் சமுகமாயிருக்க வேண்டிய ஒரு பிரசித்த நொத்தாரிசுவினதும் இரு சாட்சிகளினதும் முன்னிலையில், (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மரணசாதனத்தின், இறுதி விருப்பாவணத்தின் அல்லது விருப்பாவணப் பின்னிணைப்பின் அடியில் அல்லது முடிவில் -

(அ) கையொப்பமிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவரது இடதுகை அல்லது வலதுகைப் பெரு விரலடையாளத்தை இடுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் காரணத்துக்காக மரணசாதனக்காரரின் கைப்பெருவிரலடையாளத்தைப் பெற்றுக்கொள்ளமுடியாதிருக்கும் பட்சத்தில், அவர், விடயத்துக்கேற்ப, வேறு ஏதேனும் கைவிரலடையாளத்தை அல்லது கால்விரலடையாளத்தை இடுதல் வேண்டும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவு இத்தாற் நிருத்தப்படுகின்றது:-

(1) "கையொப்பம்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "கையொப்பம் மற்றும் மரணசாதனக்காரரின் அல்லது மரணசாதனக்காரியின், விடயத்துக்கேற்ப, இடதுகை அல்லது வலதுகைப் பெருவிரலடையாளம் அல்லது வேறேதேனும் கைவிரலடையாளம் அல்லது கால்விரலடையாளம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"ஆயின், எவ்வாறாயினும், மரணசாதனக்காரரின் விடயத்துக்கேற்ப, கையொப்பத்தை அல்லது இடதுகை அல்லது வலதுகைப் பெருவிரலடையாளத்தை அல்லது வேறேதேனும் விரலடையாளத்தை ஏதேனும் காரணத்துக்காகப் பெற்றுக்கொள்ளமுடியாத பட்சத்தில், மரணசாதனக்காரர் அவரது கால்விரலடையாளத்தை இடுதல் வேண்டுமென்பதுடன் பிரசித்த நொத்தாரிசு அத்தகைய காரணத்தை அவரது அத்தாட்சிப்படுத்துகையில் குறிப்பிடுதலும் வேண்டும்.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "இணைப்பிரதிகளில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "முப்பிரதிகளில்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"உறுதிகள் முப்பிரதிகளில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.".

6. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தம்

[2022ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம் அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இச்சட்டத்தில் "அரசியலமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் VIIஅ என்னும் அத்தியாயம் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அத்தியாயம் இடப்படுகின்றது:-

"அத்தியாயம் VIIஅ

அரசியலமைப்புப் பேரவை

41அ.(1) பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டிய (இவ்வத்தியாயத்தில் "பேரவை" எனக்குறிப்பீடு செய்யப்படும்) அரசியலமைப்புப் பேரவையொன்று இருத்தல் வேண்டும்:-

(அ) பிரதம அமைச்சர்;

(ஆ) சபாநாயகர்;

(இ) பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர்;

(ஈ) சனாதிபதியினால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்;

(உ) பின்வருமாறாக பெயர்குறிக்கப்பட்டதன் மேல், சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து ஆட்கள்: -

(i) அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் உடன்பாட்டின் மீது பெயர் குறிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினரொருவர்;

(ii) எந்த அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழுவை எதிர்க்கட்சித் தலைவர் சேர்ந்துள்ளாரோ அந்த அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழுவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் உடன்பாட்டின் மீது பெயர்குறிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினரொருவர்; மற்றும்

(iii) பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்காட்சித் தலைவருடனான உடன்பாட்டின் மீது சாபநாயகரினால் பெயர்குறிக்கப்படும் மூன்று ஆட்கள்; அத்துடன்

(ஊ) அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் எந்த அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழுவை எதிர்க்கட்சித் தலைவர் சேர்ந்துள்ளாரோ அந்த அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழுவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்ந்த, பாராளுமன்ற உறுப்பினர்களின் உடன்பாட்டின் மீது பெயர்குறிக்கப்பட்டு சனாதிபதியினால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்.

(2) சபாநாயகர் பேரவையின் தவிசாளராதல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியின் உட்பந்தி *(உ)* அல்லது உட்பந்தி *(ஊ)* என்பதன் கீழான நியமனங்களுக்கான பெயர்குறித்த நியமனங்கள், அத்தகைய பெயர் குறித்த நியமனங்களுக்கான சந்தர்ப்பமொன்று எழுகின்றபொழுதெல்லாம் செய்யப்படுகின்றதென்பதனை உறுதிப்படுத்துதல் சபாநாயகரின் கடமையாதல் வேண்டும்.

(4) ஓராம் பந்தியின் *(உ)* என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்து ஆட்களை பெயர்குறித்து நியமிக்கையில், விடயத்துக்கேற்ப பிரதம அமைச்சர், சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியலமைப்புப் பேரவை, உயர்தொழில் மற்றும் வேறுபட்ட சமூகங்கள் உள்ளிட்ட இலங்கை சமூகத்தினரின் பல்லின சமுதாயங்களைப் பிரதிபலிக்கின்றது என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(5) ஓராம் பந்தியின் *(உ)* என்னும் உட்பந்தியின் கீழ் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத ஆட்கள் பகிரங்க வாழ்வில் அல்லது உயர்தொழிலில் தமக்கென்று சிறந்த நிலையை ஏற்படுத்திக்கொண்ட கீர்த்தி வாய்ந்தவர்களும் நேர்மையுடையவர்களும் அத்துடன் ஏதேனும் அரசியற் கட்சியின் உறுப்பினரல்லாதவர்களுமான ஆட்களாதல் வேண்டும். இவர்களது பெயர்குறித்த நியமனம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(6) சனாதிபதி, (1)ஆம் பந்தியின் *(உ)* மற்றும் *(ஊ)* என்னும் உட்பந்திகளின் கீழ் செய்யப்பட்ட பெயர்குறித்த நியமனங்களைக் குறித்துரைக்கின்ற எழுத்திலான தகவல் கிடைக்கப்பெற்று பதினான்கு நாட்களினுள் அவசியமான நியமனங்களைச் செய்தல் வேண்டும்.

(7) *(அ)* பாராளுமன்றம் கலைக்கப்படுவதன் மீது, 64ஆம் உறுப்புரையின் (2)ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சபாநாயகர், மேற்கூறப்பட்ட உறுப்புரையின் (1)ஆம் பந்தியின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரொருவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படும்வரை, பேரவையின் உறுப்பினரொருவராகப் பதவியை தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

(ஆ) பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், பிரதம அமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும், அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்களாகவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும் அத்தகைய கலைப்பைப் பின்பற்றிய பொதுத் தேர்தலின் பின்னராக பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், விடயத்திற்கேற்ப, பிரதம அமைச்சராக நியமிக்கப்படும் அல்லது எதிர்க் கட்சித் தலைவராக அங்கீகரிக்கப்படும் அல்லது (1)ஆம் பந்தியின் *(ஈ)*, *(உ)* மற்றும் *(ஊ)* என்னும் உட்பந்திகளின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேரவையின் உறுப்பினர்களாக நியமிக்கப்படும் அத்தகைய காலம்வரை, அத்தகைய பேரவையின் உறுப்பினர்களாகப் பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

(8) *(அ)* ஓராம் பந்தியின் *(ஈ)* என்னும் உட்பந்தியின் கீழ் நியமிக்கப்படும் பேரவையின் உறுப்பினர், அவர் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் எழுத்தின் மூலம் முன்னதாகவே அவரது பதவியைத் துறந்தாலொழிய அல்லது சனாதிபதியினால் பதவி நீக்கப்பட்டாலொழிய, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(ஆ) ஓராம் பந்தியின் *(உ)* மற்றும் *(ஊ)* என்னும் உட்பந்திகளின் கீழ் நியமிக்கப்படும் பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும், சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் எழுத்தின் மூலம் முன்னதாகவே அவரது பதவியைத் துறந்தாலொழிய அல்லது உடல்ரீதியான அல்லது உளரீதியான ஆற்றலின்மை என்ற ஏதுக்கள் மீதும் அத்துடன் பதவியில் மேற்கொண்டு பணியாற்றுவதற்கு இயலாதவராக உள்ளார் எனவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை மீது (சமூகமளிக்காதோர் உட்பட) அதற்குச் சாதகமாக வாக்களித்து நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் மீது சனாதிபதியினால் பதவி நீக்கப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றம் ஒன்றினால் அவருக்குத் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலொழிய அல்லது அரசியலமைப்பின் 81ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அவர் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருந்தாலொழிய அல்லது 41உ என்னும் உறுப்புரையின் (7)ஆம் பந்தியின் கீழ் அவருடைய பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்பட்டாலொழிய, அவர் அத்தகைய உறுப்பினராக நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(9) ஓராம் பந்தியின் *(ஈ)*, *(உ)* அல்லது *(ஊ)* என்னும் உட்பந்திகளின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், சனாதிபதி, அத்தகைய வெற்றிடமேற்பட்டு பதினான்கு நாட்களுக்குள்ளாகவும் அத்துடன் மேற்சொல்லப்பட்ட உட்பந்திகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கெடுத்தும், அத்தகைய உறுப்பினரை அடுத்துப்பின்னுறுவதற்கென வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

அவ்வாறு நியமிக்கப்படும் எவரேனுமாள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துப் பின்னுறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுயின் போது பதவிவகித்தல் வேண்டும்.

(10) ஓராம் பந்தியின் *(ஈ), (உ)* அல்லது *(ஊ)* என்னும் உட்பந்திகளின் கீழ் நியமிக்கப்படும் உறுப்பினரொருவர், மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலாகாது.

(11) ஓராம் பந்தியின் *(ஈ), (உ)* மற்றும் *(ஊ)* என்னும் உட்பந்திகளின் கீழ் சனாதிபதியினால் செய்யப்படும் நியமனங்கள் சபாநாயகருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

41ஆ.(1) ஆளெவரும், பேரவையின் விதப்புரையொன்றில் மீதன்றி, இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களுள் எவற்றினதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக சனாதிபதியினால் நியமிக்கப்படலாகாது.

(2) ஓராம் பந்தியின் ஏற்பாடுகள், அத்தகைய ஆணைக்குழு எதனதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனுமாள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் ஆணைக்குழுக்களின் தவிசாளர்களாக அல்லது உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கான தகுதியான மற்றும் உகந்த ஆட்களை அத்தகைய நியமனத்துக்கான சந்தர்ப்பம் எழுகின்ற பொழுதெல்லாம், சனாதிபதிக்கு விதந்துரைத்தல் பேரவையின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விதப்புரைகள், பால் சமத்துவம் உட்பட இலங்கைச் சமூகத்தினரின் பல்லின சமுதாயங்களைப் பிரதிபலிக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு முயற்சித்தலும் வேண்டும். அத்தகைய ஆணைக்குழுக்களின் தவிசாளர்களின் விடயத்தில், பேரவையானது நியமனம் செய்வதற்காக மூன்று ஆட்களை விதந்துரைத்தல் வேண்டுமென்பதுடன், சனாதிபதி விதந்துரைக்கப்பட்ட ஆட்களில் ஒருவரைத் தவிசாளராக நியமித்தலும் வேண்டும்.

(4) சனாதிபதி அத்தகைய நியமனங்களுக்கான பேரவையின் விதப்புரைகளைப் பெற்றுக்கொண்ட பதின்நான்கு நாட்களினுள் இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் தவிசாளர்களையும் உறுப்பினர்களையும் நியமித்தல் வேண்டும்.

(5) ஓராம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் ஆளெவரும் அல்லது ஏதேனும் அத்தகைய ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராகப் பதிற்கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அகற்றப்படுதல் ஆகாது என்பதுடன், அத்தகைய ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிராதவிடத்து, பேரவையின் முன்னங்கீகாரத்துடன் மட்டுமே அத்தகைய ஆள் சனாதிபதியினால் அகற்றப்படுதலும் வேண்டும்.

(6) இவ்வுறுப்புரையின் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா ஆணைக்குழுக்களும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாதலும் மறுமொழி கூறற்பாலதாதலும் வேண்டும்.

அட்டவணை

(அ) தேர்தல் ஆணைக்குழு.

(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழு.

(இ) தேசிய பொலிசு ஆணைக்குழு.

(ஈ) கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு.

(உ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

(ஊ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு.

(எ) நிதி ஆணைக்குழு.

(ஏ) எல்லை நிர்ணய ஆணைக்குழு.

(ஐ) தேசிய பெறுகை ஆணைக்குழு.

41இ. (1) ஆளெவரும் இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பதவிகளுள் எவற்றிற்கும், சனாதிபதியினால் பேரவைக்குச் செய்யப்படும் விதப்புரையின் மீது அத்தகைய நியமனம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் ஆகாது.

(2) ஓராம் பந்தியின் ஏற்பாடுகள், இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதவியில் பதின்நான்கு நாட்களை விஞ்சுமொரு காலப்பகுதிக்குப் பதிற்கடமையாற்றுவதற்கென நியமிக்கப்படும் எவரேனும் ஆள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்:

ஆயின், ஆளெவரும் சனாதிபதியின் விதப்புரை ஒன்றின் மீது அத்தகைய பதில் நியமனம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, பதின்நான்கு நாட்களை விஞ்சாத தொடர்ந்துவரும் காலப்பகுதிக்கு அத்தகைய ஏதேனும் பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்படுதல் ஆகாது.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும், அல்லது அத்தகைய ஏதேனும் பதவியில் பதிற் கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அத்தகைய பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஆகாது.

(4) உயர் நீதிமன்ற நீதிபதிகளினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரினதும், நீதிபதிகளினதும் நியமனம் தொடர்பான அதனது பணியை பிரயோகிக்கையில் பேரவையானது, பிரதம நீதியரசரினது அபிப்பிராயத்தைப் பெறுதல் வேண்டும்.

அட்டவணை

பாகம் I

(அ) பிரதம நீதியரசரும் உயர் நீதிமன்ற நீதிபதிகளும்.

(ஆ) மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும் நீதிபதிகளும்.

(இ) தவிசாளர் தவிர்ந்த நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்.

பாகம் II

(அ) சட்டத்துறை தலைமையதிபதி.

(ஆ) இலங்கை மத்திய வங்கி ஆளுநர்.

(இ) கணக்காய்வாளர் தலைமையதிபதி.

(ஈ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி.

(உ) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமான்).

(ஊ) பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

41ஈ. (1) மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கென பேரவையினால் நியமிக்கப்பட வேண்டியவரான பேரவைக்கான செயலாளர் நாயகம் ஒருவர் இருத்தல் வேண்டும். அவருடைய பதவிக்காலம் முடிவடைவதன் மேல், செயலாளர் நாயகம் மீளநியமிப்பதற்கு தகுதியுடையவராதல் வேண்டும்.

(2) பேரவையானது, அதனால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீது, அதனது பணிகளை நிறைவேற்றுவதற்காக அது அவசியமென கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களை நியமிக்கலாம்.

41உ. (1) பேரவையானது குறைந்தபட்சம் ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவையும், அத்துடன் இவ்வத்தியாயத்தின் அல்லது ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளினால் பேரவைக்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறு அடிக்கடியும் கூடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கூட்டங்கள், பேரவையின் தவிசாளரது பணிப்பின் மீது பேரவையின் செயலாளர் நாயகத்தினால் கூட்டப்படுதலும் வேண்டும்.

(2) தவிசாளர் பேரவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டுமென்பதுடன், தவிசாளர் வருகைதராதிருப்பின், பிரதம அமைச்சரும், பிரதம அமைச்சர் வருகைதராதிருப்பின், எதிர்க்கட்சித் தலைவரும் பேரவையின் கூட்டங்களுக்கு தலைமை தாங்குதலும் வேண்டும்.

(3) பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(4) பேரவையானது, அது செய்ய தேவைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு விதப்புரையையும், அங்கீகாரத்தையும் அல்லது முடிபையும் ஏகமனதாகச் செய்வதற்கு முயற்சித்தல் வேண்டுமென்பதுடன், ஏகமனதான முடிபொன்று இல்லாதவிடத்து, பேரவையினால் செய்யப்பட்ட விதப்புரை, அங்கீகாரம் அல்லது முடிபு எதுவும் அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் பேரவை உறுப்பினர்களில் ஐந்து உறுப்பினர்களுக்குக் குறையாதோரினால் ஆதரவளிக்கப்பட்டாலொழிய, வலிதுடையதாகாது.

(5) தவிசாளர் அல்லது தலைமை தாங்கும் ஏனைய உறுப்பினர் மூலவாக்கொன்றை உடையவராதல் ஆகாது, ஆனால், பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான ஏதேனும் பிரச்சினையின் மீது வாக்குகள் சமமாக இருக்கும் பட்சத்தில், தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்திற்கு தலைமை தாங்குகின்ற வேறு உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) உறுப்புரை 41ஆ இன் அல்லது உறுப்புரை 41இ இன் கீழான ஏதேனும் நியமனத்திற்குப் பொருத்தமான ஆட்களை விதந்துரைப்பது அல்லது அங்கீகரிப்பது தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள் உட்பட, பேரவையின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறை என்பன பேரவையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(7) பேரவையின் முன் அனுமதியின்றி, பேரவையின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வருகை தராதிருப்பவரான உறுப்புரை 41அ வின் (1)ஆம் பந்தியின் *(ஈ), (உ)* அல்லது *(ஊ)* என்னும் உட்பந்திகளின் கீழ் நியமிக்கப்படும் பேரவையின் எவரேனும் உறுப்பினர், அத்தகைய கூட்டங்களுள் மூன்றாவது கூட்டத்தின் தேதியிலிருந்து பயன்பட, பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(8) பேரவையானது, அது, முழுமையாக அமைத்துருவாக்கப்படவில்லை அல்லது அதன் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று உள்ளது என்பன எவை எப்படியிருப்பினும் செயலாற்றத் தத்துவமுடையதாகவிருத்தல் வேண்டும். உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது செய்யப்பட்ட பேரவையின் செயல், நடபடி அல்லது முடிபு, எதுவும் பேரவை முழுமையாக அமைத்துருவாக்கப்படவில்லை அல்லது அதன் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று உள்ளது அல்லது உறுப்பினர் ஒருவரது நியமனத்தில் குறைபாடுள்ளது என்னும் நிகழ்வின் காரணத்தினால் வலிதற்றதாதலாகாது அல்லது வலிதற்றதாகக் கருதப்படுதலுமாகாது.

41ஊ. பேரவையின் உறுப்பினர்களின் அல்லது உறுப்புரை 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவுற்றது எது எவ்வாறிருப்பினும், பேரவையின் உறுப்பினர்கள் அல்லது அத்தகைய ஏனைய ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள், பேரவையில் அல்லது அத்தகைய வேறு ஆணைக்குழுவில் புது உறுப்பினர்கள் பதவியேற்கும் வரை பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

41எ. (1) பேரவையானது, ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கொரு தடவை, முற்போந்த மூன்று மாதகாலப்பகுதியின்போதான அதன் செயற்பாடுகள் பற்றி ஓர் அறிக்கையை சனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) பேரவையானது, அரசியலமைப்பினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தால் அதன் மீது சுமத்தப்படக்கூடியவாறான அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கடமைகளைப் புரிதலும் பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) பேரவையானது, அதன் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்குமான விதிகளை ஆக்குவதற்கு தத்துவமுடையதாதல் வேண்டும். அத்தகைய எல்லா விதிகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, அத்தகைய வெளியீட்டின் மூன்று மாதங்களுக்குள் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

41ஏ. பேரவையினால் உறப்படும் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

41ஒ. நூற்றி இருபத்தாறாம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைவாக, நீதிமன்றம் எதுவும், பேரவையின் ஏதேனும் முடிபை அல்லது பேரவையினால் அளிக்கப்பட்ட ஏதேனும் அங்கீகாரத்தை அல்லது செய்யப்பட்ட ஏதேனும் விதப்புரையை எத்தகையதுமான ஏதேனும் ஏதுவின் மீது அல்லது எத்தகையதுமான ஏதேனும் முறையில் ஏற்றுக்கவனிப்பதற்கான, கேட்பதற்கான அல்லது முடிபு செய்வதற்கான அல்லது கேள்விக்குட்படுத்துவதற்கான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் ஆகாது என்பதுடன், அத்தகைய முடிபு, அங்கீகாரம் அல்லது விதப்புரை எல்லா நோக்கங்களுக்காகவும் முற்றும் முடிவானதாக இருத்தலும் வேண்டும்.".

3. அரசியலமைப்பின் அத்தியாயம் VIII இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அத்தியாயம் இடப்படுகின்றது:-

"அத்தியாயம் VIII

ஆட்சித்துறை

அமைச்சரவை

42. சனாதிபதி, அரசியலமைப்பின் கீழும், பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பான அப்போதைக்குள்ள சட்டம் உட்பட எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழும், தமது தத்துவங்களையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் முறைப்படி பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

43. (1) குடியரசின் அரசாங்கத்தை நெறிப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொறுப்பாக்கப்பட்ட ஓர் அமைச்சரவை இருத்தல் வேண்டும்.

(2) அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு கூட்டாக பொறுப்பாகவிருத்தலும் வகைசொல்லற்பாதலும் வேண்டும்.

(3) சனாதிபதி, அமைச்சரவையின் ஓர் உறுப்பினராயிருத்தல் வேண்டும் என்பதுடன், அமைச்சரவையின் தலைவராகவிருத்தலும் வேண்டும்:

ஆயின், அரசியலமைப்பின் ஏற்பாடுகளின்கீழ் அமைச்சரவை கலைக்கப்படுவது எது எவ்வாறிருப்பினும், சனாதிபதி தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்.

(4) சனாதிபதி, அவரது அபிப்பிராயப்படி பாராளுமன்றத்தின் எந்த உறுப்பினர் பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அதிகம் சாத்தியமுள்ளவராக இருக்கின்றாரோ அந்த உறுப்பினரை பிரதம அமைச்சராக நியமித்தல் வேண்டும்.

44. (1) சனாதிபதி அத்தகைய கலந்தாலோசனை அவசியமானதென அவர் கருதுமிடத்து, பிரதம அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அமைச்சரவையின் அமைச்சர்களினதும், அமைச்சுக்களிதும் எண்ணிக்கையையும் அத்தகைய அமைச்சர்களுக்குக் குறித்தொதுக்கப்படவுள்ள விடயங்களையும் பணிகளையும் தீர்மானித்தல் வேண்டும்.

(2) சனாதிபதி, பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட அமைச்சுக்களுக்குப் பொறுப்பாக இருப்பதற்கென பாராளுமன்றத்தின் உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களை நியமித்தல் வேண்டும்.

(3) சனாதிபதி, பாதுகாப்பு எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சராக இருத்தல் வேண்டுமென்பதுடன், இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது உறுப்புரை 45இன் (1)ஆம் பந்தியின் கீழ் அத்தகைய எவரேனும் அமைச்சருக்கு குறித்தளிக்கப்படாத ஏதேனும் விடயம் அல்லது பணியை பதினான்கு நாட்களுக்கு மேற்படாத காலப்பகுதியினுள் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய எவரேனும் அமைச்சரவையின் அமைச்சரின் அல்லது அமைச்சரவையின் உறுப்பினரல்லாத எவரேனும் அமைச்சரின் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் அத்துடன் புரியலாம் என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய விடயம் அல்லது பணி எவ்வமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சருக்கு அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்திலான ஏதேனும் குறிப்பீடு சனாதிபதிக்கான குறிப்பீடொன்றாக வாசித்து பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகள் சனாதிபதிக்கான ஏதேனும் விடயம் அல்லது பணியை பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அவருக்குக் குறித்தொதுக்குவதிலிருந்து தடைசெய்தலாகாது. அத்துடன் அதற்கிணங்க அத்தகைய விடயம் அல்லது பணி எவ்வமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டதோ அவ்வமைச்சருக்கு அரசியலமைப்பிலுள்ள அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்திலுள்ள ஏதேனும் குறிப்பீடு சனாதிபதிக்கான குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) சனாதிபதி எந்நேரத்திலும் அமைச்சரவையின் விடயங்களினதும் பணிகளினதும் குறித்தொதுக்குதல்களையும், அமைப்பையும் மாற்றலாம். அத்தகைய மாற்றங்கள் அமைச்சரவையின் தொடர்ச்சியையும் பாராளுமன்றத்துக்கு அதற்குள்ள பொறுப்புடைமையின் தொடர்ச்சியையும் பாதித்தல் ஆகாது.

45. (1) சனாதிபதி பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து அமைச்சரவையின் உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களாக நியமிக்கலாம்.

(2) சனாதிபதி அத்தகைய கலந்தாலோசனை அவசியமானதென அவர் கருதுகின்றவிடத்து, பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், (1)ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் அத்தகைய அமைச்சர்களுக்கான விடயங்களினதும் மற்றும் பணிகளினதும் குறித்தொதுக்குதல்களையும்

அத்தகைய அமைச்சர்களின் பொறுப்பில் இருக்க வேண்டிய அமைச்சுக்கள் ஏதேனுமிருப்பின், அமைச்சுக்களையும் தீர்மானிக்கலாம்.

(3) சனாதிபதி (2)ஆம் பந்தியின் கீழ்செய்யப்பட்ட ஏதேனும் குறித்தொதுக்குதலை எந்தநேரத்திலும் மாற்றலாம்.

(4) ஓராம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் ஒவ்வொரு அமைச்சரும் அமைச்சரவைக்கும், பாராளுமன்றத்துக்கும் பொறுப்பாதலும் வகை சொல்ல வேண்டியவராதலும் வேண்டும்.

(5) அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர், அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் விடயத்திற்குரிய அல்லது பணிக்குரிய ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை, அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத எவரேனும் அமைச்சருக்கு வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பு மூலம் கையளிக்கலாம் அத்துடன் அவருக்கு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை, அத்தகைய தத்துவம் அல்லது கடமை அமைச்சரவையின் அத்தகைய அமைச்சர் மீது அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட எழுத்திலான சட்டத்தில் முரணாக எதுஎவ்வாறிருப்பினும், பிரயோகித்தலும் புரிதலும் அத்தகைய வேறு அமைச்சருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

46. (1) சனாதிபதி, பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், அமைச்சரவை அமைச்சர்கள் தமது கடமைகளைப் புரிவதில் அவர்களுக்கு உதவுவதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து பிரதி அமைச்சர்களை நியமிக்கலாம்.

(2) அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர் அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் விடயம் அல்லது பணி தொடர்பிலான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் அவரது பிரதியமைச்சருக்கு கையளிக்கலாம் அத்துடன் அந்தத் தத்துவம் அல்லது கடமை அத்தகைய அமைச்சருக்கு அல்லது அவர் மீது எந்த எழுத்திலான சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ளதோ அல்லது சுமத்தப்பட்டுள்ளதோ அந்த எழுத்திலான சட்டத்தில் முரணாக எதுஎவ்வாறிருப்பினும், இப்பந்தியின்கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை பிரயோகிப்பதும் புரிவதும் அத்தகைய பிரதியமைச்சருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

47. (1) அமைச்சரவை-

(அ) அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை முப்பதை விஞ்சுதலாகாது; அத்துடன்

(ஆ) உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும், பிரதி அமைச்சர்களினதும், கூட்டுமொத்த எண்ணிக்கை மொத்தத்தில் நாற்பதை விஞ்சுதலாகாது.

(2) பிரதம அமைச்சர்-

(அ) சனாதிபதியின் கைப்பட்ட கடிதத்தின் மூலம் அகற்றப்பட்டாலொழிய;

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் தம் கைப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியை துறந்தாலொழிய; அல்லது

(இ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக இல்லாதொழிந்தாலொழிய,

அரசியலமைப்பின் ஏற்பாடுகளின்கீழ் அமைச்சரவை தொடர்ந்தும் பணியாற்றும் காலம் முழுவதும் அவர் தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்.

(3) அமைச்சரவையின் அமைச்சரொருவர் அல்லது அமைச்சரவை உறுப்பினரல்லாத அமைச்சரொருவர் அல்லது பிரதியமைச்சரொருவர்-

(அ) பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அவர் சனாதிபதியின் கைப்பட்ட ஒரு கடிதத்தின் மூலம் பதவியினின்றும் அகற்றப்பட்டிருந்தாலொழிய;

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் அவருடைய கைப்பட்ட கடிதத்தின் மூலம் அவர் தமது பதவியைத் துறந்தாலொழிய; அல்லது

(இ) பாராளுமன்ற உறுப்பினராக அவர் இல்லாதொழிந்தாலொழிய,

அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை தொடர்ந்து பணியாற்றும் காலம் முழுவதும் அவர் தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்.

(4) ஓராம் பந்தியிலுள்ளது எது எவ்வாறிருப்பினும், பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெறும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக்குழு, தேசிய அரசாங்கமொன்றை உருவாக்குமிடத்து, அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களின் எண்ணிக்கையும், பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கையும் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) பந்தி (4)இன் நோக்கத்துக்காக "தேசிய அரசாங்கம்" என்பது, பாராளுமன்றத்தில் ஆகக் கூடுதலான ஆசனங்களைப் பெறும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழு அங்கீகரிக்கப்பட்ட ஏனைய அரசியற் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்களுடன் ஒன்றுசேர்ந்து உருவாக்கப்படும் ஓர் அரசாங்கம் எனப் பொருள்படும்.

48. (1) பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு நேர்முன்னர் பணியாற்றுகின்ற அமைச்சரவை, அத்தகைய கலைத்தல் எவ்வாறிருப்பினும் தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன், பொதுத் தேர்தல் முடிவுற்றதும் பணியாற்றாதொழிதலும் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க பிரதம அமைச்சரும், அமைச்சரவையின் அமைச்சர்களும், 47ஆம் உறுப்புரையின் (2)ஆம் பந்தியில் *(அ)* என்னும் உட்பந்தியில் அல்லது (3)ஆம் பந்தியில் உட்பந்தி *(அ)* அல்லது *(ஆ)* இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக பதவி வகிக்காதொழிந்தாலன்றி, அத்தகைய அமைச்சர்கள் தொடர்ந்தும் பணியாற்றுதல் வேண்டும். அத்துடன் அத்தேர்தல் ஆணையாளர் தலைமையதிபதியால் கொடுக்கப்படும் கட்டளைக்கற்களுடன் இணங்கியொழுகுதலும் மற்றும் பொதுத்தேர்தலின் போது முறையற்ற செல்வாக்கைப் பிரயோகிக்காது இருத்தலும் வேண்டும்.

(2) பாராளுமன்றக் கலைத்தலுக்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின் போது பிரதம அமைச்சர் இறந்துள்ளமை, பதவியிலிருந்து அகற்றப்பட்டமை அல்லது பதவியை துறந்தமை எவ்வாறிருப்பினும், அமைச்சரவையானது, அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களை அதன் உறுப்பினர்களாகக் கொண்டு, பொதுத் தேர்தல் முடிவுறும் வரை தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டும். சனாதிபதி அத்தகைய ஒரு அமைச்சரை பிரதம அமைச்சரின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் புரிவதற்குமாக நியமிக்கலாம்.

(3) பாராளுமன்றக் கலைத்தலுக்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின் போது அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர் இறப்பதன் மீது, பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மீது அல்லது பதவி துறப்பதன் மீது, சனாதிபதி, பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், அத்தகைய அமைச்சுக்குப் பொறுப்பாக இருப்பதற்கென அல்லது அத்தகைய அமைச்சரின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கவும் புரியவும் நிறைவேற்றவும் என வேறு எவரேனும் அமைச்சரை நியமிக்கலாம்.

49. (1) பிரதம அமைச்சர், பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின்போது தவிர, இறப்பதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அல்லது பதவி துறப்பதன் மூலம் அல்லது வேறு வகையாக பதவி வகிக்காதொழிந்ததன் மேல், சனாதிபதி 70ஆம் உறுப்புரையின் கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பாராளுமன்றத்தைக் கலைத்திருந்தாலொழிய, அமைச்சரவை கலைக்கப்பட்டதாதல் வேண்டும் என்பதுடன், சனாதிபதி 43, 44இ 45 மற்றும் 46 என்னும் உறுப்புரைகளின் நியதிகளின்படி ஒரு பிரதம அமைச்சரையும், அமைச்சரவையின் அமைச்சர்களையும் அமைச்சரவையின் உறுப்பினர்களல்லாத அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் நியமித்தலும் வேண்டும்:

ஆயின், பிரதம அமைச்சர் அவ்வாறு பதவி வகிக்காதொழிந்ததன் பின்னர், பாராளுமன்றம் கலைக்கப்பட்டால், பொதுத் தேர்தல் முடிவடையும் வரை அமைச்சரவை, அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களை அதன் உறுப்பினர்களாகக் கொண்டு தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டும். சனாதிபதி, பிரதம அமைச்சரின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அத்தகைய அமைச்சர்களுள் ஒருவரை நியமிக்கலாம், என்பதுடன், 48ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) பாராளுமன்றம், அரசாங்கக் கொள்கைக் கூற்றை அல்லது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை நிராகரித்தால் அல்லது அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை நிறைவேற்றினால், அமைச்சரவை கலைக்கப்பட்டதாதல் வேண்டுமென்பதுடன், சனாதிபதி 70ஆம் உறுப்புரையின் கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பாராளுமன்றத்தைக் கலைத்திருந்தாலொழிய, 43, 44இ 45 மற்றும் 46ஆம் உறுப்புரைகளின் நியதிகளின்படி பிரதம அமைச்சர் ஒருவரையும், அமைச்சரவையின் அமைச்சர்களையும் அமைச்சரவையின் உறுப்பினர்களல்லாத அமைச்சர்களையும் பிரதியமைச்சர்களையும் நியமித்தல் வேண்டும்.

50. அமைச்சரவையின் அமைச்சரொருவர், அமைச்சரவையின் உறுப்பினரல்லாத அமைச்சரொருவர் அல்லது பிரதியமைச்சரொருவர் அவருடைய பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு எப்போதேனும் இயலாதிருக்கும்போது, அத்தகைய அமைச்சரவை அமைச்சரின், அமைச்சரவையின் உறுப்பினரொருவரல்லாத அமைச்சரின் அல்லது பிரதியமைச்சரின் இடத்தில் பதிற் கடமையாற்றுவதற்கென சனாதிபதி பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், பாராளுமன்றத்தின் உறுப்பினரெவரையும் நியமிக்கலாம்.

51. (1) *(அ)* பிரதம அமைச்சருக்குச் செயலாள ரொருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) பிரதம அமைச்சரின் செயலாளர் பிரதம அமைச்சரின் அலுவலகத்துக்குப் பொறுப்பாக விருத்தல் வேண்டுமென்பதுடன், பிரதம அமைச்சரின் பணிப்புகளுக்கமைய, அவரது பதவிக்குரிய கடமைகளையும் பணிகளையும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) *(அ)* அமைச்சரவைக்குச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) செயலாளர், சனாதிபதியின் பணிப்புக்கு அமைய, அமைச்சரவையின் அலுவலகத்திற்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும் என்பதுடன், சனாதிபதியினால் அல்லது அமைச்சரவையினால் அவருக்குக் குறித்தளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பணிகளையும், கடமைகளையும் அவர் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

52. (1) அமைச்சரவை அமைச்சரொருவரின் அமைச்சு ஒவ்வொன்றுக்கும் செயலாளரொருவர் இருத்தல் வேண்டும். அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) அமைச்சொன்றின் செயலாளர், அவரது அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அவரது அமைச்சரின் பொறுப்பிலுள்ள அரசாங்கத் திணைக்களங்களின் மீது மற்றும் வேறு நிறுவனங்களின் மீது மேற்பார்வைப் பிரயோகித்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவையின் கலைவு எது எவ்வாறிருப்பினும், அமைச்சொன்றின் அத்தகைய அமைச்சுக்கு புதிய செயலாளர் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நியமிக்கப்படும்வரை தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், அமைச்சொன்றிற்கான செயலாளர் அத்தகைய அமைச்சின் உளதாம் தன்மையை இல்லாதொழிப்பதில் முடிவடைகின்ற 44ஆம் அல்லது 45ஆம் உறுப்புரையின் கீழ் சனாதிபதியினாலான தீர்மானமொன்றின் மேல் பதவியை வகிப்பதிலிருந்து இல்லாதொழிதல் வேண்டும்.

(4) இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காக, சனாதிபதியின் செயலாளரின் அலுவலகம், அமைச்சரவை செயலாளரின் அலுவலகம், கணக்காய்வாளர் - தலைமையதிபதியின் அலுவலகம், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஒம்புட்சுமான்) அலுவலகம், பாராளுமன்றசெயலாளர் நாயகத்தின் அலுவலகம், அரசியலமைப்புப் பேரவை, அத்துடன் 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள் என்பன அரசாங்க திணைக்களங்கள் அல்லாதவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

53. இந்த அத்தியாயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும் ஆளொருவர், அத்தகைய ஆள் நான்காம் அட்டவணையிலும் ஏழாம் அட்டவணையிலும் தரப்பட்டுள்ள சத்தியங்களைச் செய்து கீழொப்பமிடும்வரை அல்லது உறுதியுரைகளை மொழிந்து கீழொப்பமிடும் வரை அவரது பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளுதலாகாது.".

4. அரசியலமைப்பின் 54ஆம் உறுப்புரையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:-

(1) அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(1) (இவ்வத்தியாயத்தின் "ஆணைக்குழு" எனக்குறிப்பீடு செய்யப்படும்) பகிரங்கசேவை ஆணைக்குழு ஒன்றிருத்தல் வேண்டும். அது அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய உறுப்பினர்களுள் மூன்று உறுப்பினர்களுக்கு குறையாதோர் பகிரங்க அலுவலராகப் பதினைந்தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும். சனாதிபதி அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது உறுப்பினர் ஒருவரை அதன் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.";

(2) அவ்வுறுப்புரையின் (4)ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(4) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொரு வரும் அவர் (2)ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் தகைமையீனத்துக்கு உட்பட்டவராக வந்தாலொழிய அல்லது சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் எழுத்தின் மூலம் முன்னரே தமது பதவியை துறந்தாலொழிய அல்லது அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாலொழிய அல்லது 81ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அவர் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டாலொழிய அல்லது (6)ஆம் பந்தியின் கீழ் தமது பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்பட்டாலொழிய, அவரது நியமன தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்."; அத்துடன்

(3) அவ்வுறுப்புரையில் (7)ஆம் பந்தியில் "ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இருப்பதற்கு உறுப்புரை 41அ என்பதன் ஏற்பாடுகளுக்கமைய,"; என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராகவிருப்பதற்கு அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.".

5. அரசியலமைப்பின் 61உ என்னும் உறுப்புரையில் அவ்வறுப்புரையில் *(ஆ)* என்னும் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

6. அரசியலமைப்பின் உறுப்புரை 61ஊ இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்கு பதிலாக பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது:-

61ஊ. இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக, "பகிரங்க அலுவலர்" என்பது, தரைப்படை, கடற்படை அல்லது வான்படை உறுப்பினரொருவரை, தேர்தல் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அத்தகைய ஆணைக்குழுவின் அலுவலரொருவரை, தேசிய பொலிசு ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பொலிசு அலுவலரொருவரை, நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலரொருவரை அல்லது கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் இலங்கை கணக்காய்வு சேவையிலிருக்கும் உறுப்பினரொருவரை உள்ளடக்காது.".

7. அரசியலமைப்பின் 65ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில், "உறுப்புரை 41அ என்பதன் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(6) செயலாளர் நாயகம் அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு, இயலாதவராகவுள்ள பொழுதிலெல்லாம், செயலாளர் நாயகத்தின் இடத்தில் பதிற் கடமையாற்றுவதற்கென ஆளொருவரை, அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய சனாதிபதி நியமிக்கலாம்.".

8. அரசியலமைப்பின் 91ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பந்தியின் விடயம் (iv)இல், "41அ என்னும் உறுப்புரைக்கான அட்டவணை I இல் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்ட வணையில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்;

(2) அவ்வுட்பந்தியின் (vஅ) என்பதை உடனடுத்துப் பின்னர் பின்வரும் விடயத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(vஆ) எவரேனும் பாராளுமன்ற உறுப்பினர் தவிர்ந்த 41அ ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியின் குறிப்பீடு செய்யப்படும் அரசியலமைப்புப் பேரவையின் ஓர் உறுப்பினராகவிருந்தால்"; அத்துடன்

(3) அவ்வுட்பந்தியின் விடயம் (xii) என்பதை உடனடுத்துப் பின்னர் பின்வரும் விடயத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(xiii) வேறு ஏதேனும் நாட்டின் பிரசையொருவராகவுள்ளவரான இலங்கைப் பிரசையொருவர்;".

9. அரசியலமைப்பின் 95ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியில், "இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் 41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமையவும்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "இவ்வுறுப்புரையில் (1)ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீதும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

10. அரசியலமைப்பின் 103ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (7)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசிய லமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது" என்னும் சொற்களை இடுவதன மூலமும்;

11. அரசியலமைப்பின் 104ஆ என்னும் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (5)ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"*(அ)* ஆணைக்குழுவானது, ஒரு சுதந்திர மானதும் நீதியானதுமான தேர்தலை உறுதிப்படுத்த அவசியமானதென ஆணைக்குழு கருதக்கூடியவாறு விடயத்துக்கேற்ப, ஏதேனும் ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு தொழிற்படுத்துநர் அல்லது ஒரு செய்தித்தாளொன்றின் எவரேனும் உரிமையாளருக்கு அல்லது வெளியீட்டாளருக்கு ஏதேனும் தேர்தலை நடாத்துதல் அல்லது ஏதேனும் மக்கள் தீர்ப்பை நடாத்துதல் தொடர்பில் ஆணைக்குழு பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வழிகாட்டிநெறிகளைக் காலத்துக்காலம் வழங்கத்தத்துவம் கொண்டதாதல் வேண்டும்.".

12. அரசியலமைப்பின் 107ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

13. அரசியலமைப்பின் 109ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

14. அரசியலமைப்பின் 111ஈ என்னும் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில், "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியில், "முதனிலை நீதிமன்றமொன்றின்" என்னும் சொற்கள் அப்பந்தியில் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம், "நீதிவான் அல்லது மாவட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

15. அரசியலமைப்பின் 111உ என்னும் உறுப்புரையில், அவ்வுறுப்புரையில் (5)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

16. அரசியலமைப்பின் 111க என்னும் உறுப்புரையானது, அதன் *(அ)* என்னும் பந்தியில், "நீதித்துறை அலுவலர்" எனும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், "மேன்முறையீட்டு நீதிமன்ற அல்லது மேல் நீதிமன்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மேன்முறையிட்டு நீதிமன்ற" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

17. அரசியலமைப்பின் 121ஆம் உறுப்புரையில், அவ்வுறுப்புரையில் (1)ஆம் பந்தியில் "ஒரு வாரத்துக்குள்ளாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதின்நான்கு நாட்களுக்குள்ளாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

18. அரசியலமைப்பின் 153ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (4)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

19. பின்வரும் உறுப்புரைகள் 153ஆம் உறுப்புரையை உடனடுத்து உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அவை அரசியலமைப்பின் உறுப்புரை 153அ, 153ஆ, 153இ, 153ஈ, 153உ, 153ஊ, 153எ மற்றும் 153ஏ எனப் பயனுறுதலும் வேண்டும்:-

153அ.(1) (இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக்குறிப்பீடு செய்யப்படும்) கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும். அது ஆணைக்குழுவின் தவிசாளரான கணக்காய்வாளர் தலைமையதிபதியையும் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பிரதி கணக்காய்வாளர் தலைமையதிபதியாக அல்லது அதற்குமேற்பட்ட பதவி வகித்த கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் ஓய்வுபெற்ற இரண்டு அலுவலர்கள்;

(ஆ) உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது இலங்கை மேல் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியொருவர்; அத்துடன்

(இ) இலங்கை நிருவாக சேவையின் ஓய்வுபெற்ற வகுப்பு I அலுவலர்.

(2) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் ஆளொருவர்-

(அ) சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம் அவரது பதவியை முன்னரே துறந்தாலேலொழியவும்;

(ஆ) இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப் பட்டவாறான பதவியிலிருந்து அகற்றப் பட்டாலொழிய; அல்லது

(இ) பாராளுமன்றத்தின் அல்லது மாகாண சபையொன்றின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராகவந்தாலொழிய.

மூன்று ஆண்டுகள் பதவிவகித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் ஆளொருவர் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது மேலதிக காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுவதற்கு தகைமையுடையவராதல் வேண்டும்.

(4) சனாதிபதி குறித்தளிக்கப்படும் காரணத்துக்காகவும் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடனும் (1)ஆம் பந்தியின் கீழ் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் எவரேனும் ஆளை பதவியிலிருந்து அகற்றலாம்.

(5) ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் மற்றும் உறுப்பினர்களுக்கும் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய படிகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் தவிசாளரின் அல்லது உறுப்பினர்களின் பதவிக்காலத்தின் போது குறைக்கப்படுதலுமாகாது.

(6) ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் அத்தியாயம் IX இன் கருத்தெல்லைக்குள்ளும் நோக்கங்களுக்காகவும் பகிரங்கச் சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) ஆணைக்குழுவுக்கு செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

153ஆ.(1) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) பாராளுமன்றம் (1)ஆம் பந்திக்கு அமைவாக, ஆணைக்குழுவின் கூட்டங்கள், இலங்கை அரச கணக்காய்வு சேவை தாபிக்கப்படுதல் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட அதற்கு இடைநேர்விளைவான வேறு கருமங்கள் என்பவற்றுக்காக சட்டத்தினால் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

153இ.(1) இலங்கை அரச கணக்காய்வுச் சேவையைச் சார்ந்த உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக்கட்டுப்பாடு மற்றும் உறுப்பினர்களின் பதவிநீக்கம் என்னும் தத்துவங்கள் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழு பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்:-

(அ) அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் கொள்கைக்கு அமைவாக, இலங்கை அரச கணக்காய்வுச் சேவையைச் சார்ந்த உறுப்பினர்களின் ஆட்சேர்ப்பு, நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் பற்றிய திட்டங்கள் தொடர்பில் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் கொள்கைக்கு அமைவாக அவை தொடர்பில் விதிகளை ஆக்குதல்;

(ஆ) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஆண்டுக்கான மதிப்பீடுகளை தயாரித்தல்; அத்துடன்

(இ) சட்டத்தினால் ஏற்பாடு செய்யக்கூடியவாறான அத்தகைய வேறு தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல்.

(3) ஆணைக்குழு (2)ஆம் பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(4) அத்தகைய ஒவ்வொரு விதியும் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(5) அத்தகைய ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் அத்தகைய வெளியீட்டிலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் விதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் இதற்குமுன் அதன் கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

153ஈ. (1) ஆணைக்குழுவின், அதன் எவரேனும் உறுப்பினரின் அல்லது இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் எவரேனும் அலுவலரின் ஏதேனும் முடிபில், அவரது கடமையின்போது தவிர, நேரடியாக அல்லது மறைமுகமாக, தானாக அல்லது எவரேனும் வேறு ஆளினூடாக, எத்தன்மைத்தான ஏதேனும் முறையில் செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றம் ஒவ்வொன்றும் (1)ஆம் பந்தியில் குறிப்பீடு செயயப்பட்ட ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

153உ. நூற்று இருபத்தாறாம் உறுப்புரையின் கீழ் உயர்நீதிமன்றத்தின் மீது அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்துக்கமையவும் மற்றும் 153எ என்னும் உறுப்புரையின் கீழ் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமையவும், இவ்வத்தியாயத்தின் கீழ் அல்லது ஏதேனும் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் பணிகளைப் புரிவதன் பயனாக ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை விசாரணை செய்வதற்கான, வெளிப்படுத்துவதற்கான அல்லது கேள்விக்குட்படுத்துவதற்கான எத்தகையதுமான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தை எந்த நீதிமன்றமோ நியாயசபையோ கொண்டிருத்தலாகாது.

153ஊ.ஆணைக்குழுவின் செலவுகளும் செலவினங்களும் திரட்டுநிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

153எ. இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் எவரேனும் அலுவலரின் நியமனம், பதவியுயர்வு அல்லது இடமாற்றம் தொடர்பிலான ஏதேனும் கட்டளையினால் அல்லது அத்தகைய அலுவலர் தொடர்பில் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட ஒழுக்காற்று கருமம் அல்லது பதவிநீக்கம் ஒன்றின் மீதான ஏதேனும் கட்டளையினால் இன்னலுற்ற அத்தகைய அலுவலர் 59ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், அது ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை மாற்றுவதற்கான, வேறுபடுத்துவதற்கான, இல்லாதாக்குவதற்கான அல்லது உறுதிப்படுத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

153ஏ. ஆணைக்குழு அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கிணங்க

பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாதலும் வகை சொல்ல வேண்டியதாலும் கூறற்பாலதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆண்டில் அதன் செயற்பாடுகளின் அறிக்கையொன்றை ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தலும் வேண்டும்.".

20. அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையில் அவ்வுறுப் புரையில் (1)ஆம் பந்தியில் "பாராளுமன்றப் பேரவை, 41அ என்னும் உறுப்புரைக்கான அட்டவணை Iஇல் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவை, 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்படும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

21. அரசியலமைப்பின் 154ண ஆம் உறுப்புரையில் அவ்வறுப்புரையில் (1)ஆம் பந்தியில் *(இ)* எனும் உட்பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

22. அரசியலமைப்பின் 155அ என்னும் உறுப்புரையில், அவ்வுறுப்புரையில் (1)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

23. அரசியலமைப்பின் 155ஆ என்னும் உறுப்புரை அவ்வுறுப்புரையின் (4)ஆம் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(5) பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி, அவர் தொடர்பில் கவனத்திற்கெடுக்கப்படும் ஏதேனும் விடயம் தவிர்ந்து, ஆணைக்குழுவின் கூட்டங்களில் சமுகமாயிருப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரிமையை அவர் கொண்டிருத்தலாகாது.".

24. அரசியலமைப்பின் 155இ என்னும் உறுப்புரையில், "நூற்றுயிருபத்தாறாம் உறுப்புரையின் (1)ஆம் பந்தியின்கீழ் உயர்நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்திற்கு அமைய"" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ""நூற்றியிருபத்தாறாம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் உயர்நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்திற்கும் மற்றும் 155ஔ என்னும் உறுப்புரையின்கீழ் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங் களுக்கும் அமைய"" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

25. அரசியலமைப்பின் 155ஊஊஊ ஆம் உறுப்புரையை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உறுப்புரைகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை முறையே அரசியலமைப்பின் 155எ, 155ஏ, 155ஒ, 155ஓ மற்றும் 155ஔ ஆம் உறுப்புரைகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

155எ. (1) *(அ)* பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி தவிர்ந்த வேறு பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் என்பன ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். ஆணைக்குழு பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் தொடர்பில் அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

(ஆ) ஆணைக்குழுவானது இவ்வுறுப்புரையின் கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மாகாண பொலிசு சேவை ஆணைக்குழுக்கள் தாபிக்கப்பட்டால் அல்லது தாபிக்கப்படும்போது, அத்தகைய ஆணைக்குழுக்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் மதிப்புக் குறைத்தல் ஆகாது.

(2) ஆணைக்குழுவானது, பொலிசு அலுவலர் ஒருவருக்கு அல்லது பொலிசு சேவைக்கு எதிராகச் செய்யப்படும் பொதுமக்களின் முறைப்பாடுகளையும் எவரேனும் இன்னலுற்ற ஆளின் முறைப்பாடுகளையும் ஏற்றுக் கவனிப்பதற்கும், புலனாய்வு செய்வதற்குமான நடவடிக்கை முறைகளைத் தாபித்தல் வேண்டுமென்பதுடன், சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறான நிவாரணத்தை ஏற்பாடுசெய்தலும் வேண்டும். ஆணைக்குழு நிவாரணத்தை வழங்கும்பட்சத்தில், ஆணைக்குழுவானது பொலிசு பரிசோதகர் தலைமையதிபதிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, பொலிசு அலுவலர்கள் தொடர்பில் பின்வருவன உள்ளிட்ட எல்லாக் கருமங்களையும் பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் ஏற்பாடு செய்தலும் தீர்மானித்தலும் வேண்டும்:-

(அ) ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் இடமாற்றங்கள் தொடர்பிலான அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட கொள்கைக்கு அமைவாக அவற்றுக்கான திட்டங்களை வகுத்தமைத்தல்;

(ஆ) பயிற்சியளித்தல் மற்றும் பொலிசு சேவையின் வினைத்திறனையும் மற்றும் சுதந்திரத்தையும் மேம்படுத்தல்;

(இ) தேசிய பிரிவினதும் மாகாண பிரிவுகளினதும் பயன்பாட்டுக்கு அவசியமான ஆயுதங்கள், வெடிமருந்துகள், மற்றும் வேறு உபகரணங்கள் ஆகியவற்றின் தன்மையும் வகையும்; அத்துடன்

(ஈ) நடத்தை பற்றிய கோவைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைமுறைகள்.

(4) ஆணைக்குழு அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையில் உள்ளடக்கியுள்ள நிரல் Iஇன் பின்னிணைப்பு Iஇன் கீழ் அதற்குரித்தாக்கப்பட்டதான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தலும் அத்தகைய எல்லாக் கடமைகளையும் பணிகளையும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

155ஏ. (1) ஆணைக்குழுவானது, அதனால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வகுதிகளைச் சேர்ந்த பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கத் தத்துவங்களை ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டியதான (ஆணைக்குழுவின் உறுப்பினர்களைக் கொண்டிராத) ஆணைக்குழுவின் குழுவொன்றுக்கு கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழு ஏதேனும் அத்தகைய குழுவின் நியமனத்தை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியின் கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட குழுவொன்றின் கூட்டங்களுக்கான நடபடிமுறை மற்றும் கூட்ட நடப்பெண் என்பன ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க இருத்தல் வேண்டும். ஆணைக்குழு அத்தகைய விதிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

155ஒ. (1) ஆணைக்குழு, ஏதேனும் வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு மற்றும் பதவிநீக்கத் தத்துவங்களை ஆணைக்குழுவால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் நடைமுறைகளுக்கும் அமைய, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் எவரேனும் பொலிசு அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழு ஏதேனும் அத்தகைய கையளிப்பை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

155ஓ. (1) ஆணைக்குழு, ஏதேனும் வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் தொடர்பிலான அதன் தத்துவங்களை எவரேனும் பொலிசு அலுவலருக்கு 155ஒ ஆம் உறுப்புரையின்கீழ் கையளித்துள்ளவிடத்து, பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி, அவருக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களை பிரயோகிக்கையில் அத்தகைய பொலிசு அலுவலரால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கெதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பொலிசு அலுவலர் ஒருவர் தொடர்பில் 155ஏ மற்றும் 155ஒ ஆம் உறுப்புரைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட குழுவொன்றினால் அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அல்லது பொலிசு அலுவலரால் செய்யப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம் தொடர்பான ஏதேனும் கட்டளையால் அல்லது ஒழுக்காற்று விடயம் அல்லது பதவிநீக்கம் மீதான ஏதேனும் கட்டளையால் இன்னலுற்ற பொலிசு அலுவலர் ஒருவர், ஆணைக்குழுவினால் மேன்முறையீடொன்றைச் செய்வதற்கும் கேட்கப்படுவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கைமுறையையும் நேரகாலப்பகுதியையும் ஒழுங்குபடுத்தி காலத்துக்குக் காலம் ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க, அத்தகைய கட்டளைக்கெதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(3) ஆணைக்குழுவானது, (1)ஆம் பந்தியின் கீழ் அல்லது (2)ஆம் பந்தியின் கீழ் செய்யப்பட்ட மேன்முறையீட்டின் மீது அத்தகைய கட்டளையை மாற்றுவதற்கான, வேறுபடுத்துவதற்கான, இல்லாதாக்குவதற்கான அல்லது உறுதிப்படுத்துவதற்கான அல்லது அது தொடர்பில் பணிப்புக்களை வழங்குவதற்கான அல்லது அது பொருத்தமானதென அதற்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய மேலதிக அல்லது வேறு விசாரணைக்கு கட்டளையிடுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியின் கீழ் காலத்துக்குக்காலம் அதனால் ஆக்கப்படும் விதிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(5) உறுப்புரை 155ஏ மற்றும் 155ஒ என்பவற்றின் கீழ் குழுவொன்றுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது பொலிசு அலுவலர் ஒருவருக்கு செய்யப்படும் அதன் தத்துவங்களின் ஏதேனும் கையளிப்பின் மீது, ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்களின் அத்தகைய கையளிப்பு வலுவில் இருக்கையில், இதனகத்துமுன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட மேன்முறையீட்டு உரிமைக்கமைவாக, எந்த வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்கள் தொடர்பில் அத்தகைய கையளிப்பு செய்யப்படுகின்றதோ அந்த வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்கள் தொடர்பில் அதன் தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளை பிரயோகித்தலோ நிறைவேற்றுதலோ அல்லது புரிதலோ ஆகாது.

155ஔ.எவரேனும் பொலிசு அலுவலர் தொடர்பில், உறுப்புரை 155ஒ என்னும் நியதிகளின்படி ஆணைக்குழுவால் செய்யப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம் அல்லது ஒழுக்காற்று விடயம் மீதான ஏதேனும் கட்டளை அல்லது பதவிநீக்கம் என்பன தொடர்பான ஏதேனும் கட்டளையால் இன்னலுற்ற எவரேனும் பொலிசு அலுவலர் 59ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு மேன்முறையீடு செய்யலாம். நியாய சபை, அந்நிருவாக மேன்முறையீட்டு ஆணைக்குழுவால் செய்யப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை மாற்றுவதற்கு, வேறுபடுத்துவதற்கு, இல்லாதாக்குவதற்கு அல்லது உறுதிப்படுத்துவதற்கு தத்துவத்தைக் கொண்டுள்ளது.".

26. அரசியலமைப்பின் 155க என்னும் உறுப்புரையானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது:-

155க. ஆணைக்குழுவானது வேறு விதமாக ஏற்பாடு செய்யும்வரை, பொலிசுப்படை தொடர்பில் இவ்வுறுப்புரை நடைமுறைக்குவரும் தேதியன்று வலுவிலுள்ளவாறான எல்லா விதிகளும் ஒழுங்குவிதிகளும் மற்றும் நடவடிக்கைமுறைகளும் தொடர்ந்து செயற்பாடுடையதாதலும் வலுவிலிருத்தலும் வேண்டும்.".

27. அரசியலமைப்பின் 156ஆம் உறுப்புரையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (5)ஆம் பந்தியில், "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தக்கமைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

28. பின்வரும் புதிய அத்தியாயங்கள் அரசியலமைப்பில் அத்தியாயம் XIX இனை உடனடுத்துப்பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முறையே அரசியலமைப்பின் XIXஅ மற்றும் XIXஆ என்னும் அத்தியாயங்களாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"அத்தியாயம் XIXஅ

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

156அ. (1) பாராளுமன்றம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்காக ஆணைக்குழுவொன்றினைத் தாபிப்பதற்கு சட்டத்தினால் ஏற்பாடு செய்தல் வேண்டும். அத்தகைய சட்டம் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்:-

(அ) அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கும்;

(ஆ) அதனது சொந்தப்பிரேரணை மீதோ அல்லது அதற்குச் செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றின் மீதோ இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களின் ஆரம்ப விசாரணை ஒன்றை நடாத்துதல் அல்லது புலன் விசாரணை செய்தலை பணிக்கின்ற தத்துவம் மற்றும் இலஞ்ச அல்லது ஊழல் தொடர்பிலான நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் தவறுகளுக்கான குற்றவழக்கு தொடருவதற்கான தத்துவம் உட்பட ஆணைக்குழுவின் தத்துவங்களுக்கும்; அத்துடன்

(இ) ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம் மற்றும் இலங்கை திறத்தவராகவுள்ள ஊழலைத் தடுப்பது தொடர்பிலான வேறு ஏதேனும் சர்வதேச சமவாயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளிற்கும்.

(2) பாராளுமன்றம் அவ்வாறு ஏற்பாடு செய்யும்வரை 1994ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம், ஆணைக்குழு அதனது சொந்தப் பிரேரணை மீதோ அல்லது அதற்குச் செய்யப்பட்ட எழுத்திலான முறைப்பாடு ஒன்றின் மீதோ இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல் ஒன்றை விசாரிப்பதற்கு அல்லது புலனாய்வு செய்வதற்கு அச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவிற்கு அது சட்டமுறையானதாக இருத்தல் வேண்டும் என்ற திரிபுகளுக்கு அமைய ஏற்புடையதாதல் வேண்டும்.

அத்தியாயம் XIXஆ

தேசிய பெறுகை ஆணைக்குழு

156ஆ. (1) (இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தேசிய பெறுகை ஆணைக்குழு ஒன்று இருத்தல் வேண்டும். அது பெறுகை, கணக்கியல், சட்டம் அல்லது பொது நிருவாகம் ஆகிய துறைகளில் எண்பிக்கப்பட்ட அனுபவத்தையுடைய ஆட்களிடையேயிருந்து ஆகக்குறைந்தது மூன்று உறுப்பினர்களைக் கொண்ட அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது, சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும். சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது உறுப்பினர் ஒருவரை ஆணைக்குழுவின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான கடிதத்தின் மூலம் பதவியை முன்னரே துறந்தாலன்றி அல்லது அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் குறித்தளிக்கப்பட்ட காரணத்துக்காக சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலன்றி அல்லது ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கும் தவறொன்றிற்கு சட்ட நீதிமன்றம் ஒன்றினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலன்றி அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாணசபை ஒன்றின் அல்லது உள்ளூராதிகாரசபை ஒன்றின் உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலன்றி அல்லது அவர் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று 81ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றிற்கு பதவிவகித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பாராளுமன்றத்தின் தீர்மானம் ஒன்றின் மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய படிகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தவிசாளர் அல்லது உறுப்பினர் ஆகியோரின் பதவிக்காலத்தின் போது குறைக்கப்படுதலுமாகாது.

156இ. (1) எல்லா அரசாங்க நிறுவனங்களினாலும் பண்டங்கள் மற்றும் சேவைகள், வேலைகள், ஆலோசனைச் சேவைகள் மற்றும் தகவல் முறைமைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான நியாயமான, ஒப்புரவான, வெளிப்படையான, போட்டியான மற்றும் செலவுத்திறனான நடவடிக்கை முறைகளையும் வழிகாட்டிநெறிகளையும் வகுத்தமைத்தலும், அவ்வழிகாட்டிநெறிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்தலும் மற்றும் அத்தகைய வெளியீட்டிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் இடச்செய்வித்தலும் ஆணைக்குழுவின் பணியாதல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியில் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வருவனவற்றைச் செய்தல் ஆணைக்குழுவின் பணிகளாதல் வேண்டும்:-

(அ) அரசாங்க நிறுவனங்களினது பண்டங்கள் மற்றும் சேவைகளின், வேலைகளின், ஆலோசனை சேவைகளின் மற்றும் தகவல் முறைமைகளின் எல்லா பெறுகைகளும் முன்னரே அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்ட பெறுகை திட்டங்களின் அடிப்படையானதா என்பது பற்றி, கண்காணித்தலும் தோதான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்;

(ஆ) அரசாங்க நிறுவனங்களிற்கு பண்டங்கள் மற்றும் சேவைகளை, வேலைகளை, ஆலோசனைச் சேவைகளை மற்றும் தகவல் முறைமைகளை வழங்குவதற்கான தகைமை பெற்ற விலைகூறுபவர்கள் யாவருக்கும் அப்பண்டங்கள் மற்றும் சேவைகளையும், வேலைகளையும், ஆலோசனை சேவைகளையும் மற்றும் தகவல் முறைமைகளையும் வழங்குவதற்காக விலைகூறும் செயற்பாட்டில் பங்குபற்றுவதற்கான சமமான சந்தர்ப்பம் ஒன்று அளிக்கப்படுகின்றதா என்பது பற்றி கண்காணித்தலும், தோதான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்;

(இ) அரசாங்க நிறுவனங்களிற்கான பண்டங்கள் மற்றும் சேவைகளை, வேலைகளை, ஆலோசனைச் சேவைகளை மற்றும் தகவல் முறைமைகளை வழங்குவதற்கான ஒப்பந்த காரர்களைத் தெரிவு செய்வதற்கும், ஒப்பந்தங்கள் வழங்குவதற்குமான நடவடிக்கை முறைகள் நியாயமானதும் வெளிப்படையானவையாகவும் இருக்கின்றனவா என்பது பற்றி கண்காணித்தலும் தோதான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்;

(ஈ) அரசாங்க நிறுவனங்களினால் நியமிக்கப்படும் பெறுகைகள் தொடர்பாக பெறுகைக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் ஆகியனவற்றின் உறுப்பினர்கள், பொருத்தமான தகைமையுடையவராக இருக்கின்றார்களா என அறிக்கையிடுதலும்; அத்துடன்

(உ) தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கும் வழிகாட்டிநெறிகளுக்கும் புறம்பே அரசாங்க நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட பெறுகைகள் பற்றிய அறிக்கைகளைப் புலனாய்வு செய்தலும், அத்துடன் அத்தகைய பெறுகைகளிற்கு பொறுப்பான அலுவலர்களை அவசியமான நடவடிக்கைக்காக இயைபான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்.

156ஈ. (1) ஆணைக்குழு எழுத்திலான அறிவித்தல் மூலம் பின்வருவனவற்றைச் செய்ய எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்:-

(அ) ஆணைக்குழுவினால் கேள்விக்குட்படுத்தப்படுவதற்காக ஆணைக்குழுவின் முன்னர் சமுகமளிப்பதற்கு;

(ஆ) அவ்வாளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளதும், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை ஆணைக்குழுவுக்கு காண்பிப்பதற்கு;

(2) *(அ)* ஓராம் பந்தியின் கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றினால் அவ்வாறு செய்வதற்கு தேவைப்படும்போது, ஆணைக்குழுவின் முன்னர் தோன்றுவதற்கு நியாயமான காரணமின்றித் தவறுகின்ற;

(ஆ) அத்தகைய அறிவித்தலுடன் இணங்கியொழுகுவதில் ஆணைக்குழுவுக்கு முன்னர் தோன்றி, ஆனால் ஆணைக்குழுவால் அவரிடம் கேட்கப்பட்ட எவையேனும் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு நியாயமான காரணமின்றி மறுக்கின்ற; அல்லது

(இ) ஓராம் பந்தியின் கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றில் காண்பிக்கப்படுதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளைக் காண்பிப்பதற்கு நியாயமான காரணமின்றி தவறுகின்ற அல்லது மறுக்கின்ற;

ஒவ்வோராளும் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154ஞ ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் ஒவ்வொன்றும் (2)ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும், தீர்மானிப்பதற்கும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

156உ.(1) ஆணைக்குழுவானது அதன் பணிகளை புரிதலுக்காக அவசியமாக இருக்கக்கூடியவாறாக அடிக்கடி கூடுதல் வேண்டும்.

(2) தவிசாளர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் சமுகமளிக்கத் தவறின், சமுகமாயுள்ள உறுப்பினர்கள் அவர்களுக்கிடையேயிருந்து அக்கூட்டத்துக்கான தவிசாளர் ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் மூன்றாதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் முடிபுகள், முடிவு எடுக்கப்படும் கூட்டத்தில் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், வாக்குகள் சமமாக இருக்கும்பட்சத்தில், தவிசாளர் அல்லது கூட்டத்துக்குத் தலைமைதாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைவாக, ஆணைக்குழு அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கைமுறையையும் மற்றும் அத்தகைய கூட்டங்களின் அலுவல்களின் விடயங்களையும் தீர்மானிக்கலாம்.

(6) ஆணைக்குழு, அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடமொன்றுள்ளது எது எவ்வாறிருப்பினும், செயலாற்றுவதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவின் செயல், நடவடிக்கை அல்லது முடிபு எதுவும், அத்தகைய வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினரொருவரின் நியமனத்தில் குறைபாடு உள்ளது என்ற காரணத்தால் மட்டும் செல்லுபடியற்றதாகக் அல்லது செல்லுபடியற்ற தாக்கப்படுவதாகக் கருதப்படுதலாகாது.

156ஊ.(1) ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீது, அதன் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு அவசியமானதென கருதப்படக்கூடியவாறாக, செயலாளர்நாயகம் மற்றும் அத்தகைய வேறு அலுவலர்களையும் ஆணைக்குழு நியமித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் கீழ் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது அலுவலர் கடமைகளை நிறைவேற்றுவதில் அல்லது அவருடைய பணிகளைப்புரிவதில் அவரால் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக கருதப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரியத்துக்காக ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு எதிராக வழக்குதுடர்ச்சியெதுவும், வழக்கெதுவும் அல்லது வேறு நடவடிக்கைமுறையெதுவும் தொடுக்கப்படுதல் ஆகாது.

156எ. (1) ஆணைக்குழுவின் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

156ஏ. இவ்வத்தியாத்தில் "அரசாங்க நிறுவனம்" என்பது சனாதிபதிக்கான செயலாளர் அலுவலகம், பிரதம அமைச்சரின் செயலாளர் அலுவலகம், அமைச்சரவைச் செயலாளரின் அலுவலகம், 44ஆம் அல்லது 45ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் அலுவலகங்கள், நீதித்துறைச் சேவை ஆணைக்குழு, அரசியலமைப்புப் பேரவை, 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆணைக்குழுக்கள், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், அமைச்சுகள், அரசாங்க திணைக்களங்கள், மாகாண சபை, உள்ளூரதிகார சபை, பகிரங்க கூட்டுத்தாபனங்கள், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட தொழில் அல்லது வேறு தொழில்முயற்சி மற்றும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்பட்ட எந்தக் கம்பெனியில் அரசாங்கம், ஒரு பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூரதிகாரசபை ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கின்றதோ அந்தக் கம்பெனி ஒன்று என்பனவற்றை உள்ளடக்குகின்றது.".

29. அரசியலமைப்பின் 170ஆம் உறுப்புரையில், "பகிரங்க அலுவலர்" என்னும் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"பகிரங்க அலுவலர்" என்பது நீதித்துறை அலுவலர் தவிர்ந்த, ஆனால் பின்வருவோரை உள்ளடக்காத, குடியரசின் கீழ் சம்பளத்துக்காக ஏதேனும் பதவி வகிக்கின்ற ஆளொருவர் என்று பொருள்படும்-

(அ) சனாதிபதி;

(ஆ) பிரதம அமைச்சர்;

(இ) சபாநாயகர்;

(ஈ) உறுப்புரை 44 அல்லது 45இன் கீழ் நியமிக்கப்பட்ட ஓர் அமைச்சர்;

(உ) உறுப்புரை 46இன் கீழ் நியமிக்கப்பட்ட பிரதி அமைச்சர்;

(ஊ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்;

(எ) அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர் ஒருவர்;

(ஏ) நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(ஐ) உறுப்புரை 41ஆ வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது உறுப்பினர் ஒருவர்;

(ஒ) பாராளுமன்ற செயலாளர் நாயகம்;

(ஓ) பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்தொகுதியின் உறுப்பினர் ஒருவர்;

(ஔ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(க) அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(ங) கணக்காய்வாளர் தலைமையதிபதி; அத்துடன்

(ச) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்.".

30. (1) *(அ)* இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முற்போந்த நாளன்று நிலையாகவுள்ள ஒன்பதாவது பாராளுமன்றம் முன்னரே கலைக்கப்பட்டலொழிய, 2025ஆம் ஆண்டு ஒகத்து 19ஆம் தேதிவரை தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் கலைக்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முற்போந்த நாளன்று சனாதிபதியாகவும் பிரதம அமைச்சராகவும் முறையே பதவி வகிக்கின்ற ஆட்கள் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய தேதிக்குப் பின்னர் பதவியைத் தொடர்ந்தும் வகித்தல் வேண்டும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற பின்வரும் ஒவ்வோராளும் அத்தகைய பதவிகளைத் தொடர்ந்தும் வகித்தல் வேண்டும் என்பதுடன் 41இ ஆம் உறுப்புரையின் (3)ஆம் பந்திக்கமைய அதே நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அப்பதவியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்:-

(அ) பிரதம நீதியரசர்;

(ஆ) உயர் நீதிமன்ற நீதிபதிகள்;

(இ) நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்;

(ஈ) மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர்;

(உ) மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள்;

(ஊ) சட்டத்துறைத் தலைமையதிபதி;

(எ) இலங்கை மத்திய வங்கி ஆளுநர்;

(ஏ) கணக்காய்வாளர் தலைமையதிபதி;

(ஐ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி;

(ஒ) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமான்);

(ஓ) பாராளுமன்றச் செயலாளர் நாயகம்;

(ஔ) மேல் நீதிமன்ற நீதிபதிகள்; அல்லது

(க) நீதிமுறை அலுவலர்கள், அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்கள், பகிரங்க அலுவலர்கள் அல்லது பொலிசு அலுவலர்கள்,

(3) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முற்போந்த நாளன்று பாராளுமன்ற பேரவையின் உறுப்பினர் ஒருவராக பதவிவகிக்கின்ற ஒவ்வொரு ஆளும், இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து பயன்பட பாராளுமன்ற பேரவையின் உறுப்பினர் ஒருவராக பதவியை வகிக்காதொழித்தல் வேண்டும்.

(4) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முற்போந்த நாளன்று பின்வருவனவற்றின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக பதவிவகிக்கின்ற ஒவ்வோராளும் இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து பயன்பட அத்தகைய பதவியை வகிக்காதொழித்தல் வேண்டும்,-

(அ) தேர்தல் ஆணைக்குழு;

(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழு;

(இ) தேசிய பொலிசு ஆணைக்குழு;

(ஈ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு;

(உ) இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பிலான சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு;

(ஊ) நிதி ஆணைக் குழு; அத்துடன்

(எ) எல்லை நிர்ணய ஆணைக்குழு:

ஆயின் எவ்வாறாயினும், இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முற்போந்த தேதியன்று, மேல்குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது ஓர் உறுப்பினராக பதவிவகிக்கின்ற ஆளொருவர், அரசியலமைப்பின் VIIஅ என்னும் அத்தியாயத்துக்கிணங்க முறையேயான ஆணைக்குழுக்கள் அமைத்துருவாக்கப்படும் அத்தகைய தேதிவரை முறையேயான அவர்களது பதவிகளுக்கான தத்துவங்களையும் பணிகளையும் தொடர்ந்து பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

(5) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முந்தைய நாளன்று பகிரங்க சேவை ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதுள்ள

(அ) பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் தொடர்பிலான எல்லாக் கருமங்களும்; அத்துடன்

(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு பொலிசு அலுவலர்களினால் செய்யப்பட்ட எல்லா மேன்முறையீடுகள் தொடர்பிலான எல்லாக் கருமங்களும்,

அத்தேதியிலிருந்து பயன்பட, 155அ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவுக்கு மாற்றப்படுதல் வேண்டுமென்பதுடன், அவை அதற்கிணங்க தேசிய பொலிசு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(6) இலங்கை அரச கணக்காய்வு சேவையின் உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் தொடர்பிலானதும் மற்றும் இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முற்போந்த நாளன்று பகிரங்க சேவை ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதுள்ளதுமான எல்லாக் கருமங்களும் 153அ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட கணக்காய்வு சேவை ஆணைக்குழுவுக்கு அத்தேதியிலிருந்து பயன்பட மாற்றப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க கணக்காய்வு சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

31. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக,-

(அ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முற்போந்த நாளன்று பாராளுமன்றப் பேரவையின் விதப்புரையை அல்லது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் தேவைப்பாடொன்று உள்ளவிடத்து, பாராளுமன்றப் பேரவைக்கான குறிப்பீடு, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பயனுறுவதாக அரசியலமைப்புப் பேரவைக்கான குறிப்பீடொன்றாக வாசித்துப்பொருள் கொள்ளப்படுதல் வேண்டுமெனவும்; அத்துடன்

(ஆ) அரசியலமைப்பின் 91ஆம் உறுப்புரையின் (1)ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின் (xiii)ஆம் விடயத்தில் குறித்துரைக்கப்படும் தமைமையீனத்திற்கு அமைந்தவராக உள்ளவரான இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முற்போந்த நாளன்று உளதாம் ஒன்பதாம் பாராளுமன்றத்தின் எவரேனும் உறுப்பினர் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து பயனுறுவதாக பாராளுமன்றத்தில் அமர்வதற்கும் வாக்களிப்பதற்கும் தகைமையற்றவராதல் வேண்டும் எனவும், இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

32. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2022ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, நொத்தாரிசு (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம் (107ஆம் அத்தியாயம்)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, நொத்தாரிசு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (107ஆம் அத்தியாயமான) நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின் 3ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

3. (1) சட்டத்தரணியாக அனுமதிக்கப்பட்டதற்குப் பின்னர் சட்டக்கல்விப் பேரவையால் நடாத்தப்படும் உறுதிவரைதல் பரீட்சையில் சித்தியடைந்துள்ள வரும், குறைந்த பட்சம் பத்து வருடங்கள் தொடர்ச்சியான காலப்பகுதி ஒன்றிற்கு நொத்தாரிசு ஒருவராக முனைப்பான தொழிலைப் புரிந்துள்ள சட்டத்தரணியிடமிருந்து, அத்தகைய சட்டத்தரணி, ஒரு வருட காலப்பகுதியொன்றுக்கு நொத்தாரிசு தொழிலைக் கற்றுள்ளார் எனவும், இக்கட்டளைச் சட்டத்தில் அல்லது அதன் கீழ் குறித்துரைக்கப்பட்ட உறுதிவரைதல் செயல்முறைகள், விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிகளுடன் முழுமையாகப் பரீட்சயமுள்ளவர் என்றும் பொருள்படுவதான இதற்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்ட படிவம் ஆ1 இலுள்ள சான்றிதழ் ஒன்றை பெற்றுள்ளவருமான அத்தகைய சட்டத்தரணி ஒவ்வொருவரும், அவருக்கு அதிகாரமளிக்கின்ற எழுத்தாணை ஒன்றிற்கான விண்ணப்பத்தின் மீது தான் வசிக்கும் நீதிநிருவாக வலயத்தினுள் அவர் உறுதிவரைதல் பரீட்சையில் சித்தியடைந்த மொழியில் நொத்தாரிசாக தொழில்புரிவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் எழுத்தாணையொன்று வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு நொத்தாரிசும், ஒரு நொத்தாரிசாகத் தொழில்புரிவதற்குத் தொடங்கு முன்னர், இயைபான காணிப் பதிவகத்தின் பதிவாளருக்குத் தொழில் தொடங்குகின்றமை பற்றிய கடிதமொன்றைக் கையளித்தல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1)ஆம் உட்பிரிவில், (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஆ) நொத்தாரிசு ஒருவராக அவரது கடமைகளை உரியமுறையிலும் விசுவாசமாகவும் நிறைவேற்றுவதற்காக திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்பட வேண்டியதும் பத்தாயிரம் ரூபாவான பணத்தொகையொன்றை வைப்பிலிடுவதன் மூலம் மேல் நீதிமன்றத்தின் முன்னர் முறியொன்றை நிறைவேற்றுதல் வேண்டும்; அத்துடன்";

(2) அதன் (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு முறியும் நொத்தாரிசின் எழுத்தாணையில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பின்மீது நியாயாதிக்கங்கொண்டுள்ள மேல் நீதிமன்ற நீதிபதியின் முன்னிலையில் கையொப்பமிடப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(3) அதன் (3)ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது "அத்தகைய முறியையும் பிணைப்பொறுப்பையும் கொடுத்திராமலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய முறியைக் கொடுத்திராமலும்" என்னும் சொற்களையும், "பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாதவொரு குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபத்தை யாயிரம் ரூபாவுக்குக் குறையாதவொரு குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவில் "பிணைப் பொறுப்பை" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "முறியை" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1) நொத்தாரிசு ஒருவருக்கு மேல் நீதிமன்றமொன்றின் முன்னர் குற்றப்பகர்வு அளிக்கப்பட்டுள்ளவிடத்து, அமைச்சர், சட்டத்துறைத் தலைமையதிபதியின் விண்ணப்பத்தின் மீது, அவரது விளக்கம் முடிவுறும் வரை அவரை நொத்தாரிசுப் பதவியிலிருந்து இடைநிறுத்தலாம்.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவானது "அமைச்சரின் அபிப்பிராயப்படி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இக்கட்டளைச் சட்டத்தின் கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் (1) உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "திறமையின்மை, வயது, என்னும் சொற்களுக்குப் பதிலாக, "திறமையின்மை" என்னும் சொல்லையிடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அதன் (4)ஆம் உட்பிரிவில், "இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவிற்கு குறையாதவொரு குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பத்தாயிரம் ரூபாவிற்கு குறையாதவொரு குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவானது, "பத்தாயிரம் ரூபாவிற்கு குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமானவொரு குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலட்சம் ரூபாவிற்குக் குறையாததும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமொரு குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2)ஆம் உட்பிரிவில், "பிணைப்பொறுப்பு" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "முறி" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(2) அதன் (3)ஆம் உட்பிரிவில், "பிணைப்பொறுப்பை" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "முறியை" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவு, அதன் (2)ஆம் உட்பிரிவில், "மாச்சு" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "ஏப்பிறல்" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28ஆம் பிரிவானது அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1அ)ஒவ்வொரு நொத்தாரிசும் முன்னைய ஆண்டில் அவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உறுதிகள் அல்லது சாதனங்கள் யாவற்றினதும் இணைப்பிரதிகள் காணிப்பதிவாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன எனப் பயன்படும் சத்தியக் கடதாசி ஒன்றை, அத்தகைய நொத்தாரிசு அத்தகைய விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.".

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (3)ஆம் விதிக்குப்பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

(3) அவர் முன்னிலையில் நிறைவேற்றப்பட்ட அல்லது நிறைவேற்றப்படவுள்ள ஏதேனும் உறுதிக்கு அல்லது சாதனத்துக்கு, எவரேனும் உறுதி முடிப்பவரை அல்லது சாட்சியை, விடயத்திற்கேற்ப, அத்தகைய உறுதியில் அல்லது சாதனத்தில் அல்லது ஏதேனும் இணைப் பிரதியில் அல்லது நொத்தாரிசின் பிரதியில் அத்தகைய உறுதிமுடிப்பவரின் கையொப்பத்தை இடுவதற்கு அல்லது அத்தகைய உறுதிமுடிப்பவரின் அல்லது சாட்சியின் அடையாமொன்றை இடுவதற்கு அல்லது அத்தகைய உறுதிமுடிப்பவரின் இடது அல்லது வலதுகைப் பெருவிரலடையாளத்தை அல்லது வேறு ஏதேனும் விரலடையாளத்தை அல்லது கால் பெருவிரலடையாளத்தை இடுவதற்கு அவர் தேவைப்படுத்துதலோ அனுமதித்தலோ அல்லது அனுமதியளித்தலோ ஆகாது அல்லது அத்தகைய ஏதேனும் நோக்கத்துக்காகப் பின்னர் பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட ஏதேனும் தாள் அல்லது வேறு பொருள் மீது அத்தகைய உறுதிமுடிப்பவரை அல்லது சாட்சியை, அத்தகைய உறுதியின் அல்லது சாதனத்தின் முழுமையும் அதன் மீது எழுதப்படும்வரை அல்லது பொளிக்கப்படும்வரை அவரது கையொப்பத்தை இடுவதற்கு அல்லது அத்தகைய உறுதிமுடிப்பவரின் அல்லது சாட்சியின் அடையாளத்தை இடுவதற்கு அத்துடன் அத்தகைய உறுதிமுடிப்பவர், விடயத்துக்கேற்ப, இடது அல்லது வலது பெருவிரலடையாளத்தை அல்லது வேறேதேனும் விரலடையாளத்தை அல்லது கால் பெருவிரலடையாளத்தை இடுவதற்குத்

தேவைப்படுத்துதலாகாது என்பதுடன், எப்பட்சத்திலும் அத்தகைய உறுதிமுடிப்பவரின் கையொப்பமெதுவும் அல்லது இடது அல்லது வலதுகைப் பெருவிரலடையாளம் அல்லது வேறேதேனும் விரலடையாளம் எதுவும் ஒரு வெற்றுத்தாளில் அல்லது ஏதேனும் பூர்த்திசெய்யப்படாத படிவத்தில் ஏதேனும் உறுதிக்காக அல்லது சாசனத்துக்காகப் பெற்றுக்கொள்ளப்படுதலாகாது.";

(2) அதன் (4)ஆம் விதிக்குப்பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

(4) ஏதேனும் உறுதி அல்லது சாதனம் நிலைத்திருக்கக்கூடிய காகிதத்தோல் (பார்ச்மன்ட்) தாள் மீது அல்லது நீலத்தாள் மீது எழுதப்பட்டு, தட்டச்சுச் செய்யப்பட்டு அல்லது அச்சிடப்பட்டு இருந்தாலொழிய அவர் அதனை மெய்யென்று சான்றுப்படுத்துதலோ அல்லது அத்தாட்சிப்படுத் துதலோ ஆகாது.";

(3) அதன் (5) ஆம் விதிக்கு பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

(5)(அ)அவர் முழுமையான பிரிக்கப்படாத காகிதத்தோல் (பார்ச்மன்ட) தாள் அல்லது நீலத்தாள் ஒன்றின் மீது எழுதப்பட்டிருக்கின்ற ஏதேனும் உறுதி அல்லது சாதனத்தை அவர் மெய்யென்று சான்றுப்படுத்துதல் அல்லது அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்; அல்லது

(ஆ)அவர், இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தனிவேறான தாள்களைப் பயன்படுத்துகின்றவிடத்து அவர்-

(i) ஒவ்வொரு பக்கத்திலும் இலக்மிடுதல் வேண்டும்;

(ii) அத்தகைய ஒவ்வொரு தாள் மீதும் அவரது கையொப்பத்தை இடுதல் வேண்டும்; அத்துடன்

(iii) விடயத்திற்கேற்ப ஒவ்வொரு உறுதிமுடிப்பவரையும், (இதனகத்துப்பின்னர் "அற்றோணி" என்று குறிப்பீடு செய்யப்படும்) அற்றோணித் தத்துவத்தை வைத்திருப்பவரையும் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் அதிகாரமளிக்கப்பட்ட ஆளையும், அத்தகைய ஒவ்வொரு தாளிற்கும் தமது கையொப்பத்தையும் இடது அல்லது வலதுகைப் பெருவிரல் அடையாளத்தை அல்லது ஏதேனும் கைவிரல் அடையாளத்தையும் அல்லது கால்விரல் அடையாளத்தை இடுவதற்கு செய்வித்தல் வேண்டும்.".

(4) அதன் (6)ஆம் விதிக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

(6) தேவைப்பட்ட முத்திரைத் தீர்வை வழங்கப்படுகின்றதென்பதற்கானவோர் உறுதிப்பாடு அவருக்கிருந்தாலொழிய, அவர் ஏதேனும் உறுதியை அல்லது சாதனத்தை மெய்யென்று உறுதிப்படுத்துதலோ அல்லது அத்தாட்சிப்படுத்துதலோ ஆகாது.".

(5) அதன் (7)ஆம் விதியை உடனடுத்துப் பின்வரும் புதிய விதியினை உட்புகுத்துவதன் மூலமும்:-

(7அ) (அ) இக்கட்டளைச் சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் எழுதி நிறைவேற்றப்பட்ட எந்தக் கைமாற்றம், நன்கொடை பரிமாற்றம் அல்லது தொடர்பான எந்த எல்லா உறுதிகளுக்கு அல்லது சாசனங்களுக்கு எந்த முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த முத்திரைத் தீர்வை நொத்தாரிசினால் செலுத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய கொடுப்பனவுக்கான எண்பிப்பாக, இயைபான அரச வங்கியிலிருந்து நொத்தாரிசினால் பெறப்பட்ட மூலப்பற்றுச்சீட்டு உறுதியின் அல்லது சாதனத்தில் இணைப்பிரதிக்கு ஒட்டப்படுதல் வேண்டும்;

(இ) அத்தகைய பற்றுச்சீட்டின் பிரதிகள் அத்தகைய உறுதி அல்லது சாதனத்தின் மூல மற்றும் நொத்தாரிசுப் பிரதியில் ஒட்டப்படுதல் வேண்டும்.";

(6) அதன் (9)ஆம் விதியில், "ஏதேனும் உறுதி அல்லது சாதனத்தை நிறைவேற்றுகின்ற ஆள், அவரை அறிந்திருந்தாலொழிய அல்லது அதற்கான அத்தாட்சிப்படுத்தும் சாட்சிகளில் இருவரை அறிந்திருந்தாலொழிய ஏதேனும் உறுதியை அல்லது சாதனத்தை அவர் மெய்யென்று சான்றுப்படுத்துதலோ அல்லது அத்தாட்சிப்படுத்துதலோ ஆகாது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உறுதி அல்லது சாதனத்திற்கான உறுதிமுடிப்பவர் ஒருவரையும் அல்லது இரண்டு அத்தாட்சிப்படுத்தும் சாட்சிகளையும் நொத்தாரிசு அறிந்திருந்தாலொழிய அல்லது உறுதி அல்லது சாதனத்திற்கான உறுதிமுடிப்பவர்களின் ஆள் அடையாளம், அத்தகைய உறுதிமுடிப்பவரின் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டின் சுயவிபரப்பக்கம் அல்லது சாரதி உரிமம் என்பவற்றை சோதிப்பதன் மூலம் அத்தகைய நொத்தாரிசினால் அடையாளம் காணப்பட்டிருந்தாலொழிய ஏதேனும் உறுதியை அல்லது சாதனத்தை அவர் மெய் என்று சான்றுப்படுத்துதலோ அல்லது அத்தாட்சிப்படுத்துதலோ ஆகாது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.".

(7) அதன் (14)ஆம் விதிக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

(14) அவர் எவரேனும் உறுதிமுடிப்பவர் அல்லது சாட்சி கையொப்பமிடு முன்னர் அல்லது ஓர் அடையாளத்தை இடு முன்னர் அத்துடன் எவரேனும் உறுதிமுடிப்பவர் தனது இடது அல்லது வலதுகைப் பெருவிரலடையாளத்தை அல்லது வேறேதேனும் விரலடையாளத்தை அல்லது கால் பெருவிரலடையாளத்தை இடுமுன்னர், அத்தகைய உறுதிக்கான அல்லது சாதனத்துக்கான உறுதிமுடிப்பவரினதும் சாட்சிகளதும் முழுப்பெயர்களையும் நிச்சயித்தல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் உறுதிக்கான அல்லது சாதனத்துக்கான உறுதிமுடிப்பவரொருவர் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை இடப்படுவதனைச் செய்வித்தலும் வேண்டும்; அத்துடன் அவர், பணிப்பாளர் சபையின் அல்லது அத்தகைய உறுதியை அல்லது சாதனத்தைக் கையொப்பமிடுவதற்குத் தீர்மானத்தின் மூலம் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளின் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுதிமுடிப்பவரின் அல்லது சாட்சியின் பெயர், அத்தகைய உறுதி முடிப்பவரின் அல்லது சாட்சியின் அடையாளங்காண் ஆவணங்களில் கொடுக்கப்பட்ட பெயரிலிருந்து வித்தியாசப்படின், அவர், அத்தகைய உறுதியின் அல்லது சாதனத்தின் அவரது அத்தாட்சிப்படுத்துகையில், அத்தகைய உறுதிமுடிப்பவரை அல்லது சாட்சியை அத்தகைய பெயரினாலும் அத்துடன் கையொப்பத்தில் எழுதப்பட்டுள்ளள பெயரினாலும் விவரித்தலும் வேண்டும். உறுதிமுடிப்பவர் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருப்பின், அத்தகைய உறுதியை அல்லது சாதனத்தைக் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கின்ற சபைத் தீர்மானத்தின் பிரதியொன்றை அவர் அத்தகைய உறுதியின் அல்லது சாதனத்தின் நொத்தாரிசுப் பிரதிக்கு இணைத்தலும் வேண்டும்.".

(8) அதன் 15ஆம் விதியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய விதியை உட்புகுத்துவதன் மூலமும்:-

(15அ)(1)(அ) அசைவற்ற ஆதனமொன்று தொடர்பில் ஓர் உறுதியை அல்லது சாதனத்தை, எழுதி நிறைவேற்றுகின்ற-

(i) உறுதி முடிப்பவர் ஒவ்வொருவரும்;

(ii) அற்றோணி ஒவ்வொருவரும்; அல்லது

(iii) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் சபையின் பணிப்பாளர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும்,

(15)ஆம் விதியின் ஏற்பாடுகளுடன் சேர்த்து மேலதிகமாக, அத்தகைய உறுதியின் அல்லது சாதனத்தின் மூலப்பிரதியிலும், இணைப்பிரதியிலும் நொத்தாரிசுப் பிரதியிலும் அவரது கையொப்பத்துக்குமேல் அல்லது அதற்கருகில் அவரது ஏதேனும் கையின் பெருவிரலடையாளத்தை இடுதல் வேண்டும்;

(ஆ) ஓர் உறுதிமுடிப்பவரின், ஓர் அற்றோணியின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் சபையின் பணிப்பாளர்களின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் அத்தகைய கைப் பெருவிரலடையாளத்தைப் பெற்றுக் கொள்ளமுடியாதவிடத்து, அத்தகையவோர் உறுதிமுடிப்பவர், ஓர் அற்றோணி அல்லது ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆள் அத்தகைய உறுதியின் அல்லது சாதனத்தின் மூலப்பிரதியில், இணைப்பிரதியில் மற்றும் நொத்தாரிசுவின் பிரதியில், அவரது கையொப்பத்துக்கு மேல் அல்லது அதற்கருகில் அவரது ஏதேனும் கை விரலடையாளத்தை அல்லது கால் விரலடையாளத்தை இடுதல் வேண்டும்;

(இ) ஓர் உறுதி அல்லது சாதனம் ஓர் அற்றோணியினால் கையொப்பமிடப்படுமிடத்து, அத்தகைய அற்றோணியானவர், அற்றோணித் தத்துவம் உண்மையானதென்றும் வலுவிலுள்ளதென்றும் அத்தகைய உறுதியை அல்லது சாதனத்தை நிறைவேற்றும்போது அளிப்பவர் உயிரோடிருக்கின்றாரென்றும், உறுதிப்படுத்துகின்ற சத்தியக் கடதாசியொன்றை நொத்தாரிசுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்;

(ஈ) கைமாற்றம்பெறுநர் பராயமடையாத ஒருவராகவிருக்குமிடத்து, சட்டப் பாதுகாவலர் அல்லது பாதுகாவலர் இப்பிரிவின் நோக்கத்துக்காகக் கைமாற்றம்பெறுநரின் சார்பில் செயலாற்றுவதற்கத் தகுதிவாய்ந்த ஆளொருவராகவிருத்தல் வேண்டும்.".

(9) 16ஆம் விதியில்-

(அ) அதன் (அ) என்னும் பந்தியில், "அது அமைந்தி ருக்கும் மதிப்பீட்டு இலக்கம் தெருவின் பெயர், எதுவும் இருப்பின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"அது அமைந்திருக்கும் இடத்தின் மதிப்பீட்டு இலக்கம் தெருவின் பெயர் எதுவும், இருப்பின், அத்துடன் கூட்டாட்சி ஆதனம் ஒன்றின் விடயத்தில் கூட்டாட்சி சிறுகூறு அடையாளம் காணப்படமுடியுமாகவுள்ளவிடத்து அத்தகைய கூட்டாட்சி சிறுகூறு மற்றும் வேறு ஆக்கக்கூறு பற்றியதுமான விபரணமொன்றையும், அத்துடன் கூட்டாட்சி சிறுகூறொன்று அடையாளங் காணப்படமுடியாதுள்ளவிடத்து, முழுக்காணி அல்லது காணிச் சிறுகூறு பற்றியதுமான விபரணமொன்றையும்."; அத்துடன்

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியில், "குறிப்பிடுதல் வேண்டும்." என்னும் சொற்கள் தொடக்கம் அப்பந்தியின் முடிபுவரையிலான சொற்களுக்குப் பதிலாக, "குறிப்பிடுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(10) (அ) அதன் (17)ஆம் விதியின் (ஆ) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஆ) (i) அவர் காணியின் அல்லது அசையாத ஆதனம் தொடர்பான சொத்தாண்மை மற்றும் பதிவுசெய்யப்பட்ட வில்லங்கங்களைக் கொண்டுள்ள அத்தகைய காணி அல்லது அசையாத ஆதனம் தொடர்பான இறுதிப் பதிவைக் கொண்டுள்ள பக்கத்தின் சான்றுப்படுத்தப்பட்ட இருமடித் தாளை இயைபான காணிப் பதிவகத்தின் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்;

(ii) அவர், ஏதேனும் முன்னைய உறுதி பதிவு செய்யப்பட்டு இருந்திருப்பின், எந்தப் பதிவேட்டில் முன்னைய உறுதி பதிவு செய்யப்பட்டிருந்ததோ அந்தப்பதிவேட்டின் தொகுதியினதும், இருமடித்தாளினதும் இலக்கங்கங்களை உறுதியின் முன்பக்கத்தில் மையினால் எழுதுதல் அல்லது அச்சிடல் வேண்டும்; அத்துடன்

(iii) கைமாற்றல் உறுதியின் அல்லது நன்கொடை உறுதியின் அல்லது பரிமாற்றல் உறுதியின் அல்லது விருப்பாவணத்தின் விடயத்தில் அவர், உறுதியினது அல்லது சாதனத்தினது, மூலப்பிரதிக்கு உறுதிமுடிப்பவரின் கடவுச்சீட்டு அளவினதான சான்றுப்படுத்தப்பட்ட புகைப்படங்களை ஒட்டுதலும் வேண்டுமென்பதுடன், நொத்தாரிசு அதற்கு தனது இலச்சினையை பொறித்தலும் வேண்டும். அத்துடன் அத்தகைய தேசிய அடையாள அட்டையின் அல்லது கடவுச்சீட்டின் அல்லது சாரதி உரிமத்தின் பிரதிகளை நொத்தாரிசின் பிரதியுடன் இணைத்து வைத்திருத்தலும் வேண்டும்;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

(இ) அவர், உறுதியின் முன்பக்கத்தில் அவரது முழுப்பெயரையும், நொத்தாரிசுக்குக் குறித்தொதுக்கப்பட்ட இலக்கத்தையும், அவரது அலுவலக முகவரியையும், தொலைபேசி இலக்கத்தையும் எழுதுதல் வேண்டும் அவர் ஏதேனும் ஒழுங்கமைப்பில், உருவகத்தில் அல்லது கம்பெனியில் சட்ட அலுவலர் ஒருவராக தொழில் புரிந்தால் அவர் அத்தகைய ஒழுங்கமைப்பின், உருவகத்தின் அல்லது கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட முகவரியைக் குறித்துரைத்தல் வேண்டும்;

(ஈ) ஏதேனும் உறுதிக்கான அல்லது சாதனத்துக்கான திறத்தவர் ஒருவர், கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருப்பின், அவர், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட உருவகத்தினைத் தாபிக்கின்ற கூட்டிணைப்பு சான்றிதழின் அல்லது அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட உருவகத்தை தாபிக்கும் வேறு சாதனத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றையும் பணிப்பாளர் சபையின் விபரங்களையும் வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன்

(உ) அவர், நம்பிக்கைப்பொறுப்பு தொடர்பான உறுதியின் விடயத்தில் நம்பிக்கைபொறுப்பு ஒன்றின் கீழ் செயற்படும்

நம்பிக்கைப்பொறுப்பாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்களையும் மற்றும் எந்த ஏற்பாட்டின் கீழ் அவர்கள் உறுதிமுடிப்பதற்கு அவர்கள் அதிகாரமளிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் அத்தாட்சிப்படிவத்தில் குறிப்பிட்டு அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் ஒரு பிரதியை வைத்திருத்தலும் வேண்டும்.".

(11) அதன் (20)ஆம் விதியில்

(அ) அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஆ) சொல்லப்பட்ட உறுதியின் அல்லது சாதனத்தின் உறுதி முடிப்பவர்களை அவர் அறிந்துள்ளாரா என்பதையும் அல்லது அவர் தேசிய அடையாள அட்டையை, கடவுச்சீட்டின் சுயவிபரப்பக்கத்தை அல்லது சாரதி உரிமத்தை சோதிப்பதன் மூலம் அடையாளம் கண்டுள்ளாரா என்பதையும் அல்லது அதற்கான சாட்சிகளை அறிந்துள்ளாரா என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் பின்னைய விடயத்தில், அவர், எந்த உறுதிமுடிப்பவரை அல்லது ஏற்றுக் கொள்ளும் எந்த ஆளை சொல்லப்பட்ட சாட்சிகள் அறிந்துள்ளார்கள் என்பதையும் குறித்துரைத்தல் வேண்டும்;";

(ஆ) அதன் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(உ) உறுதியின் அல்லது சாதனத்தின் பிரதிபயனாக அல்லது பிரதிபயனின் பாகமாக அவரது முன்னிலையில் ஏதேனும் பணம் செலுத்தப்பட்டதா அல்லது இல்லையா என்பதனையும், அத்துடன் செலுத்தப்பட்டிருப்பின், அத்தகைய கொடுப்பனவின் உள்ளூர் நாணயத்தில் உண்மைத் தொகையையும் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன், கொடுப்பனவானது காசோலை மூலம், பணம் செலுத்துவதற்கான கட்டளை மூலம், வங்கி வரைவு மூலம் அல்லது வங்கியாளரின் காசோலை மூலம் செய்யப்பட்டிருப்பின் அத்தகைய சாதனத்தின் விபரங்கள் அத்தகைய கொடுப்பனவின் எண்பிப்பாக அத்தாட்சிப்படுத்துதலில் எடுத்துக்கூறப்படுதல் வேண்டும்." அத்துடன்

(இ) அதன் (எ) என்னும் பந்தியில், "குறிப்பிடுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குறிப்பிடுதல் வேண்டும்; அத்துடன்"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஈ) அதன் (எ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை சேர்ப்பதன் மூலமும்:-

"(ஏ) விருப்பாவணம் ஒன்றின் விடயத்தில் -

(i) மரணசாதனகாரர் விருப்பாவணத்தை எழுதி நிறைவேற்றுவதற்குச் சிறந்த மற்றும் சித்த சுவாதீனமான மனநிலையில் இருந்துள்ளார் என்பதை விருப்பாவணத்தின் அத்தாட்சிப்படுத்துதலில் எடுத்துக்கூறுதல் வேண்டும்; அத்துடன்

(ii) அவரால் பேணப்படும் உறுதிப் பதிவுப்புத்தகத்தில் அத்தகைய விருப்பாவணத்துக்கு குறித்தளிக்கப்பட்ட இலக்கம், திகதி மற்றும் மரணசாதனகாரரின் பெயர் என்பவற்றைப் பதிவுசெய்தல் வேண்டும்.

(12) அதன் (27)ஆம் விதியினை நீக்குவதன் மூலமும்;

(13) அதன் (30) ஆம் விதியில், "பேணிக்காத்தல் வேண்டும்" என்னும் சொற்களில் இருந்து அவ்விதியின் முடிவுவரைக்குமான சொற்களுக்குப் பதிலாக, "அவர் மூலப்பிரதிக்கு பதிவாளர் தலைமையதிபதியிடமிருந்து பெறப்பட்ட அற்றோணித்தத்வத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றையும் அத்துடன் இணைப்பிரதிக்கும் அதன் நொத்தாரிசுப்பிரதிக்கும் அதன் உண்மைப் பிரதிகளையும் இணைத்தல் வேண்டும்."; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(14) அதன் (30)ஆம் விதியினை உடனடுத்துப் பின்வரும் புதிய விதியினை உட்புகுத்துவதன் மூலம்:-

(30அ) ஒவ்வொரு நொத்தாரிசினாலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு உறுதியை அல்லது சாதனத்தைப் பதிவுசெய்வதற்காக அதன் அத்தாட்சிப்படுத்தல் தேதியில் இருந்து முப்பதுநாட்கள் காலவதியாவதற்கு முன்னர் பதிவாளருக்குச் சமர்ப்பித்தல் அவரின் கடமையாதல் வேண்டும்:

ஆயினும் அத்தகைய உறுதி அல்லது சாதனம், அவர் தொழில் புரியும் நியாயதிக்கத்துக்கு வெளியே பதிவுசெய்யப்படுவதற்கு தேவைப்படுகின்றவிடத்து அவர், அத்தாட்சிப்படுத்தும் தேதியில் இருந்து அறுபதுநாட்கள் காலவதியாகு முன்னர் பதிவுசெய்வதற்காக அத்தகைய உறுதியை அல்லது சாதனத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றது என்பதுடன் அதற்குப்பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

34. (1) (அ) 31ஆம் பிரிவில் தரப்பட்ட (1)ஆம், (31)ஆம் அல்லது (32)ஆம் விதிகளை மீறி அல்லது புறக்கணித்து அல்லது பின்பற்றுவதை அலட்சியம் செய்து செயலாற்றுகின்ற ஒவ்வொரு நொத்தாரிசும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், அவருக்கு அதனால் உறக்கூடிய ஏதேனும் குடியியல் பொறுப்புடன் சேர்த்து ஐந்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்;

(ஆ) முப்பத்தோராம் பிரிவில் தரப்பட்ட (2), (3), (6), (7), (11), (18, (21), (23), (24) அல்லது (30அ) என்னும் விதிகளை மீறி அல்லது புறக்கணித்து அல்லது பின்பற்றுவதை அலட்சியம் செய்து செயலாற்றுகின்ற ஒவ்வொரு நொத்தாரிசும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், அவருக்கு அதனால் உறக்கூடிய ஏதேனும் குடியியல் பொறுப்புடைமையுடன் சேர்த்து இருபதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்; அல்லது

(இ) முப்பத்தோராம் பிரிவின் தரப்பட்ட வேறு ஏதேனும் விதியை மீறி அல்லது புறக்கணித்து அல்லது பின்பற்றுவதை அலட்சியம் செய்து செயலாற்றுகின்ற ஒவ்வொரு நொத்தாரிசும். தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் அவருக்கு அதனால் உறக்கூடிய ஏதேனும் குடியியல் பொறுப்புடைமையுடன் சேர்த்து ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

(2) நொத்தாரிசு ஒருவர் 31ஆம் பிரிவில் தரப்பட்ட (26)ஆம் விதியின் ஏற்பாடுகளை மீறி அல்லது புறக்கணித்து அல்லது பின்பற்றுவதை அலட்சியம் செய்து செயலாற்றுகின்றவிடத்து, பதிவாளர் தலைமையதிபதி, எழுத்திலான அறிவிதித்தல் ஒன்றின் மூலம் தனிப்பட்ட ரீதியில் அவரிடம் சேர்ப்பிக்கப்பட்ட அல்லது பதிவுத்தபால் மூலம் அவரிடம் சேர்ப்பிக்கப்பட்ட எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய நோக்கத்திற்கான அத்தகைய அறிவித்தலில் அவர் குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய மேலதிக காலப்பகுதியினுள் சொல்லப்பட்ட விதியில் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு அத்தகைய நொத்தாரிசினைக் கோரலாம். அத்தகைய அறிவித்தலின் நியதிகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற அத்தகைய நொத்தாரிசின் விடயத்தில், அமைச்சர் பதிவாளர் தலைமையதிபதியினால் அவர் சார்பில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது அமைச்சர் தகுதியானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நொத்தாரிசு என்ற அவருடைய பதவியிலிருந்து நொத்தாரிசு இடைநிறுத்தப்படலாம்.

(3) நொத்தாரிசாக அவரது பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள நொத்தாரிசு ஒருவர் அத்தகைய இடைநிறுத்தல் பற்றிய அறிவித்தலை பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து ஏதேனும் உறுதி அல்லது சாதனத்தை அத்தாட்சிப்படுத்தலாகாது.

(4) பதிவாளர் தலைமையதிபதி, இயையான காணிப்பதிவகத்தில் அல்லது நீதிமன்றங்களின் வளவுகளில் அத்தகைய இடைநிறுத்தல் அறிவித்தலின் பிரதியொன்றை வெளிக்காட்டிவைப்பதற்கு பதிவாளர்களை தேவைப்படுத்தி அத்தகைய காணிப் பதிவாளர்களுக்கு மற்றும் மேல் நீதிமன்றங்களின், மாவட்ட நீதிமன்றங்களின் நீதவான் நீதிமன்றங்களின் பதிவாளர்களுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(5) இடைநிறுத்தல் அறிவித்தலில் குறித்ததுரைக்கப்பட்ட காலத்தினுள் இணைப்பிரதிகளைச் சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற நொத்தாரிசு ஒருவர் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டுமென்பதுடன், அமைச்சர், பதிவாளர், தலைமையதிபதியினால் அதன் சார்பில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது, அத்தகைய நொத்தாரி சின் உரிமத்தை இல்லாதாக்கலாம்.".

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஆம் பிரிவானது, அதன் (2)ஆம் உட்பிரிவில், "இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (இ) என்னும் பந்தியில், "கையொப்பம் அல்லது அடையாளம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விடயத்துக்கேற்ப கையொப்பம் இடது கை அல்லது வலது கை பெரு விரலடையாளம் அல்லது வேறு ஏதேனும் கை விரலடையாளம் அல்லது கால் பெருவிரலடையாளம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) "ஐந்து வருடங்களை விஞ்சாத ஏதேனும் காலப்பகுதி ஒன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பத்து வருடங்களை விஞ்சாத ஏதேனும் காலப்பகுதி ஒன்றுக்கு அல்லது அத்துடன் ஒரு இலட்சம் ரூபா குற்றப்பணம் அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற் தண்டனை ஆகிய இரண்டிற்கும் அத்துடன் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான (அ) தொடக்கம் (எ) வரையான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட நொத்தாரிசின் அத்தகைய செயலின் விளைவாக ஏதேனும் சேதத்தை அல்லது நட்டத்தை அனுபவித்துள்ள ஆளுக்கான அத்தகைய நட்டவீட்டை செலுத்துவதற்கும் ஆளாதலும் வேண்டும்.".

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41ஆம் பிரிவானது அதன் (1)ஆம் உட்பிரிவில், "பன்னிரெண்டு பஞ்சாங்க மாதங்களை" என்னும் சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவு வரையுள்ள சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43ஆம் பிரிவானது, "மேல் நீதிமன்ற நீதிபதி" என்னும் சொல்லமைப்பின் வரைவிளக்கத்தின் உடன்முன்னராகப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"சட்டக்கல்விப் பேரவை" என்பது, (276ஆம் அத்தியாயமான) சட்டக் கல்விப்பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவினால் அதற்கு குறித்தளிக்கப்பட்டவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"உறுதி முடிப்பவர்" என்பது,-

(அ) ஒரு கைமாற்றல் உறுதி தொடர்பாக, கைமாற்றுநரும் கைமாற்றம்பெறுநரும்; அத்துடன்

(ஆ) வேறு உறுதிகள் அல்லது சாதனங்கள் தொடர்பாக, அத்தகைய உறுதிக்கான அல்லது சாதனத்துக்கான திறத்தவர்கள், என்று பொருளாகும்.

22. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் படிவம் ஆ வினை உடனடுத்து பின்வரும் புதிய படிவம் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் படிவம் ஆ 1 ஆக பயனுறுதலும் வேண்டும்:-

"படிவம் ஆ1 [பிரிவு 3]

.....நீதி நிருவாக வலயத்தின் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரியும் ஆன .....ஆகிய நான் .....ஆந் தேதியன்று நொத்தாரிசு ஒருவராக தொழிலை ஆரம்பித்துள்ளேன் எனவும் தொடர்ச்சியான பத்துவருட காலப்பகுதி ஒன்றுக்கு முனைப்பான தொழிலைப் புரிந்துள்ளேன் எனவும் சட்டத்தரணி திரு/ திருமதி/ செல்வி ..... தேதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதி ஒன்றுக்கு நொத்தாரிசுத் தொழிலுக்காக எனக்கு கீழ் தனது கற்கைகளை தொடர்ந்துள்ளார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

திகதி.....

.....

(கையொப்பம்)
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்
(இலச்சினை பதித்தல்)

(2) அவ்வட்டவணையின் உ என்னும் படிவத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் படிவத்தினை இடுவதன் மூலமும்:-

"படிவம் உ "[பிரிவு 31(21)]

அத்தாட்சிப்படுத்தும் படிவம்

.....நீதி நிருவாக வலயத்தில் ..... (பிரசித்த நொத்தாரிசின் முகவரி) சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ....ஆகிய நான், தேசிய அடையாள அட்டை இல./கடவுச்சீட்டு இல. சாரதி உரிமத்தை) வைத்திருப் பவர்களும் (விடயத்திற்கேற்ப வாசிக்க முடியாத வகையில்/ ..... என) கையொப்பமிட்டுள்ளவர்களான சாட்சிகளின் "(சாட்சிகளின் பெயர்களையும் முகவரிகளையும் முழுமையாக உட்புகுத்துக) முன்னிலையில் தமது கையொப்பத்தை வாசிக்க முடியாத/அல்லது ஜுவானிஸ் என்று இட்டு அவர்களின் (இடது/வலது கையின் பெருவிரல் அடையாளத்தை அல்லது வேறு கைவிரல் அடையாளத்தை அல்லது கால் விரலடையாளத்தை இட்டுள்ளவர்களுமான சொல்லப்பட்ட உறுதிமுடிப்போருக்கு) (பெயர்கள்) சொல்லப்பட்ட நொத்தாரிசு ஆகிய என்னால் மேற்போந்த சாதனம் வாசிக்கப்பட்டு உள்ளதென (அல்லது வாசிக்கப்பட்டு விளங்கப்படுத்தப்பட்டு உள்ளது எனவும்) சொல்லப்பட்ட நொத்தாரிசு ஆகிய என்னாலும் அச்சாதனத்தில் - கையொப்பமிடப்பட்டது எனவும் ..... ஆம் நாளன்று..... ஆம் தேதியில் அதேநேரத்தில் அனைவரும் சமுகமாயிருந்து எனது சமுகத்தில் ஒவ்வொருவரினதும் சமுகத்திலும் கையொப்பமிடப்பட்டது எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

அத்துடன்..... ஆகிய உறுதிமுடிப்பவரை நான் அறிந்துள்ளேன்/ சாட்சிகளை நான் அறிந்துள்ளேன்/ அவர்களின் தேசிய அடையாள அட்டை இல./கடவுச்சீட்டு இல. சாரதி உரிமம்) என்பவற்றை பரிசோதனை செய்ததன் மூலம் அவர்களின் ஆள் அடையாளத்தை நான் சரிபார்த்துள்ளேன்) என்றும் மேற்போந்த சாதனத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர், நான் உறுதிமுடிப்போரின்/ உறுதிமுடிப்போர்களின் தேசிய அடையாள அட்டை இல./கடவுச்சீட்டு இல. சாரதி உரிமத்தை பரிசோதனை செய்துள்ளேன் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

அத்துடன் நான் உறுதியின் அல்லது சாதனத்தின் மூலப்பிரதிக்கு உறுதிமுடிப்பவர்களின் அண்மைக்கால புகைப்படங்களை ஒட்டியுள்ளேன் எனவும் அத்துடன் (கைமாற்றம் அல்லது நன்கொடையின் விடயத்தில்) ..... ரூபா பெறுமதிக்கான (ரூபா எண்களில்) முத்திரைத் தீர்வையானது..... அரச வங்கியில் ..... மாகாண சபையின் வரவிற்கு செலுத்தப்பட்டிருக்கிறது எனவும் அதற்கு எண்பிப்பாக ..... தேதியிடப்பட்ட ..... ஆம் இலக்கப் பற்றுச்சீட்டின் பணஞ்செலுத்தியமைக்கான அத்தகைய முத்திரைத் தீர்வையின் மூலப்பிரதி இச்சாதனத்தின் இணைப்பிரதியில் ஒட்டப்பட்டுள்ளது எனவும், பிரதிகள் மூலப்பிரதிக்கும் நொத்தாரிசுவின் பிரதிக்கும் ஒட்டப்பட்டிருக்கின்றன எனவும் (வேறு எல்லா விடயங்களிலும்) இச்சாதனத்தின் மூலப்பிரதி ரூபா ..... பெறுமதியான முத்திரைகளையும் இணைப்பிரதி ரூபா ..... பெறுமதியான முத்திரைகளையும் கொண்டிருக்கின்றது எனவும் நான் சான்றுப்படுத்துகின்றேன்.

அத்துடன் இதில் குறிப்பிடப்பட்ட பிரதிப்பயன், கொள்வனவுக்காரினால் விற்பனையாளருக்கு/ குத்தகைப்பெறுநரினால் குத்தகை வழங்குநருக்கும் எனது முன்னிலையில் செலுத்தப்பட்டது) அல்லது எனது முன்னிலையில் செலுத்தப்படவில்லை எனவும் எவ்வாறாயினும் விற்பனையாளர்/ குத்தகைவழங்குநர் இதன் நிறைவேற்றத்துக்கு முன்னர் கொள்வனவுகாரரிடமிருந்து/ குத்தகைப்பெறுநரிடமிருந்து சொல்லப்பட்ட பிரதிப்பயனை பெற்றிருப்பதாக ஒப்புக்கொள்ளுகிறார்கள் எனவும் மேலும் சான்றுப்படுத்தி அத்தாட்சிப்படுத்துகின்றேன். விருப்பாவணம் ஒன்றின் விடயத்தில் நான் மரணசாதனகாரர் விருப்பாவணத்தை நிறைவேற்றுவதற்கு சிறந்த மற்றும் சித்தசுவாதீனமான நிலையில் இருந்துள்ளார் எனவும் அத்துடன் மேலும் சான்றுப்படுத்தி அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

அத்துடன் நான் ..... ஆம் பக்கத்தில் .....ஆம் வரிசையிலுள்ள சொல்/ எழுத்து அழிக்கப்பட்டிருக்கின்றது என்பதுடன் இதன் நிறைவேற்றத்துக்கு முன்னர் மையினால் எழுதப்பட்டிருந்தது/ இல்லாதாக்கப்பட்டிருக்கின்றது எனவும் சான்றப்படுத்தி அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

அத்துடன் பதிவுசெய்யப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை இவ்வுறுதியின் மூலப்பிரதிக்கும் மற்றும் மெய்யென்று சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைப்பிரதிக்கும் மற்றும் நொத்தாரிசின் பிரதிக்கும் நான் இணைத்துள்ளேன் (அற்றோணித்தத்துவத்தின் விடயத்தில்).

அத்துடன் நான் மேலும் இவ்வாண்டுக்கான எனது உரிமத்தைப் புதுப்பித்துள்ளேன் எனவும்/ நடைமுறை ஆண்டுக்கான உரிமத்தை புதுப்பிப்பதற்காக நான் விண்ணப்பித்துள்ளேன் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி .....

.....
(கையொப்பம்)
பிரசித்த நொத்தாரிசு
(இலச்சினை பதித்தல்)

23. ஐயத்தை தவிர்ப்பதற்காக இச்சட்டத்தின் ஏற்பாடுகள்:-

(அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் சட்டமுறையாக நிறைவேற்றப்பட்ட ஏதேனும் உறுதியை அல்லது சாதனத்தை மற்றும் (117ஆம் அத்தயாயமான) ஆவணங்களை பதிவுசெய்தல் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க முடிவுறாதிருக்கின்ற பதிவை பாதித்தல் ஆகாது எனவும்;

(ஆ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனம் அல்லது உறுதியின் மீதான ஏதேனும் முத்திரைத் தீர்வையை விதிப்பதற்கு அல்லது அறவிடுவதற்கு ஏதேனும் மாகாண சபையின் தத்துவங்களில் இருந்து வலுக்குன்றச் செய்தல் ஆகாது எனவும்;

(இ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் சட்ட நீதிமன்றமுன்னர் முடிவுறாதிருக்கின்ற ஏதேனும் வழக்கை அல்லது துடர்ச்சியை அல்லது வழங்கப்பட்ட சட்ட நீதிமன்றத்தின் ஏதேனும் முடிபை பாதித்தலாகாது எனவும்;

(ஈ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்குமுன்னர் அவரது தொழிலைத் தொடங்கியுள்ள நொத்தாரிசு ஒருவரை முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவின் நியதிகளின்படி முறியொன்றை எழுதி நிறைவேற்றுவதற்கு ஆளாக்குதலாகாது எனவும்,

இத்தால் வெளிப்படுத்துப்படுகின்றது.

24. இச்சட்டத்தின் சிங்கள், தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2022ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க, ஆவணங்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம் (117ஆம் அத்தியாயம்)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆவணங்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (117ஆம் அத்தியாயமான) ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின் 32ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(1) *(அ)* (இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் "காணி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஒரு காணிக்கான, ஒரு பிரிக்கப்படாத காணிக்கான, ஒரு காணிச் சிறுகூறுக்கான அல்லது ஒரு கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்கான

(i) உரிமையொன்றை, உரித்தொன்றை அல்லது அக்கறையொன்றைக் கொண்டுள்ளவரும்; அல்லது

(ii) உரிமையொன்றை, உரித்தொன்றை அல்லது அக்கறையொன்றைக் கொண்டுள்ளாரென உரிமைகோருகின்றவரும், (இதனகத்துப்பின்னர் "தடை எச்சரிக்கையாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றவருமான) ஆளொருவர், அத்தகைய காணி சம்பந்தமான ஏதேனும் சாதனத்தின் பதிவுக்கான தடை எச்சரிக்கை பற்றிய அறிவித்தலொன்று அவருக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்துகின்றதும், பொருளளவில் இதற்கான இரண்டாம் அட்டவணையின் படிவம் VIII இலுள்ளது மான தடை எச்சரிக்கையொன்றைப் பதிவுக்காக முன்வைக்கலாம்

(ஆ) பதிவுக்காக முன்வைக்கப்பட்ட ஒவ்வொரு தடை எச்சரிக்கையும்-

(i) இருபிரதிகளில் இருத்தலும், காணியிலான உரிமை, உரித்து அல்லது அக்கறையை அல்லது தடை எச்சரிக்கையாளரின் காணியிலான ஓர் உரிமைக்கான, உரித்துக்கான அல்லது அக்கறைக்கான உரிமைக்கோரிக்கைகளை நிலைநாட்டி ஒரு சட்டத்தரணியினால் வழங்கப்பட்டவொரு சான்றிதழுடனும் தடை எச்சரிக்கையாளரின் சத்தியக்கடுதாசி யொன்றுடனும் சேர்த்தனுப்பப் படுதலும் வேண்டும்;

(ii) தடை எச்சரிக்கையாளர் சொந்தக் காரராக இராதவிடத்து, அத்தகைய காணி பதிவுசெய்யப்பட்டுள்ள இயைபான தொகுதியிலும் இருமடித்தாளிலும் எந்தக் காணிச் சொந்தக்காரர்களின் பெயர்களும் முகவரிகளும் கொடுக்கப்படுகின்றனவோ, அந்தக் காணிச் சொந்தக் காரர்களுக்குச் சேர்ப்பிக்கப்படு வதற்கு, முத்திரையிடப்பட்ட கடிதவுறைகளுடனும், இதற்கான இரண்டாம் அட்டவணையின் படிவம் X இலுள்ள அறிவித்தலின் அத்தகைய எண்ணிக்கையின வான பிரதிகளுடனும் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்;

(iii) தடை எச்சரிக்கையாளர் (இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் "அற்றோணி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அற்றோணித் தத்துவமொன்றை வைத்திருப்பவராக இருக்குமிடத்து, (இதனகத்துப்பின்னர் இப்பிரிவில், "பதிவாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பதிவாளர் தலைமையதிபதியுடன் அல்லது இயைபான காணிப்பதிவகத்தின் பதிவாளருடன் அல்லது உரித்துப் பதிவாளருடன் முறையாகப் பதிவுசெய்யப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் மூலப்பிரதியின் சான்றுப்படுத்தப் பட்ட பிரதியொன்றை தடை எச்சரிக்கையாளர் சமர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன்

(iv) தடை எச்சரிக்கையாளரின் பெயரையும், கையொப்பத்தையும், தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் அல்லது கடவுச்சீட்டு இலக்கத்தையும் அல்லது சாரதி உரிம இலக்கத்தையும் மற்றும் தடை எச்சரிக்கை தொடர்பான அறிவித்தல்கள் சேர்ப்பிக்கப்படவேண்டிய தடை எச்சரிக்கையாளரின் இலங்கையிலுள்ள முகவரியையும், தடை எச்சரிக்கையின் தேதியையும், தடை எச்சரிக்கையாளர் சொந்தக்காரராகவிராதவிடத்து தடை எச்சரிக்கை பற்றிய அறிவித்தல் எந்த ஆட்களுக்கு அனுப்பப்படவேண்டுமோ அந்த ஆட்களின் பெயர்களையும் முகவரிகளையும், தடை எச்சரிக்கை யாளரினால் உரிமை கோரப்பட்ட காணியிலுள்ள உரிமையையும், உரித்தையும் அல்லது அக்கறையையும், உரிமைக்கோரிக்கைக்கு ஆதரவான ஏதுக்களையும் மற்றும் அத்தகைய காணி பதிவுசெய்யப்பட்டுள்ள சரியான தொகுதியையும் இருமடித்தாளையும் சுட்டிக்காட்டி, எல்லைகளுட்பட, காணியின் விவரணத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) இப்பிரிவின் நோக்கத்துக்காக-

(i) "தடை எச்சரிக்கையாளர்" என்பது, ஓர் ஆட்கள் குழுவையும், ஒரு காணி சம்பந்தமான ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பின் கீழான ஒரு பயன்பெறுநரையும், பராயமடையாத ஒருவரின் அல்லது சித்தசுவாதீனமற்ற ஆளொருவரின் அல்லது உளக்குறைபாடுள்ள ஆளின் சட்டமுறையான பாதுகாவலரையும் அல்லது உதவு நண்பனையும், ஆளொருவரின் அற்றோணி ஒருவரையும், ஒரு தீர்ப்புக்கடன் கொடுநரையும், மரணமடைந்த ஒருவரின் மரணச்சொத்தொன்றின் நிறைவேற்றுநர் ஒருவரையும் அல்லது நிருவாகி ஒருவரையும், அல்லது சட்டப்படியான மரபுரிமையாளரொருவரையும் அல்லது ஒரு காணிச்

சொந்தக்காரருடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளவரான கொள்வனையாளராகவரவுள்ள ஒருவரையும் அல்லது ஒரு காணியின் அபிவிருத்தியாளர் ஒருவரையும் உள்ளடக்கும்;

(ii) "கூட்டாட்சியாதனச் சிறுகூறு" என்பது, 1973ஆம் ஆண்டின 11ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் 10ஆம் பிரிவின் நியதிகளின்படி 1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவொரு கூட்டாட்சி யாதனச் சிறுகூறு என்று பொருளாகும்; அத்துடன்

(iii) "அக்கறை" என்பது, உடனடியாகப் பதிவுசெய்யப்பட முடியாததாகவுள்ள ஒரு காணி தொடர்பாகப் பதிவுசெய்யப்படாதவோர் உறுதி அல்லது சாதனத்திலிருந்து, ஒரு நம்பிக்கைப் பொறுப்பிலிருந்து, ஒன்றில் மரணசாதனத்துடனான அல்லது மரணசாதனமில்லா வழியுரிமையின் மூலமான ஒரு மரபுரிமையிலிருந்து, ஈடொன்றிலிருந்து அல்லது விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையொன்று தொடர்பான சாதனங்களிலிருந்து, கூட்டுச் சொத்தாண்மையிலிருந்து, ஒரு கூட்டாட்சியாதனச் சிறுகூறிலிருந்து அல்லது ஒரு பராயமடையாதவரின் அல்லது சித்தசுவாதீனமற்ற ஆளொருவரின் அல்லது உளக்குறைபாடுள்ள ஆளொருவரின் மரணச்சொத்திலிருந்து எழுகின்ற சொத்தாண்மையொன்றிலிருந்து எழுகின்ற அக்கறையை உள்ளடக்கும்.".

(2) அதன் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(1அ) பதிவாளர், (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தேவைப்படுகின்ற எல்லா ஆவணங்களும் தகவல்களும் தடை எச்சரிக்கையாளரினால் வழங்கப்பட்டுள்ளனவெனத் திருப்திப்படுவதன் மீது, அத்தகைய தடை எச்சரிக்கை பெறப்பட்டமையை ஒப்புக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், 27ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட விதித்துரைக்கப்பட்ட விபரங்களைப்பதிதலும் வேண்டும்.

(1ஆ) தடை எச்சரிக்கை பெறப்பட்டதன் மேல், பதிவாளர், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ஈ)ஆம் உட்பந்தியின்கீழ் தடை எச்சரிக்கையாளரினால், எந்த ஆட்களின் பெயர்களும் முகவரிகளும் கொடுத்துதவப்பட்டுள்ளனவோ அந்த ஆட்களுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii)ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தல்களின் தேதியையும் அவை எந்த ஆட்களுக்கு அனுப்பப்பட்டனவோ அந்த ஆட்களின் பெயர்களையும் மற்றும் அவை எந்த முகவரிகளுக்கு அனுப்பப்பட்டனவோ அந்த முகவரிகளையும் உட்புகுத்துவதன் மூலம் குறிப்பு நிரலில் புறக்குறிப்பொன்றை இடுதலும் வேண்டும்.";

(3) அதன் (3)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(3) தடை எச்சரிக்கையொன்று இரண்டாண்டுகளைக் கொண்ட அதிகபட்சக் காலப்பகுதியொன்றுக்கு வலுவிலிருத்தல் வேண்டும்.";

(4) அதன் (4)ஆம் உட்பிரிவில், "தடை எச்சரிக்கையாளருக்குக் கொடுக்கப்படவேண்டிய அறிவித்தலானது விதித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தடை எச்சரிக்கையில் விவரிக்கப்பட்ட அதே காணி சம்பந்தமான சாதனமொன்று பதிவுக்காக அடுத்துப் பின்னர் முன்வைக்கப்பட்டுள்ளவிடத்து, இரண்டாம் அட்டவணையின் படிவம் XI நிலான அறிவித்தலொன்று தடை எச்சரிக்கையாளருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(5) அதன் (5)ஆம் உட்பிரிவில், "முப்பது நாட்களினுள் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அறுபது நாட்களினுள் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1)ஆம் உட்பிரிவில், "கைப்பற்றுகை முன்னுரிமை அறிவித்தலின், தடை எச்சரிக்கையின் அல்லது முடிவுறா வழக்கின்" என்னும் சொற்களுக்குப் பதிலாகக் "கைப்பற்றுகை முன்னுரிமை அறிவித்தலின் அல்லது முடிவுறா வழக்கின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(1அ) (அ) தடை எச்சரிக்கையொன்று பின்வருவோரினால் செய்யப்படும் எழுத்திலான கோரிக்கையின் பேரில், விடயத்துக்கேற்ப, மீளப்பெறப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்:-

(i) தடை எச்சரிக்கையாளரினால்;

(ii) ஓர் அற்றோணியினால்;

(iii) ஒரு தடை எச்சரிக்கையாளர் இறப்பதன்மேல், ஒரு நிறைவேற்றுநரினால், நிருவாகியினால், அல்லது ஒரு சட்டப்படியான மரபுரிமையாளரினால்;

(iv) எந்தப் பராயமடையாதவரின் அல்லது சித்தசுவாதீனமற்ற ஆளொருவரின் அல்லது உளக் குறைபாடுள்ள ஆளின் நலன்கருதி தடை எச்சரிக்கை செய்யப்பட்டதோ, அந்தப் பராயமடையாதவரின் அல்லது சித்தசுவாதீனமற்ற ஆளொருவரின் அல்லது உளக் குறைபாடுள்ள ஆளின் பாதுகாவலரினால் அல்லது உதவு நண்பனினால், பாதுகாவலர் இறப்பதன் மீது அல்லது அகற்றப்படுவதன் மீது வழியுரிமையாளரினால் அல்லது பராயமடையாதவர் பராயமடையும் வயதை எய்துவதன்மேல் பராயமடையாதவரினால்;

(v) கூட்டு தடை எச்சரிக்கையாளர்கள் இருக்குமிடத்தும், அவர்களுள் ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்டோர் இறப்பதன் மேலும், உயிரோடிருக்கும் தடை எச்சரிக்கையாளரினால் அல்லது தடை எச்சரிக்கையாளர்களினால்;

(vi) தடை எச்சரிக்கையாளர் வங்கி முறிந்தவர் ஒருவராகத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அலுவலக முறையான சாட்டுதல்பெறுநரினால்;

(vii) தடை எச்சரிக்கையாளர் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவும் மற்றும் ஒழித்துக்கட்டுதலின் கீழும் இருக்குமிடத்து, அத்துடன் தடை எச்சரிக்கையாளரினால் உரிமை கோரப்பட்ட மரணச்சொத்து அல்லது அக்கறை, நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட ஒழிப்போனுக்கு உரித்தாக வந்துள்ளவிடத்து, ஒழிப்போனினால் அல்லது அலுவலக முறையான பெறுநரினால்; அல்லது

(viii) ஒரு தடை எச்சரிக்கையின் விடயமாகவுள்ள ஒரு மரணச் சொத்தின் மீது தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் கட்டளை ஒன்று வழங்கப்பட்டுள்ளவிடத்து, ஒரு பிசுக்கால் அலுவலரினால் அல்லது அத்தகைய கட்டளையின் கீழான உரிமைகளைப் பெறுகின்ற வேறெவரேனுமாளினால்.

(ஆ) இதன் (அ) என்னும் பந்தியின்கீழ் மீளப்பெறு கைக்கான சாதனத்தைப் பெற்றதன் மீது, பதிவாளர்:-

(i) மேற்கூறப்பட்ட முறையிலும் தடை எச்சரிக்கையின் தேதியை எடுத்துக் கூறியும் இடாப்பிலுள்ள அதன் பதிவீட்டை இல்லாதொழித்தல் வேண்டும்; அத்துடன்

(ii) எந்த ஆளின் அல்லது ஆட்கள் குழுவின் ஒரு சாதனத்தினது பதிவுக்கான உரிமை, உரித்து அல்லது அக்கறை அத்தகைய தடை எச்சரிக்கையினால் பாதிக்கப்பட்டதோ அந்த ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு அறிவித்தல் வேண்டும்.".

(3) அதன் (2)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(2அ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒரு தடை எச்சரிக்கையின் மீது (2)ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் வழக்குநடவடிக்கை தொடர்பான ஏதேனும் அழைப்புக்கட்டளை, அறிவித்தல், பின்முற்றாகுந்தீர்வை அல்லது கட்டளை, 32ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iv)ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தடை எச்சரிக்கையாளரின் இலங்கையிலுள்ள முகவரிக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.".

(4) அதன் (3)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(4) எந்தக் காணி தொடர்பில் (3)ஆம் உட்பிரிவின்கீழ் தடை எச்சரிக்கையின் பதிவு இல்லாதொழிக்கப்பட்டதோ, அதே காணி தொடர்பில் அல்லது காணியிலான அதே அக்கறை தொடர்பில் அதே தடை எச்சரிக்கையாளரின் தடை எச்சரிக்கையொன்றைப் பதிவாளர் பதிவுசெய்தலாகாது.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50ஆம் பிரிவு, "பயன்படுத்தப்படுதல் வேண்டும், ஆனால் அத்தகைய அட்டவணை ஒழுங்குவிதி மூலம் திருத்தப்படலாம் அல்லது அதற்கெதுவும் சேர்க்கப்படலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பயன்படுத்தப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் படிவம் VIII நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய படிவங்களை இடுவதன்மூலமும்:-

"படிவம் VIII

[பிரிவு 32(ஆ)]

தடை எச்சரிக்கையின் படிவம்

..... ஆம் இலக்க (தே.அ.அட்டையை/கடவுச்சீட்டை/சாரதி உரிமத்தைக் கொண்டவரான ..... ஆகிய நான் (தடை எச்சரிக்கையாளரின் முழுப்பெயரும் முகவரியும்), இதற்கான அட்டவணையிற் குறிப்பீடுசெய்யப்பட்ட (என்னால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட/ ஏனையோரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட உரிமையை/ உரித்தை/ அல்லது அக்கறையைக் குறித்துரைக்கவும்) .... காணி சம்பந்தமான ஏதேனும் சாதனத்தின் பதிவுக்கான தடை எச்சரிக்கை பற்றிய அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுவதற்குத் தேவையுடையவராகவுள்ளேன் என்பதைக் கவனிக்கவும்.

அத்துடன் இந்தத் தடை எச்சரிக்கையை எனது சார்பில்/..... என்பவரின் சார்பில் (தடை எச்சரிக்கையாளர் சொந்தக்காரராகவிராதவிடத்து) பின்வரும் ஏதுவின்மீது/ஏதுக்களின் மீது முன்வைக்கின்றேன் என மேலும் வெளிப்படுத்துகின்றேன்.

.....ஆம் இலக்க உறுதியின் கீழான உரித்து ..... என்பவரின் இறுதிவிருப்பாவணத்தின் கீழ் ஏனையவை (குறித்துரைக்கவும்).....

அத்துடன் இதுதொடர்பான அறிவித்தல்கள் எந்த இடத்துக்கு அனுப்பப்படவேண்டுமோ அந்த இடமாக ..... என்னுமிடத்தை (இலங்கையிலுள்ள முகவரி) நியமிக்கின்றேன்.

.....

(தடை எச்சரிக்கையாளரின்/அவரது சட்டத்தரணியின்
அல்லது நொத்தாரிசுவின்/அற்றோணியின்/கையொப்பம்)

தேதி .....

..... என்போரின் முன்னிலையில் (இருசாட்சிகளினதும் முழுப்பெயரும் முகவரியும்) மேலே பெயர்குறிப்பிடப்பட்ட ..... என்பவரினால் கையொப்பமிடப்பட்டது.

1. முதலாவது சாட்சியின் கையொப்பம்

2. இரண்டாவது சாட்சியின் கையொப்பம்

அட்டவணை

(அறியப்பட்டிருப்பின், 13 ஆம் பிரிவிலும் முன்னைய பதிவிலும் உள்ளவாறு காணியை விவரிக்கவும்)"; அத்துடன்

(2) அவ்வட்டவணையின் படிவம் IX உடனடுத்துப் பின்வரும் புதிய படிவங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

"படிவம் X

[பிரிவு 32(1)(ஆ)(ii)]

எந்த ஆதனம் தொடர்பில் தடை எச்சரிக்கையொன்று செய்யப்பட்டுள்ளதோ அந்த ஆதனத்தின் சொந்தக்காரரொருவருக்கான அறிவித்தல்

..... ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் இக்காணிப்பதிவகத்தில் ..... ஆம் தொகுதியிலும் ..... ஆம் இருமடித்தாளிலும் பதிவுசெய்யப்பட்டதும் ..... எனப் பெயரிடப்பட்டதுமான ஆதனம் தொடர்பில் ..... என்னுமிடத்தைச் சேர்ந்த ..... என்பவரினால் தடை எச்சரிக்கையொன்று செய்யப்பட்டுள்ளதென்பதைக் கவனிக்கவும்.

(கையொப்பம்)
.....
..... இன்
காணிப்பதிவாளர்

தேதி.....

படிவம் XI

[பிரிவு 32(4)]

பதிவு முடிவுறாதுள்ள சாதனமொன்று பற்றி தடை எச்சரிப்பாளருக்கான அறிவித்தல்

உம்மால் சமர்ப்பிக்கப்பட்ட ..... ஆந் தேதிய ..... ஆம் இலக்க தடை எச்சரிக்கைக்கெதிராகவுள்ளவாறு, இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சாதனம் இக்காணிப் பதிவகத்தில் ..... இன்..... ஆம் தொகுதியிலும் ..... ஆம் இருமடித்தாளிலும் பதிவு முடிவுறாதுள்ளதாகவிருக்கின்றதென உமக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(கையொப்பம்)
.....
..... இன்
காணிப்பதிவாளர்

தேதி .....

உறுதி இல.	உறுதியின்/ சாதனத்தின் தன்மை	உறுதியை/ சாதனத்தை அத்தாட்சிப்படுத்திய நொத்தாரிசுவின் பெயர்	காணியின் விவரணம் (அட்டவணையின்படி)	திறந்தவர்கள்

6. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2022ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. (1) இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் வெவ்வேறு ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காக வெவ்வேறு தேதிகள் நியமிக்கப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 2ஆம்

பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

2. இலங்கைக் குடியரசில் நீதியை நிருவகிப்பதற்கான முதனிலை நீதிமன்றங்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம்;

(ஆ) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணங்களுக்கான மேல் நீதிமன்றங்கள்;

(இ) மாவட்ட நீதிமன்றங்கள்;

(ஈ) குடும்ப நீதிமன்றங்கள்;

(உ) சிறுகோரிக்கை நீதிமன்றங்கள்;

(ஊ) நீதிவான் நீதிமன்றங்கள்; அத்துடன்

(எ) ஆரம்ப நீதிமன்றங்கள்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

5. (1) இலங்கையின் ஒவ்வொரு நீதிமுறை மாவட்டத்திலும் ஒரு "மாவட்ட நீதிமன்றம்" இருத்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் கீழ் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஒரு குடும்ப நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்ட நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும்போது இது "குடும்ப நீதிமன்றமாகக்" கருதப்படுதலும், இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஒரு சிறுகோரிக்கை நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்ட நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும்போது இது "சிறுகோரிக்கை நீதிமன்றமாகக்" கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் ஒவ்வொரு நீதிமுறைப் பிரிவிலும் ஒரு "நீதிவான் நீதிமன்றமும்" ஓர் "ஆரம்ப நீதிமன்றமும்" இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒவ்வொரு நீதிமன்றமும் முறையே "மாவட்ட நீதிபதி", "குடும்ப நீதிமன்ற நீதிபதி" மற்றும் "சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதி", "நீதிவான்" அத்துடன் "ஆரம்ப நீதிமன்ற நீதிபதி" எனவழைக்கப்படவேண்டிய ஆளொருவரினாலும் அவர் முன்னரும் நடாத்தப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு நீதிமன்றமும், அமைச்சர் ஒழுங்குவிதி மூலம் காலத்துக்குக்காலம் நியமிக்க வேண்டியவாறாக, விடயத்துக்கேற்ப, அத்தகைய நீதிமுறை மாவட்டத்தினுள்ளான அல்லது பிரிவினுள்ளான அத்தகைய வசதியான இடத்தில் அல்லது இடங்களில் நடாத்தப்படலாம்:

ஆயின், இப்பிரிவிலுள்ளதெதுவும், நீதிபதி ஒவ்வொருவரும் அவரது ஆள்புல நியாயாதிக்கத்தினுள் ஏதேனும் வசதியான இடத்தில் நீதிமன்றத்தை நடாத்துவதற்குக் கொண்டுள்ள தத்துவத்தை மட்டுப்படுத்துவதாக அல்லது குறைப்பதாகப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலாகாது.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

5ஆ. (1) நீதிச்சேவை ஆணைக்குழுவானது, குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கின்ற ஒரு முதனிலை நீதிமன்றத்துக்கு அல்லது அதற்கு மேற்பட்ட முதனிலை நீதிமன்றங்களுக்கு, முன்விளக்க நீதிபதி எனவழைக்கப்படவேண்டிய மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதிவான்கள் என்போரிடையேயிருந்து ஒரு நீதிமுறை அலுவலரின் நியமனம் தேவையாகவுள்ளதென நீதிச்சேவை ஆணைக்குழு அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய நியமனத்தைச் செய்தல் வேண்டும்.

(2) முன்விளக்க நீதிபதி, (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளில் குறித்துரைக்கப்பட்டவாறு முன்விளக்க மாநாடுகளையும் மற்றும் அவர் எந்த நீதிமன்றத்துக்கு நியமிக்கப்படுகின்றாரோ அந்த நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஒரு குடியியல் வழக்கு நடவடிக்கையின் போது எழுந்துள்ளவையும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் குறித்தளிக்கப்பட்டவையுமான விளக்கத்துக்குப் பின்னரான கருமங்களைக் கவனித்தலும் கையாளுதலும் வேண்டும்.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(1) எல்லா மாவட்ட நீதிபதிகளும், குடும்ப நீதிமன்ற நீதிபதிகளும், சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதிகளும், நீதிவான்களும், ஆரம்ப நீதிமன்ற நீதிபதிகளும், அத்தகைய நீதிமன்றங்களின் அத்தகைய எல்லா மேலதிக நீதிபதிகளும் மேலதிக நீதிவான்களும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் அவர்களின் பதவிகளுக்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு, அதன் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(1) நீதிச்சேவை ஆணைக்குழுவானது, சந்தர்ப்பம் தேவைப்படுத்தக்கூடியவாறாக அவ்வெண்ணிக்கையினரான மேலதிக மாவட்ட நீதிபதிகளை, மேலதிகக் குடும்ப நீதிமன்ற நீதிபதிகளை, மேலதிகச் சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதிகளை, மேலதிக நீதிவான்களை அல்லது மேலதிக ஆரம்ப நீதிமன்ற நீதிபதிகளை முறையே அதே மாவட்ட நீதிமன்றத்துக்கு, குடும்ப நீதிமன்றத்துக்கு, சிறுகோரிக்கை நீதிமன்றத்துக்கு, நீதிவான் நீதிமன்றத்துக்கு மற்றும் ஆரம்ப நீதிமன்றத்துக்கு நியமிக்கலாம்.

(2) அத்தகைய ஏதேனும் நீதிமன்றத்துக்கு நியமிக்கப்படும் ஒவ்வொரு மேலதிக மாவட்ட நீதிபதியும், மேலதிகக் குடும்ப நீதிமன்ற நீதிபதியும், மேலதிகச் சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதியும், மேலதிக நீதிவானும் அல்லது மேலதிக ஆரம்ப நீதிமன்ற நீதிபதியும் தனிவேறாக அமர்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மேலதிக மாவட்ட நீதிபதி, மேலதிகக் குடும்ப நீதிமன்ற நீதிபதி, மேலதிகச் சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதி, மேலதிக நீதிவான் அல்லது மேலதிக ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, விடயத்துக்கேற்ப, அம்மாவட்டத்தின் அல்லது பிரிவின் எந்த மாவட்ட நீதிமன்றத்துக்கு, குடும்ப நீதிமன்றத்துக்கு, சிறுகோரிக்கை நீதிமன்றத்துக்கு, நீதிவான் நீதிமன்றத்துக்கு மற்றும் ஆரம்ப நீதிமன்றத்துக்கு அவ்வாறு நியமிக்கப்படுகின்றாரோ, முறையே அந்த மாவட்ட நீதிமன்றத்துக்கு, குடும்ப நீதிமன்றத்துக்கு, சிறுகோரிக்கை

நீதிமன்றத்துக்கு, நீதிவான் நீதிமன்றத்துக்கு மற்றும் ஆரம்ப நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும் நியாயாதிக் கத்தையும் பிரயோகித்தலும் வேண்டும்.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு, "மேல் நீதிமன்றத்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தால் அல்லது அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தால்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (அ) என்னும் பந்தியில், "மேல் நீதிமன்றத்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தால் அல்லது அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தால்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (ஆ) என்னும் பந்தியில், "மேல் நீதிமன்றத்தின் வேறு ஏதேனும் கட்டளை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தின் அல்லது அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தின் வேறு ஏதேனும் கட்டளை" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு அதன் (1)ஆம் உட்பிரிவில், "மேல் நீதிமன்றத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தின் அல்லது அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது:-

19. ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றமும் ஒரு பதிவேட்டு நீதிமன்றமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் எல்லாக் குடியியல், அரசிறை, நம்பிக்கைப் பொறுப்பு, கடனிறு வகையறவு மற்றும் மரணசாதனக் கருமங்களிலும் இச்சட்டத்தின் அத்தியாயம் Vஅ என்பதனால் அல்லது அதன் கீழ் அல்லது வேறேதேனும் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளினது பயனைக்கொண்டு, வேறேதேனும் நீதிமன்றத்துக்கு மூல நியாயாதிக்கம் என்றவகையாகப் புறநீங்கலாகக் குறித்தளிக்கப்படுகின்றவாறான அல்லது வேறேதேனும் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்படுகின்றவாறான மேற்கூறப்பட்ட கருமங்களுள் அத்தகையவை தவிர, அதன் மாவட்டத்தினுள் வரையறையற்ற மூல நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலும் அத்தகைய நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் குற்றப்பணங்களையும், தண்டங்களையும், இழப்பீடுகளையும் விதித்தலும் வேண்டும்; அத்துடன் அதேமுறையில் சித்தசுவாதீனமற்றவர்களாக மற்றும் இளங்கணர்களாக உள்ள ஆட்களின் மீதும் அவர்களின் மரணச்சொத்தின் மீதும், நம்பிக்கைப் பொறுப்பின் கீழான பயனுகரிகளின் மரணச் சொத்துக்களின் மீதும் மற்றும் பாதுகாவலர்கள் அத்துடன் நம்பிக்கைப்பொறுப்பாளர்களின் மீதும், மற்றும் எந்த வேறு கருமத்தில் மாவட்ட நீதிமன்றத்துக்குச் சட்டத்தினால் நியாயாதிக்கம் அளிக்கப்படுகின்றதோ அந்த வேறேதேனும் கருமத்திலும் நியாயாதிக்கம் கொண்டிருத்தலும் வேண்டும்.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1)ஆம் உட்பிரிவில் "மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (2)ஆம் உட்பிரிவில், முறையே, "மேன்முறையீட்டு நீதிமன்றத்திடமிருந்து" மற்றும் "மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்திடமிருந்து" மற்றும் "அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் V இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது:-

"அத்தியாயம் V

குடும்ப நீதிமன்றங்கள்

24. (1) ஒவ்வொரு குடும்ப நீதிமன்றமும் ஒரு பதிவேட்டு நீதிமன்றமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் திருமணஞ்சார் பிணக்குகள், மணநீக்கத்துக்கான வழக்குகள், திருமணத்தை வறிதாக்குதலும் பிரிவினையும், சோரம்போதலுக்கான சேதவீடுகள், பிரிமனைப் பணத்துக்கான உரிமைக் கோரிக்கைகள், திருமணஞ்சார் ஆதனம் தொடர்பில் வாழ்க்கைத்துணைகளுக்கும், பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் இடையேயான பிணக்குகள், பராயமடையாத பிள்ளைகளின் கட்டுக்காப்பு, தங்கிவாழுநர்களின் உரிமைக் கோரிக்கைகள், பாதுகாப்பாண்மை மற்றும் காப்பாண்மைக் கருமங்கள், சட்டமுறையாந்தன்மையை வெளிப்படுத்துதல் தொடர்பான உரிமைக் கோரிக்கைகள் மற்றும் சட்டமுறையற்றதன்மையும் திருமணமும், மகவேற்பு அத்துடன் பிறப்புப் பதிவுப் பதிவீடுகளைத் திருத்துவதற்கான விண்ணப்பங்கள், நிறையழிப்புக்கான மற்றும் திருமண வாக்குறுதி மீறலுக்கான உரிமைக்கோரிக்கைகள் அத்துடன் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அத்தகைய வேறு கருமங்கள் என்பன தொடர்பில் தனியான மூல நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்:

ஆயின், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ளதெதுவும், (113ஆம் அத்தியாயமான) கண்டியத் திருமண மற்றும் மணநீக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் (115ஆம் அத்தியாயமான) முஸ்லிம் திருமண மற்றும் மணநீக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் பாதித்தலாகாது.

(2) குடும்ப நீதிமன்றம் (1)ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் தனியானதும் புறநீங்கலானதுமான

நியாயாதிக்கத்தையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இதற்கான மூன்றாம் அட்டவணையிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சட்டவாக்கங்களுள் எவற்றிலும் அத்தகைய கருமங்கள் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்துக்கான குறிப்பீடு செய்யப்படுமிடத்து, அது ஒரு குடும்ப நீதிமன்றத்துக்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்:

ஆயின், அத்தகைய ஏதேனும் சட்டவாக்கத்தின் எவையேனும் ஏற்பாடுகளை மீறிப் புரியப்பட்டுள்ளனவெனச் சார்த்தப்பட்ட எவையேனும் தவறுகளுக்கு இவ்வுட்பிரிவு ஏற்புடைமை எதனையும் கொண்டிருத்தலாகாது.

(3) ஒரு பராயமடையாத பிள்ளையின் அல்லது ஏதேனும் திருமணத்தினது வாழ்க்கைத்துணையின் எவரேனும் பெற்றோரினால் அல்லது மற்றைய வாழ்க்கைத்துணையினால் அல்லது பாதுகாவலரினால் அல்லது உறவினரினால் பிழையான அல்லது சட்டவிரோதமான கட்டுக்காப்பில் வைத்திருக்கப்பட்டவராகச் சார்த்தப்பட்ட அத்தகைய பராயமடையாத பிள்ளையின் அல்லது வாழ்க்கைத்துணையின் கட்டுக்காப்புக்கான விண்ணப்பமொன்று குடும்ப நீதிமன்றத்தினால் கேட்கப்பட்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய நீதிமன்றம் அதனைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கும் விடயத்தின் நீதி தேவைப்படுத்த வேண்டியவாறாக அத்தகைய இடைக்கால மற்றும் இறுதிக் கட்டளைகளை ஆக்குவதற்கும் முழுத்தத்துவமும் நியாயாதிக்கமும் கொண்டிருத்தல் வேண்டும்.

25. சித்தசுவாதீனமற்ற ஆட்களினதும் உளக் குறைபாடுள்ள ஆட்களினதும் கவனிப்பும் கட்டுக்காப்பும் அவர்களின் ஆதனத்திற்கான பொறுப்பும் தொடர்பாக 20ஆம் பிரிவின் கீழ் மாவட்ட நீதிமன்றங்களின் நியாயாதிக்கமும் தத்துவங்களும், அதேமுறையிலும் அதே தத்துவங்களுடனும் பராயமடையாதவர்களாகவும் இளங்கணர்களாகவும் உள்ள ஆட்களைக் கவனித்தலும் அவர்களின் ஆதனத்திற்கான பொறுப்பும் தொடர்பாக ஒரு குடும்ப நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இலங்கையில் வதிபவர்களாக விராத பராயமடையாதவர்களினதும் இளங்கணர்களினதும் இலங்கையிலுள்ள ஆதனத்திற்கான பொறுப்புக்கு நீடித்தலும் வேண்டும்.

26. (1) ஒவ்வொரு நீதிமுறை மாவட்டத்துக்கும் "குடும்ப ஆலோசகர்" எனவழைக்கப்படவேண்டிய அலுவலரொருவர் இருத்தல் வேண்டும்.

(2) ஒரு குடும்ப நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள்ளான ஏதேனும் கருமம் தொடர்பில் ஏதேனும் வழக்கிலான பிணக்கொன்று அல்லது பராமரிப்புக்கான ஏதேனும் விண்ணப்பம், விடயத்துக்கேற்ப, ஒரு மாவட்ட நீதிபதி, குடும்ப நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் முன்னர் விசாரணைக்காக அல்லது விளக்கத்துக்காக வருமிடத்து, அத்தகைய மாவட்ட நீதிபதி, குடும்ப நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான், வழக்குக்கான எவரேனும் திறத்தவர் முரணான விருப்பமொன்றை எழுத்தில் வெளிப்படுத்தினாலொழிய, அத்தகைய பிணக்கை ஒரு குடும்ப ஆலோசகருக்கு ஆற்றுப் படுத்துதல் வேண்டுமென்பதுடன், அவர்-

(அ) அத்தகைய பிணக்கைத் திறத்தவர்கள் தீர்த்துவைப்பதனைத் தூண்டுவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) மாவட்ட நீதிபதியினால், குடும்ப நீதிமன்ற நீதிபதியினால் அல்லது நீதிவானினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலத்தினுள், விடயத்துக்கேற்ப, அத்தகைய மாவட்ட நீதிபதிக்கு, குடும்ப நீதிமன்ற நீதிபதிக்கு அல்லது நீதிவானுக்கு அதன் மீதான அவரது அறிக்கையைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(3) ஏதேனும் பிணக்குத் தீர்த்துவைக்கப்படுமிடத்து, தீர்த்துவைத்தல் நியதிகள் பதியப்படுதலும், பிணக்குக்கான ஒவ்வொரு திறத்தவரினாலும் குடும்ப ஆலோசகரினாலும் கையொப்பமிடப்படுதலும், விடயத்துக்கேற்ப, மாவட்ட நீதிபதிக்கு, குடும்ப நீதிமன்ற நீதிபதிக்கு அல்லது நீதிவானுக்கு அனுப்பிவைக்கப்படுதலும் வேண்டும்; அவர் அத்தகைய தீர்த்துவைத்தல் நியதிகளை அத்தகைய நீதிமன்றத்தின் தீர்வையொன்றென்றாற்போன்று பதிதல் வேண்டும்.

(4) குடும்ப ஆலோசகரொருவர் (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பிணக்கைத் தீர்த்துவைக்க இயலாதவராகவிருக்குமிடத்து, அவர் அத்தகைய பிணக்கை, விசாரணைக்கு அல்லது விளக்கத்துக்குப் பின் ரான தீர்மானத்துக்காக மாவட்ட நீதிபதிக்கு, குடும்ப நீதிமன்ற நீதிபதிக்கு அல்லது நீதிவானுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(5) மாவட்ட நீதிபதி, ஒரு குடும்ப நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் எவரும், ஏதேனும் பிணக்குத் தொடர்பிலான ஏதேனும் விசாரணை அல்லது விளக்கம் (4)ஆம் உட்பிரிவின் கீழ் குடும்ப ஆலோசகரினால் அவருக்கு ஆற்றுப்படுத்தப்படும் வரை, அத்தகைய பிணக்குத் தொடர்பிலான ஏதேனும் விசாரணையை அல்லது விளக்கத்தை நடாத்துதலாகாது.

27. விசாரணையின் அல்லது விளக்கத்தின் பின்னர் குடும்ப நீதிமன்றத்தினால் எடுத்து மொழியப்பட்ட தீர்ப்பு, தீர்வை அல்லது கட்டளையுடன் திருப்தியுறாத ஆளொருவர், மாவட்ட நீதிமன்றத்திலிருந்தான மேன்முறையீடுகளுக்கான முறையையும் நடவடிக்கைமுறையையும் ஆளுகின்ற ஏதேனும் சட்டம், ஒழுங்குவிதி அல்லது விதிக்கிணங்க, சட்டத்திலான அல்லது நிகழ்விலான ஏதேனும் வழுவுக்காக அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு அதற்கெதிராக மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

28. (1) ஒன்றுக்கு மேற்பட்ட குடும்ப நீதிமன்றங்களின் அதே அல்லது பொருளளவில் அதே குடும்பப் பிணக்குத் தொடர்பில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிவேறான வழக்கு நடவடிக்கைகள் அல்லது வழக்குகள் தொடுக்கப்படும் பட்சத்தில், அத்தகைய வழக்குநடவடிக்கைகளுக்கான அல்லது வழக்குகளுக்கான எவரேனும் திறத்தவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம் அல்லது சொல்லப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் அல்லது வழக்குகள் எந்தக் குடும்ப நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்தனவோ அத்தகைய குடும்ப நீதிமன்றத்தின் எவரேனும் நீதிபதி அக்கருமத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தலாம் என்பதுடன் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அது தகுதியானதெனக் கருதக்கூடியவாறாக, அத்தகைய எல்லாப் பிணக்குகளும் ஒரு குடும்ப நீதிமன்றத்தில் வசதியானமுறையில் அல்லது துரிதமானமுறையில் கேட்டுத் தீர்மானிக்கப்படக்கூடிய வகையில், சொல்லப்பட்ட திறத்தவர்களினால் எந்தக் குடும்ப நீதிமன்றங்களில் வழக்குநடவடிக்கைகள் அல்லது வழக்குகள் ஏலவே தொடுக்கப்பட்டுள்ளனவோ அந்தக் குடும்ப நீதிமன்றங்களுள் ஒன்றுக்கு அத்தகைய வழக்குநடவடிக்கைகளுள் அல்லது வழக்குகளுள் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை இடமாற்றுதலும் வேண்டும்.

(2) அதே திறத்தவர்களுக்கிடையேயுள்ளவாறாக அல்லது பொருளளவில் அதே கருமம் தொடர்பாக அதே குடும்ப நீதிமன்றத்தில் இரண்டு

அல்லது அதற்குமேற்பட்ட வழக்கு நடவடிக்கைகள் அல்லது வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ள அல்லது முடிவுறாதுள்ள பட்சத்தில், சொல்லப்பட்ட நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் அத்தகைய வழக்கு நடவடிக்கைகளை அல்லது வழக்குகளைத் தனியொரு வழக்கு நடவடிக்கையாக ஒன்றுதிரட்டுதல் வசதியாகவிருப்பின் அல்லது நீதிநலன்கருதியும் பிணக்கிலுள்ள அத்தகைய கருமங்களின் துரிதமான கையாளுகைக்கும் அவ்வாறு அவசியமாகவிருப்பின், அவ்வாறு செய்யுமாறு பணித்தல் சொல்லப்பட்ட நீதிமன்றத்துக்குத் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும். நீதிமன்றமானது, அத்தகையவொரு பட்சத்தில், விடயத்தின் அவசர நிலைமைகளும் நீதியும் தேவைப்படுத்தக்கூடியவாறாகக் காலத்துக்குக் காலம் அத்தகைய கட்டளையை ஆக்கலாம் அல்லது அத்தகைய தீர்ப்பைக் கூறலாம் அல்லது அத்தகைய தீர்வையைப் பதியலாம்.

29. (1) ஒரு குடும்ப நீதிமன்றத்திலான எல்லா வழக்கு நடவடிக்கைகளும் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கிணங்க இயன்றளவு துரிதமானமுறையில் தொடுக்கப்படுதலும் நடாத்தப்படுதலும் வேண்டும்:

ஆயின், அத்தகைய ஒழுங்குவிதிகள் அவ்வாறு விதித்துரைக்கப்பட்டுள்ளவரை, குடும்ப நீதிமன்றமானது, செயல்முறைக்குகந்தவரை, (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையிலுள்ள சுருக்க நடவடிக்கைமுறை தொடர்பான ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

(2) (61ஆம் அத்தியாயமான) மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான வழக்கு நடவடிக்கை களைத் தொடுத்தலையும் நடாத்துதலையும் ஆளுகின்ற சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், குடும்ப நீதிமன்றத்தில் தொடுக்கப்படக்கூடிய அத்தகைய வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையனவாகின்றனவெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) பராயமடையாத பிள்ளைகளின் கவனிப்புக்கும் கட்டுக்காப்புக்குமான எல்லா விண்ணப்பங்களும் ஒவ்வொரு குடும்ப நீதிமன்றத்திலும் மற்றெல்லாக் கருமங்களைப்பார்க்கிலும் முந்துரிமை பெறுதல் வேண்டுமென்பதுடன் விதிவிலக்கான சூழ்நிலைகள் அவ்வாறு அனுமதித்தாலொழிய, அவற்றின் துரிதமான கையாளுகையை உறுதிப்படுத்துவதற்கு நாளாந்தம் கேட்கப்படுதலும் வேண்டும்.".

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் V யை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் இது அச்சட்டவாக்கத்தின் அத்தியாயம் Vஅ எனப் பயனுறுதலும் வேண்டும்:-

"அத்தியாயம் Vஅ

சிறுகோரிக்கை நீதிமன்றங்கள்

29அ. (1) ஒவ்வொரு சிறுகோரிக்கை நீதிமன்றமும் ஒரு பதிவேட்டு நீதிமன்றமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் புறநீங்கலான மூலக்குடியியல் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலும் இதற்கான ஏழாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட எல்லா வழக்குகளையும் கவனத்துட் கொள்வதற்கும் கேட்டுத் தீர்மானிப்பதற்குமான முழுத்தத்துவத்தையும் கொண்டிருத்தலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், சிறுகோரிக்கை நீதிமன்றமொன்று, (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயம் LIII இன் ஏற்பாடுகளின் கீழ் கோப்பிடப்பட்ட ஏதேனும் வழக்கை அல்லது பண அறவீட்டுக்கான எந்த வழக்குக்கு வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் விசேட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவோ அந்த வழக்கைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு நியாயாதிக்கம் அல்லது தத்துவம் எதனையும் கொண்டிருத்தலாகாது.

(2) ஏழாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட எல்லா வழக்குகளும் வட்டி நீங்கலாக ஒரு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாப் பணத்தொகையை அல்லது வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையொன்றின் மூலம் அமைச்சரினால் காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகையை விஞ்சுதலாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று, அது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படும்வரை பயனுறுதலாகாது.

29ஆ. ஏதேனும் சிறுகோரிக்கை நீதிமன்றத் தின்முன்னரான வழக்குநடவடிக்கைகள், 2022ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, சிறுகோரிக்கை நீதிமன்றங் களின் நடவடிக்கைமுறைச் சட்டத்திலும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திலும் ஏற்பாடுசெய்யப் பட்டவாறாகச் சிறுகோரிக்கை நீதிமன்றங்களுக்கான விசேட நடவடிக்கை முறையின்மூலம் எடுக்கப்படலாம்.

29இ. ஒவ்வொரு சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதியும், ஏதேனும் விடயத்தில் அவரது கட்டளையை அல்லது தீர்ப்பை எடுத்துமொழிவதில் நீதியானதும் நியாயமானதுமென அவருக்குத் தோன்றவேண்டியவாறாகச் செலவுத் தொகைகளினதும் செலவுகளினதும் கொடுப்பனவுத் தொடர்பில் அத்தகைய கட்டளையை ஆக்குதல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

29ஈ. (1) எந்த வழக்குக்கு, வழக்குநடவடிக்கைக்கு அல்லது கருமத்துக்கு எவரேனுமாள் திறத்தவரொருவராக உள்ளாரோ அந்த ஏதேனும் வழக்கில், வழக்குநடவடிக்கையில் அல்லது கருமத்தில் ஏதேனும் சிறுகோரிக்கை நீதிமன்றத்தினால் எடுத்துமொழியப்பட்ட ஏதேனும் தீர்ப்புடன் திருப்தியுறாத அந்த எவரேனுமாள், அத்தகைய உரிமைக்கு வெளிப்படையாக அனுமதி மறுக்கப்படுமிடத்துத்தவிர, சட்டத்திலான அல்லது நிகழ்விலான ஏதேனும் வழுவுக்காக அத்தகைய சிறுகோரிக்கை நீதிமன்றம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளதோ அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் மூலம் தாபிக்கப்பட்ட அந்த மாகாணத்திற்கான மேல் நீதிமன்றத்துக்கு அதற்கெதிரான மேன்முறை யீடொன்றைச் செய்யலாம்.

(2) எந்த வழக்குக்கு, வழக்கு நடவடிக்கைக்கு அல்லது கருமத்துக்கு எவரேனுமாள் திறத்தவரொருவராக உள்ளாரோ அல்லது இருப்பதற்கு நாடுகின்றாரோ அந்த ஏதேனும் வழக்கின் போது, வழக்குநடவடிக்கையின் போது அல்லது கருமத்தின்போது ஏதேனும் சிறுகோரிக்கை நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையுடன் திருப்தியுறாத அந்த எவரேனுமாள், அத்தகைய சிறுகோரிக்கை நீதிமன்றம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளதோ அரசியலமைப் பின் 154ஞ என்னும் உறுப்புரையின்மூலம் தாபிக்கப்பட்ட அந்த மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு, முதலில் கேட்டுப் பெறப்பட்ட அத்தகைய மேல் நீதிமன்றத்தின் அனுமதியுடன், சட்டத்திலான அல்லது நிகழ்விலான ஏதேனும் வழுவைத் திருத்துவதற்காக அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

(3) எந்த வழக்குக்கு, வழக்கு நடவடிக்கைக்கு அல்லது கருமத்துக்கு எவரேனுமாள் திறத்தவரொருவராக உள்ளாரோ அல்லது திறத்தவரொருவராக இருப்பதற்கு நாடுகின்றாரோ அந்த ஏதேனும் வழக்கின் போது, வழக்குநடவடிக்கையின் போது அல்லது கருமத்தின் போது தவறுகையின்மேல் பதியப்பட்ட தீர்ப்பைத் தள்ளிவைக்கின்றதும் அல்லது தள்ளிவைக்க மறுக்கின்றதும் ஏதேனும் சிறுகோரிக்கை நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டதுமான ஏதேனும் கட்டளையுடன் திருப்தியுறாத எவரேனுமாள், அத்தகைய சிறுகோரிக்கை நீதிமன்றம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளதோ அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட அந்த மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு, முதலில் கேட்டுப் பெறப்பட்ட அத்தகைய மேல் நீதிமன்றத்தின் அனுமதியுடன், சட்டத்திலான அல்லது நிகழ்விலான ஏதேனும் வழுவைத் திருத்துவதற்காக மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

(4) மேன்முறையீடு மற்றும் மேன்முறையீடு முடிவுறாதிருக்கும்வரை நிறைவேற்றுகையை நிறுத்திவைத்தல் தொடர்பாக (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயங்கள் LVIII, LIX, LX மற்றும் LXI என்பவற்றின் ஏற்பாடுகள், அவை இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) ஒவ்வொரு சிறுகோரிக்கை நீதிமன்றத்தினதும் நீதிபதி, ஏதேனும் மேன்முறையீட்டில் ஆக்கப்பட்டு எடுத்துமொழியப்படவேண்டியவாறான உயர்நீதி மன்றத்தின், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தின் அத்தகைய எல்லாத் தீர்ப்புகளுக்கும், கட்டளைகளுக்கும், தீர்வைகளுக்கும், சொல்லப்பட்ட நீதிபதியினால் எடுத்துமொழியப்பட்ட ஏதேனும் மூலத் தீர்ப்பு அல்லது கட்டளை நிறைவேற்றப்படக் கூடியவாறான அல்லது நிறைவேற்றப்பட்டிருக்கக் கூடியவாறான அதே முறையில் இசைந்தொழுகுதலும் அவற்றை நிறைவேற்றுதலும் வேண்டும்.

29உ. தோதானவிடத்து, பிணக்கிற்கான தீர்வொன்றுக்கு வரும்படி விளக்கத்தின்முன்னர் அல்லது விளக்கத்தின் போது சட்டமுறையான எல்லா வழிவகைகள் மூலமும் திறத்தவர்களைத் தூண்டுவதற்கு ஒவ்வொரு முயற்சியையும் செய்வது சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதியின் கடமையாதல் வேண்டுமென்பதுடன் திறத்தவர்கள் தீர்வொன்றுக்கு உடன்படின், தீர்வு திறத்தவர்களினால் பதியப்பட்டு கையெழுத்திடப்படுவதுடன் தீர்க்கப்பட்டவாறாக நியதிகளுக்கிணங்க தீர்ப்பொன்று ஆக்குதல் வேண்டும்.".

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவு, "மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் VI என்பதை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் இது அச்சட்டவாக்கத்தின் அத்தியாயம் VII எனப் பயனுறுதலும் வேண்டும்:-

"அத்தியாயம் VII

ஆரம்ப நீதிமன்றங்கள்

32. (1) ஒவ்வோர் ஆரம்ப நீதிமன்றமும், வேறே தேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, தனிசு, சேதவீடு, கோரிக்கை அல்லது உரிமைக்கோரிக்கை ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவிடத்து, மூலக் குடியியல் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் உள்ளூர் அதிகாரசபைகளின் துணைவிதிகளை வலுவுறுத்துதல் மற்றும் அத்தகைய உள்ளூர் அதிகாரசபைகளின் அரசிறையை அறவிடுதல் தொடர்பான கருமங்கள் தொடர்பிலான நியாயாதிக்கத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஆரம்ப நீதிமன்றங்கள், இதற்கான நான்காம் அட்டவணையிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பிணக்குகள் தொடர்பில், அத்தகைய உரிமைக்கோரிக்கையின் பெறுமதியைப் பொருட்படுத்தாது, நியாயாதிக்கம் எதனையும் கொண்டிருத்தலாகாது.

33. (1) ஒவ்வோர் ஆரம்ப நீதிமன்றமும், அமைச்சரினால் ஒழுங்குவிதி மூலம் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய தவறுகள் தொடர்பில் புறநீங்கலான மூலக் குற்றவியல் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அமைச்சர், அவ்வொழுங்குவிதியில், ஒவ்வொரு தவறின் விடயத்திலும் அத்தகைய ஒவ்வொரு தவறு தொடர்பிலுமான வரையறைகள், மட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளைக் குறித்துரைக்கலாம்.

(2) ஆரம்ப நீதிமன்றங்கள், ஏதேனும் சட்டவாக்கத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைநிலைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளை மீறிப் புரியப்பட்டுள்ளனவெனச் சார்த்தப்பட்டவையும், அவை தொடர்பில் அத்தகைய நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் உரித்தாக்கப்படுகின்றவையுமான எல்லாத் தவறுகள் தொடர்பிலும் தனியான மற்றும் புறநீங்கலான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவிலுள்ளதெதுவும், (1)ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறு விளங்கப்பட்ட பின்னர் குற்றவாளியாகக் காணப்பட்ட எவரேனுமாளுக்கு நீதிவானொருவர் குற்றத்தீர்ப்பளிப்பதனை மற்றும் அவருக்குத் தண்டனைத் தீர்ப்பளிப்பதனைத் தடைசெய்தலாகாது.

34. (1) ஏதேனும் குடியியல் வழக்கு நடவடிக்கை அல்லது கருமம் ஓர் ஆரம்ப நீதிமன்றத்தில் தொடுக்கப்படுமிடத்து, திறத்தவர்களைத் தன்முன்னர் தோன்றும்படி கட்டளைவிட்டழைப்பதும் தோதானவிடத்தெல்லாம் விசாரணையை அல்லது விளக்கத்தை மேற்கொள்ளு முன்னர் ஒரு தீர்வுக்கு வரும்படி அத்தகைய திறத்தவர்களைத் தூண்டுவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுப்பதும் அவ் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் கடமையாதல் வேண்டும். அத்தகைய திறத்தவர்கள் ஒரு தீர்வுக்கு உடன்படுமிடத்து, அத்தகைய தீர்வு அதற்கான திறத்தவர்களினால் பதியப்பட்டுக் கையொப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன், சொல்லப்பட்ட ஆரம்ப நீதிமன்றத்தின் தீர்வையொன்றாகப் பதியப்படுதலும் அதன் தீர்வையொன்றாக வறுவுறுத்தப்படற்பாலதாதலும் வேண்டும்.

(2) ஏதேனும் குற்றவியல் வழக்குநடவடிக்கை அல்லது கருமம் ஓர் ஆரம்ப நீதிமன்றத்தில் தொடுக்கப்படுமிடத்து, சம்பந்தப்பட்ட திறத்தவர் களைத் தன்முன்னர் தோன்றும்படி கட்டளைவிட்டழைத்தலும் தோதானவிடத்தெல்லாம் ஒரு தீர்வுக்கு வரும்படி அத்தகைய திறத்தவர்களை ஊக்குவித்தலும் அந்நீதிமன்ற நீதிபதியின் கடமையாதல் வேண்டும். அத்தகைய திறத்தவர்கள் ஒரு தீர்வுக்கு உடன்படுமிடத்து, அத்தகைய தீர்வு சம்பந்தப்பட்ட திறத்தவர்களினால் பதியப்பட்டுக் கையொப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன் வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அவ்வழக்கு நடவடிக்கை அல்லது கருமம் எத்தவறு தொடர்பானதோ அத்தவறு இணக்கப்படுதலும் வேண்டும்.

35. (1) ஓர் ஆரம்ப நீதிமன்றத்தினாலான விசாரணை அல்லது விளக்கத்துக்குப் பின்னர் பதியப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் தீர்ப்பு, கட்டளை, தீர்வை, குற்றத்தீர்ப்பு அல்லது தண்டனையினால் இன்னலுற்ற எவரேனும் திறத்தவர் ஏதேனும் சட்டத்துக்கமையவும் அவ்வாறு மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கை முறையையும் முறையையும் ஆளுகின்ற ஏதேனும் சட்டம், ஒழுங்குவிதி அல்லது விதிக்கிணங்கவும், சட்டத்திலான அல்லது நிகழ்விலான ஏதேனும் வழுவுக்காக அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக் கான மேல் நீதிமன்றத்துக்கு அதற்கெதிராக மேன் முறையீடு செய்யலாம்:

ஆயின், அவ்வாறு மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கைமுறையையும் முறையையும் ஆளுகின்ற அத்தகைய சட்டம், ஒழுங்குவிதி அல்லது விதி எதுவும் இல்லாதவிடத்து, ஒரு நீதிவான் நீதிமன்றத்திலிருந்தான மேன்முறையீடுகள் தொடர்பான ஏற்பாடுகள், ஒரு குற்றவியல் கருமத்திலான அல்லது வழக்கு நடவடிக்கையிலான மேன்முறையீடொன்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன் ஒரு மாவட்ட நீதிமன்றத்திலிருந்தான மேன்முறையீடுகள் தொடர்பான ஏற்பாடுகள், ஒரு குடியியல் கருமத்திலான அல்லது வழக்கு நடவடிக்கையிலான மேன்முறையீடொன்றுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்ட திறத்தவர்களுக்கிடையேயான பிணக்கின் தீர்த்துவைத்தல் காரணமாகப் பதியப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் தீர்ப்பு, கட்டளை, தீர்வை, குற்றத்தீர்ப்பு அல்லது தண்டனைத் தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடெதுவும் செய்யப்படுதலாகாது.

36. ஓர் ஆரம்ப நீதிமன்றத்திலான எல்லா வழக்கு நடவடிக்கைகளும் அவற்றுக்கு ஏற்புடையற்பாலதாக இருக்கக்கூடியவாறான அத்தகைய சட்டத்துக்கிணங்கவும் அத்தகைய சட்டமெதுவும் இராதிருப்பின், ஒரு குடியியல் கருமம் அல்லது வழக்குநடவடிக்கை தொடர்பில் (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையிலான சுருக்க நடவடிக்கைமுறை தொடர்பான ஏற்பாடுகளுக்கிணங்கவும் ஒரு குற்றவியல் கருமம் அல்லது வழக்குநடவடிக்கை தொடர்பில் ஒரு நீதிவான் நீதிமன்றத்திலான சுருக்கமுறை விளக்கங்கள் தொடர்பான ஏற்பாடுகளுக்கிணங்கவும் இயன்றளவு துரிதமான முறையில் தொடுக்கப்படுதலும் நடாத்தப்படுதலும் வேண்டும்.".

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

37. அரசியலமைப்பினதும் வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிணங்க-

(அ) இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தி லிருந்தான அல்லது அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்திலிருந்தான ஏதேனும் மேன்முறையீட்டில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஏதேனும் தீர்ப்பு அல்லது கட்டளைக்கெதிராக; அல்லது

(ஆ) மாவட்ட நீதிமன்றங்கள், குடும்ப நீதிமன்றங்கள், சிறுகோரிக்கை நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள் அல்லது ஆரம்ப நீதிமன்றங்களிலிருந்தான ஏதேனும் மேன்முறையீட்டில் அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தின் ஏதேனும் தீர்ப்பு அல்லது கட்டளைக்கெதிராக, உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமையொன்று இருத்தல் வேண்டும்.".

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை அதன் (1)ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) மீள இலக்கமிடப்பட்ட அதன் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றம் தவிர்ந்த முதனிலை நீதிமன்றம் ஒவ்வொன்றும், அத்தகைய முதனிலை நீதிமன்றத்திலிருந்து அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கான எல்லா மேன்முறையீட்டு விடயங்களிலும், அத்தகைய மேன்முறையீட்டில் ஆக்கப்பட்டு எடுத்துமொழியக்கப்பட வேண்டியவாறு, அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தின் அத்தகைய எல்லாத் தீர்ப்புகளுக்கும் கட்டளைகளுக்கும் தீர்வைகளுக்கும், அத்தகைய தீர்ப்பு, கட்டளை அல்லது தீர்வை அத்தகைய முதனிலை நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டு எடுத்து மொழியப்பட்டது என்றாற்போன்று அதேமுறையில் இசைந்தொழுகுதலும் அவற்றை நிறைவேற்றுதலும் வேண்டும்.".

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45ஆம் பிரிவு, அதன் (4)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(4) இரண்டாம் மற்றும் (3)ஆம் உட்பிரிவுகளின் கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு சமாதான நீதிவானும் ஒவ்வோர் அலுவலகமுறையற்ற நீதிவானும், ஒரு மேல் நீதிமன்ற நீதிபதி, மாவட்ட நீதிபதி, குடும்ப நீதிமன்ற நீதிபதி, சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதி, நீதிவான் அல்லது ஆரம்ப நீதிமன்ற நீதிபதி முன்னர், அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பதவிக்கான ஒரு சத்தியத்தை அல்லது உறுதியுரையைச் செய்து கீழொப்பமிடுதல் வேண்டும் அல்லது மொழிந்து கீழொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒவ்வொரு நீதிபதியும், அதற்கான விண்ணப்பத்தின் மேல், அதனை எடுத்தோதுவதற்கும் சொல்லப்பட்ட சத்தியம் அல்லது உறுதியுரை அவரினால் முறையாக எடுத்தோதப்பட்டுப் பெறப்பட்டதென அவரது நீதிமன்றப் பதிவேடுகளில் பதிவதற்கும் அத்தகைய பதிவீட்டின் பிரதியொன்றை உயர் நீதிமன்றத்தின் பதிவேடுகளில் பதியப்படுவதற்கு உயர் நீதிமன்றப் பதிவாளருக்கு உடனடியாக அனுப்புவதற்கும் தத்துவமளிக்கப்பட்டுத் தேவைப்படுத்தப்படுகின்றார்.".

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49ஆம் பிரிவு, அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"ஆயின், வேறு ஒவ்வொரு விடயத்திலும் அருகாமையிலுள்ள ஏதேனும் வலயத்தின், மாவட்டத்தின் அல்லது பிரிவின், விடயத்துக்கேற்ப, இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தின், அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல்

நீதிமன்றத்தின், மாவட்ட நீதிமன்றத்தின், குடும்ப நீதிமன்றத்தின், சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் வேறெவரேனும் நீதிபதி, நீதிவான் நீதிமன்றத்தின் நீதிவான் மற்றும் ஆரம்ப நீதிமன்றத்தின் நீதிபதி, அத்தகைய வழக்கை, குற்றவழக்கை, வழக்கு நடவடிக்கையை அல்லது கருமத்தைக் கேட்டு, விளங்கித் தீர்மானிப்பதற்கான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1)ஆம் உட்பிரிவில் "இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட மேல் நீதிமன்றத்துக்கும் மாவட்ட நீதிமன்றங்கள், சிறுகோரிக்கை நீதிமன்றங்கள் மற்றும் நீதிவான் நீதிமன்றங்கள் ஆகிய ஒவ்வொன்றுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்துக்கும், அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கும் மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள், குடும்ப நீதிமன்றங்கள், சிறுகோரிக்கை நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள் அத்துடன் ஆரம்ப நீதிமன்றங்கள் ஆகிய ஒவ்வொன்றுக்கும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (2)ஆம் உட்பிரிவில், மேல் நீதிமன்றப் பதிவாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றப் பதிவாளர் மற்றும் அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றப் பதிவாளர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவில் "மேல் நீதிமன்றத்தில், மாவட்ட நீதிமன்றத்தில் அல்லது சிறுகோரிக்கை நீதிமன்றம் ஒன்றில் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில்-" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தில், அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தில், மாவட்ட நீதிமன்றத்தில், குடும்ப நீதிமன்றத்தில் அல்லது சிறுகோரிக்கை நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில்-" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

55. (1) ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றமும், குடும்ப நீதிமன்றமும், சிறுகோரிக்கை நீதிமன்றமும், நீதிவான் நீதிமன்றமும் மற்றும் ஆரம்ப நீதிமன்றமும், அதன் முறையான அதிகாரத்தையும் வினைத்திறனையும் பேணும் நோக்கத்துக்காக, நீதிமன்றத்தின் சமுகத்திலேயே புரியப்பட்ட ஒவ்வொரு நீதிமன்ற அவமதிப்புத் தவறையும் மற்றும் சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் முறையே ஏதேனும் செயலின் போது அல்லது வழக்கு நடவடிக்கையின்போது புரியப்படுகின்றவையும் நீதிமன்ற அவமதிப்பாகத் தண்டிக்கப்படற்பாலதாக விருப்பனவென அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தினால் வெளிப்படுத்தப்படுகின்றவையுமான எல்லாத் தவறுகளையும் கவனத்துட் கொள்வதற்கும் இதனகத்துப் பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக அதன்சார்பிலான தண்டங்களுடன் தண்டிப்பதற்கும் விசேட நியாயாதிக்கமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்ப, குற்றப் பணங்கள் அல்லது மறியற்றண்டனை என்ற பின்வரும் தண்டனைத் தீர்ப்புகள், அவமதிப்புக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது முறையே பின்வரும் நீதிமன்றங்களினால் விதிக்கப்படலாம்; அதாவது-

(அ) ஒரு மாவட்ட நீதிமன்றத்தினால் மற்றும் குடும்ப நீதிமன்றத்தினால் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணம் அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு, ஒன்றில் சாதாரண அல்லது கடுழிய மறியற்றண்டனை;

(ஆ) ஒரு சிறுகோரிக்கை நீதிமன்றத்தினால் மற்றும் நீதிவான் நீதிமன்றத்தினால், ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணம் அல்லது பதினெட்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு, ஒன்றில் சாதாரண அல்லது கடுழிய மறியற்றண்டனை; அத்துடன்

(இ) ஓர் ஆரம்ப நீதிமன்றத்தினால், ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணம் அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு, ஒன்றில் சாதாரண அல்லது கடுழிய மறியற்றண்டனை.".

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 56ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 57ஆம் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

57. இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் நீதிமுறைப் பிரிவின் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியொருவர் நியமிக்கப்பட்டிராதவிடத்து, அத்தகைய பிரிவின் நீதிவான் அத்தகைய ஆரம்ப நீதிமன்ற நீதிபதியொருவர் நியமிக்கப்படும்வரை எல்லா நோக்கங்களுக்காகவும், அத்தகைய பிரிவின் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியாக இருக்கின்றவராகக் கருதப்படுதலும் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் எல்லா நியாயாதிக்கங்களையும் பிரயோகித்தலும் வேண்டும்:

ஆயின், அத்தகைய பிரிவின் ஆரம்ப நீதிமன்றமொன்றின் நீதிபதியொருவர் நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய பிரிவின் நீதிவான், எந்தக் குற்றவழக்குகளில், வழக்குகளில், வழக்கு நடவடிக்கைகளில் அல்லது கருமங்களில் அத்தகைய நீதிவான் ஏதேனும் சான்றைப் பதிவதற்குத் தொடங்கியுள்ளாரோ அந்த எல்லாக் குற்றவழக்குகளையும், வழக்குகளையும், வழக்கு நடவடிக்கைகளையும் அல்லது கருமங்களையும் கேட்டுத் தீர்மானித்தல் வேண்டும்.".

25. முதன்மைச் சட்டவாக்கமானது, அதன் இரண்டாம் அட்டவணையை உடனடுத்துப் பின்வரும் புதிய அட்டவணைகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

மூன்றாம் அட்டவணை

[பிரிவு 24(2)]

சட்டவாக்கங்கள்

(1) (61ஆம் அத்தியாயமான) மகவேற்புக் கட்டளைச் சட்டம்

(2) (110ஆம் அத்தியாயமான) பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம்

(3) (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை

(4) (58ஆம் அத்தியாயமான) யாழ்ப்பாணத் திருமணஞ்சார் உரிமைகள் மற்றும் மரபுரிமைக் கட்டளைச் சட்டம்

(5) 1970ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, சட்டமுறையாந்தன்மைச் சட்டம்

(6) (112ஆம் அத்தியாயமான) திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டம்

(7) (56ஆம் அத்தியாயமான) திருமணமான பெண்களின் ஆதனக் கட்டளைச் சட்டம்

(8) (57ஆம் அத்தியாயமான) திருமணஞ்சார் உரிமைகள் மற்றும் மரபுரிமைக் கட்டளைச் சட்டம்

நான்காம் அட்டவணை

[பிரிவு 32(2)]

ஆரம்ப நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திலிருந்து தவிர்க்கப்பட்ட வழக்குகள்

(1) அரசினால் செய்யப்பட்டதாக அல்லது ஆக்கப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற ஒரு செயல் அல்லது கட்டளை சம்பந்தமான அல்லது அரசின் கட்டளையினால் எவரேனும் ஆளினால் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற செயலொன்று சம்மந்தமான ஏதேனும் வழக்கு.

(2) ஒரு நீதிமன்றத்தின் அல்லது ஒரு நீதிமுறை அலுவலர் அவரது பதவியை நிறைவேற்றிச் செயலாற்றுகையில் அவரின் தீர்ப்பு அல்லது கட்டளை ஒன்றைப் பின்பற்றி எவரேனுமாளினால் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற ஒரு செயல் சம்பந்தமான ஏதேனும் வழக்கு.

(3) அரசின் எவரேனும் அலுவலரினால் அவரது அலுவலகமுறையான தன்மையில் செய்யப்பட்டதாக அல்லது ஆக்கப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் செயல் அல்லது கட்டளை சம்பந்தமான ஏதேனும் வழக்கு.

(4) அப்போதைக்கு வலுவிலுள்ள பிரிவிடுதல் தொடர்பான சட்டத்தின் கீழ் அசைவற்ற ஆதனத்தின் பிரிவிடுதலுக்கான அல்லது விற்பனைக்கான ஏதேனும் வழக்கு.

(5) ஈட்டை வலுவுறுத்துவதற்காக அல்லது ஆதனத்தை விற்பனை செய்வதற்காக அசைவற்ற ஆதனத்தின் ஈடுபெறுநர் ஒருவரினாலான அல்லது ஈட்டை மீட்பதற்காக அசைவற்ற ஆதனத்தின் ஈடுவைப்பவர் ஒருவரினாலான ஏதேனும் வழக்கு.

(6) கழிவைக் கட்டுப்படுத்துவதற்கான ஏதேனும் வழக்கு.

(7) (460ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டத்தின் கீழ் அல்லது தேசிய அரசுப் பேரவையின் 1972ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் எந்த ஆளுக்கு நட்டஈடு செலுத்தப்பட்டுள்ளதோ அந்த ஆளிடமிருந்து நட்டஈட்டின் முழுமையையும் அல்லது ஏதேனும் பாகத்தை அறவிடுவதற்கான ஏதேனும் வழக்கு.

(8) ஓர் ஒப்பந்தத்தின் குறித்த செயல்நிறைவேற்றத்துக்கான அல்லது ஒழிப்புக்கான அல்லது ஒப்பந்த மீறுகைக்கான சேதவீடுகளுக்கான ஏதேனும் வழக்கு.

(9) ஒரு தடையுத்தரவை நிவர்த்திசெய்வதற்கான அல்லது இல்லாதாக்குவதற்கான ஏதேனும் வழக்கு.

(10) ஒரு தடையுத்தரவைப் பெற்றுக்கொள்வதற்கான ஏதேனும் வழக்கு.

(11) ஒரு நம்பிக்கைப்பொறுப்பு மீறுகையொன்றினால் ஏற்படுத்தப்பட்ட இழப்பை இறந்துபோன ஒரு நம்பிக்கைப்பொறுப்பாளரின் பொதுவான மரணச்சொத்திலிருந்து ஈடுசெய்வதற்கான வழக்கொன்றுட்பட ஒரு நம்பிக்கைப்பொறுப்புத் தொடர்பான ஏதேனும் வழக்கு மற்றும் பங்களிப்புக்கான உரிமைக் கோரிக்கையொன்றை ஓர் இறந்துபோன நம்பிக்கைப்பொறுப்பாளரின் மரணச்சொத்துக்கெதிராக வலுவுறுத்துவதற்கு ஒரு கூட்டு நம்பிக்கைப்பொறுப்பாளரினாலான ஏதேனும் வழக்கு.

(12) காணிக்கான உரித்தை வெளிப்படுத்துவதற்கான ஒரு தீர்வையுட்பட ஒரு வெளிப்படுத்துகை ரீதியிலான தீர்வையொன்றுக்கான ஏதேனும் வழக்கு.

(13) வழக்காளி பித்துப்பிடித்தவராக அல்லது வேறு இயலாமையின் கீழுள்ளவராக இருக்கையில் அவர் மாற்றளித்த ஓர் ஆதனத்துக்கான ஏதேனும் வழக்கு.

(14) ஒரு நடுத்தீர்ப்பாளரினால் செய்யப்பட்ட ஓர் அளிப்பை எதிர்ப்பதற்கான ஏதேனும் வழக்கு.

(15) (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு ஒரு வெளிநாட்டுத் தீர்ப்பின் மேலான அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தீர்ப்பின் மேலான ஒரு வழக்கு.

(16) நிறைவேற்றுநர் அல்லது நிருவாகியொருவர் எந்த ஆளுக்கு ஒரு விருப்புறுதிக்கொடையைச் செலுத்தியுள்ளாரோ அல்லது சொத்துக்களைப் பகிர்ந்தளித்துள்ளாரோ அந்த ஆளொருவரினால் மீளளிப்பொன்று செய்யப்படுவதனைக் கட்டாயப்படுத்துவதற்கான ஏதேனும் வழக்கு.

(17) ஒரு விருப்புறுதிக்கொடைக்கான அல்லது மரணசாதனம் எழுதியவரினால் மரணசாதனக்கொடையாக அளிக்கப்பட்ட எச்சத்தின் முழுமைக்கான அல்லது அதன் ஒரு பங்குக்கான அல்லது மரணசாதனமில்லா ஆதனத்தின் முழுமைக்கான அல்லது அதன் ஒரு பங்குக்கான ஏதேனும் வழக்கு.

(18) *(அ)* ஒரு பங்காண்மையைக் கலைப்பதற்கான அல்லது அது கலைக்கப்பட்ட பின்னர் பங்காண்மையொன்றின் தொழிலை ஒடுக்குவதற்கான;

(ஆ) பங்காண்மைக் கொடுக்கல்வாங்கல்களின் கணக்கொன்றுக்கான; அல்லது

(இ) பங்காண்மைக் கணக்கின் மீதிக்கான,

ஏதேனும் வழக்கு.

(19) ஏதேனும் நீதிமன்றத் தீர்வையின் கீழ் அல்லது கட்டளையின் கீழ் நிருவகிக்கப்பட்ட ஆதனத்தின் ஒரு கணக்குக்கான ஏதேனும் வழக்கு.

(20) ஈடுபெறுநரினால் பெறப்பட்ட மேன்மிகையான சேகரிப்பை அறவிடுவதற்கு, ஈடு திருப்திசெய்யப்பட்ட பின்னர், ஓர் ஈடுவைப்பவரினாலான வழக்குட்பட, ஒரு கணக்குக்கான வேறேதேனும் வழக்கு, மற்றும் எதிர்வாதியினால் பிழையாகப் பெறப்பட்டுள்ளவையும் வழக்காளிக்குச் சொந்தமான அசைவற்ற ஆதனத்தின் மீதானவையுமான இலாபங்களுக்கான ஏதேனும் வழக்கு.

(21) ஒரு பொதுச் சராசரி இழப்புக்கான அல்லது கடல் இடர்காப்புக் கட்டணத்துக்கான ஏதேனும் வழக்கு.

(22) கப்பல்களுக்கிடையேயான மோதல் தொடர்பில் நட்டஈட்டுக்கான ஏதேனும் வழக்கு.

(23) ஒரு காப்புறுதிப்பத்திரத்தின் மீதான அல்லது அத்தகைய ஏதேனும் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் செலுத்தப்பட்ட ஏதேனும் கட்டுப்பணத்தை அறவிடுவதற்கான ஏதேனும் வழக்கு.

(24) பின்வருவனவற்றுக்காக நட்டஈட்டுக்கான அல்லது சேதவீடுகளுக்கான ஏதேனும் வழக்கு:-

(அ) வழக்குத்தொடுக்கத்தக்க பிழையினால் ஏற்படுத்தப்பட்ட ஓராளின் இறப்பிலிருந்து விளைகின்ற இழப்புக்காக;

(ஆ) பிழையானமுறையில் கைதுசெய்தலுக்காக;

(இ) வன்மமான குற்றவழக்குக்காக;

(ஈ) பிழையானமுறையில் தடைப்படுத்தலுக்காக அல்லது மறித்து வைத்தலுக்காக;

(உ) அவதூறுக்காக;

(ஊ) சோரம்போதலுக்காக அல்லது நிறைவழிப்புக்காக;

(எ) மணவுறுதி ஒப்பந்தத்தின் அல்லது திருமண வாக்குறுதியின் மீறுகைக்காக;

(ஏ) வழக்காளியுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்றை மீறுவதற்கு ஆளொருவரைத் தூண்டுவதற்காக;

(ஐ) ஏதேனும் சேவகத்தைத் துய்த்தலுக்கு அல்லது ஆதனத்தின் மீதான ஏதேனும் உரிமையைப் பிரயோகித்தலுக்கு முட்டுக்கட்டையிடுதலுக்காக அல்லது அதனுடன் தலையிடுதலுக்காக.

(25) மகரை அறவிடுவதற்காக ஒரு முஸ்லிமினாலான ஏதேனும் வழக்கு.

(26) பராயமடையாத ஒருவரின் கட்டுக்காப்புக்கான ஏதேனும் வழக்கு.

(27) மணநீக்கமொன்றுக்கான அல்லது நீதிமுறைப் பிரிவினைக்கான ஏதேனும் வழக்கு.

(28) பராமரிப்பு, தந்தைமையை நிர்ணயித்தல் அல்லது மகவேற்புத் தொடர்பான ஏதேனும் வழக்கு.

(29) கூட்டாதனத்திலான பங்காளரொருவரினால் ஒரு கூட்டுப்பங்காளரிடமிருந்து வருமதியான பணம் கொடுப்பனவு செய்யப்பட்டமை தொடர்பில் அவரினால் பங்களிப்புக்கான ஏதேனும் வழக்கு.

(30) அசைவற்ற ஆதனத்தின் பல்வேறு கூட்டு ஈடுவைப்போருள் ஒருவரினால் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தை மீட்பதற்காகச் செலுத்தப்பட்ட பணம் தொடர்பில் அவரினால் பங்களிப்புக்கான ஏதேனும் வழக்கு.

(31) ஏதேனும் வரி அல்லது வீதவரி அல்லது வேறு அறவீடு என்பவற்றின் கணக்கால் செய்யப்பட்ட ஓர் உரிமைக்கோரிக்கையைத் திருப்தி செய்வதில் மறுப்பின் கீழ் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு அரசுக்கெதிரான அல்லது ஓர் உள்ளூர் அதிகாரசபைக்கெதிரான ஏதேனும் வழக்கு.

(32) காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறாக 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழான ஏதேனும் வழக்கு.

(33) 2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழான வியாபாரச் சின்னங்கள், ஆக்கவுரிமைகள் அல்லது பதிப்புரிமைகள் தொடர்பான ஏதேனும் வழக்கு.

(34) தொல்லை மீதான அடிப்படையிலான ஏதேனும் வழக்கு.

(35) 1972ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, வாடகைச் சட்டத்தின் கீழ் வாடகை மற்றும் வெளியேற்றுகைக்கான ஏதேனும் வழக்கு அத்துடன் அதன் கீழான வழக்கு நடவடிக்கைகள்.

(36) அப்போதைக்கு வலுவிலுள்ள (இச்சட்டம் தவிர்ந்த) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் ஆரம்ப நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திலிருந்து வெளிப்படையாக அல்லது உட்கிடை மூலம் தவிர்க்கப்பட்ட எவையேனும் வழக்குகள்.".

26. முதன்மைச் சட்டவாக்கமானது, அதன் ஆறாம் அட்டவணையை உடனடுத்துப் பின்வரும் புதிய அட்டவணையைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"ஏழாம் அட்டவணை

[பிரிவு 29அ(2)]

வழக்குகள்

1. (விபத்து அல்லது ஆள்சார் ஊறுபாட்டின் மீது அல்லது வேறேதேனும் ஒத்த வகுதியில் சேதவீடுகளை அறவிடுவதற்கான ஒரு வழக்கு உட்பட ஒன்றில் ஒரு தனிசாக அல்லது கட்டணமாக அல்லது கொடுப்பனவாக அல்லது சேதவீடாக அல்லது கோரிக்கையொன்றாக) பணத்தை அறவிடுவதற்கான ஏதேனும் வழக்கு;
2. அசைவுள்ள ஆதனத்தை அறவிடுவதற்கான ஏதேனும் வழக்கு;
3. விடயங்கள் 1 மற்றும் 2 இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வழக்குக் காரணம் தொடர்பில் ஓர் எதிர்கோருரிமைக்கான ஏதேனும் வழக்கு;
4. வேறேதேனும் சட்டத்தினால் அதற்களிக்கப்படுகின்றவாறான வேறேதேனும் நியாயாதிக்கம்.".

27. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2022ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

   (1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (v)ஆம் உட்பந்தியின் (v)ஆம் விடயத்தில், "என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

   (2) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (v)ஆம் உட்பந்தியின் (vi)ஆம் விடயத்தில், "2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 2022, மே 31ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கும் எட்டு சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 2/27 ஆகும்);" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

   (3) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (v)ஆம் உட்பந்தியின் (vi)ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

      "(vii) 2022, யூன் 1ஆந் தேதியன்று தொடங்கி 2022, யூன் 30ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்காகவும் 2022, யூலை 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 2022, ஓகத்து 31ஆந் தேதியன்று முடிவடைகின்ற ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காகவும் பன்னிரெண்டு சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 3/28 ஆகும்); அத்துடன்

      (viii) 2022, செத்தெம்பர் 1ஆந் தேதியன்று தொடங்கி 2022, செத்தெம்பர் 30ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்காகவும் 2022, ஒற்றோபர் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காகவும் பதினைந்து சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 3/23 ஆகும்).".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

   (1) பந்தி (vi) இல், "2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 2022, செத்தெம்பர் 30ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

   (2) பந்தி (vi) ஐ உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்து வதன் மூலமும்:-

      "(vii) 2022, ஒற்றோபர் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் இலங்கையில் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும்-

      (அ) விடயத்துக்கேற்ப, ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவில், விடயத்துக்கேற்ப, ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட அந்த வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் அல்லது சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்குகைகளின் மொத்தப்பெறுமதி இருபது மில்லியன் ரூபாவாக அல்லது அதற்கு மேலாகவிருப்பின்; அல்லது

      (ஆ) அப்போது முடிவடைகின்ற பன்னிரெண்டுமாத காலப்பகுதியில், இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்குகைகளின் மொத்தப்பெறுமதி எண்பது மில்லியன் ரூபாவை விஞ்சியிருப்பின்; அல்லது

(இ) விடயத்துக்கேற்ப, அடுத்துவரும் ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில், இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்குகைகளின் மொத்தப் பெறுமதி இருபது மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடுமென அல்லது அடுத்துவரும் பன்னிரெண்டு மாத காலப்பகுதியில் எண்பது மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடுமென நம்புவதற்கு எந்நேரத்திலும் நியாயமான ஏதுக்கள் இருப்பின், இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.".

(3) ஓராம் உட்பிரிவுக்கான இரண்டாம் காப்புவாசகத்தில், "2016, மே 2ஆம் தேதியிலிருந்து எழுகின்றதாதல் வேண்டும்.". என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"மே 2ஆம் தேதியிலிருந்து எழுகின்றதாதல் வேண்டும்:

ஆயின், மேலும், (vii)ஆம் பந்தியின் நோக்கங்களுக்காக, பதிவுக்கான தேவைப்பாடு, இந்தத் (திருத்தச்) சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து எழுகின்றதாதல் வேண்டும்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை, அதன் பாகம் IIஇல் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பாகத்தின் (ஆ) என்னும் பந்தியின் (xi)ஆம் விடயத்தின் (ஈ) என்னும் உபவிடயத்தில், "எவரேனுமாளினால், 2019, திசெம்பர் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய வழங்குகை இடம்பெற்றிருப்பின்."; என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "எவரேனுமாளினால், 2019, திசெம்பர் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2022, திசெம்பர் 31ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் அத்தகைய வழங்குகை இடம்பெற்றிருப்பின்,"; அத்துடன்

(2) பந்தி (ஆ) வின் (xi)ஆம் விடயத்தின் (ஈ) என்னும் உப விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(உ) வதிவிட வசதியின் ஏதேனும் குத்தகை அல்லது வாடகை தவிர அல்லது ஏதேனும் கூட்டாட்சியாதன வதிவிட வசதியின் வழங்குகை தவிர, எவரேனுமாளினால், 2023, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய வழங்குகை இடம்பெற்றிருப்பின்.".

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2022ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. (1) இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (பட்டியல் "அ", பட்டியல் "ஆ", மற்றும் பட்டியல் "இ" இல் குறிப்பீடுசெய்யப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகள் தவிர்த்து) சபாநாயகரின் சான்றிதழ் அதன் மீது புறக்குறிப்பிடும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) பட்டியல் "அ" வில் குறிப்பீடுசெய்யப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகள் 2022ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) பட்டியல் "ஆ" வில் குறிப்பீடுசெய்யப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகள் 2022ஆம் ஆண்டு ஒற்றோபர் 1 ஆந்தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) பட்டியல் "இ" வில் குறிப்பீடுசெய்யப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகள் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட அந்தந்தத் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 5ஆம் பிரிவானது இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "வழங்குகின்ற கொடுப்பனவுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வழங்குகின்ற கொடுப்பனவுகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "பெறப்பட்ட இளைப்பாற்றுக் கொடுப்பனவுகளும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பெறப்பட்ட இளைப்பாற்றுக் கொடுப்பனவுகளும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில், "வேறு கொடுப்பனவுகள்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வேறு கொடுப்பனவுகள்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "விருப்பத்தெரிவின் பெறுமதி; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விருப்பத்தெரிவின் பெறுமதி;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "கணக்குக்குத் தொழில்தருநரினால் அளிக்கப்பட்ட உதவுதொகைகள்:" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கணக்குக்குத் தொழில்தருநரினால் அளிக்கப்பட்ட உதவுதொகைகள்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை சேர்ப்பதன் மூலமும்:-

"(எ) அந்தந்த ஓய்வூதிய உதவுதொகைகள் வருமானவரி நோக்கங்களுக்காக ஏலவே கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளன என்பதுடன், ஊழியர் முன்னைய வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய உதவுதொகைகள் மீது வரி செலுத்தியுள்ளார் என்னும் நிபந்தனைக்கமைய தொழிலிலிருந்து ஓய்வூதிய காலத்தில் பெறப்பட்ட எவையேனும் ஓய்வூதிய காலத்தில் பெறப்பட்ட எவையேனும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவானது அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (iv)ஆம் உட்பந்தியில், "செலவினம்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "செலவினம் அல்லது வேறு ஏதேனும் கழிப்பனவு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (x)ஆம் உட்பந்தியில், "வேறு அறவீடுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வேறு அறவீடுகள் மற்றும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி ஒரு ஆளினது வருமானத்தைக் கணிப்பீடு செய்வதில் கழிப்பனவு செய்வதற்கு அனுமதிக்கப்படாத ஏதேனும் வரி அல்லது அறவீடு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவானது, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "அக்கடன் கடப்பாடு, பணம் கடன்பெறுவதில் உறப்பட்டவிடத்து, அப்பணம் வருமானம் தோற்றுவதில் ஆண்டின் போது பயன்படுத்தப்படுமிடத்து அல்லது ஆண்டின் போது பயன்படுத்தப்படும் சொத்தொன்றைக் கொள்வதில் பயன்படுத்தப்படுமிடத்து;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய கடப்பாட்டின் கீழ் கடனாகப் பெறப்பட்ட பணம் வருமானத்தைத் தோற்றுவிப்பதில் ஆண்டின்போது பயன்படுத்தப்படுகின்றதான சொத்தொன்றைக் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டவிடத்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவினை அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(4) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட குறைந்துசெல்லும் பெறுமதி தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்தொன்றுக்கு பூச்சியமாக இருக்கும் பட்சத்தில், (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சீராக்கத்திற்கான கழிப்பனவு எந்த வரிமதிப்பீட்டாண்டில் செலவு உறப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாண்டில் இருந்து தொடங்குகின்றதும்:-

(அ) வகுப்பு 4 ஐச் சேர்ந்த தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்துக்கு பன்னிரெண்டு வரிமதிப்பீட்டாண்டுகளின் போது;

(ஆ) வேறு வகுப்புக்களைச் சேர்ந்த தேய்மானத் துக்குட்படத்தக்க சொத்துக்கு மூன்று வரிமதிப்பீட்டாண்டுகளின் போது,

பிரித்தொதுக்கப்பட்ட சமமான தொகைகளில் கழிக்கப்படுதல் வேண்டும்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உட்பிரிவுகள் (3) மற்றும் (3அ) விற்கு அமைய, இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(3அ) தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்தொன்று தொடர்பில் இச்சட்டத்திற்கான நான்காவது அட்டவணையின் கீழ் வழங்கப்பட்ட மற்றும் கணிப்பீடு செய்யப்பட்ட மூலதன அனுமதிப்புகளின் மொத்தம், எவையேனும் சூழ்நிலைகளில் அத்தகைய தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்தின் செலவுத் தொகையை விஞ்சுதலாகாது.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் உட்பிரிவு (1) மற்றும் உட்பிரிவு (2) என்பவற்றை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும்:-

"(1) (அ) 2021, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக தொழில் அல்லது முதலீடு ஒன்றை நடாத்துவதிலிருந்து (நிதி நிறுவனம் ஒன்று தவிர) வேறு உருவகத்தினது வருமானத்தை கணக்கிடுவதில் கழிக்கப்பட்ட நிதிச் செலவுகளின் தொகை (2)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட வரையறையினுள் நிதிசார் சாதனங்களுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான நிதிச் செலவுகளின் தொகையை விஞ்சுதலாகாது;

(ஆ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டிருக்கின்றதும் அத்துடன் 2021, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக தொழில் அல்லது முதலீடு ஒன்றை நடாத்துவதிலிருந்து எந்தத் தேதியன்று வரிமதிப்பீட்டாண்டு முடிவடைகின்றதோ அந்தத் தேதியிலுள்ளவாறான வழங்கப்பட்ட பங்குமூலத்தைக் கொண்டுள்ளதுமான (நிதி நிறுவனம் தவிர வேறு) கம்பெனி ஒன்றில் வருமானத்தைக் கணக்கிடுவதில் கழிக்கப்பட்ட நிதிச்செலவுகளின் தொகை (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வரையறையை விஞ்சுதலாகாது.

(2) வரையறையானது பின்வரும் சூத்திரத்திற்கு இணங்க கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்:-

(அ) A x B

இங்கு:

'A' என்பது உருவகத்தின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தினதும் ஒதுக்கங்களினதும் மொத்தமாக இருக்குமிடத்து; அத்துடன்

'B' என்பது,

(i) உற்பத்தி செய்கின்ற உருவகம்மொன்றின் விடயத்தில், 3 என்னும் இலக்கமாகவுள்ளவிடத்து; அத்துடன்

(ii) உற்பத்தி செய்கின்ற உருவகமொன்று தவிர்ந்த உருவகமொன்றின் விடயத்தில், 4 என்றும் இலக்கமாகவுள்ளவிடத்து

(ஆ) $\frac{A}{B} \times C$

இங்கு:

'A' = ஆண்டின் நிதிச்செலவு;

'B' = ஆண்டின் போது உறப்பட்ட நிதிச்செலவின் மீதான நிதி சாதனங்களின் பெறுமதி; அத்துடன்

'C' = 4 X ஆண்டு முடிவிலுள்ளவாறான கம்பெனியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் ஒதுக்கங்களின் மொத்தம்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் "கொள்ளப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும்:-

"கொள்ளப்படுதல் வேண்டும்:

ஆயினும் ஆண்டின்போது நிதிச்செலவு உறப்படாத பட்சத்தில், மேற்சொல்லப்பட்ட நோக்கத்துக்காக, பயன்படுத்தப்படாத வரையறையை கணக்கிடுவதில் (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வரையறை உடன் முற்போந்த ஆண்டின் அதே தொகைகளை பயன்படுத்துவதன் மூலமும் அவ்வாறாகவும் கணக்கிடப்படுதல் வேண்டும்."".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில், "கழிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும்:-

"கழிக்கப்படுதல் வேண்டும்:

ஆயினும் எவ்வாறாயினும், தொழில் ஒன்று தொடர்பில் ஆளொருவருக்கு நட்டம் ஒன்று ஏற்படுமிடத்தும் அந்நட்டம் இலாபமொன்றாக விருப்பின் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வீதம் ஒன்றில் வரி விதிக்கப்படற்பாலதாக இருக்குமிடத்தும் அத்தகைய வீதம் அடுத்துப் பின்னர் அதிகரிக்கப்படுமிடத்தும் அத்துடன் அத்தகைய நட்டம் குறைக்கப்பட்ட வீதம் ஒன்றில் வரி விதிக்கப்படற்பாலதாக இருக்கின்றதாக கவனத்திற் கொள்ளப்படுதலாகாது.

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "நட்டங்கள் கழிக்கப்படுவதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நட்டங்கள் கழிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதல் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை சேர்ப்பதன் மூலமும்:

"(இ) முதலீட்டிருந்தான கழிக்கப்படாத நட்டங்கள், அத்தகைய நட்டங்கள் எந்த வரிமதிப்பீட்டாண்டில் உறப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாண்டினை உடன் அடுத்துறும் வரி மதிப்பீட்டாண்டின் முதலாவது தேதியன்று தொடங்கும் ஆறு வரி மதிப்பீட்டாண்டுகளினுள் மட்டுமே கழிக்கப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(3) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவில், "வேறொரு முதலீட்டுச் சொத்தின் கையுதிர்ப்பின் மீதான ஏதேனும் நட்டத்தின் மூலம் குறைக்கப்படுதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் நட்டத்தின் மூலம் குறைக்கப்படுதலாகாது." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஆம் பிரிவு, அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(இ) கைமாற்றப்பட்ட நேரத்தில்-

(i) 2021, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர்,

(*i*அ) அவ்வாளும் இணையாளரும் வதிவுள்ளவர்களாக இருக்கின்றமை; அத்துடன்

(*i*ஆ) இணையாளர் அல்லது இணைப் பங்குடைமையொன்றின் விடயத்தில் அதன் பங்காளர்களுள் எவரும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களாக விராதிருக்கின்றமை; அத்துடன்

(ii) 2021, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர்,

(*ii*அ) அவ்வாளும் இணையாளரும் வதிவுள்ளவர்களாக இருக்கின்றமை;

(*ii*ஆ) இணைப் பங்குடைமையொன்றின் விடயத்தில், அதன் பங்காளர்களுள் எவரும், அல்லது இணையாளர், வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களாக விராதிருக்கின்றமைளூ; அத்துடன்

(*ii*இ) நான்காம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சொத்தொன்றின் தேறிப்பெறுகையிலிருந்து ஆளின் ஈட்டுகையின் மீது ஏற்புடையற்பாலதான வரி வீதம், அத்தகைய சொத்தின் தேறிப்பெறுகையிலிருந்து இணையாளின் ஈட்டுகையின் மீது ஏற்புடையற்பாலதான வரி வீதத்திற்குச் சமமான அல்லது அதைவிட குறைவாகவிருக்கின்றமை; அத்துடன்".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "அவ்வரிமதிப்பீட்டாண்டுக்காகப் பங்குடைமையின் வியாபாரத்திலிருந்தான அல்லது முதலீட்டிலிருந்தான அதன் வருமானமாகவிருத்தல் வேண்டும் (பிரிவுகள் 6 மற்றும் 7)." என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அவ்வரி மதிப்பீட்டாண்டுக்காகப் பங்குடைமையின் வியாபாரத்திலிருந்தான, முதலீட்டிலிருந்தான அல்லது வேறு வருமானத்திலிருந்தான அதன் வருமானமாகவிருத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66ஆம் பிரிவு, அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் 76ஒ என்னும் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழான அல்லது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழான அல்லது 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழான அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்கள் தொடர்பில் குறிப்பான ஏற்பாடுகளைச் செய்வதற்கென இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டதும்," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் 46ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவினால், 46அ என்னும் பிரிவினால் மற்றும் 76ஒ என்னும் பிரிவின் (1)ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் கடன்வசதிகளை வகுப்பாக்கஞ்செய்வதற்காகவும், ஏற்றங்கீகரிப்பதற்காகவும், அளவீடுசெய்வதற்காகவும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டதும்," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 69ஆம் பிரிவு, அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "இலங்கையிலுள்ளதாக; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கையிலுள்ளதாக; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 72ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "(3)ஆம் உட்பிரிவின்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "(2)ஆம் உட்பிரிவின்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பந்தியின் (i)ஆம் உட்பந்தியில், "ஆளொருவரினால்; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆளொருவரினால்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(2) அப்பந்தியின் (ii)ஆம் உட்பந்தியில், "ஆளொருவரினால்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "ஆளொருவரினால் அல்லது;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பந்தியின் (ii)ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(iii) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் ஏதேனும் நிறுவனத்தினால் செய்யப்பட்ட அத்தகைய கொடுப்பனவுகள் உட்பட, இலங்கை அரசாங்கத்தினால்;".

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 83அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "2020, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து, ஆனால் 2023, சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) தொழில்தருநர் ஒருவர், அவரது ஊழியருக்குச் செய்யப்பட்டதும் 5ஆம் பிரிவின் கீழ் அடங்குகின்றதுமான ஏதேனும் கொடுப்பனவின் மீது 2023, சனவரி 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக முற்கூட்டிய தனிப்பட்ட வருமான வரியை, ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டவாறாகக் கழித்தல் வேண்டும்."; அத்துடன்

(3) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், "ஓராம் உட்பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஓராம் உட்பிரிவின் கீழ் அல்லது உட்பிரிவு (1அ)இன் கீழ்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 84அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "2020, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து பயனுறும் வகையிலான" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து, ஆனால் 2023, சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர் பயனுறுவதாக" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(1அ) பிரிவு 83அ மற்றும் 84ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவுக்கமைய, 2023, சனவரி 1ஆந் தேதியிலிருந்து ஆளொருவர், இலங்கையில் ஒரு மூலத்தைக் கொண்ட பங்கிலாபம், வட்டி, கழிப்பனவு, விதிப்பனவு, இயற்கை வளக் கொடுப்பனவு, வாடகை, அரசுரிமைப்பணம் அல்லது கட்டுப்பணம் என்பவற்றின் கொடுப்பனவிலிருந்து, இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் 10ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 85ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில், "ஆளொருவர்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "ஆளொருவர் 2023, சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் உட்புகுத்துவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1ஆ) உட்பிரிவுகள் (2) மற்றும் (3) வுக்கமைய, 2023, சனவரி 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக, ஆளொருவர், அத்தகைய ஆள் வதிவற்ற ஆளொருவருக்கு இலங்கையில் ஒரு மூலத்தைக் கொண்ட ஒரு சேவைக் கட்டணத்தை அல்லது ஒரு காப்புறுதிக் கட்டுப்பணத்தைச் செலுத்துகின்றவிடத்து, கொடுப்பனவின் 14 சதவீதத்தில் வரியைப் பிடித்துவைத்தல் வேண்டும்.

(1இ) மூன்றாம் உட்பிரிவுக்கமைய, 2023, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக, ஆளொருவர், பின்வருவனவற்றுக்காகச் செலுத்துநரின் ஊழியரொருவராகவிராத வதிவுள்ள தனியாள் ஒருவருக்கு இலங்கையில் ஒரு மூலத்தைக் கொண்ட சேவைக் கட்டணமொன்றை அத்தகைய

ஆள் செலுத்துமிடத்து, அக்கொடுப்பனவின் 5சதவீதத்தில் வரியைப் பிடித்துவைத்தல் வேண்டும்:-

(அ) கற்பிப்பதற்காக, விரிவுரையாற்றுவதற்காக, பரீட்சிப்பதற்காக, ஒரு பரீட்சையைக் கண்காணிப்பதற்காக அல்லது மேற்பார்வை செய்வதற்காக;

(ஆ) வதிவுள்ள காப்புறுதி, விற்பனைகள் அல்லது பிரசார முகவரொருவருக்கு ஒரு தரகாக அல்லது தரகுக்கூலியாக; அல்லது

(இ) மருத்துவர், பொறியியலாளர், கணக்காளர், சட்டத்தரணி, மென்பொருள் உருவாக்குநர், ஆராய்ச்சியாளர், கல்விமான் போன்ற சுயாதீன சேவை வழங்குநர் என்ற தன்மையில் அத்தகைய தனியாளினால் அல்லது ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக எவரேனும் தனிப்பட்ட சேவைவழங்குநரினால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக:

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவானது, மாதமொன்றுக்கு 100,000 ரூபாவை விஞ்சாதிருக் கும் ஒரு சேவைக் கொடுப்பனவுக்கு ஏற்புடைய தாதலாகாது."; அத்துடன்

(3) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "பிரிவு 83 இன்கீழான" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "பிரிவு 83இன் கீழான அல்லது பிரிவு 83அ வின் கீழான" அல்லது பிரிவு 84அ வின் கீழான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 87ஆம் பிரிவு, அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், "பிரிவு 83இன் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "பிரிவு 83இன் கீழ் அல்லது பிரிவு 83அ வின் கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 88ஆம் பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(அஅ) 2023, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் வதிவுள்ள கம்பெனியொன்றினாற் செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள்;".

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 90ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "பிரிவு 83இன் கீழ் வரியைப் பிடித்துவைப்பதற்கு தொழில்தருநர் தேவைப்படுத்தப்படாதவிடத்து, ஊழியம் ஒன்றிலிருந்து" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"பிரிவு 83இன் கீழ் அல்லது பிரிவு 83அ வின் கீழ் வரியைப் பிடித்துவைப்பதற்குத் தொழில்தருநர் தேவைப்படுத்தப்படாதவிடத்து, ஊழியம் ஒன்றிலிருந்து: ஆயின், எவ்வாறாயினும், ஒரு வரிமதிப்பீட்டாண்டின் போது, ஒரு முதலீட்டுச் சொத்தின் தேறிப்பெறுகையிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஈட்டுகைகள் காலாண்டுத் தவணைப்பணங்களின் நோக்கத்துக்காகக் கவனத்துட்கொள்ளப்படுதலாகாது.".

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 94ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "வதிவற்ற ஆளொருவர்." என்னும் சொற்களுக் குப் பதிலாக, "வதிவற்ற ஆளொருவர்; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(இ) இரண்டாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் எந்தத் தனியாளின் வரிமதிப்பீட்டாண்டுக்காகச் செலுத்தப்படற்பாலதான வரியானது, தொழில்தருநர் 83அ என்னும் பிரிவின் கீழ் முற்கூட்டிய தனிப்பட்ட வருமான வரியைக் கழித்து 82ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியின் கீழ் வரியெதுவும் செலுத்தப்படற்பாலதாக விராதுள்ளவிடத்து தொழிலிலிருந்தான வருமானத்துடன் புறநீங்கலாகத் தொழிற்படுகின்றதோ அந்தத் தனியாளொருவர்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில், "இல்லாதொழித்துள்ளவிடத்து" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "இல்லாதொழித்துள்ளவிடத்து அல்லது அத்தகைய ஆளின் தொழில்தருநர் 83அ என்னும் பிரிவின் கீழ் அவரது தொழில் வருமானத்தின் மீது முற்கூட்டிய தனிப்பட்ட வருமான வரியைக் கழித்துள்ளவிடத்து" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 120ஆம் பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில், "தயாரித்து பேணுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"தயாரித்து பேணுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆள் எல்லாத் தொழில் அல்லது முதலீட்டுச் செயற்பாடுகளின் மீதும் செலவுகளைப் பொதுவாக உற்றிருக்கும் அல்லது எவையேனும் சொத்துக்களைப் பொதுவாகப் பயன்படுத்தியிருக்கும் மற்றும் ஏதேனும் செலவை அல்லது கழிப்பனவை இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காகத் தனிவேறாக இனங் காணமுடியாதிருக்கும் விடயத்தில் அத்தகைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் விகிதாசார அடிப்படையொன்றின் மீது (மொத்த விற்பனைவரவின் விகிதாசாரத்துக்கு இணங்க அல்லது சொத்துப்பாவணையின் விகிதாசாரத்துக்கு இணங்க) அத்தகைய செலவுகளை அல்லது கழிப்பனவுகளைப் பிரித்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.".

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 123ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "எழுத்தில் நியாயமான அறிவித்தலைக் கொடுப்பதன் மூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலம் நியாயமான அறிவித்தலைக் கொடுப்பதன் மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(6) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதி, அறிவித்தல் மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆட்களின் பெயர்களையும், முகவரிகளையும் அல்லது தேசிய அடையாள

அட்டை இலக்கங்களையும் வழங்கும்படி தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதி ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய விபரங்களை வழங்குதல், அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட வரி அலுவலரொருவருக்கு, அவரது கட்டுக்காப்பின் கீழுள்ள பதிவேடுகளுக்கான அணுக்கத்தை வழங்குதல் அவரது கடமையாதலும் வேண்டும்.

(7) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பெனிகளின் பணிப்பாளர்கள் தொடர்பான எவையேனும் மாற்றங்கள் அல்லது புதிய நியமனங்கள் பற்றி, அத்தகைய பணிப்பாளர்களின் பெயர்களும் முகவரிகளுமுட்பட, ஆறுமாதங்களுக்கொரு தடவை ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தகவல்களை வழங்குதல் வேண்டும்.".

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 133ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், "எழுத்திலான அறிவித்தல் மூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எழுத்திலான அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலமான அறிவித்தல்மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 134ஆம் பிரிவு, அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், "எழுத்திலான அறிவித்தல் ஒன்றை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எழுத்திலான அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலமான அறிவித்தல் ஒன்றை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 135ஆம் பிரிவு, அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவில், "எழுத்திலான அறிவித்தலை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எழுத்திலான அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலமான அறிவித்தலை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 136ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "நூற்றிமுப்பத்தைந் தாம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "நூற்றிமுப்பத்தைந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காகவும் சுய வரிமதிப்பீட்டு விபரத்திரட்டு கோப்பிடப்பட்ட தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதகாலப்பகுதியினுள்ளும் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காகவும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 151ஆம் பிரிவு, அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில், "எழுத்தில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 163ஆம் பிரிவு, அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(5) மூன்றாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சான்றிதழின் தேதியன்றுள்ளவாறு வருமதியாகவுள்ள வரித்தொகையும், ஏதேனும் தண்டமும் மற்றும் வட்டியும் அத்தகைய சான்றிதழின் தேதியிலிருந்து தீர்ப்புவரையிலான தேதிவரை சான்றிதழிற் குறிப்பிடப்பட்ட தொகை மீதான ஏதேனும் சட்டப்படியான வட்டியும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு வருமதியாகவும் செலுத்தப்படற்பாலதாகவும் உள்ள வரியாக இருத்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின் கீழ் 2023, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகள், (3)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சான்றிதழ் காண்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது மாதங்களினுள் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.".

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 176ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(2) ஒரு வரியை மதிப்பீடுசெய்தல், செலுத்துதல், சேகரித்தல் மற்றும் பிணக்கிடுதலுக்கான நடவடிக்கை முறைகள் என்பன வரியொன்று தொடர்பான தண்டங்களுக்குச் சமமாக ஏற்புடையனவாதல் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (6)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(6அ) ஆறாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதில் இவ்வத்தியாயத்தின் கீழ் விதிக்கப்பட்ட தண்டத்தையும் செலுத்தப்படற்பாலதான வரியையும் வட்டியையும் குறிப்பிட்டு தனியொரு வரிமதிப்பீட்டு அறிவித்தலை வழங்குவது சட்டமுறையானதாதல் வேண்டும்.".

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 182ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2023, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(1அ) இரண்டாயிரத்து இருபத்துமூன்று ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக, இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு முறையான கணக்குகளை, பதிவேடுகளை அல்லது ஆவணங்களைப் பேணத்தவறுகின்ற ஆளொருவர் (2)ஆம் உட்பிரிவில்ஏற்பாடு செய்யப்பட்டவாறாகக் கணக்கிடப்பட்ட ஒரு தண்டத்துக்கு ஆளாதல் வேண்டும்.".

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 195ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவில், "ஏற்றுமதி" என்னும் செல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் "பொறுப்பு முயற்சியையும்" எனும் சொல்லுக்குப் பதிலாக, "2022, ஏப்பிறல் 1 இற்கு முன்னர், பொறுப்பு முயற்சியையும்" எனும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவில், "சிறிய நடுத்தர பொறுப்பு முயற்சி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், அவ்வரை விலக்கணத்தின் (ஈ) என்னும், பந்தியில்" அவ்வாளின் அல்லது அவரது இணையாளரது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அவ்வாளினதும் அவரது இணையாளரினதும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவில், "குறித்துரைக்கப்பட்ட பொறுப்புமுயற்சி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், அவ்வரைவிலக்கணத்தின் பந்தி (ஏ) இல், "வழங்குகை யாவிருத்தல் வேண்டும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"வழங்குகையாகவிருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், மத்திய வங்கியின் ஏதேனும் பணிப்புரை காரணமாக இப்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சேவைகளுக்காக வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளைச் செய்வதிலிருந்து ஏற்றுமதியாளர் தடுக்கப்பட்டவிடத்து, ஏற்றுமதியாளர் அவரது வெளிநாட்டு நாணயப் பெறுகைகள் பற்றிய உறுதிப்படுத்துகையை வழங்குதல் வேண்டும்;".

33. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 1ஆம் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (1அ) என்னும் உட்பந்தியில், "2020, சனவரி 1ஆந் தேதியிலிருந்து தொடங்கும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, சனவரி 1ஆந் தேதியிருந்து, ஆனால் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (1அ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1ஆ) இரண்டாம் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டுக்காக ஒரு வதிவுள்ள அல்லது வதிவற்ற தனியாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்துக்குப் பின்வரும் வீதங்களில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஒன்பது மாத காலப்பகுதிக்கான வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம்:-

வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம்	செலுத்தப்படற்பாலதான வரி
2,250,000 ரூபாவை விஞ்சாத	ரூபா 0 க்கு விஞ்சுதலான தொகையின் 6%
2,250,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 4,500,000 ரூபாவை விஞ்சாத	135,000 ரூபாவும் 2,250,000 ரூபாவுக்கு விஞ்சுதலான தொகையின் 12% உம்
4,500,000 ரூபாவை விஞ்சிய	405,000 ரூபாவும 4,500,000 ரூபாவுக்கு விஞ்சுதலான தொகையின் 18% உம்";

(ஆ) 2022, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாவது மூன்றுமாத காலப்பகுதிக்கு வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம்:-

வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம்	செலுத்தப்படற் பாலதான வரி
125,000 ரூபாவை விஞ்சாத	ரூபா 0 க்கு விஞ்சுதலான தொகையின் 6%
125,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 250,000 ரூபாவை விஞ்சாத	7,500 ரூபாவும் 125,000 ரூபாவுக்கு விஞ்சுதலான தொகையின் 12% உம்;
250,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 375,000 ரூபாவை விஞ்சாத	22,500 ரூபாவும் 250,000 ரூபாவுக்கு விஞ்சுதலான தொகையின் 18% உம்;
375,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 500,000 ரூபாவை விஞ்சாத	45,000 ரூபாவும் 375,000 ரூபாவுக்கு விஞ்சுதலான தொகையின் 24% உம்;
500,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 625,000 ரூபாவை விஞ்சாத	75,000 ரூபாவும் 500,000 ரூபாவுக்கு விஞ்சுதலான தொகையின் 30% உம்;
625,000 ரூபாவை விஞ்சிய	112,500 ரூபாவும் 625,000 ரூபாவுக்கு விஞ்சுதலான தொகையின் 36% உம்;

(1இ) இரண்டாம் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, 2023, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றவொரு வரிமதிப்பீட்டாண்டுக்காக ஒரு வதிவுள்ள அல்லது வதிவற்ற தனியாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்துக்குப் பின்வரும் வீதங்களில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம்	செலுத்தப்படற் பாலதான வரி
500,000 ரூபாவை விஞ்சாத	ரூபா 0 க்கு விஞ்சுதலான தொகையின் 6%
500,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 1000,000 ரூபாவை விஞ்சாத	30,000 ரூபாவும் 500,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 12% உம்

1,000,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 1,500,000 ரூபாவை விஞ்சாத	90,000 ரூபாவும் 1,000,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 18% உம்;
1,500,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 2,000,000 ரூபாவை விஞ்சாத	180,000 ரூபாவும் 1,500,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 24% உம்;
2,000,000 ரூபாவை விஞ்சிய ஆனால 2,500,000 ரூபாவை விஞ்சாத	300,000 ரூபாவும் 2,000,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 30% உம்;
2,500,000 ரூபாவை விஞ்சிய	450,000 ரூபாவும் 2,500,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 36% உம்;

(இ) அப்பந்தியின் (5)ஆம் உட்பந்தியில், "2021, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2021, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து ஆனால் 2023, சனவரி 1ஆந் தேதிக்குமுன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அவ்வட்டவணையின் 3ஆம் பந்தியில், அப்பந்தியின் (1)ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

"(1) இரண்டாம் உட்பந்தியின் ஏற்பாடுகளுக் கமைய, 57ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவு எந்த நம்பிக்கைப்பொறுப்புக்கு ஏற்புடையதாகின்றதோ வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காக அந்த நம்பிக்கைப்பொறுப்பின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்துக்குப் பின்வரும் வீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) 2020, சனவரி 1ஆந் தேதிக்குமுன்னர் 24%;

(ஆ) 2020, சனவரி 1ஆந் தேதியிலிருந்து ஆனால் 2022, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்குமுன்னர் 18%;

(இ) 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஆறுமாதங்களுக்காக 18% மற்றும் அதே வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாவது ஆறு மாதங்களுக்காக 30%; அத்துடன்

(ஈ) 2023, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக 30%.";

(3) அவ்வட்டவணையின் (4)ஆம் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (1)ஆம் உட்பந்தியில் -

(i) அவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"(ஆ) 2020, சனவரி 1ஆந் தேதியிலிருந்து ஆனால் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்குமுன்னர் பயனுறுவதாக, 24 சதவீத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்;";

(ii) அவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங் களைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஆறுமாதங்களுக்காக 24 சதவீத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அதே வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாவது ஆறுமாதங்களுக்காக 30 சதவீதத்தில் வரிவிதிக்கப்படுதலும் வேண்டும்."; அத்துடன்

(ஈ) 2023, ஏப்பிறல் 1 ஆந்தேதியிலிருந்து பயனுறுவதாக 30 சதவீத்தில் வரி விதிக்கப்படுதல் வேண்டும்.".

(ஆ) அப்பந்தியின் (2அ) என்னும் உட்பந்தியில், "2020, சனவரி 1 இலிருந்து" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, சனவரி 1 இலிருந்து ஆனால் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் மற்றும் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஆறுமாதங்களுக்காக" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(இ) அப்பந்தியின் (2அ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2ஆ) 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டில் 2022, ஒற்றோபர் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற ஆறுமாத காலப்பகுதிக்காக ஒரு கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தை உள்ளடக்குகின்ற அதன் பின்வரும் ஈட்டுகைகளினதும் இலாபங்களினதும் அத்தகைய பாகம் மற்றும் 2023, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக ஒரு கம்பெனியின் ஈட்டுகைகளுக்கும் இலாபங்களுக்கும் பின்வரும் வீதங்களில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) பந்தயம் பிடித்தலும் சூதாட்டமும் நடாத்துவதிலிருந்தான ஈட்டுகைகளும் இலாபங்களும்; 40%; அத்துடன்

(ஆ) ஏதேனும் மதுபான அல்லது புகையிலைத் தயாரிப்பின் உற்பத்தியிலிருந்தும் விற்பனையிலிருந்தும் அல்லது இறக்குமதியிலிருந்தும் விற்பனையிலிருந்துமான ஈட்டுகைகளும் இலாபங்களும் 40%.";

(ஈ) அப்பந்தியின் (4)ஆம் உட்பந்தியின் (அ) என்னும் விடயத்தில், "10 சதவீதத்தில் கம்பெனிக்கு வரிவிதிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2022, ஒற்றோபர் 1ஆந் தேதிக்கு முன்னர் 10 சதவீதத்திலும் 2022, ஒற்றோபர் 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக 30 சதவீதத்திலும் கம்பெனிக்கு வரிவிதிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்";

(உ) அப்பந்தியின் (5) ஆம் உட்பந்தியில் -

"(i) (1), (2அ)" என்னும் சொல்லுக்கும் எண்களுக்கும் பதிலாக, "(1), (2அ), (2ஆ)," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ii) அவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில், "அவ்வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துறும் இரண்டு வரிமதிப்பீட்டாண்டுகளுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2022, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஆறு மாதங்களுக்காக" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(iii) அவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் உப உட்பந்தியின் விடயம் (ii)இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுக:-

"(ii) முதல் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுடன் ஒப்பிடும்போது, 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதல் ஆறு மாதங்களில் ஐம்பது சதவீதத்தினால் (குறித்துரைக்கப்பட்ட பொறுப்புமுயற்சிகள் தவிர்ந்த) ஏற்றுமதி அதிகரிப்பு.".

(4) அவ்வட்டவணையின் 5ஆம் பந்தியின் (1)ஆம் உட்பந்தியில், "2020, சனவரி 1 இற்குமுன்னர் 28 சதவீதத்திலும், 2020 சனவரி 1 இலிருந்து பயனுறும்வகையில் 24 சதவீதத்திலும் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுக:-

"பின்வரும் வீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) 2020, சனவரி 1ஆந் தேதிக்குமுன்னர் 28%;

(ஆ) 2020, சனவரி 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக ஆனால் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் 24%;

(இ) 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஆறு மாதங்களுக்காக 24% மற்றும் அதே வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாவது ஆறு மாதங்களுக்காக 30 சதவீதத்தில்; அத்துடன்

(ஈ) 2023, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக 30%;".

(5) அவ்வட்டவணையின் 7ஆம் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (1)ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம்:-

"(1) இரண்டாம் பந்திக்கமைய, வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காக அரசசார்பற்ற ஒழுங்கமைப்பொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்துக்குப் பின்வரும் வீதங்களில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) 2020, சனவரி 1ஆந் தேதிக்குமுன்னர் 28%;

(ஆ) 2020, சனவரி 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக ஆனால் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்குமுன்னர் 24%;

(இ) 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஆறு மாதங்களுக்காக 24% மற்றும் அதே வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாவது ஆறுமாதங்களுக்காக 30 சதவீதத்தில்; அத்துடன்

(ஈ) 2023, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக 30%";

(ஆ) அப்பந்தியின் (3)ஆம் உட்பந்தியியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(3) அறுபத்தெட்டாம் பிரிவின் கீழ் மானியக்கொடை, நன்கொடை அல்லது உதவுதொகை என்ற வகையாக அல்லது வேறேதேனும் முறையிலும் ஒரு வரிமதிப்பீட்டாண்டில் பெறப்பட்ட தொகைகளின் மீது அரசசார்பற்ற ஒழுங்கமைப்பொன்றினால் செலுத்தப்படற்பாலதான வரிவீதம் பின்வருமாறாதல் வேண்டும்:-

(அ) 2020, சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர் 28%;

(ஆ) 2020, சனவரி 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக ஆனால் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்குமுன்னர் 24%;

(இ) 2022, ஏப்பிறல் 1ஆந்தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஆறு மாதங்களுக்காக 24% மற்றும் அதே வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாவது ஆறுமாதங்களுக்காக 30 சதவீதத்தில்; அத்துடன்

(ஈ) 2023, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக 30%";

(6) அவ்வட்டவணையின் 10ஆம் பந்தியின் (1)ஆம் உட்பந்தி யில் -

(அ) அவ்வுட்பந்தியின் (அ) என்னும் விடயத்தில், "பிரிவு 83 ஏற்புடையதாகும்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "பிரிவு 83 அல்லது பிரிவு 83அ ஏற்புடையதாகும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில், "பிரிவு 84(1)(அ)(i)ஏற்புடையனதாகும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பிரிவு 84(1) (அ) ஏற்புடையனதாகும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அவ்வுட்பந்தியின் (இ) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஈ) பிரிவு 84அ (1அ) ஏற்புடையதாகும் கொடுப்பனவுகளுக்காக -

(i) கூட்டுமொத்தக் கொடுப்பனவு மாத மொன்றுக்கு 100,000 ரூபாவை விஞ்சாதவிடத்து வதிவுள்ள ஆளொருவருக்குச் செய்யப்பட்ட வாடகைக் கொடுப்பனவுகள் - 0%;

(ii) செலுத்தப்பட்ட வட்டி அல்லது கழிப்பனவு - 5%;

(iii) கூட்டுமொத்தக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு 100,000 ரூபாவை விஞ்சுகின்றவிடத்து அல்லது சமமாக உள்ளவிடத்து வதிவுள்ள

ஆளொருவருக்குச் செய்யப்பட்ட வாடகைக் கொடுப்பனவுகள் முழுத்தொகையின் மீதும் - 10%;

(iv) பங்கிலாபம் தவிர மற்றெல்லாக் கொடுப்பனவுகளும் - 14%; அத்துடன்

(v) செலுத்தப்பட்ட பங்கிலாபம் - 15%;" அத்துடன்

(7) அவ்வட்டவணையின் பந்தி 11இல், "ஐந்து வரிமதிப்பீட்டாண்டுக்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டு வரிமதிப்பீட்டாண்டுக்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

34. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை, அவ்வட்டவணையின் 1ஆம் பந்தியில், அப்பந்தியின் (6)ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(6அ) தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்தொன்றின் மீது முதலாவது முதலீட்டுத் தேதியிலிருந்து தொடங்கி மூன்று ஆண்டுகளைக் கொண்ட கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதி, இப்பந்தியின் உட்பந்தியொன்றின் கீழ் ஆளொருவரது உட்கருதப்பட்ட மொத்த முதலீட்டினைச் செய்திராத அவ்வாளுக்கு வழங்கப்படுதல் வேண்டும். உட்பந்தி (6)இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இப்பந்தியின் உட்பந்தியொன்றின் கீழ் எழுகின்ற மூலதன அனுமதிப்பு, அவர் எந்த வரிமதிப்பீட்டாண்டில் உட்கருதப்பட்ட மொத்த முதலீட்டைப் பூர்த்திசெய்துள்ளாரோ அவ்வரிதிப்பீட்டாண்டில் ஆனால் அத்தகைய கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப் குதி முடிவுறு முன்னர் கழிக்கப்படுதல் வேண்டும்.".

35. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் (எ) என்னும் பந்தியை உடனடுத் துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(*எஎ*) தொழிலினது மூலதனச் சொத்தின் அல்லது பொறுப்பின் தேறிப் பெறுகைகையிலிருந்து அல்லது ஒரு முதலீட்டுச் சொத்தின் தேறிப் பெறுகையிலிருந்து ஓர் ஈட்டுகையாக, அத்தகைய ஈட்டுகை இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியாவசியமாக இருப்பதாக இலங்கை அரசாங்கத்தினாலான ஏதேனும் முடிபுகாரணமாகவும் அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரத்துக்கமையவும் செய்யப்பட்டிருப்பின், இலங்கை அரசாங்கத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட ஓர் உருவகத்தினால் செய்யப்பட்ட ஓர் ஈட்டுகை;";

(2) அவ்வட்டவணையின் பந்தி (*ஏஏ*) இல், "2021, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2021, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று ஆனால் 2022, ஒற்றோபர் 1ஆம் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) அவ்வட்டவணையின் (*சச*) என்னும் பந்தியில், "2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர்-" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2022, ஒற்றோபர் 1ஆந் தேதிக்கு முன்னர்-" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;;

(4) அவ்வட்டவணையின் (*சச*) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(*சசச*) 2022, ஒற்றோபர் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் -

(i) 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் IV இன் ஏற்பாடு களுக்கிணங்கப் பின்வரும் தொழில்களுள் ஏதேனுமொன்றில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் ஈடுபட்டுள்ளதும், 1978 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச்சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் பின்வருவனவற்றுக்கான உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளதுமான ஒரு வதிவுள்ள கம்பெனியினால் செலுத்தப்பட்ட பங்கிலாபமொன்று:-

(i.அ) இறக்குமதி, சிறிய பதனிடுகை மற்றும் மீள் ஏற்றுமதி என்பவற்றை உட்படுத்துகின்ற துறைமுகக் களஞ்சியத்தொழில்;

(i.ஆ) பண்டங்களை இலங்கைக்குக் கொண்டுவராமல் அவற்றை ஒரு நாட்டிலிருந்து பெறமுடியுமான அல்லது ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு வேறொரு நாட்டுக்குக் கப்பலேற்றமுடியுமான கரைகடந்த தொழில்;

(i.இ) வெளிநாட்டிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு முகப்பு முனைச் சேவைகளை வழங்குதல்;

(i.ஈ) நிதிசார் வழங்குகைச் சங்கிலி மற்றும் சிட்டையிடுதல் தொழிற்பாடுகளையும் முகாமைசெய்வதற்காகத் தலைமைதாங்குநர்களின் தலைமையலுவலக தொழிற்பாடுகள்;

(i.உ) இலங்கையில் சுங்கத்தீர்ப்புப் பண்டசாலை அல்லது பல்நாட்டுத் திரட்டுகை உட்பட, ஏற்பாட்டியல் சேவைகள்;

(ii) அத்தகைய பங்கிலாபக் கொடுப்பனவு, பிரிவு 84அ வின் (1அ) என்னும் உட்பிரிவின் கீழ் முற்கூட்டிய வருமான வரிக்கு அமைந்ததாகவிருக்கும் அந்த வதிவுள்ள கம்பெனியினால் அல்லது வேறொரு வதிவுள்ள கம்பெனியினால் பெறப்பட்ட வேறொரு வதிவுள்ள கம்பெனியினால் பெறப்பட்ட வேறொரு பங்கிலாபத்துக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதாக, அல்லது அதிலிருந்து பெறப்பட்டதாக இருக்கும் அளவுக்கு உறுப்பினரொருவருக்கு ஒரு வதிவுள்ள கம்பெனியினால் செலுத்தப்பட்ட பங்கிலாப மொன்று;";

(5) அவ்வட்டவணையின் பந்தி (ணண) வில், "மீதான பங்கிலாபங்கள் மற்றும் ஈட்டுகைகள்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மீது 2022, ஒற்றோபர் 1ஆந் தேதிக்கு முன்னரான பங்கிலாபங்கள் மற்றும் ஈட்டுகைகள்;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(6) அவ்வட்டவணையின் (ப) என்னும் பந்தியில் -

(அ) அப்பந்தியின் உட்பந்தி (ii) இல், "2020, சனவரி 1ஆந் தேதியன்று" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, சனவரி 1ஆந் தேதியன்று, ஆனால் 2023, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (எ)ஆம் உட்பந்தியில் -

(i) "அத்தொழிற்கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்:" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2023, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னரான அத்தொழிற்கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்:" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ii) (ஆ) என்னும் விடயத்தில், "ஐந்தாண்டு" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "இரண்டாண்டு" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(iii) அவ்வுட்பந்தியின் காப்புவாசகத்தில், "அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அடுத்தாண்டுக்கு" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அப்பந்தியின் (vi)ஆம் உட்பந்தியில், "ஏதேனும் ஏற்றுமதி வியாபாரம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2023, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் ஏற்றுமதி வியாபாரம்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்ளு அத்துடன்

(7) அவ்வட்டவணையின் (*ய*) என்னும் பந்தியில், "2021, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2021, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2023, ஏப்பிறல்1ஆந் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

36. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஐந்தாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 1ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில், "ஏதேனும் வேறு நிதி நிறுவனத்தின் கொள்ளலின் அல்லது ஒன்றிணைவின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட வேறேதேனும் வங்கியின், 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பெனியின் அல்லது 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 3ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியின் நியதிகளின்படி பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக் கம்பெனியின் கொள்ளலின், பகுதியளவான கொள்ளலின் தொழிலை உள்வாங்கலின் அல்லது ஒன்றிணைவின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வட்டவணையின் 2ஆம் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

"(*அ*) ஒரு நம்பிக்கைப்பொறுப்பாளர், பெறுநர், நிறைவேற்றுநர் அல்லது ஒழிப்போன் என்பவராக உள்ள தனியாள் ஒருவர், அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பளராக, பெறுநராக, நிறைவேற்றுநராக அல்லது ஒழிப்போனாக இந்தத் தனிப்பட்ட நிவாரணத்தைக் கழிப்பதற்கு உரித்துடையவராதலாகாதென்பதுடன், அந்நிவாரணமானது முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகைகளுக்கெதிராகக் கழிக்கப்படுதலுமாகாது என்பது தவிர,

(i) 2020, சனவரி 1ஆந் தேதிக்கு முன்னரான ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்காகவும் 500,000 ரூபா;

(ii) 2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு வரிமதிப் பீட்டாண்டுக்காகவும் 3,000,000 ரூபா;

(iii) 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலா வது ஒன்பது மாதங்களுக்காக 2,250,000 ரூபா மற்றும் அதன் இரண்டாவது மூன்று மாதங்களுக்காக 300,000 ரூபா; அத்துடன்

(iv) 2023, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்காகவும் 1,200,000 ரூபா"; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் (*ஊ*) என்னும் உட்பந்தியில், "2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர்" எனும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் மற்றும் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஒன்பது மாதங்களுக்காக உறப்பட்ட 900,000 ரூபா பணத்தொகை." எனும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

37. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஆறாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 1ஆம் பந்தியின் (4)ஆம் உட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில், "வியாபாரத் தொழிற்பாடுகளை அல்லது உற்பத்திதிறனை சீராக்குவதற்கு பயன்படுத்தப்படுகின்றதும்" என்னும் சொற்க ளுக்கும் எண்களுக்கும் பதிலாக, "வியாபார வளாகங்களுடன் பொருத்தப்பட்டதுமான" எனும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வட்டவணையின் 3,4,5,6,7,8, 9 மற்றும் 11 ஆகிய பந்திகளை முறையே அவ்வட்டவணையின் 2,3,4,5,6,7,8 மற்றும் 9 ஆகிய பந்திகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(3) அவ்வட்டவணையின் மீள இலக்கமிடப்பட்ட 8 ஆம் பந்தியில், "பூச்சியம் சதவீதமாகவிருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய கொடுப் பனவு 2022, ஒற்றோபர் 1ஆந் தேதிக்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்பட்டிருப்பின், பூச்சியம் சதவீதமாகவிருத்தல் வேண்டும்." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அவ்வட்டவணையின் 10ஆம் பந்தியின் (1)ஆம் உட்பந்தியில், "மூன்று வரிமதிப்பீட்டாண்டுகளின் போது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டு வரிமதிப்பீட்டாண்டுகளின்போது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

38. (1) இரண்டாயிரத்து இருபத்திரண்டாம் ஆண்டு ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டுக்காக ஆளொருவரினால் செலுத்தப்படற்பாலதான வருமானவரி, தனியாட்களினால் முதலாவது ஒன்பது மாதங்களுக்காகவும் இரண்டாவது மூன்று மாதங்களுக்காகவும் மற்றும் தனியாட்கள் தவிர்ந்த வேறு ஆட்களினால் முதலாவது ஆறு மாதங்களுக்காகவும் இரண்டாவது ஆறு மாதங்களுக்காகவும் வரிமதிப்பீட்டாண்டின் இரு காலப்பகுதிகளுக்குமாக தனிவேறாக கணக்கிடப்படுதல் வேண்டும். தொழில் வருமானத்தின் அத்தகைய கணக்கிடுகையின் நோக்கத்துக்காக அத்தகைய இரு காலப்பகுதிகளுக்காகவும் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தைக் கண்டறிவதற்கு அவ்வாள் (தனியாட்களினால் முதலாவது ஒன்பது மாதங்களுக்கு 75% மும் இரண்டாவது மூன்று மாதங்களுக்கு மீதி 25% மும் மற்றும் தனியாட்கள் தவிர்ந்த வேறு ஆட்களினால் முதலாவது ஆறு மாதங்களுக்கு 50% மும் இரண்டாவது ஆறுமாதங்களுக்கு மீதி 50% மும் என்றவாறாக) வீதப்படியான அடிப்படையைப் பயன்படுத்தலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, தவணைப்பணங்களின் மூலம் செலுத்தப்படற்பாலதான வரியின் நோக்கத்துக்காக ஆளொருவர் மீளாய்வு செய்யப்பட்டவொரு மதிப்பீட்டைச் சமர்ப்பிக்கலாம்.

39. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பட்டியல் 'அ'

(பிரிவு 1)

நிரல் I	*நிரல் II*
இச்சட்டத்தின் பிரிவு	*முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு*
2	5
4	12
5	14
6	16
11	66
18	87
21	92அ
22	94
23	120
25	133
26	134
27	135
28	136
35 (1) மற்றும் (3)	195
36(1), (2), (3), (4) மற்றும் (5)	முதலாம் அட்டவணையின் பந்தி I இன் உட்பந்தி (1அ) மற்றும் (1ஆ), 3, 4, 5 மற்றும் 7ஆம் பந்திகள்
37	இரண்டாம் அட்டவணையின் பந்தி I இன் உட்பந்தி (6அ)
38(1)	மூன்றாம் அட்டவணையின் (*எ*) ஆம் பந்தி
40(1) மற்றும் (2) அட்டவணை	ஆறாம் அட்டவணையின் பந்தி I இன் (4)ஆம் உட்பந்தியின்விடயம் (ஆ) மற்றும் 2, 3, 4, 5, 6, 7, 8 மற்றும் 9ஆம் பந்திகள்
41	புதிய பிரிவு

பட்டியல் 'ஆ'

(பிரிவு 1)

நிரல் I	*நிரல் II*
இச்சட்டத்தின் பிரிவு	*முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு*
36(1)	முதலாம் அட்டவணையின் பந்தி I இன் (5)ஆம் உட்பந்தி
38(2), (3), (4) மற்றும் (5)	மூன்றாம் அட்டவணையின் (*ஏஏ*), (*சச*), (*சசச*) மற்றும் (*ணண*)
39(2)	ஐந்தாம் அட்டவணையின் (2)ஆம் பந்தி
40(3) மற்றும் (4)	ஆறாம் அட்டவணையின் (8)ஆம் பந்தி மற்றும் (10)ஆம் பந்தி

பட்டியல் 'இ'

(பிரிவு 1)

நிரல் *I*	நிரல் *II*	நிரல் *III*
இச்சட்டத்தின் பிரிவு	முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு	நடைமுறைக்கு வரும் தேதி
3	10	01.04.2021
7	18	01.04.2021
8	19	01.04.2018
9	46	01.04.2021
10	54	01.04.2018

12	69	01.04.2018
13	72	01.04.2018
14	73	01.04.2018
15	83அ	01.01.2023
16	84அ	01.01.2023
17	85	01.01.2023
19	88	01.01.2023
20	90	01.04.2021
29	139	01.04.2023
35(2)	195	01.04.2020
36(1) மற்றும் (7)	முதலாம் அட்டவணையின் பந்தி I இன் (1இ)ஆம் உட்பந்தி மற்றும் பந்தி 11	01.04.2023
38(6) மற்றும் (7)	மூன்றாம் அட்டவணையின் பந்தி (ப) மற்றும் பந்தி (ய)	31.03.2023
39(1)	ஐந்தாம் அட்டவணையின் (1) ஆம் பந்தியின் பந்தி (உ)	01.04.2021